தங்களை உயர்த்திக்கொள்ளவேண்டும். நாம் புருஷர்களுக்கு மூன்று வழியில் வெகு ப்ரயோஜனமாயிருக்கலாம். முதலாவது நாம் படித்து பயிற்சி பெற்று ஸுகஜீவியாயும் உண்மையாயும் இருப்பது; இரண்டாவது, நம்முடைய குழந்தைகளை பூர்விக ஸ்த்ரீகள் நடந்த வழியைப்பின் பற்றச்செய்து தாய் நாட்டின் உத்தம தேசாபிமானிகளாய் இருக்கச்செய்வது; மூன்றாவது, வாழ்நாளில் தேச ஸேவையில் உழைத்து, தாழ்ந்தவர்களை உயர்த்தி நல்லதர்மங்களைச் செய்வது; ஸ்த்ரீகள் தேசத்தின் பொருட்டு ஊழியத்தையும், ஆத்மத்யாகத்தையும் செய்வதைவிட அவர்களுக்கு வேறு என்ன கீர்த்தி இருக்கிறது! ஜன ஸமூக அன்பினால் ஊழியம் தித்திக்கும்; நம்முடைய நிலைமையினால் த்யாகம் உயர்ந்து ப்ரகாசிக்கும்.

ஸஹோதரிகாள்! பம்பாய்ப்புறத்தில் ஸ்த்ரீகள் இது விஷயமாக என்ன செய்துவருகிறார்களென்று அறிய உங்களுக்கு ஆசையாயிருக்கும். நாங்கள் உங்களைவிட உயர்ந்தவர்களென்று நான் சொல்லவில்லை. ஆனால் காலகெதியின் மாறுதல்களின் அர்த்தத்தை யறிந்து எங்களுடைய தாழ்ந்தவழிகளில் ஏதோ சில வேலைகள் செய்திருக்கிறோம். பாலிகைகளுக்குப் ப்ரைமெரிபாடசாலைகளும் வயது வந்த கன்யா ஸ்த்ரீகளுக்கு ஹைஸ்கூல்களு மிருக்கின்றன. விதவா ஸ்த்ரீகளுக்கு விதவாச்ரமங்களிருக்கின்றன. அவர்கள் விதவாச்ரமத்தில் முறையான பாடங்கள் கற்கப்படுகிறார்கள். ஸ்த்ரீகளுக்கு டிரெயினிங் காலேஜ்களிருக்கின்றன. ஸ்த்ரீகள் தாதிமார் தொழிலிலும் உபாத்தியாயர் தொழிலிலும் பழக்கப்படுகிறார்கள். அவைகள் ஜனஸமூகத்துக்கும் அவர்களுக்கும் உரித்தன. குடும்ப ஸ்த்ரீகள், அதாவது கல்யாணமானஸ்த்ரீகள், தங்கள் வீட்டுக் காரியங்களைச் செய்தபிறகு தினம் 3-மணி ஸாவகாசம் தங்களுக்குத் தேவையான பாடங்களைக் கற்றுக்கொள்ளுகிறார்கள். பிளேக், பஞ்சம், பெரிய தீ முதலான பெரிய ஆபத்துக்கள் நேரிட்டால் நல்ல ஸ்திதியிலிருக்கிற ஸ்த்ரீகள் நிவ்ருத்தி சங்கத்தைச் சேர்ந்து, திக்கற்றவர்களுக்குத் தேவையான உதவியைக்கொடுத்து வருகிறது மிகவும் கௌரவமான கார்யமென்று நினைக்கிறார்கள். புனவுக்குச்சமீபமாயுள்ள ஒருகிராமத்தில் ஒருபெரும் நெருப்பு ஆபத்து நேரிட்டது. இந்த ஆபத்தில் 400 ஜனங்கள் வரை நெருப்புக்கு இரையானார்கள் நாங்கள் சிலர் நிவ்ருத்தி சங்கத்தைச்சேர்ந்து புருஷர்களுடன் நெருப்பில் புண்பட்டவர்களை சிகித்ஸை செய்தோம். ஆமெட்நகர்

ஜில்லாவைச்சேர்ந்த குஜரத்திலும் கதியாவாரிலும் போனவருஷ
பஞ்சம்நேரிட்டபோது, டெக்கான் தேசத்து ஸ்த்ரீகளும் குஜரத்
ஸ்த்ரீகளும் பம்பாயிலிருந்தும் புனாவிலிருந்தும் நாங்கள் பஞ்சம்
நேர்ந்த ஸ்தலத்திற்கு புறப்பட்டோம். அங்கு நிர்கதியாயிருக்கிற
ஸ்த்ரீகளுக்கும் குழந்தைகளுக்கும் எங்களுடைய உதவியைக்
கொடுத்தோம். சிலஸமயம் ஒட்டகத்தின் மீதேறிக்கொண்டு கிராமம்
கிராமமாய் பஞ்சம் நேரிட்ட இடத்திற்குப்போய் ஸந்தோஷமாய்
வேலை செய்தோம். ஒருமாதத்திற்குமேல் வீட்டைவிட்டுப் பிரிந்
திருந்தோம். புனாவிலிருந்து ஏழு ஸ்த்ரீகள் போனதில் என்னுடன்
இங்கு வந்திருக்கிற என் தங்கை யமுனாபாயும் நானும் மாவோம்.

நாம் நம்முடைய கடமைகளை அறிந்தோமானால் நம்முடைய
சகோதரர்களுக்கு எப்படி உபயோகமாயிருக்கக்கூடுமென்பது உங்
களுக்குத் தெரியவரும். புனாவிலும் பம்பாயிலும் ஸ்த்ரீகளின் அபி
விருத்திக்கு நல்லவேலை செய்துவருகிறோம். நாங்கள் நமது ஸஹோ
தரர்களின் உதவியினால் நல்லவேலை செய்து வருகிறோம்.

ஆகையால் நீங்களும் ஸஹோதரர்களின் உதவியை நாடுங்கள்.
நாம் ஐக்யமாயிருந்து வேலை செய்தோமானால் நாம் தாய்நாடா
கிய இந்தியாவுக்கு ஸ்த்ரீகள் செய்யவேண்டிய வேலையைச்செய்த
தாகும். நமது தாய் நாடு ஸ்த்ரீகளிடமிருந்து அவர்களுடைய
கடமையை எதிர்பார்க்கிறது. தம் கடமைகளைச் செய்தல் ஸ்த்ரீ
களின் தர்ம கைங்கர்யமாகும்.

## THE STATE OF MIND BETWEEN MEN & WOMEN.

**By**

**Mr. Natesa Aiyer.**

## ஆண்களின் மன நிலைமையும், பெண்களின் மன நிலைமையும்.

இவ்விஷயம் ஸ்ரீமான் நடேசய்யர் சுதேசமித்திரனுக்கு அனுப
வபூர்வமாக எழுதியிருக்கிறார். இவ்விஷயம் நமது சகோதரிகள்
படித்தறியவேண்டும்.

இவ்வுலகத்தின்கண் எல்லா நாகரீக முள்ள நாடுகளிலும்
பெண்களின் தொகை அதிகமாக விருக்கின்றதே யொழிய ஆண்
களின் தொகை அதிகமில்லை. இதற்கு அநேகம் காரணங்களுண்டு.



இளமைப் பருவத்தில் வரும் வியாதிகளைத் தடுத்துக் கொள்ளவாவது
அல்லது வியாதிகளினின்றும் தப்பிக்கொள்ள வாவது வேண்டிய
சரீர அமைப்புகள் பெண் குழந்தைகளுக்கு ஆண் குழந்தை
களைவிட அதிகமிருக்கிறதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.
வருஷம் 1-க்கு பெண்ணும் ஆணும் ஒரே கணக்காகப் பிறந்தகா
லத்தும் கூடியசீக்கிரத்தில் பெண்களின் எண்ணிக்கை அதிகப்
படும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் பெண்களை விட ஆண்
கள் அதிகமாக வருஷா வருஷம் இறக்கின்றார்கள். இக்காரணங்
களையுந் தவிர, யுத்தம் முதலானவை சம்பவிக்கும் பொழுது
ஆண்கள் உயிரைக் கொடுக்கிறார்களே யொழிய பெண்கள் அவ்
வளவு இல்லை. மேலும் ஒரு கப்பல் கவிழ்ந்தால் அக்கப்பலிலுள்ள
பெண்களையும் குழந்தைகளையும் முதலில் படகுகளில் இறக்கிவிட
வேண்டு மென்று நமது சட்டங்கள் சொல்லுகின்றனவே யல்லாது,
ஆண்களைப்பற்றி யொன்றும் சொல்லவில்லை. ஆகவே மேற்சொல்
லிய காரணங்களால் ஆண்களைவிட அதிகம் பெண்கள் இருக்கிறார்
கள். கலியாணம் ஆகாத பெண்கள் இருக்கவேண்டியே ஏற்படும்.
(இந்தவிஷயம் உலகமுழுவதையும் ஓர் நாடாகக் கருதி யெழுதிய
தாகலின் நமது நாட்டிற்குமாத்திரம் வைத்துப் பொருத்திப் பார்ப்
ப்பது சரிவராது).

கலியாணமாகாத பெண்கள் வருஷாவருஷம் அதிகப்படுக்
கொண்டிருப்பதால் அவர்கள் தங்கள் காலத்தை வீணே கழிக்கும்
படியாக நேரிடுகிறது. இவ்வாறு சோம்பேரித்தனமாய்க் கழித்து
வந்தால் சிற்சில சமயங்களில் இவர்களின் புத்தி மாறுபட்டுப்போய்
செய்யத்தகாத காரியங்களைச் செய்ய எத்தனிக்கிறார்கள். ஆகவே
இவர்களுக்குத் தகுந்த வேலைகளைக் கொடுத்துச் செய்யச்சொல்வ
தானால், தங்களையும் தங்கள் நாட்டையும் முன்னுக்குக் கொண்டு
வரும்படியான வேலையைச் செய்யவேண்டும். இவர்களுக்கு எத்
தகைய வேலையைக் கற்றுக்கொடுப்பது? ஆண்கள் செய்துவரும்
வேலைகளைச் செய்யச்சொல்லலாமா? ஆண்பிள்ளைகளுக்குக் கொடுக்
கும் படிப்பைக் கொடுக்கலாமா? என்ற கேள்விகளை நாம் முதலில்
கேட்டுக்கொள்ளவேண்டும். இக்கேள்விக்குப் பதிலுரைக்க பெண்
களின்மனம் எவ்வித நிலைமையுடையது. ஆண்பிள்ளைகளின் மன
அமைப்புக்கும் ஏதாவது வித்தியாசங்களுண்டா என்ற விஷயங்
களை அறியவேண்டியதாகின்றது.

அநேக புத்திமான்கள் இவ்விஷயங்களைக் கண்டுபிடிக்கவேண்டி செய்துவந்த பரிசீலனைகளினின்றும், பெண்மனது ஒருவகையானதென்றும், ஆண்மனது மற்றோர்வகைத்தானதென்றும் ஓர் தீர்மானத்திற்கு வந்திருக்கிறார்கள். ஆகவே ஆண்களின் மனநிலைமைக்குத் தகுந்த பிரகாரம் கொடுக்கும் படிப்பு முதலானவை பெண்களுக்குச் சரிவர ஒத்துக்கொள்ளாது ஏனெனில் அவர்களின் மன அமைப்புக்கு மாறானவிஷயாகும். சிற்சில விடங்களில் பெண்கள் ஆண்களின்மன அமைப்பு உள்ளவர்களாய் நாம் காண்கிறோம். பெண்ணுக்குள்ள குணங்களுக்குமேல் அப்பெண்ணினிடத்தில் ஆண்களின் குணம் அதிகமிருக்குமாயின் அப்பெண்ணுக்குச் சந்ததிகள் உண்டாவது மிகவும் கடினமாகும். ஆகவே பெண்களுக்கு அவர்களின் மன அமைப்புக்குத் தகுந்த பிரகாரம் படிப்பு, தொழில் முதலானவை கொடுக்காமற் போனால் அவர்களிடத்துள்ள பெண்குணத்துடன், தாயாக வரக்கூடிய குணமும் குன்றிவிடுகிறது.

மனத்தின் நிலையைப்பொருத்தே மனிதரின் குணமும் நடையுடைபாவனைகளும் மாறுகின்றன. இவ்விஷயத்தைக் கண்டுபிடிக்க வேண்டி 1906 முதல் 1908 வருஷம் வரையில் ஜர்மன் புரொபெஸர்களான ஹேமான்ஸ் என்பவரும் வீர்ம்ஸா என்பவரும் அநேகவிதப் பரிசீலனைகளைச் செய்து வந்தார்கள். அவற்றுள் அவர்கள் சுமார் 100 கேள்விகளை, அநேக பெண்களையும் அதே தொகையுள்ள ஆண்களையும் கேட்டார்கள். அவர்களிடமிருந்து சுமார் 1000 முதல் 2000 விதமான மறுமொழிகள் வந்தன. இந்த மறுமொழிகள் ஒன்றுக்கொன்றுவிரோதமானதெனக் கணக்கிட்டார்கள். தனித்தனி கேள்விகளுக்குள்ள மறுமொழிகளிலுள்ள மாறுபாடுகளையும் கவனித்தார்கள். இதனின்றும் பெண்களுக்குப் பிரத்தியேகமாய் மனோவிகாரம், ஊக்கம், கர்வம், பெருமை, ஜனாபிமானம், யூகம், மதாபிமானம், அனுதாபம், என்ற குணங்கள் பொருந்தியிருக்க, ஆண்களுக்குப் பிரத்தியேகமாய் பேராசை, சரசம், வேலைக்காரர்களிடத்து அன்பு, விளையாட்டில் பிரியம், நேரம் தப்பாதகுணம், குற்றம் பிடித்தல், ஆட்சேபித்தல், ஆகிய குணங்களிருக்கக் கண்டார்கள். பெண்களிடத்து இருப்பதாகச்சொன்ன குணங்களில் அநேகம் ஆண்களிடத்து இல்லாதிருப்பதுடன் சிற்சில ஒன்றுக்கொன்று விரோதமாகவுமிருக்கின்றன.



இவ்விருவருக்குள் இருக்கும் சப்தம் ஸ்பரிசம் கந்தம், ரூபம், ரசம், ஆகிய 5 வகை உணர்ச்சிகளைக் கவனிக்குமிடத்து, சப்த உணர்ச்சியில் ஒரு சப்தத்திற்கும் மற்றொன்றிற்குமுள்ள வித்தியாசத்தைக்கண்டு பிடிக்கக் கூடாத பெண்களைக் காணுதலரிது. ஆனால் ஆண்களில் சப்த வித்தியாசத்தைக் கண்டு பிடிக்க முடியாதவர்களில் அநேகரைக்காணலாம். மேலும் பெண்களில் பல வர்ணங்களுக்குள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடிக்காதவர்கள் இல்லை. ஆனால் ஆண்கள் 100-க்கு 4 பேர்களாவது இவ்வித்தியாசத்தைக்கண்டு பிடிக்க முடியாதவர்களிருக்கிறார்கள். இவ்வித குணங்கள் பெண்கள் மூலமாகவே சந்ததிகளுக்கு உண்டாகின்றன. ஓர் பெண்ணுக்கு வர்ண உணர்ச்சியிருந்த போதிலும் அவளது புருஷனுக்கும் வர்ண உணர்ச்சி இருந்தால், அப்பெண்ணுக்குப் பிறக்கும் பிள்ளைகளுக்கு வர்ண உணர்ச்சி கெடுகிறதில்லை. ஆனால் இப்பெண்ணுக்குப் பிறக்கும் பெண் குழந்தைகளுக்கு ஏற்படலாம்.

இனி பெண்களுக்குள்ள புத்தியைப்பற்றி எடுத்துக்கொள்ளுவோம். புத்திசாலித்தனம் என்பதில் அநேக பொருள் அடங்கியிருக்கின்றன. அவற்றுள் ஓர் புஸ்தகத்தை வாசித்து அதிலுள்ள விஷயங்களையும் வார்த்தைகளையும் ஞாபகத்தில் வைத்திருக்கும் சாதுரியம் ஒன்றாகும். மேலும் அநேக சாமான்களைக் கவனிக்கையில் ஒரேமாதிரியானதைத் தனியாகப் பிரித்து சேர்ப்பது இரண்டாவதாகும். கணக்கு, சரித்திரம் முதலியவற்றைப் படிப்பதும் மூன்றாவதாகவெண்ணிக் கவனிப்போம்.

முதலில் ஞாபகத்தைப் பொறுத்து ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள வித்தியாசங்களைக்கவனிப்போம். ஒன்றை வாசித்து ஞாபகத்தில் வைத்துக்கொள்வதில் இரண்டு விதமுண்டு. வாசித்த விஷயங்களை மாத்திரம் வைத்துக்கொள்வது ஒன்றாகும். இரண்டாவது வாசித்த விஷயங்களின் பொருளை யறியாது அவற்றிலிருக்கும் வார்த்தைகளை மாத்திரம் ஞாபகத்தில் வைத்திருப்பதாகும். கிளிப்பிள்ளையைப்போல் சொன்னதைச் சொல்லிக்கொண்டிருப்பவர்களைக் கண்டிருக்கிறோம். வாசித்த விஷயங்களின் கருத்தை மாத்திரம் வைத்துக்கொண்டிருப்பவர்களையும் நாம் பார்த்திருக்கிறோம். முதலிற் சொல்லிய குணமுடையோரைத் தாங்கள் சொல்லும் வார்த்தைகளுக்குப் பொருள் கேட்டால் சொல்ல வகை

யறியார்கள். இரண்டாவது குணமுடையவர்களை எவ்விதம் கூறியுள்ளது என்று அவர்களறிந்த கருத்தைக் கேட்டால் அதனைச் சொல்ல முடியாதவர்களா யிருப்பார்கள். தங்களுடைய சிநேகிதர்களுடைய பெயரை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள முடியாத அநேக கற்றறிந்த புத்திமான்களுமிருக்கிறார்கள். விஷயம் தெரியாமல் ஒரு ஊருக்காக ஏற்பட்ட ஜனன மரண ரிஜிஸ்டரில் உள்ள பெயர்களைத் தலைகீழாக ஒப்புவிக்ககூடிய பயித்தியக்காரர்களும் இருக்கிறார்கள். ஒரு புஸ்தகத்திலுள்ள சில பக்கங்களை 3 தடவை சில பெண்களையும் பிள்ளைகளையும் வாசிக்கும்படியாகச் செய்து, பிறகு அவ்விருதரத் தாரையும் பரீட்சித்துப் பார்த்ததில் அப்பக்கங்களில் சொல்லப்பட்டிருக்கும் கருத்தை அறிந்தவர்களில் அதிகம் ஆண்களாகவும், அப்பக்கங்களில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தைகளை ஞாபகத்தில் வைத்திருப்பவர்கள் அதிகம் பேர் பெண்களாகவும் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மேலும் படித்த விஷயங்களிலுள்ள கருத்தை ஒன்றும் விடாது சொல்லக் கூடியவர்கள் ஆண்பிள்ளைகளா யிருந்ததாகச் சொல்லப்படுகிறது. வேறுவழிப் பரிசீலனை செய்ததிலும் ஆண்பிள்ளைகளே மேலான அறிவை யுடையவர்களாகக் காணப்பட்டார்கள். அநேகர் சர்வ கலாசாலைகளில் படித்து வந்தவர்களைக் கணக்கிட்டால், கணித சாஸ்திரம் ரசாயன சாஸ்திரம் முதலியவற்றில் மேன்மை யடைந்த பெண்களைக் காண்பது அருமையாக விருக்கிறது. ஆனால் பாஷைகளுக்காகச் செய்யப்படும் பரீட்சைகளிலும் சரித்திர பரீட்சைகளிலும் அநேகர் நன்றாய்த் தேறியிருப்பதைக் காணலாம். ஏனெனில் மேற்சொல்லிய சாஸ்திர பரீட்சைகளைக்காட்டிலும் பின்னர் சொல்லிய பரீட்சைகளில் படித்த பாடத்தின் ஆழ்ந்த பொருள் அறியாமலிருந்தாலும் ஏற்பட்ட பாடத்தை மனப்பாடமாய்ச் செய்தால் மேலான நிலைமையில் பரீட்சை தேறலாம் என்பதற்கு சேபமில்லை. ஆகவே பெண்களின் புத்தியைவிட ஆண்களின் புத்தியானது மேலானது என்பதில் சந்தேகமில்லை. 500 பெண்களையும், 500 ஆண்களையும் எடுத்துக் கொண்டு அவர்களுக்கு 10 கணக்குகள் கொடுத்து 5 நிமிஷத்தில் எவ்வளவு செய்யக்கூடும் என்பதைக் கவனித்ததில் பின்னர் சொல்லப் புகும் விவரம் தெரிந்தது.



| பெண்கள். | கணக்குகள். | ஆண்கள். | கணக்குகள். |
|---|---|---|---|
| 10 | 3 | 2 | 1 |
| 20 | $3\frac{1}{4}$ | 12 | $1\frac{3}{4}$ |
| 30 | $3\frac{1}{2}$ | 14 | 2 |
| 45 | 4 | 20 | $2\frac{3}{4}$ |
| 50 | $4\frac{1}{4}$ | 26 | 3 |
| 60 | $4\frac{1}{2}$ | 30 | $3\frac{1}{2}$ |
| 70 | 5 | 35 | $3\frac{3}{4}$ |
| 60 | $5\frac{1}{2}$ | 40 | 4 |
| 50 | $5\frac{3}{4}$ | 45 | $4\frac{1}{2}$ |
| 45 | 6 | 50 | 5 |
| 30 | $6\frac{1}{2}$ | 45 | $5\frac{1}{2}$ |
| 20 | $6\frac{3}{4}$ | 40 | 6 |
| 10 | 7 | 35 | $6\frac{1}{2}$ |
| | | 30 | $6\frac{3}{4}$ |
| | | 25 | 7 |
| | | 20 | $7\frac{1}{2}$ |
| | | 15 | 8 |
| | | 10 | $8\frac{1}{2}$ |
| | | 3 | 9 |
| | | 2 | $9\frac{1}{2}$ |
| | | 1 | 10 |

மேற் சொல்லிய பரீட்சையில் எல்லாப் பெண்களும் 3 கணக்குகள் செய்யக் கூடிய நிலைமையிலிருக்க ஆண்களில் 3-க்கும் குறைவாகச் செய்யக் கூடியவர்களைக் காண்கிறோம். 7 கணக்குகளுக்கு மேல் செய்யக்கூடிய பெண்கள் ஒருவரும் இல்லாதிருக்க ஆண்கள் அநேகரிருக்கிறார்கள். ஆகவே, நாம் மனதிலும் நினைக்கமுடியாத அயோக்கியன் குடிகாரன் திருடன் முதற்கொண்டு உலகத்திற்கு நன்மையைச் செய்யும் பெரிய மகான்கள் வரையில் சேர்க்கும்படியாக ஆண்களையும் பெண்களையும் நிறுத்தமுயன்றால், ஆண்களில் கடைசித்தரத்தானையும் முதல்தரத்தானையும் காணலாம். ஆனால் பெண்களில் அவ்வாறு காண முடியாது. அவர்கள் மேலே கணக்கிற் சொல்லியவாறாகவே நடுத்தரத்தே யிருப்பார்கள்.

சந்தோஷம் என்ற உணர்ச்சியை எடுத்துக் கொள்ளுவோம். சந்தோஷமானது சரீர அமைப்பை மாற்றக்கூடிய உணர்ச்சியாகும். இவ்வகை மாறுதலைப் பெண்களிடத்தே சீக்கிரத்தில் காண முடியும். அபிமானம், ஆசை, அன்பு என்ற குணங்கள் பெண்களுக்குப் பிறப்

பிலேயே உண்டானவை. ஆண்களுக்கு அவ்வாறில்லை. இத்தகைய
அறிவை மிருகங்களிடத்தில் காணலாம். ஓர் குளவியானது புழு
வைக் கொணர்ந்து அதனைக் கொட்டி தன்னைப்போல் செய்வதானது
அதன் உடன் பிறந்த குணமே யல்லாது வேறு அல்ல. ஆண்களோ,
ஒன்றை விரும்புவதும், வெறுப்பதும், அதனுடைய குணாகுணங்க
ளைக் கவனித்தே செய்வார்கள். இவர்களுக்கு அன்பு ஆசை யென்
பது வருவித்துக்கொள்ள வேண்டியதாகமுடிகிறது. மனிதன் ஆகார
த்தைச் சம்பாதிக்கவேண்டிய வனாதலால் அவன் மிருகம் முதலிய
வற்றிலுள்ள ஜீவனைப் பற்றிக் கவனிப்பதில்லை. அதன் உடலைப்
பற்றிக்கவனிப்பதுடன் தான் செய்யுங்காரியங்களுக் கெல்லாம் ஓர்
பரிகாரம் சொல்லுகிறான். ஆனால் பெண்களோ உயிரை வளர்ப்ப
வளாதலால் அவள் உடலைப் பற்றிக் கவனிப்பவளல்ல. மனிதன்
தனது புத்தியை விருத்திசெய்து தனக்குத் தற்காலத்திற்கு வேண்
டியவற்றைத் தேடுகிறான். ஆனால் பெண்களோ தற்கால லாபத்
தின் பொருட்டு ஒன்று செய்பவர்களாய்த் தெரியவில்லை. இக்கு
ணம் இவர்களாய் வருவித்துக் கொண்டதுமல்ல. வருங்காலத்தி
ற்கு வேண்டியதைத் தேடவே சுவாமியால் கொடுக்கப்பட்ட உள்
ளறிவாகும். நாமாய் விசாரித்துக்கொள்ளும் புத்திக்கும் சுகமாய்
உண்டாகும் உணர்ச்சிக்கும் வித்தியாசம் உண்டு. காரணங்கண்டு
காரியத்தை நாடுவார்கள் முதலில் சொல்லிய புத்தியையுடையவர்
கள். ஆனால் காரணத்தைக் கவனியாமலே காரியத்தை நாடுவார்கள்
பின் சொல்லிய யுணர்ச்சியை யுடையவர்கள்.

இனி நாம் பெண்களுக்குக் கொடுக்கவேண்டிய படிப்பைப்
பற்றிக் கவனிப்போம். இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும்
படிப்புகளெல்லாம் மனிதன் தன் சோற்றைச் சம்பாதிப்பதற்காகவே
ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எல்லா சாஸ்திரங்கள் மனிதன்
தனது ஆகாரத்தை எவ்வாறு இலகுவில் சம்பாதிப்பது, எவ்வாறு
சாப்பிடுவது என்ற தற்காலத்திய விஷயங்களைப் பற்றியே போதிக்
கின்றன. இதுவரை கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் யந்திரங்களெல்
லாம் மனிதனின் ஆகாரத்திற்காகவே ஏற்படுத்தப்பட்டன. இனி
நடக்கவேண்டியவற்றைப் பற்றி மனிதன் கவனிப்பதாகக்காணோம்.
வருங்காலத்தைப்பற்றியோசிக்கும் குணம் படிப்பிலிருந்து வருவது
கடினம். தன் உணர்ச்சியால் வரவேண்டும். ஆண் பிள்ளைகளிட



29

த்து அவ்வுணர்ச்சி யிருக்கிறதில்லை. பெண்களிடத்திருக்கும் உண
ர்ச்சியானது அவர்களுக்கும் ஆண் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும்
படிப்பைக்கொடுப்பதினால் அற்றுப்போகிறது. விருத்திக்கு வர
வேண்டிய தென்றால் பெண்களுக்கு சுயமாயுள்ள உணர்ச்சிகளை
விருத்திக்கும் கொண்டுவரவேண்டிதாகும். சுவாமியானவர் மனித
னுக்கு இல்லாத உணர்ச்சியையும் குணத்தையும் பெண்களுக்குக்
கொடுத்திருப்பதற்குக் காரணம் ஆண்பிள்ளைகளுக்கு உதவியாக
விருத்தற்பொருட்டேயாகும். இரண்டு குணங்களும் மாறுபாடு
டையவையாதலின் ஒருவரிடத்தே பொருந்தியிருப்பது கெடுதலா
கும். அவ்வாறு ஒரு ஆண்பிள்ளையிடத்து பெண்குணங்களும் இரு
க்குமாகில் அவன் ஆண்பிள்ளை செய்யவேண்டிய வேலையையும்
செய்யாது பெண்பிள்ளை செய்யவேண்டிய வேலையையும் செய்யாது
பயனற்றவனாகிவிடுகிறான். இதுபோலவே ஒரு பெண்ணிடத்தில்
ஆண்குண மிருந்தாலாகும். நாம் இப்பொழுது செய்துவருவது
போல் பெண்களும் ஆண்களுக்காக ஏற்பட்ட படிப்பைக்கொடுத்
தால் அவர்களுடைய பெண் குணத்தை இழந்து நல்லதாய் வருவது
கடினமாகும்.

ஆகவே நல்ல தாயாக விருத்திற்கு வேண்டிய படிப்பை மாத்தி
ரம் நாம் பெண்களுக்குப் பள்ளிக்கூடங்களில் தரவேண்டுமே யல்
லாது வேறு ஆண்பிள்ளைகள் வயிற்றுப் பிழைப்புக்காகக் படிக்கும்
படிப்பைக் கொடுக்கக்கூடாது. நாம் அவ்வாறு செய்வதனால்
நல்ல தாயாகவரக் கூடியபெண்களைக் கெடுத்து விடுகிறோம். ஆண்
பிள்ளைகளின் கடமை யென்னவென்றால் பெண்களை இனிவரும் சந்
ததிகளுக்கு நல்ல தாயாக்க வேண்டியதே யல்லது வேறு அல்ல.
இதனை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டியது அவசியமாகும்.

கோ. நடேசய்யர்.

---

ஈச்வரன் நமது தேகத்திற்குள் மௌனமாக யிருந்து நல்லவைகளையும்,
கெட்டவைகளையும் பார்த்துக்கொண்டுச் சலனமின்றி யிருக்கிறார்.
கோரின் தியன்ஸ்.

* *

ஒரு வஸ்துவானது, இயற்கையின் ஸ்வபாவத்தினாலேயே, பல ரூபங்
களாக மாறுகின்றன வேயன்றி நாசமடைகிறது மில்லை. நாஸ்தியாகப்
போகிறது மில்லை.—அஸ்வ கோஷா.

# KNOWLEDGE.

By

**Sri. M. Murugambal.**

## ஞானம்.

சென்னை ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்தில் சென்ற டிசம்பர் [illegible] 26-தேதி சனிக்கிழமையன்று ஸ்ரீமதி. முருகாம்பாள் "ஞானம்" என்னும் விஷயமாக ஒரு அரிய உபந்யாஸம் புரிந்தார். அவ்விஷயத்தின் ஸாராம்சம் பின்வருமாறு.

சகோதரிகாள்!

இன்று மிகவும் படித்தவர்கள் சபையில் எவ்விதமான கல்வி வாசனையுமில்லாத பேதையாகிய என்னை "ஞானம்" என்பதைப் பற்றி பேசக்கேட்டதினால், பேசத்துணிவு இல்லாத யான் எழுதி வாசிக்க நேர்ந்தது. இதில் பிசகுகள் அனந்தமிருக்கும். கற்றோர்கள் மன்னிக்குமாறு வேண்டுகிறேன்.

எடுத்துக்கொண்ட விஷயம் "ஞானம்." ஞானமென்பதைப் பற்றி பலர் பற்பல விதமாகச் சொல்லுவார்கள் அறிவே ஞானமென்பாருமுண்டு சரியை, கிரியை, யோகம், ஞானம், என்னும் படித்தரங்கள் நான்கினுள் நாலாம் படித்தரமாகிய ஞானம் உண்டாகுவது எப்படி யென்றால், சரியையால் கிரியையும், கிரியையால் யோகமும், யோகத்தால் ஞானமுமுண்டாகுமென்பார்கள். இந்நான்கால், சாலோகம் சாமீபம், சாரூபம், சாயுஜ்யம் என்னும் பதவிகள் உண்டாகு மென்பது சித்தாந்தத்துணிபு. ஆயினும் பெண்மணிகள் கூடும் இச்சபையின் கண்ணே ஞானமுண்டாவதற்கு முதற் கருவி கல்வி யென்றே கொண்டு சிலவிஷயங்கள் சொல்லுவேனாக.

கல்வி—என்பது அறிவு. அறிவை யுடையவர்தான் ஞானத்தையுடையராவர். ஞானம் இல்லாதவர் மானத்தைக்காத்துக் கொள்ளார் என்பது ஞானிகள் துணிவு. ஆகையால் புருஷர்களும், பெண்களும் கல்விகற்கவேண்டுமென்பதே உலகோர் கொள்கை. ஆனால் உலகத்திலிருந்தும் இல்லாதவர்போல் தமது சாதுரியத்தினால் பெண்கள் கல்வி கற்கக்கூடாதென சிலர் கூறுவர். அவர்கள் எண்ணம் புண்ணேயாயினும், யோசிப்போம். ஞானமென்பது எல்லார்க்கும் பொதுவானபோது புருஷர்கள் கற்கப் பெண்களுழுவானேன். புருஷர்களுக்கு ஞானம் வேண்டிய பொழுது பெண்களுக்கேன் ஞானம் வேண்டியதில்லை. புருஷனுக்குச்செய்யும் அடிமைத்தனமே பெண்களுக்குரிய அறிவே யென்றால், அவ்வடிமைத்தனமும் செய்யும் வகை இன்னதென்று அறிந்துகொள்வதும் ஞானத்தால்தானே. அப்படியிருக்க, ஞானத்தையுண்டாக்குகிற கல்வியை ஏன் கற்கக்கூடாது, கல்வியின்றி ஞானம் உண்டாகாதல்லவா? புருஷனுக்குச்செய்யும் அடிமைத்தனமும், பெண்கள் அறிந்துகொள்ளவேண்டிய பலவற்றினுள்ளும் ஒன்றே. இந்த ஒரு காரியத்தைக்கொண்டு பெண்களை மூடராக்கிக்கொள்வது பெரும்பேதமையுடைய புருஷர்தன்மையாகும். புருஷன் உணவிற்குத்தக்க உணவுகளைப் பாகமாகச்செய்து படைப்பதும் பாகசால்திரக்கல்வியே. பெண்ணானவள் தன்னுடைய நடத்தையினால் பரபுருஷன் நம்மையிச்சிப்பான் என்றெண்ணி இன்னின்னவிதமாக நடந்துகொள்ளவேண்டியதென்று தெரிந்துகொள்வதும் கல்வியாலேயே. புருஷன் ஆனந்தமுற இன்னிசைப்பாக்கள் கற்று தன்னந்தனியிடத்தில் இன்புறச்செய்வதும் கல்வியினாலே. புருஷன் வறுமையை மிகவும்நோக்கி ஆபரணாதிகளுக்காகத் துன்பப்படுத்தாது வாழ்வதும் கல்வியின்குணமே. தனது குழந்தைகள் பருவத்தின் நேர்மை பாராட்டிச் சீராட்டி, தக்ககாலத்தில் பக்குவடி சிகிச்சை செய்துவளர்ப்பதும் கல்வியின் மணமே. புருஷனுடைய மனதுக்கு ஒத்து தக்கதேவதையை உபாசித்து ஞானங்கொள்வதும், புருஷன் புத்தியின்றி செல்லும் கெட்டவழிகளிலிருந்து சேர்ப்படுத்தி தம்வசப்படுத்தி நடத்துவதும் கல்வியாலாகிய ஞானத்தின் பயனே.



இல்லற தருமத்தை நன்கு நடத்துவதும் கல்வியின் ஞானமேயாகும். இம்மைக்குப்பின் மறுமையில் சுகம் தருவதும் கல்வியாலாகும் ஞானமேயாகும். ஆகையால் நமது சகோதரிகள் யாவரும் கல்விகற்று ஞானத்தையடையவேண்டியது உத்தமோத்தமமாகும். பெண்மணிகளால் நடத்தப்படும் இச்சங்கத்தின் வளர்ச்சிக்கும் வேண்டியது ஞானமேயாகும், படிக்கக் கேட்ட இந்த விபாசத்தை மறப்பென்னும் கள்வன் கொண்டு போகாதிருக்க சிறுபத்திரமாகப் பதித்து யாவரிடத்து மிருக்கச் செய்யத்துணிந்தேன். குற்றமுளதேல் உலகம் பொறுப்பதாக.

மு. முருகாம்பாள்.

# THE HORRORS OF WAR.

By
**Mr. S. Rengasami Iyengar.**

## யுத்தத்தினால் விளையும் கொடுமைகள்.

ஒரு தேசம் மற்றொரு தேசத்தோடுசண்டை தொடுப்பதனால் விளையுங் கேடுகள் எண்ணிறந்தவைகளாயும் எழுதி முடியாதவைகளாயுமிருக்கின்றன. 'யுத்தம்' என்னும் வார்த்தையைக்கேட்ட மாத்திரத்திலேயே ஜனங்கள் நடுங்குகிறார்கள். ஒரு தேசத்தில் வெகுகாலமாய்ச் சிறப்பு வாய்ந்து வரும் அமைதியானது நிலைகுலைந்து போகின்றது. ஜனங்கள் வீராவேசங் கொண்டவர்கள் போல் யுத்த சன்னத்தராகிறார்கள். ஏராளமான தங்க நாணயங்களும், வெள்ளி நாணயங்களும் கஜானாவிலிருந்து எடுத்துச் செலவிடப்படுகின்றன. திரவியம் குறைவாயிருந்தால் ஜனங்கள்பேரில் புதிதான வரிகள் போட்டுச் சுமற்றுகிறார்கள்.

எத்தேசம் சண்டை தொடுக்கிறதோ அத்தேசமேயன்றி அதனுடைக்குள்பட்ட மற்றதேசங்களும் சண்டைபோடவோ அல்லது தன்னாலியன்ற உதவிபுரியவோ முன்வந்து நிற்கின்றன. சண்டை செய்ய வேண்டியவர்கள் பலிஷ்டர்களா யிருத்தல் அவசியமானதால் ஒவ்வொரு தேசத்திலிருந்தும் 20 வயதுமுதல் 25 வயதுள்ள வாலிபர்களே வீரர்களாய்த் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகையால் சண்டையில் மரிப்பவர்கள் எல்லாரும் பால்ய வயதுள்ளவர்களாகவே யிருக்கிறார்கள். அவர்கள் சாவினால் தாய், தந்தை, பிள்ளை முதலிய எல்லோரும் அளவிடமுடியாத கஷ்டத்துக் குள்ளாகிறார்கள். சிலவீடுகளில் ஒரே பிள்ளைபெற்றுள்ளவர்கள் படுங்கஷ்டத்தை எடுத்துரைக்க இந்நாக்கும் எழுகிறதில்லை !

சண்டை நடக்கும் தேசங்களேயன்றி மற்ற இடங்களிலும் குழப்பமும், சண்டைசச்சரவுகளும், வியாபாரங்களில் விலையேற்றமும் சம்பவிக்கின்றன. தற்காலத்தில் இங்கிலாந்து ஜெர்மனி தேசத்துடன் சண்டை தொடுத்தபிறகு இந்தியாவின் நிலைமை மிகவும் குழப்பமாகவே இருக்கிறது. அயல்தேசத்திலிருந்து, போக்குவரவு சாதனக்குறைவால், சாமான்கள் வராமல் நின்றுவிடுமென நினைத்து வியாபாரிகள் தீப்பெட்டி, தேயிலை, சர்க்கரை, மெழுகுவர்த்தி, பால்பெட்டி, காகிதம், ஸோப்பு, முதலிய சரக்குகளின் விலை



யை 100-க்கு 30-அல்லது 50-ரூபா அதிகமாக உயர்த்திவிட்டார்கள். இதனால் சாதாரண ஜனங்களேயன்றி தினச்சம்பளங் கொண்டு பிழைக்கும் ஏழை ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்வள். மேல்நாட்டுச் சாமான்களைப்போலவே நமது தேசத்தில் உற்பத்தியாகும் மஞ்சள், ம்ல்லி, வெல்லம், முதலியவைகளும் கறி காய்களும் உயர்ந்த விலைக்கே விற்கப்படுகின்றன. சண்டை நடக்கும் காலத்தில் அயல்தேசத்திலுள்ள பாக்டெரிகளும், வொர்க்ஷாப்புகளும் சாத்தப்படுகின்றன. அதனால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் வேலையில்லாமல் தெருவில் நின்று திகைக்கிறார்கள். ஒவ்வொரு தேசத்தின் கலையபிவிர்த்தியும், சாஸ்திர அபிவிர்த்தியும் முறையே தேங்கி நிற்கின்றன. உலகத்தில் பணமுடைக்கோ கேட்க வேண்டுவதில்லை.

யுத்தத்தினால் விளையுங்கேடுகளை யோஜிக்குமிடத்து சண்டையென்பதையே தவிர்த்தல் நலமெனத்தோற்றுகிறது. எக்காலத்திலும் சண்டையென்பது இலகுவான கார்யமில்லை. புத்தியிலும், யுக்தியிலும், சக்தியிலும் அதிமேதாவிகளெனப் பெயர் வாய்ந்த அலெக்ஸாண்டர், போனபார்ட், ஸீஸர், முதலிய போர்வீரர்கள் செய்த கொலைகளுக்குக் கணக்குண்டா ? மேலும் மதத் துவேஷத்தினால் 'பாலஸ்தீனில்' நடந்த 'குரூஸேட்' யுத்தத்தில் கொலையுண்டவர்களின் தொகை எவ்வளவு ! தற்காலத்தில் நூதனமாய்க் கண்டுபிடிக்கப்பட்ட ஆகாயக்கப்பல்கள், வெடிகுண்டுகள், சனியன்கள், (Dumdum bullets) முதலியவைவீரர்களை மண்ணுலகைவிட்டு விண்ணுலகுக்கு அனுப்புவதில் கைதேர்ந்தன. ஆகையால் நண்பர்காள் ! தற்காலத்து யுத்தத்தில் மடியுஞ் ஜனங்கள் தினம் ஒன்றுக்கு எவ்வளவு இருக்கலாமென நீங்களே யூகித்தறியலாம்.

சில அரசர்கள் பரஸ்நேகமில்லாமல் மமதை கொண்டு சுயநலங் கருதி மற்ற தேசத்துடன் சண்டை தொடுக்கிறார்கள். தம்பாட்டில் இருந்துகொண்டிருக்கும் சிற்றரசர்களையும் தேசங்களையும் வலுவிலே சண்டைக்கிழுக்கிறார்கள். அவர்கள் 'புலிக்குப்பயந்தவர்கள் எல்லாரும் என்மேல் படுத்துக்கொள்ளுங்கள்' என்பதுபோல் தாங்கள் சண்டைக்குப்போகாமல் ஏழைகளைச்சண்டைக்கு விட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். அவ்விரண்டு சேனைகளும் கலக்கும் பொழுது அஷ்டதிக்குக்களும் நடுங்குகின்றன. அப்பொழுது குவியும் சவமலைகளோ நவமலைகளாகின்றன. சிலர் கரமற்று, கால

ற்று, சிரமற்று, விழுந்து கிடக்கிறார்கள். மற்றுஞ் சிலர் இறக்குந் தருவாயில் தவித்துத் தவித்துத் தண்ணீர்கூடக் கொடுப்பவரில்லாமல் மடிகிறார்கள். சிலர் தம்மகத்தை விட்டுப்போருக்கு வந்தவேளையை நினைத்துத்துக்கிப்பார்கள். மற்றுஞ் சிலர் நமது பெற்றோருக்கு வந்தனஞ் செலுத்தாமலும், பெண்டீர் பிள்ளைகளைப்பாராமலும், அவர்கள் ஜீவனோபாயத்துக்குத்தகுந்த உபாயங்கள் செய்யாமலும் மரிக்கவேண்டியிருக்கிறதே யெனப் பரிதபிப்பார்கள். எங்கு பார்த்தாலும் போர்க்களத்தில் ரத்தப்பிரவாகமாகவே யிருக்கும். ஜனங்கள் துன்பத்துக்கோரளவில்லை. திவ்யாலங்காரமான ஆலயங்களும், மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், இருந்த இடந் தெரியாமல் இடிந்து கிடக்கும்.

இச்சண்டைகளினால் சில ஜனங்களுக்குத் துர்அப்பியாஸங்களும் கெட்ட பழக்க வழக்கங்களும், கொடிய எண்ணங்களும் படிகின்றன. சண்டை முடிந்த பிறகும் துன்பம் விடுவதில்லை. தான்யக் குறைவாலாகிலும், திரவியக் குறைவாலாகிலும் தேசத்தில் பஞ்சமுண்டாகிறது. 'சண்டையில் இறந்தது பொய்' யெனக்கருதும்படி இப்பஞ்சம் தினம் ஆயிரக்கணக்கான ஜனங்களைத்தனக்குப் பலியாக்கிக் கொள்கின்றது.

அந்தோ ! கொடிது கொடிது ! வறுமை கொடிது !! அதிலும் கொடிது இப்பெரும் போர் !! யுத்தமென்றால் ஆதி முதல் அந்தம் வரையிலும் துன்பமும், துக்கமுமே தவிர வேறில்லை. ஆகவே ஜீவகாருண்ய முள்ள ஒவ்வொருவரும் சண்டையினின்றும் விலகியே நின்று சமாதானமாகவே இருக்கக்கருதல் வேண்டும்.

எஸ். ரெங்கஸாமி அய்யங்கார்.

---

ஞான முள்ளவன் பத்து சுத்தவீரர்களைக்காட்டிலும் பலவான். அவனே உண்மையான ஸுகத்தை அனுபவிக்கக்கூடியவன். ஒருவன் ஆயுளில் நிலைத்திருக்கக்கூடியது ஞானத்தைத்தவிர வேறொன்றுமில்லை—ஸோராஸ்டர்.

*   *   *   *   *

இருட்டறையில் ஒரு தீபம் வைத்தால் எப்படி இருட்டைப்போக்கடித்து ப்ரகாசத்தைக்கொடுக்கிறதோ அதுபோல் அந்த காரத்தில் கிடக்கிற ஜனங்களுக்குள் ஒரு ஞானவான் தோன்றினால் ப்ரகாசமாய் நிற்பான்—மகம்மது.



## GERMAN WOMAN SPIES.

By

**Sri S. Bagirathi.**

### ஜெர்மனியின் ஸ்த்ரீ வேவுகாரர்கள்.

ஒருவனுக்குக் கடுங்கஷ்டம் வந்தால் தான் அவனுடைய அந்தரங்கநிலைமை, அவன் யோக்கியதை முதலானவைகளெல்லாம் தெரிகின்றன. அதுபோல இப்போது ஐரோப்பாவில் கடும்போர் நடக்கிறபோது ஒவ்வொரு தேசத்து அந்தரங்க ரஹஸ்யங்கள் அநேகம் வெளியாகின்றன. ஜெர்மெனியின் பல ரஹஸ்யங்கள் இந்த ஸமயத்தில் வெளியாயிருக்கின்றன. பிரடரிக் என்பவர் ஜெர்மெனியை மிகத்திறமையோடு ஆண்டுவரும் நாளில் ஒரு நாள் "நமது ராஜ்யத்தில் 100 ஸ்த்ரீவேவுகாரர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒரு திடராஜ்யத்துக்கு இன்றியமையாதவர்கள்" என்று மந்திரிகள் ஸபையில் சொல்லியிருக்கிறாராம். ஜெர்மெனி தேசத்தார் அரசன்சொன்ன புத்திமதியை மறக்காமல் நாளுக்கு நாள் அந்த ரஹஸ்யசங்கத்தாரை மிகவும் உத்ஸாகப்படுத்திவருகிறார்கள். அவர்களுடைய ரஹஸ்ய சங்கமானது உலகத்திலுள்ள மற்றெல்லா தேசங்களை விட மிகப்பெரிது. ரஹஸ்யங்களோ ஆழ்ந்தவைகள். படிக்கிறதற்கு மிகவும் ஆச்சர்யமாகவே யிருக்கும். அந்த ரஹஸ்ய சங்கத்திற்கு ஈடாக வேறு எதையும் சொல்லமுடியாது. பல பத்ரிகைகளில் இதைப்பற்றி வந்ததை திரட்டி ஒழுங்குபடுத்தி நம் 'பெண் கல்வி" யைப்படிக்கும் ஸஹோதரிகளுக்காக எழுதியிருக்கிறேன்.

### வருஷமொன்றுக்கு லட்சக் கணக்கான பவுன்.

அச்சங்கத்திலிருக்கும் வேவுகாரர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் வகையில் வருஷந்தோறும் ஜெர்மெனியார் 10-லட்சம் பவுன், அதாவது ஒரு கோடியே 50-லட்சம் ரூபாய்க்குமேல் செலவு செய்கிறார்கள். அந்த வேவுகாரர்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி மாதமொன்றுக்கு 10-பவுன் முதல் இரண்டாயிரம் பவுன் வரையில் சம்பளம் பெறுகின்றனர். இவ்வளவு அபரிமிதமான தொகையை வருஷந்தோறும் ஜெர்மானியர்கள் செலவிட்டுவருவதால், அத்தொகைக்கு ஏற்றபடி பயன் கிடைக்கிறதா என்பதைப்பற்றி நிச்சயமாய்ச் சொல்ல முடியாதாயினும், அவ்வேவுகாரர்கள் அன்னிய கவர்ன்மெ

ண்டுகளின் அந்தரங்கங்களை வெகு சாமார்த்தியமாய் அறிவது ஆச்சரியமாகவே யிருக்கிற தென்பதற்குத்தடையில்லை.

பிரிட்டிஷாரின் எச்சரிகை.

தற்கால யுத்தத்தில் அந்த வேவுகாரர்கள் போர் முனையிலிருந்து பல விஷயங்களை ஜெர்மானியர்களுக்கு அறிவித்து விடக் கூடுமென்று "சமாச்சாரம் அறிவிக்கும் ஆபீஸார்" முன்பே எச்சரிக்கை செய்திருக்கின்றனர். போர்முனையில் வேவுகாரர்கள் சாதாரண உடைதரித்து நின்றிருந்து, நேசத்துருப்புகளின் நடமாட்டங்களை ஜெர்மானியர்களுக்கு அறிவித்து விடுகிறார்கள்.

துப்பறிவிக்கும் தந்திரம்.

அவர்கள் சமாச்சாரங்களை எவ்வாறு ஜெர்மானியர்களுக்கு உணர்த்துகிறார்களென்றால், பகலில் வீடுகளின் புகைப்போக்கியின் வழியாய் ஒரு விதமான புகையைக் கிளப்புகின்றனர். இரவிலே வர்ண விளக்குகளை உபயோகிக்கின்றனர்.

ஜெர்மன் குதிரைப்படை முன்செல்லும் பொழுதெல்லாம், சாதாரண உடைதரித்த மனிதர்கள் வெகு தூரம்முன்னே துப்பறியச்செல்கின்றனர். அதுவுமன்றி, ஜெர்மானியர்கள் பின் வாங்கும் பொழுது, அவர்கள் காலிசெய்து விட்டுப்போன கிராமங்களிலும் நகரங்களிலும் பல ஜெர்மன் அதிகாரிகள் பிரெஞ்சு, பிரிட்டிஷ் ராணுவ உடைகளைத்தரித்துத் தங்கியிருந்து, நேசத்துருப்புகளின் நடமாட்டங்களை அறிந்துபோய் விடுகின்றனர்.

ஸ்திரீ வேவுகாரர்கள்.

போர்முனையில் பல ஸ்திரீ வேவுகாரர்கள் அகப்பட்டிருக்கிறார்கள். ரெயில்வே ஸ்டேஷன்களிலும் அவர்கள் காத்திருந்து, துருப்புகள் போவதையும் வருவதையும் தெரிந்துகொள்கிறார்கள். எயிஸன் நதிக்கரையில் சண்டை நடந்தபொழுது, மின்சார விளக்கின் வெளிச்சத்தைக்கொண்டு ஜெர்மானியர்களுக்கு துப்பு அறிவித்த ஒரு ஸ்திரீ கைது செய்யப்பட்டாள்.

மேலும் மற்றொரு அழகான ஸ்திரீ ஒருமோட்டார் வண்டியில் ஏறிச்சென்று, நேசத் துருப்புகளின் ஸ்தானத்தை அறிந்துகொண்டு ஜெர்மன் போர்முனைக்குச் செல்லும் வழியில், அவளைக்கைதி செய்துவிட்டார்கள். லார்ட் கிச்சனர், ஜெனரல் ஜாப்ரே இவர்களிடமிருந்து அனுமதிச் சீட்டுப் பெற்றிருந்ததாக ஒரு பொய்ப்பத்திரமும் அவளிட மிருந்தது.



ஜெர்மேனியர்களின் மிகுந்த நம்பிக்கை.

யுத்தகாலத்திலும் சமாதான காலத்திலும் வேவுகாரர்களையே பெரும்பாலும் ஜெர்மனி நம்பி யிருக்கிற தென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. மிக்க வனப்பும் பகட்டும் இளம்பருவமும் வாய்ந்த ஸ்திரீகள் பலரை வேவுகாரர்களாக ஜெர்மானியர் தெரிந்தெடுக்கின்றனர். அவர்களுடைய அழகில் அந்நிய நாட்டு அதிகாரிகள் பலரும் ஈடுபட்டு, தங்கள்தங்கள் கவர்ன்மெண்டின் ராணுவ, கடற்படைகளின் அந்தரங்கங்களை வெளியிட்டு விடுவரென்பதே ஜெர்மனியர்களின் நம்பிக்கை.

ஸ்திரீ வேவுகாரர்களின் பதவிகள்.

அம்மாதிரி நியமனம்பெற்ற ஸ்திரீ வேவுகாரர்களிற் சிலர் அன்னியநாட்டு அதிகாரிகளின் வீட்டில் வேலைக்காரிகளாகவும், தாதிகளாகவும், தோழியர்களாகவும் உபாத்தினிகளாகவும் வேலை பார்த்து வருகின்றனர். இன்னுஞ் சிலர் பெரிய கம்பெனிகளில் குமாஸ்தாக்களாகவும், சாமான் விற்போராகவும் வேலைபார்க்கின்றனர். வேறு சிலர் பாடகர்களாகவும் நாடக தாரிகளாகவும் இருக்கிறார்கள்.

ராணுவ, கடற்படையின் உத்தியோகஸ்தர்களை வலையிற்சிக்கும்படி செய்வதற்காக, அழகு வாய்ந்த ஸ்த்ரீகளிற் சிலர் ஒவ்வொரு தேசத்தின் தலை நகரங்களில் அரண்மனைபோன்ற வீடுகளில் தங்கியிருந்து, வெகு ஆடம்பரத்துடன் வசித்து வருவது மன்றி, உயர்தர உத்தியோகஸ்தர்கள் நர்த்தனமாடும் சபைக்குத் தாங்களும் சென்று அவர்களுடன் நர்த்தனமாடி அவர்களை வசப்படுத்தி விடுகிறார்கள். அம்மாதிரி நர்த்தனமாடு வதற்கு ஆங்கிலத்தில் பால் (Ball) என்று சொல்வது வழக்கம்.

வேவுகாரர்களுக்கு இனாம்.

வேவுகாரர்களுக்கு மாதாமாதம் திட்டப்படி சம்பளம் கிடைப்பதுடன், அன்னிய நாட்டு கவர்ன்மெண்டின் ரகஸ்யங்களை அறிந்து வெளியிடும் பொழுது, அந்தந்த விஷயங்களுக்கு ஏற்றபடி நல்ல பரிசுகளும் கிடைக்கின்றன.

அலையிற்சிக்கிய கடற்படை அதிகாரியின் கதி.

சில காலத்திற்குமுன் பிரிட்டிஷ் கடற்படையின் அதிகாரி யொருவர் நாடக சாலைக்குச் சென்றிருந்தார். அங்கிருந்த ஒரு

ஜெர்மன் வேவுகார ஸ்திரீயின் அழகில் அவர் ஈடுபட்டு, அவளுடன் அன்னியோன்னிய நேசபாவம் பாராட்டத் தலைப்பட்டுவிட்டார். ஆகவே இருவருக்கும் நேசம் முதிர்ந்து விட்டது. ஆதலின் அவ ரிடம் மயங்கிப் போன அந்த அதிகாரி தான் வகிக்கும் உத்தியோ கத்தின் பொறுப்பைக் கவனியாது, கடற்படையின் சில முக்கிய மான ரகஸ்யங்களை அவளுக்கு அறிவித்து விட்டார். அவ்விஷயம் பின்பு வெளியாய் விட்டது. ஆகவே அவர்மீது அதன்பொருட்டு ஒரு கேஸ் ஏற்பட்டது. விசாரணையில் அக்குற்றம் ருஜுவாயிற்று. ஆதலினால் அந்த அதிகாரிக்கு 4-வருஷம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

### மற்றொரு ஸ்திரீயின் தந்திரம்.

மத்தியதரைக் கடலின் மேல்கோடியில் மத்தியதரைக்கட லுக்கு வாசற்படிபோலிருக்கும் ஜிப்ரால்டர் என்னும் ஸ்தலத்தில் பிரிட்டிஷ் கடற்படை யிருப்பதைநேயர்கள் அறிந்திருப்பார்கள். அங்குள்ள கடற்படை ஸ்தலத்தின் அமைப்பு, யுத்தக் கப்பல்களின் விவரங்கள், ஆகிய யாவும் சில வருஷங்களுக்கு முன் ஜெர்மனிக்குத் தெரிந்துவிட்டதாக பிரிட்டிஷார் அறிந்துகொண்டார்கள். உடனே அவ்விஷயத்தைப்பற்றி அந்தரங்கமாய் விசாரணை நடந்தது. விசா ரணை முடிவில், ஜிப்ரால்டர் என்னும் ஸ்தலத்தே அழகுள்ள ஒரு சிறுமி மிக்க ஆடம்பரத்துடன் வசித்து வருவதாக வெளியாயிற்று அந்த ஸ்தலத்திலுள்ள அதிகாரிகளுடன் அவள்நெருங்கிப் பழகி, அவர்களுடன் கேளிக்கைகளிலும் நர்த்தனங்களிலும் சம்பந்தப்பட் டிருந்தது மன்றி, அவ்வதிகாரிகள் பலரிடமும் நேசமுள்ளவளா யிருந்தாளென்பதும் நன்கு விளங்கியது. அவள் மூலமாய்த்தான் ரகஸ்யங்களை ஜெர்மானியர் அறிந்து கொண்டார்கள். ஆதலினால், அந்த ஸ்த்ரீயைஉடனே அங்கிருந்து அப்புறப்படுத்தி ஜெர்மனிக்கு அனுப்பி விட்டார்கள்.

### ஜெர்மனியின் முன் ஜாக்கிரதை.

தங்கள் தேசத்திலும் அன்னிய நாட்டு வேவுகாரர்கள் இருந்து துப்பறிவார்களென்பதை ஜெர்மனி நன்கு அறிந்திருப்பதனால், அத் தகையோரைக்கண்டு பிடித்துவிடுவதில் ஜெர்மானியர்கள் கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள். தங்களுடைய நாவுை, கடற்படைக ளின் அதிகாரிகள் அம்மாதிரியான அன்னியநாட்டு வேவுகாரர்




களின் வலையிற் சிக்கிவிடுவரோவென்று ஜெர்மன் கவர்ன்மெண்டார் தங்களுடைய அதிகாரிகளின் நடமாட்டம், முதலிய யாவற்றையும் தங்களுடைய வேவுகாரர்களின் மூலமாய்க் கவனித்து வருகின்றனர்.

### எந்நாட்டுக்கும் வேவுகாரர்களுண்டு.

உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் அந்நிய நாடுகளில் தங்கள் வேவுகாரர்களை நியமித்து, அந்தரங்கங்களை அறிய முயற்சி செய்து வருகின்றன ரென்பது வெளிப்படை. ஆனால் வேவுகாரர்களை வைத்து நடத்துவதிலும், அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதி லும், ஜெர்மனியே அதிகப் பணம் செலவு செய்வதுமன்றி, மிகுந்த ஊக்கமுங் கொண்டிருக்கிறதென்று தோன்றுகிறது.

### வேவுகாரர்களின் வரலாறு.

ஒவ்வொரு கவர்ன்மெண்டாரும் வேவுகாரர்களாகத் தங்களு டைய ப்ரஜைகளை மட்டும் நியமிப்பதில்லை. அந்தந்த நாட்டு மனி தர்களையும் அந்தந்த நாட்டில் துப்பறியும்படி நியமிக்கிறார்கள்.

மேலும், வேவுகாரர்களாக ஒருவனை நியமிக்கும் முன்னரே அவனிடமிருந்து “உண்மையை வெளியிடுவதில்லை. துரோகம் செய்வதில்லை” எனப்பிரமாண வாக்குமூலம் வாங்கிக்கொள்ளுகிறார் கள். அவனுக்கு அவ்வேலையில் உற்சாகமும் சிரத்தையும் உண் டாகும்படி எவ்விதத்திலும் உதவி புரிகிறார்கள். ஒரு வேவுகாரன் துப்பறியும்பொழுது, அவன் அகப்பட்டுக் கொண்டு சிட்சையடை ந்துவிடின், அவனுடைய குடும்பத்திற்குப் போதுமானப் பணவுத வியும் இன்னும் மற்ற உதவிகளும் செய்கிறார்கள்.

பாகீரதி.

---

மனிதனுக்கு அதிர்ஷ்டமும் துர் அதிர்ஷ்டமும் வருவது ஸஹஜம். இவை மாறிமாறிவரும். அதிர்ஷ்டம் வந்தபோது அளவுமீறின ஸந்தோஷ மும், துர் அதிர்ஷ்டம் வந்தபோது அளவுமீறின துக்கமும் கூடாது. ஸமபா வத்துடன் திடமாய் இருக்கவேண்டும்:—ஆரடஸ்.

* * *

ஸம்ஸார பந்தனங்கள் மூன்று. முதன்முதல் வீடு, இரண்டாவது மனைவி, மூன்றாவது காளைமாடு, இவை மூன்றையும் வைத்து அனுபவிக் கிறவன் ஸம்ஸாரி. எதாவது ஒன்று குறைந்தாலும் சீக்ரம் பூர்த்தி செய்து கொள்வது மேன்மை:—ஹோமர்.

# RAJA VIKRAM AND THE FAKIR

By

**Sri. V. Valambal.**

## விக்ராமார்க்கராஜாவும் பக்கிரியும்

இந்தியாவின் மத்தியில் கிழக்குமேற்காய் விந்திய பர்வதமிருக்கிறது. இந்த மலைத்தொடருக்கு வடபாரிசத்திலுள்ள பாகம் இந்துஸ்தானமென்றும் தென்பாரிசத்திலுள்ள பாகம் தக்ஷிணமென்றும் நிரம்ப காலமாக வழங்கிவருகிறது. ஸுமார் 2000 வருஷங்களுக்குள்ளாக இந்துஸ்தானத்தில் பேர்போன இந்து இராஜ்யம் ஒன்று பலநூற்றாண்டுகள் மிக்கசெல்வாக்குடனிருந்தது. இந்த இந்து இராஜ்யத்துக்கு ப்ரதானபட்டணமாக உஜ்ஜினியிருந்தது. இங்கே அஷ்டஐச்வர்யங்களுடனும் செல்வாக்குடனும் ப்ரக்யாதியுடனும் அனேககாலம் விக்ராமார்க்கனென்ற ஒரு அரசர் ஆண்டு வந்தார். இவர் அந்தக்காலத்திலிருந்த வீரபராக்ரம அரசர்களுக்குள் சூரியன்போல் விளங்கின காரணத்தால், இவருக்கு விக்ரம ஆதித்தன் என்றகாரணப்பெயர் வந்தது என்று சொல்லிக் கொள்வார்கள். விக்ரமாதித்த ராஜா நீதி பரிபாலனைத்தில் மிக்க கவலைகொண்டு உண்மையை உள்ளபடி அறிய இராக்காலங்களில் மாறுவேஷம் போட்டுக்கொண்டு நாடு நகரங்களுக்குச் செல்வாரென்றும், அவர்காலத்தில் ஒழுங்கீனமாயாவது அநியாயமாயாவது கேஸ்கள் தீர்மானமானதில்லையென்றும் அவருக்கு ப்ரக்யாதியுண்டு. இவர் உருமாறி தனித்தும் மந்திரியோடும் இராக்காலங்களில் இராஜ்யத்தின் மூலைமுடுக்குகளிலும் சஞ்சாரம் செய்து வந்ததால் இராஜ்ய நிர்வாகத்துக்கேற்பட்ட இடையூறுகளை ஸமயமறிந்து அனேக சந்தர்ப்பங்களில் தடுத்திருக்கிறார். இவர் உயிருக்கே வந்தவினைகளிலிருந்தும் சதியோசனைகளிலிருந்தும் தப்பித்துக் கொண்டிருக்கிறார். இவர் காலத்தில் ப்ரஜைகளுக்கு யாதொருகுறைவுமின்றி ஸுபிக்ஷமாய் கஷ்டமின்றி ஆண்டுவந்தார். இவர் காலத்தைப் போன்ற விசேஷமாகப் பேர்போன அரசாக்ஷி அதற்கு முன்னிருந்ததில்லையாதலால், அவர்காலம் என்றும் ஞாபகத்திலிருக்கும்படி அவர் அரசாக்ஷி காலத்தைச் சிறப்பிக்க, காலத்தை கணக்கிடுவதில் விக்ரமார்க்க சஹாப்தமென்று பெயரிட்டுவழங்கினார்கள். இதேமாதிரி தக்ஷிணத்தில் சாலிவாஹனன் என்ற பேர்போன ஒரு அரசன் காலத்திலிருந்து சாலிவாஹன சஹாப்தம் கணக்கிடப்படுகிறது. இந்துஸ்தா



னத்திலுள்ள இந்துக்கள் வருஷக்கணக்கு விக்ரமார்க்க சஹாப்தம் பசலி ஆண்டென்றும், தக்ஷிணத்திலுள்ள இந்துக்கள் சாலிவாஹன சஹாப்தம் பசலி ஆண்டென்றும் இன்றும் சங்கல்பகாலத்திலும் விசேஷ• காரியக்ருத்யங்களிலும் சொல்வார்கள் பஞ்சாங்கத்தில் இதைக் கவனித்தால் தெரியும். கிறிஸ்தவர்கள் கிறிஸ்து பிறந்த காலத்தை தங்கள் சஹாப்தமாகவும், மகம்மதியர்கள் மகம்மது மெக்காவிலிருந்து மெடினாவுக்கு போன காலத்தை தங்கள் சஹாப்தமாகவும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். விக்ராமார்க்க அரசருடைய காலம் 76 கி. பி. அதாவது கிறிஸ்து பிறந்தபின் 76 வருஷமென்று ஒருவாறு நிர்ணயம் செய்திருக்கிறார்கள்.

விக்ரமார்க்க ராஜா தர்மப்பிரபுவாயிருந்தும் நீதிபரிபாலனத்தில் ஸத்யத்துக்கு சற்றும் பிசகாமலிருந்தும், அவருக்கு விரோதிகளில்லாமலில்லை. இவரைக்கொல்ல எவ்வளவோ சதியோசனைகள் செய்யப்பட்டிருக்கின்றன. தெய்வசங்கல்பத்தாலும், இவர் முன்ஜாக்ரதையாலும் சாமர்த்யத்தாலும் மலைபோல் வந்த விக்னங்கள் பனிபோல் மறைந்து போயுள்ளன. ஒரு ஸமயத்தில் இவர் உயிர் தப்பின ஆபத்தைப் பற்றிய வரலாற்றைக் கூறுவோம்.

உஜ்ஜனி ஒரு நதியின் கரையிலுள்ள பட்டணம். அந்தப்பட்டணத்தின் எதிர் கரையில் ஏதோ மகாயோகி ஒருவர் வந்திருக்கிறாரென்றும், அவர் யாக குண்டத்தில் நெருப்பு வளர்த்து அதன் மத்தியில் உட்கார்ந்து கொள்கிறாரென்றும், அவர் நிரம்ப சாமர்த்யமும சக்தியும் உடையவரென்றும், இராஜ்யமெல்லாம் சமாசாரம் பரவியிருந்தது. அந்த மகாத்மாவை தரிசிக்க உஜ்ஜினியிலிருந்து திரள்திரளாக ஜனங்கள் போய்க்கொண்டும் வந்துகொண்டுமிருந்தார்கள். யோகிக்கு சிஷ்யர்களுக்காவது யாகத்துக்கும்ஹோமத்துக்கும்வேண்டிய சாமக்கிரியைகளை உபகரிப்பவர்களுக்காவது யாதொரு குறைவுமில்லை. நாளுக்குநாள் அந்த யோகியைப் பற்றிய கீர்த்தி இராஜ்யமெல்லாம் பரவிற்று. இராஜாவுக்கும் தெரிந்தது யோகியின் உண்மையை அறியவேண்டுமென்ற எண்ணம் இவருக்கு உதித்தது. ஓர் நாளிரவு விக்ராமார்க்க இராஜா மாறு வேஷம் தரித்து அரண்மனையை விட்டுச்சென்று நதியை நீந்திக்கடந்து யோகியின் ஆச்ரமத்தையடைந்து, அதில் யாருக்கும் தெரியாதபடி மறைந்துகொண்டார்.

அந்த ஆச்ரமத்தில் ஓமகுண்டத்தில் நெருப்பு வளர்ந்தெரிந்துகொண்டிருந்தது. அதன் மத்தியில் ஒரு யோகி ஆசனம் போட்டு

வீற்றிருந்தார். அவருக்கு முன் ஒரு வாலிபனுடைய ப்ரேதம் மல்லாந்து கிடத்தப் பட்டிருந்தது. அந்த ப்ரேதத்தின் மார்மேல் ஒருவன் உட்கார்ந்து கொண்டு பத்ரங்களை குங்குமத்தில் ஒத்தி மந்திர உச்சாடனம் செய்து, அந்த ப்ரேதத்தின் வாயில் போட்டுக் கொண்டிருந்தான். மந்தரங்கள் முடிந்த பிறகு அதாவது ஒரு மணி கழித்து ப்ரேதத்தின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்த மனிதன் "பேசு"! என் அருமை குழந்தாய்ப்பேசு"! என்று பிரலாபிக்கலானான். மிகபயத்தோடு விக்ரமார்க்க ராஜா நடந்தவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். ப்ரேதத்தின் உதடு அசைந்ததே யொழிய பேச்சு சப்தம் ஒன்றும் கேட்க வில்லை. மறுபடியும் ப்ரேதத்தின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்த மனிதன் "பேசு! என் அருமைக் குழந்தாய்ப் பேசு! நன்றி கெட்ட ராஜன் பேரில் பழிவாங்குகிற தற்காக உன்னை காளிதேவிக்கு நரபலி கொடுத்தேனா? என் குழந்தாய் பேசு!" என்று கத்தினான். ப்ரேதத்தின் மேல் உட்கார்ந்தவன் மறுபடியும் மந்தர உச்சாடனம் செய்து பத்ரங்களை குங்கமத்தில் ஒத்தி ப்ரேதத்தின் வாயில் போட்டான். இந்த ஸந்தர்ப்பத்தில் ப்ரேதத்தின்மேல் உட்கார்ந்தவனை தெரிந்திருக்கிறது நலம். ப்ரேதத்தின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தவன் ப்ரேதமாகக்கிடக்கும் பையனின் தகப்பன் மேலும் விக்ரமார்க்க ராஜனிடம் ஒரு காலம் ஸேவையிலிருந்து வேலையை விட்டு நீங்கின ஒரு மந்திரி. எவ்வளவு தடவை மந்தர உச்சாடனம் பண்ணியும், பத்ரங்களை போட்டும், என்ன கூப்பிட்டும் ஒன்றும் பலிக்க வில்லை. பலித மின்மையைக்கண்டு யோகியானவர் கொலைபாதகனான மந்திரியைப் பார்த்து சொல்லுகிறார் "அப்பா! தேவிக்குப் பூஜைசெய்கிற போது வெகுபொறுமை வேண்டும். யாரோ ஒரு அயலான் யாதொரு தகவலன்றி நம்முடைய ரஹஸ்யங்களை அறிய வந்திருக்கிறான். ஆகையால் தான் புனிதமுள்ள காளிதேவி யானவள் நாம்பண்ணுகிறப் பூஜைக்குப் பதிலும் கொடுக்கவில்லை, பலமும் கொடுக்கவில்லை. ஆனதால் நம்முடைய பரம ரஹஸ்யங்களை திருட்டுத் தனமாய் அறிய ஒருவன் ரஹஸ்யமாய் நம்முடைய எல்லைக்குள் பதுங்கியிருக்கிறான். அவன் நாயாகப்போகக் கடவது என்று மூன்று தடவை சொல்லி சாபமிட்டார். விக்ரமார்க்க ராஜா இவை யெல்லாம் பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்தும் வெளியே போகப்பார்த்தார். போக முடியவில்லை. உடனே விக்ரமார்க்க ராஜா, சாபமிட்டபடி ஒருநாயாக மாறி அந்த எல்லைக்குள் வசித்து வந்தார்.

(வரும்.)



# SUKANYA.

By

**Sri. Rajammal.**

## ஸுகன்யா.

பூர்வம் ஸம்யாதி என்னும் ஓர் அரசன் தம்முடைய பார்யையுடனும் பரிவாரங்களுடனும் ஓர் தடாகக்கரையையடைந்து அங்கு ஸந்தோஷமாய் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கையில் அவருடைய அழகிய பெண்ணாகிய ஸுகன்யா என்பவள் தடாகக்கரைக்கு அருகில் ஒரு புற்றைப்பார்த்தனள். பார்த்தமாத்ரத்தில் அவள் வியப்படைந்தாள். அருகில் சென்று உற்றுப்பார்க்கவே, இவள் கண்ணுக்கு மின்னலைப்போன்ற இரண்டு கண்கள் ஜ்யோதிகளாக தென்பட்டன. பிறகு மறைந்திடவே அப்பெண் அவைகளைக் கண்டுபிடிக்க புற்றை வெகு ஆழமாகத்தோண்டினள். ஆயினும் அவைகளின் ஜாடைக் காணப்படவில்லை. தன் ப்ரயத்தனம் பலிக்கவில்லை. கடைசியாக வெட்கி தகப்பனிருப்பிடத்தையடைந்தாள்.

இந்த மையத்தில் அரசன் பின்னோடு வந்திருக்கிற ஸேனைகளுக்குள் ஒருவிதமான துர்வியாதி பரவி ஸேனைகள் மிகவும் கஷ்டத்தையடைந்தன. இந்த ஸமாச்சாரம் அரசனுக்கு எட்டியது. மிகுந்த வ்யாகூலத்துடன் அரசன் ஸேனை இறங்கியிருக்குமிடம் சென்றார். ஸேனைகளைப்பார்த்துவிட்டு சிந்தாக்ராந்தராய்த்தமது கூடாரத்தில் உட்கார்ந்து ஆலோசனைபண்ணிக்கொண்டிருந்தார். இந்தஸமயத்தில் மிகவும் குணம்வாய்ந்த ஸுகன்யா தகப்பனை வந்தடைந்து சொல்லுகிறாள். "அப்பா! நான் தடாகக்கரையோரமாகத்திரிந்து கொண்டிருந்தேன். அங்கு ஒரு புற்றில் இரண்டு ஜயோதிகள் தோன்றின. உடன் அவைகளைக் கண்டுபிடிக்க அப்புற்றைத்தோண்டினேன். அங்கு ஒரு ஜாடையும் என் கண்ணுக்குத் தென்படவில்லை. நமது ஸேனைகளுக்கு வந்திருக்கும் வ்யாதிக்கு நான் அப்புற்றைத்தோண்டினது ஒருகாரணமாக இருக்குமோ வென்று" சொன்னாள். உடன் இதைக்கேட்ட அரசன் தம்மகளைக் கூட்டிக்கொண்டு அப்புற்றையடைந்தார்.

அப்புற்றில் ஒரு வ்ருதாப்பிய யோகி தபஸ் பண்ணிக்கொண்டிருந்ததைப்பார்த்தார். அந்த யோகியை நமஸ்கரித்து வேண்டுகிறார். "ஏ! தபோநிதியே! தங்களுடைய மகிமை தெரியாமல் என்

குழந்தை தங்களுடைய வாசஸ்தலமாகிய இப்புற்றைத்தோண்டினதற்கு மிகவும் மன்னிக்கும்படிக்கேட்டுக்கொள்கிறேன். மேலும் என் ஸைந்யங்களுக்கு புதிதாக வந்திருக்கும் இக்கொடிய நோயைத்தீர்க்கவேண்டுமென்றும் கோருகிறேன்'' என்று பன்முறை அரசன் வேண்டினார். தபோநிதியான ச்யவனர் அரசன் வேண்டுகோளுக்குக்கருணித்து ''ஏ ராஜராஜோத்தமா! நீ கேட்டுக்கொண்டது மிகவும் ஸரியே! ரூபத்திலும் குணத்திலும் யௌவனத்திலும் மிகவும் கர்வித்திருக்கிற உன்னுடைய குமாரத்தியை எனக்குப் பாணிக்ரஹணம் செய்துகொடுத்தால் உன்னுடைய ஸேனையின் துர்வியாதி தொலைவதுமன்றி, நீயும் ஸுகித்து வாழ்வாய்'' என்று உரைத்தார். ஐயோ பாபம்! அரசன் என்ன செய்வார்?

அரசன் ஒன்றும் தெரியாமல் கலங்கி நின்றார். மனம் ஓடவில்லை. தம்முடைய மகளை அழைத்து தபோநிதி சொன்ன அபிப்ராயத்தைத் தெரிவிக்க, ஸுகன்யா மிகவும் குண சீலியானதால் அந்த தபோநிதியையே தகப்பன் இஷ்டப்படி மணம் செய்துகொண்டாள். ஸேனைகளைப் பீடித்த துர்வியாதியும் தொலைந்தது. அரசன் ஸந்தோஷமாய் இராஜ ஸ்தலம் வந்தடைந்தார்.

ஸுகன்யா ச்யவனரை விவாகம் செய்துகொண்டபின் ச்யவனர் தம் நிஷ்டையிலிருந்தாரே யொழிய, தம் பத்னியோடு பேசக்கூடவில்லை இப்படி யிருக்க, விவாகம் செய்துகொடுத்த தகப்பனையாவது பதியையாவது நொந்துகொள்ளாமல். தம் பதிக்குவேண்டிய சிச்ருஷைகளை ஸுகன்யா செய்து வந்தனள்.

நல்லோரின் ஸுகுணங்களைப் பரிசீலிக்க தேவர்கள் மானிட உருக்கொண்டு வருவது ஸஹஜம்.

இப்படி சாஸ்த்ரோக்தமாக ஸுகன்யா பதிக்கு சிச்ருஷை செய்து வருங்காலத்தில் இரண்டு தேவதைகள் மிகதேஜஸுடன் ஸுகன்யாவுக்குந் தென்பட்டனர். ஸுகன்யா மிகவும் வணங்கி அவர்களை உபசரித்தாள். ஏ பெண்ணே! ''காட்டில் காய்கிற நிலவுபோல் ஏன் உன்னுடைய ரூபலாவண்யமுள்ள தேஜஸை வீணாக்குகிறாய். உலகத்தை வெறுத்த வ்ருத்தாப்யராகிய ச்யவனரை விவாகம் செய்துகொண்டது மிகவும் விந்தையாயிருக்கிறது. உலகத்தில் செல்வத்திலும் அழகிலும் பெயர்போன ஒரு யௌவன புருஷனுக்கு உன்னை மணம் செய்விக்கிறோம். உன்னிஷ்டம் தெரிவிப்பது தான் தாமஸம்.'' என்று அவர்கள் புகலவே பொறுமை சாலியான ஸுகன்யா கர்ண கொடூரமான வார்த்தைகளை ஸகியாதவளாய் நின்றாள்.



ஸுகன்யா மிகவும் மனவருத்தத்துடன் பதியை யடைந்து நடந்தவைகளைத் தெரிவித்தாள். ச்யவனரோ ஸுகன்யா சொன்னவைகளைக் கேட்டுக் கலங்காமல் தேவதைகளின் இஷ்டப்படியே நடப்பது உசிதமென்று தமது சந்தோஷமான இஷ்டத்தைத் தெரிவித்தார். ஸுகன்யா தனது பதி சொன்னதில் இஷ்டமில்லாதவளாய் மனதை ஒரு விதமாக திடப்படுத்திக் கொண்டு தேவதைகளிடம் தனக்கும் தன்பதிக்கும் நடந்த ஸம்பாஷணைகளைச் சொன்னாள். தேவதைகள் கேட்டு ஸந்தோஷமடைந்தாலும் ஸுகன்யாவின் கடைசியான இஷ்டத்தைத் தெரிவிக்கும்படி சொல்லவே, ஸுகன்யா ''நீங்களும் என்னருமைப்பதியும் ஒரே விதமாக அபிப்ராயப்படும்போது நான் என்னசொல்ல இருக்கிறது. தங்கள் அபிப்பிராயத்தின்படி நடக்க ஸம்மதம்தான். இருந்தாலும், நானொரு விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன். தாங்கள் வெகு காருண்யத்துடன் உபகாரம் செய்யவந்தவர்கள் என்கோரிக்கைக்கு நல்லபலம் கொடுப்பீர்களென்று நம்புகிறேன். தாங்கள் வேறொரு யௌவன புருஷனைத் தேடுவதைக் காட்டிலும் என்பதியாகிய ச்யவனரையே யௌவன புருஷராக மாற்றுவது மேலானதென்று நினைக்கிறேன். நீங்களும் என் விண்ணப்பத்திற்கு இணங்குவீர்களென்று உறுதியாய் நம்புகிறேன்'' என்று உரைத்தாள்.

ஸுகன்யா சொன்னவைகளைக் கேட்டு தேவதைகள் மிகவும் ஸந்தோஷமடைந்து அவள் விருப்பத்தின்படியே வரம் அளித்தார்கள். தேவதைகள் ஸுகன்யாவுக்குக் கொடுத்த வரத்தைப் பூர்த்தி செய்வதற்காக, ச்யவனரை அழைத்துக் கொண்டு ஓர் தடாகத்தில் மூவரும் முழுகி யௌவனர்களாக எழுந்திருந்தார்கள். பிறகு யௌவனரான ச்யவனரை தாங்கள் கொடுத்த வரத்தின்படி, ஸுகன்யாவிடம் அழைத்து வந்து விட்டார்கள். ஸுகன்யாவுக்கும் ச்யவனருக்கும் வந்த ஸந்தோஷத்திற்களவில்லை.

ச்யவனர் தமக்குச் செய்த உபகாரத்திற்காக தாம் ஸோமயாகம் செய்து அதன் ஆஹுதியை இந்திரன் எதிரில் உங்களுக்குத் தருவேனென்று வாக்களிக்க, தேவதைகள் ஸந்தோஷமாக விடை பெற்றுச் சென்றார்கள்.

இச்சுப செய்தியைக் கேட்டு ஸம்யாதி அரசன் தம் பெண்ணைப் பார்க்க ச்யவனர் இருப்பிடம் வந்து சேர்ந்தார். அரசனுக்கு மாப்பிள்ளை நமஸ்கரித்து தேவர்கள் வந்ததையும், வரன் கொடுத்ததையும், தாம் யௌவன மானதையும். அதற்கு உபகாரமாக ஸோம யாகம் செய்வதாக ஒப்புக் கொண்டதையும் அறிவித்தார்.

ஸம்யாதி அரசன் ஸந்தோஷ மடைந்து ஸோம யாகத்திற்கு வேண்டிய ஸஹாயம் செய்வதாக ஒப்புக் கொண்டார். பிறகு யாகம் செய்து அதன் ஆஹுதியை தாம் வாக்களித்தபடி தேவதைகளுக்குக் கொடுத்தார். அவர்கள் அதை ஸந்தோஷமாகப் பெற்றுக்கொண்டு ஸ்வர்க்க லோகம் சென்றார்கள். ச்யவனர் ஸுகன்யாவுடன் ஸந்தோஷமாக வாழ் நாள்களைக் கழித்து வந்தார். ஸுகன்யா ஸுகுணங்களாலும் பதிவ்ரதா தன்மையாலும், பூர்வம் யாவராலும் புகழப்பட்டாள். தற்காலம் கூட யாவராலும் புகழப்படுகிறது அவளுடைய குணங்களே யாகும்.

---

துக்கம், ஸந்தோஷம், அதிர்ஷ்டம் துர் அதிர்ஷ்டம் எது வந்தாலும் நல்ல குணமுள்ளவன் பலவான். மேன்மையான குணத்தை யுடையவன், எங்கும் மதிக்கப்படுவான்:—மேஹஸ்டார்.

*　　　*　　　*

ஸ்நேகம் பொல்லாது. உண்மையான ஸ்நேகம் வைத்துவிட்டால் பின்னால் என்ன மனஸ்தாபம் வந்தாலும் அதை மாற்றுவது மனதுக்கு மிகுந்த கொடுமையை விளைவிக்கும். நல்லதாயிருந்தாலும் பொல்லாததாயிருந்தாலும் ஸ்நேகத்தை விடாமல் இருப்பதுதான் ஸ்நேகத்தின் அடையாளம். ஆனால் ஸ்நேகம் செய்யும்போது ஸ்நேகத்துக்குத் தகுந்த பாத்ரமா என்று தீர்க்கமாய் அறியவேண்டும்:—ப்ளேடோ.

*　　　*　　　*

எல்லா கலைகளையும் கற்றிருக்கிறான். மஹாசாஸ்த்திரஞ்யன். ஆனால் ஒரு கலைகளிலாவது ஞானம் கிடையாது:—ஸோபிகின்ஸ்.

*　　　*　　　*

கடவுளின்கிருபையைப் பெறுவதரிது. தபஸியாயிருந்தாலொழிய, ஸாதாரணமாகக் கிடைக்காது. எந்தக் காரியத்துக்கும் உழைப்பு அவச்யம் உழைப்பை நிராஹரித்துச் செய்யாமலிருப்பவனுக்கு தெய்வகிருபை கிடைப்பது அரிது:—புருடார்க்.



## I

## CONCERNING CHILDREN

## குழந்தைகள் விஷயம்.

---

**Infant schools.**

சிறு குழந்தைப்பள்ளிக்கூடங்கள் முதல் முதல் குழந்தைகளின் தேகத்தை கவனிக்கவேண்டியது. பிறகு படிப்பைப்பற்றி யோசிக்கவேண்டும். ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு மணி ஸாவகாசம் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டும். அவர்கள் பாடம் கற்பதை பெரிய பாரமாக நினைக்கக்கூடாது. பள்ளிக்கூடத்தையொட்டி குழந்தைகளுக்கு விஸ்தாரமான விளையாடுமிடம் இருப்பது நலம். உபாத்தியாயர்கள் குழந்தைகள் விளையாட்டை ஒரு விதமாக சீர்படுத்தி முறையாக விளையாடும்படி செய்வதானது குழந்தைகளின் அபிவிருத்திக்கு ஒரு சாதனமாகும்.

குழந்தைகளுக்குக் கேவலம் புஸ்தகப்படிப்புச்சொல்லிக்கொடுப்பதைக் காட்டிலும் படங்களால் கற்றுக்கொடுப்பது மேன்மையாகும். ஸத் பழக்கங்களை குழந்தைகளுக்குப் பயிற்றுவிக்கவேண்டும். கெட்ட பழக்கங்களையாவது கெட்ட வார்த்தைகளையாவதுகுழந்தைகள் எதிரில்உபயோகப்படுத்தக்கூடாது. தற்காலம் குழந்தைகள் அளவுக்கு மீறி கற்கப்படுகிறார்கள். குழந்தைகள் நன்றாக உண்பதிலும் உறங்குவதிலும் மிகுந்த கவலைசெலுத்தப்படவேண்டும். பிறகு மூளைக்கு வேலை கொடுக்கலாம். உண்பதிலாவது, உறங்குவதிலாவது, படிப்பிலாவது குழந்தைகளை கட்டாயப் படுத்தக்கூடாது.

**Sleeping time of children.**

குழந்தைகளின் தூக்கநேரம்:—மழைகாலத்தில் ஸாயந்தரம் 6-மணிக்கும் கோடைகாலத்தில் 7-மணிக்கும் குழந்தைகள் தூங்கப்போகவேண்டும். காலை 6-மணிக்கும் 7-மணிக்கும் முறையே எழுந்திருக்கவேண்டும். குழந்தைகள் எக்காரணத்தைக்கொண்டு இரவில் எட்டு மணிவரையிலும் ஒன்பது மணிவரையிலும் விழித்திருப்பது அவர்களின் தேகத்துக்கு நோய் உண்டாகும். மேலும் அப்படி விழித்துக்கொண்டிருப்பதனால் நோய்கள் பரவுகிறதற்கு ஸந்தர்ப்பமும் நேரிடுகிறது. குழந்தைகள் தூங்கும்போது முகத்தை துணியால் மூடக்கூடாது. பெற்றோர்கள் பெரும்பாலரும் தூங்கும்பொழுது முகத்தை மூடிக்கொள்கிறார்கள். அப்படி மூடிக்கொள்வதினால் நாம் வெளியே ஸ்வாசமிடும் கெட்ட காற்றை உட்கொள்ளுகிறோம். அது அநேக வியாதிக்கு இடம் தருகிறது.



**Giving medicine for sleep.**

தூக்கத்துக்கு மருந்து கொடுப்பது:—அநேக பெற்றோர்கள் தனிகர்களாயிருந்தால் குழந்தை தூங்காமலிருந்தால் மறு நாள் டாக்டரிடம் போய் குழந்தை தூங்க மருந்து வாங்குகிறார்கள். டாக்டரும் பணம் வந்தால் போது மென்று தூக்கமயக்கமுள்ள மருந்தை கொடுத்து விடுகிறார்கள். அதனால் பெரும் தீமை விளைவிக்கிறதை பெற்றோர்கள் அறியார்கள். குழந்தை தேகம் கெட்டுப்போகிறது. குழந்தை சரியாய் தூங்காதபோனால் நல்ல தேகப்பயிற்சி செய்து தேகம் களைத்துப்போனால் வெகு ஸுகமாக தூக்கம் உண்டாகும். குழந்தைப்படுக்கப்போகும் பொழுது ஸந்தோஷத்துடன் போகும்படி செய்யவேண்டும். காலையில் எழுந்திருக்கும் பொழுது வெகு உத்ஸாகத்துடன் குழந்தை எழுந்திருக்கும்.

## II
## DOMESTIC HINTS AND SUGGESTIONS.
### கிருகந்தியக் குறிப்புகள்.

**Mensus of a Child.**

ஓர் இளங்குழந்தை மாதவிடாய்: டாக்டர் Wm. F. ஸ்மித் என்கிறவர் ஓர் இளங் குழந்தையைப்பற்றி ஒரு ரிபோர்டுவெளியிட்டிருக்கிறார். அவர், 22-வயதுள்ள ஒரு ஸ்த்ரீ பிரஸவிக்கும்போது அவளுக்கு சிகித்ஸை செய்து வந்தார்; அவளுக்கு அது தான் முதற்பிரஸவம்; அவள் தேஹம் நன்றாகச் செழித்து வளர்ந்திருந்தது. அவளுக்குப் பிறந்த பெண்குழந்தையோ பார்க்கப் பார்க்க மிகவும் அழகாகக் காணப்பட்டது. அவள் பிரஸவித்த ஏழாவதுநாள் குழந்தையைப் பார்ப்பதற்காக டாக்டர் ஸ்மித் அழைக்கப்பட்டார்; அவர் வருகையில், குழந்தையின் காலிடுக்குகளிலிருந்து இரத்தப் பெருக்குண்டானதைக் கண்டு தாயார் மிகவும் திகைத்து வருந்திக்கொண்டிருந்தாள். அவர் பார்க்கையில், அக்குழந்தையின் சின்னஞ்சிறிய மார்களில் இயற்கைக்கு மாறாக அதிகமாய் பால் சுரக்க ஆரம்பித்தது; கண்களைச் சுற்றிலும் ஒருவகையான கருநிறம் தோன்றிற்று. அக்குழந்தைக்கு உடம்பில் வலியாவது வேறு வகையான கஷ்டமாவது உண்டானதாய் ஒரு குறியும் ஏற்படவில்லை. இவ்விதம் இரத்தப் பெருக்கு மூன்று நாட்கள் தொடர்ந்திருந்து தானாகவே நின்றுவிட்டது. பிறகு 28-நாட்கள் கழிந்ததும் முன்போல மறுபடியும் இரத்தப் பெருக்கும் மற்றக் குறிகளும் உண்டாயின! ஆனால் மார்களில் பால்சுரக்காமல் அவை இயல்பாயிருப்பதைவிட சற்றுப் பருத்திருந்தன. மறுபடியும் அக்குழந்தைக்கு அவ்விதமாக விடாயால் மாறுபாடுகள் ஏதேனும் ஏற்படுமோவென்று அவர் கவனித்து வருகின்றனராம். அக்குழந்தைக்கு வெளியான ஸூதகத்திற்கு நடுவயதிலுள்ள ஒருவருடைய ஸூதக உதிரத்திற்குண்டான எல்லா லக்ஷணங்களுமிருந்தனவாம்.—Critic and Guide.

**Do you recommend exercise for a baby?**

பால் குடிக்கும் குழந்தைக்கு தேகப்பயிற்சி அவசியமா?:—ஸாதாரணமாக ஒரு இருக்கமான அறையில் பால் குடிக்கும் குழந்தை படுத்திருக்கும் பொழுது, இருக்கும் பொருக்க மாட்டாமல் தன்னுடைய இரு கைகளினால் சலனம் பண்ணுவதைப் பார்க்கிறோம். அது தன் விருப்பத்தை வாயால் தெரிவிக்க முடியாமலிருக்கிறதினால் அது அழப்பார்க்கிறோம். சுத்தமான காற்று போக்கு வரத்தாய் இருக்கும் இடத்தில் அக்குழந்தையைக்கொண்டுபோனால் அதன் அழுகை நின்று முகப்புன்சிரிப்பை காட்டுகிறது. இதனால் குழந்தைக்கு தேகப்பயிற்சி அவசியமல்லவா? குழந்தைக்கு தேகப்பயிற்சி ஆரம்பிக்கிறதானது காலத்தையும் சீதோஷ்ணஸ்திதியையும் சார்ந்திருக்கிறது. கோடைகாலமாயிருந்து பருவம் நேர்த்தியாயிருந்தால் குழந்தையை ஒரு வாரமாவது சுத்தமான காற்றுள்ள திறந்தவெளிக்கு எடுத்துக்கொண்டுபோகலாம். மழைகாலத்தில் எந்த காரணத்தைக்கொண்டாவது குழந்தையை வெளியில் கொண்டுபோகக் கூடாது; குழந்தை பிறந்து இரண்டு மாதம் கழிந்த பிறகு தாராளமாக சுத்தமான காற்றை உட்கொள்ளலாம். 3 மாதம் கழித்த பிறகு குழந்தையை தாராளமாக வெளியில் கொண்டு போகலாம். சுத்தமான காற்று வாங்க எடுத்துப்போகும்போது சிலர் குழந்தையைத் துணியால் மூடி எடுத்துப் போகிறார்கள். அப்படி எடுத்துக்கொண்டுபோனால் அவர்கள் சுத்தமான காற்றின் ப்ரயோஜனத்தை அடையமாட்டார்கள்.

## III
## KITCHEN AND COOKERY
### சமையலறையும் சமையலும்.

**Kopparai Burfi.**

கொப்பரை பர்பி:—கொப்பரை பர்பி என்பது ஒருவகை இனிய மிட்டாய். அதற்குவேண்டிய சாமான்கள் கொப்பரைத் துருவல், கொப்பரை தேங்காய், ரவை, சர்க்கரை. செய்யும் விதமாவது. கொப்பரைத் தேங்காய்த்துருவல், ரவை, சர்க்கரை இவை மூன்றும் ஒரு ஆழாக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இம்மூன்றையும் கலந்து நிறைய நெய்விட்டு பிசையவேண்டும். பிசைந்ததை தாம்பாளத்தில் வைக்கவும். அடுப்பிலிருந்து கொஞ்சம் தணல்களை வெளியிலெடுத்து அதன்மேல் பிசைந்து எடுத்து வைத்திருக்கிற தாம்பாளத்தை வைத்து மூடிவிடவும். 2 நிமிஷம் கழித்து பில்லை பில்லையாகச் செய்து தனிப்பாத்திரத்தில் வைத்து உபயோகிக்கவும்-

* * *

இப்பொழுது சென்னை இராஜாங்க அதிகாரிகள் பின்வரும் நியமனங்களைச் செய்திருக்கிறார்கள்:—சமையல் வேலையையும் மற்றைய கிருக வேலைகளையும் கற்பித்தற்குப் பிரசங்கியார் ஒரு வருக்கு மாதம் 1-க்கு 300 ரூபா சம்பளம் வீதம் வருஷம் 1-க்குச் சம்பளம் ரூபா 3,600; அவருடைய பிரயாணச் செலவு வருஷம் 1-க்கு ரூ. 720; சேவகன் ஒருவனுக்கு மாதம் 1-க்கு 9 ரூபா சம்பளம் வீதம் வருஷம் 1-க்குச் சம்பளம் ரூ. 108; சமையல்காரன் ஒருவனுக்கு மாதம் 1-க்கு 10 ரூபா சம்பளம் வீதம் வருஷம் 1-க்குச் சம்பளம் ரூ. 120; வேலைக்காரச் சிறுவன் ஒருவனுக்கு மாதம் 1-க்கு 5-ரூபா சம்பளம் வீதம் வருஷம் 1-க்குச் சம்பளம் ரூ. 60; ஒவ்வொன்றாகக் குறிப்பிட முடியாத பல செலவுகளுக்கு மாதம் 1-க்கு 100 ரூபா வீதம் வருஷம் 1-க்கு ரூ. 1,200; தளவாடங்கள் (நாற்காலி, மேஜை முதலியன) வருஷத்திற்கு ரூ. 600; ஆக மொத்தம் ரூ. 6,408. கிருகவைத்தியம் கற்பித்தற்கு ஸ்திரீவைத்தியர் அல்லது புருஷவைத்தியர் செய்யும் சில பிரசங்கங்களுக்கு வருஷம் 1-க்கு ரூ. 500; ஒவ்வொன்றாகக் குறிப்பிட முடியாத பல செலவுகளுக்கு மாதம் 1-க்கு 30 ரூபா வீதம் வருஷம் 1-க்கு ரூ. 360; ஆக மொத்தம் ரூ. 860. தையல் வேலையும் உடுப்புச்செய்யும் வேலையையும் கற்பித்துப் பிரசங்கியார் ஒருவருக்கு மாதம் 1-க்கு 300 ரூபா சம்பளம் வீதம் வருஷம் 1-க்குச் சம்பளம் ரூ. 3,600: பிரசங்கியாருடைய பிரயாணச்செலவு வருஷம் 1-க்கு ரூ. 720; சேவகன் ஒருவனுக்கு மாதம் 1-க்குச் சம்பளம் 9 ரூபாவீதம் வருஷம் 1-க்குச் சம்பளம் ரூ. 108; ஒவ்வொன்றாகக் குறிப்பிட முடியாத பல செலவுகளுக்கு மாதம் 1-க்கு 100 ரூபாவீதம வருஷம் 1-க்கு ரூ 1,200; தளவாடங்கள் (நாற்காலி, மேஜை, முதலியன) வருஷம் 1-க்கு 300: ஆக மொத்தம் ரூ. 5,928.

**House-hold work.**

வீட்டுவேலை:—ஸ்த்ரீகள் துர்ப்பலமாயிருக்கிறதினால் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளும் அங்கங்கள் வர்த்தி என்ன போஷணை செய்தாலும் ஸாதகப்படுகிறதில்லை. இதைப் பெற்றோர்கள் முக்யம் கவனிக்கவேண்டிய முக்யகடமையாகிறது. பெண்கள் வேலைக்காரியின்றி தங்களுடைய தேகத்தைக்காப்பாற்றிக்கொள்ளுகிற வேலைகளைத் தாங்களேசெய்யவேண்டும். தங்கள் தேகத்தைச் சரியாகக் காப்பாற்றி நல்லநிலைமையில் வைத்திருக்கிற பெண்கள்தான் பிற்காலம் திடசரீர தாயார்களாக வருகிறார்கள்.

# IV

# LAW.

## சட்டம்.

**Civil Suits.**

ஸிவில் வ்யாஜ்யங்கள் :— ஸ்வதேச ராஜ்யங்கள் நீங்கலாக ப்ரிட்டிஷ் இந்தியாவிலுள்ள கோர்ட்டுகளில்-1912ம் வர்ஷத்தில் 20,85,471 ஸிவில் வ்யாஜ்யங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

**Gift to a Member of a Joint Family.**

அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு தானம்கொடுத்தல்:—ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் பேருக்கு ஒரு அன்யர் ஒரு ஸொத்து தானம்செய்தால், அந்த ஸொத்து அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்த பொது ஸொத்தென்று அனுமானிப்பதற்கில்லை. அப்படிக் கொடுக்கப்பட்ட ஸொத்து அவிபக்த குடும்ப ஸொத்தென்று சொல்லுபவர்களே அது அவிபக்தகுடும்ப ஸொத்தென்பதை ரூபிக்கவேண்டும்.

**Adoption by Junior Widow.**

விதவைகளில் இளையவள் ஸ்வீகாரமெடுத்துக் கொள்வது:— ஒரு ஹிந்துவின் இரண்டு விதவைகளில் இளையவள் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள ஸபிண்டர்களின் ஸம்மதம் பெற்றாலும், பெரிய விதவையின் அனுமதியில்லாமல் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளக் கூடாது. மூத்த விதவைக்குத்தான் ஸ்வீகார எடுத்துக் கொள்ள முதல் பாத்யதை இருக்கிறது.—2-லா வீக்லி 24.

**Purchase in the Name of Wife.**

மனைவி பேயரால் ஸொத்து வாங்குவது :—தமது மனைவி பெயரால் ஒரு ஸொத்து வாங்குவதற்கு ஒரு ஹிந்து பணம் கொடுத்தார் என்பதனாலேயே, அப்படி வாங்கினது பேரிரவலாய் வாங்கினதாகும் என்று சொல்வதற்கில்லை.

**Reversioner and Alienation.**

அனந்தரவார்ஸும் ஸொத்தைப் பராதீனம் செய்தலும்.—ஒரு ஹிந்து விதவை சில ஸொத்துக்களைப் பராதீனம் செய்தது சட்டப்படி செல்லாது என்று ஒரு அனந்தரவார்ஸ் வ்யாஜ்யம் போட்டான். வ்யாஜ்யம் தீருவதற்குள் விதவை இறந்து போனாள். அதன்மேல் அந்த அனந்தரவார்ஸ் வ்யாஜ்யத்தை வாபஸு வாங்கிக்கொண்டார். ஆனால் புதிதாக வ்யாஜ்யங்கொண்டுவர கோர்ட்டாரிடம் அனுமதி பெறவில்லை. அப்படியானால் ஸிவில் ப்ரொஸீஜர் கோடு, ஆர்டர் 23-ரூல் 1-ன்படி அதே அனந்தர வார்ஸு ஸொத்தைப் பராதீனம் வாங்கியிருப்பவர்கள் மீது ஸொத்துத் தம்வசம் சேரவேண்டுமென்று மறுபடியும் வ்யாஜ்யம் கொண்டுவரக் கூடாது.

புருஷன் பட்ட கடனைத் தீர்க்க ஸ்தாவர ஸொத்துக்களே யல்லாமல் வேறு ஆதாரங்கள் இருந்தால், விதவை நிலங்களை விற்பனை செய்யக் கூடாது. ஸொத்தைப் பராதீனம் செய்யாமல் விதவை கடனைத்தீர்க்க முடியுமென்று தெரிந்திருந்துங்கூட ஒருவர் விதவையினிடம் ஸொத்து வாங்கினார். பிறகு அந்த விற்பனை கோர்ட்டாரால் ரத்து செய்யப்பட்டது. நிலம் வாங்கினவர் கொடுத்த பணம் புருஷன் பட்ட கடனைத் தீர்ப்பதற்காக உபயோகிக்கப் பட்டது என்பதனாலேயே நிலம் வங்கினவருக்கு தாம் கொடுத்த விலைப்பணத்தைத்திரும்ப அடைய பாத்யதை கிடையாது.

# V

# EDUCATION.

## வித்யா விஷயம்.

**Women & Education.**

ஸ்த்ரீகளும் கல்வியும்:—ஹிந்து குடும்பங்களில் காரியங்கள் நடக்கும் ரீதியை உள்ளூர ஆழ்ந்து பார்க்குமிடத்து ஒவ்வொரு விஷயத்திலும் பெண்மணிகளின் அபிப்பிராயமே மேலோங்கி மதிக்கப்பட்டு வருகிறது என்பதை நன்கு அறியலாம். நாம் செய்யும் குடும்பசம்பந்தமான ஒவ்வொரு காரியத்திலும் பெண்மணிகளோடு கலக்காமல் ஒன்றுமே செய்கிறதில்லை. நன்றாய் கவனித்துப் பார்க்குமிடத்து அவர்கள் சொல்லும் வழிகளே பெரும்பாலும் அனுசரிக்கப்படுகின்றன. நம் நாட்டுப் பெண்பாலருக்கு இவ்விஷயங்களில் நாம் கொடுத்திருக்கும் சுவதந்தரம் மற்றெந்த ஜாதியாரிலும் கிடையாதென்று உறுதியாய்ச் சொல்லலாம். வெளியே ஜன சமூகங்களில் பழகும் ஏற்பாடுகளால் மட்டும் ஏதாவது நிர்ப்பந்தங்களிருப்பதாகக்காணலாம். அவைகளும் கூட ஆண்மக்களால் ஏற்பட்ட நிர்ப்பந்தகளல்லவென்றும் அவர்களுடைய தொழிலையும் சம்பிரதாயத்தையும் குணத்தையும் பற்றி ஏற்பட்டதென்றும் சொல்லலாம். நம்முடைய குடும்ப வாழ்க்கையின் பரிசுத்தமான ரீதியை நன்கு கவனித்துப் பார்க்குமிடத்து ஒவ்வொரு குடும்ப வியவகாரணங்களிலும், மாது சிரோன்மணிகளின் ஒற்றுமையும், விசுவாசமும், உழைப்பும் சம்மதமுமின்றி எக்காரியத்தையும் நடத்த முடியாதென்பது திண்ணம், இல்லற வாழ்க்கைத்துணையாய் வாய்ந்த சதிபதிகள் ஒரு மனத்தராயிருந்து உத்தம நெறிகளிற்பயின்று மானிடயாக்கை யடைந்தன் நோக்கமாகிய மேலான பதவியை யடையப்பாடுபடவேண்டியதே நம்மவர்கள் கொள்கையாம், இவற்றிற்கெல்லாம் சாதகமாயிருப்பதும், நம்மை எல்லோரிலும் மேலாக்குவதும், கால தேசவர்த்தமானங்களின் போக்கை யனுசரித்து நம்மை சீராக்கிக் கொள்ளச் செய்வதும் கல்வியே. அவ்விதக்கல்வி நமது பெண்பாலர் மாட்டுதற்காலம் மலின மடைந்திருப்பதே நமது முன்னேற்றத்திற்குப் பெரிய பிரதி பந்தமாயிருக்கிறது. நமது சகோதரிகள் கல்வி கேள்விகளிற் றேர்ச்சியுற்றவர்களாய் மட்டும் இருப்பார்களேயாயின் நமது நாடும் நாட்டாரும் சகல விதத்திலும் மேலோங்கி வருவார்கள் என்று உறுதிகொள்ளலாம். சாதாரணமாக நமது நாட்டுப் பெண்பாலருக்கு அத்தியாவசியம் தெரிந்திருக்க வேண்டிய கல்வி எத்தன்மையதென்பதை மேனாட்டு மாது சிரோன்மணிகளில் சிறப்புற்றோங்கி நம் நாட்டு க்ஷேமாபிவிர்த்தியின் பொருட்டே தம் வாழ்நாளைக் கழிக்கக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் மாது ஸ்ரீ அன்னி பெஸண்டு அம்மாள் அவர்கள் செய்த பிரசங்கத்தால் அறியலாம்.

**Camphor.**

கர்ப்பூரம்:—தேளாவது குளவியாவது கொட்டினால்,உடனே காரமுள்ள கர்ப்பூரத்தை அவ்விடத்தில் வைத்துத் தேய்ப்பதால் குண முண்டாகும். ஏதேனும் அக்கினி முதலியதால் வேறு வகையில் அழற்சி யுண்டானாலும் அவ்விடங்களில் கர்ப்பூரத்தைப் பொடித்துத்தேய்ப்பது அல்லது தூவுவதால் பிரயோஜனமுண்டு.

# VI

# WOMAN'S WORLD.

## ஸ்திரீபிரபஞ்சம்.

கோயிலுக்குச் செல்லும் பெண்கள் அதற்கென்றே ஆபரணங்கள் அணிந்து நூதன அழகு தோன்றச் செய்துகொண்டு புறப்படுவார்கள்; அதைப்பற்றி நமக்கு ஆக்ஷேபனையில்லை. ஆனால் கோயிலில் ஜனக்கூட்டத்தினிடையே அவர்கள் கழுத்தையும் மேல் வஸ்திரத்தையும் நன்றாய் மூடிக்கொண்டிருக்க வேண்டும். கூட்டத்தில்முக்காடுபோட்டுக்கொள்வது தான் சரி, அவ்விதஞ் செய்யின் நமது நகைகள் பிறரால் கத்திரிக்கப்படாமலும் களவு போகாமலும் இருக்கும்.

* * *

வீட்டிலுள்ள பெண்கள் படிப்பில் விருத்தியாக வேண்டுமாயின் அவர்களுக்கு நாவல்களில் பிரியமுண்டாகும்படிச் செய்யவேண்டும். பத்திரிகைகளைப்படிக்க வைத்துத் தெரியாத பாகங்களை—உதாரணமாக- காங்கிரஸ்-- என்பதான பதங்களிலுடையகருத்துகளை விளக்கிச்சொல்லி அதிலே அவர்களுக்கு ருசிதோற்றும்படிப் பாடுபடவேண்டும். இவ்வாறாகப்புஸ்தகபத்திரிகைகளில் அவர்கட்கு ஆர்வம் தோன்றிவிடின் அவர்களின் கல்வி தமக்குத்தாமே விருத்தியடைந்து விடுமென்பது நிச்சயந்தான்.

* * *

ஒரு தேர்ந்த தையற்காரி :—பம்பாய்வாசியான சம்புபாய் என்னும் ஒரு மகாராஷ்டிரப் பெண் பட்டுநூலால் தையல்வேலைகள் செய்து சித்திரங்கள் அமைப்பதிற் சிறந்தவள். இவள் தான் செய்த சில தையல்வேலைகளைச் சமீபத்தில் போப்பாலில் நடந்த பொருட்காட்சிக்கு அனுப்பினாள். இவளது அற்புத வேலைகளின் அழகைமெச்சிய போப்பால்பேகம்மகாராணியார் மிகுந்த சந்தோஷமடைந்தவராய் இந்தப் பெண்ணை உடனே தந்திவாயிலாய் வரவழைத்து ஒரு தங்கப் பதக்கம் கொடுத்ததோடு நமது உருவம்போன்ற வேலை யொன்று செய்து தரும்படியும் உத்தரவு செய்தாராம்.

ஒரு ஸ்திரீயின் உத்தம தர்மம் :—மைசூரில் காலஞ்சென்ற ஸாவ்கார் நரசிம்மய்யாவின் மனைவியார் தமது கணவரது ஞாபகார்த்தமாக மைசூரில் 36 ஆயிரம் ரூபாய் செலவு செய்து ஒரு சத்திரத்தையும், ஆண் பிள்ளைகள் வாசிப்பதற்காக 10-ஆயிரம் ரூபாய் செலவுசெய்து ஒரு பாடசாலையையும் கட்டிக்கொண்டிருக்கின்றனர்.

பேர்லின் நகரிலே ஸ்திரீகளும் விருத்தர்களும் :—ஜெர்மனி தேசத்தின் தலை நகராகிய பெர்லினில் டிராம் மின் சாரவண்டியில் டிராம்கார் வேலை செய்து வந்த ஆண்மக்கள் அனைவரும் சேனையிற் சேர்ந்துபோர் முனைக்குப் போய் விட்டார்களாதல், அந்நகரிலுள்ள ஸ்திரீகள் மின்சாரவண்டியை நடத்துபவர்களாகவும், விருத்தர்கள் அவ்வண்டியை ஓட்டுபவர்களாவும், வேலை பார்த்து வருகின்றனரென்று தெரிகிறது.

குழந்தைக்கு அம்மை குத்துதல் அவசியமா?:—மனித ஸமூகத்துக்கு அம்மை குத்துதல் ஈச்வரனால் அளிக்கப்பட்ட ஒரு வரப்ரஸாதம். பெரியம்மை ஜனங்களுக்குள் பரவி ஆயிரக்கணக்காக ஜனங்களை நாசப்படுத்தும் ஸமயத்தில் அம்மை குத்துதல் மேலான சிகிச்சை என்று கருதினார்கள். பிரதி குழந்தையும், அம்மை குத்திக்கொள்ள வேண்டும். அம்மை குத்துவதினால் குழந்தைக்குக்கெடுதி ஸம்பவிக்குமென்று நினைப்பது பிசகான காரியம். மேலும் ஜன அபிவிருத்திக்குக்காரணமாயும் இருக்கிறது.

# VII

# WIT & HUMOUR.

## தமாஷ்.

**A sum in Arithmetic.**

ஓர் கணக்கு :—ஓர் நகரத்தில் ஒரு நாள் ஒரு பக்கிரி பிச்சைவாங்கிக்கொண்டு கடைவீதி வழியேபோய்க்கொண்டிருந்தான். கடைக்காரர்களெல்லாரும் வியாபாரத்தில் கவனமாயிருந்ததால் இந்தப்பக்கிரிக்கு காசு ஒன்றுங்கிடைத்த பாடில்லை. அப்பொழுது ஒரு சிறு பையன் அங்கே போய்க்கொண்டிருந்தவன் அங்கே நின்று இந்தப்பக்கிரியைப்பார்த்துக்கொண்டிருந்தான். பக்கிரி அவனைப்பார்த்து பின்வருமாறு சம்பாஷித்தான்.

பக்கிரி:—ஏ பையா! நீ எந்த வகுப்பில் படிக்கிறாய்?

பையன் :—நான் மூன்றாவது வகுப்பில் படிக்கிறேன்.

பக்கிரி :—உனக்குக் கணக்கு நன்றாய் வருமல்லவா?

பையன் :—ஆம்; எனக்குப்பஸன்ஷில்லிங் கூட்டல் கூடத்தெரியும்.

பக்கிரி :—ஆனால் நான் உனக்கு ஒரு கணக்குப்போடுகிறேன். நீ அதைச் சொல்லிவிட்டால் உனக்கு இதோ என் கையிலிருக்கும் அரைக்கால் ரூபாயையுங்கொடுக்கிறேன். நீ பக்ஷணம் வாங்கித்தின்னலாம் நீ சரியான பதில் சொல்லாவிட்டால் உன்னிடத்திலுள்ள காலணாவைக்கொடுக்க வேண்டுமென்றான்.

பையன் :—நீ சொல்வது சரி. நான் பதில் சொன்னவுடன் நீ தவறாமல் உன் இரண்டணாவையுந் தந்துவிடவேண்டு மென்றான். (பக்கிரி சரி யென ஒப்புக்கொண்டு கேட்கிறான்.)

பக்கிரி :—இரண்டும் இரண்டும் நாலு ஆகிறது. இரண்டுக்கிரண்டு$(2 \times 2)$ நாலு ஆகிறது. இது இரண்டும் எப்படி சரியாயிருக்கும்?

பையன் :—இரண்டும் இரண்டும் கூட்டினால் நாலு ஆகிறது. இரண்டையும் இரண்டையும் பெருக்கினால் அதுவும் நாலு தான்.

பக்கிரி :—நீ சொல்வது உண்மை தான். ஆனால் கூட்டல் பெருக்கல் இரண்டும் சரிதானா? நீ விளங்கச்சொன்னால் தான் உனக்கு அந்த 2 அணா கிடைக்கும். இல்லாவிட்டால் நீ உன் காலணாவைக் கொடு" என்றான்.

பையன் :—(கொஞ்சநேரம் பிரமித்து நின்று விட்டு) எனக்குத் தெரியவில்லை சொல் என்றான்.

பக்கிரி :—அசட்டுப் பையா? 2-ம் 2-ம் என்றால் கூட்டுகிறோம். இரண்டுக்கிரண்டென்றால் பெருக்குகிறோம். கூட்டினாலென்ன. பெருக்கினாலென்ன (வாறு கோலினால் கூட்டுதல் பெருக்குதல் என்பதைக்கொண்டு)! உன் காசைக் கொடு என்றான்.

அந்த அசட்டுப்பையன் காசைக்கொடுக்கப்பக்கிரி மனச்சந்துஷ்டியுடன் வாங்கி தன் இரண்டணாவுடன் சேர்த்துக்கொண்டான். பையன் 'அதிகமாய் ஆசைப்பட்டதனால்" உள்ளதையுமிழந்து வெறுங்கையனானான்.

* * *

ஓர் பையன் ஒரு விர்த்தாப்யரிடம் போய் உலகத்தின் பிரளயகாலம் சமீபத்துவிட்டது எனத் தெரிவித்தானும். அப்பொழுது அவர் ஐயோ எனக்குப் பட்டணம் பொடிவேண்டுமே! என்னசெய்கிறது?" என்று துக்கித்தாராம்.

# EVENTS OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

---

டிசம்பர் 14, ஜனவரி 1915.

டிசம்பர்௴ 16-ந்தேதி இன்று ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்தில் ஸ்ரீமதி குப்பம்மாள் அவர்கள் ஒரு சிறு உபந்யாஸம் சங்கீதத்தின் மஹிமையைப்பற்றி சொல்லிவிட்டு ஹார்மோனியத்தில் ஒரு கச்சேரி நடத்தினர்.

டிசம்பர்௴ 26-ந் தேதி சென்னை ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்தில் இன்று மாலை 4 மணிக்கு ஸ்ரீமதி முருகாம்பாள் 'ஞானம்' என்னும் விஷயத்தை மிகத்தெளிவுடன் பேசினர். அந்த உபந்யாஸத்தின் ஸாராம்சம் மறுபக்கத்தில் காண்க.

டிசம்பர்௴ 27-ந் தேதி இன்று 28-வது இந்தியன் நாஷனல் ஸோஷல் கான்பரன்ஸ், காங்கிரஸ் பந்தலில் மைசூர் யுவராஜா அக்ராஸனத்தின் கீழ் சென்னையில் நடந்தேறியது.

டிசம்பர்௴ 28-ந்தேதி இன்று 29-வது நாஷனல் காங்கிரஸ், சென்னை நுங்கபாக்கம், டவுடன் ஹாலில், ஸ்ரீமான் பாபு பூபேந்திர நாத பசுவின் அக்ராஸனத்தின் கீழ் ஆரம்பித்தது.

ஜனவரி௴ 16-ந் தேதி இன்று சென்னை ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்தில் நெல்லூரிலிருந்து வந்த ஸ்ரீமதி நாராயணி அம்மாள் அவர்கள் நெல்லூர் ஜில்லாவில் ஸ்த்ரீகளின் கல்வியபிவிருத்தியைப்பற்றி மிக உருக்கத்துடன் பேசினர். இந்த ஸமாஜத்துக்கு ஒரு கிளைச்சங்கம் ஸ்தாபிக்க முயற்சி எடுத்துக்கொள்வதாகவும் பேசினர்.

ஜனவரி௴ 20-ந் தேதி இன்று ஜட்ஜி சதாசிவய்யரின் இரண்டாவது குமாரர் T. S. கிருஷ்ண மூர்த்திக்கும் பாரிஸ்டர் மிஸ்டர் கிருஷ்ணராவின் குமாரத்தி ஸ்ரீமதி காமாட்சிக்கும் அடையாற்றில் விவாகம் நடந்தேறியது. மிஸ்டர் கிருஷணராவ் மாத்வ வகுப்பைச் சேர்ந்தவர். ஜட்ஜி சதாசிவய்யர் ஸ்மார்த்த வகுப்பைச்சேர்ந்தவர்.

# பெண் கல்வி.

---

## விஷய சூசிகை—பிப்ரவரி௴ மார்ச்சு௴ 1915.


I. கீதத்திரட்டு.

II. ப்ரபஞ்சப்போக்கு.

i. சென்னை ராஜதானியில் கல்வி அபிவ்ருத்தி—இந்தியாவின் நஷ்டம்—ஒரு மீட்டிங்—ஒரு புதிய கோஷா ஆஸ்பத்திரி.

III. விசேஷ வ்யாஸங்கள்.

i. லார்ட் நெல்ஸன்:—ஸ்ரீ டி. எஸ். ராஜ்.

ii. ருதியதி விவாகத்தின் ஸாதக பாதகங்கள்—ஸ்ரீ ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர், பி. ஏ. பி. எல்.

iii. அன்னதானம்—ஸ்ரீ உருத்திரகோடீசுவரர்.

iv. ஸ்ரீமான் கோகேல்—ஒரு பாடம்.

v. கிரீன்லாந்து—ஸ்ரீமதி பாகீரதி.

vi. 'ஸ்ப்மரின்' என்ற ஜலக்கீழ்க் கப்பல் விவரம்.

vii. பள்ளிக்கூட ஸுகாதாரங்கள்—ஒரு மாஜிஉபாத்தினி.

IV. விசேஷக் குறிப்புகள்.

i. குழந்தைகள் விஷயம்.

ii. க்ரகத்தியக் குறிப்புகள்.

iii. சமையலறையும் சமையலும்.

iv. சட்டம்.

v. வித்யா விஷயம்.

vi. ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

vii. வேடிக்கை.

viii. மாஸ வர்த்தமானம்.

THE

# FEMALE EDUCATION

AN ILLUSTRATED MONTHLY MAGAZINE

# பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு மாதப் பத்ரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லர் தவர்.—திருக்குறள்.

| பத்ராதிபர் : | மானேஜர் : |
|---|---|
| ஸஹோதரி. ஆர். தாயாரம்மா. | அ. சேஷாத்திரி சர்மா. |

Vol. 4. } ஆநந்தவஷ மாசிமீ, February 1915. } No. 5, 6.
தொகுதி 4 } ஆநந்தவஷ பங்குனிமீ, March 1915. } பகுதி. 5, 6.



## The "Female Education"

An Illustrated Tamil Journal with the object of enlightening and elevating ladies. It has got a long list of eminent gentlemen and ladies as contributors,

| | Subscription. | Advertisement per page. |
|---|---|---|
| Yearly .. | 2—8—0 | 72—0—0 |
| Half yearly | 1—8—0 | 40—0—0 |

Special charges for title pages.

**Manager,**
**The "Female Education",**
**Madras, E.**

## "பெண் கல்வி."

ஸ்த்ரீகள் அபிவ்ருத்தியைக்கருதி நடத்தப்படும் பத்ரிகை. சித்ரஸஹிதமாய் வெளிப்படும். இதற்கு ப்ராபல்யமான ஸ்த்ரீகளும் புருஷர்களும் வ்யாஸம் எழுதுகிறார்கள்.

| | சந்தா. | விளம்பரசார்ஜ் 1-பக்கம். |
|---|---|---|
| வருஷம் | 2—8—0 | 72—0—0 |
| 6 மாதம் | 1—8—0 | 40—0—0 |

டைடில் பேஜ்களுக்கு ப்ரத்யேகமான சார்ஜ்.

மானேஜர்,
"பெண் கல்வி" ஆபீஸ்,
சென்னை, E.




# ANTHEM ANTHOLOGY

## கீதத்திரட்டு.

இராமனையே துதித்தாடு என்ற மெட்டு.

பல்லவி.

ஒற்றுமையே பலம் கேளும்—நம்மை
நாமே இகழ்ந்தால் பிறர்நகைப்பா ரென்னும்

அநுபல்லவி.

சிற்றிடைகாள் நீங்கள் சிறிதும் தேசநிலைமை
சிந்தியா திருந்திடில் சித்திக்குமோ நன்மை. (ஒற்றுமை)

சரணம்.

1. கற்றவ ரெல்லோரும் மற்றோரை வெறுத்திடில்
எற்றவர் கல்விநல முற்றிடுவா ரையோ. (ஒற்றுமை)
2. செல்வர்கள்வறியரை சேர்த்தாதரித்தற்போல
கல்விப்பயனடைந்தோர் கற்பித்தல்முறையன்றோ.
3. எந்தக்குலத்துதித்தென் இந்தியதாய்க்குதித்த
ஸுந்தரியனைவோரும் சொந்தஸோதரியன்றோ. (ஒற்றுமை)

---

ராகம் நாட்டைக்குறிஞ்சி தாளம் சாப்பு.

பல்லவி.

இந்து மதமே வெகு சிலாக்கியம் ஈதனை—இனியேனும் மறிந்தாலென் பாக்கியம்.

அநுபல்லவி.

எந்த நாட்டாரும் நம்போல் சொந்தமதறியா திருந்ததில்லையென்றே யுறுதியாயுரைப்பேன் நம். (இந்து)

சரணம்.

அன்னியருணர்ந்தீதென் ஆச்சரியம்—என்றீதன்
வன்மையுரைக்கின்றாரென் மாச்சரியம்
இவ்வுண்மை யுணர்ந்திடாமல் அன்னிய மதந்தன்னை
கண்ணியமாய்க்கருதி கருத்தழிந்திடாதீர்.

---

ஜோர் ஜோர ஜோஷமை மெட்டு,

1. பூஷண மணிவதினால் பெருமையுமுண்டோ
குண பூஷணந்தனக்குவமை பூவுலகிலேதுமுண்டோ
மிருதுபா ஷணிகாள்நா மணிநற்பூஷணம்
கற்பன்றி வேறுண்டோ.

2. அருமையான கல்வியன்றோ
அறிவையர்க் கணிகலனும்
பொறுமையும் பணிவுமன்றோ
பூவையர்க்கென்றும் பூஷணமாம்.

மெட்டு தயவாஹிலோட தகளசாயி.

1. ஆபரண தனினா லுண்டாம் கேடு
அவனியிலீலை யென்றென் றும் பாடு. (அதி)

2. ஆபத்துக் களுண்டிதனால னேகம்
பாபகர்ம மிதற்கு மெத்த சினேகம். (அதி)

3. அற்பமாம் ஆபரணத் தால னேகம்
கற்பிழந்தார் கள்வர் கவர நொந்தார். (அதி)

4. கொடுமையாம் ஆபரணமே நாடி
குடும்பம் கலைத்த கோதையர் கோடி. (அதி)

வேறு ராகம் முகாரி தாளம் சாபு.

பலநூல் களுணராது பலவாறு நகைநாடி
பலகை மேலெழுத் தொக்கும் நிலையில்லா சடலத்தை
பல மாக்கிட வெண்ணிப் பல்லுணவுண்டு றங்கியிந்த
உலகினுக் குழையாத உடலும் நல்லுடலோ.

ராகம் ஸஹானா தாளம் சாபு.

அழகிருந்தென் பயன் அரிவையர்க் கறிவின்றி
அழகிருந்தென் பயன் அரிவையர்க் கன்பின்றி
அழகிருந்தென் பயன் அரிவைக்குக் கற்பின்றி
அழகிருந்தென் பயன் அரிவைக்குக் கல்வியின்றேல்.

ராகம் கானடா தாளம் ஆதி.

கல்வி யுணர்ந்தென்ன கற்பிக்கும் வலியின்றேல்
கல்வி யுணர்ந்தென்ன கற்பிக்கும் மனமின்றேல்
கல்வி யுணர்ந்தென்ன காருண்யம் தானின்றேல்
கல்வி யுணர்ந்தென்ன கடவுள் பக்தியின்றேல்.

மதுரை, இந்துமாதர் ஐக்யசங்கப் பாடல்.

# PROGRESS OF THE WORLD
## ப்ரபஞ்சப்போக்கு.

**Improvement on Education in the Madras Presidency.**

சென்னை ராஜதானியின்கல்வியபிவ்ருத்தி:—சென்னை ராஜதானியின் 1913-ம் 14-ம் வருஷத்து கல்வியிலாகா ரிபோர்ட் நமக்குக் கிடைத்தது. சுருக்கமாய் ராஜதானியில் கல்வி யபிவ்ருத்தி அம்சத்தை எடுத்து ரிபோர்டில் கண்டபடி நம் சந்தாதார்களுக்கு அறிவிக்கிறோம்.

இந்தியா கவர்ன்மெண்டாரிடமிருந்து வருஷாவருஷம்போல் சென்ற ரிப்போர்ட் வருஷத்திலும் 6-8 லக்ஷம் ரூபா சாசுவத கிராண்டும் மூன்று வருஷத்துக்கு என்று பிரத்யேகமாகக் கொடுக்கப்பட்ட 49 லக்ஷ கிராண்டும் சென்னைக்குக் கிடைத்து. அநேகமாய் அவ்வருஷத்திலேயே செலவிடப்பட்டிருக்கின்றன.

சென்ற வருஷத்தில் மொத்தத்தில் பள்ளிக்கூடங்கள் 964 அதிகரித்திருக்கின்றன. மாணக்கர்கள் 107,783 அதிகரித்திருக்கின்றனர். இவை முறையே 100-க்கு 3-1 ஆகவும் 8 ஆகவும் அதிகரித்திருக்கின்றன.

வித்தியா விஷயமாய் மொத்தத்தில் செலவாயிருக்கிறது 180 லக்ஷம் ரூபாய். இதற்கு முன் வருஷத்திலும் 100-க்கு 14 அதிகரித்திருக்கிறது. இதில் கவர்ன்மெண்டார் 79-91 லக்ஷமும் லோகல் போர்டு, முனிஸிபாலிடியார் 14-71 லக்ஷமும் சம்பள வரும்படியிலிருந்து 85-36-லக்ஷமும் செலவாயிருக்கின்றன. கவர்ன்மெண்டார் பிரைவேட் பாடசாலைகளுக்கு 32-31 லக்ஷ ரூபா செலவிட்டிருக்கிறார்கள்.

ஒவ்வொருவருக்கும் சராசரி 7 அணா வீதம் செலவாயிருக்கிறது. முந்தின வருஷத்திலும் ஓர் அணா கூடவே செலவாயிருக்கிறது. அதில் கவர்ன்மெண்டார் பாதிக்குமேலே கொடுத்திருக்கிறார்கள்.

தொழிற் படிப்பில் மாணக்கர் சிறிது குறைந்திருக்கிறார்கள். 566 இலிருந்து 504 க்கு இறங்கியிருப்பது பி. ஏ. பரீக்ஷையின் ரிஸல்டால் என்று தெரியவருகிறது.

ஸெகண்டரி பள்ளிக்கூடங்கள் 339 இலிருந்து 322க்கு இறங்கியிருந்தாலும் மாணுக்கரின் தொகை 106,396 இலிருந்து 115,425 ஆக விருத்தியாயிருக்கின்றது. முழு ஹைஸ்கூல்களின் தொகை 155. இதில் மாணுக்கர்களின் தொகை மேல் மூன்று வகுப்புகளிலும் 23,090 இலிருந்து 24,756 ஆகியிருக்கிறது. 100-க்கு 7 பேர் அதிகம்.

எலிமெண்டரி பாடசாலைகள் 25,211 ஆக இருந்தது 26,005 ஆகவும், மாணுக்கர்களின் தொகை 1,014,448 ஆக இருந்தது 1,088,686 ஆகவும் அதிகரித்திருக்கின்றன. கவர்ன்மெண்டார் இந்த வருஷ முடிவுக்குப்பிறகு தாழ்ந்த வகுப்பு ஜாதியாருக்காக 341 அதிக பாடசாலைகள் ஏற்படுத்தும்படி லோகல்போர்டாருக்கும் முனிஸிபாலிடியாருக்கும் கிராண்ட் கொடுத்திருக்கிறார்கள்.

உபாத்தியாயர்களைத் தம் வேலைக்குப் பழக்குவதற்குக் கவர்ன்மெண்டார் அதிக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். முன் தாத்காலமாய் ஏற்பட்ட 6 தாழ்ந்த எலிமெண்டரி டிரேயினிங் பாடசாலைகளை ஸ்திரஞ் செய்துவிட்டார்கள். உயர்தரக் கலாசாலை மாணுக்கருக்குக் கொடுத்துவந்த உதவிச்சம்பளத்தையும் அதிகரித்திருக்கிறார்கள்.

வியாபார முறையிலும் கைத்தொழில் முறையிலும் பழகிவந்த மாணுக்கரின் தொகை குறைந்திருக்கிறது. எஞ்சினியரிங் காலேஜில் மாணுக்கர் மிகவும் குறைந்துபோனதைக் கவர்ன்மெண்டார் விசாரித்து ரிபோர்ட் செய்ய வித்தியா இலாகா டைரக்டர் அவர்களைக் கேட்டிருக்கிறார்கள். கைத்தொழிற் படிப்பானது 1914-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 15-உ யிலிருந்து தொழில் டைரக்டர் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது.

பெண்கல்வியும் அபிவிருத்தியாயிருக்கிறது. கவர்ன்மெண்ட் கிராண்ட் உதவியால், 154 பெண்பாடசாலைகள் லோகல் போர்டாரால் புதிதாய் ஏற்பட்டன. பிராமணக் கைம்பெண்களுக்கென்று ஏற்பட்ட திருவல்லிக்கேணி ஹாஸ்டல் தக்க உபயோகமான வேலை செய்துவந்திருக்கிறது.

மகம்மதியர் கல்வியும் அபிவிருத்தியாயிருக்கிறது. சர்க்கார் விசாரணைப்பள்ளிக்கூடங்கள் 799 இலிருந்து 839 ஆகியிருப்பதுடன் அவற்றில் மாணுக்கர்களும் 48,131 இலிருந்து 51,319 ஆக



61
160731

விருத்தியடைந்திருக்கிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் மகம்மதியர் கல்வியபிவிருத்திக்காக வருஷாவருஷம் ரூ. 30,000 பிரத்தியேகமாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இத்தொகையைச் செலவிட டைரக்டரை யோசனை கேட்டிருக்கிறார்கள்.

பஞ்சமருக்காக முன்னர் கூறியபடி 341 புதுப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

கவர்ன்மெண்டார் இந்த இராஜதானியில் வித்தியா விஷயமானது எத்துறையிலும் அபிவிருத்தியாயிருப்பதைக் குறித்துச் சந்தோஷிப்பதுமன்றி தற்காலம் ரஜாவிலிருந்து பின் வேலையை விட்டு நீங்கப்போகிற டாக்டர் போர்ன் அவர்கள் செய்த வேலைகளைப்பற்றியும், அவர் சாமர்த்தியத்தைப் பற்றியும், உற்சாகத்தைப்பற்றியும் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள்.

**India's loss.**

இந்தியாவின் நஷ்டம்:—நமது பாரத மாதாவுக்கே உழைத்துவந்த புத்ர ரத்னங்களில் ஒருவரான கனம் கோபால க்ருஷ்ண கோகேல் அவர்கள் பிப்ரவரி மீ 19-ந் தேதி இரவு 10-25 மணிக்கு புணுவில் இறந்துபோனுரென்ற ஸங்கதியைக் கேட்டு மிகவும் வ்யஸனிக்கிறோம்.

சில மாதங்களாகவே கனம் கோகேல் அவர்கள் தேக அஸௌகர்யமாய் இருந்துவந்தார். ஆனுல், இவர் இப்படி அகால மரணத்தையடைவாரென்று ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. இவருக்கு வயதோ 49. சிலரைப்போலல்லாமல் இவர் தம் லக்ஷ்யத்துடன் இந்திய ஜன அபிவ்ருத்திக்கு வெகு பாடுபட்டு வந்தார். இவரால் நன்மைகளும் கிடைத்திருக்கின்றன.

நமது வைஸராய் சட்டஸபையில் ஆரம்பப்படிப்பைக் கட்டாயமாக்கி இலவசப்படிப்பாகச் செய்துவிட வேண்டுமென்று ஒரு மசோதா கொண்டுவந்தார். அந்த மசோதா நிறைவேருமற் போனுலும் கனம் கோகேல் அவர்களை வெகுவாக ஜனங்கள் மதித்தார்கள். கவர்ன்மெண்டும் இவரை முக்கிய கார்யங்களுக்கு யோஜனை கேட்டு வந்தார்கள். இங்லெண்டிலும் இந்தியாவிலும் இவர் இறந்துபோனதைக் குறித்து மீட்டிங்குகள்கூடி இவருடைய குடும்பத்தாருக்கு அனுதாபத் தந்திகள் அனுப்பிவருகிறார்கள்.

N11.4-5

நமது மாக்ஷிமை பொருந்திய ஜார்ஜ் சக்ரவர்த்தி அவர்கள் இவர் குடும்பத்தாருக்கு அனுதாபத்தந்தி யொன்று அனுப்பியிருக்கிறார்கள். சட்டஸபையில் வைஸராய் லார்ட் ஹார்டிஞ்சு அவர்கள் கனம் கோகேலின் குணத்தைப்பற்றியும், புத்திசாலித்தனத்தைப் பற்றியும், திறமையைப்பற்றியும் வெகுவாகப் புகழ்ந்து பேசி கவர்ன்மெண்டுக்கு ஆலோசனை சொல்லும் மந்திரியை இழந்துவிட்டதாக மிகவும் துக்கித்தார்.

கனம் கோகேல் அவர்களின் பிறப்புவளர்ப்பைப் பற்றி வெகு சுருக்கமாக மறுபக்கத்தில் காணலாம். பலபேர் பலவிதமாக அவர் ஞாபகார்த்தத்தைக் குறித்து நிரந்தரமாக ஒரு கார்யம் செய்ய வேண்டுமென்று பேசிஎழுதிவருகிறார்கள். ஜனங்கள் இந்த உத்தம தேசாபிமானியின் வழியைப் பின்பற்றி பற்றன்றி ஒழுகுவதே கனம் கோகேல் அவர்களுக்கு நிரந்தரமான ஒரு ஞாபகார்த்தம் வைத்ததாகும்.

**A Meeting.**

ஒரு மீட்டிங்கு:—குன்னூர் கவர்ன்மெண்டு போதனாமுறைப் பாடசாலையில் ஒரு உபாத்தியாயர் சங்கம் நடந்தது. அதில் குன்னூர் ஸெண்ட் அந்டனிஸ் ஸெக்கண்டரி ஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீ. ம. வெ. சிவசுப்பிரமணியய்யர் கோக்கேல் யவர்கள் இறந்ததற்காற்றாமல் இதன்கீழ் கண்டுள்ள கவிகளை யப்பொழுதுதான் எழுதி படித்துப் பொருள் சொன்னார். கோக்கேலின் குடும்பத்தாருக்கு ஒரு தந்தி யனுப்பப்பட்டது.

அதே சங்கத்தில் நம் ராஜதானி வித்தியாவிலாகா தலைவர் ஸ்டோன் துரையவர்களின் மகன் இரண்டாவது லெப்டினெண்ட் ஸ்டோன் இறந்ததற்காகவும் அநுதாபங் கூறினபின்பு ஸ்டோன் துரையவர்களுக்கும் அநுதாபத் தந்தியொன்று யனுப்பப்பட்டது.

**Elegy On The Death of the Hon. Mr. Gopala Krishna Gokhale C. I. E.**

கோக்கேல் இறந்ததைக் கேட்டு ஆற்றாமலழுத கையறவு:—

1. அந்தணர்செய் தவப்பயனா யரும்பம்பாய்க்
    கோர்மகனையணைந்து வாழ்ந்து
சொந்தமென விந்தியர் யாரையு முரிமை
    பாராட்டித் தோய்ந்து நாட்டி



வந்தமதாக் கல்விநலம் யாருமுற வருமுயற்சி
    கையாண்டன்பின்
முந்துறநம் மவர்பெருமை யேற்றமதை
    யாங்கிலந்தும் மொழிந்த தக்கோய்!

2. வித்தையுளார் செயற்கரிய செயலிலையென் றுலக
    மெலாம் வீறுகாட்டப்
புத்திதரு நினைதரிய முதற்றொழிலே நம்மவர்க்குப்
    புகலா நிற்கு
மத்தகைய நின்னைமறக் கொடுங்காலன் கைக்கொ
    ண்டானாலந்தோ
புத்தியிலான் றறுகண்ணன் மாபாவி யந்தனென்ப
    புகறற் கென்னே.

3. வெண்ணெய்திரண் டெடுக்கவரு மப்பொழுது
    விரிந்துடைந்து விளைந்ததாழி
கண்ணெனக்கீழ் விழுந்தழிந்த தென்றொருவன்
    கேட்டதனைக் கடுப்பயாமு
மெண்ணரிய குணமுடைநின் றிறமையினா
    னாட்டினல மேயுமென்ற
வெண்ணமெலாந் தொலைந்துடைந்து துயர்க்
    கடலிலாழ்ந்தியிட ரெய்தினேமே.

4. நிற்பிரிந் திந்திய மகளுந் திருவிழந்தாள்
    சிறுவரென நின்றயாமு
மற்புதத்தந்தையை யிழந்தோந் தந்தைமகற்
    காற்றுதவி யழிந்ததென்று
மற்பெறவம் பலம்பாக்க வலர்தூற்றும்
    வகைவாய்ந்த தையகோவெம்
பொற்புறுவாழ் வெல்லாமுங் கெட்டதே
    புகழுமினிப் பொருந்துமோ தான்.

5. ஏங்கியாந் தேறும்வகை யறியாமலிடைந்து
    துயரெய்தி நிற்கத்
தாங்கமுடியாத் துயரைத்தாழ்த்த றகுமென
    வெமக்குச் சாற்றல்போலத்
தேங்காதலிக்கு மொழிச் சீனிவாசச்செம்மல்
    சேர்ந்தெங் கண்ணைப்

பாங்குபெறத் துடைக்கின்ற வென்னினு
நின்பழவுணர்வு பரிந்துபோமோ.

சிவத்தியாகாநந்தன்,

ஆநந்தாச்சிரமம்.

**A New Gosha Hospital.**

ஒரு புதிய கோஷாஆஸ்பிட்டல்:—குண்டூர் ஜில்லாவைச்சேர்ந்த ஓங்கோல் நகரத்தில் மார்ச்சுமீ முதல் தேதி காலையில் ஆனரபில் மிஸ்டர் எ. ஜி. கார்டியு அவர்கள் ஒரு புதிய கோஷா ஆஸ்பத்திரியின் கட்டிடத்துக்கு அஸ்திவாரக்கல் புதைத்தார். இந்த கோஷா ஆஸ்பத்திரியின் தர்மம் அந்நகரத்து ஒரு ப்ரபுவைச் சார்ந்தது. அப்பிரபு வெகு வருஷங்களுக்குமுன் தமது நிலங்களில் சிலவற்றை மான்யமாக பாதசாரியாய்ப்போகும் வழிப்போக்கர்களுக்கு அன்னதானம் செய்யும்படி எழுதிவைத்தார். அவர் எழுதிவைத்தபோது ரயில்வேக்கள் இல்லாத காலம். ப்ரபுவின் இஷ்டப்படியே வெகுகாலம் தர்மம் நடந்து வந்தது. ரயில்வேக்கள் மோட்டார்வண்டிகள் முதலியன ஏற்பட்டபிறகு அந்த ப்ரபு எழுதிவைத்த தர்மஸொத்துக்கு அன்னதான மூலமாக செலவு ஏற்படவில்லை. அம்மான்ய தர்ம கர்த்தாக்கள் ஸ்த்ரீகளுக்கு ஒரு கோஷா ஆஸ்பத்திரியின் அவச்யத்தையுணர்ந்து ஓங்கோலில் அம்மான்யத்தின் வருமானத்தைக்கொண்டு ஒரு கோஷா ஆஸ்பத்திரி கட்டுவதாக தீர்மானித்திருக்கிறார்கள். இது வெகு சீக்ரத்தில் கட்டி முடியுமென்று தோன்றுகிறது. ஸ்த்ரீகளுக்கு கோஷா ஆஸ்பத்திரி அவச்யமென்பதை நாம் எடுத்துக்கூறவேண்டியதில்லை. இந்த மான்யத்தின் தர்மகர்த்தாக்களை இதற்குப் புகழாமலிருக்க எப்படி முடியும்? தமிழ் ஜில்லாக்களிலும் அநேக தர்ம ப்ரபுக்கள் வெகு வருஷங்களுக்குமுன் அக்காலத்துக்கு அவச்யமான தர்மங்களுக்கு ஒத்தவாறு தர்மமாக நிலங்களை எழுதிவைத்து இருக்கிறார்கள். அந்தந்த தர்மங்களுக்கு வைத்திருக்கப்பட்ட பணங்களுக்கு தற்காலம் அவச்யமில்லாமலிருந்தால் அவைகளை தற்காலத்து ஜனஸமூக அபிவ்ருத்திக்குரிய வழிகளில் செலவழிப்பது தான் உசிதம். இந்தப்பழக்கம் எல்லாதேசங்களிலும் நடந்து வருகிறது. தமிழ் ஜில்லாக்களிலுள்ள தர்ம ஸ்தாபனங்களின் நிர்வாகஸ்தர்கள் இதை கவனிப்பது நலம்.

# LORD NELSON.

**By**

**Mr. T. S. Raj.**

## லார்ட் நெல்ஸன்.

ஹொரேஷோ நெல்ஸன் 1758-இல் ஒரு மதாசாரியருக்குத் (Clergyman) தனயனாகப்பிறந்தார். அவருடைய பனிரெண்டாவது ப்ராயத்தில் 'நார்போக்' (Norfolk) ஸமஸ்தானத்திலிருந்த தன்னகத்தைவிட்டுக்கிளம்பி சாதாம் (Chatham) என்ற விசாலமான துறைமுகத்தில் கிடந்த தன் மாமனது யுத்தக்கப்பலில் ஒரு சிறிய மாலுமியாகப்புகுந்தார் ப்ரதமத்தில் பால்க்லண்ட் தீவுகளுக்கும் (Falkland Islands), 1 பிற்பட்டு, மேற்கு இந்தியத்தீவுகள் முதலிய விடங்களுக்கும் அடிக்கடி வியாபாரக்கப்பல்களில் தன்மாமனோடு போய் வந்து கொண்டிருந்து, ஏறக்குறைய ஐந்தாறு வருஷங்களுக்குள் சிறிய வுத்தியோகங்களிலிருந்தபடியே மரக்கலமோட்ட வேண்டிய விஷயங்களையெல்லாம் செவ்வெனக் கற்றறிந்தார். இருபது வயதுக்கெல்லாம் நெல்ஸன் உத்யோக முறையில் கப்பற்றலைவனாக (Captain) நியமிக்கப்பட்டு 'ஜமைகா' த்தீவுக்கு 'பாட்ஜர்' என்ற கப்பலில் ப்ரயாணமானார். அங்குள்ள துறைமுகத்தில் நங்கூரம் போடப்பட்டிருந்த கப்பல்களி லொன்று, பார்க்கப் பயங்கரமாய் தீப்பற்றிக்கொண் டெறிந்தது. அதிலிருந்த ஜனங்கள் மிக்க அச்சங்கொண்டு நீரில் குதித்தார்கள். இதைக்கண்ட நெல்ஸன், எரியும் கப்பலில் வெடிமருந்து ஜாஸ்தியாயிருந்தால் அது வெடித்து இதர மரக்கலங்களுக்குச் சேதம் விளக்குமென்றுணர்ந்து, மனிதர்களைத் திரும்பிப்போய் மருந்து முழுதையும் கடலில் கொட்டிவிடும்படி ஆக்ஞை செய்து, இவ்விதம் அநேக கப்பல்களை தீக்கிரையாகா வண்ணம் தடுத்தார்.

பிறகு 1798-இல் ஆகஸ்டுமாதம் நடந்த நைல் நதிக்கரைச் சண்டை (Battle of the Nile) யில் நெல்ஸன் பலமாய்க்காயப்பட்டு தனது ஒரு கண்ணையுமிழந்தார். ஆனால் அவர் அச்சமென்றால் என்னவென்றே தெரியாதவர்போல் போர்புரிந்தார். இவ்வளவு அஸகாய சூராயிருந்தபோதிலும், தன் கீழிருந்த வாலிப வுத்தியோகஸ்தர்க

1. பால்க்லண்ட் தீவுகள் தென்னமெரிக்காவின் தென் கிழக்கிலிருக்கின்றன.

ளிடம் மிகுந்த சாந்தத்தோடும், அன்போடும் பேசுவார். அதனாற்றான் நெல்ஸன் எங்கே போகவேண்டுமென்று விரும்பினாலும் இவர்களும் உடன் செல்லத் துணிந்தார்கள். நைல் நதிக்கரைச் சண்டையில் வெற்றி பெற்றதனால் அவருக்கு "பாரன் நெல்ஸன் ஆவ் தி நைல்" (Baron Nelson of the Nile) என்ற பட்டப்பெயர் கிடைத்தது.

சுமார் மூன்று வருஷங்களுக்குப் பின் 1801-இல் ஏப்ரல் மாதம் முதல்தேதி யன்று ஏதோ சிலகாரணங்களால் ரஷ்யா, ஸ்வீடன், டென்மார்க், இம்மூன்று தேசங்களும் ஒன்றுசேர்ந்து 'கோபன் ஹேகன்' என்றவிடத்தில் இங்கிலாந்தின் கப்பற்படையை எதிர்த்தன. இக்கடற் சண்டையில் ஒரு சமயம் நெல்ஸனுடைய கப்பல் ஆபத்துக்கிடையில் அகப்பட்டுக்கொண்டு விட்டது. அப்பொழுது நெல்ஸனுக்கு மேலதிகாரியாயிருந்த படைத்தலைவர் அச்சமுற்று சண்டையை நிறுத்திவிடச் சித்தமாயிருப்பதாக ஒரு கொடியை காட்டினார். இவ்விஷயம் நெல்ஸனுக்குத் தெரிவிக்கப்பட்டது. அவர் அதைக் காதில் வாங்காமல், தன் குருட்டுக்கண்ணை கொடியிருந்த விடம் சாய்ந்தார். சத்துருவுக்குக் கீழ்ப்படிகிறதென்ற வெண்ணம் அவருக்கு ஸ்வப்நத்தில் கூடக் கிடையாதென்று சொல்லவும் வேண்டுமா! இவ்வளவு அபாரமான தைர்யமிருந்ததனாற்றான் இங்கிலாந்துக்கு மற்றொரு பெரிதான வெற்றியும், ஜனங்களுக்கு ஒருவித சொல்லமுடியாத குதூகலமும் உண்டாயின. எந்தப் படைத்தலைவர் சண்டைவேண்டாமென்று கொடியைப் பொறுத்தினாரோ, அவரே வெற்றி பெற்றதும் முதலில் வந்து நெல்ஸனைத் தழுவி வாழ்த்தினார்.

பிறகு 1804-இல், நெபோலியன் என்று வெகு க்யாதி பெற்று ஐரோப்பாமுழுவதையும் நடுநடுங்கச்செய்துகொண்டிருந்த ப்ரெஞ்சு தளகர்த்தர், பொலோன் (Boulogne) துறை முகத்தில் ஒரு பெரிய ஸைந்யத்தைத்திரட்டி, இங்கிலீஷ் கால்வாயைத் (English Channel) தாண்டி இங்கிலாந்தின்மேல் படையெடுத்தற்கு வேண்டிய பலமான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது இங்கிலாந்தில் நெபோலியன் பேரைக் கேட்டமாத்திரத்தில் குழந்தைகள் அலறிப்புடைத்துக்கொண்டு வீட்டினுள்ளே ஓடிவிடுவார்கள்!

எலிஜபெத் மகாராணியாரின் காலத்தில், இங்கிலாந்தைக் குறியாகவைத்துச்செய்த ஸ்பெயின் தேசத்தின் முயற்சிகளனைத்தையும்



சின்னாபின்னமாய்ச் சிதறவடித்து அதன் மகிமையைக் குறைத்திருக்க, இப்பொழுதிந்த நெபோலியன் வந்து இங்கிலாந்தை த்வம்ஸம் செய்கிறதென்றால் இங்கிலீஷ்க்காரர்கள் அமைதியாய்ப் பார்த்துக் கொண்டிருப்பார்களா? 'ஜான் ஆவ் க்ரோட்ஸ் ஹவுஸ்' (John of Groat's house) 1 முதற்கொண்டு 'லான்ஸ் என்ட்' (Lands end) 2 வரையில் நான்கு லட்சம் துருப்புகள் ஸ்வேச்சையாகவே யுத்தத்திற்குத் தயாராய் நின்று விட்டன. கடல் மார்க்கத்தை நெபோலியன் சுளுவாய்த் தாண்டக்கூடாதபடி அட்மிரல் 3 நெல்ஸன் தன் கப்பல்களைக் குறுக்கே நிறுத்திக்கொண்டார்.

நிற்க, ப்ரான்ஸ், ஸ்பெயின் தேசங்களின் கடற்படைகள் ஒன்றுகூடி, இங்கிலாந்தைத்தாக்கி உள்ளே ஸைன்யங்களைப் பிரவேசிக்கச் செய்துவிடலாமென்ற வெண்ணத்துடன் வருங்கால், நெல்ஸன் போர்ட்ஸ்மத் துறைமுகத்தில் யுத்தத்திற்கு வேண்டிய ஸாமக்ரியைகளை ஒழுங்கு படுத்தபோய்க் கொண்டிருந்தார். அதிகமாய்க் கூட்டங்கூடி தன்னைக்கொண்டாடினால் தான் செய்யப்போகும் பெரிதான கார்யம் விபரீதமாய் முடிந்துவிடுமென்று கருதி, அதிகாலையிலேயே ஒருவருக்குந் தெரியாமல் குறுக்குவழியாய்த் துறைமுகஞ் சேர்ந்துவிடலாமென்று அவர் நினைத்தார். ஆனால் ஜனங்கள் தூங்கி விடுவார்களா? அவரது முகத்தை இந்த சமயங்காண அவாமிக்கக் கொண்டவர்களாய் அவர்கள் நெருக்கித் தள்ளிக்கொண்டு ஓடோடி வந்தார்கள். அவரைக்கண்டு மட்டிபோட்டு ஆசீர்வதிக்காதவர்களும், கண்ணீர் சொரியாதவர்களுமில்லை. இங்கிலாந்தில் எத்தனையோ தீரவீரர்களிருந்திருந்தும் நெல்ஸனைப்போல் தன்னாட்டு ஜனங்களின் முழு மனதைக்கவர்ந்தவர் எவருமில்லை! அவருடைய தயாள குணத்துக்கேற்ப தைர்யமும், தைர்யத்துக்கேற்ப பரோபகாரச் சிந்தனையும், இவ்வாறான ஒன்றுக்கொன்று இயற்கைப் பகையுள்ள குணங்கள் அவரிடம் ஒத்திருந்தாலும், மனப்பூர்வமாய் தேசத்தின் க்ஷேமத்தையேநாடி, தனதுள்ளவன் போடும் வலியோடும் உழைத்து வந்ததனாலுந்தான் ஜனங்கள் அவரிடத்தில் மிகுந்த ஆசைகாட்டி அவரை விசேஷித்துக்கொண்டாடினார்கள்!

---

1. 'ஜான் ஆவ் க்ரோட்ஸ் ஹவுஸ்' ஸ்காட்லண்டுக்கு வடக்கேயுள்ளது. 2 'லான்ஸ் என்ட்' இங்கிலாந்தின் தென்மேற்கு மூலை. 3 கப்பற் படைத்தலைவன்.

நெபோலியன் இங்லாந்தின் கடற்படையைக்கண்டதும் வெருண்டு ஓட்டம் பிடிக்க, நெல்ஸன் அவரைத்துறத்திக்கொண்டு ஸ்பெயினிக்குத்தெற்கிலுள்ள ‘கடிஸ்’ (Cadiz) என்னும் துறைமுகமடைந்தார். இரண்டொரு மாதம்வரையில் அதைவிட்டு நெபோலியன் வெளிவருவதாயில்லை. பிறகு ப்ரெஞ்சு அரசாங்கத்தால் நிர்ப்பந்திக்கப்பட்டவனாய், 1805–௵ அக்டோபர்௴ 21-ந்தேதி இருதேசக்கடற்படையிலிருந்த முப்பத்திமூன்று கப்பல்களையும் ஒரே வரிசையாக ட்ரபால்கர் (Trafalgar) என்றவிடத்தில் நிறுத்திக்கொண்டார். நெல்ஸனும் தன் கப்பல்களை இரண்டு வரிசைகளாய் நிறுத்தி, தன்னை ஒரு வரிசைக்கு அதிபதியாகவும், ‘ராயல் ஸாவரன்’ என்ற கப்பலிலிருந்த லார்ட் காலிங்வுட் (Lord Colingwood) என்பவரை மற்றொரு வரிசைக்கு அதிபதியாகவும் ஏற்படுத்திக்கொண்டு, ஒரு கொடியில் “ஒவ்வொருவரும் தம் கடமையைச் சரிவர செய்வாரென்று இங்கிலாந்து பூர்வமான நம்பிக்கைகொண்டிருக்கிற” தென்று எழுதி அதைத்தன் ‘விக்டரி’ என்ற மரக்கலத்தின் முனையில் நாட்டினார். நெல்ஸன் மேற்றளத்தில் வரும்பொழுது இடது பக்கத்தில் நான்கு நட்சத்திரங்களை யடையாளமாகக்கொண்ட படைக்கோலத்தைத்தரித்துக்கொண்டிருந்தார். தாம் பெற்றிருந்த அதிகாரங்களின் (Orders) அடையாளங்களை யணிந்துகொள்ள அவருக்கிருந்த உற்சாகத்திற்களவில்லை. ஆனால் இவைகளே எதிரிக்கு இவர் எங்கிருக்கிறார் என்றறிந்து கொள்ள ஏதுக்களாயின. அதனால் தன்னை அதிக ஆபத்துக்குள்ளாக்கிக்கொண்டார்.

ட்ரபால்கரில் கோரமான யுத்தம் நடந்தது. சண்டை வெகு மும்மரமாய் நடந்துகொண்டிருக்கையில், எதிரி கட்சியில் ‘ரிடௌடெபில்’ (Redoutable) என்ற ப்ரெஞ்சுக்கப்பலிலிருந்த குறிபார்த்துச்சுடுபவரில் (Sharp-Shooters) ஒருவன், நெல்ஸன் முன் வந்தபொழுது அவரைச் சுட்டு வீழ்த்தினான். நெல்ஸன் விழுந்ததும் அவருக்கு கீழிருந்த உத்தியோகஸ்தர்களுள் விசேஷ நம்புதலோடு கூடின ஒருவரான ‘ஹார்டி’ (Captain Hardy) அவரிடம் அதிவேகமாய் ஓடிவந்தார். அவரைக்கட்டிக்கொண்டு நெல்ஸன், “ஹார்டி, சத்துருக்கள் என்னாட்டத்தை ஒடுக்கிவிட்டார்கள், பார்த்தாயா?” வென்றார். பிறகு நெல்ஸன் கீழே கொண்டு போகப்படும்போது வைத்தியர் பார்த்து அதிகக்காயம் பட்டிருப்பதாய்க்கண்டு திகிலடைந்து, வேண்டிய சிகித்ஸைகள் செய்யப்போனார். அப்பொழுது நெல்ஸன் தனக்கெது செய்தும் இனிப்பிரயோஜனமில்லையென்று சொல்லி, வைத்தியரை காயம்பட்ட மற்றவர்களுக்கு உதவி புரியும்படி ஆக்ஞாபித்தார். காப்டின் ஹார்டி மறுபடி கீழே வந்தபொழுது அவரை “யுத்தம் எவ்வாறு நடந்துகொண்டிருக்கிற” தென, வினாவி, இங்கிலீஷ் படை வெகு விமரிசையாய்ப்போர்செய்துகொண்டிருந்ததெனக் கேள்வியுற்றுக் களிப்படைந்தார். அடுத்த முறை ஹார்டி வந்தபொழுது நெல்ஸனுக்குக் குத்துயிரும் குலையுயிருமாக விருந்தது. கடைசியாய் நெல்ஸன், “இப்பொழுதுதான் எனக்குத்திருப்திகரமாயிருக்கிறது. என் கடமைகளை நான் ஒழுங்கு தவறாது நடத்தினதற்கு ஈசனுக்கு வந்தன மளிக்கிறேன்” என்று சொல்லி, வெற்றிக்கொடி நாட்டுந்தருணத்தில் தன் சிநேகிதரோடு கை குலுக்கிவிட்டு உயிர் துறந்தார்.



அவரது ப்ரேதம் இங்கிலாந்துக்கு கொண்டு வரப்பட்டு ஸென்ட் பால்ஸ் கதீட்றல் (St Paul's Cathedral) என்றவிடத்திலடக்கம் செய்யப்பட்டது. லண்டன் மாநகரில் ‘ட்ராபல்கர் ஸ்க்வயர்’ (Trafalgar Square) என்னுமிடத்தில் நெல்ஸனுடைய ஞாபகச்சின்னமாக சிலையொன்று எழுதப்பட்டிருக்கிறது. வெகுவாய் வந்த ஆபத்துக்காலத்தில் கடற்சண்டை மூலமாய் தங்கள் வீடு, நாடு, நகரங்களைக்காத்துத் தங்களுக்கு உயிர்ப்பிச்சை யளித்த மகான் நெல்ஸன் என்று ஆங்கில பாஷை பேசும் ஸமஸ்தமான தேசங்களிலுள்ள ஜனங்கள் அவரைக்கொண்டாடுகிறார்களென்றால், இவ்வித ஒருருவச்சிலை யிருக்கவேண்டிய அவசியமும் உண்டோ!

ஒரு நூற்றாண்டுக்குமுன் இங்கிலாந்தோடு தீராப்பகை காட்டி வந்த ப்ரெஞ்சுக்காரரின் கொட்டத்தை யடக்கும்படியான அற்புதத்திறமை பெற்று, “தன் நாடு, தன் வீடு, தன் கடமை” என்று சொல்லிப்பாடுபட்டு வந்த நெல்ஸனுடைய கீர்த்தி நாளுக்கு நாள் விருத்தியாகுக!

T. S. ராஜகோபாலன்.

---

ப்ரதி மனிதனின் கடமை என்ன வென்றால், நமக்கு முன்னிருந்த மஹான்களின் குணங்களைப் பின்பற்றி நடப்பதுதான். ஆனால் தான் நடக்கும்போது பெரும் ஆபத்துக்கள் வந்து தடுக்கும். அந்த ஆபத்துக்களை எதிர்த்து பொருமையுடன் நடப்பதே மேன்மை.—ஷ்ஸ்'யட்.

# ADVANTAGES & DISADVANTAGES OF POST PUBERTY MARRIAGE.

**By**

**Mr. R. S. Narayanasamy Iyer, B. A., B. L.**

## ப்ரௌடா விவாஹ ஸாதக பாதகங்கள்.

நமது சென்னைச் சட்டநிரூபண ஸபையில் கனம் ஸ்ரீ ஸ்ரீனிவாஸ சாஸ்திரியாரவர்களால் ப்ரௌடா விவாஹமசோதா ஒன்று ப்ரேரிக்கப்பட்டு அச்சபையின் ஆலோசனைக்கே தயாராயிருப்பதை யாவரும் அறிவோம். அம்மசோதாவைப் பற்றிய ஆட்சேபணை ஸமாதானங்களும், ஸாதகபாதகங்களும் பலவாறு பத்ரிகைகள் மூலமாய் பல நிபுணர்களினால் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இம்மசோதாவின் முக்கிய கருத்து, ப்ரௌடா விவாஹம் அனுஷ்டானமில்லாத ஜாதிகளில் ப்ரௌடா விவாஹம் செய்தால், அது சட்டவிருத்தமல்ல என்பதே.

இம்மசோதா, இப்பொழுது ப்ரௌடா விவாஹம் செய்துவரும் ஜாதியாரை ஒருவிதத்திலும் பாதிக்கமாட்டாது. இது விசேஷமாய் ப்ராஹ்மணர்களையும், ப்ராஹ்மணர் அனுஷ்டானங்களை யனுசரித்துவரும் சில இதர ஜாதிகளையுந்தான் பாதிக்கும். ஆதலால் மஹம்மதிய, கிரீஸ்தவர்களுக்கும் ஹிந்துக்களில் பெரும்பான்மையோருக்கும் இதில் யாதொரு ஆட்சேபமும் இருக்கமாட்டாது.

மேற்கூறியவாறு ப்ராஹ்மணர்களுக்கும், ப்ராஹ்மண அனுஷ்டானத்தைக் கைக்கொண்ட சில ஜாதியார்க்கும் மாத்திரமே ஆட்சேபமிருக்கலாம்.

அனுமதிச்சட்டம் :—இம்மசோதா அனுமதிச்சட்டமே யொழிய கட்டாயச் சட்டமல்ல. அதாவது, ப்ரௌடையான பிறகும் விவாஹம் செய்யலாம் என்று தான் இச்சட்டம் விதிக்கின்றதே யொழிய, ப்ரௌடையான பிறகுதான் விவாஹம் செய்யவேண்டும் என்று விதிக்கவில்லை. இதனால் ப்ரௌடா விவாஹம் சம்மதமில்லாதவர்களுக்கும் பாதகமில்லை. ஆனால் ப்ரௌடா விவாஹம் செய்யலாம் என்ற அபிப்ராய முள்ளவர்க்கு, ஓர்வித சாதகமாக இருக்கின்றது. ஆகையால் இம்மசோதாவால் ஒருவருக்கும் பாதகமில்லாமல் சிலருக்காவது அனுகூலமாயிருக்கின்றது.



என்ன அனுகூலம் ?—சாஸ்திர சம்மதம் எப்படியிருப்பினும், அனுஷ்டானம், ப்ரௌடா பூர்வ விவாஹமே நமது ந்யாயஸ்தலங்களில் " வசன ஶதேனாபி வஸ்துன: அன்யதா கரண ஶக்தே:" என்ற விதிப்படி ஆயிரம் சாஸ்திரங்களிருந்தபோதிலும், அனுஷ்டானங்களுக்கு அதிக மதிப்பு வைத்திருக்கின்றார்கள். ஜட்ஜ்களில் சிலரும் ப்ரௌடா விவாஹம் சட்டசம்மதமில்லையென்று அபிப்ராயப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. இவ்விதச் சந்தேஹத்தை நிவர்த்திப்பதே இம்மசோதாவின் முக்கியகருத்து.

ப்ரௌடா விவாஹத்தைப் பற்றி யாலோசிக்கையில் அதை மூன்று ரீதியாய்க் கவனிக்க வேண்டும். அவையாவன :—

(1) சாஸ்திரம்.

(2) அனுஷ்டானம்.

(3) ஸௌகர்யம்.

(1) சாஸ்திரநீதி :—அதாவது ப்ரௌடா விவாஹம் சாஸ்த்ர சம்மதமா அல்லது சாஸ்த்ர விரோதமா ? நமது சாஸ்த்ரங்களில் இருகட்சிக்கும் வேண்டிய ஆதாரங்களிருக்கின்றன. மந்திரங்கள், விதிகள் (procedure) என சாஸ்த்ரங்கள் இருவகைப்படும். விதிகள் விசேஷமாய் அனுஷ்டானத்தைக் குறிக்கின்றன ஸம்ஸ்கார காலத்தில் உச்சரிக்கவேண்டியவைகள் மந்திரங்கள். விவாஹ காலத்தில் உச்சரிக்கப்படும் சில மந்திரங்களின் கருத்தால், விவாஹப் பெண் ப்ரௌடையாயிருக்கவேண்டுமென்று தெரியவருகின்றது. ஆனால் விதிகளில் பெரும்பான்மை, ப்ரௌடா விவாஹம் செய்யலாகாது என்றுதான் முறையிடுகின்றன.

(2) அனுஷ்டானம் (custom) :—முற்றிலும் ப்ரௌடா விவாஹத்துக்கு விரோதமாகத்தானிருக்கின்றது. முற்கூறியவாறு, நியாயஸ்தலங்களில், அனுஷ்டானந்தான் அதிக மதிப்பு வைக்கப்பட்டிருக்கின்றது. பால்ய விவாஹம் சரியா அல்லது ப்ரௌடா விவாஹம் சரியா என்று வியவஹரிக்க இந்நிலைமையில் ஸாத்தியமில்லை. உலகத்தில் ஏற்படும் விவாதங்களிலெல்லாம் கடினமானது ஸ்த்ரீ புருஷ (Sex problems) விவாதமே.

ஸௌகர்யம் :—பால்யவிவாகத்திலும் ப்ரௌடாவிவாஹத்திலும் ஸாதகபாதகங்கள் இருக்கின்றன.

பெற்றோர்களின் பொறுப்பு:—ப்ரௌடா விவாஹம் அனுஷ்டானத்துக்கு வந்துவிட்டால் பெற்றோர்களுக்குத் தங்கள் பெண்களைக் கட்டாயம் விவாஹம் செய்துவிடவேண்டுமென்றே பொறுப்பு நீங்கிவிடும். அடுத்த வருஷம் அடுத்த வருஷம் என்று தள்ளிவிடப்பட்டுக் கடைசியில் அன்யதேசங்களிற் போல விவாஹமில்லாமலே அநேகம் பெண்கள் நின்றுவிடுவார்கள் என்பது ஒருமதம்.

"பெண்களுக்கு விவாஹம் கட்டாயமா?" என்பது அடுத்த கேள்வி. புருஷர்களுக்கு விவாஹம் கட்டாயமில்லையே, பெண்களுக்கு மாத்திரம், அவர்களிஷ்டத்துக்கு விரோதமாய்க் கட்டாயம் விவாஹம் செய்விக்கவேண்டும்? அவர்களுக்கு ஸ்வாதந்திரியமும் ஸமத்வமுமில்லையா? என்று சில உத்ஸாக புருஷர்கள் தர்க்கிக்கக் கூடும். இதில் ஸ்வாதந்திரியம் ஸமத்வம் என்பவற்றின் கருத்தென்ன? இந்தப் பதங்கள் யாவராலும் தாராளமா யுபயோகிக்கப்பட்டபோதிலும் அனுஷ்டானத்தில் மாத்திரம் அவ்விதப்படி யனுஸரிப்பதில்லை. ஸ்ருஷ்டியில் புருஷர்களைப் பார்க்கிலும் ஸ்திரீகளுக்குச் சில குறைவுகள்தானிருக்கின்றன. ஸ்திரீகளோ அபலைகள், யௌவனத்தின் கொடுமை இருவருக்கும் பொதுவாயிருக்க, அதன் பலனை கர்ப்பம் ப்ரஜை உத்பத்தி முதலான கஷ்டங்கள் ஸ்திரீகளுக்கு மாத்திரம் கல்பிக்கப்பட்டிருக்கின்றன. நாம் இயற்கை (Nature)க்கு விரோதமாய் நடக்க முயல்வது பேதமை, ஆதலால், அபலைகளான ஸ்திரீகளும், அவர்கள் கற்பும், எவ்விதத்திலும் ப்ரக்ருதியில் பலவான்களான புருஷர்களால் காக்கப்படவேண்டும்.

அப்படிக்கல்லாது, விவாஹமில்லாத பெண்களின் தொகை யதிகரிக்குமானால், அதனால் அவர்கள் கற்புக்குக் குறைவும், அதனால் கற்பழித்தல், சிசுஹத்திமுதலான குற்றங்களும், அதனால், ஸ்திரீ ஸ்வதந்த்ர (Suffragetee Movements) முயற்சிகள் போன்ற நடபடிக்கைகளும் விருத்தி யடைந்து தேசத்துக்கே கெடுதிநேரிடும். பெண்கள் ஸமமாக நடக்கத்தக்கவர்கள்தான். ஆனால் தம் தேக அமைப்பிற்கு மீறின காரியங்களில் அவர்கள் தலைப்படுவதும் ந்யாயமில்லையல்லவா?

வரசுல்கம்:—அரங்கத்திலேறி ப்ரஸங்கம் செய்ய நாம் லாயக்குள்ளவர்கள்தான். அனுஷ்டானத்தில் நமது ப்ரசங்கப்படி நாமே நடப்பதில்லை. வரசுல்கம் என்றால் வரனுக்கு வரி. அதாவது



பெண்வரி யென்றர்த்தம். சிலர் வரதக்ஷிணை என்பார்கள். அது சரியான பதமல்ல. கொடுப்பவன் தானாகவே மனமுவந்து கொடுப்பது தக்ஷிணை. இடலடியாய் வாங்குவது சுல்கம். அதாவது சுங்கம் வரி, அல்லது (பெண்ணைப்பெற்ற) தண்டப்பணம் என்றர்த்தம். எத்துணை உபன்யாஸம் செய்தால்தானென்ன? எத்துணை ஆசாரத் திருத்தம் பேசினால்தானென்ன? இந்த வரசுல்கம் என்னும் முறையைப்பற்றி யார் அனுஷ்டானத்தோடு ஆட்சேபித்திருக்கின்றார்கள்? இது சாஸ்திர சம்மதமா? பூர்வ அனுஷ்டானமா? அல்லது நவீன நாகரீகத்தை யேற்றதா? இதர காரியங்களில் போலவே, 'வரத்துப்ரியம்' (Law of Supply & Demand) என்னும் செல்வநூல் விதியானது நமது விவாஹ முறையாலும் நாமறிய சுமார் 15 வருஷங்களுக்குள் தானே ஏற்பட்டுவிட்டது.

(1) தர்க்கசக்ரம்:—பெண்களுக்குக் கல்யாணம் கட்டாயம், பிள்ளைகளுக்குக் கல்யாணம் கட்டாயமில்லை. ஆகையால், பிள்ளையைப்பெற்றவர்கள் கேட்கும் பணம் பெண்கள் கொடுக்கவேண்டும்.

(2) பெண்களுக்குப் ப்ரௌடையாகுமுன் விவாஹமாக வேண்டும். பிள்ளைகளுக்குக் காலாவதியில்லை. ஆகையால், பிள்ளையைப்பெற்றவர்கள் கேட்கும்பணம் பெண்கள் கொடுத்துத்தான் தீரவேண்டும்.

இதுதான் வரசுல்கத்தைப் பற்றிய வாதசக்ரம் (Syllogism).

வரசுல்கம் குறையுமா?—ப்ரௌடாவிவாஹத்தால், அதாவது, பிள்ளைகள் விஷயத்தில் போலவே, பெண்கள் விவாஹத்துக்கும் காலாவதியை விலக்கிவிட்டால், வரசுல்கம் கொஞ்சம் குறையுமென்பது எதிர் பார்க்கத்தக்கதே.

ஆனால்,பெண்களுக்குக்கட்டாயம் விவாஹமாகவேண்டுமென்று இருப்பதால் அது குறையாதென்பதும், அதுபெற்றோர்க்கும் மற்ற உற்றோர்க்கும் அதிகக் கவலைக்கு ஹேதுவாவதுடன், அக்கவலைக்குத்தக்கபடி வரசுல்கமும் அதிகரிக்கும் என்பதும் மற்றொரு அபிப்பிராயம். அவ்வாறு வரசுல்கம் கொடுக்க முடியாமையால் பெண்களில் பெரும்பான்மையோர் விவாக மில்லாமலே நிற்க ஹேதுவாய் விடுமென்றும் சொல்லப் படுகின்றது.

பணச்சுருக்கம்:—பத்துவயதில் பெண்ணை விவாஹம் செய்வதைப் பார்க்கிலும், 15 வயதில் செய்வித்து, உடனே ருதுசாந்தி

யும் செய்துவிடுவதால், வட்டி லாபமும், செலவுச்சுருக்கமும் ஏற்படும். இது பணக்காரருக்கு ஹாஸ்யகரமாய்த் தோன்றினாலும் ஏழைகளுக்கு எவ்வளவோ சாதகமாயுள்ளது.

பெற்றோர்களின் கவலை:—10 வயதில் பெண்ணுக்கு விவாகம் செய்துவிட்டு. மாப்பிள்ளையின், நடையுடைபாவனை, சௌக்கியம் முதலியவைகளைப் பற்றியும் அதுமுதல் பெண்ணின் பெற்றோர்கள் கவலைப்பட வேண்டி யேற்படுகின்றது. 15 வயதில் விவாஹமானால், அந்த 5 வருஷ காலமாவது கவலையொழிந்திருக்கலாமல்லவா ? கவலை இருக்கத்தான் இருக்கின்றது. 5வருஷமாவதுத் தள்ளிவிட்ட மட்டில் லாபம் என்று கூறுவார் சிலர்.

பால்யவிதவை:—ப்ரௌடை யானபிறகு விவாஹம் செய்வதென்றால் அப்பருவத்துக்கு முன் பால்யவிதவைகள் ஏற்படார்கள் என்பது யாவரும் அங்கீகரிக்கத்தக்க விஷயம். இதிலும், இக்கொடும் துர்த்தசையைத் தள்ளிவிட்ட மட்டிலும் லாபமே.

மாப்பிள்ளைகளின் அந்தஸ்து:—பால்ய விவாஹத்தில் பெரும்பான்மை மாப்பிள்ளைகள் மாணுக்கர்களாகவே இருக்கின்றார்கள். அவர் மன நிலைமை எவ்வாறு முடியுமென்று நிச்சயிக்க முடியாமலிருக்கின்றது. அவர்களுக்கும் உலகத்தில் ஓர்வித ஜீவனோபாயம் தேடினீர்களே என்று தாய்தந்தையரிடம் பெண்கள் கூறும் குறைகள் குறைந்துவரும்.

கற்பு:—இதன் லக்ஷணம் கால, ஜாதி, தேச, வர்த்தமானங்களுக்குத் தக்கபடி வித்தியாஸப் படுகின்றது. நமது அனுஷ்டானத்தில், 'அச்சம், நாணம், மடமை, பயிர்ப்பு' என்ற நான்கும் கற்புக் கழகு என்பார்கள். சில ஜாதியார் இதை ஒப்புக்கொள்ளவே மாட்டார்கள். ஆனால் அவர்களுக்குச் சமாதானம் கூற இங்கு இடமில்லை. பெண்களையும் பெண்கள் கற்பையுங் காப்பது மிக்க அவசியமானது. ஆதலால், பெண்கள் யாவருக்கும், விவாஹம் ஆகவேண்டு மென்பதும், அவர்கள், புருஷர்கள் ஸம்ரக்ஷணைக் குட்படவேண்டு மென்பதும், புருஷர் தேடிக்கொணர்ந்ததைப் பெண்கள் தான் வைத்துப் பரிமளிக்க வேண்டுமென்பதும், அப்படிக்கில்லாது தொழில்மாறிச் செய்ய நேரிடின், அது இல்வாழ்க்கைக்கு விரோதமாவது மல்லாமல், ஐப்ராஜட் முறைபோலத் தேசக்ஷேமத்துக்கே குறைவென்பதும் யாவரும் ஒப்புக்கொள்ளத் தக்கனவே. பணக்கார



தேசங்களில் பாதகமில்லை. ஏழை தேசமான நமது தேசத்தில் அக்கொடுமையும் நேர்ந்துவிட்டால் அது சகிக்கமுடியாக் கொடுமையாய்விடும். இப்பொழுது, கேவலம் அனுமதிச் சட்டமாக மாத்திரம் ப்ரேரிப்பிக்கப் பட்டிருக்கும் இம்மசோதாவின் சாதக பாதங்கள் யாவரும் இருதரப்பிலும் ஆராய்ந்து ஓர் முடிவுக்கு வரவேண்டும்.—'வித்யாபானு.'

ஆர். எஸ். நாராயணஸாமியய்யர், B.A., B.L.

---

## ANNADANAM.

**By**

**Sri Rudrakotisvarar.**

## அன்னதானம்.

தானமாவது தருமவழியாய் வந்த பொருளைச் சற்பாத்திரமாயுள்ளவருக்குச் சிரத்தையோடு கொடுத்தல். சிரத்தை யெனினும், பிரீதி யெனினும், ஆதரவெனினும், பக்தியெனினும், விசுவாசமெனினும், அன்பெனினும், பற்றெனினும் பொருந்தும். இவைகளெல்லாம் ஒருபொருள் குறித்த பலசொற்கள்.

தானத்திற்குமூலம் ஆதரவாகும்; அவ்வாதரவு பாராட்டாதவர்களுடைய கொடையானது தானமாகாது. ஆதரவில்லாவிட்டால் தானமானது சாதிக்கப்படுவதல்ல. அதாவது, ஆதரவில்லாமற் செய்யுந்தானம் பயன்படாது ; ஆதரவுடையவர்களே தாதாக்கள் என்று சொல்லப்படுவார்கள். அவ்வாதரவில்லாதவர்கள் அதாதாக்களாவார்கள் ; யாவரொருவர் சிரத்தையுடனே, அதாவது, ஆதரவுடனே சிறிது ஏதாயினும் தானஞ்செய்யின், அதனாலே மிகுந்த பயன் உண்டாகும். ஆகவே, மனநெகிழ்ச்சியுடைய ஆதரவே பெறற்கரியபேராகும். இதை அறியமாட்டாதார் தம்முடைய தானத்தினால் ஒரு பலனையும் அடையார்கள். இதுபற்றியே,

"உவகையுற வாதரவாற் சிறிதே தேனு
முதவியிடு மறமதனாற் பெரிதுண் டாகு
மகநெகலு மாதரவே யரிய பேறென்
றறியாதா ரென்பெறுவ ரன்னோ வன்னோ"

என்று பெரியோர் கூறுவாராயினர்.

மேலே, தருமவழியால் வந்தபொருளைப் பாத்திரமாயுள்ளவருக்குச் சிரத்தையோடு கொடுத்தலே தானம் என்றேம். அதில் பாத்ரம் என்றால் என்னையெனின்,

“ பாவெனும் பதத்தினர்த்தம் பாவமென் கடலிற்பட்டார்
தேவனற் பதமென்றீரத் திருத்துவான் றிரத்தினர்த்தம்”

பாத்திரம் என்னும் சொல்லில் பா என்பதன்பொருள் பாவமாகிய கடலில் அமிழ்ந்தினவர் என்பதாம். திரம் என்பதன் பொருள் கடவுளது சிறந்த பாதகமலமாகிய கரையில் பொருந்தும் வண்ணம் செலுத்தி இருத்துபவர் என்பதாம். எனவே, பாவமெனும் கடலில் அமிழ்ந்து திகைப்புற்று வருந்துபவர்களை அக்கடலிலிருந்து கடவுளது திருவடியாகிய கரையைச்சேரும் வண்ணம் செய்யும் மரக்கலம் போல்பவரே பாத்திரம் என்று சொல்லப்படுவர் என்பது பெறப்படுகின்றது.

“ பாவெனும் பதத்தினர்த்தம் பாவமென் கடலிற்பட்டார்
தேவனற் பதமென்றீரத் திருத்துவான் றிரத்தினர்த்தம்
பாவமென் கடற்பட்டாரைப் பரமர்தம் பதமென்பாரத்
தேவியே யிருத்துவானே பாத்திர மென்னப்பட்டான் ” .

தருமசாஸ்திரங்களை ஓதி உணர்ந்து பாவ கருமங்களை விலக்கித் தருமங்களை அனுட்டிப்போரும், தம்மைப்போலவே பிறரும் நற்கதி பெற்று உய்யவேண்டுமென்று விரும்பி அவருக்குத் தருமநெறியைப்போதிப்போரும், அத்தருமநெறியில் யாவரும் நடக்கும் பொருட்டுச் சிரத்தையோடு முயற்சி செய்வோரும், கடவுளின் இயல்பை அறிந்து அவரை மெய்யன்போடு வழிபடுவோரும், யோகிகள், ஞானிகள், துறவிகள், அதிதிகள் முதலியோரும் சற்பாத்திரமாவர். மற்றுக் குருடர், செவிடர், ஊமர், முடவர், வியாதியாளர், வயோதிகர், மாதாபிதாக்களை இழந்த சிறு குழந்தைகள், கணவனை இழந்துத் துன்பப்படும் ஸ்திரீகள் இவர்களெல்லாம் தானபாத்திரமாவர். மேற்கூறப்பட்டவர்களும் இவர்களும் எந்தச் சாதியாராயிருப்பினும், எந்தக்குலத்தாரா யிருப்பினும் எந்தச் சமயத்தாராயிருப்பினும், எந்த மார்க்கத்தாராயிருப்பினும், எந்த ஆசாரத்தையுடையவராயிருப்பினும், எந்த நாட்டாராயிருப்பினும் எந்தத்தேசத்தாராயிருப்பினும் இருக்கலாம். இத்தகையோர் தமக்குத்தானஞ் செய்தவர்களைப் பாபம் என்னும் கடலிலிருந்து கடவுள் திருவடியாகிய கரை



யில் ஏற்றக்கூடியவர்கள். அன்னதானம் முதலியவற்றை இத்தகையோர்க்குச் செய்தலே தருமமாகும்.

ஒழுக்கநூல்களிலும், பக்தியோக ஞானநூல்களிலும், விருப்பமில்லாதோரும், நித்திய கருமங்களை விடுத்தோரும், கொலை செய்வோரும், புலாலுண்போரும், கள்ளருந்துவோரும், களவுபுரிவோரும், சூதாடுவோரும், பொய்ச்சான்று சொல்வோரும், பொய்வழக்குப் பேசுவோரும், தீய சிந்தையுடையோரும், தொழில் செய்து சீவனஞ்செய்யச் சத்தியிருந்தும், அது செய்யாத சோம்பலுடையோரும் இவர்களெல்லாம் அசற்பாத்திரமாவர்கள். இவர்களுக்கு அன்னதானம் முதலியவற்றைச்செய்தால் பாபம் உண்டாகும்.

கல்லினால் செய்யப்பட்ட தோணியாலே கடலைக்கடக்க முயன்றவன் அத்தோணியோடும் அக்கடலில் அமிழ்ந்து அழிவடைவது போலக் கல்வி, அறிவு, ஒழுக்கமில்லாத அவர்களுக்குத் தானங் கொடுத்தவர்கள் பாவக்கடலிலிருந்து கரையேறமாட்டாது அவர்களோடும் அப்பாவக்கடலில் அமிழ்ந்துபோவார்கள்.

இனி கோதானம், பரிதானம், கரிதானம், பூமிதானம், சொர்ணதானம், துலாபுருடதானம், இரணியகருப்பதானம், இரணியவிடபதானம், இரணிய சத்த சாகரதானம் முதலிய பலவகைத் தானங்களுள் அன்னதானமே மிகச்சிறந்ததாகும். எவ்வாறெனில், அன்னமானது உடனே பசியகற்றி உயிர்காத்துப் பயனளித்து விடுகின்றது. அன்னமானது பிரபஞ்சத்தை நிலைபெறச் செய்கின்றது. எங்ஙனமெனில், எத்தகையோர்க்கும் பசி வந்த காலத்தில் துன்பம் உண்டாகின்றது. அத்துன்பமோ மிகக்கொடியதாய் இருக்கின்றது. பொருள், இடம், ஆடை முதலியன இல்லாமல் வருந்துகின்றவர்கள் அவ்வருத்தத்தைத் தம் மனவெழுச்சியால் ஆற்றிக்கொண்டு உயிர் தரித்துத் தம்மால் செய்யக்கூடிய தொழிலைச் செய்யக்கூடும். ஆயின் பசியினால் துன்பம் நேரிட்டபோது மனவெழுச்சியால் அத்துன்பத்தைச் சகித்துக்கொள்ள முடியவே முடியாது.

“ மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப் பறந்துபோம் ” என்றபடி பசிநோய் வந்த

காலத்து மானம், குலப்பெருமை, கல்விப்பொருமை, சத்தியம், அறிவுடைமை, தானம், தவம், உயர்வு, தொழில் முயற்சி, இனிய தேன் பெருக்குப் போலத் தோன்றுகின்ற சொற்களையுடைய மகளிரிடத்துக் காமங்கொள்ளுதல் ஆகிய பத்தும் அறவே விட்டோடிப் போகும். மானம் முதலிய எல்லா நலங்களையும் கெடுத்தலினாலே பசி நோயினுங் கொடியது பிறிதில்லை.

நாடாளும் மகாமன்னர்களும் பசி நேரிட்டபோது தமது உயர்வு, அதிகாரம் முதலியவற்றை முழுவதும் மறந்து அப்பசிக்குப் பயப்படுகின்றார்கள்; பகைவர்களை யெல்லாம் வெல்லத்தக்க சுத்த வீரர்களும் பசி நேரிட்டபோது தம் பராக்கிரமத்தை இழந்து அப்பசிக்கு அஞ்சி, ஐயோ! இனி இளைப்புவருமே, சண்டை எப்படிச் செய்கின்றது என்று கலங்குகிறார்கள்; பகல் என்பதும் இரவு என்பதும் கருதாமல் எப்போதும் ஸ்திரீகளின் புணர்ச்சி யின்பத்தில் பொங்குகின்ற காமிகளும் தமக்குப் பசிவந்த காலத்து அப்புணர்ச்சியின்பத்தை வெறுத்து வருந்துகின்றார்கள்; நாமே பெரியவர்கள் நமக்கு மேற் பெரியவர்களில்லை யென்று அகந்தை அடைகின்ற அகங்காரிகளும் பசி நேரிட்டபோது தம் அகந்தை குலைந்து ஆகாரங் கொடுப்பவரையே பெரியவராகப் புகழ்கின்றார்கள்; நடையுடை பாவனைகளில் மிகுந்த டம்பர்களும், பசி நேரிட்டபோது தம் டம்பத்தை இழந்து மயங்குகின்றார்கள்; சாதி சமயா சாரங்களில் மிக்க பற்றுடையவர்களும் பசி வந்தபோது அச்சாதிசமயாசாரங்களை மறந்து எங்காயினும் ஆகாரத்திற் கெதிர் பார்க்கின்றார்கள்; மிகுந்த மானிகளும் பசி நேரிட்டபோது தங்கள் வருத்தத்தைச் சொல்லத் தகாதவரிடத்துஞ் சொல்லி மானங்குலைகின்றார்கள். அப்போது அவர்கள் தம்முடைய வீடு, மாடு, நிலம், ஆபரணம் முதலான பொருள்களை விற்றுத் தம் பசியை நீக்கிக்கொள்ளுகின்றனர்; கல்வி கேள்விகளில் நிரம்பி மிக்க அறிவடைந்து உலகத்தில் அரிய பெரிய காரியங்களை யெல்லாம் செய்து முடிக்கவல்லவர்களும் பசி நேரிட்டபோது அறிவு அழிந்து போகின்றார்கள்; இவ்வுலகப் பொருள்களின் நிலையாமையை உணர்ந்து அவற்றை விடுத்துத் துறந்து, உலகத்தாருடைய நன்மையைக் கருதி சமய விஷயங்களையும், தத்துவ விஷயங்களையும், சமரச உண்மைகளையும், தரும விஷயங்களையும் எடுத்துப் போதித்து உலகத்தில் அரிய பெரிய சீர்திருத்தங்களை யெல்லாம் செய்யும் நல்லோர்களும் பசிவரும் போதெல்லாம்



தம்முடைய உயர்ந்த நோக்கங்களை யெல்லாம் மறந்து மயங்குகின்றனர்; இவ்வுலக போகங்களை யெல்லாம் துரும்பாக நினைந்து வெறுத்து முற்றத்துறந்து பிராண வாயுவையும் பஞ்சேந்திரியங்களையும் அடக்கி மனோலயஞ்செய்து உண்மை நிட்டையிலிருக்கின்ற யோகிகளும், முடிந்த உண்மையை அறிந்து அநுபவம் அடைந்த ஞானிகளும் பசி நேரிட்டபோது தங்கள் தங்ள் யோகஞானநுபவங்கள் தடையுறப் பெற்று அவற்றை விடுத்துப் பிக்ஷைக்கு வருகின்றார்கள்; பிக்ஷை கிடைக்காமல் போயின் நிலைகலங்குகின்றார்க்ள்.

இவர்களெல்லாம் இப்படியானால், கல்வி அறிவும், ஒருவகை ஆதரவு மில்லாத ஏழைகள் தமக்குப் பசி நேரிட்டபோது என்ன பாடு படார்கள்! அறிவாளர்கள் சற்று நினைந்து பா ங்கள்! அம்மம்ம! அதை நம்முடைய நாவினாலே எடுத்துக் கூறுவதற்கு இயலாது. பசியினால் துன்பம் நேரிட்டபோது அத்துன்பத்தைச் சகித்துக்கொள்ள முடியவேமுடியாது. அவ்வாறு சகிக்கத் தொடங்கினாலோ உயிர் இழந்துவிடுவார்கள்.

ஆ! என் சொல்வேம்! சீவர்களுக்குப் பசி அதிகரித்த காலத்தில் சீவ அறிவு விளக்கமில்லாமல் மயங்குகின்றது; குணங்களெல்லாம் பேதப்படுகின்றன; மனந்தளர்ந்து தடுமாறிச் சிதறுகின்றது; அதனால் நினைப்பு வேறுபடுகின்றது; புத்தி கெடுகின்றது; பிராணன் சுழல்கின்றது; கண் குழிந்துபோகின்றது; காது செவிடுபடுகின்றது; நா உலர்ந்து வற்றுகின்றது; நாசி குழைந்து அழல்கின்றது; தோல் மெலிந்துபோகின்றது; கைகால் சோர்ந்து துவளுகின்றன; நரம்புகளெல்லாம் குழைந்து நைகின்றன; இப்படிப் பசி அதிகரித்த காலத்தில் வயிறு அக்கினிபோல் பகீரென்று எரிகின்றது.

மதுரையில் தடாதகைப் பிராட்டியார் தமது திருமணத்துக்கு வந்த அரசர்களையும், முனிவர்களையும், மற்றவர்களையும் அமுது செய்வித்தபோது குண்டோதரன் என்பவன் அடங்காப் பசி கொண்டு உடல் சோர்ந்து வேர்த்து அங்கிருந்த அன்னக்குவியலை யெல்லாம் உண்டும் பசி தணிந்திலனாய் அப்பசித்தீ சுட ஆவி சோர்ந்து சிவபெருமானை நோக்கி,

“நட்டமாடிய சுந்தர நங்கையெம் பிராட்டி
யட்டபோனகம் பனிவரை யனையவாய்க் கிடந்த
தொட்டுவாய் மடுத்திடவு மென்சுடுபசி தணியா
திட்டுணாதவர் வயிறுபோற் காந்துவ தென்றான்”.

பதஞ்சலி வியாக்கிரபாதர் பொருட்டு வெள்ளியம்பலத்தில் ஆனந்தத்தாண்டவஞ் செய்த சுந்தரேச! என்பெருமாட்டியாராகிய தடாதகைப்பிராட்டியார் மலைபோலுஞ் சமைத்து வைத்த அன்ன வகைகளையெல்லாம் யான் சிறிதும் விடாமல் வாரி வாயில் போட்டுக் கொண்டும் என்னைச் சுட்டு வருத்தும் பசி யின்னும் ஆறவில்லை. அதனால், 'இட்டுணாதவர் வயிறுபோற் காந்துவது' ஏழைகளுக்குக் கொடுத்துத் தாமும் உண்ணாமலும் உடுக்காமலும் பொருளைச் சேமித்துவைத்தவர்கள் தேனைத் தேடிக் கூட்டில் சேர்த்துவைத்து அதனை உண்ணாமல் இழக்கும் தேனீக்கள் போல அப்பொருளை இழந்தபோது அவர் வயிறு எரிவதுபோல் என் வயிறு எரிகின்றது என்று அலறினதாகத் திருவிளையாடல் புராணத்தில் கூறப்பட்டிருக்கின்றது. பசி அதிகரித்தகாலத்தில் உயிர் இழந்துவிடுவதற்குரிய இன்னோரன்ன அடையாளங்களெல்லாம் தோன்றுகின்றன.

இத்துணை அவத்தைகளும் துன்பங்களும் அன்னங் கிடைத்தபோது நீங்குகின்றன; அப்போது சீவர்களுக்குத் தத்துவங்களும், அவயவங்களும் தழைத்து உள்ளங்குளிர்ந்து அறிவு விளங்கி அகத்திலும் முகத்திலும் திருப்தியின்பம் உண்டாகின்றது; சரீரமும் உரம் பெறுகின்றது. இதனால் அன்னதானமே மிக மேலான தானமென்றும் மிக முக்கியமான தானமென்றும் பெரியோர்களால் சொல்லப்படுகின்றது. எல்லாத் தானங்களிலும் அன்னதானமே எல்லோராலும் சிறந்தெடுத்து நாள்தோறும் பாராட்டப்படுகின்றது. அன்னதானமானது செய்தவர்களுக்கும் மிகுந்த பலனைத்தருகின்றது.

"அன்னதான மறைந்தவற்று ளதிகபலமே யருந்தினனுக்
கின்னல்கெடுக்கு மப்பொழுதே யின்பந்தனையு மிசைவிக்கு
மன்னுமுடலுள் வலியதனன் மாறில்பொருளே யஃததனா
லென்னிலுவமை யிதற்கில்லை மண்ணின்கண்ணே வெவ்விடத்தும்"

அதாவது: பலவகைப்பட்ட தானங்களுள் சீவர்களின் பசியைத் தீர்க்கும்பொருட்டுச் செய்கின்ற அன்னதானமானது அதிகமான பலன்களைக் கொடுக்கும். அது, அவ்வன்னத்தைப் புசித்தவனுடைய பசித்துயரத்தை அந்தக்ஷணத்திலேதானே போக்கும். அதுவல்லாமல், அவ்வன்னத்தைப் புசித்தவனுக்கு இன்பத்தையும் உண்டாக்கும். அதனால் தேகபலமும் நிலைபெறும். ஆகையால், அன்னமானது உவமையில்லாத பொருளாகும். இவ்வன்ன தானத்திற்கு



உவமை உண்டோவென்று பார்த்தால் இதற்கு உவமை இவ்வுலகத்திலும் இல்லை, மற்று எங்கும் இல்லை.

அன்னதானம் என்பதைத் தமிழ்ப்புலவர்கள் அப்பேர்பட்ட தானம் என்று மிக நயமாகப் பொருள்படுத்துவர். எப்பேர்பட்ட தானம் என்றால் அன்னதானம்; அன்ன—அப்பேர்பட்ட, தானம். தனக்கு இணையில்லாத தானம்; இதனால் தனக்குச் சமானமான தானம் இல்லை யென்பதையே அவ்வன்னதானம் நன்கு விளக்குகின்றது.

"அன்னமதனிலா முதிரமதனாற் றசையா மதனாலே
மன்னுமலின சுக்கிலமுமலின மதனாற் கருவாகு
மன்னமின்றே லுயிர்வாழுமாக்கை விரைய வழிந்தகலு
மன்னமதுவே யுடறன்னையாக்கு நிறுத்து மழித்திடுமே."

அன்னத்தினின்றும் இரத்தம் உண்டாகும்; அந்த இரத்தத்தினால் சதையுண்டாகும்; அந்தச் சதையினாலே சுக்கிலம் உண்டாகும்; அந்தச் சுக்கிலத்தினால் கர்ப்பமும், அக்கர்ப்பத்தினால் சீவனுக்குச் சரீரமும் உண்டாகும். இதற்கெல்லாம் காரணமாயிராநின்ற அன்னமில்லையானால் உயிர் இருந்து வாழுதற்கு இடமாயுள்ள உடம்பானது சீக்கிரத்தில் அழிந்துபோகும். ஆகையினாலே அன்னமே உடம்பை உண்டாக்கும்; உடம்பைக் காக்கும்; அவ்வுடம்பையும் அழித்துவிடும்.

பௌத்த சமயத்தார் கொள்கையும் 'உணவால் உடம்பும், உடம்பால் உணர்வும் ஆகும்' என்பதாம்.

"மற்றுடம்பு சார்வா கவுணர்வெழு மெழுதற்குப்
பெற்றிமைப் பறையடிப்பப் பெறுமொலியே யுரையாதோ"

என்று நீலகேசித்திரட்டு என்னும் பௌத்த நூலில் கூறப்பட்டிருக்கின்றது. இதற்கேற்பவே, வடக்கே கபிலவாஸ்துவில் இருந்த கௌதம சாக்கியர் என்னும் இளவரசர் உலகப்பொருள்களின் நிலையாமையை உணர்ந்து முற்றுந்துறந்துத் தத்துவவுண்மைகளை அறியவேண்டித் தவஞ்செய்துகொண்டிருந்த சில முனிவர்களை அடைந்து அவர்கள் கூறியபடி பலகாலம் பட்டினியுற்றுத் தவஞ்செய்ய, அதனால் பெரிதும் இளைப்பும், மூர்ச்சையும் அடைந்து துன்பப்பட்டுப் பின்னர், 'இப்படிப் பட்டினியுற்றுச் செய்யும் தவத்தாலே யாதும் பயனில்லை' என்று நினைந்து கிடைத்த உணவை

உண்டு பசியை ஆற்றிக்கொண்டு உண்மைகளை உணர்ந்து சிவகாருணிய தருமத்தை மக்களுக்குப் போதித்தமையும் அறிக.

"உற்றான் பசியைக் கனகத்தா லொளிசேர் மணியா
லொண் டொடியான்
மற்று முளநல் வளனாலு மாற்ற வலனோ
வலன் வயினுட்
கர்ப்பந் தனக்கும் பாலனுக்குங் கிளர்ந்த தருணன்
றனக்குமுட
லொற்க முடைய விருத்தனுக்கு முண்டோ நிலையோ
தன மொழித்தே."

அன்னமே சரீரம் உண்டாதற்குக் காரணமாகவும், அவ்வன்னமே சரீரத்தைக் காப்பதாகவும், அவ்வன்ன மில்லையேல் அச்சரீரத்தை அழிப்பதாகவும் இருத்தலின் அன்னமே யாவற்றிற்கும் ஆதாரமாக இருக்கின்றது. எனவே, பசி நோயுற்ற யாவர்க்கும் அந்நோய் அன்னத்தினாலல்லாமல்,

"கனகத்தா லொளிசேர் மணியா
லொண் டொடியான்
மற்று முளநல் வளனாலு மாற்ற வலனோ."

பொன்னாலும், ஒளிபொருந்திய முத்து முதலிய மணிகளாலும், மிக அழகிய ஒரு ஸ்திரீயினாலும் மற்றுமுள்ள செல்வங்களாலும் தீராது, ஆயின்,

"தேவர்முனிவர் தானவருந் திளைப்பருண வைத்திதிவிரும்பி
யாவருணவை விரும்பாதாரிடர் சேருடலுண் முந்நூற்றெட்
டோவாநோ யுண்டவற் றுள்ளும்பசி நோய்கொடிய துறினதனுக்
காவாவென்றே யருளான னருந்துமருந் தோதனமன்றே."

யாவரும் தங்கள் தங்கள் சரீரம் அழியாமல் நிற்க வேண்டி, அன்னமாதியான உணவை அருந்துவார்கள். ஆகையினாலே உலகத்தில் எவர்கள் அன்னத்தை விரும்பாமல் விட்டார்கள்? அது வல்லாமல், துக்கத்திற்குக் காரணமாகவுள்ள தேகத்தில் ஒழியாத முந்நூற்றெட்டு வியாதிகளுண்டு; இவற்றுள்ளும் பசி வியாதியே மிகவும் பொல்லாதது. அப்பசி நோயை ஒருவன் அடைந்தால் சிவ காருணியமுடையவர் அதனைக்கண்டு ஐயோ! ஐயோ! என்று இரங்கி



அப்பசி நோய்க்குக் கொடுக்கும் மருந்தானது அந்த அன்னமேயாம். "மருந்து ஓதனமன்றே" என்றபடி மேலே சொன்ன பொன்னாலும், முத்து முதலிய மணிகளாலும் மிக அழகிய ஸ்திரீயினாலும் மற்றுமுள்ள செல்வங்களாலும் தீராத பசி நோய்க்கு அன்னமே மருந்தாகும்.

அன்னமானது பசியாகிய வியாதியை நீக்குகின்றமையால் மைத்ராயண்ணியுபநிஷத்தில் அது (அவ்வன்னமானது) வைத்தியனாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

"உற்றபசிநோய்க் கனமருந்தை யுதவுவாரு மிலராகி
லற்றதுயிரு மவ்வுடலுக் கன்னமளிப்பா ரவருண்டேற்
பெற்றதுயிரு மவ்வுடலம் பெறுமவ்வுயிருந் தருமாதி
சோற்றையீவா னுயிரீவான் றருமமுதலுந் துயக்கறவே"

என்று தரும சாஸ்திரத்தில் கூறியவாறு யாவரேனும் ஒருவர் தம் உடம்பில் கொண்ட பசி நோய்க்கு அன்னமாகிய மருந்தைக் கொடுக்குந் தாதாக்கள் இல்லையாயின் அவ் வுடம்பிற்கு உயிரும் இல்லையாய் விடும். அப்பசி நோய்க்கு அன்னமாகிய மருந்தைக் கொடுக்கும் தாதாக்கள் உண்டானால் அப்பசி நோய் நீங்கி அவ் வுடம்பு உயிரைப்பெற்று வாழும். அதனால், அவ்வுயிரும் தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கையும் பெறும். ஆகையால், "சோற்றை யீவான் உயிர் ஈவான்" அன்னதானஞ் செய்பவர் பிராணதானஞ் செய்பவராவர். இது;

இப்பொழுதைக்கு ஆயிரத்துத்தொள்ளாயிரம் வருடங்களுக்கு முன்னர் கண்ணகி யென்னும் மாபெரும் பத்தினியின் கணவனாகிய கோவலன் என்பானுக்கு நாடகக்கணிகையாகிய மாதவிபாற் பிறந்த மணிமேகலை என்பவள் தன் தந்தையாகிய அக்கோவலன் மதுரைப்பட்டினத்தில் ஆரியப்படை தந்த பாண்டியன் நெடுஞ்செழியனால் கொலையுண்டிறந்தமையை ஆற்றாமல் பெரிதும் மனங்கலங்கி வருத்தமுற்று உலகவாழ்க்கையை அறவே வெறுத்துத் தன் இளமைப்பருவத்திலேயே துறவு பூண்டு தவவொழுக்கம் மேற்கொண்டு கடல் கொண்ட காவிரிப்பூம் பட்டினத்திற்குத்தெற்கேயிருந்த மணிபல்லவம் என்னும் தீவிற்குச் சென்றகாலத்து, ஆங்குத் தீவதிலகை என்பாள் ஒருவள் அம்மணிமேகலையை நோக்கி,

“ஆற்றுநர்க் களிப்போ ரறவிலை பகர்வோ
ராற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை
மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லா
முண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே.”

அதாவது:—

“பசி வந்தகாலத்தில் அப்பசிக்கு உணவுதேடி அப்பசியை ஆற்றிக் கொள்ளும் வல்லமையை உடையவர்க்கு அன்னம் அளிப்பவர்கள் மறுமைப்பயன் கருதி தருமமாகிய வியாபாரஞ் செயபவராவர். ஆயின் தம் பசியை ஆற்றிக்கொள்ள மாட்டாத தரித்திருடைய தீராப்பசியைத் தீர்ப்பவர்களிடத்தேதான் உண்மையான உலகவாழ்க்கைநிலை பெற்றுள்ளது. ஆகவே, அணுக்களால் பொருந்தியுள்ள இவ்வுலகத்தில் வாழும் ஏழைகளுக்கெல்லாம் அன்னமாகிய உணவினைக் கொடுத்தவர்கள் உயிரைக் கொடுத்தவராவார்கள்” என்று மொழிந்து, பின்னும் அவளைப் பார்த்து, “ஓ! பூங்கொடி போல்வாய்! நீ உயிர்களுடைய பசித்துன்பத்தைப் போக்கி உயிரைக் கொடுத்தலாகிய தருமத்தைச் செய்வாயாக!” என்று கூறினமையாலும் இனிது அறியப்படும்.

“மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லா
முண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே” என்று

தீவதிலகையானவள் மணிமேகலைக்குக் கூறியவண்ணம் “சோற்றை யீவான் உயிர் ஈவான்” சோற்றைக் கொடுப்பவர் (அன்னதானஞ்செய்பவர்) பிராணதானஞ் செய்பவராவர்.

அன்னமானது சகலப் பிராணிகளுக்கும் பிராணனாயிருக்கின்றது. பிராணனாவது அன்னத்தினுடைய இரசமாய் இருக்கின்றது.

அன்னமானது உயிரை உடம்பிலே நிறுத்தும் சாவி (திறவுகோல்) என்று இக்காலப் * பெரியோர் ஒருவர் தமது † நூலில் ஓதுவாராயினர். அது அவர் இறைவனை நோக்கி,

* திருவனந்தை இலக்ஷ்மணப் பிள்ளையவர்கள், B.A.
† ஞானானந்தனடிமாலை.



“ஆவிநீ தந்தாய் அங்கநீ தந்தாய்
ஆவியை அங்கத்தே நிறுத்துஞ்
சாவியாம் அன்னத் திரளையுந் தந்தாய்”

என்று இனிமையான பாட்டால் விண்ணப்பஞ்செய்தவாற்றால் அறியப்படும்.

இதனால் அன்னமானது உயிரை உடம்பினின்றும் நீங்காவண்ணம் நிறுத்திவைக்கும் தன்மையை உடையது என்பதும் அத்தன்மையானது ஒரு சாவிபோன்றிருக்கின்றதென்பதும் நன்கு விளங்குகின்றது.

(வரும்.)

உருத்திரகோடீசுவரன்.

---

## THE LATE Mr. GOPAL KRISHNA GOKHALE.

### A Study.

## காலம்சென்ற ஸ்ரீமான் கோபால க்ருஷ்ண கோகேல்.

### ஒரு பாடம்.

மிஸ்டர் கோபாலகிருஷ்ண கோகேல் நாளது வருஷம் பிப்ரவரிமீ 19உ இரவு 10-25 மணிக்குப் பரமபத மடைந்தார். இவரது சரிதம் நம் ஸஹோதரிகளுக்குத் தெரியவேண்டிய தவசியமாதலால் சுருக்கமாக வரைகிறோம்.

இவர் 1866-ம் வருஷத்தில் கொல்ஹாப்பூர் என்ற ஊரில் ஒரு ஏழ்மையான மகாராஷ்டிர பிராம்மண குடும்பத்தி லுதித்தவர். இவர் பம்பாய் எலிபின்ஸ்டோன் காலேஜிலும் பூனாவிலுள்ள தெக்ஷிண காலேஜிலும் வாசித்து பி. ஏ. பட்டம் பெற்றார். பூனாவிலுள்ள பர்கூஸன் காலேஜில் போதகாசிரியராக அமர்ந்து 18 வருஷம் வேலை பார்த்தார். ஷை காலம் பூராவும் அவர் ரஜா எடுத்துக்கொள்ளாமலே இருந்ததால் இரண்டு வருஷம் அவருடைய சர்வீஸில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. தேச சரித்திரம், அர்த்த சாஸ்திரம், ஆங்கிலம், உயர்தரக் கணக்கு இவைகளின் போதகராக இருந்துவந்தார். காலேஜ் தலைமை யதிகாரியைவிட அதிக செல்வாக்குடன் இருந்தார்.

இதன் மத்தியகாலங்களில் லேட் மிஸ்டர் ஜஸ்டிஸ் ராணடேயைத் தமது குருவாக அடைந்து அவரது பிரீதியையும் உதவியையும் பெற்றார். 1887-வருஷத்தில் புனா ஸர்வஜன ஐக்கிய ஸபாவினால் நடத்தப்பட்ட "சுத்பராக்" என்ற ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராக 4 வருஷங்கள் இருந்து அதுமுதல் பொதுஜன நன்மையின் பொருட்டும், இராஜீய மத சம்பந்தமான விஷயங்களிலும் உழைக்கத் தலைப்பட்டார். 1895-ம் வருடத்தில் பம்பாய் மாகாண கான்பரன்ஸ் செக்ரெடரியாகவும், பூனாவில் நடந்த 11-வது இந்தியன் நாஷனல் காங்கிரஸ் செக்ரெடரிகளுள் ஒருவராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார். அதே வருடத்தில் இந்தியர்களுடைய செலவின் பேரில் ராயல் கமிஷனில் சாக்ஷி விசாரணைக்காக இங்கிலாந்துக்குச் சென்றிருந்தார். 1900—1901-ம் வருடங்களில் பம்பாய் சட்ட நிரூபண சபை மெம்பராக 4 வருஷமும், 1902-ம் வருஷத்தில் ராஜப் பிரதிநிதியின் சட்ட சபையில் ஸர் P. மேடா வகித்து வந்த ஸ்தானம் காலியாகவே அந்த ஸ்தானத்திற்கும் இவர் தெரிந்தெடுக்கப்பட்டு அந்த ஸ்தானத்தைப் பனிரண்டு வருஷகாலம் வகித்து வந்திருக்கிறார். இந்திய யூனிவர்ஸிடி சம்பந்தமாக மசோதாக்கள் கொண்டுவரப்பட்ட போதெல்லாம் இந்தியருடைய உயர்தரக்கல்விக்கு இடையூறுகள் ஏற்படாமலும், ஆரம்பப் படிப்பைக் கட்டாயமாக்கி இலவசப் படிப்பாகச் செய்துவிட வேணுமென்றும் ஒரு மசோதா கொண்டுவந்து மிகப் பிரயாசைப் பட்டிருக்கின்றார் என்பது யாவரு மறிந்த விஷயமே. வரவு செலவு திட்டங்களைப் பற்றிப் பிரதி வருடமும் பட்ஜெட் மீட்டிங் நடக்கும்போதெல்லாம் இவர் தமது புத்திசாலித்தனத்தை உபயோகப்படுத்தி யிருப்பது அப்போதப்போதிருந்து வந்திருக்கிற ராஜப் பிரதிநிதிகளும் இந்தியா மந்திரியும் புகழ்ந்துப் பேசியிருக்கிறார்கள். இந்திய ஜன சமூக ஊழியச் சங்கம் ஒன்றை 1905-ம் வருடம் ஜூன்மாதம் 12-ந் தேதி பூனாவிலும் அதன் கிளைச் சங்கங்களை அநேக விடங்களிலும் ஸ்தாபித்திருக்கின்றார்.

1905 ௵ ஸ்ரீகாசியில் கூடிய இந்தியன் நாஷனல் காங்க்ரஸ் மஹாஸபைக்கு ப்ரஸிடெண்டு ஸ்தானம் வகித்தார். படித்த இந்தியர்களின் நன் மதிப்பையும் கவர்ன்மெண்டாரின் அநுஸரணையையும் பெற்றார். ஜனங்களுக்கு வேண்டிய திருத்தங்களைச் செய்யச் சொல்லுகிறதற்கு மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தார்.



லார்டு மிண்டோ ராஜப்பிரதிநிதியாக இருந்தகாலத்தில் வரவு செலவு திட்டத்தைப்பற்றிய 5-வது வருஷத்து தமது அபிப்பிராயங்களை யெடுத்துச்சொல்லி மிலிடெரி விஷயமான செலவையும் இந்தியாவின் பொறுப்பையும் பற்றிப் பேசினார்.

டிரான்ஸ்வாலில் உள்ள இந்தியர்களின் கஷ்ட நிவர்த்தி பண்டை முதன்முதல் ஏற்படுத்தி, மிஸ்டர் காந்திக்குத் தென்னாபிரிக்காவிலுள்ள இந்தியர்கள் விஷயமாக உழைப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்து, தென்னாபிரிக்காவுக்குக் குடியேறுகிற இந்தியர்கள் விஷயமாக ஏற்படுத்தியிருக்கும் சட்டங்களை மாற்றவேண்டு மென்று அங்கே அவர்கள் படும் துயரத்தை விரிவாக எடுத்து 1910-ம் வருஷத்தில் இங்கிலாந்தில் பேசினார். 1912-ம் வருஷத்தில் இந்தியர்கள் அங்கே குடியேறுவதை நிறுத்தியதும், அடிமைச் சாசனம் எழுதிவாங்கும் வழக்கத்தை நிறுத்தும்படி செய்ததும் இவர்தான். தன்னுடைய தேக அசௌக்கியத்தைக் கூட கொஞ்சமும் பாராட்டாமல் இந்தியாவுக்குத் திரும்பி வரும்போது இந்தியர்களுடைய கதி தென்னாப்பிரிக்காவில் எவ்விதமிருக்கிறதென்று தெரிந்துகொள்வதற்காக அங்கு சென்றிருந்தார். அவ்விடத்தில் தமது தேசத்து ஜனங்களால் மிகுந்த சந்தோஷத்துடன் வரவேற்கப்பட்டு அங்கு நடைபெறும் "இந்தியன் ஒபினியன்" என்னும் பத்திரிகையும் இவரது வரவைப்பற்றி மிகவும் பாராட்டி எழுதியிருந்தது. அவ்விடத்தில் தென்னாப்பிரிக்கா மந்திரியையும், மிஸ்டர் காந்தியையும் சந்தித்து அவர் அங்கே செய்திருக்கிற நன்மைகளுக்கோ ரளவில்லை. 1913-ம் வருஷத்தில் தென்னாபிரிக்கா இந்தியர்கள் விஷயமாக இங்கிலாந்தில் எவ்வளவோ அரும் பெருங் காரியங்களைச் செய்து முடித்திருக்கின்றார். 1913-ம் வருஷத்தில் கூடிய பட்ஜெட் மீட்டிங்கில் வரவு செலவு மந்திரியாகிய ஸர் ப்ளீட்வுட் வில்ஸன் இந்தியாவுக்கு உண்மையாக உழைக்கின்ற மிஸ்டர் கோகலே இல்லாததினால், தான் அதைப்பற்றி மிகவும் வியசனிப்பதாக பிரஸ்தாபித்திருக்கிற சில மொழிகளினின்றும் நன்கு புலப்படுகிறது.

இந்தியன் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் சம்பந்தமாக அவருக்கு ஏற்பட்ட பொறுப்பினாலும், சரீர அசௌகரியத்தினாலும் 1914-ம் வருஷம் முதல் இராஜப்பிரதிநிதியின் சட்டசபையில் அதிக வேலை

செய்ய சாத்தியப்படாமலே போயிற்று. இந்திய சமூகத்துக்காக அவர் பட்டிருக்கிற சிரமத்தின் பயன் இப்போது தெரியாவிட்டாலும் கொஞ்ச காலத்துக்குள் நிதர்சனமாய்க் காணலாம். அவர் இந்தியாவுக்குத் திரும்பிவந்தது முதல் தமது தேக சௌக்கிய நிலைமையைப்பற்றி வைத்தியர்கள் சொல்லுவதைக்கூட பொருட்படுத்தாது, தேசாபிமானத்தின் பொருட்டு உழைத்து வருகிற தன்னைப்போன்றவர்களுக்கு இப்போது நேர்ந்திருக்கிற ஐரோப்பிய யுத்தத்தைப் பற்றியும், கவர்ன்மெண்டுக்கும் ஜனங்களுக்கும் ஏற்பட்டிருக்கிற பரஸ்பர சம்பந்தத்தையும், அதன் பொருட்டு அவர்கள் உழைக்கவேண்டிய மாதிரியைப்பற்றியும் போதிப்பதிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்துவந்தார். இவருக்கு இரண்டு புதல்விகளிருக்கின்றார்கள். அவர்களுக்கு இன்னும் கல்யாணமாகவில்லை. இவருடைய ஜேஷ்ட சகோதர ரொருவருடைய பெரிய குடும்பத்தார்களும் இருந்து வருகிறார்கள்.

இம்மஹானின் பிரேதத்தைத் தகனம் செய்வதற்காக மறுநாட் காலை 10-மணிக்குப் பிரயத்தனம்செய்தது, பகல் 1-மணி வரை பிடித்தது. மயானத்துக்குக் கொண்டுபோகும்போது சுமார் 20,000 ஜனங்கள் கூடவே சென்றார்கள். வீட்டிலிருந்து மயானத்துக்குக் கொண்டுபோக இரண்டு மணி சாவகாசத்துக்குமேல் பிடித்தது. வீதிகளில் இருபக்கங்களிலும் திரளான ஜனங்கள் வரிசை வரிசையாக நின்று துக்கங் கொண்டாடினார்கள். கவர்ன்மெண்டு ஆபீஸ்களும், காலேஜுகளும், முனிசிபல் ஆபீஸ்களும், கடைகளனைத்தும் ஒரு மரியாதைக் குறிப்பை யுணர்த்துமாறு அன்று மூடிவிடப் பட்டன. ஸ்ரீமான் திலகர் முதலிய அநேக பிரமுகர்கள் மயானத்துக்குக் கூடவே சென்றிருந்து அவரது செயல்களைப்பற்றி யாவருமறிய எடுத்துக்கூறி இம்மஹானுடைய கொள்கையை ஒவ்வொருவரும் பின்பற்ற வேண்டுமென்பதாகச் சொன்னார்கள். மறுநாள் அவருடைய ஹஸ்தி ப்ரயாகைக்கு சாஸ்த்ரோக்தமாகக் கொண்டு போகப்பட்டது.

* * * * *

---

எளியாரை வலியார் துன்பப்படுத்தக்கூடாது. வலியார் செய்யும் காரியங்களை ஈசன் வெகு கூர்மையாகப் பார்த்து வருகிறார்.—எஸ்கிலஸ்.

# GREENLAND.

By

**Sri Bagirathi.**

## கிரீன்லாந்து தேசம்.

அமெரிக்கா கண்டத்தைச் சார்ந்து உத்தரமகா சமுத்திரத்தில் கிரீன்லாந்து என்று ஒரு பெருந்தீவு இருக்கின்றது. இப்பூமியின் வடவண்டைக் கோடியிலுள்ள தேசம் அதுதான் என்கிறார்கள். அதற்கு வடக்கே பூமியைக் கண்டவர் இல்லை. இப்பூமியில் அதைப் போலவ்வளவு குளிர்பூமியும் வேறு கிடையாது. கிரீன்லாந்து விஸ்தீரணத்தில் இப்பூமண்டலத்திலுள்ள தீவுகளுள் இரண்டாவதாயிருக்கின்றது; அது ஏறக்குறைய இவ்விந்தியாவில் பாதியளவுள்ளதெனக் கண்டிருக்கிறார்கள். கிரீன்லாந்து ஓர் மலைநாடு. அங்கே எக்காலத்திலும் பனி மூடிக்கொண்டிருக்கும். மழைக்காலங்களில் பனிக்கட்டிகளே மழையாகப் பெய்யும். அந்தப் பூமியில் செடிகொடி முதலிய விருக்ஷவகையொன்றும் உற்பத்தியாவதில்லை. அவ்விடத்திலுள்ள சமுத்திரங்களிலும் ஏதோ சிலஜாதி மீன்கள் தவிரமற்ற ஜீவஜந்துக்கள் ஒன்றும் வசிப்பதில்லை.

ஆயினும் சிறிதும் உயிர்வாழ்க்கை யில்லாமலிருப்பது வடமுனைக்கு அடுத்த சில பாகங்களில் மாத்திரந்தான். மற்றப் பாகங்களில் அவ்வவ்விடத்திற் குரிய சில செடிகொடிகள் உற்பத்தியாகின்றன; மிருகங்களும் மனிதர்களும் கூட வாசஞ்செய்கிறார்கள். அவ்வடதேசங்களில் சாதாரணமாயுள்ள மிருகங்கள் கலைமான், ஒருவகைக் கஸ்தூரிமிருகம், நாய் முதலியவைகளாம்.

கிரீன்லாந்தென்பதற்குப் பசுமையான பூமியென்று அர்த்தம். அந்தத் தீவின் கரையோரமெல்லாம் ஒருவகைப் பாசி படர்ந்து பச்சென்றிருப்பதால் அதற்கு இப்பெயர் அமைந்தது. கிரீன்லாந்தில் ஐயிசுலாந்தின் வழியாய்த் தென்மார்க்கு தேசத்தார் குடியேறி வெகுகாலமாய் வர்த்தக வியாபாரங்கள் செய்துவருகின்றனர். அத்தேசத்து ஆதிக் குடிகளுக்கு எஸ்கிமோ என்று பெயர்.

எஸ்கிமோ என்பதற்கு மாமிசங்களைப் பச்சையாகத் தின்பவர்கள் என்பது பொருள். அவர்கள் தாங்களே மனிதர்களுள் முதன்மையானவரென மதித்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய உருவம் குட்டையாய்த் தடித்து, தட்டையான முகமும் கறுத்து

நீண்ட தலைமயிரும் உடையதாயிருக்கும்; உடம்பின் வர்ணம் அழுக்கடைந்த கபிலவருணமாயிருக்கின்றது; ஆயினும் அவர்கள் தங்கள் உடம்பில் படிந்த புகை கரி, அழுக்கு முதலியவைகளைப் பலமாதங்கள் அல்லது ஒருவருஷம் வரையில் கூடக் கழுவாமல் அப்படியே வைத்திருப்பதனால் அவர்களுடைய உண்மையான தேகநிறம் இன்னதென நன்றாய்த் தெரிந்துகொள்வது அசாத்தியமாயிருக்கின்றது. எண்ணெய் விட்டேற்றிய தீபத்தின் வெப்பத்தில் பனிக்கட்டியை உருக்கினால்தான் அவர்களுக்குத் தண்ணீருண்டு. ஆதலின் அங்கே தண்ணீர் பொன்படுகிறபாடு படுவதுபற்றி, அவர்களுக்கு ஸ்நானத்துக்கும் தண்ணீர் அகப்படுவது அருமையாயிருக்கின்றது. பூனை தன் குட்டியை நக்கிச் சுத்திசெய்வது போலவே, எஸ்கிமோ ஜாதியார் தம்பிள்ளைகளை நாக்கால் நக்கி அழுக்கில்லாமல் துடைக்கிறார்கள். இவர்கள் தரிக்கும் உடை நாம் தரிக்கின்ற உடைகளைப்போல கிழிந்து போகத்தக்க அற்பமான நூலாடைகளல்ல; மிகவும் உறுதியான கலைமான் தோல்கள். அந்தத் தோல்களை இவர்கள் குளிரின் உபத்திரவம் தோன்றாதபடி மயிரை உட்புறமாய்த் திருப்பித் தைத்து அணிந்து கொண்டிருக்கின்றனர். தலையில் அணிந்திருக்கும் குல்லாய் தலைமுழுதும் கவர்ந்து கொண்டிருப்பது மாத்திரமேயன்றி முதுகுச்சட்டையோடு கூடச் சேர்த்துத் தைக்கப்பட்டிருக்கின்றது.

எஸ்கிமோ ஜனங்கள் வாசஞ்செய்கின்ற வீடுகள் பனியின் உபத்திரவம் தோன்றாதபடி பாதி பூமிக்குள்ளும் பாதி வெளியேயுமாவது முழுதும் பூமிக்குள்ளேயுமாவது பனிக்கட்டிகளாலேயே கட்டப்பட்டிருக்கும் தூரத்துப்பார்வைக்கு அவ்வீடுகள் பெரிய புற்றுகள்போலத் தோன்றுகின்றன. நமது வீடுகளுக்கு இருப்பதுபோல அவ்வீடுகளுக்கு வாசல்வழிகள் கிடையாது; புகை போக்கிகளுமில்லை. வீட்டில் நேராக வழியிருந்தால் அதைத் திறக்கும்போதெல்லாம் குளிர்காற்று உட்சென்று வீடு வாசயோக்கியமாகாமற் போகுமெனத் தெரிந்து, அந்தக் குடிசைக்குச் சிறிது தூரம் அப்பால் பூமிக்குள்ளே வளைதோண்டி அதையே குடிசைக்கு வழியாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் குடிசையினின்றும் வெளிவரவேண்டுமானால் அந்த வளையின்வழியாய் நெடுந்தூரம் மார்பினால் ஊர்ந்து கொண்டுதான் வரவேண்டும். அந்த வளையின்வழியாக நுழைந்து உள்ளே போவோமானால், அக்குடிசையின் உட்புறமெங்கும் புகைபடிந்து கரேலென்று கறுத்திருக்கும். இவ்விடங்களில் வசிப்பவர்களுக்கெல்லாம் மான்தோல்களே படுக்கைகள். இவர்கள் மான் கொம்புகளை தண்ணீர் குடிக்கப் பாத்ரமாக வழங்குவார்கள். ஸாதாரணமாய் இவர்கள் மீன் பிடித்தே ஜீவிப்பார்கள். கடவுள் ஒருவர் இருக்கிறாரென்பதையும் அவரை தியானித்து நல்லகதியடைய வேண்டிய வழியைத் தேடிக்கொள்ள வேண்டுமென்பதையும் இவர்கள் இன்னும் அறியாதவர்களாயிருக்கிறார்கள்.



**பாகீரதி.**

## DESCRIPTION OF SUBMARINE.

## ‘ஸப்மரின்’ என்ற ஜலக்கீழ் கப்பலின் விவரம்.

கடலில் ஜலத்திற்குக் கீழாக ஓடக்கூடியதான ஒருவகைக் கப்பலுக்கு ஸப்மரின் கப்பல் என்று பெயர். இது யுத்தத்தில் வெகுவாகப் பயன்படுகின்றது. இது உண்டாக்கும் சேதம் பயங்கரமானவை. ராப்பர்ட் பல்ட் என்ற எஞ்சினீர் 1801-ம் வருஷத்தில் இப்படி ஒரு ஸப்மரின் கட்டப்படலாமென்று நிதானித்தார். அப்போது முதலாவது நெப்போலியன் இது சம்பந்தமாகப் பரிசோதிக்கும்படி ஒரு கமிட்டியை ஏற்படுத்தினாரெனினும் அவ்வளவு சிரத்தையை இதில் செலுத்தவில்லை. எஞ்சினீரின் முயற்சியும் பயன்படவில்லை. ஜலத்திற்குக்கீழ் கப்பல் முழுகியபிறகு, ஜலத்திற்குமேல் நடக்கும் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்வதற்கான உபாயம் ஏதும் தோன்றாததால் அந்த முயற்சியே பயன்படவில்லை. கடைசியாக இந்த முயற்சியும் ஒருவாறு அநுகூலமடைந்து, கடலுக்குள் ஜலத்திற்கு அடியில் ஸப்மரின் முழுகியிருக்கும்போது கடலின் மேல் நடக்கும் நடவடிக்கைகளைத் தெரிவிக்க ஒரு அதிசயமான யந்திரமொன்றும் கண்டுபிடிக்கப்படவே ஸப்மரின் கப்பலின் உபயோகம் வெகு பிரயோஜனமுள்ளதென்று தெரிந்தது, பின்னும் கடலின்மேல் இருந்துகொண்டு கப்பல்கள் பீரங்கியைச் சுடுவது போல், ஜலத்திற்கடியிலிருந்து சுடக்கூடியதான ‘டார்பிடோ’ என்ற வெடியும் கண்டு பிடிக்கப்படவே, அந்த டார்பிடோ வெடியை ஸப்மரின் கப்பலானது ஜலத்திற்கடியிலிருந்து சுட்டு எதிரியின் கப்பலை நாசமாக்கக்கூடியதாக உருவகப்படுத்தி, ஸப்மரின் கப்பலை போர்முனைக்கு முக்கியமான கப்பலாக உண்டுபண்ணிவிட்டார்கள். யுத்தக் கப்பல்கள் சாதாரணமாக ஜலத்தின் மேல் நின்று

கொண்டிருக்க, அவைகளுக்கு எந்த விஷயமுமே தெரியவராமல், ஒரு ஸப்மரின் கப்பலானது ஜலத்துக்கு அடியில் வேகமாய்ச் சென்று யுத்தக்கப்பலுக்கு கீழே நுழைந்து ஓடுகையில், டார்பிடோ வெடியை உபயோகித்து கப்பல்களின் அடிப்பக்கத்தை உடைத்து பிளந்தெறிந்துவிடுகின்றது. ஒரு கப்பலின் அடிப்பாகம் நினையாத விதமாகத் திடீரென்று சேதப்பட்டுப்போனால் அக்கப்பலின் கதி என்ன? கடலில் முழுகிப் போகவேண்டியதுதான். இதனால் ஸப்மரின் கப்பலின் வேலை வெகு பயங்கரமுள்ளதென்பதை நாம் அறியலாம். ஆகவே ஸப்மரின் கப்பலானது ஜலத்துக்கு அடியில் இருந்துகொண்டு கடும் போர் விளைத்துக் கனத்தசேதத்தை உண்டுபண்ணிவிடுகின்றது. ஸப்மரின் கப்பல் தனக்கு அவசியம் ஏற்பட்டபொழுது நீருக்கடியில் முழுகி ஓடவும், அவசியமில்லாத காலங்களில் மற்றக் கப்பல்களைப்போல சாதாரணமாய் ஜலத்தின்மேல் மிதந்து செல்லவும் கூடியதாக அமைக்கப்பட்டிருக்கின்றன ஆனால் ஜலத்துக்கடியில் ஓடுகையில் ஜலத்தைப் பிளந்து எதிர்த்துக்கொண்டும், மேலே ஜலத்தின் கனத்தைத் தாங்கிக்கொண்டும் ஓடவேண்டியதாயிருப்பதால் அதன் ஓட்டம் அப்போது கொஞ்சம் குறைவாகத்தான் இருக்கும். ஸப்மரின் கப்பலுக்கு மேலே கோபுரம் போல் நீளமாய்க் கட்டப்பட்டிருக்கின்றன. ஒரு கப்பல் முழுகும்போது அக்கோபுரத்துக்கு வெளியில் உட்கார்ந்திருப்பவர்கள் எல்லாம், அக்கோபுரத்தின் வழியாக உள்ளுக்குப்போய் கோபுரத்தின் மேல் இருக்கிற கதவை மூடிவிடுவார்கள். பிறகு கோபுரத்துக்கு அடியில் உள்ள மற்றொரு கதவையும் மூடிவிடுவார்கள். ஏன் இரண்டு கதவுகள் என்றால், முதல் கதவு ஒருக்கால் அகஸ்மீகமாகத் திறந்துகொண்டு ஜலம் உள்ளேவந்துவிட்டாலும், இன்னொரு கதவு அப்படிக் கப்பலுக்குள் கடல் நீர் சென்றுவிடாதபடி தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

கோபுரத்துக்குமேல் ஒரு கண்ணாடிக் குழாய் இருக்கின்றது. அது ஸப்மரின் கப்பலுக்குக் கண்களைப்போல என்று சொல்லலாம், யுத்தக் கப்பலானது ஸப்மரின்மீது பீரங்கி பிரயோகித்தால் அது மற்ற இடங்களில் படுமே தவிர, மிகவும் நுட்பமாய் வைக்கப்பட்டுள்ள கண்ணாடிக் குழாயில் படாது. ஒருக்கால் அப்படிப் பட்டுவிட்டதோ அந்த ஸப்மரின் தனது கண்களை இழந்ததுபோலத்தான். பிறகு அது அந்த வேலைக்கே உதவாது போய்விடும். ஒரு



ஸப்மரின் கப்பலானது ஜலத்துக் கடியில் முழுகி நிற்கிறபோது, மேலே சொன்ன கோபுரத்தின் மேற்பாகமும், அதில் வைக்கப்பட்டுள்ள கண்ணாடிக்குழாயும் சமுத்திர ஜலத்திற்குமேல் இருந்துகொண்டிருக்கும். அக்கண்ணாடிக் குழாயில் இருக்கிற ஒருவித யந்திரமானது அதிவேகமாய்ச் சுற்றிக்கொண்டேயிருக்கும். ஆகவே அந்த யந்திரத்தின் உதவியால் கடலின்மேல் எப்பக்கத்திலும் நடக்கிற விஷயங்கள், கப்பல் போவதும் வருவதுமான தோற்றங்கள் இவையெல்லாம் நன்றாக அக்கண்ணாடியில் தெரியவரும். அந்தக் கண்ணாடியிலுள்ள தோற்றம் கப்பலுக்குள்ளேயிருக்கிற மற்றொரு கண்ணாடியில் பட்டுப் பிரதிபலிக்கும். ஜலத்துக்குக் கீழ் இருப்பவர்கள் உள்ளேயிருக்கும் கண்ணாடியைப் பார்த்துக் கடலின்மேல் நடக்கும் விவரங்களைத் தெரிந்துகொள்வார்கள். இந்தக் கண்ணாடிக்கு "பெரிஸ்கோப்" என்று பெயர். ஒரு எதிரியின் கப்பலை ஸப்மரின் தாக்கப் பிரயத்தனப்படும்போது அது ஜலத்துக்கு அடியில் மூழ்கிப்போகும். ஆனதால் ஜலத்திற்கடியில் அதைப் பீரங்கிகளால் தாக்கமுடியாது. பெரிஸ்கோப் கண்ணாடியின் மூலமாக இன்ன இடத்தில் எதிரியின் கப்பல் இருக்கிறதென்று தெரிந்துகொண்டு அந்த இடத்தை யணுகி அதன்மீது டார்பிடோ வெடியைப் போட்டு அக்கப்பலை மூழ்கிவிடச் செய்துவிடும்.

ஸப்மரினில் இருக்கிற எஞ்சின், அது ஓடுகிற வேகத்தைக்கொண்டே மின்சார சக்தியையும் உண்டுபண்ணிக்கொள்ளும் பக்குவமுடையதாயிருக்கிறது. ஜலத்துக்குமேல் ஸப்மரின் ஓடுகிறபோது இந்த எஞ்சின் காற்றின் உதவியால் வேலை செய்து ஓட வைக்கிறது. ஆனால் ஜலத்திற்குள் மூழ்கிய பிறகோ, ஜலத்துக்கு அடியில் காற்றேயில்லாததால் எஞ்சின் வேலை நிறுத்தப்பட்டு, எஞ்சின் முன்பு தயாராக்கின மின்சார சக்தியைக்கொண்டு இன்னொரு விதமான மோட்டார்யந்திரம் காற்றின் உதவியில்லாமல் வேலைசெய்ய ஆரம்பித்து ஸப்மரினை ஓட வைக்கிறது. ஸப்மரினுக்குள் மின்சார விளக்குகளும் எரிந்துகொண்டிருக்குமானதால், ஜலத்திற்கு அடியில் இருந்தாலும், பட்டபகலைப்போல் வெளிச்சம் சப்மரினுக்குள் தெரியும். ஸப்மரின் ஜலத்திற்குள் மூழ்குவது ஒரு பெரும் அதிசயமே. ஸப்மரின் கப்பலுக்குமேல் சில அறைகள் இருக்கின்றன. அதில் கடல் ஜலம் செல்லவிட்டு நிரப்பினால், அந்தக் கனத்தால் ஸப்

மரின் ஜலத்திற்குள் போய்விடுகிறது. பிறகு ஜலத்திற்கு மேல் எழும்ப வேண்டுமாயின் ஒரு பம்பு மூலியமாக கீழ் அறைகளில் இருக்கிற ஜலத்தை வெளிப்படுத்திவிடுவதால் கப்பலின் மேல் பளுவு குறைந்ததும் கப்பல் ஜலமட்டத்துக்குமேல் வந்துவிடுகிறது. கப்பலை ஜலத்துக்குள் இவ்வளவு ஆழத்திற்கு அமுக்குகிறதென்றும், இவ்வளவு உயரத்துக்கு மேலெழும்புகிறதென்றும் அறியக் கணக்குகள் ஏற்பட்டிருக்கின்றன.

ஜலத்திற்கு அடியில் சுவாசிக்கத் தகுந்த காற்று இல்லாததால், நல்ல காற்றைப் பீப்பாய்கள் போன்றதில் அடக்கி சப்மரினில் வைத்திருப்பார்கள். 48-மணி நேரம் ஜலத்துக்கு அடியில் இருந்துவிடுவதற்கு எவ்வளவு காற்று வேண்டுமோ அவ்வளவுக்கும் காற்றை அடைத்து வைத்திருப்பார்கள். அதைக் கொஞ்சம் கொஞ்சமாகத் திறந்துவிட்டு உபயோகப்படுத்துவர். காற்று சுவாசிக்கப்பட்டுக் கெட்டுப்போய்விடுவதில் அந்தக் காற்றை வெளிப்படுத்தி அடக்கி வைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இறுக அமுக்கி அடைத்து வைத்திருக்கும் காற்றை கொஞ்சமாகத் திறந்தாலும் அதிக மகாவேகத்துடனும் கப்பல் முழுதிலும் பரவும். அந்தக் காற்றின் வேகத்தைக்கொண்டுதான் மோட்டார் எஞ்சின்கள் ஜலத்தின் கீழிருந்து வேலை செய்கின்றன, டார்பிடோ வெடியும் சுடப்படுகின்றன. ஜலத்துக்கு அடியில் ஸப்மரின்கள் 120-அடி ஆழம் வரையில் அமுங்கலாம். அதற்கு அதிக ஆழத்திற்குச் சென்றால் பிறகு கப்பல் வெளியே வருவதற்கு சங்கடமாகிவிடும். ஒரு யுத்தக்கப்பல் 30-அடி ஆழந்தான் ஜலத்தில் அதன் அடிப்பாகமிருக்கும். ஆனதால் மேலே யுத்தக்கப்பல் நிற்க, அதன் அடியிலே ஜலத்தின் கீழ் சுலபமாக ஸப்மரின் கப்பல் செல்லக்கூடும். ஆரம்பத்தில் பிரிட்டிஷார்தான் ஸப்மரின் கப்பலில் பீரங்கிகளை ஏற்றினார்கள். சப்மரின்கள் சம்பந்தமாக மட்டும் பிரதியொரு தேசத்தாரும் அதன் அமைப்பு முறைகளில் சில விசேஷமான ஏற்பாடுகளைச் செய்து அதன் சக்தியையும் தீவிரத்தையும் பலப்படுத்தி அந்த விஷயங்களை பரம ரகஸியமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மற்ற யுத்தக் கப்பல்களுக்கு இவ்வித மறைப்பான அந்தரங்கமில்லை.

கம்பியில்லாத தந்தி ஒவ்வொரு ஸப்மரினிலும் வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு ஸப்மரினிலும் 30-பேர்களுக்குமேல் இருக்கமாட்டார்கள். பிரதியொரு கப்பலிலும் 15-டன் எடையுள்ள எண்ணெய் வைக்கப்பட்டிருக்கும். ஸப்மரினுக்குள் சமையல் முதலியன செய்துகொள்ள மின்சாரத்தால் தயாரான அடுப்பு இருக்கின்றது.. ஸப்மரினுக்குத் துணையாக இருக்க வைக்கப்பட்டிருக்கிற படகுகள் ஈரத்தை இழுக்காத ஒருவிதத் துணியால் கட்டப்பட்டு பெட்டிபோல் மடக்கி வைத்துக்கொள்ளக்கூடிய அளவினதாகச் செய்து வைக்கப்பட்டிருப்பதால் அதில் 6 பேருக்குமேல் ஏறமுடியாது. ஸப்மரின் கப்பல்கள் ஏராளமாயிருப்பதால் அதற்குத் தனித்தனியாகப் பெயர் கொடுப்பது சாத்தியப்படாததால், நமது ரெயில்வேக்களில் என்ஜினுக்கு நெம்பர் கொடுத்து இத்தனையாவது நெம்பர் என்ஜின் என்று சொல்வதுபோல இத்தனையாவது ஸப்மரின் என்று எண்ணால் கணக்கிடப்படுகிறது—குறிப்பிடப்படுகிறது. மேலே நாம் ஸப்மரின் கப்பலுக்கு தூண் போல உயரமாய் நிற்கிறதென்றும் அதில் கண்ணாடிக்குழாய் இருக்கிறதென்றும் சொன்னோமல்லவா? அது தான் ஸப்மரினுக்கு கண்களைப்போல ஆகும். அதில் பீரங்கி விழுந்து பழுதுபட்டுப்போனால் ஸப்மரினுக்குக் கண்கள் போன மாதிரிதான். இதுகாறும் கூறியவாற்றால், ஸப்மரின் என்ற ஜலத்தின்கீழ் செல்லும் கப்பலைப்பற்றிய விவரங்கள் தெரிதல் கூடும்.

திராவிடாபிமானி.



## SANITATION OF A SCHOOL.

**By**

**A Trained Head Mistress.**

### பாடசாலையின் சுகாதாரங்கள்.

1 சுத்தமான காற்றும் வெளிச்சமும் உள் நுழைவதற்குப் போதுமான சன்னல்களும் வாசற்படிகளும் எதிரெதிராயிருக்கவேண்டும். அசுத்த வாயு ஒரு ஜன்னலால் வெளியேறச் சுத்த வாயு அதற்கெதிர் ஜன்னலால் உள் நுழையும்.

2 சுவாசித்து விட்ட அசுத்த வாயு தனது உஷ்ணத்தினால் இலேசாகி உயரக்கிளம்புவதால் கட்டிடத்தின் கூரையைச் சற்று உயர்த்தி அதனருகில் காற்றுவாரிகளை (*ventilators*) எதிர் எதிராய் அமைப்பது வெகு சுகம்.

3. அசுத்தமான காற்று ஒழிந்து அசுத்தமான வாயு தாராளமாய் உலாவுதற்கு அனுகூலமாகப் பிரதிகாலையிலும் மத்தியானத்திலும் வாசற்கதவுகள், ஜன்னல்கள், காற்றுவாரிகள் முதலிய யாவற்றையும் திறந்து வைப்பது வெகு நல்லது.

4. வெயிலையும், மழையையும், காற்றையும் சமப்படுத்துவதற்குச் சாதனமாகக்கதவுகள் இலைக்கதவுகளாய் (*Venetian shutters*) இருத்தல் நல்லது.

5. கட்டிடத்தைச் சுற்றிலும் தாழ்வாரம் (*veranda*) இருந்தால் சீதோஷ்ண சமனத்துக்கு இன்னும் சகாயமாயிருக்கும். இத்தாழ்வாரம் இருக்கும் பட்சத்தில் மழையிலும் வெயிலிலும் ஜன்னல்களை மூடாமலே காரியத்தை நடப்பித்துக்கொண்டு போகலாம். உள்ளிடம் இருட்டையும் காற்றுச்குறைவையும் அடையாது.

6. அதி உஷ்ண காலங்களில் வேறு எதைச் செய்வதற்குப் பொருளில்லாவிடினும், கட்டிடத்தைச்சுற்றிலும் உள்ள தாழ்வாரம் முதலிய இடங்களில் ஜலத்தை நிரம்பத் தெளித்து வைக்கக் குளிர்ச்சி யுண்டாம். கட்டிடத்துக்குள்ளும் மிதமாய்த் தெளிப்பது சகாயம். உஷ்ணமிகுதி மனோ சக்திகளைக் குன்றச் செய்யும்.

7. கட்டிடத்தை வருடத்துக்கு ஒருமுறை வெள்ளை யடித்து வேண்டிய மராமத்துகளைச் செயது வரவேண்டும். கதவுகள் முதலிய மரச்சாமான்களுக்கு வர்ணம், வார்னீஸ் முதலியவைகள் பூசி வரவேண்டும். ஆயினும் சுத்த வெள்ளை அடிப்பதனால் வெயிற் காலத்தில் வெளிச்சம் அதிகரித்துக் கண்கூசப்பண்ணும் ஆகையால் வெள்ளையுடன் நீலம் முதலிய மங்கலான வர்ணங்களைக் கொஞ்சம் கலந்து பூசினால் வெளிச்சத்தின் கடூரத்தைச் சமனப்படுத்திக் கண்ணுக்கு இதந்தரும்.

8. கட்டிடத்தையும் அதன் சுற்றுவெளியையும் தினந்தோறும் பெருக்கிக் குப்பையைத் தூரக் கொண்டுபோய்க் கொட்டவேண்டும். கூரையிலும் சுவரிலும் ஒட்டடை பிடியாமல் அப்போதைக்கப்போது பெருக்கிக்கொண்டு வரவேண்டும்.

9. கக்கூசு கிணற்றுக்கும் வகுப்புகட்கும் கூடுமான தூரத்திலிருப்பதுடன், அதை இரண்டு வேளையும் ஜலங்கொட்டிச் சுத்தஞ்செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

மாஜி உபாத்தினி.

---

*Interesting Items.*

97

## I
## CONCERNING CHILDREN
## குழந்தைகள் விஷயம்.

**Which is better School or home education?**

**வீட்டுப் படிப்பா** அல்லது பாடசாலைபடிப்பா எது மேலானது?—வீட்டுப்படிப்பு பாடசாலைப் படிப்பைக் காட்டிலும் மிகவும் மேன்மையானது. பாடசாலைகளில் பலவித குணங்களுடைய குழந்தைகள் வருகிறார்கள் ஆகையால் அவர்களில் ஸத்குணமுள்ள குழந்தைகளின் குணங்களை க்ரஹித்து துஷ்டகுணமுள்ள குழந்தைகளின் குணங்களை விலக்குவது குழந்தைகளால் முடியாத காரியம். மேலும் பாடசாலைகளில் குழந்தையின் மூளைக்கு அதிகமாக வேலை செய்ய நேரிடுமாகையால் பாடசாலைக்குக் குழந்தைகளை அனுப்புவது உசிதமல்ல. படித்துத் தெரிந்த பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அவைகளின் போக்குகளை அறிந்து ஸத்பழக்கங்களைக் கற்றுக்கொடுப்பது தான் நலம்.

**Are Potatools an unwholesome food for children ?**

**குழந்தைகளுக்கு உருளைக்கிழங்கு ஆரோக்கியமானவையா:**—புதிதாக வெட்டியெடுத்த உருளைக்கிழங்கு குழந்தைக்கு ஆரோக்கியத்தைக் கொடுக்காது. ஆனால் வெட்டி வெகு நாளான க்கிழங்குகளை நன்றாக வேகவைத்து பிசைந்து கொடுப்பது நலம். தேகத்துக்கும் ஸுகம். நன்றாகப் பிசையாமல் கொடுத்தால் குழந்தைக்கு ஒருவிதவலிப்பை யுண்டாக்கும்.

**Can a child be allowed to take mutton?**

**குழந்தைமாம்ச ஆகாரம் சாப்பிடலாமா?:**—கூடாது. குழந்தை ஜீர்ணகோசம் மாம்ச ஆகாரத்தை ஜீரணம் செய்ய சக்தியற்றிருக்கிறது. குழந்தைக்கு 7 வயது வரையிலும் இலேசான ஆகாரத்தையே கொடுத்து வரவேண்டும். 7 வயதுக்குப் பிறகு மாம்சம் சாப்பிடுகிற குடும்பத்தில் பிறந்த குழந்தை யாயிருந்தால் மாம்ச ஆகாரத்தை கொஞ்சம் கொஞ்சமாக அப்யஸிக்கவேண்டும். குழந்தைமரணத்திற்கு மாம்ச ஆகாரமும் ஒரு காரணமாக இருக்கிறது என்று டாக்டர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

* * *

குழந்தைக்கு தினம் தினம் மாம்ஸ ஆகாரத்தையே கொடுத்து வரக்கூடாது. மரக்கறி பதார்த்த ஆகாரமும் கொடுத்து வரவேண்டும். குழந்தையின் ஆகாரத்தை அடிக்கடி மாற்றுவது நல்லது. ஒரேவிதமான ஆகாரத்தையும் கொடுத்துப் பழக்கக்கூடாது குழந்தை தேகமறிந்து உணவுகொடுத்துவருவதுதான் புத்திசாலித்தனம்.

**Is tea Beneficial to a child ?**

**டீபானம் குழந்தைக்கு ப்ரயோஜனகரமா?:**—குழந்தைக்கு டீபானம் கெடுதி செய்வது மிகவும் பயங்கரம் குழந்தையின் இலேசான நரம்புகளை பலஹீனப்படுத்தி பிறகு ஒரு வேலைக்கு உதவாமல்செய்துவிடும். டீபானத்துக்குப் பதிலாக பால் கொடுக்கலாம் பால் பிடிக்காவிட்டால் கொஞ்சம் ஸர்க்கரையைச் சேர்த்து அருந்துவது நலம். எந்த காரணத்தைக் கொண்டும் டீ கொடுக்கலாகாது.

* * *

ஸாதாரணமாக ஒரு குழந்தைக்கு ஒரு தின்பண்டம் பிடிக்காமலிருக்கலாம். வீட்டிலிருக்கிற எல்லோருக்கும் அது பிடிக்கலாம். அதனால் அக்குழந்தையைக் கட்டாயப்படுத்தியாவது பரிஹாஸம் செய்தாவது அத்தின்பண்டத்தை அக்குழந்தைக்குக் கொடுப்பது பாபகரமாகும். மேலும் அதை தின்பதனால் அக்குழந்தைக்கு வியாதியை உண்டாக்கும் அக்குழந்தை பிடிக்காத தின்பண்டத்தைத் தின்பதனால் ஜீர்ணகோசம் கெட்டு உயிருக்கு ஆபத்துவிளைவிக்கும்.

## II

# DOMETTIC HINTS AND SUGGESTIONS.

## க்ரகத்தியக் குறிப்புகள்.

**Hand shaking.**

**கை துலுக்குவது** :— தற்காலம் ஐரோப்பியர்களுள்ளும் மேனாட்டு நாகரீகப்போக்கை முற்றிலும் அனுசரித்திருக்கிற படித்த இந்தியர்களுள்ளும் கை குலுக்கும் வழக்கம் ஒன்று வழங்கி வருகிறது. புதிதாக ஒருவரை யொருவர் காணும்போது ஒருவருடைய வரவேற்பைக் குறிக்கிறதற்காக ஒருவர்க்கொருவர் ஸந்தோஷத்துடன் கை குலுக்கிக் கொள்வது வழக்கம். ஒரு ப்ரெஞ்சு டாக்டர் கையில் ஒரு இன்சு சுற்றளவுக்கு 80000 விஷப்பூச்சிகள் இருக்கின்றனவென்றும் ஒருவர்க்கொருவர் கை குலுக்கிக் கொள்வதினால் பெருத்த தீமையை விளைவிக்குமென்றும் அறிவிக்கிறார்.

**Is house hold Work mean for girls?**

**பெண்களுக்குக்ருஹக்ருத்யம் இளப்பமா?**—தற்காலம் வயதுமுதிர்ந்து நல்ல தசையிலிருக்கிற ஸ்த்ரீகள் க்ருஹக்ருத்யம் இளப்பமான காரியமென்று நினைத்து தாங்களும் செய்யாமல் தங்களுடைய பெண் குழந்தைகளுக்குக்கூட இளப்பமான கார்யமென்று நினைக்கும்படி இடங்கொடுக்கிறார்கள். பெண்கள் பருவமடைந்த பின் புருஷன் வீட்டில் ஸுகமாய் இருக்கிறார்களா? புருஷனுடைய அன்புக்கு பாத்ரமாயிருக்கிறார்களா? இதுபோன்ற கேள்விகள் ஜனங்கள் கேட்பது ஸஹஜம். தற்காலம் பெண்கள் புருஷன் வீட்டில் ஸுகமாயிருக்கிறதில்லை. அவர்கள் தேகம் மெலிந்து வீட்டில் இருக்கிற ஜனங்களுக்குப் பாரமாகி, வைத்யனுடைய மருந்துக்கு அடிமைகளாகி வ்யாதிகளால் துன்புறுகிறார்கள். தாங்கள் சுத்தமாக யிருக்கிறது கிடையாது. தற்கால யௌவன ஸ்த்ரீகளைப் பார்த்தால் முகத்தில் அழகுகுன்றி இடுப்பு ஒடிந்து முகம் வெளுத்து நல்ல ரக்தமின்மையால் வருந்துகிறார்கள். யௌவன ஸ்த்ரீயானவள் ஒருகுழந்தை பெற்றவுடன் துவண்டுபோய் விடுகிறாள். முக்யகாரணம் வீட்டு வேலையை சிறுவயது முதற்கொண்டு அலக்ஷ்யம் செய்வதுதான். பாலிகைகள் தங்கள் தங்களுடைய வேலைகளை தாங்களே செய்யவேண்டும். பெற்றோர்களும் செய்யச் சொல்ல வேண்டும்.

**What is the best me thod for admini stering medicine to a child?**

**குழந்தைக்கு மருந்து கொடுப்பது எப்படி ?** :—பெரிய குழந்தையாய் இருந்தால் மருந்து கொடுப்பதின் ப்ரயோஜனத்தை எடுத்துச் சொல்லி மருந்து கொடுக்க வேண்டும். பிடிவாதமுள்ள குழந்தையாய் இருந்தால் அக்குழந்தையை மயக்கியாவது அல்லது அதன் மனதை வேறு இடத்தில் வைக்கும்படி யாவது எமாற்றுதல்பிசகானகார்யம். வயதானபிறகு மருந்து கொடுத்தவர்களை அக்குழந்தை அவநம்பிக்கைப் படும்படி நேரிடும். அக்குழந்தையின் பிடிவாதத்திற்கு மருந்தை கட்டாயப் படுத்தி கொடுப்பதுதான் நலம். குழந்தையைக் காலின் மேல் படுக்கவைத்து இருகைகளைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டும், இருகால்களை அழுத்தமாய் அழுத்திக் கொண்டும் மருந்தைக் கொடுப்பதை விடவேறு வழி ஒன்றும் கிடையாது இது முரட்டுத்தனமான வழியென்று சிலர் சொல்லலாம். ஆனால் உயிரோடு வ்யாதியாய் சாகுவதை விட இந்த வழி மேலானது என்று டாக்டர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

## III

# KITCHEN AND COOKERY

## சமையலறையும் சமையலும்.

**Thayir Yadai.**

**தயிர்வடை** :—அழுத்தமான ஒரு கனத்த வெள்ளைத்துணியின் நான்கு மூலைகளையும் கட்டி, பைபோலாக்கி ஓர் மூலையில் தொங்கவிட்டு, அதில் தயிரைக் கொட்டி ஒரு நாளெல்லாம் தொங்கவிட்டிருந்தால், அதன் ஜலமெல்லாம் வடிந்து இறுகலாய்விடும். இப்படி இறுகிய தயிருக்கு கட்டித்தயிர் என்று பெயர். அவ்விதக் கட்டித்தயிரில் 5 பலம் எடுத்து ஈயம் பூசிய தாம்பாளத்தில் போட்டு வைத்துக்கொள்ளவேண்டும். வேர்கிள்ளிய கொத்துமல்லி கால்பலம், காரமில்லாத பச்சைமிளகாய் அரைப்பலம், தோல்சீவிய இஞ்சி அரைக்கால் பலம் இவற்றைச் சிறுதுண்டுகளாக நறுக்கி வைத்துக் கொள்ள வேண்டும். இவற்றையும், 3 பலம் கோதுமை நொய்யையும், காலேயரைக்கால் பலம் பொடி செய்த உப்பையும் ஷை கட்டித் தயிரில்போட்டு, நன்றாய்க் கலந்து பிசைந்து தட்டி நெய்யில் வேகவைத்தெடுத்துக் கொள்ளவேண்டும். தயிர் ஸம்பந்தப்பட்ட பக்ஷணமாதலால், கொஞ்சம் சூடாயிருக்கும் போதே இதைச் சாப்பிடவேண்டும். கோதுமை நொய்க்குப் பதிலாக கோதுமைமாவைச் சேர்ப்பதுமுண்டு.

பருப்புக் குழம்பு :—மூன்றுபடி ஜலங் கொள்ளுகிறதோர் தவலையில், 2-படி நல்ல ஜலம் விட்டுக் காய்ச்ச வேண்டியது. கால்படி துவரம்பருப்பு, அரைபலம் நெய், வீசம்பலம் மஞ்சள்பொடி-இம்மூன்றையும் ஷை ஜலம் கொதித்துக் கொண்டிருக்கும் போது அதில் ஒவ்வொன்றாய்ப் போட்டு இதையும் கொதிக்க ஆரம்பித்தவுடனே மூடி விடவேண்டும். அரைபலம் மிளகாயைக் கொஞ்சம் நெய்யிலாவது எண்ணெயிலாவது பக்குவமாக வறுத்துக்கொண்டு, கால்பலம் கொத்துமல்லி விரை, வீசம்பலம் மிளகு, அரைவீசம் பலம் சீரகம், வீசம்பலம் வெந்தயம், $1\frac{1}{4}$-பலம் கொப்பரைத்துருவல் இவற்றைத் தனித்தனியாகக் கொஞ்சம் நெய்யிலாவது எண்ணெயிலாவது வறுத்துக் கொண்டு, முன்னமே வறுத்து வைத்திருக்கும் மிளகாயோடு சேர்த்துக் கலந்து வெண்ணெய்போலரைத்துக் கொள்ள வேண்டும். ஒன்றரைபலம் புளியை அரைக்கால் பல நல்ல ஜலத்தில் கரைத்து, ஷை சம்பாரத்தை அதில் கலந்து அடுப்பேற்றி ஒன்றேயரைக்கால் பலம் பொடிசெய்த உப்பைப்போட்டுக் கொதிக்க வைக்க வேண்டும். கொஞ்ச நேரத்துக்குப் பின், பருப்பு செம்மையாய் வெந்த பதம் பார்த்துக்கெண்டு, அந்த வெந்த பருப்பைக் கட்டுடன் ஷை கொதிக்கும் புளியிற் கொட்டி நன்றாய்க் கலந்துகொடுத்து, திரும்பவுங் கொதிக்கவிட்டுக் கொஞ்சம் ஜலஞ் சுண்டிய பிறகு அந்தக் குழம்பில் கொஞ்சத்தைக் கரண்டியாலெடுத்து, குழம்பு ஜலம் போலிருந்தால்- முக்காற்பலம் அரிசிமாவை வீசம்படி ஜலத்திற்கரைத்து ஷை குழம்பிற் கொட்டிக் கிளறிக் கொடுத்து, ஒரு கொதி கண்டவுடனே அந்தப் பாத்திரத்தைக் கீழேயிறக்கிவைத்து, அரைபலம் நெய், அரைக்கால் பலம் மிளகாய், பலம் கடுகு இம்மூன்றையுங்கொண்டு ஒரு கரண்டியில் தாளிதம் தயார் செய்து குழம்பிற் கொட்டி, அந்தக் கரண்டியினாற்கிளறிப்பின்பு, ஒரு ரூபா யெடை காயத்தை ஜலத்தில் கரைத்துக் குழம்பில் விடவேண்டும்—விச்வகர்மன்.

# IV

# LAW.

## சட்டம்.

**A Social Reform Case**

ஒரு ஆசார சீர்திருத்த கேஸ்.—ப்ரதிவாதி தமது வீட்டில் ச்ராத்தத்துக்கு உபாத்யாயம் செய்துவைக்க ப்ராமண புரோகிதராகிய வாதியைக் கூப்பிட்டிருந்தார். ஆனால் வாதி அதற்குமுன் ஒரு வீட்டில் விதவா விவாகம் நடந்தபோது அங்கே சாப்பிட்டார் என்று ப்ரதிவாதிக்குத்தெரிய வந்ததன்மேல், அவர் வாதியை ச்ராத்தத்துக்கு வேண்டாமென்று சொல்லிவிட்டார். அதன்மேல் வாதி தம்மை அவமானஞ் செய்தாரென்று ப்ரதிவாதிமேல் கேஸ் கொண்டுவந்தார். கர்நூல் டிஸ்ட்ரிக்ட் முன்ஸீப் வாதி பக்ஷம் 20-ரூபாய்க்கு தீர்ப்பு செய்தார். ப்ரதிவாதி அந்தத் தீர்ப்பின்மேல் அப்பீல் செய்தார். டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் டிஸ்ட்ரிக்ட் முன்ஸிபின் தீர்ப்பை ரத்துசெய்து ப்ரதிவாதி பக்ஷம் தீர்ப்புச் செய்தார். அதன்மேல் இந்தக் கேஸ் ஹைகோர்ட்டுக்கு அப்பீலுக்குப் போயிற்று. ஹைகோர்ட்டார், ஒரு ப்ராமணர் விதவா விவாகத்தில் சாப்பிட்டார் என்று சொல்வது அவரை அவதூறு செய்ததாகா தென்றும், ஜாதிப்ரஷ்டம்செய்யவேண்டியிராத ஜாதி ஆசாரக்குறைவான கார்யங்களை ஒருவர் செய்ததாகச் சொல்வது அவரை அவதூறு செய்ததாகமாட்டா தென்றும் தீர்ப்புச் செய்தார்கள்.

**Adoption.**

ஸ்வீகாரம் செய்துகொள்ளல்:—ஒரு ஹிந்து விதவை ஸ்வீகாரம் செய்து கொள்ளவேண்டி, நெருங்கின பந்துத்வமுள்ள அனந்தரவார்ஸின் ஒரேபுத்ரரை ஸ்வீகாரத்துக்கு கொடுக்கும்படி கேட்டதில் அவர் மறுத்துவிட்டதோடு, விதவை வேறொரு பையனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டால் தமது அனந்தரவார்ஸு பாத்யதை போய்விடுமென்று அந்த விதவை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்வதற்கு ஸம்மதம் கொடுக்கவும் மறுத்துவிட்டார். அதன்மேல் விதவை எட்டின பந்துத்வமுள்ள அனந்தரவார்ஸ் ஒருவருடைய ஸம்மதத்தைப் பெற்று, வேறொரு பையனை ஸ்வீகாரம் செய்துகொண்டாள். அப்படியானால், ஸமீப பந்துவாகிய அனந்தர வார்ஸானவர், விதவையின் குடும்பத்தின் க்ஷேமத்தை கவனிக்காமல், தமது ஸௌகர்யத்தையே கவனித்து, ஸ்வீகாரத்துக்கு ஸம்மதம் கொடுக்க மறுத்தால், தூரபந்துவாகிய அனந்தரவார்ஸின் ஸம்மதம் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்வதற்கு போதுமானது. ஜஞபியானி.

**Illtreatment to a wife.**

மனைவியை குரூரமாக நடத்தல்:—ஸ்வாமி சா[illegible] என்பவன் சக்கிலிகள் வைத்திருக்கும் கத்தியால் தனது மனைவியை கழுத்தில் குத்தின குற்றத்திற்காக க்ருஷ்ண ஜில்லா டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் அவர்களால் 10 வருஷ தீவாந்திர சிக்ஷை விதிக்கப்பட்டான். கேஸின் விபரம். குற்றவாளி தன் மனைவியை குரூரமாய் அடித்துப் பிறந்தகத்திற்குத் துரத்தினான். சில காலம் கழித்து மனைவியை தன் வீட்டுக்குவரும்படி வேண்டவே, அவள் மறுக்க, கையிலிருந்த கத்தியால் குத்தினான். ஹைகோர்ட்டில் அப்பீலுக்கு வர க்ருஷ்ணா ஜில்லாஜட்ஜி விதித்த 10 வருஷ தீவாந்தர சிக்ஷையை 7 வருஷமாக குறைத்து விட்டார்கள்.

# V

# EDUCATION

## வித்யா விஷயம்.

**Free night schools.**

இலவச இராப்பள்ளிக்கூடங்கள்:—பகல்முழுவதும் சிறு குழந்தைகளைக்கூட வேலைக்கு அனுப்பிக் கஷ்ட ஜீவனம் செய்யும் எளிய குடும்பங்களில் பிள்ளைகளுக்குச் சம்பளம் கொடுத்து படிப்பிக்க சக்தியற்றவர்களாயிருப்பதையும் பகற்காலங்களில் பிள்ளைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பக்கூட சாத்யப்படாமலிருப்பதையும் யோஜித்து கோதாவரி ஜில்லா பெத்தாப்பூர் தாலுக்காவில் ஸ்ரீபுரம், சோமவரம், ரெங்கம்பேட்டை முதலான அநேக கிராமங்களில் உள்ள கனவான்கள் அப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு இராக்காலங்களில் சம்பளமில்லாமல படிப்பிக்கிறதற்காக இலவசப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி நடத்துகிறார்கள். இப்போது நுங்கம்பாக்கத்திலும் ஒரு இலவச இராப்பள்ளிக்கூடத்தில் 1000-பெரியமனிதர்கள் படிக்கிறார்களாம். அதில் பல ஜாதி பல தொழில்களிலிருக்கிறவர்கள் வந்து கற்றுப் போகிறார்கள். சென்னப்பட்டணத்தில் சில இடங்களில் ஆண் குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் இலவசப் பள்ளிக்கூடங்களிருக்கின்றன. க்ராமாந்தரங்களில் இப்படியான பரோபகார முயற்சி பரவினால் வெகு நன்மையுண்டாகும்.

**Boy scout movement.**

சிறுவர்களுக்குள் பரோபகார சங்கம்:—எத்தொழிலுக்கும் பால்யப்பயிற்சி அவசியம். பால்யத்திலேயே ஜீவகாருண்யம் போன்ற பரோபகாரத்தன்மையானது அப்பியாஸத்தினால் தான் விர்த்தியாகும். இங்லண்டில் பெண்களுக்குள் பரோபகாரச்சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாடசாலையையொட்டி சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பம்பாயில் கிர்காம்ஹைஸ்கூலில் ஆண் மாணவர்களுக்குள் ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. நல்லவேலை செய்து வருகிறதாக வித்தையிலாகா அதிகாரி தெரிவித்திருக்கிறார். இப்போது ஸ்த்ரீகளுக்கு ஏற்பட்டிருக்கிற ஹைஸ்கூல்களிலும் மற்ற பாலிகா ஸ்கூல்களிலும், பரோபகார்ச்சங்கங்கள் ஏற்படுவது நலம்.

* * *

**Cannanore Government School.**

கண்ணனூரில் ஒரு கவர்ன்மெண்டு ஹைஸ்கூல்:—ஸ்வதேசாபிமானி என்னும் பத்ரிகையின் அதிபரின் பார்யை ஸ்ரீமதி B கல்யாணி அம்மாள் B. A, உபாத்தினியாக 100 ரூ சம்பளத்தில் நியமிப்பட்டிருக்கிறார்கள். படித்த இந்தியஸ்த்ரீகள் ஒவ்வொரு பாடசாலைக்கும் கிடைப்ப தாயிருந்தால் மட்டும் வயது வந்த பின்னும் வித்யாசாலைக்குப் போய் பெண்கள் உயர்ந்தபடிப்பு படிக்க ஹைஸ்கூல்கள் ஸ்தாபிக்க ஊக்கமுண்டாகும்.

**Daily Expenditure in wars.**

யுத்தத்தில் வல்லரசுகளின் தினச் செலவு;—யுத்தத்தில் கைகலந்திருக்கும் வல்லரசுகளுக்கு ஒரு தினத்திற்கு ஸுமார் 92,000,000 சவரன் செலவாகிறதாம்.

| விவரம். | சவரன். |
|---|---|
| க்ரேட் பிரிட்டன் | 10,00,0,00 |
| ப்ரான்ஸ் | 18,00,0,00 |
| ருஷ்யா | 1800,00,0. |
| ஜர்மனிக்கும் | 46,000,00 |
| ஆஸ்த்ரியாவுக்கும் | 42,00,000 |
| பெல்ஜியம் ஸர்வியா துருக்கி ஜப்பான் முதலிய தேசங்கள், | 400000 |
| | 92,00,000 |

# WOMAN'S WORLD.

## ஸ்த்ரீப்ரபஞ்சம்.

### A Wise Wife.

ஒரு விவேகமுள்ள மனைவி:—ஸ்திரீகள் விவேகமற்றோர் என்பது பலர் எண்ணம், அவர்கள் சொற்களுக்கு கனம் கிடைப்பதில்லை. புருஷன் புத்தி தள்ளாடுகையில் அயலானையும் நாடினும் அகத்திலிருக்கும் இல்லாளிடம் அதைப்பற்றி ஒரு மொழி கூறுவதோ, அவள் ஆலோசனை கேட்பதோ அவனது அந்தஸ்திற்கு இசையாது. அவள் விவேகத்தில் அவனுக்கு அடிக்கடி நம்பிக்கையுமில்லை ஆயினும் ஆபத்தில் அடிக்கடி அவள் விவேகத்திற்கு இணையேது? இவ்வகுப்பைச் சேர்ந்தோர் பூர்வகாலத்தில் தெக்கோவா நாட்டிலும் ஆபேல்களிலும் மாத்திரமல்ல இருபதாம் நூற்றாண்டிலும் நமது பூமியின் குணர்த்த கோளத்திலுங் காணப்படுகின்றனர்.

உல்லியம் ஒரு கன்ட்ராக்டர் :— அவர் ஒரு பெரிய இயந்திரசாலைக்கு புகைக்குழாய் கட்ட ஏற்பட்டார். அதன் உயரம் 75 அடி. குழாய் கட்டி முடிந்தது. அதன் அழகையும் உயரத்தையும் பார்க்கப் பலர் அங்கே கூடினர். இறுதியாக அதன் சாரத்தைப் பிடித்தனர். அவ்வேலையை உல்லியம் குழாவின் மேலுச்சியில் நின்று மேற்பார்வையிட்டனர். யாவரும் இறங்கினர். அவர் கீழ் இறங்கவோ எப்பொழுதும் போல குழாயின் உச்சியிலிருந்து கயிறு கட்ட மறந்தனர். இதைக் கண்டு ஜனங்கள் யாவரும் திகைத்தனர். உல்லியத்திற்கும் மாணத்திற்கும் தம்மிலே தூரம் ஒரு அடி மாத்திரம். இதைப் பார்த்துக் கொண்டு நின்ற சிறு மகன் வீட்டிற்கு விரைந்தனன். அவனுக்கு தன் தாயாரின் விவேகந் தெரியும். அவன் வீட்டிற்குள் பாய்ந்து: அம்மா, அம்மா, தகப்பனர் குழாயிலிருந்து குதிக்கப்போகிறார். கயிறு கட்டாததால் இறங்க ஏது வில்லை. சாரம் பிரித்தாயிற்று: என்றனன். தாயார் சற்று நடுங்கினள். பிற்பாடு குழாய்க்கு நேரேவிரைவாய்ப் போனள். திரள் ஜனம் அனுதாபத்துடன் அவளைப் பார்த்தது. ஆலோசனை சொல்வார் யாருமில்லை. உல்லியமோ கால் தடுமாறித் தாழப்போகிறவர்போல நின்றனர். அவள் குழாயின் சமீபத்திலே வந்தாள். மேலே பார்த்தாள். சைகைகாட்டி பயப்பட வேண்டாம். அமைதவாய் நில்லுங்கள்: என்றாள். ஜனங்கள் அவள் அமைதலைப் பார்த்து ஆச்சரிய மௌனத்துடன் நின்றனர். உங்கள் காலிலிருக்கும் சப்பாத்தை நீக்குங்கள்: என்றாள். நீக்கி தரையிலே போட்டார். உங்கள் மேல் ஜோடு கம்பிளி நூலாலே செய்தது. அதில் ஒன்றைப் பிரித்து அதில்ஒரு சிறு சாந்துக் கட்டியை இறக்குங்கள் என்றாள். அப்படியே செய்தார். உடனே பக்கத்திலே நிற்போரைப் பார்த்து அதிலே ஒரு சிறு நூல்கயிற்றைக் கட்டி மேலே அனுப்பக் கேட்டாள். நூல்க்கயிறு மேலே போயிற்று. அதன் வழியாய் சற்றுப் பெரிய கயிறு போயிற்று. அதன் மூலமாய் ஒரு சரியான பெருங்கயிறு குழாய் உச்சியை எட்டிற்று. அதை உல்லியம் குழாயின் உசசியிலே கட்டி அதன் வழியாய் இறங்கி தனது மனைவியை இரு கரங்களால் தழுவி முத்தமிட்டனர். இவளல்லோ விவேகமுள்ள மனைவி! மனைவிமாரே, விவேகத்தைக் கைவிடாதிருங்கள்.





# WIT & HUMOUR.

## தமாஷ்.

### A Witty conversation.

வெகு நாளாய் ஒருவரை விட்டொருவர் பிரிந்திருந்த இரண்டு சிநேகிதர்கள் ஒரு நாள் தற்செயலாய்ச் சந்தித்துக்கொண்டார்கள் அவர்களிருவருள் ராமன் கொஞ்சம்மந்த புத்தியுடையவன் ; அதிகப்படிப்புங் கிடையாது. கிருஷ்ணனே அதிமேதாவி. விசேஷமாய் ஆங்கிலம் படித்துச்சட்ட பரீக்ஷை முதலியதேறி பாரிஸ்டர் உத்தியோகத்திலிருப்பவன். இருவரும் பின் வருமாறு தர்க்கித்துக்கொண்டார்கள்.

ராமன்.—என்னடா ! எய் ! அதிகமாய்ப்படிச்சுட்டாத்தான் என்னடாவே! இவ்வளவு மகிமையாவுனக்கு !

கிருஷ்ணன்.—என்னமோ சொல்லுகிறாயே ! எனக்கு ஒன்றுந்தெரியவில்லையே !

ராமன்.—எண்டா போட்ட கடுதாசுக்குக்கூடவா பதில் போடமுடியல்லை.

கிருஷ்ணன்.—எனக்கு உன்னிடத்திலிருந்து ஒரு கடிதமும் வரவில்லையே. வந்தால் பதில் போடாமலிருப்பேனா? நீ கடிதமெழுதாமலிருந்தாலுங்கூடப்போனல் போகட்டு மென்று நேற்று டிஸம்பரில் ஒன்று எழுதியிருந்தேனே !

ராமன் :—எனக்கு ஒன்றும் வரவில்லையே !

கிருஷ்ணன் :—வராம லெப்படியிருக்கும்

ராமன் :—(யோசிக்கவே) ஒருக்கால் நீ அட்ரஸ எழுதாமல் போட்டு விட்டாயோநான்போட்ட லெட்டரில் நான் அட்ரஸ எழுதவில்லை அதனால் தான் கேட்கிறேன்.

### An Intelligent Boy.

ஒரு புத்திசாலி பையன் :—(1) ஓர் நாள் மாலையில் தெருவில் சில பிள்ளைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். கிட்டு என்றபையன் தன் கையில் தேன்குழல் வைத்துக்கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தான். ராமுடு என்றமற்றொரு பையன் கையில் 'லாடு' இருந்தது. கிட்டுவுக்குலாடுவில் அசாத்தியப் பிரியமானதால் அவன் ராமுடுவைபார்த்து "அடே! நான் ஒரு புதிர்போட்ரேன். நீ அதை அவுத்துட்டாக்கெ உனக்கு என் கையிலிருக்கே இதைக் கொடுத்துட்ரேன். இல்லாட்டா நீ உன் கையிலிருக்கிறதை எங்கிட்டே கொடுத்துடணும்" என்றான். ராமுடு சரி என்றொப்புக் கொண்டவுடன் கிட்டு:—"நீ ஒருதமிழ் வார்த்தை சொல்லவேணும். அதை முதலிருந்து வாசித்தாலும் கடைசியிலிருந்து வாசித்தாலும் அது ஒரே வார்த்தையாய்த் தானிருக்கணும். அப்படி ஒரு தமிழ்வார்த்தை சொல்லேன்" என்றான். ராமுடு இன்னது சொல்வதெனத் தெரியாமல் முழித்தான். ராமுடு :—எனக்குத் தெரியவில்லை. நீ சொன்னக்கே இந்தப் பக்ஷணத்தைக் கொடுத்துட்ரேன்" என்றான். கிட்டுகொல் லென்று சிரித்துவிட்டு எய் ! அந்தப் பேரை கேட்டவர்கள் சிரிப்பார்களடா. மறுபடியும் யோஜித்துப்பாரடா" என்றான். அவனுக்குத் தெரியாததால் கிட்டு" அந்தப் பெயர். "விகடகவி" என்றான். ராமுடு தன்வாக்கு தவறாமல் பக்ஷணத்தைக் கொடுத்து வெறுங்கையனானன்.

S. R.

## VIII

## EVENTS OF THE MONTH.

### மாஸ வர்த்தமானம்.

---

**பிப்ரவரி, மார்ச்சு 1915.**

பிப்ரவரி௴ 19-ந் தேதி. இன்று இரவு புனாவில் 10-25 மணிக்கு இந்திய தேசாபிமானியாகிய ஸ்ரீயுத கோகேல் அவர்கள் தம்முடைய 49-வது வயதில் பரமபதமடைந்தார். அவருடைய சரிதம் வேறுபக்கத்தில் காண்க.

பிப்ரவரி௴ 20-ந் தேதி. இன்று சென்னை ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த ஸமாஜத்தார் காலம்சென்ற உத்தம தேசாபிமானியான ஸ்ரீயுத கோகேல் அவர்கள் மரணத்தைக் குறித்து துக்கம் பாராட்டி அவருடைய குடும்பத்தாருக்கு அனுதாபத் தந்தி அனுப்பினார்கள்.

பிப்ரவரி௴ 21-ந் தேதி. இன்று மாலை மதுரை இந்துமாதர் ஐக்கிய சங்கத்தின் இரண்டாவது வருஷோத்ஸவம் நடந்தது. ராமனாதபுரம் ஜட்ஜி மிஸ்டர் U. L. வெங்கடராமய்யாவின் மனைவி அக்ராசனம் வகித்தார்.

பிப்ரவரி௴ 26-ந் தேதி. இன்று பெரிய காஞ்சீபுரத்தில் ஸ்ரீ காஞ்சி மஹிளபரிஷத்தின் வருஷோத்ஸவம் நடந்தது. கனம் ஜட்ஜ் டி. வி. சேஷகிரி அய்யரின் பார்யை ஸ்ரீமதி கல்யாணி அம்மாள் அவர்கள் அக்ராஸனம் வஹித்தார்.

மார்ச்சு௴ 6-ந் தேதி. இன்று மாலை 4 மணிக்கு சென்னை ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்தில் ஸ்ரீமதி முருகாம்பாள் ஸ்த்ரீகளின் தற்கால நிலையைப்பற்றிப் ப்ரசங்கித்தார்.

மார்ச்சு௴ 13-ந் தேதி. இன்று ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்தில் மாலை 4 மணிக்கு வேதாந்த ரஹஸ்யத்தைப்பற்றி ஸ்ரீமதி சாந்தானந்த மௌனி ப்ரசங்கம் செய்தார்.

மார்ச்சு௴ 20-ந் தேதி. திருவல்லிக்கேணி ஹிந்து மாதர் லக்ஷ்மிவிலாஸ ஸபையில் ஜட்ஜ் சேஷகிரி அய்யரின் பார்யை ஸ்ரீமதி கல்யாணி அம்மாள் அச்சபையின் பாலப்பெண்களுக்காக 'கேம்ஸ்' வாங்கி உபகரித்து அதைத்திறந்து வைத்தார்.



# பெண் கல்வி.

---

## விஷய சூசிகை—எப்ரல்௴ 1915.


I. கீதத்திரட்டு.

- i. ஹரிச்சந்திர நாடகத்தும்மி.

II. ப்ரபஞ்சப்போக்கு.

- i. ஹிந்து மாதர்லக்ஷ்மி விலாஸ ஸபை—ஹிந்து ஸ்த்ரீகளின் கல்வி—'மதராஸ்' ஆஸ்பத்ரிக்கப்பலும் கூனூர் அன்டோனி செகண்டரி ஸ்கூலும்—கப்பற் படை.

III. விசேஷ வ்யாஸங்கள்.

- i. ஸ்த்ரீகளும் ஜனசார லக்ஷ்யங்களும்—ஸ்ரீமதிஎம். லக்ஷ்மி அம்மாள்.
- ii. ஸ்த்ரீகளும் ஜீவஹிம்ஸை நிவாரணமும்—மிஸ்டர் ; உருத்திர கோடீஸ்வரன்.
- iii. கூடற் சுரங்கங்கள்—ஜனாபிமானி.
- iv. விக்ரமார்க்க ராஜாவும் பக்கிரியும்—ஸ்ரீமதி வாலாம்பாள் அம்மாள்.
- v. இளமைப்பழக்கம்—மிஸ்டர் ரெங்கஸாமி அய்யங்கார்.

IV. விசேஷக் குறிப்புகள்.

- i. குழந்தைகள் விஷயம்.
- ii. க்ரகத்தியக் குறிப்புகள்.
- iii. சமையலறையும் சமையலும்.
- iv. சட்டம்.
- v. வித்யா விஷயம்.
- vi. ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.
- vii. வேடிக்கை.
- viii. மாஸ வர்த்தமானம்.

THE

# FEMALE EDUCATION

AN ILLUSTRATED MONTHLY MAGAZINE

# பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு மாதப் பத்ரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

பத்ராதிபர்:
ஸஹோதரி ஆர். தாயாரம்மா.

மானேஜர்:
அ. சேஷாத்திரி சர்மா.

Vol. 4. தொகுதி 4. } இராக்ஷஸஹு சித்திரைமீ, April 1915. } No. 7. பகுதி 7.

## The "Female Education."

An Illustrated Tamil Journal with the object of enlightening and elevating ladies. It has got a long list of eminent gentlemen and ladies as contributors.

| | Subscription. | Advertisement per page. |
|---|---|---|
| Yearly .. | 2—8—0 | 72—0—0 |
| Half yearly | 1—8—0 | 40—0—0 |

Special charges for title pages.

**Manager,**
**The "Female Education",**
**Madras, E.**

## "பெண் கல்வி."

ஸ்த்ரீகள் அபிவ்ருத்தியைக்கருதி நடத்தப்படும் பத்ரிகை. சித்ரஸஹிதமாய் வெளிப்படும். இதற்கு ப்ராபல்யமான ஸ்த்ரீகளும் புருஷர்களும் வ்யாஸம் எழுதுகிறார்கள்.

| | சந்தா. | விளம்பரசார்ஜ் 1-பக்கம். |
|---|---|---|
| வருஷம் | 2—8—0 | 72—0—0 |
| 6 மாதம் | 1—8—0 | 40—0—0 |

டைடில் பேஜ்களுக்கு ப்ரத்யேகமான சார்ஜ்.

மானேஜர்,
"பெண் கல்வி" ஆபீஸ்,
சென்னை, E.



# ANTHEM ANTHOLOGY

# கீதத்திரட்டு.

## ஹரிச்சந்திரன் சரித்ரக் கும்மி.

ஸ்ரீமதி சுந்தரம்மாளால் பாடப்பட்டது.

---

### 1-வது கட்டம்.

விளங்குந்தோப்பில் உதித்தவரே என்ற மெட்டு.

பூமிபுகழும் அயோத்தி மாநகரில்
புண்யஹரிச்சந்திரன் சரித்திரத்தை
வெகுசந்தோஷமாகவே நானுரைக்க
சரஸ்வதியே எந்தன் நாவில்வாராய். (1)

தேவலோகத்திலே இந்திரனும்
வெகுதிரமாக அரசுசெய்யும்பொழுது
தேவர்முனிவர் புடைசூழ
தேவேந்திரன் கொலுவீற்றிருந்தான். (2)

தும்புருநாரதர் வீணைமீட்ட
ரம்பைதிலோர்த்தமை நாட்டியமாட
சந்தோஷமாகவே இந்திரராஜனும்
சாதுர்யமாய் கொலுவீற்றிருந்தான். (3)

இந்தவிதமாய் இருக்கும்போது
ஏற்றவசிஷ்டரை பார்த்துமவன்
பூலோகந்தனில் பொய்மொழிஉரையாத
புண்யவரசர்கள் உண்டோவென்றான். (4)

---

### 2-வது கட்டம்.

பாரளந்தார் திருவடியை என்ற மெட்டு.

இந்திரனும் கேட்கலுமே
வசிஷ்டர் சொல்லுவார்
வாருமையா இந்திரனே
வகையுடனே சொல்வேன். (1)

அயோத்திநகர் தன்னையாளும்
  அரிச்சந்திர ராஜன்
சத்யமுறை தவறாமலே
  தானிருக்கான் ஐயா. (2)

திருச்சங்கு மைந்தனவன்
  அரிச்சந்திர ராஜன்
திறமுடனாய் அயோத்திநகர்
  ஆளுகிறான் ஐயா. (3)

பரதாரம் விரும்பாதவன்
  குருமொழி கடவாதோன்
நரர்வாழும் உலகில்வெகு
  கீர்த்தியுள்ளோன் ஐயா. (4)

வசிஷ்டருடைய வசனங்கேட்டு
  நாரதரும் சொல்வார்
இன்பமுடன் வசிஷ்டருக்கு
  வந்தனம் செய்யுங்கள். (5)

சொன்னவுடன் கௌசிகரும்
  கோபமிக அடைந்து
அரிச்சந்திரன் சத்யனென்ற
  அழகை என்னசொல்வேன். (6)

ஒருநாளுக் காயிரம்பொய்
  உறுதியாகச் சொல்வன்
அவனைசத்யனென்று சொன்ன
  வசிஷ்டரை என்சொல்வேன். (7)

பந்தயங்கள் பேசிமுனி
  பாங்குடனே எழுந்து
வேகமாக அயோத்திநகர்
  விரைவுடனே வந்தார். (8)

---



# PROGRESS OF THE WORLD
## ப்ரபஞ்சப்போக்கு.

**The Hindu Ladies Laxmi Vilas Sabha.**

ஹிந்துமாதர் லக்ஷ்மிவிலாஸ ஸபை:—1910ஸு டிஸம்பர்மீ 17-ந் தேதி ஸ்ரீமதி எம். லக்ஷ்மி அம்மாள் அவர்கள் மேற்கண்ட ஸபையை ஸ்தாபித்தார். ஸபையின் முக்யநோக்கம், ஸ்த்ரீகளுக்கு இதிகாசங்களிலிருந்து ஸத்விஷயங்களை ப்ரஸங்கமூலமாக போதித்தல்; ஸ்த்ரீகளின் அபிவிருத்திக்குரிய பலகார்யங்களை ஸாத்யப்பட்டவரையில் செய்தல். இந்த ஸபையில் ஸுமார் 50 மெம்பர்கள் வரை இருக்கின்றனராம். இதன் அக்ராஸனாதிபதி ஸ்ரீமதி எம். லக்ஷ்மி அம்மாள் தேகச்ரமம் பாராமல் ஸபையின் அபிவ்ருத்திக்கே பாடுபட்டு வருகிறார். ப்ரதிசனிக்கிழமையும் அக்ராஸனாதிபதி காலக்ஷேபமாவது அல்லது ப்ரஸங்கமாவது செய்து வருகிறார். மெம்பர்கள் ச்ரத்தையோடு ஸபைக்கு வருகிறார்கள்.

சென்றமீ 25-ந் தேதி முதல் ஏப்ரல் 3-ந் தேதி வரையில் 10-நாள் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம், ஆனந்தராமாயணம், அத்புத ராமாயணம் முதலிய அநேக ராமாயணங்களை அனுஸரித்து ஸ்ரீராம கதையை கதாரூபமாக உபவாத்யங்களுடன் திருவல்லிக்கேணி தேரடிவீதி 21 நெ. இராம கிருஷ்ண விலாஸத்தில் பத்து காலக்ஷேபமாக நடத்தினார். சென்னையிலுள்ள ப்ரபலஸ்த்ரீகள் வந்திருந்து ஸ்ரீராமபட்டாபிஷேகத்தை நடத்திவைத்தார்கள். ஸ்ரீராம கதையை கதாரூபமாக ஸ்த்ரீகளுள் நடத்தத்தேர்ந்தவர் ஸ்ரீமதி எம். லக்ஷ்மி அம்மாளைத் தவிர்த்து வேறு ஒருவரும் முன்வரவில்லை. ஸ்ரீலக்ஷ்மி விலாஸஸபையின் மெம்பர்கள் பாக்யசாலிகள். ஸபையின் அக்ராஸனாதிபதியாகிய ஸ்ரீமதி லக்ஷ்மி அம்மாளுக்கு அச்சபை மெம்பர்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கவேண்டும்.

**The Hindu Female Education.**

ஹிந்து ஸ்த்ரீகளின் கல்வி:—கல்கத்தாவில் 1914ஸு செப்டம்பர்மீ 10-ந் தேதி ஹிந்து ஸ்த்ரீகளின் கல்வி எவ்வளவு தூரம் விருத்தியடைந்திருக்கிறதென்றும், எப்படி இனி விருத்திபண்ணலாமென்றும் யோஜிக்க, ஸர்க்கார் ஒரு கமிட்டி ஏற்படுத்தினார்கள்

அந்தக்கமிட்டிக்கு செக்ரெடரி மிஸஸ் குமினிதாஸ் என்னும் மாது இவர் கல்கத்தாவிலுள்ள ஜனப்ரதிநிதிகளையும் வெளியூர்களிலுள்ள பெரிய மனிதர்களையும்கண்டு யோஜித்ததுமன்றி, தேர்ந்த ஸ்த்ரீகளின் அபிப்பிராயங்களை எடுத்து ஒரு ரிபோர்ட் ஸர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்.

அந்த ரிபோர்ட்டின் ஸாராம்சமாவது: (1) பெண் பாடசாலைகளுக்கு ஸ்த்ரீ உபாத்தினிகளேயிருக்கவேண்டும்; (2) வேலைக்காரர்களாக புருஷர்களை நியமிக்கலாம்; (3) பெண்பாடசாலைகளிலிருந்து நீங்கிச்சென்ற கல்யாணமான ஸ்த்ரீகள் தக்க இல்லாளாகும்படியும், புருஷனுக்குத் தகுந்த துணைவிகளாகும்படியும் அவர்களுக்குவீட்டுப்படிப்புகொடுக்கவேண்டும்; (4) விதவைகளுக்குத்தனியான டிபார்ட்மெண்டுகள் ஏற்படுத்தி அவர்களுக்கு தையல், பாய் பின்னல் முதலிய தொழில்களைக் கற்றுக்கொடுக்கிறதுமன்றி உபாத்தினிகளாகும்படியும் தாதிகளாக ஆகும்படியும் படிப்பு கற்பிக்கவேண்டும்.

மிஸஸ் குமினிதாஸ் தாம் ஒப்புக்கொண்ட வேலையை திருப்திகரமாக முடித்துவிட்டார். இனி ஸர்க்கார், ஸ்த்ரீகளின் கல்வி விஷயத்தில், மிஸஸ் குமினிதாஸ் ரிபோர்ட்டுபடி நடப்பார்கள் வங்காளத்தில் ஸர்க்காரும் ஜனங்களும் ஸ்த்ரீகளின் கல்வி விஷயத்தில் மிகுந்த ஊக்கம் செலுத்திவருகிறார்கள். நம் சென்னை கவர்ன்மெண்டாரும் ஒரு கமிட்டிஏற்படுத்தி ரிபோர்ட் அனுப்பும்படி செய்வது நலம்.

**The 'Madras' Hospital Ship and St. Antony's Secondary School.**

'மதராஸ்' ஆஸ்பத்திரிக்கப்பலும் ஸெண்ட் அன்டோனி ஸகிண்டரி ஸ்கூலும்:—கூனூரிலிருந்து ஸ்ரீமான் சிவத்யாநாநந்தன் இம்மாதம் 6-ந் தேதியில் எழுதுகிறார்.

ஏப்பிரல்மீ 6-ந் தேதி குன்னூர் ஸெண்ட் அன்டொனி ஸெக்கண்டரி ஸ்கூல் உபாத்தியாயரும் மாணவரும் Revd. Father L. Bechu என்பவரது அக்கிராசனத்தின் கீழ் சென்னை ஆஸ்பத்திரிக்கப்பலுக்கு உதவிசெய்யும் விஷயத்தைப்பற்றிப்பேசக்கூடினார்கள். அக்கிராசனதிபதி பின்வரும் மனவுருக்கமான பிரசங்கத்தைச் செய்தார். அது வருமாறு:

"நான் உங்களை ஒரு தேசாபிமானத்தை யுணர்த்தும் தருமகாரியத்தைச்செய்ய அழைக்கிறேன். தேசாபிமானமும் தருமசிந்



தையும் ஒரு நாட்டுக்கும், மனிதனுக்கும் அருமையாய்க்கிடைக்கக்கூடிய இரண்டு நற்குணங்களாம். உங்களுக்குச் சுதேசமும் எனக்கும் சுவீகாரமுறைமையிற் சொந்தமான தேசமும் ஆகிய இவ்விந்தியா, இவ்வரும் பெருங்குணங்களோடு முன்னிலும் பன்மடங்கு அதிகமாக இப்பொழுது பிரகாசிக்கின்றது. ஐரோப்பாக்கண்டத்தில் நடக்கும் யுத்தத்திலும் அதன் வீரமரியாதைகளிலும் அது பங்கேற்றிருக்கிறது. இந்திய மாதாவின் சிறுவர் கூட்டுறவரசுகளின் சார்பில் நின்று ஒரு நியாயத்தை நிலைநிறுத்த வீரத்தோடு போர்புரிகின்றனர். கூட்டுறவரசு என்பதென்ன? ஒன்று பட்ட நாட்டார்களின் சேர்க்கை யென்பதாம். எதில் ஒன்றுபட்டவர்கள்? தேசாபிமானத்தும் ராஜபக்தியிலும், நியாயத்திலும், ஆத்மபரித்தியாகத்திலும், ஒன்றுபட்டவர்களாம். எதற்காக ஒன்றுபட்டவர்கள்? அக்கிரமமாகச் சண்டைதொடுத்தாரைத் தாழ்த்தவும், பேரவாவோடு நம் வீடுகளைப் பறிக்கவந்தவருடைய உபத்திரவத்தைத் தடுத்துக்காக்கவும், நமது பொது சுவாதந்திரியங்களைக் காப்பாற்றவும் ஒன்றுபட்டவர்களாம்.

"நமக்கு முன்னணியில் நின்று போர்புரியும் பாக்கியமும் (V. C.) விக்டோரியாகிராஸ் பெறும் சிலாக்கியமும் கிடைக்காவிடினும், போர்முகத்துக் காயப்பட்டு வருந்தும் நம் சகோதரர்களுடைய சுகத்துக்கும் கஷ்டநிவர்த்திக்கும் நம்மாலான பணவுதவியையாவது செய்யும் சுதந்தரத்தை யடையலாமல்லவா? பெருந்தன்மைவாய்ந்த தேசங்களின் மேன்மைக்குணங்களாகிய தேசாபிமானம், தருமம் என்னும் தன்மைகளை வெளிப்படுத்த நல்ல சமயம் நமக்கு இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிறது. நம் நாட்டுத்தோழர் தீரத்தோடு சண்டைசெய்து நமக்காகவும், நாட்டுக்காகவும், சுயேற்சைக்காகவும் பிராணனைக் கொடுக்கும்போது நம்மாலானவரையில் நமது சௌகரியங்களிற்கூடச் சிலவற்றைக்குறைத்துக்கொண்டு உதவிபுரிய முன் வருவதுதான் கவுரவமானது."

இவ்வுருக்கமான பிரசங்கத்தின் பின்பு உபாத்தியாயர்களும் பாடசாலைச் சிறுவர்களும் தங்களாலான சிறு வுதவியை மாதந்தோறும் செய்வதாக ஒப்புக்கொண்டு ஆறுமாதகாலத்துக்குத் தங்களைக் கட்டுப்படுத்திக்கொண்டார்கள். நமது சக்கரவர்த்தியவர்களது வாழ்த்துப்பாடிச் சபை கலைந்தது.

சென்னை ஆஸ்பத்திரிகப்பலுக்கு எவ்வளவு உதவி செய்தாலும் தகும். ப்ரதி பள்ளிக்கூடத்திலும் பள்ளிக்கூடத்தலைவர் முன்னிட்டு மீட்டிங்குகள் கூட்டி உதவியை வசூல் செய்து நமது கவர்னருக்கு அனுப்புவது உத்தமம்.

**The Comparative Naval Strength of the Belligerents.**

யுத்தம் செய்கிறவர்களின் கப்பல்படை பலம்:—அடியில் காணும் கணக்கு நேசப்படைகளின் கப்பல் பலத்தையும் சத்ருக்களின் கப்பல் பலத்தையும் தெரியப்படுத்தும்.

| நேச அரசுகள். | யுத்தக்கப்பல் வகைகள். | |
|---|---|---|
| ப்ரிட்டன் | யுத்தக்கப்பல் | 138 |
| ப்ரான்ஸ் | க்ரூஸர்கள் | 226 |
| ருஷ்யா | டிஸ்ட்ராயர்கள் | 525 |
| ஜப்பான் | டார்பிடோபோட்டுகள் | 308 |
| | ஸப்மரீன்போட்டுகள் | 245 |
| | மொத்தம் | 1442 |

| சத்ருக்கள். | யுத்தக்கப்பல் வகைகள். | |
|---|---|---|
| ஜெர்மனி | யுத்தக்கப்பல் | 57 |
| ஆஸ்டிரியா | க்ரூஸர்கள் | 68 |
| துருக்கி | டிஸ்ட்ராயர்கள் | 179 |
| | டார்பிடோபோட்டுகள் | 147 |
| | ஸப்மரீன்போட்டுகள் | 53 |
| | மொத்தம் | 504 |

---

ஒரு தேச ஸ்த்ரீகளின் முன்னேற்றம் அத்தேச நாகரீகத்தைக் குறிக்கிறது. ஆனால் ஸ்த்ரீகளுக்கு எத்தன்மையான முன்னேற்றம் அவசியம்? அவர்களின் தேசாசாரத்திற்கும் ஜனசாரத்திற்கும் ஏற்றபடி முன்னேற்றம் அவசியம். எந்த தேசத்து ஜனங்கள் தங்களுடைய மதத்தை சிந்தித்துத் துறக்கவெண்ணுகிறதோ அந்தேசத்தவர்கள் அபிவிருத்தியடைய மாட்டார்கள். இது சரித்ர உண்மை.—ஸ்வாமி ராமதீர்த்தா.



THE REGISTRAR OF ... REGISTERED 1 JUN 1915 MADRAS.

# WOMEN & SOCIAL IDEALS.

By
Sri M. Laxmi Ammal
(First Lady Bagavathar).

## ஸ்த்ரீகளும் ஜனசார லக்ஷயங்களும்.

இந்தியாவில் பெண்களின் கல்வியைப் பரவச்செய்கிறதற்குப் பல நிர்ப்பந்தங்களிருக்கின்றன. இந்தியா முழுமையும் ஸ்த்ரீகளின் வாழ்க்கை லக்ஷயங்கள் ஏறத்தாழப் பொதுவாகவே யிருக்கின்றன. ஸ்த்ரீகளின் கல்வியை அபிவ்ருத்திசெய்ய நினைக்கும்போது இந்திய ஜனஸமூகத்துக்குரிய கல்வி இன்னதென்று தெரிந்துகொள்ள வேண்டும். ஜனசார வாழ்க்கை லக்ஷயங்களை கவனிக்காது எந்தமாதிரி கல்வி ஏற்படுத்தினாலும் பயன்படாது. வடஇந்தியாவில் கோஷா முறைக்கு ஏற்றபடி தேர்ந்த ஸ்த்ரீகள் மூலமாக ஸ்த்ரீகளுக்கு வீட்டுப்படிப்புச் சொல்லிக்கொடுக்கப்பட்டுவருகிறது. இந்த முறை நல்ல பயனைத் தருகிறதாகச் சொல்லுகிறார்கள். மற்ற மாகாணங்களில் ப்ரைமெரி, ஸகெண்டரி பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டு கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. ஸர்க்கார் அனுஸரிக்கும் இந்த முறை அவ்வளவு பயனைக் கொடுக்கிறதாகத் தெரியவில்லை. ஸர்க்கார் அனுஸரிக்கும் முறைக்கு சில இடையூறுகள் இருக்கின்றன: (1) ஸ்த்ரீ உபாத்தினிகள் கிடைக்காமை, (2) போதுமான பணமின்மை. ஸ்த்ரீகளின் கல்வியை அபிவ்ருத்தி செய்கிறதற்கு தாலுக்கா, ஜில்லா போர்டுகள், முனிஸிபாலிடிகள் இவைகள் ஸர்க்காருடன் ஒத்துழைக்க வேண்டும்.

ப்ரைவேட்டாக சில அக்கரையுள்ள உத்தமர்கள் பெண்பாடசாலைகள் ஸ்தாபித்து நடத்தி வருகிறார்கள். இச்சிலரும் ஸ்த்ரீகளின் ஜாதீயலக்ஷயங்களை அறியாமலிருக்கிறார்கள். நமது ப்ரதிநிதிகளில் சிலரே இத்தகைய விஷயத்தில் கவனம் செலுத்தி வருகிறார்கள். இந்தியாவில் பல மாகாணங்களில் ஆசார சீர்திருத்த சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆசாரசீர்திருத்தக்காரர்களில், சிலர் நீங்கலாக நம்முடைய ஜனஸமூகத்தை எப்படி ஒழுங்குபடுத்தித் திருத்தலாமென்கிற யோஜனை ஒருவரும் பண்ணுகிறது கிடையாது. நம்முடைய ஜனஸமூகத்துக்கு திருத்தம் அவச்யமா? அப்படியானால் எந்த முறையில் திருத்தம் அவச்யம். மேனாட்டுப்படிப்பு படித்துவிட்டு, அவர்கள் அனுஷ்டித்த ஜனஸமூகத்திருத்தமுறை அவச்ய

மென்று சொல்லுவோர்கள் நன்றாக இந்திய ஜனஸமூக முறையை அறியாதவர்களே. நமக்கும் பூர்வீக ஜனாசாரலக்ஷ்யங்களிருக்கின்றன. நமக்கு ஜனஸமூக திருத்தம் அவசியம்; ஆனால், நம்முடைய பூர்வீக ஜனாசாரலக்ஷ்யங்களுக்கு ஏற்றபடி ஸ்த்ரீகளின் கல்வியை யமைத்து வ்ருத்திப்படுத்துவது தான் ஒழுங்கு. எந்தக்காரணத்தைக் கொண்டும் நம்முடைய பூர்வீக லக்ஷ்யங்களை விலக்கிவைக்கக் கூடாது. மேனாடுகளிலுள்ள ஒவ்வொரு தேசத்திலும் அந்தந்த தேசத்தவர்கள் தங்கள் தங்கள் பூர்வீகலக்ஷ்யங்களுக்குத்தகுந்தபடி ஆசாரமுறைகளை ஏற்படுத்தி திருத்தம் செய்திருக்கிறார்கள். இது சரித்ரம் படித்தவர்களுக்கு நன்றாக மனதில் படும். அமெரிக்காவையாவது இங்க்லண்டையாவது நமது தேசத்துக்கு ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியவரும். இந்தியாவில் ஸ்த்ரீகளுக்கு ஸுகம் குடும்பமே. அமெரிக்கா தேசத்து ஸ்த்ரீகளுக்கு குடும்ப ஸுக மின்னதென்று தெரியாதவர்கள். இங்க்லண்டிலும் ஜனப்பிரதிநிதிகள் இந்தியாவின் ஸமூகலக்ஷ்யங்களைப் புகழ்ந்து, தங்கள் தேசஸ்த்ரீகள் பண்ணும் கோரங்களைக்கண்டு துக்கிக்கிறார்கள். ஸ்த்ரீகளின் கல்வியைப் பரவச்செய்கிறதற்கு புருஷர்களுக்குக்கொடுக்கும் கல்வியைக்கற்பிக்கக்கூடாது. இங்க்லண்டில் புருஷர்களுக்குக் கொடுத்துவருகிற கல்வியைக் கொடுத்துவிட்டு, இப்போது வெகு கஷ்டப்படுகிறார்கள். புருஷர்களுக்கும் ஸ்த்ரீகளுக்கும் தனித்தனியான கல்விகற்பிக்கப்படவேண்டுமென்று ஸர்க்காருடன் வாதாடி இப்போது ஸ்த்ரீகளுக்கு ஏற்றகல்வியைக்கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

நமது கவர்ன்மெண்டார் ஸ்த்ரீகள் கல்வியை அபிவ்ருத்தி செய்யவேண்டுமென்று விருப்பமுடையவர்களாயிருக்கிறதால் கீழ்க்கண்டவிதமாக அனுஷ்டிக்கலாமா வென்று பார்ப்பது நலம். ஜனஸமூகத்தலைவர்களை ஒருங்குசேர்த்து ஒரு கமிட்டியாக ஏற்படுத்தலாம். ஆண்களுடைய படிப்புக்கும் பெண்களுடைய படிப்புக்கும் தனித்தனி கல்வியிலாகாத் தலைவர் ஏற்படுத்தவேண்டியது. ஸ்த்ரீகளுக்கு படிப்புமுறை குடும்பத்தை யொட்டினதாக இருக்கவேண்டும். ஸ்த்ரீகளின் ஜனாசாரலக்ஷ்யங்களை யறிந்து அந்தந்த ஸமூகத்தின் நோக்கங்களுக்கு மாறுதலில்லாமல் வீட்டுப்படிப்பு கற்பிப்பது மேன்மை.

எம். லக்ஷ்மி அம்மாள்.



# WOMEN AND THE PREVENTION OF CRUELTY TO ANIMALS.

## பெண்களும் ஜீவஹிம்ஸை நிவாரணமும்.

By

**Sri Rudrakotisvarar.**

தாழ்ந்த பிராணிகளின் நன்மைக்காக அமெரிக்காவிலும் யூரோப்பிலும் பெண்கள் செய்யும் முயற்சி மிக விசேஷமானதாக இருக்கின்றது. அவ்விடங்களில் பெண்கள் மிருக பக்ஷிகளுக்குப் பிறரால் செய்யப்படுந் துன்பங்களையும் கொடுமைகளையும் நிவர்த்திப் பதற்காகச் சங்கங்கள் ஸ்தாபிக்கின்றனர்; அவர்கள் தங்களுடைய காருணிய கருத்திற்கிணங்கவே அச்சங்கங்களில் மிக ஊக்கமாக உழைக்கின்றனர்; அவர்கள் அச்சங்கங்களுக்குத் தலைவிகளாகவும், காரியாதிகாரிகளாகவும் இருந்து பெருமை பெறுகின்றனர்; அமெரிக்காவில் பிரசுரிக்கப்படும் காருணியப் பத்திரிகைகள் அநேகம் பெண்களாலேயே நடத்தப்படுகின்றன; தாழ்ந்த பிராணிகளின் பாதுகாப்பைப்பற்றியுள்ள அரியநூல்களுள் பல ஸ்த்ரீகளாலேயே எழுதப்பட்டிருக்கின்றன; வாயில்லாப் பிராணிகளை ஜனங்கள் நன்கு ஆதரிப்பதற்காக அவர்கள் இரக்கமும் இனிமையும் வாய்ந்த விண்ணப்பங்கள் பல செய்திருக்கின்றனர்; பிராணி ரக்ஷகசாலைகள் அவர்கள் பாதுகாப்பிலேயே இருக்கின்றன; பிராணிகளைப் பாதுகாப்பதில் அவர்கள் அவைகளின் துன்பவிசாரணைக்காரர்களாக அமர்ந்து, அவைகளுக்கு துன்பஞ்செய்கின்றவர்களைச் சட்டப்படிபிடித்து அவர்கள் மீது நியாயச்சாலைகளில் வழக்கு தொடுக்கின்றனர்.

ஜீவ காருணிய விஷயத்தில் மேற்றிசைப் பெண்களுக்குள்ள மனவூக்கத்தைக் குறித்தும், விடாப்பற்றைக் குறித்தும் மிக விரிவாக எழுதலாம். பெரும்நாகரிகமும், மிக மேன்மையுமுடைய அநேக ஸ்த்ரீகள் தெருக்களில் குதிரைகளையும் மாடுகளையும் கோரமாகச் செலுத்தியவர்களைத் தடுத்து அவர்கள் அப்பிராணிகளுக்குச் செய்த கொடுமையை நிறுத்தினதாக அறியப்படுகின்றது; அநேகர் ஜீவகாருணியத்தை விருத்திசெய்யும்பொருட்டுத் தம் பிராணனைத் தியாகஞ்செய்தனர்; மிருகப்பக்ஷிகளிடத்துக் காட்டவேண்டிய கருணைக்காகத் தற்காலத்தில் பெண்கள் சிலர் தமக்குச் சாதாரண வசதிகளுமின்றி மிகுந்த ஊக்கத்துடன் வேலைசெய்கின்றனர்; ஆயி

ரக்கணக்கான காருணியக் கூட்டங்கள் (Bands of Mercy) பெண்களாலேயே ஸ்தாபிக்கப்படுகின்றன ; மிக்கவீரத்தன்மைவாய்ந்த ஒரு மாது எருதுச்சண்டை ஒன்றை மிகத்தைரியமாக நிறுத்துவாளாயினள் ; பிராணிகள் துன்பப்படும் இடங்களிலெல்லாம் இரக்கமுள்ள ஒரு மாது தோன்றி அவைகளின் துன்பத்தைத் தடுத்துப் பேச ஆரம்பிக்கின்றாள். நிற்க,

இந்தியாவில் பம்பாய், கல்கத்தா, சென்னை, இம்மூன்று இடங்களிலும் ஜீவஹிம்ஸை நிவாரணசங்கங்கள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. சென்னை இராஜதானியில் திருச்சிராபள்ளி, வேலூர், கோயம்புத்தூர், பல்லாரி, காக்கிநாடா, இந்த இடங்களிலும் மேற்குறித்த சங்கத்தின் கிளைச்சங்கங்கள் இருக்கின்றன. இவைகளில் ஆண்பாலாரே அங்கத்தினர்களாகவும் காரியநிருவாகிகளாகவும் இருக்கின்றனர். இச்சங்கங்களின் நற்காரியங்களில் பெண்பாலார் சிறிதும் ஊக்கங்கொள்வதில்லை. தெருக்களில் வாயில்லாப் பிராணிகளுக்குச் செய்யப்படுங் கொடுமைகள் இச்சங்கங்களின் காரியநிர்வாக உத்தியோகஸ்தர்களாலும், சிற்சில சமயங்களில், பொது ஜனங்களுள் ஆண்பாலாராலும் தடுக்கப்படுகின்றன. மேல் நாடுகளில் இக்காரியத்தில் பெண்கள் ஊக்கங்கொள்வதுபோல இங்கு இல்லையாயினும், சென்ற வருஷத்தில் ஐந்து யூரோப்பிய மாதர்கள் நாய், எருமை, குதிரைகள் இவைகள் கொடுமையாக நடத்தப்பட்டமையைச் சென்னை ஜீவஹிம்ஸை நிவாரணசங்கத்தின் கௌரவ காரியதரிசியாருக்கு அறிவித்து அக்கொடுமையைத் தடுத்தது யாவராலுங் கவனிக்கத்தக்க விஷயமாகும். இது போலவே இந்திய மாதர்களும் தாழ்ந்த பிராணிகளிடத்துக் கருணைகொண்டு அவைகளுக்கு மனிதர்களின் அறியாமையினால் உண்டாகும் கொடுமையைத் தடுத்து அவைகளின் நிலைமையை உயர்த்த சாலவும் ஊக்கத்துடன் முன்வருவாராயின், தாழ்ந்த ஜீவப்பிராணிகள் சுகமடையும்.

சென்னைச் ஜீவஹிம்ஸை நிவாரண சங்கத்தின் முப்பத்து நான்காவது வருஷக் கூட்டம் சென்றமாதம் ஆனரபில் ஸர் ஜான் வாலிஸினுடைய அக்கிராசனத்தின் கீழ் விக்டோரியா ஹாலில் கூடினபோது, ஸ்ரீமதி அனிபெஸன்ட் அம்மையார்

“ஒவ்வொருஸ்த்ரீயும் ஒரு பிராணி கொடுமையாக நடத்தப்படும்போது உடனே சிறிது நின்று கொடுமைசெய்யும் மனிதனை நோக்கி அவன் செய்யுந் தீங்கினால் அப்பிராணி வருந்துவதைக் குறித்து அவனுக்கு நயமாக எடுத்துக் கூறினால் அவன் திரும்பவும் அவ்வாறு செய்யமாட்டான்” என்றும், “அதனால் சீவர்களின் துன்பம் குறையும்” என்றும் கூறுவாராயினர்,


117

காலஞ்சென்ற விக்டோரியா அரசியார் தாம் லண்டன் ஜீவஹிம்ஸை நிவாரண சங்கத்தின் முதல் போஷகராக இருந்தனர். அவ்வம்மையாரின் காருணிய வாழ்க்கை எல்லாருடைய வாழ்க்கைக்கும் ஒரு உதாரணமாக இருக்கின்றது. அச்சக்ரவர்த்தினியார் தாழ்ந்த பிராணிகளைப் பாதுகாக்குஞ் சங்கத்தில் பேர் அபிமானங்கொண்டிருந்தனர். “தருமம், இரக்கம் என்பவைகளுள் வாயில்லாப் பிராணிகளை உட்படுத்தாத நாகரிகம் பூர்த்தியானதன்று” என்று ஒரு சமயத்தில் எழுதுவாராயினர். ஒரு அரசி செய்யக்கூடிய நற்காரியம், தன் குடிகளுக்கு அன்பையும் இரக்கத்தையும் போதிப்பதே யாகு மென்பதை அவ்வம்மையார் உலகத்திற்குக் காட்டுவாராயினர். ஆகவே, பெண்களெல்லாம் அவ்வம்மையாரின் நற்போதனையைப் பின்பற்றி தாழ்ந்த சிவப்பிராணிகளிடத்து அன்பு கொண்டு அவைகளுக்குத் தம்மாலும் பிறராலும் யாதொரு துன்பமும் உண்டாகாதபடி அவைகளைப் பாதுகாப்பாராக.

உருத்திரகோடீசுவரன்.

---

## SUBMARINE MINES.

### கடல் சுரங்கங்கள்.

சத்ருக்களை நாசம் செய்ய ஒரு தந்த்ரம் என்னவென்றால், ஸமுத்ரத்தில் சுரங்கமிடுவது. இதற்கென்றே ப்ரத்யேகமாய் கப்பல்கள் வைத்திருக்கிறார்கள்.

கடலில் இடும் சுரங்கங்கள் நம் நாட்டில் தங்கம், வெள்ளி முதலிய லோஹங்களை வெட்டியெடுக்க தரையில் சுரங்கம் தோண்டுவது போலல்ல. அவைகளில் மிதக்கும் சுரங்கம், தண்ணீரில் அமிழ்ந்து கிடக்கும் சுரங்கம், என இரண்டு வகைகள் உண்டு. கடல் சுரங்கத்தில் மூன்று பாகம் உண்டு. முதலாவது, வெடிமருந்து நிரப்பி வைத்திருக்கும் பந்துபோன்ற பெட்டி. இதன் பக்கத்தில் இதைத் தொட்டுக்கொண்டு ‘லீவர்’ என்று சொல்லப்பட்ட லோகத்தால் செய்யப்பட்ட கழி ஒன்று இருக்கும். இரண்டாவது, இந்தப் பந்தின்கீழ் தொங்கவிட்டிருக்கும் ஸம சதுரமான பெட்டி. இதில்

காற்று அடைக்கப்பட்டிருக்கிறது. ஸாதாரணமாய் ஒரு காற்றடைத்த பந்தை நீரில் போட்டால் அது மிதக்குமல்லவா? அதுபோலவே அந்த அறையில் காற்றடைத்துவைப்பதின் நோக்கம் சுரங்கம் கடலின் அடிவாரத்திற்குப்போய்விடாமல், கொஞ்சம் மேலாக மிதக்கும்படி செய்வதே. ஆனால் அந்தச் சுரங்கத்தை ஜலத்தின் பரப்பிலிருந்து சில அடிகள் தாழ மிதக்கும்படி செய்ய, காற்றறையின் கீழ் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு கனத்தைத் தொங்கவிடுவார்கள். இந்த கனமான பொருள்தான் மூன்றாவது பாகமாகும். ஒரு எதிரிக்கப்பல் விரைவாய் வருகிறதென்று வைத்துக்கொள்வோம். கடலின் மேலே பார்த்தால் சுரங்கம் ஒன்றும் இருப்பதே தெரியாது. அதனருகில் கப்பல் வந்தவுடன், கப்பலின் முன்னம் புறத்தின் கீழ்ப்பாகம் அந்த லீவரின்மேல் மோதலாம். உடனே சுரங்கம் பட்டாரென்று வெடித்து கப்பலை சில்லுசில்லாக ஆக்கிவிடும். இவ்வளவும் சுரங்கத்தில் மின்ஸாரக்கருவிகளை அடைத்து செய்யும் காரியம்.

முதல் முதலாய் 1777-ம் வர்ஷத்தில் ஒரு அமெரிக்கா தேசத்தவர் சண்டையில் சுரங்கமிடும் விதத்தைக் கண்டுபிடித்தார். இதை ப்ரதானமாய் அப்யாஸத்தில் கொண்டுவந்தவர் ராபர்ட் புல்டன். ரஷ்ய-ஜப்பானிய யுத்தத்தில் போர்ட் ஆர்தர் என்ற துறைமுகத்தைக்காக்க ரொம்ப சுரங்கங்களையிடவே, அதனால் இருபக்கத்தாருக்கும் பெரும்பாலும் நாசம் விளைந்தது. துறைமுகங்களை அன்யர்கள் வந்து எதிர்க்காமல் பாதுகாக்க ஸாதாரணமாய் சுரங்கங்களை உபயோகிப்பது வழக்கம்.

நாம் விவரித்த சுரங்கம் கனம்கட்டிப்போட்டிருப்பதால், ஒரே இடத்திலேயே யிருக்கும். வேறு சில சுரங்கங்கள் இடம்விட்டு இடம் மாறிக்கொண்டேயிருக்கும். இவை மிகவும் அபாயகரமானவை. ஏனென்றால், அவை எவ்வெவ்விடமெல்லாம் போகுமென்று நாமறியோம். எந்த பாகத்தில் கப்பல்கள் இவைகளை மோதுமோ தெரியாது. வழக்கமாய் இம்மாதிரி சுரங்கங்களை துறைமுகத்திலிருந்து சில மைல்களுக்கப்பால் போட்டிருப்பார்கள். அங்கிருந்து கொஞ்சம் கிட்டத்தில், மேற்கூறிய மாதிரி ஒரே இடத்தில் நிற்கும் சுரங்கங்களை இடுவார்கள். இன்னம், வேறு விதச் சுரங்கம் போடுவதுமுண்டு. இது துறைமுகத்தோரமாய் கடலில் வைக்கப்படும். இந்தச் சுரங்கத்தை கரையிலிருந்துகொண்டே



மின்ஸாரக் கம்பிகள் மூலமாய் வேண்டியபொழுது வெடிக்கும்படி செய்யலாம். எதிரியின் போர்க்கப்பல் மேல் சொன்ன இரண்டு விதமான சுரங்கங்களையும் தாண்டி கரையை யணுகிவருவதைப் பார்த்தவுடன், துறைமுகத்தில் கடலோரத்தில் கிடக்கும் சுரங்கத்தை வெடிக்கச்செய்வார்கள். கரையில், அதற்காக வைத்திருக்கும் மின்ஸாரப்பொத்தானை அமிழ்த்தினால், உடனே அந்தச் சுரங்கம் வெடித்துவிடும். இந்தமாதிரிச் சுரங்கம், பொத்தானை அமிழ்த்தினாலொழிய வெடிக்காததினால், துறைமுகத்தி லுள்ளவர்களுக்குத் தெரியாமல் கப்பலுக்கு இவைகளால் நாசம்விளைவது அரிது. ஸ்நேகிதருடைய கப்பலோ அல்லது தன்னைச் சேர்ந்த கப்பலோ துறைமுகத்தின் அருகில் வந்தால் அதற்கு யாதொரு ஆபத்தும் நேரிடாது. சத்ருவென்று அறிந்தாலொழிய பொத்தானைத் தொடமாட்டார்கள்.

சுரங்கம் என்ற வ்யாதி ஏற்படவே அதற்கு சிகித்ஸையும் ஏற்படலாயிற்று. ஸமுத்ரத்தில் கிடக்கும் சுரங்கத்தை வாரியெடுக்க 'ட்ராலர்ஸ்' என்ற கப்பல்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இவை கடலில் கிடக்கும் சுரங்கங்களைக் கண்டுபிடித்து, அவைகளை மீன் பிடிப்பதுபோல், வாரி யெடுத்துவிடும்; இல்லாவிடில், அவைகளின் எலக்ட்ரிக் கம்பியை அறுத்தாலும் போதும். இப்படிச்செய்வதில் ட்ராலர்களே நாசமாய்ப்போவதுமுண்டு. சுரங்கத்தை எதிர்ச் சுரங்கம்போட்டு வெடிக்கச் செய்துவிடுவதும் உண்டு.

ஜனுயிமானி.

---

## RAJA VIKRAM & THE FAKIR.

By

**Sri. Valambal.**

## விக்ரமார்க்க ராஜாவும் பக்கிரியும்.

சென்ற ஜனவரிமாதப்பத்ரிகையில் விக்ரமராஜா யோகி குடிசையில்நாயாக மாறி வசித்தாரென்று சொன்னோம். மறுநாள் பொழுதுவிடிந்தவுடன் ராஜா, அரண்மனையில் இல்லாததைக்கண்டு குடும்பத்தார்களும் மந்திரிமார்களும் மிக விசனமடைந்தார்கள். ராஜசபையில் ராஜா இல்லாமலிருந்தால் பொது ஜனங்களின் மனம் க்லேசமடையுமல்லவா! ஆனதால் ராஜாவுக்கு உடம்பு சௌ

காரியமில்லையென்று ஜனங்களின் க்லேசத்தைப்போக்கச் செய்தார்கள். மந்திரிகள் ஒற்றர்களை விட்டு ராஜாவின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கச் சொன்னார்கள்.

ஆனால் பலிதமில்லை. மந்திரிமார்கள் நிரம்ப கவலையடைந்து ஒரு சபை கூட்டி யோஜனை செய்தார்கள். கடைசியாக அந்த சமஸ்தானத்து ஜோஸ்யரைக் குறி கேட்டார்கள். தனது ஜோஸ்யக்கணக்கினால் இராஜன் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து "ஒரு யோகியின் சாபத்தால் வேற்று ரூபம் கொண்டு யோகியின் குடிசை வாசற்படியண்டை வசிக்கிறார் என்றும், அவர் உயிர் பிழைக்கிறது துர்லபம் என்றும், ஆனால் ராஜாவுடைய பாதுகாப்பு தேவதைகளால் காக்கப்பட்டு வருகிறார் என்றும் தெரிவித்தார். இருந்தாலும், யோகியின் பூஜை நிறைவேறி அவன் எதிரில் கிடத்தப்பட்ட பிணத்தை எழுந்திருக்கச்செய்தால் பாதுகாப்பு தேவதைகளின் பலம் குறைந்துவிடும்; அப்போது நிரம்ப கஷ்டமாகிவிடும்; வருகிற பௌர்ணமிக்கு அந்தப்பூஜை முடிகிறது; அதற்குள் ராஜனுடைய உயிரை உடன் பிழைக்கச் செய்தால் நலம்" என்று சொல்லி ஏதாவது உபாயம் தேடும்படி மந்திரிகளை அனுப்பிவிட்டார். ஜோஸ்யர் தீர்க்கயோஜனை செய்து தம்முடைய இரட்டைப்பிள்ளைகளை வரவழைத்து ராஜாவின் கஷ்ட தசையை எடுத்துச் சொல்லி "நாம் ராஜாவின் அன்னத்தை நாளைவரையிலும் புசித்துவருகிறோம். நம்முடைய உயிர் போனாலும் ராஜனின் உயிரைத் தப்புவித்து அவருக்கு நம்முடைய முழுநன்றியைக் காட்டவேண்டும். அதற்கு உங்களுக்குச் சம்மதம்தானா" என்றுசொல்ல, பிள்ளைகள், "அப்பா! நாங்கள் தங்கள் கட்டளை இட்டபடி நடக்க நாங்கள் சித்தமாயிருக்கிறோம். எந்த விதத்தில் நம்முடைய ராஜாவுக்கு உதவியாயிருக்கலாம்? அதைத் தெரிவியுங்கள்" என்று வணங்கிக் கேட்டார்கள். உடன் நதியின் கரைக்கு பிள்ளைகளை கூட்டிக்கொண்டுபோய் அவர்களை நோக்கி! "குழந்தைகாள், அந்தோ! எதிர்த்த கரையில் கட்டியிருக்கிற யோகியின் குடிசையைப் பார்த்தீர்களா? அந்த குடிசையின் வாசற்படியண்டை நீங்கள் ஒரு கறுப்பு நாயைப் பார்ப்பீர்கள். அந்த கறுப்புநாய் தான் நம்முடைய ராஜா. நான் உங்களை இரண்டு மான்களாகச் செய்கிறேன். யோகியின் குடிசை பக்கம் போங்கள். வாசற்படியண்டை காத்திருக்கிற நாய் உங்களைவெறட்டும். நதியில் ஆழமில்லை. நாய் உங்களை துரத்துகிறபோது நீங்கள் அதிவேகமாய் இக்கரை ஓடிவந்து விடவும். நாயும் உங்களை துறத்திக்கொண்டுவரும். நீங்கள் ஓடிவர சக்தியற்று அக்கரையில் நின்றுவிட்டால் உங்கள் உயிர் யோகியிடம் தான். இக்கரைக்கு வந்துவிட்டால் யோகி உங்களை ஒன்றும் செய்யமுடியாது. நீங்கள் சீக்ரம் காரியத்தை முடித்துக்கொண்டு வாருங்கள்" என்று கட்டளையிட, ஜோஸ்யர் பிள்ளைகள் இரண்டுபேரும் மான்ரூபம் எடுத்து யோகியின் குடிசையை யடைந்தார்கள். குடிசையிலுள்ள கறுப்பு நாய் இந்த இரண்டு மான்களைப் பார்த்தவுடன் கத்திக்கொண்டு மான்களை வெறட்ட ஆரம்பித்தது. மான்கள் இரண்டும் நதியில் விழுந்து இக்கரையை நோக்கி ஓடிவர, அந்தக் கறுப்புநாயும் துறத்திக்கொண்டு போயிற்று. நாயின் சப்தம் கேட்ட மாத்ரத்தில் யோகியானவர் விழித்துக்கொண்டு நாய் மான்களை துறத்துகிறதைக் கண்டார். ஞானதிருஷ்டியால் அறிந்துகொண்டு கழுகு வேஷம் எடுத்து இருமான்களின் கண்களைப் பிடுங்க ஆகாயமார்க்கமாகப் பறந்து சென்றார். அரசன் பாதுகாப்பு தேவதைகள் ஆகாயத்தில் புழுதிப்புயல்காற்றை கழுகுக்குக் கண்கள் தெரியாமல் எவ்வளவு கிளப்பியும் ஒரு மானின் கண்ணைப் பிடுங்கிக்கொண்டு போய் விட்டது. கடைசியாக வெகுக்கஷ்டத்துடன் இரண்டு மான்களும் அந்த நாயும் கரை சேர்ந்தன ஜோஸ்யர் அனுக்ரகத்தால் மூன்று பேர்களும் மானிடர்களாய் வீடுசேர்ந்தார்கள். தாம் செய்ய வேண்டிய கடமையை ராஜனுக்கு ஜோஸ்யர் செய்தது மிகவும் மெச்சத்தக்கது.



அரசன் அரண்மனை யடைந்ததும் ஜனங்கள் வெகு குதூஹலமாக இருந்தார்கள். ஜனங்களும் மறுநாள் ராஜஸபையில் ராஜாவைக் கண்டவுடன் பெருமகிழ்ச்சி யடைந்தார்கள். ராஜா மாறு ரூபமடைந்ததும் யோகியின் செயலும் ரஹஸ்யமாக வைக்கப்பட்டது. நாளுக்குநாள் யோகியின் செல்வாக்கு அதிகரித்துக்கொண்டிருந்தது. ராஜாவின் பாதுகாப்பு தேவதைகள் யோகியினிடத்தில் தங்களுடைய செல்வாக்கு செல்லாதென்று தங்களுடைய அசக்தியைத் தெரிவித்தார்கள். ராஜா மிகவும் விசாரமடைந்து சமஸ்தானத்து ஜோஸ்யரின் யோஜனையைக் கேட்டார். ஜோஸ்யர் சொல்லுகிறார்." ஏ ராஜன்! அந்த யோகியின் செல்வாக்கு வெகுதூரம் பரவும். எனக்கு மூன்று சாஸ்த்ரங்கள் தான் தெரியும், யோகியோ பதின்மூன்று சாஸ்த்ரங்கள் அறிந்

திருக்கிறார். அந்த யோகிக்கு மிஞ்சி சாஸ்த்ரங்கள் படித்திருக்கிறவர் இந்த நாட்டில் இல்லை. ஆனால் ஞானதிருஷ்டியில் சீனதேசத்து சக்ரவர்த்தியின் குமாரத்தி பதினான்கு சாஸ்திரங்கள் நன்றாகப் படித்திருக்கிறாள். தாங்கள் அந்த சக்ரவர்த்தியின் குமாரத்தியை விவாகம்செய்து கொண்டால் அவள் தங்கள் உயிரைக் காப்பற்றுக்கூடும்'' என்று முடித்தார்.

வரும்.

---

## EARLY HABITS: A MORAL STORY.

## இளமைப்பழக்கம், ஒரு நீதிக்கதை.

ஒரு வனத்திலே ஒரு கிளி ஒரு மாமரத்தினுச்சியில் குஞ்சு பொரித்து இரண்டு கிளிக்குஞ்சுகளையும் காப்பாற்றி வந்தது. ஒரு நாள் அத்தாய்க்கிளி தன் குஞ்சுகளைத் தனிமையே விட்டு இரைதேடப்போயிற்று. அத்தருணம் அம்மரத்தினடியில் ஒரு வேடன் வலை விரித்திருந்தான். இதையறியாத அக்கிளிக்குஞ்சுகள் அம்மரத்தினடிக்கிளைக்குத் தாய் இல்லாமைபற்றி இறங்கி வந்தன. பின்பு அவ்வலையில்வந்து சிக்கிக்கொண்டன. இதைக்கண்டவேடன் அவையிரண்டையும் ஒரு பைக்குள் போட்டு வீட்டுக்கெடுத்துச்சென்றான். அவன் போய்க்கொண்டிருக்கும்போது இந்தக் கிளிக்குஞ்சுகளில் ஒன்று அப்பையிலிருந்த சிறு துவாரத்தின் வழி வெளிச்சென்று பறந்துபோய் ஒரு மஹரிஷியின் ஆச்ரமமடைந்தது. மற்றொன்றோ அவ்வேடனால் ஒரு பெரிய கசாப்புக்கடைக்காரனுக்கு விற்கப்பட்டது. அந்தக்கிளியும் ஒருநாள் தான் அடைக்கப்பட்டிருந்த கூடு திறக்கப்பட்டிருந்தமையால் வெளியே பறந்துபோய் ஒரு காட்டில் வசித்துவந்தது.

இது நிற்க, ஒருநாள் தீர்த்தயாத்ரை செய்து திரும்பி வந்த ஒரு ப்ராம்மணர் இக்காட்டின்வழிக் கடக்க நேரிட்டது. அவர் சற்று இளைப்பாறுமாறு, இந்தக் கசாப்புக்கடைக்காரனுக்கு விற்கப்பட்டுத் தப்பியோடி வந்த கிளி வசிக்கும் மரத்தினடியில் உட்கார்ந்தார். அவரைப்பார்த்தவுடன் அந்தக்கிளி: ''யாரடா இங்கே வந்தது! எய்! என்ன பதில்! வெட்டு; குத்து. வீட்டிலும் கடையிலும் ஆட்டுக்கறி ஆறுகாசு; கோழிக்கறி நாலு காசு'' என்று பலவிதமாய்ப்



பேசிற்று. இதைக்கேட்ட ப்ராம்மணர் இனி அங்கிருந்தால் மானபங்கமாகுமென நினைத்து அப்பாற் சென்று மற்றொரு மரத்தினடியிலுட்கார்ந்தார். அங்கே அந்த ரிஷியாச்ரமத்தில் வசிக்கும் கிளி வந்து தங்கியிருந்தது. அது இவரைப்பார்த்தவுடன்: ''ஏ! ப்ராம்மணரே! எங்கிருந்து வருகிறீர்? க்ஷேமமா? நான் உங்கள் தரிசனத்தால் தன்யனானேன்'' என்று பலவித இனிமையான வார்த்தைகள் கூறி அவருக்கு உண்ணக் காய் கனிகள் கொடுத்துதவிற்று.

இதனால் ப்ராம்மணர் ஆச்சர்யமடைந்து அக்கிளியை நோக்கி: ''நான் முன்பு ஒரு மரத்தடியில் தங்கினேன். அங்கிருந்த கிளி கெட்டவார்த்தைகள் பகரிற்று. நீயுங் கிளிதான். நீயோ என்னை மிகவும் உபசரிக்கிறாய். இதற்கு என்ன காரணம்?'' என்றார். அதற்கு அக்கிளி அவர்களிருவரும் ஓரே தாய்வயிற்றிற் பிறந்தவர்களெனவும், அப்படியிருப்பினும் அவர்கள் சம்பாஷணை அவர்கள் சேர்ந்த இடத்தைப்பொறுத்திருக்கிறதாகவும், தான் முனியாச்ரமத்திலிருப்பதாகவும் மற்றொன்று கசாப்புக்கடைக்காரனிடமிருந்ததாகவுஞ்சொல்லிற்று. இதைக்கேட்ட ப்ராம்மணர் முற்றிலும் ஆச்சர்ய மடைந்தார்.

இந்தக்கதையில் கிளிகளின் நடவடிக்கைக்குக்காரணம் பால்யப் பழக்கமன்றோ? இதைப்போலவே சிறுபெண்களிற் சிலர் துர்சகவாஸத்தினால் கெட்டுப்போகிறார்கள். ''தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்'' என்றபடி பால்யத்தில் ஒரு பையன் கெட்டபையன்களுடன் சேர்ந்து அவர்கள் வழக்கங்களும் பழக்கங்களும் அவனுக்குப் படிந்துவிட்டால் அவனை ஒருபொழுதும் மாற்றமுடியாது. ஆனதுபற்றிப் பெற்றோர்கள் தம்குழந்தைகள் சர்சகவாசத்திலிருக்கிறார்களாவென அடிக்கடி கவனிப்பதுடன் அவர்கள் வேறுவிதமாயிருப்பின் அவர்களை நல்வழிக்குக் கொண்டுவரவேண்டும்.

திருவல்லிக்கேணி, 31-3-15. } எஸ். ரெங்கஸாமி அய்யங்கார்.

---

ஈச்வர பக்தி பண்ணுகிறவர்களுக்கு ஒரு குறையுமில்லை. பக்தன் ஜென்மத்திலிருந்து விடுபட்டு மோக்ஷமடைகிறான்.—பரமஹம்ஸர்.



23

## Sanitation of a school.

பாடசாலையின் சுகாதாரங்கள்—தொடர்ச்சி.

10. இக்கக்கூசில் தவிர வேறெங்கும் மாணுக்காவது மற்றவர்களாவது மலஜலாதிகளைக் கழிக்க வொண்ணுது.

11. பாடசாலைக் கிணற்றையும் ஜலம் வைத்திருக்கும் பாண்டங்களையும் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும்.

12. பெஞ்சின் (*bench*) பின்னே துப்பிக்கொள்ளுதல், சுவரில் கிறுக்குதல், மை கொட்டுதல் முதலிய பாலிய சேஷ்டைகளைக் கண்டிக்கவேண்டும்.

13. பாடசாலையிலுள்ள ஒவ்வொரு சாமானுக்கும் ஒவ்வொரு இடம் ஏற்படுத்தி இருக்கவேண்டும். அச்சாமானை உபயோகித்த பிறகு அதை உரிய இடத்தில் சேர்ப்பிக்கவேண்டும்.

14. சுவரில் பூகோளபடங்கள், சித்திரப்படங்கள் முதலியவற்றை மாட்டிவைப்பது கட்டிடத்தின் அழகை விருத்திசெய்யும்.

15. கூடுமானல் பூஞ்செடிகள் முதலிய அழகிய செடிகளைக் கட்டிடத்தைச்சுற்றிலும் வைக்கலாம்.

விளையாட்டுக்களத்தின் இலட்சணங்கள்.

16. பாடசாலையைச் சேர்ந்த விளையாட்டுக்களம் அசுகமான காற்றினின்றும் சூரிய வெப்பத்தினின்றும் கூடியமட்டில் தப்பக் கூடியதாய் இருக்கவேண்டும். இல்லாவிடில் ஆடுஞ் சிறுவர்களுக்குத் தேக சுகவீனம் உண்டாம்.

17. பிள்ளைகள் ஓடி விளையாடுவதற்கும், வேண்டிய கசரத்துச் சாமான்களைத் தாராளமாய் அமைப்பதற்கும், போதுமான விசாலமுள்ளதாய் இருக்கவேண்டும். 80 அடி நீளமும் 40 அடி அகலமும் பொருந்திய ஆட்டவெளி ஓர் பெரிய பாடசாலைக்குப் போதுமானதென்பது எட்யுகேஷனல் ரூல்சின் கொள்கை.

18. விளையாட்டுக்களத்தின் தரை ஈரப்பாங்கா யின்றிக் கட்டாந்தரையா யிருக்கவேண்டும்.

19. மழைச்சலம் சுலபத்தில் ஓடிப்போம்படி விளையாட்டுக்களத்தின் தரைக்குத் தகுந்த வாட்டத்தை அமைக்க வேண்டும். இல்லாவிடில் சலந் தங்கி நிலஞ் சதுப்பாகிச் சீக்கிரத்தில் உலராமல் தேக அப்பியாசத்துக்கு இடையூறுரும். (வரும்).

125

# பெண் கல்வி.

---

## விஷய சூசிகை—மேமீ 1915.

OFFICE OF THE ... MADRAS


I. கீதத்திரட்டு.

i. ஹரிச்சந்திர நாடகக்கும்மி.

II. ப்ரபஞ்சப்போக்கு.

i. ஸ்ரீஜத் கந்தி தம்பதிகள்—மாதர் வித்யானுபாலன ஸங்கம்—ஸ்த்ரீகள் கான்பரான்ஸும் யுத்தமும்—மாகாண ஆசார சீர்திருத்த கான்பரான்ஸ்

III. விசேஷ வ்யாஸங்கள்.

i. ஸ்த்ரீகளும் பாய் செய்தலும்—ஸ்ரீமதி ஜெயலட்சமி அம்மாள்.

ii. அன்னதானம்—ஸ்ரீ உருத்திர கோடீச்வரர்.

iii. விக்ர மராஜாவும் பக்கிரியும்—ஸ்ரீமதி வாலாம்பாள்.

iv. யோகினி கஸ்தூரிபாய்—

v. மயில்—மிஸ்டர் எஸ். ஆர்.

vi. சோதிக்கும் விளக்கு—திராவிடாபிமானி.

vii. பள்ளிக்கூட சுகாதாரங்கள்—ஒரு மாஜி உபாத்தினி.

IV. விசேஷக் குறிப்புகள்.

i. குழந்தைகள் விஷயம்.

ii. க்ரகத்தியக் குறிப்புகள்.

iii. சமையலறையும் சமையலும்.

iv. அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

v. ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

THE

# FEMALE EDUCATION

AN ILLUSTRATED MONTHLY MAGAZINE

# பெண் கல்வி.

சித்ர ஸஹிதமான ஒரு மாதப் பத்ரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

பத்ராதிபர்:
ஸஹோதரி ஆர். தாயாரம்மா.

மானேஜர்:
அ. சேஷாத்ரி சர்மா.

Vol. 4. தொகுதி 4 } இராக்ஷஸ வருஷ வைகாசி மீ May 1915. { No. 8, பகுதி 8.

## The "Female Education."

An Illustrated Tamil Journal with the object of enlightening and elevating ladies. It has got a long list of eminent gentlemen and ladies as contributors.

| | Subscription. | Advertisement per page. |
|---|---|---|
| Yearly .. | 2—8—0 | 72—0—0 |
| Half yearly | 1—8—0 | 40—0—0 |

Special charges for title pages.

Manager,
The "Female Education",
Madras, E.

## "பெண் கல்வி."

ஸ்த்ரீகள் அபிவ்ருத்தியைக்கருதி நடத்தப்படும் பத்ரிகை. சித்ரஸஹிதமாய் வெளிப்படும். இதற்கு ப்ராபல்யமான ஸ்த்ரீகளும் புருஷர்களும் வ்யாஸம் எழுதுகிறார்கள்.

| | சந்தா. | விளம்பரசார்ஜ் 1-பக்கம். |
|---|---|---|
| வருஷம் | 2—8—0 | 72—0—0 |
| 6 மாதம் | 1—8—0 | 40—0—0 |

டைடில் பேஜ்களுக்கு ப்ரத்யேகமான சார்ஜ்.

மானேஜர்,
"பெண் கல்வி" ஆபீஸ்,
சென்னை, E.

127

# ANTHEM ANTHOLOGY

# கீதத்திரட்டு.

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 24 MAY 1915 MADRAS

## ஹரிச்சந்திரன் சரித்ரக் கும்மி.

ஸ்ரீமதி சுந்தரம்மாளால் பாடப்பட்டது.
(முன் தொடர்ச்சி)

3-வது கட்டம்.

(அசுரபத்தினி கர்பந்தனை என்ற மெட்டு.)

வந்ததொரு முனிவர்தன்னை
வகையுடனே மன்னன்கண்டு
சந்தோஷங்கொண்டு மவன்வெகு
சாந்தமுடன் வணங்கிநின்றான். (1)

எந்தனுட பாக்கியமோ
என்முன்னோர்கள் தவப்பலனோ
நீர்வந்ததொரு காரணத்தைஎந்தனுக்கு
வகையுடனே உரைசெய்யுமென்றான். (2)

காரணத்தை கேட்கலுமே
கௌசிகரும் ஏதுசொல்வார்
எந்தனுக்கு யாகஞ்செய்ய அரிச்சந்திரா
பொருள்கேட்க வந்தேனடா உன்னிடம். (3)

எவ்வளவு வேண்டினாலும்
இந்தக்ஷணம் நான்தருவேன்
தயவுசெய்து எந்தனுக்கு ஸ்வாமிநீர்
சொல்லவேணும் என்றுரைத்தான் அரசன். (4)

ஆனைமே லம்பாரிவைத்து
அதின்மேலோர் காலைநின்று
கவுண்டிக்கல்எறியுந்தூரம் பொன்எனக்கு
வேண்டுமடா என்றுசொன்னான் கௌசிகன். (5)

அரசனும் கொடுக்கலுமே
வாங்கிஅந்த கௌசிகனும்
யாகஞ்செய்யும் சமயத்திலே அரிச்சந்த்ரன்
வாங்கிப்போறேன் என்றுசொன்னான் கௌசிகன். (6)

அரசனிடம் பொன்னை வைத்து
முனிவரவர் போனவுடன்
மிருகங்கள் பயிர் அழிக்குதென்று குடிகள்
முறையிட்டார் அரசனிடம் (குடிகள்) (7)

---

4-வது கட்டம்.

(கோலாட்ட மெட்டு.)

ஜனங்களெல்லோரும் சேர்ந்துமே
தன்னிடம் முறையிடுவதைக் கண்டு
அஞ்சவேண்டாம் நீங்கள் ஆதரவுடனே நான்
அழிப்பேன் மிருகத்தை என்றான். (1)
நீதிமுறை தவறாத நம்முடைய
நாட்டிலே நேர்ந்ததே துன்பமெல்லாம்
ஆகையினால் வேட்டை ஆடவேவேணும்
அழைப்பீர் வேடர்களை. (2)
பத்தினியுடனேயும் பட்டாளத்துடனேயும்
பாங்குடனே கிளம்பி
பயிரழித்ததோர் மிருகங்கள் எங்கே எங்கே
யென்று மன்னனும் நாடிவந்தான். (3)

---

5-வது கட்டம்.

(வந்தனந்தந்தேன் என்ற மெட்டு.)

வேட்டையாடினான் ராஜன் (வே)

கோஷமுடனே ராஜனும்
காட்டில்சென்று அடுத்துமே
வீரர்களுடனே ராஜன்
வெகுவேகமாய்ச் சண்டைதொடுத்தான். (1)
யானையினுடைய கூட்டத்தில்ராஜன்
அம்புகளை பொழிந்திட
வீரிட்டு ஓடியே
வேகமாய் மறைந்திட (2)



வேங்கைபுலி செந்நாய்களும்
சிங்கக்குட்டி முயல்மான்களும்
விஸ்வாமித்திரர் மாய்கையாலே
வந்த பன்றிதன்னையும் (3)

வேட்டையாடி ஜெயங்களடைந்த வேந்தன்
பட்டணம் சென்றுமே அன்புடனே ராஜன்
கொலுவில் அழகாய்அமர்ந்து அரசுசெய்தான்
ராஜ்யபாரத்தை அரசன் நேர்த்தியாய்செய்தான். (4)

---

6-வது கட்டம்.

(இவ்விதம் துஷ்யந்தன் இருந்திடும் என்ற மெட்டு.)

இவ்விதம் அரிச்சந்திரன்
இருந்திடும் சமயத்தில்
அவ்விடம்தனில் வந்தாள்
அழகிய பாணப்பெண்கள் (1)

சந்தனம் புனுகுபூசி
ஸரஸ மொழிகள்பேசி
சுந்திர மாகவே
ஜோருகுசுடனே வாராள். (2)

செங்கையில் வீணைமீட்டி
சீவிக் கொண்டையில்மாட்டி
அன்னம்போல் நடந்துமே
அழகுடனே வாராள். (3)

---

தன்னுடைபாட்டு பாடுவோன் இஷ்டப்படி தின்று திரியலாம்: உலகத்தின் பெரும் பெரும் ஜனசமூகங்களுக்கு வீரகாவியங்களாகும் பாரகாவியங்களியற்றுவோர்கள், மாம்ஸம் சாப்பிடுவதை நிறுத்தி பீன்ஸ்காயைச் சாப்பிட்டு தண்ணீரைத்தான் குடிக்கவேண்டும்—மில்டன்.

# PROGRESS OF THE WORLD

## ப்ரபஞ்சப்போக்கு.

**Srijut Gandhi Dhampathigal.**

**ஸ்ரீஜத் கந்தி தம்பதிகள்** :— சென்றமீ ஞாயிற்றுக்கிழமை 25-4-15 மாலை 2-30மணிக்கு ஸ்ரீஜத்கந்தி தம்பதிகள், ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்திற்கு (நெ. 8, ராமசாமி தெரு, மண்ணடி) விஜயம் செய்தார்கள். தம்பதிகள் உபசரிக்கப்பட்டபின், தமிழிலும், தெலுங்கிலும் அட்ரெஸ் வாசிக்கப்பட்டது. பிறகு, ஸ்ரீசாந்தானந்த மௌனியம்மாள் ஸம்ஸ்க்ருதத்தில் இனிய ச்லோகங்கள் இயற்றி வாசித்தார். ஸ்ரீஜத் கந்தி தேசபாஷைகளில் அட்ரெஸ் வாசிக்கப்பட்டதைமிகவும் கொண்டாடி, ஸமாஜ அபிவ்ருத்திக்குத் தாம் ஈச்வரனை ப்ரார்த்திக்கிறதாகவும் தெரிவித்தார். ஸஹோதரி தாயாரம்மாள், ஸ்ரீஜத்கந்தி தம்பதிகளிடமிருந்து ஆண்பாலாரும் பெண்பாலாரும் கற்றுக்கொள்ளவேண்டியவைகளைச் சுருக்கமாகப் பேசினார். அவர் பேசினதின் சாராம்சமும் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் சரிதச்சுருக்கமும் வேறு பக்கத்தில் காணலாம். ஸமாஜ மெம்பர்கள் வெகு ச்ரத்தையும் ஊக்கமும் காட்டினார்கள். மெம்பர்கள் கண்ணும் கருத்துமாய் தங்களுக்கு இடப்பட்ட வேலைகளை சரிவரச்செய்தார்கள். மெம்பர்கள் வந்திருந்தவர்கள் முகம்கோணாமல் உபசரித்தார்கள். ஒவ்வொரு மெம்பரும் பொதுக் கார்யத்தைத் தங்கள் ஸொந்த கார்யமாகவே நினைத்து வேலைசெய்தார்கள். ஸ்த்ரீகளுக்குள்ளாகவே பொதுநலத்துக்கு உழைக்கவேண்டுமென்ற எண்ணம் உதித்திருக்கிறது. இது இந்திய மாதாவின் நல்ல அதிர்ஷ்டமே.

**The Madar Vidyanu Palana Sangam.**

**மாதர் வித்யானு பாலன சங்கம்** :—இச்சங்கத்தின் இரண்டாவது வருஷோத்ஸவம் இம்மாதம் இரண்டாம் தேதி பிற்பகல் நடந்தது. மிஸ்டர் எ. வி. பார்த்தஸாரதி நாயுடு அக்ராஸனம் வஹித்தார். தேவப்ரார்த்தனை முடிந்தபிறகு, ஸெக்ரிடரி அவர்களால் ரிபோர்ட் வாசிக்கப்பட்டது. பிறகு பெண்கல்விப் பத்ராதிபர், ஸஹோதரி தாயாரம்மாள், ஸ்ரீமதி ஸௌந்தரராஜம்மாள்,



ஸ்ரீமதி இராதாக்ருஷ்ண அம்மாள், ஸ்ரீமதி நாகை நீலாம்பிகை அம்மாள், ஸ்ரீமதி பண்டிதை எஸ். க்ருஷ்ணவேணி அம்மாள், ஸ்ரீமதி சாந்தானந்த மௌனி அம்மாள் முதலியவர்கள் முறையே ஸ்த்ரீகள் அபிவ்ருத்தியடைதற்கு ஹேது, ஸ்த்ரீகளின் தற்கால நிலை, ஒற்றுமை, பக்தி மார்க்கம், தூக்கி வினைசெய், ஸ்த்ரீகளின் முன்னேற்றம் முதலிய விஷயங்களைப்பற்றி மிகத்தெளிவாகவும் மனதில் படும்படியாகவும் பேசினார்கள். பிறகு சில புருஷர்கள் உபந்யாஸகர்களையும் சங்கத்தின் கருத்துக்களையும் தாங்கிப்பேசினார்கள்.

இந்தச் சங்கம் முதல் வர்ஷத்தைக்காட்டிலும் இரண்டாவது வர்ஷத்தில் வ்ருத்தியடைந்திருக்கிறதாக ரிபோர்ட்டினால் தெரியவருகிறது. இந்தச் சங்கத்தார் நல்ல வேலை செய்துவருகிறதாக புலப்படுகிறது. கார்யதரிசி அவர்கள் இந்தச் சங்கத்தின் அபிவ்ருத்திக்கு வெகு பாடுபடுகிறார். அடுத்த வர்ஷம் இச்சங்கம் வெகு வ்ருத்தியடையும். ஸ்ரீமான் வேதாசல ஸ்வாமிகள் சொன்னபடி இச்சங்கத்தார் ஜீவகாருண்ய விஷயமாக உழைப்பது அவச்யமாகும். அப்போது தான் இச்சங்கத்தார் ஸ்த்ரீகளுக்கு உண்மையாக வேலை செய்ததாகும்.

**Women Conference & the War.**

**ஸ்த்ரீகளின் கான்பரன்ஸூம் யுத்தமும்** :— உலகத்தில் ஜனத்தொகை ஜாஸ்தியாகக் குறைகிறதற்கு மூன்று முக்யகாரணங்கள் உள : பஞ்சம், கொள்ளைநோய், யுத்தம் ஆகியவைகளே. இவைகள் வெகு நாள் நீடித்தால் பலத்த ராஜாங்கத்தாலேயும் தாங்கமுடியாது. இம்மாதிரி கொடிய வ்யாதிகள் ஈச்வரனால் ஏவப்படுகின்றனவேயொழிய வேறில்லை.

இப்போது யூரோப்பில் பலமான யுத்தம் நடக்கிறது. இது ஸாதாரண யுத்தமல்ல. இந்த யுத்தத்தினால் யூரோப் முழுமையும் கலங்கிநிற்கிறது. இது பரமாத்மாவினால் தேசங்களுக்குப் பின்னால் ஸுகமளிக்கும் பொருட்டே ஏவப்பட்டது. தற்காலம் இந்த பலமான யுத்தத்தில் ஜெர்மெனியாருக்கு நஷ்டமதிகம். இந்த யுத்தம் ஒன்பது மாதமாக நடக்கிறது. யுத்தம் செய்யும் தேசத்தார்களுக்குண்டான கஷ்ட நஷ்டங்கள் பல. யுத்தம் செய்யும் ஒவ்வொரு

தேசத்திலும் நல்ல யவுனபுருஷர்கள் காண்பது அரிதாகவிருக்கிறது. இந்த கோரங்களையும், ஜனங்களுக்கு ஏற்படும் அசௌகர்யங்களையும் உத்தேசித்து, இங்கிலண்ட்தேசத்து ப்ரபல 81 இங்கிலீஷ் ஸ்த்ரீகள் ஹாலண்டுக்கு ப்ரதானபட்டணமாயிருக்கப்பட்ட ஹேக்பட்டணத்தில், சண்டைகள் செய்யும் தேசத்து ஸ்த்ரீகள் கூடப்போகும் கான்பரன்ஸுக்குப் போகிறார்கள். கான்பரன்ஸின் முக்கிய கருத்து என்னவெனின், சண்டை ஒழிந்து ஸமாதானம் செய்துகொள்ளும்படி யுத்தம் செய்யும் கவர்ன்மெண்டார்களை வேண்டிக்கொள்வது. இது நடக்கப்போகும் தேதி குறிக்கப்படவில்லை. சீக்ரம் நடக்கும் போலிருக்கிறது. இந்த கான்பரன்ஸின் வேண்டுகோளுக்கு எவ்வளவு தூரம் சண்டைசெய்யும் ராஜாங்கத்தார் இணங்கப்போகிறார்களோ? உயர்ந்து நாகரீகமடைந்த தேசங்களில் ஸ்த்ரீகளின் செல்வாக்குக்கு எவ்வளவுதூரம் கௌரவம் வைக்கப்போகிறார்களோ? இதன் முடிவை நாம் எதிர்பார்க்கிறோம்.

**Provincial Social Conference.**

**மாகாண ஆசார சீர்திருத்த கான்பரன்ஸ்:**—இம்மாதம் நெல்லூரில் இவ்வருஷத்திய கான்பரன்ஸ் வழக்கம்போல் நடந்தது. ஆசார சீர்திருத்தத்துக்குரிய பல தீர்மானங்கள் தீர்மானிக்கப்பட்டன. ருதுமதி விவாஹம் சட்டமாக்கவேண்டுமென்று மிஸ்டர் ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் வெகு ப்ரயாஸைப்பட்டார். மிஸ்டர் ஸத்யமூர்த்தி அவர்கள் ருதுமதி விவாகம் சட்டமானால் ஸமூகத்துக்கு பெருத்த தீங்கு விளைவிக்குமென்று பேசினார். கடைசியாக அந்தத் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. ஆசார சீர்திருத்தக்காரர்கள் சேர்ந்து ருதுமதி விவாஹத்தைப்பற்றி சீக்ரம் ஒரு தீர்மானத்துக்கு வருவது நலம்.

---



## WOMEN & THE MANUFACTURE OF GRASS MATS.

**By**

**Sri R. Jayalakshmi Ammal.**

### ஸ்த்ரீகளும் பாய்செய்தலும்

நம் சென்னை ராஜதானியின் வடஆற்காட் ஜில்லாவிலும், வந்தவாசியிலும், ஆம்பூரிலும், மலபாரிலும் இத்தொழில் ஜாஸ்தியாக செய்யப்படுகிறது. மலபாரில் சாயம்போட்ட பாய்கள் அதிகம்; இத்தொழில் செய்பவர்கள் முக்யமாக குறவர் என்று சொல்லப்படும் வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஆனால் ஸ்த்ரீ தொழிலாளிகள் தான் நிரம்ப அதிகம். இப்பாய்கள் கோரை என்று வழங்கும் ஒருவித புற்களால் செய்யப்படுகின்றன. கத்தாழை நார்களாலும் பாய்கள் பின்னலாம். இப்புற்கள் ஜாஸ்தியாக ஆற்றங்கரைகளிலும் குளக்கரைகளிலும் வளரும். கோரைப்புற்களை தனியாகவும் பயிரிடுகிறார்கள். ஒரு ஏகர் நிலத்தில் கோரைப்புற்கள் பயிரிட்டால் நிலத்தின் ஸாரத்துக்குத் தகுந்தபடி ரூ 200 முதல் 350 வரையில் லாபமுண்டாகும். இக்கோரைகள் நாலு அல்லது நாலரையடியாயிருக்கும்போது அறுக்கப்படுகின்றன. அறுத்த கோரைகளை வெய்யிலில் காயவைப்பார்கள். கோரைகள் நீர் சுருங்கி நல்ல பதமாயிருக்கும்போது கோரைக்கத்தியால் நாலு அல்லது ஐந்து பிளவாக நெடுக்கக் கிழிக்கப்படுகின்றன. பாய்கள் வெகு நயமாயிருக்க வேண்டுமானால் பத்து பிளவாகக் கிழிப்பார்கள். கிழித்த கோரைகளை நன்றாய் வெய்யிலில் காயவைத்து கட்டிவைப்பார்கள்.

கோரைகளுக்குச் சிகப்புச்சாயம் போடவேண்டியிருந்தால், கிழித்த கோரைகளை செம்மரத்துண்டு (Sappan wood) களோடு சுத்தத் தண்ணீரில் போட்டுக் காய்ச்ச, சில மணி நேரம் கழித்து தெளிந்த சிகப்பு நிறமாகிவிடும். சுத்தச் சிகப்பு ஆகவேண்டுமென்றால், இன்னும் இரண்டுதரம் அதையே காய்ச்சினால் போதும். கருப்புச்சாயம் போடவேண்டியிருந்தால் சிகப்பான கோரை நார்களை களிமண்ணில் இரண்டொருதினம் புதைத்துவைத்தால் கருப்புச்சாயமுண்டாகிவிடும்.

விலை அதிகமுள்ள பாயை ஸன்னக்கோரை நார்களாலும், விலை குறைந்த பாயை கனத்த கோரை நார்களாலும் செய்கிறார்கள்.

பாய் செய்வது மிகவும் லகுவான கைத்தொழில். இத்தொழிலை ஒரு வாரத்தில் ஒருவள் கற்றுக்கொள்ளலாம். ஆறு அடி நீளம், மூன்று அடி அகலமுள்ள ஒரு பாயைப் பின்னவேண்டுமானால் எட்டு மணி செல்லும். ஸாமர்த்தியமும் சுறுசுறுப்புமுள்ளவள் ஒரு நாளைக்கு இரண்டு பாய் பின்னுவாள். பாய்த்தொழிலில் நல்ல லாபமுமுண்டு. நூற்றுக்கு ரூ. 40 முதல் 75 வரையில் லாபம் ஸம்பாதிக்கலாம்.

ஸாதாரணமாக ஒரு ஏகராவில் 2,500 கோரைகள் தாராளமாக விளையும். 3,000 பாய்கள்வரை பின்னலாம். மைஸூர் ஸமஸ்தானத்தில் கோலார் போன்ற இடங்களில் பஞ்சம ஸ்த்ரீகள்தான் இத்தொழிலைச் செய்கிறார்கள். அங்கு நல்ல விலைக்கு பாய்கள் விற்கப்படுகின்றன. தஞ்சாவூர் ஜில்லா, நன்னிலம் தாலூக்காவிலுள்ள சில ப்ராஹ்மண க்ராமங்களில் ப்ராஹ்மண ஸ்த்ரீகள் இத்தொழிலை வீட்டிலேயே செய்துவருகிறார்கள். இத்தொழிலை ஸ்த்ரீகள் வீட்டுத்தொழில்களில் ஒன்றாக வைத்துக்கொள்ளலாம். ஸ்த்ரீகள், ஒழிந்த நேரங்களில் யாதொரு கஷ்டமின்றி வெகு ஸொல்பமுதலுடன் வீட்டில் ஆரம்பித்து வ்ருத்தி செய்யலாம். இது கடினமான தொழிலுமன்று. புருஷஸம்பாத்யத்தையே எதிர்பார்த்து நிற்கும் குடும்பங்களில், ஸ்த்ரீகள் இம்மாதிரி சிறு தொழில்களினால் லாபமடைந்து குடும்பத்தை வெகு ஸௌகர்யமாகவைத்து நடத்தலாம். இதுபர்யந்தம் குடும்பங்களில் புருஷர்களின் ஸம்பாத்யத்திலேயே திருப்திகொண்டு ஸ்த்ரீகள் யாதொரு ஸம்பாத்யமில்லாமல் ஸுகஜீவியாயிருக்க முயன்றதுபோல இனி இருப்பது அஸாத்யம். குடும்பம் கஷ்டமின்றி நடப்பதற்கு ஸ்த்ரீகளும் கௌரவமான தொழில் செய்து குடும்பச் செலவை லகுப்படுத்துவது அவச்யமாகவிருக்கிறது. இப்போது ஸ்த்ரீகள் படிக்கவும், படிப்பதால் அறிவு விசாலிக்கவும், அதனால் உலகவிவகார ஞானம் அதிகப்பட, தங்கள் ஸம்பாத்யம் கௌரவமாயிருக்கவேண்டுமே யொழிய, தாங்கள் ஸம்பாதிப்பதே கூடாதென்ற தப்பான எண்ணம் மாறி வரவேண்டும். இப்பாய்த்தொழிலில் படித்த ஸ்த்ரீகள் நுழைந்து வேலை செய்தால் வெகு லாபமுண்டாகும். நம் ஸஹோதரிகள் இந்த லகுவான தொழிலில் ப்ரவேசிப்பது மேன்மை.

ஆர். ஜெயலக்ஷ்மி.



# ANNADANAM.

**By**
**Sri Rudrakotisvarar.**

## அன்னதானம்.

(மார்ச்மீ பத்ரிகையின் தொடர்ச்சி.)

இனி அன்னதானஞ் செய்பவர் பிராணதானஞ் செய்பவராதலோடு,

"ஈவான் றருமமுதலுந் துயக்கறவே" தாம் அளித்த அன்னத்தினால் பசி நீங்கப்பெற்ற அவ்வுயிருக்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினையும் தானஞ் செய்தவருமாவர்.

இத்தேகத்திற்கும், இதனால் அடையப்படும் தரும முதலியவற்றிற்கும் அன்னமே முதன்மையாகிய காரணமாகும். நாம் ஆராய்ந்து பார்த்தால், உலகத்தில் பிள்ளைகளுக்கு மாதவை ஒப்பான காரணம் இல்லாமைபோல, அன்னத்திற்கு ஒப்பான காரணம் ஒன்றுமில்லை. இதை,

"அன்னமாக்கை தனையாக்கு மதனாலற முன்னுளவாகு
மன்னமதனா லனைத்தினுக்கு மதிககாரண மதனாலே
யன்னமதனுக் கொப்பான காரணமில்லை யாயுங்கா
லன்னையான காரணமும் புதல்வர்க்குளதோ வகலிடத்தே"

என்பதனால் அறிக.

இன்னமும் இது,

"தாயின்றிப் பிள்ளை யிலாவது போல
உணவின்றிச் சரீர மில்லோம்"

என்பதனாலும் நன்கு உணரப்படும். இதுபற்றியே அன்னமே சிருட்டி, திதி, சங்காரம் என்னும் மூன்று தொழில்களையும் செய்யுங் கருத்தாக்கள் மூவருமாகு மென்று புராணங்கள் கூறுகின்றன. இதனை,

அன்னமதனை யுலகனைத்துமாக்கு மயனென் றறையுமறை
மன்னுமுலகந் தனைக்காக்கு மாயனெனவு மதித்துரைக்குஞ்
சொன்னவுலக மனைத்தினையுந் துடைக்குமரனு மெனச்சொல்லு
மின்னமுறையா லெவற்றினுக்கு மிஃதே முதலென்றெண்ணுகவே

என்பதனால் அறிக. இவ்வாறு அன்னத்திலேயே யாவும் விளங்குகின்

றனவாதலின் அன்னதானமே கழிபெருஞ்சிறப்புடையதென்று பேரறிவாளர்கள் தரும சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் கூறுவாராயினர்.

யாம் மேலே குறிப்பிட்ட மணிமேகலை என்பவள் காவிரிப்பூம்பட்டினத்தில் புத்தசங்கத்திலிருந்த அரவணவடிகள் என்னும் முனிவரைத் தரிசித்தபோதும் அம்முனிவர் அம்மணிமேகலையை நோக்கி, ஓ! மணிமேகலை!

"மக்கடேவரென விருசார்க்கு
மொத்தமுடிவினொ றறமுரைக்கேன்
பசிப்பிணி தீர்த்தல்"

எல்லா உயிர்களுடைய பசிப்பிணி தீரும்பொருட்டு அன்னம் அளிப்பாயாக! என்று யாவர்க்கும் உடன்பாடாகிய மிகப்பெரிய நல்ல தருமத்தை எடுத்து உபதேசிப்பாராயினமையும் அறிக. அதன்படியே மணிமேகலை என்பாள் தான் மணிபல்லவத்தினின்று கொண்டுவந்த அமுதசுரபி என்னும் பிச்சை பாத்திரத்தைக் கையிலேந்திக்கொண்டு கற்புடைய மாதர்கள் இட்ட தருமத்தைப்பெற்று காவிரிப்பூம் பட்டினத்தில் எங்கும் போய் பசியால் மெலிந்து வருந்துவோர்களை அருளுடன் பார்த்து மனம் உருகி இனிய மொழிகளைக் கூறி அவர்களுக்கு அன்னம் அளித்து அவர்களை மகிழ்வித்து வந்தனள். அன்றியும், அக்காலத்தில் காஞ்சிபுரத்தில் மழையில்லாமையினாலும், ஐயமிடுவோரில்லாமையினாலும் மிக்க வறுமையுண்டாகி பல உயிர்களும் பசித்துன்பத்தினால் மிகவும் வருந்தி இறப்பதுகேட்டு மனம் இரங்கி, காஞ்சிபுரத்திற்குச்சென்று அப்போது அந்நகரை அரசாண்டுவந்த துணையிளங்கிள்ளியென்னுஞ் சோழ அரசனால் அமைக்கப்பட்ட தருமதவனம் என்னுஞ் சோலையில் தங்கி தன்னுடைய ஐயக்கடிஞையைக் கையிலேந்திக்கொண்டு உண்ணுதற்கு எல்லா உயிர்களும் வருகவென்று அன்புடன் அழைத்தமையும், அவ்வாறு அழைக்கவே,

"மொய்த்த மூவறு பாடை மாக்களிற்
காணார் கேளார் கான்முட மானோர்
பேணா மாக்கள் பேசார் பிணித்தோர்
படிவ நோன்பியர் பசிநோ யுற்றோர்



மடிநல் கூர்ந்த மாக்கள் யாவரும்
பன்னூ றாயிரம் விலங்கின் றொகுதியு
மன்னுயி ரடங்கலு வந்தொருங் கீண்டி"

பலவேறு பாஷைகள் வழங்கும் மக்களுள் குருடர், செவிடர், ஊமர், முடவர், பிணியர், பக்தர்கள், யோகிகள், ஞானிகள், துறவிகள், தரித்திரர், பசிநோய் உற்றவர், தாய்தகப்பன்மாரை இழந்து பாதுகாப்பாரில்லாத குழந்தைகள் முதலியவர்களும், மற்று பல நூறாயிரம் மிருகக்கூட்டங்களும், ஏனைய சீவர்களும் ஒருங்குசேர்ந்து உணவுகொடுக்கப்பெற்று இனிது உண்டு பசிநோய் தீர்ந்து மகிழ்ந்தமையும் அறிக. இதுவல்லாமலும், அம்மணிமேகலையின் காலத்திற்குச் சிறிது முன்பு சாலி என்னும் ஒரு பார்ப்பனியின் மகனாகிய ஆபுத்திரன் என்பான் மிக்க கருணையோடுகூடி தருமஞ் செய்தலையே தன் பெருங்கடமையாக மேற்கொண்டு மதுரைப்பட்டினஞ் சென்று பிச்சை பாத்திரத்தைத் தன் கையிலேந்தி மனைகள் தோறுஞ் சென்று வாங்கிவந்த உணவை,

"காணார் கேளார் கான்முடப் பட்டோர்
பேணுந ரில்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி"

அதாவது—குருடர், செவிடர், முடவர், பாதுகாப்பாரில்லாத அகதிகள், பிணியாளர் முதலிய யாவரும் வருகவென்று அன்புடன் அழைத்து அவர்களையெல்லாம் தன்னுடன் ஒருங்குண்ணச்செய்து மகிழ்வித்தமையும், அதனால் உண்பதற்காக மக்கள் பலரும், மற்று விலங்குகளும், பறவைகளும் அவனைப்பிரியாமல் அன்புடன் சூழ்ந்துகொண்டமையும் அறிக.

உருத்திரகோடீசுவரன்.

---

ஐச்வர்யத்தை பெரிய பாரமாக நினைக்கவேண்டும். ஐச்வர்யத்தை ஸரியாக உபயோகிக்காவிடில் பின் கஷ்டங்களை அனுபவிக்கவேண்டிவரும்.

ஆர்டஸ்.

# RAJA VIKRAM AND THE FAKIR

BY

**Sri Yalambal.**

## விக்ரமார்க்க ராஜாவும் பக்கிரியும்.

(ஏப்ரல்மீப் பத்ரிகையின் தொடர்ச்சி.)

பிறகு ராஜா ஸமஸ்த ராஜ்யாதிகாரத்தைத் தமதுமந்திரிமார்கள் கையில் ஒப்புவித்துவிட்டு குதிரைமேலேறி சீனு தேசத்துக்குப் புறப்பட்டார். மந்திரிமார்கள் தனியாக புறப்படக்கூடாதென்று எவ்வளவு தடுத்தும் ப்ரயோஜனப்படாமற்போயிற்று. வெகுநாள் குதிரைமேல் ப்ரயாணம் சென்றபிறகு ஒரு வழிப்போக்கனை "இது யாருடைய ராஜ்யம், தம்பி" என்று கேட்க, அவன், "தெரியாதா, பரம நல்லவரான விக்ரமாதித்திய ராஜனுடையது" என்று சொன்னான்.

இன்னும் சிலநாள் ப்ரயாணமாகியும் தம்முடைய ராஜ்யமாகவேயிருக்கக் கண்டார். தம்முடைய ராஜ்ய விஸ்தீர்ணத்தையும், செல்வத்தையும் உத்தேசித்தாவது, இந்த யோகியை ஜெயிக்கிற வழியைத் தேடவேண்டும் என்று மனதில் திடப்படுத்திக்கொண்டார். வெகு மாதங்கள் ப்ரயாணம் சென்று சீனுதேசத்துத் தலைநகரத்தையடைந்தார். அன்று இரவாய் இருந்தது. இரவில் போக மனமில்லாதவராய் அங்கு ஒரு தோட்டத்தில் இறங்கி குதிரையை ஒரு மரத்தடியின் வேரில் கட்டிவிட்டு, தாம் அந்த மரத்தடியில் அயர்ந்து நித்திரைபோய்விட்டார். அங்கு சில திருடர்கள் அந்த வழியாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள். இந்தக் குதிரையைக் கண்டது திருடப் போகிறதற்கு நல்ல சகுனமெனக்கருதி, நாம் கொள்ளையடித்துஜெயத்தோடுவந்தால் கொள்ளையடித்தவைகளில் இந்தக் குதிரைக்குபங்கு கொடுக்கிறதாக திருடத்தலைவன் சொல்லி, திருடபுறப்பட்டுச்சென்றார்கள். இந்தத்திருடர்கள்பொக்கிஷத்தில் நல்லகொள்ளையிட்டு வரும்போது அக்குதிரையினிடம்வந்து குதிரைக்குச் சேரவேண்டிய தொன்பது லக்ஷம் பெறுமானமுள்ள ஒரு வயிரஹாரத்தை அக்குதிரையின் கழுத்தில்போட்டுப் போய்விட்டார்கள். இதற்குள் அரண்மனை பொக்கிஷத்தில் நடந்தவைகள் வெளியாயின. ராஜ்ய உத்யோகஸ்தர்கள் நாலாபக்கமும் சென்று தேடிப்பார்த்தார்கள். கடைசியாக இந்தக் குதிரை கட்டியிருக்கிற இடத்தை வந்துபார்க்க, ஒரு வயிர



13

ஹாரத்தை குதிரையின் கழுத்தில் பார்த்தார்கள். உடன் அங்குகீழ் தூங்கிக்கொண்டிருக்கிற விக்ரமராஜனை திருடனென்று பிடித்து, சீனு சக்ரவர்த்தியின்முன் நிறுத்திவைத்தார்கள். தாம் விக்ரமராஜா என்று சொல்லிக்கொள்வதற்கு இஷ்டமில்லை. குற்றப்பத்ரிகை வாசிக்கப்பட்டு, இரண்டு கைகளையும் கால்களையும் வெட்டியெறியும்படி உத்தரவாய்விட்டது. கொலையாளிகள் இரக்கம் பாராமல் தங்கள் வேலையைச் சரியாய்ச் செய்துவிட்டுச் சென்றார்கள்.

ஸஹிக்க முடியாதவராய் வெகுக்கஷ்டப்பட்டு வருந்தினார். யாரால் தான் இந்த தண்டனையை பொறுக்கமுடியும். பிராணன் போனாலும் மனம் ஒரு விதமாக இருக்கும். மரணாவஸ்தையில் கஷ்ட மனுபவிக்கிறது மிகவும் கொடிது. இப்படியாக ஒரு தெருமூலையில் சக்தியின்றி வெகு கஷ்டப்படும்பொழுது ஒரு வாணியன் அவ்வழியாய் அன்றிரவுபோக நேர்ந்தது. கைகளும் கால்களுமின்றி கஷ்டப்படுவதைப்பார்த்துப்போக மனம் ஸஹியாமலும், ராஜன் ரூபத்தைக்கண்டும், அவனை தோளில் தூக்கி வீடு சென்றான். இந்தமுடவனை வாணியன் ஸம்ஸாரம் பார்த்தவுடன் புருஷனை கண்டிக்க ஆரம்பித்தாள். "ஏ முட்டாளே! நீ செய்த காரியம் என்ன! சக்ரவர்த்திக்குத் தெரிந்தால் இந்த முடவனை கூட்டிவந்து ரட்சிக்கிறதற்கு உன்னை சிரஸாக்கினை பண்ணிவிடுவாரே! அவனை இருந்த இடத்தில் விட்டுவிட்டுவா!" என்று சொல்ல, மஹாதயாளகுணமுள்ள வாணியன் தன் பெண்சாதி சொன்னதைக்கேளாமல் "பெண்சாதியே! இப்படி நிர்பாக்கியனாயிருக்கப்பட்டவனை என் கண்ணால் பார்த்துவிட்டு சும்மா வரமுடியுமா? இவன் என்னுடைய அருமைக்குழந்தை. மனிதர்களுக்கு ஈவு, இரக்கம் வேண்டாமா? நீ சப்தம் போடாமல் நான் சொன்னதைக்கேள். நீயும் இவனை உன்னுடைய குழந்தையாக பாவிக்கவேண்டும். நீ உடன் போய் என் பிள்ளைக்கு சிகித்ஸை செய்கிற வழியைத்தேடவேண்டும்" என்று வெகு பொறுமையுடன் சொல்ல, பெண்சாதியும் மனமில்லாதவளாய் புருஷன் சொற்படி நடந்து இந்த முடவனுக்கு வேண்டிய சிகித்ஸைகள் செய்ய ஆரம்பித்தாள். இப்படியாக சில நாள் கழித்து காயங்கள் ஆறிதேகத்திலும் தேறி வந்தான். வாணியன் மிக அருமையாய் தன் பிள்ளையைப்பார்த்து அவனுக்கு வேண்டியவைகளையெல்லாம் கொடுத்து பராமரித்து வந்தான்.

(வரும்.)

# SRI KASTURI BAI

**By**

**Historious.**

## யோகினி கஸ்தூரிபாய்.

ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்திற்கு ஸ்ரீகந்தி தம்பதிகள் 25-4-15 ல் விஜயம் செய்தபோது 'பெண்கல்வி' ப்பத்ராதிபர் ஸஹோதரி தாயாரம்மாள் உபந்யாஸம் செய்ததின் ஸாராம்சம்.

"இம்மாது யார்? இம்மாது தாம் முன் சென்றிராத நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள தென் ஆப்பிரிக்காவுக்கு ஏன் சென்றார்? அவர் அங்கு செய்த கார்யமென்ன? அவரை இந்திய ஸ்த்ரீகள் ஒரே மனதாய் யோகினி என்றழைத்துத் துதி செய்யக் காரணமென்ன? இவை போன்ற கேள்விகளின் விடைகளை யறியவும் அவரை நேரில் காணவும் அவர் செய்த கார்யங்களை யறியவும் எவருமே ஆவல் கொள்ளாமலிரார்.

நம் ஸஹோதரிகளுக்கு இவரைப்பற்றிச் சுருக்கமாகத் தெரிவிப்போம்.

பம்பாய்க்கு வடக்கில் கத்தியவார் என்னும் ஸமஸ்தானத்தைச் சேர்ந்த போர்பந்தர் என்னும் ஒரு சிறு ராஜ்யம் இருக்கிறது. அந்த ராஜ்யத்தில் வைச்ய வகுப்பைச் சேர்ந்த கோகுல்தாஸ் என்னும் வர்த்தகருக்கும் வஜுபாய் என்னும் மாதுசிரோமணிக்கும் 1869௵ நமது கதாநாயகி பிறந்தார். இவருடன் கூடப்பிறந்த மாதவதாஸ் என்பவர் தகப்பனாரைப்போல பம்பாயில் வர்த்தகம் இப்பவும் செய்துவருகிறார்.

இவர் பதின்மூன்றாவது வயதில் மனித ச்ரேஷ்டர் என்று பெயரெடுக்கப்பட்ட ஸ்ரீமஹார்ஷி கந்தியை விவாஹம் செய்துகொண்டார். ஸ்ரீ கந்தி தம்பதிகளுக்கு நான்கு குமாரர்கள்: (1) ஹரிலால், (2) மணிலால், (3) தேவிதாஸ், (4) ராமதாஸ். முதல் இரண்டு குமாரர்கள் போர்பந்தரிலேயே பிறந்தார்கள். கடைசி இரண்டு குமாரர்கள் தென் ஆப்பிரிக்கா டர்பன் நகரில் பிறந்தார்கள் இப்போது நான்கு குமாரர்களும் ஹரித்துவாரத்தில் குருகுலவாஸம் செய்து வருகிறார்கள்.

யோகினி கஸ்தூரிபாய் தமது கணவர் மஹார்ஷி கந்தியோடு 1896௵ தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றார். தென்னாப்பிரிக்கா



சேர்ந்த நாள் முதற்கொண்டு 1914௵ செப்டம்பர் ௴ வரையிலும் இவர் பட்ட கஷ்டங்கள் சொல்லிமுடியா. தமது கணவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி அவருக்கு ஒருமந்திரியாகவும், ஸமயோசித புத்திகள் சொல்லி படைவீரனாகவும், பக்கத்தில் காத்துநின்று வேலைக்காரியாகவும் பாதங்களில் படிந்துநின்றிருக்கிறார். தென்னாப்பிரிக்க இந்திய ஸ்த்ரீகளுக்கு ஒரு திலகம்போல் விளங்கி, ஒரு குடும்ப ஸ்த்ரீ இன்னது செய்யமுடியுமென்று காண்பித்திருக்கிறார். 1911௵ இவருடன்கூட முப்பது இந்திய ஸ்த்ரீகள் ஜெயில் வாஸத்துக்கு ஆளானார்கள். ஏன் ஜெயில் வாஸத்துக்கு ஆளானார்கள்? தாக்காமல் தாக்கும் கொள்கையை அனுஷ்டித்தார்கள். இந்தக் கொள்கையை அனுஸரிப்பானேன்? தென்னாப்பிரிக்கா சட்டத்தின்படி ரிஜிஸ்ட்ரார் முன்னிலையில் வாக்குமூலம் கொடுத்து கையெழுத்து போடாமலிருக்கிற வரையில், இந்தியாவில் செய்துகொண்ட அவரவர்கள் மதாசாரப்படி ஹிந்துக்களின் விவாஹமாகட்டும் மஹமதியர்களின் விவாஹமாகட்டும் செல்லாது. அந்த மாதிரிச் சட்டங்கள் எடுக்கப்படுகிறவரையில் ஸ்த்ரீகளும் புருஷர்களும் ஒரு மனதாய் எதிர்த்தார்கள். 1914௵ இந்தியர்கள் பேரில் ஏற்படுத்தியிருந்த எல்லா அநீதிச்சட்டங்களும் எடுக்கப்பட்டுப் போயின. ஸ்ரீகந்தி தம்பதிகள் தென்னாப்பிரிக்காவில் வசிக்கும் இந்தியர்களின்பேரில் சுமத்தியிருந்த அநீதச்சட்டங்களை எடுத்தாகிற வரையிலும் இருந்து பிறகு, தம் தாய்நாடாகிய இந்தியாவுக்கு உழைக்க வந்திருக்கிறார். நமது பாரத மாதா வெகு அன்புடன் தமது குழந்தைகளை உபஸரித்து அவர்களுக்கு ஆசீர்வாதம் செய்து இந்தியாவுக்கு உழைக்க ஆக்ஞையிட்டிருக்கிறாள். இப்போது ஸ்ரீகந்தி தய்பதிகள் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம்செய்து வருகிறார்கள். அவர்கள் சென்னைக்கு வந்தது நம் பாக்யமே, இந்திய ஸ்த்ரீகள் எல்லோரும் ஸ்ரீமதி கஸ்தூரிபாய் அவர்களை தலைமையாகக்கொண்டு அவரைப் பின்பற்றுவதே நமது கடமை முற்காலத்தில் இந்திய ஸ்த்ரீ ரத்னங்கள் செய்திருக்கிற பராக்ரமத்தையும் புருஷனுக்கு ஏற்ற துணைவியாயிருந்ததையும் புத்தகங்களில் படித்து இருக்கிறோம். இப்போது ஸகல குணங்களும் நிறைந்திருக்கிற ஸ்த்ரீ ரத்னத்தைப் பார்க்கிறோம். ஈச்வரன் இனி நமது ஸஹோதரிக்கு உழைக்க திடம் கொடுப்பாராக" என்று முடித்தார்,

---

## PEACOCK.
### மயில்.

உலகில் அழகாய்க் காணப்படும் பக்ஷிவர்க்கங்களில் மயிலும் ஒன்று. இது சாதாரணமாய்க் கானகத்தில் வசிக்கின்றது; இது மிகவும் அழகாய்க்காணப்படினும் இதன் குரல் கர்ணகொடூரமானது.

இப்பக்ஷி நமது தேசத்தில் மேன்மையாகக் கருதப்படுறது. இதன் தேகம் மிகவும் மிருதுவானதும் பலவர்ணமுமுடையது. இதன் பரிசுத்தத் தன்மையினாலேயே இது ஸரஸ்வதி, சப்ரமண்ய மூர்த்திகளின் வாகனமாயிருக்கிறது. இது உமாதேவியினால் தெரிந்தெடுக்கப்பட்ட வாகனமாதலின் இதன் பரிசுத்தம் நன்றாய் விளங்குகிறது.

இவ்வழகான பக்ஷி நமது தேசத்தில் எதேச்சையாய்க் காணப்படுகிறது. அநேக தனவான்கள் இதன் அழகை மெச்சி இதைத் தங்கள் க்ரஹத்திலேயே வளர்க்கிறார்கள். இதன் முக்கிய உணவு கனிவர்க்கங்கள். இது அடிக்கடி பயிர்களை நாசஞ்செய்துவிடுவதால் பயிரிடுவோராகிய வேளாளர் மிகுந்த துன்பமடைகிறார்கள்.

கீரி, கருடன் முதலிய போல இதுவும் பாம்புக்குச் சத்துருவாகின்றது. இது, பாம்பைக்கண்டவிடத்து அதைத் தன் மூக்கினால் குத்தி வதைக்கின்றது. ஆகையால் மயில் வசிக்கும் வீட்டிலும் நாகங்கள் உறைய அஞ்சும்.

இது பலவர்ணங்களுடைய பக்ஷியாகிலும் இது செய்யும் டம்பத்திற்கோரளவில்லை. ஆனதுபற்றியே யாதேனு மொருவன் வீணாய் டம்பஞ்செய்துகொள்வானேயாயின் "அவன் மயிலைப்போல நடிக்கிறான்" எனச் சொல்வது வழக்கமாயிருக்கிறது. ஆகையால் இப்பக்ஷி வீண்டம்பத்திற் கறிகுறியாகிறது.

மேகக்கூட்டங்கள் மயிலினாட்டத்திற்குக் கொண்டாட்டமேயாம். சாதாரணமாக மழை பெய்தலும் மேகங்கள் ஆகாயத்தில் சேருதலும் ஸாயங்கால வேளைகளிலாகையால் அத்தருணத்திலேயே மயில் தனது தோகையை விரித்தாடத் தொடங்குகின்றது இப்பக்ஷி பரிசுத்தமானதுபற்றியும் அழகானதுபற்றியும் சுப்ரமண்ய ஸ்வாமியின் வாகனமாய் வளர்க்கப்படுகின்றது.

S. R.

# பெண் கல்வி. 143

---

## விஷய சூசிகை—ஜூன்மீ 1915.

I. கீதத்திரட்டு.

i. ஹரிச்சந்திர நாடகக்கும்மி.

II. ப்ரபஞ்சப்போக்கு.

i. ஸ்ரீ சிதம்பர ஸ்வாமிகளின் குருபூஜா—ஸ்த்ரீ போலீஸ்காரர்கள்—ஆசாரசீர்திருத்தக்காரர்கள்.

III. விசேஷ வ்யாஸங்கள்.

i. பெண்களின் கல்வியபிவ்ருத்திக்கு ஒரு வழி—ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.

ii. அன்னதானம்—ஸ்ரீ உருத்திர கோடீச்வரர்.

iii. பூதலப்படை யமைப்பு—சிவத்யானந்தன்.

iv. கிளி—ஸ்ரீ ரெங்கஸாமி அய்யங்கார்.

v. ஸ்த்ரீகளின் வ்யாதிகள்—டாக்டர். ஜெகதீசய்யர்.

IV. விசேஷக் குறிப்புகள்.

i. குழந்தைகள் விஷயம்.

ii. சமையலறையும் சமையலும்.

iii. அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

iv. நானாசங்கதி.

v. ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

THE

# FEMALE EDUCATION

AN ILLUSTRATED MONTHLY MAGAZINE

# பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு மாதப் பத்ரிகை

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

பத்ராதிபர்:
ஸஹோதரி ஆர். தாயாரம்மா.

மானேஜர்:
அ. சேஷாத்ரி சர்மா.

Vol. 4. தொகுதி 4 } இராக்ஷஸ௵ ஆனி௴ June 1915. { No. 9. பகுதி 9.

## The "Female Education."

An Illustrated Tamil Journal with the object of enlightening and elevating ladies. It has got a long list of eminent gentlemen and ladies as contributors.

| | Subscription. | Advertisement per page. |
|---|---|---|
| Yearly .. | 2—8—0 | 72—0—0 |
| Half yearly | 1—8—0 | 40—0—0 |

Special charges for title pages.

**Manager,**
**The "Female Education",**
**Madras, E.**

## "பெண் கல்வி."

ஸ்த்ரீகள் அபிவ்ருத்தியைக்கருதி நடத்தப்படும் பத்ரிகை. சித்ரஸஹிதமாய் வெளிப்படும். இதற்கு ப்ராபல்யமான ஸ்த்ரீகளும் புருஷர்களும் வ்யாஸம் எழுதுகிறார்கள்.

| | சந்தா. | விளம்பரசார்ஜ் 1-பக்கம். |
|---|---|---|
| வருஷம் | 2—8—0 | 72—0—0 |
| 6 மாதம் | 1—8—0 | 40—0—0 |

டைடில் பேஜ்களுக்கு ப்ரத்யேகமான சார்ஜ்.

மானேஜர்,
"பெண் கல்வி" ஆபீஸ்,
சென்னை, E.

145

# ANTHEM ANTHOLOGY

# கீதத்திரட்டு.

## ஹரிச்சந்திரன் சரித்ரக் கும்மி.

ஸ்ரீமதி சுந்தராம்மாளால் பாடப்பட்டது.

(முன்௴ தொடர்ச்சி)

---

7-வது கட்டம்.

(பார்த்துமந்த துஷ்யந்தன் என்ற மெட்டு.)

வந்தவொரு பெண்கள் தன்னை
வகையுடனே மன்னன்கண்டு
ஆதரவுட னழைத்து
அருகில்நின்று ஏதுசொல்வான். (1)

சுந்திர வடிவுள்ளதோர்
தோகையரே நீங்களெல்லாம்
இங்குவந்த காரணத்தை
எந்தனுக்கு உரைத்திடுவீர். (2)

இமயமலை சாரல்தனில்
இருப்பது நாங்களெல்லாம்
நாட்டியமாடி பரிசுபெற
நாடிநாங்கள் வந்தோமையா. (3)

உங்களுடைய பாட்டுக்களை
உகந்துமே கேட்டுமிப்போ
பரிசுகள் மிககொடுத்து
பாங்குடனே அனுப்பிவைப்பேன். (4)

ஆனால்ரொம்ப நல்லதென்று
ஆடல்பாடல் செய்துமவாள்
வேண்டுமட்டும் பரிசுபெற
வேந்தனிடம் வந்துநின்றாள். (5)

மந்திரி இவர்களுடைய
பாட்டுகளுக்குத் தக்கபடி
பரிசுகள் மிககொடுத்து
பாங்குடனே அனுப்பிவைப்பாய். (6)

பரிசுகள் வேண்டாமையா
புண்ணியனே நீருமிப்போ
பூசக்ரகொடையைத் தந்தால்
பூரித்து மனமகிழ்வோம். (7)

ஆரடா சேவகனே
அடாவழக்கு பேசுகின்ற
துஷ்டநீச்ச மாதர்களை
துறத்துவீர்வெளியில் என்றான். (8)

---

### 8-வது கட்டம்.

(கண்டாளே சீதை என்ற மெட்டு.)

கண்டானே அரசனும்
கௌசிகர் தன்னை
வாருமென் றுபசரித்து
வணங்கியே நின்றான். (1)

மாதர்களை அழைத்து
வந்தமர்ம மென்னமோ
என்ன காரணத்தினாலே
இவ்விடம் வந்தீர். (2)



என்னுடைய பெண்களான
இவர்களை நீதான்
அவமரியாதையாகப் பேசி
அடித்துத் துரத்தினாய். (3)

தானத்தி லுயர்ந்தவனே
தர்மம் செய்வோனே
இவர்களைநீ மணம்புரிந்தால்
மன்னிப்பே னென்றான். (4)

இவர்களெனக்கு பிள்ளைமுறை
ஆகுமே ஸ்வாமி
இவர்களை மணம்புரிய
ஏற்குமோ ஸ்வாமி. (5)

எதுகேட்டாலும் தாரேன்
இதரமாதரை சேரேன்
இவர்களெனக்கு பிள்ளை
முறையென்றறிவீ ரிப்போதே. (6)

நீஆண்டிடும் அரசுநாடு
அன்புடன் தந்தால்
செய்தகுற்றம் பொறுத்து
நானும மன்னிப்பேனுன்னை. (7)

நீர்கோரியபடி கொடுத்தேன்
இந்தராஜ்யத்தை நானும்
என்றுசொல்லி ஜலத்தைஅள்ளி
தாரை வார்த்திட்டான். (8)

வாங்கிக்கொண்டேன் மன்னா
நானும் மகிழ்ச்சியுடனே
முன்உன்னிடத்தில் வைத்த
பொருள் தாவென்றான். (9)

---

9-வது கட்டம்.

(மெத்த முனிதவித்து என்ற மெட்டு.)

நாடுமக்கு தாரைவார்த்து
  நாங்கள்வனம் போகிறபோது
பொன்னைக்கொடுஎன்றே நீர்என்ஸ்வாமி
  பூரித்து கேழ்க்கலுற்றீர். (1)

என்பத்தினி பணிகழட்டி
  பாங்குடன் வருகும்போது
பார்த்துஇருந்துநீரும் என்ஸ்வாமி
  பாங்குடனே கேழ்க்கலுற்றீர். (2)

ஆனாலும்கேள் அரிச்சந்திரா
  யாகத்திற்கு தந்தபொன்னை
இல்லையென்று சொல்லிவிட்டால் அப்பனே
  இத்தனை துன்பங்களில்லை. (3)

நீதிதடுத்துச் சொல்லேன்
  நிந்தனைகள் செய்யாதேயும்
காசிநகர்போய் நானும்ஐயனே
  தந்திடுவேன்பொன்னை என்றான். (4)

ஆனால்மெத்த சந்தோஷம்
  ஆனை அழைப்புகிறேன்
நாற்பத்தெட்டுநாளில் அரசனே
  தந்திடுவீர்பொன்னை என்றான். (5)

அரசனும் சம்மதிக்க
  அப்பொழுது கவுசிகரும்
நாகனைத்தானனுப்பி கவுசிகர்
  தண்டிவா பணத்தை என்றான். (6)

---



# PROGRESS OF THE WORLD
## ப்ரபஞ்சப்போக்கு.

**Sri Chidambara Swamigal Guru Puja.**

**ஸ்ரீ சிதம்பரஸ்வாமிகள் குருபூஜா:**—ஸ்ரீ சிதம்பர ஸ்வாமிகளினுடைய 256-வது குருபூஜா தினம் இவ்வருஷம் வைகாசிமீ 27-ந் தேதி வீரப்பிள்ளைத்தெரு 61-ம்நெம்பர் வீட்டில் கொண்டாடப்பட்டது. இந்த ஸுபதினத்தில் ஸ்ரீ சிதம்பர ஸ்வாமிகளினுடைய பல சிஷ்யகோடிகள் ஆங்காங்கு குருபூஜா மஹோத்ஸவம் கொண்டாடுவார்கள். இங்கு ஆதிபமாயிருந்து நடத்ினவர் ஸ்ரீசிதம்பரஸ்வாமிகளை உள்ளத்தில் இருத்தி ஸதாகாலமும் தியானிக்கிறவரும், ஜீவ காருண்யம், சாந்தம், தயை முதலிய ஸத்குணங்கள் பூர்ணமாக நிறைந்திருக்கிறவருமாகிய திருப்போரூர் மௌனஸ்வாமியேயாம். இவர் நாமதேயம் ஸ்ரீசிங்காரவேலு ஸ்வாமிகள். இவருடைய சிஷ்ய சிகாமணிகளாகிய ஸ்ரீஸம்பந்த ஸ்வாமிகளும் மீனாம்பிகையம்மாளும் பின்னோடிருந்து ஸகல பூஜா கைங்கர்யங்களும் செவ்வனே திவ்யகரமாக நடத்தினார்கள்.

இந்த ஸுபதினத்தில் பக்தியுள்ள மஹாஜனங்கள் வந்திருந்தார்கள். வெகு குதூகலமாக குருபூஜா மஹோத்ஸவம் நடந்தேறியது. சுமார் 800 அடியார்களுக்கு தானத்தில் மிகச் சிறந்ததான அன்னதானம் செய்தார்கள். பிறகு மாலை 4-மணிக்கு ஒரு பக்தர் 'மஹாராஜா துறவு' என்னும் விஷயமாக வெகு ருசியாக உபந்யஸித்தார். இப்பூஜா தினத்தில் ஒரு விசேஷமுண்டு. ஸ்த்ரீகள் பூர்ண பக்தியோடு பூஜை விமரிசையாய் நிறைவேற உழைத்தார்கள். அந்த தினத்தில் பக்தியோடு வந்திருந்தவர்களுக் கல்லவோ தெரியும் அதன் ஆநந்தம்!

**Women Police.**

**ஸ்த்ரீ போலீஸ்க்காரர்கள்:**—இங்கிலாண்டில் ஒரு பலமான முயற்சி நடந்துவருகிறது. அதாவது, போலீஸ் இலாகாக்களில் ஸ்த்ரீகள் தங்களைச் சேர்த்துக்கொள்ளும்பொருட்டு அதிகாரிகளைத் தூண்டிவருகிறார்கள். இந்த முயற்சிக்குத் தலைமை வகித்துவருகிறவர் மிஸ் நினாபாயில். இவர் ஸ்த்ரீகளைக் கூட்டி போலீஸ் தேகப் பயிற்சியில் பழக்குவதும், போலீஸார் செய்யவேண்டிய வேலைகளைக்

கற்றுக்கொடுப்பதும், ஜனங்களுடைய பாத்யதையைப்பற்றி போதிப்பதுமாக விருக்கிறார்.

ஸ்த்ரீ போலீஸாரின் வேலை குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதல்லவாம். திக்கற்று ஸ்நேகிதர்களின்றி பெரிய பட்டணங்களில் திரியும் பெண்கள் துர்ஸகவாஸத்தில் சேராமல் அவர்களுக்கு புத்தி கூறி தடுத்து நல்லவழிகளில் அவர்களுக்கு வேண்டிய உதவி புரிவதாம். இப்போது ப்ரான்ஸ், பெல்ஜியம் போன்ற பட்டணத்திலிருந்து வரும் அனாதையான ஸ்த்ரீகளுக்குவேண்டிய உதவிகளைச் செய்வதைப்பற்றியும் ஸ்த்ரீ போலீஸாரின் வேலைகளில் ஒன்றாகுமாம். இந்த ஸ்த்ரீ போலீஸார் ஆழ்ந்த நீலநிறமான உடுப்புகளை அணிந்திருப்பார்கள் பலர் ஸாதகமாயும் சிலர் பாதகமாயும் ஸ்த்ரீ போலீஸ் முயற்சியைப்பற்றி பேசிவருகிறார்கள். யார் எப்படி அபிப்ராயப்பட்டாலும் ஸ்த்ரீ போலீஸார் செய்யப்போகிற வேலை மிகவும் சிலாகிக்கத் தக்கதாக விருக்கிறது.

**Social Reformers.**

**ஆசாரசீர்திருத்தக் காரர்கள்:**—தற்காலத்தில் ஆசார சீர்திருத்தக்காரர்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறார்கள். இவர்களுடைய வேலை ஸமூகத்தை முன்னுக்குக் கொண்டுவருவதல்ல. ஆனால் ஒருவர்க்கொருவர் அபிப்ராய பேதப்பட்டுக் கொண்டும் இடுபடாத கார்யங்களைப்பற்றி வீணே பேசித் திரிந்துகொண்டுமிருப்பதுதான். ஆசார சீர்திருத்தக்காரர்களைக் கண்டால் பொது ஜனங்கள் வெறுக்கிறார்கள். புகையில்லாமல் நெருப்புண்டாகாதல்லவா? அதுபோல் இதற்குக் காரணமிருக்கவேண்டும். ஜாதிமத பேதமில்லாமல் ஸமபந்தி போஜனம் செய்வதும், விவாக ஸம்பந்தமாக ஜாதி வித்தியாசமில்லாமல் கொடுக்கல் வாங்கல் செய்துகொள்வதும் தற்காலத்து ஆசாரக்காரர்களின் முக்கிய கொள்கை. இக்கொள்கையை ஆதாரமாகக்கொண்டு பத்ரிகைகளில் எழுதுவதும் பிரசங்கிப்பதுமாக விருக்கிறார்கள். ஸமூகத்தாருக்கு ஆசார சீர்திருத்த ஸம்பந்தமாகச் செய்யவேண்டிய வேலை, இவர்கள் செய்கிறதாகச் சொல்லும் வேலையைவிட, முக்யமானதாக விருக்கிறது. ஆசார சீர்திருத்த ஸம்பந்தமாக ஜனங்கள் படும் கஷ்டம் சொல்லி முடியாததாக விருக்கிறது. ஜனங்கள் தங்கள் மத்தியில் இருக்கிற ஊழல்களை திருத்த படித்தவர்கள் வேண்டுமென்கிறார்கள். ஆனால் தற்காலத்திய ஆசார சீர்திருத்தக்காரர்கள் ஜனங்களின் நன்மதிப்பைப் பெறவில்லை. நம் ஆசார சீர்திருத்தக்காரர்கள் தங்கள் பரம்பரையான கொள்கையை மாற்றி ஜனங்களுடன் கலந்து வேலைசெய்தால் ஆசார சீர்திருத்த சங்கத்தின் நோக்கம் நிறைவேறும்

---



# IMPROVEMENT OF EDUCATION OF WOMEN A WAY.

**By**

**Sri S. Bagirathi Ammal.**

## ஸ்த்ரீகளின் கல்வி யபிவ்ருத்தி ஒரு வழி.

நமது சென்னை ராஜதானியில் கல்வி நிலைமையானது ஆண்களில் 100 க்கு 14 பேரும், பெண்களில் 1000 க்கு 14 பேரும் படித்தவர்கள். இங்க்லீஷ் படித்தவர்கள் ஆண்களில் 80 க்கு ஒருவரும் பெண்களில் 800 க்கு ஒருவருமாக இருக்கிறார்கள். படித்தவர் என்றால் உயர்படிப்புக்காரர் என்று எண்ணக்கூடாது. பெண்களின் படிப்பு நிலைமையை நோக்கும்போது விசனத்துக்குரியதாக விருக்கிறது. பெண்களின் கல்வியை பரவச்செய்ய பல இடையூறுகளிருக்கின்றன. முக்யமானது, (1) உபாத்தினிகள் கிடைக்காமை (2) போதுமான பணமின்மை (3) ஜனங்களின் ஆசார மூடநம்பிக்கை ஆகிய இவைகளாகும். பத்து வருஷத்துக்கு முன்னால் பெண்களின் கல்வி அபிவ்ருத்தியடைந்திருந்ததைக்காட்டிலும் இப்போது நல்ல அபிவ்ருத்தியடைந்திருக்கிறது. இந்த வ்ருத்தியானது பெண்கள் பிற்கால இல்லறவாழ்க்கையை நடத்த ஸாதகமாயில்லையென்று மேதாவிகளின் அபிப்பிராயமாயிருக்கிறது. படித்த ஸ்த்ரீகளும் அப்படியே உணர்கிறார்கள். வட இந்தியாவில் கோஷாமுறை அதிகம். தென்னிந்தியாவைக்காட்டிலும் வட இந்தியாவில் எந்த ஜாதியினராயிருந்தாலும் கோஷாமுறையை அனுசரிக்கிற வழக்கமாயிருக்கிறது. அங்கு ஸர்க்கார் அனுசரிக்கிற வீட்டுப்படிப்பு முறையை இங்கு அனுசரிக்கவேண்டும். பாதிரிமார்கள் ஆங்காங்கு தங்களுடைய சங்கமூலமாய் கிரிஸ்துவ ஸ்த்ரீகளைக்கொண்டு வீட்டுப்படிப்புச் சொல்லிக்கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த முறை அனுஸரிக்காமலிருந்தால் பொதுவாக ஸ்த்ரீகளின் கல்வி சரியான வழியில் அபிவ்ருத்தியடைய ஹேதுவில்லை. கேவலம் ப்ரைமெரி வரையில் பெண்கள் படித்துவிட்டால் அவர்கள் படித்தவர்களாக மாட்டார்கள். ப்ரைமெரிப் படிப்போடு நிறுத்துவது கூடாத கார்யமாகும். ஸாதாரணமாக கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் தகுந்த இல்லாளாகுவது ச்ரமஸாத்யம். ப்ரைமெரி வரையில் படித்த பெண்களைக்காட்டிலும் படிப்பு வாஸனை இல்லாமலிருக்கிறவர்கள் மேலானவர்கள். பெண்கள் புருஷன் வீட்டுக்கு வந்தபிறகு அவர்கள் படித்த படிப்பை மறக்காதபடி செய்து, தேர்ந்த ஸ்த்ரீகளைக் கொண்டு படிப்பை குடும்பத்தை யொட்டினதாகச் சொல்லிக் கொடுக்கவேண்டும். இந்தியப்பெண்கள் இந்தியப்பெண்களே. எவ்வளவு மேனாட்டுப் பெண்களைப்பார்த்து அவர்களின் நடவடிக்கைகளைக் கற்றுக்கொண்டாலும் இந்தியப்பெண்கள் மேனாட்டுப் பெண்

களாகமாட்டார்கள். மேனாட்டுப் பெண்களும் இந்தியப் பெண்களாக மாட்டார்கள். இந்தியப் பெண்களுக்கு ஆனந்தம் குடும்பத்திலமைத்துவைத்திருக்கிறது. அப்படியிருக்க, என்னபாடு பட்டாலும் இந்தியப் பெண்களுக்குக் குடும்பத்தை யொட்டினதாகப் படிப்பு சொல்லிக்கொடுக்கவேண்டும்.

இந்தியப் பெண்களுக்கு வீட்டுப்படிப்பு முறையைக் கொடுக்கவேண்டுமென்று சொன்னோம். இந்தியப் பெண்களின் கல்வியபிவ்ருத்திக்கு ராஜாங்கத்தார் கவலையெடுத்துவருகிறார்கள். ஜனங்களின் ஒத்தாசையின்றி ராஜாங்கத்தார் என்னசெய்வார்கள்? பெண்களின் கல்வியபிவ்ருத்திக்கு புருஷர்களும் ஸ்த்ரீகளும் ஆங்காங்கு ராஜாங்கத்தாரோடு கலந்து வேலைசெய்யவேண்டும். பெண்கள் அபிவ்ருத்தியைக் கண்டால் ராஜாங்கத்தார் முன்வந்து உதவிசெய்து கைதூக்கி விடுவார்கள்.

இப்போது சென்னப்பட்டணத்தில் ஸ்த்ரீ சங்கங்கள் ஒரு டஜனுக்கு மேலாகவே யிருக்கின்றன. இந்த சங்கத்தார்களால் வீட்டுப்படிப்பு முறையை அனுஷ்டித்து விருத்திச்செய்யக்கூடும். ஒவ்வொரு சங்கத்திலும் ஒரு தேர்ந்த ஸ்த்ரீ முன்வந்து வீடுவீடாகச் சென்று வீட்டுப்படிப்புக் கற்றுக்கொடுக்க ஸித்தமாயிருக்கிறாளென்றால் பொது ஜனங்கள் ஸஹாயம் செய்ய முன்வருவார்கள். ஸர்க்காரும் ஆதரிப்பார்கள். தான் படித்தபடிப்பை பிறருக்கு உபயோகப்படுத்துவதுதான் கல்வியின் லக்ஷணம், ஸ்த்ரீ சங்கத்தார்கள்தான் இவ்விஷயத்தில் முன்வரவேண்டும். ராஜாங்கத்தாரை எதிர்பார்க்க முடியாது. மேனாடுகளில் பெண்களின் கல்வி அபிவ்ருத்தி அடைந்ததெல்லாம் பரோபகார குணமுள்ள ஸ்த்ரீ புருஷர்களினால் என்று அறியவேண்டும். மேனாடுகளில் கல்வியை விருத்திசெய்ய தெருதெருவாக ப்ரைவேட் சங்கங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ராஜாங்கத்தார் இப்பரோபகார சங்கங்கள் ஏற்படுத்தினவர்களை ஆதரிக்கிறார்கள். இன்னும் பெண்கள் முன்னேற்றத்துக்குரிய பல இலாகாக்களில் உழைக்க ஸ்த்ரீ புருஷர்கள் முன்வருவார்கள். இங்கு ஜனங்கள் தனியே நின்றுவிட்டால் ராஜாங்கத்தாரின்மேல் குறைகூறுவது தப்பாகும். சென்னையிலிருக்கிற ஸ்த்ரீ சங்கங்களெல்லாம் ஸ்த்ரீகளின் அபிவ்ருத்திக்கு ஸரியான வழியில் உழைக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. ஸ்த்ரீ சங்கத்தார்கள் ஒன்று அறியவேண்டும். மீட்டிங் கூட்டி பிரஸங்கம் செய்வதுமட்டும் போதாது. பெண்களுக்கு வீட்டுப்படிப்பு முறை மிகவும் அவசியம். புருஷர்களுடன் கலந்து இவ்வழியில் ஸ்த்ரீ சங்கத்தார்கள் உழைக்கப் பார்ப்பதுதான் நலம்.

பாகீரதி.

---

153
800 009

# ANNADANAM.

By

**Sri Rudrakotisvarar.**

## அன்னதானம்.

(மேமீ பத்ரிகையின் தொடர்ச்சி.)

**எம் சகோதரிகளே!** நீங்களெல்லாம் பசியால் வருந்தி மெலிந்து இரங்கி அழுது இரவென்றும் பகலென்றும் வெயிலென்றும் மழையென்றும் பாராமல் அலைந்து வாடித்திரியும் குருடர், செவிடர், ஊமர், முடவர், பிணியாளர், வயோதிகர், பாதுகாப்பாரில்லோர் முதலிய ஏழைகளை ஆதரவுடன் பார்த்து மனம் உருகி அவர்களிடத்து இனியமொழிகளைக் கூறி உங்களால் இயன்ற அளவில் அன்னம் அளித்து அவர்கள் பசியை ஒழித்தலைப் பெருங்கடமையாகக் கொள்வீர்களாக. அல்லாமலும், தருமவொழுக்க முடையவர்கள், பக்தர்கள், யோகிகள், ஞானிகள், சந்யாசிகள், அதிதிகள் என்பவர்களுக்கும் பசிவந்தகாலத்தில் அவர்களுக்கு அன்னம் அளித்து அவர்கள் பசித்துன்பத்தை நிவர்த்திசெய்திடல் வேண்டும். பசிநோயுற்று வருந்திவந்தவர்கள் எந்தச் சாதியாராயினும், எந்தக் குலத்தாராயினும், எந்தச்சமயத்தாராயினும், எந்தமார்க்கத்தாராயினும், எந்த ஆசாரமுடையவராயினும், எந்தநாட்டாராயினும். எந்தத் தேசத்தாராயினும் அவர்கள் சாதிவேறுபாடு, குலவேறுபாடு, சமயவேறுபாடு, மார்க்கவேறுபாடு, ஆசாரவேறுபாடு, நாட்டுவேறுபாடு, தேசவேறுபாடு இவைகளைக் கவனியாமல், ஐயோ! என்று இரங்கி அவர்களுக்கு அன்னம் அளித்து அவர்கள் பசித்துன்பத்தைத் தீர்த்து அவர்களை மகிழ்வித்தலையே நீங்கள் உங்களுடைய பெருங்கடமையாகக்கொள்ளல் வேண்டும். மற்று மிருகங்கள், பறவைகள் இவைகளுக்குப் பசிவந்தகாலத்தும் அதனைக் குறிப்பால் உணர்ந்து கனி, கிழங்கு, இலை, தழை, பருப்பு, தானியம், அன்னம் முதலிய சத்துவ ஆகாரங்களால் அவைகளின் பசியைப் போக்கல் வேண்டும்.

இவ்வாறு செய்வீர்களாயின், உயிர்களுக்கெல்லாம் அகத்திலும், முகத்திலும் பெருகிய இன்பம் உண்டாகும். அதனைக் காணும் நமக்கும் நம்மனத்தினிடத்தும், முகத்தினிடத்தும் மிகுந்த இன்பம் உண்டாகும்.

அப்பசிப் பிணியைத்தீர்ப்போர் அடையும் புகழோ அளவற்றதாகும். இதுபற்றியே,

" குடிப்பிறப் பழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉ
நாணணி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவியது தீர்த்தோ
ரிசைச்சொ லளவைக் கென்னா நிமிராது"

அதாவது:—

பசிப்பிணியென்னும் பாவியானது தன்னை யடைந்தவர்களுடைய கல்வி, நாணம், தேக அழகு இவற்றை யழித்து, அவர்க்கு இழிவையுண்டாக்கி, அவர் தம் மனைவிமார்களோடு பிறருடைய தலைவாயிலில்போய் இரக்கச்செய்யும். ஆகவே, இவ்வாறெல்லாஞ் செய்யும் அப்பசிப்பிணியைத் தீர்த்தவர்களடையும் புகழை அளந்தெடுத்துக் கூறுதற்கு எனது நாவானது எழமாட்டாது என்று யாம் மேலே குறித்த தீவதிலகை என்பாள் மணிமேகலைக்குக் கூறுவாளாயினள்.

இவ்வாறு சீவர்களின் பசித்துன்பத்தைத் தீர்க்கும் அன்னதானத்தைச் செய்பவர்களுக்கு அளவில்லாத கீர்த்தி உண்டாவதோடு அவர்களுக்கு வறுமையெல்லாம் கழிந்தகலும்; புதிதாக தனமும், தானியமும், புத்திர பௌத்திராதி போகங்களும் உண்டாகும்; அநந்தமான புண்ணியமும் உண்டாகும்; சீவர்களின் பசிநோயை அன்னத்தினால் நீக்குதலினால் இம்மையில் இவ்விசேஷ பலன்களெல்லாம் உண்டாவதே யல்லாமல் மறுமையிலும் பல இன்பங்களும் உண்டாகும். இதுபற்றியே,

" கரிபரி யாயிரங்கள் கனத்த கோதான பூமி
பரிவொடு ரஜிதஞ்சொர்ன பாத்திரம் பண்பாமென்று
மிருகுல மொத்தகன்னி கோடிகா ணீந்திட்டாலும்
அரிதிது வன்றே யன்னதானமே யதிகமாகும்" எனவும்,

" ஏறுபொருள் கொடுத்தாலும் இடம்பெரிது கொடுத்தாலும் இருப்பதற்குக்
கூறுடைய வீடுபல கொடுத்தாலும் பரிமளநீர் குளிப்பித்தாலும்
வேறுபட வுடைபலவும் அளித்தாலும் பசிதீர மிடியுற்றோர்க்குச்
சோறுகொடுப்பதுபோல நூறுகொடுத்தாலு முண்டோ சுகமக்கே" எனவும்



அன்னதானத்தையும், அதனால் விளையும் பலனையும் அறிவுடைய மேலோர் வியந்து எடுத்துப் பாராட்டுவாராயினர்.

இன்னும் சீவகர்களுக்குப் பசிநோய் வந்தபோது அவர்கள் பெரிதும் வருந்துதலைக்குறித்தும், அப்போது அவர்களுக்கு உணவளித்து அப்பசிநோயைப் போக்கல் வேண்டுமென்பதைக் குறித்தும், அதனால் சீவர்கள் பெரிதும் இன்பம் அடைதலைக்குறித்தும், அவ்வாறு சீவர்களின் பசிநோயைப் போக்கி அவர்களுக்குப் பெரிதும் இன்பத்தை உண்டுபண்ணினவர்கள் அடையும் பெரிய பலன்களைக் குறித்தும் கடவுளைப் பக்திச்சுவை நிரம்ப எண்ணிறந்த பாடல்களால் கல்லுங்கரையப்பாடிய ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளும் தம்முடைய 'சீவகாருணிய வொழுக்கம்' என்னும் அரிய நூலில் விரிவாக விளக்கி வரைவாராயிற்று.

இனி, தண்ணீர் தாகமும் எல்லார்க்கும் உண்டு; ஆகவே, நீர் வேட்கையடைந்து வருபவர்களுக்கும் தண்ணீர் கொடுத்து அவர்கள் தாகவிடாய் நீங்கும்படிச் செய்தல் வேண்டும். எல்லாத் தானங்களுள்ளும் உதகதானமும் சிறந்ததென்றே தருமசாஸ்திரங்கள் கூறுகின்றன. அவ்வுதகதானத்தாலும் மிக்க நன்மையுண்டு. ஆகவே, சகோதரிகளே! வறுமையால் வருந்தி மெலிந்து பசிதாகங்களால் உலர்ந்துவந்தோரை அன்புடன் பார்த்து மனம் இரங்கி இனிய மொழிகளைக் கூறி அவர்களுக்கு அன்னமும் தண்ணீரும் அளித்து அவர்கள் மனதில் மகிழ்ச்சியை உண்டுபண்ணுங்கள்.

" உதகமதனை யுயிரெல்லா முண்ணவிரும்பு மதனாலே
யுதகந்தனக்கு மொப்பானபொருள் வேறில்லை யுலகத்து
ளுதகமன்ன மிரண்டுமுயிரை யோம்பு மதனாலே
யுதகமன்ன மெனுமிரண்டு முதவிற் பரமபலமுளதே"

என்று தருமசாஸ்திரங் கூறுகின்றது.

இதனால் அன்னதானம், உதகதானம் என்னும் இரண்டையுஞ் செய்தலே முக்கியமென்பதும், அவை அதிக பலன் தருமென்பதும் பெறப்படுகின்றன.

எம் அரிய சகோதரிகாள்! அன்னசாலை, தண்ணீர்பந்தல், கிணறு, தடாகம் இல்லாத இடங்களிலும் அன்னசாலையைத் தாபித்தும், தண்ணீர்ப்பந்தரை அமைத்தும், கிணறு தடாகம் இவைகளை உண்டாக்கியும், சற்பாத்திரர் என்று கூறப்படுகின்றவர்களுக்கு அன்னமும் தண்ணீரும் அளித்து, அவர்கள் பசியையும் தாகத்தையும் தணித்திடுவீர்களாக.

உருத்திரகோடீசுவரர்.

---

# GEOLOGICAL STRATA.

By

**Mr. Sivadyanandan.**

## பூதலப்படை யமைப்பு.

இயற்கை சாஸ்திர நிபுணர்களுக்குத் தந்தை யென்னத்தகும் டார்வின் என்பவர் ஒருதரம் வேல்ஸ் நாட்டிற்குச் சென்று சில பூமி பரிசோதனைகளைச் செய்துகொண்டிருந்தபோது தாம் காணக் கிடைக்காத பனிநெகிழ்பாறை யமைப்புக்களை (Traces of the Glacial period) வேறொருவர் கண்டு சொல்ல நேர்ந்ததேயென்று விசனப்பட்டாரென்றால் இச்சாஸ்திர வுணர்வு நம்போலியருக்கு அமைவது வெகு துர்லபம். இந்த டார்வின் மேல்நாட்டில் அந்தக் காலத்திலிருந்த சாஸ்திரிகளின் பிறழ்ந்த கொள்கைகளை யெல்லாம் மாற்றி தமது மதத்தை யாணிபோலறைந்தவர். ஆகவே இச்சாஸ்திர வுணர்ச்சிக்குச் சிறந்த ஞானமும், பரந்த கல்வியும், துல்லிய ஆகமும் நுண்ணிய பார்வையும் அவசியமாம்.

இச்சாஸ்திர வுணர்வின் வரலாற்றைப்பற்றிச் சிறிது சொல்லுவேன். மேனாட்டார் இவ்வகைய பரிசீலனைகளில் தலையிட்டது சின்னாட்களுக்கு முன்பேயாம். பூதலப்படை யமைப்பைப்பற்றிய அபிப்பிராயம் லையல் (Lyell) என்பவர் காலத்துக்கு முன்பு இருவகையாகப் பிரித்திருந்தது, முற்றும் விவிலிய (Bible) நூற்கொள்கையை யொட்டிய தொன்று. விவிலிய நூலும் சாஸ்திர பரிசீலனையுங் கலந்த கொள்கை யிரண்டாவது. இவற்றில் விவிலிய நூலார் கொள்கை 19-வது நூற்றாண்டுவரையில் சர்வஜன சம்மதமாக விருந்ததென்றே சொல்லலாம். பைபில் அல்லது விவிலிய நூலின் முதல் அத்தியாயமான பிறப்பாகமம் (Genesis) யூதர்களது மதாசார நூலுக்கு ஓர் புராண முன்னுரை போன்றதென்று எண்ணாமல், அது எள்ளளவும் பிசகாத வுண்மையென்றும், நடந்த சமாச்சாரங்களைச் சொன்னதேயென்றும், அதன் ஒவ்வொரு மொழியும் தேவவாக்கே யென்றும், அதற்கு மாறான எண்ணங்களை மனங்கொள்வதுகூட தேவதூஷணமான பாவமென்றும் எண்ணப்பட்டு வந்ததுதான் முதற்கொள்கைக்கு ஆதாரமாம். அதனால் பிராணிகளின் அஸ்தி பஞ்சா விசேஷங்களை யாராவது மலையுச்சிகளிற் காணின் அது விவிலிய நூலிற் கூறப்பட்ட நோவாவினது (Noa)



பிரளயத்துக்கு மாறாத அத்தாட்சியென்று நம்பினார்கள். மதநம்பிக்கையே யில்லாமல் சர்வகலாவல்லவர் என்று எண்ணப்பட்ட வால்டேருங் (Voltaire) கூட இம்மாதிரியான கடற்சிப்பிகள் உரோமாபுரி (Rome) க்குப் போகும் யாத்திரிகர்களால் ஆல்ப்ஸ் (Alps) மலையுச்சியில் போடப்பட்டன என்று சொல்லிப்போந்தனர்.

இரண்டாவதாக வந்த விவிலிய நூலும் சாஸ்திர பரிசீலனையும் சையோகித்த காலம் மேற்சொன்ன காலத்துக்குக் கொஞ்சம் மேலானது. அக்காலத்து இயற்கையிற் காணப்படும் தோற்றங்களும், அவ்வியற்கை நிகழ்ச்சிக்கான விதிகளும் இக்காலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டன. என்றாலும் பழைய மூட மார்க்கடக் கொள்கை முற்றும் ஒழியவில்லை. புதிதாய்க்காணும் ஒவ்வொரு அற்புதத்தையும் விவிலிய நூலையே கருவியாகக் கொண்டு அளக்கவெண்ணினதுமன்றி, அக்காட்சிகளை விவிலிய நூலோடு ஒட்டி யுறவாக்கவும் வாரம்பித்தார்கள். இக்காலத்தில் பிறப்பாகமத்தில் (Genesis) தோன்றிய கதைகளுக்குப் பத அர்த்தத்தையே கொள்ளுவது சரியல்ல. அவற்றின் உள்ளுறைகளை யுணரவேண்டுமென்ற வரையில் ஏற்பட்டது. இக்கொள்கை வெகுநாள்வரையில் ஜனங்கள் மனதினின்றும் அழியாமலிருந்தது. ஆனால் இவ்வெண்ணம் பாமர ஜனங்களிடத்து வியாபித்திருந்ததேயன்றிப் பண்டிதர்கள் யாவர் மாட்டும் இந்நம்பிக்கை நிலைபெறாமற்போகவே வித்துவத் கோஷ்டிகளிலெல்லாம் முன்பு விவிலிய நூற்கொள்கை நின்றவிடத்தில் இச்சாஸ்திரக் கொள்கை நிலைக்க ஆரம்பித்தது. அதாவது டார்வின் வெளிப்படுத்தின பரிணாமக்கொள்கையே நின்றது. இக்கொள்கையுணர்வில் வேறுபாடிருப்பினும் விவிலிய நூலில் இம்மாறுபாடுகளுக்குச் சமாதானம் ஏதாவது எழுதப்பட்டிருக்கிறதா என்று பார்க்கும் வழக்கம் முற்றிலும் மாறிவிட்டது. அதாவது இயற்கையில் நடக்கும் அற்புத மாறுதல்களுக்குப் பரிணாமமே காரணமென்று ஏற்பட்டது. ஆயினும் சிலர், கடவுள் முதலில் சில பிராணிகளைச் சிருட்டித்து அவற்றின் கருப்பாசயத்தில் எண்ணிறந்த கோடி முட்டைகளை அணுவாய் அடைக்கிவைத்ததனால் (Original Impress) அவற்றின் சந்ததிகள் விருத்தியாயினவென்று நம்பினார்களேயொழிய இடைவிடாத சாமியாட்டத்தினாலாவது அல்லது கடவுள் அடிக்கடி அகிலமாற்றத்தில் தலையிடுவதினாலாவது இயற்கைமாறுதல்கள் நேருகின்றன என்று நம்பவில்லை.

பூதலப்படை யமைப்பு விஷயமாக இந்த நிர்ணயம் லையல் (Lyell) என்பவருடைய 'இயற்கையின் ஏகீபவம்' (Uniformity of Nature) என்னும் கொள்கையில் அடைக்கப்பட்டிருக்கிறது. இதை விவரித்து உணரவேண்டில், ஒருவர் லண்டனிலுள்ள பிரிட்டிஷ் காட்சி சாலைக்குப்போய் ஸைலூரியன் (Silurian) † காலத்துண்டான ஒரு மணற்கல்லினது துண்டைப் பார்க்கவேண்டியதுதான். பார்த்தால் நாளைக்கும் நாகப்பட்டினம், இராமேசுவரம் முதலிய விடங்களிலுள்ள கடற்கரையில் சலசலவென்று ஒழுகும் பொங்குமங்கு அலைகளின் ஓட்டத்தாலுண்டாய்ப் பாம்புசட்டை யுரித்ததுபோலத் தோன்றும் மேடுபள்ளமான மணற்குறிகளும், மண்ணுழைநாக புழுக்கள் வெளிப்படுத்தினவும், ஒரு பக்கத்தைப்பார்க்கிலும் மற்றொரு பக்கத்தில் மேடுபள்ளமாயுள்ள மணற்குழிவுகளும், அலை வீசின திக்கைத் தெரிவிக்கும் அடையாளங்களுங்கூட அம்மணற்கல்லிற் காணலாம். இதிலிருந்து அறியக்கூடியதென்ன? அப்பழையகாலத்துங்கூடக் காற்றுவீசிற்று, மழை பெய்தது, பொங்குமங்கலைகளடித்தன, மணற்கரைகள் ஏற்பட்டன, அம்மணற்கரைகளில் நாங்கூழ்ப் புழுக்கள் தற்காலத்திற்போலவே பூமியைத் துளைத்துத் தத்தம் வேலையைச் செய்தன என்பனவல்லவா? இம்மாதிரி இயற்கைச் செயல்கள் காலதேச பரிச்சின்னமாய் எப்பொழுதும் ஒரேமாதிரியாக நடந்துவந்தன வென்றும் 'இந்த சுபாவ வேகீபவம்' (Uniformity of Nature) என்ற கொள்கையே பூதலப்படை யமைப்பை யறிவதற்கு இன்றியமையாத கருவியென்றும் காட்டினவர் லையல் (Sir C. Lyell) என்ற பிரபுவே. இதன் உண்மையை ஒருவன் தெளிவாயுணர வெண்ணினால் லையல் (Lyell), குரோல் (Croll) கைக்கி (Geikie) என்பவர்களது நூல்களை அவன் படிப்பது அவசியமாம்.

ஆநந்தாச்சிரமம்,
கூனூர்.

சிவத்தியாநந்தன்,

† இதைப்பற்றிப் பின்னர் விவரிக்கப்படும்.

159

# PARROT.

By

Mr. S. Rangasawmi Aiyengar.

## கிளி.

பெருமைவாய்ந்த இப்பேருலகத்தின்கண் காணப்படும் அநேக பக்ஷி ஜாதிகளுள் மிக்க அழகியதும் பெருமை பொருந்தியதுமானது கிளிவர்க்கமேயாம். பெரும்பாலும் அவை ஆஸ்திரேலியா, ஆசியா, பெடகோனியா முதலிய விடங்களில் காணப்படுகின்றன. ஐந்து வர்ணங்களும் பொருந்திய பஞ்சவர்ணக்கிளிகள் மிகவும் அழகுவாய்ந்தவை. கிளிக்குஞ்சுகள் மிகவும் அழகு பொருந்தியவையானதுபற்றி அநேகர் அலைவகளைப் பால்யமுதல் தங்கள் வீட்டிலேயே வளர்க்கிறார்கள்.

அவைகளைப் பழக்குவது மிகவும் சுலபமான கார்யம். அவை நம்மிடம் பழகிய பிறகு நம்மைவிட்டுப் பிரிய ஒருபொழுதும் எண்ணங்கொள்ளமாட்டா. அவைகள் பிறர் பேசுதலைக் கவனித்துக் கேட்டுக்கொண்டிருந்து பின்பு அவ்விதமே பேசப் போதுமான சாமர்த்தியமுள்ளவை. ஆனதுபற்றி யாராவதொருவன் பிறர் சொன்னதையே திரும்பச் சொன்னால் அவனைக் "கிளிப்பிள்ளைபோல்வான்" எனப் பழித்துச் சொல்லுவது வழக்கமாயிருக்கிறது. இக்காரணம்பற்றியே பிள்ளைக்கும் "சொன்னத்தைச்சொல்லும் கிளிப்பிள்ளை" என அடைமொழி கொடுக்கப்பட்டிருக்கிறது.

முன் ஒரு காலத்தில் ஒரு செட்டி ஒரு கிளிப்பிள்ளையை வளர்த்து அதற்கு "அதற்கென்ன சந்தேகம்" என்னும் ஒரே வார்த்தையைக் கற்றுக்கொடுத்திருந்தான். பின்பு ஒரு நாள் ஒரு அரசன் அக்கிளியின் விலையைப்பற்றி அச்செட்டியைக் கேட்க, அவன் நூறு வராகன் எனலும், சுகத்தை விளித்து "ஏ கிளியே! அற்பப் பிராணியாகிய நீ அவ்வுயர்ந்த விலைபெறத் தகுமோ?" என "அதற்கென்ன சந்தேகம்" என அக்கிளி பதிலுரைத்தது கண்டு பணத்தைக் கொடுத்துவிட்டு அக்கிளியை எடுத்துச் சென்றானாம். ஒரு கிளி பதினெட்டு வருஷம் ஒருவனிடம் பழக்கப்பட்டு வந்தால் அது மூன்று பாஷைகள் பேசக் கற்றுக்கொள்ளுமாம்.

கிளியின் உயர்ந்த அழகைக்கொண்டு எது ரொம்ப அழகாயும் கண்கள் கவரக்கூடியதாயுமிருக்கிறதோ அதையெல்லாம் "கிளி அழகு" என்கிறார்கள். கிளியின் அழகு, அழகின் உயர்ந்த அமைப்புபோலும்! மற்றைய பறவைகளைப்போலும் சில மனிதர்களைப்போலும் இத் தத்தைக்கூட்டங்கள் தனித்தனியாகப் பிரிந்து வசிப்பதில்லை. அவைகள் ஒருங்குசேர்ந்து கூட்டங் கூட்டங்களாகவே வசிப்பது நமக்கு ஒருங்குசேர்ந்து ஒத்து வாழவேண்டுமென்னும் அரிய பெரிய புத்தியை நுட்பமாகப் புகட்டுவதுபோலிருக்கிறது.

கிளி மிகவும் பரிசுத்தமானது. ஆனதினாலேயே பாகவதாசார்யர் முதலிய அறிவிற் பெரியோர்கள் கிளியின் உருவை எடுத்திருக்கிறார்கள். தவிர, இப்பக்ஷி மற்றைய பறவை இனங்களைப்போல் மாம்ஸம் முதலிய அசுத்தமான பதார்த்தங்களைத் தின்பதில்லை. ஆனால் மிகப் பரிசுத்தமான காய் கனிகளையே தின்கின்றது. இது விசேஷமாய் நமது தேசத்தில் அரசமரத்தில் காணப்படுதலால் இது அரசமரத்துக்கிளி யெனப் புகழ்பெற்று விளங்குகின்றது. இதுவுந்தவிர இதன்குரல், மயிலின் குரல்போலல்லாமல், காதுக்கு மிகவும் இனிமையாகவே யிருக்கின்றது. கிளிகள் 50 வருஷங்கள் கூட வசித்திருந்ததாகக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

எஸ். ரங்கசாமி அய்யங்கார்.

---

## WOMEN'S[1] DISEASE.

By

Dr. U. S. Jagadesan.

## ஸ்திரீகளுக்குரிய வியாதிகள்.

நம்முடைய இந்து தேசத்தில் ஸ்திரீகளில் பெரும்பான்மையோர் தங்களுக்குண்டான சரீர ஆரோக்கியத்தை ஆரம்பத்தில் தெரிவிக்க லஜ்ஜைப்பட்டுகொண்டு சிகித்சை செய்துகொள்ளாமல் பிறகு நாளடைவில் அவ்வியாதி முதிர்ந்து அதற்கு இரையாகிறார்கள். "கண் கெட்டபிறகு சூரிய நமஸ்காரம்" என்கிற பழமொழிப்படி வியாதி முதிர்ந்து தங்களால் அதின் உபத்திரவத்தை பொறுக்க முடியாமல் இருக்கும் தருணத்தில் மனதிலுள்ளதை வெளியில்



தெரிவித்து வேண்டிய சிகித்சை செய்துகொள்ள ஆரம்பிக்கிறார்கள். அச்சமயத்தில் வியாதியோ பலபட்டு போய்விடுகிறது. "முள்ளால் போகிறதை கோடாரியால் வெட்ட" யெத்தனம் செய்வதுபோலாகிறது. இவ்வித தாமதம் அநேக கஷ்டங்களுக்கும் உபத்திரவங்களுக்கும் காரணபூதமாய் ஆகிறது. இவ்வியாதியால் கஷடப்படுகிறவர்களை மூன்று வகுப்பாகப் பிரிக்கலாம்.

I. உதாரணமாய் அநேக ஸ்திரீகள் மாதவிடாய் ஆகும் காலங்களில் வயிற்று வலியென்றும் தலைவலியென்றும் தேகம் முழுமையும் வலியென்றும் அந்த மூன்று நாளும் அதற்கு முந்தியும் பிந்தியும் புழுப்போல் துடித்து தானே அவஸ்தைப்படுகிறார்கள்.

II. மாதவிடாய் காலங்களில் வேண்டிய அளவு சூதகம் சரியாய் வெளிப்படாமலும் கொஞ்சம் மாத்திரம் வெளிப்பட்டும் சில மாதங்களில் ஒன்றுமே இல்லாமலும் சில மாதங்களில் கெடுத்தவறி மாதவிடாய் ஆகிறதும் நாளுக்குநாள் திரேகம் ஸ்தூலித்து வருகிறதும், மத்தியில் அநேக தடவைகளில் பிரஞ்ஞையற்று மயக்கமாயிருந்தும் அநேகர் இவ்விதமாய் அவஸ்தைப் படுகிறார்கள்.

III. மாதவிடாய் காலங்களில் சூதகம் ஜாஸ்தியாய்ப்போய் திரேகம் க்ஷீணமடைந்து வலிவு குறைந்து ஏழு அல்லது பத்துநாள் வரையில் சூதகம் வெளிப்பட அதனால் சரீரம் களைப்புற்று அன்ன ஆகாரத்தில் விருப்பமில்லாமல் சிலர் பிறரிடம் சொல்லாமலே அவஸ்தைப் படுகிறார்கள்.

நிற்க, முதல்வகுப்பைச் சேர்ந்தவர்களை விசாரிக்குமளவில் அவர்கள் நாளடைவில் வயிற்றுவலி தலைவலி முதலானவைகளை பொறுக்கமாட்டாமல் ஆற்றில்போய் விழுவோமா, கிணற்றில்போய் விழுவோமா, என்று எண்ணக்கூடிய நிலைமையை அடைந்து அவஸ்தைப்படும் சமயத்தில், அவ்வியாதி முதிர்ந்துசரீரத்தின் மற்ற உருப்புகளை கொஞ்சம் கொஞ்சமாய் அணுக ஆரம்பிக்கிறது உடனே கவனிக்காவிடில் அஜீர்ணம், பேதி, கண் எரிச்சல், கைகால் எரிச்சல், தலைவலி, பசியின்மை, களைப்பு இவைகள் சரீரத்தில் வேர்போல் ஊன்றி ஸ்திரமாய் நிலைநிற்க, எளிதாய் நினைத்த வியாதி வெகு பிரமாதமாய் விடுகிறது. அப்பொழுதுகூட அதற்கு வேண்டிய சிகித்சை செய்துகொள்ளாமலிருந்தால் மாதவிடாய் இல்லாமலேபோய் திரேகம் மெலிந்து அவர்கள் நிரம்பவும் பலஹீனமடைகிறார்கள்.

இரண்டாவது வகுப்பினர்கள் தங்களுடைய வாழ்நாள் முழுமையும் இவ்விதம் அவஸ்தைப்பட்டுக்கொண்டு காலத்தை வெறுப்புடன் கழிக்கிறார்கள். நாளடைவில் வியாதி முதிர்ந்து, மாதவிடாய் வருஷத்திற்கு ஒருதரமோ, இரண்டுதரமோ ஆகிறது. அப்பொழுது சூதகம் தாராளமாய் வராமல் சிறிதளவு வருகிறது அதையும் தேக சுபாவமென்று எண்ணுகிறார்கள். மேலும் காலக்ரமத்தில் ஒவ்வொரு அவயவங்களும் திமிறடைந்து அவர்களுடைய இஷ்டப்படி வணங்கி நடக்க முடியாமல் போய்விடுகிறது. சிலருக்கு மயக்கம் அடிக்கடி வந்து, மூர்ச்சையாகி அவஸ்தைப்படுகிறது வழக்கம். அப்பொழுது ஏதோ துர்தேவதையின் வேலை என்று எண்ணுகிறார்கள். அதற்கு என்ன மந்திரங்கள் செய்தும் பயன் படுகிறதில்லை. நாளடைவில் அன்னாகாரத்தில் விருப்பம் குறைந்து ஜீர்ணசக்தி மந்தப்பட்டுக்கொண்டு வருகிறது வழக்கம். ஆனால் தேகபுஷ்டி குறைகிறதில்லை. அதன்காரணம் தேகபுஷ்டி அன்னாகாரத்தைப் பொருத்ததல்ல. வேறு வியாதியினால் தேகம் பெருமனடைகிறதே ஒழிய வேறு இல்லை. ஆகையால் எவ்வளவு நாள் பட்டினிருந்தாலும் சரீரம் வாட்டமடைகிறதில்லை. இப்படி இருப்பவர்கள் கற்பவதிகளானால் சுகப்பிரசவம் அடைந்து உயிருடன் குழந்தை பெற்றெடுப்பது அபூர்வம். ஆகையால் மாதவிடாய்களில் நேரிடும் பிசுகு இவ்வளவு வியாதிகளுக்கு காரணபூதமாகிறது.

Class III. இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களைப்பற்றி விசாரிக்குமளவில் அவர்கள் பெரியமனுஷியானபோது மாதவிடாய்கள் கொஞ்சகாலம்வரையில் சரிவர இருக்கும். பிறகு சரியா யிருக்காது. மாதவிடாய் காலங்களில் சூதகம் அளவுக்கு மிஞ்சி ஜாஸ்தியாய் வெளிப்பட்டுக்கொண்டும் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குள் நின்றுபோகாமல் பத்து அல்லது பன்னிரண்டுநாள் வரையில் வெளிப்பட்டுக்கொண்டு மிருக்கும். சிற்சில சமயங்களில் இதனால் சிலர் மூர்ச்சையடைகிறார்கள். இவர்களுக்கு வயிற்றில் ஒருவலி ஏற்படுகிறதும் உண்டு. அவ்வலியினால் புழுப்போல் துடிக்கிறார்கள். இந்த வியாதிக்கு முக்கிய காரணம் என்னவென்றால் கர்ப்பபையில் கெடுதல் ஏற்படுவதுதான்.

அவையாவன:—

1. கர்ப்பபையின் உட்புறம் உண்டான ஜாஸ்தி வேக்காடு (உஷ்ணம்.)



2. அதிலுள்ள கட்டி முதலானதுகள்.
3. இரத்த நரம்பு சம்பந்தமான அநேக வியாதிகள்,
4. கர்ப்பபை இடம்விட்டு மாறி இருத்தல்.
5. அப்பை சம்மந்தமான இதர அனேக வியாதிகள்.

ஒரு காரணமும் இல்லாமல் சூதகம் ஜாஸ்தியாய் வராது. அது கண்டறிந்து உடனே சிகித்ஸை செய்வதே உத்தமம். இல்லாவிடில் கஷ்டமாய் முடியும் இவ்வியாதியால் பிடிக்கப்பட்டவர்களுக்கும் சுபாவமாய் பலமும், சரீர புஷ்டியும் உள்ளவர்களுக்கும் வித்தியாசம் உண்டு வியாதியால் அவஸ்தைப் படுகிறவர்கள் தினசரிதங்கள் சரீரத்தில் ஏற்படும் வாட்டம் தங்களுக்குத் தெரியாமல் போனாலும் பிறருக்கு அவர்கள் பலமுள்ளவர்களாகத் தோன்றினாலும் வாஸ்தவத்தில் சக்தி குறைந்து எளிதாயுள்ள வேலைகளைக்கூட செய்ய மிக அசக்தமாய் இருக்கிறார்கள். மேலும் சரீரத்தில் ஒருவிதமான கொதிப்பும் ஏற்படுகிறதுமுண்டு. தவிரவும் அச்சமயங்களில் அடிவயிறு சதாகாலமும் கனத்துக்கொண்டும், சில சமயங்களில் உப்பிக்கொண்டும், கைப்பட்டால் ரணம்போல் தோன்றிக்கொண்டுமிருக்கும். சூதகம் துர்வாசனையுடன் வரும்பக்ஷத்தில் அவர்களுடைய மனோவேதனை எப்படியிருக்குமென்று ஊகித்துக்கொள்ளலாம்.

சிலபேர்களுக்கு அச்சூதகம் நிறத்தில் மாறுதல் அடைகிறது உண்டு. இப்படி அவஸ்தைப்படுகிறவர்கள் தேகசக்தியுள்ளவர்களாகவும் தேக புஷ்டி சௌந்தரியமுள்ளவர்கனாகவும் இருந்தபோதிலும், வியாதியின் கொடுமையினால் தேகத்தில் காந்தி குறைந்து சரீரம் நாளுக்கு நாள் வெளுத்து, பாண்டு உண்டாகிவிடும். இப்பொழுது மாதவிடாய் கெடுதல்களைபற்றியும் மூன்று வகுப்பைச்சேர்ந்தவர்கள் அவரவர்கள் படும் அவஸ்தைகளைப்பற்றியும் மேற்கண்டபடி நன்றாய் விவரித்துரைத்து இருக்கிறேன். ஸ்த்ரீகள் வ்யாதி வந்தவுடன் கவனம் வைத்து சிகித்ஸையைத் தேடுவார்களென்று நம்புகிறேன்.

தம்புசெட்டி தெரு
25–5–15. } டாக்டர் ஜகதீசயயர்.

*Interesting Items.*

# I

## CONCERNING CHILDREN.

## குழந்தைகள் விஷயம்.

**The teething time of Children.**

**குழந்தைகளுக்குப் பல் முளைக்கும் காலம்** :— குழந்தைகளுக்கு முதல் பல் முளைக்கும் வயசு குழந்தைக்குத் தகுந்தபடி வித்தியாசப்படும்; ஆனாலும், அநேக குழந்தைகளுக்கு நான்கு மாசத்துக்குமேல் ஆறு மாசத்துக்குள் பல் முளைக்க ஆரம்பிக்கும். மிக்க பலமும் வளர்ச்சியுமுள்ள சில குழந்தைகளுக்கு மூன்று மாசத்திலேயே பல் முளைக்க ஆரம்பிக்கலாம்; பலவீனமான குழந்தைகளுக்கு பதினோராவது அல்லது பன்னிரண்டாவது மாசம்வரையில் முளைக்காமலிருக்கலாம். இங்கிலாந்தைவிட இந்தியாவில் பல் முளைப்பதில் நோவு குறைச்சலாயிருக்கிறது; சீக்ரமாகவும் முளைத்துவிடுகிறது. ஆனால் அதனாலுண்டாகிற சௌக்கியக்கேட்டையும் வியாதிகளையும் அதிக ஜாக்கிரதையாய்க் கவனிக்கவேண்டும்.

பல் முளைக்கும்போது சாதாரணமாய் குழந்தைக்குக் கோப மதிகமாகும், வேளையில் ஆகாரமுண்ணாது, இராத்திரியில் ஜுரம் வரும்; தாய் அநுபவமில்லாமல் சிறியவளாயிருந்தால் குழந்தைக்கேதோ உடம்பு பிரமாதமாக வரப்போகிறதென்று எண்ணிக்கொள்வாள்; பற்கள் முளைத்தவுடனே இதெல்லாம் எங்கேயோ போய்விடும்.

குழந்தைக்கிரண்டரை வயசானால் எல்லாப் பற்களும் ஒருதரம் முளைத்துவிட்டிருக்கும்; இவைகளுக்கு இருபது பாற்பல் என்று பேர். இந்தப் பற்கள் சாதாரணமாய் இரண்டு வரிசையாய் முளைக்கும்.

**Foreign bodies in the Eyes.**

**கண்களில் தூசு படிதல்**:— தும்பு, தூசி, பூச்சி இவைகள் கண்ணிரப்பையின் கீழ் புகுந்துகொண்டு அதிக எரிச்சலுண்டாக்குகின்றன. இவற்றை சாதாரணமாய் ஒரு பட்டுக் குட்டையின் மூலையைச் சுருட்டி யந்த முனையினாலாவது, ஒரு ஈரமாயிருக்கிற ஒட்டைமயிர் ப்ரஷ்ஷினாலாவது நீக்கிவிடலாம். கண்ணிரப்பையின்கீழ் அதிக தூசியிருந்தால் ஒரு பீச்சாங்குழலினால் ஜாக்கிரதையாய் வெந்நீரை யடித்தால் போய்விடும். எரிச்சலுண்டாக்குகிற வஸ்துவை எடுத்துவிட்ட பிற்பாடு, கண் இன்னும் நொந்துகொண்டிருந்தால், கண்ணினுள்ளே கொஞ்சம் நல்லெண்ணெய் அல்லது இலுப்பெண்ணெய் விடுவது நல்லது. நோவு இன்னும் விடாமலிருந்தால் ஒரு குளிர்ந்த ஈரமான கட்டு போடவேண்டும். சுண்ணாம்பு, காரை முதலான எரிச்சலுண்டாக்குகிற வஸ்துக்கள் சிலவேளைகளில் கண்ணிரப்பையின் கீழ் சேர்ந்துவிடுகின்றன. இவற்றைச் சாத்தியமான சீக்கிரத்தில் எடுத்துவிட்டு, கண்ணை வெந்நீரினால் கழுவி, கண்ணினுள்ளே கொஞ்சம் எண்ணெய் விடவேண்டும்.

**Indigestion from haste.**

**அவஸர போஜனத்தினால் அஜீரணம்** :—அநேகமாக வ்யாதிகள் நன்றாக ஆகாராதிகளை மென்று சாப்பிடாததினால் வருகின்றனவென்று டாக்டர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். அவஸரபோஜனத்தினால் உண்டாகும் வ்யாதிகளை ஜனங்கள் கவனிக்கிறது கிடையாது. குழந்தைப் பருவமுதற்கொண்டு ஒவ்வொரு ஆஹாரத்தையும் நன்றாக மென்று சாப்பிடவேண்டும். குழந்தைகள் சாப்பிடும்போது அவஸரப்படுத்தக்கூடாது. நீர் ரோகம் கைபிடிப்பு, கால்பிடிப்பு, மூலம் முதலிய ரோகங்கள் உண்டாகின்றன.

# II

## KITCHEN AND COOKERY.

## சமையலறையும் சமையலும்.

**Attika Palakaram.**

**அத்திக்கா பலஹாரம் அல்லது அத்திப்பழ பலஹாரம்**:—ஒரு ஆழாக்குவெள்ளை உளுத்தம்பருப்பை சுத்த ஜலத்தில் ஊறவைத்து ஆட்டுக்கல்லில் நைய அரைத்து எடுத்துக் கொள்ளவும். நெய்யுடனோ அல்லது நல்ல எண்ணெயுடனோ காய்கிற பாணலியில் அரைத்த உளுத்தமாவை அத்திக்காய் பருமனாக நெய்யில் போட்டுப் பொரித்து எடுத்துக்கொள்ளவும். ஒன்றரை ஆழாக்கு பசும்பாலில் 2½ பலம் சர்க்கரையை கலக்கவும். இரண்டு ஏலக்காயைத் தட்டிப் போட்டு குந்துமணி குங்குமப்பூவை அரைத்து பாலில் கலந்துவிடவும். நன்றாகப் பாலைக் காய்ச்சின பிறகு பொரித்து எடுத்துக்கொண்டிருக்கிற உளுந்துப் பொரியை பாலில் போட்டு எடுத்துச் சாப்பிடலாம். வெகு ருசிகரமாயும் மிருதுவாயுமிருக்கும். இதற்கு அத்திப்பழ பலஹாரம் என்று பெயர் வந்ததற்குக் காரணம் அத்திப் பழத்தைப்போல் மிருதுவாயிருக்கிறதினால் என்று அறிக.

**Oiled Brinjals.**

**எண்ணெய்க் கத்திரிக்காய்**:— பத்துக் கத்திரிக்காயை இளசாகவும் பெரிதாகவும் கொண்டுவந்து காம்பை நறுக்காமலும் பிளந்து துண்டாக்காமலும் முழுக் கத்திரிக்காயை பத்து பிளவாக பிளந்துகொள்ளவும். நல்ல ஜலத்தில் பிளந்தக் கத்திரிக் காய்களைக் கழுவவும். அரை ஆழாக்கு துவரம்பருப்பு, அரை ஆழாக்குக் கடலைப்பருப்பு, பத்துக் காயந்த மிளகாய் இவைகளை பாணலியில் ஒரு ஸ்பூன் நெய்யைவிட்டு வறுத்தபிறகு 2 தோலா உப்புடன் அம்மியில்பொடி பண்ணவும். இந்தப் பொடியை பிளவாக்கின முழுக் கத்திரிக்காய்களில் திணிக்கவும். 5 பலம் அரிந்த வெங்காயம் 1 பலம் உளுத்தம்பருப்பு, 10 அரிந்த பச்சைமிளகாய் இவைகளை 5 பலம் நல்லெண்ணெயும் 2½ பலம் நெய்யும் விட்டுக் காய்கிற பாணலியில் வறுத்துக்கொண்டு பொடியைத் திணித்து வைத்திருக்கிற கத்திரிக்காய்களை காய்கிற எண்ணெயில் வதக்கவும். ஒரு தோலா உப்பை அரை ஆழாக்கு ஜலத்தில் கரைத்து அதைக் கத்தரிக்காய்களோடு விட்டு மூடிவைக்கவும் நன்றாக வெந்த பிறகு எடுத்துக்கொள்ளவும்.

**Mango-Curds Pachadi.**

**மாங்காய்த் தயிர்ப் பச்சடி**:— மூன்று பொதுவான அளவுடைய மாங்காயை, ஒழுங்காய் வெட்டி வெந்நீரிலே வேகவைத்து, அரை ரூபாயெடை உப்பை ஒரு பாத்ரத்திலே போட்டு உழக்குத் தயிரையும் அதிலே விட்டு ஒரு ரூபாயெடை பச்சைமிளகாயை துண்டாக்கி நெய்யிலே வதக்கி, அதையும், வேகவைத்து ஆறின மாங்காயையும், தயிரிலே போட்டு நன்றாய்ப் பிசைந்து சற்று எண்ணெயையோ நெய்யையோ பொதுவான ஒழுங்கின்படி தாளித்துப் பச்சடியிலே விடவும்.

வாழைக்காய், புடலங்காய், வெண்டைக்காய் முதலியவைகளையெல்லாம் இவ்விதமாய்த் தயிர்ப்பச்சடியாக்கலாம்.

## III

# VIEWS AND REVIEWS.

## அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

### Authorities For Widow Marriage.

விதவா விவாஹத்துக்கு அதிகாரங்கள் :—

(1) ரிக்வேதம், 10, 18-8, 9, 10.

(2) ஐத்ரேய ப்ரமாணம் 3, பக்கம் 68 (பம்பாய் பதிப்பு).

(3) தைத்ரேய ஆரண்யகம் 6-1

(4) அதர்வண வேதம்.

(5) மனு 8-226, 9-76, 97-175, 176.

(6) விதவா விவாகம் சாஸ்த்ரீயமானது என்று மனு சொல்வதாக மாத்வர் தமது க்ரந்தத்தில் சொல்லியிருப்பது.

(7) விதவா விவாகம் சாஸ்த்ரீயமென்று மனு சொல்லியிருப்பதாக வைத்யநாத தீக்ஷிதர் தமது க்ரந்தத்தில் சொல்லியிருப்பது.

(8) விஷ்ணு, 15-வது அத்யாயம், 92,93-ச்லோகங்கள்.

(9) யாஜ்ஞவல்க்யர் விதவா விவாகத்தை ஒப்புக் கொள்வதாக க்ருஷ்ணாசார்ய ஸ்ம்ருதியில் சொல்லியிருப்பது:

(10) பராசார், 231-வது அத்யாயம்.

(11) வசிஷ்டர் 17-வது அத்யாயம். 498,-வது பக்கம் (கல்கத்தா பதிப்பு).

(12) பௌதாயனர், 22-3, 27; 4, 1, 17, (மாக்ஸ் முல்லர் இயற்றிய மொழிபெயர்ப்பு).

(13) விதவா விவாகம் சாஸ்த்ர ஸம்மதமென்று காத்யாயனர் சொல்லியிருப்பதாக நிர்ணய ஸிந்துவில் சொல்லியிருப்பது.

(14) நாரதர், 12-வது அத்யாயம், 95-100.

(15) மஹாபாரதம், பீஷ்மபர்வம், 90-வது அத்யாயம்.

(16) அக்னி புராணம், 154-வது அத்யாயம்.

(17) பாகவதம் 9, 9, 34.

(18) சாதுர்விம்சதி ஸ்ம்ருதி, பட்டோஜி தீக்ஷிதர் இயற்றிய பாஷ்யம்.

(19) ஸ்ரீமத் மகாபாரதம், தாத்பர்ய நிர்ணயம் (ஆனந்த தீர்த்தாசார்யார் இயற்றியது), 20-வது அத்யாயம்.

சாந்தியாவதற்கு முன் விதவையான பெண் இஷ்டப்பட்டால் வேத மந்தரத்தோடு மறுபடியும் கல்யாணம் செய்துகொள்ளலாமாம். சாந்தியானவளாயிருந்தால், வேதகர்மா இல்லாமல் புனர் விவாகம் செய்துகொள்ளலாமாம். 'நியூ இந்தியா' பத்ரிகையில் ஒரு நிருபர்.

### Education.

கல்வி :—

எலிமெண்டரி ஸ்கூல்களில் படிக்கும் பெண்களின் தொகை 97,658. ஸெகெண்டெரி ஸ்கூல்களில் 5,166 பெண்கள் படித்து வருகிறார்கள். அவர்களில் 3, 424 பேர்கள் இந்திய கிறிஸ்துவர்கள்; 446 பேர்கள் ப்ராம்மணர்கள்; 1, 154 பேர்கள் ப்ராம்மணர்களல்லாதவர்கள். மிஷனெரிகள் 32 ஸெகெண்டெரி ஸ்கூல்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், இந்தியர்களுக்கு பெண் கல்வி அபிவ்ருத்தியில் ச்ரத்தை யில்லை யென்று ஏற்படுகிறது.

ஜட்ஜ் டி. வி. சேஷகிரி அய்யர்.

## IV

# MISCELANEOUS NEWS.

## நாநாவிஷயங்கதி.

### Sir C. Sankaran Nair.

ஸர் ஸி. சங்கரன் நாயர் :— ஸர் ஸி. ஸங்கரன் நாயர் அவர்கள் ராஜப்ரதிநிதியின் நிர்வாக கவுன்ஸிலில் மெம்பராக உயர்த்தப்பட்டிருக்கிறார். இந்தியர்கள் அனைவரும் அளவிலா ஸந்தோஷமடைந்து தங்கள் ஸந்தோஷத்தை ராஜப்ரதிநிதிக்கு தெரிவித்து வருகிறார்கள்.

### Last Eight Months' War Expenses.

எட்டுமாத யுத்தச் செலவு :— மே மாஸம் 4உ லண்டன் பார்லிமெண்டு ஸபையில் மிஸ்டர் லாய்டு ஜார்ஜ் பேசியபோது 'அபிஷியல் வருஷத்தோடு முடிவான எட்டுமாஸ காலத்திற்குள், அதாவது கடந்த மார்ச்சுமாஸம் 31உ யோடு முடிந்த 8 மாஸ காலத்திற்குள், யுத்த சம்பந்தமாகச் செலவிட நேர்ந்திருக்கும் தொகை 360,000,000 பவுன். இதில் நேசமாயுள்ள மற்ற வல்லரசுகளுக்குக் கடனாக அளித்திருக்கும் தொகை 52,378,000 பவுனும் உள்பட்டதாகும்' என்று குறிப்பிட்டார்.

### Italy.

இடாலி :— இப்போது ஐரோப்பாவில் 10 மாத காலமாக இடைவிடாமல் யுத்தம் நடந்துவருகிறது. நமது எதிரிகள் நாளுக்கு நாள் கைசளைத்தே வருகிறதாகத் தெரிகிறது. எதிரிகள் சேதம் வெகுபலமாகவே யிருக்கிறது. ருஷ்யர்கள் முன்னடைந்துதான் வருகிறார்கள். இந்த ஸமயத்தில் நமது பிரிட்டிஷாரோடு இடாலியும் சேர்ந்து விட்டது. இடாலி நமது பக்கம் சேருமென்று எதிர்பார்த்ததுதான். நாலா பக்கத்திலும் இடிபடுகிற ஜெர்மானியும் ஆஸ்டிரியாவும் வெகு பாடுபடும். யுத்தம் முடிகிறஸமயம் சொல்லமுடியாது. ஆனால் சீக்ரத்தில் முடியுமென்று சிலர் ஊகிக்கிறார்கள்.

டார்டனல்ஸ் ஜலசந்தியின் கரையோரமாக ஸமாஸ் ஜலசந்திவரையில் யுத்தமண்டலமாகுமென்று பிரிட்டிஷார் கூறிவிட்டார்கள். துருக்கியர்களின் பாடு கஷ்டமாகத்தான் முடியுமென்று சொல்லுகிறார்கள்.

### Emden's Memory.

எம்டன் ஞாபகம் :—சென்னை நகரவாசிகளுக்கு எம்டன் கப்பலைப் பற்றிய ஞாபகம் ஒருபோதும் மனதிலிருந்து அகலாதிருக்கும்படி சென்னை ஐகோர்ட் காம்பவுண்டு வெளிச் சுவரில் பீச்சுக்கரைப் பக்கமாக எந்த இடத்தில் எம்டன் குண்டு விழுந்ததோ அந்த இடம் தற்போது புதுப்பிக்கப்படுகையில் ஒரு கருங்கல்லில் அடியிற் குறித்தவாறு செதுக்கப்பட்டிருக்கிறது.

"1914ஆ செப்டம்பர்மீ 22உ இரவில்" 'எம்டன்' ஜர்மனியப் போர்க்கப்பல் சென்னையைகுண்டுபோட்டு தகர்த்தபோது, இந்தஇடத்தில் ஒரு குண்டு வந்து விழுந்து காம்பவுண்டு சுவரைப் பழுதாக்கிவிட்டது"

இதைப் பார்க்கும் ஒவ்வொருவரும் எதிரியின் போர்க்கப்பல் சென்னைக்கு வந்துபோனது என்று ஞாபகம் கொள்வார்கள்.

169

## V
## WOMAN'S WORLD.
## ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

**Kaiser's Daughter & Daughter-in-Law.**

**கெய்ஸரினுடைய பெண்ணும் மருமகளும்:**—ஜெர்மன் சக்ரவர்த்தியாகிய கெய்ஸருடைய புத்ரர்கள் போர்வீரர்களாக இருப்பதோடு அவருடைய புத்ரியும், மருமகளுங்கூட ராணுவத்தில் சேர்ந்திருக்கிறார்களாம். அவருடைய புத்ரி ராணுவத்தில் நன்றாய்ப் பழகியிருப்பதோடு, 'டெத்ஸ் ஹெட் ஹஸ்ஸார்ஸ்' (யம கிங்கிலியர்கள்) என்னும் பட்டாளத்துக்குக் கர்னலாக இருக்கிறாராம். இளவரசருடைய மனைவியும் புத்ரியைப்போலவே ராணுவத்தில் பழகி ட்ராகூன் என்கிற படைவகுப்பில் ஒரு பட்டாளத்துக்கு கர்னலாய் இருக்கிறார். இவர்கள் இருவரும் ராணுவத்தில் கமிஷன் பெற்ற ஆபீஸர்கள் அந்தஸ்தில் இருக்கிறார்கள்.

**A Female Cannibal.**

**நரமாம்ஸம் புசித்த ஒரு ஸ்த்ரீ.**—கல்கத்தாவுக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்திலே ஸ்த்ரீயொருத்தி இரண்டு குழந்தைகளைத் தாக்கி, ஒரு குழந்தையைக் கன்னத்தில் கடித்து ரத்தத்தைக்குடித்துக்கொண்டிருந்த போது போலீஸார் அவளைக் கைது செய்தார்களாம். அக்குழந்தை வைத்யசாலையில் அபாயமான நிலைமையில் இருப்பதாகத் தெரிகிறது.

**Saraswathi Title.**

**ஓர் இந்திய மாதராளுக்கு ஸரஸ்வதி பட்டம்:**—வட இந்தியாவைச் சேர்ந்த நாடியா என்ற ஜில்லாவில் வசித்துவரும் ஷெயிகஜா மிரட்டி என்பவரின் புதல்வியான பிபிநூர்ஜிஹான் காட்டூன் என்னும் மாதராளுக்கு மிகவும் அருமையான சாஸ்வதி என்னுங் கௌரவப்பட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது. அம்மாதராள் சமீபமாகத் நான் சமஸ்கிருதத்தில் ஆர்யசாஹித்தியஸபா பரீட்சையில் தேறினளாம்.

**Stridana.**

**ஸ்த்ரீதனம்:**—ஒரு ஸ்த்ரீ ஒரு ஸொத்தை வாங்கினாள். அதற்குக் கொடுக்க வேண்டிய பணத்துக்கு அந்த ஸொத்தை இன்னொருவருக்கு ஈடுவைத்துப் பணம் வாங்கி ஸொத்து விற்றவருக்குச் செலுத்தினாள். பிறகு காலக்ரமத்தில் ஈட்டை மீட்டுக்கொண்டாள். இந்த ஸ்த்ரீயின் ஸொத்து யாரைச் சேருமென்பது கேள்வி. ஒரு ஸ்த்ரீ புருஷர்களால் தனக்கு வந்த ஸொத்துக்களிலிருந்து யாதொரு உதவியும் இல்லாமல் தனது புத்திசாதுர்யத்தால் ஒரு ஸொத்தையடைந்தால் அது அவளுடைய ஸ்த்ரீதனமாகும். அது அவளுக்குப் பிறகு அவளுடைய வார்ஸுகளுக்குப் போகும் பெண்களும் பிள்ளைகளும் இருந்தால் ஸொத்து பெண்களுக்குப்போகும்.—2 லா வீக்லி 415.—ஜனுபிமாணி.

**A Purified Woman.**

**பரிசுத்தம் செய்யப்பட்ட ஓர் ஐரோப்பிய ஸ்த்ரீ:**—மேமீ 30-ந் தேதி லபஹூரில் ஆரிய சமாஜத்தார் வழக்கப்பிரகாரம் கூடும் வாராந்திர மீட்டிங்கு கூடினபிற்பாடு மிஸ்ஸஸ் குலாத்தியா என்ற ஓர் ஐரோப்பிய ஸ்த்ரீ வேதப் பிராமணமாகவுள்ள முறைகளினால் பரிசுத்தம் செய்யப்பட்டாள். மிஸ்டர் சாமான்லால் குலாத்தியா என்பவர் இங்கிலாந்தில் சட்டப் பரிக்ஷைக்கு வாசித்துக்கொண்டிருக்கையில் மேற்படி ஐரோப்பிய ஸ்த்ரீயை விவாகஞ் செய்துகொண்டாராய், அவர் தற்போது பாரிஸ்டராக லாஹூரில் பிராக்டீஸ் செய்யப்போகிறாரெனச் சொல்லப்படுகிறது.

# PROGRESS OF THE WORLD
## ப்ரபஞ்சப்போக்கு.

**The Nadia Mission Case.**

**நாடியா மிஷன்கேஸ்:**—வங்காள மாகாணத்தைச்சேர்ந்த நாடியா ஜில்லாவில் ஒரு விசேஷமான ஸம்பவம் நடந்தது. இதை ஒவ்வொரு இந்தியப் பெற்றோரும் அறியவேண்டியது. நாடியா ஜில்லாவில் ஒருவர் இறந்துபோக, அவர் பார்யை தன் இரண்டு மைனர் பிள்ளைகளோடு க்றிஸ்தவமதத்தில் சேர்ந்தாள். மூத்த பிள்ளைக்கு வயது 9, மற்றொரு பிள்ளைக்கு வயது 5. பிள்ளைகள் மைனர்களாயிருக்கிறபடியால் அவர்கள் க்றிஸ்த்வமதத்தில் சேர்ந்தவர்களாகக் கருதப்படார்களென்றும், க்றிஸ்தவமதத்தில் சேர்ந்திருக்கிற தாயாரிடமிருந்து விலக்கப்படவேண்டுமென்றும் மேலும் தான் கார்டியனாக நியமிக்கப்படவேண்டுமென்றும் த்விஜபாதன் என்னும் பிள்ளைகளின் சிறு தகப்பன் கல்கத்தா ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தான். ஜட்ஜுகள் தாயாரையும் சிறு தகப்பனையும் பிள்ளைகளுக்குக் கார்டியன்களாக நியமித்து, அவர்களை ஹிந்துமதத்தில் கொண்டுவரும்படி உத்தரவிட்டார்கள். மூத்தபிள்ளை, க்ருஷ்ணகர் ஹிந்துஸ்கூலையொட்டி மாணவர்களுக்காக ஏற்படுத்தியிருக்கிற சாப்பாடு விடுதியில் (ஹாஸ்டல்) தங்கி வாசித்துவரவேண்டும். பையன் இஷ்டப்பட்டபோதெல்லாம் பந்துக்களைப் பார்த்துவரலாம். இரண்டாவது பையன் 7 வயதுவரை தாயாரிடமிருந்து பிறகு மூத்த பையனோடு சேர்ந்து வாசித்துவரவேண்டியது. பையன் தன்னிடமிருக்கிறவரை தாயார் எந்தக்காரணத்தைக்கொண்டும் பைபிலையாவது அல்லது ஹிந்துமதத்துக்கு விரோதமான அனுஷ்டானங்களையாவது அவனுக்குப் போதிக்கக்கூடாது என்று தீர்ப்புசெய்தார்கள்.

பொதுவாக ஜனங்கள்—ஸ்த்ரீகளாகட்டும் புருஷர்களாகட்டும்—க்றிஸ்தவமதத்தின் மேலான உண்மைகளை அறிந்து தெளிந்து அம்மதத்தில் சேருகிறார்களென்று சொல்ல முடியாது. க்றிஸ்தவர்களின் ஆசையான தூண்டுகோலுக்கும் வசீகரசக்திக்கும் உள்ளாகியே ஜனங்கள் சேருகிறார்கள். இதுபோன்ற கேஸ்கள் பல

நடந்திருக்கின்றன. இதற்கெல்லாம் முக்யகாரணமாயுள்ளது ஸ்த்ரீகளுக்கு ஸரியான ஹிந்துமத போதனை கொடுக்காமையேயன்றி வேறில்லை. ஹிந்துமதப் படிப்பு புருஷர்களைவிட ஸ்த்ரீகளுக்கு அவச்யமென்பது எவ்விதத்திலும் பொருந்தும்.

**Sir C. Sankaran Nair & Panchama Girls' Schools.**

**ஸர் ஸி. சங்கரன் நாயரும் பஞ்சமப் பெண் பள்ளிக்கூடங்களும்:**—ஸர். ஸி. சங்கரன் நாயர், வைஸராய் நிர்வாக ஸபையில் கல்வி இலாகா மெம்பராக தெரிந்தெடுக்கப்பட்டபிறகு, மைசூருக்குப் போயிருந்தார். அப்போது அங்கு அவர் சில கல்வி ஸ்தாபனங்களைப் பார்த்தார். அவைகளில் வாணிவிலாஸ பஞ்சமப்பெண்களின் பாடசாலையைப்பார்த்தது குறிப்பிடத்தக்கது. பஞ்சமப் பெண்களின் கல்வி அபிவ்ருத்தியைப்பற்றிப் பேச நேர்ந்தபோது பின்வருமாறு தெரிவித்தார்:

"சகலவித செழிப்புக்கும் கல்வியே மூலகாரணம். கல்வியில்லாமல், எந்த ஸமூகமும் உலகத்தில் முன்னேற்ற மடையாது. ஆகையால் நீங்கள் உங்களுடைய குழந்தைகளை ஸ்கூல்களுக்கு அனுப்பி அவர்களுக்குச் சிறந்த கல்வியைக் கொடுப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டும். அவர்களுக்குக் கொடுக்கும் கல்வியானது உடனே உங்களுக்கு நல்ல பலனைக் கொடுக்கத் தவறினால் அதைப்பற்றி நீங்கள் அதைர்ய மடையக்கூடாது. ஒரு நல்ல கார்யத்தைச் செய்ய ஆரம்பித்தால் இடையில் பல கஷ்டங்கள் நேரிடும். அவைகளையெல்லாம் நீங்கள் பொறுமையுடன் வகித்து ஊக்கத்தைத் தளரவிடாமலிருக்கவேண்டும். உயர்ந்த வகுப்பார் நல்ல படிப்பை அடைவதற்குச் செய்த ப்ரயத்தனம் கொஞ்சமல்ல. தாழ்ந்த வகுப்பைச்சேர்ந்த பலர் மகாப் பிரயத்தனஞ் செய்து கல்வியைக் கற்று உயர்ந்த ஜாதியாரை மீறியிருப்பதை நான் நேராக அறிவேன். உங்களுடைய ஸமஸ்தானத்தில் உங்களுடைய கல்வி யபிவ்ருத்திக்குத் தடைநேரிடும் பக்ஷத்தில், நீங்கள் சும்மா இராமல், கல்வியதிகாரிகளிடஞ் சென்று உங்களுடைய குறைகளை நிவர்த்திக்கும்படியாக முறையிடவேண்டும். அவர்கள் உங்களுக்குப் பரிகாரஞ் செய்யாவிட்டால், திவானிடஞ் சென்று முறையிடுங்கள். அங்கும் உங்களுக்குப் பரிகார வழி ஏற்படாவிட்



டால், கல்வியறிவிலும் சாமர்த்தியத்திலும், ஔதார்யத்திலும் பெயர்போன உங்களுடைய காருண்ய மகாராஜாவினிடம போய் முறையிடுங்கள். அவர் பரிகாரஞ் செய்யாமலிருக்கமாட்டார். இந்த மைசூர் சமஸ்தானத்தில் உங்களுடைய சமூகத்தின் முன்னேற்றத்தைப் பற்றி உத்தியோகஸ்தர்கள்மட்டு மல்ல, மற்ற கனதனவான்களும் அக்கறை கொண்டிருக்கிறதைக் கண்டு நான் ஸந்தோஷப்படுகிறேன்."

**Women and the War relief fund.**

**ஸ்த்ரீகளும் யுத்தகஷ்ட நிவர்த்தி நிதியும்:**—பம்பாயில் யுத்தகஷ்ட நிவ்ருத்தி நிதியையொட்டி ஸ்த்ரீகளின் கிளைநிதியொன்றிருக்கிறது. அந்த கிளைச்சங்கத்தின் மீட்டிங் ஒன்று ஸமீபத்தில் நடந்தது. பம்பாய் கவர்னரின் மனைவி லேடி வில்லிங்டன் அக்ராஸனம் வஹித்தார். அப்பொழுது வெளியாக்கப்பட்ட ரிபோர்ட்டில் பின்வரும் விஷயங்கள் காணப்படுகின்றன:—"அந்த ஸ்த்ரீகளின் சங்கத்திலுள்ள மகம்மதிய ஸ்த்ரீகளால் 30 ஆயிரம் சாமான்களும், பார்ஸிஜாதி ஸ்த்ரீகளால் 20 ஆயிரத்து 200 சாமான்களும், ஹிந்து ஸ்த்ரீகளால் 19 ஆயிரத்து 800 சாமான்களும் தயாரித்து அனுப்பப்பட்டிருக்கின்றன. அதைத் தவிர போர்முனைக்குப் போயிருக்கும் ஸோல்ஜர்களின் குடும்பத்தாருக்கு ஹிந்து ஸ்த்ரீகளால் பல நூற்றுக்கணக்கான உடைகளும் அனுப்பப்பட்டிருக்கின்றன." முடிவில் அச்சங்கத்தின் வருஷாந்தர மீட்டிங்கை ஆகஸ்டு மாதம் 21-ந் தேதியன்று கூட்டப்போவதாக லேடி வில்லிங்டன் அறிவித்தார்.

இப்போது யுத்தகஷ்ட நிவ்ருத்தி நிதிக்கு இந்தியாவில் ஆங்காங்கு ஸ்த்ரீகள்—பல மதத்தினர்—அக்கரையெடுத்து நிதி சேர்ப்பதை ஊகித்துப்பார்த்தால் ராஜபக்தியும் தேசாபிமானமும் கொண்டு புருஷர்களுடன் கலந்து உழைக்க முன்வந்திருக்கிறதை வெளிப்படுத்துகிறது.

**Abdulla Haji Muhammadan Home for Women.**

**அப்துல்லாஹாஜி மகம்மதிய ஸ்த்ரீகளின் ஆச்ரமம்:**—பம்பாய் நகரில் மகம்மதிய ஸ்த்ரீகளுக்காக மேற் குறிப்பிட்ட நாமதேயத்துடன் ஒரு அநாத சாலை ஏற்படுத்தப்பட்டு கடந்த நான்கு

வர்ஷங்களாக நடைபெற்று வருகிறது. மேற்படி சாலையின் 1914-15-ம் வர்ஷத்தின் ரிபோர்ட்டை பார்வையிட்டோம். சென்ற 1913-14-ம் வர்ஷ முடிவில் அதில் 37-பெண்கள் இருந்ததாகவும் 1914-15-ம் வர்ஷ ஆரம்பத்தில் 22 சிறுமிகள் புதிதாகச் சேர்ந்ததாகவும் ஆக அநாதசாலையில் 59 சிறுமிகள் பாதுகாக்கப்பட்டு வந்ததாகவும் தெரிகிறது. அவர்களில் ஒரு பெண்ணுக்கு விவாகம் நடந்தேறியதால் அப்பெண் அநாதசாலையை விட்டுப் போய் விட்டதாகவும், மூன்று பேர் மரணமடைந்துவிட்டதாகவும், எட்டு பேர் அவர்களது உறவினரிடம் ஒப்புவிக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே 1914-15-ம் வர்ஷ முடிவில் அநாதசாலையில் ரக்ஷிக்கப்பட்ட பெண்கள் 47.

பெற்றோர்கள் இறந்தவுடன், திக்கற்ற குழந்தைகள் உறவினர்களினாலாவது அல்லது அநாதசாலையின் ஏஜெண்டுகள் மூலமாகவாவது அநாதசாலையில் கொண்டுவந்து விடப்படுகின்றன.

கேவலம் தர்மத்தை நாடி வைக்கப்பட்ட இந்த அநாதசாலை அநேக நன்மைகள் செய்யக்கூடியதாயிருக்கிறது. சென்னையில் மகம்மதிய ப்ரபுக்கள் திக்கற்ற மகம்மதியக் குழந்தைகளுக்கு இது போன்ற ஒரு அநாதசாலை ஏற்படுத்துவது அவச்யம். இதை மகம்மதிய ப்ரபுக்கள் கவனிப்பார்களாக.

**The Coimbatore Social Conference.**

கோயமுத்தூர் ஆசார சீர்திருத்த கான்பரன்ஸ்:—இம்மாதம் 22-ந் தேதி ஈரோட்டில் மிஸ்டர் அ. மாதவய்யா அக்ராஸனத்தின் கீழ் ஆசார சீர்திருத்த கான்பரன்ஸ் கூடிற்று. மிஸ்டர் அ. மாதவய்யா ஸால்ட் அப்காரி இலாகாவில் ஒரு இன்ஸ்பெக்டர். சில புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார். ஜட்ஜ் ஸதர்சிவய்யரின் ஸம்மந்தி.

இவர் ஒரு நீண்ட ப்ரசங்கம் செய்தார். ஆசார சீர்திருத்த ஸம்பந்தமாக இவர் ஆழ்ந்த யோசனையுடன் ப்ரசங்கம் செய்ததாகத் தெரியவில்லை. இவர் ப்ரசங்கம் சிறுபிள்ளைத்தனமாக இருக்கிறதென்று சொல்லவேண்டியிருக்கிறது. இவர் ஜனங்களின் நன்மதிப்பைப்பெறுவது அஸாத்யம்.



# WOMEN'S EDUCATION AND CHASTITY.

By

**Mr. P. A. Krishnan, F. T. S.,**

*Lodge Secy. Kammavarpalayam.*

## பெண்களின் கல்வியும் பதிவ்ரதா தர்மமும்.

"எண்ணென்பவேனை எழுத்தென்பவிவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

என்ற தெய்வப்புலமை திருவள்ளுவநாயனார் அற்புத வாக்கின்படி, நமது சரீரத்திற்கு இருகண்களும் எவ்வாறு பிரதானமாய் விளங்குகின்றனவோ அவ்வாறே ஒருவனுக்கு அறிவைப்புகட்டி, புத்தியை நல்வழியிற் செலுத்தக் கல்வியே நேத்திரமாய் விளங்குகின்றதாம்.

2. முற்காலத்தில் நமது தேசத்தில் பெண்கல்வியானது எங்கும் பரவி, செழிப்புற்றோங்கி யிருந்ததென்பதை நாம் சரித்திர மூலமாகவும், இதிகாச புராணங்களினின்றும் எளிதில் அறியலாம். சில நூற்றாண்டுகளுக்குப்பின் பல்வேறு அசந்தர்ப்பங்களால், பெண்கல்வியானது நிலைகுலைந்து, மாசுபடர்ந்த மாணிக்கம்போலாய் விட்டது.

3. நமது நாட்டில் பெண் கல்வி விசேஷ அபிவ்ருத்தி இன்னும் அடையவில்லை. ஆனால் கொஞ்சகாலத்துக்கு முன்னிருந்ததைவிட இப்போது அபிவ்ருத்தி யுண்டாயிருக்கிறதாகவே எண்ண இடமிருக்கிறது. ஸர்க்கார் நமது பெண்களைப் பிள்ளைகளைப்போலவே கருதி கல்வி கற்பிக்கின்றனர். அது கூடாத கார்யம். நமது ஸ்த்ரீகள் கற்கும் கல்வியானது நற்குணம் வாய்ந்ததாகவிருக்க வேண்டும். மேலும் அவர்களுக்குக் கற்பிக்கும் கல்வி முக்கியமாகச் சன்மார்க்கப்பயிற்சி யுண்டாக்கக் கூடியதாகவே யிருக்க வேண்டும். அதனால் பெண்கள் சீர்திருத்தமடைந்து நல்ல ஒழுக்கமுள்ளவர்களாவார்களென்பதற் கையமில்லை.

4. பெண்கள் கற்கவேண்டிய விஷயங்கள் அநேகமுள. சுகாதார விதிகளை முதலில் அவர்கள் கற்கவேண்டும். அவ்விதம் செய்யாவிட்டால் அவர்கள் வசிக்கும் வீடுகளைச் சுத்தமாகவும் நல்ல காற்றோட்டமுள்ளவைகளாகவும் வைத்துக்கொள்ளுதல் அவர்களுக்கு அரிதான கார்யமாகும். தவிர வரவுக்குமேல் செலவிடும் துர்வழக்

கத்தினின்றும் விடுபடுமாறு பெண்களுக்கு கணிதசாஸ்திர பயிற்சியும் அவச்யம் வேண்டும். மேலும் தேகாரோக்கியமும், புத்திகூர்மையுமமையப்பெற்று வலிமையும் பொருந்தியுள்ள வத்ஸர்களையடைவது சரீரசாஸ்திரப்பயிற்சி பெற்ரோர்க்கே கூடுமாதலின் அவ்வித அறிவையும் நமது சகோதரிகளுக்கு புகட்டுதல் வேண்டும். சுருக்கமாக, நமது ஸ்த்ரீ ரத்தினங்கள் தமது வாழ்நாட்களில் எவ்வித கடமைகளைச் செய்ய நேரிடுமோ அவற்றை யெல்லாம் அணுவளவேனும் பிசகாமல் சரிவரச்செய்யுமாறு அறிவைப்புகட்டுவதே கல்வி கற்பிப்பதின் முக்கிய நோக்கமா யிருக்கவேண்டும்.

5. "இளமையிற்கல்" என்றவாறு, மதவிஷயமான போதனைகளை பால்யத்தில் தமது புத்திரர்களுக்குக் கற்பிக்க, கற்றறிந்த தாய்மாரே தகுதியாவர். மேலும், இம்மையில் எல்லாச் சுகங்களையும் பெற்று மறுமையிலும் இன்பத்தை யடையுமாறு ஸ்த்ரீகள் என்றும் நல்லொழுக்கத்தையே கைப்பற்றி, தமது கணவருடன் நெடுநாள்கூடி இல்லறதர்மத்தை குறைவின்றி நடத்துவதற் கேதுவாய் கணவனுடைய குறிப்பறிந்து நடத்தற்கும், மானம், கற்பு, பொறுமை என்னும் நற்குணங்களை யெல்லாம் அமையப்பெறுதற்கும் கல்வியே பிரதானமாயிருப்பதும் எளிதிற் புலப்படும்.

6. நமது நாட்டில் அநேகம் பெண்கள் படித்து அதிக புத்திசாலிகளா யிருக்கிறார்கள். சிலர் நன்றாய்ப் பாடுவதிலும், சிலர் இராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய காவியங்களை ஊக்கமுடன் வாசிப்பதிலும், மற்றும் சிலர் ஸமஸ்கிருத பாண்டித்திய முடையவர்களாய் தேவதா ஸ்தோத்திரம் முதலியவைகளை பாடம்செய்து திருக்கோயில்களில்பாராயணம் செய்வதுடன் வீடுகளில்பாராயணம் செய்வதிலும் தேர்ச்சியடைந்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் அமைந்திருந்தும் கல்விகற்ற பெண்களில் அநேகம்பேர் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாததாயும், இகபரத்துக்குச் சாதனமாயுமிருப்பதை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவராமல் கேவலம் புத்தகப் படிப்பையே யுடையவர்களாயிருக்கிறார்கள். பெண்களிற் பெரும்பான்மையோர் வாழ்க்கைப்படுகிறவர்களாகவே யிருக்கிறார்கள், அப்படியிருக்க, அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய



மான விஷயம் பதிவிரதா தர்மமாகும். இந்த பதிவிரதா தர்மமே அவர்களுக்கு இவ்வுலகத்தில் அனுபவிக்கக்கூடிய போகபாக்கியங்களையும் பின்பு அடையவேண்டிய மோக்ஷசாம்ராச்சியத்தையும் கொடுக்கவல்லது.

7. பதிவிரதை என்பது சமஸ்கிருதத்தில் 'பதிவ்ரதா' என்றதின் திரிபு. 'பதி' என்றால் புருஷன். 'பதிவ்ரதா' என்றால் பதியையே விரதமாகக் கொண்டவள் என்பது பொருள். அதாவது தன் புருஷனையே விரதமாக உடையவள் என்பதாம். விரதம் என்பது ஏகாதசி முதலியவை போன்றது. ஆகையால் இல்வாழ்க்கையிலிருக்கும் ஒவ்வொரு ஸ்த்ரீயும் யாதொரு விரதமும் அனுஷ்டிக்க வேண்டிய தவசியமில்லை. ஆகவே பதிவிரதா தருமம் என்பது பதிவிரதையின் கடமை என்பது பொருள். 'தர்மம்' என்றால் கடமை என்று அருத்தம். எல்லா மதங்களிலும் பதிவிரதா தர்மத்தையே விசேஷமாக எடுத்துப்பேசப்பட்டிருக்கிறது. உத்தமிகளுக்குச் சகல போகபாக்கியமும் மோக்ஷபதவியும் கிடைக்குமென்பதில் ஐயமில்லை.! புருஷர்களின் விருத்திக்கு உத்தமிகளே காரணமாகிறார்கள்.

8. நன்றாய் ஆலோசிக்குமிடத்து பெண் ஜன்மம் புருஷ ஜன்மத்தைவிட மேலானது. ஆகவே கற்பின் மகிமையினால் பெண்கள் சகல சித்தியும் பெறலாம். பாடசாலைகளில் கற்கும் சிறுமிகளுக்கு இவ்விஷயங்களை உட்கருத்து நன்றாய் விளங்குமாறு கற்பித்தால், நமது நாடு அறிவு, செல்வம், புகழ் முதலிவைகளில் விருத்தியடைவதுமன்றி, பெண்கல்வியிலும் அதிக ஊக்கமுண்டாய் அபிவிருத்தியடையும் என்பது நிச்சயம்.

பி. அ. க்ருஷ்ணன்.

---

இந்தியாவில் எல்லாத்திருத்தங்களுக்கும் மதம் அத்யாவச்யம் மதத்தை அலக்ஷ்யம் செய்தால் திருத்தங்கள் ஏற்படுவது முடியாத காரியம். —ஜட்ஜ் ஸதாசிவய்யர்.

# BEAUTY METER.

By

**Mr. T. R. Varadachari.**

## சௌந்தர்ய மானம்.

சௌந்தர்யத்துக்கு அளவுமுண்டோ ! ஒருவரைக் காட்டிலும் மற்றொருவர் அழகென உலகில் சொல்வது ஸகஜம். உயரம், பருமன், நிறம், ஆடையாபரணந் தரித்திருத்தல் இவைகளில் இரண்டு பேர்கள் ஒத்திருந்தாலும் அவர்கள் முகம் ஒன்றாயிருப்பதில்லை. நன்னடக்கை, பொறுமை, கருணை, அன்பு, வாக்சாதுர்யம் இவை சௌந்தர்யத்துக்கு பூஷணமாகுமே ஒழிய லக்ஷணமே ஆகா. விசேஷமாய் அழகின் வாசஸ்தானம் முகமே.

யாரை அழகாயிருப்பதாகச் சிலர் சொல்லுகிறார்களோ அவரையே விகாரமாயிருப்பதாக மற்றுஞ் சிலர் சொல்லலாம். இதிலிருந்தே சௌந்தர்யத்தை மதிக்க ஓர் அளவு (Standard) இல்லையெனப் புலப்படும். இதுபற்றியே நம் சாஸ்திரங்கள் மன்மதனை அரூபியெனப் பேசுகின்றனவோ என எண்ணவுமிடமாயிருக்கிறது. ஆனால் க்ரீக் சிற்பசாஸ்திரிகள் அழகுவாய்ந்த ஓர் முகத்துக்குள்ள லக்ஷணங்களை எடுத்துரைத்திருப்பதுமன்றி, அவ்விலக்ஷணங்களின் முறைப்படி கற்சிலைகள் செய்தும் வைத்திருக்கிறார்கள். அவைகளைப் பரிக்ஷைசெய்து பார்க்கும்பொழுது, நெற்றி, கண், மூக்கு, வாய், செவி, இவற்றின் அமைப்பிடங்களும், ஒவ்வொன்றின் பரிமாணமும் நன்கு விளங்கும்.

அவர்கள் கணக்கிட்டிருக்கும் வழி, மண்டையோட்டு உச்சியிலிருந்து முகவாய்க்கட்டையினடி ஒன்பது அங்குலம். மூக்கு நுனியிலிருந்து நேரே பின்தலை ஒன்பது அங்குலம், ஓர் காதின் அடியிலிருந்து மற்றொரு காதினடி ஐந்தரை அங்குலத்துக் கப்பாலிருக்கவேண்டும். நடுநேத்திரங்களின் இடை இரண்டரை அங்குலத்துக்கு மேலிடக்கூடாது. (குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் கண்கள் ஒரே தூரத்திலிருக்கு மென்பது வியக்கத்தக்கது.) நேர்ப்பார்வையில் விழிகளைத் தொட்டுப்போகும் ஓர் நேர் கோட்டிலிருந்து (Straight line) நாசியடியின் வழியாய் ஓடும் சமதூரக்



கோடு (Parallel st. line) ஒன்றே முக்காலே அரைக்கால் அங்குலமிருக்கவேண்டும். மூடிய வாய்பிளப்பின் வழியாய்ச் செல்லும் மற்றொரு சமதூரக்கோடு, அதன்மேல் மூக்கினடியாய்ப் போவதிலிருந்து முக்காலங்குலமும், முகவாய்க் கட்டையிலிருந்து இரண்டங்குலமு மிருக்கவேண்டும்.

மேலே சொல்லிய ப்ரகாரம், சமதூரக் குறுக்கு நெடுக்குச் சட்டங்களால் செய்யப்பட்டுள்ளது, சௌந்தர்யமான மென்னுங் கருவி. இதனுதவியால் ஒருவர் தம அழகை நிர்ணயஞ்செய்து, அங்கக்குறையிருப்பின் நிவர்த்திசெய்துகொள்ளலாம்.

**டி. ஆர். வரதாசாரி.**

---

# RAJA VIKRAM AND THE FAKIR.

By

**SRI VALAMBAL.**

## விக்ரமார்க்க ராஜாவும் பக்கிரியும்.

(மேலீப் பத்ரிகையின் தொடர்ச்சி.)

மூடவனான விக்கிரம ராஜா வாணியன் வீட்டில் காப்பாற்றப்பட்டு வந்தான் என்று சொன்னோம். ஒருநாள் வாணியன் மூடவனை அழைத்து ஸ்நானம் செய்துவைக்க நினைக்க, அம்மூடவன் தன்னை சீனு சக்ரவர்த்தி குமாரத்தியின் குளத்திற்கு அழைத்துப் போகும்படி தெரிவித்தான். மூடவனின் இச்சைப்படியே வாணியன் ராஜகுமாரத்தியின் குளத்திற்கு கூட்டிக்கொண்டு போக, தன்னை படிக்கட்டண்டை விட்டுவிட்டு இரவு 12 மணிக்கு வந்து அழைத்துப்போகும்படி அவன் வேண்டினான். வாணியன் அப்படியே செய்ய, அவன் திரும்பி வருவதற்குள் ராஜா ஸ்நான ஜபதப ஹோமங்களை முடித்துக்கொண்டு ரஜனி தீபக் என்னும் ராகத்தை எடுத்து வெகு ஸுகமாகப் பாடவே, அந்த நள்ளிரவு பட்டப்பகல்போலாச்சுது. பட்டண முழுமையும் ஜனங்கள் விழித்துக்கொண்டு காரணத்தைத்தெரிய ஆவல்கொண்டிருந்தார்கள். ராஜகுமாரத்தி இது விக்ரமராஜா செய்த செய்கையென்று தெரிந்துகொண்டாள். அன்று பொழுதுவிடிந்தவுடன் ராஜகுமாரத்தி ராஜ்யத்திலுள்ள வாணியர்களை வரவழைத்து 24 மணி நேரத்

துக்குள் நூறாயிரமணங்கு எண்ணை ஒவ்வொருவரும் தயார் செய்யும்படி ஆக்ஞையிட்டாள். இவ்வுத்தரவு வாணியர்களை துக்கஸாகரத்தில் அழுத்திவிட்டது. ஒவ்வொருவரும் அழுத முகமாகவே வீடு திரும்பினார்கள். ஆனால் முடவனாகிய விக்ரமராஜா தனது ஸ்வீகாரத் தகப்பனாகிய வாணியனை மிகவும் தேற்றினான். அன்று நடு ராத்திரியில் எல்லோரும் தூங்கும்போது விக்ரமராஜா தனது பாதுகாப்பு தேவதைகளை வரவழைத்து நூறாயிரம் மணங்கு எண்ணையைக் கொண்டு வரும்படி உத்தரவு செய்தான். மறுநாட் காலையில் வாணியர்கள் ராஜஸபைக்கு ஏகினார்கள். தங்களுடையசக்தியின்மையைத் தெரிவித்தார்கள். விக்ரமார்க்கனின் ஸ்வீகாரத்தகப்பன் ராஜ குமாரத்தியின் ஆக்ஞையின்படி எண்ணையைக்கொண்டு போனான். ராஜகுமாரத்தி மிகுந்த ஸந்தோஷப்பட்டு வாணியனை தனியே வரவழைத்து "என் தகப்பனாராகிய சக்ரவர்த்தி சீக்ரம் கூட்டப்போகிற ஸ்வயம்வர தினத்தன்று பல தேசாதிபதிகள் வருவார்கள். நீ உன்னுடனிருக்கிற முடவனை அழைத்து வா" என்று உத்தரவிட்டனள். வாணியன் வெகு ஸந்தோஷத்துடன் வீடு போய் தன் மகனிடமும் பெண்ஜாதியிடமும் தெரிவித்தான். ஸ்வயம்வரதினம் வந்தது. பலதேசத்து மன்னர்கள் தமது மந்திரிகள் சூழ ஸ்வயம்வர ஸபையை அலங்கரித்திருந்தார்கள். வாணியன் தன் ஸ்வீகாரப் புத்திரனாகிய முடவனை தோளில் தூக்கிக்கொண்டு ஒருபக்கத்தில் நின்றான். ராஜகுமாரத்தி கையில் திவ்யகரமான பூமாலையை எடுத்து ஸபையின் மத்தியில் வந்து நின்றாள். ஸபையோர்களைச் சுற்றிப்பார்த்தனள். ஸபையின் ஓரமாய் வாணியன் தோளில் இருந்த முடவனை தனது கணவனாகத் தெரிந்தெடுத்து பூமாலையை அவன் கழுத்தில் போட்டனள்.

ராஜகுமாரத்தி பதியாக தெரிந்தெடுத்தது விக்ரமராஜா என்று இதைப் படிக்கிறவர்கள் அறியவேண்டும். மற்ற தேசமன்னர்களும் சீனாசக்ரவர்த்தியும் திடுக்கிட்டு நின்றார்கள். வேறுவழி ஒன்றுமில்லாமையால் சீனாசக்ரவர்த்தித் தமது புத்திரி கணவனாக தெரிந்தெடுத்ததை ஒப்புக்கொண்டு விவாகமுகூர்த்தம் குறிப்பிட்டு வாணியனிடம் தெரிவித்தார். வாணியன் உள்ளூர ஸந்தோஷமடைந்தாலும் விவாக முகூர்த்தத்துக்கு ஏற்பாடுசெய்ய சக்தியற்றிருப்பதை



யோஜித்து துக்கித்து நின்றான். விக்ரமராஜா தன் தகப்பனைத் தேற்றி எல்லாம் ஸுபமாக நடக்குமென்று சொன்னான். அன்று ராத்திரி அந்த முடவன் தன்னை ராஜகுமாரத்தியின் குளத்திற்கு அழைத்துக்கொண்டுபோகும்படி தெரிவிக்க, வாணியன் அப்படியே செய்தான். முடவன் தன்னைப் பொழுது விடிகிறதற்குள் வந்தழைத்துப்போகும்படி சொன்னான். வாணியன் ஆகட்டுமென்று தெரிவித்து கொஞ்சம்தூரம் போய் ஒரு மரத்தடியில் ஒளித்துக்கொண்டு நடக்கிறவைகளைப் பார்க்க ஆவல்கொண்டு நின்றான். முடவன் தனது ஸ்நான ஜபதபங்களை முடித்துவிட்டு ரஜநிதீபக் என்னும் ராகத்தைப் பாடவே பட்டண முழுமையும் வெளிச்சமுண்டாயிற்று. இது தெரிந்து ராஜ குமாரத்தி மாறுவேஷம் தரித்து ஆகாய மார்க்கமாக முடவனிடம் வந்து உனக்கு என்னவேண்டுமென்று வினவ, முடவன் தன் கைகால்கள் ஸரியாகவேண்டுமென அப்படியே செய்துவிட்டு மறைந்தனள். பிறகு முடவனாயிருந்த விக்ரமராஜா தன்னுடையப் பாதுகாப்பு தேவதைகளை வரும்படி வேண்ட, அவைகள் எதிரில் வந்துநின்றன. தனது விவாஹத்துக்கு வேண்டிய ஸகல ஸாமக்ரியைகளையும் சேர்ப்பிக்க உத்தரவிட்டு சதுரங்க சேனையுடன் மந்திரிமார்கள் ஸஹிதமாக வரவேண்டுமென்று ஆக்ஞையிட்டான். இந்த அதிசயங்களெல்லாம் ஒளிந்து பார்த்துக்கொண்டிருந்த வாணியன் ஸந்தோஷமடைந்து ராஜனிடம் வந்து மன்னிப்புக்கேட்க, ராஜன் "என் அருமைத் தகப்பனே! தாங்கள் செய்த நன்றியை மறவேன். தாங்கள் எப்போதும் என் தகப்பன், தங்கள் ஸம்ஸாரம் என் தாயார். என் கஷ்டகாலத்தில் தாங்கள் ச்ரமம் கவனியாது காப்பாற்றினது தங்களையும் தங்கள் ஸம்ஸாரமாகிய என் தாயாரையும் ஸதாகாலம் நினைத்தால்தான் என் ராஜ்யம் என்னிடம் நிற்கும்" என்று பலவசனங்களால் பிரார்த்தித்தான்.

விவாகதினம் வந்தது. ராஜா விக்ராமுடைய பரிவாரங்கள் வந்து இறங்கின. வெகு குதூஹலமாக ராஜகுமாரத்திக்கும் விக்ரமராஜாவுக்கும் விவாஹம் நடந்தேறியது. கல்யாண ஸபாமண்டபத்தில் தம்பதிகள் வீற்றிருக்க, சில ஜாலவித்தைக்காரர்கள் தங்கள் மாயவேடிக்கைகளைக் காண்பிக்க உத்திரவுபெற்றார்கள். ஜாலவித்தைக்காரர்கள் ஸபாமண்டபமுன் வர, விக்ரமராஜா தனது ப்ரம

ஸத்ருவாயிருக்கப்பட்ட யோகியைக் கண்டான். ராஜனுக்கு முகம் வெளுத்தது. திகிலடைந்தான். ராஜகுமாரத்தி இதையறிந்து ராஜனைத் தேற்றினாள். வந்திருந்தயோகி விக்ரமராஜனைக் கொல்ல சில வேடிக்கைகள் செய்ய, இதையறிந்த ராஜகுமாரத்தி தன்னுடைய சக்தியினால் யோகியின் சக்தியைப்பிடுங்கி திண்டாடவிட்டாள். யோகி வெகு கஷ்டமடைந்து தன் சக்தியை யிழந்து நின்றான். விக்ரமராஜா ஜாலவித்தை செய்த யோகியைக் கொல்லவே சீன சக்ரவர்த்தியின் குமாரத்தியை விவாகம் செய்துகொண்டானென்பது முதலிலிருந்து படிக்கிறவர்களுக்குத் தெரியும். பிறகு விக்ரமராஜா தமது பார்யையுடன் ராஜ்யம் வந்தடைந்து ஸௌக்யமாக ராஜ்யபாரம் செலுத்தி வந்தார்.

வாலாம்பாள்.

---

## BARODA MAHARANI & ELEPHANT HUNTING.

By

**MR. T. V.**

### பரோடா மஹாராணி யானை வேட்டையாடல்.

பரோடா என்பது வட இந்தியாவில் மைசூர் போன்ற ஒரு ஸமஸ்தானம். இதன் மஹாராஜா ஸயாஜிராவ் கேய்க்வார். இவர் தம் மஹாராணியருடன் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்களில் ப்ரயாணம் செய்து வெகு அனுபவம் பெற்றவர். தீர்ந்த படிப்பாளி. இந்தியாவிலுள்ள ஸமஸ்தான அரசர்களில் ராஜ்யநிர்வாகத்தில் இவர் வெகு க்யாதி அடைந்தவர். தமது ராஜ்யத்தில் பல இலாகாக்களில் ஜனங்களுக்கு வேண்டிய சீர் திருத்தங்கள் செய்துவந்திருக்கிறார். மஹாராணி மஹாராஜாவுக்கு ஏற்ற மனைவியாகவும், மந்திரியாகவும், வேலைக்காரியாகவும் விளங்கிவருகிறார். மஹாராணி அனுபவம்பெற்ற படிப்பாளியானதால் "இந்தியஸ்த்ரீகளின் நிலைமை" என்ற ஒரு அருமையான புஸ்தகத்தை வெளியிட்டிருக்கிறார். இவர் தமது ராஜ்யத்தில் ஸ்த்ரீகளின் படிப்புக்கும் அவர்களின் அபிவ்ருத்திக்கும் பல ஸௌகர்யங்கள் செய்திருக்கிறார். இவர் க்ஷத்திரியப் பெண்ணானதால் அஸ்த்ர சஸ்த்ரங்களில் கைதேர்ந்தவர்.



இப்போது தென் இந்தியாவில் தமது மஹாராஜாவுடன் சுற்று ப்ரயாணம் செய்துவருகிறார். சென்றமீ 28-ந் தேதி திருவனந்தபுர மலைக்காடுகளில் யானை வேட்டையும் பிறகு 30-ந் தேதி கொல்லங்கோட்டுக்காடுகளில் காட்டு எருமை வேட்டையுமாடினார். மஹாராணி தமது மஹாராஜாவுடன் வேட்டையாடின விபரங்களை சுதேசமித்ரனுக்கு ஒரு நிருபர் எழுதியிருக்கிறார், அவை பின்வருமாறு:—

சென்ற ஜூன் மாதம் 28-ந் தேதி சாயந்திரம் 7-மணி சுமாருக்கு மாக்ஷிமைதங்கிய பரோடா கெயிக்வார் மகாராஜாவும் மகாராணியாரும் திருவனந்தபுரத்தைச்சேர்ந்த தேக்கடி மலைக்குப்போய்ச் சேர்ந்தார்கள். மகாராணியார் 29-ந் தேதி யானை வேட்டையாடுவதற்குப் புறப்படுமுன், அங்குள்ள மலைவாசிகளாகிய சில மலையர்களைக் கூப்பிட்டுக் காட்டு யானைகள் எந்தவிடத்தில் நிற்கின்றனவென்று போய்ப் பார்த்துவந்து சொல்லும்படி அனுப்ப, அவர்கள் அதிகாலையிற் புறப்பட்டு அடர்ந்த காட்டிற்குள் பல திசைகளிலும் சென்று பார்த்து, மகாராணியார் தங்கி யிருக்கும் விடுதிக்கு ஏறக்குறைய 4 மைல் தூரத்திற்கப்பால் செடிகளடர்ந்த மூங்கில் காட்டிலே ஒரு மடுவண்டையில் காட்டு யானைகள் நிற்பதாய் வந்து தெரிவித்தார்கள். இதைக் கேட்டவுடன் மகாராணியார் வேட்டையாடுவதற்காக ரமணீயமான ஆணுடை தரித்து அதன்பேரில் பட்டுச்சேலையால் கோஷா செய்துகொண்டு ராமகோதண்டம் போன்ற துப்பாக்கியுடனும் பராக்கிரமத்துடனும் வெளிக்கிளம்பிவர, மகாராஜாவும் வேட்டையாடும் உடைதரித்துச் சில சிப்பந்திகளுடன் புறப்பட, முன்பு யானைகள் நிற்குமிடத்தைப் போய்ப்பார்த்து வந்து தெரிவித்த மலைவாசி யொருவன் முன்னால் வழி காட்டிக்கொண்டே செல்ல, அனைவரும் சென்றார்கள். ஒருக்கால் தாங்கள் அவ்விடம் போய்ச் சேருவதற்குள் யானைகள் அவ்விடம் விட்டுப் போய்விடுமோ என்ற சந்தேகத்தாலும், தாம் வேட்டையாடுவதிற் கொண்ட அதிவிருப்பத்தாலும் தூண்டப்பட்டு, தம்முடன் கூடவந்தமகாராஜாவும் மற்ற சிப்பந்திகளும், மற்றெவரும் தம்முடன் சரியாய்ப் பின்பற்றித் தொடர்ந்துவர முடியாதபடி வழிகாட்டிக்கொண்டு சென்ற மலையனையும் "நட, நட" என்று தூண்டிக்கொண்டு அதி வேகமாய்ச் சிற்சில விடங்களில் ஓடியும், சிற்சிலவிடங்களில் நடந்தும்,

நீரோடைகள் கண்டவிடத்தை ஒரே பாய்ச்சலில் எட்டித்தாண்டியும் மகாராணியார் சென்ற ஆச்சரியத்தைக் கவனித்தால் சரியான தேகப்பயிற்சியைப் பெற்ற யௌவன வீரனும் நமது மாகாராணியாருக்கு ஈடல்லவென்பதிற் சந்தேகமில்லை! அதிலும் மூங்கிற்புதர்கள் அடர்ந்ததும் கொடிய காட்டுயானைகளுக்கு வாசஸ்தலமுமான பயங்கரமாகிய இந்தக் காட்டிற்குள் நிர்ப்பயமாய் இந்தப் பெண்மணி சென்ற தைரியத்தை நான் எவ்விதம் விவரித்தெழுதுவேன்! யானைகள் நிற்குமிடம் சமீபத்திருப்பதாய் மலையன் சொல்லைக்கேட்ட மகாராணியார் தம்முடன் வந்தவர்களை யெல்லாம் சப்தம் செய்யாமல் ஜாக்கிரதையாய் வரும்படி சைகையால் சொல்லிவிட்டு நடந்தார். ஏறக்குறைய அரைப் பர்லாங்கு தூரத்திற்கப்பால் யானைகள் நின்றதை மகாராணியாருக்கு மலையன் காட்டினான். இதற்குள்ளாக யானைகளெல்லாம் பல பக்கங்களிற் கலைந்துபோய் விட்டன. மூன்று பெரிய கொம்பானைகள் மாத்திரம் அட்டகாசத்துடன் அவ்விடம் நின்றன. யானைகளும் இவர்களும் ஒரே சமமான பூமியில் இருப்பதாய்த் தெரிய அந்த நிலையில் காட்டுயானைகளைச் சுடுவது அபாயமென்று மகாராணியார் அறிந்து, தம்முடன் வந்த ஜனங்களனைவரையும் ஒரு பெரிய செங்குத்தான மேட்டுத்திட்டிற்போய் ஏறிக்கொள்ளும்படி சைகைசெய்ய அவர்களெல்லாம் அதிக கஷ்டப்பட்டு அந்தத்திட்டில் ஏறிக்கொண்டபின்பு, மகாராணியாரும் மகாராஜாவும் அவர்கள் முன்னிலையில் அதே திட்டின்மீது ஏறி நின்றார்கள். யானைகள் மூன்றும் கீழான பள்ளத்தாக்கிலும், வேட்டையாடும் மகாராஜாவும் ராணியாரும் செங்குத்தான மேட்டுத் திட்டிலும் நின்றனர். யானைகள் தம்மை நன்றாய்த் தலைதூக்கிப் பார்க்கட்டு மென்ற எண்ணத்துடன் மகாராணியார் தமது கைகளை பலமாய்த் தட்டினார். யானைகளும் இந்த சப்தம் கேட்டுச் சிலிர்த்து, விரைத்து நின்று தலையைத் தூக்கியதருணத்தில் மகாராணியார் திடீரென்று ஒரு வேட்டடிக்க அந்த தோட்டாவானது யானையின் கன்னத்திற் பாய்ந்து சென்றதால் யானை மலைபோல் தரையிற் சாய்ந்தது. குண்டு பட்ட உபத்திரவத்தால் அம்மிருகம் புரளுவதைக் கண்டு மற்ற சிப்பந்திகளும் உடனே தங்கள் தங்கள் துப்பாக்கிகளால் தலையெங்கும் சுட அம்மிருகம் சீக்கிரத்தில் உயிர்துறந்



தது. அதன் பக்கத்தில் நின்ற மற்ற இரண்டு யானைகளில் ஒன்றை கெயிக்வார் மகாராஜா தமது துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினார். கடைசியில் ஒரு யானை விரைவில் தப்பிப்போய் விட்டது. பின்பு ஜனங்களெல்லாம் இறந்துகிடந்த யானைகளிடம் போய், அவற்றின் தந்தங்களையும், பற்களையும், பக்குவமாய் வெட்டியெடுத்து வந்தனர். மகாராஜாவும், ராணியாரும் சிப்பந்திகளுடன் தங்கள் தங்கள் விடுதிக்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

### காட்டெருமை வேட்டை.

ஜூன் மாதம் 30-ந் தேதியும், ஜூலை மாதம் 1-ந் தேதியும் பல பக்கங்களிற் போய்த் தேடியும் யானைகள் அகப்படவில்லை. 2-ந் தேதி காலையில் மகாராஜாவும், மகாராணியாரும் கொல்லங்கோட்டு வாசுதேவ ராஜாவுடன் காட்டுக்குட் சென்று பயங்கரமான காட்டெருமைப் போத்துகளை வேட்டையாட ஆரம்பித்தார்கள்.

யானை காட்டு மிருகங்களிலெல்லாம் பெரிய ஜந்துவா யிருப்பினும் யானைகளை வேட்டையாடிக்கொல்வதானது காட்டெருமைப் போத்துகளை எதிர்த்துச் சுடுவதைக் காட்டிலும் சுலபமேதான். காட்டுப்போத்துகள் தம்மை வேட்டைக்காரன் சுட்டானென்று தெரிந்தாலும், தன்பேரில் பட்ட குண்டடியானது சுலபமாய் இருந்தாலும் உடனே வேட்டைக்காரர்கள் பேரில் திரும்பி எதிர்த்து வந்து கொன்றுவிடும். ஆதலால் எருமைவேட்டை மிகவும் அபாயமானது. 2-ந் தேதி மத்தியானத்தில் போத்தொன்று மகாராஜா கண்ணுக்குத் தென்பட்டும் அதிக ஜனக்கூட்டத்தின் சந்தடியால் ஓடிப்போய் விட்டது. 3-ந் தேதி சனிக்கிழமை காலையில் மகாராணியார் மாத்திரம் தனியாய்ப் புறப்பட்டு தம்முடைய சிப்பாய்களி லிருவரை சிக்காரிகளாகவும், ஒரே ஒரு மலையனை மாத்திரம் வழிகாட்டிச் செல்வதற்கும் அழைத்துக்கொண்டு, வெகுதூரம் காட்டுக்குட் சென்று, அங்கு ஓர் பெரிய காட்டெருமைப் போத்து நிற்பதைக் கண்டார். மகாராணியார் முன்பக்கம் வந்துநின்று காட்டெருமையைத் தகுந்த மர்மஸ்தானத்தில் இலக்குவைத்துச்சுட உடனே போத்துக் கீழே விழுந்தது. மகாராணியார் சரேலென்று அதிசீக்கிரத்தில் அதனிடம் ஓடிச்சென்று மறுபடியும் அதன்மேல் இரண்டு தோட்டாக்களைப் போட்டுச் சுட்டுக் கொன்றார்.

நமது இந்திய நாட்டுப் பெண்மணிகள் பல்லாண்டுகட்கு முன்பு சரியான தேகப்பயிற்சியைப் பெற்று, தகுந்த பலமடைந்து, வாள். கத்தி, கேடையங்களுடனும், துப்பாக்கியுடனும், பெரிய பயங்கரமான யுத்தகளங்களிலும் போய்நின்று, கடும்போர் புரிந்து, புருடருக்கு உதவிபுரிந்து வந்தார்கள் என்பதற்கு, தற்காலம் நமது பரோடா மஹாராணி தைர்யத்துடனும வீரத்துடனும் கொடிய காட்டுமிருகங்களை அடர்ந்த வனத்திற் சென்று தாட்டிகமாக வேட்டையாடிக் கொன்றதுவே சாக்ஷியாகும். இம்மாதுசிரோமணி துப்பாக்கி வேட்டையில் கைதேர்ந்தவ ரென்பதில் சந்தேகமில்லை. பிறகு மகாராணி அந்த மலைவாசிகளாகிய ஆண் பெண் சகிதம் நூற்றுக்கணக்கான ஏழைகளுக்குச் சரியான மாமிச பக்ஷணத்துடன் விருந்து செய்வித்து விட்டு, கொல்லங்கோடு ராஜா அரண்மனைக்கு மஹாராஜாவுடன் வந்து சேர்ந்தார்கள்.

டி. வி.

---

# SRI SADASIVA BRAHMAM.

**By**

**A YOGINI.**

## ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மம்.

இம்மஹான் ஒரு அவதார புருஷர். இவரது சரித்ரம் மிகவும் பரிசுத்தமானது. இதை ஒவ்வொரு ஸ்த்ரீ புருஷரும் வாசித்து உணரவேண்டியது. சரித்ரம் படிக்கப்படிக்கப் மனம் கலங்கும். ஆவேசம் வரும். வணக்க முண்டாகும். பயபக்தி ஜனிக்கும்.

ஸ்ரீச்ருங்கேரிமடத்தை அலங்கரித்து உலககுருவாய் விளங்கின ஸ்ரீமத் ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதி ஸ்வாமி அவர்களும் இந்த மஹானிடத்தில் பூர்ணபக்தி கொண்டிருந்தார். இவ்விஷயம் ஸ்ரீ ஸ்வாமிகள் இயற்றியிருக்கும் 'ஸதாசிவேந்த்ர ஸ்துதி' என்னும் ஸ்தோத்திர புஸ்தகத்தினால் விளங்கும். இவரை ஸ்ரீஸதாசிவ ப்ரஹ்மம் அல்லது ஸ்ரீஸதாசிவேந்த்ர ஸரஸ்வதி என்றும் அழைப்பார்கள். இவர் ராஜயோகிகளுக்குள் சிறந்த ஒரு அவதூத ஸன்யாஸி. ஸுமார் 204வருஷங்களுக்குமுன் இவர் வஸித்ததாகத் தெரியவருகிறது.





தஞ்சாவூர் தாலுக்கா பூதலூர் க்ராமத்துக்கு அருகிலிருந்த கண்டரமாணிக்கம் என்னும் க்ராமத்தில் நமது ஸதாசிவம் பிறந்தார். ஸ்மார்த்தர்களில் கண்டரமாணிக்கப்ரஹசரணம் என்னும் வகுப்பைச் சார்ந்தவர். இவர் தகப்பனார் ஒரு ஸாத்வீக ப்ராஹ்மண வைதீகர். தாயார் குணசீலி. புருஷனுக்குத்தகுந்த மனைவியாக இருந்தார். ஒரேபிள்ளையானதால் வெகு அன்புடன் பெற்றோர்கள் ஸதாசிவத்தை வளர்த்து வந்தார்கள். இளமை முதற்கொண்டே ஸதாசிவம் வெகு சுறுசுறுப்புடையவர். தீர்க்க புத்திசாலி. தெய்வபக்தி கொண்டவர். கீழ்ப்படியும் தன்மை ஜாஸ்தி. பிறரை தம்மைப்போல் நேசிக்கும் குணமுடையவர். ஜிவஹிம்ஸை பொறுக்கமாட்டார். பெற்றோர்களுக்கும் ஊரார்களுக்கும் அடக்கமும் உயர்ந்த குணமுமுள்ள பிள்ளையென்று பெயரெடுத்தார். ஸுமார் எட்டுவயதில் தகப்பனை இழந்தார். தாயார் மிகவும் அழுவாள். ஸதாசிவம் அடிக்கடி தாயாரிடம் வந்து உட்கார்ந்து தாயைத் தேற்றுவார். ஜனங்களெல்லோரும் உலகத்திற்கு ஒரு திலகம்போல் விளங்கி மஹான் என்று பெயரெடுக்க ஸதாசிவம் பிறந்திருக்கிறான் என்று சொல்லுவார்கள். ஸதாசிவம் தனி இடத்தில் உட்கார்ந்து தியானம்செய்யும் வழக்கமுண்டு. குணவானாய் அந்த இளம்வயதில் பெயரெடுத்து வந்தார்.

நிற்க, தஞ்சாவூர் ஜில்லாவின் க்ராமமாகிய திருவிசைநல்லூர் காவேரி தீரத்திலிருக்கிறது. இந்த க்ராமத்தில் பல மஹான்கள் வசித்துவந்திருக்கிறார்கள். அந்தக்காலத்தில் இது கல்விக்கு ஒரு இடமாகவிருந்தது. நமது ஸதாசிவம் உபநயனமானபிறகு திருவிசைநல்லூரில் சிறந்த போதகரிடம் படித்துவந்தார். இவர் குருவை தமது படிப்பில் பல ஸந்தேஹங்கள் கேட்டுக் கற்றுக்கொள்வார். எல்லா வகுப்பிலும் முதலாவதாகத் தேறி ப்ரகாசித்து வந்தார். நமது மஹானுக்கோ இப்போது வயதோ பத்து. இந்த வயதில் ஒருநாள் தமது தாயைப்பார்த்துச் சொல்லுகிறார்: "அம்மா! உலகத்தில் பொருளாசையினால் பலபேர் கெட்டிருக்கிறார்கள். காலக்ரமேண காம, க்ரோத லோப, மோஹ, மதம், மாற்சர்யம் என்னும் விலங்குகளுக்கு உள்ளாகி, அதனால் அழியாத நரகத்தையும் பின் ஜன்மத்தையும் அடைய நேரிடும். உலகத்தில் ஜனனமரணங்களுக்குப் பயந்து பல மஹான்கள் உலகத்தை துறந்து

தவம் செய்து மறுபடியும் ஜனன மெடுக்காதபடி கடவுளோடு கலந்திருக்கிறார்கள். ஆசை வ்ருத்தியாவதற்குள்ளே ஸந்யாஸம் வாங்கிக்கொள்வது நலம். என்னை ஸந்யாஸம் கொள்ளும்படி ஈச்வரன் தூண்டுகிறார். எனக்கு உத்தரவுகொடு." இதைக்கேட்ட தாய் மனம் கலங்கி கண்ணீருடன் "கண்மணியே! எனக்கு நீ ஒரே குழந்தை. நாமோ ஏழை, குழந்தைப் பருவத்தில் ஸம்பாபாதித்து வருகிற தகப்பனை இழந்தாய். உன்னிடத்தில் என் உயிரைவைத்து வாழ்நாளைக் கழித்து வருகிறேன். நீ பேசின பேச்சு என்னை நடுங்கச்செய்கிறது. பித்தனாகப் பேசினாயோவென்று நினைக்கநேரிடுகிறது. எனக்கோ வயதாகிவிட்டது. நான் உன்னை நம்பியிருக்க நீ இப்படியெல்லாம் பேசுவது சரியா?" என்று சொல்ல, ஸதாசிவம் "அம்மா! நீ என்னை பூர்ணமாக நம்பி எந்தஸமயம் என் பெயரைச் சொல்லிக் கூப்பிடுகிறாயோ அப்போது வருகிறேன். நான் எங்கிருந்தாலும் ஸரி, உன்முன் வந்து குதிக்கிறேன். நம்மைப் படைத்த ஒருவன் இருக்கிறபோது நீ அதைர்யப்படாதே" என்று இப்படி பலதைர்யவார்த்தைகளால்தைர்யப்படுத்தி, தாம் ஸந்யாஸம் வாங்கிக்கொள்ள தாயாரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டுவிட்டார். இவர் புறப்பட்ட நாள் முதல் எங்கு சென்றாலும் யாரும் இரங்கும்படியும் அன்புகொள்ளும்படியும் செய்துகொண்டார். ஜாதிபேதத்தை அவர் அடியோடுவிட்டார். கடவுளால் ச்ருஷ்டிக்கப்பட்ட ஜீவன் எல்லாம் ஸமம் என்ற அபேதத்தையடைந்தார். தமக்கு பசித்தபோது யார் கொண்டுவந்து தரினும் உசிதமானவற்றை ஏற்றுக்கொண்டு உண்பார். ஆகாரம் கிடைக்காவிடில் தெருவில் சிதறிக்கிடக்கும் இலைகளில் இருப்பனவற்றைக் கொண்டு தமது பசியை நீக்கிக்கொள்வார். இவரை இச்செய்கையால் பலஜனங்கள் வெறுத்தனர்.

கடைசியாக நமது ஸதாசிவம் ஒரு மெய்ஞானியாகிய பரமசிவேந்திரஸரஸ்வதிரரிடம் சிஷர்களில் ஒருவராகப் போய்ச் சேர்ந்தார். அவரிடம் தங்கி யோகத்தை அப்யஸித்தார். தமது சாஸ்த்ரப் படிப்பினாலும் அனுபவத்தினாலும் யோகஸித்திபெற்றார். இவர் தமது புத்தி முயற்சியினால் பல கீர்த்தனைகள் செய்தார். அக்கீர்த்தனைகள் அவரது மனக்கருத்தைத் தெரிவிக்கிறதுமன்றி உலகத்தையும் அதன்படி நடக்கக் கற்பிக்கின்றன. தமது ஆத்மானுபவத்தை விளக்கக்கூடிய ஆத்மவித்யாவிலாஸ மென்னும் ஒரு அரிய நூலைச் செய்தார். இப்புஸ்தகத்தில் 62 சுலோகங்கள் அடங்கி யிருக்கின்றன. ஒரு யோகியானவன் விஷயப்பற்றுக்களை ஒழிக்கும் வழியையும் யோகத்தின் பெருமையையும் ஜீவர்களிடத்தில் அவ்யோகி காட்டவேண்டிய அனுதாபத்தையும் நன்றாய் விளக்குகின்றது.



நமது ஸதாசிவ ப்ரஹ்மம் தமது குருவினிடம் பல ஸந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வார். தமது குருவின் ஸந்நிதானத்துக்கு வருபவர்களோடும் வாது செய்வார். ஒரு ஸமயம் ஒருவர் நமது ஸதாசிவத்தோடு வாதுசெய்யமாட்டாமல் தாம் வெட்கி தமதுவருத்தத்தை குருவினிடம்சொல்லினர். இது அறிந்த பரமசிவேந்திரர் "ஸதாசிவா! இவ்வளவு தெரிந்த நீ, உன் வாயை அடக்கிக்கொள்ளத் தெரிந்துகொள்ளவில்லையே" என்று சூக்ஷ்மமாகச் சொன்னார். அதையறிந்த நமதுயோகி உடன் குருவை வணங்கி அதுமுதற்கொண்டு ஜீவ்யகாலமுடிய மௌன வ்ருதம் அனுஷ்டித்தனர். சில நாள் கழித்து குருவினிடம் விடைபெற்றுக்கொண்டு ஒரு ஊரிலாவது அதிகநாள் தங்காமல் திரிபவராய் புறப்பட்டுவிட்டார். இனி நமது மஹாத்மா ஸதாசிவப்ரஹ்மத்தின் அரிய ப்ரபாவங்கள் பின்னால் வரும்.

ஒரு யோகினி.

---

## THE COIMBATORE DISTRICT & SOCIAL CONFERENCE.

## கோயமுத்தூர் ஜில்லா ஆசாரசீர்திருத்தக் கான்பரென்ஸ்.

சென்றமீ 24, 25 தேதிகளில் ஈரோட்டில் கூடிய கான்பரென்சில் நமது ஸஹோதரிகளுக்கு வேண்டிய முக்யமான படிப்பு ஸம்பந்தமான சிலவற்றை இங்கு கூறுகிறேன்.

முதலாவது:—இந்தக் கான்பரென்சிற்கு ஸ்கூல் உபாத்திமசகோதரிகள் சிலரைத் தவிர வேறு சகோதரிகள் வராமலிருந்ததுடன், பெண்களின் அபிவிருத்திக்கென்று செய்யப்பட்ட தீர்மானங்களில் சகோதரிகள் கலந்து பேசாமலிருந்தது விசனிக்கத்தக்கதேயாகும்.

இரண்டாவது:—"கோயமுத்தூர் நார்மல் ஹைஸ்கூலில் ஹைஸ்கூல் வகுப்புகளுக்குச் சம்பளமேற்படுத்தியதினால், படித்துக் கொண்டிருந்தவர்களிலும் அநேகர் சம்பளங் கொடுக்க சக்தியில்லாமல் படிப்பை நிறுத்திவிடுவதால், முன்போல சம்பளமில்லாமல் கற்றுக்கொடுக்கவேண்டுமென்று இச்சபையார் கவர்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்" என்ற தீர்மானம் செய்யப்பட்டதைப் பற்றி நாம் சந்தோஷப்படக்கூடியதே. இதுவிஷயமாய் நான் சொல்லக்கூடிய வார்த்தைகள் சில உண்டு. அநேகமாய் நம்தேசத்தில் பெண்மக்கள் கல்வி கற்பதே கடினமாயும், உயர்தரக் கல்வி கற்பது அதிகக் கடினமாயுமிருக்கிறது. இவைகளை யெல்லாம் தவிர்த்து உயர்தரக்கல்வி கற்க முன்வருவோர் சிலரேயாவார். இதையெல்லாம் தெரிந்தே கவர்ன்மெண்டார் பெண்கள் கல்விகற்க அநேக வசதிகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் இந்த ஸ்கூலுக்கு உயர்தரக் கல்வி கற்கவரும் பெண்மணிகளுக்கு திடீரென சம்பளமேற்படுத்தியதைப் பற்றி நாம் வருந்தாமலிருக்கக் கூடவில்லை.

### கட்டாய இலவசப்படிப்பு.

காலஞ் சென்ற கனம் கோகலேயவர்களின் கட்டாய இலவசப்படிப்பு மசோதாவைப்போலொத்த ஒரு மசோதாவை சட்டமாக்க வேண்டுமென்று கோயமுத்தூர் ஜில்லாக் கான்பரன்சில் கொண்டுவந்த தீர்மானத்தை 'சுதேசமித்திரன்' நிருபராகிய கோயமுத்தூர், மிஸ்டர் K. S. சுப்பிரமணியபிள்ளை ஆதரித்துப் பின்வருமாறு பேசினார்:

பெரியோர்களே!

நாம் கேட்கும் விஷயம் நியாயமானதும் நம்நாட்டில் முன்னிருந்ததென்பதற்கும் ஆதாரமாக உள்ள சில ஐரோப்பிய மேதாவிகளுடைய அபிப்பிராயத்தைமட்டும் இங்கு தெரிவிக்கிறேன்.

### இங்கிலாந்திலும் இதரதேசங்களிலும் சம்பளமில்லாத ஏற்பாடு.

இவ்விஷயத்தைப்பற்றி கல்வியிலாகாத் தலைவராயிருந்த மிஸ்டர் ஜி. எச். ஸ்டுயர்ட் துரை சொல்லியது:—"இங்கிலாந்திலும் மற்றும் நாகரீகம்பெற்ற நாடுகளிலும் அந்தந்த துரைத்தனத்தார்



பிள்ளைகளுக்குச் சம்பளமில்லாமல் ஆரம்பப்படிப்பைக்கற்றுக்கொடுக்க பாடசாலைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். தாய்தகப்பன்மாரைத் தங்கள்பிள்ளைகளை பாடசாலைக்கு அவசியம் அனுப்பவேண்டுமென்று நிர்ப்பந்திப்பார்கள். தேசத்திலுள்ள சிறுவர்களும் சிறுமியர்களும் படித்துத் தேறுவது, தேசத்திற்கே நன்மையாதலால், அந்தப்படிப்புக்கு வேண்டிய செலவை தேசத்தார் பொதுவாயேற்றுக்கொள்ள வேண்டுமே ஒழிய, ஒவ்வொருபிள்ளையினுடைய பெற்றோரும் ஏற்றுக்கொள்ளலாகாதென்பது பொதுவான கொள்கை. இப்படிப்பட்ட படிப்பு இங்கே ஒருகாலத்தில் உண்டாகுமோ உண்டாகாதோ என்பது ஸந்தேகம்."

### கல்வி ஈனஸ்திதியி லிருப்பது

இந்தியாவிற்கு கனவில்கூட மறந்தும் நன்மையைக்கருதாத லார்டு கர்ஸன் பிரபு அவர்களே இத்தேசத்தின் கல்விப்பயிற்சி ஈனஸ்திதியி லிருப்பதைப்பார்த்து பரிதபித்து 1904-ம் வருஷம் மார்ச்சுமீ 11-ந் தேதி ஒருவிளம்பரம் பிரசுரித்திரிக்கிறார். அதில் இந்தியாவில் 5-இல் 4 கிராமங்களில் பாடசாலைகளே இல்லையென்றும், 100-இல் 75 பிள்ளைகளும், 100-இல் 98 பெண்களும் படிப்பில்லாமல் வளர்கிறார்களென்றும் சொல்லியிருக்கிறார்.

### மோகலாயர் காலத்தில் பிரதமபடிப்பு இருந்த நிலை.

இத்தேசத்து கல்வியைப்பற்றி ஸர் அலெக்ஸாண்டர் ஜான்ஸ்டன் துரை, ஸி. க்ராண்டு துரையவர்களுக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பாகம்:—மொகலாய காலத்தில் இந்துக்கள் ஒவ்வொரு கிராமத்திலும் இராஜ உத்திரவினால் வித்தியாப்பியாசம் செய்து வந்தார்கள். இக்காலத்தில் எழுதப்படிக்கத் தெரிந்தவன் எவ்வளவு அருமையோ, அவ்வளவு அக்காலத்தில் எழுதப்படிக்கத் தெரியாதவன் அருமை. நன்றாய் யோசிக்குமிடத்து இத்தேசத்து நிலை இப்பொழுது தலைகீழாகிவிட்டது" என்பதாம். இப்படியும் நடந்திருக்கலாமாவென்று சிலர் சந்தேகப்படக்கூடும். ஒவ்வொரு கிராமத்திலும் சில நிலங்களுக்கு வாத்தியார் மானியமென்று பெயரிட்டிருப்பதால், மொகலாய சக்கிரவர்த்திகள் மானியமும்விட்டு கல்வி கற்பித்து வந்தார்களென்று உறுதியாய் ஏற்படுகிறது.

## இந்து ராஜாக்கள் காலத்திலிருந்த நிலை.

(மேற்படி கடிதத்தின் மற்றொரு பகுதி.)

"இந்து ராஜாக்களுடைய சரித்திரம் தெரியத் தொடங்கின நாள் முதல், அந்த ராஜாக்கள் ராஜ்யபரிபாலனத்தோடு பிரஜைகளுக்குக் கல்வி கற்பிப்பதில் எப்பொழுதும் ஆஸ்தையும் விசாரமும் உள்ளவர்களாயிருந்தார்கள். ஒழுங்காக நடத்தப்பட்ட ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பொதுப்பாடசாலையும் ஒரு பொது உபாத்தியாயரும் இருந்தனர். இப்பாடசாலைகளில் கற்பிக்கு முறை காரியகரமாயும் சுலபமாயும்சொற்பச்சிலவுள்ளதாயுமிருந்ததுபற்றி, அந்த முறையைச் சென்னையிலிருந்து தெரிந்து சில ஆண்டுகளுக்கு முன்னே இங்கிலாந்தில் ஆசரிக்கத் தொடங்கினார்கள். பிறகு அங்கிருந்து அந்த முறையை ஐரோப்பாவிலுள்ள மற்ற தேசத்தினரும் வழங்கலானார்கள். இந்தியாவில் ஒவ்வொரு தகப்பனும் தன் பிள்ளைக்கு கல்விகற்பிப்பது தன் முக்கியதருமங்களில் ஒன்றாகக் கொண்டிருந்தான். அது கடவுளுக்கும் தன் தேசத்திற்கும் தான் செய்யவேண்டிய கடமைகளிலொன்றெனக்கொண்டு ஐந்தாவது வயதில் தகப்பன் பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்புவது வழக்கமாயிற்று" என்பதாம். இந்து ராஜாக்கள் காலத்திலும் மொகலாய சக்கிரவர்த்திகள் காலத்திலுமிருந்ததைவிட நாளுக்குநாள் விருத்தியடைந்து வருகிற நாகரீகம் பெற்ற இந்தப் பிரிட்டிஷ் அரசாட்சியில் கல்விப்பயிற்சி கேவல நிலைமையிலிருப்பது மிகவும் பரிதாபப்படக்கூடிய தன்றோ.

ஒரு நிருபர்.

---

தாவரவர்க்க உணவிலேயே நாம் ஜீவித்து, நமது தொழிலை நன்கு நடத்தலாமென்பது கோட்பாடு மாத்திரமன்று; அஃது நன்றாய் ருஜு[illegible]ப்படுத்தப்பட்ட உண்மை. நமது நீதி நியதிகளை அறவே நாசப்படுத்துவதான, வேண்டுமென்றே குரூரத்தோடு செய்யும் மிருகக் கொலையை நிறுத்த ஒவ்வொரு பிரயத்தனமும் செய்யவேண்டும்.—நிகோலர் டேஸ்டா.

*　　*　　*

மனிதனுடைய ஜீரண அங்கங்களினுடையவும், பற்களினுடையவும் விவரங்களைப் பார்த்தால், அவன் பழம்தின்னியாகப் பிறப்பிக்கப்பட்டான் என்பது நிதரிசனமாகின்றது.—மிஸ்டர் பௌசட்.





# I

# CONCERNING CHILDREN.

# குழந்தைகள் விஷயம்.

---

### The Care of Children.

**குழந்தைகளைப் பாதுகாத்தல்:—** ஒரு பெற்றோர் தமது ஆயுளில் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் தமது குழந்தைகளைப் பாதுகாத்தலேயாம். ஆனால், குழந்தைகளை கவனிக்கிற விஷயத்தில் பெற்றோர்கள் கொஞ்சமேனும் ஜாக்ரதை எடுத்துக்கொள்வது கிடையாது. தாய்மார்கள் குழந்தைகளை அன்போடு வளர்க்கிறதுமட்டும் போதாது. குழந்தைகளை வளர்க்கிறது எளிதான காரியமல்ல. தாய்மார்கள் அறிவும், அனுபவமும், மேன்மையான குணமும் கூடியவர்களாயிருக்கவேண்டும். ஜீவகாருண்யம் அவசியம் வேண்டும். கோபம் கூடாது. ஸ்த்ரீகளுக்கு சாந்தமே பூஷணம். ஒருதாய் அறிவுடையவளாயிருந்தால் தனது குழந்தையை ஸன்மார்க்கத்தில் பழக்கவோ திட சரீரமுள்ளவைகளாகச் செய்யவோ கூடும். தாய் தன் தேகத்தை வெகுஜாக்ரதையாகப் பாதுகாத்து வந்தால்தான் குழந்தையின் தேகம் ஸரியாகவிருக்கும். ஒரு குழந்தை ஸரியான வழியில் பழக்கப்படவேண்டுமென்றால் தாய் முதலில் ஸரியான படி வழிகளில் நடந்து காண்பிக்கவேண்டும்.

### Children and Stooping.

**குழந்தைகளும் கூனலும்:—** குழந்தைகள் முதுகு கூனி நடப்பதும் உட்காருவதுமாக விருக்கவிடக்கூடாது. கூனல் முகத்தின் அழகைக் கெடுத்துவிடும். மார்பு துர்பலமாகும். ஜீரணம் தடைபடும். ஒரு குழந்தை கூனலாகவே யிருந்து வந்ததேயானால் அக்குழந்தையின் தேகம் நல்ல நிலைமையில் இல்லையென்று அறியவேண்டும். எந்தக் காரணத்தைக்கொண்டும் குழந்தைகள் கூனலாக நடக்கவோ உட்காரவோ கூடாது. கூனலுள்ள குழந்தைகள் தேகப்பயிற்சி செய்வதவச்யம். கூனலை கவனிக்காவிடில் கடைசியில் க்ஷய ரோகத்தை யுண்டாக்கும். கூனலுள்ள குழந்தைகள் நல்ல தேகப்பயிற்சியினால் கூனல் நிமிர்ந்திருக்கிறது. இது குழந்தைகளுக்கு ஸஹஜமாக வரும் ஒரு வ்யாதி. பெற்றோர்கள் கவனமின்மையினால் கூனலுள்ள குழந்தைகள் வயதானபிறகு வெகு கஷ்டங்களுக் குள்ளாகி யிருக்கிறார்கள். இது விஷயத்தில் பெற்றோர்கள் கவனமாயிருக்கவேண்டும். உபாத்யாயரும் பள்ளிக்கூடத்திலுள்ள குழந்தைகளை கவனிக்கவேண்டும்.

### Elementary and Compulsory Education in Mysore.

**மைசூர் ஸமஸ்தானத்தில் கட்டாய எலிமெண்டரி படிப்பு:—** மைசூர் கவர்ன்மெண்டார் தமது ஸமஸ்தானம் முழுவதும் கட்டாய எலிமெண்டரி படிப்பை அனுசரணைக்குக் கொண்டுவர உத்தேசித்துக் கல்விஇலாகா இன்ஸ்பெக்டர் ஜெனரல் பிரேரேபித்திருக்கிறபடி 5 முக்கியமான ஸ்தலங்களில் கட்டாய எலிமெண்டரிப் படிப்பை அனுசரணைக்கு கொண்டுவருவதை அங்கீகரித்துவிட்டார்கள். மேற்சொன்ன ஸ்தலங்களில் பெங்களூர் நகரின் 9 டிவிஷன்களும் அடங்கியுள்ளன. முன்னமேயே சேர்க்கப்பட்டிருக்கும் மற்ற 13 ஸ்தலங்களுடன் தற்போது ஷிமுகா, கோலார், தும்கூர், தேவநகரி முதலிய ஸ்தலங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

## II

# DOMESTIC HINTS AND SUGGESTIONS.

## க்ரகத்தியக் குறிப்புகள்.

---

### Hair and its diseases.

**தலைமயிரும் அதன் வ்யாதிகளும்:-** தலைமயிர் உதிர்ந்துபோக பல காரணங்கள் உண்டு. தேக துர்பலம், மூளைக்கொதிப்பு, சீதோஷ்ணமாறுதல், முக்யமாக இவைகளும் இன்னும பல சில்லரைக்காரணங்களுமாகும். தலைமயிரை பத்ரமாகக் காப்பாற்ற வேண்டுமென்றால் அநாவச்யமான யோஜனையும், கோபமும் கூடாது. தேகக்கிளர்ச்சியைக்கொடுக்கக்கூடிய பானங்களையாவது போஜனத்தையாவது புசிக்கக் கூடாது. தலைமயிரை இறுக்கப் பின்னுதலும் முடிதலும் கூடாது. ப்ரதி காலையிலும் தலைமயிரைச் சுத்தமான தைலம், சுத்தமான நல்லெண்ணை தடவி அழகாக வாரி தளர பின்னவோ முடியவோ செய்வது அழகு. தலைமயிர் தளரவிருந்தால் வளருகிறதற்கு ஸாதகமாகவிருக்கும். சிலருக்கு மூளையின் கிளர்ச்சியினாலும் மிருகத்தனமான ஆசையினாலும் ஒரே ராத்ரியில் தலைமயிர் முழுவதும் வெளேரென நரைத்திருக்கிறது. ஸ்த்ரீகளுக்குத் தலைமயிர் இருத்தலவச்யம்.

### Weak sight.

**பார்வைக்குறைவு:—** இது ஸாதாரணமாக ஜனங்களுக்குள் பரவி வருகிறது. கண்ணுக்குள்ளிருக்கிற பாப்பாவின் சக்திக் குறைவினாலும் அது தட்டையா யிருப்பதனாலும் கோணப்பார்வையினாலுமே பார்வை குறைவு வருகிறதென்று டாக்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஜனங்கள் தகுந்த கண் வைத்தியரிடம் கண்களைக் காண்பித்து கண்களுக்குத் தகுந்த கண்ணாடிகள் வாங்கிக்கொள்ளவேண்டும். நல்ல பார்வையுடையவர்கள் குளிர்ந்த பச்சைக்கண்ணாடிகள் தரித்துக்கொள்ளலாம். வாசிக்கிறபோது நல்ல பார்வையுடையவர்கள் பச்சை, நீலம்முதலியகண்ணாடிகளை உபயோகப்படுத்தக்கூடாது. ஒருவர் போட்டிருந்த கண்ணாடியை வாங்கி உபயோகிக்கக் கூடாது. சிலர் அதை கவனியாது உபயோகிக்கிறார்கள். அப்படிச்செய்வது பின்னால் பெரும் தீங்கு விளைவிக்கும்.

### Nose breathing.

**மூக்கால் ஸ்வாசித்தல்:—** நாகரீகத்தில் சிறந்ததாக கொண்டாடப்படும் மேனாடுகளிலும் அமெரிக்காவிலும் ஜனங்கள் மூக்கால் ஸ்வாசிக்காமல் வாயினால் ஸ்வாசித்து வருகிறார்கள். குழந்தைகளும் அப்படியே. ஸ்வாசத்தை வாயினால் ஸ்வாசிக்கிறதினால் தேகத்துக்குக் கெடுதி ஜாஸ்தி. இந்தியாவில் இந்தியர்கள் மூக்கால் ஸ்வாசித்து வருகிறார்கள். ஆனால் மேனாட்டுப் பழக்கவழக்கங்களை அனுஸரிக்கிறவர்கள் வாயினால் ஸ்வாசிக்கிறது பொருந்த அழகும் பெருமையுமென்றிருக்கிறார்கள். கடவுள் வாய் பேசுகிறதற்கும் உண்பதற்கும், மூக்குஸ்வாசிக்கிறதற்கும் வாஸனை அறிவதற்கும் ச்ருஷ்டித்து இருக்கிறார். அததன் தொழிலைச் செய்தால்தான் தேக ஸௌக்யத்துக் கிடமுண்டு. வாயால் ஸ்வாசம் செய்து வந்தவனுக்கும் மூக்கால் ஸ்வாசம்செய்து வந்தவனுக்கும் வித்யாசத்தைக கண்டுபிடித்து விடலாம்.

குழந்தைகள் முதற்கொண்டு மூக்கால் ஸ்வாசம் செய்துவந்தால் முகம் அழகுவாய்ந்ததாகவும் தேக ஆரோக்யமாகவுமிருக்க இடமுண்டு. ஸ்த்ரீகள் இதை கவனிக்கவேண்டும்.

III

# KITCHEN AND COOKERY.

## சமையலறையும் சமையலும்

**Calcutta Bholi.**

கல்கத்தா போளி:— இரண்டு ஆழாக்கு சர்க்கரையில் 3 ஆழாக்கு சுத்த ஜலம் விட்டு கரைத்து எடுத்துக்கொள்ளவும். கொஞ்சம் குங்குமப் பூவை அரைத்து சர்க்கரைஜலத்தில் விடவும். ஒரு ஆழாக்கு கோதுமை நொய்யில் வேண்டிய நெய் விட்டுப் பிசைந்த பிறகு சர்க்கரை ஜலத்தை ஊத்திக் கிளறவும். அல்வாமாதிரியாக வரும். முத்தின தேங்காய்த் துருவல், முந்திரிப்பருப்பு இவைகளைப் போட்டுப் பிசைந்து மொத்தையாக எடுத்துக்கொள்ளவும். கோதுமை மாவை அப்பளம்மாதிரி தட்டி மொத்தையாக எடுத்து வைத்திருக்கும் அல்வாவை கொஞ்சம் கொஞ்சமாக அதற்குள் வைத்து போளி தட்டவும்.

**Mysore Pagu.**

மைஸூர் பாகு:—ஒன்றரைப்படி கடலை மாவு வறுத்து அல்வாமாதிரி கிளறி அரை வீசை சர்க்கரை போட்டு முக்கால் வீசை நெய் காய்ச்சிவிட்டு அல்வாவில் போட்டுக் கிளறி தட்டத்திற்கு நெய் தடவி அதை பில்லைகளாக நருக்கி எடுத்துவைக்கிறது.

**Plantain Murukku.**

வாழைக்காய் முருக்கு:—முத்தின பத்து வாழைக்காய்களை நன்றாக மேல் தோல் சீவி துண்டு துண்டுகளாக நறுக்கி சுத்த தண்ணீரில் அவைகளைப் போட்டு நன்றாக வேகவைக்கவும். வெந்த வாழைக்காய்களை கையால் நைய்ய பிசைந்து மொத்தையாக எடுத்துக்கொள்ளவும். இரண்டு ஆழாக்கு அரிசிமாவில் கொஞ்சம் தண்ணீர் விட்டுப் பிசைந்துவைத்த மொத்தையுடன் கலக்கவும். வேண்டிய உப்புடன் கொஞ்சம் எள்ளும் போடவும். சுத்தமான நல்லெண்ணெயை பாணலியில் காய்ச்சி முருக்குத்தட்டில் மாவைப் போட்டுப் பிழியவும் வெந்தவுடன் எடுத்து வைத்துக்கொள்ளவும்.

**Semai Idly.**

சேமை இட்லி.—ஒரு ஆழாக்கு சேமையுடன் அரை ஆழாக்கு கோதுமை நொய் இரண்டுபலம் முந்திரிப் பருப்பு போட்டு நெய்விட்டு உப்பு பச்சைமிளகாய் நறுக்கிப்போட்டு பிசைந்து தாளித்துகொண்டு வெந்த பிறகு முக்கால் ஆழாக்குத் தயிரில் போட்டு கரைத்து இட்லி செய்யவும். அரிசி இட்லி செய்யும் விதம் ஸாதாரணமாக எல்லாருக்கும் தெரியும்.

**Co-coanut Brinji.**

தேங்காய் பிரிஞ்சி:—அரைப் படி பச்சரிசியை நன்றாய்க் கழுவி ஒரு வெள்ளைத் துணியில் போட்டுக் கெட்டியாய்க்கட்டி அரிசி நொருங்காதபடி தொங்கவிடவும். வாய் அகல வெங்கலப் பானையில் 2½ பலம் நெய்யை விட்டு இரண்டுபலம் முந்திரிப் பருப்பை வறுத்து எடுத்துக்கொள்ளவும். பிறகு 4 பச்சை மிளகாய் கொத்தமல்லி இஞ்சி இவைகளை அரைத்து எடுத்துக்கொண்டு வெண்கலப் பானை நெய்யல் போட்டு பொரித்தவுடன் முத்தின ஒரு தேங்காயின் பாலை வெங்கலப் பானையில் வார்க்கவும். மேலும் அரைப்படி அரிசிக்குத் தகுந்தாப்போல் அதே வெங்கலப் பானையில் கஞ்சி வடிக்காதபடி சுத்த ஜலம் வார்த்து உலநீர் வைக்கவும். திட்டமாக உப்பையும் போடவும். பிறகு மூட்டை கட்டிவைத்திருக்கிற அரிசியைப் போடவும். பத்துகிராம்பும் 5 ஏலக்காயும்போடவும் நன்றாய்க் மூடிவைக்கவும். அரிசி முக்கால் பதமானவுடன் அடிநெருப்பை எடுத்துவிட்டு ஒரு தட்டத்தில் தணல்களை வைத்து வெங்கலப் பானையின் மேல் வைக்கவும். ஸரியாக வெந்தவுடன் இறக்கிவிட்டு முந்திரிப் பருப்பைப் போட்டுக் கிளறி சாப்பிடவும்.

# WOMAN'S WORLD.

## ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

**Mrs. K. Natarajan.**

**மிஸஸ். கே. நடராஜன்:**—மிஸஸ் கே. நடராஜன் என்பவர், பம்பாயில் வெகு திறமையுடன் நடத்திவரும் "இந்தியன் ஸோஷல் ரிபார்மர்" என்னும் ஆங்கில வாரப் பத்திரிகையின் அதிபரான மிஸ்டர் கே. நடராஜனின் மனைவி. மிஸ்டர் நடராஜன் பழுத்த ஆசார சீர்திருத்தக்காரர். தேர்ந்த படிப்பாளி. இவருக்குத் தகுந்த மனைவியாக அமைந்து புருஷனுடன் ஆசார சீர்திருத்தத்துக்குப் பாடுபட்டு வந்தனர். பம்பாய் ஸ்த்ரீகளுக்குள் செல்வாக்குள்ளவரா யிருந்தார். திடீரென்று சென்றமாதம் 12-ந்தேதி சனிக்கிழமை இரவில் மார்புநோயால் சிவலோக ப்ராப்தி யடைந்தார். நம்முடைய அனுதாபத்தை மிஸ்டர் நடராஜன் அவர்களுக்குத் தெரிவிக்கிறோம்.

**Women's Courts.**

**ஸ்திரீகள் கோர்டுகள்:**—அமெரிக்காவில் ஸ்த்ரீகளுடைய குற்றங்களையும், வ்யவஹாரங்களையும் விசாரித்துத் தீர்பதற்காக ப்ரத்யோகமான கோர்ட்டுகள் இருக்கின்றன. ந்யூயார்க்கில் ஸ்த்ரீகளுக்கென்று ப்ரத்யேகமாயுள்ள ஒரு கோர்ட்டில் ஸ்த்ரீகளும், சிறு பெண்களும் செய்த சிறு குற்றங்களை விசாரணை செய்துவருகிறார்கள். இந்தக் கோர்ட்டும், பிலடல்பியாவிலுள்ள ஒரு ஸ்த்ரீ கோர்ட்டும் ராத்ரியும் பகலும் நடக்கின்றன. குற்றவாளிகளை நன்றாய் விசாரித்து அவர்களுடைய மனோ நிலைமைகளையும் தேக நிலைமைகளையும் அறிந்து கொண்டு, தக்க ஸங்கம் அல்லது ஸ்தாபனங்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். இதனால் குற்றவாளிகள் மற்றவர்களைக் கெடுப்பது குறைகிறது. வேலை செய்ய சக்தி யுள்ளவர்களுக்கு தொழில் ஸம்பாதித்துக் கொடுக்கிறார்கள். சென்ற வர்ஷத்தில் பிலடல்பியா பட்டணத்தில் ஸ்த்ரீவ்யவஹாரங்களை விசாரிக்க ஒரு முனிஸிபல் கோர்ட்டு ஸ்தாபித்தார்கள். அதில், சிறு பெண்களின் சிறு குற்றங்கள், ஸிவில் வியாஜ்யங்கள், குடும்ப வ்யவஹாரங்கள், நடத்தையைப்பற்றிய வழக்குகள் ஆகிய ஐந்து விதமான வ்யவஹாரங்களை விசாரிக்க ஐந்து பிரிவுகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஒரு வர்ஷத்தில் பிலடல்பியாவில் மாத்ரம் 15300 கேஸ்கள் ஸ்த்ரீ கோர்ட்டார்கள் விசாரித்து தீர்ப்பு செய்தார்கள்.

**A re-marriage.**

**ஒரு புனர்விவாஹம்:**— திருச்சிறாப்பள்ளி ஹைகோர்ட் வக்கீல் மிஸ்டர் கே. வி. ஜம்புநாதய்யர் தம்முடைய விதந்துவான பெண் குழந்தையை திருச்சிறாப்பள்ளிக் காலேஜில் படிக்கும் ஒரு மாணவருக்கு விவாஹம் செய்துகொடுத்தார். பிள்ளையின் பெற்றோர்களும் உறவினர்களும் கூட இருந்து விவாஹத்தை நடத்தினதாகத் தெரியவருகிறது.

**A Muhamadan lady matriculate.**

**மெட்ரிகுலேஷனில் தேறிய ஒரு மஹம்மதியப் பெண்:**— மிஸ் ரெஜினா ரஸூல் என்னும் மகம்மதியப் பெண் கல்கத்த யுனிவர்ஸிடி மெட்ரிகுலேஷன பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறி யிருக்கிறாளாம். வங்காளத்து மகம்மதிய வகுப்பில் முதன்முதல் தேறியிருக்கிறவள் இப்பெண் ஒருவளென்று பங்காலிப் பத்திரிகை கூறுகிறது.




50 சாமான்கள் இனாம்! 50 சாமான்கள் இனாம்!!

அனேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற

# ராஜா சுந்தரி ரோஜா.

கூந்தல் வளரும் பரிமளத் தைலம்.

50-இனாம் சாமான்களுடன் டின் 1-க்கு ரூ. 1—0—0.

தலைமயிர் உதிர்ந்துபோகாமலிருக்கவும், அழகாய் இருக்கவும் ஸ்திரீகள் சாதாரணமாய் கடைகளில் விற்கக்கூடிய இழிவான எண்ணெய்களை உபயோகிக்காமல் எங்கள் தைலத்தின் மதுரகாரமுடைய பரிமளத்தைத் தெரிந்து அவைகளை வாங்கி உபயோகிக்கலாம். இதின் பரிமளம் சொல்லவும் எழுதவும் முடியாது; தலையில் தடவி சீவிக்கொண்டால் அக்கம் பக்கம் வீடுகளுக்கும் இதன் வாசனை வீசும். கூந்தலை நீளமாய் வளரச்செய்து மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்திசெய்து கண்களில் நீர் வடிதல், தலையில் சுண்டு புண், மயிர்வெடிப்பு, மயக்கம், தலைச்சுற்றல், தலைவலி, சொரிசிரங்கு, மனோவியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியம் தரும் தைலம் இது ஒன்றுதான். 1-புட்டி தருவித்தால் இதன் அருமை தெரியும். அநேக நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றிருக்கிறது. இது தேசமெங்கும் நல்ல பெயர் பெற்றிருப்பதே இதின் புகழ்ச்சிக்கு அத்தாக்ஷியாகும்.



இனாம் சாமான்களின் விபரம்:—ஸ்த்ரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6, குங்குமச் சிமிழ் 1, மைச்சிமிழ் 1, அழகான முகம் பார்க்கும் கண்ணாடி 1, ராஜா ராணி காரனேஷன் தாம்பூல மாத்திரைகள் 30, தந்தச் சீப்பு 1, ரவிவர்மா படங்களுள்ள போஸ்ட் கார்டுகள் 6, அத்தர்பில்லை 1, பெட்டி 1, ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜா ராணியுள்ள சுந்தரமான புருக்ஸ் 1, சந்தனப் பில்லை 1.

வி. அ. எஸ். பாணி கம்பெனி,

3, இருளப்பன் தெரு, சென்னை.

# THE FEMALE EDUCATION.

## Contents for August, 1915.


I. WAR ILLUSTRATIONS.

i. The Hon'ble Mr. Asquith.
ii. Lord Kitchner.
iii. Belgian King and Queen.
iv. German Royal Family.

II. ANTHEM ANTHOLOGY.

Harischandra Kummi.

III. PROGRESS OF THE WORLD.

Women and Gambling—Jewel and Children—Mr. Justice Sadasiva Aiyar and Social Re-form—The Women & Economy in life.

IV. SPECIAL ARTICLES.

i. The Greatness of Hindu Women by Sri Shanbagalakshmi Ammal.
ii. Onam by Mr. S. Venkatachela Aiyar.
iii. Geological Strata by Mr. Sivadyananandan.
iv. The Vanjipusha Chief by Mr. S. Rengasami Aiyengar.
v. Sri Sadasiva Brahmam by a Yogini.

V. INTERESTING ITEMS.

i. Concerning Children.
ii Domestic hints and suggestions.
iii. Education.
iv. Woman's World.
v. Views and Reviews.


# பெண்கல்வி.

## விஷயசூசிகை—ஆகஸ்டு 1915.


I. யுத்தப் படங்கள்.

i. ஆனரபிள் மிஸ்டர். ஆஸ்க்வித்.
ii. லார்ட் கிச்சனர்.
iii. பெல்ஜிய ராஜாவும் ராணியும்.
iv. ஜெர்மன் ராஜகுடும்பம்.

II. கீதத்திரட்டு.

ஹரிச்சந்திரக் கும்மி.

III. ப்ரபஞ்சப்போக்கு.

ஸ்த்ரீகளும் சூதாட்டமும்-நகையும் குழந்தைகளும்—ஜட்ஜ் ஸதாசிவய்யரும் ஆசாரசீர்திருத்தமும்-ஸ்த்ரீகளும் செட்டாய்க் குடித்தனம் செய்தலும்.

IV. விசேஷ வ்யாஸங்கள்.

i. ஹிந்து ஸ்த்ரீகளின் பெருந்தன்மை.—ஸ்ரீமதி சண்பகலக்ஷ்மி.
ii ஓணம்.—மிஸ்டர். வெங்கடாசலய்யர்.
iii. பூதலப்படையமைப்பு.—மிஸ்டர். சிவத்யானாநந்தன்.
iv. வாஞ்சிபூஷ வீரன்.—மிஸ்டர். ரெங்கஸாமி அய்யங்கார்.
v. ஸ்ரீஸதாசிவப்ரஹ்மம் — ஒரு யோகினி.

V. விசேஷக் குறிப்புகள்.

i. குழந்தைகள் விஷயம்.
ii. க்ரகத்தியக் குறிப்புகள்.
iii. வித்யா விஷயம்.
iv. ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.
v. அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.






மிஸ்டர். ஆஸ்க்வித்.

இங்கிலண்டு ப்ரதம மந்திரி.

**Through the kind courtesy of the 'Andra Patrica,' Madras.**



லார்ட் கிச்சனர்.
இங்கிலாண்டு யுத்த மந்திரி.

**From the 'Andra Patrica,' Madras.**



பெல்ஜியம் அரசி.



பெல்ஜியம் ராஜா.



**From the 'Andra Patrica,' Madras.**



ஜெர்மன் ராஜகுடும்பம்.

From the 'Andra Patrica,' Madras

201

# ANTHEM ANTHOLOGY

## கீதத்திரட்டு.

OFFICE OF THE REGISTRAR OF ... 2. SEP 1915 MADRAS

### அரிச்சந்திரக் கும்மி.

ஜூன் மீ தொடர்ச்சி.

10-வது கட்டம்.

(காவடிச் சிந்து மெட்டு.)

அரசனும் காசியை அடைந்து, அகம்மகிழ்ந்து முகம்குளிர்ந்து, கோவில் சந்நதியில் வந்து நின்று, ஸ்தோத்திரங்கள் செய்து தொழுது, அவனுமே துக்கித்து அவன் நிற்கும்போது, பாவி தாகன் பாடுபடுத்தி பசிக்குதடா, எனக்கு என்றான். (1)

சந்திரமதி யம்மனப்போ, சத்திரத்தில் சமைத்திட்டு மிக்கவணங்கி, போஜனம்செய்யவே அழைத்தாள், போஜனங்கள்செய்து பூரித்துதாகனும், அரசனைப்பார்த்துமே தாகன் உதாசினமாய், ஓங்கி ஒருவார்த்தைசொல்வான். (2)

அரசனே என்னுடைய பணத்தை, இப்பொழுதே தன்னிடத்தில், தந்துமறு வேலைபார்ப்பாய், என்றுசொல்லி தாகன் வேந்தன், கையில் கிட்டி கட்டியே அவனும்நின்று பணமுண்டா, இல்லையாவென்று கேட்டான். (3)

இல்லையென்று சொல்லேன் ஐயா, இப்பொழுதே உந்தன்கடனை, தந்துமறு வேலைபார்ப்பேன், பத்தினியைவிற்று பாரக்கடன்தீர்ப்பேன், என்றவன் மனசுதனிலெண்ணி அவளுடனே, தெருவில்வந்து வேந்தன்விலை கூறிநின்றான். (4)

---

11-வது கட்டம்.

(மாமியே நானென்னசெய்குவேன் என்ற மெட்டு.)

என்னசெய்குவேன் நான் ஈசனே, இப்போதென்னசெய்குவேன் ஈசனே, இவளை வாங்குவார் யாருங்காணேன், வகையுடனே இப்போ. (1)

அரசனும் சித்தம் கலங்கிட, அந்தணரும் அப்போவந்திட, என்ன விலைகொடுத்தால், இவளைத்தருகுவாய் நீ. (2)

ஆனைமேலம்பாரி வைத்துமே, அதின்மேலோர் பையன்நின்று, கவண்டுக்கல் எறியுந்தூரம், பொன் கொடுங்காணும் என்றான். (3)

அந்தணரும் பொன்னை தந்திட இப்போ, அழைத்துப்போவேன் நான் என்றிட, மாது கலங்கிட, மைந்தன் கதறிட. (என்ன) (4)

அதட்டி அழைத்துமவன் சென்றிட, அரசனும் மெத்த வருந்திட, கூலிப்பொன்னைத் தாவென்று, கொடுமையாய்த் தரகன்கேழ்க்க. (5)

முனிவன் கடன்கொடுத்தேன் ஐயனே, இன்னமென்ன செய்வேன் நான்தானே மந்திரி நீ என்னை விற்று, இவர்கடனைக் கொடுப்பாய். (6)

---

## 12-வது கட்டம்.

(சந்திரபிம்பம்போல முகமும் என்ற மெட்டு.)

வேந்தனையும் அப்பொழுது, விலைகள்கூறி நிற்கும்போது, புலையனவன் தோன்றிடவே, (1)

தரகன் புன்னகை கொண்டு நின்றான், எந்தஊர் அரசனையா, இபபொழுது விற்கலுற்றீர், விலைஎனக்கு சொன்னயானால் இப்பொழுது வாங்குவேனென்றுரைத்தான், (2)

அயோத்திமா நாட்டையாளும், அரிச்சந்திர ராஜனப்பா, பதினாயிரம் பொன் தந்துவிட்டு இவரை, அழைத்துச்செல்வாயென்றுரைத்தான், (3)

பதினாயிரம்பொன் தந்துமவன், பக்ஷமுடன் வாங்கிடவே, காவடியை தூக்கிநீயும் என்பின்னே, காட்டிற்கு வாவாயென்றான் (புலையன்). (4)

---

## 13-வது கட்டம்.

(ராஜனே உம்மை என்ற மெட்டு.)

சந்திரமதி மைந்தனுடனே, வேதியர்கிருகம் வேகமாய் வந்தாள். (1)

வேதியரன்று காலகண்டனும், மனைவியைப்பார்த்து மகிழ்ந்து சொல்லுவான், உந்தனுக்குமே வேலைசெய்திட, துட்டுக்கள்தந்து இவளை வாங்கினேன். (2)

அழகான இவள் வேலைசெய்வாளோ, ஐயரே காசைகொட்டிவந்தீரே (3)

ஐயர்மேலம்மா கோபங்கள் வேண்டாம், தாராளமாகவே வேலைசெய்குவேன். (4)

நெல்லுபதிங்கலம் குத்தவேணும், பட்டிசாணங்கள் தட்டவேணும். (5)

தொட்டியில் ஜலம் கொட்டவேணும், கூழை உண்டு நீ இருக்கவேணும். (6)

வாசலில்ஜலம் தெளிக்கவேணும் வாரிஎடுத்து நீ கோலம் வைக்கவேணும். (7)



சொன்ன சொல்படி வேலைகள் செய்து கூழைஉண்டு நான் களித்திருப்பேனே. (8)

உன்னுடயமைந்தன் மாடுகளெல்லாம் பத்திரமாக பாதுகாக்கணும் (9)

வேதியரப்போ மனைவியருடனே வேலைகளேவி வீற்றிருந்தார்கள், (10)

அந்தசமயத்தில் அசலாத்து மைந்தர்கள், காட்டிற்குப்போக கடிகியே வந்தார். (11)

---

## 14-வது கட்டம்.

(இந்த விதம் சகுந்தலை எடுத்து என்ற மெட்டு.)

மைந்தர்கள் வந்திடவே வேதியர்பார்த்து, வகையுடனே ஒருவார்த்தையையும் சொல்வார், என்னுடைய தாசனையும் தர்ப்பைகள் கொய்ய, காட்டிற்கு மைந்தனைஅனுப்பி அந்தமாது பாலகனும் காட்டிற்குச் சென்றிடவே, அழைத்து நீங்கள் செல்லுவீரென்றான்.

புற்றின்மேல் தர்ப்பைசெழித்திடக் கண்டான், போயதன்மேல் நின்று பாலன் தர்ப்பைகள் கொய்ய.

---

## 15-வது கட்டம்.

(அசிகைகொண்டு நீயுமிப்போ என்ற மெட்டு.)

பாலகனும் அப்பொழுது, பரிந்துதர்பை கொய்யும்போது முனிவனுட மாய்கையாலே, அரவமொன்று கொத்த, (1)

அப்பொழுது பாலகனும் அலரியன் துடித்து, தன்னுடைய நேசர்களை, தான்வரவே அழைத்தான். (2)

அரவமொன்று கடித்ததப்பா, ஆவிபோகுதெனக்கு, எந்தனுட அன்னைக்கிதை, தெரிவிப்பீர்களப்பா. (3)

அன்னையை விட்டுப்பிரிந்து, அடவிதனில் வருக, என்னைப்பாம்பு கடிக்கவும் இந்த ஈசனுடைய செயலோ. (4)

மண்ணுளப் பிறந்தோமென்று, மனதிலெண்ணி இருந்தேன், மாயோனுக்கு அடிமையாக, செய்துவிட்டாய் சிவமே. (5)

என்னை கெதியென்றிருந்தாள், எந்தனுட தாயார், அடியற்ற மரம்போல் காணும், அலையவிட்டேனவளை. (6)

கால்கள்மிக்க சோருதம்மா, கண்களிருதம்மா, பால்குடித்த நாவும்பல்லும் பற்றிடுட்டு தம்மா. (7)

மரயோன்கையில் உன்னைவிட்டு, மடியலானேனம்மா. பெற்றஉயிர் எறியவிட்டு, போகுறேனம்மா. (8)

தந்தைபோனவழியுங்காணாய், தனயனையும் துறந்தாய், இந்தவிதிக்கோ பாவி, எழுதினானோ பிறக்க. (9)

மைந்தனவன் இறந்துவிட்டான், இவன் மாதாவினிடத்தில், சேதி தன்னை சொல்லகொம்பன், சீக்கிரமாய்ச் செல்வோம். (10)

உந்தனுட மைந்தனம்மா, தர்ப்பை கொய்யும்போது, அரவமொன்று கொத்திடவே, ஆவிதன்னை யிழந்தான். (11)

ஆலவிருக்ஷத்தின் கீழ்நாங்கள், அடையாளங்கள் செய்தோம், அதிசீக்கிரமாக உந்தன், மைந்தனைப்போய் காண்பாய். (12)

---

## 16-வது கட்டம்.

(அரசனுமையைக் கேட்டுமே என்ற மெட்டு.)

பிள்ளைகளுரை கேட்டுமே, பெற்றவள் மனங்கலங்கி, வேதியரருகில் வந்து, வேண்டியவள் உரைசெய்வாள். (1)

போகக்கூடாதென்று அந்த, மரயவன் உரைத்திட, அவனடிபணிந்து போற்றி அனுமதிபெற்று திரும்பினான். (4)

ஐயோமகனே மகனேஎன்று, அலரியவள் துடித்துமே, ஆலமரத்தை கண்டிட்டாள், அதன் கீழ்பாலனை கண்டிட்டாள். (5)

மைந்தனை அவள் மடிமேல்வைத்து, மனதுமிக நொந்துமே, பட்ட பாட்டை எல்லாம் சொல்லி, பாலனைபார்த் தழுதிட்டாள். (6)

மாதுமிக்க மனதுநொந்து, மகனையுமவள் தூக்கியே, சுடலையின் அடையாளங்கண்டு சேரவே அவள் வந்திட்டாள். (7)

சிதை அடுக்கி குழந்தையை, சேரவே தீயில்வளர்த்தியே, கொள்ளி வைக்கும் சமயந்தனில், குழந்தையை தோட்டி உதைத்திட்டான். (8)

நீ ஆரடி திருட்டுக்கள்ளி, அடாத இவ்விருளில்வந்து, கொடுக்கும் கடனை கொடுக்காமல், கொள்ளிவைக்கலானாயே, (9)

கொடுக்கும் சக்தி எனக்குஇல்லை, கொடுப்பவர்கள் யாருமில்லை, தயவு செய்து சுடவேசெய்தால் தர்மம் உமக்கு உண்டாகும். (10)



இந்திரஜாலம்பேசுறாய் நீ, என்னமாயம் செய்குறாய், கழுத்திலிருக்கும் தாலியை நீ கழற்றிவிற்று கொடுத்திடாய். (11)

தேவர் முனிவர் சித்தரும், தேடினும் கண்ணிற்காணலை, வேசரும் சுடலைச்காக்கும், வெட்டியானும் கண்டிட்டான். (12)

தாலியைநான் கண்டேனென்று, தவிக்குகிறாய் நீ தயங்குகிறாய், பாவி நீ தானார்தானிந்த, பாலகனார், பகறுவாய். (13)

---

## 17-வது கட்டம்.

(நின்றதொருபாலகனை என்ற மெட்டு.)

மன்னனும் கேழ்க்கலுமே மாது, மனதுமிகவும் நொந்து, ஐயோ என்ன செய்வேனென்று, தன்னுடைய வரலாறெல்லாம்சொல்லி, தயங்கி நின்றாளப்போ. (1)

வந்தனங்கள்செய்து மவள் மிகவும், வணங்கியே கேட்கலுமே, தயவு செய்து மேயவன் கொடுக்க, வாங்கியேவருகும்போது வழியில், தன்மைந்தனைப்போலக்கண்டான். (2)

மைந்தனைமடியில் வைத்துமாது, மறுகியே அழுகும்போது, காவற்காரர்கள் கண்டுமப்போ, காசிராஜனண்டையுமே கொண்டு, நிறுத்தியே நின்றாரப்போ. (3)

அரசனும்கண்டுமப்போ அவளை, ஆக்கினைகள் செய்யவென்று, சுடலை தோட்டியைதானழைத்து, ஆக்கினைகள் செய்வாயென்று அவனும், அதட்டியே சொல்லி நின்றான். (4)

அரசனும் சொல்லலுமே தோட்டி, தன் அதிசீக்கிரமாக, தன்னுட அடிமையினிடத்தில்வந்து, ராஜன்மகன் கொன்றவளை நீயும், சிரச்சேதஞ் செய்திடுவாய். (5)

அன்னவனும் கேட்டுநின்று இதுவும், ஈசனது அருளோவென்று, மனதில் மிகுந்ததோர், வருத்தமுற்று, வாளையோங்கிவெட்டும்போது அதுவு, மாலையாகவிழுந்ததப்போ. (6)

வெட்டுக்கள் விழாத்துனாலேவேந்தன், வெகுவாக வருத்தமுற்று, சத்தியங்கள் பண்ணியே வேந்தனப்போ, வீசியேவெட்டும்போது வேந்தனை கையை சிவன் பிடித்துக்கொண்டான். (7)

---

# PROGRESS OF THE WORLD

## ப்ரபஞ்சப்போக்கு.

**Women and Gambling**

ஸ்த்ரீகளும் சூதாட்டமும்:—சூதாட்டம் மிகவும் அபாயகரமானது. இக்கொடிய ஆட்டத்தினால் ஸ்ரீ பஞ்சபாண்டவர்கள் நாடு நகர்களை இழந்தார்கள். ஸ்ரீ நள மஹாராஜன் ராஜ்யங்களை இழந்தான். மத்ய காலத்திலும் தற்காலத்திலும் இந்த பயங்கரமான ஆட்டத்திற்கு அநேககுடும்பங்கள் இரையாகியிருக்கின்றன.

நமது சென்னைராஜதானியில் கும்பகோணம், திருச்சி, தஞ்சாவூர் முதலான பட்டணங்களில் சூதாட்டம் ஜாஸ்தி. கும்பகோணத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரு க்ராமத்தில் பெரிய தொகைகளைக் கட்டி சூதாடினவர்கள் அகப்பட்டுக்கொண்டு, அவர்களில் சிலர் தண்டனையடைந்திருக்கிறார்கள். வட இந்தியாவில் பல ஸ்தலங்களில் சூதாட்டம் ஆடும்பொழுது போலீஸாரால் கண்டுப்பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். புருஷர்கள் திண்ணைத்தூங்கிகளாயிருந்து புத்திகெட்டு சூதாட்டமாடுவதினால் வெகு நஷ்டங்களடைய நேரிடுகின்றன. மனைவி மக்களைக் காப்பாற்ற வழியின்றி திண்டாடும்படியாகிறது.

ஸ்த்ரீகள் தங்கள் புத்தி விசேஷத்தினாலும் முன்ஜாக்ரதையாலும் துஷ்டவழிகளில் புகும் புருஷர்களுக்கு நற்போதனை போதித்து நல்ல வழிக்குத் திருப்புவது வழக்கம். நமக்குத் தெரிந்து பல குடும்பங்கள் ஸ்த்ரீகளின் முன்ஜாக்ரதையால் அழிவினின்றும் காப்பாற்றப்பட்டிருக்கின்றன. தற்காலத்தில் பம்பாயில் ஸ்த்ரீகளே சூதாட்டம் ஆடி ஆயிரக்கணக்கான தொகைகளை இழந்து வருகிறார்



களாம். இது மிகவும் விசனகரமாயிருக்கிறது. ஆனால், ஒரு ஸந்தோஷம். பம்பாயில் பெரியகுடும்ப ஸ்த்ரீகள், இந்த கெட்ட வழக்கத்தை யொழிக்க ஒரு ஸங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இச்சங்க மூலமாக மீட்டிங்கு கூட்டி ப்ரசங்கமூலமாக சூதாட்டத்தினால் வரும் தீமைகளை போதித்து வருகிறார்களாம். ஸ்த்ரீகளும் இக்கொடிய ஆட்டத்தில் ப்ரவேசித்து, ஆடி, பணங்களை இழக்க நேர்ந்ததானது காலதோஷத்தின் பயனாகுமென்று ஊஹிக்கவேண்டியிருக்கிறது.

**Jewel and Children.**

நகையும் குழந்தைகளும்:—தனவந்தர்கள் தங்கள் அருமைக் குழந்தைகளுக்கு நகைகளைப்பூட்டி ஆனந்திப்பது வழக்கமாயிருக்கிறது. பல பல ஸமயங்களில் நகைகளால் அலங்கரிக்கப்பட்ட குழந்தைகளின் உயிருக்கு ஆபத்துண்டாகிறது. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நகைகளுடன் பறிகொடுத்து வருகிற விஷயம் ப்ரதிதினம் பேபர்களில் பார்க்கிறோம். குழந்தைகளுக்கு நகைகள் போடுவது அபாயம் என்று ஒவ்வொரு பெற்றோரும் அறிவார்கள். அறிந்து என்ன பயன்?

வடஇந்தியாவில் ஐக்கிய மாகாண லப்டினன்ட் கவர்னர், ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் தம் மாகாண இந்திய ப்ரபுக்களுக்கு ஒருவேண்டுகோள் ப்ரசுரித்திருக்கின்றார்.

அதில் குழந்தைகளுக்கு நகைகள் போடுவது பெற்றோர்களின் அற்ப ஆசை யென்றும், அதனால் அபாயங்கள் நேர்வது பெரிதென்றும் தெரிவிக்கிறார். மேலும் குழந்தைகளுக்கு நகைகள் போடுவது சாஸ்த்ரமுமல்ல வென்றும் குறித்திருக்கிறார். இதை பெற்றோர்கள் கவனிக்கவேண்டும்.

**Mr. Justice Sadasiva Aiyer and Social Reform.**

மிஸ்டர் ஜட்ஜ் ஸதாசிவ அய்யரும் ஆசார சீர்திருத்தமும்:—சென்றமீ கடைசி வாரத்தில் ஈரோட்டில், கோயமுத்தூர் ஜில்லா

ஆசாரசீர்திருத்த கான்பரன்ஸ் கூடிற்று. சென்றமாதப் பத்ரிகையில் ஆசார சீர்திருத்த கான்பரன்ஸ் அக்ராஸநாதிபதி செய்த ப்ரசங்கத்தின் ஸாராம்சத்தை வெகு சுருக்கமாகத் தெரிவித்தோம். பிறகு, அக்கான்பரன்ஸில் ஆசார சீர்திருத்தத்துக்குரிய தீர்மானங்கள் வழக்கமாகத் தீர்மானிக்கப்பட்டன.

அக்கான்பரன்ஸில் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸதாசிவய்யர் அக்ராஸநாதிபதியை ப்ரேரேபித்தபோது, ஒரு அருமையான ப்ரசங்கம் செய்தார். குறிப்பாக ஆசாரசீர்திருத்தமென்றால் மதம், ஜாதி எல்லாவற்றையும் அடியோடு விட்டு ஐரோப்பியர் கிளப்பில் சுகமாய் வாய்க்கு ருசியானவற்றைச் சாப்பிடுவது ஆசார சீர்திருத்தமல்லவென்றார். எல்லா திருத்தங்களுக்கும் மதம் அவச்யமென்றார். ஒரு மரத்தின் வேறு அழுகிப்போனால் எப்படி அந்த மரம் கீழ் விழுந்து விடுமோ அப்படி மதமில்லையேல் ஸமூகம் விழுந்துவிடும். அப்போது ஒருவிதமான திருத்தமும் பயன்படாது. மதத்தை வைத்துக் கொண்டு பூததயை, சகோதர வாத்ஸல்யம், ஒற்றுமை இவைகளை வ்ருத்தி பண்ணுவதே ஆசார சீர்திருத்த நோக்கமாக இருக்கவேண்டுமென்றார். ஸ்த்ரீகளின் ஒற்றுமையில்லாமல் ஆசார சீர்திருத்த கான்பரன்ஸ் கூடி பயன்படாது. "நான் சில கார்யங்கள் ஆசார சீர்திருத்தத்தில் செய்திருப்பதாய் நீங்கள் சொல்லுகிறீர்கள். அவைகளெல்லாம் என் உத்தம பத்னியின் முயற்சியினாலும் ஒற்றுமையினாலும் என்று நீங்கள் அறியவேண்டும். இந்த கான்பரன்ஸில் ஒரு ஸ்த்ரீயாவது வராதது மிகவும் விசனிக்கத்தக்கது. ஸ்த்ரீகளை இவ்வழியில் திருப்பாமல் இங்கு நாம் கூடி என்ன ப்ரயோஜனம்" என்று சொல்லி அழமாட்டாத குறையாய் துக்கித்தார்.

ஜட்ஜ் ஸதாசிவய்யர் ஆசார சீர்திருத்தம் ஸரியான வழியில் அபிவ்ருத்தியாகவேண்டுமென்ற கருத்தோடு சொன்னவைகளை ஒவ்வொரு ஸ்த்ரீபுருஷரும் கவனிக்கவேண்டியதாகும்.

# THE GREATNESS OF HINDU WOMEN.

By

**Sri Shanbagalakshmi.**

## ஹிந்து ஸ்த்ரீகளின் பெருந்தன்மை.

ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்கள் இருள் மூடினவைகளாயிருந்தகாலத்தில் இந்தியா ஸகல சாஸ்த்ரங்களிலும் தேர்ச்சியடைந்து உலகத்தில் ஒரு ப்ரகாசமான தீபம் போலிருந்தது. ஸ்த்ரீகளும் புருஷர்களும் அப்போது இந்தியாவில் திலகங்களாக விளங்கினார்கள். இந்தியாவில் புருஷர்கள் படிக்கிறபோது ஸ்த்ரீகளும் படிக்கவேண்டுமென்று ஒரு விதி இருந்தது. அரசாங்கத்தாரும் புருஷர்களின் கல்வியையும் ஸ்த்ரீகளின் கல்வியையும் ஆதரித்து வ்ருத்திசெய்து வந்தார்கள். பொதுவாக, அக்காலத்தில் புருஷர்களின் படிப்பை ஸ்த்ரீகள் படிக்கவில்லை. ஸ்த்ரீகளுக்கு அவர்களின் ஆவசியகத்திற்கும், பிற்காலவாழ்க்கைக்கும் தகுந்தபடி படிப்பை ஊட்டிவந்தார்கள். அதனால் ஸ்த்ரீ புருஷர்கள் பல துறைகளில் ஸமர்த்தர்களாயிருந்தார்கள். ஒருவரையொருவர் அந்யோந்யமாகவும் ஸமமாகவும் நேசித்தனர். சுருக்கமாகச் சொல்லும்போது, இந்திய ஸ்த்ரீகள் புருஷர்களால் மதிக்கப்பட்டு ஸமபாவத்துடன் கவுரவிக்கப்பட்டதற்குக்காரணம், அவர்கள் அடைந்திருந்த உன்னத கல்வியே. எப்பொழுதும் நித்தியமாயிருக்கப்பட்ட ஹிந்து மதக்கல்விதான் ஸ்த்ரீகளை பெருமைப்படுத்தியது. தற்காலம் ஸ்த்ரீகள் படித்துவரும் கல்வியானது காம, குரோத, லோப, மோஹ மார்ச்சர்யம் முதலிய கொடிய குணங்களுக்கு உள்ளாக்கி அவர்களை விஜாதியர்களாக்கி வருகிறது.

முற்காலத்தில் இந்தியாவில் ஸ்த்ரீகள் பூஜிக்கத்தகுந்த தெய்வமாக இருந்தனர். மாதர்கள் பரதேவதையின் அவதாரமென பல கவிஞர்கள் வெகுவாகப்பாடியிருக்கின்றனர். பல துறைகளில் அடைந்திருந்த பூர்ணகல்வியின் பயனால் சில ஸ்த்ரீகள் வீரிகளாகவும் சூரிகளாகவும், சில மாதரசிகள் ராஜ்யநிர்வாகத்தில் க்யாதி பெற்றவர்களாகவும், சில அங்கனைகள் கவிபாடுவதில் சக்தி பெற்ற கவிஞைகளாகவும், சில தருணீமணிகள் நல்ல தார்க்க

# ONAM.

By

**Mr. S. Venkatachela Aiyar.**

## ஓணம்.

மலையாளத்தில் பிரதிவருஷம் ஆவணிமாதந்தோறும் வழக்கமாக நடந்துவரும் ஓர் விசேஷமான பண்டிகைக்கு ஓணம் எனப்படும். ஒவ்வொரு மாதத்திலும் அந்தந்த மாதப் பேரோடுகூடிய நட்சத்திரங்கள் அந்த மாதத்தில் வரும் பூர்ணசந்திரனை ஒட்டியிருக்கும். அதையறிந்து முன்னோர்கள் இவ்விடத்தில் ஆவணிமாதத்தில் உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம் இந்த நக்ஷத்திரங்கள் வரும் நாட்களில் நாலு ஓணங்களாக ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்விடத்தில் வழங்குகின்ற கொல்லம் வருஷத்திற்கு இது முதலாவது மாதமாயிருப்பதால் இந்த மாதத்தில் அந்தப் பண்டிகையை நிச்சயித்திருக்கலாம். அல்லாமலும் இது, ஆனிச்சாரல், ஆடிக்காற்று இவைகள் முடிந்தபிறகும், துலாவருஷம், கார்த்திகைப்பனி இவைகள் வருவதற்கு முன்னதாகவும் இருக்கிறது. இந்த ஆவணி மாதமானது இவ்விடத்து சீதோஷ்ண ஸ்திதிக்கு ஓர் ஆனந்தமேயாம். இவ்விடத்தில் அரசன் முதல் ஏழைவரையிலும் எல்லோரும் அந்த நாட்களைச் சந்தோஷமாகக் கொண்டாடுகிறார்கள்.

அனந்த சயனத்தில் பகவான் ஸ்ரீ பத்மநாபர் கோவிலில் அந்த நாட்களில் புகுந்தோமானால், அவரும் ஓணம் கொண்டாடுகிறாரென்று தோன்றும். ஏனென்றால், மனிதன் பகவானுக்கும் தன்னைப்போல் உருவத்தை யளித்துத் தனக்கு வரும் விருப்பங்களையும் அவரிடத்தில் ஆரோபிக்கிறானன்றோ? அதுபோல் இவனது ஸந்தோஷங்களால் அவரையும் கொண்டாடவைக்கிறான். அந்த நாட்களில் மகாராஜாவானவர் கோவிலுக்கு தரிசனத்துக்கு வரும்பொழுது ஆட்களை உள்ளே தரிசனத்திற்கு விடமாட்டார்கள். அதற்குப் பிறகு கூட்டத்திற்குப் பயந்தவனுக்கு அவ்விடத்திற்குப் போகவு முடியாது. ஒற்றைக்கல் மண்டபத்திலிருந்து பத்மநாபனைப் பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும். மஞ்சள் வேஷ்டியும் தரித்து ஓணவில்லும் வைத்து அலங்கரித்திருக்கும் பகவானை பார்க்க யார் தான் ஆவலற்றிருப்பார்கள்?

அவ்விடத்திலிருந்து அரசனுடைய அரண்மனைக்கு வந்தோமானால் அவ்விடத்திலுள்ள விமரிசையையும் சொல்லமுடியாது. அரசரும் மஞ்சள் வஸ்திரம் தரித்திருப்பார். திருவோணத்தன்று அநேக உத்தியோகஸ்தர்கள் அரசருக்கு முகம் காண்பிக்க வருவார்கள். அப்போது அவர்களுக்கு அரசர் புதுவேஷ்டி—இது இவ்விடத்தில் ஓணக்கோடி என்று சொல்லப்படுகிறது—கொடுப்பதுண்டு. அன்றைய தினம் மாலை மூன்றுமணிக்குமேல், அரண்மனையிலுள்ள சேவகர்களுக்கும் ஓணக்கொடியை அரசர் அளிப்பர். ஊரிலுள்ள அநேகம் குழந்தைகளுக்கும் ஓணக்கோடி கொடுத்துவந்தார். இப்பொழுது அந்த வழக்கத்தை அரசர் நிறுத்திவிட்டார். குழந்தைகளுக்கு விளையாட அரண்மனையில் ஒரு மாதத்திற்கு முன்னதாகவே ஊஞ்சல் போட்டிருப்பார்கள். அரண்மனையிலுள்ள சேவகர்களுக்கு விமரிசையான போஜனம் நாலு நாட்களிலும் கொடுப்பதுண்டு.

இந்நாட்டார் ஓணம் கொண்டாடுவதைப் புதிதாக அயல்தேசத்தார் யாராவது பார்த்தால் கோடி வேஷ்டி கட்டிக்கொண்டிருப்பதும் பந்து விளையாடுவதும் மாத்திரந்தான் தெரியும். ஆனால், இதில் சுகாதாரத்திற்காகவும், ஆனந்தத்திற்காகவும் அநேகஞ் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன, ஓணப்பண்டிகை வரும்போது எல்லா வீடுகளையும் சுத்திசெய்து வெள்ளை பூசுகிறார்கள். வீட்டிலுள்ளவர்களுக்கெல்லாம் புதிய வஸ்திரம் தயார்செய்து கொள்ளுகிறார்கள். தேகாப்பியாசத்திற்காக ஆண்குழந்தைகள் பந்து விளையாடவும், பெண்குழந்தைகள் ஊஞ்சல் விளையாடவும் போகிறார்கள். விமரிசையான உணவுகளைச் சாப்பிடுகிறார்கள். நல்ல நிலவிலிருந்து அநேகவிதமான சம்பாஷணைகளைச் செய்கிறார்கள். காலையும் மாலையும் அலங்காரம் பண்ணியிருக்கும் ஈசனைப்போய் தரிசிக்கிறார்கள், அவரைத் தியானம் பண்ணுகிறார்கள். இவைகளெல்லாம் அவர்களுடைய ஸ்தூல சூட்சமகாரண சரீரங்களுக்கு விகாசத்தைக்கொடுக்கின்றன.

காலப்பழக்கத்தால் எந்தச் சட்டமும் சரியான பரிபாலகரில்லாவிட்டால் கெட்டுப்போகுமல்லவா? அதுபோல் இவ்விடத்திலும் ஜனங்கள் அந்தந்த காலத்தில் இதைச் சரியாகக் கொண்டாடாமல் விட்டுவிடுகிறார்கள். இவைகளெல்லாம் சரியாக நடத்திவந்தால் நலம்

**எஸ், வெங்கடாசல அய்யர்.**

# THE VANJIPUSHA CHIEF.*

By

**Mr. S. Rangasami Aiyangar.**

## வாஞ்சிபூஷ வீரன்.

திருவாங்கூரிலிருக்கும் ஐந்து அல்லது ஆறு சிற்றரசர்களோ அல்லது தலைவர்களோ ஏதேனுமொருவழியில் ராஜவம்சத்துடன் சம்பந்தப்பட்டவர்களாயிருக்கிறார்கள். அவர்களுள் வாஞ்சிபூஷர்கள் ஒரு கூட்டத்தார். அவர்களுக்கு யுத்தத்தில் ப்ரியமும் ஆயுத தேர்ச்சியுமிருந்தபோதிலும் அவர்கள் க்ஷத்திரியர்களல்ல, ப்ராம்ணர்களேயாம். செங்கநூர் போட்டீஸ் (Chenganoor Pottis) என்ற ஒருவகை ப்ராம்ணக்கூட்டத்தவராம். இவர்கள் நம்பூரிகளுமல்ல, ஸாதாரண போட்டீஸுமல்ல, திருவெள்ள தேசிஸ் என்ற வகையாருமல்ல. செங்கனூர் கிராமம் போட்டீஸ்களாகிய இவர்கள் தனியாய் ஒருவகுப்பினர். பூர்வம் ஸ்ரீ பரசுராமர் செங்கனூரில் இக்கூட்டத்தாரை ஸ்தாபனஞ்செய்தாராம், இவர்கள் நம்பூரிப்ராமணர்கள் வீட்டில் கொள்ளுவதுமில்லையாம், கொடுப்பதுமில்லையாம் : அதாவது சம்பந்தஞ்செய்துகொள்வதில்லை, இந்த வகையாரின் ஸ்த்ரீகள் செங்கனூர் கிராம எல்லைக்கப்பாற் செல்லக்கூடாதென ஓர் சட்டம் அவர்களுக்குள் இருக்கிறதாம், எல்லா போட்டீஸ்களுக்கும் செங்கனூர் போட்டீஸ் தலைவர்கள். அறுபத்துநான்கு பேருக்கும் எஜமானன் வாஞ்சிபூஷவீரனேயாம்,

ஹிஸ் ஹைனஸ் மார்த்தாண்டவர்ம மஹாராஜா அவர்கள் எட்டுவெட்டில் பில்லாமார்கள், ஓகாகார்கள் முதலியவர்களின் கையில் நிரம்பத்துன்பமடைந்தபோது இந்த வாஞ்சிபூஷவீரன் மஹாராஜா அவர்களுக்குப் பேருதவி செய்து அவரையும், ராணியையும், ராஜ இளங்குமாரனையும் அவர்களிருந்த ஆபத்தினின்றும் தப்புவித்தான்.

பில்லாமார்களின் உபத்திரவந்தாங்காமல் மஹாராஜா அவர்கள் (இளவரசராயிருக்கும்பொழுது) ப்ரதான நகரைவிட்டு மேவெளிக்கார அரண்மனையில் வந்து தங்கி சுகமாயிருந்து வந்தார். பெரிய

* From a number of 'Indian Ladies Magazine.'

# THE GREATNESS OF HINDU WOMEN.

By

**Sri Shanbagalakshmi.**

## ஹிந்து ஸ்த்ரீகளின் பெருந்தன்மை.

ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்கள் இருள் மூடினவைகளாயிருந்தகாலத்தில் இந்தியா ஸகல சாஸ்த்ரங்களிலும் தேர்ச்சியடைந்து உலகத்தில் ஒரு ப்ரகாசமான தீபம் போலிருந்தது. ஸ்த்ரீகளும் புருஷர்களும் அப்போது இந்தியாவில் திலகங்களாக விளங்கினார்கள். இந்தியாவில் புருஷர்கள் படிக்கிறபோது ஸ்த்ரீகளும் படிக்கவேண்டுமென்று ஒரு விதி இருந்தது. அரசாங்கத்தாரும் புருஷர்களின் கல்வியையும் ஸ்த்ரீகளின் கல்வியையும் ஆதரித்து வ்ருத்திசெய்து வந்தார்கள். பொதுவாக, அக்காலத்தில் புருஷர்களின் படிப்பை ஸ்த்ரீகள் படிக்கவில்லை. ஸ்த்ரீகளுக்கு அவர்களின் ஆவசியகத்திற்கும், பிற்காலவாழ்க்கைக்கும் தகுந்தபடி படிப்பை ஊட்டிவந்தார்கள். அதனால் ஸ்த்ரீ புருஷர்கள் பல துறைகளில் ஸமர்த்தர்களாயிருந்தார்கள். ஒருவரையொருவர் அந்யோந்யமாகவும் ஸமமாகவும் நேசித்தனர். சுருக்கமாகச் சொல்லும்போது, இந்திய ஸ்த்ரீகள் புருஷர்களால் மதிக்கப்பட்டு ஸமபாவத்துடன் கவுரவிக்கப்பட்டதற்குக்காரணம், அவர்கள் அடைந்திருந்த உன்னத கல்வியே. எப்பொழுதும் நித்தியமாயிருக்கப்பட்ட ஹிந்து மதக்கல்விதான் ஸ்த்ரீகளை பெருமைப்படுத்தியது. தற்காலம் ஸ்த்ரீகள் படித்துவரும் கல்வியானது காம, குரோத, லோப, மோஹ மார்ச்சர்யம் முதலிய கொடிய குணங்களுக்கு உள்ளாக்கி அவர்களை விஜாதியர்களாக்கி வருகிறது.

முற்காலத்தில் இந்தியாவில் ஸ்த்ரீகள் பூஜிக்கத்தகுந்த தெய்வமாக இருந்தனர். மாதர்கள் பரதேவதையின் அவதாரமென பல கவிஞர்கள் வெகுவாகப்பாடியிருக்கின்றனர். பல துறைகளில் அடைந்திருந்த பூர்ணகல்வியின் பயனால் சில ஸ்த்ரீகள் வீரிகளாகவும் சூரிகளாகவும், சில மாதரசிகள் ராஜ்யநிர்வாகத்தில் க்யாதி பெற்றவர்களாகவும், சில அங்கனைகள் கவிபாடுவதில் சக்தி பெற்ற கவிஞைகளாகவும், சில தருணீமணிகள் நல்ல தார்க்க

வ்யாகர்ண சாஸ்திரத்தில் பாண்டித்யமுடையவர்களாகவும், சில பெண்மணிகள் ஸங்கீதத்தில் உயர்ந்த பயிற்சி பெற்று சரஸ்வதி அவதாரமோவென்று திகைக்கும்படி வல்லமையுடையவர்களாகவும், சிலர் தத்வசாஸ்திரத்தில் தேர்ச்சிபெற்ற தத்வசிகாமணிகளாகவும், சிலர் நீதிசாஸ்த்ரத்தில் வல்ல நீதிவந்தர்களாகவும் இருந்தனர். ஒவ்வொருவிதத்திலும் மானவனைவிட ஸ்த்ரீகளே அந்த அந்தஸ்திற்கும், பெருமைக்கும் பாத்ரர்களாக இருந்தனர். புருஷர்கள் அவர்களது புத்திசாமர்த்தியத்தைக்கண்டு, அவர்களின் ஸௌந்தரத்திற்கும், மென்மைக்கும், நாணத்திற்கும் நன்மதிப்பு அளித்து வந்தனர். "ஓர் மாதின் கஷ்டதசையைக்கண்டு சிரிக்கும் மனிதன் கேடுறுவனாக. அவனது பூஜையை பகவான் ஏற்கமாட்டார்" என்றும், "எவனொருவன் தன் பத்நியின் தேகத்தை தெய்வத்தன்மையுடையவளாகக் கருதவில்லையோ அவன் உண்மையான பதியல்ல" என்றும், நமது ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

பூர்வகாலத்து புராணேதிகாசங்களில் கூட ஸ்த்ரீகளின் மேன்மைக்கும் பெருமைக்கும், வேண்டிய த்ருஷ்டாந்தங்களிருக்கின்றன. ராமாயணத்தில் சீதைக்குள்ள பெருமை நமக்குத் தெரியாதவிஷயமா? ஹனுமந்தனும் மற்ற வீராதி வீரர்களும் பதிவ்ருதையான ஸ்த்ரீயின் அந்தஸ்தையும் பெருமையையும் எண்ணியல்லவா வருத்தத்தைத் தரக்கூடிய கஷ்டமான கார்யத்தையும் இஷ்டத்துடன் கைக்கொண்டார்கள். இன்னும் "நமது மனுதர்ம சாஸ்திரத்தில் ஸ்த்ரீகளின் தேகத்தின்மீது ம்ருதுவான புஷ்பத்தாலும் அடிக்கக்கூடாது, எவனொருவன் தன்பத்நியை விரோதத்தினாலும் கோபத்தினாலும் அடிக்கிறானோ அவன் சண்டாளனாவன்" என்று கூறப்பட்டிருக்கிறது. கணவன் குறிப்பறிந்து அவன் மனம் நோகாவண்ணம் கீழ்ப்படிந்து நடந்து யாவரும் 'தூயள்' என்று புகழும்படியான கீர்த்தியையுடைய உத்தம பதிவ்ருதா சீலியே, ஸ்வர்க்கத்துக்குச் செல்ல ஏற்ற சாதனம். ம்ருதுமதுரபாஷிணியான ஸதியே ஏகாந்தத்தில் ஏற்ற ஸ்நேகிதை. தக்க சமயத்தில் புத்திபுகட்டக்கூடிய நாயகியே நன் மந்த்ரி. பொறுத்தல் என்னும் குணமுடைய காரிகையே பூமிதேவி. ஓர் உத்தமபத்நியே நாயகனுக்கு போஜனமளிப்பதில் மாதாபோல்வாள்.





பூர்வகாலத்தில் மாதர்களுக்கு இவ்விதமான பெருமை யளிக்கப்பட்டிருந்தது. மனிதர்கள் அவர்களின் கார்யங்களில் ப்ரவேசியாமலும், அவர்களை அடக்கமுயலாமலும் இருந்தனர். அவர்கள் ஒருவர்க்கொருவர் சமயம் வாய்த்தபோது சகாயம் புரிந்து வந்தனர். சீதை, லோபாமுத்ரை, அதிதி, த்ரௌபதி இவர்களின் சரித்ரங்களே போதுமான சாக்ஷியங்கள். பதிப்ரேமையில் சிறந்தவர்கள். விச்வாஸமும் பக்தியும் சீதையை தன் நாதனுடன், தன் ஸௌகத்தையும் சந்தோஷத்தையும் விட்டு, கானடையச் செய்யவில்லையா? த்ரௌபதியின் கீழ்ப்படியுந்தன்மையும், விச்வாஸமும், பதிகளின்மீதுள்ள பக்தியும் சாமான்யமா? சந்த்ரமதி, தமயந்தி இவர்களின் பதிப்ரேமைக்கும் அளவு உண்டோ? அத்தகைய ஹிந்து ரமணிகள் இன்றும் இல்லாமல் போகவில்லை. ஒவ்வொரு ஹிந்துகுடும்பத்திலும் நாயகனையே தெய்வமென்று நினைத்து தன் நாதனின் ஸௌகத்தைக் கருதி தான் எத்தகைய தௌர்பாக்யமும் அடையச் சித்தமாயுள்ள ஒரு பதிவ்ருதையானாலும் கட்டாயமாய் இருப்பாள்.

ஓர் ஸ்த்ரீ செய்யாத கார்யம் ஒன்றுமே இல்லை. சமையல், வீட்டை ஒழுங்குபெறச்செய்தல், குழந்தைகளை வளர்த்தல் முதலியவையே ஸ்த்ரீகளின் முக்யவேலை. இவ்வேலைகளை அவர்கள் சந்தோஷத்துடன் செவ்வனே செய்து முடிக்கின்றனர். மனிதர்கள் கஷ்டமான வேலைகளைத் தாங்கள் எடுத்துக்கொள்கின்றனர்: மனிதனின் வேலை சம்பாதிப்பதும், அப்படி சம்பாதித்து வந்த பணத்தை சரியாக உபயோகப்படுத்துவதும் ஸ்திரீயின் வேலை.

நமது வீடுகளே நமக்குப் பள்ளிக்கூடமாக விருக்கின்றன. நாம் பொறுமை, விடாமுயற்சி, அடக்கம், அன்பு, மரியாதை, கீழ்ப்படியும் தன்மை இத்யாதி ஸத்குணங்களை அக்கலாசாலையில் கற்கிறோம். அம்மாதிரியான கலாசாலைகள் வெளியில் நாம் காணமுடியாது. மேலே சொன்ன ஸத்குணங்களையே பூஷணமாகக்கொண்ட பெண்மணி யாவராலும் போற்றப்படுவாள்.

ஷண்பக லக்ஷ்மி.

# ONAM.

By

**Mr. S. Venkatachela Aiyar.**

## ஓணம்.

மலையாளத்தில் பிரதிவருஷம் ஆவணிமாதந்தோறும் வழக்கமாக நடந்துவரும் ஓர் விசேஷமான பண்டிகைக்கு ஓணம் எனப்படும். ஒவ்வொரு மாதத்திலும் அந்தந்த மாதப் பேரோடுகூடிய நட்சத்திரங்கள் அந்த மாதத்தில் வரும் பூர்ணசந்திரனை ஒட்டியிருக்கும். அதையறிந்து முன்னோர்கள் இவ்விடத்தில் ஆவணிமாதத்தில் உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம் இந்த நக்ஷத்திரங்கள் வரும் நாட்களில் நாலு ஓணங்களாக ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இவ்விடத்தில் வழங்குகின்ற கொல்லம் வருஷத்திற்கு இது முதலாவது மாதமாயிருப்பதால் இந்த மாதத்தில் அந்தப் பண்டிகையை நிச்சயித்திருக்கலாம். அல்லாமலும் இது, ஆனிச்சாரல், ஆடிக்காற்று இவைகள் முடிந்தபிறகும், துலாவருஷம், கார்த்திகைப்பனி இவைகள் வருவதற்கு முன்னதாகவும் இருக்கிறது. இந்த ஆவணி மாதமானது இவ்விடத்து சீதோஷ்ண ஸ்திதிக்கு ஓர் ஆனந்தமேயாம். இவ்விடத்தில் அரசன் முதல் ஏழைவரையிலும் எல்லோரும் அந்த நாட்களைச் சந்தோஷமாகக் கொண்டாடுகிறார்கள்.

அனந்த சயனத்தில் பகவான் ஸ்ரீ பத்மநாபர் கோவிலில் அந்த நாட்களில் புகுந்தோமானால், அவரும் ஓணம் கொண்டாடுகிறாரென்று தோன்றும். ஏனென்றால், மனிதன் பகவானுக்கும் தன்னைப்போல் உருவத்தை யளித்துத் தனக்கு வரும் விருப்பங்களையும் அவரிடத்தில் ஆரோபிக்கிறானன்றோ? அதுபோல் இவனது ஸந்தோஷங்களால் அவரையும் கொண்டாடவைக்கிறான். அந்த நாட்களில் மகாராஜாவானவர் கோவிலுக்கு தரிசனத்துக்கு வரும்பொழுது ஆட்களை உள்ளே தரிசனத்திற்கு விடமாட்டார்கள். அதற்குப் பிறகு கூட்டத்திற்குப் பயந்தவனுக்கு அவ்விடத்திற்குப் போகவுமுடியாது. ஒற்றைக்கல் மண்டபத்திலிருந்து பத்மநாபனைப் பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும். மஞ்சள் வேஷ்டியும் தரித்து ஓணவில்லும் வைத்து அலங்கரித்திருக்கும் பகவானை பார்க்க யார்தான் ஆவலற்றிருப்பார்கள் ?

அவ்விடத்திலிருந்து அரசனுடைய அரண்மனைக்கு வந்தோமானால் அவ்விடத்திலுள்ள விமரிசையையும் சொல்லமுடியாது. அரசரும் மஞ்சள் வஸ்திரம் தரித்திருப்பர். திருவோணத்தன்று அநேக உத்தியோகஸ்தர்கள் அரசருக்கு முகம் காண்பிக்க வருவார்கள். அப்போது அவர்களுக்கு அரசர் புதுவேஷ்டி—இது இவ்விடத்தில் ஓணக்கோடி என்று சொல்லப்படுகிறது—கொடுப்பதுண்டு. அன்றையதினம் மாலை மூன்றுமணிக்குமேல், அரண்மனையிலுள்ள சேவகர்களுக்கும் ஓணக்கொடியை அரசர் அளிப்பர். ஊரிலுள்ள அநேகம் குழந்தைகளுக்கும் ஓணக்கோடி கொடுத்துவந்தார். இப்பொழுது அந்த வழக்கத்தை அரசர் நிறுத்திவிட்டார். குழந்தைகளுக்கு விளையாட அரண்மனையில் ஒரு மாதத்திற்கு முன்னதாகவே ஊஞ்சல் போட்டிருப்பார்கள். அரண்மனையிலுள்ள சேவகர்களுக்கு விமரிசையான போஜனம் நாலு நாட்களிலும் கொடுப்பதுண்டு.

இந்நாட்டார் ஓணம் கொண்டாடுவதைப் புதிதாக அயல்தேசத்தார் யாராவது பார்த்தால் கோடி வேஷ்டி கட்டிக்கொண்டிருப்பதும் பந்து விளையாடுவதும் மாத்திரந்தான் தெரியும். ஆனால், இதில் சுகாதாரத்திற்காகவும், ஆனந்தத்திற்காகவும் அநேகஞ் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன, ஓணப்பண்டிகை வரும்போது எல்லா வீடுகளையும் சுத்திசெய்து வெள்ளை பூசுகிறார்கள். வீட்டிலுள்ளவர்களுக்கெல்லாம் புதிய வஸ்திரம் தயார்செய்து கொள்ளுகிறார்கள். தேகாப்பியாசத்திற்காக ஆண்குழந்தைகள் பந்து விளையாடவும், பெண்குழந்தைகள் ஊஞ்சல் விளையாடவும் போகிறார்கள். விமரிசையான உணவுகளைச் சாப்பிடுகிறார்கள். நல்ல நிலவிலிருந்து அநேகவிதமான சம்பாஷணைகளைச் செய்கிறார்கள். காலையும் மாலையும் அலங்காரம் பண்ணியிருக்கும் ஈசனைப்போய் தரிசிக்கிறார்கள், அவரைத் தியானம் பண்ணுகிறார்கள். இவைகளெல்லாம் அவர்களுடைய ஸ்தூல சூட்சமகாரண சரீரங்களுக்கு விகாசத்தைக்கொடுக்கின்றன.

காலப்பழக்கத்தால் எந்தச் சட்டமும் சரியான பரிபாலகரில்லாவிட்டால் கெட்டுப்போகுமல்லவா ? அதுபோல் இவ்விடத்திலும் ஜனங்கள் அந்தந்த காலத்தில் இதைச் சரியாகக் கொண்டாடாமல் விட்டுவிடுகிறார்கள். இவைகளெல்லாம் சரியாக நடத்திவந்தால் நலம்.

**எஸ், வெங்கடாசல அய்யர்.**

# THE VANJIPUSHA CHIEF.*

**By**

**Mr. S. Rangasami Aiyangar.**

## வாஞ்சிபூஷ வீரன்.

திருவாங்கூரிலிருக்கும் ஐந்து அல்லது ஆறு சிற்றரசர்களோ அல்லது தலைவர்களோ ஏதேனுமொருவழியில் ராஜவம்சத்துடன் சம்பந்தப்பட்டவர்களா யிருக்கிறார்கள். அவர்களுள் வாஞ்சிபூஷர்கள் ஒரு கூட்டத்தார். அவர்களுக்கு யுத்தத்தில் ப்ரியமும் ஆயுத தேர்ச்சியுமிருந்தபோதிலும் அவர்கள் க்ஷத்திரியர்களல்ல, ப்ராம்ணர்களேயாம். செங்கநூர் போடீஸ் (Chenganoor Pottis) என்ற ஒருவகை ப்ராம்ணக்கூட்டத்தவராம். இவர்கள் நம்பூரிகளுமல்ல, ஸாதாரண போட்டீஸுமல்ல, திருவெள்ள தேசீஸ் என்ற வகையாருமல்ல. செங்கனூர் கிராமம் போட்டீஸ்களாகிய இவர்கள் தனியாய் ஒருவகுப்பினர். பூர்வம் ஸ்ரீ பரசுராமர் செங்கனூரில் இக்கூட்டத்தாரை ஸ்தாபனஞ்செய்தாராம். இவர்கள் நம்பூரிப்ராமணர்கள் வீட்டில் கொள்ளுவதுமில்லையாம், கொடுப்பதுமில்லையாம் : அதாவது சம்பந்தஞ்செய்துகொள்வதில்லை, இந்த வகையாரின் ஸ்த்ரீகள் செங்கனூர் கிராம எல்லைக்கப்பாற் செல்லக்கூடாதென ஓர் சட்டம் அவர்களுக்குள் இருக்கிறதாம், எல்லா போட்டீஸ்களுக்கும் செங்கனூர் போட்டீஸ் தலைவர்கள். அறுபத்துநான்கு பேருக்கும் எஜமானன் வாஞ்சிபூஷவீரனேயாம்,

ஹிஸ் ஹைனஸ் மார்த்தாண்டவர்ம மஹாராஜா அவர்கள் எட்டு வெட்டில் பில்லாமார்கள், ஓகாகார்கள் முதலியவர்களின் கையில் நிரம்பத்துன்பமடைந்தபோது இந்த வாஞ்சிபூஷவீரன் மஹாராஜா அவர்களுக்குப் பேருதவி செய்து அவரையும், ராணியையும், ராஜ இளங்குமாரனையும் அவர்களிருந்த ஆபத்தினின்றும் தப்பிவித்தான்.

பில்லாமார்களின் உபத்திரவந்தாங்காமல் மஹாராஜா அவர்கள் (இளவரசராயிருக்கும்பொழுது) ப்ரதான நகரைவிட்டு மேவெளிக்கார அரண்மனையில் வந்து தங்கி சுகமாயிருந்து வந்தார். பெரிய

* From a number of 'Indian Ladies Magazine.'

ராணியாரும் இளங்குமாரனும் இவரைச்சேர வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் அட்டிங்காலுக்குப் போய்க்கொண்டிருக்கும் பொழுது ராமகாமதாதில் பிள்ளை என்பவன் சில கொலைபாதகர்களுடன் அவர்களைச் சந்தித்துவிட்டான். ஆனால் கிழமேனூர் கோயில் தம்பிரான் தன் உயிரையும் ஒரு பொருட்டாய் மதியாது அத்துஷ்டனுடன் சண்டைபோட்டு ராணியாரையும் அரசிளங்குமாரனையும் ஆபத்திலிருந்து தப்பிவித்தான். இவர்களும் மேலெவளிக்கார அரண்மனைபோய் மஹாராஜாவைக்கண்டு அங்கே பகைவருக்குத் தெரியாமல் சிலகாலம் சுகமாய் வசித்துவந்தார்கள்.

சீக்கிரத்தில், இவர்கள் இவ்விதம் வசித்துவருவதை யறிந்த சத்துருக்கள் இவர்களைக் கைதிசெய்ய முயன்றார்கள். இதற்காகச் சத்துருக்கள் வெளவக்காட்டு போட்டியையும், காயங்குளம் ராஜாவையும் நியமித்தார்கள். இதை உளவுதூதரால் அறிந்த மஹாராஜா அவர்கள் செங்கனூர் போய் வாஞ்சிபூஷபண்டார வீட்டிற் சேர உத்தேசித்துப் புறப்பட்டார். அக்காலத்திலோ அவ்வூருக்கு சரியான ரோட் கிடையாது. ராஜாவுக்கோ அந்த இடத்தைப்பற்றிய தகவலொன்று மதிகமாய்த் தெரியாது, என்செய்வார்! பாவம்!! இரவுமுழுவதும் நடந்தும் பாதிவழிகூடத் தொலைந்தவழியில்லை! பொழுது விடிந்தவுடன் வெளவக்கோட்டு போட்டியின் ஆள்கள் வந்து வழிமறித்துக்கொண்டார்கள், ராஜாவுடன் பரிவாரங்கள் கிடையாது. ஆதலால் அத்துஷ்டர்கள் இவர்களைத் துரத்தி யடித்துக் கைதுசெய்து தங்கள் தலைவனிடம் கொண்டுபோய்ச் சேர்க்க அழைத்துக்கொண்டுபோனார்கள்.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ஒரு வயோதிகன் வாஞ்சிபூஷத் தலைவனிடம் ஓடிச்சென்று சங்கதியைத் தெரிவித்தான். இதைக்கேட்ட வாஞ்சிபூஷ வீரன் கோபாவேசங்கொண்டு தன் கூட்டத்தாருடன் ஓட்டோடியும் வந்து போட்டிகளுடன் சண்டைபோட்டு அந்த வெளவக்காட்டு போட்டி வீரனையும் கைது செய்தான். அத்துஷ்டர்களிருந்த வீட்டைத் தூள்பொடியாக்கி அங்கேயே ஒரு நொடியில் ஒரு குளம் வெட்டச் செய்து அதில் ஸ்நானம்செய்து ராஜனும் அவனுடைய ராணியும் குமாரனும் முன் செல்லத் தான் தன் ஊர்வந்தடைந்தான். இவ்விடத்தில் ராஜ்வம்சத்

தவர் ஏழெட்டு மாஸகாலந் தங்கிப் பின்பு தங்கள் நகருக்குச் சென்றனராம்.

இந்தப் பேருதவிக்காக மஹாராஜா அவர்கள் தான் ஆளவந்தவுடன் வாஞ்சிபூஷவீரனுக்குவிசேஷமாய்ப்பரிசளித்து நன்றிபாராட்டினார். செங்கனாஞ்சேரி தாலூகாவிலுள்ள செருவள்ளி, சிராக்கடவு, பெருவந்தானம் முதலிய இடங்கள் வாஞ்சிபூஷத்தலைவனுக்கு இனாமாகவும் நிலவரியன்னியிலும் கொடுக்கப்பட்டன. மரியாதைக்கறிகுறியாக அவன் வெளியே போகும்போதெல்லாம் அவன் ஆட்களிலொருவன் ஓர் கத்தியை ஏந்திச் செல்ல அனுமதி கொடுக்கப்பட்டது; கத்தியும் அரசனால் பரிசளிக்கப்பட்டதாம். வாஞ்சிபூஷவீரன் வம்சத்தவர் ராஜாவின் வருஷ உத்ஸவங்கள் (Royal Anniversaries) கொண்டாட உரிமை பெற்றவர்களானார்கள். ஹிஸ் ஹைனஸ் மஹாராஜாவின் அரண்மனையில் நடக்கும் நாமகர்ணம், சொருணு, திருமடாம்பு, பல்லிகெட்டு முதலிய எல்லா சுபசோபனங்களுக்கும் வாஞ்சிபூஷவீரன் அவசியம் வரவேணுமென்று ஏற்பட்டது.

ஆகவே திருவாங்கூரில் அரசனுக்கு ஆபத்துக்காலத்தி லுதவி வந்த ஜனங்களிருந்தார்கள். இந்த வாஞ்சிபூஷத் தலைவனின் சந்ததியார் ஒருவர், சுமார் 27 வயதுள்ளவர், தற்காலத்திலும் செங்கனூரில் வசிக்கிறாராம்.

மன்னார்குடி,
15-8-15.

எஸ். ரெங்கசாமி அய்யங்கார்.

---

ஒரு ம்ருகத்தைக் கொல்பவன் அதன் உடம்பில் எத்தனை ரோமங்களிருக்கின்றனவோ, அத்தனை தரம் தான் பிறந்து பிறந்து இறக்கவேண்டும்.
—மனு, 5-வது அத்தியாயம், 38-வது ச்லோகம்.

* * * *

ஒரு ம்ருகத்தின் மாம்ஸத்தை சாப்பிட்டாலும் எல்லா ம்ருகமாம்சத்தையும் சாப்பிட்டவனாகிறான். அவன் மாம்ஸபோஜனத்தினின்றும் ஜாக்ரதையாய் விலகவேண்டும்—. மனு, 5-வது அத்தியாயம், 15-வது ச்லோகம்.



# SRI SADA SIVA BRAHMAM.

By
A Yogini.

## ஸ்ரீ ஸாதாசிவ ப்ரஹ்மம்.

(ஜூலை மீ' த் தொடர்ச்சி.)

நமது ஸதாசிவ ப்ரஹ்மம் மௌனியாகி குருவினிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு ஊர்ஊராய்ப் புறப்பட்டுவிட்டாரென்று சென்ற மீ' த்தில் சொன்னோம். ஸ்ரீ ஸதாசிவமோ ஒரு பால அவதூதயோகி. தமது இந்திரியங்களனைத்தையும் ஜெயித்திருந்தார். கவலை ஒன்றுமே கிடையாது. தமது இஷ்டப்படி ஸஞ்சாரம் செய்துகொண்டிருந்தார். தமது எண்ணங்களைப் பிறருக்குத் தெரியப்படுத்த இருந்தால் எழுதியாவது அல்லது ஜாடை செய்தாவது காண்பிப்பார். நமது ஸதாசிவம் ஸரியான மெய்ஞ்ஞானி. உலகம் கலங்கினாலும் தாம் நிலை கலங்காது பரம்பொருளை நாடியிருப்பர். இழிவான ஜனங்களைப்போல நிந்தனைசெய்து இம்சித்தாலும் விருப்பு வெறுப்பில்லாமல் நிற்பர். தமது பசிவேளையில் யாராகிலும் ஏதேனும் கொண்டுவந்து கொடுத்தால் உண்பர். மஹா அபூர்வமாக ஸித்திகள் பெற்றிருந்தார். ஆகாயத்திற் செல்லுவர். திரும்பி பூமிக்கு வருவர். பரகாய ப்ரவேசம் செல்வர். நினைத்தவைகளை தாமிருந்த இடத்திற்கு வருவிப்பர். இந்த ஸித்திகள் செய்ய ஸமர்த்தராயினும் எவற்றிலும் விருப்பமில்லாதவர், புண்ணியபாவமற்றவர், பொய்யும் மெய்யும் அற்றவர். பெருமை சிறுமை இல்லாதவர், பண்டிதர்களும் பாமரர்களும் இம்மஹானிடத்தில் பரமபக்தியும் மிக வணக்கமும் வைத்திருந்தனர். முக்கியமாய்ச் சிறுவர்கள், இப்பெரியவரிடம் அன்பும் பக்தியும் கொண்டிருந்தனர். சிறுவர் இந்த ஞானியை தங்களது தோழராக மதித்து விளையாடுவர்கள். அச்சிறுவர்கட்குத் தகுந்தபடி நடந்துகொள்வர். சில சிறுவர்கள் அன்பின் மிகுதியால் தங்கள் வீடுகளிலிருந்து நமது மஹானுக்கு சிறு உணவுகளைக் கொண்டுவந்து கொடுப்பர். தாம் அன்போடு அவைகளை ஏற்றுக்கொண்டு அவர்களின் மனதை ஸந்தோஷப்படுத்துவர். சிறுவர்கள், நமது மஹாத்மா ஸ்ரீ ஸதாசிவத்தை அன்பின் மிகுதியால் ‘அப்பா’ என்று அழைப்பது பெரிய வழக்கமாயிருந்தது.

ஒருநாள் ஒருசிறுவன் தன தாயால் மதுரை வ்ருஷபவாஹன உத்ஸவத்தைப்பற்றிச் சொல்லக்கேட்டான். அவன் மதுரை போய் உத்ஸவமூர்த்தியை தரிசனம் செய்ய ஆசைகொண்டான். தான் மதுரைபோய் தரிசிக்கமுடியாதென்று மனம் கலங்கினான், அந்த கலக்கத்தோடு நமது ஞானியிடம் வந்தனன். சிறுவன் மனதை அறிந்து அவனை வினவினர், அச்சிறுவன் மிகுந்த ஆசையோடு மனதிலிருந்ததை வெளியிட்டான். இப்பேச்சு நடந்ததற்கு அடுத்த நாள் மதுரை வ்ருஷபவாஹன உத்ஸவம். மறுநாள் அந்த உத்ஸவ தினத்தன்று சிறுவனை அழைத்து, நமது யோகி தமது தோள் மேல் ஏறிக்கச்சொல்லி சிறிதுநேரம் கண்களை மூடிக்கச்சொன்னார், பிறகு கண்களை திறந்து பார்க்க, மதுரை சொக்கநாதரை வ்ருஷபவாஹனரூடராய் திவ்ய அலங்காரத்துடன் தரிசனம் செய்தான். சிறுவன் மனம் பூரித்தவனாய் தன் சிநேகிதர்களுக்கெல்லாம் தெரிவிக்க, "சிறுவர்கள் எல்லோரும் ஓடிவந்து அப்பா! எங்களையும் மதுரைக்கு அழைத்துப்போங்கள். நாங்கள் சொக்கநாதரை தரிசிக்க வேண்டுமென, அப்படியே சிறுவர்களை தரிசிக்கச்செய்தார். இப்படியாக புண்யதினங்களில் ஸ்ரீகாசி, ஸ்ரீரங்கம், ஸ்ரீசிதம்பரம் ஸ்ரீதிருவயார் முதலிய க்ஷேத்ரமூர்த்திகளை தாமும் தரிசனம் செய்து தம்மோடிருக்கிற சிறுவர்களுக்கும் தரிசனம் செய்துவைப்பர். இதுவே யோகிகளது ஆச்சர்யமான செய்கை. ஜனங்கள் ஸதாகாலம் நமது யோகியைப்பற்றி ஸத்காலக்ஷேபம் செய்துகொண்டிருப்பார்கள். நமது மஹாத்மா தேகப்பற்றுகளைத்தும் ஒழித்து, கோயம்பத்தூர் ஜில்லாவிலுள்ள காவேரி அமராவதி என்று சொல்லப்படுகிற இரண்டு நதிகளின் அழகு பொருந்திய கரைகளில் மௌனியாய் ஸஞ்சரித்துக்கொண்டிருந்தார். அநேக தடவைகளில் தாம் போகிற இடம் இன்னதென்று தெரியாமலே செல்வார். இப்படிச் செல்லும்பொழுது ஒரு தடையையும் பொருட்படுத்தமாட்டார். வெகுநாள் நிஷ்டையிலிருப்பார், கண்விழிக்கமாட்டார். இவருக்கு ஈச்வரச்ருஷ்டியிலுள்ள எவ்வித ஜந்துவாலும் யாதொரு கெடுதியும் நேரிடுகிறதில்லை. கரூருக்கும் ஈரோடுக்கும் மத்தியிலுள்ள கொடுமுடி என்றகிராமத்துக்கருகில் காவேரிமணலில் நமதுமஹாத்மா நிஷ்டையிலிருந்தார். ஒருவரும் எதிர்பாராதபடி ஆற்றில்பெருவெள்ளம் வந்தது. நமது



யோகியை ஒருபுறமாக இழுத்துத்தள்ளி மணல்களைக்கொண்டு மூடிவிட்டது. கரையிலிருந்த ஜனங்கள் நமது யோகிக்கு எந்தவிதத்திலும் உதவிசெய்யச் சக்தியற்றவர்களாய் பரிதபித்து வீடுசென்றனர். சில மாதங்கள் கழிந்தபின், ஆற்றில் நீர் வற்றிவிட்டது, இந்த கிராமத்தார்கள் நாணல் பயிரிடுவதன் நிமித்தம் மணல்களை வெட்டிக்கொண்டிருந்தார்கள். ஒரு இடத்தில் வெட்டும்போது ஒருவன் தன் மண்வெட்டியில் ரத்தம் கண்டான். உடன் அவன் எஜமானனுக்குத் தெரிவிக்க, எல்லோரும் சேர்ந்து மிகவும் பயத்துடனும் வணக்கத்துடனும் மணல்களை பறித்துப்பார்த்தார்கள். நமது யோகியெனத் தெரிந்து கொண்டு, ஜனங்கள் கும்பல் கும்பலாய் பார்க்கச் சென்றனர். இவர்கள் பண்ணும் இரைச்சலால் நிஷ்டை கலைந்து யோகி எழுந்து புறபட்டுவிட்டார்.

மற்றொரு ஸமயம் ஒரு இடத்தில் நெல்லைக் குவித்து குறிகள் போட்டிருந்தன. காவற்காரர்கள் காத்துவந்தனர். நமது மஹாத்மா இரவில் அவ்வழியே அவஸரமாய்ச் சென்றுகொண்டிருந்தார். நெற்குவியல்கள் தடைப்பட்டு அதன்மேல் சாய்ந்துவிட்டார். சாய்ந்த சப்தம் கேட்டவுடன் காவற்காரர்கள் தங்கள் தடியால் அடிக்க கைகளை ஓங்க, ஓங்கின கைகள் அப்படியே நின்றுவிட்டன. பொழுது விடிந்தவுடன் எஜமானன், ஞானி நெற்குவியலின் மேல் படுத்திருப்பதையும் காவலாளிகள் ஓங்கின தடியும் கைகளுமாக நிற்பதையும் பார்த்து மன்னிக்கும்படி அவரை வேண்டினான். யோகி நிஷ்டைதெளிந்து போக ஆரம்பிக்கவும் காவலாளர்களின் கைகள் தணியவும் இடமுண்டாயிற்று. இச்செய்திகளெல்லாம் இவர் குருவாகிய பரமசிவேந்திர ஸரஸ்வதிக்கு எட்டவே, தமக்கு உயர்ந்த அறிவு வரவில்லையே யென்று துக்கித்தனராம். ஸஹோதரிகளே! ஞானிகளின் மனதில் ஈச்வரன் விளையாடுவதைப் பார்த்தீர்களா? பரம ஸாதுக்களை நிந்திக்கவாவது கெடுக்கவாவது கனவில் எண்ணினாலும் தீங்கு உடன் ஸம்பவிக்கும்.

ஒரு ஸமயத்தில் நமது ஞானி மைஸூர் ராஜ்யத்தில் ராஜவீதி வழியாகப் போய்க்கொண்டிருந்தார். அங்கு ஒரு மஹம்மதிய ப்ரபு தடித்து மனைவியோடு உல்லாஸமாக வீற்றுக்கொண்டிருக்கையில் ஜன்னலின் வழியாய் அவரது மனைவி ஞானியாரின் அழகையும்

தேகத்தையும் பார்த்து வர்ணிக்கத் தொடங்கினாள். அம்மஹம்மதிய ப்ரபுவுக்கு கோபம் ஜெனித்தது. உடன் ஒரு வாளை யெடுத்து சரேலென வீதிக்குப்போய் ஞானியின் ஒரு கையை வெட்டிவிட்டார். கத்தியால் வெட்டுண்டதை யுணராமலே நமது மஹாத்மா சென்றுகொண்டிருந்தார். தேகத்தில் அபிமானம் இல்லாததால் வெட்டின உணர்ச்சி தோன்றவில்லை. அந்த மஹம்மதியரை திரும்பிப் பார்க்கவுமில்லை. ஆனால் மஹம்மதியர் பின் தொடர்ந்துபோனார். வெகுதூரம்போய் அம்மஹம்மதியர் தாம் செய்த பிழையை மன்னிக்கும்படி ஞானி காலில் விழுந்து வணங்க, அப்படியே மன்னித்துவிட்டனர். பிறகு ஆசீர்வாதமும் பெற்று தமது இருப்பிடம் வந்து சேர்ந்தார். காலக்ரமேண இந்த மஹம்மதியரும் ஞானியாகிவிட்டார். இது 'ஸதாசிவேந்திர ஸ்துதி' யென்னும் புஸ்தகத்தில் நன்றாக விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. நமது யோகி கோவில்களுக்குச் சென்று ஈச்வரனின் ஆயிர நாமங்களை ஒப்பிப்பது வழக்கமுண்டு. ஒவ்வொரு நாமத்துக்கு ஒரு பூமலர் ஈச்வரனின் சிரஸில் விழுந்தது.

1738ஸு நமது ஸதாசிவேந்திரர் புதுக்கோட்டைக்குச் சமீபத்திலுள்ள ஒரு அரண்யத்தில் ஸஞ்சரித்துக்கொண்டிருந்தார். அப்போது புதுக்கோட்டையை யாண்டுவந்த விஜயரகுநாதத் தொண்டமான் அந்த அரண்யத்தில் உலகக் கவலையின்றி நிஷ்டை செய்வதுண்டு. இந்தத் தொண்டமான் நமது ஞானியைத் தரிசிக்க நேர்ந்தது. தொண்டமானின் பக்திக்கும் வணக்கத்துக்கும் ச்லாகித்து ஆசீர்வாதம் செய்தார். அந்த அரசனுக்கு மணலில் எழுதிக் காண்பித்து உபதேசம் செய்தார். உபதேசத்தைப் பெற்றுக்கொண்டு ராஜ்யமடைந்து முன்னிலும் பதின்மடங்கு செவ்வனே ராஜ்யபாரம் நடத்திவந்தான். தொண்டமான் அரசனுக்கு கானகத்தில் எழுதிக் காட்டுவதற்கு உதவியாயிருந்த மணல் நாளைக்கும் புதுக்கோட்டை அரண்மனையில் தக்க பூஜையிலிருக்கிறது. இவ்வரசன் காலமுதல் நமது யோகியின் போதனையால் புதுக்கோட்டையில் தசரா பூஜையும் தக்ஷிணாமூர்த்தி வணக்கமும் நடந்தேறிவருகிறது. புதுக்கோட்டை அரசர்கள் மிகவும் ஈச்வரபக்தியுடையவர்களா யிருந்தார்



கள். நமது ஸ்வாமிகளை வணங்கியே இன்னும் அரசாட்சி செய்து வருகின்றனர்.

இக்காட்டில் பிறகு தங்காமல் ஸஞ்சாரியாய்ப் புறப்பட்டுவிட்டார். சிலர் இவர் ஐரோப்பா கண்டத்திலுள்ள துருக்கி யென்னும் தேசம் வரையிலும் சென்றதாகவும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஸஹோதரிகளே ! நமது பரமாத்மா ஸதாசிவேந்திரரின் சரித்திரத்தில் ஏதோ சிலதான் சொல்லப்பட்டன. இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. இங்கு எல்லாம் எழுத இடமும் கிடையாது. இந்த மஹத்தான புண்ணிய புருஷரை இன்னும் விரிவாக எழுத எமக்குத் தக்க அறிவும் போதிய சாமர்த்தியமும் கிடையாது. இந்த அபூர்வமான செயல்கள் ஒரு மனிதனால் செய்யப்பட்டிருக்குமோவென்று ஸந்தேகிப்பார்கள். தற்காலத்து விஜாதியர்களானவும், மதப்பற்றுமில்லாத சிலருக்கு எதுவும் ஸந்தேகம்தான். அணிமாதி ஸித்திகள் பெற்ற மஹான்களால் செய்யக்கூடியச் செயல்களே இவைகள். நமது ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மம் ஒரு ஸித்தபுருஷர். இவருக்கு ஆபரணங்கள் தெருப்புழுதியும் சாம்பரும்தான். இவர் ஒரு பெரிய உயர் பிறவி. பரமாத்மாவோடு யாருமறிய ரமித்தவர், ஒரு ஜ்யோதியாக விளங்கிவந்தவர்.

நமது பரமாத்மா தமது நிஷ்டையை நெடுநாள் கரூருக்குச் சமீபத்திலுள்ள நெரூரில் கழித்துவந்தார். திடீரென தாம் மிதுனமாஸம், ஜ்யேஷ்ட சுத்ததசமியன்று பரமாத்மாவோடு ஐக்கியப்படப்போவதாகவும், தமது ஸமாதியின் அருகில் ஒரு பாணலிங்கத்தை ப்ரதிஷ்டை செய்ய ஸ்ரீகாசியிலிருந்து ஒரு பிராமணர் கொண்டுவரப்போவதாகவும் தெரிவித்தார். நிஷ்டையிலிருந்த நமது யோகிகளும் அந்த குறிப்பிட்டதினத்தில் பரப்ரஹ்ம ஸாக்ஷாத்காரத்தையடைந்தனர். பிறகு நமது மஹானது விக்ரஹத்தை அவ்விடத்திலேயே அடக்கம்செய்து அதன் அருகில் ஸ்ரீகாசியிலிருந்து கொண்டுவரப்பட்ட பாணலிங்கத்தை ஸ்தாபித்துக் கோயிலும் கட்டினார்கள். நாளையும் இந்த கோயில் உத்ஸவம் நன்றாகக் கொண்டாடப்படுகிறது. இதே தினத்தில் நமது மஹாத்மா இன்னும் இரண்டு ஸ்தலங்களில் ஸமாதியடைந்ததாகச் சொல்லுகிறார்கள். இந்த நெரூர் ஸ்தலம் மிக

வும் விசேஷம். புதுக்கோட்டைத்தொண்டமானால் ப்ரதிவருஷ உத்ஸவச் செலவுகள் செலவழிக்கப்படுகின்றன.

தென்னிந்தியா வாசிகள் செய்திருந்த புண்யங்களின் பயனாக இம்மஹான் அவதரித்தார். ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதி ஸ்வாமி அவர்கள் இம்மஹானை ஒரு அருமையான அவதாரமெனச் சொல்லி வந்தார். ஸதாகாலம் நமது ஸ்வாமிக்கு ஸ்ரீ ஸதாசிவத்தின் தியானமே. சில வருஷங்களுக்கு முன் ஸ்ரீ ஸதாசிவத்தின் ஸமாதியை தரிசனம் செய்ய, ஸ்ரீ ஸ்வாமி தமது பரிவாரங்களுடன் நெரூருக்கு விஜயம் செய்திருந்தார். பக்தகோடிகள் பார்த்து ஆனந்தமடைய வந்திருந்தனர். ஸ்ரீஸ்வாமி, தம்மை மறந்து ஸ்ரீ ஸதாசிவ ஸமாதிக்குப் பூஜை செய்தார். ஸ்ரீ ஸதாசிவம் ப்ரஸன்னமாகி ஸ்ரீ ஸ்வாமியுடன் ஸம்பாஷித்தனர். ஸ்ரீ ஸ்வாமி ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மத்தின் பேரில் கொஞ்ச பக்தியுடையவரென்று சொல்ல முடியுமா?

நமது ஸ்ரீஸதாசிவப்ரஹ்மம் பல நூல்கள் செய்திருக்கின்றனர். முக்யமானவைகள்: ப்ரஹ்மஸூத்ரவ்ருத்தி, சிலாக்யஉபநிஷதங்களுக்கு தீபிகை, ஆத்மவித்யாவிலாஸம், ஸித்தாந்த கல்பவல்லி, அத்வைதரஸமஞ்சரி.

தற்காலம் ஸ்த்ரீகள் நமது ஹிந்து மதத்தில் அபிமானமில்லாதவர்களாகி வருகிறார்கள். பக்தர்களின் சரிதங்களை கட்டுக்கதையென்று பரிஹஸிக்கிறார்கள். இப்படி ஸ்த்ரீகள் சொல்லுவது கால தோஷமே தவிர வேறுஇல்லை. ஸதாகாலம் பக்தர்களின் சரிதங்களை படிப்பதும் கேட்பதுமாக விருநது ஒழுக்கமுள்ள ஸ்த்ரீகளின் குடும்பம் யாதொரு குறைவில்லாமல் வெகு சௌக்கியமாக விருக்கிறது. மதாபிமானமில்லாதிருக்கும் ஸ்த்ரீகளின் குடும்பம் சௌக்கியமின்றி கஷ்டப்படுகிறது. நாம் இதுபோன்ற குடும்பங்களை தினம் பார்க்கிறோம்.

ஸஹோதரிகள் இதுபோன்ற மஹாத்மாக்களின் திவ்ய சரிதங்களை படித்து ஈச்வரனின் அனுக்ரஹத்திற்குப் பாத்ரர்களாக வேண்டுமென்பது எமது கோரிக்கை.

ஒரு யோகினி.

---

# THE FEMALE EDUCATION. பெண் கல்வி.

## Contents for September, 1915. விஷயசூசிகைசெப்டம்பர்மீ-1915.


I. WAR ILLUSTRATIONS.

i. Sir John French.
ii. President Poincare.
iii. Mr. Millerand.
iv. General Joffre.
v. German Krupp factory.
vi. A Submarine.

II. ANTHEM ANTHOLOGY.

Harischandra Kummi.

III. PROGRESS OF THE WORLD.

Prof Karve—Pudukota H. H. The Raja's Marriage—Ayurveda Dharma Vaidyasala.

IV. SPECIAL ARTICLES.

i. Heroic Women of the Past —By S. Bagirathi Ammal.
ii. Marriage Customs in China —by Sri R. Jayalakshmi.
iii. Geological Strata—by Mr. Sivadyananandan.
iv. Prevention of Fevers —by Pandit. M. Duraisami Aiyengar.
v. Bhishma—by Mr. K. P. Seshadri Aiyengar.

V. INTERESTING ITEMS.

i. Concerning Children.
ii Domestic hints and suggestions.
iii. Education.
iv. Woman's World.
v. Views and Reviews.

I. யுத்தப் படங்கள்.

i. ஸார்ஜான் ப்ரஞ்ச்.
ii. ப்ரிஸிடென்டு பாயின்கரே.
iii. மிஸ்டர் மிலிரண்டு.
iv. ஜெனரல் ஜாப்ரே.
v. ஜெர்மன் க்ரப் யுத்த ஆயுதசாலை
vi. ஒரு ஜலக்கீழ்க் கப்பல்.

II. கீதத்திரட்டு.

ஹரிச்சந்திரக் கும்மி.

III. ப்ரபஞ்சப்போக்கு.

ப்ரொபஸர் கார்வே—புதுக்கோட்டை மஹாராஜாவின் விவாஹம்—ஆயுர்வேத தர்ம வைத்தியசாலை.

IV. விசேஷ வ்யாஸங்கள்.

i. முற்கால ஸ்த்ரீகளின் வீரத்தனம்—ஸ்ரீமதி பாகீரதி அம்மாள்.
ii. சீனாவில் விவாஹ வழக்கங்கள் ஸ்ரீமதி—ஆர். ஜயலக்ஷ்மி.
iii பூதலப்படை யமைப்பு —ஸ்ரீமான் சிவத்யானாநந்தன்.
iv. ஜூரம் வராதபடி காக்கும் முறைகள் — பண்டிட் துரைசாமி அய்யங்கார்
v. பீஷ்மர்—ஸ்ரீமான் கே. பி. சேஷாத்திரி அய்யங்கார்.

V. விசேஷக் குறிப்புகள்.

i. குழந்தைகள் விஷயம்.
ii. க்ரகத்தியக் குறிப்புகள்.
iii. வித்யா விஷயம்.
iv. ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.
v. அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

# வெளியாய்விட்டது!

## ஸரஸ்வதி ஸ்தோத்ரமஞ்சரி.

இதில் கம்பர் சரஸ்வதி அந்தாதி, ஸகலகலாவல்லி மாலை, மாம்பழக்கவி பஞ்சரத்னம் புலவர்களியற்றியுள்ள தனியன்க ளிருக்கின்றன. பாடசாலைகளில் தினமொரு செய்யுளாக வருஷ முழுவதற்கும் இருக்கும்படி தொக்கப் பட்டுள்ளது. குறிப்புரை சேர்க்கப்பட்டுள்ளது. சில கீதங் களுமுண்டு. விலை அணு 4.

கொஞ்சக் காப்பிகள்தான் அச்சிட்டோம்.

மானேஜர்,
'பெண்கல்வி'
சென்னை, ஈ.



பிரின்ஸஸ் மேரி.

War Illustrations. The 'Female Education,' September, 1915.
யுத்தப் படங்கள். 'பெண்கல்வி,' செப்டம்பர் 1915.



ஸர் ஜான் ப்ரெஞ்ச். ப்ரிடிஷ் தரைப்படை ஸேனாதிபதி.



மிஸ்டர் பாயின்கரே. ப்ரெஞ்ச் ப்ரஸிடெண்டு.

**From the 'Andra Patrica,' Madras.**



மிஸ்டர் மிலிரன்டு. ப்ரஞ்ச் யுத்தமந்திரி.



ஜெனரல் ஜாப்ரே. ப்ரஞ்ச் தரைப்படை ஸேனதிபதி.

From the 'Andra Patrica,' Madras.





இந்தியா கூர்க்கவீரர்களின் கர்க்கி என்னும் விஷக்கத்தி



மிஸ்டர் விவானி. ப்ரஞ்ச் வரவு செலவு மந்திரி.

From the 'Andra Patrica,' Madras.

War Illustrations. The 'Female Education,' September, 1915.

யுத்தப் படங்கள். 'பெண்கல்வி,' செப்டம்பர்மீ 1915.



நமது வேல்ஸ் இளவரசர்.

From the 'Andra Patrica,' Madras.

239

# ANTHEM ANTHOLOGY

## கீதத்திரட்டு.

### அரிச்சந்திரக் கும்மி.

ஆகஸ்டுமீ தொடர்ச்சி.

சரணம்சரணமையா ஏகாசிநாதா
    கருணைசெய்து ஆளுமையா. (1)
மைந்தனேநீ மனந்தளர
    வேண்டாமப்பா சொன்னேன்
நிந்தைகளுனக்கு இல்லை
    நீ என் அன்பனுகும். (2)
முனிவனலே பட்டதுன்பம்
    போருமப்பா இப்போ
உன்மைந்தனை எழுந்துவர
    சொன்னேனப்பா நானும் (3)
மனைவியோடும் மைந்தனோடும்
    மாநகரிற் சென்று.
உந்தனுடைய ராஜ்யத்தை (4)
    உகந்துமேநீ செய்வாய்.
வசிஷ்டரோடு கௌசிகரும்
    வந்தவ்விடம் நிற்க
அந்தரத்தில் தேவர்களும் (5)
    மலர்களும் வருஷிக்க.
கௌசிகனும் பந்தயத்தை
    தோர்த்தேனென் றுரைக்க
வசிஷ்டருமே பந்தயத்தை (6)
    கெலித்துமவர் நிற்க.
இந்திரன் எமன் அக்னி
    அஷ்டதிக்கு பாலர்
வசிஷ்டரோடு முனிவர்களும்
    வந்தவ்விடம் நிற்க (7)
எல்லோருமாக சேர்ந்து
    அயோத்திபட்டணம் வந்து
அரிச்சந்திர மஹாராஜனுக்கு
    பட்டாபிஷேகம் செய்தார். சுபம்.

முற்றிற்று.

---

# PROGRESS OF THE WORLD

# ப்ரபஞ்சப்போக்கு.

Prof. Karve.

ப்ரொபஸர் கார்வே:—இவ்வர்ஷம் பம்பாயில் இந்தியன் நாஷனல் காங்கரஸோடு கூடப்போகிற இந்தியன் ஆசார சீர்திருத்த கான்பரன்ஸுக்கு, ப்ரொபஸர் கார்வே அக்ராஸனாதிபதியாக தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இவர் ஆசாரசீர்திருத்தத்தில் மிகவும் உருக்கம் கொண்டு ச்ரமம் பாராது உழைத்து வருகிறவர். ஸ்த்ரீகளின் படிப்புக்கும் அவர்கள் அபிவ்ருத்திக்கும் இவர் கொஞ்சமாக உழைக்கவில்லை. தாம் பத்னி ஸஹிதமாக ஆயுளையே ஸ்த்ரீகளின் அபிவ்ருத்திக்கு அர்ப்பணம் செய்திருக்கிறவர். மதாபிமானம் ஜாஸ்தியுள்ளவர். மதத்தை விலக்கிவிட்டு ஆசார சீர்திருத்தம் வ்ருத்தியடையாது என்ற பூர்ண நம்பிக்கையுள்ளவர். புனாவுக்குச் சமீபமாக ஹிங்கின்பத்ரக் என்னுமிடத்தில் ஒரு விதவாச்ரமம் ஏற்படுத்தியிருக்கிறார். இந்த ஆச்ரமத்தில் ஸுமார் 250 ஸ்த்ரீகளும் பெண்களும் தங்கி வாசித்து வருகிறார்கள். ப்ரொபஸர் கார்வேயுக்கும் மிஸஸ் கார்வேயுக்கும் துணையாக சில ஸ்த்ரீ புருஷர்கள் உண்மையாகவே உழைத்துவருகிறார்கள். ப்ரொபஸர் கார்வே அவர்களைப்போல் உண்மையான ஆசார சீர்திருத்தக்காரர்கள் கொஞ்சபேராவது இருந்தாலும் ஆசார சீர்திருத்தம் அபிவ்ருத்தியடையும். தற்காலம் கூச்சல் மட்டும் போடுகிற ஆசாரசீர்திருத்தக்காரர்கள் தேவையில்லை. உண்மையாக இந்திய ஜனஸமூகம் வ்ருத்தியடைய வேண்டுமென்ற எண்ணத்தோடு உழைக்கிற ஆசாரசீர்திருத்தக் காரர்கள் தேவை. ப்ரொபஸர் கார்வே பணக்காரரல்ல. ஆனால் தெய்வீகசக்தியிலும் பக்தியிலும் தனவந்தர். இவரைப்போல் தாய்பூமிக்கு வாழ்க்கையை ஸந்தோஷமாக அர்ப்பணம் செய்தவரை காண்பதரிது. மேனாட்டு நாகரீகத்தின் பயன் வீண்டம்பம். இதை முற்றிலும் வெறுத்தவர். தாம் ஏற்படுத்தி நடத்திவருகிற விதவாச்ரமத்தில் ஸ்த்ரீகளுக்கு மதபோதனையே ப்ரதானமாகக் கற்றுக்கொடுக்கப்படுகிறதாம். ஹிந்துக்களின் பூர்வீக வாழ்க்கையை அதாவது டம்பமில்லாத வாழ்க்கையை ஸ்த்ரீகள் கைக்கொண்டிருக்கிறது மிகவும் புகழத்தக்கது.



Pudukota H. H. The Raja's Marriage.

புதுக்கோட்டை ராஜாவின் விவாஹம்:—புதுக்கோட்டை என்பது ஒரு சிறு ஸமஸ்தானம். இது திருச்சினாப்பள்ளிக்கு ஸமீபமாகவிருக்கிறது. இதை ஆண்டுவரும் ராஜா ஒரு ஹிந்து. வெகு வர்ஷங்களாக தமது தேகஸௌக்யத்தின்பொருட்டு இங்கலாந்தில் வசித்து வருகிறார். இவர் சென்ற மீ ஆஸ்ட்ரேலியாவிலுள்ள ஸிட்னி என்னும் பட்டணத்தில் அவ்வூர் ஸ்த்ரீ ஒருத்தியை விவாஹம் செய்து கொண்டார். இச்சமாசாரம் புதுக்கோட்டைக்கு எட்டினவுடன் ஸமஸ்தான வாசிகள் எப்படி உணர்ந்திருப்பார்களென்று நமக்குத் தெரியும். இவ்விவாஹத்தை உண்மையான ஹிந்து எவனும் ச்லாகிக்க மாட்டான். கேவலம் ஒரு ஸாதாரண ஹிந்து ஒரு ஐரோப்பிய ஸ்த்ரீயை விவாஹம் செய்துகொண்டிருந்தானேயானால் அவனைப் பற்றி நாம் அதிகமாக துக்கப்பட மாட்டோம். இதுபோன்ற செயல்கள் ஹிந்துதேசத்தின் கௌரவத்துக்கும் ஆசாரசீர்திருத்தத்துக்கும் எவ்வளவு தூரம் தாழ்மைப்படுத்துமோ நாமறியோம்.

Ayurveda Dharma Vaidyasala.

ஆயுர்வேத தர்மவைத்யசாலை:—இம்மாதம் 19-ந் தேதியன்று ஒரு ஆயுர்வேத தர்ம வைத்யசாலை திருப்பூரில் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் ஸ்தாபகர் திருப்பூர் ஸ்ரீமான் டாக்டர் பி. வரதராஜுலுநாயுடு அவர்கள். சென்னை சட்டஸபை கௌரவ மெம்பர், சேலம் மிஸ்டர் பி. வி. நரசிம்ம அய்யர் இந்த தர்மவைத்யசாலையை அன்று திறந்துவைத்தார்.

இந்த தர்மவைத்யசாலை, பிணியால் வருந்தும் ஏழை ஜனங்களுக்கு ஒரு ஆப்த நண்பனாகவிருக்குமென்பதில் ஸந்தேகமில்லை. ஏனென்றால், ஸ்ரீமான் டாக்டர் ஏழைகளுடைய க்ஷேமாபிவ்ருத்தியில் அக்கரை கொண்டவர். தர்மசிந்தையுள்ளவர். ஏழை ஜனங்களின் கஷ்டங்களை தனதாக பாவிக்கும் குணமுடையவர். ஜனங்களின் நன்மதிப்பை அடைந்திருக்கிறார். தேசஸேவையை ப்ரதானமாகக் கொண்டு நடந்து காட்டுபவர். இவர் ஸாத்வீக குணமுடையவர். இச்சிறந்த குணங்கள் ப்ரதி ஸ்த்ரீபுருஷர்களிடத்திலுமிருக்கவேண்டியது. நாம் ஒன்று மட்டும் சொல்லுவோம். ஏழைகளுடைய ஸுகதுக்கங்களை எவன் தனதாக பாவித்து நடந்து வருகிறானோ அவன் யோகதேவியோடு கூடின ஸர்வேச்வரனின் அனுக்ரஹத்திற்குப் பாத்ரனாவான். இது நிச்சயம். பிணியால் வருந்தும் ஏழை ஜனங்களுக்கு உழைக்க, ஸ்ரீமான் டாக்டர் அவர்களுக்கு ஜாஸ்தி தைர்யமும், உத்ஸாகமும் உண்டாகும்படி ப்ரார்த்திக்கிறோம்.

# HEROIC WOMEN OF THE PAST.

By

S. Bagirathi Ammal.

## முற்கால ஸ்த்ரீகளின் வீரத்தனம்.

இப்போது ஐரோப்பாவில் மஹாயுத்தம் நடக்கிறது. இந்த யுத்தத்தில் இந்திய வீரர்கள் ப்ரிட்டிஷ் வீரர்களுடன் கூட நின்று எதிரிகளோடு யுத்தம் புரிந்து வருகிறார்கள். கடுமையான சண்டை நடக்கும் இடங்களில் இந்தியா வீரர்கள் தங்கள் ராஜ விச்வாஸத்தையும் யுத்தத்தன்மை வாய்ந்த குணங்களையும் காட்டி வருகிறதை ப்ரிட்டிஷ் ராஜநீதி நிபுணர்களும், யுத்த நிபுணர்களும் இந்தியர்களை வெகுவாக ச்லாகித்துப் பேசுகிறார்கள். இந்தியர்களாகிய நமக்கு ராஜவிச்வாஸம் புதிதல்ல. தேசாபிமானமும் புதிதல்ல. யுத்தத் தன்மை வாய்ந்த பராக்ரம குணங்களும் புதிதல்ல.

முற்கால ஸ்த்ரீகளின் வீரத்தனத்தைப்பற்றியும் ராஜவிச்வாஸத்தைப்பற்றியும் சொல்வோம். அப்போது இந்தியர்களிடத்தில், ப்ரிட்டிஷார்கள் காண்கிற குணங்கள் புதிதல்லவென்று விளங்கும். தாய்மார்கள் அறிவும், தேசாபிமானமும், ராஜபக்தியும் பராக்ரமம் கொண்டவர்களாய் தம் மக்களை நல்வழியில் கவலையோடு பழக்கி வருவார்களாயின், அம்மக்கள் உலகத்தில் எந்நாளும் கீர்த்தியும் பெருமையும் பெற்று போற்றப்படுவார்கள். அப்பேர்ப்பட்ட தாய்மார்களுடைய தேசங்களே உலகத்தார் கண்முன் உயர்ந்து தோன்றுவன. முற்காலத்தில் நமது இந்திய தேசம், உலகத்தார் அதன் உயர்வைக் கண்டு மகிழும்படி அவ்வளவு சிறப்பாக இருந்தது.

நாம் பழைய சரிதங்களை ஆராய்வோமானால் வீரத்தாய்மார்களையும் வீரமக்களையும் நாம் மிகுதியாகக் காணலாம். நம் தென்மொழி சரித்ரங்களிலிருந்து நாம் படித்தும் கேட்டமட்டில் விவரிப்போம்.

தகடூர்யாத்ரை என்னும் நூலிலுள்ள பாட்டொன்றில் தாயானவள் "தன் மகன் யுத்தகளத்தில் செத்தால் அதுவே தர்மமும் கர்மமுமாகும்" என்று கூறியிருக்கிறாள். ஸாதாரண ஸ்த்ரீ இம்மாதிரியாகச் சொல்லுவாளா? தன் மகன் யுத்தகளத்தில் தேச க்ஷேமத்தின் பொருட்டு மடிதல் மேலான தேசாபிமானத்தின் பலனல்லவா? மற்றொரு பாட்டில் வயதுசென்ற ஒரு தாயார் தன் மகன் யுத்தகளத்தில் பலமிழந்து முதுகு காட்டி ஓடினான் என்று பலர் சொல்லக் கேட்டாள். அக்கிழவிக்கு வந்த கோபமும் தைர்யமும் சொல்ல முடியவில்லை. உடன் ஒரு வாளை எடுத்து வெளியில் வந்தாள். தன் மகனைப்பற்றி சேதி கொண்டு வந்தவர்களின் முன் நின்று "என் மகன் யுத்தகளத்தில் பலமிழந்து முதுகு காட்டி ஓடியிருந்தால் அவன் பாலுண்டு வளர்ந்த என் ஸ்தனங்களை அறுத்திடுவேன்" என்று கையில் வாளுடன் யுத்தகளத்துக்குச் சென்றாள். அங்கு செத்துக்கிடக்கும் பிணங்களை புரட்டித் தேடினாள். ஒரு இடத்தில் தன் மகன் மார்பில் அடிபட்டு உடல் இரு துண்டமாக வெட்டப்பட்டிருந்ததைக் கண்டாள். கிழவிக்கு சந்தோஷம் வந்தது. அவனைப் பெற்றபோது அடைந்த ஸந்தோஷத்தைக்காட்டிலும் ஜாஸ்தியாக ஸந்தோஷத்தை யடைந்தாள். இப்பேர்ப்பட்ட வீரத்தாய்மார்கள் உலகத்தில் அபூர்வம். ஆனால் இந்தியாவில் மட்டும் ஜாஸ்தி. ஏன்? அப்பேர்ப்பட்ட பராக்ரம பூமி, அதாவது வீரத் தாய்மார்கள் வசித்துவந்த பூமி.

அவைகளைக் காட்டிலும் மற்றொரு பாட்டில் மிகவும் உருக்கமாக விருக்கிறது. ஒக்கூர்மாசாத்தியார் என்னும் பெண் புலவர் ஒருவர் இருந்தனர். அப்புலவர் ஒரு வீரத்தாயை புகழ்ந்து கூறியிருக்கிறார். ஒரு பெண் முதல் நாள் சண்டையில் தன் தகப்பன் யானையால் செத்துவிட்டானென்பதையும், மறுநாள் தன் புருஷன் எதிரிகளைக் கொன்று தானும் மடிந்துபோனானென்பதையும் கேட்டாள். இந்த ஸமாசாரம் கேட்டது யார்? வீரப்பெண்ணல்லவா? சிறிதும் மனங்கலங்காமல் அவ்வீரப்பெண் தன் ஒரே சிறுவனுக்கு யுத்த ஆடையை அணிந்தாள். அவன் குடுமியை எண்ணெயிட்டுச் சீவி முடித்தாள், கையில் வாளைக் கொடுத்து போர்க்களம் சென்று யுத்தம் செய்துவிட்டுவாவென்று அனுப்பினாள். ஸஹோதரிகளே! பாருங்கள்! ஊகியுங்கள்! இப்பேர்ப்பட்ட வீரத்தாய்மார்களைப்போல் எந்த தேசத்து சரித்திரத்திலாவது படித்திருக்கிறீர்களா? அல்லது கேட்டுத்தானிருக்கிறீர்களா?

இனி, புறநானூற்றில் ஒருவன் காவற்பெண்டு என்னும் பெண்புலவரை நோக்கி "நும்மகன் யாண்டுளான்" என்று கேட்டான். அவர் "உன்மகன் எங்கு என்று கேட்கிறாய். என்மகன் தற்போது எங்கி

ருக்கிறேனோ நானறியேன். புலித் தங்கிப்போன மலைக்குகைபோல அவனைப் பெற்ற வயிறோ இது! அவன் போர்க்களத்தில் தோன்றுவான். அங்கு காண்பாய்" என்றார். ஸஹோதரிகளே! தமது மகனைப் போர்க்களத்துக்கு அனுப்பிவிட்டு அவனைப்பெற்ற தமது வயிற்றை எதற்கு ஒப்பிடுகிறாள். பாருங்கள்! இவ்வீரத் தாயின் மனம் எவ்வளவு பெருமைவாய்ந்தது. ஆஹா! என்ன ஆச்சர்யம்!

இனி மற்றொரு தாய், தன் மகன் யுத்தகளத்தில் மானத்தாழ்வான ஈனச்செயல்களைச் செய்ததாகக் கேட்டு, மிகவும் சினந்து வெறுத்தனராம். ஒருவன் தன் தாயிட்ட வேலையைச் செய்ய சக்தியில்லாது போரில் முதுகு காட்டினது கண்டு "சத்ருக்களோடு போர்புரிந்து அக்களத்திலேயே சாகாமல் முதுகுகாட்டி ஓடிவந்தாய்' குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பே! எமது முன்னோர்கள் செய்யாத பெரும்பழியை விளைத்த மூடனாகிய உன்னைப்பெற்ற வயிற்றை அறுத்திடுவேன்" என்று கூறியிருக்கிறதை கவனியுங்கள். இன்னும் புறத்திரட்டில் வீரத்தாய்களைப்பற்றியும் வீரமக்களைப்பற்றியும் அநேகம் சொல்லியிருக்கின்றன. தமிழ் நாட்டு வீரத்தாய்களின் செயல்கள் பெருமை பெற்று விளங்கினதால் பலநூல்கள் அவர்களைப்பற்றி கூறியிருக்கின்றன.

சங்கநாளில் தமிழ் அரசர் வட அரசருடன் போர்புரிந்த போதெல்லாம் வெற்றியேயடைந்தார்கள். இவ்வெற்றிகளுக்கெல்லாம் காரணம் தமிழ்த்தாய்மார்களே. இப்படியாகவே வடஇந்தியாவிலும் வீரத்தாய்மார்கள் கணக்கற்றவர்களாக விருந்தார்கள். இப்போது நடக்கும் யுத்தத்தில் நமது இந்திய வீரர்கள் காட்டும் பராக்ரமமும் ராஜவிச்வாஸமும் புதிதல்லவென்று தெரியவில்லையா? இன்னும் எவ்வளவு மாதங்கள் யுத்தம் நீடித்தாலும் ப்ரிட்டிஷ் வீரர்களுடன் மனம் தளராமல் நின்று, எதிரிகளோடு போர் புரிந்து ஜயத்துடன் தாய் தேசம் திரும்புவார்களென்று போக தேவியுடன் கூடின ஸர்வேச்வரனை ப்ரார்த்திக்கிறோம்.

பாகீரதி.

---

உண்மையில் மனிதன் மாம்ஸபக்ஷணம் செய்யும் ம்ருகமாக உண்டாக்கப்படவில்லை.—ப்ரொபஸர் ஜான் ரே.



# MARRIAGE CUSTOMS IN CHINA.

By

**Sri R. Jayalakshmi.**

## சீனாதேசத்தில் விவாஹ வழக்கங்கள்.

ஒவ்வொரு தேசத்திலும் விவாஹமுறை பல மாதிரியாக யிருக்கிறது. சீனாவில் நடக்கும் விவாஹமுறையைப் பார்ப்போம்.

வீட்டிற் பிறந்தபெண் அயலாருக்கு உபயோகப்படுவது ஸஹஜம். சீனாவில் பல ஜாதிகளும் பல வகுப்புகளுமிருக்கின்றன. அந்தந்த ஜாதி அந்தந்த வகுப்பினர்களுக்குள் விவாஹம் நடக்கும். சீனர்கள் ஜோதிஷத்தில் வெகு நம்பிக்கையுள்ளவர்கள். பெண் மாப்பிள்ளையாகிய இருவரின் ஜாதகங்களை ஜோதிஷனிடம் கொடுத்து விவாஹப்பொருத்தங்களைப் பார்ப்பார்கள். பெண்மாப்பிள்ளையின் சிறுவயதிலேயே நிச்சயதார்த்த ஏற்பாடுகள் செய்துவிடுவார்கள். பெண்ணின் ஸம்மதமாவது பிள்ளையின் ஸம்மதமாவது விவாஹ விஷயத்தில் பெற்றோர்கள் பெறுகிறதுமில்லை, பெறவிரும்புகிறதுமில்லை. பெண் மாப்பிள்ளைக்கு விவாஹநிச்சயதார்த்தம் செய்த பிறகு, இருவர்களையும் ஒரே வயிற்றுக்குழந்தைகளாக வளர்த்து வருவார்கள். ஆனால், தக்க வயது வந்தபிறகுதான் விவாஹம் செய்விக்கப்படும். கல்யாணம் செய்யப்படும் பெண்களுக்கு வயது சுமார் இருபது இருக்கும்.

விவாஹமாதங்களில் விவாஹத்துக்கு ஒரு நல்ல தினம் குறிக்கப்படும். குறித்தநாளில் சிவப்புத்தட்டத்தில் மேளவாத்ய ஸஹிதமாக ஸகல சீர்களுடன் மாப்பிள்ளைவீட்டுக்கு ஊர்வலம் புறப்படுவார்கள். நன்றாய் மூடின சப்பரத்தில் கல்யாணப்பெண்ணை உட்காரவைத்துக்கொண்டு போவார்கள். நடுவழியில் எதிரில்வந்து பிள்ளைவீட்டுக்காரர்கள் நன்றாய்மூடினசப்பரத்தை திறக்க இடிப்பதுபோல பாவனைபண்ணுவார்கள். வாசல் காப்போனுக்குக் கொஞ்சம் பணம் கொடுக்க, கதவுதிறக்கும். பெண் வெளியே வரும்பொழுது கெட்டியான சிவப்பு முக்காடு போட்டிருப்பாள். பிள்ளைவீட்டுக்காரர்கள் வாடகைக்கு ஒரு சப்பரத்தை வாங்கிக்கொண்டு வந்திருப்பார்கள்.

அதில் கல்யாணப்பெண் உட்கார நாலுபேர் தூக்கிச் செல்வார்கள். அந்தச்சப்பரமும் நாலுபுறமும் மூடியிருக்கும்.

பெண்மாப்பிள்ளை வீடுசேர பெண்வீட்டாரும், பிள்ளை வீட்டாரும் சேர்ந்து, எரியும் நெருப்பின் மேல் வைத்திருக்கும் ஒரு தட்டில் பெண்ணைத்தூக்கி நிறுத்துவார்கள். சில மந்திரங்கள் ஜெபித்த பிறகு, பெண் மாப்பிள்ளையை நமஸ்கரிப்பாள். பெண்ணும் மாப்பிள்ளையும் மதப்புஸ்தகங்களுக்கு நமஸ்காரம் செய்வார்கள். பிறகு பெற்றோர், உபாத்யாயர் முதலிய பெரியோர்களுக்கு க்ரமமாக நமஸ்கரித்து விட்டு, தாழ்வாரத்தில் போய் உட்காருவார்கள். இந்த ஸமயம் பெண் தன்முக்காட்டை நீக்குவாள். பெண் தர்சனம் இப்பொழுது தான் மாப்பிள்ளைக்குக் கிடைக்கும். இருவரும் திராக்ஷ ரஸம் குடிப்பார்கள். இப்படியாக மூன்று நாள் விவாஹச்சடங்குகள் நடக்கும். நான்காம் நாள் பொதுஜனங்களுக்குப் பெரிய விருந்து ஒன்று நடக்கும். வெகு குதூஹலமாக இருப்பார்கள்.

சீனர்கள் விவாஹத்தை மிகவும் பரிசுத்தத்தன்மையென பாவிக்கிறார்கள். சீனர்கள் மிகவும் தெய்வபக்தியுள்ளவர்கள். தங்கள் வேதங்களில் சொல்லியிருக்கிறபடியே நடப்பார்கள். ஸ்த்ரீகளை க்ருஹலக்ஷ்மிகளென்றே பாவித்து நடத்துவது வழக்கம். ஸ்த்ரீகளும் புருஷனை தெய்வமெனக் கருதுவார்கள். புருஷனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து புருஷனை திருப்திசெய்யக் காத்திருப்பார்கள். சீனாவில் வேதமோதி, விவாஹச் சடங்குகள் முதலியன நடத்திவைக்கும் ஜாதியார் ஜீவஹிம்ஸை செய்யவே மாட்டார்கள். குடும்ப வாழ்க்கையை ஸௌகமாக நடத்தி மோக்ஷத்தையே நாடியிருப்பார்கள். ஸத்ரீகள் வெகு சிக்கனமுள்ளவர்கள். ஏதேனும் வீடுகளில் சிறு கைத்தொழில்களைச் செய்து புருஷன் வஹிக்கும் குடும்ப பாரத்தை லகுப்படுத்துவார்கள். சில ஜாதிகளில் புருஷன் இறந்துவிட்டால் மறுவிவாஹம் செய்துகொள்ள மாட்டார்கள். மறுவிவாஹம செய்துகொள்ளுகிறது தோஷமில்லை யெனக் கருதுகிறார்கள்.

ஆர். ஜயலக்ஷ்மி.

---

இறந்தவர்களைப்பற்றி உதாசீனமாகப் பேசுவதும் அவமதிப்பதும் கூடாதகார்யம். இது பாபகரமான விஷயம்.—ஆர்சீலோகஸ்.

# GEOLOGICAL STRATA.

By

**Mr. Sivadyananandan.**

## பூதலப்படை யமைப்பு.

(ஆகஸ்டுமீ' த் தொடர்ச்சி.)

I. தூவாள்ப் பாறைகள்:—இவை தண்ணீருக்குள் ஏற்பட்டவையும், நீர் அடித்துவந்த மணலும், எரிமலை யெறிந்த புழுதிகளும், பவளம் முதலிய பூச்சிகளாலானவையுமாம். இவை 5 வகைப்படும்.

(*a*) நீரோட்டத்தாலான கூழாங்கல், பாற்கல், மணல், மணற் பாறை, செம்பூரான் கல், கட்டிப்பட்ட பாற்கல், கற்றுண்டுகள் முதலியன.

(*b*) களிமண், மணற்களி, வண்டல், கல் நிறைந்த பாறைத் தூள், கற்பலகை முதலியன.

(*c*) எரிமலைகளால் வெளியே தள்ளப்பட்ட சுக்கான், அயம், சக்கிமுக்கிக்கல், சம்பந்தமானவை.

(*d*) பவளம் கடற்பூச்சி முதலியவற்றால் ஏற்படுத்தப்படும் சுண்ணாம்புக்கல்லும், கிளிஞ்சிலும், வெங்காயத் தோல்போலுரியும் சுண்ணாம்பு முட்டைக்கற்களும்.

(*e*) மரஞ்செடிகள் அழுகிப் புதைந்தானவை. இவற்றில் 4 வகையுண்டு. மண்பாசி, மரக்கரி, நிலக்கரி, ஈர நிலத்திலேற்படும் இரும்புப்பளிங்கு என்பனவாம்.

ஒரு கிண்ணம் ஜலத்தில் கலங்கின தண்ணீரை யூற்றினால் அழுக்கு அடியில் படியப்பார்க்கலாம். அப்படிப் படிவதில் கனத்த பொருள் அடிக்கிண்ணத்திலும் வரவர லேசான பொருள்கள் மேலுமாகப் படிகின்றன. அம்மாதிரியாகவே ஆறுகளால் அடித்துக் கொண்டுவரப்படும் கல்லும், மணலும், மண்ணும், சமுத்திரத்திலும், ஏரிகளிலும் படிகின்றன. அவற்றுள் கனத்த கற்கள் ஆற்றின் முகத்துவாரத்திலும்; மணல் கொஞ்ச தூரத்திலும், மண் ஆழமான நீரில் அலைந்துகொண்டு மிருக்கின்றன. இப்படைகள் ஒரு

முறை படிந்ததன்மேல் மற்றொரு முறை படிந்தபோது வித்தியாச படுத்திக் காட்டும். கீழ் ஒரு பாறை கட்டிப்பட்ட பிறகு, மற்றொரு பாறை சேர்வதற்குத்தாமதமானால் அந்தபேதமும் தெரியும்.

**II.** ஆக்கிநேய (அக்கினி யாலான) பாறைகள்:—உருகிய கற்குழம்பு ஆறி உண்டான பாறைகளாம். இவை மூன்று வகை.

(*a*) பெரும்பாறைகள் அதிக ஆழத்தில் கிடந்து காலாந்தரத்தினாலாறினவை.

(*b*) அதிக ஆழத்திலில்லாமல் கொஞ்ச ஆழத்தில் நின்று விரைவில் ஆறினவை.

(*c*) அக்கினி பர்வதத்தாலான பாறைகள். மூன்றாவதாகச் சொன்ன பாறைகளைத் தவிர மற்றவை இரண்டும் கலந்துகிடக்கும்.

**III. சிதைந்த பாறைகள்:**—மேற்சொன்ன தூவாளிப் பாறையும் ஆக்கிநேய பாறையும் ஒன்றோடொன்று கலந்து உண்டானவை. இவை புதிது புதிதான தாதுக்கள் ஏற்படுவதற்குக் காரணமாகின்றன.

இம்மூன்று பிரிவுகளையும் உணர்ந்தபின்னர் படையமைப்புகளின் பிரகரணங்களைக் கவனிப்போம். சில நெடுக்காய்ப்போனவை திடீரென்று குறுக்காக விழுந்து கிடப்பதைக் கவனிக்கலாம். ஒரு நிலத்தை வெட்டிச் சோதிக்கும்போது இரண்டு படைகளுக்கிடையில் கடற்பாசி, கடல் நத்தையோடு முதலிய பல வஸ்துக்கள் காணப்பட்டால் பல பெரிய பூசலனங்களேற்பட்டிருக்கின்றனவென்று சொல்லலாம். நீலகிரி ஜில்லா ஒருகாலத்துக் கடலிலாழ்ந்திருந்து வெளிவந்ததாக அந்த ஜில்லா சரித்திரம் (Nilgiri Dist. Gazetteer) கூறும். பலவித நினைக்கமுடியாத மாதிரியெல்லாம் பாறைகள் நிலைமாறிக் கிடக்கக் காணலாம். ஆனால் அவை பூகம்பத்தினாலாவது, எரிமலையின் செய்கையினாலாவது ஏற்பட்டிருக்குமென்று இலகுவில் ஊகித்தறியலாம்.

சுருக்கிக் கூறின் ஒருகாலத்து அக்கினிகோளமாயிருந்த இவ்வுலகம் ஆறினபோது, மூலபாறைகள் ஏற்பட்டன. பின்னர் உபபாறைகள் வண்டல் படிவதனாலும், காற்று மழையில் மண் கரைவதனாலும் ஏற்பட்டன. அப்படி ஏற்படுவதில் கனத்த பாறைகள் அடியில் தங்க லேசான பாறைகள் அவற்றிற்கு மேலும், மண்ணும்



மணலும் அவற்றிற்கு மேலும் படியத்தொடங்கின. ஆக்கிநேய பாறைகள் எரிமலைகளின் செயலாக வந்தன. இப்பாறைகளின் பேதாபேதங்கள், பூகம்பம் முதலிய காரணங்களால் செந்தூக்காகவும் படுக்கையாகவும் மற்றும் பலவிதமாகவும் ஏற்பட நேர்ந்தன. பெருமலைகளை ஆறுகள் கரைத்ததனால்; பள்ளம் மேடாயும் மேடு பள்ளமாயும் ஆயிற்று சமுத்திர அடித்தலத்தில் பூமியின் அகட்டிலுள்ள தீ கொந்தளிப்பதனால் சில இடம் மேடுபட்டுயர வேறு சிலவிடம் தாழத் தொடங்கின. மற்றும் சில பாறைகள் பவளம்போன்ற பூச்சிகளாலாயின.

இனி பூதலப்படை யமைப்புக் காலங்களை பூமி சாஸ்திரிகள் பிரித்திருக்கும் மாதிரி கூறுவேன். இக்காலத்தை இரண்டு முறையாகப் பிரித்துக் காட்டுவார்கள். ஒன்று அவ்வக்காலத்திருந்த பிராணிவகையைக் கொண்டு காட்டுவது. மற்றொன்று பாறை வகைகளைக் கொண்டே காட்டுவதாம்.

முதல் வகையில் 4 பேதங்கள் உண்டு:—

1. Azoic பிராணிவர்க்கமே காணாதகாலம். கண்டாலும் அபூர்வமாயுள்ளது. செங்கற்பாறைகளிருந்தது. பெரிய பூகம்பங்களோடு கூடினது. கருங்கல், பளிங்கு முதலியவை நிறைந்தது.

2. Palacozoic புராதன பிராணிவர்க்ககாலம். இதற்குப் பின் பூகம்பம் நேர்ந்ததுண்டு. தூவாளிப்பாறைகள் முதன்முதல் ஏற்பட்டகாலம். சுக்கான்மணல் முதலியன தெரிந்தகாலம். சீனதேசத்திலுள்ள ஹோயாங்ஹோ நதிக்கரையில் இதனைத் தெளிவாய்க் காணலாம். இந்தக் காலத்து முதுகெலும்புப் பிராணிகளாவது தரைச் செடிகளாவது கிடையாது.

3. Mesozoic. மத்தியகாலப் பிராணிவர்க்க காலம். இரும்பு காணப்பட்ட காலம் இதுவே. காடுகள் அழிந்து கிடப்பதை இக்காலத்துப் படையடுக்குகளிற் காணலாம்.

4. Cainozoic. நவீனப் பிராணிவர்க்ககாலம். இதனை (வைகறை Eocene) (புதிது Oligocene) (அதனினும் Miocene) புதிது) (சாலப் புதிது Pleocene) (தற்காலத்தது Pleistocene) என வகுப்பார்கள். ஆனால் இதற்கு ஒரு நிலைக்கடையான அடையாளமில்லை. தற்காலத்துக் காணப்படுவது முழுவதும் ஏறக்குறைய விரவினதாகும்..

மற்றொரு வகையாவது:—

1. முதற்கண்டகாலம்—Archaean or Precambrian. இதுவே பிராணிவர்க்கமே காணாத கால (Azoic) மாம் இக்காலத்துக்கு பிறகு பெரும் பூகம்பங்கள் நேர்ந்தன.

2. முதற் சமுத்திரகாலம்—Cambrian, Ordovican and Silurian. இக்காலத்தும் பூமி அசைந்ததுண்டு.

3. 2-வது கண்டகாலம்.—Devonian or Old red 2-வது 3-வது காலங்கள் புராதன பிராணிவர்க்க காலங்களாம்.

4. 2-வது சமுத்திரகாலம். Carboniferous மரவகைகள் ஏற்பட்ட காலம் இது.

2,3,4 பிரிவுக்காலங்களில்தான் மூலப்படை (Primary rocks) கள் ஏற்பட்டன. இவற்றுள் 2-வது சமுத்திரகாலம் மத்தியகாலப் பிராணிகளின் காலத்தைக் குறிக்கும்.

5. 3-வது கண்டகாலம்:—Permean Triassic or New red.

6. 3-வது சமுத்திரகாலம் Jurassic Cretacious 5-வது 6-வது பிரிவுக்காலங்களில் (Secondary rocks உபபாறைகள் ஏற்பட்டன. இவற்றுள் 3-வது சமுத்திரகாலத்தின் பிற்பகுதியில் திருதீய (Tertiary rocks) பாறைகள் ஏற்படத்தொடங்கின.

7. 4-வது சமுத்திரகாலம். திருதியபாறைகளின் பிற்பகுதி காலமும் சதுர்த்த பாறைக்காலமு (Guarternary) மாம் இக்காலத்தின் முதலில் தான் உலகத்தை பனிக்கட்டி மூடத்தொடங்கினது. அதற்குப்பிறகு பூமி இப்போது காணப்படுவது போல் ஏற்பட்டது. இப்பனிக்கட்டிக்காலம் உண்டு என்பதற்குப் பலநியாயங்கள் உண்டு. உத்தரதுருவப்பக்கத்திலுள்ள Novazembla, Spitybergen திவுகளில் நிரட்சரேகையைச் சார்ந்த தேசங்களில் வசிக்கும் பிராணிகளின் கங்காளங்களைக் காண்கிறார்கள்.

இதனால் பூமியின் பலபாகமும் பனிமூடும் காலத்துக்கு முன் ஒரேவிதமான சூடாயிருந்ததென்று ஊகிக்கப்படுகிறது.

மேலும் தூவாளிப்பாறைகளில் மேற்படைதான் நேற்றுண்டானதாம். கீழே போகப்போகப் பழையபடைகள் காணப்படும். ஆனால் காற்றுமழையால் மண் கரைந்த பாறைகளில் மேலே காண்பது பழையபாறையென்றறியவும்.

முடிவாக ஒவ்வொரு பள்ளிக்கூடங்களிலும் இப்பாறை வகைகளையுணர்த்துங் கற்களை பூகோளாசிரியர் கொண்டுசேர்த்து மாணாக்கர்களுக்குக்காட்டிப் போதிப்பாரானால் சிறந்தலாபம் உண்டு. பாறைகளைப்பகுத்தறிவது வெகு துர்லபம். பலநாட் பழக்கத்தாலன்றி அவற்றை யறியமுடியாது.

சிவத்தியாநாநந்தன்.

---



# PREVENTION OF FEVE[illegible]

By

**Pandit. M. Duraisami Aiyengar.**

## காய்ச்சல் வராதபடி காக்கும் முறைகள்.

சரீரத்தைப் பலப்படுத்தக்கூடிய வழிவகைகள் யாவும் பிணிகள் வராதபடி காக்கக்கூடியவைகளாயிருக்கின்றன. கீழ் வரும் விதிகளை கவனமாய்ப்படித்து அனுஷ்டித்துவந்தால் அநுகூலம்.

1. இலை, தழை விழுந்து சேறடைந்திருக்கும் தண்ணீர், காய்ச்சலை யுண்டாக்குவதற்கு ஓர் முகாந்தரமாகிறது; ஆகையால் சுத்தமான தண்ணீரைப் பெறுவதற்கு மிகவும் ஊக்கமாயிருக்க வேண்டும். இது கிடைக்காத பக்ஷத்தில் குடிக்கும் தண்ணீரையெல்லாம் கொதிக்கவைத்தே உபயோகிக்கவேண்டும்.

2. காய்ச்சல் காலங்களிலும், விசேஷமாய் இரவுகளிலும், மாரிகாலம் கோடைகாலங்களிலும் அதற்குத் தகுந்தவாறு உடைகளை யுடுக்கவேண்டும்.

3. வீட்டிற்கு வெளிச்சமும் நல்லகாற்று தாராளமாய் வராதபடிந் தடுக்கக்கூடிய மரஞ்செடிகளை யடர்த்தியாய் வைத்துப் பயிராக்கலாகாது.

4. அழுக்குகள் அனைத்தும் அகற்றப்பட்டு, பூமி நன்றாய்ச் சுத்தமாயிருப்பது அவசியம். ஆடு மாடுகளை வீட்டுக்குள்ளேயாவது முற்றங்களிலாவது கட்டிவைக்கக்கூடாது.

5. இரவுகளில் வீட்டுக்கு வெளிப்புறங்களில் வீணில் அலைந்து திரியக்கூடாது. காய்ச்சல் நடமாடும் காலங்களில் வெட்டவெளிகளில் தூங்காமல் மேற்கூரையுள்ள விடங்களிலேயே படுத்துறங்க வேண்டும்.

6. தளமுயர்ந்த வீடுகளிலும், அல்லது விசேஷமாய் மாடிகளிலும் தூங்குவது அநுகூலமானது. பூமியிலாவது, தாழ்ந்த விடங்களிலாவது தூங்குவது சுகக்கேட்டை யுண்டாக்கும். கட்டிலில் சயனிப்பது சிறந்ததே.

7. ஈரம், குளிர், இவை தேகத்திற் றாக்கக்கூடாது. சுத்த ஆகாயம் அவசியமானாலும், தூங்குகிற அல்லது ஸ்நானஞ் செய்கிற ஒருவன்மேல் காற்று அதிகம் படுமானால் பெரும்பாலும் கெடுதியைத் தரும்.

8. சூரியன் உதயமாகும் முன்னும், ஏதாவது உணவு உண்பதற்கு முன்பாகவும், காலையில் வெளியே செல்லக்கூடாது. மூடுபனிக்கு முற்றிலும் விலகியிருக்கவேண்டும்.

9. அதிகமாய் வெயிலில் திரிந்து அலைந்தால் அது காய்ச்சலையுண்டுபண்ணும். வெகுநேரம் சாப்பிடாமலிருந்தும் அல்லது மிதமிஞ்சி இளைப்புக்கு இடங்கொடுத்தும் தேகத்தைப் பலவீனமாக்கக் கூடாது.

10. ஈரக்காலோடு இருப்பதும், நனைந்த வஸ்திரங்கட்டியிருப்பதும், பலவீனமாயிருக்கையில் வெகு நேரம் ஸ்நானம் செய்து கொண்டிருப்பதும் கெடுதி.

11. வீட்டிற் கடுத்த நிலங்களில் அதிகமாய்த் தண்ணீரைக் கட்டிவைப்பது கூடாது.

12. காய்ச்சல் பரவுங்காலங்களில் அல்லது விஷக்காற்றுண்டாகு மிடங்களில் நாள்தோறும் சிறிதளவு நிலவேம்புக்கஷாயம் சாப்பிட்டுவருவது நலம்.

13. விஷக்காற்றுள்ள விடங்களுக்கும் வீடுகளுக்கும் இடையில் ஒரு வரிசை விருக்ஷங்களை வைத்துப் பாதுகாப்பது தகும்.

14. விஷக்காற்றுள்ள விடங்களில் எப்போதும் நிலவேம்பு, வேம்பு, பேய்ப்புடல், பற்பாடகம், இவைகளைச் சேர்த்துச்செய்த சிலகஷாயங்கள், அல்லது வேறு வகையாக அவைகளைக் கொண்டு செய்த முறைகளை, உபயோகிப்பது இன்றியமையாதது. பால் வகையறுக்களிலும் விஷக்கிருமிகள் ஏராளமாய்ச் சேருமானதால் அவைகளையும் காய்ச்சிக் கொதிக்கவைத்துக் காலையிலெழுந்திருந்தவுடனே சாப்பிடவேண்டும். விஷக்காற்று இருக்குமிடத்தைவிட்டுப் போய்விட்டபிறகும் 15 நாள் வரையில் இவ்வித முறைகளைக் கையாளுவது அவசியம்.

மேற்கண்ட முறைகளைக் கவனித்து நடந்தால், வருஷந்தோறும் லக்ஷக்கணக்கான உயிர்கள் கொடும் பிணியான காய்ச்சலிலிருந்து தப்பிப்பிழைக்குமென்பதிற் சந்தேகமில்லை.

பண்டித எம். துரைசாமிஐயங்கார்

---



# BHISHMA,

By
**Mr. K. P. Seshadri Aiyangar,**
*(of Madras Tamil Sangam.)*

## பீஷ்மர்.

மஹாபாரதத்தில் வீராதிவீரனாய் விளங்கியவர் பீஷ்மர். அவர் ஆர்யகுல திலகர். ஸத்குணத்தில் அவரைப்போல் வேறு ஒருவரையும் இவ்வுலகத்தில் காண்பது அரிது. மனிதர்கள் செய்யும் பாபக்ருத்யங்களுக்கு அவர் ஒருபோதும் ஆளாகார். தர்மமான கார்யத்தை அதற்குரிய காலத்தில் தமது ஜீவ்யகாலபர்யந்தம் செய்து வந்தார். அவர் தனது கர்மத்தினின்று அணுவும் பிசகினவரல்லர். ஸத்குருவாகவும், நன்மந்திரியாகவும் இருந்தார். அவர் புத்ரனாகவும் போஷகராகவும், ராஜ்யதந்திர நிபுணராகவும் ஒவ்வொரு முறையிலும் மேதாவியாக விளங்கினார்.

பீஷ்மர் அவதரிப்பதற்கு அநேக வருஷங்களுக்கு முன் தேவலோகத்தில் ஓர் உத்ஸவம் நடந்தது. அதற்கு மஹாபீஷன் என்னும் அரசர் விஜயம் செய்திருந்தார். அவர் அநேக யாகங்களைச் செய்து தேவலோகத்தை அடைந்தவர். நதிகளுக்கு அரசியாகிய கங்கா தேவியும் அங்கு வந்திருந்தாள். காற்று விசேஷமாக அடித்து அவளது மேலாடையைக் கலைத்துவிட்டது. அங்கிருந்த தேவர் யாவரும் தங்கள் தலையை தொங்கவிட்டுக்கொண்டனர். அவர்கள், கங்காதேவி மனக்கலவரமடையாதிருக்க, அப்படிச் செய்தனர். மஹாபீஷன் மாத்ரம் சிரித்தமுகமாய் தலைகுனியாதிருந்தார். அது கண்ட ப்ரம்மதேவன் மனம்பொறுனாகி அவர்களைச் சபித்து "மஹாபீஷன் தேவலோகத்தைவிட்டு பூமியில் மறுபடியும் பிறக்க வேண்டும். கங்கையும் பூலோகத்தில் பெண்ணாகப் பிறந்து அவருக்கு பத்னியாக வாழவேண்டும். அவளை எந்த ஸமயம் மஹாபீஷன் கோபவார்த்தைகளால் நிந்திக்கிறானோ, அந்த ஸமயமே அவளுக்கு சாபவிமோசனமாகும்" என்று சொன்னார்.

மஹாபீஷன் பூவுலகில் ஜனனமாகும் ஸமயமும் நெருங்கியது. பக்தி ஸ்ரேஷ்டனாகிய ப்ரதீபன் என்னும் அரசனுக்கு புத்ரனாகப் பிறந்தான். அந்த புத்ரனுக்கு சந்தனு என்று பெயரிட்டார்கள்.

காலக்ரமேண சந்தனுவுக்கு யுவாபருவமும் ஸமீபித்தது. அவனுக்குப் பட்டாபிஷேகமும் நடந்தது. ராஜ்ய பரிபாலனஞ் செவ்வையாக செய்துவரும் நாளில் ஒரு அபூர்வ ஸம்பவம் நடந்தது. ஒருநாள் ஸந்த்யாகாலம் கங்காநதி தீரத்தில் உலாவிவரும் ஸமயம் சந்தனு ஒரு அழகிய அங்கனையைக் கண்டான். அவள் வேறொருவளுமல்ல. கங்காதேவியே அவ்விதம் வந்தாள். அவளைக் கண்டதும் அரசன் அவள்மீது காதலதிகரித்து விவாஹம் செய்துகொள்ள வேண்டினான். அவளும் சம்மதித்தாள்; ஆனால் அவள் "ராஜஸ்ரேஷ்டா! நான் செய்யும் கார்யங்களி லொன்றிலும் தாங்கள் ப்ரவேசிக்கக்கூடாது. என்னை கடுமையான வார்த்தைகளால் நிந்திக்கக்கூடாது. எந்த ஸமயம் என்னை கோபிக்கின்றீரோ அந்த ஸமயம் நான் தங்களை விட்டுப் போய்விடுவேன்" என்றாள். "அவ்விதமேயாகுக" என்று மொழிந்து, அவளை மணந்துகொண்டான். அத்தம்பதிகளுக்கு ஒரு குழந்தை பிறந்தது. கங்காதேவி அச்சிசுவை எடுத்துச் சென்றனள். இவ்விதம் தன் ஏழு குழந்தைகளையும் பிறந்த க்ஷணம் நதிக்கிரையாக்கி வந்தனள். எட்டாம் குழந்தையை அம்மாதிரி நதியில் எறியுந் தருணம் சந்தனு கோபாவேசனாய்க் கடூர மொழிகளைப் பகர்ந்து, அந்தக் குழந்தையைக் காப்பாற்றினான். சந்தனு கங்காதேவிக் குரைத்த உறுதிமொழியை மறந்துவிட்டான். அப்பொழுது அவனது ஸதி "ராஜனே! நான் உமது குழந்தையைக் கொல்லேன். நமது உடன்படிக்கையின்படி உம்முடன் இருந்து நான் போகுங்காலமும் வந்துவிட்டது. நான் கங்காதேவி—ஜஹ்நுவின் புத்ரி. தேவர்களான அஷ்ட வசுக்கள், ஒருகாலத்தில் ஒரு மஹரிஷியினிடமிருந்து காமதேனுவைத் திருடினார்கள். அவர்களில் உண்மையான திருடன் த்யாயு. அந்த மஹரிஷி, அவர்கள் பாபக்ருத்ய நிமித்தம் பூமியில் ஜனிக்குமாறு சபித்தார். அஷ்டவசுக்கள் யாவரும் மஹரிஷியின் பாதகமலங்களில் நமஸ்கரித்து நிற்க, பூமியில் பிறந்ததும் சாபவிமோசனமாகும்படி அம்மஹரிஷி ஆசீர்வாதம் செய்தார். த்யாயுமாத்திரம் பூமியில் வெகுகாலம் வாழவேண்டியது. ஏனென்றால், அவன் கொடியபாவம் செய்தவன். பிறகு வசுக்கள், தாங்கள் என் வயிற்றில் பிறந்ததும் நதியில் எறியும்படி வேண்டிக்கொள்ள, அவர்களை இப்பூவாழ்க்கையினின்றும் காப்பாற்ற, இவ்விதம் நான் செய்தேன். ஏ! ராஜாதிப! மஹரிஷியின் சாபத்தினால் இந்த த்யாயு



மாத்ரம் பூமியில் வாழவேண்டி யிருக்கிறது" என்று சொல்லிவிட்டு அந்தர்த்யானமாயினாள். அந்த எட்டாவது சிசுவின்பெயர் தேவவ்ரதன். இவனுக்குத்தான் பீஷ்மன் என்றும் பெயர். இவரது குணாதிசயங்களும், பிதுர்வாஞ்சையும், மனோதிடமும், வாக்பரிபாலனமும் புகழத்தக்கவைகள்.

ப்ரஜைகள் இறப்பதைப்பற்றி பயங்கொள்கின்றனர். பகவான் பூமியில் ஜனிக்கும்போது சிறையிலடைக்கப்பட்டது போலாகின்றார். அச்சிறையினின்று மீட்க ஒரு ஸ்நேகிதனை எதிர்பார்க்கிறார். அந்த ஸ்நேகிதன் எமனே யாகின்றான். நமக்கு ஒரு குழந்தை பிறந்தால் நாம் ஸந்தோஷமடைகிறோம். நம்மில் யாராவது இறப்பின் நாம் துக்கமடைகிறோம். இது எவ்விதம் இருக்கின்றதெனின், ஒரு ஸ்நேகிதனை சிறையிலடைக்கும்போது பண்டிகை கொண்டாடுவது போலும், அந்த ஸ்நேகிதனை விடுதலைசெய்யும்போது துக்கிப்பது போலுமிருக்கிறது. அஷ்ட வசுக்களை பூ வாழ்க்கையினின்று காப்பாற்றிய கங்காதேவியைப்போல், ஒருவன் இறக்கும்போது ஜீவனை கர்மபந்தத்தினின்று பகவான் காப்பாற்றுகிறார். இக்கதையினால் தேவர்களெல்லாம் ஒருவித வேலையை மேற்கொண்டிருக்கிறார்களென்று நமக்குத் தெரியவருகின்றது.

சேஷசயனம்.
26-9-15

கே. பி. சேஷாத்ரி ஐயங்கார்.

---

ஆணைப் பெண்ணாக்கி பெண்ணை ஆணாக்கி, ஒரு நிமிஷத்தில் செத்தவனை பிழைக்கவைக்க சக்தியுடையவனாயிருந்தாலும், அவன் மாம்ஸம் புசிக்கிறவனாயிருந்தால் சத்தியமாய் அவனை ஞானி யென்று நம்பாதே.—ஸ்ரீராமலிங்க ஸ்வாமி.

* * * *

ஈச்வரஸ்ருஷ்டியில் புழு முதல் மனிதன் வரையிலும் ஒரே ஆத்மா வ்யாபித்திருக்கிறதென்று எவன் எண்ணி அதன்படி நடந்து காட்டுகிறானோ அவனுக்கு துக்கமேது? மோஹமேது?—ஈசாவாஸ்ய உபநிஷத்.

# QUALIFICATIONS OF HEAD. MASTER.

**By**

**A Teacher.**

## தலைமை உபாத்தியாயரின் இலட்சணங்கள்.

நாம் உபாத்தியாயருடைய சிறப்பு இலட்சணங்களையும் அவர்கள் செய்ய வேண்டியவேலையின் தன்மையையும் முறையேகூறுவோம்

1. காயமான தலைமை உபாத்தியர் ட்ரெயிண்ட் டீசெர்ஸ் ஸெர்டிபிகேட்டைப் (*trained teachers' certificate*) பெற்றிருக்கவேண்டும்.

2. அது இல்லாதவர்கள் அன்ட்ரெயிண்ட் டீசெர்ஸ் ஸெர்டிபிகேட்டைப் (*untrained teachers' certifiate*) பெற்றிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் நாலு வருட உபாத்தி அனுபவமும் உடையவராயிருக்கவேண்டும்.

3. யுக்தி, புத்தி, அநுபவங்களில் உதவி உபாத்தியரைக் காட்டிலும் தலைமை உபாத்தியாயர் சிறந்தவராயிருக்கவேண்டும்.

4. தன் கீழுள்ள மாணுக்கரையும், உதவி உபாத்திகளையும் தகுதியாய்ப் பராமரிக்கும் நிர்வாகியாயிருக்கவேண்டும். போதிக்குந் திறத்துடன் நிர்வகிக்குந் திறமும் தலைமை உபாத்தியாயருக்கு இருத்தல் அவசியம்.

5. தலைமை உபாத்தியாயர் மற்ற உபாத்தியாயர்க்கும் மாணுக்கர்க்கும் எவ்விஷயத்திலும் முன்மாதிரியாக இருத்தல் வேண்டும்.

6. தலைமை உபாத்தியாயர் மாணுக்கரின் தாய்தந்தையர் முதலானோரிடம் நடந்துகொள்வதில் வெகு பொறுமையும், மரியாதையும் உடையராயிருத்தல் வெகு அவசியம்.

### உதவி உபாத்தியரின் இலட்சணங்கள்.

1. ஒரு பாடசாலையிலுள்ள உதவி உபாத்தியர்களில் குறைந்தது அரைவாசிப் பேராவது ட்ரெயிண்ட் டீசெர்ஸ் ஸெர்ட்டிபிகேட்டை (*trained teachers' certificate*) உடையராயிருக்கவேண்டும்.

2. இல்லாவிடில் இரண்டு வருட உபாத்திய அநுபவமும் அன்ட்ரெயிண்ட் டீசெர்ஸ் ஸெர்ட்டிபிகேட்டும் (*untrained teachers' certificate*) உடையராயிருத்தல் வேண்டும்.



3. உதவி உபாத்தியாயர்கள், தலைமை உபாத்தியாயருக்குக் கீழ்ப்படிந்து அவருடன் கலந்து வேலைசெய்யுங் குணத்தராயிருத்தல் வெகு அவசியம். உபாத்தியருக்குள் கலகமுளதேல் மாணவகர் என்ன நினைப்பார்கள்? எவ்வாறு விருத்தியடைவார்கள்?

### உதவி உபாத்தியரின் வேலை.

1. பாடசாலையிலுள்ள பிரதி வகுப்புக்கும் ஒரு உதவி உபாத்தியரை நியமித்துப் போதனையை நடப்பிப்பதே உசிதமான வழி.

2. திரவியக் குறைவால் அது முடியாத பட்சத்தில் இருக்கும் உதவி உபாத்திகள் பிரதி வகுப்பிலும் முக்கியமுங் கடினமுமான பாடங்களைத் தாமே போதித்து வரவேண்டும். மற்ற பாடங்களைச் சட்டம் பிள்ளைகளைக் கொண்டு கற்பிக்கவேண்டும்.

3. பிரதி வகுப்பிலும் சில பாடங்களைப் போதிப்பது மாத்திரமேயன்றிச் சட்டம் பிள்ளைகளுள் சிற்சிலருடைய வித்தியாபிவிருத்தியையும் போதனைத் தொழிலையும் மேற்பார்வையிட்டு வருவதும் உதவி உபாத்தியர் ஒவ்வொருவருடைய கடமையாய் அமைக்கவேண்டும். அதாவது சட்டம் பிள்ளைகள் இழக்கும் பாடத்திற்குப் பிரதியாக அப்பாடங்களை ஓய்வு நேரங்களில் அவர்க்குக் கற்பித்தும், அவர்களுடைய போதனைத்திறம் விருத்தியாகும்பொருட்டு மாதிரிப்பாடங்கள், பிழையறி பாடங்கள் நடாத்தியும் வருவதை உதவி உபாத்தியருடைய கடமையாக்கவேண்டும்.

4. உதவி உபாத்திகள் தத்தங்கீழிருக்கும் சட்டம்பிள்ளைகள் போதித்து வரும் பாடங்களில் அவ்வவ்வகுப்புகளைப் பரீட்சித்துக் கண்டறிந்த குற்றங் குறைகளை அவர்கட்குத் தெரிவித்துச் சீர்திருத்தவேண்டும். குணங்களிருப்பின் அவற்றிற்காக மிதமாய்ப் புகழவும் வேண்டும்.

5. உதவி உபாத்தியர் தம்முடைய அநுபவத்தில் யாதேனும் குறையைக்கண்டாலும் அல்லது புது உபாயங்களைத் தெரிந்துகொண்டாலும் அவற்றைத் தலைமை உபாத்தியருக்கு மரியாதையுடன் எடுத்துக் காட்டல் வேண்டும். தலைமை உபாத்தியரும் அவற்றை மரியாதையுடன் அங்கீகரித்தல் வேண்டும்.

**ஒரு உபாத்தி.**

## *Interesting Items*

### I

## CONCERNING CHILDREN.

## குழந்தைகள் விஷயம்.

**Diseases of Children previous to birth.**

**பிறப்பதற்கு முன் குழந்தையின் வ்யாதிகள்:**—தாயார் கர்ப்பமாகும் பொழுது எந்த வ்யாதியால் வருந்துகிறாளோ அந்த வ்யாதி அவளுக்கு பிறக்கும்குழந்தைக்கும் உண்டாகும். அல்லது தகப்பனிடமிருந்து உண்டாகும். பெரிய அம்மை, கண்டமாலை, மேகவ்யாதி முதலிய வ்யாதிகள் கொடிய ஒட்டுவாரொட்டியானவைகள். தாய் தகப்பன் வருந்தும் வ்யாதிகளினால் அவர்களுடைய குழந்தைகளும் கஷ்டப்பட நேரிடுகிறது. பெற்றோர்களுடைய வ்யாதி முத்தியிருந்தால் பூர்ணகர்ப்பமாகுமுன் அவ்வியாதியின்கொடுமையால் கர்ப்பத்திலிருக்கும் குழந்தை விகாரமடைந்து விடுகிறது.

தாயோ, தகப்பனோ தேகத்தில் எந்தபாகத்தில் வ்யாதியால் வருந்துகிறார்களோ அதேவ்யாதி குழந்தையின் தேகத்தில் அதே பாகத்தில் பற்றி விடுகிறது. குழந்தை பிறந்து வளர வளர அதன் தேகத்தில் பற்றியிருக்கிற வ்யாதியும் வளர்ந்துவரும். பிறகு அது நிரம்ப கெடுதலையுண்டு பண்ணும். பெற்றோர்கள் தங்கள் தேகத்தை மிகவும் ஜாக்ரதையாக வைத்துக்கொள்ளவேண்டும். தங்கள் தேகத்தில் ஒரு வ்யாதி பற்றினால் அதைத் தொலைக்க வழிபார்க்கவேண்டும். வ்யாதி வராமுன் தேகத்தைக் காத்துக்கொள்வது நலம். சுத்தமான உடை சுத்தமான ஆகாரம், நல்ல ஸகவாஸம் இவைகள் வ்யாதிகளைத் தடுப்பதற்கு முக்ய மருந்து.

**Correction of Children.**

**குழந்தைகளைத் திருத்துதல்:**—குழந்தைகளை கெட்ட பிள்ளைகளென்றும் கெட்ட பெண்களென்றும் கூப்பிடாதே: நீ அப்படி அவர்களைக் கூப்பிட்டால் அதை நம்பி தாங்கள் கெட்டவர்களென்று நினைப்பார்கள். ஆனால், நீ அவர்களை நல்லவர்களென்றும் கூப்பிடவேண்டாம். அவர்களைத் தொந்திரவுசெய்யாதே. கூடுமானால் அவர்களை சுறுசுறுப்பாக்கு. குழந்தைகளின் ஸ்வபாவத்தை நன்றாய்ப் படித்துக்கொண்டு அவர்களைப் பழக்க வழிகளைக்கண்டுபிடி. குழந்தைகளை எளிதில் திருத்த முடியுமென்று நம்பு. குழந்தைகள் ஒரு குற்றம் செய்தால் அக்குற்றத்தை அவர்கள் மறுபடியும் செய்யாதிருக்கும்படி ஒரு ரூமில் தனியாக வை. அந்த ரூமானது இருட்டாகவும் அசுத்தமாகவும் இருக்கக் கூடாது.

**Udiravengai.**

**உதிர வேங்கை:**—இதன் பால் ரத்தம்போலிருப்பதால் இதற்கு இப்பெயர் வந்தது. பட்டையைக் குத்தினால் பால் ரத்தம்போல வடியும். சாதாரண ரத்தத்திற்கும் இதற்கும் வித்தியாசங் கண்டுபிடிப்பதும கஷ்டம். இம்மரம் மருதமாமென்று வழங்குகிற அர்ச்சுன விருக்ஷம்போலிருக்கும். இலை இலவமரத்திலை போலிருக்கும். ஆனால் ஒற்றையாயிருக்கும். புஷ்பம் சூரியகாந்திப் பூப்போல் பெரியதாயும் வட்டமாயுமிருக்கும். அப்பூவின் நிறம், மஞ்சள் வெள்ளை, நீலம், சிவப்பு கலந்த வர்ணம் போன்றது. இதழ் அழகாயிருக்கும். இதன் இலையும் பட்டையும் பஸ்மங்கள் செய்வதற்குக் கவசமாக உதவும். இவற்றை அரைத்து உள்ளுக்குங் கொடுக்கலாம். குடலிலுள்ள ரத்த சம்பந்தமான ரோகம், குடல்வாதம, வயிற்று இரைச்சல், ஜ்வரம் இவைகளைக் குணப்படுத்தும். இதன் ரத்த வர்ணமான பாலினால் சவ்வீரம் என்ற கொடிய பாஷாணம் சிந்தூரமாகும். அந்தச் சிந்தூரத்தினால் 13 வகை ஜன்னிகள் பறந்துவிடும்.

## II

## DOMESTIC HINTS AND SUGGESTIONS.

## க்ரகத்தியக் குறிப்புகள்.

**Kanaga Erumai Tree.**

**கனக எருமை மரம்:**—இவ்விருக்ஷம் மிகவும அபூர்வமானது. இது புளியமரம் போலிருக்கும். இலை வக்கணத்தி இலையின் நீளமிருக்கும். பூ, காட்டாளிப் பூப்போன்றது. அதன் அடி சிவப்பாயும், மேல் வெண்மையாயும், உட்புறம் சொற்பம் சிவந்துமிருக்கும். இதன் பாலை எடுக்கும் விதம் அதிசயமானது. மரத்தண்டை போய் எருமைக் கன்றுபோல் கனைத்துப் பின் அரிவாளால கொத்தி ஒரு கிண்ணத்தை அடியில் வைத்தால் பால் வடியும். ரப்பர் மரத்தினின்று பால் எடுப்பதுபோலவே எடுத்தல் வேண்டும். எருமைக் கன்றுபோல் கனைத்துப் பால் எடுப்பதால் இதற்குக் கனக எருமைமரம் என்று பெயர் வந்தது. இவ்விருக்ஷம் கொல்லிமலையின் வடசாரில் வேப்பத்தூர் சரகத்தில் அகப்படக்கூடியது. இதன் பால் மிகவும் காரமானது. தில்லம்பாலைக்காட்டிலும் கொடியது. இப்பால் பட்ட இடம் உடனே புண்ணாகும். இப்பாலினால் 64 வகைப் பாஷாணங்களும் சுத்தமாகும். இதைக்கொண்டு மெழுகு, நீற்றினம் இவை செய்யலாம்.

**Cholam Amavadai.**

**மக்காச்சோள ஆமவடை:**—அரைபடி மக்காச்சோளமும் கால்படி கடலைப்பருப்பும் ஜலத்தில் ஊறவைத்து வடியவைத்துக்கொண்டு, ஒன்றேகால்பலம் உப்பு, ஐந்துபலம் முந்திரிப்பருப்பு, ஒருபலம பச்சைக் கொத்துமல்லி, இரண்டுபலம்மிளகாய் கால்பலம் இஞ்சி அரைக்கால் பலம் காயம், ஐந்துபலம் தேங்காய்த் துருவல் இவற்றோடு கலந்து உரலில் போட்டு அரைத்து, நான்கு எலுமிச்சம் பழங்களை நன்றாய்க் கசக்கி நறுக்கி ஷை. பருப்பில் பிழிந்து பின்னுங்கொஞ்சம் அரைத்து வடைதட்டிச் சுடவேண்டியது. வெங்காயமும் சேர்த்துக்கொள்வதுண்டு. அப்போது மஸால் வடையாகும்.

**Bombay Vadai.**

**பம்பாய்வடை:**—கால்படிவெண்மையான உளுத்தம்பருப்பை ஊரவைக்கவும், ஒரு தம்படி எடை உப்பைக்கலந்து ஆட்டுக்கல்லில் அரைக்கவும். ஐந்துபலம் நெய்யை பாணலியில விட்டு காய்ச்சிக்கொண்டு மாவை வடைத்தட்டிசுட்டு எடுத்துக் கொள்ளவும். கால்படி தேங்காய்ப் பாலில் பலம் கற்கண்டுப் பொடியையும் இரண்டு ஏலக்காய்ப்பொடியையும் போட்டு கலக்கி வைத்துக் கொள்ளவும். சுட்டவடையை சூட்டோடு உடன் தேங்காய்ப்பாலில் போடவும். வடை ஊறின பிறகு சாப்பிட்டால் வெகு ருசியாயிருக்கும்.

## III
# WOMAN'S WORLD.
## ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

**Alienation by a Widow.**

விதவை ஸொத்தைப் பராதீனம் செய்வது:—ஒரு ஹிந்து விதவை தனது புருஷன் செத்துப் பத்து வர்ஷமானபிறகு, புருஷன் பட்டிருந்த கடன்களைத் தீர்க்கவேண்டுமென்று சொல்லி அவருடைய ஸொத்துக்களை குறைந்த விலைக்கு விற்ருள். ஸொத்துக்கள் ஒற்றி வைக்கப்பட்டிருந்தன. ஸொத்தின் வரும்படியால் கடனானது கொஞ்சங் கொஞ்சமாக அடைபட்டு வந்து கொண்டிருந்தது. கடனடைக்க வேண்டுமென்று சொல்லி விற்ருலும், வாஸ்தவத்தில் பணத்தை கைவசப்படுத்த வேண்டுமென்னும் எண்ணத்துடன் விற்றதாகத் தெரிகிறது. மேலும் விற்பனைத் தேதியில் அடைமான உடன்படிக்கை தீருவதற்கு இன்னும் சில வர்ஷங்கள் வரையில் தவணையிருந்தது. அதோடு ஸொத்தை வாங்கினவர்கள் ஸொத்தை வாங்குவதில் சில தடைகளிருக்கின்றன வென்றறிந்தே வாங்கினுர்கள். ஏனென்ருல், விதவை ஸ்வல்ப கடன்கள் இருக்கிற தென்பதைக்கொண்டே ஸொத்துக்களை விற்றது ந்யாயமானதல்ல. அவள் பணத்தைத் தன் வசப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் ஸ்வய நலம் பாராட்டி விற்ருளாதலால் அந்த விற்பனை செல்லாது. அனந்தரவார்ஸுகளையும் கட்டுப் படுத்தாது.—2 லா வீக்லி 758.—ஜனுபிமானி.

**Women's Work in Germany.**

ஜெர்மனியில் ஸ்த்ரீகள் செய்யும் வேலை:—இப்போது ஜர்மனியப் ப்ரஜைகளில் பெரும்பான்மையோர் ரண ரங்கத்துக்குச் சென்றுவிட்டபடியால், ஜர்மனியில் புருஷர்களால் செய்யப்படக்கூடிய வேலைகளில் பலவற்றை ஸ்த்ரீகளே செய்து வருகிருர்கள். உதாரணமாக, ஜர்மன் தலைநகராகிய பெர்லினில் இப்போது 2700 ஸ்த்ரீகள் டிராம்வண்டி யோட்டும் தொழிலியர்ந்திருக்கிருர்கள். 'கண்டக்டர்' (டிக்கட்டு கொடுப்பவர்) வேலைகளுக்காக 4900 மாதர்கள் கூடிய சீக்கிரம் அமர்த்தப்படுவார்களாம். இன்னும் கொஞ்சகாலத்துக்குள் டிராம்வண்டியோட்டும் பாக்கிபுருஷர்களெல்லாம் ரணகளம் வந்துசேரவேண்டுமென உத்திரவு வந்திருக்கிறதாம்.

**Some Figures about German bad morality.**

ஜெர்மனியின் ஸந்மார்க்க ஈனத்தைப்பற்றி சில கணக்குகள்:—ஜெர்மனியின் ஒரு கலாசாலையில் ஆங்கலீஷ் போதகராயிருந்த ஒருவர் இங்கலண்டு தேசத்தின் ஸன்மார்க்கத்தையும் ஜெர்மனி தேசத்தின் ஸன்மார்க்கத்தையும் ஒப்பிட்டு பின் வருமாறு தெரிவிக்கிருர்.

இங்கலண்டில் 1900-வருஷமுதல் 1910 வருஷம் வரையில் 10 வர்ஷங்களிலும், ஜெர்மனியில் 1897 வருஷம் முதல் 1907 வருஷம் வரையில் 10 வர்ஷங்களிலும் ஸன்மார்க்க ஸம்பந்தமான சில முக்ய குற்றங்களைச் செய்திருக்கிறவர்கள். கொலை ஜெர்மனியில் 350, இங்கலண்டில் 97; பலாத்காரமாகக் கற்பழித்தல் ஜெர்மனியில் 9, 381, இங்கலண்டில் 216; கெட்டஎண்ணத்துடன் பிறருக்குக் காயமுண்டாக்கல் ஜெர்மனியில் 1,72,157, இங்கலண்டில் 1,262 விபசாரத்தால் பிறந்த குழந்தைகள் ஜெர்மனியில் 17,8 115, இங்கலண்டில் 37,041; ஸ்த்ரீ புருஷர்கள் ஒருவர் ஒருவரை தள்ளிவைக்கப் போட்ட மனுக்களின் ஸங்கயை ஜெர்மனியில் 20,340. இங்கலண்டில் 965; கெட்ட எண்ணத்துடன் ஸொத்துக்குக் கெடுதி செய்தல், ஜெர்மனியில் 25,759, இங்கலண்டில் 358.

## IV
# WAR NOTE.
## யுத்தக் குறிப்பு

**Grand Total losses in this war for the year 1914.**

சென்ற வர்ஷத்தில் யுத்தம் செய்யும் எல்லா தேசச் சேனைகளின் மொத்தச்சேதம்:—லண்டனில் ப்ரசுரமாகும் ஒரு ஆங்கிலப்பத்ரிகை பின்வருமாறு தகுந்த ஆதாரங்களிலிருந்து கணக்கெடுத்து ப்ரசுரித்திருக்கிறது. ஏறக்குறைய இக்கணக்குகள் ஸரியாயிருக்குமென்று நம்பப்படுகிறது. ஆனல் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தங்களுக்கு ஏற்பட்ட சேதத்தை உத்யோகமுறையில் ப்ரசுரம் செய்திருக்கிருர்கள்.

க்ரேட் பிரிட்டன்.

| | |
|---|---|
| கொல்லப்பட்டவர்கள் | 69,000 |
| காயமடைந்தவர்கள் | 1,96,000 |
| காணுமலோ கைதிகளாகவோ போனவர்கள், | 63,000 |
| ஆகமொத்தம் (3-லட்சத்து 28-ஆயிரம் | 3,28,000 |

ப்ரான்ஸ.

| | |
|---|---|
| கொல்லப் பட்டவர்கள் | 410,000 |
| காயமடைந்தவர்கள் | 1,100,000 |
| காணுமலோ கைதிகளாகவோ போனவர்கள். | 490,000 |
| ஆகமொத்தம் (20-லட்சம்) | 20,00,000 |

ரஷ்யா.

| | |
|---|---|
| கொல்லப்பட்டவர்கள் | 805,000 |
| காயமடைந்தவர்கள் | 22,00.000 |
| காணுமலோ கைதிகளாக போனவர்கள் | 930,000 |
| ஆகமொத்தம் (39-லட்சத்து 35-ஆயிரம்) | 39,35000 |

ஜெர்மனி.

| | |
|---|---|
| கொல்லப்பட்டவர்கள் | 9,70,900 |
| காயமடைந்தவர்கள் | 18,00,000 |
| காணுமலோ கைதிகளாகவோ போனவர்கள் | 3,60,000 |
| ஆகமொத்தம் (31-லட்சத்து 30-ஆயிரம்) | 31,30,000 |

ஆஸ்ட்ரியா.

| | |
|---|---|
| கொல்லப்பட்டவர்கள் | 11,00,000 |
| காயம்டைந்தவர்கள் | 19,00,000 |
| காணுமலோ கைதிகளாகவோ போனவர்கள் | 609,000 |
| ஆகமொத்தம் (36-லட்சத்து 9 ஆயிரம்) | 36,09,000 |

ஸெர்வியா.

| | |
|---|---|
| கொல்லப்பட்டவர்கள் | 80,000 |
| காயமடைந்தவர்கள் | 210,000 |
| காணுமலோ கைதிகளாகவோ போனவர்கள் | 130,000 |
| ஆகமொத்தம் (4 லக்ஷத்து 20 ஆயிரம்) | 420,000 |

பெல்ஜியம்.

| | |
|---|---|
| கொல்லப்பட்டவர்கள் | 38,000 |
| காயமடைந்தவர்கள் | 1,20,000 |
| காணுமலோ கைதிகளாகவோ போனவர்கள் | 37,000 |
| ஆகமொத்தம் (1 லக்ஷத்து 95 ஆயிரம்) | 1,95,000 |

துருக்கி

| | |
|---|---|
| கொல்லப்பட்டவர்கள் | 20,000 |
| காயமடைந்தவர்கள் | 60,000 |
| காணுமலோ கைதிகளாகவோ போனவர்கள் | 10,000 |
| (ஆக மொத்தம் 90 ஆயிரம் | 90,000 |

ஆகவே மேலே கண்டபடி 8 தேசங்களுக்குமாக நேர்ந்திருக்கும் மொத்தச்சேதம் பின் வருமாறு:—

கொல்லப்பட்டுப் போனவர்கள்.—34 லக்ஷத்து 92 ஆயிரம்.

காயமடைந்தவர்கள்.—75 லக்ஷத்து 86 ஆயிரம்.

காணுமலோ கைதியாகவோ போனவர்கள் —லக்ஷத்து 29 ஆயிரம்.

மொத்தமாக நேர்ந்த சேதம் ஒரு கோடியே 37 லக்ஷத்து 7 ஆயிரம்.

V

# VIEWS AND REVIEWS.

## அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

பர்மாவில் போன வருஷத்தைக் காட்டிலும் இவ்வருஷம் லோயர் ஸெகண்டரி ஸ்கூல்களிலும் ஐஸ்கூல்களிலும் பயிலும் வாலிபர்கள் 100 க்கு 25-வீதமும் பெண்பிள்ளைகள் 100-க்கு 22 வீதமும் அதிகமாயிருக்கிறார்கள். இது இனி பர்மாவில் பெண்களின் கல்வி வாவு வ்ருத்தி முகம் காட்டி வருமென்பதற்கு ஒரு அறிகுறியாகவுமிருக்கிறது.

சுதேசபரிபாலினி.

**Bengal marriage market.**

வங்காள விவாக மார்க்கெட்:—பெண்ணைப்பெற்ற தகப்பன் ப்ராமணனாயிருந்தாலும் சூத்ரனாயிருந்தாலும் தன் பெண்ணை கல்யாணம் செய்து கொடுக்க அவன் படுகிற கஷ்டம் மனதினாலும் நினைக்க முடியாததாயிருக்கிறது. விலைபோட்டுத் தேடினாலும் மாப்பிள்ளைகள் கிடைப்பதில்லை. அப்படி கஷ்டப்பட்டு மாப்பிள்ளை கிடைத்தாலும் பெண் அழகாயிருக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறான். பிள்ளைகளிலாகட்டும் பெண்களிலாகட்டும் அழகுவாய்ந்தவர்கள் மிகவும் சிலரே தான் யிருப்பார்கள். குணத்தை கவனிக்கார்கள். பிள்ளையின் ப்ராஹாரம் அவனுக்கேற்ற பெண்கிடைத்தாலும் பிள்ளைகளின் பெற்றோர்களை பணப்பேயால் திருப்திபடுத்த வேண்டியிருக்கிறது. இதனால் அநேக பெற்றோர்கள் ஏழைகளாகி வருந்துகிறார்கள். நம் ஸமூகத்திலுள்ள முக்யமான இந்த ஊழல் போனால் தான் சதிமோக்ஷமுண்டாகும். இல்லையேல் பெண்கள் ருதுவானபிறகு தாங்கள் இஷ்டம் போல் விவாகம் செய்துகொள்ள வேண்டும்.—வங்காளிப்பத்திரிகை

ராஜாமணி:—இது ஓர் இனிய துப்பறியும் தமிழ் நாவல். கதாநாயகியான ராஜாமணியின் மெய்க்காதலும், கற்பின் சிறப்பும், தன் ஆத்மநாதனான அனந்தராவை விடுவிக்கச் செய்யும் பிரயத்னம் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. இதில் தந்தையை கொன்ற பழி சாத்தப்பட்ட அனந்தராவை அப்பழியினின்றும் மீட்க ஏற்படுத்தப்பட்ட கோபாலகிருஷ்ணன் என்னும் துப்பறிவோனின் சாமார்த்தியம் மிகவும் வியக்கத்தக்கது. இதில் தாசிகளின் வலையில் சிக்கினால் வரும் துன்பங்களும், கற்பிற்சிறந்த காரிகைகளினால் வரும் இன்பங்களும் தெளிவாக விவரித்துள்ளது. ஒவ்வொரு ஹிந்து ரமணிகளும் படித்தே ஆனந்திக்கக் கூடியது. கடைசியில் ராஜாமணி தன் நாதனை அடைவதும் மைசூர் மஹாராஜ ஆலோசனை சபையில் ஒருவராக நியமிக்கப்படுவதும் வெகு குதூகலத்தை கொடுக்கும். இதை எழுதியவர் சென்னைச் செந்தமிழ்ச் சங்கத்தைச் சேர்ந்த K.P. சேஷாத்ரி அய்யங்கார் விலை அணா 8. புத்தகம் கிடைக்குமிடம். காரியதரிசி, நெ. 8 ராமசாமி தெரு, மண்ணடி, சென்னை. ஈ.

**Balika Kalpakam**

பாலிகா கல்பகம்:—இஃது "பிரஜானுகூலன்" "திராவிடாபிமானி" பத்திரிகைகளின் பத்ராசிரியரான ஸ்ரீரங்கம் எஸ் ஜி. ராமானுஜலு நாயுடு அவர்கள் எழுதியது. இது பாலிகைகட்கு அவசியமான புஸ்தகம். இதில் கற்பு, அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய ஐந்து குணங்களைப்பற்றி வெகு சுருக்கமாகச் எழுதியிருக்கிறார் மேலும் படிப்பு சமையல், தையல், கோலம், கௌர்வம், சிரிப்பு, வைத்யம், செட்டு காலப்போக்கு வைத்யம் முதலிய உபயோகமான குறிப்புக்களையும் எழுதியிருக்கிறார். இதன் விலை அரையணா.




# HALF A DOZEN DETECTIVE NOVELS

## அரை டஜன் துப்பறியும் தமிழ் நாவல்கள்

| | ரூ.அ.பை |
|---|---|
| தானவன் ... ... ... ... ... <br>தமிழில் முதல் துப்பறியும் நாவல். 5-கதைகள் அடங்கியது.—பண்டித நடேச சாஸ்திரிகள் எழுதியது. | 0 12 0 |
| மாலினி மாதவம் அல்லது தர்மவிஜயம் ... <br>துப்பறியும் தமிழ்நாவல்.—ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர் இயற்றியது. | 0 10 0 |
| அக்ஞாதவாசம் அல்லது பாண்டவன் மீண்டமாயம் ... <br>இது ஒரு துப்பறியும் நாவல்.—ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர் இயற்றியது. | 0 8 0 |
| கள்வர் கவர்ந்த கல்யாணப்பெண் ... ... ... <br>ஒரு இனிய துப்பறியும் தமிழ் நாவல்.—'ஜனாபிமானி' உப பத்ராதிபர் எம். எஸ். க்ருஷ்ணஸ்வாமி அய்யர் இயற்றியது. | 0 6 0 |
| மூன்று வைரங்கள் ... ... ... ... <br>துப்பறியும் கதை.—ஆரணி குப்புஸாமி முதலியார் இயற்றியது. | 0 5 0 |
| மதிமுகி 1-ம் பாகம் அணா 4. ஷை 2-ம் பாகம் ... ... <br>இது நாகை சோ. தண்டபாணிபிள்ளை இயற்றிய துப்பறியும் நாவல். | 0 4 0 |

## ஒவ்வொரு ஹிந்துஸ்த்ரீயும் வாசிக்கவேண்டிய புஸ்தகங்கள்.

### வால்மீகி ராமாயணம் தமிழ் வசனம்.

பண்டிதர் எஸ். எம். நடேச சாஸ்திரியார் மொழிபெயர்த்தது.

உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு, காலிகோவில் நேர்த்தியாய் அச்சிடப்பட்டு கில்ட் எழுத்துகள் போடப்பட்டது.

பாலகாண்டம் தனியாக விலைக்குக் கிடைக்காது. எங்களுடைய பெரிய காட்லாக்குக்கு எழுதுங்கள், இனமாக அனுப்பப்படும்.

| | ரூ.அ.பை. |
|---|---|
| பாலகாண்டம் ... ... ... ... | 1 12 0 |
| அயோத்யாகாண்டம் ... ... ... ... | 3 8 0 |
| ஆரண்யகாண்டம் ... ... ... ... | 1 12 0 |
| கிஷ்கிந்தகாண்டம் ... ... ... ... | 1 12 0 |
| ஸுந்தர காண்டம் ... ... ... ... | 1 12 0 |
| யுத்தகாண்டம் ... ... ... ... | 3 8 0 |
| ஆறுகாண்டமும் சேர்ந்து வாங்கினால் ... ... ... | 12 8 0 |

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டிசெட்டித் தெரு, சென்னை.

பல கண்காக்ஷிகளில் மெடல்கள் பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

# பி. சுப்பராய் ஆயுர்வேத ஔஷதசாலை,

ஸ்ரீ வெங்கடேச பெருமாள் கோவில் சன்னதி, தஞ்சாவூர்,

தயவு செய்து இதை தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்.

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

9. சர்வபடை சம்ஹாரன்:—இடுப்பு, துடையின் இடுக்கு முதலிய இடங்களில் உண்டாகி, ஓயாத நமச்சலைத்தந்து, வெகு சீக்கிரத்தில் மற்ற இடங்களில் படரும், மேகப்படை, சொரி, சிரங்கு, கடிப்புப்படை, தேமல் முதலியவைகளை அடியோடு குணப்படுத்தும். சீசா 1-க்கு விலை அணா 4, வி.பி. சிலவு 1 முதல் 12 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

10. பேதி மாத்திரைகள்:—வயிற்றில் வலி, ஆயாசமில்லாமல் சுகமாய் பேதியாகும். அஜீரணம், பித்த உபத்திரவங்கள், சகல வாயு, மலச்சிக்கல், அக்கினி மாந்தம், வாதம், கை, கால் முதலிய அவயவங்களின் குடைச்சல், வலி, சகல சுரங்கள் முதலியதுகளை சொஸ்தப்படுத்தும். சீசா 1-க்கு அணா 8, வி. பி. சிலவு 1 முதல் 6 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியோகம்.

11. ஜுவர சம்ஹாரி:—தீராத நாள்பட்ட சகல சுரங்கள், குளிர் சுரம், முறை சுரம், வாத சுரம், பித்த சுரம், அஸ்தி சுரம், மாலை சுரம், மார் வலி, காமாலை, பிடரிவலி, இடுப்புவலி, விலாவலி, முழங்கால்வலி, உடம்பு வெளுப்பு, மயக்கம், தாகம், இருமுறை சுரம், நாலா முறை சுரம் முதலிய சகல சுரங்களை அடியோடு போக்கும். டப்பா 1-க்கு ரூபா 1, வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

12. உரோம சம்ஹாரி:—இந்த சூர்ணத்தை மயிருள்ள இடத்தில் தடவினால் வெகு எளிதில் மயிர் நீங்கிவிடும். சீசா 1-க்கு அணா 4. ஒன்று முதல் 6 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

13. சுகந்த பல்பொடி:—நல்ல ஜீரண சக்தியைத் தரும், பல்வலி, எக்காலத்திலும் வராது. பல் எக்காலத்திலும் விழாது. சீசா 1-க்கு விலை அணா 3, வி. பி. சிலவு 1 முதல் 5 சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

14. உயர்ந்த கஸ்தூரி:—மிகவும்நேர்த்தியானதும், முதல்தரமானதும், காஷ்மீர் தேசத்திலிருந்து நேராகவரவழைத்த கஸ்தூரி நம்மிடத்தில் எப்பொழுதும் கிடைக்கும். தோலா 1-க்கு ரூபா 48. ஒரு ரூபாய்க்கு குறையாமல் சில்லரையிலும் விற்கப்படும். வி. பி. சிலவு பிரத்தியேகம்.

---

என்னுடைய அவுஷதசாலையின் ஹெட் ஆபீசை பரங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டது.

***P. Subbaroy, Venkatesa Perumal Coil Sannady, Tanjore.***



15. தேள் கொட்டின் மருந்து:—இம்மருந்தை விஷம் தீண்டிய இடத்தில் தடவினால், தக்ஷணமே விஷமிறங்கி, வருத்தப்பட்டு, சகிக்கமுடியாத வேதனையில் நின்று, நீங்கி, யாவரும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய், ஆனந்திக்கும்படியான அனுகூலத்தைத் தரும். கிரயம் சீசா 1-க்கு அணா 4. இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 12 சீசாக்கள் வரையிலும் வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

முக்கிய குறிப்பு.—ஒரே தடவையில் 12 சீசா தேள் கொட்டின் மருந்துக்குக் குறையாமல் வாங்கினால் டஜன் 1-க்கு ரூ. 2 8-0 வீதம் கொடுக்கப்படும் வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம். " இக்குறிப்பு தேள்மருந்து தவிர மற்றெந்த மருந்திற்கும் சம்பந்தப்படமாட்டாது.

16. மேகரண மருந்து:—இதை வெள்ளைத்துணியில் தடவி ரணங்களின் மேல் போட, அரையாப்பு, கண்டமாலை, விப்புருதி, தொடைவாழை செவ்வாப்பு, ஆசனப்பவுத்திரம், அழுகுளியின், பிளவை, கிரந்தி, மேக வெடிப்பு, முதலிய இரணங்கள், ஆறி, சொஸ்தமாகும். விலை சீசா 1-க்கு-அணா8, இந்தியாவிலும், பர்மாவிலும் 1 முதல் 3 சீசாக்கள் வரையில் வி. பி. சிலவு அணா 5 பிரத்தியேகம்.

17. கண்டசுத்தி மாத்திரைகள்:—டைரக்ஷனில் சொல்லியபடி இதை சாப்பிட்டு வந்தால் தொண்டை கட்டு, தொண்டை கம்முதல் நீக்குவதும் அன்றி, இன்பமாய் பாடுவதற்கு இசைந்த குரலைத்தரும். சங்கீத வித்வான்களுக்கும், பிரசங்கஞ்செய்யப்பட்டவர்களுக்கும், உபாத்தியாயர்களுக்கும், இது ஓர் அருமையான ஔஷதம். எத்தனை நேரம் பாடினாலும் பிரசங்கித்தாலும், குரல் கம்மாது. இனிமையான ஓசையைத் தரும். கிரயம் சீசா 1-க்கு அணா 8 இந்தியாவிலும் பர்மாவிலும் 1 முதல் 6 சீசாகள் வரையில் பாங்கிக்கு தபால் முதலிய சிலவு 5 பிரத்தியேகம்.

18. சுகந்தஸ்நானப் பொடி:—இந்த வாசனைப்பொடியை தினந்தோறும் தேகத்தில் தேய்த்து ஸ்நானம் செய்து வந்தால் தேகத்திற்கு சுகந்த பரிமளத்தைத் தந்து, தேமல், றிப்பு, சொறி சிரங்கு, கற்றாழைநாற்றம் கைகால் எரிச்சல், மேககாங்கை சரீரவரக்ஷி, கணச்சூடு, வெடிப்பு, கரப்பான் தலைவலி, பெரிமேகம், படர்தாமரை, மேக ஊரல், கிரந்தி, முதலிய, இன்னும் அனேகவித தோலைப்பற்றிய வியாதிகள் தீரும். நல்ல வாசனையும், காந்தியும் லக்ஷ்மீகரமும், ஆரோக்கியமு முண்டாகும். அரைக்குழந்தைகள் முதல் யாவரும் உபயோகிக்கலாம். டப்பா 1-க்கு விலை அணா 8, வி. பி. சிலவு அணா 3 பிரத்தியேகம்.

---

என்னுடைய அவுஷதசாலையின் ஹெட் ஆபீசை பரங்கிப்பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய்விட்டது.

***P. Subbaroy, Venkatesa Perumal Coil Sannady, Tanjore.***

# THE FEMALE EDUCATION.

# பெண் கல்வி.

**Contents for October, 1915.**

விஷயசூசிகை அக்டோபர்மீ 1915

---


1. WAR ILLUSTRATIONS.

- i. German Krupp Factory.
- ii. A Submarine.
- iii. Grand Duke Nicholas.
- iv. Captain Von Muller.
- v. Gurkhas fighting with Germans.

II. PROGRESS OF THE WORLD.

Ourselves—Sir. C. Sankaran Nair—Child Protection.

III. SPECIAL ARTICLES.

- i. Cottage Industries and the interest's of women by Sri Bagirathi Ammal.
- ii. Bishma's vow—by Mr. K. P. Seshadri Aiyengar.
- iii. Marriage customs in Japan —by Sri K. Meenatchi Ammal.
- iv. The Three desires —by Mr. Palnidasan.
- v. Medical Inspection and School children—by Sri Jayalakshmi.
- vi. Economy —by Mr. P. A. Krishnan.
- vii. The Inner mearning of Bagavatham —by Sri Nagarathnammal.

IV. INTERESTING ITEMS.

- i. Concerning children.
- ii. Domestic hints and suggestions.
- iii. Kitchen and Cookery.
- iv. Law.
- v. Views and Reviews.
- vi. Woman's World.

I. யுத்தப் படங்கள்.

- i. ஜெர்மன் க்ரப்யுத்த ஆயுதசாலை.
- ii. ஒரு ஜலக்கீழ்க் கப்பல்.
- iii. க்ராண்ட் ட்யூக் நிக்கலஸ்.
- iv. காப்டன் வான் முல்லர்.
- v. ஜெர்மனியர்களை வெட்டுதல்.

II. ப்ரபஞ்சப் போக்கு.

நமது பத்ரிகை—ஸர். C. சங்கரன் நாயர்—குழந்தைகளைக் காப்பாற்றுதல்.

III. விசேஷ வ்யாஸங்கள்.

- i. கைத்தொழில்களும் ஸ்த்ரீகளின் க்ஷேமலாபங்களும் —ஸ்ரீ பாகீரதி அம்மாள்.
- ii. பீஷ்மரின்ப்ரதிக்ஞை-மிஸ்டர். கே. பி. சேஷாத்ரி அய்யங்கார்.
- iii. ஜப்பானில் விவாஹ வழக்கங்கள்—ஸ்ரீ கே. மீனாக்ஷி அம்மாள்.
- iv. ஈஷணாத்ரயம்—மிஸ்டர் பழனி தாஸன்.
- v. வைத்திய பரிசோதனையும் ஸ்கூல்குழந்தைகளும்-ஸ்ரீ ஜயலக்ஷ்மி.
- vi. செட்டு—மிஸ்டர். பி. ஏ. கிருஷ்ணன்.
- vii. ஸ்ரீ பாகவத தத்வார்த்தம் —ஸ்ரீ நாகரத்தினம் அம்மாள்.

IV. விசேஷக் குறிப்புகள்.

- i. குழந்தைகள் விஷயம்.
- ii. க்ருகத்தியக் குறிப்புகள்.
- iii. சமையலறையும் சமையலும்.
- iv. சட்டம்.
- v. அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.
- vi. ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.






ஜெர்மன் க்ரப் யுத்த ஆயுதசாலை.

**From the 'Andra Patrica,' Madras.**



ஸப்மரைன். ஒரு ஜலக்கீழ்க் கப்பல்.

From the 'Andra Patrica,' Madras.





கிராண்ட் டியூக் நிக்கலஸ். ருஷ்யத் தரைப்படை ஸேனாதிபதி.



வான்முல்லர். ஜெர்மன் எம்டன் கப்பலின் காப்டன்.

From the 'Andra Patrica,' Madras.



ஜெர்மன் வீரர்களின் தொண்டையை இந்திய கூர்க்க வீரர்கள் தங்கள் கர்க்கீ என்னும் வெட்டுக்கத்தியால் வெட்டுகிறார்கள்.

From the 'Andra Patrica,' Madras

# PROGRESS OF THE WORLD

## ப்ரபஞ்சப்போக்கு.

160731

**Ourselves.**

நமது பத்ரிகை:—ஸ்ரீயோகதேவியுடன் கூடின ஈச்வரனின் அநுக்ரஹத்தால் இம்மாதப்பத்ரிகை முதலாக நமது 'பெண்கல்வி'ப்பத்ரிகை ப்ரசுரமான ஐந்தாவது வர்ஷம் ஆரம்பமாகின்றது. இப்பத்ரிகை ஆரம்பமாய் நான்கு வர்ஷகாலமாக இது பலராலும் கொண்டாடப்பட்டு செம்மையாய் நடந்தேறி வந்ததற்காக நாம் மிகவும் ஸந்தோஷப்படுகிறோம். நமது பத்ரிகையின் அவச்யத்தையும் அபிவ்ருத்தியையும் கருதி ப்ரதிவர்ஷமும் மறக்கமுடியாத உதவி கொடுத்து வருகிற ப்ரதமபோஷகர்களான அலவந்திபுரம் இனும்தார், மகா-௱-௱-ஸ்ரீ S. அப்பாஸாமி அய்யர் அவர்களுக்கும், ஆண்டிப்பட்டி ஜமீன்தார் மகா-௱-௱-ஸ்ரீ S. R. M. M. Ct. பெத்தாச்சி செட்டியார் அவர்களுக்கும், இது வரையிலும் உதவியிருக்கும் போஷகர்களுக்கும் நாம் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். பத்ரிகை ஆரம்பித்த நாள் முதற்கொண்டு, நிரந்தர சந்தாதார்களாயிருந்து ஆதரித்து வருகிற ப்ரபுக்களுக்கும், ஒரு தம்படி எதிர்பாராது விஷயதானம் செய்துவரும் நமது நண்பர்களுக்கும் அனந்த கோடி நமஸ்காரம்.

'பெண்கல்வி'ப்பத்ரிகையின் அபிவ்ருத்தி விஷயத்தில் நேயர்களுக்கு இரண்டொரு வார்த்தை சொல்ல வேண்டியிருக்கிறது. இப்பத்ரிகை அவரவர் குடும்பங்களில் உபயோகப்படவேண்டியே எளிய வீட்டுத்தமிழில் நடத்தப்பட்டு வருகிறது. பெண்களின் படிப்புக்காகவும் அபிவ்ருத்திக்காகவும் ஜாதீய (National lines) முறையில் இதைச் செவ்வையாய் நடத்த முன் வந்திருக்கிறோமேயொழிய வேறல்ல. பாடசாலைகளில் படிக்கும் பெண்களுக்கும் குடும்ப ஸ்த்ரீகளுக்கும் மதப்படிப்பை வ்ருத்திசெய்வது நமது முக்ய கொள்கையாகவிருக்கிறது. மேலும், குடும்ப ஸ்த்ரீகளுக்கு வேண்டிய முக்ய விஷயங்களும் உபயோகமான குறிப்புகளும் நமது பத்ரிகையில் இனி ஜாஸ்தியாக வர ஏற்பாடு செய்திருக்கிறோம். ப்ரதி குடும்ப ஸ்த்ரீக்கும் இப்பத்ரிகை அவச்யமாயிருக்கிறதால்

TSSM 211, N11

சந்தா நேயர்களான ஸஹோதர ஸஹோதரிகள் தங்களுடைய ஸ்னேகிதர்களுக்குச் சிபார்சு செய்ய வேண்டுகிறோம். ஜெகத்கர்த்தாவாகிய ஜெகதீச்வரனை முன்னிட்டு இதுவரையிலும் 'பெண்கல்வி' ப்பத்ரிகையை நடத்திவந்ததுபோல் இனியும் நடத்திவருவோமாக.

**Sir C. Sankaran Nair.**

ஸர். C. சங்கரன் நாயர்:—இக்கனவான் மலையாள தேசத்தவர். நாயர் வகுப்பைச் சேர்ந்தவர். இவர் ஹைகோர்ட் வக்கீலாயிருந்து காலக்ரமேண சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ்களில் ஒருவராகி க்யாதி பெற்றவர். ஸர். C. சங்கரன் நாயர் அவர்கள் தாழ்ந்தஜன ப்ரியர். பழுத்த ஆசார சீர்திருத்தக்காரர். பெண்களின் கல்வி அபிவ்ருத்தியில் மிகுந்த அக்கரை செலுத்துகிறவர். உயர்ந்த இந்திய தேசாபிமான முடையவர். மஹாநீதிவான். யாசித்தவர்களுக்கில்லையென்று சொல்லாமல் தமது சக்தியானுஸாரம் தர்மம் கொடுக்கும் குணமுடையவர். இக்கல்விமான், இப்போது இந்தியா மந்த்ராலோசனை ஸபையில் கல்வி மெம்பர் ஸ்தானத்தை வஹிக்க, நமது மாக்ஷிமை தங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தி அவர்களால் நியமிக்கப்பட்டிருக்கிறார். தமது உத்யோகத்தை வஹிக்க, இம்மாதம் 27-ந் தேதி ஸர். C. சங்கரன் நாயர் அவர்கள் குடும்ப ஸஹிதமாக டில்லிக்குப் புறப்பட்டுப் போனார். கல்கத்தா மார்க்கமாகப் போகும் வழியிலுள்ள ராஜமஹேந்திரபுரம், காக்கிநாடா முதலிய ஸ்டேஷன்களில் அந்தந்தவூர் வாசிகள் நாயர் அவர்களுக்கு வழியனுப்பு அட்ரெஸ் வாசித்துக் கொடுத்தார்கள். தெலுங்கு ஸ்த்ரீகளும் கூட்டமாய் வந்து நாயர் அவர்களுக்கும் அவர் குடும்பத்தாருக்கும் புஷ்பமாலைகள் போட்டு மங்களஹாரத்தி எடுத்து ஆசீர்வாதம் செய்து வழியனுப்பினார்கள். இதனால் ஸர். C. சங்கரன் நாயர் அவர்கள் ஜனங்களின் அன்பைக் கொஞ்சமாகப் பெற்றிருக்கிறார்களென்று சொல்லமுடியுமா? ஸர். C. சங்கரன் நாயர் அவர்கள் காலத்தில் பொதுவாக இந்தியாவில் கல்வி வ்ருத்தியடையுமென்று நம்ப இடமிருக்கிறது.

**Child protection.**

**குழந்தைகளைக் காப்பாற்றுதல்:**—இவ்விஷயம் ஸரியான வழியில் தேசம் அபிவிருத்தியடைய விரும்புகிறவர்களின் மனதைக்கவர்ந்திருக்கிறது. தற்காலம் இந்தியர்கள் முக்கியமாக ஹிந்துக்கள் விஜாதி



யர்களாகி க்ஷீணதசையையடைந்து வருகிறார்களென்று பெரியோர்களின் அபிப்பிராயமாயிருக்கிறது. ஒருவன் க்ஷீணதசையை யடைவதும் விஜாதியனாக ஆகுவதும் எல்லாம் அவன் குழந்தைப்பருவத்தில் பெற்றோர்களிடத்திலும், ஸகவாஸத்திலும்அடைந்திருக்கிற பயிற்சியைப்பொருந்தியிருக்கின்றது. பொதுவாக ஸமூகத்தைத்திருத்தவேண்டுமென்றால் முதன் முதல் குழந்தைகள் நல்லவழிகளில் பழக்கப்படவேண்டும். குழந்தைகள் நல்லகுணமுடையவர்களாய் நல்லவழிகளில் பழக்கப்படவேண்டுமென்றால் பெற்றோர்கள் ஒழுக்கமுடையவர்களாய் ஸரியானவழிகளில் பழக்கப்பட்டிருக்கவேண்டும்.

பம்பாய் ஸோஷல் ஸர்விஸ் சங்கத்தின் ஆதரவின் கீழ் மிஸ்டர் மாசனை என்பவர் மேற்கண்டவிஷயமாக ஒரு உபந்யாஸம் செய்தார். அவர்செய்த ப்ரஸங்கத்தின் சுருக்கம்:—ஸமூகத்தைத் திருத்தவேண்டுமென்று பலர் உழைத்து வருகிறார்கள். அவர்கள் முக்யமாக கவனிக்கவேண்டியவிஷயம் பெற்றோர்களின் நற்பழக்கமும் தேகஸ்திதியும்தான். துர்ப்பலமுள்ள குழந்தைகளடங்கிய தேசம் சத்துருக்களால் எதிர்க்கப்பட்டால், அத்தேசம் அவர்களுக்குட்பட்டுப் போகவேண்டிவருமென்பது தற்கால யுத்தத்தால் நிதர்சனமாகிறது. குழந்தைகளை ஜாதீயவாழ்க்கையில் பயிற்சிசெய்வதைவிட வேறு ஒரு உபயோகமான கார்யமில்லையென்று சொல்லலாம். மேனாடுகளிலுள்ள முக்யதேசங்களில் குழந்தைகளைக் காப்பாற்றும் விஷயத்தில் மிகுந்த கவலையெடுத்து வருகிறார்கள். தாதிகளும் டாக்டர்களும் பிரதி ஸ்கூலையொட்டியிருக்கிறார்கள். கிறிஸ்தவ மிஷன்காரர்கள் குழந்தைகள் வளர்க்கும் விஷயத்தில் வெகுகவலை செலுத்திவருகிறார்கள். தற்காலம் அடிமைவ்யாபாரம் நிறுத்தப்பட்டுப்போனாலும் பம்பாய் மார்க்கெட்டுகளில் மிகத்துணிகரமாக குழந்தைகள் விற்கப்பட்டு வருகின்றன. தெருக் குழந்தைகளைக் காப்பாற்றும் விஷயத்தில் மற்ற நாகரீகமடைந்த தேசங்களைப் பார்த்து கவர்னமெண்டார் அநுஷ்டிக்கலாம். பெரிய பட்டணங்களில் ஏழைக்குழந்தைகளைக் காப்பாற்ற பரோபகாரச் சங்கங்கள் ஸ்தாபிக்கப் படவேண்டும். மிஸ்டர் மாஸனை பேசினவிஷயம் மிகவும் அருமையாயிருக்கிறது. இதை ஜனங்கள் கவனிக்கவேண்டியதவச்யம்.

---

# COTTAGE INDUSTRIES & THE INTERESTS OF WOMEN.

By

Sri Bagirathi Ammal.

## கைத்தொழில்களும் ஸ்த்ரீகளின் க்ஷேமலாபங்களும்.

இப் 'பெண்கல்வி' ப்பத்ரிகையில் ஸ்த்ரீகளும் கைத்தொழில்களும் என்கிற விஷயத்தைப்பற்றி பலர் பல வ்யாஸங்கள் எழுதியிருக்கின்றனர். கைத்தொழில்களும் ஸ்த்ரீகளின் க்ஷேமலாபங்களும் என்னும் விஷயத்தைச் சுருக்கமாக எழுதுகிறேன்.

தொழிலிலும், அதன் மூலமாய் பணத்திலும் உண்டாகும் ப்ரேமையால் மேனாடுகளில் உண்டாயிருக்கும் சில விரும்பத்தகாத அம்சங்கள் நம்தேசத்தில் முளைவிடாமல் பாதுகாக்கவேண்டியது நமது பெருங்கவலையாயிருக்கவேண்டும். க்ருக க்ருத்யங்களையும், குழந்தைகளைப் போஷித்தல் வளர்த்தலாகிய கார்யங்களையும் ஸரியாய் கவனிக்க ஸ்த்ரீகளுக்கு இயற்கையிலேயே சில அம்சங்களிருக்கின்றன. ஒரு நாட்டின் எதிர்கால நிலை குழந்தைகளைப் பொருந்தியிருக்கும்பொழுது இவர்களுடைய பயிற்சி நல்லறிவுள்ள தாய்மார்களாலேயே கவனிக்கப்படவேண்டும். யார்தான் என்ன அன்பும் ஆதரவுமுடையவர்களாயிருந்தாலும், தாயுடைய அன்புக்கும் ஆதரவுக்கும் ஈடாகாது. ஆகையால், முக்யமாக ஸ்த்ரீகள் குழந்தைப்பயிற்சி, க்ருக க்ருத்யங்களாதிய கார்யங்களை கவனித்து ஒழிந்த நேரங்களில் மட்டும் லாபகரமான தொழில்களைச் செய்யப் பார்க்கவேண்டும். ஏனென்றால், மேனாடுகளில் அனேக ஸ்த்ரீகள் உத்யோகக் கவலையாய் இல்லற இன்பத்தையே அறியாதவர்களாயிருக்கிறார்கள். குழந்தையிடம் தாயிக்குள்ள அன்பையறியாதிருக்கிறார்கள். குழந்தை தன் அன்பைக்காட்ட கண்டறிந்து ஸந்தோஷப்படக் கொடுத்து வைக்காதவர்களாயிருக்கிறார்கள். பொன்னுடையரேனும், புகழுடையரேனும் குழந்தைகளின் மழலை மொழிகளைக் கேட்டானந்திக்காதவர்கள் ஜன்மம் வீண்ஜன்மமே. மேல்நாட்டில் ஸ்த்ரீகளுக்குப் பிடித்திருக்கும் உத்யோகப்பித்து நம்முடைய ஸஹோதரிகளுக்குப் பிடிக்கக் கூடாது. ஸமயம் நேர்ந்தபொழுதெல்லாம் இல்லறதர்மங்களை நமது ஸஹோதரிகளுக்கு மேலும் மேலும் போதித்து அவர்கள் மனம் முதன்மையாய் இதிலேயே நாடும்படிச் செய்யவேண்டும். உத்யோகப் பித்தேறிய ஸ்த்ரீகள் ஜனஸமூக வ்ருத்திக்கு



உதவாதவர்களாய் வாழ்ந்து காலத்தை வீணாக்குகிறார்கள். ஒவ்வொரு ஸ்த்ரீயும் தேசஸேவைக்கு உத்தமசற்குண புத்ரர்களை காணிக்கையாக ஸமர்ப்பிக்கவேண்டியவளென்பதை உணரவேண்டும். திடசரீரிகளாயுள்ள புத்ரர்களை நம் இந்தியதேசம் ஒவ்வொரு ஸ்த்ரீயிடமிருந்தும் எதிர்பார்க்கிறது.

ஸாதாரணமாக ஒரு ஹிந்து ஸ்த்ரீக்கு 11-மணியிலிருந்து இரண்டுமணிநேரம் அவகாசமுண்டு. இந்தநேரத்தில் ப்ரதிதினமும் கூடியவரை க்ரமமாய் குல்லாய் போடுகிறதோ, மேஜோடு போடுகிறதோ, ரவிக்கை கைகுட்டை தைக்கிறதோ, படமெழுதுகிறதோ, ஏதாவது ஒன்று செய்யலாம். தற்காலத்தில் குல்லாய், டை, மேஜோடுகள் முதலியன நம்மவர்கள் உபயோகப்படுத்துவது ஸஹஜமாய்க்கொண்டு வருகிறது. இவைகளுக்கு நல்ல கிராக்கியிருக்கிறது. 2½ அணாவுக்கு நூல் வாங்கினால் ஒரு நாளில் இரண்டு 'டை' போடலாம். டை யொன்று 5 அணா 6 அணாவுக்கு விற்கிறது. ஸராஸரி மாஸத்துக்கு ஒருத்தி 'டை' போடுவதில் வீட்டிலிருந்தபடியே 10-ரூ. முதல் 15-ரூ வரையில் ஸம்பாதிக்கலாம். அதிக ச்ரமப்பட்டால் அதிகம்கிடைக்கும். யூரோபிய ஸ்த்ரீகள் இந்த மாதிரி தொழில்கள் செய்வதால் தங்கள் தங்கள் குடும்பங்களுக்குவேண்டிய துணிமணிகளைத் தங்கள் ஸம்பாத்யத்திலேயே வாங்கிக்கொள்வதோடு குடும்பநிர்வாகத்தை லகுப்படுத்துகிறார்கள். கைத்தொழில்களைப் பெண்கள் அறிந்திருக்கவேண்டுமென்றுதான் பாலிகாபாடசாலைகளிலெல்லாம் கைத்தொழில்கள் கற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றன. நமது பெண்கள் பள்ளிக்கூடம் விட்டதும் புஸ்தகத்தைக் கட்டி மூலையில் போட்டுவிடுவதுபோல் கற்றதொழிலையும் அப்யசிப்பதில்லை. அவர்களுக்கு ஊக்கமுண்டாகும்படி அடிக்கடி ஸ்த்ரீ சங்கங்களில் பொருட்காக்ஷிகள் வைக்கவேண்டும். தேர்ந்த வேலைப்பாடுகளை மதித்து ஸன்மானம் செய்யவேண்டும். ப்ரசங்கங்கள் மூலமாய் கற்ற தொழிலை வ்ருத்திசெய்வதிலிருக்கும் பலவிதமான லாபங்களை எடுத்துச் சொல்லவேண்டும்.

பாகீரதி.

# BHISHMA'S VOW.

By
**Mr. K. P. Seshadri Aiyangar**
*(of the Madras Tamil Sangam.)*

## பீஷ்மரின் ப்ரதிக்ஞை

பீஷ்மர் கங்காதேவிக்கும் சந்தனு மஹாராஜாவுக்கும் பிறந்தவர். அவர் சிறுவராயிருக்கும்போதே அஸ்த்ர சாஸ்த்ரங்களில் தேர்ச்சி பெற்றிருந்தார். வித்யாஸம்பன்னராயும், பகவத்பக்தி மிகுந்துள்ளவராயும், லோகஞானம் விசேஷமாக அடைந்துள்ளவராயும் இருந்தார். அவரது புத்திவிசாலமோ சொல்லத்தரமன்று. ஸத்ய பராக்ரமத்தில் தேவர்களைப்போலிருந்தார். எவ்வளவுக்கெவ்வளவு இவைகளில் மேன்மை பொருந்தியிருந்தாரோ, அவ்வளவுக்கவ்வளவு பிதுர்பக்தியும், பிதுர் வாஞ்சையும் அடைந்திருந்தார்.

பிதுர்பக்தியுடையவர் என்பதை நன்றாக லோகத்தவர்க்கு தாமே நடந்து காட்டினார். ஒருநாள் அவரது தந்தை யமுனா நதிக்கரையில் உலாவிக்கொண்டிருந்தார். அப்பொழுது சூர்யன் அஸ்தமிக்கும் ஸமயம். அந்த நதி தீரத்தில் ஓர் அழகிய அங்கனா மணியைக்கண்டு எவ்விதத்திலாவது அப்பெண்மணியைத் தாமே விவாஹஞ்செய்துகொள்ளவேண்டும் என்று விரும்பினார். அந்த ஸௌந்தரவதியோ ஒரு செம்படவனின் புத்ரி. அந்த செம்படவன் தன் புத்ரிக்குப் பிறக்கும் புதல்வனுக்கே ராஜ்யத்தைக் கொடுப்பதாக வாக்குறுதிசெய்தால், தன் பெண்ணை ராஜனுக்கு விவாஹஞ் செய்து கொடுக்க ஸம்மதிப்பதாகக் கூறினான். இதற்கு சந்தனு ராஜன் உடன்படவில்லை. ஏனென்றால், இதற்கு முன்னமேயே தமக்கு பீஷ்மர் பிறந்திருக்கிறாரன்றோ? ஆகவே, சந்தனுராஜன் சிந்தாக்ரந்தராய் அரண்மனைக்குத் திரும்பினார்.

பீஷ்மர், தம் தந்தை அரண்மனையை அடைந்ததும் அவரது வருத்தத்தின் காரணத்தை அறிய அவரைப் பணிவாகக் கேட்டார். பிதா தனயனுக்கு வருத்தத்தின் காரணத்தைச் சொல்லவில்லை. ஆகவே, எவ்விதத்திலாவது இதைக் கண்டறியவேண்டுமென்று தேவவ்ருதனான பீஷ்மர் தகப்பனாரின் புராதன மந்த்ரியிடம்சென்று



கேட்டார். அதற்கு அவர், அவரது பிதா ஒரு செம்படவனின் பெண்ணை மணங்கொள்ள மனங்கொண்டிருப்பதாகவும், அதுவே துக்கத்திற்கு ஹேதுவென்றும் சொன்னார். அப்பொழுதே பிதுர் பக்தியையே கண்ணாகவுடைய தேவவ்ருதன், சில வீரர்களுடன் செம்படவன் குடிசையை நாடிச்சென்றார். அங்கு சென்றதும் அந்தச் செம்படவனைக் கண்டு அவனது குமாரியை மஹாராஜாவுக்கு விவாஹம் செய்துகொடுக்கும்படிக் கேட்டார். அதற்கு அந்தச் செம்படவன், தன் புத்ரியான ஸத்யவதியை ராஜனுக்குத்தரத் தனக்கு இஷ்டமில்லையென்றான். ஏனென்றால், ஏற்கனவே மஹாராஜனுக்கு ஒரு புத்ரன் இருக்கிறான் என்றும் அவன் ஸத்யவதிக்குப் பிறக்கும் ஸந்ததிக்குச்சத்ருவாக இருப்பான் என்றும் சொன்னான். இந்த வார்த்தையைக் கேட்டதும் தேவவ்ரதருக்கு மனம் ஸஹிக்கவில்லை. ஆகவே வீராதிவீரர்களுக்கு முன்னே நின்று "ஹே! வீரஸிம்ஹங்காள்! எனது ப்ரதிக்ஞையை சற்று செவி சாய்த்துக் கேளுங்கள்; ஹே! செம்படவத்தலைவா! நீ என்னென்ன விரும்புகின்றாயோ அவைகளையெல்லாம் நான் நிறைவேற்றச் சித்தமாக இருக்கின்றேன். இதோ! இந்தத் தேவியின் வயிற்றில் அவதரிக்கும் புத்ரனே எங்களெல்லாருக்கும் அரசன். அவனே இந்நாட்டுக்கதிபதி" யென்று சொல்லிக்கொண்டே தமது மகுடத்தை கீழே எடுத்தெறிந்தார். அப்பொழுதே அந்தச்செம்படவனுடைய விருப்பத்தைப் பூர்த்திசெய்தார். அப்படிச்செய்தும் செம்படவன் மனம் திருப்தியடையவில்லை. தேவவ்ரதர் வாக்தானம் செய்ததை மறுக்க மாட்டாரானாலும், அவரது புத்ரர்களும் அவரைப் போலவே இருப்பார்கள் என்பது என்ன நிச்சயம் என்ற ஸந்தேகம் தனக்கிருப்பதாக வெளியிட்டான்.

"நான் முதலிலேயே ராஜ்யாதிபத்யத்தைக் கொடுத்துவிட்டேன். இப்பொழுது எனது ஸந்ததியைப்பற்றிய ப்ரச்னத்திற்கு விடை பகருவேன். ஹே! செம்படவனே! இன்று முதல் நான் ப்ரஹ்மசாரியாகவே இருந்து காலங்கழிக்கின்றேன். எனக்குப் புத்ரனில்லாமற்போனபோதிலும் நான் மோக்ஷம் எய்துவேன்!" என்று தேவவ்ரதர் மொழிந்ததும் தேவர்களெல்லாம் ஆகாயத்தினின்றும், தம் பிதாவுக்காக தமது ஸௌக்யத்தையும், அதிகாரத்தை

யும் பொருட்படுத்தாமல் நடந்துகொண்ட தேவவ்ரதர் மீது புஷ்ப வர்ஷம் வர்ஷித்தார்கள். தேவர்களெல்லாம் "இவரே பீஷ்மர்! இவர்தான் பீஷ்மர்" என்று கூக்குரலிட்ட சப்தம் எங்கும்கேட்கப் பட்டது. ஆமாம்! வாஸ்தவத்தில் அவர்தான் பீஷ்மர்; தமது தர்மத்தை ஒருவித தோஷமின்றி பூர்த்தி செய்தவரன்றோ? அவர் மனிதர்கள் ப்ரபஞ்சத்தில் பெறத்தக்க போகத்தைத் திரஸ்கரித்தவரன்றோ? பிதுர்பக்த ச்ரேஷ்டரல்லவா பீஷ்மர்?

பீஷ்மர், ஸௌந்தரவதியான ஸத்யவதியின் பக்கம் திரும்பி, "என் அன்னையே! இந்த ரதத்தின்மீது ஏறும். நமது அரண்மனைக்குச் செல்வோம். எனக்கு நீரே மாதா" என்று இனிய மொழிகளால் சொன்னார். அதற்கு ஸத்யவதியும் ஸம்மதித்தாள். சந்தனு தம் ஆத்மப்ரியையான ஸத்யவதியைக் கண்டதும், அவளைத் தமக்கு மனைவியாக்கிய தம் தனயனைப்பார்த்து "என் அரும் தேவவ்ரதா! உன்னைப் புத்ரனாகப் பெற்ற நானே பாக்யவான் இப்ரபஞ்சத்தில். நீ இந்த வுலகத்தில் எவ்வளவு நாள் இருக்க எண்ணங்கொள்கின்றாயோ அவ்வளவு நாள் இருக்கலாம். உன்மீது, யமனுக்கு அதிகாரம் கிடையாது. நீயே இவ்வாழ்க்கையைத் துறக்க எண்ணங்கொண்டால் இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகையடைவாயாக!" என்று வரத்தைத் தந்து வாழ்த்தினார். ஆகவே பிதுர் பக்தியால் ஒருவன் சாகாமலிருக்கமுடியும் என்றால் அப்பக்தியின் சக்திதான் என்ன? இதை வாசிக்கும் நமது சிறுவர்களும் பீஷ்மரையே திருஷ்டாந்தமாகக்கொண்டு பிதாவினிடத்தில் பக்தியுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

சேஷசயனம்,
20-10-15.

K. P. சேஷாத்ரி ஐயங்கார்.

---

எவ்வளவு படித்தவனாயிருந்தாலும் அவன் உலகத்தோடொத்து வாழவேண்டும். சுத்தஞானிகள் கூட ஜனங்கள் மத்தியிலிருந்து அவர்களுக்கு நல்ல வழியைக் காண்பிக்கவேண்டும்.—ஹோரேஸ்.

*    *    *    *

ப்ரதி ஸ்த்ரீயிடமிருந்தும் சற்புத்ரர்களை இந்திய மாதா தனது வேலைக்கு எதிர்பார்க்கிறாள்.—மிஸஸ் பேஸண்ட்.

# MARRIAGE CUSTOMS IN JAPAN.

By

**Sri. K. Meenatchi.**

## ஜப்பானியர்களின் விவாஹ வழக்கங்கள்.

மேனாட்டு நாகரீகம் ஜப்பானிலும் ஜாஸ்தியாகப் பரவிவருகிறது. அதன் வசீகரசக்தியே சக்தி; ஜப்பானில் உயர்ந்த வகுப்பார்களும் மத்யவகுப்பார்களும் தங்கள் வாழ்நாளில் பல மாறுதல்களை அடைந்திருக்கின்றனர். ஆனால், தாழ்ந்தவகுப்பார்களுக்குள் இன்னும் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை.

ஜப்பானில் பழைய வழக்கத்தை அனுஸரித்து ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களெல்லோரும் அக்குடும்ப யஜமானனின் இஷ்டப்ரகாரம் நடந்து கொள்ளவேண்டும். ஒரு ஸ்த்ரீயானவள் கல்யாணமாகாதபோது தகப்பனுக்கும், கல்யாணமான பிற்பாடு புருஷனுக்கும் அவனுடைய பெற்றோர்களுக்கும், விதவையானபின் தன் மூத்தபிள்ளைக்கும் அல்லது ஸ்வீகாரப்புத்ரனுக்கும் அடங்கியிருக்கவேண்டும். சட்டப்படி ஒரு குடும்பத்துக்கு ஒரு யஜமானன் தானிருக்கலாம். மூத்தபிள்ளைக்குத் தகுமான வயது வந்தவுடன் குடும்ப அதிகாரத்தைப் பெரியவர்கள் அவனிடம் ஒப்புவித்துவிடுகிறார்கள்.

ஸ்த்ரீகள் புருஷர்களுக்கு உட்பட்டே நடக்கவேண்டும். குடும்பத்திலுள்ள சிறியவர்கள் பெரியவர்களுக்குட்பட்டு நடந்தே தீரவேண்டும். அற்ப விஷயங்களில் கூட குடும்ப அதிகாரத்தை வகித்தவன் இட்டது சட்டம். ஜப்பான் தேசத்தில் கல்யாணமென்றால் ஸ்வீகாரமெடுத்துக்கொள்வது என்று அர்த்தம். கல்யாணமான ஒரு பெண் தன்னுடைய புருஷன் குடும்பத்தில் ஸ்வீகாரமெடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு குழந்தையாக பாவிக்கப்படுகிறாள். ஒரு பெண்ணின் புருஷனும் கூட பெண்குடும்பத்தில் ஸ்வீகாரம் புகுந்தவனைப் போல் பாவிக்கப்படுகிறான். இப்படி ஸ்வீகாரம் புகுந்த பெண்ணாவது புருஷனாவது பெற்றோர்களின் ஆக்ஞைக்குட்பட்டிருக்கிறார்கள். பெற்றோர்களின் தீர்மானத்தின் பேரில் கல்யாணமான புருஷனை பெண்ணை விட்டுப் பிரித்துவிடலாம். கல்யாணமென்பது சிறுவன் சிறுமிகளின் ப்ரயத்தனத்தின் பேரில் ஏற்படுகிறதல்ல. இது ஜப்பானிய வழக்கத்தை யனுஸரித்த ஒரு குடும்பச்சடங்காகும்.

கல்யாணப்பிள்ளையின் பெற்றோர்கள் இறந்திருந்தால் கல்யாணச் சடங்கானது ஸ்மசானத்தில் அவர்களை அடக்கம் செய்த இடத்தில் நடக்கும். கல்யாணத்தைப் பதிவுசெய்யுமதிகாரிக்கு விவாஹப்பெண்ணும் மாப்பிள்ளையும் முன்னதாகத் தெரிவித்துக்கொள்ள வேண்டும். ஒரு விவாஹத்துக்கு இரண்டு சாக்ஷிகள் அவச்யம். குடும்ப யஜமானன்மட்டும் விவாஹம் தன் இஷ்டப்படி செய்துகொள்ள பாத்யமுடையவன். மற்றவர்கள் விவாஹ விஷயத்தில் பெற்றோர்களின் ஸம்மதத்தைப் பெறவேண்டும். அல்லது குடும்பக் கமிட்டியின் அனுமதியைப் பெறவேண்டும். 30 வயதிற்குட்பட்ட புருஷர்களும் 25 வயத்திற்குள்பட்ட ஸ்த்ரீகளும் குடும்ப யஜமானனின் அனுமதியன்னியில் கல்யாணம் செய்துகொள்ளக்கூடாது.

விவாஹத்தின் முக்யமான விஷயம் என்னவென்றால் சான் சான் கூடு என்பது. அதற்குப்பொருள் மும்மூன்று ஒன்பது என்பதுதான். அதாவது கல்யாணப் பெண்ணும் பிள்ளையும் 6 வித்யாஸமான உருவங்களையுடைய கிண்ணங்களிலிருந்து சாதத்தை எடுத்துச் சாப்பிடவேண்டும். சாராயத்தையும் மூன்று தடவை எடுத்துக் குடிக்கவேண்டும்; கல்யாணம் செய்யக்கூடிய வயது ஆண்களுக்கு 17; பெண்களுக்கு 15. கல்யாணமானது ஜனசங்கத்துக்குரிய ஒரு நடவடிக்கையாகும். ஒரு பதிவு செய்யும் உத்தியோகஸ்தருக்கு (Registrar) தெரிவிக்கப்பட்டவுடன் அமுலுக்கு வருகிறது. ஒருபுருஷனும் ஒரு பெண்சாதியும் ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்துகொள்ள கடமைப்பட்டிருக்கிறார்கள். பெண்ணுக்கு ஏதாவது ஸொத்துக்களிருந்தால் புருஷன் அவைகளை நிர்வகித்து வருவான். புருஷன் அசக்தனாயிருந்தால் அவன் ஸொத்துக்களையும் சேர்த்து பெண்சாதி தானே தன் ஸொத்துக்களுடன் பரிபாலித்துக்கொள்ளுகிறாள். குடித்தன விஷயங்களில் பெண்சாதி தன் புருஷனுக்கு ஏஜண்டாக இருந்துவருகிறாள்.

கல்யாணத்தைப் போலவே அதை ரத்து செய்யவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. அல்லது கோர்ட்டு மூலமாய் ரத்து செய்யப்படுகிறது. கல்யாணம் எவருடைய ஏற்பாட்டினால் செய்யப்பட்டதோ அவருடைய ஸம்மதமன்னியில் 30 வயதிற்குட்பட்டவர்களின் கல்யாணத்தை ரத்து செய்துகொள்ள முடியாது.



ஜப்பானில் ஸன்மார்க்கங்களைப் போதிக்கிற மதமானது ஸ்த்ரீகளை அதிகமாய் நிந்திக்கிறது. இந்த பட்சபாதகத்தை கிறிஸ்தவர்களின் மனதிலிருந்தும் நீக்குவது கஷ்டமாயிருக்கிறது. கிறிஸ்தவர்களின் கல்யாணச் சடங்குகளில் சில திருத்தங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்ட ஒரு ஜப்பானிய கிறிஸ்தவனைக் குறித்து ஒரு பாதிரி ஒரு கதை சொல்லுகிறார்.

"கிறிஸ்தவன் சொன்னதாவது 'குருவே! ஸ்த்ரீக்குப் பக்கத்தில் ஜனங்களுக்கு முன்னால் என்னைநிற்கக் கட்டாயப்படுத்தவேண்டாம். அப்படித்தான் கல்யாணத்தின்போது எப்போதும் நிற்கவேண்டுமென்று தெரிவிக்கப்பட்ட பிற்பாடு என்னை பெண்சாதியின் கையைத்தொடவேண்டாமென்றாவது சொல்லுங்கள். கிறிஸ்தவச் சடங்கு, கிறிஸ்தவச்சடங்கைப்போலவே நடத்தவேண்டு'மென்று தெரிவித்தான். உங்களுடைய வலதுகைகளைச்சேர்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லப்பட்டபோது இந்த பயம் பிடித்த கிறிஸ்தவ மாப்பிள்ளையானவன் பல்லைக்கெட்டியாய்க்கடித்துக்கொண்டு கண்களை இறுக்கி மூடிக்கொண்டு ஒரு கத்தி வெட்டுக்குப் பயப்படுவதுபோலத் தன்கையை நிரம்ப ஸந்தேஹத்துடன் சேர்க்காமலே நின்றுகொண்டிருந்தான்."

கே. மீனாக்ஷி.

---

## THE THREE DESIRES

**By**

**Palnidasan.**

### ஏஷணாத்ரயம்

இது மூவகைப்படும்: அர்த்தேஷணை, புத்ரேஷணை, தாரேஷணை. இவைகளில் அர்த்தேஷணையைப்பற்றிமட்டும் நாம் சுருக்கமாகச் சொல்லுவோம். மனிதர்களுக்கு த்ரவ்யத்தின்மீதுள்ள ஆசை பெரிது. அந்த ஆசையினால் வரும் பலனும் பெரும் துக்கமாகவேயிருக்கிறது. அதைச் சற்று நாம் ஆராய்வோம்.

"அர்தாநாமார்ஜனே துக்கம்
ஆர்ஜிதானாம்ச ரக்ஷணே
நாஸே துக்கம் வ்யயே துக்கம்
திமிர்த்தம் துக்க பாஜனம்."—என்றும்,

"இன்னறரும் பொருளை யீட்டுதலும் துன்பமே
பின்னதனைப் பேணுதலும் துன்பமே—அன்ன
தழித்தலும் துன்பமே யந்தோ பிறர்பா
லிழித்தலும் துன்பமே யாம்."

துன்பத்திற்கேதுவாகிய த்ரவ்யத்தை ஸம்பாதிப்பதும் துக்கம். ஸம்பாதித்த பொருளைக் காப்பாற்றுதல் அதிலும் துக்கம். அப்பொருளுக்குச் செலவு நேரிடில் அதுவும் துக்கம். அடியோடு நாசம் வரின் எல்லாவற்றிலும் மேலான துக்கம். இவ்வித துக்கங்களுக்கிருப்பிடமாகிய பொருளினிடத்து ஆசைவைப்பதால் என்ன ப்ரயோஜனம்? மேலும் த்ரவ்யம் ஸத்ஜனங்களுக்கு நயவினய சௌஜன்யங்களை உண்டாக்கும். துஷ்டர்களுக்கு மதத்தையும் கர்வத்தையும் உண்டுபண்ணும்.

பாமரர்கள் த்ரவியம் தேடவேண்டுமென்று இரவென்றும் பகலென்றும் கவனியாது, அன்னாகாரங்களையும் தொடாது, போகத்தகாத விடங்களுக்கெல்லாம் போய், செய்யத்தகாத கார்யங்களையெல்லாஞ்செய்து, பலவித் சங்கடங்களுக்காளாய்த் தேடியபொருளை தானதர்மம் பரோபகாரம் செய்வதால் த்ரவிய நஷ்ட முண்டாகுமென்று தன்னை நம்பினோர்களை நடுவீதியில் விட்டு, தானு மனுபவியாது, பிறருக்கீயவும் மனம் வராது ஈக்கள் தேனைச்சேர்ப்பதுபோல் சேர்த்துவைக்கிறார்கள். முடிவில் அத் திரவியத்திற்கு திருடர்களால், அக்கினியால், அரசனால், துர்வ்யாஜ்ஜியங்களால் இவைகளொன்றினால் நாசமேற்பட்டு நஷ்டமானபிறகு வாயை வயிற்றைக் காட்டி 'சம்பாதித்த த்ரவியம் போச்சே' என்கிற ஏக்கத்தினால் "எண்ணாத வெண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி யேழைநெஞ்சம் புண்ணாகி" நாளுக்குநாள் அன்னாகாராதிகளில் இச்சை செல்லாது தேகம் மெலிந்து மரணமடைந்தவர்கள் எத்தனை பேர்களைக் கேட்டும் கண்டும் வருகின்றோம்.

த்ரவியம் வைத்துக்கொண்டிருப்பவர்கள் நமக்குக் கடவுள் கிருபையால் கிடைத்தமட்டில் போதும், இனி வேண்டுவதில்லை, என்கிற திருப்தியை ஒருநாளும் ஒருவரும் அடைவதில்லை. ஒருவன் ஆரம்பத்தில் நூறு ரூபாய் சேர்க்க வேண்டுமென்று முயற்சிக்கின்றான். அது கைகூடில் இருநூறு ரூபாயாக வேண்டுமென்று ப்ர



யாசைப்படுகின்றான். அது லபித்தால் ஆயிரம். அதற்குப்பிறகு பதினாயிரம். இப்படியே அவ்வாசையானது மென்மேலும் அதிகரித்துக்கொண்டே போகும். ஒருவனிடத்தில் ஏராளமான த்ரவியமிருக்குமாகில், அதைக் க்ரகிப்பதற்காக அவன் சுற்றத்தார், சகோதரர்கள், தாயாதிகள், புத்ரர்கள், மித்ரர்கள், மனையாள், சோரர்கள், முதலானவர்கள் ஒருவரை யறியாமல் ஒருவரடைய வேண்டுமென்கிற வெண்ணத்தால் உயிர்வதை செய்யச் சமயம் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

பூர்வத்தில் விஷ்ணுஞானி யென்னும் ஒரு பக்தர் இருந்தார். அவருக்கு வைராக்கியம் பிறந்தது. அவர் தம்முடைய ஸொத்துக்களை தானதர்மங்கள்செய்து அனைத்தையும் செலவழித்து தாமும் தம்மனைவியுமாய் காட்டிற்குச் சென்று வானப்பிரஸ்தாச்ரமத்தை யடைந்து பக்திபண்ணிக்கொண்டிருந்தார். இந்த சரீரமுள்ளவரையில் பசிக்குமல்லவா? காட்டில் உலர்ந்த கட்டைகளை சேகரித்து க்ராமத்திற்குக்கொண்டுபோய் விற்று அதனால் கிடைக்கும் பொருளைக்கொண்டு பசிநோயைப் போக்கடித்து காலங்கழித்து வந்தார்கள்.

ஒருநாள் அக்காட்டில் ஓர் புதரில் தனக்குவியலைக் கண்டார்கள். தம்பதிகள் இருவரும் கண்டுபயந்து நம்மைப் பின்பற்றி வந்திருக்கின்றதே! நாமென்ன செய்வது! இக்காட்டைவிட்டு வேறுகாட்டிற்குச் செல்வதாக உத்தேசித்துப் புறப்பட்டார்கள். எதிரில் இரு சஹோதரர்கள் தம்பதிகளைச்சந்தித்தார்கள். தம்பதிகளின் முகங்களைக்கண்டு "ஐயா, தாங்கள் பயந்துவருவதாகக் காணப்படுகிறீர்களே! அதற்குக் காரணம்யாது?" என்று இரு சகோதரர்களும் வினவ, அப்பெரியோர், "வாலிபர்களே! நீங்கள் இவ்வழியாகப் போகவேண்டாம். அங்கோர் புதரினிடத்தில் 'உயிர்க்கொல்லி' இருக்கின்றது. உங்களுக்கும் ஏதேனும் ஆபத்துண்டாகும்" என்று சொல்ல, அவ்விரு சகோதரர்களும் கலகலவென்று நகைத்து, "நாங்கள் இதுவரையில் 'உயிர்க்கொல்லி' என்கிற ஒரு பிராணி இருப்பதாகக் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. துஷ்டம்ருகங்கள் உயிரைக் கொல்லுவது ஸஹஜம். அவைகளை இப்பேரிட்டு இதுவரையிலொருவரும் அழைத்ததில்லை. நீங்கள் சொல்லுவதைக் கேட்டால் மிக ஆச்சரியமாகவிருக்கின்றது. சற்று தயவுசெய்து எங்களுக்கு அப்பிராணியைப்

காண்பிக்கவேண்டும்" என்று வற்புறுத்த, அப்பெரியோர் அவ்விடத்தைக் கொண்டுவந்து காண்பித்தார். அச்சகோதரர்களிருவரும் அப்புதையலைக்கண்டு ஆச்சரியமும் சந்தோஷமுமடைந்து "ஐயா, இது எங்களை யொன்றுஞ் செய்யாது. நீங்கள் சுகமாய் உயிர்தப்பிப்போகலா"மென்றுவிடைகொடுத்தனுப்பிவிட்டார்கள். சகோதரர்களிருவரும் இனி நமது தாரித்ரியம் அதமாய்ப் போயிற்று என்கிற ஸந்தோஷத்தையடைந்து, அப்புதையலிலுள்ள பொருளனைத்தையும் இருவருமாக எடுத்து சுமக்கமாட்டாத சுமையாகக் கட்டிக்கொண்டு இதனை கிராமத்திற்குச் சமீபத்திற் சென்று பாகித்துக்கொள்ளுவோமென்று சுமந்துகொண்டுவந்து, ஓர் மறைவான விடத்தில் வந்து தங்கினார்கள். இருவர்களுக்கும் பசியினுபத்திரவம் மேலிட்டதால் அதை முந்தி தீர்த்துக்கொண்டு பிறகு க்ராமத்திற்குள் சென்று ஏதேனும் தின்பண்டம் வாங்கிவந்தால் இருவரும் தின்று சற்று இளைப்பாறிப் போகலாமென, அதற்குத் தம்பியானவன் சம்மதித்து கிராமத்திற்குள் சென்று தனக்கு வேண்டியவைகளைத் தின்று பசியாறி யோசிப்பதாவது:—இப்பொழுது கிடைத்திருக்கும் த்ரவியமெல்லாம் நானொருவனே யடையும் பக்ஷத்தில் வெகு காலம் சுகமாய் காலங்கழித்துவரலாம், மூத்தவன் இருக்குமளவும் அவ்வெண்ணம் நிறைவேறாது. அவனைச் சதிசெய்து நானொருவனே யடையவேண்டுமென்றெண்ணி தமயனுக்கு வாங்கிய தின்பண்டங்களில் விஷங்கலந்து கொண்டுவந்தான். புதையல் பொதியைக் காத்துக்கொண்டிருந்தவன் யோசித்ததாவது:—இவ்வளவு தனத்தையும் நானொருவனே யடைவேனாகில் வெகுகாலம் சுகமாய் ஜீவிப்பேன். இளையவன் இருக்கும்வரையில் இவ்வெண்ணம் பலியாது. அவன் தின்பண்டங்களை வாங்கிக்கொண்டுவந்து பூமியில் வைக்கும்பொழுது கழுத்தை வெட்டி யிருதுண்டாக்கிவிடுவதே தகுந்த யுக்தியென்று ஏற்கனவே தன்னிடத்திலிருந்த கத்தியை அவ்விடத்திலுள்ள கற்பாறையில் தேய்த்துப் பதப்படுத்தி சித்தமாய் வைத்துக்கொண்டான். தின்பண்டங்களை வாங்கிக்கொண்டு வந்த இளையவன் அவைகளைப் பூமியின்மீது வைத்தசமயத்தில் தன்னுடைய உடைவாளை யுருவி ஒரே வெட்டாக வெட்டி அவ்வுடலை ஓர் புதரில் மறைத்துவிட்டு தனக்கு மிகுந்த பசியிருப்பதால் விஷங்



கலந்த தின்பண்டங்களைத் தின்று மதிமயங்கி மரணமானான். 'தானொன்று நினைக்கில் தெய்வமொன்று நினைக்கும்' என்கிற பழமொழிப்படி முடிந்தது. த்ரவியத்தின் மீதிலுள்ள ஆசையினால் கள்வர்கள் எத்தனை உயிர்களை வதைக்கிறார்கள்? ஆகையால், அர்த்தேஷணை யென்னும் த்ரவியத்தின்மீதுள்ள வாசையினால் மனிதர்களுக்கு எக்காலத்தும் துக்கப்பிராப்தியே யொழிய சுகமென்பது கிஞ்சித்தேனுங் கிடையாதென்பது நன்றாய் விளங்குகின்றது.

பழனிதாஸன்.

---

## MEDICAL INSPECTION AND SCHOOL CHILDREN.

By

**R. Jayalakshmi Ammal.**

### வைத்ய பரிசோதனையும் பள்ளிக்கூடக்குழந்தைகளும்.

தற்காலம் பாடசாலைக் குழந்தைகளின் தேகஸ்திதி கவலைக்கிடமாயிருக்கிறது. சென்னை ராஜதானியிலுள்ள பாடசாலைக்குழந்தைகளின் தேகஸ்திதி எப்படியிருக்கிறதென்று அறியவே, நமது சென்னை கவர்ன்மெண்டார் ஒரு வைத்ய கமிட்டி ஸமீபத்தில் ஏற்படுத்தினார்கள். கவர்ன்மெண்டார் இவ்விஷயமாகக்கமிட்டி ஏற்படுத்தினது மட்டும் தெரியுமேயொழிய இதுவரையிலும் வேறொன்றும் தெரியவில்லை.

நாகரீகமடைந்த மேனாடுகளில் பல வர்ஷங்களாகவே ப்ரதி பள்ளிக்கூடத்தை ஒட்டி ஒரு வைத்தியர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அப்பள்ளிக்கூடக் குழந்தைகளின் தேகஸ்திதியைப்பற்றி வாராவாரம் கவர்ன்மெண்டாருக்கு ஒரு ரிபோர்ட் அனுப்பி வைப்பதே அவ்வைத்யரின் முக்கியவேலை. இவைகளையெல்லாம் யோஜித்தும் நமது பாடசாலைக்குழந்தைகளின் தேகஸ்திதியைக் கவனித்தும் சென்னை கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி ஏற்படுத்தினார்களென்று சொல்லலாம். இப்போது அக்கமிட்டியின் வேலையைப் பற்றித் தெரியாவிடினும் காலக்ரமேண தெரியுமென்பது நிச்சயம். இந்த ஸமயத்தில் பம்பாய் முனிஸிபாலிடியார் இவ்விஷயமாக யோஜனை செய்து பாடசாலைக்குழந்தைகளின் தேகஸ்திதியைப்பரிசோதித்து

அனுப்பும்படி ஒரு கமிட்டி ஏற்படுத்தினார்கள் அக்கமிட்டியாரும் முனிஸிபல் பள்ளிக்கூடக் குழந்தைகளின் தேக ஸ்திதியைப் பரிசோதித்து ஒரு ரிபோர்ட் அனுப்பியிருக்கிறார்கள். அந்த ரிபோர்ட் பின்வருமாறு தெரிவிக்கிறது. முனிஸிபல் பள்ளிக்கூடங்களில் வாசிக்கிற மொத்தக் குழந்தைகள் 5937. இவர்களில் நூற்றுக்கு 25 குழந்தைகள் அஜீர்ணநோயுடையவர்கள், நூற்றுக்கு 8 பேர் கணைநோயுடையவர்கள். மொத்தத்தில் க்ஷயரோகத்தால் வருந்தும் குழந்தைகள் 481. வயிற்றுக்கட்டியால் வருந்துங்குழந்தைகள் 83. மங்கலான பார்வையுடையவர்கள் 625. கண்வ்யாதியால் கஷ்டப்படுகிறவர்கள் 1725. ஸுமார் நூற்றுக்கு 40 குழந்தைகள் கண் ஸம்பந்தமான வ்யாதிகளால் கஷ்டப்படுகிறார்களாம். நூற்றுக்கு 30 குழந்தைகள் சொத்தைப்பல்லுடையவர்களாம். மேற்கண்ட ரிபோர்ட் பாடசாலைக் குழந்தைகளின் வ்யாதிகளைத் தெரிவிக்கிறதே யொழிய அவ்வியாதிகளுக்கு சிகித்ஸை அந்த ரிபோர்ட்டில் காணப்படவில்லை. முனிஸிபல் அதிகாரிகள் குழந்தைகளின் பெற்றோர்களோடு அவ்வியாதிகளைப் போக்கடிக்கக் கலந்து யோசித்து வருகிறார்களாம். மேலும் ஸ்கூல் கட்டடங்கள் அநேகமாக தேக சௌக்கியத்துக்குப் பொருந்தாதவைகளாயிருக்கின்றனவாம்.

நமது சென்னை கவர்ன்மெண்டார் அறிவிக்கப்போகிற ரிபோர்ட்டில் குழந்தைகளின் தேகஸ்திதியை மிக ஆவலோடு எதிர் பார்ப்போம்.

ஆர். ஜயலக்ஷ்மி.

---

வாழ்க்கையை கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாக்காமல் செய்யவேண்டுமென்றால் உண்மைபேசுதலை அப்யாஸம்செய்.—மேனண்டரர்.

*　　*　　*　　*

ஒரு ஸமூகத்தில் ஸாவதானமும் சாந்தபுத்தியும் உடையவர்களோடு சேர்ந்து வாழ்வதைக்காட்டிலும் உலகத்தில் வேறுஸுகம் கிடையாது.—ஹோரயர்.

*　　*　　*　　*

ஸத்ஜனங்களின் க்ஷேமலாபங்களை கடவுள் தமதாக பாவித்துக்கொள்கிறார். துஷ்டர்களைக்கண்டு பகவான் நடுங்குகிறார். துஷ்டர்களை அழிக்கவேண்டுமென்றால் அவர் அவர்களின் புத்தியை முதலாவதாகப் பிடுங்கித் திண்டாடவிட்டு அழிக்கிறார்.—ஆரடஸ்.



# ECONOMY.

By

Mr. P. A, Krishnasami, Naidu F. T. S,

## செட்டு,

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித்தோன்றாக்கெடும்.—" குறள். "

" செட்டு " என்பதற்கு வரவிற்குத்தகுந்த செலவு செய்வது என்பது பொருள். இதன் நோக்கம் தன்னலத்தைப் பற்றி மட்டுமல்ல ; பிறநலத்தையும் கருதியதாகும். ஆகையால் இது மேலான மார்க்கமாகும். இது, புருஷரிலும் பெண்கள் அதிகமாய்ப் பூணவேண்டிய அணிகலமாகும்.

"செட்டு" என்பது தனியே ஒருவரிடத்தில் பொருந்தாது. கர்வம், அகங்காரம், கோபம், மடமை, ஒழுங்கீனம், அஸத்யம், அநீதி இக்குணங்களுடன் பொருந்தாது. முன் சொல்லப்பட்ட ஏதாவது ஓர் குணத்தையுடையவர் எவ்விதத்திலாவது பணத்தை வ்ரயஞ்செய்வார். ஆனால், செட்டுள்ளவரிடத்தில் பின்வருங்குணங்கள் விசேஷமாய்ப் பொருந்தியிருக்கும். (1) ஸத்யம், (2) நீதி (3) ஒழுங்கு, (4) மர்யாதை, (5) பொறுமை, (6) தன்னடக்கம்; (7) பரோபகாரம், (8) நல்லறிவு, (9) சுறுசுறுப்பு, (10) விடாமுயற்சி. இப்பத்து குணங்களும் எல்லோரும் விரும்பக்கூடியவையல்லவா ?

" செட்டு " என்பதை கவனிப்பதால் அநேக நன்மைகள் உண்டாகும். அஃது யாதெனில் கூறுவோம்.—(1) அது மானிடர்களைத் தரித்திரத்திலிருந்து நீக்கும். அவ்விதமில்லாவிடினும் மறுமையின் கொடுமையைத்தணிக்கும். (2) வேலை செய்ய முடியாத முதுமை வந்தகாலத்தில் மீத்துவைத்த தனம் முதலியவை மிகுந்த உதவியாகின்றது. மனதிற்குச் சமாதானத்தையும் உத்ஸாகத்தையும் கொடுத்து இல்வாழ்க்கையைச் சிறப்புறச் செய்கிறது. 4. அவா, கோபம், அகங்காரம் இவ்விதக் கெட்ட எண்ணங்களை மனதினின்றும் அகற்றி மற்ற பந்து ஜனங்களுடைய ஸ்நேகத்தையும் அபிமானத்

தையும் வ்ருத்திசெய்யும், 5. சந்ததியார்களை நல்வழியிற் பயிற்றி வைப்பதோடு அவர்களைப் பெற்றோர்களிடத்தில் அன்போடும் மரியாதையோடும் நடக்கும்படி செய்விக்கும். 6. உலகத்தவர்களுக்கு வேண்டிய நல்வழிகளில் உதவிசெய்ய மிகவும் அவசியமாக இருக்கும். அவ்விதமில்லாவிடினும், மற்றவர்களுக்குக் கெடுதல் செய்யாமலிருப்பதே பேருபகாரமன்றோ? 7. அநேகவித நன்முயற்சிகளில் மீத்துவைத்த பணம் உபயோகப்படுத்தப்பட்டு அதன் மூலமாய்த் தனக்கும் பிறர்க்கும் உபயோகமாக நிற்கும். 8. இது, உலகத்தில் புகழையும் கீர்த்தியையும் உண்டுபண்ணு மியல்பினது. ஆகவே, இவ்வித நன்மைகளை அடைய ஸகோதர ஸகோதரிகள் யாவரும் முயற்சி யுடையவர்களா யிருக்கவேண்டும்.

"இது புருஷரிலும் பெண்கள் அதிகமாய்ப் பூணவேண்டிய அணிகலமாகு"மென்று முதல் பாராவிலேயே கூறப்பட்டுள்ளது. இவ்விஷயத்தை விவரமாய் இன்னும் எழுதப்புகின் விரியுமென்றஞ்சி சுருக்கிக்கூறினோம். ஆடவர்கள் எவ்வளவு குற்றஞ்செய்பவர்களா யிருந்தபோதிலும், பெண்மணிகள் அவர்களைச் சீர்திருத்தக்கூடு மென்பது எம்துணிபு.

மனைத்தக்க மாண்புடையளாகித்தற் கொண்டான்,
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.—குறள்.

இதன் கருத்து யாதெனின் இல்லறத்திற்குத்தக்க நற்குணம் நற்செய்கை யுடையவளாகித் தன்னைக்கொண்ட கணவன், வரவுக்குத் தக்க செலவு செய்பவள் இல்வாழ்க்கைக்குத் துணையாவாள்.

அதிகமேன்? தானே உணர்வது மற்றோர் உணர்த்துவதிலும் விசேஷ நன்மையைக் கொடுக்கும். இதற்குக்கல்வியே சிறந்த சாதனம். ஆகவே, அவ்வாறான கல்விச்செல்வத்தை நமது இந்து ஸகோதரிகளுக்கு ஈசன் அருள்புரிவாராக.

P. A. கிருஷ்ணசாமி நாயுடு.

---

ஸ்த்ரீகள் மானிட ஸமூகத்துக்கு ஒரு முக்கிய அம்சமாயிருக்கிறார்கள். உலக நிகழ்ச்சிக்கு ஸ்த்ரீகளே முக்கிய காரணம்.—ரவீந்த்ரநாத் டாகூர்.



# THE INNER MEANING OF BAGAVATHAM

By
**Sri, Nagarathinammal.**

## ஸ்ரீமஹாபாகவத ரஹஸ்யம்.

ஸ்ரீமஹா பாகவதம் வேதங்களாகிய கல்பக வ்ருக்ஷத்திலிருந்து நழுவிய பழம் போன்றது. இப்பழம் சுகர் முகத்தால் அமிர்த ரூபமாகச் செய்யப்பட்டது. ஸஹோதரிகாள்! இப்பழத்தின் சாரத்தைக் குடியுங்கள். குடிப்பவர் யாராயிருக்க முடியும்? ரஸிகரும் அதன் உண்மையை அறிந்தவருமே. மனிதகோடிகள் தங்கள் ஜீவ்யகாலம் வரை இவ்வருமையான க்ரந்தத்தின் ரஹஸ்யத்தை அறிந்து ஈசுவரானுக்ரஹத்திற்குப் பாத்ராகும்படி நாம் கோருகிறோம்.

இப்புண்ய க்ரந்தத்தின் உண்மையான ரஹஸ்யத்தை ஆராய்ந்து அறிவோம்.

ஸ்ரீகிருஷ்ணலீலை:—ஸ்ரீபகவத் கீதையில் ஸாதுக்களை ரக்ஷித்து, தர்மத்தை ஸ்தாபிக்கும் பொருட்டு ப்ரதியுகத்திலும் அவதரிக்கிறேன் என்று ஸ்ரீகிருஷ்ண பகவான் கூறியிருக்கிறார். ஸர்வ தர்மங்களுக்கும் ஆதிஸ்தானமாகிய இப்பரம தயாநிதி இப்பூவுலகில் செய்த கார்யங்களெல்லாம் தர்ம ஸ்தாபனத்திற்கே யொழிய வேறல்ல. ஸ்ரீபாகவதத்தில் ஸ்ரீகிருஷ்ண லீலைகள் எல்லாவற்றிற்கும் உண்மையான தத்வார்த்தங்களுண்டு. இந்த லீலைகளை நடத்தியபோது ஸ்ரீகிருஷ்ணனுக்கு எட்டு வயதுக்கும் குறைவாக இருந்ததென்று பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீகிருஷ்ணனைக் கேவலம் மனிதனாக எண்ணினால் இவ்வயதில் இப்பேர்கொத்த லீலைகள் செய்ய ஸாத்யமாகாது. ஸ்ரீகிருஷ்ணனுக்கு நவநீதசோரனென்று பெயர். நவநீதமென்றால் வெண்ணை. வெண்ணை என்றால் பரிசுத்தமான மனது. சோரனென்றால் திருடன். அதாவது மனதைத் திருடுகிறவர். ஸ்ரீபகவான் பாதகமலங்களை ஸதாகாலம் த்யானித்து பக்திமேலிட்டவர்களின் பரிசுத்தமான மனதைத் திருடுகிறவர். அதாவது பரமபக்தர்களின் மனதை தம்முள் ஐக்கியம் செய்துகொண்டு அதை ஜோதிமயமாக்குவர். கடைசியாக நவநீத சோரன் என்றால் பக்தர்களின் மனதை தம்முள் எப்பொழுதும் லயப்படுத்திக்கொள்ளும் பரம தயாநிதி என்றர்த்தம்.

கோபிகா வஸ்த்ராபஹரணம் :—பக்தன் ஸம்ஸார ஸாகரத்தில் முழுகிக்கொண்டும் மிதந்துகொண்டும் மோக்ஷத்தையடைய முயற்சிப்பான். பகவான் பாதங்களைச் சேரவும் தன்னைத்தான் அறியவும் கோருவான். காருண்ய ரூபமாயிருக்கிற பகவானை அறிவது ஸாதாரண கார்யமில்லை. ராக்ஷஸரூபமாயிருக்கிற அபிமானங்கள் முதலிய அஹங்காரங்களைவிட்டு ஸர்வ ஸங்கரஹிதனாய் பகவானிடத்திலேயே மனம் நாட்டி லயிக்க நடக்கிறவன் ஈச்வரானுக்கிரஹத்தால் தன்னைத் தான் அறியமுடியும். கோபிகர்கள் ஸ்னானம்செய்யும் குளமென்றால் ஸம்ஸாரசக்ரம். கோபிகர்கள் வஸ்த்ரஹீனமாயிருப்பதென்றால் ஸர்வ ஸங்கரஹிதத்தைத்தெரிவிக்கிறது அவர்களின் பகவான் பின்னமரத்தின் மேலிருந்துகொண்டு பக்தர்களான கோபிகர்களை வஸ்திரங்களில்லாமல் தம்மிடம் வரும்படி சொன்னாரென்றால் மோக்ஷத்தையடைய எந்த பக்தன் விரும்புகிறானோ அவன் ஸர்வஸங்கங்களையும் விட்டு தம்மிடம் மனதை லயிக்கச் செய்யவேண்டுமென்றர்த்தம். கோபிகர்கள் கிருஷ்ணபக்தர்கள். ஸ்ரீகிருஷ்ணனை ஸதா தங்களுடைய மனதில் வைத்துக்கொண்டு த்யானம்செய்பவர்கள். ஒரு நாள் நாரதர் ஸ்ரீ கிருஷ்ணனை தர்சனம் செய்யும்பொருட்டு த்வாரகைக்குச் சென்றிருந்தார். கோபிகா ஸ்த்ரீகள் ஒவ்வொருவர் வீட்டிலும் கிருஷ்ணபகவான் ரூபத்தைப் பார்த்து ஆச்சர்யப்பட்டாராம். அதாவது நாரதரின் திவ்ய திருஷ்டியில் ப்ரதி கோபிகா ஸ்த்ரீகளின் மனது பகவானிடத்தில் சென்றிருந்ததைக் கண்டார் என்றர்த்தம். எப்போதும் பகவான் பர்த்தாவுக்கும், பக்தன் பார்யைக்கும் ஒப்பிடப்படுகிறது போல கோபிகர்கள் கிருஷ்ணபகவானைத் தங்கள் பர்த்தாவாக வெண்ணி ஸதாகாலம் தியானித்து அவருடன் விளையாடுவார்கள். கிருஷ்ணபகவான் பக்தர்களுடன் விளையாடித் திரிந்து ஜீவர்களின் அசுத்தத் தன்மையைப்போக்கி பரிசுத்தத்தை விருத்தி செய்வார். ஈச்வரனின் தேஜோ சக்தியால் ஜீவர்கள் படிப்படியாக பரிசுத்த மடைவார்கள்.

நாகரத்தினம்மாள்.

---

உலகத்தில் ஸ்த்ரீகளே ஸமூகத்தை ஸமாதானத்துடன் நடத்திக்கொண்டு போகிறார்கள். அவர்களில்லையேல் உலகம் பாழ், ஸமாதானம் கிடையாது. மனச்சாந்தி கிடையாது. எல்லாம் துக்கமாகவே யிருக்கும்.—ஆடஸ்.



*Interesting Items*

I

# CONCERNING CHILDREN.

## குழந்தைகள் விஷயம்.

---

**Breathing Suffocation.**

குழந்தைக்கு மூச்சுத் திணறுதல்:- இந்த வியாதி அநேகவிதங்களில் பொய் யிழைநோய்போன்றது; பல் முளைக்கும்போது வருவது வழக்கம். பார்ப்பதற்கு ஒன்றுமில்லாமல் நன்றாயிருக்கிற குழந்தைக்குத் திடீரென்று இசிவுண்டாய், கொஞ்சநேரம் சுவாசம்விடுவதே நின்று விடுகிறது. இசிவுபோய் மறுபடி சுவாசம் வருகிறபோது பொய் யிழைநோய்போல சுவாசம் ஒருவித சத்தத்தோடு உள்ளேபோகிறது. இந்த வ்யாதி கண்டால் குழந்தையைக் கவிழ்ந்தபக்கமாய்த் திருப்பவேண்டும். இந்த உபாயத்தால் அநேகமாய் இசிவு நின்றுவிடும்; இல்லாவிட்டால் தொண்டையில் வெந்நீரில் நனைத்த கடற்பஞ்சை வைத்து, முகத்தில் குளிர்ந்தஜலத்தைத் தெளித்து, வாசனையுப்பை (Smelling salt) த்தாராளமா யுபயோகிக்கவேண்டும். இந்த வ்யாதி சாதாரணமாய் வரா்மல் தடுக்கவேண்டுமானால், உடம்பைத் திடப்படுத்தி நல்ல காற்றுள்ளவிடத்தில் தேகப்பயிற்சி செய்து, சுலுவில் ஜீரணமாகிற நல்ல ஆகாரத்தைக் கொடுத்து, மலம் சரியா யிறங்குகிறதாவென்று பார்த்துக்கொள்ளவேண்டும். சாத்தியமான சீக்கிரத்தில் வைத்தியனைத் தேடவேண்டும்.

**Contagious diseases.**

தொத்து வ்யாதிகள்:—குழந்தைப் பருவத்தில் ஸாதாரணமாய் வருகிற தொத்து வ்யாதிகள், கக்குவாயிருமல், அம்மை, ஒட்டுவாரொட்டி விஷஜுரம், ஸந்நிபாதஜுரம், பொன்னுக்கு வீங்கி, கோழியம்மை, பெரியம்மை. இவைகள் இங்கிலாந்தில் குழந்தைகளுக்குவருகின்றன. ஆனால் அதிகமாக இந்தியாவில் இந்த வ்யாதிகள் வருகிறதில்லை. இந்த வ்யாதிகள் தொத்திக்கொள்கிற காலத்தை கீழே சொல்லுகிறோம். கக்குவாயிருமல் 14 நாள், ஒட்டுவாரொட்டி விஷசுரம் 7 நாள், அம்மை 14 நாள், ஸந்நிபாதஜுரம 28 நாள், பொன்னுக்கு வீங்கி 24 நாள், கோழியம்மை 18 நாள், பெரிய அம்மை 17 நாள், பின்சொல்லுகிற அடையாளங்களால் மேற்கண்ட வ்யாதிகளைத் தெரிந்து கொள்ளவும்.

| வ்யாதி. | வ்யாதிக் குறிகளின் தன்மை. |
| --- | --- |
| கக்குவாயிருமல் ... | ஜலதோஷம், தும்மல், கண்ணில் ஜலம் பெருகல், உடம்பு கமகமவென்றிருத்தல், இருமல். |
| ஒட்டுவாரொட்டி விஷ ஜுரம் ... | கல்ல சிவப்பு பரவியிருக்கும். |
| அம்மை ... | கொசுக்கடிபோல் சிறு சிவந்த புள்ளிகள். |
| ஸந்நிபாத ஜுரம் . | ரோஜாப்பூவர்ணமுள்ள புள்ளிகள் அங்குமிங்கு மிருக்கும். |
| பொன்னுக்கு வீங்கி | ஆயாசம், ஜுரம், நெஞ்சுநோவு, முகம் வீக்கம். |
| கோழியம்மை ... | சிறு ரோஜாவர்ணமான முத்துக்கள் உண்டாகி கின்னங்களாக மாறும். |
| பெரியம்மை ... | சிறு சிவப்பு முத்துகளுண்டாகி, கின்னங்களாக மாறிக் கொப்புளிக்கும். |

## II

## DOMESITC HINTS AND SUGGESTIONS.

## க்ருகத்தியக் குறிப்புகள்.

**Naphthaline.**

நாப்தலீன் என்னும் மருந்து:—புஸ்தகங்களையும் துணிகளையும் பூச்சிகள் அரித்துக் கெடுக்காமல் காப்பதற்காக நாப்தலீன் என்ற மருந்தை அவைகளை வைத்திருக்கும் பெட்டியில் வைப்பது நம்மில் அநேகருக்குள் வழக்கமாயிருந்துவருகிறது. இந்த நாப்தலீன், வெள்ளை யுருண்டைகளாக விற்கப்படுகிறது. இது கொஞ்சகாலமாய் யாவராலும் விரும்பப்பட்டிருந்தது. இப்போது ஜனங்களால் அவ்வளவாக உபயோகப்படுவதில்லை என்று தெரிகிறது. காற்றடக்க முள்ள இடத்தில்தான் இந்த மருந்தின் விஷத்துக்கு வீர்யமுண்டு. ஆனால் இந்த விஷம் ரொம்ப தாமஸமாகத்தான் பூச்சிகளைக் கொல்லும். ஆகையால் இந்த நாப்தலீனை உபயோகப்படுத்துவதாயிருந்தால் துணி முதலியவைகளைக் கூடிய மட்டும் காற்றடக்கமான பெட்டிகள் முதலியவற்றில் வைக்கவேண்டும்.

**Onion.**

வெங்காயம்:— வெங்காயத்தைப் பச்சையாகவும், வேகவைத்தும் தின்னலாம். அது உடம்புக்கு நல்லது. அதைச்சாப்பிடுவதால் சொறி, கரப்பான் முதலிய வ்யாதிகள் வருவதில்லை. சிலர் அது ஜீர்ணமாவதில்லை யென்பார்கள். வெங்காயம் பக்குவமாவதற்குத் தாமஸமானால் அது வெந்துகொண்டிருக்கும் ஜலத்தை வடித்துப் புதியஜலத்தை ஊற்றவேண்டும். வெங்காயத்தை வேகவைக்காமல் வறுத்து சாப்பிடக்கூடாது. இதனுடைய நல்ல குணங்கள் அநேகருக்குத் தெரியாது. வெங்காயத்தைப் பச்சையாயோ வேகவைத்தோ ப்ரியமுள்ளபடி மார்க்குடல் வ்யாதிக்காரர்கள் சாப்பிட்டால் வ்யாதி குணப்படும். சீதளத்துக்கு வெங்காயம் நல்ல முறிவு. வெங்காயத்தை நன்றாக வேகவைத்து ஸத்து இறக்கி சாப்பிட்டால், உடம்புக்கு மிகவும் நல்லது.

**To wash the table Cloth.**

மெழுகுத் துணியை சுத்தம் செய்தல்:—மெழுகுத் துணியை (ஆயில் க்ளாத்) நம்மவர்கள் அதிகமாய் உபயோகித்து வருகிறார்கள். இவைகளில் அழுக்குப் பற்றிவிட்டால் உடனே ஸோப் போட்டு அதை ஜலத்தில் தேய்த்து விடுகிறார்கள். ஸோப் போடுவதில் மெழுகு துணியில் உள்ள வர்ணம் நீங்கி, துணியும் சீக்கிரம் கெட்டு விடும் ஆகையால் இதற்குப்பதிலாகவருஷத்துக்கொருதரம் இதில் வார்னிஷ் லேசாய்ப் பூசினால் போதுமானது. அல்லது தேன்மெழுகு பூசலாம். ஒரே பூச்சு கொடுக்கவேண்டும். இப்படிச் செய்தால் வெகுகாலம் கெடாமல் நீடித்து நல்ல ஸ்திதியில் இருக்கும்.

**A Symptom of Malaria.**

குளிர்காய்ச்சலின் முக்ய அடையாளம்:—மலேரியா அதாவது குளிர்காய்ச்சல் வருவதில் முதலில் காணப்படும் அறிகுறியானது நடுக்கம். இது மலேரியாவின் ப்ரதானமான குணங்களில் ஒன்று. இது எப்போதும் காலையிலாவது மத்யானம் சீக்ரமாகவாவது உண்டாகும். ஏதோ அரிதாய் ஸாயந்திரமும் வருவதுண்டு. இரவிலும், அதிகாலையிலும் குளிர்காய்ச்சல் வருவது அபூர்வம். காலா அஸார் என்னும் வ்யாதியாயிருந்தால் தான் அதிகால வேளைகளில் குளிர்காய்ச்சலுண்டாகும். இதனால் வந்த வ்யாதி மலேரியா, கலா அஸாரா என்று ஸாதாரணமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

## III

## KITCHEN AND COOKERY.

## சமையலறையும் சமையலும்.

**Aviyal.**

அவியல்:—என்ற போஜன பதார்த்தம் மலையாளத்தில் ஸர்வ ஸாதாரணமாக எல்லோரும் செய்து சாப்பிடுகிறார்கள். இது தமிழ்நாட்டுக்கு அபூர்வம். தமிழ்நாட்டார் இப்பதார்த்தத்தை மிகவும் இஷ்டப்படுகிறார்கள். இது பண்ணும் விதம் வாழைக்காய், பாவக்காய், பொடலங்காய், கத்தரிக்காய், பூஷணிக்காய், முருங்கக்காய், வெள்ளரிக்காய், சேனைக்கிழங்கு கீரைத்தண்டு முதலியவைகளைக் கொண்டுவந்து நன்றாய்க் கழுவி $1\frac{1}{2}$ அங்குலம் நீளமாக நறுக்கிப்போட்டு ஜலத்துடன் அடுப்பில் வேகவைக்கவேண்டும். தகுந்த உப்பு புளியும் $\frac{1}{8}$ ரூ. இடை மஞ்சள் பொடியும் போடவேண்டும். காய்களெல்லாம் நன்றாக வெந்தபிறகு ஒரு தேங்காயைத் துருவி வேண்டிய பச்சை மிளகாயுடன் ஒன்றிரண்டாக அரைத்து அதில் போட்டுக் கிளறிவிடவும். கருவேப்பிலை கொத்தமல்லித் தழையும் போடவும்; புளிக்குப் பதிலாக மாங்காயைத் துண்டித்துப் போடலாம்.

**Jilaby.**

ஜிலேபி:—22 ரூ இடை கோதுமைரவை, 2 ரூ எடை அரிசிமா 5 ரூ இடை உளுந்துமா, இவைகளை ஒரு பாத்ரத்தில் போட்டு கலந்து, $4\frac{1}{2}$ ரூ இடை நெய்யும் கொஞ்சம் பாலும் சேர்த்து நன்றாய்ப் பிசையவேண்டும். மாவைக் கையிலெடுத்துப்பார்த்தால் ஒருமுழம் நீளம் அறுந்து விழாமல் தொங்கும் வரையில் கெட்டியாய்ப் பிசையவேண்டும். இதற்குப்பிறகு 24 ரூ இடை சர்க்கரையில் 6 ரூ இடை பாலைச்சேர்த்துக் கரைத்து பாணலியை அடுப்பில்வைத்து ஜீரா செய்து கொள்ளவேண்டும். மாவை ஜிலேபி பிழிவதற்காக த்வாரம் செய்த கெட்டித்துணியில் வைத்து அடுப்பில்கொதிக்கும் நெய்யில்வட்டமாகப் பிழிய வேண்டும். நன்றாய் வெந்த பிறகு இதையெடுத்து நெய் வடிந்துபோன பின் ஜீராவில் போட்டால் தித்திப்பு இதற்குப் பிடிக்கும். பி. வ.

**AmaVadai.**

ஆமவடை:—உளுத்தம் பருப்பு, துவரம்பருப்பு, கடலைப்பருப்பு வகைக்கு கால்படி எடுத்து ஊறவைத்து நன்றாக ஊறியபிற்பாடு, ஜலத்தை வடித்துவிட்டு, இரண்டு பலம் பச்சை மிளகாயும் முக்கால் பலம் உப்பும் போட்டு, கல்லுரலில்ஒன்றிரண்டாய் அரைத்து எடுத்துக்கொண்டு, அரைக்கால்பலம் மஞ்சள்பொடியும் கால் பலம் சீரகமும் கால்பலம் மிளகும் அதில் கலந்து நன்றாய்ப் பிசைந்து சிறு உருண்டைகளாக உருட்டிவைத்துக்கொண்டு, பாணலியில் எண்ணெய்விட்டுக் காய்ச்சி, அதில் ஷை உருண்டைகளைத் தட்டிப்போட்டு கொஞ்சஞ் சிவக்க வெந்தபின் எடுத்துக்கொள்ள வேண்டியது. இதை மோர்க்குழம்பிற் போட்டு உபயோகிப்பதுண்டு.—விச்வகர்மன்.

**Drumstick Alwa.**

முருங்கக்காய் அல்வா;—பத்து இளம் முருங்கக்காய்களை நீண்ட துண்டுகளாக நறுக்கவும். அவைகளை சுத்த ஜலத்தில் நன்றாக வேகவைக்கவும். வெந்து ஆறினபிறகு அவைகளின் உள் ஸத்தை ஒரு சிறு பாத்ரத்தில் எடுத்துக்கொண்டு பிறகு மத்தால்கடைந்துவைத்துக்கொள்ளவும். திட்டமாக சீனாசர்க்கண்டு பொடி செய்து இரண்டு ஏலக்காய் [illegible] இரண்டு பலம் வறுத்த முந்திரிப் பருப்பும் போட்டுக் கலக்கவும். ஐந்து நிமிஷம் கழித்து எடுத்துச் சாப்பிட்டால் திவ்யமாயிருக்கும்.

# IV
# LAW
## சட்டம்

**A Wife's right.**

ஒரு ஹிந்து பெண்ஜாதியின் பாத்தியங்கள்.—ஒரு ஹிந்துவின் பெண்ஜாதி துர்நடத்தையுள்ளவளாயிருந்தால் அவளுக்கு ஜீவனாம்சங்கூடக் கொடுக்க வேண்டியதில்லை என்பதாக நடவடிக்கையில் இருந்து வருகிறது. ஆனால் இதற்கு விரோதமாக பம்பாயில் சமீபத்தில் ஒருதீர்மானம் ஆயிருப்பதாகத் தெரியவருகிறது. ஒரு ஹிந்து தன் சொத்தை யெல்லாம் உயில் மூலமாய் சில பேர்களுக்குக்கொடுத்து, தன் பெண்ஜாதிக்கு வருஷா வருஷம் ஜீவனாம்சத்துக்காக இவ்வளவு ரூபாய் அவர்கள் கொடுக்க வேண்டுமென்பதை உயில் சாஸனத்திலேயே எழுதிவைத்துவிட்டு இறந்து போய்விட்டான். புருஷன் இறந்துபோன பிறகு பெண்ஜாதி துர்நடத்தை யுள்ளவளாயிருந்ததினால் ஜீவனாம்சத்தைக் கொடுக்காமல் மேலே சொன்னவர்கள் நிறுத்திவிட்டார்கள். அவள் ஜீவனாம்சத்துக்காகக் கோர்ட்டில் பிரியாது செய்தாள். அவள் பக்கமே கோர்ட்டில் தீர்ப்பாகிவிட்டது. ஹிந்து லாவின் பிரகாரம் ஒரு புருஷன் தன் பெண்ஜாதியை முழுவதும் தள்ளிவிட முடியாது. அவள் துர்நடத்தை யுள்ளவளாயிருந்தாலும், அவளுக்கு சோறும் துணியும் மட்டும் கொடுத்து அவளை அடக்கி வீட்டிலேயே இருக்கத்தகுந்த பந்தோபஸ்து செய்யவேண்டியது புருஷன் கடமை, சோற்றுக்கும் துணிக்கும் தவிர, வேறே ஒரு பாத்தியமும் அவளுக்கு இல்லை. ஆனால் அவள் தான் செய்ததெல்லாம் தப்பு என்று மனவருத்தப்பட்டு நல்லவழிக்குத்திரும்பி சாஸ்திர ரீதியாய் வேண்டிய ப்ராயச்சித்தங்களை யெல்லாம் செய்து கொண்டால், அவளை ஜாதியில் சேர்த்துக்கொண்டு புருஷன் தன்னிடத்தில் பழையபடி வைத்துக் கொள்ளலாம். ஆனால் ஈனஜாதி சம்பந்தம் ஏற்பட்டிருந்தால் அவளுக்கு குடியிருக்க இடத்திற்கும் சோற்றுக்கும் துணிக்குந்தான் பாத்தியம் உண்டு. ஹிந்து லாவின் பிரகாரம் விவாகத்தை ரத்துசெய்யமுடியாது. ஏனென்றால் விவாகம் என்பது ஒரு ஸம்ஸ்காரம். அதன் பந்தம் புருஷன் இறந்து போனாலும் விடாது. இந்தக் காரணத்தினால்தான், பெண்ஜாதி துர்நடத்தையுள்ள வளாயிருந்தாலும் அவளுக்குஜீவனாம்சம்கொடுக்கவேண்டுமென்று ஹிந்துலா சொல்லுகிறது. இந்தக்காரணங்களினால் முன் காலத்தில் ஹிந்துலாவை ஏற்படுத்தினவர்கள் அதிக காருண்யம் உள்ளவர்களென்றும் பின் காலத்தார்களின் ஜாதி வித்தியாசங்களினால் இந்த சட்டங்களின் பிரகாரம் ஒன்றும் சரிவர நடக்கவில்லை யென்றும் ஏற்படுகிறது.

**Children's murder,**

ஒரு குழந்தையின் கொலை:—வட ஆர்க்காடு ஜில்லாவில் ஒருவன் தன் மனைவியை விலக்கி விட்டான். அந்த ஸ்த்ரீ தன் தாய் வீடு வந்து வஸித்து வந்தாள். இப்படியிருக்கும்போது கர்ப்பவதியாகி கடந்த ஏப்ரல் மாஸம் 19-4-15 இல் ஒரு குழந்தையைப் பெற்றாள். தாயும் மகளும் சேர்ந்து அக்குழந்தையின் கழுத்தைத் திருகி தங்கள் வீட்டு கொல்லைக்கிணற்றில் எறிந்துவிட்டார்கள். இது எப்படியோ வெளிக்கு வந்து, கோர்ட் வரையிலும் வந்துவிட்டது. வட ஆர்க்காடு ஜில்லா ஜட்ஜ் தாய்,மகள் இருவர்களையும் கொலைக் குற்றம் சாட்டி தீபாந்தரசிக்ஷை விதித்தார். குற்றவாளிகள் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள். அதற்கு மேல்கோர்ட்டார் தண்டனையையே உறுதிப்படுத்தினார்கள்.

# V
# VIEWS AND REVIEWS.
## அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

**Some bad habits.**

சில கெட்ட வழக்கங்கள்:—ஒரு ஸங்கத்தில் போய் உட்காரும்பொழுது நமக்குள்ளேயே பாடிக்கொள்ளுதல், கைவிரல்களாலும், கால்களாலும், தாளம்போடுதல், தலை ஆட்டுதல் இவைகளெல்லாம் கெட்ட வழக்கங்களில் சேர்ந்தவைகள். விருந்து முதலியவை நடக்கும் இடங்களில் நாம் சாப்பிடப்போய் உட்கார்ந்தால் எல்லாரையும் விட வேகமாயாவது மெதுவாயாவது சாப்பிடவே கூடாது. இலையில் போட்டிருக்கும் பதார்த்தத்தை முகர்ந்து பார்த்தல் மிகவும் அவலக்ஷணமான குணம். காறுதல், இலை யோரங்களில் கோழை உமிழ்தல், வாயுபறிதல், இவை போன்றவைகளெல்லாம் மிகவும் அவலக்ஷணமான குணங்களாம்.—ஹிந்து ஸுந்தரி.

**Three wives.**

மூன்று மனைவிகள்:—டாக்காவிலுள்ள ஒரு ப்ராம்மணனுக்கு மூன்று பெண்கள் குமாரத்திகளாக வாய்த்தார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக வரனைக் கண்டுபிடித்து விவாகத்தை முடிப்பது நிரம்ப கஷ்டமான காரியமென்றெண்ணி அவர் அம்மூவரையும் ஒருவருக்கே விவாகஞ் செய்து கொடுத்தார். விவாகமாய் கொஞ்சநாட்களுக்குள் மருமகன் இறந்து போனான். மூன்று சகோதரிகளும் ஒரே காலத்தில் விதவைகளானார்கள். இது குறிப்பிடத்தக்க சம்பவமாகும் என்று "டாக்கா" பத்திரிகை கூறுகிறது.

**Advance of Education in India.**

இந்தியாவில் கல்வியின் விருத்தி:—பிரிடிஷ் இந்தியாவின் மொத்தஜனத்தொகையில் நூற்றுக்கு மூன்றுபேர் மாத்திரம் படித்து வருகிறார்கள். திருவாங்கூர் சமஸ்தானத்திலும் நூற்றில் 6, பேரும், பரோடாவில் நூற்றில் 10 பேரும்,ஜப்பானில் நூற்றில் 15 பேரும் அமெரிக்கா ஐக்கியமாகாணத்தில் நூற்றில் 21 பேரும், மிஷிஷிபியில் நூற்றில் 27பேரும் யிருக்கிறார்கள். ஆஸ்டிரியாவில் அந் நாட்டு ஜனத் தொகையில் கீழ்தரப்படிப்பு மாத்திரம் படிப்பவர்கள் நூற்றில் 15 பேரும் ஜர்மனியில் நூற்றில் 16 பேரும், இங்கிலாந்து வேல்ஸில் நூற்றில் 16 பேரும், ஸ்காட்லாந்தில் நூற்றில் 17 பேரும், அயர்லாந்தில் நூற்றில் 16 பேரும், ஹாலந்தில் நூற்றில் 15 பேரும் கேப் ஆப் குட் ஹோப்பில் நூற்றில் 15 பேரும் நேட்டாலில் 16 பேருமாகிறார்கள். பிரிடிஷ் இந்தியாவில் இரண்டு வருஷங்களில் ஜனத்தொகையில் படிக்கும் மாணாக்கர்கள் சங்க்யை நூற்றுக்கு இரண்டு விகிதம் தான் ஜாஸ்தியாயிற்று. இந்த விகிதப்படி நாம் ஜப்பானுடைய தற்கால நிலைமையை அடைய 80 வருஷம் செல்லும். ஐக்கியமாகாணங்களின் ஸ்திதியை அடைய 134 வருஷங்கள் செல்லும். மிஷிஷிபி. சமஸ்தானத்துக்கீடாக கல்விகற்க இரண்டு நூற்றாண்டுகள் செல்லும்.

இந்நுதேசன்.

**A Rani's object.**

ஒரு ராணியின் நோக்கம்:—என் சம்ஸ்தானத்திலிருக்கிற ப்ரஜைகளுக்கு என் சக்திக்குத் தக்கபடி உயர்ந்த கல்வியைக் கொடுத்து அவர்களை விருத்திக்குக்கொண்டு வருகிறதற்கு சமஸ்தானத்திலிருக்கிற உத்தியோகஸ்தர்களின் ஐக்கியத்தை நாடுகிறேன்.

போபால் பீகம் சாஹேப்.

## VI
## WOMAN'S WORLD.
## ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

**Punjab Women's College.**

பஞ்சாப் ஸ்த்ரீகள் காலேஜ் :— லாகூர் வாசிகள் பஞ்சாபில் ஒரு ஸ்த்ரீ காலேஜ் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது ஜாதிய முறையில் நடத்தப்பட்டு வருகிறது. உயர்ந்த வகுப்புகளில் ஸ்த்ரீகளுக்கு ஸம்ஸ்கிருதம் கற்றுக்கொடுக்கப்பட்டு வருகிறதாம். பாடங்கள் தேசபாஷையாகிய ஹிந்து பாஷையில் கற்பிக்கப்பட்டு வருகின்றன. தற்போது 214 பெண்கள் படித்துவருகிறார்களாம். பெண்கள் மதப்படிப்பை ப்ரதானமாகக்கற்று வருகிறார்கள். காலேஜின் வருஷச் செலவு ரூ. 27,000 காலேஜை யொட்டி ஒரு விதவாச்ரமம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. காலேஜ் விஸ்தாரமான நிலத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்திய ஸ்த்ரீகளின் ஸமூக லக்ஷ்யங்களுக்கு விரோதமன்னியில் பெண்களுக்கு பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டுமாம். மேனாட்டு நாகரீகச் சின்னங்கள் அங்கு காணமுடியாதாம்.

* • *

கோபங் குடிகெடுக்கும் ; கோபம் அரைப் பைத்தியம் ; கோபத்தின் கைக்குள் விழுந்தவர் சித்தங் கலங்கி அக்கலக்கத்தில் தமதுமெய்ம்மறந்து தகாதவை செய்து, தமக்கே கெடுதி சம்பாதித்துக்கொள்ளுகிறார். பெண்கள் கோபங்கொள்வது பலவிதத்திலு மவர்கட்குக் கேடு. அதை[illegible]ட்டு விடுவதே அவர்க்கு முதல் வேலை ஆகிறது.

* • *

"தாயைப் பார்த்துப் பெண்ணைக் கொள்ளும், பாலைப்பார்த்துப் பசுவைக் கொள்ளும்" என்பது பழமொழி. பெண்ணை சரியாய் நடத்தாவிட்டால் தாயைப்போல் இருக்கிறாள் என்பார். அவ்வார்த்தை வரும்படிவைத்துக் கொள்ளுவானேன் ? தாய்வீட்டு வளர்க்கை சரியாய் இல்லை. என்று சொல்வதில் கோபம்வருவானேன். பெண்பிள்ளைகளை வளர்க்கும்போது, பின்பு அவள் கணவன் வீட்டில் இருப்பதற்குத் தக்கவாறு வளர்க்கவேண்டும். இது தாய்க்கு முதல்வேலை.

" மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம், " என்றாள் ஒளவை. மூத்தோர்சொல் வார்த்தை அமிருதம். ஆகையால் பெண்ணும் தனக்குத் தோன்றியவழியில் செல்லாது தன் கணவன் விரும்பும் வழியில் நடக்கவேண்டியது. இதுதான் அவளுக்குப் பெருமையை உண்டாக்குகிறது.

* * *

" கோயிலில்லா ஊரில் குடி இருக்கவேண்டாம் " என்பது ஒரு பழமொழி. மனைவிக்கு தன் நாயகன் வீடே கோயில். அவன் வீடில்லாத இடங்களில், அவள் இருப்பது தகுதியன்று. பழிக்கு இடமாகும்.

* * *

" சோம்பித்திரியேல் " அதாவது வேலை செய்யாமலிருக்கக்கூடாது. வேலை செய்தும் தனது நன்மைப்பொருட்டு செய்யவேண்டும். மனைவிக்கு நன்மை தன் நாயகனுக்குத் தக்கவாறு நடப்பதுதான் அவனுக்காக நடப்பதே அவளுக்கு மூல தர்மம் ஆகிறது.

* * *

தாமரை மலரானது சூரியனைக் கண்டதும் முகமலர்ந்து எதிர்கொண்டு சந்தோஷிக்கிறது. சூரியன் மேற்கடலில் விழுந்தால் முகஞ் சிறுத்து துன்பமடைகிறது. நாயகி லக்ஷணமிதுதான். கணவனைக் கண்டால் சந்தோஷமு மானந்தமும் அடைந்து அவனைப் பிரிந்தகாலத்தில் வாட்டமடைந்து ஒன்றுந் தோன்றாது திகைத்திருப்பது அவள் லக்ஷணமாகும்.

## ஒரு விஞ்ஞாபனம்.

எங்கள் ஸஹோதரி ஸஹோதரர்களே ! ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த ஸமாஜம் கடந்த ஆறு வர்ஷங்களாக ஸ்த்ரீகளின் அபிவ்ருத்திக்கும் படிப்புக்கும் பல வழிகளில் உழைத்து வருகிறது. சென்னையிலும் வெளி ஜில்லாக்களிலும் நமது ஸமாஜத்துக்கு ஸுமார் 120 மெம்பர்களிருக்கிறார்கள். ஸமாஜ மெம்பர்களுக்கு ஒரு இலவச ரீடிங் ரூமும் லைப்ரரியும் ஏற்படுத்தியிருக்கிறோம். ப்ரதி சனிக்கிழமையும் தேர்ந்த ஸ்த்ரீகளால் அவர்களின் அபிவ்ருத்திக்குரிய ப்ரசங்கங்கள் நடத்தப்படுகின்றன. ஏழைப்பெண்களுக்கு ஒரு இலவச ஸாயங்கால பாடசாலையும் நடந்து வருகிறது.

வெளியூர் ஸஹோதரிகளின் வேண்டுகோளுக்கிணங்கி நமது ஸமாஜத்தில் ஒரு புக்ஷாப் ஏற்படுத்தியிருக்கிறோம். ஸ்த்ரீகளின் அபிவ்ருத்திக்கும் படிப்புக்கும் ஏற்ற புஸ்தகங்களை அனுப்பிக்கொடுப்பதுதான் புக்ஷாப் ஏற்படுத்துவதன் முக்கிய நோக்கம். நாங்கள் வியாபாரிகளல்ல. லாபம் ஸம்பாதிக்க இந்த புக்ஷாப் ஏற்படுத்தவில்லை யென்பதைத் தெரிவிக்கிறோம். தற்சமயம் அடியிற்கண்ட புஸ்தகங்கள் எங்களிடம் கிடைக்கும். எங்களிடமில்லாத புஸ்தகங்களை விசாரித்து வாங்கி அனுப்புவோம்.

**'பெண்கல்விப்' பத்ரிகையின்.**

| | |
|---|---|
| 2-வது வால்யூம், காலிகோ பைண்டு ... ... ... | 3—0—0 |
| 3.வது ,, ,, ... ... ... ... | 3—0—0 |
| 4வது ,, ,, ... ... ... ... | 3—0—0 |
| கீதமஞ்சரி ... ... ... ... ... | 0—4—0 |
| சருமரோக விளக்கம் ... ... ... ... | 0—4—0 |
| ஸ்ரீமதி ஸத்யபாலதேவி ... ... ... ... | 0—1—0 |
| மஹாலோபி ... .. ... ... | 0—1—0 |
| ராஜாமணி. ஒரு துப்பறியும் நாவல் ... ... ... | 0—8—0 |
| ரமணி ஒரு காதற்கதை ... ... ... ... | 0-10—0 |
| மூத்தாள் இளையாள கதை... ... ... ... | 0—4—0 |
| கௌரீமணி. பக்தியான கதை ... ... ... | 0—3—0 |
| குடும்ப நிர்வாக சாஸ்த்ரம் ... ... ... ... | 0—8—0 |
| பெற்றோர் பொக்கிஷம் ... ... ... ... | 1—0—0 |
| மாதரொழுக்க இலக்கணம் ... ... ... | 0—2—0 |
| ஸ்ரீ லலிதாம்பாள் சோபனமும் தேவிபாடமும் ... | 0—5—0 |
| மருமக்கள் துயரம் ... ... ... ... | 0—2—0 |
| சாவித்திரி சரித்ரம் ... ... ... ... | 0—1—0 |
| ஸரஸ்வதி ஸ்தோத்ரமஞ்சரி ... ... ... | 0—4—0 |
| அரிச்சந்திரக் கும்மி ... ... ... ... | 0—1—0 |
| பிரஹ்லாத சரித்ரக்கும்மி ... .. ... ... | 0—1—0 |
| துஷ்யந்தன் நாடகக்கும்மி ... ... ... ... | 0—1—0 |
| குழந்தையைக் காப்பாற்றும் விதம் ... ... ... | 0—2—0 |

வேறு புஸ்தகங்கள் வேண்டுமானாலும் எழுதினால் அனுப்புவோம்.

காரியதரிசி,
ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கம்,
நெ, 8, ராமஸாமி தெரு,
மண்ணடி, சென்னை. ம.

## வெளியாய்விட்டது!

### ஸரஸ்வதி ஸ்தோத்ரமஞ்சரி.

இதில் கம்பர் சரஸ்வதி அந்தாதி, ஸகலகலாவல்லி மாலை, மாம்பழக்கவி பஞ்சரத்னம் புலவர்களியற்றியுள்ள தனியன்க ளிருக்கின்றன. பாடசாலைகளில் தினமொரு செய்யுளாக வருஷ முழுவதற்கும் இருக்கும்படி தொகுக்கப் பட்டுள்ளது. குறிப்புரை சேர்க்கப்பட்டுள்ளது. சில கீதங் களுமுண்டு. விலை அணா 4.

கொஞ்சக் காப்பிகள்தான் அச்சிட்டோம்.

மானேஜர்,

'பெண்கல்வி'

சென்னை, ஈ.



ஏஜண்டுகள் தேவை!

## கர்னிக் எகு மிக்ஸர்!

விஷஜ்வரம், மலைஜ்வரம், குளிர்ஜ்வரம், இன்னும் மற்ற எவ் விதமாகிய ஜ்வரங்களாயிருந்தபோதிலும் மேற்கூறிய "கர்னிக் எகு மிக்ஸர்" என்னும் மருந்தை இரண்டுவேளை உபயோகிப்பத னால் பூர்ண குணமடையலாம். எல்லோர்களாலும் உபயோகப்படுத் தியும் எல்லா மருந்து ஷாப்புகளிலும் விற்கப்பட்டும் வருகின்றது.

விலை அணா 10, தபால் சிலவு அணா 4.

எமது விலாசம் :—

கர்னிக் பிரதர்ஸ், எகு மிக்ஸர் டிபோ,

பம்பாய், நெ. 4.

**KARNIK BROTHERS, AGUE MIXTURE DEPOT, BOMBAY, No. 4.**

கடிதம் எழுதுவோர் இங்கிலீஷில் எழுதவும்.




# The Female Education. / பெண் கல்வி.

Contents for November, 1915. / விஷயசூசிகை, நவம்பர்மீ 1915.


I. PROGRESS OF THE WORLD.

Stree Abeda Aikya Ananda Samajum—Physical exercise in schools—A Curious incident in a ladies sabha.

I. ப்ரபஞ்சப் போக்கு.

ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த ஸமாஜம்—பாடசாலைகளில் தேகப் பயிற்சி—ஒரு மாதர் ஸபையில் நடந்த ஒரு விநோத ஸம்பவம்.

II. SPECIAL ARTICLES

i. Social service and women —by Sri Rudrakotisvarar.
ii. Comets—by Sri Swami Vallinayakam.
iii. Women's position in creation —by Mr. P.A. Krishnasamy Naidu, F. T. S.
iv. The Three brothers—by Mr. K. P. Seshadri Aiyangar.
v. Way to minimise punishment in schools—by a Mistress.
vi. Cochin Kadars—by Mr. L. Anantha Aiyar.

II. விசேஷ வ்யாஸங்கள்.

i. சமுதாய ஊழியமும் மாதரும் —ஸ்ரீ உருத்திரகோடீசுவரர்.
ii. வால் நக்ஷத்ரங்கள். —ஸ்ரீ சுவாமி வள்ளிநாயகம்.
iii. ச்ருஷ்டியில் ஸ்த்ரீகளின் நிலைமை—மிஸ்டர். பி.அ. கிருஷ்ணஸ்வாமி நாயுடு.
iv. மூன்று சஹோதரர்கள்—மிஸ்டர் கி. பி. சேஷாத்ரி அய்யங்கார்.
v. பாடசாலைகளில் தண்டனையைக்குறைக்கும் வழி—ஒரு உபாத்தினி.
vi. கொச்சிதேசத்துக் காடர்கள் —மிஸ்டர். ல. அனந்தய்யர்.

III. INTERESTING ITEMS.

i. Concerning children.
ii. Domestic hints and suggestions.
iii. Kitchen and Cookery.
iv. Woman's World.
v. Views and Reviews.

III. விசேஷக் குறிப்புகள்.

i. குழந்தைகள் விஷயம்.
ii. க்ருஹத்தியக் குறிப்புகள்.
iii. சமையலறையும் சமையலும்.
iv. ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.
v. அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

# PROGRESS OF THE WORLD.

## ப்ரபஞ்சப்போக்கு.

**Stree Abeda Aikya Ananda Samajam.**

ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த ஸமாஜம்:—இந்த ஸமாஜம் 1910-ம் வர்ஷம் மார்ச்சு 6-ந்தேதி சென்னை முத்தியாலுப்பேட்டை ராமஸாமித் தெருவில் 27-ம் நெம்பர் வீட்டில் ஸ்தாபிக்கப்பட்டது. லண்டனுக்குச் சென்று எம். ஏ. பட்டம் பெற்று, தற்போது திருவனந்தபுரம் மஹாராஜா காலேஜில் சரித்ர போதகராயிருக்கிற மிஸ்டர். சந்த்ரசேகரய்யரின் தாயாரான ஸ்ரீமதி கா. மீனாக்ஷி அம்மாள் அவர்களும், "பெண்கல்வி"ப்பத்ராதிபர் ஸஹோதரி தாயாரம்மாள் அவர்களும், ஸ்ரீமதி டாக்டர் சாந்தானந்த மௌனி அம்மாள் அவர்களும், ஸ்ரீமதி நீலாம்பாள் அம்மாள் அவர்களும், இதன் ஸ்தாபகர்களாவார்கள். சென்னையிலும் வெளிஜில்லாக்களிலும் இந்த ஸமாஜத்துக்கு 120 மெம்பர்கள் வரையிலிருக்கிறார்கள். ஸமாஜ மெம்பர்களுக்கு ஒரு இலவச ரீடிங்ரூமும் லைப்ரெரியுமேற்படுத்தப்பட்டிருக்கிறது. ஏழைப்பெண்களுக்கு ஒரு இலவச ஸாயங்கால பாடசாலையும் நடந்துவருகிறது. ப்ரதிசனிக்கிழமையும் தேர்ந்த ஸ்த்ரீகளால் அவர்களின் ஜாதீயமுறையில் முன்னேற்றத்துக்குரிய அரிய ப்ரசங்கங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதன் கார்யதரிசிகள் தற்போது பெண்கல்வி ப்பத்ராதிபர் ஸஹோதரி ஆர். தாயாரம்மாள் அவர்களும் ஸ்ரீமதி டாக்டர் சாந்தானந்த மௌனியம்மாள் அவர்களுமாவார்கள். இனி இந்த ஸமாஜம் மாதர்களின் அபிவ்ருத்திக்குச் செய்துவருகிற கார்யங்களைப்பற்றி ப்ரதி மாதமும் இப்பத்ரிகை மூலமாகத் தெரிவிக்கப்படும். இந்த மாதத்தில் நாலு சனிக்கிழமைகளிலும் ஸமாஜத்துக்கு ஆஜரான மெம்பர்களின் மொத்த ஸங்கியை 180. மெம்பர்களல்லாது விஜயம்செய்தவர்கள் 25. இம்மாதம் முதல்வார சனிக்கிழமையில் (6-11-15) ஜீவகாருண்யத்தைப்பற்றி ஸ்ரீமதி நாகரத்னம்மாள் அவர்கள் பேசினார்கள். இரண்டாவது சனிக்கிழமை (13-11-15) குடும்பச்சிக்கனம் என்னும் விஷயமாக ஸ்ரீமதி டாக்டரும் ஸமாஜ கார்யதரிசியுமான



ஸ்ரீமதி சாந்தானந்தமௌனியம்மாள் அவர்கள் பேசினார்கள். மூன்றாவது சனிக்கிழமை (20-11-15) விடாது மழைபெய்ததால் மீட்டிங்கு தள்ளிவைக்கப்பட்டது. நாலாவது சனிக்கிழமை (27-11-15) ஸஹோதரி ஆர். தாயாரம்மாள் அவர்கள் தானம் என்னும் விஷயமாக ஒரு உபந்யாஸம் செய்தார். அடுத்தமாதம் ஜாஸ்தியாக மெம்பர்கள் வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. முத்யாலுப்பேட்டையிலுள்ள ஸ்த்ரீகள் ஸமாஜ அபிவ்ருத்தியில் ச்ரத்தை எடுத்துவருகிறார்கள். நாளடைவில் இந்த ஸமாஜம் மாதர்களுக்கு வெகு நன்மைகளை உண்டாக்குமென்பதில் ஸந்தேகமில்லை.

**Physical exercise for Girls in Schools.**

பாடசாலைகளில் பெண்பிள்ளைகளின் தேஹப்பயிற்சி:—தற்காலம் இது ஒரு முக்ய ப்ரச்னை. பாடசாலைகளில் ஆண்பிள்ளைகளுக்கு தேஹப்பயிற்சி எப்படி அவச்யமோ அப்படியே பெண்பிள்ளைகளுக்கும் அது அவச்யமென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால், எந்தமாதிரியான தேஹப்பயிற்சி பெண்பிள்ளைகளுக்கு அவச்யம் என்பதை கவனிக்கவேண்டும். சிலர் பெண்பிள்ளைகளுக்கும் ஆண்பிள்ளைகளுக்கும் ஒரேமாதிரியான தேஹப்பயிற்சி இருத்தல் ஸரியென்பார்கள். சிலர் இந்த அபிப்ராயத்தை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். பெண் பிள்ளைகளின் தேகதத்வம் அல்லது அமைப்பு ஒருவிதம், ஆண்பிள்ளைகளின் தேகதத்வம் அல்லது அமைப்பு மற்றொருவிதம். ஆகையினால், அவரவர்களுக்கு தேக அமைப்பு ப்ரகாரம் தேஹப்பயிற்சி கற்றுக்கொடுக்கவேண்டுமென்பது நன்றாக புலப்படுகின்றது. ஜப்பானில் ப்ரதி ஆண்பள்ளிக்கூடங்களையும் பெண் பள்ளிக்கூடங்களையுமொட்டி பிள்ளைகளின் தேஹப்பயிற்சிக்காக ஒரு வைத்யநிபுணர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அந்த வைத்யநிபுணர் பெண்களின் தேக அமைப்பு ப்ரகாரம் தேகப்பயிற்சி கற்றுக்கொடுத்து வருகிறார். ஜப்பான் தேசம் முன்னடைந்ததற்கு இது ஒரு முக்யகாரணமென்று தெரிய வருகிறது. பெண்பிள்ளைகள் ஸரியான முறையில் தேஹப்பயிற்சி பெறுவிட்டால் தேசத்தில் பலிஷ்டர்களான குழந்தைகளைக் காண்பது அரிதாய்விடும். பெண்பிள்ளைகளுக்குப் போதிக்கப்பட்டுவரு

கிற மனப்பயிற்சியோடு தேஹப்பயிற்சியும் கொடுத்துவரவேண்டும். பாலிகைகளுக்காகட்டும் பாலர்களுக்காகட்டும் இரண்டு பயிற்சிகளும் அவச்யம். பாடசாலைத் தலைமை அதிகாரிகள் பெண்பிள்ளைகளின் தேகப்பயிற்சி விஷயத்தில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். பெண்களின் தேஹப்பயிற்சிக்காகவும் மற்றவைகளுக்காகவும் ப்ரதிபாடசாலையையும் ஒட்டி ஒரு வைத்யர் இருப்பது அத்யாவச்யமானது.

**A Curious Incident in a Ladies sabha.**

ஒரு மாதர் ஸபையில் ஒரு விநோத ஸம்பவம் :—சென்னையில் கல்வி அறிவுள்ள மாதர்கள் ஸ்த்ரீ சங்கங்களை ஆங்காங்கு ஸ்தாபித்து நடத்திவருகிறார்கள். தற்போது இந்நகரில் மாதர் ஸபைகள் பனிரெண்டுக்கு மேலாகவே யிருக்கும். ஸ்த்ரீ சங்கங்களினால் ஸஹோதரிகள் அடையும் பலன்கள் அபரிமிதம். இச்சங்கங்களின் முக்ய நோக்கம் பொதுவாக மாதர்களுக்குள் ஒரு ஐக்ய பாவத்தையும் நேசப்பான்மையையும் உண்டாக்குவது. மாதர்கள் ஒரு ஸ்த்ரீ சங்கத்தில் சேருவதனால் அறிவு விசாலிக்கும். அறிவு விசாலிப்பதனால் உலக விவகார ஞானமுண்டாகும். உலக விவகார ஞானம் ஏற்பட்டால் சாந்தபுத்தியும், பெருந்தன்மையும்; ஒழுக்கமும், மரியாதையு முண்டாகும். மேற்கண்ட குணங்கள் அமைந்து ப்ரகாசிக்கின்ற ஸ்த்ரீகளைப் பார்த்து அக்குணங்களில் குறைந்திருக்கிற ஸ்த்ரீகள் அவர்களைப் பின்பற்றி நடக்கலாம். ஒரு ஸ்த்ரீ ஸபையில் சேர்ந்த மெம்பர்களுக்குள் யாதொரு வித்யாஸங்களு மிருக்கக்கூடாது. ஸபைநிர்வாகஸ்தர்கள் ஸ்வப்ரயோஜனத்தைக் கருதி ஸபைகளை நடத்தக்கூடாது. அவர்கள் ஸங்கத்தின் மெம்பர்களை அன்போடு நடத்தவேண்டும். ஸபையில் ஏழைகளும் பணக்காரர்களுமிருப்பார்கள். சங்கநிர்வாகஸ்தர்கள் சபையைநிர்வாகம்செய்யும் விஷயத்தில் கவனமுடையவர்களாயிருக்கவேண்டும். சென்னையிலுள்ள ஒருமாதர் ஸபையில் அச்சபையின் பிரஸிடெண்டம்மாள் ஒரு தினம் சங்க மெம்பர்களிடத்தில் அஸந்தர்ப்பமாக நடந்துகொண்ட விஷயத்தைப்பற்றி நமக்கு கனம்பொருந்திய ஒரு நிருபர் தெரிவிக்கிறார். அந்த நிருபம் பின்வருமாறு:—



பத்ராதிபர்,
பெண் கல்வி,
சென்னை, ஈ.

அம்மா,

சென்னையிலுள்ள ஒரு மாதர்ஸபையில் என் புருஷர் உத்தரவின்பேரில் ஒரு மெம்பராகச் சேர்ந்தேன். சில வாரங்கள் அச்சபைக்குப் போய்க்கொண்டுவந்தேன். ஒருநாள் ஸபையின் பிரஸிடெண்டம்மாள் மீட்டிங்கு கலைகிற ஸமயத்தில் அடுத்த மீட்டிங்குக்கு ஒரு மேன்மைதங்கிய இங்கிலீஷ் மாது விஜயம் செய்கிறாராதலால் எல்லா மெம்பர்களும் தர்மாபுரப் புடவையை உடுத்திக்கொண்டும், ரவைக்கம்மலைப் போட்டுக்கொண்டும் வரவேண்டுமென்று வற்புறுத்தினார். எனக்கும் என் பக்கத்திலுட்கார்ந்த சில ஸ்னேகிதிகளுக்கும் பிரஸிடெண்டின் வார்த்தைகள் அருவெறுப்பைக் கொடுத்தன. அவ்வார்த்தைகளைப் பொறுக்க மாட்டாமல் என் கௌரவமுள்ள ஸ்னேகிதி யொருவர் உடன் எழுந்திருந்து ஸபையில் சில ஏழையான மெம்பர்களுமிருக்கிறார்களென்பதை பிரஸிடெண்டம்மாள் கவனிக்கவேண்டுமென்று சொன்னார். அதற்கு அவர் ஸ்னேகிதர்களிடத்தில் இரவலாவது வாங்கிக்கொண்டு வரலாமென்று சொன்னார். மேலும் உயர்வும் கௌரவமும் பொருந்திய ஸபையென்று விஜயம் செய்கிறவர் நினைக்கும்படிச் செய்யவேண்டுமென்றும் தெரிவித்தார். இப்படி அவர் சொன்னதற்குப் பிறகு அங்கு ஒரு நிமிஷம்கூட இருக்க என் ஸ்னேகிதிக்குப் பிடிக்கவில்லை. அவர் வெளியே வந்துவிட்டார். உடன் நானும் என் பக்கத்திலுட்கார்ந்த சில ஸ்னேகிதிகளும் வெளியே வந்துவிட்டோம். பிறகு, அச்சபையின் மெம்பர் ஸ்தானத்திலிருந்து வெளியேவந்த மெம்பர்கள் எல்லோரும் நீங்கிக் கொண்டோம். அம்மா, ஸபையின் நோக்கத்தை யறியாமல் அற்பத்தனமாய் வெளியிடும் வார்த்தைகள் மாதர்களின் அபிவ்ருத்திக்கு ஸாதகமாயிருக்குமா? இதைப்பற்றி எனக்கு ஒன்றும் அதிகமாக சொல்லத் தோன்றவில்லை. ஆகையால், ஸ்த்ரீகளின் படிப்புக்கும் முன்னேற்றத்துக்கும் ஏற்ற ஸாதனமாயிருக்கிற தங்களது பெண்கல்விப் பத்ரிகை மூலமாகவே இதை வெளியிடத் துணிந்தேன். இதை தங்கள் மேலான பத்ரிகையில் ப்ரசுரம் செய்வீர்களென்று நம்புகிறேன்.

ராயப்பேட்டை,
20-11-15.

பெண்கல்வி ஸ்த்ரீ அபிமானி.

# SOCIAL SERVICE AND WOMEN.

By
**Sri Rudrakotisvarar**

## சமுதாய ஊழியமும் மாதரும்.

சமுதாய ஊழியம் என்பது ஜனசமுகத்தில் கல்வியறிவிலும், ஒழுக்கத்திலும், தேகாரோக்கியத்திலும், செல்வத்திலும், பதவியிலும் முற்பட்டுள்ளவர்கள், இவற்றில் பின்னிட்டுள்ளவர்களைத் தம் நிலைமைக்குக் கொண்டுவரச்செய்யும் வேலையாகும். பிறருடைய அறியாமையையும், துன்பத்தையும் போக்கும்பொருட்டுச் செய்யப்படும் வேலைகளெல்லாம் சமுதாய ஊழியமென்றே சொல்லப்படும். இப்பரோபகார வேலையானது நம் இந்தியாவில் பழைய காலந்தொட்டே சாதாரணமாகச் செய்யப்பட்டுவரினும், இது இக்காலத்தில் மேற்றிசையில் ஒழுங்காகவும், முறையாகவும், பலருடைய ஒத்துழைப்போடும் நடத்தப்பட்டுவருகிறது. இந்தியாவில் அதையறிந்த கல்விமான்கள் சிலரும், பொதுஜனப் பிரியர்களும் ஆங்காங்குச் சமுதாய ஊழியச் சங்கங்களை மேற்றிசை மாதிரியில் ஸ்தாபித்துக் கொண்டிருக்கின்றனர். முக்கியமாக பம்பாயிலும், சென்னையிலும், பெங்களூரிலும் இத்தகைய சங்கங்கள் ஏழைகளுக்காகவும், தொழிலாளிகளுக்காகவும், தாழ்ந்த நிலையிலுள்ளவர்களுக்காகவும், அறிவில்லாதவர்களுக்காகவும், மாதர்களுக்காகவும், குழந்தைகளுக்காகவும் பெரிதும் உழைத்து வருகின்றன. அதனால் ஜனங்களுள் அறியாமையும் துன்பங்களுஞ் சிறிது சிறிதாக நீங்குகின்றன.

இனி, இச்சமுதாய ஊழியமானது நம்முடைய மாதர்களின் ஒத்துழைப்பின்றி நன்கு நிறைவேறாதென்பது அறிவிலும் அனுபவத்திலும் முதிர்ச்சியுடையோர் அறிந்ததேயாகும். இவ்விஷயத்தில் மாதர்களுக்கும் ஊக்கமிருந்தாற்றான் ஜனசமுகம் நன்மையும் உயர்ச்சியுமடையும். மக்கள் வாழ்க்கையில் துன்பமும் கவலையும் வருங்கால் பெண்களானவர் பக்கத்திலிருந்து உபசரிக்கக்கூடிய தெய்வங்களாவர். ஆகவே, நம் மாதர்கள் எவ்விதத்தில் ஜன சமுதாயத்திற்கு நன்கு ஊழியஞ் செய்யலாகும் என்பதையும், அவர்கள் தம்முடைய எத்திறவாழ்க்கையில் அச்சமுதாய வேலையைத்



தனிமையாகச் செய்யக்கூடுமென்பதையும் ஆராய்ந்தறிவது நமக்கு ஆனந்தத்தைத் தருவதாகும். இவ்வினாவிற்கு விடையாக இனிக்காட்டப்படுங் குறிப்பான விஷயங்கள் பரோபகார மார்க்கத்தில் சிரத்தையுடைய பெண்கள் சிலர்க்குச் சிறிதாயினும் உபயோகமானவையாக இருக்கலாமென்று நம்பப்படுகின்றது. இந்தியாவிலுள்ள பெண்கள் சமுதாய ஊழியத்தை எவ்வாறு மேற்கொள்ளலாகுமென்னும் இக்கேள்வியானது மிஸ் ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல், மிஸ் காரெட், மிஸஸ் ப்ரை, மிஸ் கார்ப்பென்ட்டர் முதலான மாதுசிரோமணிகளுடைய தன்னலங் கருதா அரும்பெரும் வேலைகளை நமக்கு ஞாபகப்படுத்துகின்றது. மிஸ் நைட்டிங்கேல், மிஸ் காரெட் என்னும் இருவரும் ஐரோப்பிய வைத்திய சாலைகளில் நோயாளிகளை மிக்க மன இரக்கத்துடன் பரிபாலித்தனர். மிஸஸ் ப்ரை, மிஸ் கார்ப்பென்ட்டர் என்னும் இருமாதரும் சிறைச்சாலைகளுக்குச் சென்று குற்றவாளிகளுக்குச் சன்மார்க்கங்களைப் போதித்து அவர்கள் துன்பங்களைப் போக்கி அவர்களையும், அச்சிறைச் சாலைகளையுஞ் சீர்படுத்தினர். அப்பெண்மணிகளுடைய சரித்திரங்கள் முழுமையும் அறிந்தவர்கள் அவர்களை பரோபகாரிகளென்றே கூறுவார்கள். தற்போது மேனாட்டு ஸ்த்ரீகளைப்போல நம் ஸ்த்ரீகள் பரோபகார காரியங்களில் அவ்வளவு தூரம் பாடுபடமுடியாவிட்டாலும், அவர்களுள் கல்வியறிவுடையவர்கள் மற்றைய பெண்களுக்கு வாசிக்கவும் எழுதவுங் கற்றுக்கொடுப்பதோடு, தையல், பின்னல் முதலான சிறுகைத்தொழில்களையுங் கற்றுக்கொடுக்கலாகும். மேலும், அவர்கள் மருத்துவமாதர்களாகவும், நோயாளர்களைக் காப்பாற்றும் பரிசாரிகைகளாகவும் உபயோகப்படலாம். இது மிக முக்கியமான வேலையாகும்; இது குறைவாக எண்ணப்படத்தக்கதன்று. அநேகப் பெண்கள் தம் பிரசவகாலத்தில் தேகதத்துவ இயல்பு அறியாத அம்பட்டத்திகள் உண்டுபண்ணும் நம்பிக்கையினாலும், அக்காலத்தில் மிகவும் உபயோகப்படக்கூடிய அறிவுடைய ஸ்த்ரீ வைத்தியர்கள் அநேகர் இல்லாமையினாலும் மிகவும் துன்பப்பட்டு மரணமடைகின்றனர். பிரசவகாலத்தில் உதவிசெய்யக்கூடிய ஆண்வைத்தியர்கள் இருப்பினும், சிலபெண்கள் தம் நாணத்தினால் அத்தகைய உதவியை விரும்பாமலே மரணத்திற்கு ஆயத்தமாகின்றனர். நோயாளரைப்

பாதுகாக்கும் விஷயத்தில் பெண்களே மேலானவர்கள் என்பது எக்காலத்திலும் தர்க்கிக்கப்படாத விஷயமாகும். ஆதலால், நம் மாதர் மருத்துவக் கலையிலும், பிணியாளரை உபசரிக்கும் முறையிலும் நன்கு பயின்று தேர்ச்சியடைந்து தம்மைச் சுற்றியுள்ளவர்களுக்குப் பெரிதும் உபகாரம் செய்வார்களாக.

பெண்கள் சமுதாய வேலை செய்யக்கூடிய இன்னொரு துறை இருக்கின்றது; அவர்கள் அந்தப்புர ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிக்கலாம். பெண் பாடசாலைகளில் அமர்ந்து பெண்களுக்குப் பலவிஷயங்களை எடுத்துப்போதிக்கலாம்; பெண்கல்வி அதிகப்படவேண்டுமென்று கூக்குரலிடப்படுமிக்காலத்தில் பரோபகாரக் கருத்துடைய சில பெண்கள் முன்வந்து அக்காரியத்தை நிறைவேற்றினாலொழிய அது விருத்தியடையாது. பெண்களை அறிவிலும் ஒழுக்கத்திலும் உயர்த்துவதற்குக் கற்றறிவுடைய பெண்களே முன்வரல் வேண்டும். இக்கல்வித்துறையில் கல்வியாளராகிய பெண்கள் ஒரு சங்கமாகச் சேர்ந்து உழைத்தல் வேண்டும்.

இத்தகைய சமுதாய விஷயங்களிலெல்லாம் கல்விச் செல்வமுடைய நம் மாதர்கள் தம் சகோதரிகளுக்கு ஞானத்தை யுண்டுபண்ணல் வேண்டும். நம் மாதர்களுள் அநேகர் தம் வீட்டுக் காரியங்களில் மிகச்சிரத்தை எடுத்துக்கொள்வதைத் தவிர இத்தகைய சமுதாய விஷயங்களில் சிறிதும் தம் மனத்தைச் செலுத்துவதே கிடையாது. நம்முடைய மாதர்கள் இத்தகைய விஷயங்களில் முன்வராமையால் அவர்கள் நம்முடைய தேசத்து ஆடவரும் பெண்டிரும் ஆங்காங்கு படுந்துன்பங்களைச் சிறிதும் அறியாதவர்களாயிருக்கிறார்கள். ஆதலின், நம் இந்திய மாதர்களுக்குப் பொதுஜன வேலைகளில் மனவெழுச்சியை உண்டுபண்ணல் வேண்டும். இதை யார் செய்யக்கூடியவர்? நம்முள் கல்வியறிவுடைய சில பெண்களே தம் சகோதரிமார்களுக்கு இவ்விஷயத்தில் அறிவையும், பொது ஜனங்களிடத்தில் அன்பையும் உண்டாக்கல் வேண்டும். அவ்வாறு செய்யின் நம் மாதர்கள் சமுதாய ஊழியஞ்செய்வதனால் விளையுஞ் சந்தோஷத்தை அநுபவிப்பர். நம்முள் சுயநலப்பிரியமும் யாதொரு குற்றமுமில்லாத சகோதரிகள் தோன்றி இந்தியாவில் அறியாமையும் துன்பங்களுமுடைய அநேக மக்களுக்கு உதவிபுரிதல்வேண்டும். அப்போது



தான் இந்தியா நாகரிக உலகத்தில் உள்ள மிகச் சிறந்த தேசங்களுக்குச் சமமாக மதிக்கப்பட்டு உயர்வடையும்.

இவ்விஷயத்தில் சமுதாய வேலையை மேற்கொண்டுள்ள பாலார்க்குச் செய்யவேண்டுவன, அவர்களை உயர்தரக் கல்வியில் பயில்வித்தலும், அவர்களுக்குச் சமுதாய விஷயங்களை எடுத்துக்கூறுதலுமேயாகும். ஒவ்வொருவரும் தம் தாய்மார்களுக்கும், தம் மனைவிமார்களுக்கும், தம் சகோதரிமார்களுக்கும், தம் புத்திரிமார்களுக்கும் சமுதாய விஷயத்தில் ஊக்கத்தை விளைப்பார்களாயின், பரோபகாரமான சமுக காரியங்கள் எளிதில் பயனைத்தரும்.

உருத்திரகோடீசுவரர்.

---

# COMETS.

**By**

**Swami Vallinayakam.**

## வால் நக்ஷத்ரங்கள்.

வால் நக்ஷத்ரங்கள் ஸூர்யனைச்சுற்றிவரும் மற்ற நக்ஷத்ரங்களைப் போலல்லாமல் சுயம் ப்ரகாச முடையனவாகும். அவற்றுள் சில மற்ற அண்டங்களைப் போலவே மேற்றிசையிலிருந்து கீழ்த்திசையை நோக்கியும், வேறு சில அவற்றிற்கு மாறாகக் கீழ்த்திசையிலிருந்து மேற்றிசையை நோக்கியும் ஸூர்யனைச் சுற்றிவரும். இந்த நக்ஷத்ரங்களுள் சிலவற்றின் ஓட்டம் நிர்ணயிக்கத்தக்கதாயும், மற்றவற்றின் ஓட்டம் கணிக்கக்கூடாததாகவும் இருக்கின்றது. அதாவது, சில வால் நக்ஷத்ரங்கள் ஒரு ஸமயம் தோன்றினால், பின் அவை திரும்பத் தோன்றுமா? தோன்றாவா? என்று சொல்லக்கூடியதாகவும் மற்றவற்றைப்பற்றி அங்ஙனம் சொல்லக்கூடாமலும் இருக்கின்றது.

ஒன்பது வால் நக்ஷத்ரங்களைப்பற்றி வானசாஸ்த்ரிகளுக்கு ஒருவாறு நன்றாகத் தெரியும். அவற்றுள் "ஹாலீஸ் வால் நக்ஷத்ரம்" என்று சொல்லப்படுவது ஒருதரம் ஸூர்யனைச் சுற்றிவர ஏறக்குறைய 77 வர்ஷங்கள் ஆகின்றன. அது ஸூர்யனுக்கு அதிக ஸமீபமாக இருக்கும்போது 56,000,000 மைல் தூரத்துக்கப்பாலும் அதிக

தூரத்திலிருக்கும்போது 3,200,000,000 மைல் தூரத்துக்கப்பாலும் இருக்கின்றதாம். இவையெல்லாம் சொற்ப காலத்தில் திரும்பி வரும் வால் நக்ஷத்ரங்களாகும். நீண்ட கால வால் நக்ஷத்ரங்களுக்கு ஒரு தரம் சுற்றிவர 2,100, 3000, 100,000 வர்ஷங்கள் வரை பிடிக்குமாம். 100,000 வர்ஷம் வரைப் பிடிக்குமென்று கணிக்கப்பட்டிருக்கிற வால் நக்ஷத்ரம் 1744-ம் வருஷத்தில் தோன்றியதாம்.

வால் நக்ஷத்ரங்களுக்கு ஸாதாரணமாகத் தலையும் வாலும் உண்டு. அதிக ப்ரகாசமாக இருக்கும் பாகத்தைத் தலையென்றும் ப்ரகாசம் குறைந்து நீண்டு தோன்றும் பாகத்தை வால் என்றும் சொல்லப்படும். சில நக்ஷத்ரங்களுக்கு வால் நீண்டும், சிலவற்றிற்குக் குறுகியும் இருக்கும். வால் ஒன்றுதான் இருக்குமென்பது நியமமில்லை. ஒன்றிற்கதிகமாகவும் இருந்திருக்கின்றது. 1744-ம் வர்ஷம் தோன்றிய நக்ஷத்ரத்திற்கு ஆறு வால்கள் இருந்தனவாம். 1823-ம் வருடம் தோன்றிய நக்ஷத்ரத்துக்கு இரண்டு வால்கள் தான் இருந்தனவாம். சில நக்ஷத்ரங்களுக்கு வால் இல்லாமலே இருப்பதும் உண்டு. கண்ணாடி வழியாக அதற்கப்புறம் இருக்கும் பொருள்களை பார்க்கக் கூடியதுபோல், நக்ஷத்ரங்களுக்கு ஊடே கூடியும் அதற்கப்புறம் இருக்கும் நக்ஷத்ரங்களைக்காணலாம். அவற்றின் உடலிலுள்ள அணுக்கள் அவ்வளவு கலக்கமாக (நெருக்கமின்றி) அமைக்கப் பெற்றிருக்கின்றன. 1858-ம் வர்ஷத்தில் தோன்றிய நக்ஷத்ரத்தின் வாலின் கனம் 90,000 மைல்களாக இருந்தும் அதற்கு ஊடே கூடிய நக்ஷத்ரம் தெரிந்ததாம். சீன தேசத்தார் கண்டுபிடித்த காலமுதல் நாளது வரை 800 வால் நக்ஷத்ரங்கள் ஏற்பட்டிருக்கின்றனவாம். ஆனால், தற்காலத்தில் தூரத்ருஷ்டிக் கண்ணாடி உதவியால் பின்னும் அநேக நக்ஷத்ரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. முற்காலத்தில், ஸாதாரண ஜனங்களின் கவனத்தையும் இழுக்கத்தக்க ப்ரகாசம் பொருந்திய வால் நக்ஷத்ரங்களை மாத்ரம் கணக்காக்கி வந்தார்கள். இப்பொழுதோ, தூரத்ருஷ்டிக் கண்ணாடிக்கு மாத்ரம் தெரியத்தக்கவைகளையும் கணக்காக்கி வருகின்றார்கள்.

இந்நக்ஷத்ரங்கள் சுயம் ப்ரகாசம் உடையனவாதலால், அவை ஸூர்யனுக்கு ஸமீபமாக வருங்காலத்தில் அவற்றின் உஷ்ணமும் ப்ப



ரகாசமும் மாத்ரமன்றி ஓட்டத்தில் வேகமும் அதிகரிக்கின்றது. இதோடு ஸூர்யனுடைய உஷ்ணமும் தகிக்கவே, உஷ்ணம் அதிகப்பட்டுப் புகை கிளம்புகின்றது. இந்நக்ஷத்ரங்கள் ஸூர்யனைப் பார்க்கத் தலையை வைத்துக்கொண்டு ஓடுவதால், அதினின்றும் உண்டாகும் புகை ஸூர்யனுக்கும் அதன் தலைக்கும் எதிர்பக்கத்தில் வாலாக ஓடுகின்றது. வேகமாகச் செல்லும் புகைவண்டியின் புகை அவ்வண்டியின் பின்பாகம் செல்வதுபோல் என்னலாம். இதனால் தான் எப்போதும் வால் நக்ஷத்ரங்களின் வால் ஸூர்யனுக்கு எதிர்முகமாகவே இருக்கின்றது. வாலின் நீளம் நக்ஷத்ரத்தின் பருமனையும் வேகத்தையும் ஸூர்யன் விலக்கித்தள்ளும் சக்தியும் பொறுத்ததாக இருக்கின்றது. 1861-ம் வர்ஷம் தோன்றிய நக்ஷத்ரத்தின் வால் 20,000,000 மைல் நீளமிருந்ததாம். ஆனால், 1843-ம் வர்ஷம் தோன்றிய நக்ஷத்ரத்தின் வாலோ 112,000,000 மைல் நீளமிருந்ததாம்.

ஸூர்யனை ஸமீபிக்குங்கால் இந்நக்ஷத்ரங்களின் ப்ரகாசமும் வாலின் நீளமும் எவ்வளவு அதிகரிக்கின்றன என்றால், சில பட்டப்பகலிலேயே நன்றாகத் தோன்றக்கூடிய விதத்தில் அவ்வளவு அதிகரித்திருக்கின்றனவாம். 1860-ம் வர்ஷம் தோன்றிய நக்ஷத்ரம் ஒரு மணி நேரத்திற்கு 1,200,000 மைல் வீதம் ஓடிக்கொண்டிருக்கையில், இரண்டு தினத்திற்குள்ளாக அதற்கு 60,000,000 மைல் நீளமுள்ள வால் உண்டாயிற்றாம்.

முன்னெல்லாம் இவ்வால் நக்ஷத்ரங்களின் தோற்றம் ஜனங்களுக்கு பீதியை உண்டாக்கிவந்தன. அவை பூமியில் வந்து மோதுமாயின் பூமி என்னவாகும் என்ற பயம் ஜனங்களுக்கு இருந்தது. அப்பயம் இப்போது ஓடிப்போயிற்று. எதனாலெனின், நக்ஷத்ரங்களின் வால் புகைபோன்ற ஒன்றே என்றும், 1861-ம் வர்ஷம் தோன்றிய நக்ஷத்ரத்தின் வாலை ஊடுருவி நமது பூமி சென்றதென்றும் பெரிய வால் நக்ஷத்ரத்தின் வாலும் சில இராத்தல்கள் கனம் தானிருக்குமென்றும் தெரிந்ததால் என்க. இது நிற்க, வால் நக்ஷத்ரங்கள் இரண்டாக உடைந்துபோவதுமுண்டாம். "பேலாஸ் வால் நக்ஷத்ரம்" இரண்டாக உடைந்து இரண்டாகவே சுற்றி வந்ததாம்.

ஸ்வாமி வள்ளிநாயகம்.

# WOMEN'S POSITION IN CREATION.

By

**Mr. P. A. Krishnasami Naidu, F. T. S.**

## ச்ருஷ்டியில் ஸ்த்ரீகளின் நிலைமை.

" தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

ஸகோதரிகளே !

ஒரு தேசத்தின் நாகரீக அளவை எம்மாத்ரம் இருக்கிறதென்று அறியவேண்டுமானால், அத்தேசத்தின் ஸ்த்ரீகளுடைய நிலைமையே காட்டுமென்று ஆன்றோற் கூறுகின்றனர். இந்தியா தேசத்தில் பண்டைக்காலத்தில் இருந்த ஸ்த்ரீகள் நிலைமையையும் அவர்களின் உயர்வையும் யோசிப்போம். அப்படி யோசித்துப் பார்க்கும்போது இந்தியாவின் நாகரீகமானது உயர்வான பதவியையடைந்திருந்ததென்று தெரிய வருகிறது. உலக சரித்ரத்தையும் இலக்கியத்தையும் ஆராய்ந்துபார்த்தால் இந்தியாதேசத்து இலக்கியத்திலும் சரித்ரத்திலும் ஸ்த்ரீகளின் உயர்வைப்பற்றியும், அவர்களின் ஒழுக்கங்களைப்பற்றியும் ப்ரஸ்தாபித்திருப்பதைப்போல் வேறு எந்த தேசத்து இலக்கியங்களிலும் சரித்ரங்களிலும் ப்ரஸ்தாபிக்கப்படவில்லை. ஒவ்வோர் உயர்வான தர்மமும், சீலமும், அழகும் மானிட சரீரத்தில் ஒருங்கேயமைந்து, உலக முழுதும் வியந்து மெச்சிக்கொள்ளும்படியாக அமைக்கப்பெற்றமைபோல் நமது சாஸ்த்ரங்களில் வெளியாகின்றன.

ஸ்த்ரீகளுடைய ஸ்வபாவத்தையும் தர்மத்தையும் பற்றி ஹிந்துக்களுடைய ஆதிக் கொள்கையென்ன? என்பதை யோசிப்போம். மனுஷ ச்ருஷ்டித் துவக்கத்தில் ச்ருஷ்டிகர்த்தா அர்த்தநாரீச்வராகத்தம்மை யாக்கிக்கொண்டார். அதாவது ஒருபாதி புருஷனாகவும் மற்றபாதி ஸ்த்ரீயாகவும் ஆயினார். ஆகவே, ஸ்த்ரீபுருஷர்கள் இருவரும் அவரவர் நடத்தவேண்டியதொழில் இருக்கின்றது. ஆண் பெண் என்ற ஸ்னேகம் மனுஷவர்க்கத்தில் மாத்ரம் இருப்பதன்று. ப்ரபஞ்சத்தில் எல்லா வர்க்கங்களிலும் இந்த ஸ்னேகமிருக்கின்றது. ஆனால் ஆண் பெண் என்ற பேர்மாத்திரம் எல்லாவற்றிற்கும் உப



யோகிக்கப்படுகிறதில்லை. மனிதவர்க்கத்தில் சில குணாதிசயங்களின் தொகுதி ஆணிலும்,மற்றும் வேறான குணாதிசயங்களின் தொகுதி பெண்ணிலும் அமைந்திருக்கின்றன. தேவவர்க்கத்திலும் ஆண் பெண் என்ற இருபால் இருக்கின்றன? தேவன் உண்டென்றால் தேவியும் உண்டு. ஆகவே, ஆண் பெண் என்பவர் இணைபிரியா இரட்டையர்கள். ஓரே ஈச்வரனின் விகாசத்தினால் இவர்கள் ஏற்பட்டார்கள்.

வேற்றுமையான குணாதிசயங்கள் ஓரே ஸ்தூல சரீரத்தில் ஓரேகாலத்தில் விகாசமாகி அபிவ்ருத்தியடைய இயலாது. ஆகையினால் இரண்டுவிதமான சரீரதத்வம் அந்தந்தக் குணாதிசயங்களுக்கு உற்றதாய் ஏற்பட்டிருக்கின்றது. ஒரு சரீரபாரம்பரையில் விக்ஞானம் பூர்ண விகாசத்தையடைகிறது. மற்றொரு சரீரபாரம்பரையில் அன்பின் வழியாகிய புத்தி தத்வம் பூர்ண விகாசத்தைப் பெறுகிறது. இவைகள் முறையே ஆண் பெண் சரீரங்களேயாம். அவைகளின் வேற்றுமையே விகாச அபிவ்ருத்திக்கு அனுகூலமாகும். மேன்மேலும் விகாசம் அபிவ்ருத்தியாகி அதன் கடைசி முறையில் வர வர ஆண் பெண் வேற்றுமைப்பாடுகள் குன்றி அந்த்யத்தில் இரண்டும் ஒன்றுபட்டு அர்த்தநாரீயாக ஆரம்பம் போல் முடிவிலும் அமையும். சுருக்கமாகக் கூறுமிடத்து ஆண் பெண் இருபாலரிடத்தும் வேற்றுமை பாவம் நிகழாது. சத்ரு பாவமும் பொருந்தாது. ஆண் பெண் என்ற பாவங்கள் பூர்ணமனுஷனின் இரண்டு பகுதிகளாம்.

ஸ்த்ரீகளுடைய உருவத்தையும் வடிவத்தையும் கவனித்துப் பார்ப்போமாகில், அவளுடைய அந்தர்தர்மமும் பகிர்தர்மமும் இன்னதென்று அறிகுறியாய் அவள் சரீரத்திலேயே அமைந்திருக்கின்றன. அழகும், அன்பின்வழியாகிய புத்தி வலிமையும், ஆழ்ந்த கருணையும் அவள் சரீரத்தில் விளங்குகின்றது. பூர்ணவிகாசம் பெற்ற மனுஷ ஜீவனில், ஸ்த்ரீபுத்தி அம்சத்தையும் புருஷன் அம்சத்தையும் அறிகுறியாய் நின்று விளக்குகின்றார்கள். ஆகவே, இருவரும் இன்றியமையாதவர்கள். இந்த இருவித குணபாவங்களை வெளிப்படுத்தவே சரீரவேற்றுமைகள் வித்யாசமாக அமைத்துள்ளன.

விருப்பும் வெறுப்பும் பற்றியதான அந்தக்கரண விருத்தியானது (Emotion) பூர்ண விகாசத்தை அடைகின்றது. துயரம் வந்தால் புருஷனைவிட ஸ்த்ரீ அதிகமாய்ப் பாராட்டுவாள்; சுகம் வந்தாலும் அப்படியே. ஆகவே, பெண்மணிகளின் படிப்பு விஷயத்தில் அவர்களுக்கு உரிய குணபாவம் விகாஸிக்கும்படியாய் ஏற்ற கல்விப்பயிற்சியை அமைத்தல் வேண்டும். இது கவனிக்க வேண்டிய முக்யமான விஷயம். ஸ்த்ரீ ரத்னங்களுக்கு நடுநிலைமை, நேர்மை, இவைகள் குன்றிப்போகாமல் அறிவை அபிவ்ருத்தி செய்வதற்கு ஏற்றகல்வியையே அமைக்கவேண்டுவது ஆவசியகம். புருஷரும் இவ்வாறே பயில்வது தகுதி. இவ்விதமாக விகாசம்பெற்ற ஆண் பெண்கள் ஸ்திரீபுமான்களானால், அப்போது சரியான விவாகம் அமையும். இதனால் ஒருவரையொருவர் அறிந்தவராய், உற்ற துணைவராவார்கள்.

அப்படியின்றி, அவரவர்களுக்கு உரிய குண ஸ்வபாவம் மாத்ரம் அபிவ்ருத்தியாகி மற்றைய குணஸ்வபாவம் பொய்த்துப்போமாகில், நேர்மை பற்றிய விவாகம் அவ்விருவருக்குள் சேர்வது துர்லபம்

பி. அ. கிருஷ்ணஸ்வாமி நாயுடு.

---

## THE THREE BROTHERS.

**By**

**Mr. K. P. Seshadri Aiyangar**

(of Madras Tamil Sangam).

## மூன்று ஸஹோதரர்கள்.

சந்தனு ராஜனுக்கு பீஷ்மரைத்தவிர ஸத்யவதியினிடம் இரண்டு புத்ரர்கள் ஜனித்தார்கள். அதிர்ஷ்ட ஹீனத்தால் சந்தனு இந்தப்ப்ரபஞ்ச வாழ்க்கையை விட்டுவிட வேண்டியதாயிற்று. குழந்தைகளாக விருக்கும்போதே அந்த ராஜகுமாரர்கள் தங்கள் தகப்பனை இழக்க நேரிட்டது. ஆகவே, பீஷ்மர் அந்த பிள்ளைகளைத் தம் புத்ரர்களாகப் பாவித்து, ப்ரேமையுடன் கண்ணை இமை காப்பது போல் போஷித்து வந்தார். அவர்களில் மூத்தவன் பெயர் சித்ராங்கதன். அவன் தன் நாமத்துக்கேற்ப ஸௌந்தர ரூபமுடையவன். அவன் வெகு பால்யத்திலேயே மரணமடைந்தான்.



ஜேஷ்ட புத்ரனிறக்கவே கனிஷ்டகுமாரன் பட்டத்துக்கு வந்தான். அவன் பெயர் விசித்ரவீர்யன். பட்டாபிஷேகம் நடக்கும் ஸமயத்தில் வெகு பால்ய பருவத்திலிருந்தான். அந்தச் சிறு வயதிலேயே அவனுக்கு விவாஹம் செய்யவேண்டியிருந்தது.

முற்காலத்தில் ராஜபுத்ரிகள் தங்கள் புருஷனைத் தாங்களே வரிப்பார்கள். அப்படிச் செய்வதற்கு 'ஸ்வயம்வரம்' என்று பெயர். ஸ்வயம்வர மண்டபத்தில் தேச ராஜாக்கள் ஒன்று கூடுவார்கள், மல்யுத்தம் செய்தோ, வில்லை முறித்தோ, அல்லது வில்லை நாணேற்றியோ குறித்த இடத்தை அம்பினால் எய்தோ, எந்த விதத்திலாவது ஜயம்பெற்று எவன் வருகின்றானோ அவனையே ராஜகுமாரிகள் தங்கள் புருஷனாக வரிப்பார்கள். வரித்ததற்கு அடையாளமாய் அவன் கழுத்தில் ஒரு புஷ்பமாலையைச் சாற்றுவார்கள்.

விசித்ர வீர்யன் மிகவும் சிறியவனாயிருந்ததால் ஸ்வயம்வரத்துக்குச் செல்ல அசக்தனாயிருந்தான். ஆகவே, அவனுக்குப் பதிலாக பீஷ்மர், காசிராஜன் தம் புத்ரிகளுக்கு ஏற்படுத்தியிருந்த ஸ்வயம்வர மண்டபத்துக்குச் சென்றார். பீஷ்மர் அங்கு சென்றதும் காசிராஜனுடைய மூன்று ராஜ புத்ரிகளை ஸ்வயம்வர மண்டபத்தில் பார்த்தார். தமது ஸஹோதரனாகிய விசித்ரவீர்யனுக்கு இவர்களைக் கல்யாணம் செய்துவைப்பதாக நிச்சயித்தார். ஸ்வயம்வர மண்டபத்தில் அந்த ராஜபுத்ரிகளை விவாஹம் செய்துகொள்ள வந்திருந்த ராஜாக்களைப் பார்த்து, "ஹே க்ஷத்ரியர்காள்! நான் இந்த ராஜகுமாரிகளை ரதத்தில் தூக்கிக்கொண்டுபோகிறேன். உங்கள் பராக்ரமத்தால் என்னையாவது தோற்கடியுங்கள், அல்லது நீங்களாவது தோல்வியடையுங்கள்" என்று உரக்கச் சொன்னார். இவ்வார்த்தைகளைக் கேட்டதும் ராஜாக்களுக்கெல்லாம் 'கோபமூண்டது. பெரிய யுத்தம் அப்போழுதே உண்டாயிற்று. அச்சண்டையில் பீஷ்மர் தனியாகவேயிருந்து, வந்திருந்த ராஜாக்களை தோற்கடித்து புறங்காட்டியோடச்செய்தார். பிறகு ராஜபுத்ரிகளை தம் ரதத்தில் தூக்கிவைத்துக்கொண்டு பட்டணம் வந்து சேர்ந்தார். அந்த மூன்று புத்ரிகளில் மூத்தவள் முன்னமேயே தான் வேறொரு அரசனை கணவனாக வரித்துவிட்டதாகச் சொன்னாள்.

அதற்கு பீஷ்மர் அவளது விருப்பத்தின்படி நடக்கும்படி அவளை விட்டுவிட்டார். மற்ற இரண்டு ஸஹோதரிகளான அம்பிகை, அம்பாலிகை என்பவர்களை தன் இளைய ஸஹோதரனாகிய விசித்ர வீர்யனுக்கு விவாஹம் செய்துவைத்தார். விவாஹம் நடந்தேறியது. சில காலத்திற்குள் விசித்ரவீர்யனும் சந்ததி யில்லாமல் இறந்து விட்டான். ஸந்தனுவின் வம்சம் ஸந்ததியில்லாமலிருந்தது.

ஸத்யவதி துக்காக்ராந்தையாய் பீஷ்மரை ஸிம்ஹாஸனம் வகித்து அந்த இரண்டு விதவைகளை மணக்கும்படி வெகுவாகக் கேட்டுக்கொண்டாள். பந்து மித்ரர்களும் பீஷ்மரை ராணியின் விருப்பத்தை நிறைவேற்றும்படி வேண்டினார்கள். மறுபடியும் ராஜ்யமும் ஸம்ஸாரவாழ்க்கையும் பீஷ்மர் எதிரில் நின்றன. அவ்விரண்டிற்கும் மத்தியில் அவரது பிரதிக்ஞைசலனமில்லாமல் நின்று கொண்டிருந்தது. பீஷ்மருக்கு உலகத்தில் விரும்பத்தக்கவை களெல்லாவற்றிலும் மேலான வஸ்து ஸத்யம்தான்.

ஸஹோதரிகளே! தமது ப்ரதிக்ஞையை உறுதிப்படுத்தும் பொருட்டு பீஷ்மர் தமது அன்னையைப்பார்த்து "என் அன்னையே! நீர் சொல்லுவது வாஸ்தவத்தில் சாஸ்த்ர ஸம்மதமே! ஆனால் நீர் எனது ப்ரதிக்ஞையைத் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். எனக்கு விவாஹமே கூடாதென்பதையும், ஸந்ததியும் கிடையாதென்பதையும், உமது தந்தைக்கும் எனக்கும் நடந்த விஷயமெல்லாவற்றையும் நீர் அறிந்திருக்கிறீர்கள். என் அருமை அன்னையே! நான் முன்பு மொழிந்த ப்ரதிக்ஞையை மறுபடியும் சொல்கின்றேன். ஸ்வர்க்காதி போகங்களையும், அதற்குமேல் எவை யிருந்தபோதிலும் அவைகளையும் நான் திரஸ்கரிக்கிறேன். ஆனால் ஸத்யத்தை மாத்ரம் எந்த ஸமயமும் எந்த இடத்திலும் கைவிடேன். வாயு தன் ஸ்பரிச குணத்தை விட்டாலும் விடுவான். சூரியன் தன் ப்ரகாசத்தை விட்டாலும் விடுவான். அக்னி தன் உஷ்ணத்தையும், சந்த்ரன் தன் சீதள க்ரணத்தையும், எமன் தன் பக்ஷபாதமின்மையையும் விட்டு மாறினாலும் மாறுவார்கள். ஆனால் நான் மாத்ரம் ஸத்யத்தை விட்டு மாறமாட்டேன்" என்று சொன்னார். துக்கஸாகரத்தில் அழுந்திய ஸத்யவதி மீண்டும் மீண்டும் பீஷ்மரை ஸிம்ஹாஸனம் வஹிக்க வற்புறுத்தினாள். சலனமற்ற



மனத்தைப் படைத்த பீஷ்மர் தம் ப்ரதிக்ஞையை மறந்தாரில்லை. "ஹே! மாதாவே" என்னை ஸத்யத்தினின்று தவறச் சொல்கிறீரே, அது தர்மமாகுமா? என்னை நரகஹேதுவான கார்யத்தைச் செய்யச் சொல்கிறீரே. என்மனம் முற்றும் மறுக்கின்றதே. ஒரு க்ஷத்ரியன் ஸத்யத்தைவிட்டு மாறினனேயானால் எவ்வளவோ பாபத்தைச் செய்தவனாகின்றான் என்று சாஸ்த்ரங்களில் கூறப்பட்டிருக்கின்றதே! இதெல்லாம் உமக்குத் தெரியாத விஷயமல்லவே. நான் உமக்கு ஒரு மார்க்கம் சொல்கின்றேன். ப்ரபஞ்சத்தில் சந்தனு மஹாராஜன் வம்சம் நிலைத்திருக்க க்ஷத்ரியர்களுக்கு வழக்கப்ரகாரம் ஒரு வழி இருக்கின்றது. அதை நான் சொல்கின்றேன். அதை நீர்கேட்டு குல குருவின் அனுமதிபெற்று என்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்துகொள்ளுங்கள்" என்று சொன்னார்.

பீஷ்மர், யாரேனும் ஒரு மஹரிஷியை அழைத்துவந்து இரண்டு விதவைகளுக்கும் புத்ர ஸந்தானம் அளிக்கச்செய்தால் வம்சம் வ்ருத்தியடையும் என்று ஸத்யவதிக்குச் சொன்னார். இதைக் கேட்ட ஸத்யவதி, தனக்கும் பராசரருக்கும் ஒரு மகரிஷி பிறந்ததாகவும், அந்த மஹரிஷி முன் ஜன்மத்தில் பெரிய மஹானாக விருந்தாரென்றும், அவர் ஜனனமடைந்ததும் தமது தகப்பனாரை விட்டுச் சென்றதாகவும் சொன்னாள். அவர் தான் க்ருஷ்ணத்வைபாயன வேதவ்யாஸர். ச்யாமளவர்ண முடையவராகையால் க்ருஷ்ணர், என்று பெயர்வந்தது. தீவின்மேல் பிறந்தவராகையால் த்வைபாயனர் வேதங்களை நான்காகப் பிரித்தவராகையால் வேதவ்யாஸர் என்ற பெயருடையவரானார். தமது அன்னை கஷ்டப்படும் ஸமயத்தில் தம்மை நினைத்தால் தாம் எங்கிருந்தாலும் க்ஷணமே வந்து கஷ்டத்தை நிவாரணம் செய்வதாக அவர் வாக்குறுதிசெய்தார். ஆகையால், 'பராக்ரமசாலியான பீஷ்மா! நீ இஷ்டப்படும் பக்ஷத்தில் நான் அவரை நினைக்கின்றேன்' என்றாள் ஸத்யவதி. க்ஷணமே வ்யாஸ பகவான் ப்ரஸன்னமானார். அவரிடம் தன் குறையைக் கூறினாள். அக்குறையைத் தான் நிறைவேற்றுவதாக உறுதிமொழி ஸத்யவதிக்குக் கூறினார். பிறகு "நான் என் ஸஹோதரனுக்கு புத்ரஸந்தானம் அளிக்கும் ஸமயத்தில் அந்த ஸ்த்ரீகள் என்கோர

ரூபத்தைச் சகித்துக் கொள்ளவேண்டும்" என்றார் வேதவ்யாஸர். ஸத்யவதி வெகு ப்ராயாசைப்பட்டுத்தன் மருமகள்மாரை குலோத்தாரண நிமித்தம் அம்மஹாரிஷியை நல்வரவேற்க இணங்கச் செய்தாள். அம்பிகை, ரிஷியின் கோரரூபத்தைக் கண்டு பயத்தால் கண்ணை மூடிக்கொண்டாள். ரிஷி அந்தப்புரத்தைவிட்டுப் போகும்வரை கண்ணைத் திறந்தாளில்லை. ஆகவே, அவள் தனக்கு புத்ரனாக ஒரு அந்தகனை ஈன்றாள். அந்த அந்தகனே த்ருதராஷ்ட்ரன். அவன்தான் கௌரவர்களின் அரசன். அம்பாலிகைக்கு அந்த மஹாரிஷியைக் கண்டதும் பயத்தால் முகம் வெளுத்தது. ஆகவே தனக்குப் புத்ரனாக பாண்டுவைப் பெற்றாள். அவன் வெள்ளை வெளேரென்று இருந்தான். அவன்தான் மஹாபாரதத்தில் ஜெயமாலை பூண்ட பஞ்சபாண்டவர்களின் அருமையான தகப்பன். இந்த இரண்டு குழந்தைகள் போறாது என்றெண்ணி ஸத்யவதி மற்றொருதரம் அம்பிகையை மஹாரிஷி ஸேவை செய்யச் சொன்னாள். அதற்கு அவள் தன் மாமியின் உத்தரவை மறுத்து தன் தாதிகளில் ஒருத்தியை அனுப்பினாள். அத்தாதி மஹாரிஷியைக் கண்டதும் பயபக்தியுடன் ஸேவை செய்தாள். அவள் சூத்ர ஸ்த்ரீயானபோதிலும் அவளுக்கு தர்மத்தில் நிகரற்ற யமதர்மனே புத்ரனாகப் பிறந்தான். அவன் பெயர்தான் விதுரன். இம்மூவர்களும்தான் மூன்று ஸஹோதரர்கள். இவர்களில் முதல் இரண்டு ஸஹோதரர்களின் ஸந்ததியாரே மஹாபாரத யுத்தத்திற்கு இரு கக்ஷிக்காரர்கள். மூன்றாவதான விதுரன் அந்தக அரசனான த்ருதராஷ்ட்ரனுக்கு நீதியைப் புகட்டும் நன்மந்த்ரியாக இருந்தார்.

சேஷசயனம்<br>20-11-15 } K. P. சேஷாத்ரி அயங்கார்.

---

ஸஹோதரிகாள்! உங்கள் நிலைமையை அறியுங்கள். இல்லற தர்மத்தை ஸரியாக நடத்துங்கள், இல்லற தர்மம் ஸரியாக நடத்தப்பட்டால் தேச முன்னேற்றம் எளிதில் உண்டாகும். இல்லறதர்மமே மோக்ஷம்.—ரபீந்த்ரநாத் டாகூர்.

# WAY TO MINIMISE PUNISHMENT IN SCHOOLS

By

**A Mistress.**

## தண்டனையைக் குறைக்கும் மார்க்கம்.

நமது பாடசாலைகளில் தண்டனை, பாடசாலை வேலைக்கு அவசியமாயிருந்தாலும் அது கெட்ட கருவியாகும். அதைக் கூடுமான மட்டும் உபாத்யாயர்கள் குறைக்க முயலவேண்டும். அதற்கு சில உபாயங்கள் உண்டு. அவை க்ரஹிக்கக்கூடியவைகள்தான். அவை யாவன:—

1. நீர் விழிப்பாய் இரும். நீர் விழிப்பாயிருப்பதனால் சிறுவர்கள் குற்றஞ்செய்ய இடமிராது. குற்றஞ் செய்த பிறகு தண்டிப்பதைக்காட்டிலும் குற்றம் வராமலே தடுப்பது விவேகம்.

2. மாணாக்கருக்குப் பாடசாலைக் காலத்தில் பூர்ண வேலையை கொடும். துஷ்டத்தனத்துக்கு அப்போது அவகாசமிராது. வேலையில்லாச் சோம்பரே வெகு துஷ்டர்களாவர்.

3. உம்முடைய போதனையை உல்லாசகரமாக்கி அதைக்கேட்பதில் சிறுவர்கட்கு விருப்பை யுண்டுபண்ணும். அப்போது குறும்புகள் செய்ய மாணாக்கர் யத்தனப்படார். குறும்புகள் இல்லாவிடத்து தண்டனை யேது?

4. தாங்கள் செய்யவேண்டியது இன்னதென்று பிள்ளைகளுக்குத் தெரியும்படி சொல்லும். அநேக குற்றங்கள் விளைவதற்குக் காரணம் தமது கடமை இன்னதென்று அவர்கள் அறியாமையே.

5. பிள்ளைகளை எல்லாம் உமது பக்கமாய் வசப்படுத்தும். அநேகர் உம்முடைய பக்ஷமிருந்தால் எவனும் உமக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்ய அஞ்சுவான். அப்போது தண்டனையை உபயோகியாமலே நல்ல பிள்ளைகளைக்கொண்டே துஷ்டனைத் திருத்திவிக்கலாம்.

6. பிள்ளைகளை மரியாதையாய் நடத்தும். அப்போது தண்டனை அவமான மென்றெண்ணி குற்றங்கள் செய்ய அஞ்சுவான்.

7. மாணாக்கருடைய வீட்டுக்குப்போய் தாய்தந்தையரோடு ச்நேகங்கொண்டு பிள்ளைகள் விஷயமாய் ச்ரத்தை பாராட்டி வருவீரானால் பெற்றோரும் உம் பக்கம் சேர்ந்து உம் க்ரம சிக்ஷைக்கு அநுகூலமாய்த் தம்மக்களை நடத்திவருவார்கள். பிள்ளைகட்கும் உம்மிடத்தில் பெருந்தாக்ஷிண்யம் தோன்றி உமக்குக் கோபம்வருங் கார்யத்தைச் செய்ய அஞ்சுவார்கள்.

8. கோபமும்முரத்திலேயே தண்டிக்கப்புகாதேயும் சற்று சாவதானப்பட்டால் தண்டனை வேண்டாமென்றாவது அல்லது அதைக் குறைக்க வேண்டுமென்றாவது தோன்றும். கோபம் ஓர் பைத்யம்.

9. மற்ற உபாயங்கள் கைகூடாவிட்டாலல்லது தண்டனையை உபயோகிக்காதேயும். சதுர்வித உபாயங்களுள் தண்டம் கடைசியதென்று நீர் பஞ்சதந்திரத்தில் வாசித்ததில்லையா?

10. தண்டிப்பது அவச்யமென்று தீர்மானித்தபிறகும் கூடியமட்டில் குறைந்த தண்டனையைப் கொடும். கையில் பிரம்பு வைத்திருந்தால் பிரம்படிதான் சரியென்று தோன்றுவதுண்டு. ஆகையால் அதை அப்புறமே வைத்திருக்கவேண்டும்.

11. வாஸ்தவமான துன்மார்க்கங்கட்காகத் தண்டிக்கலாமேயொழிய சிறுவர்கட்கு இயற்கையான சில்லரைச் சேஷ்டைகட்கெல்லாம் தண்டியாதேயும்.

12. துன்மார்க்கத்தை முளையிலேயே அற்பதண்டனையால் அப்போதைக் கப்போது கிள்ளிப்போடும். முற்றவைப்பதனால் பெருந்தண்டனைகளாகிய கோடாரிகள் வேண்டியிருக்கும்.

13. தண்டனைவருவது நிச்சயமென்று பிள்ளைகள் அறியட்டும். அறிந்தால் பிள்ளைகள் குற்றஞ்செய்யார். நெருப்பு சுடுமென்பது நிச்சயமாகையால் நெருப்பை யாருந்தொடுகிறதில்லை. குற்றஞ் செய்யுந்தோறும் தண்டித்துவரவேண்டும்.

ஒரு உபாத்தினி.

---

## COCHIN KADARS.

By

**Mr. L. Anantha Aiyer.**

## கொச்சி தேசத்துக் காடர்கள்.

'காடர்கள்' என்பவர் யார்? இவர்கள் ஒரு வனவாஸிகள். கொச்சி ஸமஸ்தானத்துக் காடுகளில் இவர்களை நாம் மிகுதியாகக் காணலாம். நமது ஸஹோதரிகள் இவர்களைப்பற்றிக் கேட்டிருக்க மாட்டார்களென்று நாம் நினைக்கிறோம். கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் இவர்கள் ஆப்பிரிக்கா தேசத்து நீக்ரோக்களை ஒத்திருப்பார்களென்று சொல்லலாம். இந்தக் காடர்களுக்கு சில முக்ய அடையாளங்களுண்டு இவர்கள் சப்பட்டையான மூக்கும் கருப்பான சுருட்டை மயிரும் உடையவர்களாயிருப்பார்கள். கொச்சி ஸமஸ்தானத்திலுள்ள நெல்லியம்பட்டி பெரம்பிக்குளம் போன்ற காடுகளில் இந்த ஜாதியார் விசேஷமாக வஸிக்கிறார்கள். இவர்கள் காடுகளில் வஸித்தாலும், காய் கனி கிழங்கு வகைகளையே தின்று ஜீவிக்கிறார்கள். நாகரீகஸ்தர்கள் என்று சொல்லிக்கொண்டு பட்டணங்களிலுள்ள ஜனங்கள் அநாகரீகமான ஆஹாரங்களைத் தின்பவர்கள் போலில்லை. இவர்கள் மிகுந்த தெய்வபக்தியுடையவர்கள். தேவி என்ற ஒரு அம்மனைக் குறித்து பூஜைசெய்கிறவர்கள். பட்டணங்களில் வசிக்கும் ஹிந்துக்களுக்குள்ள பண்டிகைகளைப்போலவே அநேகமாக இவர்களுக்கும் பண்டிகைகளுண்டு. பண்டிகை தினங்களில் குடும்பங்களில் எல்லோரும் சாராயம் குடிப்பார்கள். இவர்கள் காதிலும் கழுத்திலும் இலைகளினாலும் ஓலைகளினாலும் அலங்காரம் செய்து கொள்ளுவார்கள். இவ்வனவாஸிகள் தேன்கூடு பொறுக்குவதிலும் மெழுகு சேர்ப்பதிலும் மிகுந்த திறமைசாலிகள். மரங்களில் வெகு சுளுவில் குரங்குகள் போல் ஏறுவார்கள். காடுகளில் இவர்கள் பனை நாரெடுப்பதிலும் வாழை நாரெடுப்பதிலும் உழைத்து வருகிறார்கள். காட்டிலாகவைச் சேர்ந்த ஸர்க்கார் சிப்பந்திகளுக்கு வெகு உதவிபுரிகிறார்கள்.

இனி, இவர்களது குடும்ப வழக்கப் பழக்கங்களைப் பார்ப்போம். இக்காடர்கள் சூதுவாது ஒன்றும் அறியாதவர்கள். தம் ஜாதியாராலும் வேறு ஜாதியாராலும் தமக்கு கெடுதலும் தீங்கிழைத்தலுமொழிய அவர்களிடம் கிட்ட நெருங்க மாட்டார்கள். பழைய கால ப்ராம்மணகளைப் போல் ஏகபத்னி வ்ரதம் கொண்டவர்கள். விவா

ஹம் ஆனபிறகு ஸ்த்ரீயோ அல்லது புருஷனோ முன் இறந்துவிட்டால் அவனோ அவளோ மறுபடியும் வேரொருவரை விவாஹம் செய்துகொள்ளலாமென்று இவர்களுக்குள் ஒரு வழக்கமிருக்கிறது. இவர்கள் சொன்னசொல் தவரமாட்டார்கள்; எடுத்த கார்யத்தைச் செய்து முடிக்கும் திறமையுடையவர்கள்; பொய் பேசமாட்டார்கள் பிறரை வஞ்சகம் செய்யமாட்டார்கள்; வெகு சுறுசுறுப்புடையவர்கள்; இஜ்ஜாதியார்களின் ஸ்த்ரீகள் சில விஷயங்களில் ப்ராம்மண குலஸ்த்ரீகளைப்போல் ஆசாரங்களை செய்பவராயிருக்கிறார்கள். ஸ்த்ரீகள் மாதவிடாய் காலங்களில் குடிசையினுள் ஒரு மூலையில் மூன்று நாள் ஒதுங்குகிறார்கள். அங்கு புருஷரும் போகிறது கிடையாது. நான்காம் தினம் ஸ்நானம் செய்த பிற்பாடுதான் மற்றவர்களோடு சாப்பிடவருவார்கள். ப்ரஸவ காலத்திலும் இவர்கள் 10 தினங்கள் ப்ரஸவ அறையைவிட்டு வருவதில்லை. காடர் ஜாதியினர் மிகுந்த கற்புடையவர்களென்று கூறப்படுகின்றனர். ஒரு விவாஹமான ஸ்த்ரீ தனது புருஷனையே தெய்வமென்று கொண்டாடுகிறாள். விவாஹமான ஸ்த்ரீயிடம் அந்ய புருஷர்கள் வெகு மரியாதையோடு நடந்து கொள்கிறார்கள். இந்த ஸ்த்ரீகளின் கற்பு மிகவும் சிறந்ததென்று சொல்லப்படுகிறது. இவர்கள் கொச்சி ராஜாவின் ஆதீனத்தில் இருப்பவர்களென்றும் அவரிடத்தில் விச்வாஸமுடையவர்களென்றும் தெரியவருகிறது. ராஜா தமது ஸமஸ்தான காடுகளில் வேட்டையாடச் சென்றால் அவருக்கு ஸகலவித பணிவிடைகளையும் செய்வார்கள். கொச்சி ராஜாவை இவர்கள் 'மாதே' என்று கூப்பிடுகிறது வழக்கமாம். ராஜா காடுகளில் வேட்டையாடச் செல்கிறபொழுது இஜ்ஜாதியார்களுக்குப் பட்டணங்களிலிருந்து சீப்பு, கண்ணாடி, வஸ்த்ரம், அரிசி முதலியவைகள் வாங்கிக்கொண்டு போய் கொடுப்பாராம். இவர்கள் தலைவனுக்கு 'மூப்பன்மார்' என்று பெயர். இவர்களின் தலைவன்சொல் ப்ரகாரம் மற்றவர்கள் நடப்பார்கள். இவர்களில் யாரேனும் இறந்துவிட்டால் அவனைப்புதைத்து விடுவார்களாம். இவர்களும் நாகரீகஸ்தர்களாகி வருகிறதற்கு கொச்சி ஸமஸ்தானத்தில் முயற்சிகள் செய்துகொண்டுவருகிறார்கள்.

ல. அனந்தய்யர்.

---



# CONCERNING CHILDREN.

# குழந்தைகள் விஷயம்.

**Kindness.**

பக்ஷம்:—பிள்ளைகள் சிறுவயதிலிருக்கும்போதே அவர்களை பக்ஷமுடையவர்களாயிருக்கப் பயிற்ற வேண்டும். தாயையும் தகப்பனையும் நேசிக்கக் கற்றுக்கொண்ட பிள்ளையை மற்ற பெரியோர்களையும் நேசிக்கப் பழக்குவிக்கலாம். தன் அண்ணனையும் தம்பியையும் நேசிக்கக் கற்றுக்கொண்ட பிள்ளை மற்றவர்களையும் சஹோதர பாவத்துடன் இருக்கச் செய்வது கஷ்டமான கார்யமல்ல. பெற்றோர்கள் நற்பழக்கங்களில் பழக்கப்பட்டு அவர்கள் அப்பழக்கங்களைச் செய்து காட்டுவோர்களாயின் குழந்தைகள் வெகு இலேசாக அவைகளைக் கற்றுக்கொள்ளும். கோபம், சண்டை, பொறாமை, பதிலுக்குப் பதில் செய்தல், அஹங்காரம் முதலிய துர்க்குணங்கள் அவர்களிடத்தில் வளராதபடி பார்த்து வரவேண்டும். எல்லோரிடத்திலும் அன்பு பாராட்டும்படியான கதைகளைச் சொல்ல வேண்டும். ஸத்யம், பரோபகாரம், சாந்தம் முதலிய குணங்கள் அமைந்துள்ள நல்ல கதைகளை பெற்றோர்கள் சொல்லிக் கொடுக்கவேண்டும்.

**A warning to parents.**

பெற்றோர்களுக்கு ஒரு எச்சரிக்கை:—பெற்றோர்களே! உங்கள் குழந்தைகள் பொய் சொல்லாமல் உண்மை பேசுதலை அப்யாஸம் செய்யவேண்டுமென்றால் நீங்கள் பொய் பேசாதிருங்கள். விளையாட்டுக்குகூட நீங்கள். பொய் பேசலாகாது தற்காலத்துத் தாய்மார்கள் தங்கள் சிறு குழந்தைகளுக்கு சாதம் ஊட்டும்போது அதை காக்காய்க்கும் பூனைக்கும் போட்டுவிடுவதாக நடித்தும், கள்ளன் வந்து சாதத்தைப் பிடுங்கிக்கொண்டு போவான் என்று உளறியும் சோற்றோடுகூட குழந்தைகளுக்கு பொய்யையும் ஊட்டுகிறார்கள். இரண்டாவது, பிள்ளைகளுக்கு அதைர்யத்தைக் கொடுக்கக்கூடிய மூடக்கதைகளை குழந்தைகளுக்குசொல்லிக் கொடுக்கிறார்கள். இதெல்லாம் கூடாதகார்யமாகும். பெற்றோர்கள் ஸரியானவழியில் பழக்கப்பட்டிருந்தால் குழந்தைகளும் ஸரியான வழியில் பழக்கப்பட்டு உண்மை பேசுதலை அப்யாஸம் செய்ய நேரிடும். பெற்றோர்கள் குழந்தைகளை வளர்க்கவும் பழக்கவுமான விஷயத்தில் மிகுந்த கவலை யுடையவர்களா யிருக்க வேண்டும்.

**Health of the Wetnurse.**

குழந்தைக்குப் பால் கொடுக்கும் தாதியின் தேகஸௌகம்:—நல்ல குணமும் ஒழுக்கமும் இலக்ஷணமும் உத்ஸாகமு முள்ளவளைப் பார்த்து தாதியாகத் தெரிந்தெடுக்க வேண்டும். தாதி கெட்டவளானால் அவள் பாலின் தன்மையும் கெட்டுப்போயிருக்கும். அதனால் குழந்தை கெட்டுவிடும். மேலும் குழந்தை குணம் கெட்டுப்போய் வளரும். வயதுசென்ற ஸ்த்ரீகளின் பால் ஸத்துக்கெட்டுப் போயிருக்கும். அவள் 30 அல்லது 35 வயதுக்கு மேற்பட்டவளும் 16 அல்லது 17 வயதுக்கு கீழ்ப்பட்டவளுமா யிருக்கலாகாது. ஏறக்குறைய இந்தக் குழந்தை பிறந்தகாலத்தில் தாதியும் பிள்ளைபெற்றவளாயிருக்கவேண்டும். மற்றபடி அவள் பால் இந்தக் குழந்தையின் தேகத்துக்கு ஸரியாய் ஒத்துக்கொள்ளாது.

## II
## DOMESTIC HINTS AND SUGGESTIONS.
### க்ருகத்தியக் குறிப்புகள்.

**Jurappalai.**

ஜுரப்பாலை;—இது வெப்பாலை மரத்தின் இனுசாக இருக்கும் இதன் இலை வெப்பாலை இலை போலவே இருக்கும். ஆனால் இதற்கும் அதற்கும் வித்தியாசங் காணவேண்டின் இம்மரத்தின் மொட்டை யெடுத்து நசுக்கினால் பிசின்போலிருக்கும். இதன் பால் வெண்மை. எடுத்துச் சிலநேரம் வைத்தால் கருவைக் கோர்த்துபோலாகும். அந்தப் பிசின் ரணங்களிலுண்டாகிற கிருமிகளையும், புரைகளையும் போக்கும். ம்ருக ஜாதி முதல் மனுஷன் ஈறான பிராணிகளுக்கு நேரும் ரணங்களுக்கு இப்பிசினை நல்லெண்ணெய், தேங்காய் நெய் இவற்றிலிட்டுக் காய்ச்சி உபயோகித்தால் கிருமிகளைச் சங்காரஞ் செய்து அதி சீக்கிரத்தில் ரணத்தை ஆற்றும். இதன் பட்டையின் கஷாயத்தால் 64 வகை ஜுரங்களும் மூன்று வேளை சாப்பிட நீங்கும். இதன் பட்டை குவைனைப் போல் கசப்புள்ளது.

**Uses of water in the lamp.**

விளக்குகளில் தண்ணீரின் உபயோகம்:—கெரோஸின் எண்ணெய் விளக்குகளில் எண்ணெயின் அடியில் சிறிது உப்பைப் போட்டு வைத்திருந்தால் விளக்கு அதிக ப்ரகாசமாய் எரியும். விளக்கில் எண்ணெய் குறைந்து போனால் விளக்கில் ஜலத்தை ஊற்ற அடியிலிருக்கும் எண்ணெய் எல்லாம் ஜலத்தின் மேல் மிதந்து மேலே வரும். எண்ணெய் கொஞ்சங்கூட சேதமாகாதபடி எல்லாம் எரிந்துவிடும். திரி சிறியதாயிருந்தாலும் இதேவிதமாய் ஜலம் ஊற்றி எண்ணெயைத் திரி உயரத்துக்கு ஏற்றிவிடலாம்.

**Puliyaraikeerai.**

புளியாரைக்கீரை:—இது தோப்பு முதலான நிழலுள்ள நிலங்களிலும், தண்ணீர் அதிகமாகப் பாயும் தோட்ட நிலங்களிலும், தானாகவே விளையும். இந்தக் கீரைக்குப் புளிப்பு அதிகம். சமையலுக்கு இது மிகவும் உபயோகம். காய் கறிகளோடு கலந்து சமைத்துப் புசிக்கலாம். இது தேக உஷ்ணத்தையும் மேக நீரையும் போக்கடிக்கும். ஆயுர் வேதத்தில் இதை மருந்துவகைகளில் ஒன்றாக மதித்திருக்கிறார்கள்.

**Manathakkali.**

மணத்தக்காளி:—இதில் கறுப்பு, சிவப்பு என்ற பலவகைகளுண்டு. கீரைப்பாத்திகளில் இதை விதைத்துப் பயிரிட்டுவந்தால் நல்ல பலனைக் கொடுக்கும். இதன் இலை வயிற்றின் இரணங்களை ஆற்றும் மேன்மையான கீரையாகும். இதன் காய்கள் குழம்புசெய்யலாம். பழங்கள் வற்றல் போடலாம். மாறிகாலங்களில் ஹிந்து குடும்பங்களில் இந்த வற்றல்களை ஜாஸ்தியாக சேகரித்து வைப்பதுண்டு. இதன் வற்றல் குழம்பு தேகத்துக்கு வெகு ஆரோக்கியமானது.

**Use your teeth well.**

உன்பற்களை நன்றாக உபயோகி:- சாப்பிடும்போது போஜனத்தை பற்களால் நன்றாய் அரைத்து உமிழ் நீரால் கரைத்துச் சாப்பிடவேண்டும். மெல்லாமல் ஆத்ரத்தோடு விழுங்குவது சாப்பிடுதலல்ல. அதனால் அஜீர்ணமுண்டாகும். இரைப்பைக்குச்சங்கடமும் உண்டாகும். பிறகு ரோகயால் வருந்தவேண்டிவரும். சாப்பாட்டின் ருசியெல்லாம் ஸாவகாசமாக போஜனத்தை அரைத்துச் சாப்பிடுவதிலிருக்கிறது.



## III
## KITCHEN AND COOKERY.
### சமையலறையும் சமையலும்

**Cookery.**

பாக சாஸ்த்ரம்:—நமது தமிழ் நாட்டில் பாகசாஸ்த்ரங்கள் கற்றஸ்த்ரீகள் மிகச்சிலரே. ஆயினும் தங்கள் தாய்மார், அத்தைமார், பாட்டிமார் சமைப்பதைப் பார்த்து சமையல் வேலையில் அனுபவமாகத் தேர்ந்த ஸ்த்ரீகள் பலர் இருக்கின்றனர். ஸ்த்ரீகளுக்கு அமைக்கப்பட்ட வேலைகளில் சமையல் வேலை மிக முக்கியமான தென்று சொல்லலாம். புருஷன் வெளியில் போய் ஸம்பாதிக்கவும் மனைவி வீட்டிலிருந்து ஸம்பாதித்துக்கொடுத்த பணத்தை வைத்துக்கொண்டு சிக்கனமாக குடும்பத்தை நிர்வகிக்கவும் ஏற்றவர்களாயிருக்கிறார்கள். ப்ரதிஸ்த்ரீயும் சமையல் வேலையில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். குடும்பங்களிலுண்டாகும் பலவ்யாதிகளுக்கு நாம் சாப்பிடும் போஜனம், காரணமாயிருக்கின்றது என்று கண்டுகொள்ளலாம். ஒவ்வொரு ஸ்த்ரீயும் சமையல் வேலையை நன்றாகக் கற்றுப் பழக்கிக் கொள்வாளாயின் ஸரியானபடி பாகம் செய்யாத போஜனத்தால் விளையும் வ்யாதிகளை ஒருவாறு குறைக்க சக்தியுள்ளவளாவாள்.

**Butter.**

வெண்ணெய்:—பாலை ஏடுபட நன்றாய்க் காய்ச்சவும். அது சற்று ஆறியபின் ஏட்டை ஒருபக்கம் ஒதுக்கிக்கொண்டு பால்சட்டியில் கொஞ்சம் புளித்த மோரை ஊற்றவேண்டும். இதற்கு பிரைஊற்றுதல் என்றுபெயர். மறுநாட்காலையில் பார்த்தால் பால் தயிராக மாறி யிருக்கும். ஏட்டோடு கூடிய மேற்பாதியை மற்றொரு பானையில் ஊற்றிக்கொண்டு பால்சட்டியிலிருக்கும் மீதியான தயிரைச் சாப்பாட்டுக்கு உபயோகிக்கலாம். ஏட்டோடு கூடியதயிரை அதில் கால் மடங்கு ஜலத்தை விட்டு மத்தினால் கடையவும். வெண்ணெய் எல்லாம் திரண்டு மிதக்கும். மிதக்கிற வெண்ணெயை யெடுத்து சேர்த்து வைத்துக்கொண்டு நெய்யாகக் காய்ச்சலாம். தயிர் கடையும் பானையிலுள்ள மோரில் வேண்டுமானால் ஜலம் விட்டுப் பெருக்கி உபயோகிக்கலாம்.

**Dholl Chutney.**

பருப்பு சட்னி:—பருப்பையும் மிளகாய் வற்றலையும் திட்டமாக வறுத்து எடுத்துக்கொள்ளவும். தகுந்த புளியும் சேர்த்து ஜலம் விட்டரைத்து சாப்பாட்டுக்கு உபயோகிக்கலாம். இதோடு பெருங்காயமும் சேர்ப்பதுண்டு. இதற்கு பருப்புத் துவையல் என்று பெயர்.

**Pongadam.**

போங்கடம்.—அரைப்படி புழுங்கரிசியையும் ஒரு ஆழாக்கு உளுத்தம் பருப்பையும் தனித்தனியாக ஊரவைக்கவும். அரிசியை ஒன்றிரண்டாக ஆட்டுக்கல்லில் அரைத்து எடுத்துக் கொள்ளவும். உளுத்தம் பருப்பையும் நைய்ய ஆட்டுக்கல்லில் அரைத்து எடுத்துக் கொள்ளவும். அரைத்த மாவு இரண்டையும் கலந்துவைக்கவும். அதோடு ஊரவைத்த கால் ஆழாக்குகடலைப்பருப்பைக் கலந்துமூடிவிடவும். பிறகு 12-மணி நேரம் கழிந்து கால் பலம் இஞ்சி, 5-பலம் தேங்காய், ஒரு பலம் பச்சை மிளகாய், ஒரு பலம் பொடிபண்ணின உப்பு, இவைகளைச் சேர்த்து மாவில் கலக்கவும். தோசைக்கல்லை அடுப்பில் போட்டு தோசைக்கு ஒரு கரண்டி எண்ணெயை விட்டு கனமாக தோசை வார்த்து எடுத்துக் கொள்ளவும்.

## IV
## WOMAN'S WORLD.
## ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

**Arrogance.**

அஹங்காரம்:—தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் தான் என்று சாதிப்பவர் பலருண்டு. ஆனால் அது மூர்க்கத் தனத்தை வெளிக்காட்டுகிறது. மூர்க்கம் குடியைக் கெடுக்கும், பெயரை அழிக்கும். பிடிவாதங்கொண்ட பெண்ணும் பேய்கொண்ட பெண்ணு மொன்றென்றார் ஒரு கவி. "ஆ! அம்மா! அந்தப் பெண்ணு" என்று பேர்பெறுவது பெருமை ஆகாது. பிடி வாதம் பெண்களை பெயரெடுக்க வொட்டாமல் கெடுக்கின்றது. அதைவிட்டு ஸரியானவழியில் போவது தானே பெண்களுக்கழகு.

**Two Scholarships for Women.**

ஸ்த்ரீகளுக்கு இரண்டு உதவிச் சம்பளங்கள்:—சென்னையில் ஸ்த்ரீகளுக்காக ஏற்பட்டிருக்கும் காலேஜில் வாசிக்கும் ஸ்த்ரீகளுக்கு மாதம் ஒன்றுக்கு 25-ரூபாய் வீதம் இரண்டு ஸ்காலர்ஷிப்புகளைக் கொடுத்து வருவதாக ராவ் சாஹேப் C. ராமானுஜம் செட்டியார் ஏற்றுக்கொண்டிருக்கிறார். அந்த நன்கொடையை சென்னை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டு விட்டார்கள்.

**Indore Rani.**

இந்தூர் மஹாராணி:—பம்பாயில் லேடி ஹார்டிஞ்சு யுத்த ஆஸ்பத்ரியில் காயம்பட்டு சிகித்ஸையி லிருக்கிற இந்திய வீரர்களுக்கும் புது வருஷதினத்தில் தின்பண்டங்கள் வாங்குகிறதற்காக இந்தூர் மஹாராணி ரூ. 250 கொடுத்து உதவி யிருக்கிறார்.

**A novel theft.**

ஓர் அதிசயத் திருட்டு:—வட இந்தியாவிலுள்ள ஒரு ரெயில்வே ஸ்டேஷனில் கீழ்வரும் விஷயம் உண்மையாக நடந்ததாம்:—கல்கத்தா ரெயில் வண்டியில் ஒரு கிழவி ஏறினள். அக்கிழவி ஏறின வண்டியில் முன்னதாகவே ஒரு பையனிருந்தான். கிழவியைக் கண்டதும் அந்தப் பையன் கோவென்று அழுது அவள் காலில் விழுந்தான். ஏனப்பா அழுகிறா யென்று விசாரிக்க, பையன், அம்மா! நீங்கள் என் தாயைப் போலிருக்கிறீர்கள். சிறிது நாளைக்கு முன்னதாக என் தாயார் இறந்து விட்டாள். என் தாயிடம் வெகு அன்பைச் செலுத்தி வந்தேன். தாங்கள் தான் என் தாயோ வென்று நினைக்க நேரிடுகிறது. அம்மா, தங்களிடம் ஒரு விண்ணப்பம் செய்து கொள்ளுகிறேன். ஒரு புடவைவாங்கிக் கொடுக்கப் பிரியப்படுகிறேன். தாங்கள் தயை செய்து அதை ஒப்புக்கொள்ள உத்தரவு தரவேணுமென்று கேட்டான், அதற்கு ஆகட்டுமென்று அவள் ஸம்மதித்து, அடுத்த ஸ்டேஷனில் வண்டி நின்றவுடன் இருவரும் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து துணிக்கடைக்குச் சென்றார்கள். அப்பையன் விலை மதிப்புள்ள ஒரு நல்ல புடவையை எடுத்துவிலைதீர்த்தான். அடுத்தகடையில் விலை விசாரித்து வருவதாகச் சொல்லி இந்தக் கிழவியை ஷாப்பில் வைத்துவிட்டுச் சென்றான். வாங்கப் போகிற துணிக்கு விலை விசாரிக்கப் போனவன், திரும்பிவராமலே மறைந்துவிட்டான். கிழவி அகப்பட்டுக் கொண்டாள். போலீஸார் அந்தகிழவியைப் பிடித்துக்கொண்டு போயிருக்கிறார்களாம் எவ்வளவு சொல்லியும் போலீசார் கிழவியை நம்பவில்லையாம்.

**A Gosha Hospital.**

ஒரு கோஷா ஆஸ்பத்ரி:—அனந்தப்பூரில் ஸ்த்ரீகளுக்கு ஒரு கோஷா ஆஸ்பத்ரி இலலாமையைக் கண்டு கான் ஸாஹேப் ஷிமாவுதீர் ஸாஹேப் அவர்கள் ஒரு தர்மகோஷா ஆஸ்பத்ரி கட்டி தகுந்த மேற்பார்வையில் விட்டிருக்கிறார்.



## V
## VIEWS AND REVIEWS.
## அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

**Love's Triumph.**

காதல்வெற்றி:—இது ஒரு உயர்ந்த தமிழ் நாவல். இது ஒரு பெண் தனது மனஸுக்குப் பிடிக்காத பையனைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்பாமல், தனது நெருங்கின பந்துவும் நேசனுமாகிய ஒரு வாலிபனைக் கல்யாணம் செய்துகொண்ட கதை விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இதில் புருஷனை எதிர்த்துப் பேசும் ஸ்த்ரீகளின் ஸ்வபாவமும், வைதீகர்களினுடைய வேடிக்கையான செய்கைகளும், மனைவிக்கு அடங்கி நடக்கும் புருஷர்களின் இயல்பும் விரிவாகவும் வேடிக்கையாகவும் எழுதப்பட்டிருக்கிறது. சிறுவர் சிறுமியர் முதல் யாவரும் தாராளமாய் வாசிக்கக்கூடியது. வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, கொண்டிசெட்டித்தெரு, சென்னை என்று எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

**Sri Gokhale's life and life work.**

ஸ்ரீமான் கோகலேயின் ஜீவ்ய சரித்ரமும் அவருடைய தேசசேவகமும்:—இதை எழுதினவர் "சுதேசமித்ரன்" உதவிப் பத்ராதிபர் மிஸ்டர். K. விச்வனாதய்யர். ப்ரசுரித்தவர் சென்னை, பவழக்காரத் தெரு ஆர். திருமலை அண்ட் கம்பெனியார். இதன் விலை அணா 8. இப்புஸ்தகம் எழுதினவர் மிகுந்த அனுபவசாலி யென்று புஸ்தகத்தினால் தெரியவருகிறது. ஆசிரியர் வெகு இடங்களிலிருந்து பல விஷயங்களைத் திரட்டி வெகு சுலபமான நடையில் மாதர்களுக்குப் புரியும்படியாக எழுதியிருக்கிறார். ஸ்ரீமான் கோகலே இந்தியாவுக்குச் செய்த நற்கார்யங்களையும் அவரின் தேசஸேவகத்தையும் விரிவாக எழுதியிருக்கிறார். ஒவ்வொரு ஸ்த்ரீ புருஷரும் ஸ்ரீமான் கோகலேயின் அடிச்சுவடுகளை தங்கள் வாழ்க்கையின் லக்ஷ்யமாக வைத்துக்கொண்டு நடப்பது அவச்யம். இப்புஸ்தகத்தை ஒவ்வொரு ஸ்த்ரீயும் வாசிக்கலாம், புஸ்தகம் வேண்டுமென்கிறவர்கள் மேற்கண்ட கம்பெனியாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**Lives of Indian women.**

இந்திய மாதர் சரித்ரம்:—இதை நம்பார்வைக்கு அனுப்பிய ஸ்ரீமானுக்கு வந்தனம் இதன் ஆசிரியர் தமிழ்ப்பண்டிதர் மகா-ா-ா-ஸ்ரீ V. B வெங்கடராம சாஸ்திரிகள். இது சென்னை பவழக்காரத் தெரு, ஆர். திருமலை அண்ட்கம்பெனியாரால் ப்ரசுரிக்கப்பட்டது. விலை அணா 8. பொதுவாக பெண்கள் படிப்பில் விரோதம் பாராட்டி வருபவர்கள், இப்புஸ்தகத்தை வாங்கிப் படித்தால் பெண்களின் படிப்பு அவச்யமென்று உணர்வார்கள் என்பதற்கு ஸந்தேகமில்லை.

தேச சரித்ரத்திலுள்ள சில ஸ்த்ரீ ரத்னங்களின் சரிதங்களும் இப்புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. புஸ்தகத்தின் நடை வெகு எளிது. ஸ்த்ரீகள் இதை வாங்கிப் படிக்க வேண்டுவது அவச்யம். மாதர்கள் இதனால் பயனடைவார்கள் என்பதை நாம் கூசாமல் சொல்லுவோம். வேண்டுவோர்கள் மேற்கண்ட கம்பெனியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

# HALF A DOZEN DETECTIVE NOVELS.

## அரை டஜன் துப்பறியும் தமிழ் நாவல்கள்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| **தானவன்** ... ... ... ... ...<br>தமிழில் முதல் துப்பறியும் நாவல். 5-கதைகள் அடங்கியது.—பண்டித நடேச சாஸ்திரிகள் எழுதியது. | 0 | 12 | 0 |
| **மாலினி மாதவம் அல்லது தர்மவிஜயம்** ... ...<br>துப்பறியும் தமிழ்நாவல்.—ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர் இயற்றியது. | 0 | 10 | 0 |
| **அக்ஞாதவாசம் அல்லது மாண்டவன் மீண்டமாயம்** ...<br>இது ஒரு துப்பறியும் நாவல்.—ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர் இயற்றியது. | 0 | 8 | 0 |
| **கள்வர் கவர்ந்த கல்யாணப்பெண்** ... ... ...<br>ஒரு இனிய துப்பறியும் தமிழ் நாவல்.—'ஜனமித்திரன்' உப பத்ராதிபர் எம். எஸ். க்ருஷ்ணஸ்வாமி அய்யர் இயற்றியது. | 0 | 6 | 0 |
| **மூன்று வைரங்கள்** ... ... ... ...<br>துப்பறியும் கதை.—ஆரணி குப்புஸாமி முதலியார் இயற்றியது. | 0 | 5 | 0 |
| **மதிமுகி** 1-ம் பாகம் அணா. 4. ஷை 2-ம் பாகம் ... ...<br>இது நாகை சோ. தண்டபாணிபிள்ளை இயற்றிய துப்பறியும் நாவல். | 0 | 4 | 0 |

---

ஒவ்வொரு ஹிந்துஸ்த்ரீயும் வாசிக்கவேண்டிய புஸ்தகங்கள்.

**வால்மீகி ராமாயணம் தமிழ் வசனம்.**

பண்டிதர் எஸ். எம். நடேச சாஸ்திரியார் மொழிபெயர்த்தது.
உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு, காலிகோவில் நேர்த்தியாய் அச்சிடப்பட்டு கில்ட் எழுத்துகள் போடப்பட்டது.

பாலகாண்டம் தனியாக விலைக்குக் கிடைக்காது. எங்களுடைய பெரிய காட்லாக்குக்கு எழுதுங்கள், இனாமாக அனுப்பப்படும்.

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| பாலகாண்டம் ... ... ... ... | 1 | 12 | 0 |
| அயோத்யாகாண்டம் ... ... ... ... | 3 | 8 | 0 |
| ஆரண்யகாண்டம் ... ... ... ... | 1 | 12 | 0 |
| கிஷ்கிந்தாகாண்டம் ... ... ... ... | 1 | 12 | 0 |
| ஸுந்தர காண்டம் ... ... ... ... | 1 | 12 | 0 |
| யுத்தகாண்டம் ... ... ... ... | 3 | 8 | 0 |
| ஆறுகாண்டமும் சேர்ந்து வாங்கினால்.... ... ... | 12 | 8 | 0 |

**ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,**
3 & 4, கொண்டிசெட்டித் தெரு; சென்னை.



# ஸஹோதரிகளே!

## தங்க வெள்ளி மெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றது எது?

## நாகபட்டினம் ஸ்வதேசி ஸ்டீல் ட்ரங்கு கம்பெனியார், தஞ்சாவூர்,

எதற்காக?

நகைப்பெட்டிகளும், பணப்பெட்டிகளும் உயர்ந்த ஸ்டீல் ட்ரங்குகளும், கைப்பெட்டிகளும், தபால் பெட்டிகளும் உயர்ந்த ஸ்டீல் தகடுகளினால் மிகுந்த வேலைப்பாடுகளுடன் அழுத்தமாகச்செய்யப்பட்டிருக்கிறது. அநேக பொருட்காட்சிகளிலும் கைத்தொழிற் காட்சிகளிலும் உயர்ந்த பதக்கங்கள் பெற்றிருக்கிறது. நகைப்பெட்டிகளுக்கும், பணப்பெட்டிகளுக்கும் ஸ்த்ரீகள் தங்களிஷ்டத்தின்படி அளவு கொடுத்தால் அதற்குத் தக்கபடி செய்து அனுப்பப்படும். உயர்ந்த ஸ்டீல் தகடுகளினால் செய்யப்படுகிறதால் தலைமுறை தலைமுறையாக நீடித்து பலமுள்ளதாக யிருக்கும். இதற்கு காரண்டி செய்கிறோம். கேட்லாகுக்கு எழுதுங்கள்.

மானேஜர்,

**நாகபட்டினம் ஸ்வதேசி**
**ஸ்டீல் ட்ரங்கு கம்பெனி,**
**தஞ்சாவூர்.**

---

குறிப்பு:—ஆர்டர் செய்யும்போது 'பெண்கல்வி'ப் பத்திரிகையில் கண்டதாக எழுதுங்கள்.

# The Female Education.

**Contents for December, 1915, January, 1916.**

# பெண் கல்வி.

**விஷயசூசிகை, டிசம்பர்மீ 1915 ஜனவரிமீ 1916.**


I. PROGRESS OF THE WORLD.

Our New Viceroy—The Prices of paper in Madras — Stree Abeda Aikya Ananda Samajum —A Medical College for women —The Indian National Social Conference.

II. SPECIAL ARTICLES.

i. Kummi on equality of women-by Sri Chellammal.
ii. Family Dharmas—by Sri Gajalakshmi Ammal.
iii. Stars — by Swami Vallinayakam.
iv. Deficiency of education —by Prof Karve.
v. Who is a Jivanmukta ?— by Yogini.
vi. Durbanga Maharaja and caste.
vii. The birth of the Heroes-by Mr. K. P. Seshadri Aiyangar.
viii Ancient Tamilians & their customs-by Mr. Sivadyananandan.
ix. The Dangerous fly — by Sri Valambal.

III. INTERESTING ITEMS.

i,ii. Concerning children.
ii. Domestic hints and suggestions.
iii. Kitchen and Cookery.
iv. Woman's World.
v, vi. Views and Reviews.
vii. Education.

I. ப்ரபஞ்ச போக்கு.

நமது புதுவைஸராய்—சென்னையில் பேபரின் விலைகள் — ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த ஸமாஜம்—ஸ்த்ரீகளுக்கு ஒரு வைத்யகாலேஜ் — இந்திய ஆசாரசீர்திருத்த கான்பரன்ஸ்.

II. விசேஷ வ்யாஸங்கள்.

i. பெண்கள் ஸமத்துவக்கும்மி ஸ்ரீமதி செல்லம்மாள்.
ii. குடும்பதர்மங்கள்--ஸ்ரீமதி கஜலக்ஷ்மி அம்மாள்.
iii. நக்ஷத்ரங்கள் — ஸ்ரீ சுவாமி வள்ளிநாயகம்.
iv. இந்தியாவில் கல்விக்குறைவு —ப்ரொபஸர் கார்வே.
v. ஜீவன்முக்தன் யார்? — ஒரு யோகினி.
vi. தர்பங்கா மஹாராஜாவும் ஜாதியும்.
viii பாரத கதாநாயகர் ஜனனம்-மிஸ்டர் கி. பி. சேஷாத்ரி அய்யங்கார்.
viii. தமிழரது பழக்க வழக்கங்கள் —மிஸ்டர் சிவத்யானந்தன்.
ix அபாயக்ரமான ஈ — ஸ்ரீமதி வாலாம்பாள்.

III. விசேஷக் குறிப்புகள்.

i,ii. குழந்தைகள் விஷயம்.
ii. க்ரஹத்தியக் குறிப்புகள்.
iii. சமையலறையும் சமையலும்.
iv. ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.
v, vi. அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்
vii. வித்யாவிஷயம்.


# PROGRESS OF THE WORLD.

## ப்ரபஞ்சப்போக்கு.

**Our New Viceroy.**

நமது புதிய ராஜப்ரதிநிதி.—நமது இந்தியாவுக்கு இப்பொழுது ராஜப்ரதிநிதியாக இருக்கிறவர் லார்ட்ஹார்டிஞ்சு. இவர் நாளை மார்ச்சுமீ தமது பதவியிலிருந்து விலகிக்கொள்ளுகிறார். இவருக்குப் பதிலாக லார்ட்செம்ஸ்போர்டு என்பவர் நமது ராஜப்ரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இப்பொழுது புதிதாக நியமிக்கப்பட்ட ராஜப்ரதிநிதிக்கு வயது 47. ஆகவே லார்ட் ஹார்டிஞ்சைக்காட்டிலும் 10-வயது இளையவர். இவருக்கும் லேடி செம்ஸ்போர்டுக்கும் ஒருவயது தான் வித்யாஸம். புது ராஜப்ரதிநிதிக்கு இரண்டு குமாரிகளும், ஐந்து புத்ரர்களுமிருக்கிறார்கள். மூத்த குமாரருக்கு வயது 19, இளையவருக்கு வயது 12. கடைசி குமாரிக்கு வயது 4. இவர் காலத்தில் ஸ்த்ரீகளின் கல்வி அபிவிருத்தியும் ஜனங்களின் ராஜீய லக்ஷ்யங்களும் அபிவிருத்தியடைய வேண்டுமென்று நாம் ஈச்வரனை ப்ரார்த்திக்கிறோம். வருகிற ஏப்ரல்மீ புதிய ராஜப்ரதிநிதி இந்தியாவந்து சேர்ந்து தமது ஸ்தானத்தை வகிப்பார்.

**The Prices of Paper in Madras.**

சென்னையில் பேபரின் விலைகள் :—இம்மஹாயுத்தம் ஆரம்பமானதற்குப் பிறகு சென்னையில் பேபரின் விலை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் ஒரு ரீம்டெமிவைஸ் 16 பவுண்டு நிறையுள்ள பேபர் ரூ 2-4 ஆக யிருந்தது. இப்போது இதன் விலை 4-ரூபாயாகயிருக்கிறது. நமது பெண்கல்விப் பத்ரிகைக்கு இந்தப் பேபரைத்தான் உபயோகித்து வந்தோம். கேட்ட பணத்தைக்கொடுத்தாலும் நல்ல பேபர் கிடைப்பது துர்லபமாயிருக்கிறது. பேபரின் விலைகள் இனியும் உயருமென்று வியாபாரிகள் சொல்லுகின்றனர். சந்தாபாக்கியுள்ள நேயர்கள் தங்கள் சந்தாவை சீக்ரம் அனுப்பிக்கொடுத்தால் வெகு உபகாரமாயிருக்கும். யுத்தம் முடிந்து உலகத்தில் ஸமாதானமாக வ்யாபாரப் போக்கு

வாத்து ஏற்படுகிற வரையில் பத்ரிகைகள் நடத்துவோருக்கும் புஸ்தகங்கள் ப்ரசுரம் செய்வோருக்கும் பேபர் கஷ்டங்கள் தணியாது.

**The Stree Abeda Aikya Ananda Samajam.**

**ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த ஸமாஜம்** :—1915-௵ டிஸம்பர்௴ நமது ஸமாஜத்துக்கு 4 சனிக்கிழமைகளிலும் விஜயம் செய்த மெம்பர்களின் ஸங்கியை 118. மெம்பர்களல்லாது விஜயம் செய்தவர்கள் 32. முதல் சனிக்கிழமை 4-12-15 ஸாயங்காலம் 4மணிக்கு ஸ்ரீமதி டாக்டர் சாந்தானந்த மௌனி அம்மாள் குடும்ப ஸுகாதாரத்தைப் பற்றி தெளிவாகப் பேசினார் இரண்டாம் சனிக்கிழமை-11-12-'15 மாலை 4-மணிக்கு பெண்கல்விப் பத்ராதிபர் ஸஹோதரி ஆர். தாயாரம்மா தர்மம் என்னும் விஷயமாகப்பேசினார். மூன்றாம் சனிக்கிழமை 18-12-15—மாலை 4-மணிக்கு ஸ்ரீமதி கஜலக்ஷ்மி அம்மாள் ஒழுக்கம் என்னும் விஷயமாகப் பேசினார். நான்காம் சனிக்கிழமை 25-12 15 மாலை 4-மணிக்குஸ்ரீமதி கா. மீனாக்ஷி அம்மாள் ஸ்ரீஜகத்குரு சங்கராசாரியர் காலத்தில் ஸ்த்ரீகளின் படிப்பு நிலைமையைப்பற்றிப் பேசினார்.

1916௵ ஜனவரி௴ நாலு சனிக்கிழமைகளிலும் ஸமாஜத்துக்கு விஜயம்செய்த மெம்பர்களின் ஸங்கியை 102. மெம்பர்களல்லாது விஜயம் செய்தவர்கள் 12. இம்மாதம் முதல்சனிக்கிழமை 1-1-1916 இங்கிலீஷ் புதுவர்ஷமாகையால் மீட்டிங்கு நடக்கவில்லை- இரண்டாம் சனிக்கிழமை 8-1-1916 மாலை 4-மணிக்கு ஸ்ரீமதி செல்லம்மாள் குணம் என்பதைப்பற்றி விஸ்தாரமாகப் பேசினார். மூன்றாம் சனிக்கிழமை 15-1-1916 மாலை 4-மணிக்கு பெண்கல்விப் பத்ராதிபர் ஸஹோதரி தாயாரம்மாள் பத்ரிகைகளும் ஸ்த்ரீகளும் என்பதைப்பற்றிப் பேசினார். நான்காம் சனிக்கிழமை 22-1-1916. மாலை 4-மணிக்கு ஸ்ரீமதி சாந்தானந்தமௌனி அம்மாள் ஸ்த்ரீகளும் வைத்யமும் என்பதைப் பற்றிப் பேசினார். ஐந்தாம் சனிக்கிழமை 29-1-1916 மாலை 5-மணிக்கு சென்னையில் ப்ரஹ்மஸமாஜ ஆதரவில் நடந்த ஒரு ஸ்த்ரீகளின் மீட்டிங்குக்கு ஸமாஜ மெம்பர்களெல்லோரும் விஜயம் செய்தார்கள்.

நாம் ஸமாஜ மெம்பர்களுக்கு ஒன்று சொல்லுகிறோம், தாங்கள் செய்யப்போகிற உபந்யாஸத்தைத் தெளிவாக எழுதிவாசிப்பது



தான் நலம். இம்மாதர் ஸமாஜம் பெண்களின் அபிவிருத்தி விஷயத்தில் சிறப்பாக உழைத்து வருகிறது. ஸமாஜ மெம்பர்கள் எல்லோரும் மீட்டிங்குக்கு ஸரியாக 4-மணிக்கு ஆஜரானால் ஸரியாக 5½-மணிக்குப் புறப்பட்டுப்போய் விடலாம். ஒவ்வொரு மெம்பரும் ஸமாஜ விருத்தியில் அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

**A Medical College for women.**

**ஸ்த்ரீகளுக்காக ஒரு வைத்ய காலேஜ்** :—இந்தியாவில் வைத்யத்தொழிலை அனுஷ்டிக்கும் ஸ்த்ரீகளின் சங்கத்தையொட்டி டிஸம்பர் மாதம் 29ந்தேதி மெடிகல் காலேஜில் ஒரு கூட்டம் கூடிற்று. அக்கூட்டத்திற்கு லேடிபெண்ட்லாண்டு அக்ராஸனம் வஹித்தார். இந்தச்சங்கம் 1909 ஸ்தாபிக்கப்பட்டது. இதுவரையில் இந்தச் சங்கத்தில் மீட்டிங்கு கூடவில்லை. இதுதான் முதல் தடவை. இந்த மீட்டிங்கில் ஸுமார் 30 ஸ்த்ரீ டாக்டர்கள் வந்திருந்தார்கள். லேடி பெண்ட்லாண்டு தமது ஆரம்ப ப்ரசங்கத்தில் இந்திய ஸ்த்ரீகளின் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்காக எல்லா கார்யங்களிலும் தாம் அக்கரை செலுத்துவதாகச் சொன்னார்.

பிறகு, இச்சங்கத்தின் கார்யதரிசி, இந்தியாவில் வைத்யத் தொழிலை அனுஷ்டித்து வரும் ஸ்த்ரீகள் வைத்ய விஷயமாக தங்கள் ஸஹோதரிகளுக்கு பல நன்மைகள் செய்து வருவதைப்பற்றி விஸ்தாரமாகப் பேசினார். அவர் பேசின விஷயங்களில் இரண்டொரு விஷயம் குறிப்பிடத்தக்கதாயிருக்கின்றது. இந்தியாவில் மாதர்களும் குழந்தைகளுமாக 20 கோடிபேர்களிருக்கிறார்கள். இவர்களின் வைத்யதேவைகளுக்கு இந்தியாவில் 640 ஸ்த்ரீவைத்யர்களிருப்பதானது பரிதாபகரமாயிருக்கிறதென்று குறிப்பிட்டார். இவ்விஷயம் மிகவும் கவனிக்கத்தக்கது. பின்பு, வேலூரிலிருந்து ஒரு மிஷனரி லேடி டாக்டர் சென்னை ராஜதானி ஸ்த்ரீகளுக்கு தனியான ஒரு வைத்ய காலேஜ் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்பதைப்பற்றி ஒரு வ்யாஸம் படித்தார். மேனாடுகளில் ஆண்பிள்ளைகளோடு பெண்கள் வைத்ய காலேஜில் சேர்ந்து படிக்கிறார்கள். இந்தியாவில் பெண்கள் ஆண்களோடு சேர்ந்து வாசிப்பது முடியாத

கார்யம். ஆகையால் ஸ்த்ரீகளுக்காக ஒரு தனியான வைத்ய காலேஜ் ஏற்படுத்துவது அவசியம். மாதர்களுக்குத் தனியாக ஒரு வைத்யகாலேஜ் ஸ்தாபிக்கப்பட்டால் இந்தியப் பெற்றோர்கள் தங்கள் பெண்களை அக்காலேஜுக்கு அனுப்ப முன்வருவார்கள். எவ்வளவுக் கவ்வளவு ஸ்த்ரீ வைத்யர்கள் அதிகரிக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு மாதர்களும் குழந்தைகளும் ஸுகமடைவார்களென்று சொன்னார். சென்னை ராஜதானிக்காக வேலூரில் ஒரு ஸ்த்ரீ வைத்ய காலேஜ் ஏற்படுத்துவதாக ஏற்கனவே தயார் செய்யப்பட்டிருந்த ப்ளானையும் மதிப்பு திட்டத்தையும் லேடி பெண்ட்லாண்டுக்குக் காண்பிக்கப்பட்டது. கடைசியாக வேலூரில் ஒரு ஸ்த்ரீ வைத்ய காலேஜ் ஏற்படுத்துவதாக நிர்மானிக்கப்பட்டது. இதன் கட்டடத்துக்கு 9 லக்ஷம் ரூபாய் பிடிக்குமென்று தெரிகிறது. அநேக க்றிஸ்தவ சங்கத்தார்கள் இவ்விஷயமாக மிகுந்த கவனம் செலுத்திவருகிறார்களாதலால் இப்பெருங்கார்யம் முடிவு பெறுமென்று நம்ப இடமிருக்கிறது.

**The Indian National Social Conference.**

இந்திய ஜாதீய ஆசாரசீர்திருத்த கான்பரன்ஸ்:—1915ஆம் டிஸம்பர் மீ கடைசி வாரத்தில் பம்பாய் நாஷனல் காங்கிரஸ் பந்தலில் இவ்வர்ஷத்திய கான்பரன்ஸ் கூடிற்று. இக்கான்பரன்ஸுக்கு அக்ராஸனம் வகித்தவர் ப்ரொபஸர் டி. கே. கார்வே அவர்கள். இவரைப்பற்றி நம் பத்ரிகை மூலமாக பலதடவைகளில் எழுதியிருக்கிறோம். இவர் பத்னி ஸஹிதமாக தமது ஆயுளையே ஸ்த்ரீகளின் கல்வி அபிவிருத்திக்கு அர்ப்பணம் செய்து உழைத்து வருகிறவர். ஆசாரசீர்திருத்த ஸம்பந்தமாக ஆழ்ந்த கருத்துடன் இவர் ஒரு அரிய ப்ரசங்கம் செய்தார். பெண்களின் கல்வி விஷயமாக இவர் பேசினவைகளை விரிவாக வேறு பக்கத்தில் காணலாம். பொதுவாக இவரின் ப்ரசங்கம் ஸ்த்ரீகளின் கல்வி விஷயத்தில் அக்கரை செலுத்துகிற ஸஹோதரி ஸஹோதரர்களுக்கு ஒரு உணர்ச்சியைக் கொடுக்குமென்பதில் ஸந்தேகமில்லை.

# KUMMI ON WOMENS' EQUALITY.

**By**
**Srimathy Chellammal.**

## பெண்களின் ஸமத்துவக் கொம்மி.

புதுச்சேரியில் தற்போது வாஸம்செய்து வரும் ஸ்ரீமத் ஸி. சுப்ரமண்யபாரதி அவர்களின் தர்ம பத்னியாகிய ஸ்ரீமதி செல்லம்மாள் அவர்கள் பெண்களின் ஸமத்வத்தைப் பற்றி ஒரு அழகிய கும்மி பாடியிருக்கிறார். நமது ஸஹோதரிகளுக்காக அதை இங்கு ப்ரசுரம் செய்திருக்கிறோம்.

காப்பு.

பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
    பேசிக் களிப்பொடு நாம்பாடக்
கண்களி லேயொளி போல உயிரில்
    கலந்தொளிர் தெய்வநற் காப்பாமே, 1

கும்மி.

கும்மியடி ! தமிழ் நாடு முழுதும்
    குலங்கிடக் கைகொட்டிக் கும்மியடி !
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின;
    நன்மை கண்டோ மென்று கும்மியடி! 2

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை யென்
    றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப்பூட்டி வைப்போமென்ற
    விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மியடி) 3

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
    மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
வீட்டினி லெம்மிடங் காட்டவந் தாரதை
    வெட்டிவிட் டோ மென்று கும்மியடி. கும்மி 4

நல்ல விலை கொண்டு நாயைவிற் பாரந்த
    நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?
கொல்லத் துணிவின்றி நம்மையு மன்னிலை
    கூட்டிவைத்தார் பழி கூடி விட்டார். கும்மி 5

கற்பு நிலை யென்று சொல்லிவந்தார்—இரு
    கட்சிக்கு மஃது பொதுவில் வைப்போம்

வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம், கும்மி 6

பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறவினில் ஆணுக்கிங்கே பெண்
இளப்பில்லை காணென்று கும்மியடி, கும்மி 7

வேதம் படிக்கவும் நீதிகள்செய்யவும்
வேண்டிவந் தோமென்று கும்மியடி
சாதம் படைக்கவும் செய்திடுவோந் தெய்வச்
சாதி படைக்கவுஞ் செய்திடுவோம். கும்மி 8

காதலொருவனைக் கைபிடித்தே யவன்
காரியம் யாவிலுங் கை கொடுத்து
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச்செய்து வாழ்வமடி.— கும்மி 9

ஸ்ரீமதி செல்லம்மாள்.

---

## FAMILY DHARMAS.

**By**

**Sri Gajalakshmi Ammal.**

### குடும்ப தர்மங்கள்.

1. குடும்பத்தில் கலகத்துக்கும் ஒருவர்க்கொருவர் மனஸ்தாபத்துக்கும் காரணமான விஷயங்களைப் பெண்கள் ப்ரஸ்தாபிக்கக் கூடாது.

2. மாமனார் மாமியார் முதலிய பெரியவர்களிடம் மருமகள் விச்வாஸமாயும் மரியாதையாயும் நடந்து கொள்ளவேண்டியது.

3. வீட்டிலுள்ள பெரியோரும் தம் வீட்டுக்குவந்த மருமகளை தம் பெண்ணைப்போல் பாவித்து அவளுடைய ஆஹார வஸ்த்ர ஆபரண முதலிய ஸௌகர்யங்களை சக்திக்கேற்றபடி கவனிக்கவேண்டும். தமது மருமகளிடத்து வைத்திருக்கும் விச்வாஸத்தினால் மருமகள் தன் தாய் வீட்டை மறந்து எல்லாம் தனக்கு புருஷன் வீடே என்னும் ஞாபகத்தை அடையும்படி பெரியோர்கள் செய்யவேண்டும். மேலும் மாமனார், மாமியார், புருஷன் முதலியவர்கள் மருமகள் எதிரில் அவளின் தாய் வீட்டை நிந்தித்து எந்த விஷய



மும் பேசக்கூடாது. அப்படிப் பேசினால் புருஷன் வீட்டாரிடம் வைத்துள்ள மதிப்பும் பக்தியும் மருமகளுக்குக் குறைந்துபோகும்: அடிக்கடி மருமகளுடன் வாக்குவாதம் செய்து அவள் வாயை பெருக்கலாகாது.

4. எந்த வீட்டிலுள்ள பெரியோர் தமது மருமகள் தமது வீட்டுக்குக் கொண்டுவந்த சீரைப்பற்றியும், ஸ்த்ரீதனத்தைப்பற்றியும், மருமகளுக்கு அவள் தாய்வீட்டார் போட்டிருக்கும் ஆடையாபரணங்களைப்பற்றியும், குறைகூறிப் பேசுகிறார்களோ அந்த வீட்டில் எப்போதும் கலகமே. ஸ்ரீதேவி அந்த வீட்டில் வாசஞ்செய்ய மாட்டாள்.

5. ஏதோ தாம் செய்த பூர்வபுண்ணியத்தால் கடவுள் நம்மை நல்ல ஸ்திதியில் வைத்திருக்கிறார் என்று எண்ணி, செல்வந்தர்கள் தமது பந்துமித்ரர்களில் ஏழை, எளியவரிடத்துக் கருணையும் தயவும் பாராட்டி அவர்கள் க்ஷேமத்துக்காகப் பாடுபடவேண்டும்.

6. உலகவாழ்வு அநித்தியம் என்ற எண்ணம் எப்போதும் மனதிலிருந்து வருவதுடன், எல்லோரும் சுகமடையவேண்டுமென்ற எண்ணமும் மனதைவிட்டு அகலாமலிருக்கவேண்டும்.

7. பெண்கள் தமது கடமைகளை மனச்சோர்வில்லாமல் செய்துவந்தால் கடவுள் அவர்களை நல்வழி நடத்தவும், அவர்களுக்குச் சகலபாக்யங்களைக் கொடுக்கவும் சித்தமாயிருக்கிறார்.

8. ஏழை, எளியவர்களுக்குப் பிச்சையிடும்போது தாம் செல்வர்களாகவிருக்கிறோமென்றும், அதனால் இந்த தருமங்களைச் செய்கிறோமென்றும் அகங்கரித்து நினையாமல் "உலகத்திலுள்ள ஐச்வர்யமெல்லாம் ஈச்வரனுடைய பொருளே." என்று மதித்தும் இந்த ஏழை எளியவர்களுக்குக் கொடுக்க நமக்குக் கிடைத்ததே என்று நினைத்தும் பிச்சையிடவேண்டும். காலமறிந்து செய்யும் உதவியினும் மேம்பட்டது எதுவுமில்லை.

9. பெண்கள் தமக்குக் கிடைத்திருக்கும் ஆடை ஆபரணங்களைக் குறித்தும், பிறர் அணிந்துகொண்டிருக்கும் ஆடை ஆபரணங்களைக் குறித்தும் ஒருவர்க்கொருவர் ஸம்பாஷிக்கலாகாது. அவைகளை நித்தியமான பொருளாக மதிக்கவுமாகாது.

10. பெண்கள் கெட்ட மொழிகளை வசனிக்கலாகாது. ஆசியம், விகடம், ஏளனம், நொடி, துர்ப்புத்தி, கோட்சொல்லல் முதலிய துர்அப்பியாசங்களை அடியோடே விட்டுவிடவேண்டும். எந்தப் பெண்களாவது அப்படிப் பேசினால் அந்த இடத்தில் மற்ற பெண்கள் நின்றுகொண்டு அந்தப் பேச்சுகளுக்குச் செவி கொடுக்கக் கூடாது.

11. பெண்கள் பிறர் மனம் வருந்தும்படியான எந்த மொழிகளையும் பேசலாகாது. பெண்கள் தமது வீட்டுக்கு வரும் ஸ்த்ரீகள் அல்லது பெண்களை முகமலர்ச்சியுடன் உபசரித்து உட்காரும்படி செய்து, தமது கார்யங்களை சற்று நேரம் நிறுத்திவிட்டு வந்தவர்களின் கார்யத்தை நிதானித்துக்கேட்டு உடனே அதற்குத் தக்க மறுமொழிகளைச் சொல்லி வந்தவர்களை மரியாதையுடன் குங்குமம் தாம்பூலம் கொடுத்தனுப்பவேண்டும். வந்தவர்களை அனாவச்யமாய்க் காக்கவைத்தல் கூடாது. பெண்கள் அனாவச்யமாய் அடிக்கடி பிறர் வீட்டுக்குப்போக நேரிடும்போது முன்னடி தெரிவித்துப்போவது நலமாகும்.

12. ஆடை, ஆபரணங்களை பெண்கள் சுத்தமாய் வைத்திருப்பதுடன் அவைகளை உபயோகப்படுத்தாத ஸமயங்களில் பெட்டிகளில் பத்ரமாய் வைத்திருக்கவேண்டும். கண்ட விடங்களில் சிதறிக் கிடக்கும்படி போடலாகாது.

13. காசு, பணங்களை கணக்குப்பார்த்துப் பெட்டிகளில் பூட்டி வைக்கவேண்டும். அவச்யமான செலவுக்கென்று மாதம் கொஞ்சம் பொருளை மீத்து அதைத் தக்கவிடத்தில் கொடுத்து விருத்திசெய்து வரவேண்டும். தமது வருவாய்க்குத் தக்கவிதமாகச் செலவு செய்து வரவேண்டும்.

14. ஏழைகள், தமது சரீர வலிமைக்கும், ஆரோக்கியத்துக்கும் அனுகூலமானதாயும், அதிக விலையில்லாததாயுமுள்ள பதார்த்தங்களைக் கொண்டு ஜீவித்து வரவேண்டும்.

15. ஏழை செல்வரென்ற இருதிறத்தாரும் சுகாதாரத்துக்கு அனுகூலமாக எப்போதும் பரிசுத்தமான ஆகாரத்தையும் நீரையும், காற்றையும் வஸ்த்ரத்தையும், படுக்கையையும், வாசஸ்தலத்தையும் தேடிக்கொள்ளவேண்டும்.

16. "புலியைக் கண்டு பூனை தனக்கு சூடிட்டுக்கொண்ட" தென்ற கதையைப்போல் செல்வரைக் கண்டு ஏழை எளியவர் வஸ்திர, ஆபரணங்களிலும், மற்ற செலவுகளிலும் அதிக பொருளை வ்ரயம் செய்யக்கூடாது.

கஜலக்ஷ்மி அம்மாள்.

---

# STARS.

By

**Swami Vallinayakam.**

## நக்ஷத்ரங்கள்.

மேகத்தால் மூடப்படாத ஆகாயத்தை நாம் இராக்காலங்களில் பார்ப்போமானால் நக்ஷத்ரங்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பார்க்கும்பொழுது முதலில் நாம் அறிவது அவைகளின் ப்ரகாசத்திலுள்ள வித்யாஸமாகும். இவ்வித்யாஸத்தை அடிஸ்தானமாக வைத்து அவைகளை ஆறு வகுப்புகளாக வகுத்திருக்கின்றார்கள், அதாவது முதல்தரம் ப்ரகாசமுள்ளது; இரண்டாம் தரம் ப்ரகாசமுள்ளது என்றிவ்வாறு ஆறு தரங்களாகச் சொல்லப்படுகின்றன. எல்லாத்தர நக்ஷத்ரங்களுள்ளும் மனிதனுடைய வெறும் கண்ணுக்குத் தோன்றுவன 6,(00 மேயாகும். நமது பூமியானது ஆகாய மத்யே மிதப்பதால் ஆகாயம் இரண்டாகப் பாகிக்கப்பட்டு, ஒரு பகுதியே நமது கண்ணுக்கு எப்போதும் புலப்படுகிறது. ஆகையால், நக்ஷத்ரங்களில் ஒரு பாதியே அதாவது 3000மே நமக்குத் தெரியவரும். ஆனால், நாம் தூரத்ருஷ்டிக் கண்ணாடியை உபயோகித்தால் அதன் சக்திக்குத் தக்கபடி பல நக்ஷத்ரங்கள் பின்னும் தெரியவரும். அப்பொழுது மேற் கூறிய ஆறு வகுப்போடு நில்லாமல், எத்தனையோ வகுப்புகள் ஏற்படும். நல்ல சக்தியுள்ள தூரதிருஷ்டிக் கண்ணாடிக்கு குறைந்தது 20,000,000 நக்ஷத்ரங்கள் காணப்படுகின்றன.

நக்ஷத்ரங்களுளெல்லாம் நமக்கு மிகவும் ஸமீபமாக இருப்பது ஸூர்யனாகும். இது ஆறாவது தரத்து நக்ஷத்ரத்தைப் பார்க்கிலும் 6, 480, 000, 000, 000, மடங்கு அதிக ப்ரகாசமுள்ளதாகும். நக்ஷத்ரங்களின் ஒளியானது ஒன்றிற்கொன்று கூடியும் குறைந்தும் காணப்படுகின்றது. ஏதனாலெனின், இரண்டு நக்ஷத்ரங்கள் ஒரே அளவாக இருப்பினும், ஒன்று நமது பூமிக்கு ஸமீபமாகவும், மற்றொன்று தூரமாகவும் இருப்பதாலும், ஒரே தூரத்திலுள்ள இரண்டு நக்ஷத்ரங்கள் ஒன்றிற்கொன்று பெரிது சிறிதாக இருப்பதாலும், அளவிலும் தூரத்திலும் ஒன்றிற்கொன்று வித்யாஸம் ஏற்படுவதாலும் என்க.

நமது பூமியிலிருந்து நக்ஷத்ரங்களுக்குள்ள தூரம் மைல் கணக்கில் அடங்கத் தக்கதாயில்லை. ஆனது பற்றி, வேறு விதத்தில் கூறுவோம். வெளிச்சமானது ஓடுகிறதென்றால் தமிழுலகத்தார் பலர்க்குப் புதுமையாக இருக்கலாம். வெளிச்சம் ஓடுகின்றது. அதன் வேகம் ஒரு விநாடிக்கு ஏறக்குறைய 186, 000 மைல்களாகின்றன. வெளிச்சத்தின் வேகத்தை த்ருஷ்டாந்த முகமாக விளக்குவோம். நள்ளிரவில் நாம் ஒரு காந்த விளக்கைப் பொருத்துவதாக வைத்துக்கொள்வோம். பொருத்தினதும் விளக்கின் வெளிச்சம் நமக்குத் தெரிகின்றது. நம்மிடத்திலிருந்து 186, 000 மைலுக்கப்பால் ஒருவன் இருக்கிறதாக வைத்துக்கொண்டால், அவனுக்கு நமது விளக்கின் வெளிச்சம், நமக்குத் தெரிந்த நேரத்திற்கு ஒரு விநாடிக்குப் பின் தான் தெரியும். ஆகவே, இது போல் இரண்டு பங்கு தூரத்தில் இருக்கும் ஒருவனுக்கு அவ்வெளிச்சம் இரண்டு விநாடி கழித்துத்தான் தெரியும் இவ்விதமாக வெளிச்சத்தின் ஓட்டத்தைக் கணக்காக்கிக் கொள்ளவேண்டும்.

ஸூர்யனை விட்டு விட்டு, நமது பூமிக்கு அடுத்த ஸமீபமாக இருக்கும் நக்ஷத்ரம் எவ்வளவு தூரத்திலிருக்கிறதென்றால், அதனின்றும் புறப்படும் ஒளி நம்மிடம் வந்து சேர மூன்றரை வர்ஷம் செல்கின்றனவாம். முதல்தர நக்ஷத்ரத்திலிருந்து புறப்படும் ஒளி நம்மை வந்து சேரப் பதினைந்தரை வருடம் செல்கின்றனவாம். மற்றொன்றின் ஒளிக்கு இருபத்தெட்டு வருடமும், வேறொன்றிற்கு நாற்பத்து மூன்று வருடமும், பன்னிரண்டாம் தரம் நக்ஷத்ரங்களிலிருந்து புறப்படும் ஒளிக்கு மூவாயிரத்து ஐந்நூறு (3,500) வருடங்களும் செல்கின்றனவாம். விநாடிக்கு 186,000 மைல் என்றால், 3,500 வருஷங்களுக்கு எத்தனை மைல் ஆயிற்றென்று இதை வாசிப்பவர்களே கணக்குப் பார்த்துக் கொள்ளட்டும். இது வரை கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் தூர த்ருஷ்டிக் கண்ணாடிக்கு எட்டாமல் அப்பாலும் எத்தனையோ நக்ஷத்ரங்கள் விளங்கத் தான் செய்யும் என்பது சரியான ஊகம் தானே. ஆயின், ஆகாயத்தின் விஸ்தீர்ணத்தைச் சற்று கவனித்துப் பாருங்கள். அதில் மிதக்கும் கணக்கிலடங்காத நக்ஷத்ரங்கள், அண்டங்கள் முதலியவற்றை சற்று நினைத்துப் பாருங்கள். அவைகளை இயக்குவிக்கும் சக்தியின் பெருமையையும் அச்சக்திக்கு ஆதாரமாக இருக்கும் பரம்பொருளின் மகிமையையும் பேரறிவையும் நமது அற்பபுத்தியால் இவ்வளவென்று கவனிக்கக் கூடுமோவென்று சற்று ஆலோசியுங்கள். அடுக்கடுக்காக இருக்கும் இவ்வெண்ணிறந்த அண்டங்களுள் நமது பூமி ஒரு கொசுகு மாத்ரமும் ஆகுமோ என்று பாருங்கள். இப்பெரிய பூமியே அங்ஙனமாயின், நமது அகங்காரத்திற்குக் காரணமாயிருக்கும் உடல் எம்மாத்ரம் என்று சற்று நிதானித்துப் பாருங்கள். புதிதாகக் கடலைக் காண்பவனுக்குத் தன் அற்பத்தனம் எவ்வளவு உண்மையாகப் புலப்படுமோ, அதினும் எத்தனையோ ஆயிரமடங்கு அதிகமாக, ஆகாயத்தின் விஸ்தீர்ணத்தையும், அதில் மிதக்கும் அண்ட நிரைகளையும், அதன் ஓட்டங்களையும், அதனை இயக்குவிக்கும் நியமங்களையும், இத்தனைக்கும் கர்த்தாவாக இருக்கும் உண்மைப் பொருளின் பெருமையையும் உற்று நோக்குங்கால், பரவசம் உண்டாகாமல் போகாது. இது நிற்க,



மினுக்கு மினுக்கென்று ஒவ்வொன்றாக ப்ரகாசிக்கும் நக்ஷத்ரங்கள் சிதறுண்டது போலுள்ள வெளிச்சம் ஒரு சிறு பாதை போல் அவற்றை ஊடுருவி வளைந்து கிடக்கக் காணலாம். இதை வான சாஸ்த்ரிகள் “பால் பாதை” (Milky Way) என்பார்கள். தூர த்ருஷ்டிக் கருவியைக்கொண்டு பார்த்தால், இப்பாதை முழுவதும் நக்ஷத்ரங்கள் மிக நெருங்கியிருப்பதும், அவற்றின் வெளிச்சம் மிக மங்கலாக இருப்பதும், அதனால் தான் வெறும் கண்ணுக்கு மங்கலான ஒரே வெளிச்சமாகத் தோன்றுகிறதென்றும் தெரியவரும். உயர்ந்த தூரத்ருஷ்டிக் கருவிக்குப் புலப்படுவதாகச் சொல்லப்பட்ட 20,000,000 நக்ஷத்ரங்களுள் 18,000,000 நக்ஷத்ரங்கள் இப்பாதையிலும் அதற்கு ஸமீபமாகவுமே இருக்கின்றன. நக்ஷத்ரங்களையெல்லாம் கூட்டம் கூட்டமாகப் பிரித்து ஒவ்வொரு கூட்டத்திற்கும் பேரிடப்பட்டிருக்கின்றது. இக்கூட்டங்களுள் எக்கூட்டங்களை ஊடுருவி ஸூர்யன் வர்ஷந்தோறும் சுற்றி வருகிறானோ அக்கூட்டங்கள் பன்னிரண்டாகும். அவற்றையே தமிழில் லக்னம் என்கின்றோம். ஸூர்யன் பாதையிலிருக்கும் இந்த லக்னங்களுக்கு வடக்கேயும் தெற்கேயுமாக மற்ற நக்ஷத்ரக் கூட்டங்கள் இருக்கின்றன.

நமது வெறும் கண்ணிற்கு ஒரு நக்ஷத்ர மாகத் தோன்றும் நக்ஷத்ரங்களை தூர த்ருஷ்டிக் கண்ணாடி கொண்டு பார்ப்போமானால் அவற்றுள் சில இரண்டு நக்ஷத்ரங்கள் சேர்ந்தவையாயும், வேறு சில மூன்று சேர்ந்தவையாயும், இன்னும் சில நான்கு சேர்ந்தவையாயும் அபூர்வமாகச் சில இன்னும் அதிக நக்ஷத்ரங்கள் சேர்ந்தவையாயும் தெரியவரும். இந்நக்ஷத்ரங்கள் "இரட்டை நக்ஷத்ரங்கள்" என்று சொல்லப்படும். இதுவரை இம்மாதிரி நக்ஷத்ரங்கள் 6,000 க்குமேல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் வெறும் கண்ணுக்கு ஒன்றாகவும் தூரத்ருஷ்டிக் கண்ணாடி வைத்துப் பார்த்தால் இரண்டாகவும் தோன்றும் இரட்டை நக்ஷத்ரங்கள் ஒன்றிற்கொன்று மிகவும் ஸமீபமாக இருக்கவேண்டுமென்று நினைக்கலாகாது. ஒரு இரட்டை நக்ஷத்ரத்தில், ஒன்று மற்றொன்றிற்கு 4,275,000,000 மைல் தூரத்துக்கப்பால் இருக்கின்றதாம். இத்தனை தூரத்திலிருக்கும் இரண்டு, நமது கண்ணுக்கு ஒன்றாகத் தோன்றவேண்டுமானால், அவை நமக்கு எத்தனை தூரத்திலிருக்கின்றனவோ! நக்ஷத்ரங்களின் ப்ரகாசம் ஒன்றிற்கொன்று ஏற்றத்தாழ்வாக இருப்பது தவிர, சில நக்ஷத்ரங்களின் ப்ரகாசம் ஒரு காலத்தில் கூடியும் மற்றொரு காலத்தில் குறைந்தும் இருக்கின்றது. நக்ஷத்ரங்களின் ப்ரகாசத்தில் வர்ண பேதங்களும் இருக்கின்றன, அதாவது வெள்ளை தவிர, சில நீலமாகவும் சில பச்சையாகவும், சில சிவப்பாகவும், சில இரத்தச் சிவப்பாகவும் இருக்கின்றன. ஒரு நிறமாக இருக்கும் நக்ஷத்ரம் வேறு நிறமாக மாறுவதுமுண்டு. தவிர, சில நக்ஷத்ரங்கள் காணாமல் போவதும், சில நக்ஷத்ரங்கள் புதிதாகத் தோன்றுவதும் உண்டு. இதற்கும் ஒரே நக்ஷத்ரத்தின் ப்ரகாசம் ஒரு காலத்தில் கூடியும் மற்றொரு காலத்தில் குறைந்தும் போவதற்கும் காரணம் நக்ஷத்ரங்களின் ஓட்டமெனத் தோன்றுகிறது. நக்ஷத்ரங்கள் சுற்றி வரும் வட்டம் பெரிதாக இருப்பின் ஒரு காலத்தில் அது பூமிக்கு ஸமீபமாகவும் மற்றொரு காலத்தில் மிக தூரமாகவும் ஓடக் கூடும். ஆகவே, ஸமீபமாக இருக்கும் காலத்தில் நமக்கு அதன் ப்ரகாசம் அதிகமாகவும், தூரமாக இருக்கும் காலத்தில் குறைவாகவும் தோன்றும். இதே காரணத்தினால், இதுவரைக் கண்டு பிடிக்கப்பட்டிருக்கும் தூரத்ருஷ்டிக் கருவிகளுக்கு எட்டாத தூரத்தில் ஒரு நக்ஷத்ரம் ஓடிவிடுமானால் அதை நாம் காணவில்லையென்போம். அங்ஙனம் ஓடிய நக்ஷத்ரம் எத்தனையோ வர்ஷம் கழித்து (அதன் ஒழுங்கான ஓட்டமுறையில்) ஸமீபித்தால், அதை நாம் கண்டு புதியதென்று சொல்ல நேரிடும்.

ஸ்வாமி வள்ளிநாயகம்.

341

# DEFICIENCY OF EDUCATION OF OUR WOMEN.

By

**Prof. Karve.**

## இந்தியாவில் கல்விக் குறைவு.

இந்தியாவின் ச்ரேஷ்டத்தை ஜனங்களின் கல்விக் குறையே குறைத்து வருகிறது. ஜாதி ஆசாரங்களில் குறைகளிருப்பதற்குக் காரணம் ஜனங்களின் தெரியாத்தனமே, அதாவது வித்தையில்லாமலிருப்பது. இந்தியாவில் 100 க்கு 90 பேர்கள் வித்தையன்னியிலிருக்கிறார்கள். இவர்களுக்குப் பசியைத் தணித்துக்கொள்ள ஜீவனோபாயம் தேடுவதைத் தவிர வேறு வேலையில்லை. ஆகையினால் ஒவ்வொரு மனிதனும் ஸ்த்ரீயும் குழந்தையும் வாசிக்கவும் எழுதவும் கணக்கிடவும் சக்தியுள்ளவர்களாயிருந்தாலொழிய திருத்தமென்பது ஸாத்யமல்ல; இதைப்பற்றி இறந்துபோன என்னுடைய நண்பர் ஆனரெபில் மிஸ்டர் ஜி. கே. கோகலே ராஜீய விவகாரங்களில் வற்புறுத்திப் பேசியிருக்கிறார். அதை ஜனங்கள் ஆதரித்து வருவதினால் பலனடையாமல் போகாது. இது விஷயமாய் கவர்ன்மெண்ட் ச்ரத்தையெடுத்துக்கொள்ளும்வரை நாம் சும்மாயிருக்கக் கூடாது. நாமும் தகுந்த முயற்சி செய்யவேண்டும்.

இந்த ஸபையில் முக்கியமாய் கவனிக்கவேண்டியது ஸ்த்ரீகளின் படிப்பு. இதில் கொஞ்சங்கூட அபிவிருத்தியடைந்திருப்பதாகத் தெரியவில்லை. இதை 1854 வர்ஷத்திலேயே கவர்ன்மெண்டார் கவனித்திருக்கிறார்கள். இதன் அவச்யத்தைப்பற்றி கவர்ன்மெண்டார் தாங்கள் இந்தியா மந்திரிக்கு அனுப்பிய கடிதத்தின் 83-வது பாராவில் கண்டிருக்கிறார்கள். இதன் முக்கியத்தைப்பற்றி வித்யாகமிஷன் 1882-ம் வர்ஷத்தில் விவகரித்ததை இந்தியா கவர்ன்மெண்டும் இந்தியா செக்ரெடெரியும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பிறகு 1892-வர்ஷத்தில் சிலபேர்போன இங்கிலீஷ் ப்ரமுகர்கள் இந்த விஷயத்தைக் குறித்து, அப்போது இந்தியா செக்ரெடெரியாயிருந்த லார்ட் கிம்பர்லிக்கு ஒரு விண்ணப்பம் செய்துகொண்டார்கள். மேலும் சென்ற அக்டோபர் மாதத்தில் இந்த நெருக்கடியான ஸமயத்திலும்கூட இந்தியா செக்ரெடெரியை சில மெம்பர்களடங்கிய ஒரு டெபுடேஷன் கண்டுபேசினார்கள். இதற்கு அவர் சொன்னமறுமொழி அதிருப்திகரமாயிருந்தபோதிலும் இது ஸம்மந்தமான கடிதங்களை இந்தியா கவர்ன்மெண்டுக்கனுப்புவதாக வாக்குறுதி செய்திருப்பத

னால் தகுந்த பலனை நாம் அடையலாமென்று எதிர்பார்க்கிறோம். இப்போதைய கணக்கின்படி பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் ஐந்து பிள்ளைகளுக்கு ஒரு பெண் வாசிக்கிறாள். இது மிகவும் குறைச்சல். ஆகையினால் நாம் இந்த ஸபையில் இந்த ஸங்கதியைக் குறித்து ஆலோசனைசெய்து உதவிசெய்ய கேட்டுக்கொள்ளவேண்டும். கவர்ன்மெண்டார் பிள்ளைகளுக்கும் ஸ்த்ரீகளுக்கும் ப்ரதமப் படிப்பை தற்காலத்துக்கு சொல்லிவைத்தால் போதும். அதற்குப் போதுமான பயிற்சிபெற்ற வாத்திமார்கள் கிடைப்பதில்லையென்று சொல்லப்படுகிறது. கவர்ன்மெண்ட் பெண்பிள்ளைகளின் பள்ளிக்கூடங்களை ஒவ்வொரு பெண்பிள்ளையும் வாசிக்கத்தகுந்த அளவிற்கு விருத்தி செய்ய வேண்டுமென்று இந்த ஸபை கவர்ன்மெண்டைக் கேட்டுக் கொள்ள வேண்டும். ட்ரெயினிங் ஸ்கூல்களில் வாத்திமார்களை தாராளமாய் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு அவர்களின் வயதை முப்பதுக்கு உயர்த்தவேண்டும்.

பிள்ளைகளின் படிப்புக்கும் போதுமான பள்ளிக்கூடங்களில்லை. ஒரு க்ராமத்தில் பள்ளிக்கூடம் இருந்தால் நான்கு க்ராமங்களில் இல்லை. ஆரம்பப் படிப்புக்காக பிள்ளைகளின் பள்ளிக்கூடத்தில் பெண்களைச் சேர்த்து வாசிக்கச்செய்தால் ஸ்த்ரீகளின் வித்யாபிவிருத்தி சீக்ரத்தில் கைகூடும். ஆகையினால் இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டாரும் ஜனங்களும் ச்ரத்தை எடுத்துக்கொண்டு இம்மாதிரி செய்தால் பெண்கல்வி சீக்ரத்தில் அபிவிருத்தியடையும். 10 வயதுக்குட்பட்ட பெண்களை பிள்ளைகளின் பள்ளிக்கூடத்தில் வாசிக்கச் செய்வதில் ஜனங்களில் பெரும்பான்மையோர்க்கு ஆக்ஷேபணையிராது. இவ்விஷயத்தைப் பத்ரிகைகளில் எழுதி ப்ரோத்ஸாகம் செய்வதினால் கல்வியற்ற ஜனங்களுக்கு இப்படிச் செய்வது ஸரியென்று தோன்றும். பெண்களின் உயர்தரப் படிப்பைக் குறித்து என்னுடைய அபிப்ராயம் என்னவெனில், இப்போது பிள்ளைகளுக்கு படிப்பூட்டி வரும் முறையே பெண்களுக்கும் அனுஷ்டிக்கப்படலாமென்பது. ஆனால் பிள்ளைகளின் படிப்பை அதிக கஷ்டத்திற்கு உள்ளாக்கிவிட்டிருக்கிறார்கள். அதனால் பிள்ளைகள் அதிக உழைப்புக்குள்ளாக்கப்பட்டு தேக அஸௌக்கியத்தை அடைகிறார்கள். இதே கஷ்டங்களை பெண்களும் அடைவார்களென்பதில் ஸந்தேகமில்லை. ஆகையினால் அதற்குத்தகுந்த உபாயத்தைக் கண்டுபிடித்து அனுஷ்டிக்கச்செய்ய



வேண்டும். உயர்தரப் படிப்பை விரும்புகிறவர்களுக்கு ஒவ்வொரு டிவிஷனிலும் ஒரு ஹைஸ்கூலை கவர்ன்மெண்டார் ஸ்தாபித்தால் போதுமானது. இதுவும் போதாவிடில் பிள்ளைகளின் ஹைஸ்கூல்களில் சேரவிரும்புகிற பெண்பிள்ளைகளை ஆக்ஷேபணையின்றி சேர்த்துக் கொள்ளும்படி ப்ரதம உபாத்யாயர்களுக்கு போதிக்கவேண்டும். இந்த மாதிரி இரண்டொரு இடங்களில் செய்யப்பட்டு அது நல்ல பலனை கொடுத்துவருகிறது. ஸ்த்ரீகள் பிள்ளைகளின் காலேஜ்களில் சேர்ந்து வாசித்தால் போதுமானது. அவர்களுக்கு ப்ரத்யேக காலேஜ்கள் அனாவசியம். இந்தப்பணத்தைக்கொண்டு பெண்பிள்ளைகளின் ஹைஸ்கூல்களை அதிகரிக்கச்செய்யலாம்.

டெல்லியில் ஏற்படுத்தப்போகிற ஸ்த்ரீகளின் வைத்யகாலேஜும் அனாவச்யமென்று சொல்லலாம். பெண்களுக்கும் அவரவர்களுடைய ஸொந்த பாஷையிலேயே கற்பிக்கவேண்டும். பிள்ளைகள் செய்யவேண்டிய வேலைகளுக்கும் பெண்கள் செய்யவேண்டிய வேலைகளுக்கும் அதிக வித்யாஸமுண்டு. பிள்ளைகளும் பெண்களும் கல்விகற்ற பிறகு சேர்ந்து உழைக்கவேண்டியவர்களானதால் அவர்களுடைய வித்தையும் ஒன்றுக்கொன்று ஸம்பந்தப்பட்டிருக்கவேண்டும். இம்மாதிரியாக ஸொந்த பாஷையில் கல்வி கற்பித்து இங்கிலீஷ் பாஷையை இரண்டாவது பாஷையாகச் சொல்லிவைக்கவேண்டும்

கல்வி விஷயத்தில் நாம் ஜப்பான்முறையை அனுஷ்டிக்கலாம். ஜப்பான் முறைகளை அனுஷ்டிப்பதில் பெண்பிள்ளைகளின் ஹைஸ்கூல் படிப்பு காலமுறைக்கும் ஒத்திருக்கும்படி செய்யவேண்டும். இந்தப்படிப்பு முடிந்தவுடன் உலக வாழ்க்கையை அனுஷ்டிப்பவர்களுக்கு இது முடிவான படிப்பாக இருக்கவேண்டும். தேசபாஷைகளின் காலேஜ்களில் சேர்ந்து வாசிக்கப்பிரியமுள்ளவர்களுக்கு இது ஸாதகமாயிருக்கவேண்டும். இந்த விஷயத்தில் கவர்ன்மெண்டார் ஒத்தாசை ஸாத்யப்பட்டவரை செய்யவேண்டும். பொது ஜனங்களும் தேசமன்னர்களும் இதரர்களும் கால தாமஸமன்னியில் இந்தமாதிரி தேசபாஷை ஹைஸ்கூல்களையும் காலேஜ்களையும் ஏற்படுத்த முன் வரவேண்டும். இந்த ஸபையாரும் இதற்குத் தகுந்த உபாயத்தையும் வழியையும் சொல்ல ஒரு கமிட்டி ஏற்பாடு செய்யவேண்டும்.

போரபசர் கார்வ்.

## WHO IS A JIVANMUKTA?

By

**A. Yogini.**

### ஜீவன் முக்தன் யார்?

ஜீவன் முக்தன் யார்? என்னும் கேள்வி சிறிது. ஆனால் இதன் விடை பெரிது. ஜீவன் முக்தன் என்னும் விஷயமாக பலமேதாவிகளும் ஞானிகளும் விரிவாக எழுதியுமிருக்கின்றனர்; பேசியுமிருக்கின்றனர். ஏதோ நான் படித்துக் கேட்ட வரையில் சுருக்கமாக ஜீவன் முக்தன் யார் என்று சொல்லுகிறேன்.

ஒருவன் ஈச்வர பக்தியில் தனது காலத்தை ஸதாகாலம் கழித்து வருபவன். உலக மாயையான இன்பத்தை வெறுப்பவன். முக்தி என்னும் பதவியை நாடுபவன். பிறர் தன்னைப் புகழவேண்டுமென்று விரும்புபவனல்லன், தனக்கென்று ஒரு கார்யமும் செய்பவனல்லன். தனது உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் பகவானிடம் ஒப்புவித்து அவரையே ஸதா த்யானம் செய்பவன். பிறர் அறிய ஒரு கார்யமும் செய்பவனல்லன். எவன் இப்பேர்ப்பட்ட குணங்களுடன் நடந்து வருபவனோ அவனே ஜீவன் முக்தன். இந்த ஜீவன் முக்தன் செய்யும் கார்யங்களெல்லாம் ஜனங்களின் க்ஷேமத்திற்கும் ஸுகத்திற்குமே யொழிய வேறல்ல. முற்காலத்தில் இந்தியாவில் எவ்வளவோ ஜீவன் முக்தர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் தேசதேசங்களாக யாத்ரை சென்றிருக்கிறார்களென்று நாம் கேட்டிருக்கிறோம். தற்காலமும் நமது பாரத பூமியில் ஜீவன் முக்தர்களிருந்து வருகிறார்கள். அவர்களில்லையேல் வெய்யலும் இரைக்காது. மழையும் பெய்யாது. காற்றும் அடிக்காது. தற்காலம் மஹா ஞானிகளையும் யோகிகளையும்பற்றி ஏதாவது சொன்னால் நமது பெண்கள் புருஷர்களைப்போல் கட்டுக்கதையென்று சொல்லி அசட்டை செய்கிறார்கள். மேனாட்டு நாகரீகத்தின் பலனால் புருஷர்களும் ஸ்த்ரீகளும் நமது ஞானிகளின் சரித்ரங்களைக் கட்டுக்கதையென்று சொல்லும்படியாயிற்று. தற்காலம் ஐரோப்பியர்களும் ஆங்கிலேயர்களும் நமது ஞானிகளைப்பற்றி புகழ்ந்து கூறியிருக்கிறதையும் கூறுகிறதையும் பார்த்து நம் புருஷர்களில் சிலர்



ஞானிகளின் சரித்ரங்கள் கட்டுக்கதையல்ல உண்மையானவையென்று நம்பி வருகிறார்கள். இது நல்ல காலத்தின் லக்ஷணமேயாகும்.

வங்காளத்தில் ப்ரசுரமாகும் " ஹிந்து பேட்ரியட், " என்னும் பத்ரிகை ஆதிகால ஸந்யாஸிகளைப் பற்றி எழுதியிருக்கிறது. நம் பெண்களும் ஆண்களும் இதுபோன்ற சரித்ரங்கள் படிக்கவேண்டியது அவச்யம்.

ஹிந்து ஸந்யாஸிகள் முற்காலத்தில் தேசதேசங்களாக யாத்ரை சென்று அநேக நல்விஷயங்களை அறிந்திருந்தார்களென்று தெரிகிறது. பத்தொன்பதாவது நூற்றாண்டில் 1890-வது வருஷாரம்பத்தில் ஸ்ரீ காசியிலுள்ள ப்ரிட்டிஷ் ரெஸிடெண்ட், மிஸ்டர் டங்கன் என்பவர் இரண்டு ஸந்யாஸிகளைச் சந்தித்து ஸம்பாஷணை பண்ணினார். அவர்கள் அந்த ஸமயம் பரிசுத்தமான ஸ்ரீ காசிக்ஷேத்ரத்தில் வாஸம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் இவர் ஹிந்துஸ்தானி பாஷையில் பேசினார். அவர்களில் ஒருவர் பெயர் பரமசௌந்திர ப்ரகாசானந்த ப்ரம்மசாரி. மற்றவர் பெயர் புராண புரி ஸந்யாஸி. அவர்களில் முதல்வர் எப்போதும், அம்புப்படுக்கையிலிருப்பவர், மற்றவர் ஊர்த்வபாஹு (கையை எப்போதும் உயரே நீட்டினவராய்) வாயிருப்பவர், ப்ரகாசாநந்தர் பராசரர் ரிஷி கோத்ரத்தில் ஜனித்தவர், அவருடைய பெரியோர் ஜகந்நாத க்ஷேத்ரத்தில் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவைத் தரிசிக்க வந்தபோது அங்கு ஜனித்தவர். அவர் 10 வயது நிரம்பியது முதற்கொண்டு யோகம் செய்வதில் முனைந்து முள் படுக்கையிலும் கூழாங்கல் மீதும் படுத்து யோகத்தையே அப்பியாஸம் செய்து வந்தவர். அந்த மாதிரி 20 வர்ஷம் அப்பியாஸம் செய்து பழகினார். அவர் 21-வது வயது அடைந்ததும், அவருடைய பெற்றோர்கள் அவரைக்கலியாணம் செய்துகொண்டு க்ரகஸ்தாச்ரமியாயிருக்க நிர்ப்பந்தித்தனர். இந்த நிர்ப்பந்தமே அவரை வீட்டைவிட்டு ஒருவருடனும் சொல்லாமல் வெளியே ஓடச்செய்தது. இம்மாதிரி வீட்டாருடன் மனஸ்தாபப்பட்டு ஓடினவர், ஸந்யாஸியாகி முதலில் நேபாளத்தில் ப்ரவேசித்தார். திபேத்மலைப் ப்ராந்தியங்களில் யாத்ரை சென்றார், புத்த தேசங்களாகிய திபேத் முழுவதும் சுற்றித்திரிந்தார். மலைகளில் ஒவ்வொன்றாய் ஏறியும் இறங்கியும் கடைசியாய் இந்தப்பால ஸந்யாஸி

காஷ்மீரத்திற்கு வந்துசேர்ந்தார். அந்த இடத்தில் தான் தபஸ்செய்வதற்கு யோக்கியமாகும் என்றுநினைத்தார். அங்கேயே வித்யாப்யாஸம் செய்யவும் நினைத்தார். பெஷாவரின் பக்கத்தில், டாக்பிண்ட் என்ற ஊர் மலைக்குகையொன்றில் போய் ஒளித்துக்கொண்டு அக்குகையை மூடிக்கொண்டார். அந்தக் குகையிலிருந்து 12-வர்ஷகாலம் ஓய்வு ஒழிவு இல்லாமல் கோரமான தபஸ் செய்தார். அப்படிப்பட்ட உக்ரமான தபஸ் பண்ணினதில் தேகத்தில் புழு ஊரிக் கடித்த இடத்தின் அடையாளங்கள் இன்னும் அந்தச் ஸந்யாஸியின் மீது காணப்படுகின்றன. இம்மாதிரி 12 வர்ஷம் ஆனபிறகு அத்தேசத்து ராஜா குகையின் கதவைத்திறந்தார். அப்போது ஸந்யாஸி ராஜாவைப்பார்த்து "ஹே ராஜன்! என் சாபத்தை வாங்கிக் கொள்ளுகிறீரா? அல்லது ஒரு சரதல்பம் (அம்புப்படுக்கை பண்ணித் தருகிறீரா"? என்று கேட்டார். அந்த ராஜன் பண்ணிக்கொடுத்த சரதல்பத்தி (அம்புப் படுக்கை) லேயே நாளது வரையில் ஸ்ரீகாசியில் அச்சந்நியாஸி படுத்துக்கொண்டு விளங்குகிறார். அநேக இங்லீஷ் கலெக்டர்களும் பெரிய உத்யோகஸ்தர்களும் அவரிடம் வெகு மதிப்புவைத்து அவருக்கு வேண்டிய ஸகல ஸௌகர்யங்களும் கொடுத்து வருகிறார்கள். இந்த ஸந்தர்ப்பத்தில் குருக்ஷேத்ரத்தில் 10-நாள் துரியோதனாதியர் பக்கத்தில் நின்று கோரயுத்தம் புரிந்து, உத்தராயண புண்யகாலம் வரையில் சரதல்பத்திலேயே யிருந்து பகவத்யானம் பண்ணிவந்த மஹாவீரனாகிய ஸ்ரீபீஷ்மரை ஞாபகத்திற்குக் கொண்டுவரலாம். அப்படிப்பட்ட மஹாபுருஷர்களை இவ்விந்தியமாதா பெற்றிருந்தாள்.

ஒரு யோகினி.

உலகத்தை ஸமாதானமாக நடத்திக்கொண்டு போகும் ஸஹோதரிகளே! உங்கள் குழந்தைகள் ஸரியான நெறியைவிட்டு கஷ்டங்களிலிறங்கிக்கொண்டு தவிக்கிறார்கள். உங்கள் குழந்தைகளுக்கு நல்லதுகெட்டது என்ற பகுத்தறிவை உண்டாக்குங்கள்:—மிஸ்டர் ஸாந்தி.



## DURBANGA MAHARAJA AND CASTE.

### தர்பங்கா மஹாராஜாவும் ஜாதியும்.

ஸஹோதரிகாள்! தர்பங்கா என்பது வட இந்தியாவில் ஒரு ஸமஸ்தானம். இதை ஆண்டு வருபவர் ஒரு ஹிந்து வைதிகர். இவரின் நாமதேயம் ஆனரபில் மஹாராஜா பஹதூர் ஸ்ரீ ராமேச்வரஸிங் அவர்கள். ஸ்ரீகாசியில் ஸ்தாபிக்கப்படப்போகும் ஹிந்துயுனிவர்ஸிடி (ஹிந்து ஸர்வ கலாசங்கம்) க்கு இவர் முக்கிய காரணபூதர். ஹிந்துக்களின் உயர்ந்த வேத சாஸ்த்ரங்களையும் லக்ஷ்யங்களையும் இவர் உண்மையென்று நம்புகிறவர்; வர்ணாச்ரமதர்மங்கள் மிக அவச்சிய மென்று போதிக்கிறவர். தென்னிந்தியாவிலுள்ள க்ஷேத்ரங்களையும் க்ஷேத்ரமூர்த்திகளையும் தரிசிக்க ஸ்ரீகாஞ்புரம், ஸ்ரீசிதம்பரம், ஸ்ரீராமேச்வரம், ஸ்ரீரங்கம், திருச்சிணப்பள்ளி தஞ்சாவூர் முதலிய ஸ்தலங்கள் சென்று ஜனவரி மாதம் 11-ந்தேதி சென்னை வந்து சேர்ந்தார். ஸ்ரீமஹாராஜா யாத்ரை சென்ற ப்ரதி பட்டணத்திலும் அன்போடு உபசரிக்கப்பட்டார். அங்கங்கு ஹிந்துக்களின் உயர்வைப்பற்றியும் வர்ணாச்ரம தர்மத்தின் அவச்யத்தைப் பற்றியும் உபந்யாஸம் செய்தார். திருச்சிணப்பள்ளியில் ஸ்ரீமஹாராஜா வர்ணாச்ரம தர்மத்தைப்பற்றி ஒரு உபந்யாஸம் செய்ததின் ஸாராம்சத்தை நாம் கீழ் ப்ரசுரம் செய்திருக்கிறோம்.

நமது ஜாதியின் ஆதிகால சரித்ரத்தையும் ஆரியர்களின் கல்விப் பெருக்கையும் நினைத்துப் பார்த்தால் நமக்குப் பரவசம் உண்டாகும். நமது ரிஷிகளோ மனிதவர்க்கம் உன்னத பதவி யடையவேண்டு மென்று உழைத்து வந்திருக்கின்றனர். நமது தேசத்தின் தற்கால நிலைமையானது ஒழுங்கின்றி யிருக்கின்றது. ஆதிகால ஆரியர்களின் கல்விப்பெருக்கும் ஸ்தாபனங்களும் இனி பயன்படமாட்டா. ஆகவே, மேனாடுகளைப்போல் நமது ஜாதியாரின் நிலைமையை ஒழுங்குபடுத்தி அமைத்தாலன்றி நாம் ஒரு ஜாதியாராக இருக்கமுடியாதென்று சிலர் பேசிவருகின்றனர். அத்தகையோர் மேனாட்டாரின் நாகரீகத்தையும் நன்கு மேனாட்டாரையும் ஆராய்ந்தறியவில்லை. மகாபாரத யுத்தம் நடந்தபின், பலபல ஜாதியார் இந்தியாவின்மீது படையெடுத்து வந்தார்கள். அவர்கள்

இந்தியாவில் வசித்து வந்தபோதிலும், நமது ஜாதியாரின் தன்மை பங்கப்படவில்லை. நமது பூர்வீக லக்ஷ்யங்களும் கல்விப்பெருக்கும் அழிந்துபோகவில்லை. காலதேசவர்த்தமானத்திற்கு ஏற்றபடி நமது ஸமூகத்தை ஒழுங்குபடுத்தி அமைக்கவும் இடங்கொடுக்கக் கூடியதாய் இருக்கிறது. ஸனாதன தர்மத்தின் பெருமையை என்னென்று புகழ்ந்து சொல்வது! தற்கால மேனாட்டு சாஸ்த்ரக்ஞர்கள் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கும் விஷயங்களெல்லாம் நமது வேதத்தின் போதனைகளை நிதர்சனப் படுத்தும்படி இருக்கின்றன. நம்து வேதங்களை வெளிப்படுத்திய ரிஷிகள் அறியாத தெய்வரஹஸ்யம் கிடையாது.

மனிதர்கள் தங்களது கடமைகளைப் பூர்த்தி செய்யவே ச்ருஷ்டிக்கப்பட்டிருக்கின்றனர். வேதாந்த சாஸ்த்ரப்படி மனிதர்கள் ஒருவர்க்கொருவர் ஸமமேயாயினும், மனம, புத்தி முதலியவைகளில் ஒருவர்க்கொருவர் வித்தியாஸமுண்டு. ஆகவே, மனிதர்கள் வெவ்வேறு கடமைகளைச் செய்யும்படியாகிறது. கடமைகளைப்பூர்த்தி செய்வதனால் மனிதரில் ஒருவர் பெரியவர் மற்றொருவர் சிறியவர் என்ற வித்யாஸமில்லை. ஆனால் கடமைகளை எவ்விதமாய் பூர்த்தி செய்கிறார்களோ அதையொட்டி யோக்கியதை உண்டு. அதனால் நான்கு வருணங்களும் நான்கு ஆச்ரமங்களும் ஏற்பட்டன. ஒவ்வொன்றுக்கும் படிப்படியாக உயர்ந்த ஒழுங்கும் விதிகளும் உண்டு. எவ்வளவுக்கெவ்வளவு ஜாதி உயர்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஒழுங்கும் விதிகளும் கடுமையாகயிருக்கும். நமது ரிஷிகளின் போதனையை நன்கு யோசித்து பார்ப்போமானால், ஜனஸமூக வாழ்வில் நான்கு வருணமும் நான்கு ஆச்ரமும் அறியலாம். கடமையையே கவனித்து நமது நிலைமைக்கு ஏற்றபடி நாம் நடப்போமாயின் உலகத்திலுள்ள மற்ற ஜாதியாரனைவரும் நம்மைக்கண்டு ப்ரமிக்கும்படி நமது ஜனஸமூகம் உன்னதமான பதவியடையும்.

மேனாட்டு ஜனஸமூக வாழ்வு ஓர் எரிமலைக்குச் சமானமாகும். அங்கே மத்ய காலத்தில் பணம் படைத்தவர்களுக்கும் ஏழைகளுக்கும் போராட்டம் நடந்து வந்தது. இப்பொழுதோ தொழில் விருத்தி காலமாயிருப்பதால், முதலாளிகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் போராட்டம் நடந்துவருகிறது. பாரமார்த்தமான முயற்சி அங்கே இல்லை என்னலாம், இது நிற்க,



குணங்களுக்கும் செய்கைகளுக்கும் ஏற்றபடி நான்கு வருணங்களும் ஏற்படுத்தினேன் என்பதாக பகவான் கீதையில் சொல்லியிருக்கிறார். மனிதனையும் உலகத்தையும் பற்றி ஹிந்துக்களின் லக்ஷ்யங்களை ஒப்புகொண்டால், வருணங்கள் ஆச்ரமங்கள் இவைகளின் லக்ஷ்யத்தை நாம் மறுப்பதெப்படி? வருணம் ஆச்ரமம் இவைகளை அங்கீகரியாமல் ஆக்ஷேபித்துப் பேசி கர்மவிதிகளை ஒப்புக்கொள்வது ஸாத்யமா?

பூர்வ காலத்திலே தத்வ ஞானத்திலும் சாஸ்த்ரத்திலும் நாம் பிறருக்கு வழிகாட்டுவோராய் இருந்ததோடு, தொழில்களிலும் நமக்கு இணை எவரும் இல்லாத படியும் நாம் இருந்திருக்கிறோம். முற்காலத்திலாயினுஞ் ஸரி தற்காலத்திலாயினுஞ் ஸரி நம்மைப் போன்ற பரம்பரையும் பெருமையும் படைத்தவர்கள் இல்லை. நமது முன்னோர்களைப் போலவே நாமும் நம்பிக்கையுடனிருந்து திறமையுடன் முயற்சி செய்து தர்ம சாஸ்த்ர போதனைகளின்படி நடப்போமாயின், நமது பரம்பரை கௌரவத்தையும் உன்னதை பதவியையும் நாம் அடைவதோடு பெருமை மிக்க ஜாதியாராகவும் ஆய்விடலாம்.

நான் சுற்று ப்ரயாணமாகப் புறப்பட்டு உங்களுடன் கலந்து பேசுவதின் நோக்கம் இதுவே. பாரத வர்ஷத்திலுள்ள எல்லா ஹிந்துக்களும் எனக்கு ஆதரவாய் இருப்பார்களாக. நம்மில் சிலர் அத்வைத மதத்தையும் வேறு சிலர் விசிஷ்டாத்வைதமதத்தையும் தழுவினவர்களாயும் சைவர்கள் வைஷ்ணவர்கள் என்ற பாகுபாடுடையவர்களாயும் இருந்தபோதிலும், நாம் அனைவரும் சகோதரர்களேயாவோம். இலக்ஷ்மிஸமேதரான திருமாலைச் சிலரும், தில்லையில் நடனமாடும் பரமசிவனைச் சிலரும் தெய்வமாகக்கொண்டுள்ளபோதிலும் கடவுளின் விதிகளுக்கிணங்கி யாவரும் ஒற்றுமைப்பட்டு உழைப்போமாக.

நமது தர்மத்தின் உண்மைகளைப் போதிக்கக் கூடியவர்களும் ஸமஸ்கிருதக் கல்வியையும் நூலையும் விருத்திசெய்யும் பண்டிதர்களும் நமது வேதத்தின் உண்மைகளை வெளியாக்கக் கூடியவர்களும் நமக்கு வேண்டும். இன்னும் நமது தேவைகளோ பலவுள. அவைகளுக்காக உழைப்பவர்கள் பலர் இருக்கவேண்டும். ஆகவே

எவ்வாறு உழைப்பதென்ற யோசனைகளைச் செய்வதற்காக வடமதுரையிலே மார்ச்சுமீ 22ந் தேதி முதல் 26-ந்தேதி வரையில் எல்லா இந்திய ஹிந்து கான்பரன்ஸ் ஸபை ஒன்றைக் கூட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எனது சுற்றுப்ப்ரயாணத்தின் லக்ஷ்யத்தை உங்களுக்குச் சொல்லி விட்டேன், யாவரும் இம்மேலான கார்யத்தில் ஆதரவுடன் ஒத்துழைப்பார்களாக!

## THE BIRTH OF THE HEROES,

By.

**K. P. Seshadri Aiyangar.**
(of The Madras Tamil Sangam).

## பாரத கதா நாயகர் ஜனனம்.

மூன்று ஸஹோதரர்களான திருதராஷ்ட்ரன், பாண்டு, விதுரன் இவர்களை பீஷ்மர் வெகு கவலையுடன் தம் புத்ரர்களைப்போல் பாவித்து வளர்த்துவந்தார். அந்தப் பிள்ளைகளும் தங்கள் படிப்பிலும் வில்வித்தையிலும் தேர்ந்து சிறந்து விளங்கினார்கள். வர்ஷங்கள் செல்லச் செல்ல, அவர்களுக்கு வயதும் வளர்ந்து கொண்டே வந்தது. அதோடு ஸன்மார்க்கப் பயிற்சியும் விருத்தியடைந்துவந்தது, அவர்கள் நீதியில் சிறந்த நீதிமான்களாயிருந்தார்கள். வேதங்கள், உபவேதங்கள், இவைகளின் உண்மை அர்த்தங்களை நன்றாக அவர்கள் ஆராய்ந்து அறிந்திருந்தார்கள். ஆகவே, அந்த ராஜபுத்ரர்கள் எல்லாவித்தைகளிலும் ஸமர்த்தர்களாயிருந்தார்கள்.

ஜேஷ்ட புத்ரனான திருதராஷ்டரன் குருடனாயிருந்தபடியால் ராஜ்யத்தை ஆளுவதற்கு அசக்தனாயிருந்தான். ஆகவே, இரண்டாவது குமாரனான பாண்டு ராஜ்யத்தை வஹித்து அரசாள நேர்ந்தது. பீஷ்மர் திருதராஷ்ட்ரனுக்கு விவாஹம் செய்ய வெகு ப்ரயத்தனப்பட்டார், கடைசியில் அவர் ச்வல நாட்டிற்கு அரசனாகிய சகுனியின் ஸஹோதரியான காந்தாரியை திருதராஷ்டரனுக்குக் கல்யாணம் செய்து முடித்தார். இந்தச்சகுனிதான் பாண்டு வம்சத்திற்கு அநேக தீங்குகள் செய்தவன். இதே சகுனிதான் கௌரவர்கள் குடும்பத்திற்கு கோடாரிக்காம்பானவன்.



யாதவ அரசனான சூரனின் புத்ரி ப்ருதையை வேறுபெயர் (குந்தி) பாண்டுவுக்கு பீஷ்மர் பாணிக்ரஹணம் செய்துவைத்தார். அவள் வசுதேவரின் ஸஹோதரி. அந்த வசுதேவர் தான் ஸ்ரீகிருஷ்ணபகவான் தகப்பனார். சிலவர்ஷங்கள் கழிந்தபின் சல்யராஜனின் குமாரியாகிய மாத்ரியை பாண்டுவுக்கு இரண்டாவது மனைவியாக பீஷ்மர் விவாஹம் செய்துவைத்தார். இரண்டாம் கல்யாணம் நடந்து ஒருமாதம் கழிந்தது. பாண்டு திக்விஜயம் செய்து பல அரசர்களைத் தோற்கடித்து ஜெயமடைந்து ஹஸ்தினாபுரத்திற்கு வந்தார். சிலகாலம் இரண்டு மனைவிகளோடும் வனத்தில் வாசம் செய்ய பாண்டு இஷ்டப்பட்டார்.

ஒரு நாள் பாண்டு காட்டில் வேட்டையாடிக்கொண்டிருந்தார். அப்பொழுது இரண்டு மான்கள் துள்ளித்துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன. அவைகளைத் தமது அம்பினால் எய்தார். இந்த கெட்ட செய்கை பாண்டுவுக்கு ஒரு சாபத்தைக்கொடுத்தது. அந்த மான்கள் ஸாதாரணமான மான்களல்ல. ஒரு ரிஷியும் அவரது பத்னியும் அம்மாதிரிவேஷம் பூண்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். பாண்டு அவர்களை அம்பினால் பாணம்விட்டு இறக்கச் செய்யவே, அவர்கள் பாண்டு தன் மனைவியருடன் ஆசையாயிருக்கும் போது இறக்க கடவன் என்று சபித்துவிட்டார்கள். இந்தச் சாபத்தைக்கேட்டதும் பாண்டு துக்கப்பட்டார். தமக்குப்புத்ர ஸந்தானம் இல்லாமற்போவது இவருக்கு வருத்தத்தைக்கொடுத்தது, ராஜ்யபாரத்தைத் தவிர்த்து விட்டு ஸந்யாஸியாக காலங்கழிக்க காட்டிற்குப் புறப்பட்டார். ப்ருதையும், மாத்ரியும் அவருடன் சென்றார்கள்.

பாண்டு காட்டில் தவவேஷம் பூண்டு காலங்கழிக்கும் ஸமயத்தில் தமக்குப் புத்ரஸந்தானம் வேண்டுமே அதற்கு என்ன செய்வது என்று ஒருநாள் குந்தியுடன் ஆலோசனைசெய்து கொண்டிருந்தார். அதற்கு குந்தி பின்வருமாறு சொல்ல ஆரம்பித்தாள். "நாதா! நான் சிறுமியாயிருக்கும்போது தூர்வாஸமஹாமுனியை என் சிச்ருஷையால் ஸந்தோஷப்படுத்தினேன். அதற்கு அவர் திருப்தியடைந்து ஒரு மந்த்ரத்தை எனக்கு உபதேசம் செய்தார். அந்த மந்த்ரத்தின் மஹிமை மிகப்பெரிது. எந்த தேவனைப் பற்றி நினைத்து அந்த மந்த்ரத்தை உச்சரிக்கிறேனோ அந்த தேவன்

ப்ரத்தியக்ஷமாக வந்து புத்ர பாக்யத்தைக் கொடுப்பார். ஆகவே, ப்ராணேசா! இந்த ஸமயம் அந்த மந்த்ரத்தை உச்சரிக்க அனுமதி தந்தீரானால் தேவர்களிடமிருந்து புத்ரர்களைப் பெறலாம்" என்று சொல்ல, பாண்டு முதன் முதலில் தர்மராஜனை எமனைப்பற்றி நினைத்து மந்த்ரத்தை உச்சரிக்கச் சொன்னார். குந்தி அப்படியே மந்த்ரத்தை உச்சாடனஞ் செய்தாள். எமதேவனின் அம்சமாக குந்திக்கு தர்மராஜன் பிறந்தார். பிறகு குந்தி வாயுவைப்பற்றி நினைத்தாள். பீமன் ஜனனமானார். பின்பு குந்தி தேவேந்த்ரனை ஸ்மரித்தாள். தேவேந்திரனின் அம்சத்தையுடைய அர்ஜுனன் அவதரித்தார். பாண்டு, குந்தியை தம் இளையபத்னியான மாத்ரிக்கு அந்த மந்த்ரத்தை உபதேசம் செய்விக்கச் சொன்னார், குந்தி அவ்விதமே மாத்ரிக்கு உபதேசஞ்செய்து வைத்தாள். மாத்ரி அச்வனி தேவர்களை நினைத்தாள். அவர்கள் நகுல, ஸஹாதேவர்களைப், பிள்ளைகளாகக் கொடுத்தார்கள். ஆகவே தர்மன், பீமன், அர்ஜுனன், நகுலன் ஸஹாதேவன் இவர்கள் தான் பாரத கதைக்கு நாயகர்கள். இவர்களே பாண்டவர்கள்.

ஒருநாள் பாண்டு தன் சாபத்தை மறந்து மாத்ரியைத்தொடலானார். மாத்ரி எவ்வளவோ பாண்டுதன்னைத் தொடாமலிருக்க முயற்சிகள் செய்தாள். அவை பலிக்கவில்லை. பாண்டு மாத்ரியைத் தொட்டதும் கீழ்விழுந்து இறந்துவிட்டார். மாத்ரி அழுவதைக்கேட்டு குந்தி விரைந்து வந்தாள். இரண்டுபேரும் மிகவும் துக்கத்திலாழ்ந்தார்கள். பின்பு கொஞ்சம், துக்கத்தை ஆற்றிக்கொண்டு கணவருடன் யார் உடன்கட்டை யேறுவது என்பதைப்பற்றி ஒரு விவாதம் உண்டாயிற்று. மாத்ரி தான் கணவருடன் இறக்கவேண்டுமென்றாள், ஏனென்றால் தன்நாயகன் இறப்பதற்கு தான் காரணம் என்றும் தன்கைகளில் தான் தன் புருஷன் விழுந்து ப்ராணனை விட்டுவிட்டாரென்றும் சொன்னாள். யாவரும் மாத்ரி சொன்னவைகளை அங்கீகரித்தார்கள். மாத்ரி தன் குமாரர்களை குந்தியிடம் ஒப்புவித்துவிட்டு பாண்டுவுடன் தானும் உடன்கட்டையேறினாள். பாண்டுவின் உத்தரகிரியைகள் ஸரிவர நடந்தன. பின்பு, காட்டிலுள்ள ரிஷிகள் யாவரும் வந்து குந்தியையும் குழந்தைகளையும் அஸ்தினாபுரத்திற்கு அழைத்துச் சென்றார்கள், அந்தக் குழந்தைகள் பீஷ்மருடைய ஆதரவில் வளர்ந்து வந்தன. குந்தி மாத்ரியின் பிள்ளைகளை தன்னுடை குழந்தைகள் போல் வளர்த்து வந்தாள்.

கி. பி. சேஷாத்ரி அய்யங்கார்.

---



# THE DANGEROUS FLY.

By

'V. Valambal Ammal.

(Lady physician)

## அபாயகரமான ஈ.

நம் வீடுகளுக்குள் நாம் அழைக்காதபடியே பலவிருந்தினர்கள் அடிக்கடி ஓடிவருகிறார்கள். அவர்கள் யாரென்று பார்ப்போம். அவர்களின் பேர்ஊரை விசாரிப்போம். அந்த விருந்தினர்களின் யோக்யதையையும் விசாரிப்பது அவச்யமாகையால் அதையும் விசாரிப்போம். பெண்களே! அவ்விருந்தினர்கள் யாராயிருக்குமென்று ஊஹியுங்கள். அப்படி ஊஹிக்கும்போது அவர்கள் ஈக்களேன்று எனக்குத்தோற்றுகிறது. இந்த ஈக்கள் இஷ்டப்பட்டபோதெல்லாம் நமது ஸமயலறைக்குள் நுழைந்து ஸமயல்செய்து வைத்திருக்கிற பதார்த்தங்களை ருசிபார்க்கிறது. நாம் போஜனத்துக்கு உட்காருகிற போதும் உட்காருகிறது. பெண்கள் சாப்பிட உட்காரும்போதும் உட்காருகிறது. குழந்தைகள் சாப்பிட உட்காரும்போதும் கூட உட்காருகிறது. இந்த ஈக்களுக்குக் கொஞ்சமும் மரியாதை கிடையாது. எப்போது வணக்கமும் மரியாதையும் இல்லையோ அப்போது அதற்கு பயமும் பக்தியும் கிடையாது. இந்த ஈக்கள் பார்த்தால் பசு, குற்றமற்றவைகள். ஆனால் இவைகளோ வெகு பொல்லாதவைகள். பாப தோஷங்களுக்கு இவைகள் பயப்படுகிறதில்லை, இவைகளுக்குக் கொஞ்சமேனும் தபாதாக்ஷண்யம் கிடையாது. சில வர்ஷங்களுக்கு முன் நடந்த போயர் யுத்தத்தில் ப்ரிட்டிஷ் யுத்த வீரர்கள் சத்ருக்களின் குண்டுகளினால் இறந்ததைக் காட்டிலும் இந்த துஷ்ட ஈக்களினால் இரண்டு மடங்கு அதிகமாக இறந்தார்களென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. என்னே! ஈக்களினால் இவ்வளவு பேர்கள் எப்படி சாகமுடியும்? ஆஹா! ஆச்சர்யமாயிருக்கிறதே என்று வாசிக்கிற ஸஹோதரிகள் கேட்கலாம். ஈக்கள் மனிதர்களைக் கடிக்கும் குணமுடையதல்ல. இவைகளினால் கெட்ட நாற்றமும் உண்டாகிறதில்லை. ஆனால், இந்த ஈக்கள் எந்த விதத்தில் கொடியவைகளென்று பார்ப்போம், பிராணிவர்க்கத்தை

அடியோடு அழிக்க பரமசிவனிடம் வரன் வாங்கிக்கொண்டு வந்திருக்கிற ஒட்டுவாரொட்டி விஷப்புழுக்கள் பல இந்த அமெரிக்கையான ஈக்களின் முதுகிலும் பின்புறத்திலும் கால்களிலும் ஒட்டிக்கொண்டிருக்கும். இந்தப் புழுக்களெல்லாம் ஸாதாரணமாக கண்ணுக்குத் தெரியாதவைகள். இந்தப் புழுக்களுக்கு க்ருமிகளென்று பெயர். ஈக்களின் மூலமாக இந்தக் க்ருமிகள் நம்தேகத்தை ஒட்டிக்கொள்கின்றன. இந்தக் க்ருமிகள் பல குணமுடையவைகள். சில க்ருமிகள் காலராவை உண்டாக்கும், சில வயிற்றுக் கடுப்பை யுண்டாக்கும்; இன்னும் சில கால் வீக்கம் கை வீக்கம் முதலான வ்யாதிகளை உண்டாக்கும். சில பெரிய அம்மை போன்றவைகளை உண்டாக்கும்; மற்றும் சில விஷ ஜ்வரத்தை யுண்டாக்கும். சுருக்கமாகக் கூறினால் இந்த விஷ க்ருமிகளினால் பல பெரும் தொத்து வ்யாதிகள் உண்டாகின்றனவென்று ஸஹோதரிகள் நம்பலாம். விஷ க்ருமிகள் பல வழிகளாக ப்ராணிகளுக்கு வ்யாதிகளை உண்டுபண்ணுகின்றன. ஒரு பெண் ஈ உஷ்ணகாலத்தில் ஒரு மனிதன்பேரில் ஒரு தடவை உட்கார்ந்தால் 100 விஷமுட்டைகளுக்குமேல் 150 வரையில் முட்டைகள் இடுகின்றன. கொஞ்சம் குளிர்காலம் ஆரம்பிக்கிறவரையில் இந்தப் பெண் ஈக்கள் இப்படியாக ஒரு தடவைக்கு 150 முட்டைகளிடும். இவைகள் கூட்டங் கூட்டமாக ஆடுமாடு குதிரை முதலிய மிருகங்களின் எருகொட்டியிருக்கிற இடத்தில் வசிக்கும். இந்த எருக்கள் கிடைக்காமலிருந்தால் இவைகள் பாழ் வீடுகளில் வசிக்கும். ஆனால் இவைகளை ஸாதாரணமாக காய் கறி பழவகைகள் விற்கிற இடத்திலும் பக்ஷணக்கடைகளிலும் இது போன்ற மற்ற இடங்களிலும் கும்பல் கும்பலாய்க் காணலாம், ஸரியான குளிர்காலத்தில் இந்த ஈக்கள் அநேகமாக இறந்துவிடும். ஆனால் புத்தி கூர்மையுள்ள சில ஈக்கள் குளிர்காலம் வரும் காலத்தை யறிந்து பத்ரமாக இடம் தேடிக் கொள்ளுகின்றன. கடைசியாக இந்த விஷ க்ருமிகளைக்கொண்டு ஈக்கள் வ்யாதிகளைப் பரவச் செய்யும் குணங்களுடையதாயிருக்கிறதால் நாம் மிகுந்த ஜாக்ரதை எடுத்துக் கொள்ளவேண்டும்.

வாலாம்பாள் அம்மாள்.



# ANCIENT TAMILIANS AND THEIR CUSTOMS.

By

**Mr. Sivadynanandan.**

## பண்டைக்காலத் தமிழரது பழக்க வழக்கங்கள்.

ஒழுங்கான சரித்ரமில்லாத இத்தமிழரது பழக்கவழக்கங்களைக் கூறுவது சற்று அஸாத்யமான வேலையாம். என்றாலும் பல நூலாராய்ச்சியினாலும், சிலாசாஸனப் பரிசோதனையாலும் ஆங்கிலர் தேர்ந்த பல தமிழ் அபிமானிகளும் சிற்சில கால வரையறைகளைக் கணக்கறுத்திருக்கிறார்கள். அவற்றைச்சுருக்கிக் கூறின பின்னர் அப்பழக்க வழக்கங்களைப் பரிசோதிப்போர்க்கு அவ்வழக்கங்கள் முற்றும் தமிழரது வழக்கங்களா அல்லது ஆரியரது அபிமதங்களா வென்பது வெளியாகும்.

திராவிடர் என்ற தமிழர் இத்தென்னிந்தியாவுக்கு வந்த கால
த்தையும் வகையையும் கவனித்தால் அதுமூவகை யாகப் பிரிகின்
றது. இந்தியாவின் தெற்குக்கோடியிலிருக்கும் கன்னியா குமரி
முனை ஒரு காலத்தில் குமரியாறு என்ற பேரோடு ஓடின ஆறென்
றும், அவ்வாற்றிற்குத் தெற்கே பலகாவதூரம் நிலமிருந்த தென்
றும், அந்நிலத்தில் வசித்த தமிழர் இப்போது இந்திய சமுத்ர
தீவுகளில் காணப்படும் (Negritoes)கருநிறமான நீகிரிட்டோ வகுப்
பினரைச் சேர்ந்தவர்களாயிருந்தார்களென்றும், அச்சாதியார் நாம்
நம் தமிழர்களுக்குப் புராதனமானவரென்றும், அவர்களையே
பின்னர் இராமாயணத்தில் வானரங்களென்று சொன்னார்களென்றும்
விசதமாகிறது. இவர்கள் பின்னர் தென்கோடியிலுள்ள நிலத்தைக்
(Submergence theory) கடல்கொள்ள வடக்குவந்து தங்கியிருந்த
தாகத் தெரிகிறது. இவர்களை நாகரென்று பலரும் அழைப்பார்கள்.
நிற்க, இரண்டாவதாக, ஸிந்திய வம்சத்தைச் சேர்ந்த திராவி
டர் சிலர் பாபிலோன் ஸிரியா வென்னும் இடங்களில் வசித்திருந்தா
ர்களென்றும், அவர்கள் கப்பலேறித் தென்னிந்தியா நாடுகளில்
தங்கினார்களென்றும், இந்தியாவுக்கு கி. மு. 12, 11-ம் நூற்றாண்டு
களுக்கு முன்னரேவந்தார்களென்றும், வரும்போது வட்டெழுத்து
முறை அவர்களுக்குத் தெரிந்திருந்த தென்றும் அவ்வெழுத்துச்சில

சாஸனம் தற்காலம் காணப்படுவதென்றும், சிலாசாஸனப் பரீட்சையால் தெரியவருகிறது. இவர்களுக்குக் கப்பலோட்டவும், வ்யாபாரஞ்செய்யவும், மதில்கள் அகழிகள் கட்டவும், பயிரிடவும், நீர்ச்சிறைகளாக அணைக்கட்டுகள் போடவும் தெரியுமென்றேற்படுகிறது. இவர்கள் இறந்த மூதாதைகளை வணங்கி வந்தவர்கள்.

மூன்றாவதாகச் சிலவிதேயர் இந்தியாவின் வடமேற்கு வடகிழக்கு மூலைகளின் வழியாகவந்து வடஇந்தியாவில் தங்கியிருந்ததாகவும், இவர்களுக்கு வேளிர் அல்லது வேளாளர் என்று பெயரிருந்ததாகவும், மகாபாரத யுத்த காலம்வரையில் இவர்கள் வடஇந்தியாவிலிருந்ததாகவும், மகாபாரத யுத்தகாலத்தில் இருகட்சிக்காரர்க்கும் சோறுஅளித்து (Commissariat) உதவினதாகவும், பிற்பாடு அங்கு நின்று துவரை (துவாரசமுத்திரம்) வந்ததாகவும், அப்படியவரையழைத்து வந்தோன் அகத்தியர் என்னும் ஒரு அந்தணர் என்றும் விளங்குகிறது. இவர்களே க்ரந்த தமிழெழுத்துக்களை உபயோகித்துவந்தவராவர். எனினும் இந்த நவீன தமிழருக்கும் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட வட்டெழுத்துத் தமிழருக்கும் எப்போதும் கலகங்களே நடந்துவந்தனவென்றும் தெரிகிறது.

இத்துணை தெரிந்த பின்னர், தமிழ்ப்பாஷையினது பலவேறுபட்டகாலங்களைச் சற்றுக் கருதுவது நலமாகும். நமக்குத் தெரிந்தவரையில் கி. மு. 8, 7 நூற்றாண்டுகளில் தமிழர்கள் எழுத்துக்களைக் கையாடினார்களென்று நிச்சியமாகத் தெரிகிறது. அதிலும் கி. மு. 5, 6 நூற்றாண்டுகளில் வட்டெழுத்துக்கள் எல்லார்க்கும் தெரிந்திருந்ததாகவும் தெரிகிறது. அதுவும், ஆரிய பாஷா வகுப்பைச்சேர்ந்த பிராஹ்மி பாஷையினினத்திற் சேர்ந்த க்ரந்த தமிழெழுத்தல்லவென்றும், ஸ்ரீ தாமோதரம்பிள்ளை முதலியோர் எண்ணினபடி சீன பாஷா சம்பந்தமானதல்லவென்றும் தெரிகிறது. அவ்வட்டெழுத்துக்களை உற்றுநோக்குவோருக்கு அது அராபிக், ஹிப்ரூ இப்பாஷைகளின் எழுத்துக்களைப் பெரும்பாலும் ஒத்திருப்பதால் அது பாபிலோனிலிருந்து வந்த தமிழர்களாலேயே கொண்டு வரப்பட்டதென்றும், தொல்காப்பியச் சூத்திரங்களிற் சில அவ்வட்டெழுத்துக்களைப்பற்றியே கூறப்பட்டிருப்பதாகவும் நன்றாகத் தெரிகிறது. அவ்வட்டெழுத்துக்கள் ஆரியரது கூட்டுறவால் காலாந்தரத்து மாறிக்



க்ரந்த தமிழெழுத்து அதிகமாகக் கலக்கப்பெற்றுத் தற்காலமுள்ள எழுத்து நிலைக்கு வந்தது.

வீரமா முனிவர் என்று Revd. பெஸ்ச்சி தான் கொம்புக்கு மேற்சுழித்து எகர ஒகரக்குறிகளை ஏகார ஓகாரங்களாக மாற்றினார் என்பதைக் கேட்க நம் க்றிஸ்தவ சகோதரர்களுக்கு ஆநந்தமுண்டாகும்.

இதுவரை எழுத்துவாலாற்றைப்பற்றிச் சொன்னேன். இனியெடுத்த விஷயத்தை யாரம்பிப்பதற்குள் பாஷாகால விவரங்களைச் சொல்லுவது எடுத்துக்கொண்ட விஷயத்துக்கு உதவியாகும்.

அகத்தியம் என்ற முதல் இலக்கணம் ஒன்று இருந்ததாவென்ற விஷயம் சங்கிக்கத்தகுந்தது. அதைப்பற்றிப் பேசின் விரியும். ஆனதுபற்றி அகத்தியம் என்ற நூல் இருந்தது உண்மையாயின் அதைப்பற்றி ஒருவருக்கும் ஒன்றும் தெரியாதென்பதே கல்வியாளர்களது கொள்கை. தொல்காப்பியம் ஒன்றுதான் நமக்கு முதற்றெரிந்த நல்லிலக்கணமாகும். அது கி. மு. 4-ம் நூற்றாண்டுக்கு முன்னரே ஏற்பட்டதென்று அறிக. அப்பொழுதும் ஆரியர் தென்னிந்தியாவில் போக்கு வரவுள்ளவராயிருந்தாரென்றும் உணர்க. ஆரியர் ஒரு காலத்து வந்து அப்படியே தங்கிவிட்டதாக வெண்ணவிடமில்லை. பற்பல காலங்களில் பற்பல கூட்டங்களாக வந்தார்களென்றும், கடைசியாகவந்தது சமணபுத்தகாலங்களுக்குப் பின்னரென்றும், அப்பொழுதுதான் அவர் நிலையாகத் தங்கினாரென்றும் அறிக. இப்பொழுது பேரகத்தியம், சிற்றகத்தியமென்று கூறப்பட்டு அச்சிடப்பட்டுள்ள நூல் பிற்றையோரது புரட்டு என்பதை அந்நூல் படித்தவர்கள் இலகுவில் அறியலாம்.

நிற்க, ஸ்வச்சமான தமிழ்க்காலத்தை யாராயப்புகின் அது கி. மு. 5-ம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 5-வது நூற்றாண்டு வரையில் எட்டும். தமிழோடொப்ப விருந்த தெலுங்கும் தமிழினின்று பிரிந்த கன்னடமும் மலையாளமும் வடமொழி ஆர்யத்துக்கு அடிமையாய்ப்புகுந்தது போலத் தமிழ் மொழி போகாது, தான் தனி நின்று ஆரியருக்கும் பலவுதவி செய்து ஸம்ஸ்கிருத பாஷையின் யமைப்பிலும் சில மாறுதல்களை யுண்டுபண்ணி வைத்தது தான் தமிழுக்குச் சிறப்பு. பாஷா விபாகம் செய்வோர் (Philologists) வடமொழியாகிய ஸம்ஸ்கிருதத்தை (Inflexional) என்ற வகுப்பிற் சேர்ப்பர். தமிழை (Agglutinative) என்ற வகுப்பிற் சேர்ப்பர். (Indo-European) பாஷை வகுப்பிற் சேர்ந்த இவ்வடமொழி தமிழ் மொழிச் சேர்க்கையால் சில விகுதி மாற்றுக்களையும் பதப்புணர்ச்சிகளையும் தமிழிலிருந்து கைக்கொண்டது.

சிவத்தியாநாநந்தன்.

(வரும்)

***Interesting Items***

## CONCERNING CHILDREN.

## குழந்தைகள் விஷயம்.

**Infantile Mortality.**

சிசுமரணம்.—சென்ற 1914-ம் வர்ஷத்தில் நமது ராஜதானியில் சிசுமரணம் அதிகமாகி யிருக்கிறது. பட்டணங்களின் சராசரி சிசுமரண விகிதமானது பிறந்ததாக தாக்கலான குழந்தைகளின் தொகையில் 1000-த்தில் 261·8 ஆகும். இது 1913-ம் வர்ஷத்தியதைவிட 1000-க்கு 23 அதிகமாகும். க்ராமாந்தரங்களின் சிசு மரண விகிதம் சராசரியில் ஆயிரத்துக்கு 196·5 ஆகும். இது 1913-ம் வர்ஷத்தியதைவிட 1000-க்கு 16.5 அதிகமாகும். க்ராமந்தரங்களுள் பல்லாரி ஜில்லாவில்தான் (271) மரணவிகிதம் அதிகமாகும். நீலகிரி, குண்டூர், செங்கல்பட்டு, தஞ்சாவூர், திருநெல்வேலி, க்ருஷ்ணா, கர்நூல், சேலம், அனந்தபுரம் ஆகிய இந்த ஜில்லாக்களிலும் சிசு மரணவிகிதம் 1000-க்கு 200-க்கு மேலாகும்.

Fits.

வலிப்பு:—குழந்தைக்கு வலிப்பு வந்தால் அருகிலிருப்பவர் அதை உடனே கவனிக்கவேண்டும். குழந்தை பலமுள்ளதாயிருந்தால் அதை வெந்நீரில் உட்காரவைத்து குளிர்ந்த ஜலத்தில் ஊறவைத்த சணல்நூற்றுணி அல்லது கம்பளியினால் அதன் தலையை ஜில்லென்றிருக்கும்படிச் செய்யவேண்டும். குழந்தை பலவீனமாயிருந்தால் வெந்நீரில் வைப்பதற்குப் பதிலாகப் போர்வையினால் குளிப்பாட்டவேண்டும்.

**Sonce hints for School girls.**

பாடசாலைப் பெண்களுக்கு சில குறிப்புகள்:—பாடசாலைக்கு நேரம் கழித்துப் போகாதே; பெஞ்சுகளில் உட்காரும்போது நிமிர்ந்து உட்கார். உனக்கெதிரிலுள்ள டெஸ்கு பெஞ்சியின் மேல் சாயாதே; அக்கம் பக்கத்தில் கவனத்தைச் செலுத்தாதே, உபாத்தினி அம்மாள் சொல்வதை கவனமாய்க்கேள். உபாத்தினி அம்மாள் சொல்வது உனக்குப் புரியாமலிருந்தால் எழுந்திருந்து ஸந்தேகத்தைக்கேட்டுத் திருத்திக் கொள்; அடிக்கடி பக்கத்துப் பெண்களோடு பேசாதே; அனாவசியமாகச் சிரிக்காதே. பாடசாலையில் நல்ல பெண்ணென்று பெயரிடு. பள்ளிக்கூடத்தைவிட்டுப் போகும்பொது கண்ட இடத்தில் நிற்காமல் நேராக வீடு போய்ச்சேர். போகும்போது எதிரில் வரும் வண்டிகளைப் பார்த்துப் போ.

**Vaccination.**

அம்மை குத்தல்.

குழந்தைக்கு அம்மை குத்து முன் தாய் அதைத் தன் குழந்தை என்று எண்ணலாகாது. குழந்தை பிறந்து ஆறுவாரங்களுக்கும் மூன்று மாதங்களுக்கு மிடையில் அதற்கு அம்மை குத்துவது அநுகூலம். அப்போது குழந்தைக்கு நோவு அதிகமிராது. மேலும் அம்மைப்பால் வைத்தவிடத்தைச் சொரிந்துகொடுக்கவும் அதற்குச் சக்தியிராது. பலவீனக்குழந்தைகளுக்கும், சுகவீனமுள்ள குழந்தைகளுக்கும் சற்று பிந்திக் குத்தலாம். எப்படியும் ஆறுமாதங்களுக்குள் அம்மை குத்தவேண்டும். ஒரு குழந்தையிடத்திலிருந்து அம்மைப் பாலெடுத்து மற்றொரு குழந்தைக்கு வைப்பது நல்லதல்ல.

**Goat's Milk.**

வெள்ளாட்டுப் பால்:—அநேக பிள்ளைகள் வெள்ளாட்டுப் பால் குடி





த்து வளர்ந்ததுண்டு. பிள்ளைகளுக்குப் பாலைப் பீச்சிக்கொடுப்பதிலும் அவைகளை சப்பிக்குடிக்க விடுவது நல்லது. சில டாக்டர்கள் வெள்ளாடு பல மருந்துத் தழைகளைச் சாப்பிடுவதால் அதன் பாலில் மருந்து குணமிருக்கிறதென்றும் அதனால் அது க்ஷய ரோகக் குடும்பத்தில் பிறந்த குழந்தைகளுக்குப் போஜனமும் மருந்துமாக விருக்கிறதென்றும் சொல்லுகிறார்கள்.

**Teething.**

பல்முளைத்தல்.—குழந்தை பிறந்து அதற்குப் பல் முளைக்குங் காலம்வரையில் சற்று கவலையாயிருந்தால் அதற்கு வ்யாதி யுண்டாகிறதில்லை. பல் முளைக்குங்காலத்தில்தான் குழந்தைக்குப் பலவகை வியாதிகளுஞ் சங்கடங்களுமுண்டாகும். சாதாரணமாய்ப் பற்கள் நாலாம் ஆறும் மாதங்களுக்கிடையில் முளைக்க ஆரம்பிக்கும். பலமுள்ள பிள்ளைகளுக்கு நாலாம்மாதத்திற்கு முன்னும் பலவீனமான பிள்ளைகளுக்கு ஆறும்மாதத்திற்கும் பின்னும் முளைக்கத் துவங்கும். முதலாவது கீழ்வாய் முன் பற்கள் இரண்டு முளைக்கும். பிறகு அவைகளுக்கு இணையான மேல்வாய் முன்பற்கள் இரண்டு, முளைக்கும். இரண்டரைவருஷங்களுக்குள் 20 பற்கள் முளைக்கும். இவைகளுக்குப் பால் பற்கள் (Milk teeth) என்று பெயர். இவைகள் ஆறும் வயதுமுதல் பதினாலாம் வயதுக்குள் விழுந்துபோக வேறு முப்பத்திரண்டு பற்கள் அவைகளுக்குப் பதில் முளைக்கும். பற்கள் முளைக்குமுன்னே உமிழ்நீர் அதிகம் வடியும். பல்வீறு தடித்து அனலாயிருக்கும். கண்களிலிருந்து நீர்வடியும். குழந்தையானது தாகம், பேதி, இருமல், காய்ச்சல் முதலியவைகளால் வருந்தும். பற்கள் ஒன்றின்பின் ஒன்றாய்ச் சீக்ரம் முளைக்குமானால் சன்னி, ஓயாவாந்தி, காதுநோவு, கரப்பான் முதலியவைகள் உண்டாகும். பல் முளைக்குங்காலத்தில் குழந்தைக்குச் சுத்த ஆகாயமும் தேகாப்பியாசமும் அதிகம் தேவையாயிருக்கும். பால் மட்டுக்கு மிஞ்சிக் குடிக்கவிடலாகாது. தாகமெடுக்கும்போதெல்லாம் ஜலம் கொஞ்சங் கொடுக்கலாம். மலபந்தமிருந்தால் அதை நீக்கப் பார்க்கவேண்டும். பேதி அதிகம் போகவிடலாகாது இழுப்புண்டானால் தலையை குளிர்ந்த ஜலம் நனைத்த துணியால் சுற்றி, உடம்பை முழங்கை பொறுக்கத்தக்க வெந்நீருக்குள் வைத்து, முகத்தில் குளிர்ந்த ஜலத்தைத் தெளிக்கவேண்டும். இழுப்பு நின்றவுடன் குழந்தையைத் தூங்கும்படி செய்யவேண்டும். பிறகு சிற்றாமணக் கெண்ணெய் பேதிக்குக் கொடுக்கலாம். பல் முளைத்தலில் அதிகச் சங்கடமும் வருத்தமுமிருக்குமானால் வைத்தியரிடம் போகவேண்டுமே தவிர அபின் முதலிய கடைமருந்துகளை வாங்கிக் குழந்தைகளுக்குக் கொடுக்கலாகாது.

பல் முளைக்குங்காலத்தில் குழந்தைகளுக்கு ரப்பரைக்கடிக்கக் கொடுக்கிறது நல்லதுதான்; கடினமான பொருட்களைக் கடிக்கவிடலாகாது. இந்தகாலத்தில் குழந்தைகள் தங்கள் விரல்களைச் சூப்புவது நல்லதுதான். ஆயினும் இரத்தம்வரச் சூப்பவிடலாகாது. பற்கள் முளைத்தபின் இவ்வழக்கத்தை நீக்க வேப்பெண்ணெய் முதலிய கசப்பான வஸ்துக்களை விரல்களில் தடவலாம்.

## III

# DOMESTIC HINTS AND SUGGESTIONS.

## க்ருகத்தியக் குறிப்புகள்.

### Hints on health.

தேகாரோக்யக் குறிப்புகள் :— 1. தீடீரென்று படும் இரண காயங்களுக்கு சர்க்கரைவைத்துக் கட்டினால் குணமாகும். 2. வெரும் வயிற்றில் ப்ரதி தினம் காலை கொஞ்சம் துளசி தளம் சாப்பிட்டுவந்தால் தீர்காயுள் உண்டாகும். 3. துளசி தளம் தேகத்தை பரிசுத்தம் செய்கிறது. 4. மூத்திரம் தடைபட்டால் தேங்காய் இளநீர் குடித்தல் நலம் 5. துளசிசெடியை வீட்டிற் கருகில் வளர்த்து வந்தால் பாம்பு தேள் மலேரியா புழுக்கள் ப்ளேக் புழுக்கள் முதலியவை அணுகாது. 6. தினைந்து பதினத்திற்கு ஒரு முறை உபவாசமிருந்தால் சரீரத்திற்கு ஜாட்யம்வராது. 7. மலபந்தன முள்ளவர்கள் ப்ரதிதினம் திராக்ஷி பழம் உபயோகித்தால் க்ரமமாய்வெளிக்குப் போகலாம். 8. நெய் விசேஷமாய் உபயோகிப்பதனால் சரீரகாந்தியும் புத்தி பலமும் விருத்தியாகும். 9. வெள்ளாட்டு பால் ச்வாஸ் கோசங்களை பலப்படுத்தும். 10. நன்றாய் வடிக்கட்டியகுளிர்ந்த ஜலத்தை குடிப்பதால் சரீர ஆரோக்யமுண்டாகும்.

### Do not drink water too much.?

அளவுக்கு மீறி தீர்த்தம் குடியாதே?:—எதுவும் அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம் என்பதுபோல் போஜனமாகட்டும் தண்ணீராகட்டும் அளவோடு புஜித்துக்குடிக்கவேண்டும். எவ்வளவு தாகமாயிருந்தாலும் ஜாஸ்தியாக நீரைக்குடிக்கக் கூடாது. சாப்பிடும் மத்தியில் அடிக்கடி நீரைக்குடித்து வந்தால் ஜீர்ணம் தடைபடும். மேலும் சாப்பாடு குறைந்து விடுகிறது. போஜனத்துக்குப் பின் ஜலம் சாப்பிடும் வழக்கம் சிறந்தது. அதுவே தேகாரோக்யம்.

### Bile.

பித்தம்.—பித்தமானது மனுஷ்யர்களின் சரீரத்தில் வளர்ந்துவிட்டால் அகாலத்தில் தலைமயிர் நரைத்துவிடும். உடம்பில் மஞ்சள்நிறம் தோற்றும். கோபம் உண்டாகும். உடம்பில் வேர்வையும் அதிகரிக்கும். புத்தி வேகம் அடையும். அதிகமாய் ஆகாரம் உட்கொள்ள விருப்பம் உண்டாகும். கண்கள் மஞ்சளாகிவிடும். தூக்கத்தில் பலவிதமான கனவுகள் காணும். மிகவும் பல மிருந்தபோதிலும் அக்னி மாந்தமும் சில சமயத்தில் உண்டாகும். வயிற்றில் ஜடராக்னி இருக்கும் இடம், உட்குடல் பாகம், நடுமார்பு, கண்கள், மேல் தோல் இவைகள் பித்தம் தங்கி சஞ்சரிக்கும் இடங்கள்.

### Do not wear wet Cloth.?

நனைந்த வஸ்திரத்தை உடுத்திக் கொள்ளாதே?:— அநேக ஸ்த்ரீகள் நனைந்த புடவையோடு குடும்பவேலைகளை செய்வது வழக்கம் அப்படி அவர்கள் செய்வது அறியாத்தனமேயாகும். நனைந்த வஸ்த்ரம். தேகஅனலைக்குறைத்து வ்யாதியை யுண்டுபண்ணும். நனைந்த புடவையை உடனுக்குடன் கழற்றி விடவேண்டும். வேறு வஸ்த்ரம் இல்லாதபோது ஈரத்தோடு உட்கார்ந்திருக்கலாகாது. வஸ்த்ரத்தை மாற்றும் வரையில் நடந்துகொண்டிருந்தாலாவது நலம்.



## IV

# KITCHEN AND COOKERY.

## சமையலறையும் சமையலும்.

### Yangee path.

வாங்கீபாத் (கத்திரிப்பிஞ்சு சாதம்).—மிளகாய் அரைப்பலம், மிளகு அரைக்கால் பலம் கொத்தமில்லி விதை அரைப்பலம் உளுத்தம் பருப்பு இரண்டுபலம், சீரகம் வீசம் பலம், க்ராம்பு வீசம்பலம், சாதிக்காய் அரைக்கால்பலம், ஜாதிப்பத்திரி அரைக்கால்பலம்-இந்த வஸ்துக்களை ஒவ்வொன்றாகத் தனித்தனி கொஞ்சம் நெய்விட்டு வறுத்து வெவ்வேறாகப் பொடிசெய்துகொண்டு, பிறகு எல்லாப் பொடிகளையும் ஒன்றாய்ச் சேர்த்துநன்றாய்க் கலந்து வைத்துக்கொள்ள வேண்டியது. வறுப்பதற்கு மொத்தத்தில் இரண்டரைப்பலம் நெய் எடுத்துக்கொள்ளலாம்.

ஷை பொடியோடு, இரண்டேமுக்கால் ரூபாயெடை உப்பும் மூன்று பலம் கொப்பரைத்திருவலும் போட்டு கலந்து இன்னொருதரம் இடித்து இரண்டு சமபாகங்களாகச் செய்துவைத்துக் கொள்ளவேண்டும்.

முக்கால்பலம் புளியை யெடுத்து கொஞ்சம் நல்ல ஜலத்தில் நன்றாய்க் கரைத்து, கொட்டை கோது முதலியவைகளை எடுத்துவிட்டு, மேலே சொல்லியிருக்கும் இரண்டு பாகங்களில் ஒருபாகம் பொடியை யெடுத்துப்போட்டு, கரைத்த புளியோடு கலந்துவைத்துக்கொள்ள வேண்டும்.

முக்கால் வீசை கத்திரிப்பிஞ்சுகளை யெடுத்து, ஒவ்வொன்றின் காம்பின் முக்கால் பாகத்தை நறுக்கி யெறிந்து, காய்களைத் தனித் துண்டுகளாகாதபடி நான்காகப் பிளந்து, ஒவ்வொரு பிளப்பிலும் ஷை மசாலாகலந்த புளியை ஒருதிட்டமாய் நிரப்பிவைக்கவேண்டும்.

ஐந்துபலம் நெய்யெடுத்து அதை மூன்றுபடி ஜலங் கொள்ளும்படியானதோர் களிம்பேறாத பாத்திரத்தில் விட்டுக் காய்ச்சி, நெய் காய்ந்த பக்குவம்பார்த்து, அதில் கால்பலம் மிளகாய், கால்பலம் கடுகு, அரைபலம் உளுத்தம்பருப்பு அரைப்பலம் கடலைப்பருப்பு இவைகளை ஒன்றின் பின்னொன்றாக முறைப்பிரகாரம் தாளித்துக்கொண்டு பிறகு ஷை கத்திரிப் பிஞ்சுகளை அதில் போட்டு, கொஞ்சம் நல்ல ஜலத்தை ஷை கத்திரிப் பிஞ்சுகளின் மேல் தெளித்துக் கிளறிக்கொடுத்து மூடி, சற்று நேரம் பொறுத்து மறுபடியுங் கொஞ்சம் ஜலந்தெளித்துக் கிளறிக்கொடுத்துமூடிவைக்கவேண்டும். இப்படி ஷை கத்திரி பிஞ்சு முக்கால்பாகம் வேகு மட்டும் அடிக்கடி கிளறிக்கொண்டும் மூடிக்கொண்டுமிருந்து அது செம்மையாக வெந்தபதம் பார்த்து அடுப்பை விட்டு இறக்கிக்கொள்ள வேண்டும்.

வீசம்பலம் மஞ்சள் பொடியை ஒருபடி நல்ல ஜலத்தில் போட்டு அரைப்படி அரிசியிட்டு சமைத்து அந்தசாதம் பாதி வெந்தபதம் பார்த்து இரண்டரைப்பலம் நெய்விட்டுக் கிளறி மூடிவைக்கவேண்டும். பிறகு சாதம் முக்கால் பாகம் வெந்தபதம் பார்த்து தனியாக எடுத்து வைத்திருக்கும் பாகமஸாலாவைப் போட்டுக்கிளறவேண்டும். மறுபடியும் வேகவைத்திருக்கும் கத்திரி பிஞ்சை அதில் போட்டு கிளறி கீழே இறக்கி வைக்கவேண்டியது.

பரிமாறுவதற்கு முன் இரண்டு எலுமிச்சம் பழங்களை நறுக்கி விதைகளை உதிர்த்து விட்டு ரஸத்தை சாதத்தில் பிழியவேண்டியது. பிறகு பரிமாறினால் நன்றாயிருக்கும்.

# WOMAN'S WORLD.

## ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

**Lady Chemsford.**

லேடி செஸ்போர்டு :— நமது புதிய ராஜ ப்ரதி நிதியாராகிய மேன்மை தங்கிய லார்டு செம்ஸ்போர்டின் மனைவியாராகிய லேடி செம்ஸ்போர்டை, பம்பாயில் ப்ரசுரமாகும், "அட்வகேட் ஆப் இந்தியா" என்னும் பத்ரிகையின் ப்ரதிநிதியான ஓர் மாதராள் லண்டனில் பேட்டி கண்டுகொண்டபோது, அவர் (லேடி செம்ஸ்போர்டு) கூறியதாவது :— "எனக்கு தற்போது புதிதாகக் கிடைத்திருக்கும் உயர்ந்த உத்தியோகமானது மிக்க பொறுப்புடையதென்பதை நான் முற்றிலும் அறிந்திருக்கிறேன். எனக்கு முந்தியிருந்து காலஞ் சென்ற லேடி ஹார்டிஞ்சு சுய நலம், கிஞ்சித்தும் பாராட்டாது பொதுநலம் புரிவதே தமது கடமையாகக்கொண்டு செய்துவந்த கருணைவாய்ந்த செயல்களைப் பின்பற்றி நானும் அம்மாதிரியான நற்காரியங்களை மனமார்ந்து செய்ய ஒரு நாளும் பின்வாங்கமாட்டேன். இந்தியாவிலுள்ள சகலவித ஸ்த்ரீகளுக்காகட்டும், குழந்தைகளுக்காகட்டும், அவர்களது முற்போக்குக்கு என்னால் வெளிப்படையாக எவ்வளவு உதவி புரியக் கூடுமோ அவ்வளவையும் விசேஷ கருத்துடன் செய்வேன். ஸ்த்ரீகள் சம்பந்தமாய் எழுதப்படும் எப்படிப்பட்ட ப்ரசினையிலும் நான் தலையிட்டுக் கொள்ளத் தவறமாட்டேன்."

**Unemployed Women.**

தொழிலில்லாத ஸ்த்ரீகள் :—யுத்தத்தினால் பலருடைய ஜீவனோபாயம் கெட்டுப்போய்விட்டது. இங்கிலாந்தில் கடற்கரையோரங்களிலும் அழகான விடங்களினும் அநேகம் ஸ்த்ரீகள் இருந்துகொண்டு, காற்றுக்காகவும் சுற்றிப் பார்ப்பதற்காகவும் அவ்விடங்களுக்குப் போகிறவர்களுக்கு உணவும் ஜாகையும் கொடுத்து உபசரித்து அதன் வருமானத்தால் ஜீவனம் செய்வது வழக்கம். ஆனால் இந்த யுத்தம் ஏற்பட்டது முதல், அவர்களுக்கு அத்தொழில் நடக்காமல் கஷ்டமுண்டாய் விட்டது ஆகையினால் பரோபகார சிந்தையுள்ள சிலர் அவர்களைக் கூட்டிவைத்து குழந்தைகளுக்கு விளையாட்டுக்காக பொம்மைசெய்யும் வேலையை அவர்களுக்குச்சொல்லிக்கொடுத்து ஒரு ஜீவனோபாயம் உண்டு பண்ணியிருக்கிறார்கள். நமது இந்தியாவிலும் எத்தனையோ ஸ்த்ரீகள் வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். பொம்மை செய்தல்போன்ற சுலபமான தொழில்களை அவர்களுக்கு கற்பித்துக்கொடுத்தால், அவர்கள் சுகமாகப் பிழைக்கக் கூடியதல்லாமல், பெருச்சாளி காற்றாடி, பம்பரம் அற்பவிளையாட்டு சாமான்களை ஜெப்பானியர் போன்ற பிறர் இத்தேசத்தில் கொண்டுவந்து கொட்டி பணத்தைப் பறித்துக்கொண்டு போவதும் குறையும்.

**Gifts to Daughters.**

பெண்களுக்கு தானம் செய்தல்.- தாமும் தமது ஸகோதரனுடைய புத்ரனும் சேர்ந்த ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்தின் தலைவர் தமது புத்ரிகளின் கல்யாண காலத்தில் அவிபக்த ஸொத்தில் பத்திலொரு பாகத்தை புத்ரிகளுக்கு தானமாகக் கொடுத்தால் அது சட்டப்படி செல்லும். அப்படி தானங்கொடுத்தது அவிபக்த குடும்பத்தைக் கட்டுப்படுத்தும்—2 லா வீக்லி 457.





# VIEWS AND REVIEWS.

## அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

**Sri Vidya Diary for 1916.**

1916ஸு க்கு ஸ்ரீவித்யாடைரி.— இந்த டைரியை நமது பார்வைக்கு அனுப்பிய ஸ்ரீமானுக்கு வந்தனம். இது சிறு பாக்கெட்ஸைஸில் மிகவும் நேர்த்தியாய் நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. வக்கீல்கள் வியாபாரிகள் முதலிய ப்ரபுக்களுக்கு மிகவும் உபயோகப்படும். இதன் விலை அணா 4. வேண்டுவோர் மிஸ்டர் நாராயணஸாமி அய்யர் ஸ்ரீவித்யா ப்ரஸ், கும்பகோணம் என்று எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

**Minerva Diary No 5.**

மினர்வா டைரி நெ.5.—இதையனுப்பிய மெஸர்ஸ் தாம்ஸன் கம்பெனியாருக்குவந்தனம். இக்கம்பெனியார் பல வர்ஷங்களாக டைரிகள் ப்ரசுரம் செய்து கீர்த்தி பெற்றிருக்கிறார்கள். நமக்கு அனுப்பியிருக்கிற 5-வது நெம்பர் டைரில் மிகவும் உபயோகமுள்ள விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. ஹிந்துக்களுக்கு வேண்டிய தமிழ் தெலுங்கு பஞ்சாங்கங்களும் அடைங்கியிருக்கின்றன.

நம் பெண்களும் ஸ்த்ரீகளும் இந்த டைரியை வாங்கி வைத்துக்கொண்டால் பஞ்சாங்கம் பார்க்கிறதற்கும், வண்ணான் கணக்கு பால் கணக்கு முதலியவைகளைக் குறித்துக் கொள்ளுகிறதற்கும் உபயோகப்படும். மேலும், இது மிராசுதார்கள் வ்யாபாரிகள் முதலியவர்களுக்கும் உபயோகமாகும். இதன் விலை அணா 6. வேண்டுவோர் மெஸர்ஸ் தாம்ஸன் கம்பெனியார், ப்ராட்வே, சென்னை என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**Nalinakshi.**

நளினாக்ஷி :— இதை நம்பார்வைக்கு அனுப்பிய ஸ்ரீமானுக்கு வந்தனம். இதன் ஆசிரியர் சென்னை செந்தமிழ்ச் சங்கத்தின் அங்கத்தினராகிய மிஸ்டர். சி. பி. சேஷாத்ரி அய்யங்கார். நமது ஹிந்து ஸமூகத்தில் அங்கங்கே சிறுபெண்களை வயதுசென்ற கிழவர்களுக்கு விவாஹம் செய்துகொடுக்கும் வழக்கத்தையும் அதனால் வரும் தீங்குகளையும் பற்றி ஆசிரியர் இப்புஸ்தகத்தில் விரிவாக எழுதி யிருக்கிறார். மேலும் சிற்சில இடங்களில் சில அருமையான செய்யுள்கள் ஸமயோசிதமாகச் சேர்த்திருக்கிறார். இதன் நடை வெகுசுலபமாகத்தானிருக்கிறது. நம்ஸ்த்ரீகள் இப்புஸ்தகத்தை வாசிப்பதனால் பயனடைவார்கள். இதன் விலை அணா 5. வேண்டுவோர் கார்யதரிசி, ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த ஸமாஜம், மண்ணடி, சென்னை. ஈ என்று எழுதிப்பெற்றுக் கொள்ளவும்.

**Lalitha.**

லலிதா:—இதை நமது பார்வைக்கு ஸ்ரீமானுக்கு வந்தனம். இது பாலிகைகளுக்கும் பாலர்களுக்கும் எழுதப்பட்ட ஒரு சிறு கதை. இதன் ஆசிரியர் கும்பகோணம், டவுன் ஹைஸ்கூலில் உபாத்யாயரா யிருக்கும் மிஸ்டர் எஞ்கஸாமி. இதில் லலிதா என்கிற ராஜகுமாரத்தியின் பொறுமையும் வீரத்தனமும் மெச்சத்தக்கது. வயது காலத்தில் தகப்பனுக்கு ஏற்பட்ட ஒரு கஷ்டதசையை ஸமயோசிதமாக வேடம் பூண்டு வேறொரு அரசனிடம் அடிமையாகயிருந்து நீக்கினாள். இக்கதையில் பொறுத்தார்பூமியாள்வார் என்பதை நன்கு விளக்கி காட்டி யிருக்கிறார். இதன் விலை அணா 4. வேண்டுவோர் கார்யதரிசி, ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த ஸமாஜம், நெ 8 ராமஸாமிதெரு

## ஆரோக்கியம் இருந்தால்

### ஐசுவரியம்.

ஸ்த்ரீகளுடைய ஆரோக்கியம் கெடுவதற்கு முதற்காரணம் கர்ப்பாசயக்கோளாறுகள் கெடுவதேயாகும். பஹிஷ்டா காலத்திலுண்டாகும் வயிற்றுவலிக்கும், பஹிஷ்டியாகாமலோ அல்லது கிரமம் தப்பிவரும் குற்றங்களுக்கும்,

**சந்தானம் இருந்தால் சந்தோஷம்**

என்னும் மூத்தோர்வார்த்தையைச் சித்திக்க ஸந்தானம் கொடுப்பதற்கும்.

**கர்ப்பாமிருத சூரணம்.**

என்னும் திவ்வியாமிருதத்தை ஒவ்வொரு குடும்பஸ்த்ரீயும் உட்கொள்ளுவது மிகவும் அவசியம்.

10 தோலா அடங்கிய டப்பி விலை ரூ. 2-0-0

இன்பத்தைப் புகட்டக்கூடிய விதிகளடங்கிய வைத்தியநூல் விலையும் தபால்சிலவு மில்லாமல் வேண்டுவோர்க்கெல்லாம் இனாமாய் அநுப்பப்படும்.

**ராஜ்வைத்திய நாராயணஜீ கேசவஜீ,**
**ஆயுர்வேதோதய அவுஷதாலயம்,**
நெ. 20, சீனாபஜார் ரோட், மதராஸ்.



## பெரியலாபம்!

உங்களதிர்ஷடத்தை பரீக்ஷித்துப் பாருங்கள்.
நல்ல ஸமயத்தைக் கைவ்டாதீர்கள்.
க்ராண்டு ப்ரைஸ் டிஸ் டிரிபூஷன்.

ராம்பூர் சமஸ்தானம், இரண்டரை லக்ஷம் டிக்கெட்டுகள் விற்கப்படுகின்றன. ஒரு டிக்கட்டின் விலை ரூ. 2 தான். மொத்தம் 7033 ப்ரைஸ்கள் கொடுக்கப்படும். முதல் ப்ரைஸுக்கு 50000 ரூபாய் கிடைக்கும். அடுத்த ப்ரைஸ் 20000. மூன்றாவது ப்ரைஸ் 10000 (4) 10 ஆயிரம் ரூபா ப்ரைஸ் (5) 20 ஐந்நூறு ரூபா ப்ரைஸ் (6),500. நூறு ரூபா ப்ரைஸ் (7) 1000, இருபத்தைந்து ரூபா ப்ரைஸ் (8) 5000 ரூ பத்து ரூபா ப்ரைஸ். ஆக 250,000 ரூபாய்க்கு 7033 ப்ரைஸ்கள் கொடுக்கப்படும். ஒரு டிக்கெட்டு வாங்கினாலும் குறைந்தது ரூ. 10 கிடைக்கும். மஹாராஜாக்கள் ப்ரபுக்கள் முன்னிலையில் ப்ரைஸ்கள் கொடுக்கப்படும். ப்ரைஸ் துவக்கும் நாள் மார்ச்சுமீ 1ந்தேதி.

குறிப்பு:—பத்து டிக்கெட் வாங்குபவர்களுக்கு ஒரு டிக்கெட் இனாம். பிரியமுள்ளவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர்,
**க்ராண்டு ப்ரைஸ் டிஸ்டிரிபூஷன்.**
ராம்பூர் சமஸ்தானம்.


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
23 MAR 1915
MADRAS.


# FEMALE EDUCATION

AN ILLUSTRATED MONTHLY MAGAZINE

# பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு மாதாந்தப் பத்ரிகை.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

| பத்ராதிபர் : | மானேஜர் : |
|---|---|
| ஸஹோதரி ஆர். தாயாரம்மா. | அ. சேஷாத்ரி சர்மா. |

| | | |
|---|---|---|
| Vol. 5. தொகுதி 5. | இராக்ஷஸஸு மாசிமீ Feb. 16. இராக்ஷஸஸு பங்குனி March 16. | Nos. 5, 6. பகுதி. 5, 6. |


## ப்ரபஞ்சப்போக்கு

**Specific cure for Plague.**

ப்ளேக் நோய்க்குக் கைகண்ட மருந்து: உலகத்தில் எல்லாத் தேசங்களைக்காட்டிலும் இந்தியாவில் மரண விகிதம் ஜாஸ்தியாயிருக்கிறது. இதற்கு முக்ய காரணங்கள் பல இருக்கின்றன. அவைகளுள் ஒன்று ப்ளேக் நோய். இந்த நோயின் சரித்ரத்தை ஆராயப்புகுந்தால் விரியும். ஆனால், எல்லா நோய்களிலும் இது கொடியது என்று மட்டும் தெரிகிறது. இந்தியாவில் ப்ளேக் நோயினால் இறந்தவர்களின் ஜாப்தாவை (கணக்கை) கவர்ன்மெண்டார் வாரவாரம் ப்ரசுரம் செய்துவருகிறார்கள். அந்த ஜாப்தாவின்படி இந்தியாவில் வாரமொன்றுக்கு ப்ளேக் நோயினால் 10,000 க்குக் குறையாமல் ஜனங்கள் மரிக்கின்றனர். இந்த நோயைத் தடுப்பதற்கு கவர்ன்மெண்டாரும் ஜனங்களும் பல உபாயங்களைச் செய்துவருகின்

றனர். எவ்வளவு உபாயங்கள் கண்டு பிடிக்கப்பட்டும் நோய் தணிந்த பாடில்லை. இப்போது பஞ்சாப் கவர்ன்மெண்டார் இந்த நோய்க்கு ஒரு சிகித்ஸையைக் கண்டு பிடித்து ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். (1) ப்ளேக்நோய் கண்டவர்களைக் காற்றோட்டமுள்ள ஒரு பெரிய அறையில் படுக்கவைத்துக் கதவு ஜன்னல்களைத் திறந்து வைக்கவேண்டும். (2) அவர்களுக்குக் கஞ்சியைத் தவிர வேறு ஆஹாரம் ஒன்றும் கொடுக்கக் கூடாது. (3) தாகத்துக்குக் குளிர்ந்த சுத்த ஜலம் எவ்வளவு வேண்டுமென்றாலுங் கொடுக்கலாம். (4) இரண்டு மணிகளுக்கு ஒரு தரம் அரை அவுன்ஸ் சுத்த ஜலத்தில் ஒரு துளி (Iodine) அயோடைனைக் கலந்து கொடுக்கவேண்டும். (5) ப்ளேக் நோய் கண்டவர்களைத் தூக்கத்திலிருந்து எந்தக் காரணத்தைக் கொண்டும் எழுப்பலாகாது. (6) ப்ளேக் கட்டிகளின் பேரில் காலையிலும் மாலையிலும் அயோடைனைத் தடவவேண்டும். (7) வேறு யாதொரு மருந்தையும் கொடுக்கக்கூடாது. பஞ்சாப் கவர்ன்மெண்டார் தங்கள் தேசத்தில் ப்ளேக்நோய் கடூரமாயிருந்த காலத்தில் இம்முறைப்படி அனுஸரித்ததில் 100க்கு 80 பேர்கள் ப்ளேக் நோயிலிருந்து பிழைத்தார்களாம். இந்த அயோடைன் த்ராவகத்துக்கு ப்ளேக்நோய் வராமலே தடுக்குங் குணமுமிருக்கிறதாம். கோயமுத்தூர், சேலம், பழனிபோன்ற நகரங்களிலும் இம்முறையை அனுஷ்டித்துப் பார்ப்பது நலம்.

**Education in Japan.**

ஜப்பானில் கல்வி : ஜப்பான் என்பது ஐந்தாறு தீவுகள் ஒன்று சேர்ந்து அமையப்பெற்றுள்ளது. இது ஆசியா கண்டத்திற்குக்கிழக்கில் பஸிபிக் மஹா ஸமுத்ரத்திலிருக்கிறது. இத்தேசத்தில் வசிக்கும் ஜனங்கள் பௌத்த மதஸ்தர்கள். இவர்கள் சுறுசுறுப்பும் உயர்ந்த புத்தியுமுடையவர்கள். நாகரீகத்தில் இவர்கள் மேனாட்டார்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்களல்ல. ஸுமார் ஐம்பது வர்ஷங்களுக்கு முன் ஜப்பான் தேசம் இருந்த விடம் தெரியாமலிருந்தது. இப்போது அதன் உயர்வையும், செல்வத்தையும் வ்யாபாரப் பெருக்கையும் கவனிக்குங்கால் நமக்கு ஆச்சர்ய முண்டாகாமல் போகாது. இவ்வளவு உன்னத நிலைமைக்குக் காரணம் அத்தேசத்தில் கொடுக்கப் பட்டு வரும் கல்வி தான் என்று



ஸகலரும் அறியலாம். ஜப்பானில் கல்வி விருத்தியடைந்த சரித்ரத்தைக் கவனிப்போம்.

1871 ௵த்தில் ஜப்பான் கவர்ன்மெண்டார் முறையாகக் கல்வி இலாகா ஒன்று ஸ்தாபித்தார்கள். 1872௵த்தில் ஜப்பான் சக்ரவர்த்தி தமது இராஜ்யத்தில் ஆணாவது பெண்ணாவது கல்வி கற்காமல் இருக்கக்கூடாதென்று பஹிரங்கப் பத்ர மூலமாகத் தெரிவித்தார். இவ்வர்ஷ முதல் தேசத்தில் கல்வி அதிகரித்து வந்தது. 1890௵த்தில் ஜப்பானில் ப்ரைமெரிப் படிப்பு இலவசமாகவும் கட்டாயமாகவும் செய்யப் பட்டது. இதன் பலனாக 1902-ம் ௵த்தில் அத்தேசத்துக் கல்வி இலாகா ரிபோர்ட்டின்படி ஆண்களில் நூற்றுக்கு 96 பேர்களும் பெண்களில் நூற்றுக்கு 87 பேர்களும் படித்தவர்களாயிருந்தார்கள். அதாவது இரு பாலார்களையும் சேர்த்துக் கணக்கிட்டுப்பார்த்தால் ஸராஸரி நூற்றுக்கு 91 பேர்கள் படித்தவர்களாயிருந்தார்கள். உலகத்திலுள்ள மற்ற எந்தத் தேசங்களைக் காட்டிலும் ஜப்பான் ப்ரைமெரிப் படிப்பைக் கற்றுக் கொடுப்பதில் முதன்மையாக விளங்குகின்றது. ஒரு ப்ரைமெரி பாடசாலையில் சேர்க்கப்படும் பிள்ளைக்குக் குறைந்தது ஆறு வயதாயிருக்கவேண்டும். ப்ரைமெரி வகுப்புக்களில் பாலர்களும் பாலிகைகளும் சேர்ந்து வாசிக்கிறார்கள். இவ்வகுப்புக்களில் இரு பாலார்களுக்கும் யாதொரு வித்யாஸமும் கிடையாது. ப்ரைமெரி வகுப்புக்கு மேலும் பெண்களுக்குத் தனியான பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. ஜப்பானில் ப்ரைமெரி வகுப்புக்களில் பரீக்ஷைகள் கிடையா. பரீக்ஷைகளைப் பற்றிய நினைப்பையே பள்ளிக் குழந்தைகளின் மனதில் படவைக்க மாட்டார்கள். பரீக்ஷைகளில்லாமலே குழந்தைகளை உயர் வகுப்புக்கு மாற்றுவார்கள். ப்ரைமெரி பாடசாலைகளில் குழந்தைகளை அடித்துச் சொல்லிக் கொடுக்கும் வழக்கம் கிடையாதாம்.

"இண்டர்கார்டன்" என்னும் போதனா முறைக் கல்வியை ஜப்பானில் வெகு வர்ஷங்களுக்கு முன்னதாகவே அதிகாரிகள் அநுஷ்டித்து வருகிறார்களாம். இம்முறையைச் சொல்லிக்கொடுப்பவர்கள் பெரும்பாலும் ஸ்த்ரீகளே யாவார்கள். "இண்டர்கார்டன்" வகுப்புக்களில் படிப்பவர் மூன்று வயது முதல் ஆறுவயதுக்குட்

பட்ட குழந்தைகளாம். அவ்வகுப்பில் சொல்லிக் கொடுக்கப்படும் போதனைகளெல்லாம் விளையாட்டுக்களும் வேடிக்கைகளுமாகும். குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்தில் ஒரு விதமான ருசி ஏற்படுத்துவதற்காகவே "இண்டர்கார்டன்" முறை ஏற்பட்டிருக்கிறதாம்.

ஜப்பான் ப்ரைமெரி பாடசாலையில் சரித்ரம் முக்கியமாகப் போதிக்கப்படுகிறது. பாலர்களும் பாலிகைகளும் தங்கள் தேசசரித்ரம் வாசிப்பதில் வெகு ப்ரியமும் ஊக்கமும் காண்பிக்கிறார்கள். கடவுள் பக்தி, ராஜபக்தி, தேசபக்தி, மாதா பிதாபக்தி, சகோதரபக்தி முதலியவைகள் கதை ரூபமாக சுலப நடையில் கற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. சுருக்கிக்கூறின், பாலர்களுக்கும் பாலிகைகளுக்கும் அவர்களின் பிற்கால வாழ்க்கைக்கு உபயோகப் படும்படியான கல்வியைக் கொடுப்பதே ஜப்பான் கவர்ன்மெண்டாரின் முக்கிய நோக்கமாக இருக்கிறது.

**The Hindu University.**

ஹிந்து யுனிவர்ஸிடி :—1916ஸு பிப்ரவரி 4ந் தேதி வெள்ளிக்கிழமை ஸரியாக பகல் பன்னிரெண்டு மணிக்குச் சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீகாசிக்ஷேத்ரத்தில் ஸ்தாபிக்கப்படப்போகும் ஹிந்து யுனிவர்ஸிடிக்கு நமது ராஜப்ரதிநிதியாகிய லார்ட் ஹார்டிஞ்சு ப்ரபு அஸ்திவாரக்கல் நட்டார். அச்சமயம் இந்தியதேச மன்னர்களும் ப்ரபுக்களும், கவர்னர்களும், லெப்டினண்ட் கவர்னர்களும், மஹாபண்டிதர்களும், கல்விமான்களும், சீமாட்டிகளும், இன்னும் அனேக ஜனங்களும் ப்ரஸன்னமாயிருந்து ஹிந்து ஸர்வகலாசாலை உலகத்தில் பேரும் புகழும் படைத்து ப்ரஸித்தியடைய வேண்டுமென்று எல்லோரும் ஏகமனதாக ஆசீர்வாதம் செய்தார்கள்.

1904-ம் வர்ஷம் ஒரு ஹிந்து ஸர்வகலாசாலை ஸ்தாபிக்க வேண்டுமென்று ஸ்ரீகாசி மஹாராஜா அவர்கள் அக்ராஸனத்தின் கீழ் ஒரு ஸபைகூடி தீர்மானிக்கப்பட்டது. பிறகு, காலக்ரமேண, பலமான முயற்சிகள் செய்ததின் பலனாக இந்த ஹிந்து யுனிவர்ஸிடி ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது இதற்கு ஒரு கோடி ரூபா மூலதனம் சேர்ந்திருக்கிறது. பல தேசமன்னர்கள் இதற்கு வர்ஷாவர்ஷம் உதவுதாக வாக்களித்திருக்கிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டாரும் வர்ஷம் ஒரு லக்ஷரூபா கொடுத்து உதவிசெய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.



இந்த ஹிந்து ஸர்வகலாசாலைக்கு மேன்மேலும் பண உதவி வருமென்பது நிச்சயம். தற்காலம் இந்தியாவிலிருக்கும் யுனிவர்ஸிடிகளைக் காட்டிலும் இந்த ஹிந்து யூனிவர்ஸிடி பின் ஸந்ததியார்களுக்கு மிகுந்த உபயோகத்தைக் கொடுக்கும். பின்ஸந்ததியார்களுள் ஆண்களும் பெண்களும் இக்கலாசாலையிலிருந்து பயிற்சி பெற்றுவரும் காலத்தில் கடவுளுக்கும் ராஜாவுக்கும் தேசத்துக்கும் உண்மையாக உபயோகப்படுவார்களென்று நாம் ஸ்ரீகாசி விச்வநாதரை ஸதாகாலம் ப்ரார்த்திக்கிறோம்.

**Education in the Triplicane Government Girls' School.**

திருவல்லிக்கேணி பெண்பாடசாலையில் படிப்பு :—சென்ற ஜனவரி மாதக் கடைசி வாரத்தில் நம் கவர்னர் சட்ட ஸபை கூடிற்று. ஜனப்ரதிநிதி மெம்பர்கள் எல்லோரும் ஆஜராயிருந்தார்கள். லார்ட் பென்ட்லண்டு அக்ராஸனம் வஹித்தார். திருவல்லிக்கேணி ஸர்க்கார் பெண் பாடசாலையில் குழந்தைப் பெண்களின் படிப்பு முறையைப்பற்றி ஒரு விவாதம் நடந்தது. கனம் மிஸ்டர் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் மேற்கண்ட பெண் பாடசாலை குழந்தைப் பெண்களுக்குச் சரித்ரம், பூகோளம், கணக்கு முதலிய எல்லாப் பாடங்களும் இங்கிலீஷ் பாஷை மூலமாக கற்பிக்கப்படுவது ப்ரயோஜனத்தைத் தரத்தக்கதாயில்லை யென்றும், இங்கிலீஷ் பாடத்தைத் தவிர மற்ற பாடங்கள் எல்லாம் பெண்களின் தாய் பாஷையில் கற்பிக்கப்பட வேண்டுமென்றும் அழுத்திப் பேசினார். மேலும், கனம் மிஸ்டர் சாஸ்திரியார் இது விஷயமாகப் பெரியோர்களுடைய அபிப்ராயங்களை எடுத்துக் காட்டினார். சில கௌரவ மெம்பர்கள் கனம் மிஸ்டர் சாஸ்திரியார் சொல்லும் அபிப்ராயத்தை ஆதரித்துப் பேசினார்கள். கல்வி இலாகாவின் தலைவராகிய மிஸ்டர் ஸ்டோன் திருவல்லிக்கேணி ஸர்க்கார் பெண் பாடசாலைக்குத் தாம் போயிருந்ததாகவும் பெண்கள் இங்கிலீஷில் நன்றாகப் பேசுகிறதாகவும் அதனால் இப்போது அனுஷ்டித்துவரும் முறையே ச்லாக்யமானதாகவும் தெரிவித்தார். மேலும், பெண்கள் படிப்பைச் சீக்ரம் நிறுத்திவிடுகிறார்களாகையால் அவர்களுக்கு அந்தச் சொற்பகாலத்தில் இங்கிலீஷ் பாஷையை எப்படியாவது ஜாஸ்தியாகக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்றே, கவர்ன்மெண்டார் பெண்களின் படிப்பு முறையை இப்படி

யாக அமைத்திருக்கிறார்களென்று மிஸ்டர் ஸ்டோன் வெளியிட்டார். இது மிகவும் குறிப்பிடத்தக்கது. ஆகக்கூடி இப்போது இந்தியப் பெண்களுக்கு இங்கிலீஷ் பாஷை மூலமாக மற்ற எல்லாப் பாடங்களையும் கற்பிப்பது நலமா? என்பது தான் கேள்வி. இவ்விஷயத்தில் கவர்ன்மெண்டாரின் கருத்து நன்றாகத் தெரிகிறது. இங்கிலீஷ் பாஷை மூலமாக இங்கிலீஷ்பாடத்தைத் தவிர மற்ற எல்லாப் பாடங்களையும் பாடசாலைப் பெண்களுக்குக் கற்பிப்பதுகூடாத காரியமாகும். ஆனால் பெண்கள் பாடசாலையில் கற்கும் கல்வியானது அவரவர்களின் பிற்கால வாழ்க்கைக்கு உபயோகப்படத்தக்கதன்மையாயிருக்கவேண்டும். இப்படியிருக்க, பெண்களின் பிற்காலவாழ்க்கையில் ஒரு க்ஷணமேனும் உபயோகப்படாத இங்கிலீஷ் பாஷையைக் கற்பதே பொதுவாக உசிதமாக இல்லை. இனி, பூகோளம், கணக்கு, சரித்ரம்முதலிய பாடங்களைப் பெண் குழந்தைகள் அந்ய பாஷை மூலமாகக்கற்பது அஸம்பாவிதமாகும். இந்தியப் பெண்கள் கற்கும் கல்வியானது அவர்களின் பிற்கால வாழ்க்கைக்கு உபயோகப்படும்படியான தாயிருக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட உபயோகமான கல்வியை நம்பெண்கள் தம்பாஷை மூலமாகக் கற்கவேண்டும். இதை நாம் பலமுறையும் வற்புறுத்திச் சொல்லுவோம். பெண்கள் இங்கிலீஷ் பாடத்தை இங்கிலீஷ் பாஷையில் கற்பது உசிதம். மற்ற எல்லாப்பாடங்களையும் இங்கிலீஷ் பாஷை மூலமாகப்பெண்கள் கற்கவேண்டுமென்று கவர்ன்மெண்டார் அமைத்திருக்கும் முறையானது தப்பானதென்றே நாம் சொல்லவேண்டியிருக்கிறது.

**Prof. Karve.**

ப்ரோபஸர் கார்வே:—இந்திய ஸ்த்ரீகளின் படிப்புக்கும் அபிவிருத்திக்கும் தமது ஆயுளை த்யாகம் செய்து உழைத்துவரும் புணாவாசியாகிய ப்ரொபஸர் கார்வே அவர்கள் தாம் புணாவில் ஸ்தாபிக்கப்போகும் "இந்திய ஸ்த்ரீகளின் யுனிவர்ஸிடி" ஸம்பந்தமாக மார்ச்சுமீ 1-ந் தேதி சென்னை வந்து சேர்ந்தார். மார்ச்சுமீ 5-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்குச் சென்னை ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சாங்கத்தார் ப்ரொபஸர் கார்வே அவர்களை வரவழைத்துப் 'பெண்கல்வி' ஆபிஸில் ஒரு விருந்து பண்ணிவைத்தார்கள். விபரங்களை வேறு பக்கத்தில் காணலாம்.

## SHOOTING STARS

By

**Swami Vallinayakam.**

### எரி நக்ஷத்ரங்கள்.

சில ஸமயங்களில் வானத்தைப் பார்த்து நக்ஷத்ரங்கள் எரிந்து
விழுவதாக ஜனங்கள் சொல்வதுண்டு. அவை எரி நக்ஷத்ரங்கள்
என்றும், அவை எரிந்துவிழப் பார்ப்பவர் உடனே ஏதேனும் வரு
க்ஷத்தைப் பார்க்கவேண்டும்; இல்லாவிட்டால், கெடுதி உண்டென்
றும் சொல்லிக் கொள்ளப்படுகின்றன. இவை சில ஸமயங்களில்
ஒன்றாகத் தனித்தும், சில ஸமயங்களில் பலவாகவும், அபூர்வமாகச்
சில ஸமயங்களில் மழைத்தாரை போன்று அளவிறந்தன வாகவும்
எரிந்து விழுவதுண்டு. ஆனால், இவை வாஸ்தவத்தில் நக்ஷத்ரங்கள்
அல்ல. பின்னையோ, அவை பஞ்ச பூதத்தால் ஆக்கப் பெற்ற
வையே ஆயினும், நமது பூமியிலுள்ள எவற்றைப் போலவும் இருப்
பவையல்ல. ஸூர்ய குடும்பம் (அதாவது ஸூர்யனும் அதைச்
சுற்றி வரும் அண்டங்கள் முதலியனவும்) விளங்கப்பெற்ற ஆகாய
விஸ்தீர்ணத்தில் எங்கும் இவை ஒழுங்காகச் சிதறப்பட்டிருக்க
வில்லை. ஆனால், இவை பல சேர்ந்து ஒரு கூட்டமாகவும், அங்ஙன
மிருக்கும் பல கூட்டங்களுள் சில வால் நக்ஷத்ரங்களைப்போல ஸூர்
யனைச் சுற்றிவந்துகொண்டும் இருக்கின்றன. நல்ல இருண்ட இராக்
காலங்களில் வெறும் கண்ணுக்கே புலப்படத்தக்க இவற்றின்
தொகை குறைந்தது 7,500,000 ஆகும். தூரத்ருஷ்டிக் கண்
ணாடியின் உதவிபெற்றால் 400, 000,000 பார்க்கலாம். பூமியானது
ஸூர்யனைச் சுற்றிவரும் வழியில் ஏறக்குறைய பூமியைப் போன்ற
ஆக்ருதியுள்ள மேற்கூறிய கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் நாம் எரி
நக்ஷத்ரங்கள் என்று சொல்லத்தக்கவை 13,000 க்குக் குறையா
மலிருக்கும்.

பூமியானது ஒரு மணிநேரத்துக்கு 1,000 மைல் வீதம் ஓடிக்
கொண்டிருக்கின்றது. அதே வேகத்தில் தான் மேற்கூறிய பூமியத்
தனை ப்ரமாணமுள்ள எரி நக்ஷத்ரக்கூட்டங்களும் ஓடிக்கொண்டிருக்
கின்றன. பூமி சுற்றிவரும் வழியிலேயே இவைகளும் ஓடிக்கொண்
டிருப்பதால், அடிக்கடி பூமியானது இக்கூட்டங்களில் மோதி அவற்
றைச் சிதறடிக்க நேரிடுகின்றது. இவற்றுள் ஒரு கூட்டம் பூமியை

நெருங்குகின்றதாக வைத்துக்கொள்வோம். அப்பொழுது என்ன
நேரிடுகின்றது? சாதாரணமாக மணி நேரத்துக்கு 1,000 மைல்
வீதம் ஓடிக்கொண்டிருக்கும் இக்கூட்டம் பூமியை. நெருங்கவும்
அதன் கவர்ச்சி சக்தியால் இதன் வேகம் அதிகப்பட்டு மணிநேரத்
துக்கு 1,200 மைல்-வீதம் ஓட ஆரம்பிக்கின்றது. இத்தனை அதி
வேகமாக ஓடும் அக்கூட்டத்தில் பூமி மோத அது சிதறுண்டு
கூட்டம் கலைந்து, ஒரு பகுதி பூமியின் ஆகர்ஷண சக்திக்குள்பட்ட
ஆகாயத்தில் விழவே, அப்பகுதியிலுள்ள துண்டுகளெல்லாம் ஒரு
விநாடிக்கு 30 மைல் வீதம் ஓடத்தலைப்படுகின்றன. இத்தனை
வேகத்தில் வரும் துண்டுகள் ஆகாயத்திலுள்ள அணுக்களோடு
உறைவதால் மிகக் கொதித்துப் போகின்றன. உஷ்ணம் அதிகப்
படுங்கால் வெளிச்சம் உண்டாகுமாதலால் அவை அங்ஙனம் தகிக்
கப்பட்டுப் போகும் காலத்தில் வெளிச்ச முண்டாகி நாம் பார்க்க
ஹேதுவாகின்றன. இவை வாஸ்தவத்தில் நக்ஷத்ரங்களாக இல்லா
விட்டாலும், இவற்றிற்கு எரி நக்ஷத்ரம் என்று ஜனங்கள் இட்ட
பெயர் ஏகதேசப் பொருத்தம் என்றே சொல்லவேண்டும். நிற்க.

இது இவ்விதமாக எரிந்து போகாமல் பூமியில் தானே நேரே
வந்து விழுவதுமுண்டு. மேற்கூறிய கூட்டங்களிலுள்ள துண்டுகளி
ன் ப்ரமாணம் மிகப்பெரியதாக இருக்குமாயின், அவை முழுவதும்
எரிந்துபோகப் போதிய உஷ்ணம் இல்லாதபோது எரிந்ததுபோகப்
பாக்கித்துண்டுகள் பூமியில் வந்து விழுகின்றன. 1803ம் வர்ஷம்
ஏப்ரல்மீ 26உ நார்மண்டியில் ஓரிடத்தில் இடி விழுந்ததுபோல் ஒரு
சப்தம் கேட்டது. இச்சப்தம் கேட்பதற்கு சில நிமிஷங்களுக்கு
முன் வானத்தில் ஒரு எரி நக்ஷத்ரம் தோன்றிற்று. பூமியில் 2,000
கல்லுகள் விழுந்தனவாம்; அவற்றைத் தொட்ட கைகள் சாம்பராய்
போகத்தக்கவண்ணம் அவ்வளவு சூடாகவும் இருந்தனவாம். அவ்
விரண்டாயிரம் கற்களும் 54 சதுர மயில் விஸ்தீர்ணத்துக்குள் கிட
ந்தனவாம். இங்ஙனம் 1812ம் வர்ஷம் மேமீ 22உ ஆஸ்டிரியா
வில் ஸடான்னம் என்னும் பட்டணத்தில் 200 கற்களும், 1864ம்
வர்ஷம் மேமீ 14உ பிரான்சு தேசத்தில் ஆர்கில் என்னும் இடத்
தில் பலகற்களும், 1866ம வர்ஷம் ஜூன்மீ 9உ ஹங்கேரியில்
குயபுமின்ஸா என்னும் இடத்தில் 1,000 கற்களும், அதில் ஒன்று
ஆறு அந்தர் தூக்கமுள்ளதாகவும் விழுந்தனவாம். இவ்விடங்களி
லும் கற்கள் விழுமுன் இடிவிழுந்துபோன்ற சப்தமும் கேட்ட
தாம்.

சுவாமி வள்ளிநாயகம்,

160931

# WOMEN AND IDEAL OF JEWELS

By

A Calcutta Lady.

## ஸ்த்ரீகளும் நகை லக்ஷ்ய[illegible]

தற்காலம் பெண் கல்வியைப்பற்றி எவ்வளவுதரம் சொன்னாலும்
அதிகமாகாது. கல்விக் குறைவினால் இப்பொழுதிருக்கும் நிலைமை
ஸ்த்ரீகளுக்கு அநேக சீர்கேட்டிற்கு இடமாகிறது. ஆடை
ஆபரணங்களினால் எவ்வித அலங்காரம் செய்துகொண்டாலும் அது
அழகாகாது. 'கல்வியழகே அழகு' என்பதை எப்பொழுதும் மறவா
திருத்தல் நலம். சென்ற நவம்பர்மீ பெண் கல்விப் பத்ரிகையில்,
ஸ்த்ரீ அபிமானி எழுதியிருக்கும் ஒரு விஷயத்தைப் பார்க்க என்
மனதில் மிகவும் ஆத்ரம் உண்டாகிறது. அதாவது ஒரு சங்கத்தில்
ஸ்த்ரீகளெல்லாரும் கூடியிருக்கும்பொழுது அதன் ப்ரஸிடெண்ட்
எழுந்து அடுத்த தடவை கூடும்பொழுது ஒரு இங்கிலீஷ் மாது
வரப்போகிறதாகவும், அதற்கு ஸபைக்குவரும் எல்லோரும் தர்மா
புரப் புடவை உடுத்திக்கொண்டும் வைரக்கம்மல் போட்டுக்கொண்
டும் வரவேண்டுமென்று வற்புறுத்தினதாகவும் நமது ஸஹோதரி
எழுதுகிறார். ஒரு ஸபை என்றால் அநேகம் பேர்களிருக்கலாம்.
ஒவ்வொருவர் குணம் ஒவ்வொருவிதமிருக்கலாம். அப்படியே
அவர்கள் இவ்விஷயத்தில் ஒற்றுமை பாராட்டினாலும், எல்லாரும்
அதற்குச் சக்தியுள்ளவர்களாயிருக்கவேண்டும். ஸபையின் ப்ரஸிடெ
ண்டே இப்படிப் பேசினால் அந்த ஸபை எப்படி முன்னுக்கு வரும்.
ஸபை என்பது என்ன? எதற்காகக் கூடுவது? ஒவ்வொருவரும்
சுமக்கக்கூடிய ஆடை ஆபரணங்களைப் போட்டுக் கொண்டுபோய்
பெருமை பேசவா? அல்லது கல்வியபிவிருத்திக்காகவா? ஸபை கூடு
வது எதற்காக வென்றால் நம்முற்கால ஸ்த்ரீகளைப்போல் நாமும்
கல்வி, தைர்யம் விடாமுயற்சி முதலியவைகளில் முன்னுக்கு
வந்தால், நம்தேசமும் முன்னடையவேண்டு மென்பதற்காகவே.
அதுவல்லாமல், மேற்சொன்னபடி ஸம்பவம் ஸபைகளில் நடந்தால்
நாம் பின்னுக்குப்போக எண்ணுவது போலிருக்கிறது. ஒரு ஸபை
ஏற்பட்டு அதில் மெம்பர்களானால் எல்லாரும் ஸமத்வமாயும்,

கூடியமட்டும், கல்வியிலோ, பணத்திலோ ஒருவர்க்கொருவர் வித்
யாஸமில்லாமல் நடந்துகொள்ளவேண்டும். உபயோகமில்லாத அநேக
ஆபாஸக்கட்டுக்களை மேனாட்டாரிடமிருந்து கற்றுக்கொள்ளுகிறோ
மே தவிர உபயோகமுள்ள முக்கியமானதை விட்டுவிடுகிறோம்.

இதனால் ஆபரணம் அணிந்துகொள்ளக் கூடாதென்று நான்
சொல்லவில்லை. வைரக்கம்மல் இல்லாதவர்களைச் சபைக்குள்ளே விடக்
கூடாதென்கிற நிபந்தனையை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்
ளுகிறேன். ஆபரணத்தைப் பார்த்துத்தான் ஆளைப் பார்க்கிறார்
களென்று நினைக்கிறேன். இதனால் தெரியவருவதென்னவென்றால்
முதலில் வைரக்கம்மல் வாங்கிக்கொண்டே ஸபையில் மெம்பராக
வேண்டும். அல்லது, அதற்குச் சக்தியற்றவர்கள் சபையில் சேர
ஆவலிருந்தும் போகாமலிருப்பது நலம். நம் ஸஹோதரிகளுக்குள்
ஏழை, பணக்காரரென்ற வித்தியாஸமில்லாமல் எப்பொழுது ஸமத்
வம் ஏற்படப்போகிறதோ? ஸ்ருஷ்டியில் யாவரும் ஒன்றுதான்!
நம்மைப் போலவே செல்வமும் சீக்ரத்தில் அழியக்கூடியதே.
அதை அவ்வளவு உன்னதப் பதவியில் வைத்து, எப்பொழுதும்
நிமிர்ந்து பார்த்துக்கொண்டிருப்பதனால் லாபமென்ன? இந்தி
யாவில் முக்கியமான ராஜதானிகளைவிட நம் சென்னை ராஜதானி
ஏழையாயிருந்தும், அதிலுள்ள நாம் கல்நகைகளில் கணக்கில்
லாமல் பணம் செலவழிக்கிறோம். அந்நகையில்லாமற்போனால்
ஸஹோதரிகள் பெரிய அவமானமாய் எண்ணுகிறார்கள். இதென்ன
புத்திக் குறைவு? கல்வி தெரியாமற்போனாலல்லவோ அவமான
மாய் எண்ணவேண்டும். அப்படியிருக்க, ஆபரணமில்லை யென்று
வருந்துவானேன். இன்னும் கொஞ்ச நாளில் 100 ரூபாய் சம்பளந்
திற்கு மேற்பட்டவரின் மனைவி வைரக்கம்மலில்லாமலும் 50
ரூபாய்க்குக் குறைந்த உடை உடுக்காமலும் ஸபையில் சேரக்கூடா
தென்று விதிகளிலொன்றாக ஏற்படுத்தி விடுவார்கள். இப்பொழுதே
பழக்கத்தில் எண்ணங்களிப்படியிருக்கிறதாகத் தெரிகிறது. பெரிய
ஸபையாகிய ரிக்ரியேஷன் கிளப்பிலேயே இப்படி ஆபரணமரியா
தை நடக்கிறதென்றால் பாக்கியிடங்களில் நடப்பது ஆச்சர்யத்தை
உண்டு பண்ணாது; அங்கே போனதும் முதல் ஸம்பாஷணை என்ன
வென்றால் யார் கம்மல்பெரிது, யார் அட்டிகை ஜிலுஜிலுப்பு, யார்



புடவை விலை யதிகம், இதைத்தான் விசாரித்துக்கொள்ளுகிறார்
கள். இது பேசத் தான் ஸபைக்குப் போகிறார்கள். மொத்தத்
தில் இப்பேர்ப்பட்ட ஸபைகளுக்குப் போவதினால் பேராசையும்
நகை லக்ஷ்யமும் வ்ருத்தியாகுமே தவிர வேறொரு பலனுமில்லை.

அன்யதேசத்து ஸ்த்ரீகளைப்பார்த்தாலோ, அல்லது நாமங்குப்
போனாலோ முதலில் அவர்களின் ஆபரணத்தில் தான் ஸஹோதரி
களின் பார்வை செல்லுகின்றது. பிறகு அவர்கள் உடுத்தியிருக்
கும் உடை விலைபெற்றதா என்பதை கவனிப்பார்கள். இது இரண்
டைத்தவிர, அவர்கள் பாஷை, நடை, உடை, பாவனை, ஆசாரம்,
கல்வி, பக்தி, இவைகளெல்லாம் எப்படிஎன்று ஏன் அறியக்கூடாது?
இவைகளில் நல்லதிருந்தால் ஏன் கற்றுக்கொள்ளக்கூடாது? இவை
களையெல்லாம் தெரிந்துகொள்வது கஷ்டம்; ஏனென்றால், பொறுமை
யும் முயற்சியும் வேண்டியிருக்கும். நகையைப்பற்றி அறிந்துகொள்
வதுபோல பாக்கி விஷயங்களைக் கண்ணால் பார்த்தமட்டில் நிமிஷத்
தில் அறிந்துகொள்ள முடியாததே காரணமென்று நினைக்கிறேன்.
கொஞ்சம் நாள் பார்க்காதிருந்த பந்துவையோ ஸ்நேகிதியையோ
கண்டால் அது என்ன இடமாயிருந்தாலும் "நான் பார்த்த பிறகு
என்ன நகை பண்ணிக்கொண்டாய்? நான் இன்னது செய்துகொண்
டேனென்று தான் முதலில் பேச ஆரம்பிப்பார்கள். தன் வீட்டிற்கு
வந்தபந்து அல்லது ஸ்நேகிதியைப் பார்க்கையில் நகைகள் எவ்வளவு
போட்டுக்கொண்டிருக்கிறாளென்று அறிந்துகொண்டே அதற்குத்
தகுந்தமரியாதை சிலபேர் செய்கிறார்கள். நம்தேசத்தில் அதிகச்
செல்வமிருந்து காது மூக்கில் வைர நகையில்லாமற் போனால் அவ
மானமாக யெண்ணுகிறார்கள். இது என்ன பரிதாபகரமான
காரியம்!

ஒரு ஹிந்து ஸ்த்ரீ.

---

ஸஹோதரிகளே! உங்களுடைய பின் ஸந்ததியார்களை முன்னுக்குக்
கொண்டு வருகிற பாரம் உங்களிடத்திலிருக்கிறதை அறியவும்:—ஸர் குரு
தாஸ் பானர்ஜி.

* * * *

எவனும் எக்காலத்தும் கடவுளை நேராகக் கண்டதில்லை;—ஜான்.

# DESIGNING.

**By**

**Sri Vedavalli.**

(Aged 10, Reading in Fourth class, Triplicane Government Girls' School.)

## கோலம் போடுதல்.

இவ்விஷயத்தை நமது 'பெண் கல்வி'ப் பத்ரிகையில் ப்ரசுரம் செய்யும்படி எழுதியனுப்புவித்த குழந்தை சௌபாக்யவதி வேதவல்லிக்கு நமது அன்பார்ந்த வந்தனம். நாம் இதைச் சில இடங்களில் திருத்தி ப்ரசுரம் செய்திருக்கிறோம்.

உலகத்தில் எல்லா ஜாதியாரைக் காட்டிலும் ஹிந்துக்கள் தர்மத்திலும், நாகரீகத்திலும், புத்தியிலும் விசேஷமாகப் பேர்படைத்திருக்கிறார்களென்பது யாவர்க்குந் தெரிந்த ஸங்கதியே. இந்த ஸங்கதியை ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும் கூட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். கேவலம் அதிஸவல்ப விஷயங்களிலும்கூட கவனித்துப்பார்த்தால் ஹிந்துக்களின் தர்மகுணங்கள் தெரியவரும். உதாரணமாகக் 'கோலம் போடு' தலைப்பற்றிச் சற்று கவனிப்போம்.

ப்ரதி ஹிந்து குடும்பத்திலும் அதிகாலையில் ஸ்த்ரீகள் எழுந்திருந்து ப்ரதிதினம் செய்யவேண்டிய கடமைகளில் கோலம்போடுதல் அவர்களின் முதல் கடமையாக விருக்கிறது. ஸ்த்ரீகள் தங்கள் காலைக்கடன்களை முடித்துவிட்டு, வாசலைப் பெருக்கி, சாணத்தால் மெழுகிக் கோலம் போடுகிறார்கள். கோலங்கள் நாநாவித மாதிரியாக இருக்கும். கோலமிட்ட வீட்டைப்பார்த்தால் மங்களகரமாகவும், அழகாகவும் இருக்கும். கோலமிடப்படாத வீட்டையும், கோலமிடப்பட்ட வீட்டையும் பார்த்தால் எது அழகுள்ளதென்று ஸஹோதரிகள் அறிந்து கொள்வார்கள்.

ஒரு ஹிந்து வீட்டில் விடியற்காலையில் கோலம் போடப்படாமலிருந்தால் அவ்வீட்டுக்காரர் இன்னும் எழுந்திருக்கவில்லை என்று தெரிகிறது. மேலும், அவ்வீட்டில் அமங்களகரம் நேர்ந்திருக்குமோ என்று ஸந்தேகிக்கும் படியாகவும் இருக்கிறது. ஆகையினால் ஒவ்



வொரு ஹிந்து ஸ்த்ரீயும் தன்கடமைகளில் கோலம்போடுதலை முக்யமாகக் கவனித்துக் காலாகாலத்தில் செய்வாள்.

கோலம் போடுதல் பட்டணங்களில் அதிகமாகக் காணமுடியாது. பட்டணவாச ஹிந்து ஸ்த்ரீகள் கோலம் போடுதல் தங்களுக்கு அகௌரவம் என்று நினைத்து கோலம் போடுதலை வேலைக்காரியிடம் ஒப்புவித்து விடுகிறார்கள். ஆனால் இவர்களோ ஏழு மணிக்குமேல் தான் படுக்கையை விட்டு எழுந்திருக்கும் வழக்கமாயிருக்கிறது. பட்டணவாச ஹிந்துக்களின் வீடுகள் அவ்வளவு அழகாயிருக்கிறது என்று சொல்லமுடியாது. இவர்களுக்குப் புண்ய தினங்களும், பண்டிகை நாட்களும் ஸாதாரண நாட்களாகவே இருக்கின்றன. க்ராமங்களில் அந்த நாட்களில் ஹிந்து வீடுகளைப் பார்த்தால் தேவலோக வீடுகளைப்போலிருக்கும். சித்ரம் எழுதுதலில் நிபுணனான விச்வகர்மனும் நம் க்ராமத்து ஹிந்து ஸ்த்ரீகளிடம் சென்று சித்ரம் கற்கவேண்டுமென்றே தோன்றும்.

நிற்க, முற்காலத்தில் கோலங்கள் அரிசிமாவினாலேயேபோடப்பட்டு வந்தது. இப்போதும் க்ராமங்களில் அந்த வழக்கம் இருந்து வருகிறது. நவீன நாகரீகத்திற்கேற்ப அரிசிமாவுக்குப் பதிலாகச் சுண்ணாம்புமாவை உபயோகித்து வருகிறார்கள். அரிசி மாவினால் கோலம்போடுவதால் அநேக கோடி எறும்புகளும், ஈக்களும் பக்ஷிகளும் ஜீவிக்கின்றன. இதனால் நம் பூர்வீகர்கள் உயர்ந்த ஜீவகாருண்ய நோக்கத்துடன் அரிசிமாவினால் கோலமிடுவதை ஏற்படுத்தினார்கள். தற்காலத்தில் சுண்ணாம்புமாவைக் கோலத்திற்கு உபயோகிப்பதனால் ஒரு ஜீவஜந்துக்காவது ப்ரயோஜனப் படுகிறதில்லை. மனிதன் பஞ்ச பூதங்களுக்குத் தினசரியே ஆகாரம் கொடுக்கவேண்டியது ஒரு முக்யமான கர்மமாக விருக்கிறது. ஆனால் அதை நம் ஸ்த்ரீகள் மறந்துவிட்டு மற்ற பாபங்களுக்குள்ளாவது போல் இதற்கும் உட்படுகிறார்கள்.

ஸஹோதரிகளே! அரிசிமாவு கோலம் போடுவதால் நஷ்டமென்று நினைக்கிறீர்களா? கடுகு போவது உங்கள் கண்ணுக்குத் தெரிகிறதே ஒழிய பூசனிக்காய் போவது தெரிகிறதில்லை. ஐயோ! என்ன பரிதாபம்! அரிசிமாவு கோலம் போட்டால் வீடுகளில் எறும்புகள் சேருகிறதென்று சொல்லுகிறீர்கள். வாஸ்தவம், சர்

க்கரையும், தேனும் வீட்டில் வாங்கி வைத்திருக்கிறீர்களே. அவைகளுக்கு எறும்பு வருவதில்லையா? மூட்டுப்பூச்சிக்குப் பயந்து கொண்டு வீட்டைக் கொளுத்துவதுபோல், எறும்புகளுக்குப் பயந்து கொண்டு ஒரு பெரிய புண்ய கர்மத்தைக் கை விடுவது புத்தியீனமாகும். நம் ஸ்த்ரீகள் வரவர க்ருஹ க்ருத்தியங்களை அலக்ஷியம் செய்துவருகிறது பொறுக்கமுடியாமலிருக்கிறது. மேனாட்டு நாகரீகம் நம் குடும்பங்களுக்குள் புகுந்து ஸ்த்ரீகளின் புத்தியை மயக்கிவிடுகின்றன. நம் பூர்வீகர்கள் ஏற்படுத்தியிருக்கும் ஒவ்வொரு காரியத்தையும் உற்று யோஜித்துப் பார்த்தால் உண்மை தெரியவரும். பெரியோர்கள் நம் வாழ்க்கையில் செய்யும்காரியங்களை ஆழ்ந்த கருத்துக்களுடன் ஏற்படுத்தியிருக்கிறார்களென்பது மட்டும் நிச்சயம்.

வேதவல்லி.

---

## A MARRIAGE AT 72.

**By**

**Mr. A.**

## 72—வது வயதில் ஒரு விவாகம்.

சென்னையில் ப்ரசுரமாகும் பாரதி என்னும் வாரப்பத்ரிகையில் பின் வருமாறு வெளியாகியிருக்கிறது. இது படிக்க வெகு தமாஷாகயிருக்கும்.

எட்டியாபுரம் சமஸ்தான திவானான ஸ்ரீமான். சி. தா. ஷண்முகம் பிள்ளையவர்கள் ஸமீபத்தில் இரண்டாவது விவாகஞ் செய்துகொண்டார். பிள்ளையவர்களுக்கு வயது 72, பெண்ணுக்கு வயது 15. பிள்ளையவர்கள் டிப்டி கலெக்டர் உத்யோகம்செய்தவர்; சென்னைச் சட்டசபையில் கௌரவ அங்கத்தினராக இருந்தவர்; எட்டியாபுரம் சமஸ்தானத்தில் திவானாக இருப்பவர்; உலக விவகாரங்களை நன்றாய் அறிந்தவர். ஆசாரத் திருத்தத்தைப் பற்றி ப்ரமாதமான பேச்சு நடந்துகொண்டிருக்கும் இக்காலத்தில் பிள்ளையவர்கள் 72 வயதுக்குமேல் 15 வயதுள்ள ஒரு கன்னிகையை வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டதைப்பற்றி நான் என்னென்று சொல்வது?



பிள்ளையவர்கள் தமது விவாகத்தைப் பற்றிப் பின் வருமாறு ஸமாதானம் கூறுகின்றார். 'எனது (முதல்) மனைவி சில வர்ஷங்களுக்கு முன் இறந்து போனவுடனே, நான் விவாகஞ் செய்துகொள்ளவில்லை. அந்தத் தவறை இப்பொழுதுதான் உணர்கின்றேன். வயது சென்ற எனது தாயாரை எனது குமாரனும் மற்றவர்களும் கவனிப்பதில்லை. இதனைக் காணும்பொழுது நான் கிழவனானால், எனது நிலைமை எவ்வாறாகுமோ என்று பயம் உண்டாகிறது. எனது தாயாரின் சதாபிஷேகம் (நூறு வயதில் நடக்கும் ஒரு விசேஷம்) அடுத்தவருஷம் வருகிறது. அதனைக்கொண்டாட எனக்கு ஒரு மனைவி வேண்டும்.'

பிள்ளையவர்களுக்கு முன்னரே விவாகப்பருவம் அடைந்துள்ள இரண்டு பெண்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தக்க புருஷர்கள் தேடவேண்டும். இச்சந்தர்ப்பத்தில் பிள்ளையவர்கள் தமது பௌத்ரி ஸ்தானத்திலுள்ள ஒரு பெண்ணைத்தமது பௌத்ர பௌத்ரிகள் கூடவிருந்து களிக்க மங்கிலியதாரணஞ் செய்து கொண்டார்கள்! பிள்ளையவர்களின் புதிய மாமனார் வயதில் அவர்களுக்குக் குமாரர் எனத்தகுந்தவர். பணத்திற்காசைப்பட்டுத் தமது கன்னிப்பெண்ணை எழுபத்திரண்டு வயதுசென்ற கிழவருக்கு மனைவியாக்கிய இந்த மாமனார்சொல்லும் ஸமாதானம் இன்னும் விநோதமானது!

“நான் ஜோசியரிடம் ஆலோசித்தேன். எனதுபெண் இன்னும் சுமார் இருபது வர்ஷம் பர்த்தாவுடன் வாழ்ந்திருப்பாளென்று ஜோசியர்கூறினார். அதனால் பிள்ளையவர்களுக்கு என் பெண்ணை விவாகம் செய்து கொடுத்துவிட்டேன்.”

திவான் பிள்ளையவர்கள் விவாகஞ் செய்துகொண்ட மறுநாளே எட்டியாபுரம் ராஜா திடீரென்று காலஞ்சென்றார். இத்தகைய அநியாயவிவாகம் மிகவும் அநியாயமென்பதைக் காட்டுமாறு கடவுள் ஒரு பெரிய வாலிபராஜாவின் மரணத்தை உண்டுபண்ணி விட்டாரோ! ஸமீபத்தில் வெளியான பிள்ளையவர்களின் ஜீவிய சரித்திரத்தில் பின் வருமாறு கூறப்பட்டிருக்கிறது:—

ஸ்ரீஷண்முகம்பிள்ளை தமது ஜாதியாரில் ஒருவரும் இதுகாறும் அடையாத உன்னத ஸ்தானத்தை அடைந்திருக்கிறார். அதனால் இந்த ராஜதானியில் ஸுமார் 20 லக்ஷம் ஜனத்தொகையுள்ள வேளாளஜாதியாருக்கு ப்ரதிநிதியென்று கொள்ளத்தகுந்தவர். வாஸ்தவந்தான். பிள்ளையவர்கள் இதுவரை அடைந்துள்ள கௌரவங்களுடன் 72 வயதுகளுக்கு மேல் 15 வயதுக் கன்னிகையை விவாகம் செய்து கொண்ட பெருங் கௌரவத்தையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். பிள்ளையவர்களை (கார்காத்த) வேளாளகுலதிலகர் என்று அங்கீகரிப்பதற்கு இப்பொழுது ஒரு புதிய கௌரவமும் சேர்ந்துவிட்டது. பிள்ளையவர்கள் மேலே கூறிய ஸமாதானம் ஒருபுரம் இருக்கட்டும். நான் ஒரு புதிய ஸமாதானம் கூறுகின்றேன். பிள்ளையவர்களுக்கு வயது 72. பெண்ணுக்கு வயது 15. பிள்ளையவர்களின் வயதை மாற்றி எழுதினால் 27 ஆகும். 27க்கும் 15க்கும் பொருத்தமான விவாகந்தானே. மற்றொரு வகையாகப் பார்ப்போம். பெண்ணின் வயதை மாற்றி எழுதினால் 51. 72க்கும் 51க்கும் பொருத்தமான விவாகந்தானே. இவ்வாறு தான் திருப்தி செய்து கொள்ளவேண்டும். வேறு வழியில்லை.

அ.

---

உத்தம குலத்தில் பிறந்தவர்கள் எப்போதும் உண்மை பேசுகிறவர்களாயிருக்கவேண்டும் :—யூரிபைடிஸ்.

*  *  *  *

பலவான் பெரியவன் ; அவன் இட்டது சட்டம். இது இயற்கைச் சட்டமாகயிருக்கிறது. இது ஒரு காலத்திலும் மாறாது :—டைனூஷியஸ்.

*  *  *  *

சில பழங்கள் புளிப்பும் தித்திப்புமாக இருப்பதுபோல ஒருவள் குணம் சாந்தமாகவும்; மூர்க்கமாகவும் இருக்கிறது :—ப்ளூடார்க்.

*  *  *  *

ஈச்வரா! உன்னுடைய மஹத்வம் என்ன? உன்னைக் கேட்கிறவர்களுக்கும், கேட்காதவர்களுக்கும் அவர்களுக்கு வேண்டியவைகளைக் கொடுத்து வருகிறாய். உனக்கு இப்பூவுலகில் ஒரு சத்ருவும் இடையாதென்றே நான் உறுதியாய்ச் சொல்லுவேன் :—ப்ளேடோ.



# EMPEROR FEROZESHAH

## The Beneficient.

## ப்ரோஸிஷா சக்ரவர்த்தி.

## 1351—1388.

இவர் ஒரு மகம்மதிய அரசர். இவர் மஹமத் பின்டோக்ளா
வுக்குப் பின் பட்டத்துக்கு வந்தவர். டோக்ளாக் வம்சத்தில் இவர்
தான் கடைசியாக அரசாக்ஷி செய்தார். இவர் 37 வர்ஷகாலம்
ராஜ்ய பாரம் செய்தார். இம்மஹம்மதியச் சக்ரவர்த்தி இறந்து
போகும்பொழுது இவருக்கு வயது 90. இவர் தமது ராஜ்யத்தில்
செய்த நன்மைகள் பல. இவரை ப்ரோஸிஷா அல்லது ஜனோப
காரி என்று ஜனங்கள் கூப்பிடுவது வழக்கம், இவர் இறந்து பல
நூற்றாண்டுகளாலும், இவருடைய ஆளுகையும் இவர் செய்
திருக்கிற நன்மைகளும் இன்னும் ஜனங்கள் மனதை விட்டு அகல
வில்லை. இவரின் முக்ய நோக்கம் சாந்தமும் ஸமாதானமுமே. இந்தி
யாவில் முற்காலத்தில் ஆண்ட மஹம்மதிய அரசர்களில் முதன்மை
யும் முக்யமும் சிறப்பும் பெற்ற அரசர் இவர் ஓர்வர் தாம். இவரு
டைய கல்வி, குணம், ஒழுக்கம், ஜீவகாருண்யம் வீரம், முதலான
நற்குணங்கள் சிறந்து விளங்கின. பித்துப் பிடித்த மஹம்மதபின்
டோக்ளாக் சக்ரவர்த்தி காலத்தில் ஜனங்கள் வெகு கஷ்டமடைந்
தாலும், இப்புண்ணிய சக்ரவர்த்தியின் காலத்தில் அவர்கள் எண்ணி
றந்த நன்மைகளையும் பெற்று ஸுகஜீவிகளாய் வாழ்ந்தார்கள்.
ப்ரோஸிஷா போரில் பராக்ரமம் கொண்ட அப்கானியவம்சத்தில்
உதித்திருந்தாலும் வெற்றி பெறுவதை வெறுத்தனர். இதனால்
இவர் சாமர்த்யத்திலும் வெற்றி பெறுவதிலும் குறைந்தவர் என்று
சொல்லக்கூடாது. இவர் பட்டத்துக்கு வந்தவுடன் ராஜாங்கம் குழ
ப்பமுற்று துக்கத்திலாழ்ந்திருந்ததைக்கண்டு, ஸமாதானமும் சாந்
தமும் நிலைத்திருக்க நிச்சயம் செய்து அவ்வழிகளில் தமது முயற்சி
களையும் புத்தியையும் செலுத்தினார். மேலும், ஆசைக்கு அளவில்லை.
என்பதை நன்குணர்ந்தவர். இவர் ஆண்ட 37 வர்ஷகாலத்தில்
ராஜ்யத்தில் ஒரு பாகத்திலும் கலகங்கள் உண்டாகவில்லை. இவர்
ஜனங்களின் க்ஷேமத்தையே நாடிய வராதலால், தேசத்தில் ஸமாதா
னத்தை நிலைநிறுத்தி, பற்பல கைத்தொழில்களைக் கண்டு பிடித்த
னர். தேசத்தில் பல சாஸ்த்ர சங்கங்களைக் கூட்டி வைப்பதிலும்
விவசாயத்தை அபிவிருத்தி செய்வதிலும் தமது பூர்வீகர்கள்
செய்த அட்டூழியத்தால் ஜனங்கள் இழந்து போன ஸுகங்களையும்

ஸ்வதந்தரங்களையும் மறுபடியும் அவர்களுக்கு அளிப்பதிலும் ப்ரோஸிஷா தமது காலத்தைக்கழித்து வந்தனர்.

மேன்மை தங்கிய இச்சக்ரவர்த்தி ப்ரஜைகளின் க்ஷேமத்திற்காகக் கட்டி விடுத்த கோயில்களும் தோட்டங்களும், மான்யங்கள் கொடுத்து ஸ்தாபித்த பாடசாலைகளும், தர்மத்துக்கு இயற்றுவித்த சத்ரங்களும், சாவடிகளும், வைத்யசாலைகளும், கோரிகளும் அநேகமிருந்தன. ஜனங்களின் ஜல வசதிகளுக்கு அழகிய குளங்களும், கிணறுகளும் இவர் வெட்டிவைத்தனர். போக்குவரத்துக்களுக்கு 300 பாலங்கள் அமைத்தனர்; விவசாய வசதிகளுக்குவேண்டிய நன்மைகளைச் செய்தனர். முக்யமாக ஜம்னுநதி முதல் ஸாகர் நதி வரையில் இவர் ஒரு பெரிய கால்வாயை வெட்டினது மிகவும் குறிப்பிடத்தக்கது. ப்ரிட்டிஷ் அரசாக்ஷியார் அந்தக் கால்வாயை வர்ஷாவர்ஷம் பழுதுபார்த்து வருகின்றனர். 700 மைல் நீளமுள்ள ஒரு பெரிய ராஜபாதையைச் செப்பனிட்டனர். இவர் காலத்திற்கு முன் நிலங்களெல்லாம் ஒரு போகம் பயிர் செய்யப் பட்டு வந்தன. இவர் ஆட்சியில் அவைகளெல்லாம் இரு போகங்களாகமாறின. இந்தியாவில், மகம்மதிய ஆட்சிகாலத்தில், ஹிந்துக்களையும் மகம்மதியர்களையும் ஒன்றாகப் பாவித்து இருவகுப்பார்களுக்கும் உயர்ந்த நன்மைகளையும் ஸ்வதந்தரங்களையும் மனஸந்துஷ்டியுடன் கொடுத்த சக்ரவர்த்தி ப்ரோஸிஷா ஒருவரே தவிர வேறு ஒரு அரசருமில்லையென்று சொல்லலாம். இவரது ஆளுகையைச் சிறப்பிக்க இவர் செய்த நன்மைகளே போதுமானவை. இவருடைய நற்காரியங்களை அநேக சரித்ரக்காரர்கள் விரிவாக எழுதியுள்ளார்கள். இவர் ஒரு நாளும் நாசமில்லாத பெருங் கீர்த்தியைப்பெற்றனர்.

இவர் காலத்தில் இந்தியாவின் செழிப்பை அறிந்து வெளிதேச ஜனங்கள் ஏராளமாகவந்து குடியேறினார்கள். இவர் வெட்டின கால்வாய்களின் கரையோரமாக லக்ஷக்கணக்கான ஜனங்கள் வரிசையாக வீடுகளைக்கட்டிக் கொண்டு வசித்தார்கள், இவர் தாம் வெட்டிவித்த கால்வாய்களால் செழிப் படைந்து விளைந்த நிலங்களிலிருந்து பத்தில் ஒரு பங்கு தான் வாங்கிவந்தார். ஜனங்களிடம் வாங்கின பொருளையும் கூட ஜனங்களுக்காகவே செலவிட்டனர். மற்ற அரசர்களும், துருக்கி சுல்தானும் இவருடைய ராஜாங்க ஆளுகையின் ரீதியை அறிந்து, அதைத் தத்தம் நாட்டு ஜனங்களின் க்ஷேமத்தின்பொ



# LOPAMUDRA.

## லோபாமுத்ரா.

பூர்வம் வடஇந்தியாவில் விதர்ப்பதேசமென்ற ஒரு ராஜ்யமிருந்தது. இது அயோத்யாபுரிக்குத் தென்பாகத்திலிருந்ததாகத் தெரிய வருகிறது. விதர்ப்பதேசத்தை ஆண்டுவந்த அரசன் வெகு நீதிவான்; குணக்ஞன்; தயாளகுணமுடையவன்; மிகவும் பராக்ரமமுடையவன்; க்ஷத்ரிய அரசனுக்குவேண்டிய ஸகல குணங்களும் இவனிடத்தில் செவ்வையாய்ப் பொருந்தியிருந்தனவென்று சொல்லலாம். இப்படி ஸகல உத்தமகுணங்களும் ஸம்பத்துக்களும் கூடிய இவ்வரசனுக்கு ஏற்ற ஒரு தர்மபத்னி அமைந்திருந்தாள். இந்தத் தேவியார் மழைபெய் என்றால் பெய்யும்; காற்று வீசு என்றால் வீசும்; இப்படிப் பதிவ்ரதா சக்தியுடைய இந்த அம்மாள் புருஷனுக்கு ஏற்றத் துணையாக இருந்துவந்தாள். இந்தத் தர்மதம்பதிகள் தம் ராஜ்ய கார்யங்கள் கவனிக்குஞ் சமயம் போக, மற்றவேளைகளில் ஸதா ஈச்வரனையே துதித்துத் தம் ப்ரஜைகளின் க்ஷேமத்திற்கும் தங்களுடைய ஜன்மஸாபல்யத்திற்கும் உழைத்து வந்தார்கள். இவர்கள் எவ்வளவோ ஸுகங்களனுபவித்தாலும் ஸந்தான ஸுகமில்லாமல் வருந்தினார்கள். கடைசியாக அவர்கள் பக்தியை ஸர்வேச்வரன் கண்டு மனமிரங்கி ஒரு பெண் குழந்தையை அளித்தார். அருந்தவத்தால் பிறந்த இக்குழந்தைக்கு லோபாமுத்ரா என்று பெற்றோர்கள் பெயரிட்டார்கள். குழந்தை லோபாமுத்ரா பெற்றோர்களைப் போலவே ஸகல நற்குணங்களையும் அடைந்திருந்தாள். பரமஸௌந்தரியாகிய இக்குழந்தையைப் பெற்றோர்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். கல்வியிலும் புத்தியிலும், சரீர அழகிலும் தோழக்குழந்தைகள் யாவரையும் லோபாமுத்ரா மீறி இருந்தனள். பார்க்கிறவர்களுக்கெல்லாம் இவள் ஒரு அழகிய கண்காக்ஷியாகவே வளர்ந்துவந்தாள். அழகிலும், குணத்திலும் வயதிலும் ஏறக்குறைய ஸமமான நூறுபெண்கள் லோபாமுத்ராவுக்குத் தோழிகளாக இருந்தார்கள். நூறு தோழிகளுடன் குதூஹலமாக ஆடிப்பாடிக் காலம் கழித்து வந்த நமது கதாநாயகி லோபமுத்ரா பால்ய தசையைக் கடந்து யௌவன தசையடைந்து புஷ்டியாக வளர்ந்து வந்தாள்.

இவளுடைய ஸ்வபாவ குணம் மிகவும் மதிக்கத்தக்கது. இத்தகைய மாசற்ற ராஜகன்னிகையை அநேக தேச அரசர்கள் மோஹித்திருந்தனர். ஆனால், ப்ரதி அரசனும் இந்த ஸுசீலி தனக்குக் கிடைப்பாளோ வென்று ஏங்கியிருந்தான்.

முனிச்ரேஷ்டராகிய ஸ்ரீஅகஸ்த்தியர் லோபாமுத்ராவின் பால்யதசைமுதல் இவளுடைய குணத்தைக்கவனித்து வந்தவராகையால் தாம் இப்பெண்ணை மணந்து கொள்வதாகத் தீர்மானித்தார். இப்படி இருக்க, ஒரு நாள் ஸ்ரீ அகஸ்த்திய மஹாமுனி ராஜ ஸபை வந்து சேர்ந்தார். மஹாராஜா ஸ்ரீ அகஸ்த்தியருக்கு உபசரணைகள் செய்து அவரை ஆஸனத்தில் அமரும்படி வேண்டிக்கொண்டார். மஹாராஜா முநீஸ்வரரை நோக்கி "தாம் வந்த கார்யத்தைத் தெரிவித்தால் அதை உடன் செய்து முடிப்பேன்" என்று வாக்குறுதி செய்தார். ஸ்ரீஅகஸ்த்திய மஹாமுனி யோஜித்துத் தமது அபிப்ராயத்தை வெளியிடவே, மஹாராஜா திடுக்கிட்டு ஒன்றும் தெரியாமல் நின்றார். அரசருக்கு விசாரமும் ஆச்சர்யமும் பலமாக உண்டாயின. "ஆஹா! ப்ரபஞ்ச ஸுகங்களை விட்டு எப்பொழுதும் வனத்தில் ஸஞ்சாரம் செய்து கொண்டிருக்கும் இந்த ப்ராம்மண முனியை எனது பெண் லோபாமுத்ரா மணந்து கொள்ளுவாளோ என்னமோ தெரியவில்லையே! நான் என் செய்வேன், ஈச்வரா! எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே. இருக்கட்டும். நான் மஹாராணியையும் லோபாமுத்ராவையும் கண்டு யோஜிக்கவேண்டும்" என்று தனக்குள் நினைத்து ஸ்ரீ முனீச்வரரிடம் விடைபெற்றுக்கொண்டு அரசர் அந்தப்புரம் சென்றார். நடந்த விஷயங்களை மஹாராணியிடம் சொல்ல, தர்மதம்பதிகள் ஒன்றும் தோன்றாதவர்களாய் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்த வண்ணமாக விசனத்துடன் நின்று கொண்டிருந்தார்கள். நமது கதாநாயகிக்கு இவ்விஷயம் எப்படியோ தெரிய, தன் பெற்றோர்களிருக்கும் அரைக்குள் விரைவாக வந்தனள். பெற்றோர்களின் விசன முகக்குறிகளைப் பார்த்து, "அப்பா! எதற்காக விசாரப்படுகிறீர்கள். தங்களுக்கு விசாரம் வேண்டாம். நான் அந்த முனிச்ரேஷ்டரையே விவாஹம் செய்து கொள்ளுகிறேன். நான் பண்ணின பூர்வஜன்மாந்தர பலத்தால் இத்தகைய முனீச்வரர் என்னை விவாஹம் செய்து கொள்ள முன் வந்திருக்கிறார். இது ஒருவருக்கும் கிடைக்காத பாக்யம் எனக்குக் கிடைத்திருக்கிறது. தாங்கள் இதற்





OF THE REGISTRAR OF

காகக் கொஞ்சமேனும் என்னைப்பற்றி விசாரப்பட அவச்யமே கிடையாது. தாங்கள் செய்திருக்கும் புண்யபலத்தால் ப்ராஹ்மண முனிச்ரேஷ்டரை மாப்பிள்ளையாக அடையப்போகிறீர். நான் அவரையே விவாஹம் செய்துகொள்ளத்தீர்மானித்துவிட்டேன்" என்று சொல்ல, பெற்றோர்கள் பெண்ணின் தைர்யமான வார்த்தைகளுக்கு ஸந்தோஷித்துப் பெண்ணை உச்சி மோர்ந்து முத்தமிட்டார்கள்.

பிறகு, மஹாராஜா தாமதியாமல் மந்திரிமார்களை அழைத்துத் தமது பெண்ணின் கல்யாணத்துக்கு ஏற்பாடுகள் செய்யும்படி உத்தரவிட்டார். வெகு திவ்யமான சிங்காரப் பந்தலில் தேவர்களும் மற்றமுள்ள ரிஷிகளும் ராஜாக்களும் சூழ சுபமுகூர்த்தத்தில் வேதமுறைப்படி ஸ்ரீஅகஸ்த்திய முனீச்வரருக்கும் லோபாமுத்ராவுக்கும் விமரிசையாக விவாஹம் நடந்தேறியது. சில நாள் கழிந்த பிறகு, ஸ்ரீ அகஸ்த்தியர் கங்கைக் கரையிலுள்ள தமது ஆச்ரமத்தையடையப் புறப்பட்டார். லோபாமுத்ராவும் பெற்றோர்களையும், தோழிமார்களையும், மற்றுமுள்ளோர்களையும் விட்டுப் பிரிய மனமில்லாதவளாயிருந்தாலும் ஆடை ஆபரணங்களை கழற்றிவிட்டு நார்ப்புடவையைக் கட்டிக்கொண்டு ஸந்தோஷகரமாகவே எல்லோரிடம் விடைபெற்றுக்கொண்டு தனது புருஷருடன் புறப்பட்டுச்சென்றாள். தர்ம தம்பதிகளிருவரும் கடுமையான காட்டின் மத்தியே சென்று தங்களது ஆச்ரமத்தையடைந்தார்கள். ஸ்ரீ அகஸ்த்தியர் தமது பார்யயை உள்ளன்புடன் நேசித்து வந்தார். அதுபோலவே லோபாமுத்ராவும் தனது பதியின் சிச்ருஷையை தனது வாழ்க்கையின் லக்ஷ்யமாகக் கொண்டு நடந்துவந்தாள். சில வர்ஷகாலம் கழித்து லோபாமுத்ராவுக்கு ஒரு அருமைப் புத்ரன் ஜனித்தான். அவன் பெயர் த்ருச்யன். இவனும் தந்தையைப்போலவே தபஸியானான். ஸ்ரீ அகஸ்த்தியரும் லோபாமுத்ராவும் மோக்ஷ ஸாம்ப்ராஜ்யத்தையடைய தவம் செய்துகொண்டு காலத்தைக் கழித்து வந்தார்கள்.

நமது புராணங்களில் ஸ்ரீ அகஸ்த்திய முனீச்வரர் உயர்வாகக் கூறப்பட்டிருக்கின்றனர். ஸதாகாலம் நரமாம்ஸபக்ஷகனான வாதாபி என்னும் துஷ்டனை ஸ்ரீஅகஸ்த்தியர் ஸம்ஹாரம் செய்தார். ஸ்ரீக்ருஷ்ணபகவானே ஸ்ரீஅகஸ்த்தியரைப் பலதரம் ஸ்தோத்ரம் செய்திருக்கின்றாரென்றால் அவரது பெருமையை நாம் எப்படி எடுத்துரைப்

பது? ஒரு நாள் தேவர்களின் குருவாகிய ப்ரஹஸ்பதி பூலோகம் சேர்ந்து ஸ்ரீ அகஸ்த்தியரைப் பார்க்கச் சென்றார். முனீச்வரரின் ஆச்ரமத்தை யடைந்து ஸ்ரீ அகஸ்த்தியர் நிஷ்டையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறதைக் கண்டார். தேவகுருவாகிய ப்ரஹஸ்பதியைக் கண்டவுடன் லோபாமுத்ரா வேண்டிய உபசரணைகள் செய்து பணிந்துநிற்கும்போது " என் தாயே! தங்களுடையபுருஷராகிய முனீச்வரரும் தாங்களும் சௌக்யமாயிருக்கின்றீர்களா? புண்ணியப் பெண்களில் நீர் உத்தமி. ஸ்ரீ அருந்ததி, ஸாவித்ரி முதலான பதிவ்ரதா குணசீலிகளுக்கு நீர் ஸமானமானவர். ஸ்த்ரீகளுக்குரிய முக்கிய லக்ஷணமும் தர்மமும் பதிவ்ரதா தர்மமே. இதை எவள் ஒருவள் அனுஸரித்து நடந்து காட்டுகிறாளோ அவளும் அவள் பெயரும் உலகமுள்ளவரை யிருக்கும். இது தங்களுக்குத் தெரிந்ததே. ஸர்வேச்வரனின் அனுக்ரஹத்தால் தங்களுக்கு மங்களமுண்டாகும்" என்று ஆசீர்வதித்தார். நிஷ்டையிலிருந்து எழுந்துவந்த ஸ்ரீ அகஸ்த்திய முனியிடம் தாம் வந்த கார்யத்தைத் தெரிவித்து அதை ஸித்தி பெற்றுக்கொண்டு ப்ரஹஸ்பதி தமது இருப்பிடம் சென்றார். பிறகு, அகஸ்தியரும் லோபாமுத்ராவும் வெகுகாலம் ஸ்ரீ காசியில் வாசம் செய்து வந்தார்கள்.

பிறகு, இவர்கள் பாத சாரியாய் ஸகல இயற்கை வைபவங்களையும் பார்த்து, ஆனந்தித்துக் கொண்டும், புண்ணிய க்ஷேத்ரங்களில் தங்கி, ஈச்வர தரிசனம் செய்துகொண்டும் தென் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்கள். வரும்போது லோபா முத்ராவுக்குப் பரலோகஞானத்தை அகஸ்த்தியர் உபதேசம் செய்தார். இருவரும் துங்கபத்ரா, பினாகனி என்னும் இருநதிகளையும் கடந்து வரும்போது லோபாமுத்ரா அந்த இரு நதிகளின் வைபவங்களைத் தெரிவிக்கும்படி அகஸ்த்தியரைக் கேட்டாள். அப்போது அகஸ்த்தியர் ஸகலவைபவங்களையும் சாங்கோபாங்மாகச் சொல்லி லோபாமுத்ராவுக்கு ஞானோபதேசம் செய்தார். லோபாமுத்ரா உபதேசத்தைப் பெற்றுக்கொண்டு மோக்ஷ ஸாதனத்தை நாடிவந்தாள். அவர்கள் தென் இந்தியாவில் பொதிகை மலையடி வாரத்தில் தமது ஆச்ரமத்தை அமைத்துக் கொண்டு ஈச்வரத்யானத்தில் காலத்தைக் கழித்து வந்தார்கள். இந்த அரண்யத்தில் தான் ஸ்ரீராமபிரான் ஸீதா லக்ஷ்மண ஸஹிதமாக ஸ்ரீ அகஸ்த்தியரின் ஆச்ரமத்தை யடைந்து முனீச்வரரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார். லோபாமுத்ரா ஸ்ரீ சீதாதேவியாரின் பதிபக்தியைப் புகழ்ந்து அவரது நெற்றியில் குங்குமம் இட்டு ஆசீர்வாதம் செய்தாள். பின்பு, ரிஷிதம்பதிகள் ராம லக்ஷ்மண ஸீதையை பஞ்சவடி கிரத்துக்கு வழியனுப்பிவிட்டுத் தாம் பொதிகை மலையைத் தமது ஸ்த்ர ஆச்ரமமாக அமைத்துக்கொண்டு நிஷ்டை செய்து வந்தார்கள்.

---



ருட்டு பின்பற்றி வந்தார்கள். இம்மன்னர் தமது ஆளுகையில் கொலை தண்டனையை மாற்றி வேறு இலகுவான தண்டனையை ஏற்படுத்தினார். தமது ராஜ்யத்தில் சில அக்ரமமான உத்யோகஸ்தர்கள் ஜனங்களை இம்சை செய்து வரிவசூலிப்பதை மிகவும் வெறுத்தனர். இவரது நற்குணங்களையும் நற்செய்கைகளையும் கேள்விப்பட்டு அப்போது துருக்கியை ஆண்டுவந்த சுல்தான் சக்ரவர்த்தி இவருக்கு உபசாரக் கடிதங்கள் எழுதி, ஆடை ஆபரணங்களை யனுப்பி இவருடைய பெருமையையும் புகழையும் பாராட்டினர்.

இப்புண்ய சக்ரவர்த்தித் தமது ஆளுகையைப்பற்றித் தாமே சில தாமிர சாஸனங்கள் எழுதிவைத்தனர். சில சாஸனங்களில் பின் வருமாறு எழுதப்பட்டிருக்கின்றன. "முற்காலத்தில் அற்ப குற்றங்களுக்காக ஜனங்களின் கைகால்களை வெட்டுவதும் உயிரோடு தோலை உரிப்பதும், நகக்கண்களைப் பெயர்ப்பதும், உடலை சித்ரவதை செய்வதும் போன்ற கொடிய வழக்கங்களை நான் வெறுக்கிறேன். இந்த ராஜ்யத்துக்கு என்னை சக்ரவர்த்தியாக நியமித்துக் கடவுள் இக்கொடிய வழக்கங்களை உடனே மாற்றும்படி என்னைத் தூண்டுகிறார். எனக்கு முன் கொடூரமாக ஆண்ட என் பூர்வீகர்கள் கடவுளின் கோபத்துக்குப் பாத்ரர்களானார்கள். இப்போது எனக்கும் என் பின் வம்சத்தாருக்கும் க்ஷேமத்தைக் கொடுக்கும்படி கோவில்களிலும் மசூதிகளிலும் ப்ரார்த்திக்கின்ற என் ப்ரஜைகள் கருணை கூர்ந்து கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அதாவது, என் முன்னோர்கள் தங்கள் அரசாக்ஷியில் ஜனங்களுக்குச்செய்த அக்ரம பாபங்களைக் கடவுள் க்ஷமிக்கும்படி கோவில்களிலும் மசூதிகளிலும் பூஜை செய்யக்கோருகிறேன். ஜனங்கள் வெகுகஷ்டப்பட்டுக் கொடுத்து வரும் புறம்போக்கு வரிகளையும், பூ விற்பவர், மீன் விற்பவர் மது விற்பவர்போன்ற சில்லரைக்கடைக் காரர்களுக்கு விதிக்கப்பட்டவரிகளையும் தள்ளிவிடும்படி உத்திரவு செய்திருக்கிறேன். இனி, ஸர்க்கார் க்ரமநீதிப்படி வாங்கவேண்டிய வரிகளை மட்டும் வசூல் செய்ய ஆக்ஞை செய்திருக்கிறேன். யுத்தத்தில் கொள்ளை யிடப்பட்டவைகளில் ஐந்திலொரு பங்கு ஸைங்யங்களுக்கும், மற்ற நாலு பங்கு ஸர்க்காருக்கும் கொடுக்கப்படவேண்டுமென்று ஏற்பட்டிருந்ததை மாற்றி ஸைங்யங்களுக்கு நாலுபங்கும் ஸர்க்காருக்கு ஒரு பங்குமாக விதித்திருக்கிறேன்.

## ப்ரோஸிஷா சக்ரவர்த்தி.

தெய்வத்தை ஒப்புக்கொள்ளாத நாஸ்திகர்களையும், துன்மார்க்கங்களைப் பழக்கிவைப்பவர்களையும், லஞ்சம் வாங்குபவர்களையும், கொடுப்பவர்களையும் ராஜ்யத்தினின்று துறத்திவிடும்படி உத்திரவு பிறப்பித்திருக்கிறேன். நான் டாம்பீகமான உடைகளை இனிமேல் கட்டுவதில்லையென்று தீர்மானித்திருக்கிறேன். ஏனெனில், ஜனங்கள் என்னைக்கண்டு அனுவச்யமாக டாம்பீகமான உடைகளை தங்கள் சக்திக்கு மீறிவாங்குகிறார்கள். என்ராஜ்யத்தில் என்னால்கட்டப்பட்ட கோவில், மசூதி, சத்ரம், சாவடி, கிணறு, கால்வாய் முதலிய கட்டடங்களையும் என் முன்னோர்களால் கட்டிவிடப்பட்ட தர்ம கட்டடங்களையும் வர்ஷா வர்ஷம் பழுதுபார்த்து வரும்படி உத்தரவு செய்திருக்கிறேன். எனக்கு முன் அரசாண்ட மஹமத்பின் டோக்ளாக் அரசரால் அக்ரமமாகத் தண்டனை அடைந்து இறந்து போனவர்களின் பந்துக்களைக் கண்டு பிடித்து அவர்களுக்கு ஆயுள் பர்யந்தம் உபகாரச்சம்பளம் கொடுத்துவர ஏற்பாடு செய்திருக்கிறேன். எனக்கு முன்னால் அரசாக்ஷி புரிந்த அரசனை ஜனங்கள் முற்றிலும் மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். என் ராஜ்யத்திலுள்ள ஹிந்துபண்டிதர்களையும், மஹம்மதிய பண்டிதர்களையும் மஹாஞானவான்களையும் கண்டு தரிசித்து அவர்களின் ஆசிர்வாதத்தைப் பெற்றிருக்கிறேன். அதற்கு நன்றியறிதலாக அவர்களுக்கு மான்யங்கள் கொடுத்துவரும்படி ஆக்ஞைசெய்திருக்கிறேன். என் இராணுவத்தில் வயதினாலோ வ்யாதியினாலோ அசக்தர்களாக உள்ளவர்களுக்கு ஆயுள் பர்யந்தம் உபகாரச்சம்பளம் கொடுத்து வரும்படி ஆக்ஞை செய்திருக்கின்றேன். கடைசியாக ஹிந்துக்களாகட்டும் மஹம்மதியர்களாகட்டும் தங்கள் தங்கள் மதாசாரப்படி ஆசாரங்களை அனுஷ்டித்து வரவேண்டுமென்று பகிரங்கப் படுத்தியிருக்கிறேன். என் ப்ரஜைகளுக்கு யாதொரு வித்யாஸமில்லாமல் உயர்ந்த ஸௌகங்களையும் ஸ்வதந்திரங்களையும் கொடுத்து நான் ஈஸ்வராநுக்ரஹத்திற்குப் பாத்ரனாகவேண்டுமென்பது ஒன்றுதான் என் வாழ்க்கையின் லக்ஷ்யமாயிருக்கிறது. எந்தப் பயங்காளிகளோ என்னை இரண்டு நடவைகள் கொல்ல முயன்றார்கள். கடவுளை நான் மனப்பூர்வமாய் நம்பியிருந்தேன். ஆதலால், அப்பயங்காளிகளிடம் கடவுள் என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை.”

---

# THE YOUTH OF THE HEROES

By

**K. P. Seshadri Aiyangar**

(of the Madras Tamil Sangam.)

## கதாநாயகர்களின் பால்யம்.

ஹஸ்திநாபுரத்தில் த்ருதராஷ்ட்ரனுக்கு நூறு புத்ரர்களும் ஒரு புத்ரியும் ஜனித்தார்கள். அவர்களில் மூத்தவன் துர்யோதனன். அவன் பீமன் பிறந்த அன்றையத்தினமே பிறந்தான். ஆனால், அவன் ஜனிக்கும்போது அநேக அபசகுனங்கள் தோன்றின. அப்போது பூமி தேவியும் நடு நடுங்கினாள். இந்தத் துர்யோதனன் கௌரவ வம்சத்துக்குக் கதாநாயகன். பால்யமுதல் துர்யோதனன் வெகுபலமுடையவன்; தீரன்; மதவைராக்யம் கொண்டவன்; ராஜகுமாரர்களுக்குள்ள ஸகல தர்மங்களையுமுணர்ந்தவன். இவ்வளவு ஸத்குணங்களையுடையவனாயிருந்தும் அவனுக்கு ‘தான்’ என்னும் அகம்பாவம் அதிகமாயிருந்தது. ஸ்வயநலமே உருவாகப் பெற்றவன். பொறாமையும், அகங்காரமும் அவனை வெகு கஷ்டத்திற்குள்ளாக்கி அழித்தன.

துர்யோதனனைவிட தர்மன் மூத்தவனாகையால், அவனுக்குப் பட்டாபிஷேகம் பண்ணினார்கள். துர்யோதனன் இளவரசுபட்டம் பெற்றான். சில வர்ஷங்கள் கழிந்தன. பாண்டு புத்ரர்களும், கௌரவர்களும் பக்ஷமாகவிருந்து வந்தார்கள். பீமன் தன் பராக்ரமத்தினால் சில சேஷ்டைகள் செய்யலானான். சில பிள்ளைகளைக் குத்துவான்; பிள்ளைகள் மரத்தின்மீது ஏறியிருக்கும் தருணம் பார்த்து, அம்மரத்தைத் தன் பலங்கொண்டு அசைப்பான். மரத்தினின்று பழங்கள் உதிர்வதுபோல் பிள்ளைகள் கீழ் விழுவார்கள். இவ்வளவும் பால்ய சேஷ்டையே ஒழிய பொறாமையினால் செய்தவைகளல்ல. பாலர்கள் தங்கள் பலத்தைத் தெரியாத்தன்மையால் ப்ரயோகிப்பதால் அவர்களுக்கு எங்குப்பார்த்தாலும் விரோதிகள் ஏற்படுகின்றனர்.

பீமன் பலத்தைக் கண்டு துர்யோதனன் பொறாமை கொண்டான். எப்படியாவது பீமனைத் தொலைக்கவேண்டுமென்று தீர்மானி

த்துவிட்டான். துர்யோதனன் எப்பொழுது ஸமயம் வாய்க்கும் என்று காத்துக்கொண்டிருந்தான். அவன் கங்கைக்கரையில் லதாக்ருஹம் ஒன்று நிர்மாணம் செய்தான். ஸாயங்காலப்பொழுதை ஸந்தோஷமாகக் கழிக்கவரும்படி பாண்டவர்களைத் துர்யோதனன் அழைத்தான். ஸத்சந்தர்களான பாண்டவர்கள் வர ஸம்மதித்தார்கள். ஸாயங்காலமும் வந்துவிட்டது. யாவரும் லதாக்ருஹத்தை யடைந்தார்கள். துர்யோதனன் பீமனிடத்து மிகுந்த பக்ஷமுள்ளவன்போல் நடித்து, அவனுக்குத்தன்கையால் பக்ஷணம் கொடுத்தான். துர்யோதனன் அந்த பக்ஷணத்தில் முன்னதாகவே விஷம் கலந்திருந்தான். பிறகு, ராஜபுத்ரர்கள் எல்லாரும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். விஷத்தினுடைய சேஷ்டையைப் பொறுக்கமுடியாது பீமன் படுத்துக்கொண்டான். இவன் படுத்ததை யாரும் பார்க்கவில்லை. ஆனால், துர்யோதனன் மாத்ரம் பார்த்துவந்தான். பீமன் ப்ரக்ஞை தப்பினான். இதையறிந்த துர்யோதனன் கொடிகளினால் அவனைக்கட்டி கங்காநதியில் தொப்பென்று போட்டுவிட்டான். பீமன் மூழ்கி நாகலோகம் போய்ச் சேர்ந்தான். அங்குள்ள ஸர்ப்பங்கள் பீமனைக்கடித்தன. அப்படிக் கடித்தது பீமனை உயிர் பெற்று எழுந்திருக்கச் செய்தது. கண்விழித்ததும் ஸர்ப்பங்களைக் கொல்ல ஆரம்பித்தான். ஆகவே, அந்த நாகங்கள் எல்லாம் தங்களரசனான வாசுகியிடம் சென்று முறையிட்டன. பீமனுக்குத் தாய் வழியாக ஒரு நாகம் உறவு. அந்நாகத்தினுதவியால் பீமன் தேவாம்ருதத்தைப்பருகினான். அவன் முன்னிருந்த பலத்தைக் காட்டிலும் பல்லாயிர மடங்கதிகமான பலத்தை யடைந்தான். சில நாள் கழித்துப் பீமன் தன் ஸஹோதரர்களை அடைந்தான். துர்யோதனன் மீது வெகு கோபங் கொண்டிருந்தான். தர்மன், விதுரன் இவர்களின் புத்திமதியால் துர்யோதனன் மீது ஒரு பழியும் ஏற்படுத்தவில்லை. பாண்டவர்கள் துர்யோதனன் செய்யும் கெடுதிகளை யெல்லாம் பொறுத்துக்கொண்டே வந்தார்கள். அப்படிப் பொறுத்து வந்த காலத்தும் துர்யோதனன் பாண்டவர்களுக்குத் தீங்கையே தேடினவனாயிருந்தான். ஆனால், துர்யோதனன் செய்கைகளை ஒருவரும் லக்ஷியம் செய்யாமலிருந்தார்கள்.

நிற்க, ராஜகுமாரர்கள் ஸதா விளையாடிக் கொண்டிருக்கிறார்களென்று பீஷ்மர் அறிந்து அவர்கள் அஸ்த்ரப்பயிற்சிபெற த்ரோணா



சார்யர் என்ற ஒரு ப்ராமணரிடம் அனுப்பினார். இந்த த்ரோணாசார்யர் பாரத்வாஜ மஹரிஷியின் புத்ரர். இவரிடம் ராஜகுமாரர்கள் வில்வித்தைக் கற்றுவந்தார்கள். எல்லா ராஜபுத்ரர்களைவிட த்ரோணாசார்யருக்கு அர்ஜுனன் பேரில் ப்ரியம் அதிகம். ஏனென்றால் அவன் மஹாபுத்திமான். த்ரோணாசார்யரிடம் பலராஜபுத்ரர்கள் சிஷ்யர்களாக வர வெகு கஷ்டப்பட்டார்கள். ஒரு நாள், வேட ராஜன் புத்ரனான ஏகலவ்யன் த்ரோணரைக் குருவாகப் பெற எவ்வளவோ தரம் வேண்டினான். த்ரோணர் அவனை சிஷ்யனாக ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். ஏகலவ்யன் மிகவும் துக்கப்பட்டுக்கொண்டு த்ரோணர் பாதத்தில் நமஸ்கரித்து விட்டுத் தனது இருப்பிடம் சென்றான். த்ரோணரைப்போல ஒரு சிலை ஒன்று செய்துத் தன்னெதிரில் வைத்துத்தினந்தோறும் அச்சிலையை வணங்கி அஸ்த்ர பயிற்சி செய்துவந்தான். அர்ஜுனனுக்குக் கற்றுக்கொடுத்த எல்லா வித்தைகளையும் ஏகலவ்யன் தெரிந்து கொண்டான். ஒரு ஸமயம் ராஜபுத்ரர்கள் காட்டில் இருக்கும்பொழுது ஏகலவ்யன் தன் அஸ்த்ர பயிற்சியை அவர்களுக்குக் காட்டினான். அந்த ராஜபுத்ரர்கள் த்ரோணரிடம் சென்று தாங்கள் கண்டதைச் சொன்னார்கள். இதைக் கேட்டு த்ரோணர் அர்ஜுனனைக்கூட்டிக்கொண்டு காட்டினுள் அவனைப்பார்க்கச் சென்றார். இவர்கள் வருவதைக் கண்ட ஏகலவ்யன் வெகு ஸந்தோஷத்துடன் எதிர்கொண்டு த்ரோணர் பாதத்தில் நமஸ்கரித்து நின்றான். "ஹே! வீரா! நீ உண்மையாக என்னுடைய சிஷ்யனாகவிருக்கும் பக்ஷத்தில் என்னுடைய குருதக்ஷிணையைக்கொடு" என்றார். "ஸ்வாமி, என்னிடம் இருக்கும் எதை வேண்டுமானாலும் நான் கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன்" என்று விநயமாகப்பதில் சொன்னான். "ஹே!" ஏகலவ்யா! எதை வேண்டுமானாலும் கேட்கச் சொன்னாயல்லவா? எனக்கு உன் வலது கையின் பெரு விரலைக் கொடு. அதுவே நான் வேண்டுவது" என்று கேட்டார். வலது கைப் பெருவிரலைவேண்டுமென்று த்ரோணர் குருதக்ஷிணையாகக் கேட்டதை, ஏகலவ்யன் மனதில் கொஞ்சமாவது வெறுப்பில்லாமல் பூரணத்ருப்தியோடு ஸந்தோஷமாய்த் தன் வலது கைப்பெரு விரலை வெட்டி த்ரோணரிடம் ஸமர்ப்பித்தான். த்ரோணர் ஏகலவ்யனின் குருபக்தியை மிகவும் மெச்சி ஸந்தோஷத்

தேடு கொடுத்த தக்ஷிணையை வாங்கிக்கொண்டு சென்றார். ராஜகுமாரர்கள் தங்கள் பால்யத்தை வீணாக்காமல் அஸ்த்ரப்பயிற்சிகளிலும் மற்ற கலைகளிலும் நிபுணர்களாகி வளர்ந்து வந்தார்கள்.

சேஷாத்ரி அய்யங்கார்.

---

## PROF. KARVE'S VISIT.

## ப்ரொபஸர் கார்வே அவர்களின் விஜயம்.

புனாவில் ஸ்தாபிக்கப்போகும் "இந்திய ஸ்த்ரீகளின் யுனிவர்ஸிடி" ஸம்பந்தமாக ப்ரொபஸர் கார்வே அவர்கள் மார்ச்சு மீ 1-ம் உ சென்னைக்கு விஜயம் செய்தார். அப்போது, ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்தார் ப்ரொபஸர் அவர்களுக்கு மார்ச்சு மீ 5-ம் உ ஞாயிற்றுக்கிழமை மாலை 3-மணிக்குப் "பெண்கல்வி" பத்ரிகை ஆபிஸில் ஒரு விருந்து பண்ணி வைத்தார்கள். ஸ்த்ரீகளின் படிப்பு விஷயத்தில் தமது ஆயுளை த்யாகம் செய்து உழைத்து வரும் ப்ரொபஸர் கார்வே அவர்களைப்பார்த்து அவர் செய்யும் உபந்யாஸத்தைக் கேட்க வேண்டுமென்று சுமார் 150 ஸ்த்ரீகள் வரை வந்திருந்தனர். இடம் போதாமல் சில ஸ்த்ரீகள் வெளியே நிற்கும்படியாயிற்று.

ப்ரொபஸர் அவர்கள் ஸரியாக குறிப்பிட்ட நேரத்தில் வரவே, ஸமாஜ கார்யதரிசியும் "பெண்கல்வி"ப் பத்ரிகையின் அதிபருமாகிய ஸஹோதரி தாயாரம்மா அவர்களும், உதவிக்கார்யதரிசியாகிய சாந்தாநந்தமௌனி அம்மாளும் அவரை வரவேற்றினார்கள். பிறகு தெய்வ ப்ரார்த்தனை நடந்தது. ஸ்வாமி வித்யானந்தர் B. A., அவர்கள் அக்ராஸனம் வஹித்தார். அக்ராஸனாதிபதியின் ஆரம்ப ப்ரசங்கமானவுடன் மிஸ்டர் ஓ. கந்தசாமி செட்டியாரின் புத்ரியாகிய பி. எ. வகுப்பில் படிக்கும் ஸ்ரீமதி ஜீவம்மாள் அவர்கள் ஆங்கிலத்தில் ஒரு உபசாரவரவேற்பு பத்ரத்தை வாசித்து ப்ரொபஸர் கார்வே கையில் கொடுத்தார்.

பிறகு, ஸஹோதரி தாயாரம்மா தமிழில் ப்ரொபஸர் கார்வே அவர்களின் ஜீவ்ய சரித்ரத்தையும், ஸ்த்ரீகளின் படிப்புக்காக அவர் கொண்டுள்ள உழைப்பையும் மிகவும் எடுத்துப்பேசி, அவர் ப்ரசங்க

யாத்திரையின் லக்ஷ்யத்தையும் தெளிவாக எடுத்துச்சொன்னார். பிறகு ப்ரொபஸர் கார்வே அவர்கள் "ஸ்த்ரீகளின் கடமை" என்னும் விஷயமாகப் பேசினார். அதன் சுருக்கம் அடியில் வருமாறு :—

ஸஹோதரிகளே,

இந்த ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்திற்கு நான் விஜயம் செய்யும்படியான பாக்யம் எனக்குக் கிடைத்ததைப்பற்றி மிகவும் ஸந்தோஷப்படுகிறேன். இன்று நான் பேசக் கேட்டுக்கொண்ட விஷயமானது 'ஸ்த்ரீகளின் கடமை.' இவ்விஷயம் மிகவும் பெரிது. படித்த ஸ்த்ரீகள் படிக்காத தங்கள் ஸஹோதரிகளுக்குப் படிப்பைக் கற்றுக்கொடுக்கப் பலவழிகளில் முயற்சி செய்யவேண்டும். இது தான் அவர்களுடைய முக்கிய கடமைகளில் ஒன்று. நீங்கள் ஆசார சீர்திருத்த வேலைகளில் அக்கரைபாராட்ட வேண்டும். நீங்கள் படிக்கவேண்டிய சகல பாடங்களும் தேச பாஷைகளில் கற்பிக்கப் பட்டு வந்தால் தான் படிப்பு தாராளமாய் பரவும். இங்கிலீஷ் பாஷையைக் கட்டாயமான இரண்டாவது பாடமாகச் செய்விக்கவேண்டும். ஸ்த்ரீகள் உயர்தரபடிப்பைப் படிக்கவேண்டும். பால்ய விவாகஞ் செய்யும் வழக்கமானது, ஸ்த்ரீகளின் உயர்தரப்படிப்புக்குப் பெரிய தடையாக ஏற்பட்டிருக்கிறது. பூர்வகாலத்தில் பால்ய விவாகம் செய்து முடிக்கும் வழக்கம் ஏற்பட்டதற்குத் தகுந்த காரணங்கள் இருந்தன. காலச் சக்ரம் சுழன்று வரும்பொழுது, ஸகலமும் மாறுதல் அடையும் என்ற ஸித்தாந்தம் உண்மையே. இக்காலத்திற்கு, பால்யவிவாகம் செய்து முடிக்கும் வழக்கம் ப்ரயோஜனமற்றதாகும். பெண்களின் விவாக வயதை உயர்த்த வேண்டியது உங்களின் கடமை. பெண்களுக்கு உயர்தரப் படிப்புக்கு அவகாசம் கொடுக்கவேண்டுமானால், விவாக வயதை உயர்த்தாமல் இருப்பதற்கில்லை. ஆசார சீர்திருத்தத்தில் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பதை, நடவடிக்கையில் காட்டிவரவேண்டும். வாயால் சொல்லுவதில் மட்டும் ப்ரயோஜனமில்லை. பல நல்ல கார்யங்களில் புருஷர்களுடன் நீங்கள் சேர்ந்து உழைக்காமலிருப்பதற்குக் காரணம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் படிப்புக் குறைவேயாகும். நீங்கள் போதுமான அளவு படித்து வந்தால் இக்குறை நீங்கிவிடும்.

உலக நடவடிக்கையில் புருஷர்கள் அடைந்திருக்கும் நிலைமைக்கு நீங்கள் வராத வரை இந்தியா முன்னேற்றம் அடையாது. பெண் பாடசாலைகளில் ஸ்த்ரீ உபாத்திமார்கள் கிடைக்கிறதில்லையென்று எங்குப் பார்த்தாலும் கூச்சல் போடப்பட்டு வருகிறது. நீங்கள் உயர்தரப்படிப்பைப் படித்து வந்தால், பெண் பாடசாலையில் மட்டு மல்ல, ஆண் பிள்ளைகள் படிக்கும் ப்ரைமெரி பாடசாலைகளிலும் ஸ்த்ரீ உபாத்திமார்கள் வேண்டிய மட்டும் கிடைப்பார்கள் என்று ப்ரொபஸர் கார்வே பேசிவிட்டுத் தாம் புதிதாக ஸ்தாபிக்கப்போகும் ஸ்த்ரீகளின் யூனிவர்ஸிடியைப் பற்றி விஸ்தாரமாகப் பேசினார்.

பிறகு, சென்னையில் யாதொரு ஆடம்பரமில்லாமல் பெண்களின் படிப்புக்கும், ஜாதீய அபிவிருத்திக்கும் பாடுபட்டு வருகிற ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்தின் அபூர்வ வேலைகளைப் பற்றிப் பேசி, இந்த ஸமாஜத்திலிருந்து திக்கற்ற 19 ஸ்த்ரீ போர்டர்கள் உதவிச் சம்பளம் பெற்றுப் பாடசாலைகளிலும் ஆஸ்பத்திரிகளிலும் வாசித்து வருகிறதைப் புகழ்ந்து பேசினார். இந்த ஸ்த்ரீ ஸமாஜம் இனி ப்ரபல தசையை அடைந்து அனேக ஏழை ஸ்த்ரீகளுக்கு உதவி செய்ய ஈச்வரன் கருணை செய்வாரென்று சொல்லித் தமது ப்ரசங்கத்தை முடித்தார்.

---

# MAHASIVARATHRI AND ITS GREATNESS.

By

**Mr. P. V. JAGADISA AIYAR.**

## மஹாசிவராத்ரியும் அதன் மஹிமையும்.

சிவராத்ரியானது மஹாசிவராத்ரி, யோகசிவ்ராத்ரி, நித்யசிவராத்ரி பக்ஷசிவராத்ரி, மாஸசிவராத்ரி என்று ஐந்து வகைப்படும். மாசிமீ-க்ருஷ்ணபக்ஷம் சதுர்த்தசி இரவு மஹாசிவராத்ரியாகும். இதை வர்ஷ சிவராத்ரியென்றும் சொல்லுவார்கள். சிவராத்ரியன்று அமாவாஸை சேர்ந்தால் அதற்கு யோகசிவராத்ரியாகும். வர்ஷம் 12 மாதங்களிலும் வரும் க்ருஷ்ணபக்ஷம் சுக்லபக்ஷம் சதுர்த்தசி கூடிய இருபத்து நான்கு நாட்களும் நித்ய சிவராத்ரியாகும்.



தைமாதம் க்ருஷ்ண பக்ஷமுழுதும் பக்ஷசிவராத்ரியாகும். மாசிமீ க்ருஷ்ணபக்ஷம் சதுர்த்தசி, பங்குனிமீ சுக்லபக்ஷம், த்ருதியை சித்ரைமீ க்ருஷ்ணபக்ஷம் அஷ்டமி, வைகாசிமீ சுக்லபக்ஷம் அஷ்டமி, ஆனிமீ சுக்லபக்ஷம் சதுர்த்தசி, ஆடிமீ க்ருஷ்ணபக்ஷம் பஞ்சமி, ஆவணிமீ சுக்லபக்ஷம் அஷ்டமி, புரட்டாசிமீ சுக்லபக்ஷம் த்ரயோதசி, ஐப்பசிமீ சுக்லபக்ஷம் த்ரயோதசி, கார்த்திகைமீ சுக்லபக்ஷம் ஸப்தமி, க்ருஷ்ணபக்ஷம் அஷ்டமி மார்கழிமீ சுக்லபக்ஷம் சதுர்த்தசி, க்ருஷ்ணபக்ஷம் சதுர்த்தசி, தைமீ சுக்லபக்ஷம் த்ருதியை ஆகிய பதினான்கு நாட்களும் மாஸசிவராத்ரியாகும். ஸாதாரணமாய் ப்ரதிதினத்தின் பகல் சிவனுக்கும், இரவு பார்வதிக்கும் உரித்தானதாயிருந்தாலும் மாசிமீ க்ருஷ்ணபக்ஷம் சதுர்த்தசி இரவு மட்டும் சிவனுக்கு உரியதாயிற்று.

### வ்ரத அனுஷ்டானம்.

இந்த மஹாசிவராத்ரி வ்ரதத்தை அனுஷ்டிப்பவர் அதற்கு முதல் நாள் ஒரு வேளை தான் சாப்பிடவேண்டும். ஆசாரம் தவறாமலிருக்கவேண்டும். சுத்தமான இடத்தில் நித்ரை செய்யவேண்டும். மஹாசிவராத்ரியன்று விடியற் காலையில் எழுந்து புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சிவாலயதரிசனம் செய்ய வேண்டும். சாப்பிடக்கூடாது. ஸாயங்கால வேளையில் ஸ்நானம் செய்து அன்று ராத்ரி நான்கு ஜாமங்களும் சிவபூஜைசெய்யவேண்டும். மறுநாட்காலையில் புண்ணிய தீர்த்த ஸ்நானம் செய்து சிவாலய தரிசனம் செய்த பிறகு சாப்பிடவேண்டும்.

### இதன் வரலாறு.

முன்னொரு ஸமயம் கைலாஸபர்வதத்தில் பரமசிவன் ஐந்து முகமும் நான்கு கைகளும் மூன்று கண்களும் உடையவராய் சூலம் தரித்து வீற்றிருந்தார். அப்போது பார்வதி ஈச்வரனை வணங்கி ஸகலவிதமான வ்ரதங்களைக் காட்டிலும் மிகவும் மேலானதும் செல்வத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கக்கூடியதுமான ஒரு வ்ரதத்தைத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டார். இதற்குப் பரமசிவன் மனமிரங்கி "ஏ பார்வதி! நான் ஒருவருக்கும் இதுவரையிலும் சொல்லாததாயும் பரம ரஹஸ்யமாயுமிருப்பது இந்த மஹாசிவராத்ரி வ்ரதமே. கடோர தபோ பலத்தினாலும் பலவித புண்யதீர்த்த ஸ்நானத்தினு

லும் எவ்வளவு பலனுண்டாகுமோ அவ்வளவு பலன்கள் இந்தச் சிவராத்ரி வ்ரதம் ஒன்றினாலேயே யுண்டாகும். இதற்குச்சமானமான வ்ரதமே கிடையாது. இந்த வ்ரதத்தைத் தெரிந்து அனுஷ்டித்தாலும், தெரியாமல் அனுஷ்டித்தாலும் எவ்வளவு பாபியாயிருந்தாலும் அவர்கள் கைலாஸத்தை யடைவார்களென்பது நிச்சயம்.

ஏ பார்வதி! இதற்கு ஒரு கதை சொல்லுகிறேன் கேள். பூலோகத்தில் அவந்தி என்னும் பட்டணத்தில் ஒரு தீக்ஷிதர் இருந்தார். அவருக்கு ஸுநிதி, வேதநிதி என்ற இரண்டு குமாரர்கள் இருந்தனர். அவர்களில் இளையவனான வேதநிதி வேசி வீடே கதி என்று காலம் கழித்து வந்தான். ஒரு நாள் வீட்டிலிருந்து தகப்பனாரின் மோதிரத்தைத் திருடிக்கொண்டு வேசையிடம் கொடுத்து விட்டான். இந்த ஸங்கதி தீக்ஷதருக்குத் தெரியவந்தது. அவர் கோபமடைந்து வேதநிதி குல தூஷகன் என்று அவனை வீட்டை விட்டுத் துரத்தி விட்டார். இந்த விஷயத்தை வேதநிதி வேசையிடம் போய்ச் சொன்னான். அவள் வேதநிதி யிடம் பணமில்லாததைக் கண்டு தன் வீட்டுக்கு வரக்கூடாது என்றும் சொல்லி விட்டாள். வேதநிதி அன்று பகல் முழுவதும் பட்டினி. அவனுக்குச் சோறு போடுபவர் ஒருவருமில்லை. அவன் பசியால் வெகுக் கஷ்டப்பட்டான். கடைசியாக அன்று பாதி ராத்ரி சிவன் கோவிலுக்குள் நுழைந்து ஸ்வாமிக்கு நிவேதனம் செய்யப்பட்ட பலகாரங்களைத் திருடிச் சாப்பிடுவதாகத் தீர்மானித்து கோவிலுக்குள் நுழைந்தான். அவன் அதிர்ஷ்டம் அன்றைய தினம் மஹாசிவராத்ரியாகயிருந்தது. கோவில் காவற்காரர்கள் தூங்கின பிறகு அன்று இரவு முழுமையும் கண் விழித்து பலகாரங்களை ஏதேஷ்டமாகத் திருடி மூட்டைகட்டிக்கொண்டு வெளியில் ஓட முயன்றான். கோவில் காவற்காரர்கள் விழித்துக்கொண்டு பாணத்தினால் ஓடுகிறவனைப் பார்த்துச் சுட்டுவிட்டார்கள். விடிய விடிய கண் விழித்து பலகாரங்களைத் திருடின வேதநிதி உடன் இறந்தான். பிறகு அவன் கைலாஸ பதவி யடைந்தான். அவன் தெரியாத்தனத்தினாலேயே மஹா சிவராத்ரி யன்று ஆகாரமில்லாமல் கண் விழித்ததினால் மோக்ஷத்தை யடைந்தான். ஆகையால், பார்வதி! மஹா சிவராத்ரியின் வ்ரத மஹிமையை கவனித்துக்கொள்" என்று தெரிவித்தார்.

இந்த நாட்களில் புண்ய சிவக்ஷேத்ரங்களுக்குச் செல்வது ச்லாக்யமானதாகும். சில புண்யக்ஷேத்ரங்களை இங்குக் குறிப்பிடுகிறேன். ஸ்ரீகாளஹஸ்தி, சிதம்பரம், திருவண்ணாமலை, திருவானைக் கோவில், திருவாரூர், திருச்செங்கோடு, சங்கரநாயனார் கோவில், திருப்புகலூர், திருக்கழுக்குன்றம் முதலியஸ்தலங்கள் மிகவும் கொண்டாடப் பட்டிருக்கின்றன.

பி. வி. ஜகத்சய்யர்.

# ON GIRLS' FIGHT.

by

**SRI MANGALAM**

## சண்ட ப்ரசண்ட வாய்ச் சண்டை.

டணீங்! டணீங்! டணீங்! டணீங்! ஆ! ஆ! பாலிகா பாடசாலையில் விளையாட்டுமணி அடித்து விட்டது. உடனே பல ஆற்று வெள்ளங்களும் ஓர் கடலை அடைதல்போல், பல வகுப்புக்களிலுமிருந்து கும்பல் கும்பலாய், சிறுமியர்கள் இரைந்துகொண்டு, பாடசாலை விளையாட்டிடத்தை அடைந்தார்கள். அப்பொழுது முதல் வகுப்பில் வாசிக்கும் சந்திரவல்லி என்னும் ஒரு பெண் தாழ்வாரத்தி னொருபுறத்தி லிருந்துகொண்டு, தன்னிடக்கரத்திலொரு கற்பலகையை வைத்துக்கொண்டு தன் வலக்கையால் ஒரு புத்தகத்தைத் தாங்கி அதைக் கருத்தாக வாசித்துக்கொண்டிருந்தாள். இவ்வாறிருக்கச் சிறிது நேரத்திற்குப் பிறகு அவளோடு முதல் வகுப்பில் வாசிக்கும் ருக்மணி என்ற மற்றொரு பெண் அவளருகே வர அவ்விருவருக்கும் பின் வருமாறு ஸம்பாஷணை நடந்தது.

ருக்மணி—சந்திரவல்லி! உன் பலகையை என்னிடம் கொஞ்ச நேரம்கொடுத்து வைக்கிறாயா? நான் ஒரு கோலம் போட்டுப் பார்க்கவேண்டும்.

சந்திரவல்லி—ஏன்! உன் பலகை எங்கே?

ருக்—என் பலகையை என் தம்பி ராதாகிருஷ்ணன் உடைத்து விட்டான்.

சங்—உன் தம்பி உடைத்தாலெனக்கென்ன! நீதான் கோலம் போட்டு விர்த்தியாகவேண்டுமோ? நான் கோலம் போட வேண்டாமோ?

ருக்—நீ இப்பொழுது பூகோளந்தானே வாசித்துக் கொண்டிருக்கிறாய்?

சங்—வாசித்தாலென்ன! வாசித்து விட்டுக் கோலம் போட மாட்டேனோ?

ருக்—நீ வாசித்து முடிக்கிற வரையில் நான் கோலம் போட்டுக் கொண்டிருக்கிறேன்.

சங்—அடி ருக்கு! ஏது! கொடுத்து வைத்தவள்போல் வாதாடுகிறாயோ? கொடுக்கமாட்டேனென்றால் அதற்கு மேல் என்ன பேச்சு?

ருக்—இல்லடியம்மா! நீ கொடுக்க மாட்டேனென்று அப்போதே சொல்லியிருந்தால் இவ்வளவு பேச்சுத்தான், நான் உன்னோடு ஏன் பேசப் போகிறேன்?

சந்—என்னடி என்னை ஒரு பார்வை பார்க்கிறாய்! நான் நகை போட்டிருக்கிறேனென்று, உனக்குப் பொறாமையாயிருக்கிறதோடி?

ருக்—உனக்கு நகையிருந்தால், அது உன் மட்டுக்குத்தான், நான் பலகை கேட்க வந்தேனேயொழிய, உன் நகையைப் பார்த்துப் பொறாமைப்பட வரவில்லையடி.

சந்—அதிகமாய்ப் பேசாதடி! உன் குணம் எனக்கு வெகு நாளாய்த் தெரியும்.

ருக்—என்னடி என் குணம் உனக்குத் தெரியும?

சந்—சரிதாண்டி! என் பலகையை உன்னிடம் கொடுத்துவிட்டு நான் வானத்தைப் பார்த்துக் கொண்டிருப்பேனென்றெண்ணினாயோ? நான் அவ்வளவு ஏமாந்தவளல்லடி!

ருக்—அப்படியானால் என்னைத் திருடி என்று சொல்லுகிறாயோ?

சந்—தடையென்ன அதை ஸ்பஷ்டமாய்ச் சொல்ல வேண்டுமோ?

ருக்—(இதழ் துடிக்க) அடி பாதகி! நான்-நான்-நான்-நான் எத்தனை தரமடி திருடினேன் உன் சொத்தை?

சந்—என் சொத்தைத் திருடாவிட்டாலும் வேறு யாருடைய சொத்தையாவது திருடியிருப்பாய்.

ருக்—அப்படி யாருடைய சொத்தையடி திருடினேன், சொல் பார்ப்போம்.

சந்—இது வரையில் நீ திருடாவிட்டாலும் இனி மேலேனும் திருட மாட்டாயோ? உன் வாய்த் திறமையை என்னிடம் காட்ட வேண்டாம்.

ருக்—நீதாண்டி உன் வாய்த் திறமையைக் காட்டுகிறாய். நான் உன்னிடம் பலகை கேட்கவந்தால், நீதாண்டி வலிய என்னைச் சண்டைக்கிழுத்தாய்.

சந்—ருக்மணி யம்மா! உங்களோடு வாயாட, என்னால் முடியாது. தயவு செய்து என்னை விட்டுப் போவாய், உங்களைப்போல் வாயாடிகளாகிய அமிர்தாம்பிகையைப் போலொத்த வாயாடிகளிடம், உங்கள் வாய்களைப்பேசுங்கள். என்னிடத்தில்.—

இவ்வாறு சந்திரவல்லி சொல்லிக்கொண்டிருக்கும்பொழுதே, அவளருகே சென்று கொண்டிருந்த அமிர்தாம்பிகை என்ற பெண்ணும், சண்ட ப்ரசண்ட வாய்ச் சண்டையில் தனக்கும் ஒரு பங்கெடுத்துக் கொள்ளுகிறாள்.



அமிர்தாம்பிகை—யாரடி கம்மென்றிருக்கிற அமிர்தாம்பிகை பேச்சை எடுத்தது? என்னை வாயாடியென்று சொன்ன வாயிலுள்ள பல் முப்பத்திரண்டையும் தட்டிக் கையில் கொடுத்தனுப்பியிருப்பேன். நீ வக்கீல் பெண்ணென்றுதான்விட்டேன். இனிமேல் ஜாக்ரதை! ஹங்ஹாங்! இனி ஏதாவது பேசுவாயானால், அடி சந்தி! உன்னை சந்தியில் இழுத்து நாலுபேர் சிரிக்கும்படி செய்துவிடுவேன். ஜாக்ரதை!

ருக்—அமிர்தம்! இந்தப் பாதகி என்னைப் பேசின அவதூறான வார்த்தைகளைக் கேட்டாயா? நான் பலகை கேட்டதுதான் குற்றமடி. ஏன்னடி வக்கீல் பெண்ணென்றால் உயர்வோ? நீ சொன்னபடி அப்போதே பல்லைத்தட்டிக் கொடுத்திருந்தால் இந்நேரம் என் ஆத்ரம் அடங்கியிருக்கும்.

அமிர்—சரிதாண்டி! நீ உன் அழகினாலும் பசப்பான பேச்சினாலும என்னை வசப்படுத்திக் கொள்ளலாமென்றெண்ணினாயோ? அப்படிஎண்ணாதே. ஒருக்காலும் எண்ணாதே. ஏ ருக்குமணி! அழகுமணி! ஏ நவமணி! நான் உனக்காகப் பேசவந்தவளல்லடி.

ருக்மணி யாதொன்றும் பேசாதிருந்தனள். அவள் நீல விழிகளிலிருந்து துளி துளியாக ஜலம் பொங்கி வழிந்துகொண்டிருந்தது.

இம்மொழிகளனைத்தையுங் கேட்டுக்கொண்டு தன்கண்ணைத் துடைத்துக்கொண்டு நின்றாள். அமிர்தாம்பிகை பேச்சு முடிந்தவுடன், சந்திரவல்லி கொல்லென, குடல் குலுங்கச்சிரித்தனள், அப்போது அவளை நோக்கி.

அமிர்—நீ ஏண்டி சிரிக்கிறாய்? உனக்கும் பட்டங்கள் கொடுக்கிறேன், ஏ சந்திரவல்லி! ஏ தந்திரவல்லீ ஏ! சித்ரவல்லீ! ஏ தரித்ரவல்லீ—

அமிர்தாம்பிகை இவ்வாறு சொல்லும்பொழுதே, சந்திரவல்லியும் ஏதோ முணுமுணுத்தாள்.

அமிர்—அடிசந்தி! என்னடி முணுமுணுக்கிறாய். நானும் ருக்மணியைப்போல் ஏமாந்தவளல்ல. ஏ நாரமந்திரவல்லி! ஏ தரித்ரவல்லி! ஏ குரங்குவல்லி! இப்படியாக எவ்வளவோ வல்லிப்பட்டங்கள் கொடுத்து வந்தாள். இந்தஸமயத்தில் டணீங்! டணீங்! டணீங் என்று மணி அடித்தவுடன் பேச்சை நிறுத்திவிட்டு அவரவர் வகுப்புக்குள் போய்ச் சேர்ந்தார்கள்.—மடவார்தோழி.

மங்களம்.

*Interesting Items.*

I

## CONCERNING CHILDREN.

## குழந்தைகள் விஷயம்.

**Stammering Children.**

**திக்கிப்பேசும் குழந்தைகள்:—** குழந்தைகளை வளர்க்கும்போது பெற்றோர்கள் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. குழந்தைகள் திக்கிப் பேசுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. இதை நாம் உடன் தடுக்க முடியாது. வெகு வருஷங்கள் செல்லும். இதற்கு முக்ய காரணம் குழந்தைகளின் நரம்புத்தளர்ச்சியே தவிர வேறு ஒன்றுமில்லை. நரம்புத்தளர்ச்சியினால் திக்கிப்பேசும் குழந்தைகள் வார்த்தைகளை வெளியிட்டுப் பேச முடியாது. பேசும்போது வெகு அவசரத்துடன் வார்த்தைகள் வரும். நாம் இதை ஜாக்ரதையாய் கவனித்துக்கொண்டு திக்கிப்பேசும் குழந்தைகள் அவசரப்பட்டு மிகுந்த ஆவலுடன் பேச ஆரம்பிக்கிறபோது நிறுத்தி அவர்களை மெதுவாகப் பேசும்படி செய்யவேண்டும். தனியான இடத்தில் உட்கார்ந்துகொண்டு மெதுவாக நிறுத்தி வாசிக்கச்சொல்லவேண்டும். திக்கிப்பேசும் குழந்தைகளை இப்படி பழக்கிவந்தால் வெகு குணமுண்டாகும்.

**Perambulator.**

**குழந்தைகளை உட்காரவைத்து கையால் தள்ளும் வண்டி:—** இந்த வண்டியை ஸாதாரணமாய் பட்டணவாசங்களிலுள்ள ப்ரதி ப்ரபுக்கள் வீட்டிலும் நாம் காணலாம். இவ்வண்டியை வாங்குகிறதின் நோக்கம் குழந்தையை காற்றோட்டமான இடங்களுக்கு இதில் உட்காரவைத்து தள்ளிக்கொண்டு போவதற்காகவென்று தெரிகிறது. குழந்தையை இந்தமாதிரி வண்டியில் தனியே உட்காரவைத்துத் தள்ளிக்கொண்டு போவதினால் அதற்குப்பல வியாதிகள் உண்டாகின்றன. குழந்தையை வண்டியில் வைத்துக் கையால் தள்ளும்போது வண்டியின் ஆட்டத்தினால் அக்குழந்தை பயப்படுகிறது. அதற்குப் பக்கத்தில் பிடித்துக்கொள்ள ஸரியானபடி ஒரு ஆதாரமும் இல்லாமையால் குழந்தை தன் கைகளை கீழே ஊன்றிக்கொள்ளுகிறது. அதனால் முதுகு கூனல் ஸஹஜமாக ஏற்படும். சில ஸமயங்களில் காற்று ஒரே நிதானமாக அடிக்கிறதில்லை. காற்று வேகமாக அடித்தால் குழந்தைக்கு தேக அசௌக்கியம் ஏற்படுகிறது. மேலும் வண்டி தள்ளப் படுவதனால் குழந்தையின் தேகத்துக்கு வலி உண்டாகிறது. ஆகவே, பெற்றோர்கள் இது விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். குழந்தைக்கு இந்த வண்டிகளெல்லாம் ஆபத்தானவைகளாகயிருக்கின்றன.

**School going children.**

**பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் குழந்தைகள்:—** பள்ளிக்கூடத்தில் படிப்பதற்கு ஏற்ற வயதுள்ள குழந்தைகளிலே 1873-ம் வருஷத்தில் 100க்கு 28-பேர் ஜப்பானில் ஆரம்பப் படிப்பு பெற்றுவந்தார்கள். 1903-ம் வருஷத்திலோ அத்தேசத்திலே பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் குழந்தைகளின் தொகையானது 100-க்கு 90 ஆக உயர்ந்து விட்டது. இந்தியாவிலோவென்றால், 100-க்கு சுமார் 20 குழந்தைகளே பள்ளிக்கூடங்களில் படித்து வருகின்றனர்.



II

## DOMESTIC HINTS AND SUGGESTIONS.

## க்ருகத்தியக் குறிப்புகள்.

**Hints on health.**

**தேகாரோக்கியக் குறிப்புகள்:—** நாம் புசிக்கும் எல்லாகாய்களைக் காட்டிலும் பெரும் பூஷணிக்காய் சரீரத்துக்கு ஆரோக்யமானது. 2. பசியை வசமாக்கிக் கொண்டால் காமக்ரோதங்களை ஜெயிக்கலாம். 3. த்ருப்தியை உத்ஸாகம், தைர்யம்முதலியவை ஆயுள் விருத்தியைக் கொடுக்கும் 4. ஈர வஸ்த்ரத்தைக் கட்டிக் கொண்டால் சரீர ஸுகம் கெடும் 5. ரோகியின் படுக்கையை தினந்தோறும் வெய்யலில் உலர்த்தி எடுத்துவந்தால் ரோகம் சீக்ரம் போகும் 6. தித்திப்பாயுள்ள பழங்களை உபயோகித்தால் ரத்த விருத்தியுண்டாகும். 7 ப்ரதி தினம் விடியற் காலையில் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்து வந்தால் ஞாபக சக்தி விருத்தி யடையும். 8. அடிக்கடி ஸமுத்ரஸ்நானம் செய்தல் சரீரத்துக்கு ஆரோக்யம் 9. போஜன காலத்தில் ஜாஸ்தியாக வெந்நீர் குடித்தால் ஜீர்ணகோசம் கெட்டுப்போகும். 10 தீர்க்க காலம் ஜீவிப்பதற்கு மிதமாக ஆகாரம் சாப்பிட வேண்டும்.

**The Value of vegetable diet.**

**மரக்கறி சாப்பாட்டின் உபயோகம்:—** லண்டனிலுள்ள ஒரு சங்கத்தார் 100, குழந்தைகளுக்கு மரக்கறி ஆகாரமும் வேறு 100, குழந்தைகளுக்கு மாம்ஸ ஆகாரமும் கொடுத்து வந்தார்களாம். இப்படி ஆறு மாதம் கழிந்த பிறகு இந்த இருநூறு குழந்தைகளையும் பரீக்ஷித்துப் பார்த்ததில் மரக்கரி ஆகாரம் சாப்பிட்டு வந்த 100 குழந்தைகளும் புஷ்டியுடன் புத்திசாலி களாக இருந்தார்களாம். மாம்ஸ ஆகாரம் சாப்பிட்டு வந்த 100 குழந்தைகள் புத்தியில் மந்த மாயும் மூர்க்கமாயுமிருந்தார்களாம். இதனால் மரக்கரி ஆகாரம் உத்தமமென்று மேனாட்டார்களும் முறையிடுகிறார்கள்.

**Lime for Consumption.**

**க்ஷயரோகத்துக்கு எலுமிச்சம் பழம்:—** க்ஷயரோகத்தால் கஷ்டப்படுகிறவர்கள் எலுமிச்சம்பழ ரஸத்தைச் சாப்பிட்டுவந்தால் குணமடைவார்களென்று ஒரு டாக்டர் தெரிவிக்கிறார். அதைத் தயார் செய்து சாப்பிடும் முறை பின் வருமாறு. 12 எலுமிச்சம் பழங்களை அறுக்காமல் முழுசாக குளிர்ந்த ஜலத்தில்போட்டு கொதிக்கவைத்து ஸுமாராய் வெந்து மிருதுவாய்ப் போனவுடன், பழங்களை எடுத்து நசுக்கி சாறு முழுவதையும் பிழிந்தெடுத்து, அதில், குடிக்க ருசியாயிருப்பதற்கு வேண்டிய அளவு சர்க்கரையை கலந்து குடித்துவிடவேண்டும். தினந்தோறும் 12 பழத்துக்குக் குறையாமல் உபயோகிக்க வேண்டும். அதனால் தேகத்தில் வலியாவது, அதிக மலப்ரவிருத்தியாவது உண்டானால், பழங்களைக் குறைவாய் உபயோகிக்கலாம். மேற் சொன்ன கோளாறுகள் நீங்கும் வரையில் தினந்தோறும் ஐந்தாறு பழங்கள் சாப்பிடலாம். 60-அல்லது 70-பழங்கள் உபயோகித்தவுடன் நோயாளிக்கு தேக பலம் அதிகரிப்பதோடு, பசி தீபனமும் உண்டாகும். வரவர க்ஷயரோகம் குறைவடையும். சௌக்கியமாக ஆக பழங்களின் தொகையை குறைத்துக் கொண்டு வரலாம். வியாதி முற்றின இரண்டு க்ஷயரோகிகளை உயர்ந்த வைத்தியம் பார்த்து வந்ததில் வைத்தியர்கள் கைவிட்டு விட்டார்கள். அவர்கள் மேற்சொன்ன முறைப்படி செய்துவந்ததில் சீக்ரம் சௌக்கியமடைந்தார்களாம்.—விவேகபானு.

## III

# KITCHEN AND COOKERY.

## சமையலறையும் சமையலும்.

### Kalavai vadam.

கலவை வடாம்:—நெற்பொரி ½-படி; அவல் ½-படி; முட்டைப்பொரி ½-படி-இம்மூன்றையும் கொஞ்சநேரம் ஜலத்தில் ஊறவைத்து ஜலத்தை வடித்து ஈயம் பூசின பாத்ரத்தில் எடுத்துக்கொள்ளவும். அவற்றோடு நறுக்கின பச்சைமிளகாய் 1-பலம்; நறுக்கின கொத்துமல்லி 1-பலம்; அரிசிபோல் நறுக்கின வாழைத்தண்டு 2-பலம்; பூசனிக்காய்த் துருவல் 3-பலம்; தோலெடுத்த எள் 6-பலம்; காப்ரபொடி 2-பலம்-இவற்றை யெல்லாம் சேர்த்து கொஞ்சம் சுத்த ஜலத்தை விட்டுப் பிசைந்து வடாமிட்டு உலர்த்தி உபயோகிக்க வேண்டியது.

பூசணிக்காய் கருவடாம்:—கால்படி வெண்மையான உளுத்தம் பருப்பை ஜலத்தில் ஊறவைக்கவேண்டியது. அப்பொழுதே, பெரும் பூசணிக்காயைத் துருவி 10-பலம் எடுத்து ஓர் துணியில் மூடிப்புக்கட்டி ஒரு பலகையின்மேல் வைத்து அதன் மேலே ஒரு பலகையை வைத்து அதன் மேல் பளுவுபோட்டு வைக்கவேண்டியது. மறுநாள் ஷை பருப்பை வெண்ணெய்போல் அரைத்து, அதனோடு பூசனிக்காய்த் துருவலைச் சேர்த்து கலந்துகொள்ள வேண்டும். ஒரு பலம் மிளகாய், அரையரைக்கால் பலம் காயம், ஒன்றரைப்பலம் உப்பு இம்மூன்று வஸ்துக்களையும் இடித்து அரைக்கால் பலம் சீரகத்தையும், பொடியாய் நறுக்கிய அரைபலம் பச்சை மிளகாயையும் சேர்த்து எல்லாவற்றையும் மேற்படி பூசணிக்காய்த் துருவல் கலந்த மாவில் போட்டு செம்மையாய் அரைத்து முன் கூறியுள்ளபடி வடாமிட்டு உபயோகிக்க வேண்டியது. இந்த வடாத்தைப் பொரித்து கூட்டு குழம்புகளிலும் உபயோகிப்பதுண்டு.

### Mangoe pickles.

வெந்தய மாங்காய்:—நன்றாய் முத்தின புளிப்புள்ள பெரிய 100-மாங்காய்களை யெடுத்து, அவற்றில் ஒவ்வொன்றையும் எட்டுத் துண்டுகளாக கொட்டை யோடு வெட்டி, கொஞ்சம் சுத்த ஜலத்திற் போட்டு நன்றாகக் கழுவி எடுத்து ஒரு தட்டில் வைத்துக்கொள்ளவேண்டும். ஒரு வீசை மிளகாய், 7½-பலம் மஞ்சள், இரண்டரைபடி உப்பு இம்மூன்றையும் நன்றாக உலர்த்தி வெவ்வேறாக குங்குமம் போல் பொடி செய்து வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு பலம் நல்லெண்ணெயில் 8-பலம் வெந்தயத்தைச் சிவக்க வறுத்துக்கொண்டு அதனோடு 2 பலம் காயத்தைப்போட்டு இடித்து பொடியாக்கி மேலேசொல்லிய மூன்றுவிதப் பொடிகளுடன் சேர்த்து ஈயம் பூசின தாம்பாளத்தில் போடவேண்டும். அதில் அரை வீசை நல்லெள்ளெண்ணெயை ஊற்றி நன்றாகக் கலந்து வைத்துக்கொண்டு, மாங்காய்த் துண்டுகளைச் சிற்சிலவாக எடுத்து காரத்தை நன்றாகக் கலந்து கற்சட்டியிலோ ஜாடியிலோ போட்டு அதின் வாயை துணியினால் மூடி, மேலே பளுவானதோர் பலகையையாவது பாத்திரத்தையாவது வைக்க வேண்டும். மூன்று நாள்களுக்கப்பால் கிளறிக்கொடுத்து குலுக்கி வைத்து பத்து நாள்களுக்கப்பால் உபயோகிக்கலாம். இந்த ஊறுகாயை கையால் தொடாமலிருந்தால் நன்றாயிருக்கும்.



## IV

# VIEWS AND REVIEWS.

## அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்

### Unmarried women in America.

அமெரிக்காவில் கல்யாணமாகாதவர்கள்: ஸமீபத்தில் வெளியான ஸென்ஸ் ரிபோர்ட்படி அமெரிக்காவில் 85 லக்ஷம் புருஷர்களும் 95 லக்ஷம் ஸ்திரீகளும் கல்யாணமில்லாதவர்களாயிருக்கிறார்களாம். புருஷர்களில் 18 வயதுக்கு மேற்பட்டு 44 வயதுக்குட்பட்டவர்களின் கணக்கு 75½ லக்ஷமாம். ஸ்த்ரீகளில் எல்லோரும் 15 வயதுக்கு மேற்பட்டவர்களாம் அமெரிக்காவில் ஸ்த்ரீபுருஷர்களின் நிலைமை யானது கவர்ன்மெண்டாருக்குக் கவலைக்கிடமாயிருக்கிறதாம். இந்த உலகயுத்தம் அமெரிக்கர்களுக்கு ஒரு பெரிய பாடத்தைக் கற்றுக் கொடுத்து வருகிறதாம். ஸமீபத்தில் ஸ்த்ரீகளும் புருஷர்களும் விவாகம் செய்து கொள்ளவேண்டுமென்று ஒரு கட்டாயச் சட்டம் ஏற்படுத்தப் போகிறார்களென்று தெரிகிறது.— அமெரிக்கன் ந்யூஸ்.

### Prof. Karve.

ப்ரொபஸர் கர்வே:— இவர் புனாவில் ஸ்தாபிக்கப் போகும் ஸ்த்ரீ யுனிவர்ஸிடியில் மதப்படிப்பையும் ஒரு பாடமாக வைப்பாரோ வென்று சந்தேகம் ஜனிக்கிறது. ஆனால் அவர் ஸ்த்ரீ யுனிவர்ஸிடி உபந்யாசத்தில் மதபடிப்பைப் பற்றி ப்ரஸ்தாபம் செய்யாதது விசனமாயிருக்கிறது.— ஒரு நிருபர்.

### Indian Steel Trunk Factory.

நாகப்பட்டணம் ஸ்டீல் ட்ரங்பாக்டரி:—தென்னிந்தியாவில் மேற்கண்ட தொழிற்சாலை சிலவர்ஷங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டு செவ்வையாக நடந்து வருகிறது. இத்தொழிற்சாலையில் உயர்ந்த ஸ்டீல் தகடுகளால் அழுத்தமான ட்ரங்குகளும் தபால் பெட்டிகளும் நகைப்பெட்டிகளும் செய்யப்படுகின்றன. வெகு வர்ஷகாலம் நீடிக்கக்கூடியப் பித்தளைப் பூட்டுகளும் செய்யப்படுகின்றன. இக்கம்பெனியில் செய்யப்படும் பூட்டுகளும் பெட்டிகளும் உறுதியிலும் அழுத்தத்திலும் இங்கிலீஷ் பெட்டிகளுக்கும் பூட்டுகளுக்கும் ஒருவிதத்திலும் தாழ்ந்தவைகளல்ல வென்பது இக்கம்பெனியிலிருந்து பெட்டிகள் வாங்கினவர்களுக்கு நன்றாய்த் தெரியும். இக்கம்பெனியார் உயர்ந்த மெடல்களும் நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்றிருக்கிறார்கள். இத்தொழிற் சாலையை கனவான்கள் ஆதரிப்பது அவசியம்.

### First aid in accidents.

ஆபத்துகளிற் செய்ய வேண்டிய முதல் உதவி:—இப்புத்தகம் சென்னையில் ப்ரபலமாக வைத்யம் செய்துவரும் டாக்டர் யு. ராமராவ் அவர்களால் எழுதப்பெற்று சென்னை ஆர். வெங்கடேச்வர் கம்பெனியில் அச்சிடப் பெற்றது. இதன் விலை அணா 8. ஆபத்துக்காலத்திலும் ஸாதாரண காலத்திலும் நோயாளிகளுக்கு ஸ்த்ரீ புருஷர்கள் செய்யவேண்டிய சிச்ருஷைகளைப்பற்றியும் காயம்பட்டவர்களுக்குச் செய்யவேண்டிய முதல் உதவியைப்பற்றியும் இப்புஸ்தகத்தில் விரிவாக ஆசிரியர் விளக்கியிருக்கிறார். மானிடர்களின் கஷ்டங்களைப்போக்க விரும்பும் ஜீவகாருண்ய ஸ்த்ரீ புருஷர்களுக்கு இப்புத்தகம் வெகு உபகாரமாயிருக்கும். இப்புத்தகத்தை வெகு ப்ரயாஸைகள் எடுத்து 125 படங்களுடன் வெளியிட்டிருக்கிறார். புஸ்தகம் வேண்டுவோர்கள் ஸ்ரீ கிருஷ்ணன் பிரதர்ஸ் தம்புசெட்டி தெரு சென்னை ஈ, என்று எழுதவும்.

# WOMAN'S WORLD.

## ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

**Sri Ethiraja Vallithayar.**

ஸ்ரீமதி எதிராஜவல்லித்தாயார் ஸ்ரீரங்கம் "பிரஜானுகூலன்" பத்ராதிபராகிய மிஸ்டர் S G இராமானுஜுலு நாயுடு அவர்களின் அருமைத்தமக்கையாரான ஸ்ரீமதி. எதிராஜவல்லித் தாயாரம்மாள் தமது க்ருஹத்தில் ஜனவரி 3-ந்தேதி இறந்து போனாரென்று கேட்டு, விசனிக்கிறோம். இரண்டு வாரங்களாக ஸ்ரீமதியார் கபவ்யாதியால் வருந்திக்கொண்டிருந்தார். இறக்க சிலநாளாக ஸதாகாலம் ஈச்வரனையே த்யானம் செய்தவண்ணமாகயிருந்தார். இந்த அம்மை இறக்கும் ஸமயம் அந்தஇடத்தில் ரோஜாபுஷ்பத்தின் வாசனை எங்கும் வீசிற்று. மரண அறிகுறியாக ஏற்றப்பட்ட தீபம் ஏற்பட்டவுடன் எங்கும் ஸந்தனத்தின் ஸுகந்தம் வீசிற்று. இது பகவத்ஸங்கல்பம் என்று சொல்வதைத் தவிர வேறு என்னசொல்லமுடியும். ?

இந்த அம்மையார் மிகவும் படித்தவர். பிரஜானுகூலன் பத்ராதிபருக்குத் துணையாகயிருந்து அவருக்கு பத்ரிகை நடத்துவதில் வெகு உதவி புரிந்து வந்தார். காலம் சென்ற இவ்வம்மையாருக்கு வயது 36 தானாகிறது. இவருக்கு இரு குமாரர்களும் ஒரு குமாரியுமுண்டு. பிரஜானுகூலன் பத்ராதிபருக்கு நமது துக்கத்தைத் தெரிவிக்கிறோம்.

**Life's hints for ladies.**

ஸ்த்ரீகளுக்குறிய வாழ்க்கைக்குறிப்புகள்:—ஸ்த்ரீகளே! நீங்கள் யார்? உங்களுடைய வாழ்க்கையின் பொறுப்பை அறிந்தீர்களா? நீங்கள் பொது ஜனங்களின் க்ஷேமத்துக்குச் செய்ய வேண்டியவைகள் பல இருக்கின்றன.

* * *

சக்தி ஸ்வரூபமாய் விளங்குமா படித்த மாதர்கள், நீங்கள் உங்கள் குழந்தையை ஸன்மார்க்கத்தில் படிப்பியுங்கள். படிக்காத உங்களுடைய ஸஹோதரிகளுக்குப் புத்திமதியைகூறுங்கள். ஈச்வரன் பெரியவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். சோம்பேறிகளாய் நல்ல காலத்தை வீணாகக் கழிக்காதேயுங்கள். கணவனை தெய்வமாகவணங்குங்கள். பகவானை துதி செய்யுங்கள்.

* * *

கடவுள் உங்களை எதற்காக ச்ருஷ்டித்தார்? கேவலம் புருஷர்களது காம விகாரங்களுக்கு அடிமையாக உங்களை ச்ருஷ்டிக்கவில்லை, புருஷர்களுக்கு நியாயமான தோழர்களாகயிருக்கவே பிறப்பிக்கப்பட்டீர்கள். ஸ்த்ரீ புருஷர்கள் சேர்ந்து வாழ்க்கையின் லக்ஷ்யத்தை யடையவேண்டும்.

* * *

ஸஹோதரிகளே! நீங்கள் வீட்டு வேலையை ஸரிவரச் செய்யுங்கள். நீங்கள் செய்ய வேண்டிய வேலைகளை வேலைக் காரிகளிடமாவது வேலைக்காரர்களிடமாவது ஒப்பித்து விடாதேயுங்கள். அது சுத்தப் பிசகு. வேலைக்காரர்கள் செய்ய வேண்டிய வேலைகளை அவர்கள் செய்தால் போதும். உமங்கள் குடும்பரஹஸ்யங்களை வேலைகாரர்களிடம் சொல்லி விடாதேயுங்கள். இப்போது தெரியாது. அவர்களெல்லாம் ஏழைகள், அற்பர்கள். உங்களுடைய ரஹஸ்யத்தின் தன்மை தெரியாது. உங்களுக்கும் அவர்களுக்கும் எப்பவாவதுசண்டையுண்டானால் அந்த ரஹஸ்யங்களை அசலாரிடம் சொல்லிஅவமானத்தை உண்டுபண்ணுவார்கள்.





407

# WAR NOTES.

## யுத்தக்குறிப்புகள்.

ப்ரான்ஸ்தேசத்தில் யுஜினி என்னும் ஒரு பெண் ராணுவ உடையை தரித்துக்கொண்டு ப்ரெஞ்ச்ஸைன்யங்களுடன் சேர்ந்து தைர்யமாக சண்டைசெய்தனள். அவள் ஜெர்மானியர்களின் குண்டுகளினால் அடிபட்டுக் கீழேவிழுந்து ரணசிகித்ஸைக்கு அனுப்பப்பட்ட பொழுது அவள் பெண்ணென்று அதிகாரிகள் அறிந்து ஆச்சர்யப்பட்டார்களாம். அவளை விசாரித்ததில் தான் வண்ணார ஸ்த்ரீயென்று சொன்னாளாம்.

* * *

ஜெர்மனியில் போஸ்டாபீஸ்களில் பெரிய உத்தியோகங்கள் தவிர மற்ற உத்தியோகங்களை ஸ்த்ரீகளே வகித்து வருகின்றனர். தந்தி ஆபீஸ்களிலும் அப்படியே. ட்ராம் கார் வண்டிகளை ஓட்டுபவர்களும் டிக்கெட் கொடுப்பவர்களும் இன்ஸ்பெக்டர்களும் ஸ்த்ரீகளாயிருக்கிறார்கள், புருஷர்களைக்காட்டிலும் ஸ்த்ரீகள் சுறு சுறுப்புடன் எல்லா உத்தியோகங்களையும் நடத்திவருகிறார்களாம்.

* * *

ஜெர்மன் பீரங்கிகளில் ஹாவிட்ஸர் என்பது ஒருவகைபீரங்கி. இது மிகவும் அழுத்தமாகச் செய்யப் பட்டிருக்கிறது. இந்தப் பீரங்கி கோட்டைகளை உடைக்க உபயோகப்படும். இந்த வகை பீரங்கிகளை தண்டவாளத்தின் வழியாக ஒரு இடம் விட்டு மற்றொரு இடத்துக்குக்கொண்டுபோக முடியும். 10 நிமிஷங்களுக்கு ஒரு தரம் இதிலிருந்து குண்டுகள் வெளியாகும். ஒவ்வொரு தரமும் இதிலிருந்து வரும் குண்டுகளின் க்ரயம் 18,750 ரூபாய் மதிப்புப்போடப்பட்டிருக்கிறது.

இந்தயுத்தத்தில் ப்ரிட்டிஷாரின் மொத்தசேதத்தைப் பற்றி மிஸ்டர் ஆஸ்குவித்பின்வருமாறு கூறுகிறார். எல்லா போர்ஸ்தலங்களிலும் நேர்ந்த சேதத்தின் மொத்தம்.

கொல்லப்பட்டவர்கள் 119,923
காயம்பட்டவர்களை 338,758
காணமற்போனவர்கள் 69,546

* * *

கலீஷியாவில் ஆஸ்டிரியர்களுக்கும் ருஷ்யர்களுக்கும் ஒரு நாள் பலமாக சண்டை நடந்தது. அந்தச் சண்டையில் இறந்த ஆஸ்டிரிய வீரர்களைப் புதைக்க 4 மைல் 5 பர்லாங் நீளமுள்ள ஒரு பள்ளத்தைத் தோண்டி 40000 இறந்த வீரர்களை ஆஸ்டிரியர்கள் புதைத்தார்களென்று ருஷ்யர் சொல்லுகிறார்கள்,

* * *

1916ஹு எப்ரல் மாதத்திற்குள் ஸமாதானம் உண்டாகுமென்று ப்ரெஞ்சு தேசத்திய ஒரு கிழஸ்த்ரீ சொல்லி யிருக்கிறாளாம். இதற்கு முன் இவளின் ஜோஸ்யம் பலித்திருக்கிறதாம். இந்த ஸமயமும் இவளின் ஜோஸ்யம் பலிக்குமென்று நம்பப்படுகிறது.

* * *

இப்போது யுத்தம் செய்யும் எல்லாதேசங்களிலும் ஸமாதானப் பேச்சுக்கள் பலமாக நடந்து வருகின்றன. எல்லா தேசத்தார்களும் ஸமாதானத்தை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நம் சென்னை இராஜதானியில் எல்லா ஸாமான்களும் அக்ரம விலைக்கு விற்கப்படுகின்றன. ஸர்வேச்வரன் எல்லாவினோதங்களையும் பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்கிறார்.

# SARAT GHOSE & Co.,

## ஹார்மோனிய வியாபாரிகள்.

5, லோயர் சித்பூர் ரோட், கல்கத்தா.

சாரத் கோஸ் அண்டு கம்பெனியாரின் ஹார்மோனியங்கள் இந்தியா முழுவதும் எல்லா பாடர்களாலும் மிகவும் உறுதியுள்ளதென்றும் இனிமையான ஓசை யுள்ளதென்றும் மற்றக் கடையிலுள்ள ஹார்மோனியங்களைவிட சாஸ்திரோக்தமாய் செய்யப்பட்டதென்றும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

புளூட்டினு ஹார்மோனியங்களில் உபயோகப்படுத்தியிருக்கிற ரீடுகள் தெரிந்த விதமாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் மற்ற எவராலும் கிரகிக்க முடியாத விதமாய் உயர்ந்த இனிமையான சுரங்களைக்கொடுக்கும் தன்மையாயிருக்கின்றன. மற்ற ஹார்மோனிய தொழிற் சாலைகளைவிட எங்களுடையது மிகப்பெரிதாயிருப்பதால் நாங்கள் உயர்ந்த ஹார்மோனியங்களை மற்றவர்களைவிட சரச விலைக்கு விற்கிறோம்.

| | | |
|---|---|---|
| ஒற்றை ரீடுகள் கொண்ட ஹார்மோனியங்கள்— | | ரூ. |
| பிஜோ மாடல் | விலை ... ... ... | 15 |
| க்ளோர்யா மாடல் | ,, ... ... ... | 20 |
| ஸனோரா மாடல் | ,, ... ... ... | 25 |
| இரட்டை ரீடுகள் கொண்ட ஹார்மோனியங்கள்— | | |
| பெல்டோரு மாடல் | விலை ... ... ... | 25 |
| கிரண்டோரு மாடல் | ,, ... ... ... | 30 |
| கிளார பெல்லா மாடல் | ,, ... ... ... | 35 |
| டல்விடோன் மாடல் | ,, ... ... ... | 40 |

குறிப்பு:—அவரவர்கள் இஷ்டப்படி ஆர்டர் கொடுத்தாலும் சுத்தமாக செய்து அனுப்புவோம். ஆர்டர் அனுப்புகிறவர்கள் ரூ. 5 அட்வான்ஸாக அனுப்பவேண்டும்.

பிடில்கள் ரூ. 3-முதல் ரூ. 10-வரையில் இருக்கின்றன.

பிரஞ்சு பிடில்கள் ரூ. 15-முதல் ரூ. 20-வரையிலும் அதற்கு மேலுமிருக்கின்றன.

விலை மலிவுள்ள கைக் கடியாரங்கள் அழுத்தமாகயிருக்கும். வாரியான நேரத்தை காண்பிக்கும். ரூ. 2-முதல் ரூ. 2½ அல்லது ரூ. 3 அதற்கு மேற்பட்டும் இருக்கின்றன.

**சாரத்கோஸ் அண்டு கோ,**
5. லோயர் சித்பூர் ரோட்,
கல்கத்தா

---

N. B.—ஆர்டர்கள் கொடுக்கும்போது விளம்பரத்தை இப்பத்திரிகையில் கண்டதாக எழுதவும்.

# THE CHEAPEST HOUSE
## FOR
# HIGH CLASS SILK CLOTHS.

---

நம்பிக்கையும், நாணயமும், சகாயமுமான பட்டு வர்த்தகஸ்தலம்.

எது?

காசி (பனாரஸ் ஸிட்டி)யில் கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி என்றும் தெரிந்து கொள்ளுங்கள்.

பல பகிரெங்க பொருட் காக்ஷிகளில் வெள்ளி, பொன்பதக்கங்களும் நற்சாட்சி பத்திரங்களும் பெற்றவர்கள். பல ராஜாக்களாலும், ஜமீந்தார்களாலும், மடத்நார்களாலும் வர்த்தகர்களாலும் நன்கு மதிக்கப் பெற்றவர்கள்.

நாகரீகமானதும், புதிது புதிதான மாதிரிகளில் மேல் நாட்டிலிருந்து வரும் அற்புதமான வர்ண வஸ்திரங்களைப் போன்ற பல அருமையான கலர்கள் அமையப் பெற்றதும் சரிகை கலந்ததும், சரிகை கலக்காததுமான பலவித விலைகளில் பட்டு பீதாம்பர புடைவைகள், நார்மடி புடைவைகள் மடி புடைவைகள், ரவிக்கை குட்டைகள், தாவணிகள், பார்டர் வைகளும், சொக்காய்களும் தைக்ககூடிய பட்டுதான்கள் கைகுட்டை முதலிய அனேக விதவிதமான பட்டுதினுசுகள் விற்பனைக்கு எந்த சமயத்திலும் சித்தமாக விருக்கின்றன. விலையின் தன்மையும், தினுசுகளின் மாதிரிகளும் நாணயமும் வாங்குவோருக்கு நல்ல திருப்தியைக்கொடுக்குமென்பதில் ஸந்தேகம் வேண்டாம். காசிக்கு நேரில் வருகிறவர்கள் எங்கள் வர்த்தகஸ்தலத்தை வந்து பார்க்க மறந்துவிடாதீர்கள், விவரமான கேட்டலாக் இனாமாய் அனுப்புவோம். உடனே உங்கள் விலாசத்தை தெரிவிக்க வேண்டிக்கொள்கிறோம்.

**K. S. MUTHIAH AND Co.,**
**SILK HOUSE,**
***Dasaswamadh Row,***
**BENARES CITY.**

# The Female Education.

பெண் ...

Contents for April, 1916.

விஷயசூசிகை, ஏப்ரல்மூ 1916


I. PROGRESS OF THE WORLD.

I. ப்ரபஞ்ச போக்கு.

i. Lords Hardinge and Chelmsford

ii Indian Women's University.

iii Home Education.

iv. Women's Education in India.

i. ஹார்டிஞ்சு ப்ரபுவும் செம்ஸ்போர்டு ப்ரபுவும்—இந்திய ஸ்த்ரீகளின் யூனிவர்ஸிடி—வீட்டுப் படிப்பு—இந்தியாவில் ஸ்த்ரீகளின் கல்வி.

II. SPECIAL ARTICLES.

II. விசேஷ வ்யாஸங்கள்.

i. Patriotism of a Girl—by Sri Valambal Ammal.

ii. Beauty destroyers—by Mr. S. A. Sundaram Mudaliar.

iii. Geography Teaching in Schools—by Mr. S. Yagnasamy.

vi. Death of Carmen Sylva—by Sri Kalyani Ammal.

v. Prevention of Cholera—by Sri Pankajammal.

iv. Marriage Customs in New Britain—by Mr. V. Subramania Aiyar.

i ஒரு சிறுமியின் தேசபக்தி—ஸ்ரீ வாலாம்பாள் அம்மாள்.

ii. அழகைக் கெடுப்பவைகள்—மிஸ்டர் S. A. ஸுந்தர முதலியார்.

iii. பள்ளிக்கூடங்களில் பூகோளம் கற்பித்தல்—மிஸ்டர் எக்ஞஸாமி

iv. கார்மன் ஸில்வா—ஸ்ரீ கல்யாணி அம்மாள்.

v. காலரா வராமல் தடுத்தல்—ஸ்ரீ பங்கஜம்மாள்.

vi. நியு ப்ரிட்டினில் விவாஹ வழக்கங்கள்—ஸ்ரீமான் வி. சுப்ரமணிய அய்யர்.

III. INTERESTING ITEMS.

III. விசேஷக் குறிப்புகள்.

i. Concerning Children.

ii. Domestic Hints and Suggestions.

iii. Kitchen and Cookery.

iv. Woman's World.

i. குழந்தைகள் விஷயம்.

ii. க்ருஹத்தியக் குறிப்புகள்.

iii. சமையலறையும் சமையலும்.

iv. ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

IV. ADVERTISEMENTS.

IV. விளம்பரங்கள்.



OFFICE OF THE REGISTRAR 2-MAY 1916 MADRAS

411



# FEMALE EDUCATION

AN ILLUSTRATED TAMIL MONTHLY MAGAZINE

# பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு தமிழ் மாதாந்தப் பத்ரிகை.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

Vol. 5. தொகுதி 5. } நள ஹ சித்ரைமீ April 16. } No. 7. பகுதி. 7.


## ப்ரபஞ்சப்போக்கு

**Lords Hardinge & Chelmsford.**

ஹார்டிஞ்சு ப்ரபுவும் செம்ஸ்போர்டு ப்ரபுவும்:—கடந்த ஐந்து வர்ஷங்களாக இந்தியாவை மிகுந்த தயாளகுணத்துடனும் அன்புடனும் ஆண்டுவந்த லார்ட் ஹார்டிஞ்சு தமது பொறுப்புள்ள உத்யோகத்தை இம்மாதம் 4-ந் தேதி பம்பாய் செக்ரெடிரியேட் ஆபீஸில் புது ராஜப்ரதிநிதியாகிய லார்ட் செம்ஸ்போர்டு கையில் ஒப்புவித்து விட்டு அன்று ஸாயங்காலமே தமது ஜன்ம தேசத்துக்குப் புறப்பட்டுச் சென்றார். லார்ட் ஹார்டிஞ்சின் ஆட்சியில் இந்தியர்கள் சிலநன்மைகளை அடைந்தார்கள். அதுபோலவே, லார்ட் செம்ஸ்போர்டு ஆக்ஷியிலும் இந்தியர்களாகிய நாம் பல நன்மைகளை அடைவோமென்று ஸர்வேச்வரனின் உதவியை முன்னிட்டுக் கொண்டு எதிர்பார்க்கிறோம்.

**Indian Women's University**

இந்திய ஸ்த்ரீகளின் யூனிவர்ஸிடி:—நம் இந்தியஸ்த்ரீகளுக்காக ஒரு யூனிவர்ஸிடி ஸ்தாபிக்க வேண்டு மென்று ப்ரொபஸர் கார்வே அவர்கள் சென்றமாதம் சென்னைக்கு விஜயம் செய்திருந்தார். பிறகு தென்ஜில்லாக்களுக்கும் சென்றிருந்தார். இப்போது வட இந்திய

வில் யாத்ரை செய்து வருகிறார். பூனா விதவாச்ரமத்தைச் சேர்ந்த சில படித்த ஸ்த்ரீ மணிகளும் இதற்காக யாத்ரை செய்து வருகிறார்கள். இவர்கள் போன விடங்களில் தகுந்தபடி பணம் வசூலித்து வருகிறார்கள். இவர்கள் எடுத்த கார்யம் நிறைவேறுமென்பதற்கு பல சுபக்குறிகள் தோன்றுகின்றன.

**Home Education.**

வீட்டுப்படிப்பு :—ஸாதாரணமாக நம் பெண்கள் நாலாவது வகுப்புவரையில் பள்ளிக் கூடங்களில் படிப்பது வழக்கமாக இருக்கிறது. பிறகு, பெண்கள் பள்ளிக்கூடம் போகாமல் பல காரணங்களால் நின்று விடுகிறார்கள். நாளடைவில் அவர்கள் படித்த படிப்பையும் மறந்து விடுகிறார்கள். ப்ரைமெரி வகுப்பு வரையில் படித்தபடிப்பானது அவர்களின் குடும்ப வாழ்க்கைக்கு உபயோகப்படாமலிருக்கிறது. பாடசாலையில் படித்து விட்டபடிப்போடு தொடர்ச்சியாக வீட்டுப்படிப்பு பெண்களுக்குக் கற்பித்து வந்தால், அவர்கள் தங்கள் பிற்கால வாழ்க்கையில் அதைக்கொண்டு பயனடைவார்கள். நாம் கொடுக்கும் வீட்டுப்படிப்பானது நம் ஹிந்து குடும்பத்திற்கு ஏற்றதாயிருக்க வேண்டும். அப்படிப்பில் ஒழுக்கப்பயிற்சியும் மதப்பயிற்சியும் கலந்துள்ளதாயிருக்கவேண்டும். அப்போது தான் வீட்டுப்படிப்பின் லக்ஷ்யம் நிறைவேறும்

சென்னை ஸத்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்தார் நம் பெண்களுக்கும் ஸ்த்ரீகளுக்கும் வீட்டுப்படிப்பு மேற்கண்ட லக்ஷ்யத்துடன் ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள். பம்பாய் ஸேவசாதன் சங்கத்திலிருந்து வீடு வீடாய்ச் சென்று சொல்லிக் கொடுக்கும் வீட்டுப்படிப்பு முறையானது நல்ல பலனைக் கொடுத்து வருகிறதென்று ப்ரொபஸர் கார்வே ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்தில் செய்த உபந்யாஸத்தில் குறிப்பிட்டார். ஆகவே, வீட்டுப் படிப்புமுறை அவசியமென்று தெரிகிறது. சென்னை ராஜதானியில் மேற்கண்ட ஹிந்து ஸ்த்ரீ சங்கத்தார் வீட்டுப்படிப்பு முறையை ஆரம்பித்து நடத்திவருவது நம் ராஜதானிக்கே மிகுந்த பெருமையாகும். இச்சங்கத்தாரின் முயற்சிகள் நாளா வட்டத்தில் நல்ல பலனைத் தருமென்பது நிச்சயம்.



**Women's Education in India.**

இந்தியாவில் ஸ்த்ரீகளின் கல்வி :—சென்ற மாஸம் இந்தியாவில் பெண்களின் கல்வி விஷயமாக மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு சுற்றுக் கடிதம் அனுப்பினார்கள். அக்கடிதத்திலிருந்து பெண்களின் தற்கால கல்வி நிலைமையை ஸரியானபடி நாம் அறிந்துகொள்ளலாம். இந்தியாவில் இது வரை பெண்களின் கல்வி விஷயமாக இந்தியா கவர்ன்மெண்டார் வெகு கவனம் செலுத்தி வந்தும் அதன் அபிவிர்த்தி அநேகமாய்க் குறைவாயிருக்கிறதென்று ஏற்படுகிறது. ஆகவே, இச்சமயம் பெண்களின் கல்வி விஷயத்தை மறுபடியும் தீர விசாரித்து அறியவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் நினைக்கின்றனர். இந்தியா கவர்ன்மெண்டார் பெண்களின் கல்வி விஷயத்தைத் தீர விசாரிக்கக் காரணங்களை பின் வருமாறு கூறி சில யோஜனைகளையும் தெரிவிக்கின்றனர்.

இது வரையில் இந்தியாவிலே குடும்பத்தார் அனைவரும் ஒரே தலைவனுக்குக் கட்டுப்பட்டு ஒரு குடும்பமாக இருந்தனர். இச்சமயம் அக்கட்டுப்பாடோ பிளந்து கொண்டு வருகிறது. தகப்பன், தாய், குழந்தைகள் ஆகிய இவர்களடங்கிய குடும்பமே இப்பொழுது உண்டாகிவருகிறது. பெண்களும் சிறிய ஸ்த்ரீகளும் குடும்பத்தலைவர்களாக ஆகிவருகின்றனர். முன்போல் அவர்கள் தங்களது சுற்றத்தாரில் வயது முதிர்ந்தவர்களின் புத்திமதிக்கும் ஜாக்ரதைக்கும் உட்பட்டிருப்பதில்லை. ஆகவே, குழந்தைகளைக் காப்பாற்றும் பொறுப்பை பெண்களும் சிறு ஸ்த்ரீகளும் வகிக்கும்படியாயிருக்கிறது. தேச நன்மையை யொட்டிக் குழந்தைகளின் சுகாதாரத்தையும் சரீரத் திறமையையும் நன்கு கவனிக்க வேண்டும். தாய்மார்களுக்குப் படிப்பும் அவர்களுடைய ஒத்துழைப்பும் இருந்தால் தான், குழந்தைகளின் சரீர சுகத்தைக் கவனிக்க முடியும். ஏக குடும்பமாயிருப்பது இப்போது குறைந்து வருவதனாலேயே, சுற்றத்தாரில் வயது முதிர்ந்தவர்களின் புத்திமதியும் ஜாக்ரதையும் விதவைகளுக்குக் கிடைப்பதில்லை. பூர்வகால ஸம்பிரதாயங்கள் இச்சமயம் மாறிவருவதால், அதற்கு ஏற்றப்படி ஸ்த்ரீகளுக்குக் கல்விப்பழக்கம் அவசியமாகிறது. மேலும், பெண்களுக்கு இன்னின்ன விஷயங்களில் இன்

ளின்ன மாதிரி பாடங்கள் கற்பிக்கப்படவேண்டு மென்பதையும் யோசிக்கவேண்டும். ஏனென்றால், பையன்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் பாடங்கள் பெண்களுக்கு ஏற்றனவல்ல வென்று பொதுவாக ஓர் அபிப்பிராயம் தோன்றியிருக்கிறது.

ஆகையால், பெண் கல்வி விஷயமாய், மாகாண கவர்ன்மெண்டுகளின் உதவியையும் மேதாவிகளின் அபிப்பிராயத்தையும் தெரிவிக்கும்படியாக இந்தியா கவர்ன்மெண்டார் கேட்டுவிட்டிருக்கிறார்கள். வேண்டிய ஸமாசாரங்கள் எட்டின பிறகு நடவடிக்கை நடத்துவதைப் பற்றி யோசிப்பார்கள். மாகாண கவர்ன்மெண்டார்களும் மேதாவிகளும் தங்கள் தங்களுடைய அபிப்ராயங்களை இது விஷயமாக அனுப்பும்போது அடியிற் கண்ட தலைப்புகளின்படி பிரித்து அத்தலைப்புகளின் கீழ் அவரவர்களுடைய அபிப்ராயத்தையும் எழுதவேண்டும். (1) பெண்களின் ப்ரதம படிப்பு (2) பெண்களின் உயர்தரப்படிப்பு. (3) உபாத்தினிகளின் நிலைமை. (4) பெண்கள் படிப்புகளின் பரீக்ஷை.

பெண்களின் ப்ரதமபடிப்பின் மேல்விசாரணை ஸ்தல ஸ்வயாக்ஷி ஸ்தாபனங்களின் (Local bodies) மேற் பார்வையிலிருக்கவேண்டும். ப்ரதமப் படிப்பில் ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஒரே பள்ளிக்கூடத்தில் வாசிப்பது நலமா அல்லது கூடாதா என்பதை நிர்ணயிக்க ஸ்தல ஸ்வயாக்ஷி ஸ்தாபனங்களே லாயக்கானவர்கள். மாணாக்கர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பாட நிர்ணயத்தைப்பற்றிக்கூட ஸ்தல சுயாட்சி ஸபைகள் கூடுமானவரையில் தீர்மானஞ்செய்து கொள்ள வேண்டும். இந்தியப் பெண்கள் தங்களுடைய பாஷைகளை எழுதவும் படிக்கவும் கற்றுக்கொள்ளவேண்டியது அவசிய மென்று ஜனங்கள் விரும்புகிறார்களென்பதற்கு ஸந்தேகமில்லை. இவைகள் தவிர வேறு விஷயங்களை அவர்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை ஸ்தல சுயாட்சி ஸபைகளுடைய தீர்மானத்திற்கு விட்டுவிடலாம், ஏனென்றால், மாணாக்கர்களுடைய அபிவிருத்தியைக் கோருவதற்கும் உண்டு பண்ணுவதற்கும், அச்சபைகளே மிகவும் அனுதாபத்துடன் ஒத்து வேலை செய்ய வேண்டியதாயிருக்கிறது. கல்வியிலாகா இது விஷயமாக ப்ரவேசிப்பது யுக்தமாயிராது. பல பாடங்களையும், வெவ்வேறு பிரிவுகளாகச் செய்து அப்பிரிவுகளில் எந்தப் பிரிவையாவது கற்றுக்கொடுக்கும்படி மட்டும் உத்திரவு செய்யலாம்; பிறகு, அந்தந்த ஸ்தல சுயாட்சி ஸபை அதற்கு சம்பந்தப்பட்ட பள்ளிக்கூடங்களில் தங்களுக்கு ஸௌகர்யப்பட்ட பாடங்களை, மாணாக்கர்களுக்குக் கற்றுக்கொடுக்கும்படி திட்டஞ்செய்யலாம்.

**பெண்களின் உயர்தரப்படிப்பும் ஸ்தல ஸ்வயாக்ஷி ஸபைகளின் மேற்பார்வையிலிருத்தல் அவச்யமென்று தோன்றுகிறது.**



இப்பள்ளிக்கூடங்களில் கற்பிக்கவேண்டிய கல்வியின் மாதிரியை அந்தந்த மாகாண கமிட்டியார்களுக்கு விட்டு விட்டால் தான் ஸௌகர்யமாயிருக்கும். ஒவ்வொரு ஊரிலும் சிலபேர்கள் பெண்களுக்கு மதபோதனை அவச்யம் கொடுக்கவேண்டு மென்றும், மற்றும் சிலர் கானவித்தை சொல்லித்தரவேண்டுமென்றும் நினைப்பார்கள். பொதுவாய்த் தாயாராக வேண்டிய எல்லாக் கார்யங்களிலும் பெண்கள் பயிற்சிபெறவேண்டுமென்றும் பலர் அபிப்பிராயப்படுவார்கள். தேகவலிவுடன் குழந்தைகளைக் காப்பாற்றும் முறை, அவைகளை நடத்தும் முறை அவைகளுக்கு வியாதி வந்தால் சிகித்ஸை செய்யும் முறை, சுகாதாரம், வீட்டுவேலைகள் முதலியவைகளெல்லாம் ஸ்த்ரீகளுக்கு போதனை செய்யப்படல் வேண்டும். பலர் ஸ்த்ரீகளுக்கு இங்கிலீஷ் பாஷை அப்யாஸ மிருக்க வேண்டு மென்பர். சில பெண்கள் காலேஜ் படிப்புக்குற்ற கல்வியையும், மற்றும் சிலர் வீட்டு வேலைகளைக் கவனிக்கவும் பழக்கப்பட விரும்பலாம்; சில ஸ்த்ரீகள் பொது ஜனோபகாரிகளாக இருக்க விரும்பலாம்; இப்படியாக மாகாணங்களுக்கும் அங்குள்ள வழக்கங்களுக்கும் தகுந்தாற்போல் ஸ்த்ரீகளுக்குக் கல்வி கற்பிக்கப்படவேண்டும். படுதாமறைவிலிருக்கும் ஸ்த்ரீகளுக்குத் தகுந்தாற் போல் பரீக்ஷாதிகாரிகளும் உபாத்யாயர்களும் ஏற்படல் வேண்டும். ஆகவே, ப்ரைமெரி வகுப்புப் பாடங்கள் அவ்வவ்விடங்களுக்குத் தகுதியாய் ஏற்படாமல் போனால், பெண்களைப் பள்ளிக்கூடத்திலிருந்து பெற்றோர்கள் அழைத்துப்போய் விடுவார்கள். அநேக ஸ்தல ஸ்வய ஆட்சி ஸபையார் இவ்விஷயத்தை அறிந்திருக்கிறார்கள். ஆகையினால், இனி வித்யா இலாகாத்தலைவர் மேற்கூறியவிஷயங்களை ஆழ்ந்தாலோசித்து பெண்கள் பள்ளிக்கூடங்களில் போதனா முறையை ஒரே தினுஸில் வைத்துக்கொண்டிருப்பதைக்காட்டிலும் அந்தந்த இடங்களுக்குத் தகுந்தாற்போல் போதனா முறைகளை மாற்றிக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும்.

ஸ்த்ரீகளுக்கு உயர்தரக் கல்வியைப்பற்றியும் அக்கல்வியின் முறையைப்பற்றியும் அவர்களுக்கு காலேஜ்கள் ஏற்படுத்துவதைப் பற்றியும் தெரிவிக்கவேண்டும். பெண் பள்ளிக்கூடங்களுக்கு உபாத்யாயினிகளைப் பழக்குவதில் இப்போது செய்திருக்கிற ஏற்பாடு போதுமா என்றும் அப்படிப் போதாவிட்டால் என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டு மென்றும் இந்தியா கவர்ன்மெண்டார் அறிய விரும்புகிறார்கள். மேலே காணப்படும் விஷயங்களுக்குத் தகுந்த பதிலை வருகிற செப்டம்பர் மாதத்துக்குள் அந்தந்த மாகாண கவர்ன்மெண்டார்களுக்கு அனுப்பிவிட வேண்டும்.

---

# PATRIOTISM OF A GIRL.

By
Sri. Valambal Ammal.

## ஒரு சிறுமியின் தேச பக்தி.

ஒரு தேசம் நாகரீகம் பெற்று செல்வச்சிறப்புடன் உயர்வடைவதற்குப் பல ஸாதனங்களிருக்கின்றன. கடவுள் பக்தி, தேச பக்தி ராஜபக்தி ஆகிய இவைகளே முக்கியமானவைகளாகும். ஸ்த்ரீகளாகட்டும் புருஷர்களாகட்டும் கடவுளிடத்தில் பக்தியிருக்கவேண்டும். அவரிடத்தில் பக்தியிருந்தால் நமக்கு மங்களமுண்டாகும். கடவுளினுடைய காருண்யதயவினால் நமக்கு அவரின் க்ருபையுண்டாகும். அவரின் க்ருபையினால் மற்ற பக்திகள் காலக்ரமத்தில் உண்டாகும். கடவுள் பக்தியில்லாமல் ஒரு பக்தியுமுண்டாகாது. ஈச்வர பக்தியில்லாதவர்கள் பிசாசு குணமுடையவர்களாயிருப்பார்கள். ஒரு தேச ஜனங்கள் அபிவிருத்தியடைவதற்கு அவர்கள் கடவுள் பக்தியுடையவர்களாயிருக்கவேண்டும். ஸ்த்ரீ புருஷர்கள் தங்கள் வாழ்நாளில் அடைய வேண்டிய எல்லா பக்திகளுக்கும் தெய்வ பக்தியே அஸ்திவாரமாயிருக்கிறது. தெய்வ பக்தியுடையவர்கள் தேச ஜனங்களை ஈச்வர ஸ்வரூபிகளென்று மதித்து நடந்து காட்டுவார்கள். அவர்கள் தேச ஸ்த்ரீ புருஷர்களை தங்கள் ஸஹோதர ஸஹோதரிகளென்று பாவிப்பார்கள். ஜனங்களின் லாப நஷ்டங்களைத் தங்களுடையதாகக் கருதுவார்கள். தம் தேசவாசிகள் ஏதாவது குறைகளினால் வருந்தினால் அக்குறைகளை நீக்கத் தங்களாலான ஸகல முயற்சிகளையும் செய்வார்கள். தாங்கள் வசிக்கும் தேசத்தை அபிவிருத்தி செய்வதற்குப் பலவிதத்திலும் பாடுபடுவார்கள். தம் தேசத்தில் நியாயம் பரவி ஜனங்கள் சௌக்கியமாகக் காலத்தைக் கழிக்க வழி தேடுவார்கள். அவர்களிடம் உண்மை பேசுதல் பயப்படாத்தன்மை முதலிய ஸத்குணங்கள் ப்ரகாசிக்கும். அவர்கள் துஷ்டர்களையும் அவர்களின் குணங்களையும் வெறுப்பார்கள்.

தேச ஜனங்களெல்லோரும் அவர்களைத் தெய்வ பக்தர்களென்றும் தேச பக்தர்களென்றும் அல்லது தேசாபிமானிகளென்றும் அழைப்பார்கள். அவர்கள் தெய்வாம்சம் பொருந்தியவர்களென்று தேசத்தார்கள் தங்கள் தங்கள் வீடுகளில் அவர்களின் உருவப்படங்களைத் தொங்க விட்டுக்கொண்டு அப்படங்களைப் பூஜைசெய்வார்கள். மேலும், ஜனங்கள் அந்தத் தேசாபிமானிகளின் சரித்ரங்களை ப்ரசுரம் செய்வதும் அவர்களின் வாழ்க்கை லக்ஷ்யங்களைப் புகழ்ந்து அதன்படி நடப்பதும் அவர்கள் தங்களுக்குச் செய்த நன்மைகளைப் பற்றிப் பாட்டுக்கட்டி அவைகளைப் பாடுவதுமாக தங்கள் காலத்தை வெகு உல்லாசமாகக் கழிப்பார்கள். இப்படியாக, ஜனங்கள் கொண்டாடும் தேசாபிமானிகள் ஸ்த்ரீகளிலுமிருப்பார்கள், புருஷர்களிலுமிருப்பார்கள். அந்தத் தேசாபிமானிகளே ராஜபக்தியுடையவர்களாயிருப்பார்கள். அவர்கள் அரசனின் ராஜாங்கச் சட்டங்களை பணிந்து



நடக்கும்படி ஜனங்களைக் கட்டாயப்படுத்துவார்கள். தேசபக்தி ராஜபக்திக்கு அஸ்திவாரமாயிருக்கிறது. ஒரு தேசத்தில் ஜனங்கள் தேசபக்தர்களாயிருந்தால் அவர்கள் ராஜபக்தர்களாயிருந்தே தீர வேண்டும். ஜனங்கள் ஈச்வர பக்தியின் க்ருபையினால் தேச பக்தி மேலிட்டு ராஜபக்தியுடையவர்களாயிருக்கிறபோது ராஜாங்க ஆளுகை வெகு ச்ரமமின்றி நடக்கும்.

உதாரணமாக, நாம் இங்கிலாந்து தேசத்தை எடுத்துக்கொள்வோம். தற்போது இந்த உலக மஹா யுத்தம் நடக்கிறது. இங்கிலாந்திலிருந்து ஸ்த்ரீ புமான்கள் ஈச்வரனுக்காகவும் அதாவது தர்மத்தைக் காக்கும்பொருட்டாகவும், தேசத்துக்காகவும், நமது ஜார்ஜ் சக்ரவர்த்திக்காகவும் உயர்ந்த ப்ரபு முதல் ஏழைக் குடியானவன் வரையில், இந்த மூன்று பக்திகளும் நிறைந்து சண்டையில் சேர்ந்து யுத்தம் புரிந்து வருகிறார்கள். எவ்வளவு ஸ்த்ரீகள் தங்கள் தேசத்துக்காகவும் அரசனுக்காகவும் தாதிகளாக முன் வந்து யுத்தகளத்தில் காயம் பட்டுக்கிடக்கும் வீரர்களுக்குச் சிகித்ஸை செய்து வருகிறார்கள்? எவ்வளவு ஸ்த்ரீகள் ப்ரெஞ்சு தேசத்திலிருந்தும் ருஷ்ய தேசத்திலிருந்தும் போர்வீரர்களின் உடைகளை உடுத்துக்கொண்டு யுத்தகளம் சென்று சண்டை செய்துவருகிறார்கள்? எவ்வளவு இந்தியப் பெண்மணிகள், தேசத்துக்கும், அரசனுக்கும் தங்கள் ஆயுளை த்யாகம் செய்து உத்தம கௌரவத்துடன் யுத்தகளத்தில் இறந்துபோய் அவர்களின் வீர சரித்ரங்களைப் படித்தும் கேட்டுமிருக்கிறோம். ஆகவே, இந்த வீரச்செயல்களெல்லாம் தேச பக்தி ராஜபக்திகளினாலேயொழிய வேறில்லை.

ஸுமார் 15 வர்ஷங்களுக்கு முன் ஜப்பானுக்கும் சீனாவுக்கும் யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் ஜப்பானியர்கள் தேசபக்தியுடனும் ராஜபக்தியுடனும் வெகு மும்முரமாகச் சண்டைசெய்தார்கள். ஜப்பானிய ஸ்த்ரீகள் யுத்தகளம் சென்று ஒவ்வொரு புருஷரையும் உத்ஸாஹப் படுத்தினார்களாம். சிறுபெண்கள்கூட தங்கள் ஸஹோதரன்மார்களையும், தகப்பன்மார்களையும் உத்ஸாஹப்படுத்தி அவர்களை யுத்தகளம் அனுப்பித்தார்களாம். உதாரணமாக டோனா, என்னும் ஜப்பானியச் சிறுபெண் தேசபக்தி, ராஜபக்தி கொண்டவளாய் யுத்தகளத்தில் சண்டைசெய்து கொண்டிருந்த தனது தமயனுக்கு ஒரு கடிதம் எழுதினாள். அக்கடிதம் பின் வருமாறு.

“அன்புள்ள சகோதரனே! நீ யுத்தம் நோக்கிச் சென்ற நாள் முதல் நம்முடைய குடும்பத்தைத் தாங்கிக்கொண்டிருந்த பெரிய தூண் மறைந்துபோனது போலிருக்கின்றது. நாங்கள் உன்னுடைய துணையை இழந்து விட்டோம். இருந்தபோதிலும், நான் என்னால் கூடியவரை குடும்பத்தை நிர்வகித்து வருகிறேன். ஆகையினாலே, நீ குடும்பக் காரியாதிகளைப்பற்றி மனதில் கவலைப்படவேண்டாம், நம்முடைய சேனையானது அநேகவிடங்களில் வெற்றி

பெற்றிருப்பதாகவும், எதிரிகளுடைய பீரங்கிகளில் அநேக பீரங்கிகளையும், ஏராளமான வெடிமருந்தையும் கைப்பற்றிக் கொண்டிருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். இதைக்கேள்விப்பட்டு நாங்களெல்லாம் ஊரில் வெகுவாய் ஸந்தோஷப்படுகிறோம். நம்முடைய சக்ரவர்த்தியோ தம்முடைய தரைப்படையும் கப்பல் படையும் செய்த போர்த்திறமையைப் பற்றி வெகுவாய் திருப்தியடைந்திருக்கிறார். தம்முடைய மாளிகையில் சொற்பச் செலவுசெய்து கொண்டு ஆடம்பரமில்லாதிருக்கிறாரென்று நான் கேள்விப்படுகிறேன். எதிரிகளுக்குச் சொந்தமான பியான்பாங் என்ற கோட்டைக் கதவை நீங்கள் திறந்து உள் நுழைந்த சாமர்த்தியத்தைப்பற்றி நாங்களெல்லாம் கேட்டுச் சந்தோஷப்படுகிறோம். 3, 4-வயது சிறுகுழந்தைகள் கூட இப்போது நம் தெருக்களில் ஆநந்தமாகப் பாட்டுப் பாடிக்கொண்டு ஜப்பான் வெற்றி பெற்றதற்காக ஸந்தோஷத்துடன் குதித்துக்கொண்டு செல்கிறார்கள். நம்முடைய சக்ரவர்த்தியோ அளவற்ற கருணையுடன் யுத்தகளத்திலிருக்கும் போர் வீரர்களுடைய குடும்பங்களின் க்ஷேமத்தில் ஏராளமான பிரியங்காட்டி வருகிறார்.

வாஸ்தவத்தில் நீ எங்களைப்பற்றிச் சற்றேனும் கவலைப் படவேண்டியதில்லை. யுத்தத்தில் தைரியத்துடன் முன்னேறிச் செல். ஜப்பானியர்கள் எவ்வளவு தைரியசாலிகளென்பதை உலகத்தார்கள் பார்த்துப் புகழட்டும். யுத்தகளத்தில் முன்னேறிச் செல்வதில் நீ மற்ற போர்வீரர்களுக்குப் பின் வாங்காதே. நீ இப்படிச் செய்வதே உன்னுடைய பெற்றோர்களைச் சந்தோஷப்படுத்தும் சிறந்த மார்க்கமாகும். இப்படிச்செய்வதே தர்மமாகும். இதுவே தேசபக்தியாகும். இதுவே ராஜபக்தியாகும். நீ உன்னுடைய உயிரைக் காப்பாற்றுவதை மட்டும் கருதுவாயானால், அப்போது நீ நம்முடைய சக்ரவர்த்திக்கும் நாட்டிக்கும் துரோகியாவாய். ஆனால், நீ மரித்துப் போகக்கூடாது. அப்படி மரித்தால், ஏதாவது அருமையான போர் செய்து ப்ரபலமான ஸாமர்த்தியம் காட்டி மரிக்கவேண்டும். நமது தேசம் வெற்றியடைய வேண்டுமென்று நான் இரவும் பகலும் கடவுளைப் ப்ரார்த்தனை செய்கின்றேன். அருமையான சகோதரனே! நீ எங்களைப்பற்றி யாதொரு கவலையும் படவேண்டாம். நீ தீரமாகச் சண்டைசெய். இன்னும், நான் உனக்கு எவ்வளவோ சொல்லவேண்டும். ஆனால், அவைகளையெல்லாம் அடுத்த காகிதத்தில் சொல்லுகின்றேன்.”

ஸஹோதரிகளே! ஜப்பானியச்சிறுமியின் தேசபக்தியையும் ராஜபக்தியையும் பார்த்தீர்களா? இந்த தேசபக்திக்கும் ராஜபக்திக்கும் கடவுள்பக்தி அவச்யமென்று புலப்படவில்லையா? ஆகவே ஸஹோதரிகளே! கடவுளுக்கும் தேசத்துக்கும், அரசனுக்கும் ஸத்பாத்ரமாகயிருப்பதுதான் மேன்மை.

வாலாம்பாள் அம்மாள்.

A17

# BEAUTY DESTROYERS

BY

**Mr. S. A. Sundara Mudaliar**

(of Tranquebar.)

## அழகைக் கெடுப்பவைகள்.

அழகான முகங்கள் எப்படிக் கெடுகின்றனவென்பதைப்பற்றி வைத்ய முறையில் தம் சொந்த அநுபவத்தில் யூகித்ததை ஒரு பெரிய வைத்யர் பின் வருமாறு எழுதுகிறார்.

“நூற்றுக்கணக்கான பெண்கள் சரீரத்தில் ஓர் அற்பவியாதி காணப்பட்டாலும் அதைத் தங்கள் மனதில் ப்ரமாதமாய்ப் பாவித்து சிகித்ஸை செய்துகொள்ள முயலுகிறார்கள். தற்காலம் ஒவ்வொரு பெண்ணும் தான் ஜாஸ்தியாகவோ அல்லது கொஞ்சமாகவோ மனதில் சங்கடப்பட்டால் அதை நிவர்த்தி செய்துகொள்ளத்தெரியாமல் உழலுகிறார்கள். ஒவ்வொரு அருவருப்பான நினைப்பும் அல்லது அருவருப்பைக்கொடுக்கக் கூடிய உணர்ச்சியும் ஸந்தோஷத்துக்கு இடைஞ்சலாயிருக்கிறது. மேலும், அது தேகஸௌக்யத்துக்கும் முகக்களைக்கும் கெடுதியாயிருக்கிறதென்று பெண்கள் நன்றாய் அறியவேண்டும்.

கோபமானது மூளையைக் கொதிக்க வைத்துக் கெடுக்கிறது. அது எல்லா அவயவங்களையும் தாறுமாறாக்கி முகத்தை சிவக்கச் செய்வதுமல்லாமல் வீங்கவும் பண்ணுகிறது. கோபத்தின் கொடிய குணங்களை நாம் கோபம் வருகிறவனிடத்தில் காணலாம். மனக்கவலையானது தேகத்தின் நரம்புகளையும் ஹிருதயத்தையும் குன்றச் செய்கிறது. அதின் தன்மையால் ரத்தத்தைக் கெடுத்து சருமத்தை முற்றிலும் வெளுப்பாக்கிவிடுகிறது. கோபம் மூட்டுதல் அஜீர்ணத்தை உண்டாக்குவது மல்லாமல் தேகத்தில் திரை அல்லது சுருக்கம் விழுவதற்கு முதன்மையான காரணமாயிருக்கிறது. வ்யாகூலம் அல்லது மனக்லேசம் பசியை முற்றிலும் கெடுத்து, சருமத்துக்குள்ள தேஜஸையும் கண்களுக்குள்ள ஒளியையும் அப்புறப்படுத்திவிடுகிறது. பயம், பொறாமை, கெட்ட எண்ணம், கவலை, வ்யஸனம் ஆகிய இவைகளும் இன்னும் மற்ற சகிக்கமுடியாத கெட்ட உணர்ச்

சிகளும் தேக ஸௌக்யத்தைத் தாழ்த்தி அவைகளின் அடையாளங்களை முகவிலாஸத்தில் பதியச் செய்கின்றன.

ஆகவே, கோபத்தினால் வரும் இக்குணங்களை எப்படித்தடுப்பது? கொஞ்சதூரம் வரையில் அவைகள் தவிர்க்கக் கூடாதவைகளே; நாம் நம்முடைய ஆயுளிலே எவ்வளவோ கஷ்டநஷ்டங்களையும் துரதிர்ஷ்டங்களையும் அனுபவிக்கிறோம். ஆனால், நம்முடைய அனுபவத்தில் அவைகளை உற்றுநோக்கினால் அநேகமாக கெடுதியைக் கொடுக்கக்கூடிய நினைப்புகளும் உணர்ச்சிகளும் ஸரியான காரணங்களில்லாமல் உண்டாகின்றன. அவைகள் மனதில் உண்டானவுடன் அங்கீகரிக்கப்பட்டு பிறகு நாளாவட்டத்தில் வழக்கமாகி விடுகின்றன. சில முற்றிலும் அபாயகரமாய் முடிகின்றன. உதாரணமாக ஒரு பெண் கோபப்படுகிறாள் என்று வைத்துக்கொள்வோம். அடுத்த தடவை ஒரு சிறிய குற்றத்திற்காக அவள் கோபப்படுகிறாள். அதற்கும் அடுத்த தடவை இன்னும் சிறிய குற்றத்திற்காக கோபப்படுகிறாள். கடைசியில் அவள் ஒன்றுமில்லாத அற்பகாரியங்களுக்கெல்லாம் கோபப்பட்டுக் கொண்டேயிருக்கிறாள்.

### மனதை அடக்கி ஆளுதல்.

இந்த விதமாய் தான் எல்லா கெடுதலான உணர்ச்சிகளும் மனதில் ஊன்றிவிடுகின்றன. ஆரம்பத்தில் அவைகளை மனதில் பதியவொட்டாமல் தடுப்பதுதான் உத்தமம். ஆனால் மிகுதியான ஜனங்கள் இந்த கெட்ட வழக்கங்களுக்கு உள்ளாகவே, அவ்வழக்கங்கள் அவர்களிடம் வேரூன்றி நின்றுவிடுகின்றன. பிறகு, அவைகளை அகற்றுவது எளிதல்ல. இருந்தாலும் அவைகளை அகற்றக்கூடும். ஒவ்வொரு பெண்ணும் கவனிக்க வேண்டியதென்னவென்றால், தன்னிடத்தில் வேரூன்றி நிற்கும் மிகக்கெடுதியான எண்ணங்களைத் தடுத்து அவைகளை விலக்கத் தீர்மானம் செய்து கொள்ள வேண்டும். இது முடிந்த பிற்பாடு, அவள் ஒவ்வொரு நாளும் காலையில் சில நிமிஷங்கள் இவ்விதமான குற்றங்களைத்தடுக்க மன உறுதி கொண்டு அன்றையதின முழுதும் அந்த உறுதியுடனிருக்கவேண்டும். அக்கெட்ட எண்ணங்களுக்குப் பதிலாக நல்லவைகளைச் செய்ய திடமான எண்ணங்கொள்ளவேண்டும். அவள் ஒவ்வொரு இரவிலும் படுக்கைக்குப்போகும் ஸமயத்தில் தான் எவ்வளவு



தூரம் தன் மன உறுதியை நிலை நிறுத்தினேம் என்பதை தானே சிந்தனை செய்யவேண்டும். உறுதியுடன் இப்படிச் சிந்தனை செய்து வந்தால் நாம் தூங்கப்போகும்போது அந்த உறுதி நம் மனதில் பதிந்து இரவெல்லாம் அது பலப்பட்டுக் காலையில் நாம் எழுந்திருக்கும்போது ஜாஸ்தி திடச் சித்தர்களாயிருப்போம்.

ப்ரதி தினம் இப்படிச் செய்வது மல்லாமல் ஒவ்வொரு காலையிலும் இரவிலும் நாளின் ஒவ்வொரு நிமிஷத்திலும் அவள் தன்னைப்பற்றி ஜாக்ரதை எடுத்து தன் மனதை அடக்கி ஆளவேண்டும்.* கோபமானது திடீரென்று நம்மை யறியாமல் வரக்கூடும். மனக்கவலையும் தொந்தரையும் திருட்டுத்தனமாய் நம்மை மேற்கொள்ளக்கூடும். கோபம் வந்த பிறகு நம்மால் தடுக்கமுடியாமலிருக்கவும் கூடும். மேற்கண்ட விதமாக நாம் நம் மனதை ஸ்திரப்படுத்தி வந்தால் மனத்தளர்ச்சியை உல்லாசமாக மாற்றவும் வெடுவெடுப்பைச் சாந்தப்படுத்தவும், சுடுமூஞ்சித்தன்மையை ஸந்தோஷமாக மாற்றவும் முடியும்.

### கண்ணாடியின் ஓர் புதிய உபயோகம்.

கேவலம் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியின் உபயோகத்தால் நம்முடைய கெட்ட உணர்ச்சிகளை அடக்கி ஆளக்கூடும். நீங்கள் கோபமாயிருக்கும் பொழுதும் விசனத்தால் மனச்சோர்வாயிருக்கும் பொழுதும் முகம் பார்க்கும் கண்ணாடியை யெடுத்து உங்கள் முகத்தைப் பார்த்துக்கொள்ளுங்கள். கண்ணாடியில் உங்கள் முகக்குறிகள் எப்படித்தென்படுகின்றனவென்பதைக் கவனியுங்கள். அதுபோலவே நீங்கள் ஸந்தோஷமாயிருக்கும் பொழுதும் சாந்தமாயிருக்கும் பொழுதும் கண்ணாடியையெடுத்து உங்கள் முகக்குறிகளைக் கவனியுங்கள். இவை இரண்டையும் சீர்தூக்கிப்பார்த்துக்கொள்ளுங்கள். மற்றவர்கள் உங்களை உங்கள் வீட்டிலாவது அல்லது தெருவிலாவது பார்க்கிற ப்ரகாரம் நீங்களே உங்களைக் கண்ணாடியில் பார்த்துக்கொள்ளுகிறீர்கள்.

அருவருக்கத்தக்க உணர்ச்சிகளுடனும் எண்ணங்களுடனுமிருக்கும்போது உங்கள் முக அழகைக்கண்டு நீங்கள் ஸந்தோஷப்படுகிறீர்களா? இல்லையேல், மற்றவர்கள் உங்களைக்கண்டு

இன்னும் உங்களைவிட அதிகமாகவே அசூயை கொள்ளுகிறார்களென்று திட்டமாய் நினைத்துக்கொள்ளுங்கள். இது தான் மனதிற்கு நல்ல மருந்து. இது உடனே சொஸ்தம் செய்யாவிட்டாலும் விடா முயற்சியுடன் செய்யப்படுமாகில் எந்த ஸ்த்ரீயையும் ஸந்தோஷத்திலும் ஸௌக்கியத்திலும் வைத்திருப்பதும் தவிர, கிழத்தன்மை வருவதை அநேக வர்ஷங்களுக்குத் தடைப்படுத்திக் கொண்டிருக்கும்.

ஸுந்தரமுதலியார்.

---

# THE TEACHING OF GEOGRAPHY IN SCHOOLS.

By

**Mr. S Yagnasamy,**

Teacher, Town High School, Kumbakonam.

## பள்ளிக்கூடங்களில் பூகோள சாஸ்த்ரம் கற்பித்தல்.

பள்ளிக்கூடங்களில் (Geography) பூகோள சாஸ்திரம் கற்பித்தலினுடைய அவச்யத்தைப்பற்றி வற்புறுத்திச்சொல்லவேண்டியது அவச்யமில்லை. இப்பாடத்தில் ஜாஸ்தியான விஷயங்களை பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியவர்கள் சற்று வயது வந்த பிள்ளைகளும் பெண்களும் ஆனபோதிலும், குழந்தைகளாயிருக்கும் பொழுதே அவற்றை ஆரம்பித்தல் அவச்யமாகும். அவைகளில் சில உதாரணமாக சூர்யன் உதயமும், அதின் அஸ்தமனமும், காலை, நடுப்பகல், மாலை இந்நேரங்களில் வெயிலின் வித்யாஸங்களும், தென்றல் வாடை, மேகாற்று இவைகளும், மழை அது பெய்கிற காலங்களும் காரணங்களும் எடுத்துக்கொள்ளலாம். இவற்றில் உள்ள சாஸ்திரீயமான விஷயங்களையும் புகட்டலாம். உலகத்தில் நாகரீகம் விருத்தியாக ஒவ்வொருவரும் எப்படி மற்றொருவரை அனுசரித்து ஜீவனம் நடத்த வேண்டியிருக்கிறதும், மற்ற ஸுக துக்கங்களுக்கு எல்லாருடைய உதவிகளும் எப்படி வேண்டியிருக்கின்றனவென்பதும் கற்பிக்க வேண்டியது அவச்யம்.

இதனுடன் ஒவ்வொரு உபாத்யாயர்களும் பூகோள ஸம்பந்தமான பல விஷயங்களைக் குழந்தைகள் அனுபவத்திலுள்ள இயற்



கையானவைகளைக் கொண்டே ஆரம்பிக்கவேண்டியது. இதை அனுஸரித்து நாம் இப்பாடங் கற்பிக்கிறதை மூன்று தரங்களாக பிரிக்கலாம். முதலாவது (Primary) 9 வயதுக்குட்பட்டவர்கள், 2-வது பாரங்களுக்கு உட்பட்டவர்கள் 3-வது இரண்டாவது பாரமும் அதற்கு மேற்பாரங்களும். இங்கு நாம் முதலாவது அல்லது ப்ரைமரி தரத்துக் குழந்தைகளை மாத்ரம் எடுத்துக்கொள்ளுவோம். இந்தத்தரத்தில் உபாத்யாயர் குழந்தைகளைத் தங்களுக்கு அருகாமையிலுள்ள இயற்கைப்பொருள்களையும், தோற்றங்களையும் கவனிக்கும்படி செய்யவேண்டும். அப்படிக் கவனிப்பதில் ஒருவித ஆசையை உண்டு பண்ணவேண்டும். அப்படி ஆவலை யுண்டுபண்ணி மேல்மேலும் விஷயங்களைத் தெரிந்துகொள்ள உத்ஸாஹமும் ஏற்படுத்தவேண்டும் ஊரில் வஸிக்கிற ஜனங்களைப்பற்றியும் அவர்களுடைய பழக்க வழக்கங்களையும், அவர்களது ஜீவனங்களையும் கவனித்தல் வேண்டும். ஜீவனத்திற்காகச் செய்யும் தொழில்களையும் அறியச்செய்யவேண்டியதவச்யம். பிறகு, படிப்படியாக இவற்றை யெல்லாம் பிறதேசங்களோடு ஆராய்ந்து பார்க்கவேண்டும். புராதனமான முறைகளை யெல்லாம் விட்டுவிட வேண்டும். அதாவது விஷயங்களை மனப்பாடமாக கற்பித்தல் கூடாது. அதனுடன், மலைகள், ஏரிகள், பூமியின் உருவம், பூமியின் அளவு இவை போலொத்த விஷயங்களையும் தனித்தனியாக எடுத்துக்கொண்டு கற்பிததல் கூடாது. ஸந்தர்ப்பம் நேர்கிறபொழுது பாடங்களைக்கொண்டும் சித்ரங்களைக் கொண்டும் இவைகளை யெல்லாம் கற்பிக்கவேண்டுமே ஒழிய தனித்தனியாய் எடுத்துக்கொள்ளவும் கூடாது. இவைகளைப்பற்றியே விஸ்தாரமாய் எழுதி இந்தத்தரத்தில் சொல்லவும் வேண்டாம்.

குழந்தைகளுக்கு பூகோள சாஸ்திரம் கற்பிக்கிற பொழுது முதலில் அவர்கள் வஸிக்கிற ஜில்லாவையும், பிறகு ராஜதானியையும், பிறகு தேசங்களையும் எடுத்துக்கொள்ளுவதும் கூடாது. குழந்தைகளுடைய ஸ்வந்த ப்ரதேசங்களினுடைய நிலைமை முந்தித் தெரிய வேண்டுமென்று சொல்வது வாஸ்தவந்தான். ஆனால், உதாரணமாக தஞ்சாவூர் ஜில்லாவில் மலைகளைப்பற்றிச் சொல்லவேண்டுமானால் என்ன செய்கிறது? மேலும், ஒரு ஜில்லாவிலுள்ளவைகளை முற்றிலும் தெரிந்துகொண்டு ராஜதானிக்குப் போவதென்பது

அஸாத்யமானது. பூகோள ஸம்பந்தமான விஷயங்களைப்பற்றினவரையில் ஜில்லாவிற்கு ராஜதானியும் ஸமத்வந்தான். ஜில்லாவிலுள்ள யாவற்றையும் தெரிந்துகொள்ளவேண்டியதென்று அவச்யமான விஷயங்களைக் குழந்தைகளை மனப்பாடம் செய்யச் சொல்லவும் கூடாது. ஆரம்பம் முதற்கொண்டு பூகோளம் ஸம்பந்தப்பட்ட விஷயங்களைப் பல படங்களைக்கொண்டும், போட்டகிராப், சித்ரங்கள், இவைகளைக்கொண்டும் கற்பிக்க ஆரம்பிக்கவேண்டும். பல தேசங்களிலுள்ள ஜனங்களையும் அவர்களைபற்றிச் சிறு கதைகளும் சொல்லி ஆரம்பிக்கவேண்டும். தங்களுடைய நிலைமைகளைப் பிறதேசங்களிலிருப்பவர்களுடைய நிலைமைகளோடு ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். நீக்ரோஜாதியாரும் அவர்களுடைய வேலைகளும், அரபியர்களும் அவர்களுடைய ஒட்டகங்களும், மலைபடிவாரங்களும் அவற்றில் யாடுகள் மேய்க்கிறது ஆகிய இவை போன்ற சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்க ப்ரதேசங்களையும் எடுத்துகொண்டு கற்பிக்கவேண்டும்.

இதனோடு பல தேசங்களிலுள்ள குழந்தைகளினுடைய கதைகளையும், அவர்களுடைய நடை யுடை, ஆஹாரம் வீடு இவைகளையும் இவை போலொத்த கதைகளையும் சொல்லலாம். பிற தேசங்களிலுள்ள வநாந்தர பிரயாணிகள், மாலுமிகள் (explorers) இவர்களுடைய வீரதீரச்செய்கைகளைச் சொல்லலாம். இவற்றோடுகூட அடிக்கடி குழந்தைகளை வெளியில் அழைத்துக்கொண்டுபோய் மலைகள், மலையடி வாரங்கள், ஆறுகள் ஸமுத்ரங்கள், துறை முகங்கள், கோவில்கள் மற்றுமுள்ள இடங்களைக் காட்டி குழந்தைகளுக்கு உற்றுப்பார்க்கும் (observation) சக்தியை விர்த்திசெய்யவேண்டும். இவைகள் கிடைத்த இடங்களில் போட்டகிராப்படங்கள், லாண்டர்ன் (slides) ஸ்லைட்களைக்கொண்டும் கற்பித்தல் வேண்டும்.

எஸ். எக்ஞஸாமி.

---

மாயூரஸ்தல மான்மியம் (வசனம்)
விலை அணா 4-0, தபாற்கூலி வேறு,
மானேஜர், "பெண்கல்வி" ஆபிஸ்,
சென்னை, ஈ.

# DEATH OF CARMEN SYLVA.

Queen and Poetess, Her Work for Rumania,

By

**Sri Kalyani Ammal.**

## கவியும் ராணியுமாகிய கார்மன் ஸில்வா.

ரொமேனியா க்வீன் எலிஸபெத் போன மார்ச்சு மாஸம் 2ந்தேதி இறந்துபோனார். இவ்வம்மை கார்மன் ஸில்வா என்னும் புனைவுபெயர் பூண்டவள்.

இவ்வம்மை நியூவீ (Newwied) டில் 1843 ஆம் வருஷம் டிசம்பர் 29ந்தேதி ஜனித்தவர். இவருடைய தகப்பனார் பாஷா ஞானம் பெரிதும் பெற்றவர். அதேமாதிரி இவ்வம்மையும் பாஷா ஞானம் பெரிதும் பெற்றிருந்தார். இவர் வெகு ச்ரமப்பட்டு கல்வி கற்றுவந்தார். தமக்குக் கலியாணம் செய்துகொள்வதில் பிரியமில்லையென்றும், பள்ளிக்கூட உபாத்யாயினியாகத் தாம் போவதே தமக்கு விருப்பமென்றும், இவ்வம்மை தம் இளம்பிராயத்தில் சொல்வதுண்டு. ரொமேனியா நாட்டு ராணியாகி தாம் அங்கு செய்யவேண்டிய கார்யங்கள் மிகவும் இருக்கின்றன என்றும் இவ்வம்மை அடிக்கடி சொல்லிவருவார்.

இவ்வம்மை மேற்கூறியபடி சொன்னதுபோல் 1869ஆம் வருஷத்தில் சார்லஸ் ராஜகுமாரனை மணம்புரிந்து, 1881 ஆம் வருஷம் மேமீ 22ந் தேதியன்று ரொமேனியா நாட்டு அரசியாக முடிசூட்டப்பெற்று, அவ்விராஜ்ய ப்ரஜைகளின் நன்குமதிப்பையும் அபிமானத்தையும் பெரிதும் பெற்றார். ரொமேனியா நாட்டுப் பாஷைகளை இவ்வம்மை நன்றாகக் கற்றும் அப்பாஷையிலேயே செய்யுள்களை இனிதியற்றும் திறம்பெற்றமையால், அந்நாட்டார் யாவரும் தம்மைக் காக்கவந்த கண்மணியிவர் என்று பெரிதும் கருதினார்கள். 1877-78 ஆம் வருஷங்களில் நடந்த சண்டையில் இவ்வம்மை யுத்தத்தில் காயம்பட்டவர்களுக்கு அவர்களிருக்குமிடந்தோறும் சென்று சிகித்ஸை செய்வதில் சிறிதேனும் பின்வாங்காமலிருந்தார். அந்நாட்டு ஜனங்கள் இவ்வம்மைக்கு காயமுண்டவர்களின் தாய் என்று பெயர் கொடுத்துப் பாராட்டினார்கள். யுத்தம் முடிந்ததும், யுத்தத்தில் காயமடைந்தவர்களின் மனைவிமார்கள், இவ்

வம்மை காயம் பட்டவர்களிடத்துக் காட்டிய கருணையைக் காட்டக் கருதி, அவர்களெல்லோரும் சேர்ந்து ஒரு உருவச் சிலை எழுப்பினார்கள். அவ்வுருவச்சிலை, யுத்தகளத்தில் காயமுண்ட வீரர்களுக்கு இவ்வம்மை தண்ணீர் கொடுக்கும் பாவனையாக அமைக்கப்பட்டிருந்தது.

இவர் ரொமேனியா மஹாராணியாக மாத்ரம் இருக்கவில்லை. ஆனால், ரொமேனியா நாட்டு ஸ்த்ரீயாகவே ஆகி, அந்நாட்டாரது பிரியத்தையும் ஸம்பாதிக்கப் பெரிதும் முயன்றார். அந்நாட்டு ஸ்வதேச வித்தைகளையும் அந்நாட்டுக் கைத்தொழில்களையும் ப்ரபலமாகிச் செழிக்குமாறு இவ்வம்மைசெய்த ஏற்பாடுகளுக்குக் கணக்கு வழக்கில்லை. ராஜனரண்மனைக் கோர்ட் விருந்துகளில் கூட ரொமேனியர் தரிக்கும் உடைமாதிரியே தரித்து விளங்கப் பெரிதும் பிரியப்பட்டு அவ்விதமே செய்வார். அநேக கல்வி ஸ்தாபனங்கள் இவ்வம்மை ரொமேனியாவில் ஏற்படுத்தினவைகளில் முக்யமானது ச்வீன் எலிஸபெத்தியன் ஸ்கூல் என்பது. இக்கல்விச்சாலையில் பழையகாலத்து ரொமேனியன் கைத்தொழில் வேலைகளையும், தேசிய உடைகளுக்குச் சரிகைப் பூவேலை செய்தல் முதலிய ஸ்வதேசக் கைத்தொழில்களையும் முக்யமாய்க் கற்றுக்கொடுக்குமாறு ஏற்பாடு பண்ணியிருந்தார்.

இவர் தமது வாழ்நாட்கள் முழுவதையும் கல்வி விஷயமாய்ச் செலவழித்துப் புஸ்தகங்கள் எழுதுவதிலேயே காலத்தைப் போக்கி வந்தார். கார்மன் ஸில்வா என்னும் புனைவுபெயர் கொடுத்து 20 வால்யூம் இவர் பெண்களின் உயர்வைப்பற்றி கவிகளாகவே நூல்கள் எழுதியிருக்கிறார். இவருடைய நூல்கள், இங்கிலீஷ், ஆர்மீனியன், டேனிஷ், ஸ்பானிஷ், பிரெஞ்சு, டச்சு, ஹங்கேரியன், ரொமேனியன், ரஷ்யன், ஸெர்பியன், ஸ்வீடிஷ் முதலிய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. சிறுசிறு நாவல்களாக அநேகம் இவர் எழுதியிருக்கிறார். ரொமேனியா நாட்டு ஸ்த்ரீகளின் கம்பீரமான ஸ்வபாவத்தையும், ரொமேனியாவில் ஸ்த்ரீகளின் நிலைமையையும் பற்றிப் பத்ரிகைகளுக்கு நல்ல வியாஸங்களும் எழுதியிருக்கிறார்.

S. கல்யாணி.

# MARRIAGE CUSTOMS IN NEW BRITAIN

BY

**Mr. V. Subramania Aiyar,**
(Sub-Editor, Swadesamitran.)

## நியு ப்ரிட்டனில் விவாஹ வழக்கங்கள்.

நியு ப்ரிட்டன் என்பது ஒரு பெருந்தீவு; அது பஸபிக் மஹா ஸமுத்ரத்திலிருக்கிறது. அதை நியுகினிக்கு வடக்கு பாகத்திலிருக்கிறதென்றும் சொல்லலாம். அந்தத்தீவு இங்கிலாந்துக்குச் சொந்தமானது. அதில் நரமாம்ஸபக்ஷிணிகள் நிறைந்திருக்கிறார்கள். அத்தேசத்தவர்களுள் நடக்கும் கல்யாண முறையைப் பார்ப்போம்.

அத்தீவின் ஸ்வதேசி, தான் தனிமையாயிருந்து காலங் கழிப்பதில் அலுப்புற்றானால் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ள நினைக்கிறான். தன் எண்ணத்தைத் தன்னுடைய நன்மையைக் கோரின தன் தந்தைக்கோ, தாய்க்கோ தெரிவிக்கிறான். தாய் தந்தையற்றவன் தான் மணக்க விரும்பிய பெண்ணைப் பற்றித் தன் தலைவனுக்குத் தெரிவிக்கிறான். அப்படித் தெரிவித்ததின்மேல் அவன் மரங்களடர்ந்த புதருக்குள் ப்ரவேசிக்கிறான். ஊரிலுள்ள அவனுடைய ஸ்நேகிதர்கள் எல்லோரும் அப்பெண்ணின் வீட்டிற்குச் சென்று அப்பெண்ணின் தாயாருக்குத் தாம் வந்த கருத்தைத் தெரிவித்துத் தாம் பெண்ணின் பொருட்டுக் கொடுக்கவிருக்கும் க்ரயப் பொருளையோ பரிசையோ தெரிவிக்கிறார்கள். கடைசியிற் பெண்ணின் பெற்றோர் தாம் விரும்பியபடி பரிசு விஷயத்தைப்பற்றி பிள்ளை வீட்டாருடன் ஏற்பாடு செய்து கொள்ளுகிறார்கள்.

கலியாண தினத்தன்று மணப்பெண் தன்னுடைய தாதிகள் பந்துவர்க்கத்தார் புடை சூழத் தான் மணக்க விருக்கும் மணமகன் வீட்டிற்குப்போய் அங்கே இவர்கள் யாவரும், திருப்தியாக போஜனம் பண்ணுகிறார்கள். விருந்துண்டி முடிந்த பிற்பாடு, அங்குப் பெண்களெல்லாம் சேர்ந்து கும்மியடிக்கும் ஆட்டம் நடத்த, அந்நடனத்தில் இம்மணப்பெண் ஒரு முக்யமான நடனஞ் செய்வாள். இந்நடனம் முடிவானதும், பெண்ணைச் சேர்ந்தவர்கள் யாவரும் மணமகனை அங்கு விட்டுத் தத்தம் வீடுசேருவார்கள். இக்காலங்களிலெல்லாம் மணமகன் சென்ற காட்டின் புதரிற் போய் அவனை வரவழைப்பதற்கு மனிதர்கள் சென்று கூட்டிவருவார்கள். காட்டிற் போயவன் தனிமையை ஸஹியாது, அக்காட்டில் இங்கு மங்கும் அலைந்து கடைசியிற் காட்டின் உட்பாகத்தில் தன்னையறியாமற் சென்று அங்குள்ள துஷ்டமிருகங்களாகிய சிங்கம், புலி, சிறுத்தை முதலிய ஜந்துக்களுக்காவது தன்னைப்போலொத்த காட்டு மனிதனுக்காவது இரையாவதுமுண்டு. க்ஷேமமாய் நாடுவந்து அம்மகன் தான் இச்சித்த பெண்ணை மணப்பதுமுண்டு.

இச்சாதியார் மனைவியைக் கணவனுடைய சொத்தே என்று மதித்து, அவளுடைய உயிர்மேலும் கணவனுக்கு அதிகாரம் கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் ஒரு ஜாதியை விட்டு மற்றொரு ஜாதியில் விவாஹம் செய்து கொள்ளமாட்டார்கள். அச்சாதியார்களுள் ஒரு பெண்ணுக்கு விவாஹமானால் அந்த விவாஹத்தை நடத்தி வைக்கவும் அப்பெண்ணின் கல்யாணத்துக்கு அதிகாரம் கொடுக்கவும் அவர்களின் ஜாதித்தலைவனுக்கு பெண்ணின் பெற்றோர்கள் கமிஷன் கொடுப்பது வழக்கம். அவர்களின் ஜாதித்தலைவனின் அனுமதியின்றி கல்யாணம் நடை பெறுவதில்லை. ஜாதித்தலைவனின் உத்திரவின்றி ஒரு பெண்ணுக்கு விவாஹம் ஆகிவிட்டால் அத்தேசச் சட்டத்தின் படி அப்பெண்ணின் தகப்பன் தலையை இழந்துவிடுவான்.

நியு ப்ரிட்டன் தீவிலுள்ள பெண்கள் புருஷர் கண்களில் படுவதில்லை. அத்தேசத்து ஸ்த்ரீகள் உடுக்கும் உடையானது கீழ் நாடுகளின் உடையை ஒத்ததாக இருக்கிறது.

வீ. சுப்பிரமணிய ஐயர்.

---

## PREVENTION OF CHOLERA.

By

**Sri Pankajammal.**

### காலராவை வராமல் தடுத்தல்.

இவ்விஷயமாக ஸ்த்ரீகளுள் சிலரும் புருஷர்களுள் பலரும் பாடு பட்டு வருகிறார்கள். பொது ஜனங்களின் க்ஷேமத்திற்கு காலரா என்னும் வாந்தி பேதி வ்யாதியானது வெகு இடைஞ்சலாயிருக்கின்றது.

ஒட்டுவாரொட்டி வ்யாதிகளில் இதுவும் ஒன்று. இவ்வியாதி வெகு சீக்ரத்தில் பரவும். நம் ஸ்த்ரீ புருஷர்களிற் அநேகர் குடியிருக்கும் வீடு, குடிக்கும் தண்ணீர், படுக்கும் படுக்கை, உடை முதலானவைகளைச் சுத்தமாய் வைத்துக் கொள்ளத் தெரியாதவர்களாயிருக்கிறார்கள். விஷப் பூச்சிகளைப் பரவச்செய்யும் துஷ்ட குணமுள்ள, ஈ கொசுகு முதலான அற்ப ஜந்துக்கள் வாந்தி பேதி, சின்ன அம்மை, விஷ ஜுரம், கை கால் வீக்கம் முதலான தொத்து வ்யாதிகளை உண்டு பண்ணி வருகின்றதை அறியாமலுமிருக்கிறார்கள். வாந்தி பேதியானது பூதக்கண்ணாடியைக் கொண்டுமட்டும் பார்க்கக் கூடிய அணுப்ரமாணமுள்ள ஜீவன்களால் உண்டாக்கப் படுகிறது. அணு ஜீவன்கள் சரீரத்தினுள் வாயின் வழியாகத்தான் செல்ல வேண்டும். ஆகையால் வாந்தி பேதியை தடுப்பதற்கும் அது பரவாமல் இருப்பதற்கும் அடியிற் கண்ட விதிகளை கண்டிப்பாய் அனுஸரிப்பீர்களாக.

ஸஹோதரிகளே! குடிக்கும் ஜலத்தையெல்லாம் நன்றாய் சூடாகக் காய்ச்சி மூடிபோட்ட பாத்ரங்களால் பத்திரப் படுத்திக்கொண்டு ஜலம் வேண்டும் பொழுது நம் கையை ஜலத்திற்குள் விடாமல் வேறு பாத்ரங்களில் ஊற்றிக் கொள்ளவேண்டும். ஏனென்றால், காலரா க்ருமிகள் நம் கையிலிருந்து ஜலத்திற்குள் புகுந்து விடும். நம் கைகால்களை கொதித்த ஜலத்தால் சுத்தம் செய்து அன்ன பானாதிகளை எடுத்துக் கொள்ள தினமும் புதிதாகச் சமைத்த அன்னத்தையே சாப்பிடவேண்டும். பழுக்காத பழங்களையும் அழுகிப்போன காய்கனிகளையும் தள்ளிவிடவேண்டும். பழங்களைச் சாப்பிடுவதாய் இருந்தால் கொதித்த தண்ணீரில் அவைகளைப் போட்டு இரண்டொரு நிமிஷம் சென்ற பிறகு எடுத்துப் புசிக்கவேண்டும். ஈக்கள் மலத்திலிருந்து காலரா க்ருமிகளை கால்களிலுள்ள மயிரினால் உண் சாப்பாட்டில் கொண்டு வந்து விடும். ஆதலால் சமைத்தவுடன் கறிகாய் அன்னம் முதலானவைகளை நன்றாய் மூடிவிடவேண்டும். பாலுடன் தண்ணீரைக் கலந்து நன்றாய் காய்ச்சி சேர்த்துக்கொள்ள வேண்டும்.

சமயலறையையும் குடியிருக்கும் வீட்டையும் பூச்சி புழுக்கள் இல்லாமல் குப்பைகளை அப்புறப்படுத்தி சுண்ணாம்பு அடித்துச் சுத்தமாகவைத்துக் கொள்ளவேண்டும். வியாதி கண்டவர்களைத் தனியாய் ஓர் அறையில் வைத்து மல ஜலாதிகளைக் குழி வெட்டிப் புதைத்து, அந்த அறையை வெந்நீர் கொண்டு சுத்தப் படுத்த வேண்டும். வ்யாதிஸ்தர்களின் படுக்கை துணி முதலியவைகளைச் சூடான தண்ணீரில் போட்டு எடுத்து வைத்துக்கொள்ளவேண்டும். கிணற்றண்டையிலாவது குளத்திற்குச் சமீபத்திலாவது வாய்க்காலிலாவது நதியிலாவது துணிகளைத் துவைக்க கூடாது. வியாதி வந்த பிறகு வைத்யனிடம் மருந்துக்குப் போவதைப் பார்க்கிலும் வியாதி வராமல் தடுப்பதே நல்ல முறையாகும். ஆதலால், சகோதரிகளே! இதைக் கவனித்துச் சுத்தமாய் இருந்துகொண்டு தெரியாதவர்களுக்கு எடுத்துச்சொல்லி உபகரிக்கவேண்டுமாய்க் கேட்டுகொள்ளுகிறேன்.

பங்கஜம்மாள்.

# *Interesting Items.*

## 1
## CONCERNING CHILDREN.
### குழந்தைகள் விஷயம்.

**Hints for mothers.**

தாய்மார்கள் அறியவேண்டிய விஷயங்கள்.—(1) சுத்தமான காற்றுள்ள இடத்தில் குழந்தைகளை இருக்கச்செய்து, ரொம்ப காரம், தித்திப்பு முதலிய உணவுகளை கொடுக்காமல் ஸாமான்யமான ஆகாரம் கொடுத்து வந்தால், குழந்தைகள் நல்ல பலசாலிகளாவதோடு, அவர்களுடைய தேகரத்தமும் சுத்தமாயிருக்கும்.

குறிப்பிட்டகாலத்தில் சாப்பாடு போடுவதென்று வைத்துக்கொண்டு, இடைநேரத்தில் பக்ஷணம் முதலியவைகளைக் கொடுக்காமலிருந்தால், சிறுவர்களுக்கு சாப்பாட்டு நேரத்தில் நன்றாய்ப் பசியெடுக்கும். (2) குழந்தைகளுக்கு எவ்வளவுக்கெவ்வளவு கண்ட பக்ஷணங்களைக் கொடுக்காமலிருக்கிறோமோ, அவ்வளவுக்கு அவர்களின் தேகம் ஸௌக்யமாயிருக்கும்; வ்யாதி வருவது துர்லபம். (3) வளரும் குழந்தைகள் அதிக நேரம் தூங்கவேண்டியது அவச்யம். முக்யமாய் பள்ளிக்கூடம் போகும் சிறுவர்கள் அதிக நேரம் தூங்கவேண்டும். (4) சிறுவர்களின் கால்களும் பாதங்களும் எப்போதும் சூடாயிருக்கவேண்டும். (5) சிறுவர்கள் படுக்கும் அறையில் காற்று தாராளமாய் வந்து போய்க்கொண்டிருக்கவேண்டும். (6) சில குழந்தைகள் போர்வையால் தங்களுடைய முகத்தை மூடிக்கொள்ளும். இப்படிச் செய்வதை தாய்மார்கள் தடுக்கவேண்டும். (7) கோபத்தால் குழந்தைகளை அடிப்பதும், வைவதும் கூடாது. (8) அவர்களுடைய குற்றங்களை கவனித்துக்கொண்டிருக்கவேண்டும். ஆனால், அந்தக் குற்றங்களை அடிக்கடி எடுத்துக்காட்டுவதைவிட, அவைகளுக்கு எதிரிடையான நல்லகாரியங்களைச் செய்யும்படி சொல்லிக்கொடுக்கவேண்டும். (9) தாய்மார்கள் எப்போதும் உண்மை பேசவேண்டும். தாங்கள் சொன்ன சொல் தவறக்கூடாது. அப்போது தான் சிறுவர்களும் உண்மை பேசுவதோடு சொன்ன சொல் தவறாமலிருக்கப் பழகவும் ஸாத்யமாகும். (10) சிறுவர்களுடைய விளையாட்டு ஸாமான்களை வைக்க ஒரு இடம் கொடுக்கவேண்டியது அவசியமாகும். அதோடு, அவர்களின் ஸாமான்களை அந்தந்த இடங்களில் வைத்துக்கொள்ளும்படி கட்டாயப்படுத்தவேண்டும். அவர்கள் ஒரு குறிபிட்டகாலத்தில் விளையாடுவதற்கு அனுமதி கொடுக்கவேண்டும்.

**About Infant mortality.**

குழந்தைகளின் மரண விகிதத்தைப்பற்றி:—1911-ம் வருஷத்திய சென்னை கார்பொரேஷன் ஜனன மரணக் கணக்குப்படி, 19,000 குழந்தைகள் பிறந்ததாகவும் 6,000 குழந்தைகள் இறந்துபோனதாகவும் கணக்குப் பட்டியில் பதிவு செய்யப்பட்டது. இந்த ராஜதானியில் சென்ற 5 வருஷகாலமாக குழந்தைகளின் மரணம் பயங்கரமாக இருக்கிறது. இதற்குக் காரணம் சென்னை நகரின் பல பாகங்களில் சுகாதார நிலைமை, திருப்திகரமாக இல்லாதிருந்ததேயாகும். விஷஜ்வரம், முதலிய வியாதிகளில் பலகுழந்தைகள் இறந்து போயின. இந்த அதிருப்திகரமான 'சுகாதார நிலைமையை, திருத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் சீக்கிரத்தில் செய்யப்பட வேண்டும். காற்றோட்டம் இருக்கும்படிச் செய்வதும் அக்கம் பக்கத்தை சுத்தமாக வைத்திருப்பதுமே இதற்குப் பரிகாரவழி.



## II
## DOMESTIC HINTS AND SUGGESTIONS.
### க்ருகத்தியக் குறிப்புகள்.

**Uses of margosa.**

வேப்பின் உபயோகம்:—இந்தியாவில் வேப்பமரங்கள் அதிகம். இந்த மரங்களால் ஜனங்களுக்கு வெகு உபயோகம். ஆதிவைத்ய நூலில் இம்மரத்தின் உபயோகம் விரிவாக எழுதியிருக்கின்றது. இது அசுத்தகாற்றைப் போக்கடிக்கும்; தொத்து வ்யாதிகள் பரவுகிறதற்கு ஸாதகமாயுள்ள விஷக்ருமிகளை நாசப்படுத்தும். ஜன்னி மூர்ச்சை, அன்னத்வேஷம், வாந்தி வாயூரல் நீடித்த வாதம், அதிக ஏப்பம் முதலியவைகள் எல்லாம் இம்மரத்தின் பூவை உடகம் தட்டி பதார்த்தத்தில் உபயோகப்படுத்தினால் பறந்துவிடும். வேப்பம் நெய் மிகவும் குளிர்ச்சியானது. இது எவ்வளவு நாள் நீடித்த கபமானாலும் அதை குணப்படுத்தும், கண்டகரப்பானுக்கு இந்த வேப்பம் நெய் கைகண்ட மருந்து. ப்ரஸவ அறையில் வேப்பம் நெய் விளக்கு எரிந்தால் அந்த அறையிலிருக்கிற கெட்ட காற்று நீங்கி சுத்தமாகும். மிகுந்த ஜன்னிகண்டவர்களுக்கு வேப்பம் பிண்ணாக்கைக் கொளுத்தி அதன் புகையை காட்டினால் குளிர் குறையும். சுருக்கிக்கூறுமிடத்து வேம்பின் இலை, பட்டை, வேர், பூ, பழம், கொட்டை, பிண்ணாக்கு இவை அனைத்தும் ஔஷத குணம்பொருந்தியவை.

**Women and Manjal.**

மாதர்களும் மஞ்சளும்:—ஆண்களுடைய தேகமும் பெண்களுடைய தேகமும் மிக வித்தியாசமுள்ளது. பெண்களுடைய தேகம் எப்போதும் சூடுள்ளதாகவே யிருக்கும். பெண்களுடைய ச்வாசத்தில் ஒருவகையான அசுத்தமும் நஞ்சுத்தன்மையுமிருக்கின்றது. ஆதலால், பெண்களுடைய ச்வாசம் நாயகன் மேற்பட்டால், அதிலும் படுத்திருக்குங்காலத்து முகத்திற்பட்டால், அந்த நஞ்சுத்தன்மையுள்ள ச்வாசம் மூக்குவழியாக உட்சென்று நோய்க்கிடமாகி அதுவுஞ் சுவாசப்பையில் தங்கித் தீங்குசெய்யும். ச்வாசத்தில் தீங்கு செய்யவே அதனால் ஆயுள் குறையும். இப்படிப் பலநாள் நடந்தால் சீக்கிரம் மரணத்தை யுண்டாக்கி விடும். அது பற்றியே ஆயுள் குறையுமென்று தரும சாஸ்திரங்கள் கூறும். பெண்களுடைய மூக்கு வழியாக வருஞ் சுவாசத்தின் நஞ்சுத் தன்மையை யடுப்பதற்கு மஞ்சள் நல்ல மருந்தாகும். மஞ்சளில் அந்த நஞ்சுத் தன்மையை நீக்குங் குண விசேஷமிருக்கின்றது. அதை யறிந்தே நஞ்சுத் தன்மையை நீக்கும் மருந்துப் பொருளாக மஞ்சளை உபயோகப் படுத்திவரும் வழக்கத்தை சாஸ்திர நிபுணர்கள் கைக் கொண்டார்கள். மஞ்சளால் அந்த நஞ்சுத்தன்மை நீங்கவே ச்வாசமும், ச்வாசம் படியும் பெண்களுடைய முகமும் சுத்தமாயிருக்கும். அப்பொழுது நாயகனுக்கு அச்சுவாசத்தால் வருந்தீங்கு உண்டாக மாட்டாது. அது பற்றியே மஞ்சள் பூசுவதால் நாயகனுக்கு ஆயுள் பெருகு மென்று பெரியோர் சொல்லுவார்கள். சுமங்கலியான பெண்கள் நாயகனுக்கு ஆயுள் பெருகும் பொருளென்று மஞ்சளை விச்வாசமாக அணிவார்களென்பதை அறிந்து கொள்க. இச்சுவாசத்தின் அசுத்தத்தையும் நஞ்சுத் தன்மையையும் போக்குதற்கே குற்றமில்லாத முத்து சேர்ந்த மூக்குத்தி யென்னும் ஆபரணத்தை அணிந்து கொள்ளுகிறார்கள். அதிலிருக்குப் முத்து அச்சுவாசத்தின் நஞ்சுத்தன்மையை மாற்றி விடுமென்பதையும் அறிந்து கொள்க.

III

# KITCHEN AND COOKERY.

## சமையலறையும் சமையலும்.

### Aval Vadam.

அவல்வடாம்:—ஒரு படி வெண்மையான அவலை மூன்றுபடி சுத்த ஜலங்கொண்டதோர் பாத்ரத்திற்கொட்டி நன்றாய் ஊறின பிறகு ஜலத்தை வடித்து, ஆட்டுக்கல்லில்போட்டு அரைத்து வைத்துக்கொள்ள வேண்டும். பொடியாய் நறுக்கின பச்சைமிளகாய் 4-பலம்; பொடியாய் நறுக்கின கொத்துமல்லி 4-பலம்; தோல் போக்கிய எள் 6-பலம்; காரப்பொடி 3-பலம் இந்த நான்கு வஸ்துக்களையும் ஷை அவலுடன் கலந்து நன்றாகப் பிசைந்து சுண்டக்காய்ப்பிரமாணம்வடாம் வைத்து உலர்த்தி யெடுத்துக்கொள்ளவேண்டும். இந்த வடாம் நாள்பட இருக்கவேண்டுமானால், எள்ளை விலக்கவேண்டும்.

### Mangoe Chutney.

மாங்காய்ச் சட்ணி:—முத்தின ஐந்து மாங்காய்களை எடுத்துக்கொண்டு மேல் தோலைச் சீவிவிட்டு பொடிப் பொடியாய் நறுக்கி வைத்துக்கொள்ளவேண்டியது. ஒரு பலம் நல்லெண்ணெயை பாணலியில் விட்டுக்காய்ந்தவுடன் அரைக்கால்பலம் வெந்தயத்தைப் போட்டுச் சிவக்கும்போது கடுகைப்போட்டவுடன் சட பட என்கிற சப்தம் நின்றவுடன் வீசம் பலம் பெருங்காயம் வீசம் மஞ்சள் இவ்விரண்டையும் போட்டுத் தாளிதம் செய்து கீழ் இறக்கிவிடவும். தகுந்த மிளகாயும் உப்பையும் போட்டு ஒரு கல்உரலில் இடிக்கவும். அதோடு நறுக்கின மாங்காய்களையும் கொஞ்சம் இடித்துக்கொண்டு, கடுகு வெந்தய தாளிதத்தை அதிற்கொட்டிக் கலந்து கொடுத்து மறுபடியும் கொஞ்சம் இடித்துக்கொள்ளவேண்டியது. இந்தத் தொக்கயல் ஒரு வாரம் வரையில் கெடாமலிருக்கும்.

### Mangoe Pickles.

கடுகு மாங்காய்.—அரைப்படி கடுகுப்பொடி, ஒருபடி மிளகாய்ப்பொடி, கால்படி மஞ்சள் பொடி, இரண்டுபடி உப்புப்பொடி இவற்றை நன்றாக உலர்த்தி எடுத்துக்கொண்டு இரண்டு பலம் காயத்தை நன்றாய் நசுக்கித் தாளாக்கிப்போட்டு இவற்றோடு அரைவீசை நல்லெண்ணெயைக்கலந்து, முன் சொன்ன மாதிரியாக வெட்டி வைத்துக்கொள்ளப்பட்ட மாங்காய்த் துண்டுகளோடு தனித்தனியாக நன்றாய்ச் சேரும்படி கூட்டி ஜாடியில் வைக்கவேண்டியது. அப்படி வைக்கும்போது, கால்படி வெந்தயம் (பச்சை), கால்படி கடலை (பச்சை) இவற்றைக் கலந்து, ஜாடியிலிருக்கும் மாங்காயில் இடையிடையே தூவவேண்டியது. இப்படித் தூவித்தூவி காரஞ்சேர்ந்த மாங்காயை ஜாடியில் அடுக்கிய பிறகு, ஒரு வீசை நல்லெண்ணெயை ஜாடியிலுள்ள ஊறுகாயின்மீதெல்லாம் நன்றாய்ப் படும்படியாக மெதுவாய் ஊற்றி, ஜாடியின் வாயைக்கட்டி, முன் சொன்ன மாதிரியாகவே பத்திரமாய் மூடிவைத்துக் குலுக்கிக்கொண்டு வரவேண்டும். ஒரு மாதத்திற்கப்பால் உபயோகிப்பதே நல்லது. இவ்வித மாங்காய் ஊறுகாய் முதன் முதல் ஆந்த்ரதேசத்திற் போடப்பட்டதென்று சொல்லப்பட்டபோதிலும், இப்போது தென்னாடு முழுவதும் சாதாரணமாய்ப் போடப்பட்டுவருகிறது. இது மிகவும் ருசியாயிருப்பதுடன் தேகாரோக்கியத்துக்கு ஒத்ததாயிருக்கிறபடியால் அதிகமாய்ச் சிலாகிக்கப்படவேண்டிய குணங்கள் பொருந்தியிருக்கின்றது. இவ்வூறுகாயுள்ள குடும்பங்களில் பதார்த்தக் கறிகளைப் பற்றிய கவலை அதிகமா யுண்டாவதில்லை.



# WOMAN'S WORLD.

## ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

### Harmoniums.

ஹார்மோனியங்கள் :—உலக ப்ரசித்திபெற்ற ஸங்கீத நிபுணராகிய ப்ரொபஸர் தக்கிஞசாரன் ஸென் என்பவர் ஸாரத் கோஸ் ஹார்மோனியத்தை மிகவும் ச்லாகித்து எழுதுகிறார் :—ஸாரத் கோஸ் ஹார்மோனியங்கள் மிகவும் நவீனமாயும் இனிய குரலுடையதாயும் நேர்த்தியாயும் செய்யப்பட்டுவருகின்றது எனக்கு மிகுந்த ஸந்தோஷத்தைக் கொடுக்கிறது. தங்களுடைய ஹார்மோனியங்களின் விலையும் ஸரஸமாகவேயிருக்கிறது. ஸங்கீத ப்ரியர்கள் ஸாரத் கோஸ் ஹார்மோனியங்களை வாங்கி உபயோகப்படுத்தினால் வெகு திருப்தியடைவார்கள். விலாசம் :—ஸாரத் கோஸ் கம்பெனி, 5, லோயர் சித்பூர்ரோடு, ஹார்மோனிய வியாபாரிகள், கல்கத்தா.

### Commands of Air.

காற்றின் ஆக்ஞைகள் :—காற்று — வாயு — ஸஹோதரிகளுக்குச் சொல்லுகிறது." ஸஹோதரிகளே! நான் யார் என்று அறிந்தீர்களா? என்னுடைய ஸ்வபாவம் உங்களுக்குத்தெரியுமா? சொல்கிறேன் கேளுங்கள். நான் ஸர்வேச்வரன். எங்குமிருக்கிறேன். ஸகல ச்ருஷ்டிகளிலும் மிருக்கிறேன். ஜீவகோடிகளை அழிக்கிறவன் நான்தான். நானொருவனே நித்தியமான பொருள் : என்னிடத்திலேயே உலகங்களடங்கியிருக்கின்றன. என்னைப் பூஜைசெய்யுங்கள். வணங்குங்கள். ஸுத்தமாயிருங்கள். வீடுகளை மங்களகரமாயும் ஸுத்தமாயும் வைத்துக்கொள்ளுங்கள். வீட்டிற்குப் பக்கத்தில் தேகாரோக்யமான செடிகளை வைத்து பயிராக்குங்கள். வீடுகளை நிமிஷமேனும் அசுத்தப் படுத்தாதேயுங்கள். ஸஹோதரிகளே! நீங்கள் வீடுகளை திவ்யமாய் வைத்துக்கொள்ளாமலிருந்தால் நானும் என் தாயாரும் உங்கள் வீட்டைவிட்டுப் போய்விடுவோம். என் தாயார் சக்திதேவி வீசனைகரமான ஸஹோதரிகளிடத்திலும் அசுத்த ஸஹோதரிகளிடத்திலும் ஒருக்ஷணப்பொழுதும் நிற்கமாட்டாள். இது உங்களுக்கு எச்சரிக்கையாகயிருக்கட்டும். ஜாக்ரதை."

### A Woman Pleader.

ஒரு பெண் வக்கீல்.—அலிப்பூர் ஜில்லா ஜட்ஜ் முன்னிலையில் எம். ஏ. பில் பட்டம் பெற்ற மிஸ் ரெஜினகுஹா என்னும் மாது, தன்னைக் கோர்ட்டில் வக்கீலாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இம்மாதம் 2-ந் தேதி யன்று அப்ளிகேஷன் செய்து கொண்டிருக்கிறார். இந்தியாவில் வக்கீல் வேலையில் புகுந்தவர்களில் இந்த ஸ்த்ரீயை முதல்வரென்று சொல்லலாம். அலிப்பூர் ஜில்லா ஜட்ஜ் இந்த ஸ்திரீயின் விண்ணப்பத்தை ஹைகோர்ட்டுக்கு அனுப்பியிருக்கிறார்.

### Women in Egypt.

ஈஜிப்டில் ஸ்த்ரீகள்.—ஈஜிப்ட் என்பது வட ஆப்பிரிக்காவிலுள்ளது. அங்குள்ள ஸ்த்ரீகள் கல்வியில் தேர்ச்சியுள்ளவர்களாம். அங்குள்ள அநேக ஆபீஸ்களில் ஸ்த்ரீகள் ஷார்ட்ஹாண்டு குமாஸ்தாக்களாகவும் மற்ற குமாஸ்தாக்களாகவும் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அங்கு ஒரு ஸ்த்ரீ பாரிஸ்டர் இருக்கிறாராம். ஜாஸ்தியாக ஸ்த்ரீ வைத்தியர்களிருக்கிறார்களாம். அவர்கள் தேச அபிவிருத்திக்குப்பாடுபட்டு வருகிறார்களாம். ஸ்த்ரீகளுக்காக 6 பத்திரிகைகள் இருக்கின்றனவாம். இதில் நாலு பத்ரிகைகள் ஸத்ரீகளாலேயே நடத்தப்படுகின்றனவாம்.

# SARAT GHOSE & Co.,

## ஹார்மோனிய வியாபாரிகள்.

5, லோயர் சித்பூர் ரோட், கல்கத்தா.

சாரத் கோஸ் அண்டு கம்பெனியாரின் ஹார்மோனியங்கள் இந்தியா முழுவதும் எல்லா பாடகர்களாலும் மிகவும் உறுதியுள்ளதென்றும் இனிமையான ஓசையுள்ளதென்றும் மற்றக் கடையிலுள்ள ஹார்மோனியங்களைவிட சாஸ்திரோக்தமாய் செய்யப்பட்டதென்றும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

புளூட்டிரு ஹார்மோனியங்களில் உபயோகப்படுத்தியிருக்கிற ரீடுகள் தெரிந்த விதமாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் மற்ற எவராலும் கிரகிக்க முடியாத விதமாய் உயர்ந்த இனிமையான சுரங்களைக் கொடுக்கும் தன்மையாயிருக்கின்றன. மற்ற ஹார்மோனிய தொழிற் சாலைகளைவிட எங்களுடையது மிகப்பெரிதாயிருப்பதால் நாங்கள் உயர்ந்த ஹார்மோனியங்களை மற்றவர்களைவிட சாச விலைக்கு விற்கிறோம்.

| | | |
|---|---|---|
| ஒற்றை ரீடுகள் கொண்ட ஹார்மோனியங்கள்— | | ரூ. |
| பிஜோ மாடல் | விலை ... ... ... | 15 |
| க்ளோரியா மாடல் | ,, ... ... ... | 20 |
| ஸனோரா மாடல் | ,, ... ... ... | 25 |
| இரட்டை ரீடுகள் கொண்ட ஹார்மோனியங்கள்— | | |
| பெல்டோரு மாடல் | விலை ... ... ... | 25 |
| கிரண்டோரு மாடல் | ,, ... ... ... | 30 |
| கிளார பெல்லா மாடல் | ,, ... ... ... | 35 |
| டல்ஸிடோன் மாடல் | ,, ... ... ... | 40 |

குறிப்பு:—அவரவர்கள் இஷ்டப்படி ஆர்டர் கொடுத்தாலும் சுத்தமாக செய்து அனுப்புவோம். ஆர்டர் அனுப்புகிறவர்கள் ரூ. 5 அட்வான்ஸாக அனுப்பவேண்டும்.

பிடில்கள் ரூ. 3-முதல் ரூ. 10-வரையில் இருக்கின்றன.

பிரான்சு பிடில்கள் ரூ. 15-முதல் ரூ. 20-வரையிலும் அதற்கு மேலுமிருக்கின்றன.

விலை மலிவுள்ள கைக் கடியாரங்கள் அழுத்தமாகயிருக்கும். சரியான நேரத்தை காண்பிக்கும். ரூ. 2-முதல் ரூ. 2½ அல்லது ரூ. 3 அதற்கு மேற்பட்டும் இருக்கின்றன.

சாரத்கோஸ் அண்டு கோ,
5, லோயர் சித்பூர் ரோடு,
கல்கத்தா.

**N. B.**—ஆர்டர்கள் கொடுக்கும்போது விளம்பரத்தை இப்பத்திரிகையில் கண்டதாக எழுதவும்.



THE

# FEMALE EDUCATION

AN ILLUSTRATED TAMIL MONTHLY MAGAZINE

# பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

| | | |
|---|---|---|
| **Vol. 5.** தொகுதி 5. | நள ௵ வைகாசி ௴ May 1916. | **No. 8.** பகுதி 8. |


## ப்ரபஞ்சப்போக்கு

**The Late Srijut G. Subramania Aiyar.**

காலம் சென்ற ஸ்ரீஜத் ஜி. சுப்ரமணிய ஐயர் :—இம்மஹான் ஒரு அவதார புருஷர். இவர் 1916௵ ஏப்ரல்௴ 18-ந் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 6¼ மணிக்கு திருவல்லிக்கேணியிலுள்ள தமது க்ருஹத்தில் இப்புவியை நீத்து கைலாஸத்தை யடைந்தார். இவர் இறக்கும்போது இவருக்கு வயது 62. சென்ற சில வர்ஷங்களாக நமது ஐயர் தேக ஸௌக்யக் குறைவாயிருந்தாலும் அதை க்ஷணமேனும் லக்ஷ்யம் செய்யாது தைர்யத்திலும் தேசத்துக்கு உழைப்பதிலும் பலமுள்ளவராகவே யிருந்து வந்தார். திடீரென இவர் நம்மைவிட்டுப் பிரிந்து போவார் என்று ஒருவரும் நினைக்கவில்லை. எனினும், ஈச்வர செயலுக்கு யார் என்ன செய்ய முடியும்? இவரின் ஆத்மா சாந்தியை அடையுமாறு பரந்தாமனைப் பலகாலும் பஜிக்கின்றோம்.

ஸ்ரீமான் ஐயருடைய பிறப்பும் வளர்ப்பும் இவரின் கல்விப்பயிற்சியும், தேச உழைப்பும் ஸ்த்ரீ புருஷர்களாகிய இருபாலார்க்கும் ஒரு பெரிய வழிகாட்டியாகவே யிருக்கின்றது. நமது ஐயரை அறிந்த எந்த ஸ்த்ரீ புருஷரும், இவரின் மனோ தைர்யத்தையும் ஊக்கும்

பர்யந்தம் தேசத்துக்கு உழைத்து வந்த ஸேவையையும் கண்டு புகழ்ந்து வணங்காமலிரார். இதை யெழுதுபவர் சில வர்ஷங்கள் ஸ்ரீமான் ஐயரிடம் ஸேவை செய்தவர். இவர் பாதத்தினடியில் உட்கார்ந்து கற்று பயிற்சி பெற்றுக் கொண்டு பத்ரிகை நடத்தும் பாக்யத்தைப் பெற்றவர். தற்காலம் நம் ராஜதானியில் தினப்பத்ரிகைகளும் வாரப் பத்ரிகைகளும், மாஸப்பத்ரிகைகளும் நடத்துபவர்களில் சிலரைத்தவிர மற்றவர்கள் எல்லோரும் ஸ்ரீஐயரிடமிருந்து கற்றுப்பழகினவர்களாகவே யிருக்கின்றனர்.

நமது ஸ்ரீ ஐயரின் குணங்கள் மிகவும் உத்தம நோக்கத்தைக் கொண்டவைகளாயிருந்தன. இவர் மிகவும் குசாக்ர புத்தியுடையவர். இவர் மஹாதீரர். தேர்ந்தபடிப்பாளி, ஆசாரச் சீர்திருத்தக்காரர், தற்காலம் பெருங்கூச்சல்போடும் ஆசார சீர்திருத்தக்காரர்கள் போலல்லாமல் தாம் பேசுபவைகளை நடத்திக் காட்டிவந்தவர். ஸ்ரீஐயர் ஹிந்து, சுதேசமித்திரன் என்ற இரு பத்ரிகைகளை ஆரம்பித்து செவ்வனே நடத்தி ராஜாங்க மதிப்பையும் ஜனங்களின் செல்வாக்கையும் பெற்றார். இவர் ராஜபக்தி நிறைந்த தேசாபிமானி. இந்திய மாதா தன் உண்மையான புத்ரனை இழந்துவிட்டாள். நாம் நம் குருவையும் ஜனப்ரதிநிதியையும் இழந்து விட்டோம். இந்த மஹானுக்காக இந்தியர்கள் ஏக்கமடைந்து வருந்த முறுகின்றனர். இவரின் ஞாபகம் எப்போதும் நிலைத்திருக்கும்படிச் செய்ய ஜனங்கள் முன் வந்திருக்கின்றனர். தற்காலம் இந்த விஷயமாக ஜனங்கள் வெகு உத்ஸாஹத்துடன் முன் வந்து உதவுகிறதானது, அவர்கள் ஐயர் பேரில் வைத்திருந்த மதிப்பையும் அன்பையும் காட்டுகிறது. நமது போஷகர்களாகிய திருவாவடுதுறை மடாதிபதி பண்டார ஸந்நதி அவர்களும், ஆண்டிப்பட்டி ஜமீன்தார் எஸ். ஆர். எம். எம். வி. டி. பெத்தாச்சி செட்டியார் அவர்களும் ஸ்ரீஐயரின் ஞாபக நிதிக்கு 500 ரூபாயும் 100 ரூபாயும் முறையே உதவியிருக்கிறார்கள். இனியும் உதவுவதாகத் தைர்யம் கொடுத்திருக்கிறார்கள். ஞாபக நிதிக்கமிட்டியார் இது விஷயமாக ப்ரபல முயற்சிகள் செய்து வருகிறார்கள். ஸ்ரீமான் ஐயருடைய ஞாபகத்தை பின் ஸந்ததியார்களின் மனதில் எப்போதும் நிலைத்திருக்கும்படி செய்ய ஜமீன்தார்களும், ப்ரபுக்களும், ஜனங்களும் முன் வருவார்களென்று நம்புகிறோம். சுபம்.



**Social Conferences.**

ஆசாரச் சீர்திருத்தக் கான்பரன்ஸ் :—இம்மாதம் திருச்சி ஜில்லா ஆசாரச் சீர்திருத்தக் கான்பரன்ஸ் கரூரிலும் மலபார் ஜில்லா ஆசாரச் சீர்திருத்தக் கான்பரன்ஸ் பாலக்காட்டிலும், சென்னைமாகாண ஆசாரச் சீர்திருத்தக் கான்பரன்ஸ் மதுரையிலும், கோயமுத்தூர் ஜில்லா கான்பரன்ஸ் திருப்பூரிலும் முறையே வெகு மும்முரமாயும் உத்ஸாஹமாயும் நடந்தேறின. பொதுவாய் இக்கான்பரன்ஸ்களினால் ஜனங்கள் பலநன்மைகளை அடைவார்கள். மேலும் இப்படி கான்பரன்ஸ்கள் கூடுவதனால் ஆசாரச் சீர்திருத்த விஷயமாக ஜனங்களுக்குள்ளிருக்கிற ஒரு உணர்ச்சியையும் அக்கரையையும் தெரிவிக்கின்றது. இதுபோன்ற கான்பரன்ஸ்களில் அக்ராஸனம் வஹித்து ப்ரசங்கம் செய்வோரும் பல தீர்மானங்கள் கொண்டுவருவோரும் வெகு வாசாலகர்களேயொழிய கார்யாம்சத்தில் ஸுகமில்லையென்று நமது நண்பர்கள் நமக்கு அறிவிக்கின்றனர். கான்பரன்ஸ்களே கூடுவது ப்ரயோஜனமில்லையென்று நமது நண்பர்கள் அறிவிக்கிறதை நாம் ஒப்பமாட்டோம். ஆனால் ஆசாரச் சீர்திருத்தக் கான்பரன்ஸ்களில் பேசுபவர்களுள் பலர் வாசாலகர்களாகத் தானிருக்கிறார்கள். இது தெரிந்த உண்மையே. இருந்தாலும், ஆசாரச் சீர்திருத்த விஷயத்தில் பேசுகிறபடி நடக்காதவர்களை பத்ரிகைகளிலும், ப்ரஸங்க மேடைகளிலும் பலவாறு எழுதியும் எடுத்தும் சொல்லிக் கண்டிக்க வேண்டுமென்று நமது கரூர் நிருபர் சொல்லுகிறவைகளை நாம் ஒப்புக்கொள்ளுகிறோம். இதுநிற்க, ப்ரதி தாலுக்கா, ஜில்லா, மாகாணம் முதலிய கான்பரன்ஸ்கள் கூடும்பொழுதும், இந்திய நாஷனல் காங்கிரஸ் கூடும்பொழுதும் அந்தந்த ஜில்லா மாகாண கான்பரன்ஸின் கார்யதர்சிகளும் மற்றும் அக்கரையுள்ளவர்களும் சேர்ந்து ஸ்த்ரீகள் கான்பரன்ஸ் ஒன்று அச்சமயம் கூட்டிவைத்தால் அது எவ்வளவு அவச்யமென நாம் எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. ஒரு ஸ்த்ரீகள்கான்பரன்ஸை கூட்டிவைத்தல் கொஞ்சம் கஷ்டமாகத்தானிருக்கும். ஸரியானபடி முயற்சி எடுத்துக்கொண்டால் இது வெகு ஸுலபமாய் முடியும். சென்னையிலும் வெளியூர்களிலும் அநேக படித்த ஸ்த்ரீ ரத்னங்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஸௌகர்யங்களும் ஸமயங்க

ளும் கிடைக்கவில்லை யென்றே சொல்லவேண்டும். ப்ரதி ஆசாரச் சீர்திருத்தக் கான்பரன்ஸைக் கூட்டிவைக்கும் கார்யதர்சிகள் நாம் சொல்லும் யோசனையை கவனிக்கும்படி கோருகிறோம். கூடிய சீக்ரத்தில் சென்னையில் தனி ஸ்த்ரீகள்கான்பரன்ஸ் ஒன்று கூட்டிவைக்கிறதாக சில அபிமானிகள் முயற்சிக்கின்றனர். அப்படிக் கூட்டிவைப்பது மிகவும் அவச்யம்.

**The Stree Abeda Aikyananda Samajam.**

ஸ்த்ரீ அபேத - ஐக்யானந்த ஸமாஜம் :—சென்ற மாஸப் பத்ரிகையில் சென்னை ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த ஸங்கத்தார் நம் பெண்களுக்கும் ஸ்த்ரீகளுக்கும் வீடு வீடாய்ச் சென்று வீட்டுப் படிப்பு கற்பித்து வருகிறார்களென்று சொன்னோம். இப்போது இச் சங்கத்தார் 16 பெண்களுக்கும் ஸ்த்ரீகளுக்கும் வீட்டுப்படிப்பு கற்பித்து வருகிறார்கள். இந்த 16 பேர்களில் 9 பெண்களும் 7 ஸ்த்ரீகளுமாவார்கள். இச்சங்கத்தார் இந்த 16 பேர்களுக்குத் தமிழிலும் தெலுங்கிலும் பயிற்சி பெற்ற ஹிந்து ஸ்த்ரீகளைக் கொண்டு வீட்டுப் படிப்பு சொல்லிக் கொடுத்து வருகிறார்கள். இவர்களுக்கு கற்பிக்கப் படும் பாடங்கள் தமிழ் பாஷை, க்ருஹக்ருத்யம், ஸுகாதாரம் ஒழுக்கம், சரித்ரம் முதலியவைகளாகும். இங்க்லீஷ் பாஷைக் கற்றுக்கொள்ள விரும்பும் பெண்களுக்கு இச்சங்கத்தார் தகுதியான முயற்சிகள் செய்து வருகிறார்கள்.

வள்ளல்களாகிய ம-௱-௱-ஸ்ரீ C. ராமானுஜம் செட்டியார் அவர்களும் ம-௱-௱-ஸ்ரீ கண்ணன் செட்டியார் அவர்களும் இச்சங்கத்துக்கு போஷகர்களாயிருந்து ஆதரித்து வருகிறார்கள். ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த ஸங்கத்தார் நடத்தும் வீட்டுப்படிப்பு முறைக்கு ம-௱-௱-ஸ்ரீ C. ராமானுஜம் செட்டியார் மாதம் பதினைந்து ரூபாயும், ம-௱-௱-ஸ்ரீ கண்ணன் செட்டியார் மாதம் 8 ரூபாயும் உதவிவருகிறார்கள். இப் புண்ய கனவான்களுக்கு இச்சங்கத்தார் மிகவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் உதவியினாலும், இது விஷயத்தில் அக்கரை கொண்ட கனவான்களின் உதவியினாலும் இச்சங்கத்தார் நடத்தும் வீட்டுப்படிப்பு முறை அபிவ்ருத்தி யடையுமென்று நாம் நிச்சயமாய்ச் சொல்லுவோம்.



**Our Women Conference.**

நம் ஸ்த்ரீகளின் கான்பரன்ஸ் :—நம் தேசத்தில் எப்பாகத்திலும் தேசக்ஷேமத்தின் பொருட்டு பொதுஜன கான்பரன்ஸ்கள் கூடி வ்யவகாரங்கள் நடத்தப்படுவதுபோல், ஸ்த்ரீகான்பரன்ஸ்கள் கூடி அவர்களுக்குத் தேவையான விஷயங்களை விவகரிப்பதனால் நன்மைகள் அநேகம் உண்டாகுமென்பது நிச்சயம். இப்படிப் பலபாகங்களிலும் ஸ்த்ரீகள் கூட்டங்கூடி அவர்களுக்குரிய விஷயங்களைப்பற்றிப் பேசுவதை நாம் மிகுதியும் மெச்சுகிறோம். இம்மாதம் 8-ந் தேதி காக்கினாடாவில் தெலுங்கு ஸ்த்ரீகளின் கான்பரன்ஸ் ஒன்று நடந்தது, அக்கான்பரன்ஸில் ஸ்த்ரீகள் தங்களுக்கும் யூனிவர்ஸிடிகள் ஏற்படவேண்டுமென்றும், தங்களின் பொருட்டு இலவச ப்ரைமெரிப் படிப்பும் உயர்தரப்படிப்பும் கற்பிக்கப்படக் காலேஜ்கள் ஹைஸ்கூல்கள் எலிமெண்டெரி பாடசாலைகள் முதலியன ஸ்தாபிக்கப்படவேண்டுமென்றும் அக்கான்பரன்ஸ்களில் பேசியிருக்கிறார்கள். நமது சென்னையிலுள்ள டாக்டர் லக்ஷ்மிபதியின் மனைவியார் அந்த ஸ்த்ரீகளின் கான்பரன்ஸில் அக்ராஸனம் வஹித்து கார்யங்களை நடத்தினாரென்று அறிந்து ஸந்தோஷிக்கிறோம்.

இவர் அச்சமயம் பேசின விஷயம் மிகவும் உருக்கத்தையும் உத்ஸாஹத்தையும் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது. ஆந்த்ர கான்பரன்ஸையொட்டி ஆந்த்ர ஸ்த்ரீகள் கான்பரன்ஸ் நடத்தப்பட்டது போல திருச்சி ஜில்லா, மலபார் ஜில்லா, கொயம்பத்தூர் ஜில்லா, சென்னை மாகாண முதலிய ஆசாரச் சீர்திருத்தக் கான்பரன்ஸ்களோடு இம்மாதிரி ஸ்த்ரீ கான்பரன்ஸ் ஒன்று நடைபெறவில்லையே யென வ்யஸனிக்கிறோம்.

நம் சென்னை ராஜதானியில் ஸபையை அக்ராஸனம் வகித்து நடத்தவும், இன்னும் அதற்கு வேண்டிய பிறவற்றைச் செய்யவும் ஸஹோதரிகள் இல்லையென்று சொல்வதற்கில்லை. தற்கால நாகரீகத்திற் கொத்தவாறு தமிழிலே பாண்டித்யம்பெற்று வாசகதாட்டியுடன் கூச்சமில்லாமல் பேசும் பண்டிதை அசலாம்பிகையம்மை போன்றவர்களை நம்தமிழ் நாடு அடைந்திருக்கின்றது. ஆசாரச் சீர்திருத்தம் புகுந்து செவ்வைப் படுத்தியிருக்கிற இத்தமிழ் நாட்டில் இன்னும் அவர் போன்ற மேதையான ஸ்த்ரீகள் எத்தனை

யோபோர் இருக்கிறார்கள். ஸ்த்ரீகள் அடுப்பங்கரைக்குத்தான் யோக்யமானவர்கள் என்ற வார்த்தையைப் பொய்ப்படுத்த இம்மாதிரி கான்பரன்ஸ்களை ஏற்படுத்தி ஸ்த்ரீகளின் லக்ஷ்யங்களை அடையக் காலம் இதுதான். இக்காலத்தை நாம் வீணாக்கக்கூடாது, கான்பரன்ஸ்களேயல்லாமல், நாடெங்கும் ஜில்லாக்கள் தோறும் தாலுக்காக்கள், கிராமங்கள் குக்கிராமங்கள் தோறும், ஸ்த்ரீ ஸங்கங்கள் ஸ்த்ரீகளுக்காக ரீடிங் ரூம்கள் ஏற்படுத்தித் தகுந்தபடி செய்ய அந்தந்தப் பாகத்து ஸ்த்ரீகளே முன்னுக்கு வரவேண்டும். ஸ்த்ரீகள் கல்விகற்றவராயிருக்கிறதினால் பலவகையிலும் அவர் தம்மக்களின் கல்வியில் பெரிதும் ஒத்தாசை செய்யக் கூடியவராயிருக்கிறார்கள்.

இந்தியாவில் ஸ்த்ரீகளின் ஸங்கங்களும் கான்பரன்ஸ்களும் ஸ்த்ரீகள் ஸமூகத்தின் கல்வியைப் பெரிதும் வ்ருத்திக்குக் கொண்டுவரக் கூடியதாயிருக்கின்றன. ஸ்த்ரீகளின் முற்போக்கைப் பற்றிய முயற்சி முதல் முதலில் இங்கிலாந்தில் ஆரம்பித்த காலத்தில், அதற்கு அநேக துன்பங்ககளும் விக்னங்களும் ஏற்பட்டன. இப்படி ஏற்பட்டதனால் இங்கிலாந்தில் ஸ்த்ரீகளின் முதல் கான்பரன்ஸ் கூட்ட அநேக காலம் சென்றது. ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன் நம் ஸ்த்ரீகள் கான்பரன்ஸ் கூடுவது என்றால்,ஒரு புதுமையாகத்தானிருந்தது. முதன் முதலில் இந்த மாதிரி ஸ்த்ரீகளின் கான்பரன்ஸை இங்கிலாந்தில் ஏற்படுத்த முன்வந்தவர் மிஸஸ் எலிஸபெத் மாண்டேகு. அவருடைய புருஷன் பெரிய தனவந்தர். அவர் அவ்வம்மையைக்காட்டிலும் வயதில் பெரியவராயிருந்தாலும் படிப்பாளியல்லர். ஆனாலும், அவருடைய மனைவியார் லண்டனிலுள்ள தம்புருஷன் வீட்டை தம் புத்திசாலித்தனத்தால் தேவேந்திரலோகமும், அதற்கு இணையாகாதெனும்படி வைத்திருந்தார். அப்படிப்பட்ட படிப்பாளியான மிஸஸ் எலிஸபெத்மாண்டேகு தம் வீட்டில் அக்காட்டுப் பெண்மணிகளை அடிக்கடி அழைத்துக் கல்வி கற்பித்து அவர்களுடன் பேசிப் பழகுவதுடன் அவர்களையும் தூண்டி விஷயங்களை எடுத்துப் பெரிதும் கூச்சமின்றிப் பேசவைப்பார். 1750 ஆம் வருஷத்தில் தான் மிஸஸ் எலிஸபெத் மாண்டேகு முதல் ஸ்த்ரீகளின் கூட்டத்தைக் கூட்டினார். அது முதல் வீண் பொழுது போக்குவதைக் காட்டிலும் ஸ்த்ரீகளைக்கூட்டி நல்ல க்ரந்த காலக்ஷே



பங்களைசெய்யச்சொல்லி ஏற்பாடு செய்து வருவது, அவருடைய புருஷர் முதலியோர்க்குப் பிடிக்காது. ஆனாலும், இக்கூட்டத்தினைப் பார்த்து ஏதோ பெண்மணிகள் என்று அவர்கள் பரிகாசமாய்ச் சொல்வதுண்டு. எப்படி எவர் சொன்னாலும் அதை லக்ஷ்யம் செய்யாமல் மிஸஸ் எலிஸபெத் மாண்டேகு 18வது நூற்றாண்டில் நடத்த ஆரம்பித்த ஸ்த்ரீகளின் கூட்டம் வ்ருத்திமுகத்திற்கு வந்து கொண்டேயிருந்தது. 1775 ஆம் வருஷத்தில் இவ்வம்மையின் புருஷர் இறந்துபோக மிஸஸ் எலிஸபெத்மாண்டேகு அவருடைய ஆஸ்திக்குத்தலைவரானார். அதன் பிறகு அச்சமயம் முதல், ஸ்த்ரீகள் கல்விகற்று விஷயங்களை நடுச்சபையில் வாதிக்கும் நல்திறம் பெற வேண்டுமென்று அவர் அவ்வழியில் பாடுபடுவாராயினார். அவர்கள் பெரும்ஸபைகளைத்தலைமை வகித்து நடத்தவும் வல்லவராகவேண்டுமென்றும் அவர் ப்ரயாஸைப்பட்டார். 1791 ஆம் வர்ஷம் ஸ்த்ரீகள் ஸ்வதந்திரம் பெற வேண்டுமென்னும் முயற்சி செய்யப்பட்டது.

ஆகவே, ஸ்த்ரீகள் அஞ்ஞானத்தினின்றும் வெளிப்படத்தக்க காலம் இதுவே யென்னலாம். சில பழைய காலத்து மனிதர்கள் பெண்களுக்கு அடுப்பங்கரைதான் ஆலயம், சமையல் புஸ்தகம் தான் படிக்கத்தகும். மந்த்ரம் என்று சொல்பவர்களும் இன்னும் கிராமாந்திரங்களில் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் பொது ஜனாபிப்ராயம் இப்போது ஸ்த்ரீகள் மிகுதியும் முற்போக்கையடைய வேண்டுமென்றிருக்கிறது, இப்போது ஸ்த்ரீகள் புஸ்தகம் படிப்பதையாவது தம்கணவர்களுடன் தாராளமாய்ப் பழகுவதையாவது கண்டு முகஞ் சுளிப்பவர்களும் இகழ்கிறவர்களும் இல்லை. அக்காலங்களெல்லாம் இப்போது மலையேறிப்போய்விட்டது.

இப்போது கூடிய ஆந்த்ரா ஸ்த்ரீகளின் கான்பரன்ஸ் உண்மையில் முழு ஸ்த்ரீகளின் கூட்டமே. இங்கு கூடிய ஸ்த்ரீகளின் கணவன்மார்களும் தகப்பன்மார்களும் ஸஹோதரர்மார்களும் இக்கூட்டத்தில் பேச தம் ஸ்த்ரீகளுக்கு வேண்டிய ஸௌகர்யங்களைச் செய்து கொடுத்தார்களென்று அறிந்து ஸந்தோஷிக்கிறோம். இப்படியே ஆந்த்ர ஜில்லா கான்பரன்ஸுடன் கூட ஆந்த்ர ஸ்த்ரீகளின் கான்பரன்ஸ் கூடியதுபோல், நம் தமிழ் நாடுகளிலும் எல்லா கான்

பரன்ஸுகளுடனும், ஸ்த்ரீகளின் கான்பரன்ஸ்களும் கூடி தங்களுடைய நிலைமையை தாங்களே ஸரிப்படுத்திக் கொள்ள காலம் இதுவே என்று நம் ஸ்த்ரீகளுக்கு தைர்ய மூட்டுகிறோம்.

**Sir P. S. Sivasami Aiyar.**

ஸர் பி. எஸ். சிவஸாமி அய்யர் :—நமது சென்னை சர்வகலாசாலைக்கு இதுவரையில் வைஸ் சான்ஸலராக யிருந்தவர் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ் இவர் சமீபத்தில் ரஜாபெற்றுக்கொண்டு தமது ஜன்ம தேசத்துக்குப் புறப்பட்டுப்போனார். ஆகவே, இவர் வகித்தவந்த வைஸ் சான்ஸலர் பதவி காலியானது. இந்த ஸ்தானத்துக்கு ஒரு இந்தியரை நியமிக்கவேண்டுமென்று இந்தியப் பத்ரிகைகள் கதறின. மேலும், தற்போது ஆக்டிங் ப்ரதம ஜட்ஜாகிய மிஸ்டர் அப்துல் ரஹிம் அவர்களை அப்பதவிக்கு நியமிக்கலாமென்றும் ஒரு யோஜனையை கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்தன எவ்வளவு விண்ணப்பம் செய்துகொண்டும் கவர்னர் நிர்வாக கவுன்ஸிலில் மெம்பராகிய ஸர் பி. எஸ். சிவஸாமி அய்யரை கவர்ன்மெண்டார் அப்பதவிக்கு நியமித்திருக்கிறார்கள். நிற்க, கனம் ஸர் பி. எஸ். சிவஸாமி அய்யர், மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்துல் ரஹிம் ஆகிய இவ்விரு கனவான்களின் யோக்யதைகளைக் கவனிக்கும்போது மிகவும் அவைகள் புகழத்தக்கவைகளாகவே யிருக்கின்றன. இருவரும் தேர்ந்த படிப்பாளி, தேசப்பொதுக் கல்வி விஷயத்தில் அக்கரைகொண்டவர்கள்தான். ஆனால் எப்படியோ, கனம் ஸர் சிவஸாமி அய்யர் தேசப் பொது ஜனங்களின் செல்வாக்கையும் நம்பிக்கையையும் பெறவில்லை. கனம் ஜஸ்டிஸ் ரஹிம் அவர்களோ இந்தியர்களின் பூர்ண மதிப்பை அடைந்திருக்கிறார். கனம் ஸர் சிவஸாமி அய்யர் ஜனங்களின் மதிப்பைப் பெறாமலிருப்பதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. எது எப்படியிருந்தாலும் நெருப்பில்லாமல் புகை கிளம்பாது. சென்னை ஸர்வகலாசாலை வைஸ் சான்ஸலர் பதவிக்கு கனம் ஸர் சிவஸாமி அய்யரின் நியமனத்தை இந்தியப் பொது ஜனங்களும், பத்ரிகைகளும் ஏற்கவில்லையென்று தெரிகிறது.

---

**உயர்ந்த, பரிசுத்தமான, சிந்தனைகள் மனிதனைத் தெய்வதனுக்கும் மேலாக உயர்த்துகின்றன.**



# MOTHER TONGUE.

**By**

**Sri. P. Visalakshi Ammal.**

## தாய் பாஷை.

எனதன்புள்ள ஸஹோதரிகளே! நான் தாய் பாஷையைப்பற்றிக் கொஞ்சம் சொல்லவேண்டுமென்று ஆசைகொண்டவளாய் இருக்கிறேன். ஆனால், என்னால் கூடியவரையில் அதை எழுதுகிறேன்.

கடவுளால் ச்ருஷ்டிக்கப்பட்ட, ஊர்வன, பறப்பன, நடப்பனவாகிய ஜீவ வர்க்கங்கள் தங்கள் தங்கள் அறிவுக்குத் தக்கபடி தங்கள் இனத்துடன் தம் தம் கஷ்ட நிஷ்டூரங்களையும், ஸௌக்யங்களையும், தெரிவித்துக்கொண்டு ஜீவித்து வருகின்றன. இவைகள் பெரும்பான்மையும், தங்கள் எண்ணங்களைச் சப்தத்தினால் அதாவது ஒருவகை ஒலியால் ஒன்றுக்கொன்று தெரிவித்து வருகின்றன. தான் எந்த் வர்க்கத்தில் ஜனித்து தனக்குத் தன் தாய் எந்தப் பாஷையைப் பழக்கினாளோ அதுவே தாய்பாஷை என்னப்படும்.

ஜீவர்களுக்கு தங்கள் எண்ணங்களை எப்படித் தாய்பாஷையில் சுலபமாய் வெளியிடலாகுமோ, அதேவிதமாய் அந்ய பாஷையில் வெளியிடுவது கஷ்டம். தமிழ் நாட்டாருக்கு தமிழ் தாய்பாஷையும், தெலுங்கு தேசத்தவருக்கு தெலுங்கு தாய் பாஷையும், மலையாள தேசத்தவருக்கு மலையாளம் தாய்பாஷையும் ஆகும். இதே மாதிரி இங்கிலீஷ், ப்ரான்ஸ், ஜெர்மனி முதலான தேசத்தாருக்கு அவரவர்கள் தேசத்துப் பாஷைகள் தனித்தனி தாய்பாஷையாகும். நமது ஸஹோதரி ஒருவள் இங்கிலீஷ் பாஷையைப் படித்து பீ.ஏ., எம்.ஏ., (B.A., M.A.) முதலிய பரீக்ஷைகளில் தேறியிருந்தாலும் இங்கிலீஷ் ஜாதியில் பிறந்து பழகிப்பேசுபவளைப்போலப் பேசுவது அஸாத்யம்.

ஒவ்வொருவரும் தமது ஸ்வந்தபாஷையைப் போஷித்துக் காப்பாற்றி அதில் உள்ளபடி தேர்ச்சியடைந்த பிறகு, ஸாமர்த்யமுண்டானால் அந்ய பாஷையைக் கற்கலாம். அப்படிக்கில்லாமல் பால்யம் நீங்கி ஞானமுண்டாகும்போது தாய் பாஷையைக் கைவிட்டுப் பிறபாஷையைப் படிக்கப் புகுந்தால், பாலியம் முதல் நினைத்

துப் பேசிப் பழகிவந்த தாய்பாஷையும் கெட்டுப்போய், ஞானம் குன்றி வ்ருத்திக்கு ஹேதுவில்லாமல் போய்விடும். தாய் பாஷையைக் கைவிட்டு வேறுபாஷையை ச்லாகித்துப் படிக்கப் புகுதல் எப்படி இருக்கிறதென்றால், ஒருவன் தன் தாய்க்கு அன்ன வஸ்த்ரம் கொடுத்துக் காப்பாற்ற வகையற்றபோது, ஊரிலுள்ளவர்களுக்கு அன்னதானம், வஸ்த்ரதானம் செய்வதைப் போலிருக்கிறது. இன்னும் சுருக்கமாய்ச் சொல்லில், தாய்பாஷையைக் கைவிட்டவர்கள் மாத்ருத்ரோகிகள் ஆவார்கள். நமது ஸஹோதரிகளில் தாய் பாஷையை அலக்ஷ்யம் செய்வோர் அதிகமாக இல்லை.

ஆனாலும், தாய்பாஷை என்ன உயர்ந்தது? எந்தப் பாஷையில் நாகரிகம் வ்ருத்தியோ அந்தப் பாஷைதான் உயர்ந்ததென்று ஏன் சொல்லக்கூடாது? என்று சிலர் கேட்கலாம். மேலும் நமது தேசத்தை ஆளும் ஆங்கிலேயர் நாகரிகத்தில் விசேஷ வ்ருத்தியடைந்திருக்கிறார்களே? அவர்கள் பாஷையாகிய இங்கிலீஷை ஏன் மேலானதென்று சொல்லக்கூடாதென்றும் கேள்வி வரலாம்? இதற்கு ஸமாதானம் சொல்லுகிறேன்; தயைசெய்து கவனித்துவாருங்கள்! இங்கிலீஷ்க்காரர் நாகரிகத்தின் அபிவ்ருத்திக்குக் காரணம் அவர்கள் பாஷையா, அல்லது அந்த ஜாதியாரிடத்துள்ள விடாமுயற்சியும், ஒற்றுமையும், ஸ்வஜாதி அபிமானமும், ஸ்வஜனங்களை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவர வேண்டுமென்கிற காருண்ய புத்தியுமா? அன்றி வேறா? என்று யோஜித்துப் பாருங்கள்! நாம் ஆங்கிலேயரிடத்துள்ள உத்தம குணங்களைக் கண்டறிந்து, அவைகளை நம்முடைய பாஷாரூபமாக நமது ஜனங்களுக்கு வெளியிடலாம். ஜபானியர் இங்கிலீஷ்க்காரரிடத்துள்ள அநேக ஸாஹஸமான கார்யங்களைத் தங்களுடைய முக்ய தர்மங்களாகச் செய்துகொண்டதோடும் அவை ஸம்பந்தமான விஷயங்களைத் தங்கள் ஸ்வபாஷையாகிய ஜபான் பாஷையில் வெளியிட்டு அதனால் தங்கள் பாஷையைத் தினம் வ்ருத்திசெய்துகொண்டு வருகிறார்கள். பாஷை ஜட பதார்த்தம்; அது ஜனங்களை ஒட்டி நிற்கிறது. ஜனங்கள் பாஷையை ஒட்டி நிற்கவில்லை.

ஒரு பாஷையை மேலானதென்று எதனால் சொல்லமுடியும்? அதிலுள்ள க்ரந்தங்களைக்கொண்டுதான் சொல்லமுடியும். மேலும்



அந்த க்ரந்தங்களில் மனுஷ்ய வர்க்கத்தவர்கள் இஹத்தில் ஸர்வ ஸௌக்யங்களையும் அடைந்து பரத்தில் ஆநந்தத்தை அடையும்படியான ஞானங்களையும், தர்மங்களையும், நீதிகளையும், ஸர்வ ஜீவர்களிடத்தில் அன்பு பாராட்டி அவர்கள் படும் துயரங்களையும் தமதாக பாவிக்கும்படி செய்கின்ற காருண்யமாகிய உத்தமகுணத்தின் செய்கைகளையும் உபதேசித்திருக்கவேண்டும்.

அவ்வித க்ரந்தங்களில் இந்த ப்ரபஞ்சத்திலுள்ள எல்லாப் புஸ்தகங்களிலும் எது பெரியதென்று யோஜித்துப் பார்த்தால் அது "ஸ்ரீமஹாபாரத" மென்னும் இதிஹாஸமே என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். ஜீவகாருண்ய தர்மங்களையும் ஸர்வபிராணிகளும் நிர்ப்பயமாய்ச் சாந்தியுடனும், சரீர வலிமையுடனும், மனவுத்ஸாஹத்துடனும், வசிப்பதற்கு வேண்டிய ஸாதகங்களையும், சிற்றின்பங்களையும் வெறுத்து ஈச்வரபக்தி மேலிட்டு உண்மை ஞானம் உண்டாகும்படி செய்யக்கூடிய உபாயங்களையும் கற்பிக்கும் பாஷை எதுவோ, அதுவே மேலானதாகும்.

பி. விசாலாட்சி அம்மாள்.

---

## SRI RAMAYANA KUCHELAR-THRIJATAR.

By

**Pandit V. Subramania Aiyar,**
Sub-Editor, Swadesa Mitran.

### ராமாயண குசேலர்—த்ரிஜடர்.

குசேலர் குற்சிதமான அல்லது சிதைந்த வஸ்த்ரத்தைத் தரித்துக்கொண்டிருந்தமையாலேயே, குசேலர் என்னும் பெயர் பெற்றார். ஸ்ரீ மஹா பாகவதத்தில் இக்குசேலர் க்ருஷ்ணபக்தனாக விருந்து முக்தி பெற்றமையும், அவருடைய மற்றைய வரலாறுகளும் கூறப்பெற்றுள்ளன. ஸ்ரீராமபிரான் காலத்திலும் பரம பாகவதரான த்ரிஜடர் என்ற ராமாயண குசேலர் ஒருவர் இருந்ததாக, ஸ்ரீமத் வால்மீக ராமாயணத்திலிருந்து அறிகிறோம். குசேலரது வஸ்த்ரம் இருந்தாற்போன்றே த்ரிஜடர் தரித்திருந்த வஸ்த்ரமும் ஸஹஸ்ர த்வாரங்களையுடையதாயிருந்தது. குசேலர் மனைவிபோன்றே, நமது த்ரிஜடர் மனைவியும் பரிசுத்தமான ஒழுக்கமும்,

பாதிவ்ருத்யமும், பதிபக்தியும், ஸௌசிருசியுமுள்ள தெய்வப்பெண் போன்றிருந்தார். இருபத்தேழு நக்ஷத்தரங்களுக்கும் இருபத்தேழு புத்ரர்களையுடையராயிருந்த குசேலருக்கு மாறாக, ராமாயண குசேலராகிய த்ரிஜடர் எண்ணிறந்தபுத்ர பாக்யத்தை யுடையவராயிருந்ததனால், ஸ்ரீபாகவத குசேலரைக்காட்டிலும் இவர் மிக்கதரித்ரரென்பது நன்கு விளங்கக்கூடியதாயிருக்கின்றது.

ஸ்ரீபாகவத குசேலர், நாட்டிலிருந்து பகவந்நாம ஸங்கீர்த்தனத்துடன் வீதிகள் தோறுஞ்சென்று உஞ்சவ்ருத்திசெய்து, அதனைக்கொண்டு ஜீவனஞ் செய்து வந்தவர். ராமாயணகுசேலராகிய த்ரிஜடரோ, கோசல தேசத்துக்கருகிலிருந்த வனப்ராந்தியங்களில் வசித்து, அங்குக் காய் கிழங்குகளையும் பழம், சருகுகளையும், வயல்களில் உதிர்ந்த நெற்களையும் கொண்டு வந்து தம் எண்ணிறந்த சிசுக்கள் நிறைந்த குடும்பத்தை ஸம்ரக்ஷணஞ் செய்து வந்தவர். மரங்களிலிருக்கும் பழங்களை க்ரஹிக்க ஏற்பட்ட துறட்டுக்கோல், கிழங்குகளைத் தோண்டுவதற்கேற்பட்ட மண் வெட்டி அவைகளை நிறைப்பதற்கேற்ற கூடை, இவைகளே இவருடைய ஆஸ்தியாயிருந்தன. காட்டில் தமக்கு யதேச்சையாய் அகப்பட்டவற்றைக்கொண்டு இவர் காலந் தள்ளிவந்தவர். ஆஹாராதிகள் சில காலம் அகப்படாமல், குழந்தைகள்கூட இரண்டு மூன்று நாட்களுக்கொருதாம் ஸமயத்திற்கேற்றவாறு, ஆகாரம் பண்ணுவதுமுண்டு. இதிலிருந்து ஸ்ரீக்ருஷ்ணன் காலத்துக் குசேலருக்கும் ஸ்ரீராமான் காலத்துக் குசேலருக்குமுள்ள தாரதம்யம் நன்றாக விளங்கும்.

கைகேயியின் சொற்கேட்டுப் பிதுர்வாக்ய பரிபாலனம் பண்ணும்பொருட்டு ஸ்ரீராமன் நாடுதுறந்து, வனவாஸம்செய்யப் புறப்படுகையில் தமக்கு ஸ்வந்தமான ஆஸ்திகளையெல்லாம் எடுத்து ப்ராம்மணர்களுக்கு ஏராளமாகத் தானம் செய்தார். இராமபிரான் வஸிஷ்டபுத்ரரும், தமது ஆப்த நண்பருமாகிய ஸௌயக்ஞர் என்ற மகாத்மாவுக்குத் தமது யானையான ஸத்ருஞ்சயத்தையும், தமது தந்தக் கட்டில் முதலியவற்றையும், அவற்றிற்குரிய உபகரணங்களுடன் கொடுத்தார். ஸ்ரீ ஸீதாதேவியும் தமது ஆபரண முதலிய யாவற்றையும் ஸௌயக்ஞரின் பத்நிக்குக் கொடுக்கும்படி அவரிடத்திலேயே கொடுத்தார். ஸ்ரீராமன் தமது பொக்கிஷ முதலிய யாவற்றையும்



ஸத்ப்ராஹ்மணர் முதலியோர்க்கு ஏராளமாய் வாரிவாரி எடுத்துத் தானம் செய்தார்.

அச்சமயத்தில், காட்டிலிருந்து இங்குப் போகிறோம் என்று நினைக்காமல், ஸஞ்சாரம் செய்துகொண்டுவரும் அபார ஸம்ஸாரியான ப்ரஹ்மதேஜஸ் பொருந்திய த்ரிஜடர், தம்குழந்தைகளுடனும், பத்நியுடனும் அயோத்யா நகரம் புகுந்தார். வளர்ந்து உயர்ந்த யாக்கையையும், விசாலமான வக்ஷஸ்தலத்தையும், நேத்ரத்தையுமுடைய த்ரிஜடரைப் பார்த்து அவரது பத்நி, "ஏ ப்ராணநாதா அயோத்யா நகரத்து ஸ்ரீராமன் மஹாகுணவான் என்றும் கீர்த்திமானென்றும் ப்ராஹ்மண வத்ஸலன் என்றும் கேள்விப்படுகிறேன்! அவரைத் தரிசனம் செய்தல் நலம்" என்று என் மனதிற்படுகின்றது என்றாள். இது கேட்ட ஸாத்வியும், பக்திமானுமான ராமாயண குசேலராகிய த்ரிஜடர், தமது கந்தல் வஸ்த்ரத்தை ஸரிப்படுத்தி இறுக்கி இடுப்பிற் கட்டிக்கொண்டார். ராஜ ஸபையில் போகவேண்டிய உடையும் அதற்குவேண்டிய அழகும் தமக்கு இல்லாமற் போயினும், ஒருவாறு ஸரிப்படுத்திக்கொண்டு, ஸ்ரீராமனிருக்குமிடம் நோக்கி விரைந்து செல்வதானார். பாகவத குசேலர் த்வாரகையைநோக்கி, முன் ஸ்நேஹத்தை யொட்டிப்போனதுபோலில்லாது, ஸ்ரீராமர் காலத்துக் குசேலராகிய த்ரிஜடர், தனித்துப்போகாமல், தாம் முன்னும் தம் பார்யை பின்னும், குழந்தைகள் ஒவ்வொன்றாய்ப் பின்னும், தமது ஆஸ்தியாகிய துறட்டுக்கோல் முதலியவற்றுடன், ஸ்ரீராம ஸந்நிதிக்கு விஜயம் செய்தார். போகிற வழியிலுள்ள ஜனங்களின் தொகையோ அபரிமிதமாயினும், ஏன் ஆசார வாசலில் நுழைகின்றாய்? நீ யாவன்? உனக்கென்ன வேலை? என்று சொல்லும் சேவகர்களின் கடுமொழிகளின்றியே, இம்மஹான் உட்புகுந்தார். அங்கு கூடியிருந்த கூட்டமுழுவதும் அப்படியப்படியே கலைந்து இடங்கொடுக்க, இவர் வெகு தாராளமாய் கைத்தண்டத்துடன் உள்ளே சென்றார். ஸ்ரீ ஸீதாராமனைக் கண்ணினாற் கண்டார். தம் இருகைகளையும் தூக்கிய வண்ணமாய் அஞ்சலிசெய்துகொண்டு தாம் அதிக தரித்ரர் அதிக ஸம்ஸாரி என்று சொன்னார். குறிப்பினால் யாசகர்களின் மனதையறிந்து கொடுக்கும் கொடைவள்ளலாகிய ஸ்ரீ பகவான், கள்ளங் கவடில்லாத ப்ரஹ்மதேஜஸ்பொ

ருந்திய ப்ராஹ்மணரின் எண்ணத்தை அறிந்துகொண்டார். எனினும் அந்த ப்ரஹ்ம தேஜஸ்வியின் தேஜஸ்ஸை அங்குள்ளவருக்குக் காட்ட விரும்பி ஏ! ப்ராஹ்மணோத்தமரே! த்ரவியமெல்லாம் செலவழிந்துவிட்டன! அநேகம் கோக்களைத் தானம் செய்துவிட்டேன்! இன்னும் அநேகாயிரம்கோக்களிருக்கின்றன! உமது கையிலிருக்கும் தண்டத்தை இங்கிருந்து சுற்றி எறியும் என்று தமது கோக்களிருக்குமிடத்தைக் காட்டினர். உடனே ப்ராஹ்மணர் தமது கந்தல் வஸ்த்ரத்தை இறுக்கிக்கட்டி உடம்பை ஸரிப்படுத்திக்கொண்டு தண்டத்தைச்சுழற்றி எறிந்தார், அவர் சுழற்றி எறிந்த வேகம் 12 யோசனை நீளமும் 3 யோசனை யகலமுள்ள அயோத்யா நகரம்தாண்டி ஸரயூநதியையும்தாண்டி, ஸ்ரீராமனது கடைசிப்பசுவும் வ்ருஷபமுமிருக்குமிடத்தின் பக்கத்தில் வீழ்ந்தது. அத்தனை தூரம் வரையில் கோக்கள் மேய்ந்தனவானால் எவ்வளவு கோக்களிருந்திருக்க வேண்டுமென்று ஊகித்தால் அறியலாம்.

இதைப் பார்த்ததும் ஸ்ரீராமனையுள்ளிட்ட அங்கிருந்த ஸகலரும், ப்ரஹ்ம தேஜஸின் பலத்தை மிகுதியும் வியந்து கொண்டாடினார்கள். ஸ்ரீ ராமனது ஆக்ஞையினால் அத்தனை கோக்களும், அவற்றின் கறவைப் பாத்ரங்கள், இடையர்கள் அவர்களுக்கு ஸர்வ மான்ங்கள் கட்டுத்தறிகள், அவைகளுக்கு ஆகாரத்திற்கு வேண்டிய ஆகாரச்செலவுத்தொகைமுதலியவற்றுடன் அவருடைய ஆச்ரயங்கொண்டு சேர்க்கப் பெற்றன. ஸ்ரீ பகவானும் அவ்வளவு தூரம் கழிவீசியெறிந்ததைக் கண்டு ஆச்சர்யப்பட்டு, அவரைக்கட்டிக்கொண்டு தமது அங்கஸங்கத்தைக் கொடுத்து ஆநந்தப்படுத்தினார். பகவான் பின்னும் த்ரிஜடரைநோக்கி, ஏதாவது வேண்டுமா என்றுகேட்க தபஸியாகிய தமக்குக் கோக்களைத்தவிர யாதொன்றும் வேண்டுவதில்லையென்றும், பணத்தினால் தமக்கு ஆகவேண்டியது யாதொன்றுமில்லையென்றும் கூறி, பகவானை வாழ்த்தித் தமது பத்நி குழந்தைகள் ஸஹிதமாய்த் தம்மிருப்பிடமாகிய வனத்திலுள்ள ஆச்ரமத்திற்கு விரைந்து சென்றார். த்ரிஜடரை, இவ்வாறு கழியெறிந்து விடுக்கக் கேட்டமைக்காகப் பெரிதும் மன்னிக்கும்படி ஸ்ரீ பகவான் தமது பக்தனாகிய த்ரிஜடரைக் கேட்டுக்கொள்ளுகையில், தாம் ப்ரஹ்ம தேஜோபலத்தைக் காட்டுமாறு அவ்வாறு செய்யச்சொன்னதே தவிர மற்றெவ்விதமான எண்ணமுங்கொள்ளவில்லையென்று த்ரிஜடருக்குச் சொன்னார். ஸ்ரீபாகவதத்திலுள்ள குசேலருக்கும் த்ரிஜடராகிய ராமாயண குசேலருக்கும் ஒற்றுமை வித்யாஸங்களிருப்பினும் த்ரிஜடரைப் பலவிதங்களில் ராமாயண குசேலர் என்று சொல்வது தவறாகாது.

வீ. சுப்பிரமணிய ஐயர்.

---

# A WARNING.

By
**Mrs. Jagadish Chandra Bose.**

## ஒரு எச்சரிக்கை.

வங்காள வாஸியாகிய ஸ்ரீமான் ஜகதீச சந்த்ரவஸு அவர்களைப்பற்றி நம் பத்ரிகை மூலமாயும் இதர பத்ரிகைகள் மூலமாயும் நமது ஸஹோதரிகள் கேட்டும் படித்துமிருக்கலாம். ஸ்ரீமான் ஜகதீச சந்த்ரவஸு உலக ப்ரஸித்தி பெற்றவர்; இவர் ஒரு விஞ்ஞான சாஸ்த்ர நிபுணர். அமெரிக்கா தேசத்துச் சாஸ்த்ர நிபுணர்களும் ஐரோப்பிய சாஸ்த்ர நிபுணர்களும் இவரின் சாஸ்த்ரப் பயிற்சியைப்பற்றி மிகவும் புகழ்ந்து எழுதியிருக்கிறார்கள். இவரை ஒரு அவதார புருஷரென்று சிலர் மதிக்கின்றனர். இப்பேர்ப்பட்ட திவ்ய புருஷருக்கு ஏற்ற மனைவி ஒருவர் வாய்த்திருக்கிறார். இப்பெண்மணி மிகுந்த தெய்வ பக்தியுடன் தேசபக்தி ராஜபக்தி நிறைந்தவர். தம் இந்திய ஸஹோதரிகளின் ஜாதீய அபிவ்ருத்தியில் இவர் மிகவும் அக்கறைகொண்டவர். இம்மாது சிரோன்மணி மிகவும் டம்பமற்றவர். இந்த அம்மாளின் சில புத்திமதிகள் நம் ஸஹோதரிகளுக்கு மிகவும் உபயோகமாயிருக்கிறதால், நாம் அவைகளை கீழ்ப்ரசுரம் செய்கிறோம்.

(1) மேல்நாட்டு நாகரிகத்தைக் கண்டு மயங்கிவிடாதே; மேல்நாட்டார் வழக்கங்கள் யாவும் சிறந்தவை யென்ற தப்பு அபிப்ராயம் கொள்ளாதே.

(2) மேல்நாட்டார்கள் கேவலம் பணத்தை ஸம்பாதிப்பதிலும் பட்டப்பெயர் பெறுவதிலும், தங்கள் சரீர பலத்தை வ்ருத்தி செய்வதிலும் தம் காலம் முழுவதையும் செலவழிக்கிறார்கள்.

(3) இந்தியாவில் எப்படி ஜாதி பேதங்களிருக்கின்றனவோ, அப்படியே மேல் நாடுகளிலும் இருக்கின்றன. ஆனால், இவை இரண்டிற்கும் ஒரு வித்யாஸம் இருக்கிறது. மேல்நாட்டு ஜாதிபேதத்தின் காரணம் பவுன்களும் டாலர்களுமேயாம். மேலும், அவர்களது பேதம் தோல் நிறத்தால் உண்டாகிறது. ஆனால், ஹிந்துக்களின் ஜாதி பேதங்களுக்குக் காரணமோ குணத்தினால் உண்டாகிறது.

(4) மேல் நாட்டு ஜன ஸமூகக் கட்டுப்பாடுகள் கூடிய சீக்ரத்தில் சிதறவடிக்கப்படும். ஏனெனில், எரி மலையைப்போன்ற இந்தப் பணம் ஸம்பாதிக்கும் போராட்டம், கடைசியில் திடீரென்று பற்றியெரிந்து விடும். அப்பொழுது அவர்கள் தம் ஜன ஸமூகக் கட்டிடத்தை ஹிந்துக்களுடையதைப்போல் நிர்மாணிக்கவேண்டி வரும்.

(5) இந்தியாவை நாம் நேசிக்கவேண்டும்; அதற்கு ஸேவை செய்யவேண்டும்; ஆனால், அந்ய நாட்டாரை வெறுக்கலாகாது. இயேசு கிறிஸ்துவின் "அன்பு" என்னும் மதத்தைப் போதிக்க வரும் அயல் நாட்டுப் பாதிரிகள் சில விஷயங்களில் நம்மிந்தியாவுக்குப் பிழை செய்தாலும், அவர்களை நாம் வெறுக்கக்கூடாது; ஸத்யமே ஜயிக்கும்.

(6) அமெரிக்க, ஐரோப்பிய கல்வி கற்பிக்கும் முறைகளை நன்றாக ஆராய்ச்சி செய்து, எவை நம்மவர்களுக்குக் கல்வி புகட்ட அநுகூலமானவையோ, அவைகளை நாம் ஸந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டு, இந்தியாவில் அவைகளைப் பரீக்ஷை செய்து பார்க்கவேண்டும்.

(7) ஐரோப்பியர்களுக்கும் ஹிந்துக்களுக்கும் ஒருபோதும் பரஸ்பர விவாஹம் நடக்கக்கூடாது. அவர்கள் நம்முடன் ஒத்து வாழ ஒருக்காலும் முடியாது. அவர்கள் நம்முடைய மனோ லக்ஷ்யங்களை மதிக்க மாட்டார்கள். அவர்கள் நமது பழைய வழக்கங்களின் மேன்மையை ஸரியானபடி உணரமாட்டார்கள்.

(8) அமெரிக்கப் பெண்மணிகள், மனத்தைக்கவரத்தக்க இனிமை பொருந்தியவர்கள்தான். ஆனால், அவர்கள் அதிகச் செலவாளிகள்; ஏழை இந்தியர் அவர்களின் டம்பச் செலவுகளுக்கெல்லாம் பணங் கொடுக்கச் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள்.

மிஸஸ் ஜகதீச சந்த்ரவஸு.

---

ஒருவன் துக்கப்படும் பொழுது மற்றவர்கள் பக்கத்திலிருந்து ஸந்தோஷிக்க மாட்டார்கள். அவர்களும் அவனுக்கு துக்கத்தை ஆறுதல் செய்வார்கள். இது உலக இயற்கை.—ஆரடஸ்.

## MANGAYYARKARASIAR.

### மங்கையர்க்கரசியார்.

மதுரையில் கூன் பாண்டியனென்று ஒரு அரசனிருந்தான். அவன் முதுகு கூனாயிருந்ததனால் அவனுக்கு அப்பெயர் வரலாயிற்று. அவன் நல்ல போர் வீரன். சமணர்களது கொள்கைகளுக்குட்பட்டு சமண மதத்தில் சார்ந்திருந்ததனால் அவன் நாட்டிலிருந்த சைவ வைஷ்ணவ கோயில்களெல்லாம் அடைபட்டுப்போயின. அவன் சேரசோழ ராஜ்யங்களின்மேல் படையெடுத்துச் சென்று அவற்றை ஜயித்தான். சோழராஜனுக்கு மங்கையர்க்கரசியென்று ஒரு பெண்ணிருந்தாள். சோழ ராஜனை வற்புறுத்தி அவன் அப்பெண்ணை மணந்தான். அவள் சைவ மதத்தில் ஈடுபட்டவள். பாண்டியன் சமணனாயிருந்தும் தந்தை வார்த்தையைத் தட்டமுடியாதவளாய் அவள் அவனை மணந்துகொண்டாள். அவள் வரும்போது தன் தந்தையினது மந்திரியாகிய குலச்சிறையைத் தன்னோடு பாண்டிய நாட்டுக்குக் கூட்டிக்கொண்டு வந்தாள். கூன் பாண்டியனது அரண்மனைக்கு வந்ததும் தன் சைவமதாசாரங்களை விட்டுவிடவேண்டி வந்தது. என் செய்வாள் பாபம்! இதனாலேயே இரண்டு விதமான மதக்கொள்கைகளுள்ள குடும்பத்தில் பெண் கொடுத்துவாங்குதல் தவறென்று பெரியோர்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். மேலும், கணவனோ ஒரு பெரிய அரசன். அதனால் கூன் பாண்டியனிடத்து மங்கையர்க்கரசியாருக்கும் குலச்சிறைக்கும் மெத்தப் பயமுண்டு. மேலும், புருஷனது இஷ்டத்துக்கு விரோதமாக நடப்பது நல்ல மனைவிக்கழகல்ல என்பதை மங்கையர்க்கரசி உணர்ந்திருந்தாள், ராஜாவை விரோதிப்பதும் மந்திரிக்கழகல்ல. இவ்விருவருக்கும் அரசன் புறமதத்தில் ஆழ்ந்துவிட்டாரே யென்றகவலையுண்டு. என் செய்வார்கள்! எனது வேண்டுகோளைத் தரமாட்டாரா இறைவன் என்று ப்ரார்த்திக் கொண்டிருந்தாள். என்றாலும், இவ்விருவர்க்கும் அரசனது மனங்கோணாது நடப்பதிலேயே பரமதிருப்தி. தங்களது சைவமதவழிபாடுகளை மறைவில் செய்துகொண்டிருந்தார்கள். தங்களது மதவழி பாடு ஆத்மார்த்தமானதால் தங்கள் வழிபாட்டைக் கண்டு

ஸந்தோஷிக்கவேண்டியவர் இறைவனாகிய கடவுளேயாதலால், அவர்கள் அப்படிச் செய்துவந்தார்கள். ஒரு குடநீரில் கொஞ்சம் விபூதியைத் தெளித்து அந்நீரை விபூதியாக அணிவார்கள். மானஸம், வாசகம், காயிகம் என்னும் மூன்றுவகை க்ரியைகளில் மானஸமே சிறந்ததாதலால் ஈச்வரனை மானஸமாகவே பூஜிப்பார்கள்.

இப்படியிருக்க, சமணர்களது மதாசாரங்களும் நடவடிக்கைகளும் வரவரத் தாழ்ந்துகொண்டே வந்தன. முதலில், எம்மதமும் நல்ல எண்ணங்களோடும் மேலான நோக்கங்களோடுமே ஸ்தாபிக்கப்படுகின்றன. அம்மதத்தை யநுஸரிக்கும் ப்ரமுகர்களும் மனத் தத்துவங்களிற் சிறந்து ஜனஸமூகத்திற்கு ஒரு மதாணிபோல் நிற்கிறார்கள். வடமொழி, தமிழ், கன்னடம் இப்பாஷைகளில் நிகண்டு செய்தவர் சமணர்கள் என்றால்! அவர்களது கல்விப் பெருமையை நாம் எவ்வளவு கொண்டாடவேண்டும், என்றாலும், பிற்காலத்துச் சமணர்களது நடையுடை பாவனைகள் மிகவும் கெட்டுப்போயின. அவர்கள் செய்த தீத்தொழில்களுக்குக் கங்குகரையில்லை. இப்பேர்ப்பட்ட சமணர்களை யழிக்கவென்றே கடவுளது இச்சையிருந்ததால் அக்காலத்துச் சீகாழியில் ஸம்பந்தரென்று ஒரு பெரியவர் சிவபாதஹ்ருதயர் என்னும் ஒரு வேதப்ராமணருக்குப் பிள்ளையாய்ப் பிறந்திருந்தார். அவர் சிறுவயதிலேயே அம்பிகையினது ஞானவருள்பெற்று விளங்கினார், அவர் தமது வாத சக்தியினால் சோழநாட்டிலுள்ள சமணர்களையெல்லா மடக்கி அவர்களது குறைவுபாடுகளை யவர்களுக்கு உணர்த்தி அவர்களைச் சைவராக்கினார். அவருக்குப் பாண்டியநாட்டுக்குப் போகவேண்டுமென்று இச்சையிருந்தது. மதுரையிலுள்ள சிவன்கோவில் நெடுநாளாகப் பூட்டிக்கிடப்பதைக் கேட்க அவர் ஸஹிக்கவில்லை. என்றாலும், அவர் யாது காரணத்தாலோ பாண்டிய நாட்டு ப்ரயாணத்தைக் காலஹரணஞ்செய்துகொண்டே வந்தார்.

நிற்க, ஸேதுஸ்நானத்துக்கு வந்திருந்த ஒரு ப்ராமணன் மதுரைக்குவந்து மீனாட்சி ஸுந்தரேச்வரரது தரிசனஞ் செய்ய விரும்பினான். ஆனால், கோவில் கதவு அடைப்பட்டிருந்தது. மிகுந்த துக்கத்தோடு அவன் மதுரையை விட்டு நீங்க எண்ணினான். இதற்கு முன்னரே சைவ அந்தணாளர் அவ்வழிப்போவாரைக் கூட்டிக்



கொண்டு வந்து தன்னெதிரில் விடும்படி மங்கையர்க்கரசியாரால் நியமிக்கப்பட்டிருந்த வேவுகாரரில் ஒருவன், அவ்வந்தணனைக் கண்டு அந்தப்புரத்துக்குக் கூட்டிவந்தான். அவனைக்கண்ட அரசியார் அன்புடன் எதிர்கொண்டு ஆஸனமளித்து யோகக்ஷேமம் விசாரித்துத் தம் மனக்குறைகளை வெளியிட்டார். அவனும் ஞானஸம்பந்தரது அருட்செயல்களை உரைத்தனன். அரசியார் ஆநந்தங்கொண்டு ப்ராமணனை நோக்கி, 'ஐயா, நீர் தீர்த்த யாத்ரை முடிப்பதற்கு முன் ஸம்பந்தரிடத்து எனது மனோவ்யாகூலங்களைச் சொல்லி அவரை இம்மதுரைமாநகருக்கு அனுப்பி விட்டுப் பின்னர், நீர் யாத்ரைமேற் செல்லும்படி ப்ரார்த்திக்கிறேன், என்று சிரமேல் கரங்கூப்பினவளாய்ச் சொல்ல, ப்ராமணனும் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு அவரிடத்து ஸன்மானமும் விடையும்பெற்றுப் போனான்.

அக்காலத்து அப்பர் ஸ்வாமிகளும் ஸம்பந்தரும் வேதாரண்யத்திலிருந்தார்கள். ப்ராமணன் அவர்களைத் தரிசித்து நமஸ்கரித்து மங்கையர்க்கரசியாரது பேரவாவை வெளிபடுத்தினான், ஸம்பந்தர் சமணர்களை யழிப்பதே கார்யமாகத் த்வஜங்கட்டிக்கொண்டிருந்தவராதலால் உடனே புறப்பட்டார். அப்போது திருநாவுக்கரசாகிய அப்பர் சமணர்கள் பொல்லாதவர்களென்று கூறித், தன்னை சுண்ணாம்புக் காள்வாயில் போட்டும், யானையின் காலால் இடறவிட்டும், கல்லைக் கட்டி கடலிலெறிந்தும் ஹிம்ஸித்தவர்களாதலால் ஒரு நல்ல நாள் பார்த்துப் போவது நல்லது என்றார். ஸம்பந்தருக்கு அது பிடிக்காமல், "வேயுறுதோளிபங்கன்" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடிப் புறப்பட்டார். உலக கார்யங்களில் ஈடுபட்டு லாபத்தைக் கருதித் திரிந்துழலும் நம்போலியருக்கல்லவோ நாளும் கிழமையும். ஈசனுக்கு அடியாராய் அவரது குணாநுபவங்களில் ஈடுபட்டவராய், தனது செயலெல்லாம் ஈச்வரார்ப்பணச் செய்கைகளாய்ச் செய்யும் பெரியாருக்கு நாளும் நவக்ரகங்களும் பார்க்கவேண்டுமா? உடனே ஸம்பந்தர் முன்வைத்த காலை பின் வையாதவராய் மதுரைக்கு வந்து சேர்ந்தார். மதுரையைக் கண்டதும் அவருக்குண்டான ஆச்சர்யம் என்னே!

## மங்கையர்க்கரசியார்.

"வீடு அலால் அவா இலாய் விழுமியார்கள் நின்பதம்
பாட்லால் அவாயிலாய் பரவநின்ற பண்பனே;
காடுஅலால் அவா இலாய் கபாலி! நீள்கடி (ம்) மதில்
கூடல் ஆலவாயில் ஆய்கலாயது என்ன கொள்கையே"

(இ-ள்) மோட்ச நிலையல்லாது ஆசையற்றவனே! ஸநகாதி முனிவர்பாடி பரவசப்படுத்தப்பட்டவனே! அல்லது தட்சணா மூர்த்தி யவஸரத்தில் நின்றவனே! தில்லைக்காளியை ஜயித்து ஆசையை முனிந்துகாட்டினவனே! கபாலீ! நீண்ட காவல் பொருந்திய மதில் சூழ்ந்த மதுரையில் (மனைவிகொண்டு அரசுபுரியத் தொடங்கிய) நினது கொள்கையை என்னென்று சொல்லுவது!

நிற்க, ஸம்பந்தரை மங்கையர்க்கரசியார் கண்டதும் பால் மணம் நீங்காத சிறுபிள்ளை அத்துஷ்டச் சம்மணர்களை யெப்படி ஜயிப்பார் என்று ஸந்தேஹித்து நின்றார். அவரது முகக்குறிகளில் அவரது எண்ணத்தைக் கண்ட ஸம்பந்தர்.

'மானின் நேர்விழிமாதராய்! வழுதிக்குமா பெருந்தேவி! கேள்
பானல்வாய் ஒரு பாலன் ஈங்கு இவன் என்று நீபரிவு எய்திடேல்
ஆனைமாமலை ஆதியாய இடங்களில் பல அல்லல் சேர்
ஈனர்க்கு எளியேன் அலேன் திரு ஆலவாய் அரன்நிற்கவே.

என்று பாடி அவர் மனத்தை ஆற்றினார். பின்பு மங்கையர்க்கரசியாரது உத்தரவின் பேரில் குலச்சிறையார் அச்சம்பந்தருக்கு விடுதி அமைத்துக் கொடுத்தார்.

---

நான் துஷ்ட ஸகவாஸத்தினால் கெட்டுப் போய்விட்டேன். அதோடு கூட தூக்கமும் அதிகரித்து என்னைக் கெடுத்தது.—ஹோமர்.

* * * *

உலகத்தில் ஸகல ஜனங்களுக்கும் ஒரு சத்ரு இருக்கிறது. அது தூக்கமே. நாம் தூக்கத்தை அடக்கியாளவேண்டுமேயொழிய நம்மை அது அடக்கி ஆளக்கூடாது.—ஹோமர்.

* * * *

மங்கையர்க் கரசியார் மிகுந்த சிவபக்தியுடையவர். அவர் பக்தியினால் துஷ்டர்களை வென்றார்.

# AMBOPAKIANAM.

## அம்போபாக்யானம்.

### பரசுராமரும் பீஷ்மரும்.

சந்தனு புத்ரராகிய பீஷ்மர், மஹா பராக்ரமம் பொருந்திய பரசுராமரது சிஷ்யராவார். சந்தனுவாகிய தம் தகப்பனாருக்குச் செய்த மறு விவாகத்தின்பொருட்டு, கங்கா புத்ரனாகிய பீஷ்மர் உலகமறிய ப்ரஹ்மசர்ய வ்ருதத்தை தம் ஜீவ்யகாலபர்யந்தம் அநுஷ்டித்து வந்தார். தம்முடைய தம்பியாகிய விசித்ர வீர்யனுக்கு மணம் புரிவிக்கக்கருதி, பீஷ்மர், காசிராஜாவின் பெண்கள் ஸ்வயம்வரத்திற்குச் சென்றார். புஜபலமுடையவன் கன்னிகைகளைக் கொண்டு போகலாமென்று அவ்விராஜனின் சபதமாகையால், பீஷ்மர், அந்த ஸ்வயம்வரத்தில், அம்பை, அம்பிகை அம்பாலிகை என்ற காசி ராஜன் புதல்விகளைத், தமது தேர்த்தட்டில் தூக்கி வைத்துக்கொண்டு, பராக்ரமமுள்ள அரசர் தம்மை எதிர்த்துப் போர் புரியலாமென்றார். வலிமையுள்ள அரசர் பலரும், பீஷ்மரால் அபஜயப்பட்டு ஓடினார்கள். பிறகு, பீஷ்மர் அக்கன்னிகைகளைக்கொண்டு ஹஸ்தினாபுரம் சேர்ந்து, விசித்ரவீர்யனுக்கு அவர்களைக் கல்யாணம் செய்விக்க ஆயத்தமானார்.

கல்யாணம் செய்ய ஆயத்தமாகும் ஸமயத்தில் அப்பெண்களில் மூத்தவளாகிய அம்பை யென்பவள் பீஷ்மரை நோக்கி, தான் முன்னமே ஸாலவராஜனிடத்தில் காதல் கொண்டிருக்கிறதாலும் அம்மன்னனும் தன்னிடத்தில் ப்ரியம் வைத்திருக்கிறதாலும் தன்னை அவ்வரசனிடத்து அனுப்புதலே தகுதியானதென்று சொன்னாள். பீஷ்மரும், மற்றொருவனை மனதினால் வரித்தவளை நிர்ப்பந்தித்து கல்யாணம் நடத்தல் அநுசிதமென்று கருதி. அவளைத் தக்க பந்தோபஸ்துடன் ஸாலவ ராஜன் ஸபைக்கு அனுப்பினார். ஸாலவன், பீஷ்மரின் வீர்யத்திற்குப் பயந்து, அம்பையை எவ்விதத்திலும் அங்கீகரிக்காது திரஸ்கரித்து விட்டனன். அம்பை மீண்டும் பீஷ்மரிடத்துப் போக வெட்கமுடையவளாயும், தன் பிறந்

தவீடுநோக்கி போகவும் பயமும் அவமானமுமடைந்தவளாயும், இருந்தனள். கடைசியாக, மஹரிஷிகள் வஸிக்கும் கானகங்களிற் புகுந்து தபஸினாலாவது வேறெவ்விதமாகவாவது ஜீவனை ஒழித்துக் கொள்வது என்று அவள் போயினாள். மிகவும் அழகுடையவளாய் அதிக துக்கமேலிட்டுக் கண்ணீர் வடித்த முகத்துடன் வருவது பார்த்த அநேக ரிஷிகளும் ரிஷி குமாரர்களும், இவள் ஸமீபம் சென்று இவளை ஆற்றித் தேற்றத் தொடங்கினார்கள். தன் குறைகளையும், பீஷ்மரிடமும், ஸாலவனிடமும் தனக்கு நேர்ந்த விஷயங்களையும் கூறி ப்ரலாபித்தாள். பிறகு, மஹரிஷிகள் அவளுக்கு எவ்வளவோ தேறுதலான புத்திமதிகள் சொல்ல, அவள் அவைகளுக்குச் செவி கொடுக்காமல் தான் தபஸியாகவே மாற உபதேசம் செய்யவேண்டுமென்று ஓரே பிடிவாதமாயிருந்தாள்.

இப்படி யிருக்கையில், அவ்விடத்தில் மஹரிஷியான ஹோத்ரவாகன் என்னும் பெரியவர் வந்து சேர்ந்தார். அங்கிருந்த ரிஷிகள் யாவரும் அவரைக் கண்டு வணங்கிப் பூஜித்தார்கள். உபசாரங்கள் நடந்தேறி அவர் உட்கார்ந்தவுடன், அங்கு நிற்கும் பெண்ணைப் பற்றி அவர் விசாரித்தார். மஹரிஷிகள் அம்பையின் பூர்வோத்தரங்களைத் தெரிவித்தார்கள். க்ஷத்ரிய தபஸியாகிய ஹோத்ரவாகன் அம்பை தம் தௌஹித்ரியென உணர்ந்து, குழந்தையைத் தம்மருகழைத்து அவளது தௌர்பாக்ய தசையைப்பற்றி மிகுதியும் வருத்தமுற்றார். தமக்குப் பரசுராமர் நிரம்ப வேண்டியவரென்றும் அவருடைய அநுக்ரஹத்தினால், பீஷ்மரிடமே அவளைச் சேர்க்கலாமென்றும் சொன்னார். அச்சமயத்தில் பரசுராமருடைய வாசஸ்தானமாகிய மஹேந்த்ர பர்வதத்திலிருந்து அவரது சிஷ்யன் அகிருதவ்ருணன் என்பவர், அங்கு அப்போது வந்து சேர்ந்தார். ஹோத்ரவாகனும் தாம் மஹேந்த்ர பர்வதத்திற்குப்போய்ப் பரசுராமரைப் பார்க்க இருந்ததாக அகிருதவ்ருணருக்குச் சொன்னார். அவர் தாம் மஹேந்த்ரபர்வதத்திலிருந்து வருவதாகவும், பரசுராமர் ஹோத்ரவாகனைப் பார்க்கவே இவ்விடம் வருவதாகவும் மொழிந்தார்.

இப்படி இரவு காலம் கழிய, க்ஷத்ரிய குலத்தை வேரறுத்த பரசுராமர் விடியற்காலையில் அங்கு தோன்றினார். வந்தவரை அங்கிருந்த ரிஷிகள் எல்லோரும் நல்வரவேற்றார்கள். ஹோத்ரவாகன், தாம்



மஹேந்த்ரபர்வதத்திற்கு வர இருந்த காரணத்தையும், தம் தௌஹித்ரியின் நிலைமையையும் ஆதியோடந்தமாய்க் கூறினார். பரசுராமரும் அம்பையின் அபிப்ராயத்தைக் கேட்க, தன்னுடைய அப்போதைய நிலைமைக்குப் பீஷ்மரே காரணமாயினார் என்றும், அவரே தக்கவாறு தன்னை மணந்து கொள்ளாவிடில் தண்டிக்கப் படல் வேண்டுமென்றும்; ஸாகஸத்துடன் கூறினாள். அகிருதவ்ருணனென்ற அவருடைய சிஷ்யரும், அபலையான ஸ்த்ரீகள் ரக்ஷிக்கப்பட்டு, பீஷ்மர் தண்டிக்கப்படவேண்டுமென்றும் பரசுராமருக்கு எடுத்துரைத்தார். மேலும், குரு க்ஷேத்ரத்திற்கு அருகில் ஸ்யமந்தகம் என்னும் மடுக்களில் இரத்தத்தினால் பிதுர்தர்ப்பணம் பண்ணினபொழுது, தம் வல்லமையால் எல்லோருக்கும் மேம்பட்டு விளங்கும் க்ஷத்ரியனைத் அடக்குகிறதாக ஸத்யம் பண்ணியிருக்கிற தாங்கள், பீஷ்மரை நிக்ரஹம் பண்ணவேண்டுவது அவசியம்தான் என்றும் சொன்னார். இது கேட்ட பரசுராமர் ஆ! அப்படியே ஸரியென்றுசொல்லி, அநேக மஹரிஷி கணங்களுடனும், தம்மைச் சரணமடைந்த அம்பையுடனும், தம் சிஷ்யருடனும் ஹஸ்தினாபுரத்து எல்லை சேர்ந்து பீஷ்மருக்குச் சொல்லியனுப்புவித்தார்.

பீஷ்மரும், தம் ஆசார்ய ஸந்நிதானத்திற்குச் செய்யவேண்டிய உரிய மரியாதை பலவற்றுடனும் வேத கோஷங்களுடனும், பூர்ண கும்பங்களுடனும், விசேஷமான உபசாரங்களுடனும் தம்மாசாரியரை நல் வரவேற்று விசேஷமாகப் பூஜித்தார். இப்பூஜைகளொன்றையும் பரசுராமர் மனப்பூர்வமாய் அங்கீகரிக்கவில்லை. உபசாராதிகள் முடிந்ததும், பரசுராமர் தம்முடன் வந்திருக்கும் அம்பையை அங்கீகரித்துக் கொள்ளுமாறு தம் சிஷ்யனாகிய பீஷ்மருக்கு ஆக்ஞாபித்தார். சந்தனுபுத்ரனோ ஏற்கனவே, அம்பையைத் தம் குடும்பத்தில் ஒத்துக்கொள்வது ஸரிப்படாத விஷயமென்றும், அஃது முன்னமே தீர்மானித்துவிட்ட விஷய மென்றும், வெகு விநயத்துடனும், பக்தி ச்ரத்தையுடனும் தாழ்ந்து, அவ்விஷயம் தவிர வேறு விஷயங்களில் ஆக்ஞையைத் தெரிவிக்க வேண்டுமென்றும் பலவாறு பல முறையாய் மன்றாடிக் கேட்டுக்கொண்டார். எவ்வளவு கேட்டுக் கொண்டும் சிறிதேனும் பயன் படவில்லை. குருவாகிய பரசுராமர் க்ஷத்ரியனாகிய தம்மை அகார்யத்தில் ப்ரவேசிக்கக் கட்டுப்படுத்தக்

கூடாதென்று சொல்லி, தர்ம சாஸ்த்ரத்திற்கு விரோதமாய் நடக்கக் கற்பிக்கும் ஆசார்யரின் வார்த்தைக்குக் குறுக்குச் சொல்ல இடமுண்டென்றும் வாதிக்க, பரசுராமருக்குக் கோபம் மிகுதியும் பொங்கி வழிந்தது. பீஷ்மரின் வல்லமையும் தம் வல்லமையும் யுத்தத்தில் பார்த்து விடுவதென்று நிர்மாணித்தார். குரு சிஷ்யருக்குள் யுத்தம் நிகழலாகாதென்றும் அஃது பழிப்புக் கிடங்கொடுக்குமென்றும், இஃது நிறுத்தப்படல் வேண்டுமென்றும் பலவாறு கங்கா புத்ரன் மன்றாடியும் பயன் படவில்லை.

அதன்மேல், இதற்கு முன்னாலேயே க்ஷத்ரியர்களைக் கறுவறுத்து ஏழு மடுக்கள் ரத்தத்தினால் தேக்கிய ஸ்யமந்தக மென்னுமிடத்தருகில் ஸரஸ்வதி நதிப்பக்கத்திலுள்ள குருக்ஷேத்ரம் தான் குரு சிஷ்யருக்குள் சண்டை நிகழ வேண்டிய இடமென்று நிர்மாணிக்கப் பட்டது யுத்தத்துக்குத் தயாராய் வர இருவரும் ஒருவரை யொருவர் விட்டு பிரிந்து போயினார்கள்.

பீஷ்மாசார்யர் ஹஸ்தினாபுரம் சென்று தம் தாயாகிய ஸ்த்யவதி தேவியினிடம் தமக்கும் பரசுராமருக்கும் நடந்த வ்ருத்தாந்தங்களைச் சொல்லி அவளது அநுக்ஞை பெற்று மஹத்தான குதிரைகள் பூட்டப் பெற்ற ரதத்தில் திவ்யாஸ்தர சஸ்தரங்கள் பலவற்றுடன் ஏறி உட்கார்ந்துகொண்டு ஸரஸ்வதி நதி தீரம் வரலானார். இதற்கிடையில் சாந்தனவனைப்பெற்ற கங்காதேவி, ஸ்த்ரீயுருவத்துடன் பீஷ்மரின் முன்னின்று, பரசுராமர் பராக்ரமசாலியென்றும் அவரிடத்து யுத்தம் வேண்டாமென உரைத்தனள். க்ஷத்ரிய குலத்திலுற்பவித்த தமக்கு யுத்தம் செய்யாது ஒதுங்குதல் கூடாதென்று பல தர்மஸாரங்களை எடுத்துச் சொல்லி தம் தாயாகிய கங்காதேவியைப் பீஷ்மர் தேற்றி அவள் அருள் கொண்டு யுத்தகளம் வந்து சேர்ந்தார்.

---

கல்லா மனிதரோடு வசிப்பதை விடக் கொல்லும் விலங்குகளினிடையே சஞ்சரித்தல் மிகுந்த நன்மை தரும்.

* * * *

நன்னூல்களை நற்றெய்வங்களுக்கு ஒப்பிடலாம், தீய நூல்களையோ எனில் தீத்தெய்வங்களாகிய பேய்களுக்கு ஒப்பிடலாம்.

A57

# ANDHRA WOMEN CONFERENCE.

By

Mrs. A. Laxmipathi.

## ஆந்த்ரா ஸ்த்ரீகளின் கான்பரன்ஸ்.

இம்மாதம் 8-ந் தேதி காக்கினாடாவில் ஆந்த்ரா ஸ்த்ரீகளின் கான்பரன்ஸ் நடந்தது. அச்சமயம் டாக்டர் லக்ஷ்மிபதியின் மனைவியார் அக்ராஸனம் வஹித்தார். அவர் செய்த ப்ரஸங்கம் பின்வருமாறு:—

ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நமது தேசத்தில் பல வர்ஷங்கள் ஆட்சிசெய்ததின் பலனாக, ப்ரிட்டிஷ் ஜாதியாரால் சிறந்ததெனக் கொண்டாடப்படும் ஸ்வேச்சை, ஸ்வதந்தரம் முதலியன நமது மனதில் குடிகொண்டிருக்கின்றன. சென்ற நூறு வர்ஷகால அரசாட்சிக்குள்ளாக தேசம் எவ்வளவு முன்னேற்றம் அடையவேண்டுமோ, அவ்வளவு முன்னேற்றம் அடைந்திராததால் தான், சில இந்தியர்கள் ஸ்வய ஆட்சி வேணடுமெனக் கருதுகின்றனர். நமது புருஷர்கள் விரும்பும் ஸ்வயஆட்சியைப் பெறுவதில் ஜயம் அடையவேண்டியது நம்மைப் பொறுத்திருக்கின்றது. வீட்டில் அடிமைகள்போல் நடத்தப்பட்டு, வெளியே உள்ளவர்களால் முட்டாள்களெனக் கருதப்படும் நம்மவர்களில் (ஸ்த்ரீகளில்) பாதிக்கு மேல் அஞ்ஞானத்தில் மூழ்கியிருக்கும் வரையில் நமது ஜனங்கள் கொண்டிருக்கும் கருத்து நிறைவேறாது என்பது நிச்சயம்.

முன் நம் நாட்டு ஸ்த்ரீகளின் பதவியை உயர்த்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஸாதனங்கள் எல்லாவற்றையும் ஸ்த்ரீகள் தங்களுடைய பதவிக்கு விரோதமாகப் பாவித்தார்கள். அக்காலத்தில் தாங்கள் அடைந்து வந்த ஏழ்மைஸ்திதியையே தங்களுக்கு ஏற்றதெனக் கூறிவிட்டனர். இவ்வாறு அவர்கள் கூறியதற்கெல்லாம் கல்வி இன்மையே காரணமாகும். கல்வி கற்க மதம் இடங்கொடுக்கவில்லையென்று நம்மவர்கள் பிசகாகக்கொண்ட அபிப்ராயமே கல்வி அபிவிருத்திக்கு ஒரு இடையூறாக முடிந்தது. ஆகையால், ஸ்த்ரீகளின் கல்வி அபிவிருத்தியின் நிமித்தம் ஒவ்வொருவரும் மனச்சாக்ஷிக்கு

விரோதமின்றி உழைக்கவேண்டியிருக்கக், கவர்ன்மெண்டார் மீதும் பொது ஜனங்களின் மீதும் குற்றத்தைச் சுமத்தித் தாங்கள் தப்பித்துக்கொள்ளப் பார்ப்பது முட்டாள் தனமாகும். தற்சமயம் கல்வி ஸம்பந்தமாக நடக்கும் கார்யங்களை ஆழ்ந்து கவனிப்போமாயின், பெண்கல்விக் குறைவுக்கு நமது ஜனங்கள் எவ்வளவு காரணமாக இருக்கிறார்களோ, அதுபோல, கவர்ன்மெண்டாரும் காரணமாக இருக்கிறார்களென்பது நன்கு விளங்கும். ஸ்த்ரீகள் குடும்ப வ்யவஹாரத்தினின்று நீங்கித் தேச நிர்வாஹத்தில் சேர நமது ஜனங்கள் அனுமதி கொடுப்பதில்லை, கவர்ன்மெண்டாரும் கல்வி நன்றாக போதிக்கப்படவேண்டியதைக் கவனிக்கின்றார்களோ யன்றி, நாடெங்கும் கல்வி பரவச் செய்யவேண்டிய விஷயத்தில் அசிரத்தையாக விருக்கின்றனர். ப்ரிட்டிஷ் அரசாக்ஷியின் கீழ் உள்ள இந்தியாவில் ஆரம்பக் கல்வி மிகவும் குறைவாகவே இருந்த போதிலும், சுதேச ஸமஸ்தானங்களில் ஆரம்பக் கல்வி பரவி இருக்கிறது. அப்படியிருந்தும், நமது ஜனங்கள் முட்டாள்களென்றும் ப்ரிட்டிஷார்கள் தாங்கள் தான் புத்திசாலிகளென்றும் சொல்லிக் கொள்ளுகின்றனர்.

ஆனால், இப்பொழுது நமது தேசத்தில் கல்வியில் ஒரு திருத்தம் ஏற்பட்டு, அநேக யூனிவர்ஸிடிகள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. மனிதர்களுக்காக யூனிவர்ஸிடி கலாசாலைகள் ஏற்படுத்த வேண்டியது எவ்வளவு அவச்யமோ, அதுபோலவே ஸ்த்ரீகளுக்கும் யூனிவர்ஸிடி கலாசாலைகள் ஏற்படுத்தவேண்டியது அவச்யமெனக் கவர்ன்மெண்டாருக்கு எடுத்துக் காட்டுவதற்கு இதுவே ஏற்ற ஸமயம். தற்கால நிலைமைகளை உத்தேசித்து கவர்ன்மெண்டார் ஸ்த்ரீகளுக்காக யூனிவர்ஸிடி ஏற்படுத்துவது அவச்யமாகும். கல்விக் குறைவினால் தேசத்தவர்களுக்கும் கவர்ன்மெண்டாருக்கும் அபிப்ராய பேத மேற்பட்டு பிரிவு உண்டாவதைக் காட்டிலும், தேசத்தவர்கள் கல்வி கற்று கவர்ன்மெண்டாருடன் சேர்ந்து ஒத்துழைப்பதே மேலானது. அதுவே தேச முன்னேற்றத்துக்கு ஏற்றதானபடியால், கவர்ன்மெண்டார் பெண் கல்வி வ்ருத்திக்காகக் காலேஜ்களும் ஹைஸ்கூல்களும், ப்ரைமரி பாடசாலைகளும் ஏற்படுத்தவேண்டியது அவச்யமாகும். அன்றியும் கவர்ன்மெண்டார் பணக் கஷ்டத்தினால் மேன்மேலும் படிப்பதற்கு முடியாத ஸ்த்ரீகளைச் சம்பளமில்லாமல் படிக்கும்படி செய்து, அவர்களுக்கு உபகாரச் சம்பளமும் கொடுப்பதுடன் ஸ்த்ரீகள் குறிப்பிட்ட வயது வரையில் கட்டாயம் படித்தே தீரவேண்டுமெனச் சட்டம் ஏற்படுத்துவது அவச்யமாகும்.



கவர்ன்மெண்டார் செய்யவேண்டிய கார்யங்கள் எவ்வளவு இருக்கின்றனவோ, அவற்றிற்கு அதிகமாகவே ஜனங்கள் செய்யவேண்டிய கார்யங்களுமிருக்கின்றன. தேசத்திற்கு நற்காலம் வரும் பக்ஷத்தில் எல்லாம் தானாகவே நிறைவேறுமென்று நினைத்து, ஜனங்கள் கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பது முட்டாள் தனமான கார்யமாகும்.

தேசாபிமானமே ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. அதன் வ்ருத்திக்காக உழைப்பதே அதைவிடச் சிறந்தது. நமது தேசத்தவர்களின் நிலைமையும், கல்வி அறிவும், எவ்வாறிருந்தபோதிலும், தேசமுற்போக்குக்கு உழைப்பதற்கு அநேக வழிகளிருக்கின்றன. லக்ஷக்கணக்கான ஜனங்கள் அஞ்ஞானத்தில் மூழ்கி தரித்ர தசையை அனுபவித்து கொடும் வ்யாதிகளுக்கு இரையாகி, ஆயிரக்கணக்காக மாளும் இந்நாட்டார்களுக்கு, நாம் நம்மால் இயன்றவரையில் உழைக்கவேண்டியதவச்யம். கல்வியை வ்ருத்தி செய்வதும், அநாதைகளைக் காப்பாற்றுவதும் ஏழைகளுக்கு உதவி புரிவதும், தேசத்தின் அர்த்த சாஸ்த்ர நிலைமையை வ்ருத்தி செய்வதுமே, ஸ்வதேசியத்திற்காக நாம் செய்யும் நன்மைகளாகும்.

மிஸஸ் எ. லக்ஷ்மீபதி.

---

அன்பும் அமைதியும் பொருந்திய ஹ்ருதயம் வாய்ந்த மனிதன், என்றும் இன்பமும் சாந்தியும் பெற்று வாழ்வான்.

* * * *

முயற்சியும் ஊக்கமுமே சகல சம்பத்துக்களுக்கும் மூலகாரணம். இந்த இரண்டும் இல்லாதவர், வறுமை அடைவதுந் தவிர உள்ளவற்றையும் இழந்து விடுவார்.

* * * *

உண்மையுள்ள மனிதன் தனது வாழ்க்கையில் மிகமிகச் சிறிய விஷயங்களிலும் உண்மையாக நடந்து கொள்ளுகிறான். கௌரவமுள்ள மனிதன் தான் பேசும் ஒவ்வொரு செயலிலும் கௌரவமாக நடந்து கொள்கிறான்.

## *Interesting Items.*

# I
# CONCERNING CHILDREN.
## குழந்தைகள் விஷயம்.

**Dull Children.**

மந்தமுள்ள குழந்தைகள்:—முதலாவது குழந்தைகள் மந்தமாயிருப்பதற்குக் காரணங்களை அறியப் பெற்றோர்கள் வைத்யரைக்கூட்டி யோஜிக்கவேண்டும். மந்தமாயிருப்பதற்கு முக்யகாரணங்கள் அவர்களின் உள்மூக்கிலாவது தொண்டையிலாவது சதை வளர்ந்திருக்கும். காதும் கொஞ்சம் கேளாதிருக்கும், இவ்வியாதிகளினால் குழந்தைகள் வருந்தினால் அவைகளைப் போக்க உடனே முயற்சிசெய்ய வேண்டும். ஜாஸ்தியான ஆஹாரங்களை குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடாது, புத்திசாலிக்குழந்தைகளோடு பழகவிடவேண்டும். சுத்தமான காற்றும் உடையும் உடுத்திக்கொள்ளச் சொல்லவேண்டும். மந்தமாயிருக்கிற குழந்தைகளை உத்ஸாஹப்படுத்திப் படிக்கச் சொல்லவேண்டும். மந்தமான குழந்தைகளை அடிக்கவே கூடாது. மந்தமுள்ள குழந்தைகள் எவ்வளவோ பேர்கள் நல்ல பழக்கத்தினாலும் சேர்க்கையினாலும் புத்திசாலிக் குழந்தைகளாகி முன்னுக்கு வந்திருக்கிறார்கள்.

வல்லவனுக்குப் புல்லாயுதம்:—யாராவது ஒருவன் பழுதான ஒரு ஆயுதத்தைக் கொண்டு அல்லது உபயோகமற்ற ஒரு ஆயுதத்தைக்கொண்டு ஒரு கார்யத்தை முடித்துவிட்டால் அப்போது நாம் அவனைப்பார்த்து; "நீதான் ஸமர்த்தன். வல்லவனுக்குப் புல் ஆயுதம் என்றபடி கார்யத்தை முடித்துவிட்டாய்" என்று புகழ்கிறோம். இந்தப்பழமொழி ஸர்வ ஸாதாரணமாய் எல்லாருடைய வீட்டிலும் வழங்கி வருகிறது. என்றாலும் இந்தப்பழமொழிக்குஆதாரமென்ன? என்பதைப்பற்றி நம் ஸஹோதரிகள் அறிந்திருக்க மாட்டார்கள். இந்திரனது புத்ரனாகிய ஜயந்தன் என்பவன் காக்கை வடிவம் எடுத்துக்கொண்டு சித்ரகூடபர்வதத்தில் ஸ்ரீ ராமபிரானும் பிராட்டியும் எழுந்தருளியிருக்குங் காலத்தில், அங்கே வந்து பிராட்டியினுடைய திருமேனியைத் தீண்டினான். அப்போது ஸ்ரீ ராமபிரான்மிகச்சினந்து அக்காக்கையின் அயலிற் கிடந்த ஒரு புல்லைப் ப்ரயோகிக்க, அப்புல்லுக்கு ஆற்றமாட்டாமல் அக்காகம் ஸர்வலோகமும் சென்று ஓடித்திரிந்து தன்னைப் பயப்படாதே யென்று அபயம் சொல்லிக் காப்பார் யாருமில்லாமைப் பற்றி மீண்டும் திரும்பி வந்து ஸ்ரீராமபிரானையே சரணம்புகுந்தது என்பதையும் யாவரும் அறிவீர்கள். காகாசுரனை அந்த ஜயந்தனை அடிப்பதற்கு, வல்லவனை ஸ்ரீராமன் புல்லையே உபயோகித்தாராதலால் வல்லவனுக்குப் புல்லாயுதம் என்று இந்தப் பழமொழியுண்டாயிற்று.

**Panperd children.**

கொழுக்கச்செய்யப்பட்ட குழந்தைகள்:—குழந்தைகள் பாலபருவத்தில், அநேகவிதமான விஷமங்கள் செய்யும். குதித்து விளையாடும். குழந்தை ஆஹாரம் வேண்டாமென்றால் தாயார் பலவந்தப்படுத்திச் சோற்றைத் திணிக்கிறாள்.

குழந்தை ஏன் ஆஹாரம் வேண்டாமென்கிறதை அறியத் தாயாருக்கு சக்தி கிடையாது. பணக்கார வீட்டுக் குழந்தை ஒரு தப்பிதம் செய்தால் அதைக்கண்டிக்காமல்விட்டுவிடுகிறாள். குழந்தைகளை புத்திசாலியாகவும் தைர்யமாகவும் செய்கிறது தாய்தான். முட்டாளாகவும் பயங்காளியாகவும் செய்கிறதும் தாய் தான்.



# DOMESTIC HINTS AND SUGGESTIONS.
## க்ருஹத்தியக் குறிப்புகள்.

**Convulsion of Children.**

குழந்தைகளின் வலிப்பு:—ஏராளமான குழந்தைகள் ஆணோ, பெண்ணோ பிறந்தது முதல் அவைகள் வயதுக்கு வருகிறதற்குள்ளாக ஒவ்வொரு வர்ஷமும் வலிப்பினால் இறந்து போகின்றன. அவைகளை அக்கதிக்குள்ளாகி விடுகிறது மிகவும் வெட்கக்கேடாயிருக்கிறது. இந்த ரோகமானது அநுபவத்தில் கண்டபடி, காக்காய் வலிரோகத்தைத்தவிர அசட்டையினாலும் உண்டாவதாகத் தெரிகிறது.

இழுப்பானது முக்கியமாய் பல் முளைக்கும் போது தான் உண்டாகும். ஆனால் பல் முளைத்ததின் காரணமாக வருவதல்ல. பல் முளைக்கும் தருணத்தில் சுரம் வந்தாலும் சரி அல்லது மலச் சிக்கலாயிருந்தாலும்சரி இழுப்பு வந்தே தீரும். தேஹம் சிவத்தல் அல்லது தட்டம்மை, வைஸூரி முதலிய தொற்று வ்யாதிகள் உற்பத்தியானாலும் இழுப்பு உண்டாகும். சில வேளைகளில் நரம்பு அதிர்ச்சியினாலாவது ஜீரணமின்மையால் உண்டான ரோகங்களின் மூலமாயாவது அவை வரக்கூடும். அது குடல்களிலுள்ள க்ருமிகளின் காரணங்களாலும் வரலாம்.

ஆனால் என்ன முக்ய காரணங்களிருந்தாலும், அதன் ஆரம்பத்திற்கு ஒரு ஸங்கதிமட்டும் நிச்சயமாயிருக்கிறது. அது மாத்ரம் இல்லாது போனால் இழுப்பு என்பதே கிடையாது. குழந்தையானது மலச்சிக்கலினால் கஷ்டப்படுவதுதான் அதற்கு ஆரம்பம்.

இந்த விஷயத்தில் குழந்தையை ஸௌக்யமாக வைத்திருப்போமானால் அக்குழந்தையானது இழுப்பினால் தொந்தரைப்படாது. எல்லாவற்றிற்கும் முதன்மையாக பேதிக்குக் கொடுக்கக் கூடாது பழங்கள், காய் கறிவகைகள், மஞ்சட் சீனக்கிழங்கு இவை முதலியவைகளைக் கொடுத்து வந்தால் நாம் மருந்து ப்ரயோகம் பண்ணவேண்டிய முகாந்தரமே யில்லை. ஆனால் அவச்யம் பேதிக்குக்கொடுத்தே தீரவேண்டுமானால் நம்பெரியோர்கள் அநுபவத்தில் கையாடி வந்த சிற்றாமணக் கெண்ணெய் அல்லது விளக்கெண்ணெயை விட வேறு எதுவும் அவ்வளவு உசிதமாகாது.

**A Medicinal drug.**

ஒரு மருந்துச் சரக்கு:—மிஸ்டர் வீ. சேஷஐயர் என்னும் பரம்பரை வைத்யர் வித்தியாபானுவுக்கு எழுதுகிறார்.

இம்பூரல்:—இஃதோர் மூலிகை. இதற்கு இம்பூரா என்றும் பெயருண்டு. இதன் வேர் இராமேச்வரத்தில் விஸ்தாரமாய் விளைகிறபடியால் இராமேச்வரா என்றும் அவ்விடங்களிற் கூறப்படுகிறது. இந்த வேர், கடுக்காய், படிகாரம் ஆக இந்த மூன்றையும் சேர்த்து சிவப்புச்சாயம் போடுவதற்கு உபயோகமாகிறது. இந்தச் செடிக்குச் சிறிய வெளுப்பான பூவும் சிறிய இலைகளுமுண்டு. இலையின் குணம் சிறுகசப்புடையதாயும் அருவருக்கத்தக்க ருசியுடையதாயுமிருக்கிறது. மார்புநோவில் பேதியாகக் கூடிய நல்லமருந்தாகவுமிருக்கிறது. இதனை உலர்த்தி இடித்துச்சூர்ணமாக்கி அரிசிமாவுடன் சேர்த்துப் பசுவின் நெய்யில் அடைசுட்டுச்சாப்பிட்டால் க்ஷயரோகத்துக்குக் கைகண்ட மருந்தாகும்.

# KITCHEN AND COOKERY.

## சமையலறையும் சமையலும்.

**Wheat Pongal.**

கோதுமை நொய் பொங்கல் :— நல்ல கோதுமையாக வாங்கி, நன்ருய்க்குத்திப் பின் யந்த்ரத்தில் உடைத்தெடுத்துக் கொள்ளவேண்டியது. பின் அவற்றை ஒரோரசியாய் வேண்டியஅளவு கொழித்தெடுத்துக் கொண்டு, எவ்வளவு சமைக்கவேண்டுமோ, அந்தக் கோதுமை நொய்க்கு பாதி அல்லது முக்கால் பாகம் சுத்தமான பயற்றம் பருப்பைத் தயார் பண்ணிக் கொள்ளவேண்டியது.

அடுப்பில் ஒருபக்கத்தில் சிறுதவலையொன்றில், வெந்நீரைப் பொங்கும்படியாய்க் காயவைக்கவேண்டியது. மற்றொரு பக்கத்தில் பொங்கல் செய்யவேண்டிய மிகவும் குறுகலாயில்லாததும் மிகுதியும்வாயகன்றதாயில்லாததுமான பாத்ரத்தில், கொஞ்சம் தாராளமாய் நெய்யை வைத்துக் காய்ச்சவேண்டியது. காயும் நெய்யில் தயாராய்வைத்திருக்கிற கோதுமை நொய்யைக் கொட்டி வறுக்கவேண்டியது. வறுபட்டுக் கொண்டிருக்கும் நொய்யில் பச்சைப்பயற்றம் பருப்பைக் கொட்டி, அதனையும் விடாமல் சேர்த்து வறுத்தபிறகு, கொதித்துக்கொண்டிருக்கிற வெந்நீரைக் கொஞ்சங் கொஞ்சமாய் சிறு கரண்டியால் எடுத்து வறுபட்டுக் கொண்டிருக்கும் கோதுமை நொய், பருப்புடனும், கரண்டிகரண்டியாய்ச்சேர்த்துக், கிளறிக் கொடுத்துக் கொண்டேயிருக்க வேண்டியது. வேண்டியளவு கொதிக்கும் வெந்நீரை விட்டு, அடியில்காந்தாமல் கிளறிக் கொண்டேவந்து, பதமாய் வெந்து போகும் ஸமயம் பார்த்து, மெல்லியதாய்ப் பொடித்த உப்பை அளவாய் அதனில்போட்டு நன்ருய் நான்கு பக்கங்களிலும் கிளறிக் கொடுக்கவேண்டியது. பின்னால் அகலமான கரண்டியிலோ, அல்லது சங்கு போல் வெண்மையாய்த் தேய்த்த பாணலியிலோ, தாராளமாய் நெய்யைவிட்டுக் காய்ச்சி அதில் தோலெடுத்த முந்திரிப்பருப்பு, வாதாம் பருப்பு, பொடிப் பொடியாய் நறுக்கின இஞ்சித் துண்டங்கள், நல்ல கெட்டி மிளகில் கொஞ்சம் இவற்றை வறுத்தெடுத்து, கோதுமை நொய்ப் பொங்கலில் நெய்யுடனும் கொட்டிக்கலந்து கொடுக்கவேண்டியது. பின்னால், அதனை இறக்கிவைத்துக் கொண்டு அதிகம் சூடில்லாமலும், அதிகம் ஆறிப்போகாமலும் இருக்கும் தருணம் பார்த்து எடுத்துச் சாப்பிட வெகு ருசியுள்ளதாயிருக்கும்.

பாங்கிப்பிஞ்சு தொகையல் :— சிறுசிறு பிஞ்சுகளாக பாங்கிக் கொட்டைகளை வாங்கிக்கொண்டுவந்து, அவைகளைக் கறிக்கு நறுக்குவதுபோல நறுக்கிக்கொண்டு, அவைகளை வேகவைத்து முக்கால் வேக்காடு வெந்தபின், எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். பின்னிட்டு மிளகாய், கடுகு, உளுத்தம்பருப்பு முதலியவைகளை நெய்யிலோ அல்லது எண்ணெயிலோ வறுத்தெடுத்துக்கொண்டு, மேற்கூறிய சாமான்களுக்குத் தகுந்தாற்போல் உப்பு, புளி, பெருங்காயம் முதலியவைகளைச்சேர்த்து, அம்மியில் வைத்தரைத்தெடுத்துக்கொண்டு உபயோகிக்கலாம். இதனை ஆகாரத்துடன் நெய்விட்டுப்பிசைந்துச் சாப்பிட மிகவும் ருசியைத்தரும். பாங்கிக்காயும் உடம்பிற்குக் குளிர்ச்சியைத்தரும். இத்தொகையலை மற்றச் சாப்பாட்டிற்கு உபகரணமாகவும் உபயோகிக்கலாம்.



# VIEWS AND REVIEWS.

## அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

**A Novel begging.**

ஒரு புது தினுஸான பிச்சை :— லண்டனிலும் மற்றுமுள்ள இடங்களிலும் புது தினுஸாய்ப் பிச்சையெடுக்க ஏற்பாடாகியிருக்கிறது. ப்ரதி மேமீ 12ந் தேதி இத்தினுஸான பிச்சையெடுக்கப்படும். மேமீ 12ந் தேதி, காருண்யமே மதமாகக்கொண்ட சீமாட்டியாகியப்ளாரன்ஸ் நைடிங்கேலின் வருஷாப்தீகதினம்ஆகையால், ஸ்திரீகளெல்லாரும் கையில் விளக்குகளை வைத்துக்கொண்டு பலவித தர்மங்களுக்கு உபயோகப்படுத்தப்படுமாறு பிச்சைகள் கேட்பார்கள். ஏன் இவர்கள் கையினில் விளக்குகளை எடுத்துக்கொண்டு பிச்சைகேட்க வேண்டுமென்று ஸந்தேஹம் வரும். அம்மாதிரி அம்மாது எதன்ஸ் பட்டணத்தில் பகல்காலத்தில் விளக்கெடுத்துக்கொண்டு ஒரு கலையமுள்ள மனுஷனைத் தேடப்போயினராம். அதை ஞாபகப்படுத்தும்பொருட்டு அவ்வாறு விளக்கெடுத்துப் பிச்சைகேட்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

லண்டன் டைம்ஸ்.

**War & Women.**

ஸ்த்ரீகளும் யுத்தமும்:—இங்கிலாந்தில் ஐரோப்பிய மஹாயுத்தத்திற்குப் புருஷர்கள் போய்விட, அவரவர் வீட்டு ஸ்த்ரீகள்யாது செய்கிறார்கள்? வீண் வம்புக்கச்சேரி பண்ணிக்கொண்டு வீண்பொழுதுபோக்கிக் கொடிருக்கிறார்களோவென்று விசாரிப்போமானால், அவர்களும் யுத்தத்திற்குத் தேவையான கார்யங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

சென்ற மார்ச்சுமாஸம் 27ந் தேதி இங்கிலாந்திலுள்ள ஜார்ஜ் அரசரின் மனைவியாகிய மேரி ராணியார் ஸ்த்ரீகள் ஒன்று சேர்ந்திருக்கும் வேலைச்சாலையில் திடீரெனப் ப்ரவேசித்தார். அங்கு யந்த்ரசாலையில் 20 ஸ்த்ரீமாணவர்கள் வேலைகற்றுக்கொள்வதை அரசியார் கவனித்துப் பார்த்தார்.

இவைகளைப்பார்த்தபின் ஆறுவாரம் இத்தொழிலைக் கற்றுக்கொண்ட இந்த ஸ்த்ரீகளை உத்யோகத்தில் அமர்த்தும்போது புருஷர்களுக்குள்ள சம்பளம், இவர்களுக்கும் கொடுக்கப்படும் என்று ராணி தம் அபிப்ராயத்தை அறிவித்தார்.

டெயிலி மெயில்.

**Shiyali Puranavachanam.**

சீகாழித்தலப் புராணவசனம் :— இப்புத்தகமொன்று நமது பார்வைக்கு வந்தது. வசன நடையைப் பெரிதும் விரும்பும் இக்காலத்தில், செய்யுள்களெல்லாம் பண்டித ரஞ்சிதமாயிருக்கப் பாமரர் அதனை அறிய இயலாதிருக்கிறது. அதற்காக வேண்டி கூடுமானவரையில் செய்யுட் க்ரந்தங்களை எளிய நடையில் இயற்றியிருக்கிறதையாவரும் அச்செய்யுட்களில் நிரம்பியிருக்கிறரஸங்களை அறியமுடியும். ஆகவே, இத்தகைய நூல் யாவர் கையிலும் இருக்கத் தகுந்தவாறுஎழுதப்பட்டிருப்பது பார்த்து ஸந்தோஷப்படுகிறோம். சீகாழியின் மாகாத்ம்யங்களை இனிதெடுத்துரைக்கும் இந்நூலில் ஸ்ரீயான் சம்பந்தமூர்த்தியின் வரலாறும் பிறவும் இனிதெடுத்துரைக்கப் பட்டிருக்கிறது. 33 சர்க்கங்கள் கொண்டது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் சிதம்பரம் செந்தமிழ்ச்சங்க வித்வான் வெங்கடாசல பிள்ளையவர்கள் விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

# WOMAN'S WORLD.

## ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

**Books for Women.**

ஸ்த்ரீகளுக்கேற்ற புஸ்தகங்கள்:- ஒவ்வொரு ஸ்த்ரீயும் தனது வாழ்க்கையின் லக்ஷ்யத்தை அறியவேண்டும். வீட்டிலும், சங்கங்களிலும் நடந்துகொள்ளவேண்டிய மர்யாதை பாவனைகளை அறிந்திருக்கவேண்டும். பெண்களுக்கு ஆபரணம் அடக்கமே. இதையறிய வேதநாயகம் பிள்ளை பெண்மதிமாலையை அவச்யம் வாசிக்கவேண்டும். பிறகு, ஸர்வ ஸமய ஸமரஸகீர்த்தனைகள் என்ற அவரது பாடநூல் அவர்களின் கையில் எப்போதுமிருத்தல் நலம். இந்தியாவில் நமது பெண்கள் சக்தி ஸ்வரூபிகள். அவர்களை நாம் கௌரவிக்கவேண்டும். முற்கால இந்தியா பெண்களை உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து கௌரவித்தது. தற்காலமும் அந்த கௌரவமும் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும்.

**Credit.**

நாணயம்:-இது ஸ்த்ரீபுருஷர்களுக்குப் பொதுவானது. அந்யருடைய பணத்துக்கு நாம் சொந்தக்காரர்களாவோம். எப்போது? தான் அந்யரிடம் வாங்கின கடனை குறித்தகாலத்தில் அல்லது கெடுவில் கொடுத்து வந்தால், அந்யர்களுடைய பணமெல்லாம் நம்முடையதாகவே யிருக்கும். ஒரு மனுஷ்யன் நாணயத்தைக்காப்பாற்றி வந்தால் அவன் நல்ல பெயர் எடுப்பான். அவனைப் பலரும் நம்புவார்கள். அவனிடம பணம் வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருக்கும். அந்த நாணயம் வ்யாபாரத்துக்கு முக்யமானது. புருஷர்கள் கடனாளியாகிக் கஷ்டப்பட்டு ஜெயிலுக்குப் போவதெல்லாம் தாங்கள் வாங்கின கடனைக் குறித்த கெடுவில் கொடுக்காமலிருப்பதனால் என்று பலருக்குத் தெரியும். புருஷர்களைக் காட்டிலும் ஸ்த்ரீகள் வெகு நாணயமுள்ளவர்கள், ஆயிரக் கணக்காக ஸ்த்ரீகள் பணம் வாங்குவதும் கொடுப்பதும் வெகு ஸஹஜம், நாணயம் என்பது ஸ்த்ரீகள் தேகத்தோடே பிறந்தகுணமென்று சொல்லவேண்டும். நாணயமிருந்தால் ஸந்தோஷமுண்டாகும். திருப்தி யுண்டாகும். தர்மசிந்தனையுமுண்டாகும். நாணயமில்லையேல் முகத்தில் கடுகடுப்பும் மற்ற துர்க்குணங்களும் குடிகொண்டிருக்கும், வாங்கின பணத்தைக் குறித்த கெடுவில் கொடுப்பதுதான் ஸ்த்ரீ புருஷர்களின் லக்ஷணம்

ஸ்த்ரீகள் நம் குடும்பங்களை நாணயத்தினால் கொஞ்சமேனும் புருஷர்களுக்குக் கஷ்டத்தை அறிவிக்காமல் நடத்தி வருகிறார்கள். ஒரு பரம ஏழை ஸ்த்ரீயாயிருந்தாலும் அவளிடமே நாணயமென்னும் லக்ஷ்மிதேவி வசித்துக்கொண்டிருக்கிறாள்.

* * *

தற்கால பெண்களுக்குப் படிப்பே கூடாது என்று வாதிக்கும் பிடிவாத முள்ளபுருஷர்கள் இன்னுமிருக்கிறார்கள். இவர்களை மூர்க்கர்கள் என்று சொல்வதைவிட வேறுஎன்ன சொல்லமுடியும்? இது அனுபவம்.

* * *

**Patience.**

பொறுமை:— ஸ்த்ரீகள் பொறுமைக்கு பூஷணம். அன்புக்கு அதிகாரி. ஸமாதானத்தை நாட்டும்கருவி. தாழ்ந்து போகும் குணத்தைப்போதிக்கும் உபாத்யாயன். நாக்கை அடக்கும் யந்த்ரி காம, க்ரோத, லோப, மோஹம், மதம், மாத்சர்யம் இந்த ஆறுகுணங்களையும் அடக்கும்ராஜன். பொறுமையுள்ளவளுக்கு ஒரு குறைவுமில்லை.




நிச்சயம்! நம்புங்கள்!!

# கேசவர்த்தன் தைலம்.

இது ஒரு தலை மயிர் வளரும் தைலம். ஸ்த்ரீகளாகட்டும் புருஷர்களாகட்டும் இத்தைலத்தை ஒரு முறை தலையில் தடவினால் அவர்கள் இதன் அருமையை அறிவார்கள். ஒரு முறை தடவிப்பாருங்கள். பதினைந்து தினங்களுக்குள் மயிர் கருப்பாக ஆகி அரை இஞ்சு நீளம் வளர்ந்துமிருக்கும். இதற்கு காரண்டி செய்கிறோம். ஒரு முறை பரீக்ஷித்துப்பாருங்கள். பலர் வாங்கிவருகின்றனர்.

பெரிய புட்டிக்கு ரூ. 1-0-0

தபால் சார்ஜ் வேறு.

## முதல் தர கேசஹாரிணி.

இதை ஒரு முறை தடவினால் இது தேகத்தின் எப்பாகத்திலிருந்தாலும் மயிரை ஐந்து நிமிஷங்களில் எடுத்துவிடும். பிறகு வளராது. இது நிச்சயம். பரீக்ஷித்துப்பாருங்கள். இதற்கு காரண்டி செய்கிறோம்.

புட்டி ஒன்றுக்கு ரூ. 1-0-0

தபால் சார்ஜ் வேறு.

## இரண்டாந்தர கேசஹாரிணி.

இதை ஒரு முறை தடவினால் பத்து நிமிஷங்களில் மயிர் உதிர்ந்து விடும். ஆனால் பிறகு வளரும்.

புட்டி ஒன்றுக்கு ரூ. 0—8—0

தபால் சார்ஜ் வேறு.

எல்லா வற்றிற்கும் ஒரு முறை ஆர்டர் செய்து பாருங்கள்.

விலாசம்.

ஆயுர்வேத பூஷணம்.

**L. N. சர்மா A. M. A. C.,**

பாலகிருஷ்ண அவுஷதாலயம்,

101, தங்கசாலைத் தெரு, சென்னை

I. PROGRESS OF THE WORLD.

i. The War in Europe—A scheme for the improvement of education of our boys & girls—Home Education—Women & civilisation.

II. SPECIAL ARTICLES.

i. The teachers & students—by Sri N. Singarammal.
ii. Thiruvarul—by Sankririthi.
iii. Ambopakianam — by Sri V. Kalyani Ammal.
iv. Mangaiyarkkarasiar — by Mr. Sivadyananandan.
v. Ideals of fast by — Sri Bagirathi.
vi. Servia—Vidya Banu.
vii. Religion & music — by Pandit V. Subramania Aiyar.

III. INTERESTING ITEMS.

i. Concerning Children.
ii. Domestic Hints and Suggestions.
iii. Woman's World.
iv. Kitchen and Cookery.
v. Views and Reviews.

IV. ADVERTISEMENTS.

I. ப்ரபஞ்சப் போக்கு.

i. ஐரோப்பா யுத்தம் — நம்தேசத்து பெண்களின் படிப்பையும் ஆண்களின் படிப்பையும் விருத்தி செய்ய ஒரு யோசனை—வீட்டுப் படிப்பு—ஸ்த்ரீகளும் நாகரீகமும்.

II. விசேஷ வ்யாஸங்கள்.

i. உபாத்யாயர்களும் மாணுக்கர்களும் ஸ்ரீமதி N. சிங்காரம்மாள்.
ii. திருவருள்—சங்கிருதி.
iii. அம்போபாக்யானம் — ஸ்ரீமதி கல்யாணி அம்மாள்
iv. மங்கையர்க்கரசியார்—ஸ்ரீமான் சிவத்யானுநந்தன்.
v. உபவாஸத்தின் லக்ஷ்யங்கள்—ஸ்ரீமதி பாகீரதி.
vi. ஸெர்வியா—வித்யாபானு.
vii. ஸங்கீதமும் மதமும்—பண்டிட் வீ. சுப்ரமணிய ஐயர்.

III. விசேஷக் குறிப்புகள்.

i. குழந்தைகள் விஷயம்.
ii. க்ருஹத்தியக் குறிப்புகள்.
iii. ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.
iv. சமையலறையும் சமையலும்.
v. அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

IV. விளம்பரங்கள்.



OF THE REGISTRAR OF
467



THE

# FEMALE EDUCATION

AN ILLUSTRATED TAMIL MONTHLY MAGAZINE

# பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு தமிழ் மாதாந்தப் பத்ரிகை


கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.


Vol. 5. தொகுதி 5. | நளஞு ஆனிமீ June 1916. | No. 9. பகுதி. 9.


## PROGRESS OF THE WORLD.

## ப்ரபஞ்சப்போக்கு.

**The War in Europe.**

ஐரோப்பா யுத்தம்:—நாளுக்கு நாள் இந்த யுத்தம் மும்முரமாக நடந்துவருகிறது. இதன்முடிவு கண்ணுக்குத் தெரியவில்லையென்று ராணுவ நிபுணர்கள் அபிப்ராயப்படுகிறார்கள். இந்த யுத்தம் எவ்வளவு வர்ஷங்கள் நீடித்தாலும் நேசக்கக்ஷியார்கள் மஹாதீரத்துடன் சண்டைசெய்து ஜெயம்பெறுகிறதென்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்த ஸமயத்தில் யுத்தமந்த்ரியாகிய லார்டுகிச்சனர் இறந்துபோனது மிகவும் துக்கரமானது. அவருடைய யோஜனையும் உழைப்பும் நம் நேசக்கக்ஷியார்களுக்கு மிகவும் உபயோகமுள்ளதாயிருந்தது. அவர் தம்முடைய வீரத்துக்கும் புத்திக்கும் உலகத்தாரால் நன்கு மதிக்கப்பட்டு வந்தார். திடீரென அவர் இறந்துவிடுவாரென ஒருவரும் நினைக்கவில்லை. ஈசன்செயலுக்கு யார் என்ன செய்யமுடியும்? அவர் ஆத்மாசாந்தியை யடையுமாறு, ஈச்வரனை ப்ரார்த்திக்கின்றோம். நம் சக்ரவர்த்தி இந்த யுத்தத்தில் ஜெயம்பெற்று எங்கும் ஸமாதானம் நிலைத்து ஜனங்கள் ஸுகஜீவிகளாய் வாழ கடவுள் க்ருபை செய்வாராக.

**A Scheme for the improvement of education of our Girls & Boys.**

நம் தேசத்து பெண்களின் படிப்பையும் ஆண்பிள்ளைகளின் படிப்பையும் வ்ருத்திசெய்ய ஒருயோஜனை:—இந்தியா மஹா தரித்ர தேசம். பாமரர்கள் ஜாஸ்தி. வரவாபிழைப்புக் கஷ்டமாயிருக்கிறது. விலைவாசிகள் ஒன்றுக்கு மூன்று பங்கு அதிகமாக விற்கின்றன. ஸர்க்கார் உத்யோகம் கிடைக்கவேண்டுமென்றால் உயர்தரப் பரீட்சைகள் தேறவேண்டும். கொஞ்சம் படிப்புப் படித்தவர்கள் ஸர்க்கார் உத்யோகத்தில் ஆசைவைப்பது ப்ரயோஜனமில்லை. ஏதாவது தொழிற்படிப்பைப் படித்து வ்ருத்திசெய்துபிழைக்கவேண்டும். இந்தக் காலத்தில் படிக்காதவர்களின் கஷ்டம் சொல்லி முடியாது. கூலிவேலைக்குக்கூட எழுதவாசிக்கத் தெரிந்தகூலிகளைத்தான் எடுக்கிறார்கள். இனி பெண்ணாகட்டும் ஆணாகட்டும் சும்மாயிருக்கமுடியாது. படித்தே தீரவேண்டும். இதற்கு ஸர்க்கார் ஆதரவும் ஜனங்களின் உதவியும் உழைப்பும் வேண்டும். ஜனங்களும் ஸர்க்காரும் ஒத்துப்போய் ஒருகார்யத்தை முடிக்கத்தங்கள் முயற்சிகளை ஒரே வழியில் செலுத்தினாலன்றி அந்தக்கார்யம் நிறைவேறுவது ஸாத்யமல்ல. தேசத்தில் கல்வி அபிவ்ருத்தியைப்பரவச்செய்ய ஒவ்வொரு தேசத்தில் ஜனங்களும் ஸர்க்காரும் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் மிகவும் புகழத்தக்கவையாயிருக்கின்றன. இந்தியாவைத்தவிர ப்ரதி தேசத்திலும் ஆண்களும் பெண்களும் படிக்கவேண்டுமென்ற கட்டாயமிருக்கிறது. ஸர்க்கார் உதவியன்னியில் இக்கார்யம் நிறைவேறாது. லண்டனில் ப்ரசுரமாகும் 'ஸ்டாடிஸ்டு' என்ற ஆங்கில பத்ரிகை ஒரு உபாயம் சொல்லுகிறது. ஸர்க்கார் இந்திய ஜனங்களிடத்தில் 15-கோடி ரூபாய் 4 வட்டிக்குக்கடன் வாங்கி அதைக்கொண்டு இந்தியாமுழுமையும் இலவசப்படிப்பைக் கட்டாயப்படுத்திக்கொடுக்கவேண்டுமென்றும் இந்த 15-கோடி ரூபாய்க்கு வட்டி வர்ஷம் 1-க்கு 60 லக்ஷம் ரூபாய்க்கு மேலாகாதாகையால் கவர்ன்மெண்ட் ஸுலபமாகச்செய்யலாமென்றும் எழுதுகின்றது. ஒரே ஸமயத்தில் இவ்வளவுபணம் கடன்வாங்கவேண்டியது அவச்யமில்லையென்றும் காலக்ரமேண வாங்கினால் போதுமென்றும் சொல்லுகின்றது. இப்படி ஸர்க்காருக்கும் ஜனங்களுக்கும் ஒரு அழியாபந்தம் ஏற்பட்டுவிட்டால் இப்போதிருக்கிற ராஜ விச்வாஸத்தைக்காட்டிலும் பதின் மடங்கு அதிகப்பட்டு ப்ரிட்டிஷ் ராஜ்யம் அழியாப்பெருமையை அடையுமென்று எழுதுகின்றது. தேசத்தில் கல்வியின்மையே தான் தேச அமைதியின்மைக்குக் காரணமென்றும் சொல்லுகிறது. இதுவும் கவனிக்கக்கூடிய ஒரு யோசனையே.

**Home Education.**

வீட்டுப் படிப்பு:—சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்களில் மாத்ரம் தான் கல்வியும் நற்பழக்கமும் உண்டாகுமென்று எண்ணி வீட்டில் குழந்தைகளைக் கவனிப்பதே கிடையாது. அப்படி அவர்கள் கவனித்தாலோ தாங்கள் குழந்தைகளிடத்தில் நடந்து கொள்ளும் வகை தெரிகிறது கிடையாது. வீட்டில் குழந்தைகள் ஸரியான நற்பழக்கமின்றி வளர்ந்து வருவதனால் அவர்கள் பெற்றோர்களின் கட்டுக்கு அடங்காமல் துஷ்ட ஸகவாஸத்தினால் துர்ப்பழக்கம் மேலிட்டு, வாழ்க்கையில் மிகவும் வருந்துகிறார்கள். ஆகையால், பெற்றோர்கள் குழந்தைகளை சிறுபிராயம் முதற்கொண்டு தாங்கள் இடும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி செய்யவேண்டும். பிள்ளைகள் ஏதாவது தப்பு செய்தால் சிறிய தண்டனைகளினாலே அவர்களைத் திருத்தக்கூடியதாயிருக்கும்போது பெரிய தண்டனை விதிக்கக்கூடாது. பிள்ளைகளுக்கு நற்புத்தி புகட்டுகிறதாயிருந்தால் அவர்கள் மனம் வெந்து கோபமாயிருக்கும் ஸமயம் நீங்கிச் சாந்தமாக இருக்கும் போது அவர்கள் செய்த குற்றங்களை எடுத்துக்காட்டி புத்தி சொல்லவேண்டும். ஒரு வஸ்துவை விடாமல் கொடுக்கவேண்டு மென்று அழுதால் அவர்கள் அழுகிறார்களேயென்று அவ்வஸ்துவைக் கொடுக்கக்கூடாது. நற்கதையை எடுத்து அதில் உள்ள ஒழுக்கத்தைப் போதிக்கவேண்டும். குழந்தைகள் பேசும் போது கொஞ்சம் கூடப் பொய் கலந்து பேசாதபடி பயிற்றி வரவேண்டும். பெற்றோர்கள் நல்ல விஷயங்களில் நடந்து காண்பிக்கவேண்டும். பிறர் முன்னிலையில் தங்கள் குழந்தைகளைப் பற்றி குறை கூறக்கூடாது. குழந்தைகள் நன்மை செய்யும்போது அவர்களை வாழ்த்தி மேன் மேலும் நன்மை செய்யத்தூண்டவேண்டும். தெய்வீக புத்தியைப் புகட்டவேண்டும். ஸத்சரித்ரங்களைப் படிக்கச்சொல்லவேண்டும். மேற் கண்டவைகளை பெற்றோர்கள் அனுஸரித்து குழந்தைகளுக்கு நடந்து காண்பித்தால் பயன் உண்டாகும்.

**Women and civilisation.**

ஸ்த்ரீகளும் நாகரிகமும்:—கீழ்நாடு கீழ்நாடே, மேனாடு மேனாடே, கீழ் நாடு மேனாடாகாது. மேனாடு கீழ் நாடாகாது. அதாவது இந்தியா ஐரோப்பாவாகாது. ஐரோப்பா இந்தியாவாகாது. மேற்கு நாட்டு நாகரிகத்திற்கும் கிழக்கு நாட்டு நாகரிகத்திற்கும் வித்யாஸமுண்டு. அவர்களது ஆசாரப்பழக்கங்கள் வேறு, நம் ஆசாரப்பழக்கங்கள் வேறு. இந்த மாதிரியாக ஒவ்வொரு விஷயங்களிலும் அவர்களுக்கும் நமக்கும் வித்யாஸமுண்டு. இப்படி யிருக்க, மேனாட்டு நாகரிகம் இந்தியாவில் காலடி வைத்தது முதல் புருஷர்களும் ஸ்த்ரீகளும் அதைக்கண்டு மயங்கி ஒவ்வொரு விஷயத்திலும் அதற்கு அடிமைகளாகிக்கொண்டு வருகிறார்கள். ஐயோ! என்ன பரிதாபம்! யாதொரு யோசனையுமின்றி நம் தேச புராதனமும், உயர்ந்தவுமான வழக்கங்களை அடியோடு துறந்துவிட்டு ஐரோப்பாவுக்கு ஏற்றதாயுள்ள வழக்கங்களை அனுஷ்டித்து வருவது என்ன புத்தியின்மை! நம் ஸ்த்ரீகள் க்ருஹ க்ருத்யங்களை அலக்ஷ்யம் செய்து ஸுகமே வாழ்கிறோமென்று கருதியிருக்கும் அந்தஸ்துள்ள வீட்டு ஸ்த்ரீகள் இப்போது டென்னிஸ் பந்து விளையாடுவதும் க்ரிகெட் பந்துவிளையாடுவதுமாக இருக்கின்றனர். தற்காலம் நம் ஸ்தரீகள் மேனாட்டுப் பழக்க வழக்கங்களை அனுஷ்டித்து வருவது சுத்த பைத்யக்காரத்தனமே யொழிய வேறல்ல.

நம் ஸ்த்ரீகள் மேனாட்டு ஸதாசாரங்களை விட்டுவிட்டு துராசாரங்களை அனுஷ்டித்து வருவதற்கு நம் புருஷர்களே காரணமாவார்கள். புருஷர்கள் முதன் முதலில் ஸ்தாசாரத்தில் சீர்திருத்த மடையவேண்டும். புருஷர்களைப் பின் பற்றி ஸ்த்ரீகள் நடக்கவேண்டியிருக்கிறதால் புருஷர்களே எல்லா வழிகளிலேயும் வழிகாட்டியாக யிருக்கவேண்டும். படித்த ஸ்த்ரீகள் கொஞ்சம் ஆராய்ந்து பார்த்து நல்ல வழியில் நடந்தால் இஹத்துக்கும் பரத்துக்கும் ஸாதகமுண்டாகும்.

---

# THE TEACHERS AND STUDENTS

By

Sri N. Singarammal

OFFICE OF THE REGISTRAR OF BOOKS ... JUL 1915

## உபாத்யாயர்களும் மாணாக்கர்களும்.

தற்காலம் ஜனங்கள் நாலாவித உத்யோகங்களை வகித்து வருகிறார்கள். அவைகளில் உபாத்திமைத் தொழில் ஒன்று. இப்போது இவ்வுத்யோகத்தை வகிக்கிறவர்கள் வெகு தூரம் ஜனங்களால் மதிக்கப்படவில்லை. ஏதோ அருமை அறிந்தவர்கள் மாத்ரம் உபாத்திமைத் தொழில் வெகு ச்ரேஷ்டமானதென்று கருதி உபாத்யாயர்களாயிருக்கிறவர்களை உத்ஸாகப்படுத்தி அவர்களை மதித்து வருகிறார்கள். இதனாலேயே புத்தி கூர்மையுள்ளவர்கள் இத்தொழிலுக்கு வராது பற்பல துறைகளில் இறங்கி விடுகிறார்கள். யாதொரு பக்ஷபாதகமின்றி உலகத்துத் தொழில்களை நோக்குங்கால் உபாத்திமைத்தொழில் வெகு ச்ரேஷ்டமானது. ஒரு தேச முன்னேற்றம் உபாத்யாயர் கையில் இருக்கிறது. இப்போது பாடசாலைகளில் படித்து வரும் பெண்களும் பையன்களும் தான் பிற்கால தேசத்தூண்களாக விளங்குவார்கள். முற்காலம் உபாத்திமைத் தொழில் தெய்வீகமானதென்று ரிஷிகள் கருதித் தாங்களே உபாத்யாயர்களாக விளங்கியிருக்கிறார்கள். பாடசாலை ஒரு கோவிலுக்கு ஸமமாக கருதப்பட்டு வந்தது. மேலும், இந்தியாவில் முற்காலம் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அதிபால்யமாயிருக்கிற போதே நல்ல தேர்ந்த விற்பன்னரிடம் ஒப்பித்து விடுகிற வழக்கமிருந்தது. அப்படியே குழந்தைகள் வெகு வர்ஷகாலம் குருவினிடம் படித்து வந்தார்கள். பார்க்கிறவர்களுக்கு அது ஒரு பெரிய குடும்பமாக இருக்கும். அதற்கு குருகுலவாஸம் என்று பெயர். இப்போது அந்த மாதிரி நடந்தால் இந்தியாவின் முன்னேற்றம் வெகு எளிது. இப்படி நடக்கவேண்டுமானால் உபாத்யாயர்களிடத்தில் அன்பு என்கிற சிறந்த குணமிருக்கவேண்டும். இனி இந்தியா உலகத்து மற்ற நாகரிகமடைந்த தேசங்களைப்போல் பலத்திலும், செல்வத்திலும், செல்வாக்கிலும் ப்ரகாசித்து விளங்க வேண்டுமானால் அன்பு என்கிற மேலான ஔஷதத்தை உபாத்யாயர்கள் சாப்பிடவேண்டும்.

உலகத்தில் அநேக மதஸ்தாபகர்களும் ஞானாசார்யர்களும்
ஒருவன் அன்புடையவனாயிருந்தால் எல்லா குணங்களையும் சீக்
ரத்தில் அடைவான் என்று முறையிட்டிருக்கிறார்கள். மனிதனு
க்கு அன்பே ப்ரதானம். அன்பில்லாதவன் மனிதர்களோடு சேரத்
தகுதியற்றவன். மற்ற எந்த குணங்களிருந்தாலும் ஒருவனுக்கு
அன்பில்லாவிட்டால் அவன் விளங்க மாட்டான். ஆகையால்
உபாத்திமைத் தொழிலுக்கு வருகிறவன் அன்பை உடையவனாயி
ருக்கவேண்டும். அன்பில்லாதவன் உபாத்திமைத் தொழிலுக்கு
லாயக்கற்றவன். உபாத்யாயன் தன் தின வாழ்க்கையில் அன்பு
டன் கூடி பையன்களுக்குப் போதிக்கவேண்டும். ஒருவனிடத்
தில் அன்பு இருக்கிறது எப்படி யறியமுடியுமென்று கேட்கலாம்.
குழந்தைகள் பாலவயதில் விளையாடும்போதும் தம் இச்சையைத்
தெரிவிக்கும்போதும் தாம் நடந்துகொள்ளும் மாதிரியைக்கண்
டும் இந்தத் தொழிலுக்கு ஏற்றது என்பதை எப்படி கண்டுபிடிக்
கிறோமோ அப்படியே அந்த பாலவயதில் அன்புடையவர்களை
உபாத்திமைத் தொழிலுக்குத் தெரிந்தெடுக்கலாம்.

ஒரே பள்ளிக்கூடத்தில் அநேக தன்மையுள்ள பையன்கள்
வாசிக்கிறார்கள். படிப்பு முடிந்தவுடன் அவரவர்களின் படிப்புக்
குத் தக்கபடி தொழிலுக்குப் போகிறார்கள். ஒரு குழந்தை ஸதா
ஸர்வகாலம் ஸந்தோஷமாகவே காலம் கழித்து வந்து, அக்குழந்
தையைப் பள்ளிக்கூடத்திலும் வீட்டிலும் அச்சந்தோஷம் குறையா
மல் பெற்றோர்கள் பழக்கிவந்தால், அது தன் வாழ்நாளில் தன்னைச்
சுற்றியிருக்கிறவர்களை ஸந்தோஷப்படுத்தும். உபாத்யாயர் அன்பு
நிறைந்தவராக இருந்தால் பையன்கள் அவரையே நாடுவார்கள்.
அவர் சொல்லும் புத்திமதியைக்கேட்பார்கள். அப்படியே நடக்க
வும் செய்வார்கள். அந்த உபாத்யாயர் பாடசாலையை ஸந்தோஷ
கரமாகவேசெய்து கொள்வார்கள். உபாத்யாயர் தம்முடைய அன்
பைக்காண்பித்து குழந்தைகளை பாடத்தின் பேரில் பற்று வைக்கும்
படிச்செய்யாமலிருந்தால் அவர் உபாத்யாயர் தொழிலுக்கு எடு
த்தவரல்லர். அவர் வேறு உத்யோகம் பார்க்கவேண்டியதுதான்.
அன்புடையவர்கள் தெய்வாம்சத்தையுடையவர்கள். பசியுடையவன்
ஆஹாரத்தைக்கண்ட மாத்ரத்தில் எவ்வளவு தாபமுள்ளவனாயி



ருப்பானோ அப்படியே தெய்வீகத் தன்மையுடையவர்கள் தேச
ஸேவைக்குக் காத்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் கடவுள்
ஆக்ஞையாக எண்ணி உபாத்திமைத் தொழிலை வகிக்கிறவர்கள்.
தற்காலம் பள்ளிக்கூடங்களில் உபாத்யாயர்களைக் கண்டால்
ஸிம்ஹத்தைக் கண்டாற்போல் குழந்தைகள் பயப்படுகிறார்கள்.
அன்பு நிறைந்த உபாத்யாயர்களைக் கண்டவுடன் முகமலர்ச்சி
யோடு பையன்கள் அவரை நாடுவார்கள். அன்பு நிறைந்தவர்
ஸந்தோஷமாக பையன்கள் நாடும்போது அவர்களுக்குத் தகுந்த
புத்தியைச் சொல்லி அவரவர்களின் கெட்ட குணங்களை நீக்க
ப்ரயத்தனப்படுவார். தமது வாழ்நாளை யறிந்து தாம் நடந்து ஒழு
கினபடி பையன்களை அவ்வழியில் நடக்கும்படி கூறுவர். இப்
படி அன்பு நிறைந்த உபாத்யாயரின் சிறந்த நடத்தையையும், ஒப்
பற்ற குணத்தையும் கண்டு பையன்கள் வணங்குவார்கள். இப்
படி வணங்கும் தன்மை ஏற்பட்டபோது மேன்மையான வஸ்
துவை அதாவது பரமனை அடைய புத்திசெல்லும்.

கீழ்ப்படியும் தன்மையுள்ள பையன்களுக்குக் கற்பிக்கிறது
மிகவும் ஸுலபம். அவர்கள் தங்கள் நிலைமையை யறிந்து கொடுக்
கப்பட்ட பாடங்களை ஸரிவரப்படித்து வருவார்கள். அப்போது
தண்டனை என்கிற வாஸனையே பள்ளிக்கூடத்தில் இராது.
பையன்களை இப்படியாக அடக்கியாளுவது முடியாத கார்யம்
என்று சிலர் நினைக்கலாம். கெட்ட பழக்கத்திலேயே நடத்தப்
பட்ட பையன்களை திருத்துவது ச்ரமஸாத்யம். ஆனால், அவர்
களை காலக்ரமேண நற்பழக்கத்துக்குக் கொண்டுவருவது எளிது.
இப்படி கெட்ட பிள்ளைகள் நற்பழக்கத்துக்கு திருத்தப் பட்டிருக்
கிறார்கள் என்று எவ்வளவோ கதைகள் படித்திருக்கிறோம். பள்
ளிக்கூட நேரங்களில் அன்புநிறைந்த ஆஹாரத்தை உபாத்யாயர்
களும் மாணாக்கர்களும் ச்வாஸம் பண்ணிக்கொண்டிருந்தால், அப்
படி வளர்ந்த பையன்கள் பெற்றோர்களுக்கு ஸுகுமாரர்களாயும்,
ஜனங்களுக்கு உத்தம ஸஹோதரர்களாயும் தேசத்துக்கு அன்பு
நிறைந்த உத்தம தாஸர்களாயுமிருப்பார்கள். இப்படி இவர்கள் தலை
முறை தலைமுறையாக நற்பெயர் எடுத்து தேசத்துக்கு திலகம்
போல் விளங்குவார்கள்.

என். சிங்காரம்மாள்.

# TIRUVARUL

By

Sankirithi.

## திருவருள்.

இந்திய ஸ்த்ரீமணிகளே! ஒரு வினயமுள்ள தாஸன் உங்களுக்கு ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளுகிறான். அவன் தாழ்ந்த விண்ணப்பத்துக்குச்செவிகொடுங்கள். சக்திஸ்வரூபிகளான நீங்கள் அவனுக்கு மனப்பூர்வமாகவும் ஸந்தோஷமாகவும் ஆசீர்வதியுங்கள். அப்போது தான் அவன் உங்கள் முன்பணிந்து வினயமாக விண்ணப்பம் செய்து கொள்ளுவான். இந்த விண்ணப்பத்தை ஸாவகாசமாகப் படியுங்கள். இதை ஆழ்ந்து யோஜியுங்கள். உங்களுக்கு மனச்சாந்தியுண்டாகும். மங்களமுண்டாகும்.

1. ஸஹோதரிகளே! நீங்கள் இல்லற தர்மத்தை கைப்பற்ற வேண்டும். அதுதான் உங்களுக்கு மோக்ஷ ஸம்பத்து.

2. இல்லற தர்மம் ஸரியாகச்செய்து வந்தால் உங்களுக்கு அன்பு அல்லது ப்ரேமையுண்டாகும். ப்ரேமையிருந்தால் அது நீங்கள் செய்யும் இல்லற தர்மத்தை ப்ரகாசிக்கச்செய்யும். அதுவே பரிசுத்தப்படுத்தும்.

3. அன்பு என்பது உலகத்தில் மத்யஸ்தானத்தை வஹிக்கிறது. அதைச்சுற்றி இவ்வுலகம் ஒரு உணர்ச்சியினால் கட்டப்பட்டு சுற்றிச்செல்லுகிறது.

4. இந்த பூலோகம் அன்பினால் நிலைநின்று ப்ரகாசிக்கின்றது.

5. சூர்யன் ப்ரகாசிக்கிறது அன்பின் சக்தி யென்று அறியவும். அக்னி சுடுகிறது, நதி ஓடுகிறது, காற்று வீசுகிறது, மழை பெய்கிறது; இவைகளெல்லாம் இந்த அன்பின் சக்தியினாலென்று உணரவேண்டும்.

6. எல்லா ப்ராணிகளிலும், எல்லா ஜந்துக்களிலும், எல்லா வஸ்துக்களிலும், அழகாகவும் ஸந்தோஷமாகவும் உட்கார்ந்திருக்கும் ஸர்வேசனை நீங்கள் உணர்ந்து துதிக்கவேண்டும்.

7. கடவுளால் ச்ருஷ்டிக்கப்பட்டவைகள் அனைத்தும் இந்த அன்பின் சக்தியினால் தத்தம் வேலைகளைச்செய்து வருகின்றன. ஸஹோதரி ஸஹோதர பாவமாக நீங்கள் நினைக்கிறதெல்லாம் அன்பின் சக்தியினாலென்று உணரவேண்டும்.

ஸங்கிருதி.

## மங்கையர்க்கரசியார்

சென்ற மாதப்பத்ரிகையின் 178ம் பக்கம் தொடர்ச்சி.

ஸம்பந்தர் மதுரைமாநகருக்கு வந்த ஸமாசாரம் சமணர்களுக்குத் தெரிந்தது. அவரைக் கண்ட ஒரு சமண முனி ராஜஸபைக்கு ஓடி வந்து ஒரு சாம்பலாண்டியை இன்று கண்ட எனக்குப் பத்து நாள் தீட்டு என்று படபடத்துச் சொன்னான். அச்சபையிலிருந்த அரசனும் மற்றும் சமணர்களும் இதைக்கேட்ட எங்களுக்கு மூன்று நாள் தீட்டென்றார்கள். இவர்கள் இப்படித் தீட்டுக்கொண்டாடிக்கொண்டு, அச்சைவ மதத்தனைத் தங்களது மந்த்ரசக்தியால் அக்னியை ஏவி அவனது மடத்தில் நெருப்பு வைத்து விடுவதாகச் சொல்லி அரசனை உத்தரவு கேட்டார்கள். அந்தோபாபம்! மேல் விளையும் ஸங்கதியை உணர முடியாத அரசன் மந்த்ரத்தில் மாங்காய் விழாது என்பதை யறியாமல் அப்படிச் செய்ய உத்தரவு கொடுத்தான். அவனுக்குச் சமணர்களது மந்த்ர சக்தியில் வெகு நம்பிக்கையிருந்தது. மேலும், அவர்களது ஸமயாசாரமோ அவன் சிறிதும் அறியாதவன். வெளிப்பகட்டில் ஏமாந்து அவர்களை முற்றிலும் யோக்யர்களென்று நம்பினவன். அவர்கள் வில்வலன் போன்ற மோசக்காரமுனிகளென்பது அவனுக்குத் தெரியாமற்போயிற்று. சமண முனிகள் தங்களது மந்த்ர சக்தியால் நெருப்புவைத்து விடுவதாகச் சபதம் கூறிவிட்டுத் தங்கள் வீடுகளுக்குப் போனார்கள். நள்ளிரவில் ஸம்பந்தரும் அவரது பரிவாரங்களும் தூங்கும்போது சில சமணத் தீயர்கள் அவரிருந்த வீட்டுக்கு நெருப்பு வைத்தார்கள். மடம் பற்றியெரியவே ஸம்பந்தர் நடுமுற்றத்தில் தம்பரிவாரங்களை யழைத்து நிறுத்திக் கொண்டு,

‘செய்யனே! திரு ஆலவாய் மேவிய
ஐயனே! அஞ்சல் என்று அருள் செய் எனைப்
பொய்யராம் அமணர் கொளுவும் சுடர்
பையவே சென்று பாண்டியற்கு ஆகவே.’

என்று பாடத் தொடங்கினார். குடிகள் செய்த பாபம் அரசனைச் சேருமன்றோ! அந்த நெருப்பின் சூடு பாண்டியனது உடலைப்பற்றி எரிக்க ஆரம்பித்தது. உடனே பாண்டியன் படமுடியாத கஷ்டத்தை யடைந்தான். சமணர்களுக்குச் சொல்லியனுப்பினான். அவர்

கள் வந்து உரியின் மேலிருந்த தீர்த்தத்தை மயிற்பீலியால் மந்த்ரித்து அவனது உடலின் மேல் தெளித்தார்கள். சுரம் அதிகமாயிற்று. வலி ஸஹிக்க முடியாமல் கதறினான். சமணர்கள் கொடுத்த மருந்தும் மந்த்ரமும் நோயை அதிகப்படுத்தின. அப்போது மனைவியாராகிய மங்கையர்க்கரசியார் ஸம்பந்தரது பெருமைகளைச் சொல்லி, அவரை வரவழைத்துப் பார்க்கச் சொல்லுவது நல்லதென்றார். ஆனால், அரசனுக்கு முதலில் அதில் நம்பிக்கை யுண்டாகவில்லை. பின்னர் வலியதிகரித்து எவ்வித சிகிச்சையிலும் அடங்காமல் ஓங்கி நின்றதால் தீராவிதியாகப் பார்க்கச் சொன்னான். உடனே மங்கையர்க்கரசியார் ஸம்பந்தரின் காலில் வணங்கி நமஸ்கரித்துத் தமது கணவனுடைய கஷ்டத்தைக் கூறித் தமக்கு மாங்கல்ய பிச்சை தந்தருளும்படி கேட்டார். நம் ஸம்பந்தரும் அம்மையாரது பதிபக்திக்கும் விச்வாஸத்துக்கும் மெச்சி உடனே அரண்மனைக்குப்போனார். ஆனால், சமண முனிகள் இச்சிறுவனோ இவரைச் சொஸ்தம் செய்பவன்? என்று வாதாடித் தாங்கள் கடைசி முறையாக ஒரு தரம் பார்த்த பிறகு அவன் சிகிச்சை செய்யட்டும் என்றார்கள். நம் ஸம்பந்தரைப் பலவித கேள்விகளும் கேட்டார்கள். வெறும் மந்த்ரத்தினாலன்றி ஒருவித மருந்தினாலும், சிகிச்சை செய்யக்கூடாது என்றார்கள். அவரும் விபூதி தவிர, வேறொன்றும் உபயோகிக்கமாட்டேன் என்றார். அவ்விபூதியில் மருந்து கலந்திருக்கக்கூடும் என்று தடுத்துச்சொன்னார்கள். 'உங்களுக்கு அந்த ஸந்தேஹ மிருந்தால் மீனாட்சி ஸுந்தரேச்வரரது கோயில் மடப்பள்ளிச்சாம்பலைக்கொண்டு மந்த்ரிக்கிறேன்' என்றார். கோயில் பூட்டி எத்தனை வர்ஷமோ ஆய்விட்டது. மடப்பள்ளியில் சாம்பலேது? என்றாலும், அடுப்பிலிருந்த சாம்பல்மண்ணை வாரிக்கொண்டு வந்து கொடுத்தார்கள். இதற்குள் சமணர்கள் அவரொரு பக்கமும் நாங்கள் ஒரு பக்கமுமாக மந்த்ரிக்கவேண்டு மென்று அரசனை உத்தரவு கேட்டார்கள். அரசனுக்கோ வலி உபாதி அதிகமாயிருந்தது. இந்தக் கார்க்கோடகர்களது கையில் அகப்பட்டுப் புழுவாய்த்துடிக்கலானான். வலி யதிகமாயிருந்தும், அவனுக்குச் சமணர்களது வார்த்தைகளில் பாதி நம்பிக்கை போயும் நெடுநாள் அவர்களோடு பழகினவனாதலால் அதற்கு ஒப்புக்கொண்டான். உடனே ஸம்பந்தர்,



"மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்திரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயான் திரு நீறே"

என்ற பதிகத்தைப் பாடினதும் அவர் எடுத்துக்கொண்ட பக்கத்திலிருந்த வலி யெல்லாம் மாற, சமணர்கள் சொஸ்தப்படுத்த எடுத்துக்கொண்ட பக்கத்து வலி இரண்டு மடங்காயிற்று. அரசனுக்கு சமணர்களிடத்திலிருந்த நம்பிக்கை முழுவதும் நீங்கி விட்டது. உடனே ஸம்பந்தப் பிள்ளையாரையே விட்டு மறுபக்கத்து நோயையும் நீக்கவேண்டினான். உடனே அவர் பதிகத்தைப் பாடி முடித்துக்கொண்டே அதனது உடலை நீற்றினால் நீவினார். வ்யாதி குணமாயிற்று. அவனது கூனும் நிமிர்ந்தது. பின்பு, ஸம்பந்தர் சமணர்களோடு வாதஞ் செய்து ஜயித்து அவர்களைக் கழுவேற்றினார். அவர் கனல் வாதம் செய்தபோது நெருப்பின் மேல் எழுதி விட்ட பாட்டு பின்வருமாறு.

'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீய தெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.'

உடனே மங்கையர்க்கரசியாருக்கு அளவற்ற ஆநந்தம் ஜனித்தது. நம் ஸம்பந்த பெருமானைப் பல முறை வணங்கித் துதித்தார். தம் நாயகனைச் சைவனாக்கி பல வர்ஷ காலமாக மூடியிருந்த கோவிலைத் திறப்பித்து பூஜை உத்ஸவங்களை ஒழுங்கு படுத்தி வைத்ததற்காகச் சொல்லாலடங்கா உபசாரஞ் செய்தார். கொஞ்ச நாள் ஸம்பந்தரை அம்மதுரையில் இருத்திப் பல வித உபசாரமும் செய்வித்தார்.

மங்கையர்க்கரசியாரது பெருமையை எம்போலியரது நாவால் வர்ணிக்கத் தரமாகுமா? வழிதவறின நாயகனைச் சரியான நெறிக்குத்திருப்பின அவரது பெருமையே பெருமை! என்றாலும் அவன் மனங்கோண ஒரு நாளும் அவர் நடந்ததில்லை. தமக்குச்சைவ மதத்திலழுத்தம் அதிகமாக விருந்தும், அம்மதக் கொள்கைகள்

தமது புருஷனுக்குப் பிடிக்காதிருந்த போது தாம் எவ்வளவு மறைவாய்க் கடவுளைத் திருப்தி செய்து கொண்டிருந்தாலும் கடவுளுக்குச் சமானமான தம் கணவனையும் திருப்தி செய்வதே உத்தம பத்நியின் உயர்ந்த நெறியென உணர்ந்து, 'ஹேமே பர்த்தா ஸாமே தெய்வம்' என்ற ஸீதை யினது கோட்பாட்டை யநுஸரித்து நடந்த மங்கையர்க்கரசியாரை நம் ஸஹோதரிகள் யாவரும் அநுஸரித்து நடப்பாராயின் நம் நாடு மேம்படுமென்பதற்குத் தடையுண்டோ? நல்ல தாய்மார்களினாலேயே ஸத்புத்ரர்கள் உலகிற் பிறக்கிறார்களென்றும், பெரும்பாலும் புத்ரரது கல்வியறிவு ஒழுக்கங்களுக்கு அத்தாய்மார்களே காரணமாகிறார்களென்றும் உலகம் அறிந்ததே!

உலகத்தில் ஜனங்களால் போற்றப்பட்டு வந்திருக்கும் ஸ்த்ரீ புருஷர்கள் யாவரும் தெய்வ பக்தி மிகவும் உடையவர்களாயிருந்திருக்கிறார்கள். கடவுள் பக்தியில் புருஷர்களை விட ஸ்த்ரீகளே முதன்மையாகச் சிறந்தவர்கள். ஒவ்வொரு தேசமும் வீர ஸ்த்ரீகளினாலேயே முன்னடைந்திருக்கிறது. இது சரித்ர உண்மை. அந்த வீர ஸ்த்ரீகள் தெய்வபக்தி மேலிட்டு தேசபக்தியுடையர்களாயிருந்தார்கள். தெய்வ பக்தியில்லாத ஸ்த்ரீகளின் தேசம் பாழடைந்த தேசமென்று கருதப்படுகின்றது. நம் இந்திய தேசத்தில் முற்காலத்தில் எவ்வளவு வீர ஸ்த்ரீகள் தெய்வ பக்தியுடையவர்களாய் தேசத்தை அபிமானித்து பெரும் நற்கார்யங்கள் செய்து வந்திருக்கின்றதை நாம் சரித்ர மூலமாய் அறிகிறோம். முற்காலத்தில் ராணிமுதல் தோட்டிச்சி வரையில் தெய்வ பக்தியில்லாதவர்கள் கிடையாது. ஆகவே, தான் இந்தியா மற்ற தேசத்தார்களால் புகழப்பட்டு வந்தது. இந்தியப் புத்ரர்கள் முற்காலத்து நம் ஸ்த்ரீகளை உயர்ந்த அந்தஸ்த்தில் வைத்துக்கௌரவித்து வந்தார்கள். மங்கையர்க்கரசியாரது சரித்ரம் அநேக ஸஹோதரிகள் படித்திருக்கமாட்டார்கள் இவர் மிகுந்த உண்மையான சிவ பக்தியுடையவராயிருந்ததனால் போலிச்சமணர்களின் கெட்ட எண்ணங்கள் இவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஸம்பந்த மூர்த்தி ஸ்வாமிகள் பல தடவைகளில் மங்கைக்கர்சியாரது பக்தியை மெச்சியிருக்கிறார். மங்கைக்கரசியின் புத்தியின் நுட்பமும், பொறுமையும், கணவன் அந்ய மதஸ்தனாயிருந்த போதிலும் அவனிடம் பக்தியும், மிகுந்த ஜீவகாருண்ய வள்ளலுமாகிய இக்குணங்களை நம் ஸஹோதரிகள் அறியவேண்டும். பிறகு, உணரவேண்டும். பின்பு, அதன்படி நடக்கவேண்டும். சைவ மதத்துக்கு உயிரும் உணர்ச்சியும் கொடுத்த இந்த ராணியாரின் நற்குணங்களும், நற் கார்யங்களும் நம் ஸஹோதரிகளுக்கு கடவுள் க்ருபையினால் உண்டாகவேண்டும். நம் பெண்களும் ஸ்த்ரீகளும் தெய்வாம்சம் பொருந்திய இது போன்ற சரித்ரங்களைப் படித்துப் பயன்பெறுவார்களென்று நம்புகிறோம். சுபம்.



சென்ற மாதப்பத்ரிகையின் 182ம் பக்கம் தொடர்ச்சி.

பரசுராமரும் பீஷ்மரும் ஆசார்ய சிஷ்யர்களானதால், இருவர்களுடைய பலாதிசயங்களும் அதிசயக்கத் தக்கனவாயிருந்தன. பரசுராமருடைய ஆக்நேயாஸ்த்ரத்திற்கு பீஷ்மர் வருணாஸ்த்ரமும், நாகாஸ்த்ரத்திற்கு கருடாஸ்த்ரமும் மோஹனாஸ்த்ரத்திற்கு ப்ரக்ஞாஸ்த்ரமும் இவர்கள் ப்ரதிக்குப் ப்ரதி விட்டு ஒருவர்க்கொருவர் சளைக்காமல் செய்யும் யுத்தத்தைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. முதல் மூன்று நாள் சண்டையையே விவரிக்க வ்யாஸ பகவான் வெகு ச்ரமப்பட்டு விட்டார். மற்றைய இருபத்தொரு நாட்கள் சண்டையை இப்படியே அலுப்பு சலுப்பில்லாமல் செய்தார்கள் என்று சொல்லிப் போயினாரென்றால், இவர்கள் நடுவில் நடந்த யுத்தம், இன்னமாயிருந்திருக்க வேண்டுமென்று ஊஹிக்கலாம். இவர்கள் ஒருவர்க்கொருவர் பாணங்களினால் அடிபட்டு மூர்ச்சித்து விழுகையில் உபய கட்சிக்காரர்கள் அடையும் ஆநந்தமும், குதூஹலமும் ஏட்டில் எழுதியடங்கா. மூன்றாவது நாள் யுத்தத்தில் பரசுராமரின் தீக்ஷ்ணாக்ரமுள்ள அம்பு பீஷ்மரின் மார்பில் ஊடுருவிப் பாய்ந்து பீஷ்மரைக்கீழே தள்ளிற்று. ஆனால் அவர் கீழே வீழ்ந்து அபாயமடையாமல் தம்முடன் ஸஹோதரர்களாய் முன் ஜன்மத்தில் பிறந்திருந்து ஸ்வர்க்க பதவியிலிருந்த வஸுக்கள் எழுவர் வந்து தாங்கி, களைப்படையாமல் தடுத்து, ஆச்வாஸனம் செய்து, தைர்யப்படுத்திப் பீஷ்மரை யுத்தத்துக்கு அனுப்பினார்கள்.

காலைநேரம் தொடங்கி மாலைநேரம் வரையில் இருபத்து மூன்று நாட்கள் ஓயாமல் சண்டை செய்தும் ஜயாபஜயமில்லாமலிருக்கிறதைப் பார்த்த பீஷ்மர், மிகுதியும் வ்யஸனமடைந்து கடைசி நாளில் நித்ரை செய்கையில் அந்நாளின் கடைசி ஜாமமாகிய ப்ராம்ஹ முகூர்த்தத்தில், "ஏ! பீஷ்மா! எழுந்திரு! எழுந்திரு! அதைர்யம் கொள்ளாதே! நீயே ஜயமடைவாய்! உன்னுடைய சக்தி உனக்கே தெரியவில்லை! நீ அஷ்டவஸுக்களில் ஒருவனென்றறி! தேவதையாகிய வஸுக்களுக்குள் ப்ரஸ்வபனாஸ்த்ரம் உனக்குத் தானாகவே ப்ரக்ஞையில் வரும், அம்மந்த்ரத்தை ஜபம் பண்ணி, அவ்வஸ்த்ரத்தை ப்ரயோகிக்க, பரசுராமன் நெடுந்தூக்கம் தூங்கி அபஜய

மடைவான் என்பதில் ஆட்சேபணையில்லை" என்று சொல்லியதாகக் கனவு கண்டார். உஷத்காலத்தில் ஏற்பட்ட கனவானதால், ஸ்வப்ன சாஸ்த்ரப்படி அது பலிதமாகி தமக்கும் ஜயமுண்டாகு மென்று நினைத்து நித்ய கர்மங்களை முடித்துக்கொண்டு பீஷ்மர் யுத்தகளம் சென்றார்.

இத்தனை நாள் அகோர யுத்தம் நடப்பது கண்டு பொறாத தேவர்களும், பரசுராமரது பிதுர்க்களும், ஸ்ரீ கங்காதேவியும், மஹரிஷி மண்டலங்களும் அங்கு தோன்றி இவர்களிருவர்க்கு மிடையில் நேர்ந்த யுத்தத்தை நிறுத்தி ஸமாதானம் செய்ய ஆரம்பித்தார்கள். கடைசியாக, மத்யஸ்தர்கள் ஸமாதானப் படுத்திவிட பரசுராமரும் தம்மால் பீஷ்மரை வெல்ல முடியாதெனக் கருதிப் பீஷ்மரிடம் விடைபெற்றுப்போயினர். பீஷ்மர் யுத்தத்தில் வெல்லப்படாததைக் கேட்ட அம்பை என்ற காசிராஜன் புத்ரி, பீஷ்மரை தான் எவ்வாறாவது ஜயிக்க வழிதேடுவது அவச்யமென்று தீர்மானித்துக் கொண்டாள். இதற்காகவே தபஸ் செய்ய கங்காநதி தீரத்தை யடைந்து, அங்கு மூன்று நதிகள் கூடுமிடத்தில் தங்கி, கோரமான தபஸ் செய்வாளாயினள். இவள் தபஸைக் கண்டு மிகுதியும் ஸந்தோஷ மடைந்த கங்காதேவியானவள் இவள் முன் ப்ரஸன்னமாகி வேண்டியவற்றைக் கேளென்றாள். அம்பை, தேவவ்ருதனாகிய காங்கேயனைக் கொல்ல வரம் வேண்டு மென்று கேட்ட கேள்விக்கு, கங்காதேவி சினந்து அவளுடைய பாதி சரீரம் அம்பை என்னும் கட்டாறாகக் கடவது எனச்சபித்து மறைந்து விட்டாள். அவ்வாறே, அம்பையின் பாதி சரீரம் கட்டாறாகியது. அம்பையோ ஒன்றையும் கவனிக்காமல் தீவிரமான தபஸ் புரிந்து வந்தாள். இவளின் தபஸை மெச்சி ஸ்ரீ மஹாதேவன் எதிரில் ப்ரஸன்னமாகி வேண்டிய வரத்தைக்கேள் என்றார். தான் பீஷ்மரை ஜயிக்க வரம் கொடுத்தருளவேண்டுமென்று கேட்க, அதற்கு ஸ்ரீ மஹாதேவன் த்ருபதராஜ புத்ரியாய் முதன்முதலில் உற்பவித்து பின் பெண் ரூபத்தை நீத்து, ஆணுருவமடைந்து பீஷ்மரை ஜயிப்பாய் எனச் சொல்லி மறைந்து விட்டார்.

இது நிற்க, த்ருபதராஜாவும் புத்ர ஸந்தான மில்லாதவனாய் கங்கா தீரத்தில் தபஸ் செய்ய அவருக்கு ஸ்ரீ மஹாதேவன்



தோன்றி புத்ரிபாக்யமுண்டாகுமென்றும் பின் அது புத்ரனாக மாறுமென்றும் சொல்லி அந்தர்த்தானமாயினர்.

த்ருபதனும் தாம் தபஸ் செய்ததும், ஸ்ரீ மஹாதேவனிடத்தில் புத்ரிவரம் பெற்றதும், அஃது காலக்ரமத்தில் புத்ரனாக மாறுமென்பதும் இவைகளை தம் மனைவிக்குக் கூறினர். அவ்வாறே, த்ருபத பத்னியும் சீக்ரத்தில் கர்ப்பம் தரித்துப் பெண் குழந்தையை ப்ரஸவித்தாள். புத்ரப் பேற்றின் வாஞ்சை மிகுதியினாலும், மஹாதேவனின் இன்னருள் பொய்க்காது என்ற நம்பிக்கையினாலும் புத்ரனே யுற்பவித்தது என்று ராஜ தம்பதிகள் பஹிரங்கப்படுத்தினர்கள். குழந்தைக்குப் பதினைந்தாவது பதினாறாவது வயது வரையில் செய்ய வேண்டிய சடங்குகளெல்லாம், பெண்ணானாலும், புருஷக் குழந்தைக்குச் செய்வதுபோல் செய்யப்பட்டன. நடை, உடை பாவனை, பழக்கம் எல்லாம் புருஷக் குழந்தைக்குச் செய்வது போல் செய்யப்பட்ட த்ருபத குமாரியும், குமாரன் போலவே வளர்ந்து வந்தாள்.

நடக்கிறது நடக்கட்டும், எல்லாம் மஹாதேவன் க்ருபை என்று தம்முள்ளே நினைத்து, புருஷன் போல் பாவிக்கும் தம் பெண்ணுக்குப் பெண் பார்த்துக் கல்யாணம் செய்யவும் த்ருபதன் எண்ணமிட்டு, ராஜஸபையில் ஒரு ஆலோசனை செய்தார். தம் ஸம்பந்தியாக வருவதற்கு ஸாலவ தேசத்து ராஜன் ஹிரண்யவர்மனே, தகுதியென்று நினைத்து அவனுக்குத் தூதனுப்பி, அவனுடைய பெண்ணை புருஷனாகப் பாவித்த தம் பெண்ணுக்கு வரனாக்கிக் கல்யாணமும் வெகு ஆடம்பரமாகச் செய்வித்தனர். இது நடந்த சில காலம் கழித்து, ஹிரண்யவர்மாவின் பெண்ணும் தன் புக்கஹமாகிய த்ருபதனது அரண்மனை சேர்ந்தனள். அங்கு தன்னுடைய புருஷன் நடையுடை பாவனைகளை நன்குணர்ந்து தன்னைப்போன்ற ஸ்த்ரீஜாதி தான் தன் புருஷன் என்று தெரிந்து, தன் பிதாவாகிய ஹிரண்யவர்மனுக்கு ரஹஸ்யமாகத் தெரிவித்தாள். மேலும், தன் தகப்பனார், நன்றாக வஞ்சிக்கப் பட்டமையைக் கண்டு மிகவும் துக்கித்தாள். இது விஷயம் கேட்ட தசார்ணவ மன்னனோ, இதனைச் சங்கையறத் தெரிந்து தெளிதற் பொருட்டு அநேக சாரர்களை ஒருவருமறியாது விடுத்து, உண்மையை யறிய நினைத்தான். த்ருபதன் தன்னை

நன்ருக வஞ்சித்துப் பெண்ணுக்குப் பெண் கல்யாணம் பண்ணிஞனே, இவனை என்ன செய்தால் தீரும் என்று எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏழை நெஞ்சம் புண்ணுஞன். இதன் விஷய உண்மையைத் தீர விசாரித்தற் பொருட்டு தனது குல ப்ரோஹிதனையனுப்பி, த்ருபதனிடம் நேராகப்போய் விசாரித்து வரச் செய்தான். ப்ரோஹிதனும் போய் த்ருபதனைக் கேட்க, த்ருபதனும் ஒருக்காலும் அப்படியில்லை, ஹிரண்யவர்மன் மாப்பிள்ளை பிள்ளை தானென்றும், அதில் யாதொரு ஸந்தேஹமும் பட வேண்டியதில்லை யென்றும் தெரிவித்தார். இது விஷயத்தை ப்ரோஹிதன் போய்க் கூறலும், பொய்யை ஸ்திரப்படுத்தும், த்ருபதன் தம் பெண்ணுக்குப் பெண் வாங்கிக் கல்யாணம் செய்து கொண்டு அவமானமும் படுத்திஞர் என்றும், இம்மாதிரியான துர் நடத்தையுள்ள அரசனைத்தண்டிக்க உபபலமாக மற்றும் அரசர்கள் பலரும் வரவேண்டு மென்றும் சொல்லி மற்றைய அரசர்களுக்கு நிருபம் விடுத்தான். ஹிரண்யவர்மன் கடைசியாக, வஞ்சனை செய்த த்ருபதன்மீது படையெடுத்து வருவதாகவும் தூது அனுப்பிஞன்.

இஃது இப்படி நிற்க, தன் மாதா பிதாக்கள் தான் பெண்ணுயிருந்தமையை முன்னிட்டும், தனக்குப் பெண் தேடிக் கல்யாணம் செய்தமையை முன்னிட்டும், படுகிற அவஸ்தைகளுக் களவில்லை யென்று கண்டு அதனை எவ்விதத்திலாயினும் நீக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் த்ருபத ராஜன் புத்ரி மிகவும் யோசித்து வந்தாள். ஒருநாள் அவள் அந்தப்புரத்தினின்றும் நீங்கி நகர்ப்புறத்தே விளங்கும் ஸ்தூணாகரன் என்னும் யக்ஷராஜன் வஸிக்கும் ஆரண்யம் சேர்ந்து அங்கு அதி உக்ரமான தபஸ் செய்தாள். அவ்வனுதிபதியாகிய ஸ்தூணாகர்ணன் தோன்றி அப்பெண்ணுக்கு வேண்டிய வரம் ஈவதாக வாக்குறுதி செய்தான். த்ருபத புத்ரியும், தான் பெண்ணாய்ப் பிறந்தமையும், தன் தந்தை தாய் ஸ்ரீ மஹாதேவனிடமிருந்து தான் புருஷனுவேன் என்று அருள் பெற்றமையும், இப்போது அப்படியாகாததனுல் அவதிப் படுவதையும், தான் புருஷனுனல் மட்டும் தன் தந்தையின் உயிரும் ராஜ்யமும் நிலைநிற்கு மாதலால், தனக்குப் புருஷத்வம் கிடைக்க வேண்டிய வரத்தையும் யாசித்தாள்.

# IDEALS OF FAST

By

**Sri Bagirathi.**

## உபவாஸத்தின் லக்ஷ்யங்கள்.

உபவாஸமென்பது ஆஹாரமின்றி இருத்தல். உபவாஸமிரு
த்தல் ஒருவருக்கு தேகவலுவைக் குறுக்கி, தேகக் கட்டைத்தளர்த்தி
தேகத்தை நோய்க்கு இரையாக்குமென்று சிலர் எண்ணுகிருர்கள்.
இது பிசகு. உபவாஸ மென்பது எப்பொழுதும் ப்ரதி தினமும்
ஆஹாரமில்லாமலிருத்தலல்ல. குறித்த தினங்களில் குறித்த காலங்
களில் ஆஹார மில்லாமலிருத்தலாகும். ஸாதாரணமாய் நம்மவர்கள்
ஏகாதசி யன்று உபவாஸமிருக்கிருர்கள். சிலர் ப்ரதிவாரம் சனிக்கிழ
மையிலோ வேறு கிழமையிலோ சுத்த உபவாஸமோ, ஒரு வேளை
ஸ்வல்ப ஆஹாரமோ செய்கிருர்கள். "மீதூண் விரும்பேல்"
என்னும் முதுமொழி பட்டினியின் பெருமையை விளக்கி நிற்
கிறது. உபவாஸத்தின் நோக்கம் என்ன? சிலர் மடமையா
லோ உணவாசையாலோ அளவுக்கு மிஞ்சி உண்கிருர்கள்.
அளவுக்கு மிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சாகுமன்றே? மீதூண் விரும்
புதலே உலகில் நடமாடிவரும் வ்யாதிகளுக்குக்காரணம். நம் தேஹ
த்திலுள்ள ஜீர்ணக்கருவிகள் அதிக வேலை செய்ய வேண்டுவதால்
தளர்ச்சியடைந்து சக்தி குறைந்து வருகின்றன; இப்படிச் சில
காலமிருப்பின் நோய்கள் தேகத்தை அடைகின்றன. தேகதத்வ
சாஸ்த்ரத்தை நன்கறிந்தவர்களுக்கே உபவாஸத்தின் ப்ரயோஜனம்
நன்குவிளங்கும். அன்றன்று நாம் செய்யும் வேலைக்குத் தக்கபடி
உணவு உட்கொள்ளவேண்டும்.

உபவாஸம் வாரத்துக்கொருமுறையோ பக்ஷத்துக்கொரு முறை
யோ இருப்பதால் அக்காலத்துக்குள் தேஹத்தில் அனுவசியமாய்ச்
சேர்ந்திருக்கும் உணவுகள் ஜீரணிக்கப்படும். இல்லாவிடில் மீதூண்
கள் மேலும் மேலும் சேர்ந்துகெட்டு அழிந்து தேஹத்துக்குக்கெடு
தியை விளைவிக்கும். உபவாஸம் தேகம், மனம் இரண்டையும் சுத்தி
செய்து தேகத்திற்கு வலுவையும் மனதிற்குத் தெளிவையும் கொடு
க்கிறது. நல்ல ஞானிகள், ஆத்ம விசாரம் செய்கிறவர்கள் மனத்
தெளிவின் நிமித்தம் பால் பழம் முதலியவைகளைக் கொள்வதை
நாம் பார்க்கிறோம்.

தற்காலம் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலுமுள்ள ப்ரபல வைத்யர்கள் வ்யாதிகளுக்கெல்லாம் காரணமாயிருப்பது உணவென்றும் உணவை மிதப்படுத்திக்கொள்வதால் வ்யாதிகளைத் தடுக்கலாமென்றும் கண்டுபிடித்து ப்ரபலமடைந்து வருகிறார்கள். அநேக வ்யாதிகளை உபவாஸத்தால் ஸௌக்யப்படுத்தியிருக்கிறார்கள். இம்முறையை உபவாஸமார்க்கம் (Fast cure) என்று கூறுகிறார்கள்.— "மனிதன் அதிக ஊண் உண்டு வலுவைக் குறைத்துக்கொண்டு மரணத்துக்கு ஆளாகலாம். மிதமானபோஜனம் உட்கொண்டு ஒருவன் நீண்டகாலம் ஜீவிக்கலாம்." என்பது அவர்களது துணிவு.

இவ்வைத்யர்களைக் காட்டிலும் நம் முன்னோர்கள் எவ்வளவு ஆழ்ந்த விவேகமுள்ளவர்களென்பது அவர்கள் உபவாஸத்தை ஆசார வ்யவஹாரமாய் ஏற்படுத்தியிருப்பதாலும் உபவாஸத்துக்குப் பின் பாரணை செய்ய வேண்டிய நியமங்களை நிருமித்திருப்பதாலும் நன்கு விளங்குகிறது. உபவாஸமிருந்தபின் ஆஹாரத்தை மிகவும் மிதமாக உட்கொள்ளவேண்டும். வேலை சிறிதே செய்த ஜீரணக் கருவிகளுக்கு திடீரெனப் பெரிதும் வேலை கொடுத்தால் அவைகள் வேலைகளை ஸரிவரச் செய்யா. உபவாஸமிருப்பதின் பயன் அதிக உணவு உட்கொள்வதால் கெட்டுப்போகும். ஆகையால் தான் பாரணையன்று பத்யமாக போஜனம் செய்ய வேண்டுமென்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரிந்த தேஹதத்வ வைத்ய சாஸ்ர நுட்பங்கள் இனி நூதனமாய் நாம் அறியவேண்டுவன. ஆகையால், நாம் நம் ஆசார வ்யவஹாரங்களையும் கர்மாநுஷ்டானங்களையும் இகழ்ந்து பேசாமல் அவைகளின் நோக்கங்களை விசாரித்தறியவேண்டும்.

இதே விஷயமாக ஆங்கில டாக்டர் ஹிக்கர் எழுதியுள்ளதைச் சுருக்கி இங்கு எழுதுகிறோம்.

"தின்று கொழுத்த உடம்பிற்குக் கொஞ்ச நாள் பட்டினி போடுவது வெகு நல்ல மருந்து. பட்டினி என்றால்-யாரும் முகத்தைச் சுளிக்கிறார்கள். ஆனால், உபாஸமிருப்பவருக்கு மட்டும் அது அவ்வளவு உபத்ரவமாகக் காணுவதில்லை. தேஹதிடம் ஸாமான்யமாயிருப்பவருக்கு இது ச்ரமமேயன்று. அதிலும் கடைசியில் கிடைக்கக்கூடிய நற்பயனை யபேக்ஷித்து யாரும் இதை அனுஷ்டிக்கலாம்.



கொஞ்சம் ச்ரமத்தைப் பாராட்டக்கூடாது. இதன் உட்கருத்தும் புதிதன்று. இதையறிந்தே ஞானிகள் எக்காலத்திலும் எத்தேசத்திலும் உபவாஸமிருக்கவேண்டி ஜனங்களை வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்.

"முதன்முதல் இந்த அநுஷ்டானத்தை நான் வஹிக்கும்போது எனக்கு வயது ஐம்பத்தாறு. அப்போதப்போது ஒரு நாள் ஆஹாரத்தை விட்டுவிடுவேன். என்னுடைய ஆஹாரமும் ஸாமான்யம். மேற்குறித்த ஸந்தர்ப்பத்தில் முதல் நாலைந்து நாளைக்கு விசேஷம் ஒன்றும் காணவில்லை. நல்ல தீர்த்தம் மட்டும் இரண்டு தம்ளர் நான் சாப்பிடுவது." சுமார் ஆறு நாளைக் கப்புறம் நாக்கில் வெள்ளையடையுண்டாயிற்று. இந்த அடை தேஹத்தில் நடக்கும் வேலைக்கு நல்ல சூசனைபோல் காணுகிறது. ஜீரணக் கருவிகளுக்கு எப்போதும் வேலை கொடுத்து வந்தால், நமது தேஹத்துள் அழுக்கு வர்ஷக்கணக்காகச் சேர்ந்து வெளிப்போகச் ஸௌகர்யமின்றி நோய்க்கிடங்கொடுக்கிறது, ஆகலால் ஜீரணக்கருவிகளுக்குக் கொஞ்சம் இடங்கொடுத்தால், இப்படி நெடுங்காலம் கூடிய அழுக்கை வெளியில் தள்ள ஸௌகர்ய மேற்படுகிறது. அதற்கு அடையாளம் நான் மேற்கூறிய நாக்கில் காணும் அடையென்று எனக்கு நம்பிக்கை.

"நல்ல தண்ணீரை மட்டும் குடிப்பது அகத்தேயுள்ள அழுக்கையெல்லாம் கழுவிவிடக் காரணமாகிறது. பட்டினியினால் கைகால்கள் வலி குறைவதேயில்லை. நித்ய விதிகளுக்கும், ஏற்பட்ட வேலைகளுக்கும் ஒரு குறைவுமின்றி நாம் நடத்திவரலாம். படிப்பு, எழுத்து முதலிய காரியங்களுக்கும் குறைவில்லை. எல்லாம் பதிவுபோலவே நடந்துவரக் கூடுமென்பது என் அநுபவம். பன்னிரண்டு நாள்வரை நாக்குத் தடித்திருந்தது. அக்காலத்தில் எனக்குப் பசியும் விசேஷமாயில்லை; பதினான்கு நாளானதும் என் நாவில் ஒரு தோஷமுமில்லை. குழந்தை நாக்குப்போல் ம்ருதுவாகவும், சிவப்பாகவும் நேர்த்தியாகவு மாறினது.

"14-ம் நாள் நான் உபவாஸத்தை யொழித்தேன். ஏனெனில் அன்றையதினம் தான் எனக்குக் கால்கள் உறுதியாக நடக்க இடந்தரவில்லை. தேஹமும் மெலிந்து சற்று பலவீனமாக இருந்தது. முதன்முதல் நான் கொஞ்சம் ஆரஞ்சு ரஸமும் ஜலமுமாகச் சாப்பி

ட்டுப், பிறகு ரொட்டியும் பாலும் சேர்த்து, மறுபடி கொஞ்ச காலம் கழித்துப் பழையபடி உணவு சேர்த்து வந்தேன். நான் த்ருடமுள்ளவனாக யிருக்கிறேன். ஒவ்வொரு ஸ்த்ரீ புருஷரும் மாதத்தில் ஒரு நாளாவது உபவாஸத்தைக் கைகொண்டிருத்தல் நலம். இதனால் அறிய வேண்டியவைகளைப் புத்திமான்களறிந்து நடக்கட்டும்' இதுதான் என் கோரிக்கை.

பாகீரதி.

## SERVIA.

## ஸெர்வியா.

இப்பொழுது ஐரோப்பாவில் மஹா யுத்தம் நடக்கிறது. இதற்குக் காரணம் ஸெர்வியா தேசத்துக்கும் ஆஸ்டிரியா தேசத்துக்கும் ஏற்பட்ட விரோத மனஸ்தாபங்களென்று நம் ஸஹோதரிகள் அறிவார்கள். ஸெர்வியர்களின் தேச வழக்கங்களையும் அவர்களின் தேசத்தையும் பற்றி நமது ஸஹோதரிகள் அறிந்துகொள்ள வித்யாபாநுவிலிருந்து கீழ் ப்ரசுரிக்கிறோம்.

ஸெர்வியா வென்பது ஒரு சிறு தேசம். அத்தேசத்தவர் தேசாபிமானிகள். இதற்கு முன்னர் பல தடவை அவர்கள் தங்கள் தேசத்தைக் காப்பாற்ற வேண்டி சண்டை செய்தார்கள். ஒரு ஸமயம் அது துருக்கர்களாதீனத்திலிருந்தது. அது நிலவளமும் நீர்வளமும் பொருந்திய தேசம். ஸெர்வியர்கள் காட்டையழித்துக் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரைகளாகவும் சாகுபடி நிலங்களாகவும் செய்து கொண்டார்கள். அங்கு பலவித தான்யங்களும், த்ராக்ஷை, புகையிலை முதலியவை அபரிமிதமாய்ப் பயிர் செய்யப்படுகின்றன.

அவ்வூரில் குடியானவன் பன்றிகளையே விசேஷமாய் வளர்த்து வருவான். தன்னுடைய ஆடு, மாடு, பன்றி இவைகள் மேய்வதற்காக ஒவ்வொருவனும் தனித்தனியே மேய்ச்சல் தரை வைத்து வருவான். ஒரு குடியானவன் விவாஹம் செய்து கொள்ளத் தீர்மானம்செய்து கொண்டால் அவன் உடனே குடித்தனம் செய்ய ஒரு வீடுகட்ட முயலுவான். ஒரு மனைக்கட்டு நல்லதென்று தெரிந்தெடுக்க இரண்டு உபாயங்களுண்டு. எங்கே குடித்தனம் செய்ய விரும்புகிறானோ அவன் அவ்விடத்திலைதைச் சுற்றிச் சில ஆடுகளை ஓட்டிவிடுவான். இரவில் ஆடுகள் படுக்கும் வரையில் உற்று நோக்குவான். எங்கே அவை படுக்கின்றனவோ அங்கேயே வீட்டைக் கட்டிவிடுவான். இஃது ஒரு விதம். வேறு விதமாகவும் தெரிந்தெடுப்பதுண்டு. தனக்கிஷ்டமான இடத்தைத் தேர்ந்தெடுத்து அஸ்தமன வேளையில் அந்த ஸ்தலத்தைச் சுற்றிப் பெரிய கற்களை வைத்துவிட்டு வீட்டுக்குச் செல்லுவான். மறுநாள் ஸூர்யன் கிளம்பு முன் அந்த ஸ்தலத்திற்குப்போய் ஒவ்வொரு கல்லாகப் புரட்டிப்பார்ப்பான். சிலகற்களடியிலாவது பூச்சிகள் தங்கி யிருக்கக்கண்டால் அது வசதியான விடமாகும். இல்லாவிடில் வேறு இடம் தெரிந்தெடுக்க முயலுவான்.

குடியானவன் வீடு கட்டுவது வெகு ஸுலபம். முன் பக்கத்தில் ஒரு பெரிய கூடமுண்டு. அது தான் பகல் உபயோகத்திற்கு. பின் பக்கத்தில் இரண்டு அறைகளிருக்கும். அவைகள் இரவில் நித்ரை செய்வதற்கு உபயோகிக்கப்படும். பட்டண வாஸங்களில் நேர்த்தியான வீடுகளுண்டு. அவை கற்களால் கட்டப்பட்டுச் சிவப்பு வர்ணமான மேற் கூரைகளோடு அழகாயிருக்கும். அவர்கள் வீட்டுக்கு வரும் விருந்தாளிகள் வீட்டுக்குள் வருவதற்கு முன்னதாக வெளியில் நின்றுகொண்டு கைகளைக் கழுவிவிட்டுத்தான் உள்ளே புகவேண்டும். அதிதி வந்ததும் வீட்டுக்குள்ளிருந்து ஒரு சிறு பெண் கையில் ஒரு தொட்டியையும் ஜலங்கொண்ட ஒரு சீசாவையும் கொண்டு வருவாள். தொட்டியில் ஜலம் விழும்படியாக அதிதி கைகளை விரிப்பார். அவள் சீசா ஜலத்தை வார்ப்பாள். உடனே ஒரு துண்டையும் கொடுப்பாள். அதிதி கைகளைத் துடைத்துக் கொள்வார். இப்படிச் செய்துதான் அவர்கள் அதிதியை நல் வரவு ஏற்பார்கள். இப்படிச் செய்யாதவரை வந்தவர் அவமதிக்கப்பட்டவராக எண்ணப்படுவார்.

அத்தேசத் தெருக்கள் விசாலமாகவும் சுத்தமாகவுமுள்ளன. வீதிகளில் அநேக வண்டிகளிருந்தாலும் அவை எல்லாம் மெதுவாகத்தான் செல்லும். அத்தேசத்தவர் ஜீவகாருண்ய முள்ளவராகையால் தாங்கள் ப்ராணிகளை ஹிம்ஸிப்பதில்லை. மேலும், அவர்கள் பரபரப்புள்ளவர்களேயல்லர். ஸவாரிசெய்ய விருப்பமுள்ளவரானாலும் மெதுவாகத்தான் போவார்கள். கால் நடையாகச் சென்றாலும்

ஹரிதப்படுகிறதில்லை. க்ராமங்களில் மாடுகளே விசேஷமாயுபயோ
கத்திலுள்ளவை. வண்டியிழுக்கவும், ஏர் கட்டி க்ருஷி செய்யவும்
போரடிக்கவும் மாடுகள் தான் உபயோகப்படுகின்றன. குதிரைகள்
அவ்வளவாக இல்லை. வயல் வரப்புக்களில் பெண்பாலரோ புருஷ
ர்களைவிட மிகுதியாக வேலை செய்வார்கள். அக்காலங்களில் குழ
ந்தைகளை இடுப்பில் எடுத்துப்போய் அங்குள்ள மரங்களின் கிளை
களில் தூளி கட்டி அவைகளில் குழந்தைகளை விட்டு விட்டுத் தங்
கள் வேலையைப் பார்ப்பது அவர்கள் வழக்கம். அவர்கள் எளியோ
ராலும் பரோபகார சிந்தையுள்ளவர்கள். அறுவடை காலத்தில்
போதுமான உதவியில்லாமல் ஒருவன் நஷ்டமடைந்தால் அவனுக்கு
மற்றவர்கள் எல்லோரும் சேர்ந்து உதவி செய்வார்கள்.

இந்த ஸெர்வியர்கள் க்ருஹ க்ருத்யங்களில் விசேஷ கவனமு
ள்ளவர்கள். அவர்கள் குழந்தைகளிடத்தில் பேரன்பு வைத்தவர்கள்.
குழந்தை பிறந்தவுடன் வேட்டுப் போடுவார்கள். இவ்வுலகில் ஒவ்
வொருகுழந்தையும் ஜனிக்கும்பொழுது ஆகாயத்தில் புதியநக்ஷத்ரம்
ஒன்று தோன்றுமாம். அந்த நக்ஷத்ரம் குழந்தை உயிரோடுள்ளமட்
டும் ஒவ்வொருநாளும் இரவில் ப்ரகாசித்து வருமாம். அந்தக் குழந்
தையின் அந்த்ய காலத்தில் நக்ஷத்ரமும் கீழே விழுந்து விடுமாம்.
ஆகையால், நக்ஷத்ரம் உதிரக்கண்டால் பாபம் "யாரோ உயிர் துறந்
தார். ஈசா! நின் கிருபையால் அவர் நமது பந்துவாயிருக்கவேண்
டாம்" என்று சொல்லுவது வழக்கம். மற்றொரு விநோதமான
கொள்கையுமுண்டு. குழந்தை பிறந்த ஏழாம் நாளிரவில் ஒரு தேவ
தை தொட்டிலண்டை வந்து சிசுவையுற்றுப்பார்த்து அதன் நெற்றி
யைத்தொட்டு அக்குழந்தையின் வாழ்நாட்களைத் தீர்மானித்து விட்
டுப்போகுமாம். ஆகையால் அத்தேசத்தவர் தேவதைகளின் செய்
கைகளில் நம்பிக்கை யுள்ளவர்கள், குழந்தைகள் முதல், வயது முதி
ர்ந்தவர் உள்பட அவ்வெண்ணம் கொண்டவர்கள். சில தேவதைகள்
பர்வதங்களில் வசிப்பவைகளாம். அவைகள் அழகுள்ளவைகளாக
வும் வாலிபத்துடன் கூடினவையாகவுமிருக்குமாம். அவைகள் பள
பளப்பான வெண்கலையுடுத்தி வெண்மையான இறக்கையுடையவை
யாகும். அவைகளின் தர்சனம் பெற்றவன் பாக்யவான். அவை
களுக்கு எதிரிடையாக துர்த் தேவதைகளுமுண்டு. புயலையும்



பெருங்காற்றையும் தானியப்பயிர்களை அழித்துப்பூச்சியுருவங்கொண்டு
வீடுகளில் வ்யாதியை விளைவிக்கும் க்ஷாமதேவதைகளாகும். வர்
ஷத்தில் ஒரு செவ்வாய்க்கிழமையன்று ஊரிலுள்ள குடியானவர்க
ளெல்லோரும் இரவில் படுக்கப் போகையில் தங்கள் தலையணைக்
கடியில் ஒரு வெள்ளைப் பூண்டை வைத்துக்கொண்டு படுப்பார்கள்.
ஏனென்றால், மற்ற நாட்களைவிட அன்றிரவில் விசேஷமாகத் துர்த்
தேவதைகள் வெளிக்கிளம்பி வருவதால், வெள்ளைப்பூண்டின் துர்
நாற்றத்தால் அவைகள் தங்களிடமணுகா வென்று நினைப்பார்களாம்.
அன்றிரவில் அநேகமாய் ஸெர்வியா தேசத்தவர் எல்லோரும் வீட்
டைவிட்டு வெளியில் தங்கவேமாட்டார்கள். அவசியமாக வெளியே
போக நேரிட்டால் துர்த்தேவதைகள் தம்மிடம் நெருங்காமலிருக்
கும்படி தம் கழுத்தைச் சுற்றி ஒரு வெள்ளைப்பூண்டைக் கட்டித்
தொங்கவிட்டுக்கொண்டு தான் புறப்படுவார்கள். இவர்கள் க்றிஸ்து
மதத்தைப் பின் பற்றினவர்கள்.

---

## RELIGION AND MUSIC

By

**Pandit V. Subramania Aiyar,**
Sub-Editor, Swadesamitran.

### மதமும் கானசாஸ்த்ரமும்.

மதம் ஒவ்வொருவருக்கு எவ்வளவு சிலாக்யமோ அப்படியே
கானசாஸ்த்ரமும் சிலாக்கியம் தான். எல்லாக் கானசாஸ்த்ரமும்
வெகுகாலத்திற்குமுன் உண்டாயின. அவ்வாறே மதமும் வெகு
காலத்திற்கு முன் உண்டானது தான்.

உணர்ச்சி இல்லாத மதம் ப்ரயோசன மில்லாதது. உள்ளக்
கிளர்ச்சிக்கு கானமே முக்யகாரணம். கானத்திலேயே ஆநந்த
ரஸம், சோகரஸம், முதலியவை யுண்டாவதுடன், அக்கானத்தின
லேயே பரஸ்பர நம்பிக்கை, நேசம், துணிவு, பக்தி முதலியன
தானாகவே உண்டாகின்றது. மதப்பற்று இக்கானத்தினாலேயே
பெரிதும் உண்டாகிறது. கானம் ஒருவனை வசப்படுத்தி தன்வச
மாக்கிக் கொள்வதுபோல் எதுவும் செய்வதில்லை. மௌனத்தி
லிருந்து தபஸ் செய்துவருகிற ஞானிகளையும் யோகிகளையும் அது

பரவசமாக்கும் சக்தியுடையது. அது விசேஷமான வீரர்களையும் மயக்கவல்லது. இன்னிசை கேட்டதும், கல்நெஞ்சு கூடக் கரைந்துவிடும் என்று சொல்வார்கள். இனிமையான இசையைக் கேட்டும் நெஞ்சிளகமாட்டாதவனை மஹாவஞ்சகன் என்று சொல்லுவார்கள். கானத்தாலிளகாத மனமுடைய மனிதனுமுண்டோ? உண்டெனில் மிகக் கொடும் பாதகன், அவனே யாவான்? ஆகவே கானம் எல்லாவற்றையும் செய்ய வல்லமையுடையது.

ஆதலினால், பாகன் ஜாதியார் ஹிந்துக்கள் முதலிய ஜாதியார் கான சாஸ்த்ரம் தேவலோகத்திலிருந்து ஈச்வரனால் மனுஷ்யலோகத்திற்குக் கொடுக்கப்பட்டதென்று நம்பியிருக்கிறார்கள். ப்ரம்ம லோகத்தில் ஈச்வரனின் புகழ்களை எடுத்து அந்த லோக வாஸிகள் கானம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறுவார். ஹிந்துக்கள் பூஜா காலங்களிலும், கல்யாண காலங்களிலும், மற்றெந்த விசேஷ உத்ஸவகாலங்களிலும், கானசாஸ்த்ரத்தை மதஸம்பந்தப்படுத்தி வைத்திருப்பதைப்பார்க்கிறோம். பாகன் மதத்திலும், ஹிந்து மதத்திலும் புராதன காலந்தொட்டு கானசாஸ்த்ரத்திற்கென்றே தேவதைகளிருக்கின்றன. தும்புரு, நாரதர், ஸரஸ்வதி என்ன வித்யாதரர்களென்ன! கின்னர ஸ்த்ரீகள் என்ன! இவர்களெல்லாரும் வீணா கானம் முதலியவற்றில் சிறந்தவரென்னச் சொல்லியிருக்கிறது. ஈஜிப்ட் தேசத்து கான தேவதைக்கு, ஓஸரிஸ் (Osiris) என்றும், க்ரேக்க தேசத்துத் தேவதைகளுக்கு அப்பாலோ (Apollo) என்றும் ஆர்பியஸ் (Orpheas) என்றும், ஹிந்து தேசத்தில் பரதநாட்டிய தேவதைக்குப் பரதர், என்றும், ம்ருதங்க வாத்ய தேவதைக்கு நந்தி பகவான் என்றும் பெயர்கள் கொடுத்து அழைக்கப்படுகின்றார்கள்.

கீழ் நாடுகளில் சீனர்களும் கான சாஸ்ரத்தைத் தம் தேசத்திலுள்ள ஸர்வமதங்களிலும் ஸம்பந்தப்படுத்தியிருக்கிறார்கள். தெய்வ ஸம்பந்தம் பெற்றகானதேவதை பூஜையை ச்ரேஷ்டமாகக் கொண்டாடுகிறார்கள். அந்நாட்டில் பஞ்சஸ்வரங்கள் கானசாஸ்த்ரத்தில் ஏற்பாடு பண்ணியிருக்கிறார்கள். அந்த ஸ்வரங்களுக்கு ராஜாங்கங்களின் பெயரை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்தியா தேசத்தில் உச்சஸ்வரங்களென்று சொல்லப்படுவனவெல்லாம், சீன தேசத்தார்



அவைகளை தாழ்ந்த ஸ்வரங்களென்று மாற்றிப் பெயரிட்டழைக்கிறார்கள். பூர்ண ஸ்வரங்களை புருஷ ஸ்வரங்களென்றும், அர்த்த ஸ்வரங்களையெல்லாம் ஸ்த்ரீ ஸ்வரங்களென்றும் பெயரிட்டழைக்கிறார்கள்.

பண்டைக்காலம் முதற்கொண்டு இந்தியாவிலாகட்டும், சீனாவிலாகட்டும் துக்கமுள்ளவர்கள் இனிமையான ஸ்வரத்துடன் பாடக் கண்டதில்லை. அப்போது அவர்கள் பாடக்கூடாதென்றே சாஸ்த்ரம் அவர்களைக் கட்டுப்பாடு பண்ணியிருக்கிறது. முற்காலத்தில் பெரிய ப்ரபுக்கள், பணக்காரர்கள், ராஜாக்கள் முதலியவர்களிடத்தில் விலையேறப்பெற்ற கானவாத்யங்கள் விலை கொடுத்து வாங்கி வைக்கப்பட்டிருந்தன. அக்காலத்தவர் இந்தியாவிலாகட்டும் சீனாவிலாகட்டும் துக்ககரமான காலத்தில் கானம் என்ற பேச்சை ஸ்மரணை செய்வதுகூட இல்லை. பழைய காலத்து ஜப்பானியர்களின் கானசாஸ்த்ரம் ஏதோ ஒரு வகுப்பினரைப்பற்றி விசேஷமாய்க் கூறும். அச்சாதியார் தான் கான சாஸ்த்ரத்திற்கே அதிகர்த்தா என்று ஜப்பானியர் கூறுவர். ஹிந்துக்கள் இக்கான சாஸ்த்ரம் தொன்று தொட்டு வழக்கத்தில் பகவானால் கொடுபட்டு வந்த அருமையான வஸ்து என்று கொண்டாடுவர். ஈச்வரனுக்குத் தேனபிஷேகம் ஒரு ஜன்மத்தில் செய்தானானால், ஒரு மனிதன் கண்டத்வனியினால் கல்லும் கரையும்படியாயிருக்குமென்பர். ஸாம கானத்தை ராவணேச்வரன் பரமசிவனைக் குறித்துப்பாடி அவர் மனதை இரங்கச் செய்ததை ஹிந்துக்கள் பல தடவைகளிலும் வர்ணித்துக் கூறுவர். இப்படிப்பட்ட கானம் ஹிந்து மதாசார்யர்களாலும், ஸந்யாஸிகளாலும் பாதுகாக்கப்பட்டு வந்தது. பூர்விக ஹிந்து ராஜாக்கள் இச்சாஸ்த்ரம்கெட்டுப் போகாமல் ஆதரிக்கப்படவேண்டி ஸர்வமான்யங்களும் அந்தந்தவர்க்கத்தாருக்குக் கொடுத்து வந்ததுண்டு.

## ஐரோப்ய கான சாஸ்த்ரம்.

க்றிஸ்தவ ஸமயம் பரவின பிறகு, யூதர் கோயிலில் கானசாஸ்த்ரம் வ்ருத்தி செய்யப்பட்டது. க்றிஸ்தவக் கோயில்களிலும் பூஜையின்போது கானம் உண்டு. ஏசுநாதரும் அவருடைய சிஷ்யரும் கீர்த்தனம் பாடினார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பூர்வகாலத்தில் க்றிஸ்தவ கான சாஸ்த்ரம் யூதர்களிடமிருந்து கொள்ளப்பட்டது. யூதர்கள் கிரீஸ் தேசத்திலிருந்தும், இடாலியிலிருந்தும் கான சாஸ்த்ரத்தைக் கைக்கொண்டார்கள். பாகன் ஜாதியாரின் கானசாஸ்த்ரத்திலிருந்து க்றிஸ்தவ கானசாஸ்த்ரம் உண்டானாலும் க்றிஸ்தவ கானம் மிகவும் நயமாயும், ரம்யமாயும், விசாலமாயுமிருந்து ஜனப்ரீதியை யடைந்துவிட்டது. ஆகையினால், இவ்வகையான கானத்தையே எந்தவித பூஜையிலும் உபயோகப்படுத்த ஜனங்கள் முயன்றார்கள். யூதர்களின் கானசாஸ்திர வழி அன்றுமுதல் இன்று வரையில் விடாமல் கையாளப் பட்டுவருகிறது.

வாய்ப்பாட்டுக்குத் தக்கபடி உபகரணங்கள் அகப்பட்டு அமைகிறவரையில், கானயந்த்ரங்கள் ஏற்படவில்லை. இம்மாதிரி யந்த்ர ஏற்பாடு நாலாவது நூற்றாண்டு வரையிலும் அதற்கு மேலும் ஏற்படவில்லை. க்றிஸ்தவர்களில் சிறந்தவர்கள் பலகாலங்கள் வரையில் பாடும் ஆயுதங்களை நிகிருஷ்டமாக நினைத்துத் தள்ளி வந்தார்கள். பல வர்ஷங்கள் வரையில் இப்படியே இருந்தது.

பதினோராவது நூற்றாண்டி ஆரம்பத்தில் எழுத்து ஸ்வரமொன்றை அரிஸோ (Areyso) நாட்டின் ஸந்யாஸியாகிய கூடோ (Guido) என்பவர் கண்டு பிடித்தார். இதற்கு முன்னாலேயே 10 அல்லது 9 வது நூற்றாண்டில் ப்ளாண்டர்ஸிலிருந்த ஸெயிண்டு ஆமண்டினுடைய ஹூக்பால்ட் என்பவர் ஒரு வரி ஸ்வரம் ஏற்கனவே கண்டுபிடித்ததை அரிஸோ நாட்டு ஸந்நியாஸி வ்ருத்திக்கும் கொண்டுவந்தார். கூடோவும் ஸொல்பிகி என்றவரும் இந்த கானத்தின் அபிவ்ருத்திக்காகச் செய்த கார்யங்களுக்கு அளவில்லை.

பண்டிட் சுப்பிரமணிய ஐயர்.

அகமும் புறமும் ஒத்துவாழ்தலே சுகவாழ்வாம்

*　　　*　　　*

மாசற்ற ஜீவிதமும் எல்லா உயிர்களிடத்தும் அன்பும் பேரின்பந் தரும் பெற்றியுடையனர்.

*　　　*　　　*

புஸ்தகங்கள் விஷயங்களை விரித்துக் கூறும். ஆனால் அவை ஞானத்தை ஊட்ட மாட்டா.



# I
# CONCERNING CHILDREN.
## குழந்தைகள் விஷயம்.

**Our children.**

நமது குழந்தைகள்:—நம்குழந்தைகளை ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும் பாடசாலைக்கு ஐந்து வயதில் அனுப்பவேண்டும். இது எல்லா தேசங்களிலும் அனுஷ்டிக்கப் பட்டுவருகிறது. குழந்தைகளை ஐந்து வயதில் பாடசாலைகளுக்கு அனுப்புகிறது உசிதமென்று பெரியோர்கள் கூறுகிறார்கள். குழந்தைகளை ஒவ்வொருபெற்றோரும் படிக்கவைக்கவேண்டும். குழந்தைகள் எழுதப் படிக்கத் தெரிந்து கொள்கிறவரையில் படிப்புக் கற்றுக்கொடுப்பது பெற்றோர்களின் முக்ய கடமையாகயிருக்கிறது. ஒரு குழந்தையை பட்டினிபோடுகிற தாய் தகப்பனை எப்படி ராஜாங்கச் சட்டம்தண்டிக்குமோ அப்படியே குழந்தை எழுதப் படிக்கத்தெரிந்துகொள்கிற வரையில் கற்றுக்கொடுக்காத தாய் தகப்பனை கர்ம விதியானது தண்டிக்காமல் விடாது.

**The teachers and girls.**

உபாத்யாயர்களும் பெண்களும்:—ஒரு வகுப்பில் பல குணங்களுடைய பெண்கள் வாசித்துக்கொண்டிருப்பது ஸஹஜம். உபாத்யாயர்கள் சொல்லிக்கொடுக்கும் பாடங்களை சில பெண்கள் ஞாபகமாகக் கேட்டுஅறிந்துகொள்ளும். சிலர் புஸ்தகத்தைப்பார்த்துப்படித்து அறிந்துகொள்ளும்; சிலர் ஒன்றையும் கவனிக்கமாட்டார்கள். சிலர் ஸதா விளையாடிக்கொண்டிருப்பார்கள். இப்பேர்ப்பட்ட குணங்களுடைய பெண்களை உபாத்யாயர் நன்றாயறியவேண்டும். தாம் சொல்லுபவைகளை ஒரு முறைக்கு மூன்று முறையாகப் பொறுத்து அழுத்தமாகச் சொல்லவேண்டும். சிறு பெண்கள் மனதில் ஸரியாய்ப்பதியும்படி போர்டின்மேல் அடிக்கடி விஷயங்களை எழுதிக்காட்டவேண்டும். பெண்களை கண்காக்ஷிகளுக்கு அழைத்துச்சென்று அங்கு வைத்திருக்கும் ஸாமான்களை தொட்டுப் பார்த்துக் கற்றுக்கொடுக்கவேண்டும். பாட ஸம்பந்தமாக பல கேள்விகளைக்கேட்டு பதில்களை அவர்கள் வாயால் வரும்படி செய்யவேண்டும். இதுதான் நல்ல முறை.

**Children and God.**

குழந்தைகளும் கடவுளும்:—குழந்தைகளும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில் என்பது உண்மையே. நாம் குழந்தைகளிடத்தில் அன்பு வைத்தால் அந்த அன்பை நமக்குக் அவைகள் திருப்பி கொடுக்கிறது. அவர்களிடத்தில் கோபம்காட்டினால் அதற்குப்ரதி கோபத்தையே கொடுக்கிறது. குழந்தைகளிடம் நாம் அன்பைக் கொடுத்து அன்பை வாங்கவேண்டும். குழந்தைகள் ஒருமுகம் பார்க்கும் கண்ணாடிக்கு ஒப்பானவர்கள். குழந்தைகள் புத்திசாலிப் பெற்றோர்களால் பழக்கப்பட்டு வந்தால் உலகத்தில் அக்குழந்தைகள் ஸத்பாத்ரர்களாகி பேரும் புகழுமடைவார்கள். தெய்வத்தை எவ்வளவுக் கவ்வளவு நாம் வணங்குகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு, அவர் நமக்கு தமது க்ருபையைக் கொடுத்து ஆசீர்வாதம் செய்வார்.

**Mother's milk.**

தாய்ப் பால்:—குழந்தை பிறந்து ஒருவர்ஷம் வரையில் அதற்குத்தாய்ப் பால்தான் ஏற்றது. இதைப்போல் குழந்தைக்கு உயர்ந்த உணவு வேறு எதுவுமில்லை. ஏனெனில் தாய்ப் பாலிலிருக்கிற தாதுக்கள் அக்குழந்தையின் தேகஸௌகத்துக்குச் சரியாகயிருக்கிறது.

# DOMESTIC HINTS AND SUGGESTIONS.

## க்ருஹத்தியக் குறிப்புகள்.

**Cures for Headache**

தலைவலிக்கு சிகிச்சைகள் :— (1) கண்டங்கத்திரி இலைச்சாற்றில் அல்லது கஷாயத்தில் எண்ணெய் கலந்து காய்ச்சிப் பூசிவரவும், (2) ஜாதிபத்ரியை நச்யமிடவும். (3) தாளிசபத்ரியை காடியிலரைத்துப் பூசவும். (4) கொத்தமல்லி விரையை சந்தணத்தோடரைத்துப் பூசவும். (5) திருநீற்றுப் பச்சிலையை முகரவும். (6) கருஞ்சீரகத்தை வெந்நீரிலரைத்துப்பூசவும். (7) சாம்ப்ராணித் தைலத்தை வெற்றிலையில் பூசிபொரியிலொட்டவும். (8) நொச்சியிலைச் சாற்றைப் பற்றுப் போடவும். 9. கால்களை முழங்கால் வரையில் வெந்நீரில் சற்றுநேரம் வைத்திருந்து துடைத்து விட்டால் குணம். 10. சாம்பராணி, ஏலம், சுக்கு, கஸ்தூரி. மஞ்சள், அபினி, அரிசி இவைகளை சமனாகச்சேர்த்து ஜலம் விட்டு அரைத்து நெற்றியில் பூசி அனல் காட்டவும். இதை அந்தி சந்தி இருபொழுதும் செய்யவும். (11) முலைப்பாலில் லவணமாவது பச்சைக்கற்பூரமாவது சேர்த்து நச்ய மிடவும். (12) முலைப்பாலிலாவது பசுவின் பாலிலாவது மெல்லியதுணியைநனைத்து நெற்றியில் போட்டு பால்காயாமல் நனைத்துக்கொண்டு வரவும். (13) சந்தணக்கட்டையையும் தேற்றாங் கொட்டையையும்தேய்த்துக்கலந்து நெற்றிமேல் பூசி அனல் காட்டவும். 14 சந்தணக்கட்டையை தனியாகத் தேய்த்துக்கலந்து நெற்றிமேல் பூசி அனல்காட்டவும். (14) கால் விராகனெடை ரேவல் சீனி, சிறு பயறளவு அபின், இவ்விரண்டையும் முலைப்பாலிலெலைத்து நெற்றியில் பற்றிட்டு அனல் காட்ட சகல வித சிரசு நோயும் நீங்கும். (15). எலிமிச்சபழரஸம் ஒருபாகமும் இரண்டுபாக வெந்நீரும் கலந்து எவ்வளவு சூடு தாங்கக் கூடுமோ அவ்வளவு சூட்டில் ஒரு கிண்ணம் நிறைய எடுத்து சிப்பிக் குடிக்கவும். மேற்கண்ட முறைகளுள் எதையாவது அனுஷ்டிக்கலாம் கடுமையான தலைவலி நீங்கும்.

**Hair & its diseases.**

தலைமயிரும் அதன் வ்யாதிகளும் :—தலைமயிர் உதிர்ந்து போக பல காரணங்கள் உண்டு. தேகதுர்பலம், மூளைக்கொதிப்பு, சீதோஷ்ண மாறுதல் முக்யமாக இவைகளும் இன்னும் பல சில்லரைக்காரணங்களுமாகும். தலைமயிரைப் பத்ரமாகக் காப்பாற்றவேண்டுமென்றால் அநாவச்யமான யோஜனையும், கோபமும் கூடாது. தேகக்கிளர்ச்சியைக் கொடுக்கக்கூடிய பானங்களையாவது போஜனத்தையாவது புசிக்கக்கூடாது. தலைமயிரை இறுக்கப் பின்னுதலும் முடிதலும் கூடாது. ப்ரதி காலையிலும் தலைமயிரைச் சுத்தமான தைலம், சுத்தமான நல்லெண்ணெய் தடவி அழகாக வாரி தளர பின்னவோ முடியவோ செய்வது அழகு. தலைமயிர் தளரவிருந்தால் வளருகிறதற்கு ஸாதகமாக விருக்கும். சிலருக்கு மூளையின் கிளர்ச்சியினாலும் மிருகத்தனமான ஆசையினாலும் ஒரே ராத்திரியில் தலைமயிர் முழுவதும், வெளேரென நரைத்திருக்கிறது, ஸ்த்ரீகளுக்குத்தலை மயிர் இருந்தவசியம்.

### (ஒருத் தலைவலி)

1. குங்குமப் பூவுடன் அபினி, விளாம்பிசின், பனைவெல்லம், சேர்த்தரைத்து காகிதத்தில் தடவி பொரியில் ஒட்டி வரவும்.





# WOMAN'S WORLD.

## ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

**Hints for women.**

ஸ்த்ரீகளுக்குக் குறிப்புகள்:— ஆசாரத்தினால் எல்லோரும் ஆயுள் செல்வம், இஹலோக ஸுகம், பரலோக ஸுகம், இவைகளை அடைகிறார்கள். ஆசாரம் தவறினவர்கள் இவைகளை அடையமாட்டார்கள். ஸ்த்ரீ புருஷர்களுக்கு ஆசாரம், லக்ஷணம். கோபம், பொறாமை, அஹங்காரம், பிடிவாதம், இவைகளில்லாமல் உத்தமகுணங்களுடையவர்களே சிஷ்டர். அவர்களுடைய அனுஷ்டானமே ஆசாரம் என்று சொல்லலாம், ஆசாரந்தான் தர்மத்தைக் காக்கிறது. ஆகையால் ஆசாரமில்லாத மனிதனுக்குத் தர்மம் உண்டாகாது.

* * *

சென்னைப் பெண்கள் பெருமையில் பெருத்துப் போனார்கள். முந்தானையை இழுத்து மூடிக்கொள்ளும் வழக்கம் வேறு தேசம் தேடி ஓடிப்போய் விட்டது! மஞ்சள் பூசுவது போய் வெள்ளை பவுடர்கள் அடித்துக்கொள்ளுகிறார்கள். தலை சீவுவதிலும், உடையுடுப்பதிலும் லண்டன் வழியை யநுஸரிக்கிறார்கள். கை காப்புகள் இப்பொழுது வெகு சிறிய அளவில் கண்ணாடிவளையல் மாதிரி செய்து அணிகிறார்கள். தெருவுக்குக் கோலம் போடுவது வீட்டுப் பெண்களின் தொழிலாக இல்லை. அதை வேலைக்காரிகளிடம் ஒப்புவித்துவிட்டார்கள். சாபி இல்லாமல் ஒரு நாள் கழிவதென்றால் மகா கஷ்டம்! அந்தோ! அந்தோ!

* * *

ஸூர்ய உதயத்திற்கு ஐந்து நாழிகைக்கு முன் பிர்ம்ம கூர்த்தத்தில் நித்திரை விட்டெழுந்து முன் தனக்கு ஹிதத்தையும் பின்பு தர்மத்தையும் அதற்கு விரோதமில்லாமல் அர்த்தகாம்யங்களையும் உத்தேசித்து, ஈச்வரனை தியானித்து பசு, அக்னி, கண்ணாடி, பூர்ணகும்பம், ஈச்வர படம் முதலிய மங்களகரமான வஸ்துக்களில் யாதொன்றைப் பார்த்தால் எல்லா கஷ்டங்களின்றும் நீங்குவார்கள். பாபிகள், அங்கம் குறைந்தவர்கள், கெட்ட ரூபமுடையவர்கள் இவர்களை நித்திரைவிட்டெழுந்தவுடன் பார்க்கலாகாது.

**War and Women.**

ஸ்த்ரீகளும் யுத்தமும்:-ஐரோப்பிய யுத்தத்திலிருந்து நம்மிந்திய மாதர்கள் கற்றுக்கொண்டு நம் தேசத்துக்குச் செய்யவேண்டிய வேலைகள் அநேக மிருக்கின்றன. தற்போது இந்த மஹாயுத்தம் தொடங்கியது முதற்கொண்டு புருஷர்கள் தங்கள் தேசத்திற்காக யுத்தம் செய்து வருகிறார்கள். புருஷர்கள் இதுவரையில் வஹித்து வந்த உத்யோகங்களில் ஸ்த்ரீகள் அமர்ந்து வேலை பார்த்து வருவதுடன் சிலர் பீரங்கிகுண்டு வெடி மருந்து முதலிய அநேக யுத்தாயுதங்களைச் செய்து வருகிறார்கள். சில ஸோல்ஜர்களுக்கு உடைதைத்து அனுப்புகிறார்கள். போர்க்களத்து ஆஸ்பத்திரிகளில்தாதிகளாக அமர்ந்துகொண்டுகாயம்பட்டுள்ளவர்களை கவனித்துசிகித்சைசெய்துவருகிறார்கள். சிலர் தங்களை யுத்தத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அதிகாரிகளை கேட்டு மன்றாடிவருகிறார்கள். இவர்களின் சரித்ரங்களை நம்மிந்திய ஸ்த்ரீகள் எளிதில் வாசித்து அதிலிருந்து மிக்க நன்மைகளை அடைய சில புஸ்தகங்கள் எழுத முன்வருவது மிகவும் அவசியம்.

## IV

# KITCHEN AND COOKERY.

## சமையலறையும் சமையலும்.

**Guava Bholi**

பால் கோவாப்போளி:—ஒரு படி பாலை ஓர் பாத்ரத்தில் விட்டு அடுப்பின் மேல்வைத்து எடு கட்ட வொட்டாமல் கலக்கிக் கொண்டே அது சுண்டும் வரையில் காய்ச்ச வேண்டியது. இப்படிக் காய்ச்சினால் அது முடிவில் மொத்தையாகப் போம். இதற்குப் பால்கோவா என்று பெயர். இதற்குத் திரட்டுப்பால் என்றும் பெயர்.

இந்தப்பால் கோவா 20 பலம், சீனி சர்க்கரை 20 பலம், ஏலரிசி ஒரு ரூபா எடை ஆகிய இவைகளை ஒன்றாய்ச் சேர்த்துப் பிசைந்து கொள்ள வேண்டியது. பிறகு, காலேயரைக் கால்படி கோதுமை நெய்யில் பால் அல்லது ஜலத்தை விட்டாவது நன்றாய் ஒட்டிப் பிசைந்து கொள்ள வேண்டும். ஸாதாரணமாக போளிகளுக்கு மாவுதயார் செய்வது போல செய்துகொண்டு, அதில் எலுமிச்சங்காயளவு மாவை எடுத்துருட்டி உள்ளங் கையில் வைத்துக் கொஞ்சம் தட்டி அதன்மேல் கோவா பூர்ணத்தை ஒன்றரை மடங்கு எடுத்துக் கொள்ளவும். அந்த பிசைந்த கோதுமை மாவைக் கொண்டு பூர்ணத்தை நன்றாய் மூடி அப்பளம் இடுவதுபோல இட்டு தோசையைச் சுடுவது போல சுட்டு எடுத்துக் கொள்ளவும்.

கத்தரிக்காய் அடை:—கொள்ளிடம், காவேரிப் படுகைகளில் கிடைக்கக் கூடிய பிஞ்சு கத்தரிக்காய்களைப்போல நல்ல கத்தரிக் காய்களில் $\frac{1}{4}$ அல்லது அரை எடை வாங்கிவைத்துக்கொள்ளவேண்டியது நெல்லூர் அரிசி தாவள்யமானதாய் வேண்டிய அளவு எடுத்துக்கொண்டு, அதே அளவு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு முதலியவைகளை நல்ல தண்ணீரில் ஊறப்போட்டு, அவை நன்றாக ஊறினபின், மேற் கூறிய சாமான்களுக்குத் தகுந்தாற்போல் பச்சை மிளகாய், அல்லது மிளகாய் வற்றல், உப்பு, பெருங்காயம் முதலியவைகளை ஆட்டுக்கல்லிலோ அல்லது அம்மியிலோ வைத்தரைத்துக் கொண்டு, பின் ஊறின அரிசி பருப்புகளை இதனுடன் சேர்த்து ஒன்றிரண்டாய் அரைக்கவேண்டும். மை போல் விழுதாய் அறைக்கக் கூடாது.

ஒன்றிரண்டாய் அரைத்த மாவினுடன் முற்றின தேங்காய்த் துருவல் அளவுடன் கலக்க வேண்டியது. பின், பிஞ்சுக்கத்தரிக் காயைச் சிறு துண்டுகளாய் நறுக்கி, மாவில் நன்றாய்ச் சேர்த்துப் பிசைந்து விட வேண்டியது. பின்னால் சங்கு போல் தாவள்யமாய்த் தேய்த்தபாணலியை அடுப்பில் வைத்து இரண்டு அல்லது மூன்று சிறு கரண்டி நெய்யோ, அல்லது எண்ணெயோ தாராளமாய் விட்டு, அதில் இம்மாவை யெடுத்து அடையாகத் தட்டி, மத்தியில் கரண்டிக் காம்பினால் த்வாரம் செய்து அதிலும் இரண்டு சிறு கரண்டி எண்ணெயோ நெய்யோ விடுவதுடனுமன்றி, அடைவட்டத்தைச் சுற்றித் தாராளமாய் எண்ணெயோ நெய்யோ விட்டு வேகவைத்து மறுபடியும் புரட்டிக்கொடுத்து, இம்மாதிரி அடைகளைப் பக்குவமாய் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டியது.



# VIEWS AND REVIEWS.

## அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

**Vivekodayam.**

விவேகோதயம்:-இது மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று வெளி வரும் ஒரு மாதாந்தத் தமிழ் பத்ரிகை. இவ்வரும் பத்ரிகைக்கு ஸ்ரீமான். ம. கோபால கிருஷ்ண அய்யர் அவர்களும், ஸ்ரீமதி. வி, பாலம்மாள் அவர்களும் பத்ராதிபர்களாயிருந்து செவ்வனே நடத்தி வருகிறார்கள். இதற்கு விஷயதானம் செய்வோர்கள் கல்வியில் தேர்ந்தவர்களாகவேயிருக்கிறார்கள். பண்டிதை ஸ்ரீமதி அசலாம்பிகையம்மாளும் மாதம் மாதம் இதற்கு விஷயதானம் செய்வதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்களென்று அறிந்து ஸந்தோஷிக்கிறோம். இப்பத்ரிகை காலக்ரமத்தில் பொதுவாக நம் ஜனங்களுக்கு முக்யமாக தமிழ் மாணவர்களுக்கு ப்ரயோஜனகரமுள்ளதாயிருக்குமென்பதில் ஸந்தேகமில்லை. இதற்கு வர்ஷசந்தா ரூ1-8. இவ்வளவு குறைவான சந்தா இவர்களுக்கு எப்படித்தான் கட்டுமோ என்று நமக்கு ஸந்தேகம் ஜனிக்கிறது. சந்தாவின் குறைவைக்கவனித்தும் பத்ரிகையிலுள்ள அரிய விஷயங்களைக்கவனித்தும் ஜனங்கள் இதை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம் பொங்கும் மங்களம் தங்குக.

**Janopakari.**

ஜனோபகாரி:— இப்பத்ரிகையை அனுப்பிய ஸ்ரீமானுக்கு வந்தனம். கல்வி, வ்யவஸாயம், வ்யாபாரம் கைத்தொழில் ஸுகாதாரம், வைத்யம், பொருளாதாரம் ஆகிய இவைகளைக்குறித்து பல விஷயங்களடங்கிய ஒருமாதாந்தத் தமிழ்ப் பத்ரிகை, இது விவசாயிகளுக்கும் வ்யாபாரிகளுக்கும் மற்றப் பொது ஜனங்களுக்கும் ஏற்ற ஒரு உயர்ந்தபத்ரிகை. இதன் வர்ஷ சந்தா ரூ. 3 பொது ஜனங்கள் இப்பத்ரிகையை ஆதரித்து வருவது மிகவும் அவச்யம். வேண்டுவோர்கள் இதன் சொந்தக்காரர்களான வேலூர் ஆர் நாராயணஸாமி முதலியார் அண்டு கம்பெனிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**Count Leo Tolstoy and Mahatma Gandhi.**

கவுண்ட்லியோ டால்ஸ்டாயும் மஹாத்மா காந்தியும்:— இது ஸ்ரீயுத கிருஷ்ணஸாமி சர்மாஎழுதியது. இது ஒரு அருமையான புஸ்தகம். மேற் சொன்ன இருமஹான்களின் வாழ்க்கை நோக்கங்களை அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார். இதை ப்ரதிஸ்த்ரீயும் வாங்கி வாசிக்கவேண்டியது அவரது முதற்கடமைகளில் ஒன்றாகயிருக்க வேண்டும். இதன் விலை அணா 4. இந்தப்புஸதகத்தினின்றும் வரும் பணத்தின் ஒரு பெரிய தோர்பாகத்தை ஆமத் நகரத்தில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீமஹான் காந்தியின் ஸாத்ய க்ருஹாச்ரமத்திற்கு அனுப்பப்படும். வேண்டுவோர்கள் ஸ்ரீகிருஷ்ணசாமி சர்மா 6, ஆனைகட்டி வீதி, சின்ன காஞ்சிபுறம் என்ற விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

**Kala Chintamany.**

கலா சிந்தாமணி:—இது ஒரு மாதத் தமிழ் பத்ரிகை. இதில் கைத்தொழில் விவஸாயம் கல்வி, வைத்யம், ஜோதிடம், வேதாந்தம், ஸித்தாந்தம் ஸ்த்ரீ புருஷர்களுக்கு நீதிகள் இனிமையான கதைகள் முதலிய விஷயங்களை எல்லோரும் படித்தறியக் கூடிய நடையில் எழுதப்பட்டு வருகின்றன. இது எல்லோருக்கும் மிகவும் அவச்யமானது. இதன் வர்ஷ சந்தா 1 ரூ. கலா சிந்தாமணி ஆபீஸ், மைலாப்பூர், சென்னை.

## SARAT GHOSE & Co.,

## ஹார்மோனிய வியாபாரிகள்.

5, லோயர் சித்பூர் ரோட், கல்கத்தா.

சாரத் கோஸ் அண்டு கம்பெனியாரின் ஹார்மோனியங்கள் இந்தியா முழுவதும் எல்லா பாடர்களாலும் மிகவும் உறுதியுள்ள தென்றும் இனிமையான ஓசை யுள்ளதென்றும் மற்றக் கடையிலுள்ள ஹார்மோனியங்களைவிட சாஸ்திரோக்தமாய் செய்யப்பட்ட தென்றும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன.

புளூட்டினு ஹார்மோனியங்களில் உபயோகப்படுத்தியிருக்கிற ரீடுகள் தெரிந்த விதமாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் மற்ற எவராலும் கிரகிக்க முடியாத விதமாய் உயர்ந்த இனிமையான சுரங்களைக்கொடுக்கும் தன்மையாயிருக்கின்றன. மற்ற ஹார்மோனிய தொழிற் சாலைகளைவிட எங்களுடையது மிகப்பெரிதாயிருப்பதால் நாங்கள் உயர்ந்த ஹார்மோனியங்களை மற்றவர்களைவிட சரச விலைக்கு விற்கிறோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒற்றை ரீடுகள் கொண்ட ஹார்மோனியங்கள்— | | | | | ரூ. |
| பிஜோ மாடல் | விலை | ... | ... | ... | 15 |
| க்ளோர்யா மாடல் | ,, | ... | ... | ... | 20 |
| ஸனோரா மாடல் | ,, | ... | ... | ... | 25 |
| இரட்டை ரீடுகள் கொண்ட ஹார்மோனியங்கள்— | | | | | |
| பெல்டோரு மாடல் | விலை | ... | ... | ... | 25 |
| கிரண்டோரு மாடல் | ,, | ... | ... | ... | 30 |
| கிளார பெல்லா மாடல் | ,, | ... | ... | ... | 35 |
| டல்ஸிடோன் மாடல் | ,, | ... | ... | ... | 40 |

குறிப்பு:—அவரவர்கள் இஷ்டப்படி ஆர்டர் கொடுத்தாலும் சுத்தமாக செய்து அனுப்புவோம். ஆர்டர் அனுப்புகிறவர்கள் ரூ. 5 அட்வான்ஸாக அனுப்பவேண்டும்.

பிடில்கள் ரூ. 3-முதல் ரூ. 10-வரையில் இருக்கின்றன.

பிரஞ்சு பிடில்கள் ரூ. 15-முதல் ரூ. 20 வரையிலும் அதற்கு மேலுமிருக்கின்றன.

விலை மலிவுள்ள கைக் கடியாரங்கள் அழுத்தமாகயிருக்கும். வாரியான நேரத்தை காண்பிக்கும். ரூ. 2-முதல் ரூ. 2½ அல்லது ரூ. 3 அதற்கு மேற்பட்டும் இருக்கின்றன.

**சாரத்கோஸ் அண்டு கோ,**
5, லோயர் சித்பூர் ரோடு,
கல்கத்தா.

**N. B.**—ஆர்டர்கள் கொடுக்கும்போது விளம்பரத்தை இப்பத்ரிகையில் கண்டதாக எழுதவும்.


OFFICE OF THE REGISTRAR OF ... 10 AUG 1916 MADRAS


# THE FEMALE EDUCATION

AN ILLUSTRATED TAMIL MONTHLY MAGAZINE.

# பெண் கல்வி

சித்ர ஸஹிதமான ஒரு தமிழ் மாதாந்தப் பத்ரிகை.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

| | | |
|---|---|---|
| Vol. 5. தொகுதி 5. | நளஸு ஆடி-மீ July 1916. | No. 10. பகுதி. 10. |


## PROGRESS OF THE WORLD.

## ப்ரபஞ்சப்போக்கு.

**The Stree Abeda Aikyananda Samajum.**

ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த ஸமாஜம்:—சென்ற மாஸம் முதற்கொண்டு இச்சங்கத்தார் திக்கற்ற ஏழை ஸ்த்ரீகளுக்கு ஒரு வீட்டுக் கைத்தொழிற்சாலை ஸ்தாபித்து நடத்திவருகிறார்கள். இப்போது இந்த கைத்தொழிற்சாலை நடக்குமிடம் நெ. 8, ராமஸாமி தெரு, மண்ணடி, சென்னை. இந்த கைத்தொழிற் சாலையில் பரம ஏழை ஸ்த்ரீகளான சிலர், பாவாடை நாடா, கட்டில் நாடா, ஸோல்ஜர்கள்—யுத்தவீரர்கள்—தங்கள் ஆஹாரவசதிகளை சுமந்துகொண்டுபோக மார்பில் அணிந்துகொள்ளும் நாடா (Army tape) முதலிய சிறிய கைத்தொழில்களைக்கற்றுப் பழகி வருகிறார்கள். இவைகள் ஸ்த்ரீகளுக்குத் தகுந்த கைத்தொழில்களென்று நாம் சொல்லவேண்டுவதில்லை. ஸாதாரணமாக, ஒருவள் இத்தொழில்களை பதினைந்து நாட்களில் சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். நன்றாக மாத்ரம் ஒருவள் இத்தொழில்களைக் கற்றுக்கொண்டாளேயானால் தினத்துக்கு ரூபா ஒன்று வரையில் ஸம்பாதிக்கலாம். சிலமாதங்கள் சென்றால் இத்தொழிற்சாலையில் வேலைசெய்யும் ஒவ்வொரு ஸ்த்ரீக்கும் நல்ல

சம்பளம் கிடைக்கும். பரம க்ருபாநிதியான பரமேச்வரனின் அநுக்ரஹத்தால் இது நன்றாக நடந்துவருகிறது.

நிற்க, இந்த ஸமயத்தில் நம்முடைய ஸந்தோஷத்தையும் நன்றியையும் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. இந்த ஸ்த்ரீ ஸமாஜம் 1910ம் வர்ஷம் மார்ச்சு மாஸம் 6ந் தேதி ஸ்தாபிக்கப்பட்டது. இந்த ஸமாஜத்தின் மெம்பர்கள் அனைவரும் மிகவும் உழைப்பாளிகள். ஸமாஜ அபிவ்ருத்திக்குப் பலமுயற்சிகள் செய்து வருகிறவர்கள். இவர்களின் உதவியினாலேயும், உழைப்பினாலேயுமே இந்த வீட்டுக் கைத்தொழிற்சாலை ஸ்தாபிக்கப்பட்டது. ஸமாஜ மெம்பர்களின் உதவியும் ஒத்துழைப்புமின்றி இங்கு ஒரு கார்யமும் நடை பெற்றிருக்காது. இந்த கைத்தொழிற்சாலையை ஏழை ஸ்த்ரீகளுக்கு உபயோகமுள்ளதாய் வைக்கவேண்டுமென்று ஒவ்வொரு மெம்பரின் எண்ணமாயிருக்கிறது. இவர்களின் எண்ணத்தை பகவான் பலிதமாகச் செய்வாரென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

இந்த ஸ்த்ரீ ஸமாஜத்தின் 6-வது வர்ஷக் கொண்டாட்டம் ஸமீபத்தில் நடைபெறும். அப்போது, நமது ஸ்த்ரீகளின் அபிவ்ருத்திக்கும் படிப்புக்கும் இந்த ஸ்த்ரீ அபேத ஐக்யானந்த சங்கத்தார் முயற்சிகள் செய்து பலிதமாயிருக்கிற கார்யங்களைப்பற்றிய ரிபோர்ட் ஒன்று ஒவ்வொரு சந்தாதார்களுக்கும் அனுப்பப்படும். எல்லாம் ஈசன் செயல்.

**Women's Education.**

**ஸ்த்ரீகளின் கல்வி :**—இந்திய ஸ்த்ரீகளின் கல்வி அபிவ்ருத்தி விஷயமாக, இந்தியா கவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டார்களுக்கு ஒரு சுற்றுக் கடிதம் அனுப்பி, அவரவர்களின் அபிப்ராயங்களைக் கேட்டிருந்தது நமது ஸஹோதரிகளுக்குத் தெரிந்திருக்கலாம். வருகிற செப்டம்பர் மாதத்துக்குள் மாகாண கவர்ன்மெண்டார்கள் தங்கள் அபிப்ராயங்களை இந்தியா கவர்ன்மெண்டாருக்கு அனுப்பிவிடவேண்டும். ஆகவே, மூன்று மாதங்களுக்குமுன் ஸ்த்ரீகளின் கல்வி விஷயத்தில் அக்கறையுள்ள ப்ரமுக்களையும், முனிஸிபாலிடி தாலுக்கா ஜில்லா போர்டு முதலிய ஸ்தாபனங்களையும் அபிப்ராயங்கள் கொடுக்கும்படி நம் சென்னை கவர்ன்மெண்டார் கேட்டு விட்டிருந்தார்கள். இப்போது ஒவ்வொரு முனிஸிபாலிடியாரும், தாலூக்கா ஜில்லா போர்டாரும் ஆங்காங்கு மீட்டிங் கூடி, ஸ்த்ரீகளின் கல்வி அபிவ்ருத்தி விஷயமாக யோஜித்து வருகிறார்கள். அநேக போர்டார்களும் முனிஸிபாலிடியார்களும் மீட்டிங் கூடி யோஜிக்கும்போது ஒரு முக்ய விஷயத்தை முற்றிலும் மறந்து விடுகிறார்கள். இந்த ஸமயத்தில் இவர்கள் ஞாபகத்தில் வைக்க வேண்டிய அந்த முக்ய அம்சமென்னவென்றால், இந்திய ஸ்த்ரீகள் இந்திய ஸ்த்ரீகளே. ஐரோப்ய ஸ்த்ரீகள் ஐரோப்ய ஸ்த்ரீகளே என்பதுதான். இதன் தாத்பர்யம் இந்திய ஸ்த்ரீகள் ஐரோப்ய ஸ்த்ரீகளாகமாட்டார்கள். ஐரோப்ய ஸ்த்ரீகள் இந்திய ஸ்த்ரீகளாக மாட்டார்கள். மேனாட்டுப் படிப்பு நடை, உடை, பாவனை முதலிய விஷயங்களில் கற்றுத்தேர்ந்த ஐரோப்ய ஸ்த்ரீகளை லக்ஷ்யமாக வைத்துக்கொண்டு, நம் பெண்கள் கற்றுத் தேர்ந்து முன்னுக்கு வர வேண்டுமென்று சொல்வது பைத்யக்காரத்தனமாகும். மேனாட்டு நாகரீகப் படிப்பு, நடை, உடை, பாவனை முதலியவைகள் ஐரோப்பாவில் அந்தந்த தேசாசாரப் பழக்கவழக்கங்களைப் பொறுத்திருக்கின்றன. நம் ஆசாரப் பழக்க வழக்கங்கள் வேறு. மேனாட்டாரின் ஆசாரப் பழக்கவழக்கங்கள் வேறு.



இங்க்லாண்டு, ப்ரான்ஸ் போன்ற தேசங்களில் ஸ்த்ரீகளின் கல்வி புருஷர்களின் கல்விக்கு ஸமானமாக அபிவ்ருத்தி யடைந்திருக்கிறதானது அந்தந்த தேசாசாரப் பழக்க வழக்கங்களின்மேல் படிப்பும், ஆராய்ச்சியும், மற்றவைகளும் கட்டப்பட்டிருக்கிறதனாலென்று அறியவேண்டும். ஆகையினால், நம் இந்தியப் பெண்களின் கல்வியை நமது ஸமூக தேசாசாரப் பழக்க வழக்கங்களுக்குத் தகுந்தபடி அமைக்கவேண்டும். அப்போதுதான் இந்திய ஸ்த்ரீகள் இந்திய ஸத்ரீகளாக ஆகமுடியும். இதுவரையிலும் நம் பெண்கள் படித்த படிப்பானது அவர்களின் பிற்காலக் குடும்பவாழ்க்கைக்கு ப்ரயோஜனகரமாயில்லையென்று பெற்றோர்கள் கூக்குறலிடுகிறார்கள். இவைகளை யெல்லாம் யோஜித்து முனிஸிபாலிடியார்களும், தாலுக்கா ஜில்லா போர்டார்களும் நம் பெண்களுக்கு ஏற்ற கல்வியைக் கொடுக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டாருக்குச் சிபார்சு செய்வது அவர்களின் கடமையாக யிருக்கிறதை நாம் அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறோம்.

**Education in Baroda.**

**பரோடா ஸமஸ்தானத்தில் கல்வி :**—பரோடா என்பது வட இந்தியாவில் ஒரு ஸமஸ்தானம். இதை ஆண்டுவருகிறவர் ஒரு ஹிந்து அரசர். இவர் மஹாநீதிமான். இவர் தமது தேச ப்ரஜைகளின் க்ஷேமத்தைத் தமதாக பாவித்து உழைத்து வருகிறவர். இந்தியாவிலுள்ள இதர ஸமஸ்தானங்களைக் காட்டிலும் பரோடா பலவழிகளிலும் உயர்வடைந்திருக்கிறது. பொதுவாக ஒரு தேசத்தின் உயர்வையும் தாழ்வையும் அறியவேண்டுமானால் அத்தேசக் கல்வி அபிவ்ருத்தியைக் கொண்டு தான் அறியமுடியும். இப்பவும் பரோடா ஸமஸ்தானத்து 1914-1915ம் வர்ஷத்திய கல்வி இலாகா ரிபோர்ட்டை பார்வையிட்டோம். அதிலுள்ள முக்ய ஸாராம்சத்தை நம் ஸஹோதரிகளுக்காக வேறுபக்கத்தில் ப்ரசுரித்திருக்

கிறோம். நம் ஸஹோதரிகள் அந்த ரிபோர்ட்டை கவனித்துப் படிப்பார்களாக.

**Food Reform.**

ஆஹாரசீர்திருத்தம் :— இந்தியாவில் மாம்ஸம் புசிக்கிறவர்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறார்கள். ஸுமார் ஐம்பது அல்லது அறுபது வர்ஷங்களுக்கு முன் மாம்ஸம் புசிக்கிறவர்களின் எண்ணிக்கை இப்போது ஒன்றுக்கு மூன்று பங்காக ஆகியிருக்கிறது. தற்காலம் மாம்ஸம் சாப்பிடாதவர்கள் கூட மாம்ஸாஹாரத்திற்குப் பலவித காரணங்களால் தூண்டப்படுகிறார்கள். இப்போது ஜீவஹிம்ஸை கணக்கு வழக்கில்லாமல் செய்யப்படுகிறது.

ப்ரொபஸர் ந்யூமன் என்ற அமெரிக்கா வைத்ய சாஸ்த்ரி மாம்ஸ ஆஹாரத்தினால் ஜனங்கள் பலவித வ்யாதிகளுக்கு உள்ளாகிறார்களென்று கூறுகிறார். தற்காலம், அவர் அமெரிக்காவில் தேகபுஷ்டியான ஒரு குழந்தையைக் காண்பதும் அறிதாக இருக்கிறதென்கிறார். தம்முடைய 30 வர்ஷ வைத்யத்தொழில் அனுபவத்தில் மாம்ஸம் புசித்தவர்கள் பலவித வ்யாதிகளுக்கு ஆளாகியிருக்கிறார்களென்று துக்கிக்கிறார்.

இந்த ஆண்டில் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் வைத்ய ஆராய்ச்சியுள்ளவர்கள் மாம்ஸ போஜனத்தைக்கண்டித்து கூறிவருகிறார்கள். அத்தேசங்களில் ஜனங்களுக்கு மாம்ஸ போஜனத்தை விலக்க ஒரு புதிய உணர்ச்சி ஏற்பட்டு வருகிறது. ஜனங்களின் இந்த உணர்ச்சியை ப்ரபலப்படுத்த அநேக சங்கங்களும் பத்ரிகைகளும் தோன்றியிருக்கின்றன. நம் இந்தியாவிலும் மற்ற சீர்திருத்தங்களோடு ஆஹார சீர்திருத்தமும் செய்யப்படவேண்டும். இதற்காகத் தனிச்சங்கங்களும் பத்ரிகைகளும் தேவை.

இந்த ஸமயத்தில் ருஷ்யாவின் ஞானியாகிய ல்யோ டால்ஸ்டாய் என்பவர் இது விஷயமாகக்கூறியிருக்கிறது நமது ஞாபகத்துக்கு வருகிறது. ஒரு ஜனஸமூகம் தெய்வபக்தியினால் கட்டப்பட்டு ஒழுக்க அபிவ்ருத்தியை அடையவேண்டுமானால் அந்த ஸமூகம் ஸாத்வீக ஆஹாரமாகிய மரக்கறி ஆஹாரத்தை புசித்து வருவதே நலமென்று தமது அனுபவத்துடன் பஹிரங்கமாகக்கூறியிருக்கிறார். இந்த ரஷ்யாதேசத்து ஞானி வெகுவர்ஷகாலம் மாம்ஸம் புசிக்கிறவராயிருந்து பிறகு, அதை அடியோடுவிட்டவர்.

500

# HISTORY TEACHING IN SCHOOLS

By

S. Kalyani Ammal.

## பாடசாலைகளில் சரித்ர போதனை.

உலகத்திலுள்ள எல்லா தேச பாடசாலைகளிலும் ஆண் பெண் இருபாலர்க்கும் சரித்ர போதனை முக்ய பாடமாகயிருந்து வருகிறது. இப்படி சரித்ர போதனை முக்ய பாடமாக யிருப்பதற்கு முக்யு காரணங்களிருக்கவேண்டும். பாடசாலைகளில் சரித்ர போதனை ஏற்படுத்தியிருப்பதானது, மாணாக்கர்கள் தங்கள் தேச அறிவை வ்ருத்தி செய்யவும், தங்கள் முன்னோர்களிருந்த மாதிரியைப் பின்பற்றி நடக்கவுமே ஏற்பட்டிருக்கிறதென்று அறியவேண்டும். மேலும், தற்கால நிலைமையை அநுஸரித்து அதற்குத் தக்கபடி நடந்து உலகத்தில் சிறந்த மனுஷனாக விளங்குவதற்கும் என்று அறியவேண்டும்.

ஒவ்வொரு தேச பாடசாலைகளிலும் அந்தத் தேசத்தின் சரித்ர போதனை ப்ரதானமாக வைக்கப்பட்டு வருவது வழக்கம். அப்படியே ஜப்பானியர் ஜப்பான் சரித்ரத்தையும், அமெரிக்கர் அமெரிக்கர்களின் சரித்ரத்தையும், இங்க்லீஷ்காரர்கள் இங்க்லண்டு சரித்ரத்தையும் தங்கள் தங்கள் தேச பாடசாலைகளில் ப்ரதான பாடமாக வைத்து இருபாலார்க்கும் போதித்து வருகிறார்கள். இப்படி ஸ்த்ரீ புருஷர்கள் தங்கள் தேச சரித்ரத்தைப் பாடசாலைகளில் படிப்பதனால் அநேக நன்மைகள் உண்டாகின்றன. ஒரு தேச முன்னேற்றத்துக்கு சரித்ரபோதனை மிக அவச்யமாகும். தற்காலம் நாகரிகம் பெற்று உலகத்தாரால் புகழப்பட்டுவரும் தேசங்களெல்லாம் இந்த சரித்ர போதனைகளினால் முன்னடைந்திருக்கின்றனவென்று எளிதில் தெரியும். உலகத்தில் நாகரிமடைந்த தேசங்களைப்போல நம் தேசமும் முன்னடையவேண்டுமானால் நம் பாடசாலைகளில் இந்துதேச சரித்ரத்தை ப்ரதானமாக மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டும்.

இப்படிப்பட்ட தேசசரித்ரம் படிப்பதனால் பயன்யாது விளைகின்றன. இப்படிப்பட்ட சரித்ரபோதனைகள் நம் ஸ்கூல்களில் எவ்வாறு செய்யப்படுகின்றன? அதற்குப் பள்ளிக்கூடங்களில் ஏற்பட்டிருக்கிற உபகரணங்கள் என்ன? வித்யாதிகாரிகள் இதன் நிலைமையைப் பள்ளிக்கூடங்களில் எவ்வாறு வைத்திருக்கிறார்கள்? இதனால் நாமடையும் நன்மைகள் என்ன? முதன்முதலில் இச்

சரித்ரபோதனை எவ்வாறு செய்யப்படுதல் வேண்டுவது என்பதை ஆராய்தல் முக்யமானதாகும்.

தற்போதைய சரித்ர ஸம்பந்தமான விஷயங்களை பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குச் சொல்லி வைப்பதுடன், பழையகாலத்துச் சரித்ரங்களும் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும்படி செய்யவேண்டுவது அவசியம்தான். நம் ஜனங்களின் நாகரிக வளர்ச்சிக்கு இந்திய சரித்ரம் அவச்யமானது. உபாத்யாயர்கள் பிள்ளைகளுக்குச்சொல்லி வைப்பதிலிருந்தே அப்பிள்ளைகளிடத்தில் தேசாபிமானமும், ஊக்கமும், ச்ரத்தையும் உண்டாக வேண்டும். இங்க்லீஷ் முதலிய ஐரோப்ய சரித்ரங்கள்போல நமது சரித்ரங்களிலும் பல உத்தமமான நோக்கங்கள் அடங்கியிருக்கின்றன. அவைகள் நம் பின்வரும் ஸந்ததியார்களுக்கு நல்லவழிகாட்டிகளாக இருக்கும். அப்படிப்பட்ட விஷயங்களை எடுத்து உபாத்யாயர்கள் பிள்ளைகளின் காதில் சரமாரியாய்ப் பொழிந்து அவர்களது உள்ளக்கிளர்ச்சியை எழுப்புவதில் தம் கவனத்தைச் செலுத்தவேண்டும். சரித்ரத்தில் முன்னோர்களின் சரித்ரத்தைச் சொல்லிவருங்காலத்தில் ஹிந்துக்களின் கம்பீரமான ஸ்வபாவத்தையும், அவர்கள் இந்தியாவில் வந்தமையும் அவர்களது வேதமஹிமையும் எடுத்துச் சொல்லவேண்டும்.

அப்போது சுலபமாய் நம் நாட்டுக் குழந்தைகள் தங்களது சரித்ரத்தினால் பூர்வீகர்களின் நிலைமையையும் பெருமையையும் அறிந்து கொள்வார்கள். மேலும், அவர்கள் முன்னோர்களிருந்த நிலைமையை நன்குணர்ந்து, தற்பேதைக்குத் தகுந்த பாரத புத்ரர்களாக மாறி உலகத்தின் முன்னேற்றத்திற்குக் காரண பூதர்களாக ஆவார்கள். இப்படி நம்முடைய ஸந்ததி அபிவ்ருத்தியடைவதற்கு நம் நாட்டு உபாத்யாயர்கள் தான் மூலாதாரமாக யிருக்கிறார்கள். அதற்கு உபாத்யாயர்கள் இந்திய சரித்ரத்தை ஊக்கத்துடனும் ஸந்தோஷத்துடனும் போதிக்கும் திறமைசாலிகளாகயிருக்க வேண்டும். பாலர்களாக ப்ரைமெரி வகுப்பில் வாசிக்க ஆரம்பிக்கும்போதே அவர்களுக்கு தேச சரித்ரம் கற்பிக்கப்படவேண்டும். ஆனால், அங்கிருந்து ஒவ்வொரு உபாத்யாயரும் தேசசரித்ரம் போதிக்கும் நிபுணர்களாக யிருக்கவேண்டும். அங்கு குழந்தைகளுக்கு மஹான்களின் சரித்ரங்கள், அவர்கள் மேற்கொண்ட காரியங்கள், அவர்கள் ஜீவித்த முறைகள் முதலானவற்றைச் சிறுகச் சொல்லி பையன்கள் மனதில் உயர்ந்த நடைகளுக்குற்ற விதையை விதைக்க வேண்டும். அப்போதுதான் சரித்ரபோதனையின் லக்ஷ்யம் நிறைவேறும்.

507

# INSTRUCTIONS TO TEACHERS.

By

**S. Bagirathi.**

## உபாத்யாயர்களுக்குப் போதனைகள்.

1. வகுப்பில் நீர் உம்முடைய இடத்திலேயே இரும். பிள்ளைகள் தத்தம் இடத்தில் இருக்கட்டும். போர்டுபலகையின் வலது பக்கமே உபாத்திக்குத் தகுந்த இடம்.

2. துர் அப்யாஸங்களை நீக்கும்.

3. வகுப்பில் போதிக்கும்போது போதனையைத்தவிர வேறொன்றையும் எந்தக் காரணத்தினாலும் கவனியாதேயும்.

4. வகுப்பு முழுவதையும் கவனித்துப் போதியும்.

5. வாய் மொழியால் வகுப்பை ஆள்வதைக் காட்டிலும் கண்ணால் "சொல்லியும்" செவியால் "நோக்கியும்" ஆள்வதே சிறப்பு.

6. வகுப்பில் க்ரமம் இருக்கவேண்டுமாயின், பிள்ளைகளுக்கு ஸதா வேலை கொடும்.

7. நீர் யோசனையுடன் கட்டளையிடும்; கட்டளைக்குப் பிள்ளைகள் கீழ்ப்படியாததற்கு முன் வேறு வேலையைத் தொடங்காதேயும்.

8. உமக்கு ஸரியெனத் தோற்றினவாறு வகுப்பின் அபிவ்ருத்திக்கு எந்தக் கார்யமுஞ் செய்யும் சிறுவர்களுடைய பல யோசனையைக் கேளாதேயும்.

9. உமக்குக் கோபம் வரவொட்டாமல் காத்துக்கொள்ளும். பிள்ளைகளைத் தண்டிக்க நேரிட்டால், அவர்களுக்கு நலம் உண்டாகும் பொருட்டே யல்லாமல் உம்முடைய கோபம் ஆறும்பொருட்டாகத் தண்டியாதேயும்.

10. சிறுவர்களிடம் அடிக்கடி குற்றம் கண்டுபிடியாதேயும்.

11. சிறுவர்களை அடிக்கடி தண்டியாதேயும்.

12. ஒரே ஸமயத்தில் அநேகரைத் தண்டிக்கவேண்டாம்.

13. பாடத்தை முன்னதாகவே ஆயத்தப்படுத்திக்கொண்டு வாரும்.

14. திருத்தமாயும், சுத்தமாயும், தெளிவாயும், சுறுசுறுப்பாயும் பேசும். அதிகமாய் உரத்தும், விரைந்தும் பேசாதேயும்.

15. விடைகளைக் கூடுமானமட்டும் பிள்ளைகளிடமிருந்தே வாங்கும். இது கைகூடும்பொருட்டு சிறுவர்கட்கு முன்னமே தெரிந்திருக்கும் விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு தெரியாத விஷயங்களைப் போதிக்க முயலவேண்டும்

16. நீர் கற்பிப்பதை வினாவிடை மூலமாய்க் கற்றுக்கொடும்.

17. மந்தமான பிள்ளைகளிடத்திலிருந்தும், அஜாக்ரதையுள்ள பிள்ளைகளிடத்திலிருந்தும் அதிகமாய் விடைகளை வாங்கும்.

18. நீர் கற்றுக்கொடுத்த விஷயங்களைப் பிள்ளைகள் செவ்வையாய் அறிந்தார்களாவென வினாவிடை மூலமாய்த் தெரிந்துகொள்வதற்கு முன் வேறு விஷயத்தைப் போதிக்கத் தொடங்க வேண்டாம்.

19. போதனையால் பிள்ளைகளுடைய யோசனை வ்ருத்தியாக வேண்டுமாகையால் அதற்கு விரோதமாய் உத்தேசமாகவாவது, அஜாக்ரதையாகவாவது, கண்மூடித்தனமாகவாவது சொல்லும் விடைகளைத் தப்பு என்று கேள்வியின் மூலமாய்ப் பிள்ளைகளாலேயே திருத்தி அக்கெட்ட வழக்கங்களை உடனே நிறுத்தும்.

20. முக்யமும், கடினமுமான விடைகளைப் பலதரம் ஒப்புவிக்கச்செய்யும். வேண்டியவிடத்து போர்டுபலகையிலும் எழுதிக் காண்பியும்.

21. போர்டு பலகையை அதிகமாய் உபயோகியும். கறுப்புப் பலகையில் நீர் எழுதுவது ஒவ்வொன்றும் பிள்ளைகளுக்கு நன்றாக தெரியத்தக்கதாயிருக்கவேண்டும்.

22. பிள்ளைகளுடைய கவனத்தைப் பெறுவதற்கு உம்முடைய போதனை ஸந்தோஷகரமுள்ளதும், உற்சாகம் விளைவிக்கத் தக்கதுமாக இருக்கட்டும்.

பாகீரதி.

---

507

# POSITION OF OUR WOMEN.

By

**V. Balammal.**

(Co-Editor, Vivekodayam.)

## நம் ஸ்த்ரீகளின் நிலைமை.

நமது இந்திய ஸ்த்ரீகளின் ஸ்திதியை யோசிப்பதற்கும் பரஸ்பரமுள்ள அன்பை வ்ருத்திசெய்வதற்கும், நமது நிலைமையை உயர்த்தத் தக்க வழிகளைக் கண்டுபிடிப்பதை விட ச்ரேஷ்டமானது வேறெதுவுமில்லை. ஏனெனில், ஸ்த்ரீகளின் அறிவு வ்ருத்திக்கு அது முக்யமானதென்று யாவருக்கும் தெரிந்த விஷயமே. ஸ்த்ரீகளுக்குப் படிப்புக் கூடாதென்று சொன்னகாலம் போய்விட்டது. நமது தேசத்தில் எங்கு பார்த்தாலும் பெண்கல்வி வ்ருத்தியாய்க் கொண்டே வருவதாகத் தெரிகிறது. இது மேலும் மதப்பற்று, ஜனஸமூகப்பற்று, ஸன்மார்க்கப்பற்று முதலியவைகளுக்கும் மிக ஸாதகமாகயிருக்கிறது. நம்வகுப்பைச் சேர்ந்த ஸ்த்ரீமணிகளே தங்கள் அபிவ்ருத்தியை குறித்துச் சிந்தனைசெய்ய ஆரம்பித்துவிட்டது அதிக ஸந்தோஷத்தை உண்டாக்குகிறது. நம்மில் ஒவ்வொருவரும் நமது ஸஹோதரிகளுக்குக் கல்வி புகட்டிவர முயன்று வரவேண்டும். கல்வியென்றால் அறிவு, ஞானம் என்று அர்த்தம். அதாவது இது தப்பு, இது சரி என்று பகுத்தறிதல். மேலும், அக்ஞானமாகிய இருளை நீக்கி ஞானமாகிய வெளிச்சத்தைத் தருவதே அறிவென்று சொல்லப்படும். ஆகையால், புருஷர்களுக்கு மாத்ரம் கல்வி அறிவு அவச்யம் என்று எண்ணவேண்டாம்; பெண்களுக்கும் அது அவச்யமே. நல்லறிவு வேண்டுமானால் ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்வி இன்றியமையாதது தான்.

இப்பொழுது கல்வியால் விளையும் நன்மைகளைச் சொல்லுகிறேன். படிப்பதால் அறிவுண்டாகிறது. அதனால் ஒருத்திக்கு தன் குடும்ப கார்யத்தைத் தனது கணவருக்குக் காலஹரணமின்றியும், கஷ்டமின்றியும் செவ்வனே நடத்த உதவியாயிருக்கிறது; மேலும் படித்த ஸ்த்ரீகள் பெரியோர் புத்திமதிகளைக் கேட்டும், அவர்களின் ச்னேகத்தைப் பெற்றும் சண்டை சச்சரவின்றி நடந்துகொள்ள எண்ணங்கொள்

வார்கள். இவைகளெல்லாம் கல்வியால் அடையும் நன்மைகளில் ஒரு
பாகம் என்றே சொல்லவேண்டும். ஜானகி, த்ரௌபதி, சாவித்ரி முத
லியவர்களின் சரித்ரங்களை படிப்பதால், அவர்கள் செய்துவந்த மாதி
ரியே நாம் நடக்க விரும்புகிறோம். நமது குடும்பத்தில் துக்கமுண்
டானல் விசனப்படுகிறோம். அப்பொழுது உத்தரகீதா, பகவத்
கீதா முதலிய க்ரந்தங்களைப் படித்து நமது விசனத்தை நீக்க முய
லுகிறோம். அவ்விதம் சிறந்த க்ரந்தங்களைப் படிப்பதால் நமது
விசனம் குறைகிறது; நமது மனது சாந்தமாயிருக்கும்; ஆகையால்
நாம் நன்றாகப் படித்திருந்தால் ஒழிந்த நேரத்தில் மனவருத்தமா
யிருக்கும்பொழுது அவ்வித புஸ்தகங்களைப் படித்து நமது மன
தைத் தேற்றிக்கொள்ளக் கூடாதா?

படித்த ஸ்த்ரீகளுக்கு, தர்மம், ஐச்வர்யம், அன்பு, மோக்ஷம்
முதலியவைகள் எளிதில் கிடைக்கும். சீதாபிராட்டியார், அநசூயை,
சந்த்ரமதி, தமயந்தி முதலிய ஸ்த்ரீ ரத்னங்கள் கல்வியின் பெரு
மையால் தங்கள் கணவர்களிடத்தில் மிக்க பக்தியுள்ளவர்களென்றும்
மேலானவர்களென்றும் சொல்லுகிறோமல்லவா? கல்வியே தெய்வ
ஞானத்தைப் புகட்டக்கூடியது; பதிபக்தி, ஸஹோதரர்களிடத்தி
லும் ஸஹோதரிகளிடத்திலும் அன்பு, பெற்றோர்களிடத்தில்
ப்ரியம், இதரர்களுக்கு நன்மைசெய்ய வேண்டுமென்கிற இச்சை,
ஜந்துக்களிடத்தில் பட்சம், முதலிய நற்குணங்களெல்லாம் கல்வியால்
தான் உண்டாகும். நமது பூர்வீக க்ரந்தங்களிலிருந்து, சில கற்ற
றிந்த மாதர்கள் புஸ்தகங்களை எழுதி க்ரந்தகர்த்தாவெனப் பேர்
எடுத்ததாகவும், ஆத்மத்யாகம் செய்தும், துறவுபூண்டும் அநேக
மூடஜனங்களுக்கு ஞானத்தை ஊட்டியதாகவும் படிக்கிறோம்.

பூர்வகாலத்தில் கல்வியில் தேர்ச்சியடைந்த மாதர்களின் சரித்
ரத்தையும் அவர்கள் செய்த வேலையையும் சுருக்கமாகச் சொல்லு
கிறேன், தயவுசெய்து கவனித்துப் படிக்கவும்.

கார்கி நன்றாகப் படித்தவள். இவள் ஒரு உபநிஷத்தைத்
தானே சமஸ்க்ருதத்தில் செய்திருக்கிறாள். அதற்கு இவள் பெய
ரிடப்பட்டிருக்கிறது. கபிலர் தமது தயாராகிய தேவஹூதிக்கு
சாங்கியர் செய்த வேதாந்தத்தைப் போதித்தாரென்று ஸ்ரீபாக



வதத்தில் சொல்லியிருக்கிறது. ஸ்ரீராமருடைய மகிமையுள்ள மனை
வியாராகிய சீதாதேவியார் வேதாந்தம் பூராவாகப்படித்திருந்தார்.
தமது கணவரின் உத்தரவு ப்ரகாரம் ஆஞ்சநேயருக்கு அதைப்
போதித்ததாக சீதாராமாஞ்சநேய ஸம்வாதத்தில் சொல்லப்படுகிறது.
தர்மபுத்ரர் சொக்கட்டானடிக்கொண்டிருக்கும் பொழுது த்ரௌ
பதி அவ்விடத்திற்குச்சென்று பீஷ்மர் முதலான கௌரவர்களைப்
பார்த்து "நான் பந்தயம்வைத்து இழந்தேனா அல்லது தர்மராஜர்
பந்தயம் வைத்து இழந்தாரா"—என்று கேட்டாள். விராடமகா
ராஜன், தன் செல்வப் புத்ரியாகிய உத்தராவுக்கு ப்ருஹந்நளா
வைக்கொண்டு பரதநாட்டியம் போதித்து வைத்தார். ரத்னாவளி
என்ற கன்னிகை தான் விரும்பிய கணவரின் படத்தை எழுதி தான்
அவரிடமிருந்து பிரிந்ததாலுண்டான விசனத்தைப் போக்கிக்கொண்
டதாகப் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

குழந்தைகளை நல்வழியில் பழக்கவேண்டியவர்கள் ஸ்த்ரீகளே
யாவார்கள். படிப்பின்றி ஸ்த்ரீகள் இவ்வித முக்ய வேலையைச்செய்ய
முடியாது. குழந்தைகளோ தங்கள் வித்யாப்யாஸமாகிய பழக்கம் என்ற
பாடத்தை முதலில் தங்கள் தாயாரிடத்தில் அடைகின்றன. தாய்க்
குக் கல்வியறிவில்லாவிடின் அவள் தன் குழந்தைகளுக்கு நல்ல
பழக்கங்களைப்போதிக்கவே முடியாது. ஆகையால், உங்கள் குழந்தை
களின் வ்ருத்தியைக் கோரியாவது நீங்கள் நல்லபடிப்பைப்படியுங்கள்.
நாம்தான் ஆண்மையையும், பெண்மையையும் காட்டுபவர்கள். இவ்வித
மாக அவர்களின்பொருட்டு உங்களுடைய அன்பு பகிரங்கப்படட்டும்,
குழந்தைப்பருவமுதல் உங்கள் குழந்தைகளுக்கு ராஜபக்தி, பெற்
றோர்களிடத்தில் கீழடக்கம், கடவுளுக்கும் மனிதனுக்கும் செய்ய
வேண்டிய கடமை முதலியவைகளைப் போதித்து வாருங்கள். தாயா
னவள் தனக்கு ஒழிந்த நேரத்தில் தன் குழந்தைகளுக்கு உண்மை,
பொறுமை, கீழடக்கம், கடவுளால் ச்ருஷ்டிக்கப்பட்ட ஜீவராசிகளி
டத்தில் ப்ரியம், பட்சம், இதரர்களுக்கு நன்மைசெய்தல், கடவுளை
ஸ்துதிசெய்தல் முதலியவைகளையும் அசட்டைசெய்யாமல் போதித்
துவரவேண்டும்.

இன்னொரு முக்யமான விஷயமுள்ளது அதைப்பற்றி ஒவ்
வொரு மாதும் செவ்வனே அறிந்திருக்கவேண்டும். அதன் அறி

வால் குடும்பத்தை நன்றாக நடத்தமுடியும். அதன் பெயர் குடும்ப ஸம்ரக்ஷணையேயாம். இது ஸரியாக அநுஸரிக்கப்படாத க்ருஹத்தில் ஸுகமென்பதே யிராது. க்ருஹ க்ருத்தியத்தில் அனாவச்யமாய்ப் பணத்தை ஏராளமாய் செலவழிக்கக்கூடாது. அவரவர் வரும்படிக்குத் தக்கபடி செலவுசெய்ய முயலவேண்டுமே தவிர அதிகமாகச் செலவு செய்யக்கூடாது. வீட்டுக்குரியவள் தன் வீட்டுக்கார்யங்களில் ஒவ்வொன்றையும் செவ்வனே கவனிக்கவேண்டும். வேலைக்காரர்களை வைத்திருப்பதால் நமக்கு வேலையில்லையென்று நினைத்துக்கொண்டிருக்கக்கூடாது. அவர்கள் செய்யும் வேலையை அடிக்கடி பார்க்க வேண்டும். அவர்கள் தங்கள் வேலை முழுவதையும் நன்றாகச் செய்கிறார்களா வென்றும் பார்த்துவரவேண்டும். வீட்டில் ஸாமான்கள் திருட்டு போகாமலிருக்கின்றனவா வென்று கவனித்து வரவேண்டும். மேலும், ஸாமான்கள் கீழே சிதறி மூலைக்கொன்றாக இராவண்ணம் வைத்துக்கொள்வதுடன் அவைகளைச் சீராய் வைக்க வேண்டிய விடங்களில் பத்ரமாய் மூடிவைத்துக்கொள்ள வேண்டும். இவைகளெல்லாம் கல்வியின் பயனால் வரவேண்டும்.

வி. பாலம்மாள்.

---

## SUN.

**By**

**Swami Vallinayakam.**

### ஸூர்யன்.

ஸூர்யனானது அதைச்சுற்றி யோடும் க்ரஹங்களுக்கெல்லாம் நடுநாயகமாக இருந்து கொண்டு, தன் வெளிச்சத்தால் அவைகளிலுள்ள இருளைப் போக்கியும், தன் உஷ்ணத்தால் அவைகளிலுள்ள ஜீவராசிகளை யெல்லாம் இரக்ஷித்தும், தன் பலுவினால் அவைகளை யெல்லாம் தத்தம் நிலைகளில் இயக்குவித்தும் வருகின்றது. ஸூர்யனிடமிருந்து நமக்கு உதவப்படுவன, ஜீவராசிகளுக்கு ப்ராணாதாரமாக இருக்கும் உஷ்ணமும் வெளிச்சமும் மாத்ரமல்ல. அவ்விரண்டையும் போலவே முக்கியமான இரசாயன சக்தியும் அதனிடமிருந்து வருகின்றது. அச்சக்திதான் கெட்ட வாயுக்களிலுள்ள ப்ராணவாயுவை சுத்தப்படுத்தி, வேறாகப் பிரித்து, ஒருங்கே சரம் அசரமாக விளங்கும் இருவகை ஜீவராசிகளுக்கும் ப்ராணாதாரமாக விருக்கும் ப்ராணவாயு, மலவாயுக்களைக் கொடுத்துப் போஷித்து, இரக்ஷித்து வருகின்றது. சுருங்கக் கூறின், ஸூர்யன் இல்லையாயின் எஜ்ஜீவனும் உயிர் தரித்தல் அஸாத்யமாகும்.



இத்தனை மாத்ரமோ, புகைவண்டி, புகைக்கப்பல், இயந்த்ரங்கள் முதலிய பெரும் வேலை செய்யப்பட்டயாவும் இயங்குவதற்கு ஸூர்யனே காரணமாகும். இவையெல்லாம் நீராவியின் சக்தியால் அன்றோ இயக்கப்படுவன? நீர், ஆவியாவதற்கு நிலக்கரி அல்லது விறகின்றி எங்ஙனம் கூடும்? நிலக்கரி பண்டைய வ்ருக்ஷாதிகளின் நிலையேயாமன்றோ? ஆகவே, நிலக்கரி, விறகு இவை ஸூர்யனின்றி விளங்கா. அவையின்றித் தரையில் அதிவேகமாகச் செல்லும் புகைவண்டி யென்ன, ஜலத்தைக் கிழித்து வேகமாகச் செல்லும் புகைக்கப்பலென்ன, இரண்டாயிரம் மூவாயிரம் பேர்கள் கொண்டு வேலை செய்யும் இயந்த்ரசாலைகளென்ன, இவை யாவும் விளங்கா. ஆதலின், உலகத்தில் நடக்கும் பெரு வேலை யாவும் ஸூர்யனே தான் செய்கிறான் என்று சொல்ல வேண்டியிருக்கின்றது.

தோன்றும் பொருள்களுள் ஸர்வ சக்தியுடையதாயும், கடவுளின் ஸ்தானத்திற்கு ஏகதேசப் பொருத்தமுடையதாயும் இருப்பது ஸூர்யனேயாகும். இந்த ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தை மாத்ரம் ஆதாரமாகவைத்துக் கொள்வோர் கிஞ்சித்தும் கூசாமல் ஸூர்யனைக் கடவுள் ஸ்தானத்தில் ஏற்றி விடலாம்.

இத்தகைய ஸூர்யன், ஒரு நக்ஷத்ரமேயாகும், ஸூர்யனை நக்ஷத்ரம் என்றால் ஸாதாரண ஜனங்கள் நம்பமாட்டார்கள். "ஸூர்யனுடைய தேஜஸென்ன? ஸூர்யன் நக்ஷத்ரம் ஆகுமா?" என்பார்கள். எனினும், ஸூர்யன் ஓர் நக்ஷத்ரமே. தவிர, ஒளி குறைந்ததுமாகும். அதன் ப்ரகாசம் அதிகமாகத் தோன்றுவது மற்ற நக்ஷத்ரங்களை யெல்லாம் பார்க்கிலும் அது பூமிக்கு அதிக ஸமீபத்திலிருப்பதினாலாகும், உதாரணமாக. "ஆல்பாஸிரே" என்னும் நக்ஷத்ரத்தைப் பார்க்கிலும் ஸூர்யன் 10,000,000,000 மடங்கு அதிக வெளிச்சம் கொடுத்த போதிலும், அதைப்பார்க்கிலும் ஸூர்யன் மிகப்ரகாசம் குறைந்ததேயாகும். ஏதனாலெனின் அந்நக்ஷத்ரம் ஸூர்யன் இருக்கும் தூரத்தைப் பார்க்கிலும் எத்தனை

யோ லக்ஷம் மடங்கு அதிக தூரத்தில் இருப்பதினலென்க; "சிரியஸ்" என்னும் நக்ஷத்ரத்தின் ஒளி நமது ஸூர்யனுடைய ஒளியளவுதான் என்று வைத்துக்கொண்டாலும், அதன் ஆக்ருதி 300 ஸூர்யன்களுக்கு ஸமமாகும்; அதாவது, அந்நக்ஷத்ரம் நமது ஸூர்யனைப் பார்க்கிலும் 3000 மடங்கு அதிகமாகப் ப்ரகாசிக்கின்றதென்பதே.

சூர்யன் பூமியிலிருந்து 91,000,000 மைலுக்கப்பால் இருக்கின்றது. அவ்வளவு தூரத்திலிருப்பதால் எத்தனை சக்தி வாய்ந்த தூரத்ருஷ்டிக் கண்ணுடிகொண்டு பார்த்தாலும், வெறும் கண்ணல் 180,000 மைலுக்கப்பாலிருக்கும் பொருளைப் பார்த்துப் பரிசோதிப்பதுபோல்தான் ஆகும். சூர்யனுடைய ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு உள்ளே கூடி ஒரு நேர்க்கோடிழுத்தால், அக்கோடு அதாவது சூர்யனுடைய குறுக்களவு 853,380 மைல்களாகும். இவ்வளவு நமது பூமியின் குறுக்களவுக்கு 100 மடங்கு அதிகமாக இருக்கின்றது. ஒரு மணிநேரத்துக்கு 30மைல் வீதம் ஓடும் புகைவண்டி சூர்யனைச் சுற்றிவர வேண்டுமானல், 9 வருஷங்களுக்கு அதிகம் பிடிக்கும். அதே வண்டி நமது பூமியைச் சுற்றி வரவேண்டுமானல் ஒரு மாதம் போதும்.

பூமியைப் பார்க்கிலும் சூர்யன் 1,200,000 மடங்கு பெரிதாகும். ஆனல், சூர்யனுடைய அணுக்கள் சூக்ஷமமாகவும்நெருக்கமின்றியும் இருப்பதால், கனத்தில் 300,000 பூமிகள் சூரியனுக்கு ஸரியாக இருக்கும். பம்பரத்தைப்போல ஸூர்யன் பூமியைச்சுற்றிக் கொண்டிருக்கிறது. ஸூர்யனிடத்தில் காணும் சில புள்ளிகளால் இது கண்டு பிடிக்கப்பட்டது. அப்புள்ளிகள் தோன்றவும் மறையவும் செய்கிறதை வைத்து ஸூர்யன் நிலையில் இல்லையென்றும் சுற்றிக்கொண்டிருக்கிறதென்றும் கண்டார்கள். அப்புள்ளிகள், பல காணப்படுகின்றன. அவை ஸூர்யனுடைய மேல் பாகத்திலுள்ள பள்ளங்களாகும். சில புள்ளிகள் எப்பொழுதும் காணப்படா. சிலதோன்றுவதும் மறைவதுமாக இருந்து கொண்டிருக்கும். சில ஸந்தர்ப்பங்களில் ஒரு மணி நேரத்தில் கூட மாறுதல் காணப்பட்டிருக்கின்றது. இப்புள்ளிகளில் சில, பல லக்ஷம் சதுரமைல் விஸ்தீர்ணமுள்ளவைகளாயிருக்கின்றன. ஒரு காலத்தில் ஒரு புள்ளியும் காணப் படாமலிருப்பது முண்டு, மற்றொருகாலத்தில் எக்காலத்



தைப் பார்க்கிலும் அதிகப் புள்ளிகள் காணப்படுவது முண்டு. ஒரு புள்ளியும் தோன்ருத இரண்டு காலங்களுக்கும், அதிகப் புள்ளிகள் தோன்றும் இரண்டு காலங்களுக்கும் மத்தியே உள்ள காலம் ஸமமாகும். அது வருடம் பதினென்று. புள்ளிகள் தோன்றும் இடங்கள் ப்ரகாசமில்லாதவையாகும். ஆகவே, புள்ளிகள் இல்லாத காலத்தில் சூர்யன் அதிக புள்ளிகள் உள்ள காலத்தைப் பார்க்கிலும் அதிகமாகப்ரகாசிக்கும். ஆகையினல், சூர்யன் ஒருகாலத்தில் அதிகப்ரகாசமும், ஒருகாலத்தில் குறைந்த ப்ரகாசமும் உடையதாக இருக்கின்றது. அதுபற்றி, மாறுதலடையும் நக்ஷத்ரங்களில் ஒன்ருக சூர்யனைக் கூறவேண்டும்.

சூர்யன் ஒளியை வெறும் கண்ணல் பார்த்தால், பார்க்கக் கூடாத விதத்தில் கண் அத்தனை கூச்சத்தையடைகின்றது. தூரத்ருஷ்டிக்கண்ணுடி வைத்துப் பார்ப்பதானல், மிகவும் ஜாக்ரதையாகவும், பார்க்கவேண்டிய மாதிரியிலும் பார்க்கவேண்டும். பார்க்கத் தெரியாமல் பார்த்து, எத்தனையோ பேருக்குக் கண்கெட்டுப்போயிருக்கின்றதாம். சூர்யனுடைய மேல்பாகத்தில் ஒவ்வொரு சதுர கெஜத்திலிருந்தும், ஒவ்வொரு மணிநேரமும் ஒவ்வொரு சதுரகெஜத்திலும் ஆறு டன் நிலக்கரி யெரித்தால் எவ்வளவு உஷ்ணமுண்டாகுமோ அவ்வளவு உஷ்ணம் உண்டாகிக் கொண்டிருக்கின்றது. சூர்யன் மேல்பாகம் ஏறக்குறைய 2,284,000,000,000 சதுரமைல்களாகும். 3,097,600 சதுர கெஜங்கள் கொண்டது ஒரு சதுரமைலாகும். ஆயின், ஒருமணி நேரத்துக்கு எத்தனை டன் நிலக்கரி எரித்தால் சூர்யனுடைய உஷ்ணத்திற்கு ஸமமாகும் என்று இதை வாசிப்பவர்களே கணக்குப் பார்த்துக் கொள்ளட்டும்.

சூர்யனிடத்திலிருந்து புறப்படும் உஷ்ணமும் வெளிச்சமும் நாலாபக்கமும் போகின்றபடியாலும், நமது பூமி எவ்வளவோ சிறியதாகவும் சூர்யனுக்கு மிகவும் தூரத்திலும் இருப்பதாலும் சூர்யனுடைய வெளிச்சத்திலும், உஷ்ணத்திலும் நமக்குக் கிடைப்பதெல்லாம் 227,000,000ல் ஒரு பங்கேயாகும்.

இத்தகைய சூர்யன் எக்காலத்தும் இங்ஙனமே வெளிச்சமும் உஷ்ணமும் கொடுத்துக்கொண்டிருக்குமா? என்ருல், விறகில்லாமல் நெருப்பும் ஆகாரமில்லாமல் மனிதனும் ஜீவிப்பர் என்ருல் அதுவும்

கூடும். ஒரு காலத்தில் சூர்யனும் அதிசூக்ஷ்ம அணுக்களாக ஆகாயத்தில் சிதறுண்டு கிடந்ததாகும். ஸர்வ சக்திமானுடைய சக்தியால் அவ்வணுக்கள் திரண்டு, திரண்டு, உஷ்ணத்தோடும் வெளிச்சத்தோடும் தற்கால நிலையில் சூர்யனாக இருக்கின்றது. அதிலுள்ள உஷ்ணமும் ப்ரகாசமும் வரவரக் குறைந்து, குறைந்து, தேய்ந்து, மாய்ந்து, தன்னைச் சுற்றிவரும் க்ரஹங்களையெல்லாம் தன்னோடு ஒன்றாக்கி ஒளியில்லா உருவுடைய ஓரண்டமாக அளவிலடங்கா ஆகாயத்தின்கண் ஒரு புறம் ஈசன் ஆக்ஞைப்படி உலாவி நிற்பதாகும். அக்காலமும் ஒரு காலம்வரத்தான் செய்யும். என் செய்யலாம்? "அவனன்றி யோரணுவும் அசையாது" அன்றோ? எல்லாம் அவன் செயல். அதுநிற்க,

நமது சூர்யன் ஒரு நக்ஷத்ரமே யாதலால், ஆகாயத்திலுள்ள நக்ஷத்ரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சூர்யன் என்றும், அவை ஒவ்வொன்றையும் நமது சூர்யனைச் சுற்றிவருவதுபோல பல க்ரஹங்கள் சுற்றிவருமென்றும், அவற்றிற்கெல்லாம் நமது சூர்யனைப் போலவே அவை யொவ்வொன்றும் ஒளி, உஷ்ணம் முதலியன கொடுத்து, இயக்கி, இரக்ஷித்து வருகின்றன வென்றும் உள்ள ஓர் பேருண்மை ஊகிக்க கிடக்கின்றதைப் பாருங்கள். அவற்றின் கதியும் நாம் மேற்கூறியவாறு சூர்யனுடைய கதியைப் போல்தான் என்பதையும் உணருங்கள்.

சுவாமி வள்ளிநாயகம்.

---

உலகத்தில் பெரியோர்களாயிருப்பவர்களின் வாக்குகளை ஜாக்ரதையாய் கேட்டு அதன்படி நடக்கவேண்டும். அப்படி நடப்பது தான் விவேகம் :—**புத்தர்.**

* * *

இந்தியாவின் நாகரிகமானது ஸாத்வீகத்தன்மையுடையது, ஆகவே தான், பல படையெடுப்புகளுக்கும் பல அக்ரமசெயல்களுக்கும் தாங்கி நிற்கிறது :—ப்ரபுத்த பாரதா.

* * *

ஸ்த்ரீகள் தங்களுடைய கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் குடும்ப தர்மத்தை அனுஸரிக்கவேண்டும். குடும்ப தர்மத்தைக் காப்பாற்றுவதுமே ஸ்த்ரீகளுக்கு அழகு:—ஒரு படித்தமாது.

# VASUKIYAR.

By

**Mr. Sivadyananandan.**

## வாஸுகியார்.

தொண்டை மண்டலத்திலே வேளாள குலதிலகராய் ஒருவர் இருந்தனர். அவரது பெரும் தவப்பயனால் அவருக்கு வாஸுகியார் என்னும் ஒரு பெண் பிறந்தார். இப்பெண் சிறு வயதிலேயே தந்தையின் நல்லுரையைத் தட்டாமலும் தாயுரையை இகழாமலும் அடக்கத்துடன் ஒழுகிவந்தனர். விளையும்பயிர் முளையிலேயேயென்றபடி நம் வாஸுகியார் சிறு வயதிலேயே நாணமென்பதை முதற்குணமாய்க்கொண்டு நடந்துவந்தார். தற்காலத்துப் பெண்களில் அநேகரைப் போல கண்டபோர் எதிரில் நிற்றலும் அடக்கமின்மையும், கல்லென்ற நகைப்பும் ஆகிய இவைகள் நம் வாஸுகியாரிடத்தில் கிடையாது. கற்பெனப்படுவது சொற்றிறம்பாமையென்ற பாட்டின் உட்கருத்தை உடன் பிறந்த நடையாகக்கொண்டு நடந்துகாட்டுபவர். மோன மென்பது ஞானவரம்பென்று ஸதா மௌனத்தையே ஸாதனையாகக்கொண்டு ஸமயம் நேரின் சிறுகப் பொருள்செறிந்த மொழிகளைப் பேசுவர். இக்குணங்களெல்லாம் இளமையில் வாய்க்கப் பெற்ற இவருக்குத்தக்க கணவன் யாரோவென்று தந்தையார் ஸதா கவலைகொண்டிருந்தார். சீதையைப் பெண்ணாகக் கொண்டது முதல் ராமருக்கு பாணிக்ரஹணம் பண்ணிக்கொடுக்கும் வரையில் ஜநகமகாராஜனுக்கு இருந்த துயரத்தைப்போல இப்பெண்ணைப் பெற்றவர் துயரமும் வளர்ந்துகொண்டே வந்தது.

'பெண்ணுதவுங்காலைப் பிதா வேண்டும் வித்தையே' என்றபடி, நல்ல படிப்புள்ளவனாய் ஸிஷ்டாசாரனாய் தத்வ ஞானியாய் ஒரு மணாளன் தமது பெண்ணுக்குக் கிடைப்பானோ வென்று ஏங்கி வாஸுகியாரின் பெற்றோர்கள் எண்ணியிருந்தார்கள். ஒரு ஸமயம் இவரது கவலை தீருங்காலம் நேர்ந்தது. அக்காலத்தில் ஒரு பூதம் பயிர்களை அழித்தும் உயிர்களை வதைத்தும் அநேக துன்பஞ்செய்து வந்தது. அதனை யோட்டி ஒழிக்கப் பலரையும் வினவியும் அச்செய்கை கைகூடவில்லை. பின்பு, அக்காலத்தில் கல்வி ஸதாசாரம் இரண்டிலு மேன்மை அடைந்திருந்த திருவள்ளுவரை அணுகித்தம் கவலையைத் தெரிவித்தார். அவரும் விபூதியைப் பஞ்சாட்சரத்தால் மந்திரித்துத் தந்தனர். அவ்விபூதியின் ப்ரயோகத்தால் அப்பூதம் விலகி யொழிந்தது. நெடுங்காலந்தேடிக் கொண்டிருந்த வரன் தம் மகளுக்குக் கிடைத்த தென்று வாஸுகியாரின் பெற்றோர் பெருமகிழ்ச்சிகொண்டிருந்தார். அவர்கள் தம்பெண்ணை மணந்துகொள்ள

வேண்டுமென்று நாயனாரை வேண்ட அவரும் பலவிதத்தும் அப் பெண்ணைப் பரிசோதித்தார். தம் நூலிற்கூறிய

"தற்காத்துத் தற்கொண்டார்ப் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்னும் பெண்மைக்குணம் முற்றும் வாஸுகியாரிடம் பொருந்தியிருக்கக்கண்டு அவ்வாஸுகியாரை மணந்தனர்.

இல்லறம் பூண்டொழுகும் அம்மாது சிரோமணியின் கீர்த்தியானது வளர்பிறைச் சந்த்ரன் போலவளர்ந்துகொண்டே வந்தது. நாயனாரும் தம் இல்லாளின் மாட்சிமையை வெகுவாக மனத்தில் வியந்துகொண்டிருந்தனர். ஒருநாள் ஒரு பெரியவர் இல்லறம் பெரிதோ துறவறம் பெரிதோவென ஸந்தேகமுற்று அச்சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள நாயனாரிடத்து வந்து அடிபணிந்து கேட்கலானார். அவரும் சின்னாள் தம் வீட்டிலிருக்க வேண்டினர். அப்படியிருக்க, ஒருநாள் அவசரமாக நாயனார் வாஸுகியாரை அழைத்தார். அப்போது வாஸுகியார் தண்ணீர்மொள்ளச் செம்பைக் கிணற்றிலிட்டவர் கயிற்றையப்படியே நிறுத்திவிட்டுவந்தார். மற்றொருநாள் பழையது சாப்பிடும்போது 'சாதம் சுடுகிறது விசிறிகொண்டுவா' என்றார். அவரும் மறுமொழிகூறாமல் எடுத்துவந்து வீசத் தொடங்கினார். வேறொருநாள், தமது தரிகுழல் கீழே தவறி விழுந்ததைப் பார்க்கத் தீபமேற்றிவரச் சொல்ல அவரும் அப்படியே செய்தார். இவற்றையெல்லாம் கவனித்திருந்த பெரியவர்

'பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை யுண்டானால்
லெத்தாலுங் கூடியிருக்கலாம்'

என்று தம்புலமையே யுணர்ந்து நாயனாரை மேலொன்றுங் கேளாது போயினார்.

நம் வாஸுகியாரும் தாம் ஆதியிற் கொண்ட மௌன வ்ரதத்தை ஸதாகாலமும் கடைப்பிடித்தொழுகினார். காலந்தவறாது ஒவ்வொரு செயலையும் புரிந்து கணவரது குறிப்பறிந் தொழுகுவதில் அவரைப்போன்றவர் இதுவரையிலும் ஒருவருமில்லை. தம் கணவருக்கு முன்னெழுந்து, அவர் இரவிற்றூங்கும் பொழுது, அவரது காலைப்பிடித்துக்கொண்டிருந்து நித்ரை போவதே அவர் வழக்கம். வள்ளுவருடைய ருசி யறிந்து பலவித வுண்டிகளையுஞ் சமைத்து அவருக்கு அன்பாய்ப் பரிந்தூட்டி அவரது சொல்லைக் கடவாது ஒழுகித் தம்வாழ்நாளைப் போக்கினவராதலால் நம் வாஸுகியார் இறந்தபோது வள்ளுவர்

"அடிசிற்கினியாளே யன்புடையாளே
படிசொற்றவறாத பாவா யடிவருடிப்



பின்றூங்கி முன்னெழும் பேதையேபோதியோ
வென்றூங்கு மென்கணிரா"

என்று பாடி வருந்தினார்.

வாஸுகியாரது மரணத்தருவாயில் தமது மௌன வ்ரதத்தை மாற்றியொரு கேள்வி தம் புருஷரைக் கேட்டதாகத் தெரிகிறது. தினந்தோறும் அன்னம் பரிமாறும்போது இலைபருகில் ஒரு சிறு கிண்ணத்தில் தண்ணீரும் ஊசியும் வைப்பது வழக்கம். அக்கிண்ண நீரையாவது ஊசியையாவது நாயனார் ஒருதரமேனும் உபயோகித்ததில்லை. அதன் நோக்கம் யாதென்று பல்காலும் வாஸுகியார் யோசித்துப்பார்த்துந் தெரிந்துகொள்ள முடியவில்லை. அதனால் தமது கடைசி காலத்தில் தமது கணவரைநோக்கிக் கிண்ணநீரும் ஊசியும் வைக்கச்சொன்னதின் நோக்கமென்னவென்று வினவினார். அதற்கு நாயனார் ஒருவேளை அஜாக்ரதையினால் சோற்றுப்பருக்கை கீழே விழுமாயின் அதனை ஊசிகொண்டெடுத்துக் கிண்ண நீரிற் கழுவியுடன் சேர்த்துண்பதற் காகவே வைக்கச் சொன்னதென்றார். இதனால் வாஸுகியாரது ஒழுக்கமும் பண்பும் எத்துணை மேலான தென்று வெளிப்படுகின்றனவல்லவா? நாரீமணி காள்! தொன்றுதொட்டு வாஸுகியார் போன்ற உத்தம மாதர்களை இவ்விந்திய மாதா அடைந்திருந்தாள்.

தற்காலம் வாஸுகியார் போன்ற உத்தம மாதர்களைக் காண்பது அரிதாகயிருக்கிறது. தாங்களும், தங்களுடைய புருஷன் குழந்தைகள் ஆகிய குடும்பங்களும் நல்ல கீர்த்தியைப்பெற்று ஸுகமாக வாழவேண்டுமானால் ஸ்த்ரீகளே! வாஸுகியாரின் அடிச்சுவடுகளைப் பின் பற்றுங்கள். நம் இந்தியாவை உலகத்தார் கண் முன் ப்ரகாசிக்கச் செய்வதும் நம் ஸ்த்ரீகளே! நம் இந்தியாவுக்குக் கெட்ட பெயர் கொண்டு வந்து வைப்பதும் நம் ஸ்த்ரீகளே. ஆகவே, நல்வழியைப்பின் பற்றி இல்லற தர்மத்தை அனுஷ்டித்து தேசாபிமானிகளெனப் பெயரெடுங்கள்.

சிவத்யானனந்தன்.

பொதுஜனங்களின் கல்வியை ராஜாங்கம் கவனிக்கவேண்டியது. ஜனங்கள் கல்வி கற்காமல் பாமரர்களாக நின்றால் அந்த ராஜாங்கத்துக்கு அவர்கள் வெறும்பாரமாகவே யிருப்பார்கள் :—கோகலே.

* * * * *

படிப்பானது அவரவர்களின் பிற்காலவாழ்க்கைக்கு உபயோகப்படவேண்டும். அதுவே எக்காலத்திலும் அவச்யம் :—மிஸஸ் பெஸன்ட்.

* * * * *

# EDUCATION IN BARODA.

## பரோடா ராஜ்யத்தில் கல்வி.

இந்திய ஸமஸ்தானங்களுக்குள் அறிவிலும் விடாமுயற்சியிலும் மிகவும்சிறந்தது பரோடா ஸமஸ்தானமாகும். இதன் 1914-1915 வர்ஷத்திய கல்வி இலாகா ரிபோர்ட்டை நாம் பார்வையிட்டோம். அந்த ராஜ்யத்தில் உலகத்தார் கண்டு புகழும்படியாக ஆண் பெண் இருபாலாரின் கல்வி அபிவ்ருத்தி விசேஷமாக அடைந்திருக்கிறது. அந்த ஸமஸ்தான கல்வி இலாகாவின் அபிவ்ருத்தி ரிபோர்ட்டை நம் ஸஹோதரிகள் அவச்யம் அறியவேண்டும். ஆகையால், அதை நாம் சுருக்கமாக எழுதுகிறோம்.

பரோடா ஸமஸ்தானத்தின் கல்வி அதிகாரிகள் ஒவ்வொரு க்ராமத்திலும் ஒரு பாடசாலையை ஸ்தாபித்திருக்கிறார்கள். ராஜ்யத்தின் மொத்த ஆண் ஜனத்தொகையில் 100க்கு 15 பேர்கள் பாடசாலைகளில் படிக்க லாயக்குள்ளவர்களென்று கணக்கெடுத்திருக்கிறார்கள். அந்தக் கணக்கின்படியே சிறுவர்கள் படித்து வருகிறார்கள். யுத்தத்தினால் பணக்கஷ்டம் ஏற்பட்டாலும் அதைக்கவனியாது மஹாராஜா அவர்கள் ஜனங்களின் கல்வியைப் பரவச்செய்யவே முயற்சிசெய்து வருகிறார். ராஜ்யத்தின் மொத்த வரும்படியில் எட்டில் ஒரு பங்கு கல்விக்காகச் செலவிட்டிருக்கிறது மிகவும் குறிப்பிடத்தக்கது. ஆனால், ப்ரிட்டிஷ் இந்தியாவிலோ மொத்த வரும்படியில் 28ல் ஒரு பங்குதான் நமது ஸர்க்கார் செலவழிக்கிறார்கள்.

அந்த ராஜ்யத்தில் எல்லா சிறுவர்களும் பள்ளிக்கூடத்தில் படிக்க வேண்டுமென்று ஒரு கட்டாயமிருக்கிறது. இந்தக்கட்டாயம் ஏற்பட்ட காலத்தில் 3,076 பாடசாலைகள் ஸ்தாபிக்க வேண்டுமென்று ஏற்பட்டன. அதில் இப்போது 3,006 பாடசாலைகள் ஏற்பட்டு நல்ல தசையிலிருக்கின்றன. பெற்றோர்கள் தங்கள் ஆண் குழந்தைகளையோ பெண் குழந்தைகளையோ பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாமற் போனால் அந்தப் பெற்றோர்கள் அபராதம் விதிக்கப்படுகிறார்கள். இப்படி அபராதம் விதிக்கப்பட்டு அதனால் சேர்ந்த தொகையை கல்வியின் அபிவ்ருத்திக்காகவே செலவழிக்கப்பட்டிருக்கிறது.

அந்த ராஜ்யத்தில் உபாத்யாயர்களுக்குத் தகுந்த சம்பளம் கொடுக்கப்பட்டுவருகிறது. ஆகவே, உபாத்யாயர்கள் அதிருப்தியடைய காரணம் கிடையாது. வெகு ஸந்தோஷத்துடன் உபாத்யாயர்கள் தங்கள் மேலான தொழிலை ஸரிவரச்செய்து சிறுவர்களை நல்வழியில் நடத்துகிறார்கள்.

பரோடா ராஜ்யத்தின் பெண் பாலர்களில் 100-க்கு 81 பேர்கள் படிக்கிறார்கள். பெண்களுக்காக ஆங்காங்கு பாடசாலைகள்



ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. பள்ளிக்கூடங்களுக்குப் போகாமல் வீட்டிலிருக்கும் ருதுவான பெண்களுக்கும் ஸ்த்ரீகளுக்கும் வீட்டுப் படிப்பு நல்ல முறையில் கற்பிக்கப்பட்டுவருகிறது. இந்த வீட்டுப் படிப்பில் ஸ்த்ரீகளுக்குரிய பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது.

தாழ்ந்த வகுப்பார்களுக்கு பாடசாலைகள் இனமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவர்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பாடசாலைகளில் சில கைத்தொழில்களும் கற்பிக்கப்பட்டு வருகிறது. சில பாடசாலைகளோடு ஏராளமான நிலங்களைச் சேர்த்து அவைகளில் விவசாயமுறைகளில் கற்பித்துவருகிறார்கள். பரோடா ஸமஸ்தானத்துப் பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களில் 100க்கு 15 பேர்கள் சம்பளமில்லாமல் படித்துவருகிறார்கள். மாணாக்கர்கள் தங்கி வாசிக்கும் ஹாஸ்டலுக்கு வாடகை கிடையாது.

அநேகமாய் எல்லாப்பாடசாலைகளிலும் மாணவர்களின் நல்ல நடத்தை தெய்வ பக்தி, வணக்கம் முதலிய குணங்கள் வ்ருத்தியாகுமாறு ப்ரதிதினமும் ராமாயணம் மஹாபாரதம் முதலிய காவ்யங்களிலிருந்து நீதிவாக்யங்களைப்பற்றி உபந்யாஸம் செய்யுவர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அநேக புஸ்தகசாலைகள் இருபாலர்களுக்கும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

பொதுவாக ஜனங்களின் கல்வி விஷயத்தில் எவ்வளவோ அருமையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இந்தியாவிலுள்ள மற்ற ஸமஸ்தானங்களைக் காட்டிலும் பரோடா ஸமஸ்தானம் ஒன்றே கல்வி விஷயத்தில் அபிவ்ருத்தி யடைந்திருக்கிறது.

பங்கஜம்மாள்.

---

# REFORMING HINDUISM.

**By**

**Dr. Sir S. Subramania Aiyar, B.L. LL.D., K. C. I. E.**

## இந்துமதச் சீர்திருத்தம்.

பெண்கள் ருதுவான பின்பு விவாகஞ்செய்யலாம் என்று கொண்டு வரப்பட்டிருக்கும் உத்தேசச்சட்டம் நிறைவேறி விட்டால், தங்கள் மதத்துக்கும் ஜாதிக்கும் பெருங் கேடு விளைந்துவிடுமென்று ஒரு கக்ஷியார் நினைக்கிறார்கள். அநேக துராசாரங்களுக்கு ஹிந்து மதமே காரணமாய்த் தோன்றுவதால், அம்மதம் தொலைந்துவிடுதல் நலமாயிருக்கும் என்று சீர்திருத்தம் விரும்பும் மற்றொரு கக்ஷியார் அபிப்ராயப்படுகிறார்கள். ஹிந்து மதத்தை நன்கறிந்து, நன்கு மதிக்கும் மூன்றாவது கக்ஷியாருக்கோ, இவ்விரு திறத்தார் எண்ணங்களும் தவறாகத் தோன்றுகின்றன. நான்காவது

கக்ஷியார்கள் அவ்வுண்மைகளின் உட் கருத்துகளைச் சிறிதுமே அறியாதவராகவும் காணப்படுகிறார்கள்.

ஹிந்துக்களின் தற்கால நிலைமையைக் கவனித்துப் பார்த்தால், தாறுமாறாகச் சீர் குலைந்து, அலங்கோலப் பட்டு இழந்து பாழாகக் கிடக்கும் ஹிந்து மதம் என்னும் பழங்கோட்டையை, அங்கே சிறிது இங்கே சிறிதாக எவ்வளவு ஒழுங்குபடுத்தி, முட்டுக்கள் கொடுத்துப் பழுதுபார்த்தாலும் பயன் படாது. நாம் முன்னுக்கு வரவேண்டுமானால், ஹிந்து மதத்தின் புராதன அஸ்திபாரங்களை மூடிக்கொண்டிருக்கும் யாவற்றையுமே, தயவு தாக்ஷண்யமின்றி வெட்டித் தள்ளி ஒதுக்கிவிடவேண்டும். நமது தற்கால அவச்யத்துக்கும் உபயோகத்துக்கும் ஏற்றதாக, ஸாதாரணமான புதுக்கட்டடம் ஒன்று கட்டுவதே உத்தமமென்றும் தோன்றுகிறது. இந்த வேலையும் சுலபமானதன்று; மஹா மேதாவிகளாலும் குணசீலர்களாலுமே நிறைவேற்றத்தக்கது. தங்கள் தற்கால கஷ்டங்களெல்லாம், புராதனமான ஹிந்து மதத்தினால் விளைந்தனவே என்று நினைக்கும் கக்ஷியார், அம்மதத்திலிருந்து நன்மை ஒன்றுமே சித்திக்காது, அதையே திரும்பியும் மூலாதாரமாகக் கொள்ளுதல் தவறு என்று ஆக்ஷேபிக்கிறார்கள்.

மற்று, க்றிஸ்து மதமோ, மகமதியர் மதமோ, வேதாந்த சித்தாந்த விசாரணைகளில் ஒப்புயர்வில்லாத நம்மையா திருப்திசெய்யப் போகிறது? ஹிமயமலை தொட்டுக் கன்யாகுமரி வரையிலும் எண்ணிறந்த தலைமுறைகளாக, ஹிந்து ஆத்மகோடிகளின் தாகத்தையெல்லாம் தணித்து, அவர்களைப் போஷித்துக்கொண்டு வந்திருக்கும் திவ்யதடாகமாகிய ஸநாதநதர்மத்தை விட்டு விட்டு, நாம் வேறெதை அனுஷ்டிப்பது? புத்தர், சங்கரர், ராமானுஜர், சைதந்யர், துளசிதாஸர், ஆதி மஹாத்மாக்கள் இணையெதிரில்லா மேதாவிகள், ஜீவகாருண்யமே உருவெடுத்து வந்தாற்போன்ற பரோபகார சிகாமணிகள், ஒவ்வொருவரும் தத்தம் நாள் களிலே நடைபெற்று வந்த துராசாரங்களைச் சீர்திருத்தி. ஸதாசாரங்களை நிலைநாட்டினர். அவர்கள் முயன்ற முயற்சிகளிலும், செய்த ஹிதோபதேசங்களிலும் புராதனமான ஸநாதந தர்மத்தின் ஏதாவது ஒரு பாகத்தை அநுஸரித்து ப்ரவர்த்தித்தாரேயன்றி, அதை முற்றிலும் திரஸ்கரித்துவிட்டு, அதற்கு விரோதமாக நடந்தாரில்லையே. அந்த மஹான்களது சிறந்த வழியே இவ் விஷயத்தில் நன்மாதிரியாக நாமும் பின்பற்றத்தக்கது. இனி முதலிற் செய்யவேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றி, சிறிது விவரமாய் விசாரிப்போம்.

**புராதனமான திவ்ய க்ரந்தங்கள்** :—இந்த நாளிலே ஸர்வ உத்தமமாய் நினைக்கப்படும் க்ரந்தங்களை ஆராய்ந்து, பதர் வேறு தான்யம் வேறாகப் பிரிக்கவேண்டும். இவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட



உண்மைகளை மட்டும், ஸம்ஸ்கிருத பாஷையிலும், நாட்டில் ஸாதாரணமாய் வழங்கும் தேசபாஷைகளிலும் எல்லோருக்கும் பயன் படும்படி ஒழுங்குப்படுத்தி எழுதவேண்டும். கூடியவரையில் அவற்றின் ஸாராம்சத்தை இந்திய தேசத்துக்கெல்லாம் பொது பாஷையாகப் பரவி விளங்கும் இங்கிலீஷிலும் எழுதவேண்டும். இவ்வாறு எழுதப்படும் புது க்ரந்தம், ப்ரும்மவித்யை யாவரும் தெரிந்துக்கொள்ளும்படி, அரும் பெரும் ரஹஸ்யங்களை உண்டாக்கிக்கொண்டிருக்கும் ப்ரணவம், காயத்ரீ, மஹா வாக்யங்கள் முதலிய முக்ய மந்த்ரங்களை நன்றாய் ஆராய்ந்து எழுதப்படவேண்டும்.

**குடும்பம்** :—எல்லோரும் ஏகபத்னி வ்ரதத்தையே அநுஸரித்து அதைச் சார்ந்ததாகவே குடும்பமும் ஏற்பட வேண்டும். தக்க வயதாகுமுன், யாரும் விவாகம் செய்து கொள்ளக்கூடாது. அதி தூரபந்துக்களுக்கு குடும்பஸொத்துச் சேராதபடி, சட்டங்களை ஏற்படுத்த வேண்டும். தெய்வபக்தியும், புனர் ஜந்மத்தையும் கர்மத்தையும் பற்றிய உண்மையறிவும், ஆண்பெண் இருபாலார்க்கும் குழந்தைப்பருவத்திலேயே மனதிற் பதியும்படி போதிப்பதைத், தாய்தந்தையர் தமது முக்ய கடமையாக நினைத்து போதிக்க வேண்டும்.

**வர்ணாச்ரமதர்மம்**.—வர்ணாச்ரம தர்மத்தின் உட்கருத்து முற்றிலும் மறக்கப்பட்டு, அதனால் இப்பொழுது அநுகூலங்களின்றி இடையூறுகளும் கஷ்டங்களுமே நாளுக்குநாள் பெருகிக்கொண்டு வருகின்றன. அந்த தர்மத்தை அறவே கைவிட்டுவிடுவதைத் தவிர வேறு விதியில்லை. ப்ரும்மசர்யத்தில் அறிவை ஸம்பாதித்து, க்ருஹஸ்தாச்ரமத்தில் அதை அநுஷ்டித்து, வான ப்ரஸ்தாச்ரமத்தில் அதன் உண்மையை அறிந்து, ஸந்யாஸ ஆச்ரமத்தில் அநுபவஸித்தியால் ஸச்சிதாநந்த ஸ்வரூபத்தைத் தெளிவாய் உணர்வதற்கு அநுஸரணையாகவே, நான்கு வர்னபேதங்களும் ஏற்படுத்தப்பட்டன. அதன் உட்கருத்து யாவராலும் மறக்கப்பட்டு, பொறாமைக்கும் சண்டை சச்சரவுகளுக்குமே இப்பொழுது அவை ஆஸ்பதமாய் விட்டபடியால், வர்ணாச்ரம தர்மத்தைமுற்றிலும் விட்டு விடுவதே உசிதம்.

**தெய்வ ஆராதனை**.—"பரமாத்மா" "ஸச்சிதாநந்தம்", "பரமேச்வரன்," என்று கூறப்படும். "நிற்குண ப்ரும்மமும்," "ஸகுண ப்ரும்ம"முமே, இப்பொழுது போல ஸநாதநதர்மத்துக்கு மூலாதாரமாகும். 'நிர்குணப்ரும்மம்' மனதுக்கு எட்டாததால், ஸகுண ப்ரும்மத்துக்கே ஆராதனைகள் உரியன. ஆகவே, பரமேச்வரனைத் தவிர ஏனைய கீழான தேவதைகளையும், சக்திகளையும், வணங்கி ஆராதிப்பது உசிதமன்று. ஏனெனில், கடவுள் ஒருவரேயாயினும் அவனவன் பக்திக்குத் தக்கபடி அருள் செய்கிறாராயினும்,

ஸாதாரண ஜனங்களால் தேவ கணங்களுக்குள்ளே நடைபெறும் ஏற்றத்தாழ்வுகளை அறியமுடியாது; ஆகவே, சில்லறை தேவதைகளை வணங்குவதால் பலவித அஞ்ஞானங்களும், துராகிருதமான மதகோஷ்டிகளும் ஏற்பட்டு விடுகின்றன,

ஸம்ஸ்காரங்கள்.—இவை பதினாறு; இவற்றில் அநேகம் வீண் செலவுகளுக்கு ஆஸ்பதமாயிருக்கின்றனவேயன்றி, நற்ப்ரயோசனத்தை இப்பொழுது கொடுக்கவில்லை. அவற்றையெல்லாம் அநுஷ்டிக்க, நமக்கு அவகாசமும் கிடையாது. அதனால், உபநயநம், விவாகம், தகனம் வரையுமுள்ள அபர க்ரியைகள், ஆகிய இம்மூன்று ஸம்ஸ்காரங்களைமட்டும் வைத்துக்கொண்டு, மற்ற பதின்மூன்றையும் விட்டுவிடுவதே உத்தமம். அநுஷ்டிக்கவேண்டிய ஸம்ஸ்காரங்களையும் அவற்றில் வரும் மந்த்ரார்த்தங்களையும், செவ்வையாய் விளக்கும் ஸம்ஸ்காரக்ரந்தம் ஒன்று யாவராலும் தெரிந்துக்கொள்ளும்படி எழுதப்படவேண்டும். இந்த க்ரந்தமும் ஸம்ஸ்கிருதத்தில் மட்டுமின்றி தேசத்தில் வழங்கும் பிறமொழிகளிலும் எழுதப்படவேண்டும்.

மேலே கூறியவண்ணம், நமது மத்தையும் ஆசார அநுஷ்டானங்களையும் சுருக்கித்தெளிவாகச் சீர்படுத்தி, இந்த நவீனஹிந்து மதத்தைக்கொண்டு ஒழுகும் ஜனஸமூகம், அதிசீக்ரமாக முன்னுக்கு வந்து சிறப்புற்று விளங்குமென்பதிற் ஸந்தேகமில்லை. இப்பொழுது, எந்த வழியிலும் மேற்செல்ல முடியாமல் நம்மைத்தடை செய்யும் தளைகளையும், இடையூறுகளையும், இவ்வாறு நீக்கிக் களைவதினால், புதியதோர் மனைசக்தியம், ஊக்கமும், உற்சாகமும் நமக்குண்டாகும். ஹிந்துக்களெல்லோரும் ஒருமைப்பட்டு, நமது இந்தியா தேசம் மறுபடியும் தலையெடுத்து, வ்ருத்தியடைந்து மகிமை பெற்று விளங்குவதற்கு முக்யகாரணமாகு மென்பது நிச்சயமே. இதை வாசித்தவுடன், நமது ஜனங்களெல்லோரும் ஜாதிபேதங்களையும், ஸம்ஸ்காரங்களையும், விக்ரக ஆராதனைகளையும், திருவிழா முதலிய வேடிக்கைகளையும், அஞ்ஞான பூர்வகமான பலவித அநுஷ்டானங்களையும் விட்டு விடுவார்களென்று நான் நம்பவில்லை. தீர்க்கதரிசிகளாய், ஆழ்ந்தகன்ற புத்தியும் விவேகமும் உடையவராய், ஸநாதந தர்மத்தின் உட்கருத்துகளை உணர்ந்தவராய், பழைய வழக்கத்தால் ஏற்பட்டிருக்கும் துராசாரங்களையும், நிர்ப்பந்தங்களையும், தொலைத்தாலன்றி, ஹிந்துமதமும், இந்தியாதேசமும் ஹிந்துக்களாகிய நாமும் ஒரு நாளும் முன்னுக்கு வரமாட்டோமென்பதை மனதாரத்தெளிந்து தெரிந்தவராயுள்ள புத்திமான்களுக்காகவே, நான் இதை எழுதலானேன்.

ஸர். எஸ். சுப்பிரமணிய அய்யர்.

---



# I
# CONCERNING CHILDREN.
## குழந்தைகள் விஷயம்.

**Born Infants.**

பிறந்த சிசு:—சிசு பிறந்தவுடன் பிள்ளைப் பெற்றவளின் பக்கத்திலிருக்கிறவர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்கள் அநேகம். பிறந்த சிசுவை அதி சீக்ரத்தில் மெதுவாய்த் துடைக்க வேண்டும். காற்றுப் புகாமல் தொப்புள் கொடியை கத்தரித்துக் கெட்டியாய் பளுவில்லாமற் கட்டவேண்டும். சிசு பிறந்து அல்லது 8-வது தினத்தில் தொப்புள் கொடி தானே விழுந்துவிடும். ஆண் குழந்தையாயிருந்தால் மார்பிலிருந்து பால் த்ரவத்தைப் பீச்ச வேண்டும், குழந்தை பலஹீனமாயிருந்தால் அதைக் கழுவாமற் சுத்தமாய்த் துடைத்து விடலாம்.

சிசு பிறந்தவுடன் இரண்டு நாள் வரை தாய்க்குப்பால் இராது. அக்காலத்திற் குழந்தைக்கு வேறு முலைப்பால் கொடுக்கலாம். பசுவின் பாலும் தண்ணீரும் ஸரிபாகமாய்க் கலந்து காய்ச்சிவார்க்கலாம். பாலும் சிற்றுமணக்கெண்ணெயும் கலந்து புகட்டலாம். மூன்றாவது நான்காவது நாளில் தாய்க்குச் சுரக்கும் பாலில் குழந்தைக்குப் பேதியாகும் குணமுண்டு.

இந்தப்பாலைக் குழந்தை மிதமாகக் குடிக்கும்படி தாயுடைய படுக்கையில் அதை விடவேண்டியது. குழந்தை பால் குடிக்கும்போது தாய் தூங்கக்கூடாது. தாய் அஜாக்ரதையாயிருந்தால் குழந்தை அதிகமாகப் பால் குடித்து விட்டு பிறகு அது கஷ்டப்படும். குழந்தை தாய்பக்கமிருந்தால் தாய்க்குப்பால் சுரக்கும். தாயின் தேகச்சூடு குழந்தைக்கு நல்லது. ஸுமார் 20 நாள் வரை குழந்தையை அதிக வெளிச்சத்திலும் காற்றிலும் விடக்கூடாது.

**Hints to School Girls.**

பாடசாலைச்சிறுமிகளுக்குக் குறிப்புகள் :—சிறுமிகளே! நீங்கள் பள்ளிக்கூடத்துக்குபோகும்போது அக்கம் பக்கம் பார்த்துப்போங்கள். எதிரில் வண்டிகள் வரும். தெருவில் விழுந்துகிடக்கிற அசுத்தங்களை மிதித்துக்கொண்டு போகாதேயுங்கள். பள்ளிக்கூடம் சேர்ந்தவுடன்நேராக அவரவர்கள் வகுப்பில் போய் உட்காருங்கள். உபாத்யாயனி அம்மாள் வகுப்புக்கு வருமுன் ஸந்தடி செய்யாதேயுங்கள். உபாத்யாயனி அம்மாள் உங்கள் வகுப்புக்கு வந்தவுடன் மரியாதையாய் கூச்சல் போடாமல் எழுந்து நில்லுங்கள். உபாத்யாயனி அம்மாள் உங்களை உட்காரச்சொல்லுவாள். அப்போது உட்காருங்கள். அவர் சொல்லிக்கொடுக்கும் பாடத்தை நன்றாகக் கவனியுங்கள்.

* * *

1. இளமைப் பருவத்தில் பெண்கள் படிக்கவேண்டும். படிக்க சோம்பேரித்தனம் செய்கிறவள் தரித்ரத்தையடைவாள். 2. பெண்கள் தாங்கள் படித்த படிப்பை பிறருக்கு உபயோகப்படும்படி செய்வதே படிப்பின் லக்ஷ்யமாகும். 3. குடும்பத்தில் ஒரு ஸ்த்ரீ படித்தவளாயிருந்தால் அக்குடும்பம் முழுமையும் படிக்க இடமுண்டாகும். 4. படிப்பிருந்தால் புத்தியுண்டாகும். அப்போது பெரியோர்கள் சென்ற வழியைப்பின்பற்ற நேரிடும். 5. படிப்பின் பயனால் இதரர்களிடத்தில் மரியாதையாக நடந்துகொள்ள முடியும். படிக்காவிட்டால் பந்துக்களும் மற்றவர்களும் மதிக்க மாட்டார்கள். 6. படிப்பிருந்தால் யாரும் நம்மை மதிப்பார்கள். படிப்பே பெண்களுக்குத் தோழி. படிப்பு பெண்களை ஆபத்தில் கைவிடாது.

# DOMESTIC HINTS AND SUGGESTIONS.

## க்ருஹத்தியக் குறிப்புகள்.

**Headaache Tailam.**

தலைவலித்தைலம் :—கையாந்தரை, கற்றாழை, நெல்லிக்காய், இவைகளின் சாறு, முலைப்பால் வகைக்குப்படி $\frac{1}{2}$, நல்லெண்ணெய் படி $\frac{3}{4}$, நன்னாரிவேர், வெட்டி வேர், விலாமிச்சம்வேர், கோஷ்டம், அதிமதூரம், சந்தனம் வகைக்குப்பலம் $\frac{1}{4}$, ஆகிய இவைகளை அரைத்து அவைகளின் ரஸத்தை காய்ச்சி எடுத்துக்கொண்டு வெந்நீரில் சனி புதன் ஸ்நானம் செய்து வரவும்.

**Remedy for falling of hairs.**

தலைமயிர் உதிர் வதற்கு சிகித்ஸை: மா, எலுமிச்சை, நாரத்தை, கொளிஞ்சி, மாதுளை, விளா, இவைகளின் வித்துப்பருப்புகளை ஓர் நிறையாய் ஆவின்பாலில் அரைத்துக் கொதிக்கவைத்து ஒருமண்டலம் வரை காலையில் சிரசில் தளமிட்டு மாலையில் ஸ்நானம் செய்துவர குணம் கொடுக்கும்.

**Bile Headache.**

பித்தத் தலையிடி :-நல்லெண்ணெய், பசுவின் நெய், வெற்றிலைச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, இஞ்சி ரஸம், $\frac{1}{4}$ பலம் கருஞ்சீரகம் பொடித்துப்போட்டு காய்ச்சி ஸ்நானம் செய்யவும்.

* * *

தலை நடுக்கல் கை நடுக்கல் :—அதிமதூரம் பலம் 4, சீரகம், விலாமிச்சம்வேர், கொத்துமல்லி, ஏலம், லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, க்ராம்பு கோஷ்டம், சந்தனம், நெய், நன்னாரிவேர், கூவைநீர் நெல்லிமுள்ளி, கொடிமுந்திரிப்பழம், தாமரைவளையம், வெட்டிவேர், சிறுகீரைவேர், பொன்னாங்காணி வேர், நெருஞ்சில் வேர், வகைக்குப் பலம் கால், இவைகளை இடித்து 2 சேர் பாலில் போட்டு 4 சேர் நெய்விட்டு நெய்யாகக்காய்ச்சி யெடுத்து வேளை ஒன்றுக்கு 2-விராகனெடைவீதம் சாப்பிட்டு வரவும்.

தலைப்பேனுக்கு:—இரசத்தைகருஊமத்தைச் சாற்றிலாவது யேனிச் சாற்றிலாவது அரைத்து பழந்துணியில் தடவி நிழலிலுலர்த்தி சிரசில் சுற்றிவைக்க 3-சாமத்துக்குள் பேனெல்லாம் உதிரும்.

**Bald head.**

* * * *

வழுக்கைத்தலை:—அநேகமாய்த் தலைக்கு ஸதா தொப்பியை உபயோகப்படுத்துகிறவர்களுக்கு வழுக்கை விழுந்திருப்பதைக் காணலாம். தொப்பி போட்டுக்கொள்வதனால்நல்லகாற்று தலையிற்பட வொட்டாமல் ஒருவகையான உஷ்ணமுள்ளகாற்றே அவ்விடத்தில் நிரம்பி விடுகிறது. அதில் வியர்வையும் ஒரேவிதமான காற்றும் சேரும்போது சிறு சிறு புழுக்கள் உண்டாகின்றன. இவைகள் மயிர் முளைப்பதற்குள்ள நுண்ணிய த்வாரங்களை உடைத்து மயிர் முளையாமல் செய்து விடுகின்றன. எப்போது மயிர் முளைப்பதற்கு தகுந்த காற்று இல்லையோ அப்போது அந்தவிடத்தில் வழுக்கை விழுந்து விடுகிறது. ஆதலால், தொப்பி அணிந்துகொள்ளுவோர் இவ்விஷயத்தில் ஜாக்ரதையாயிருப்பது நலம்.

**To Prevent a Lamp Smoking.**

விளக்குப் புகையாமலிருக்க,—இரவின விளக்குகள் புகைந்து கொண்டிருந்தால், திரியை காரமான காடியில் நனைத்து உபயோகிக்கவும். அப்போது விளக்கு ரொம்ப ப்ரகாச மாகவும் புகையில்லாமலும் எரியும்.





# KITCHEN AND COOKERY.

## சமையலறையும் சமையலும்.

**Seven Kinds of Water.**

ஏழுவிதமான ஜலங்கள் ; அவையாவன :—1. மற்றவர்கள் காய்ச்சிய நீர், 2. நுரையோடிருக்கும் நீர், 3 கலங்கின அழுக்கு நீர், 4 துர்நாற்றம் வீசுகிற நீர், 5 மண் கலங்கிய நீர், 6 உப்பு நீர், 7 குமிழிகளெழும்பும் நீர்.

கைகால் கழுவினபின் பாக்கியிருக்கும் நீர், சௌசம்செய்து கொண்டபின் பாக்கியுள்ள நீர், மற்றவர்கள் குடித்து மிகுந்த நீர், வண்ணான் துறைக்குப் பக்கத்தி லிருக்கும் நீர்; சண்டாளர், கசாப்புக்காரர், அசுத்த ஜனங்கள் ஸ்நானம் செய்த நீர், பஹிஷ்டையான ஸ்த்ரீகள், சாதிட்டுக் கொண்டவர்கள் ஆகிய இவர்கள் ஸ்நானஞ் செய்த இடத்திலிருக்கும் நீர் முதலானவைகளை யெல்லாம் மற்றவர்கள் உபயோகிக்கக் கூடாது.—யாஞ்ஞவல்கியஸ்ம்ருதி.

**Sugar Ladu.**

சர்க்கரைலாடு:—அரைப்படி அரிசியை ஊறவைத்து ஸன்னமாக மாவரைத்து வைத்துக்கொள்ளவேண்டியது. அடுப்பில் பாணலியைப் போட்டு 10 பலம் நெய்யைக் காய்ச்சவேண்டியது. பிறகு அந்த நெய்யில் அரைத்து வைத்திருக்கும் மாவை கொஞ்சம் சிவக்கும்படி பக்குவமாய் வறுத்துக் கொள்ளவும். வேறு 10பலம் நெய்யில் 20 பலம் சீனி சர்க்கரையை ஒரு தாம்பாளத்தில் போட்டுப் பிசைந்து கொள்ள வேண்டும். ஏலரிசிப் பொடி கால் பலம், வறுத்தவாதம் பருப்பு 3 பலம், கற்கண்டுதூள் 3 பலம் இவைகளையும் மேலே அரைத்து வைத்திருக்கும் அரிசிமாவையும் தாம்பாளத்தில் வைத்திருக்கிற சர்க்கரை கலந்த நெய்யில் கொட்டி நன்றாய்ப் பிசைந்து எலுமிச்சங்காயளவு உருண்டைகளாக உருட்டி வைத்துக்கொள்ளவேண்டியது.

வெள்ளிரிக்காய்த் தயிர் பச்சடி:—இளசான 10 பலம் வெள்ளிரிப் பிஞ்சுகளை யெடுத்து சுத்த ஜலத்தில் நன்றாய்க் கழுவின பிறகு அவைகளின் மேல் தோலை எடுத்து விடவும். பிறகு சிறு சிறு துண்டு துண்டுகளாக நறுக்கி எடுத்துக்கொள்ளவும். அவைகளை மூன்று வீசம்படி நல்ல தயிரில் போட்டுக் கலக்கவும். கால்பலம் உப்பை நன்றாகப் பொடிசெய்து தயிர் கலந்து வைத்திருக்கும் வெள்ளிரிப் பிஞ்சில்போட்டு உடனே கலக்கவும். அரைக்கால் பலம் பச்சை மிளகாய் அரைக்கால் பலம் இஞ்சி இவைகளையும் பொடியாய் நறுக்கி அதில் போட்டுக்கலக்கவும். கடுகு, உளுத்தம் பருப்பு, மிளகாய் இவைகளை எண்ணெயில் தாளிதம் செய்து அவைகளில் கலக்கவேண்டியது. பிறகு, உபயோகப் படுத்தினால் சாப்பிட நன்றாகயிருக்கும்.

**Hints to Grown up Girls**

வயது சென்ற ஸ்த்ரீகளுக்குக் குறிப்புகள் :—சமையல் பாத்ரங்களையும் குடிக்கிற தீர்த்த பாத்ரங்களையும் புளி போட்டு சாம்பலால் நன்றாகத் தேய்க்கவேண்டியது. பிறகு, சுத்த ஜலத்தால் நன்றாய்க் கழுவி பாத்ரங்கள் வழக்கமாக வைக்கிற இடத்தில் வைக்கவேண்டியது. பாத்ரங்களை உடையாமல் உபயோகப்படுத்தி வந்தால் தலைமுறை முறையாக அவைகள் நீடித்திருக்கும்.

* * *

பெண்கள் நல்ல பெண்கள் என்று பெயரெடுப்பது கஷ்டம்; கெட்ட பெண் என்று பெயரெடுப்பது மிகவும் சுலபம்.

IV

# WOMAN'S WORLD.

## ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

### திருவருள்.

---

1. ஸஹோதரிகளே! அன்பு இல்லாவிடில் வெளிச்சமில்லாத இருண்ட இரவுக்கு ஒப்பாவீர்கள். அப்போது நீங்கள் பாலைவனத்திலிருப்பது போல நினைக்க நேரிடும்.

2. அன்பு இல்லாவிடில் இலைகளில்லாத மரத்தைப்போலவும் வாஸனையற்ற புஷ்பத்தைப் போலவும் வறண்ட நதியைப் போலவும் காணப்படுவீர்கள்.

3. அன்பு இல்லையேல் வாழ் நாள் வீணாகி விடும். அன்பில்லா வாழ்க்கை துக்க ஸாகரமே. அது உங்களுக்கு ஒரு பெரிய பாரமாகவே இருக்கும்.

4. அன்பானது நாம் செய்யும் வேலையைப் பரிசுத்தம் செய்கிறது. உங்களுடைய புத்தி நீக்ஷண்யத்தை விசாலப்படுத்துகிறது.

5. ஸஹோதரிகளே! நீங்கள் அன்புடையவர்களாய் உங்கள் குழந்தையை நேசியுங்கள், குடும்பத்தை நேசியுங்கள், பந்துக்களை நேசியுங்கள். இதர ஸ்த்ரீ புருஷர்களை ஸஹோதரி ஸஹோதரர்களாக நேசியுங்கள்.

6. உங்கள் ஸஹோதர ஸஹோதரிகள் ஏதாவது குற்றம் செய்தால் அவர்களது குற்றச் செய்கைகளைக் கண்டித்துப் பேசுங்கள் ஆனால், குற்றம் செய்கிறவர்களை நேசிக்கவேண்டும். அப்போதுதான் அன்புள்ளவர்களாயிருப்பீர்கள்.

7. நீங்கள் பொய் சொல்வதை வெறுத்துப்பேசுங்கள். ஆனால், பொய் பேசுகிறவர்களை நேசிக்கவேண்டும், கொலை செய்வதை வெறுங்கள். கொலை செய்கிறவர்களை நேசிக்கவேண்டும்.

8. கடவுள் ச்ருஷ்டியிலே ஒவ்வொரு மானிடர்களையும் உபாத்யாயர்களாக நியமித்திருக்கிறார். ஒவ்வொரு ஸ்த்ரீ புருஷரும் அன்புடன் மற்றவர்களுக்குத் தமக்குத் தெரிந்த நல்லவைகளையும் போதிக்கவேண்டும். நீங்கள் அன்பை அநுஸரிப்பீர்களாகில் உங்களுக்குச் செல்வம் உண்டாகும், புகழ் உண்டாகும், தெய்வ க்ருபை உண்டாகும்.

ஸங்கிருதி.






## ஸஹோதரிகளுக்கு ஒரு விண்ணப்பம்.

நீங்கள் உண்மையை அறியுங்கள். பெங்களூரில் எங்கள் சொந்தத்தறியில் கைதேர்ந்தவர்களால் வெகு காலமாய்த் தயார்செய்யப்பெற்று மிக்க கீர்த்தியோடு விளங்கி வரும் ஸகல ஜவுளி தினுசுகளும் அநேகம் பேர் வேண்டுகோளுக்கிணங்கி இந்த சென்னைப்பட்டணத்தில் ஒரு கடை வைத்திருக்கிறோம். ஸ்த்ரீகளுக்கு வேண்டிய பெங்களூர் புடவை ரவிக்கை முதலியவைகள் ஸரஸ விலைக்கு விற்கிறோம். தினுசிலும் சாயத்திலும், ஜரிகையிலும் அழுத்தமான நெசவிலும் எங்கள் கம்பெனி பெயர் பெற்றது. ஒருதரம் உண்மையை அறிந்து பாருங்கள். எந்த தினுசுகளும் இஷ்டப்படி தயார்செய்து அனுப்புகிறோம். எங்கள் கம்பெனியை வந்துபார்க்கத் தவறாதேயுங்கள்.

எச். சங்கப்பா பனப்பா

75, நைனியப்ப நாயகன் தெருவு, (மெத்தை)

பார்க்டவுன், சென்னை.



வெளியாய்விட்டது! வெளியாய்விட்டது!!

## சாரங்கதரஸம்ஹிதா.

இது மேன்மைதங்கிய புராதன ஒரு ஸம்ஸ்கிருத ஆதிவைத்யநூல். இதை எளிய தமிழ் நடையில் மொழிபெயர்த்தவர் ஆயுர்வேத வித்யா ஸார்வபௌம ப்ராணாசார்ய பிஷக்வர பண்டித த்ருவேதி ப்ரஹ்மஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி சாஸ்த்ரிகள் அவர்கள். இந்த நூலின் தமிழ்பெயர்ப்பு ஒவ்வொரு குடும்பத்திலுமிருக்கவேண்டியது. முக்யமாக ஸ்த்ரீகளுக்கு இது ஒரு கைப் புஸ்தகம். தமிழ் வைத்யர்களுக்கு ஒரு முக்ய துணைக்கருவி. இந்த க்ரந்தத்தை நமது தமிழ் நாட்டார் யாவரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு இதில் கூறியிருக்கும் ஒவ்வொரு சரக்குகளுக்கும் ஸம்ஸ்கிருதம், தமிழ், இங்கிலீஷ், ஹிந்தி, குஜராத்தி, ஆகிய பாஷைகளில் பெயரை அட்டவணையில் எழுதப்பட்டிருக்கிறது. இது 32 பாரம் கொண்டது. காலிகோ பைண்டு செய்யப்பட்டு அச்சிட்டு முடிவாகிறது. இதன் விலை ரூ. 4—0—0. தபால் சார்ஜ் அணா 8.

எஸ். வைத்யா அண்ட் கம்பெனி,

பார்க் டவுன், சென்னை.

# பணத்தை வீட்டிலிருந்தே ஸம்பாதிக்கலாம்.

ஸ்த்ரீகள் கிழவிகளானாலும் ஸரி, பெண்களானாலும் ஸரி, தினம ஒன்றுக்கு ரூபாய் மூன்று ஸம்பாதிக்கலாம்.

எப்படி? எங்களுடைய ஆட்டோ நிட்டிர்ஸ் என்னும் பின்னல் மிஷன்களில் வேலைசெய்தால் அப்பேர்க் கொத்த வரும்படியைப் பெறலாம். பின்னல் வேலைசெய்வது ஒரு ஸ்த்ரீயின் ஸந்தோஷப் போக்கேயாகும். ஒவ்வொரு ஐரோப்பியர் வீட்டிலும் ஒரு ஆட்டோ நிட்டர் இருக்கிறது. அந்தக் குடும்ப ஜனங்கள் அதில் வேலை செய்கிறார்கள். ஒவ்வொரு நாளின்பகலில் இந்த பின்னல் மிஷன்களில் மாத்ரம் வேலைசெய்து மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் ஸம்பாதிக்கிற ஆண்களும் பெண்களும் எங்களிட மிருக்கிறார்கள்.

**எப்படி ரூ. 3. ஒருநாளில் சம்பாதிக்கலாம் என்பதைப் பற்றி எங்களுக்கு எழுதிக்கொள்ளுங்கள்?**

நாங்கள் எந்த கைப்பாடுள்ள பழைய மிஷன்களையும் வாங்கத் தயாரா யிருக்கிறோம்.

**பதினாயிரம் வேலையாட்கள் தேவை.**

## கவுப்பன்.

பிரியமுள்ள ஐயா,

அடியிற்கண்ட விலாசத்துக்கு தங்களுடைய கம்பெனியின் "ஆட்டோ நிட்டர்" மிஷனைப்பற்றிய சகல சங்கதிகளையும் யாதொரு விலையில்லாமல் அனுப்பவும்.

டிபார்ட்மெண்டு நெ. 22.

பெயர்.......................................

முழுவிலாஸம்................................

................. ..................

All India Hosiery
MANUFACTURING Co.,
4/2 LINDSAY STREET, CALCUTTA.



THE
# FEMALE EDUCATION
AN ILLUSTRATED TAMIL MONTHLY MAGAZINE
# பெண் கல்வி
சித்ர ஸஹிதமான ஒரு தமிழ் மாதாந்தப் பத்ரிகை.


கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.


| | | |
|---|---|---|
| Vol. 5.<br>தொகுதி 5. | நளஞு ஆவணிமீ August 1916. | No. 11.<br>பகுதி. 11. |


## PROGRESS OF THE WORLD.
## ப்ரபஞ்சப்போக்கு.

**The Fourth of August 1916**

1916ஞு ஆகஸ்டுமீ 4-ந்தேதி:—ப்ரிட்டிஷார்களுக்கு இது சரி
த்ர ஸம்பந்தமான ஒரு முக்ய நாளாகும். 1914ஞு ஆகஸ்டுமீ 4-ந்
தேதி; நம் சக்ரவர்த்தி யாருக்கும் ஜெர்மெனியார்களுக்கும் முதன்
முதல் யுத்தம் தொடங்கியது. இப்போது யுத்தம் தொடங்கி இர
ண்டு வர்ஷம் முடிந்துவிட்டது. மூன்றாவது வர்ஷம் ஆரம்பமாகி
யிருக்கிறது. இந்த மஹாயுத்தத்தின் முடிவை அறிய ராணுவ
நிபுணர்களுக்குக்கூட ச்ரமமாயிருக்கிறதென்று அறிகிறோம். தற்
சமயம் யுத்த நிலைமையைப் பார்க்கும்போது நம் நேசக் கக்ஷியார்
களுக்கே ஸாதக முண்டாகுமென்று நினைக்க இடமிருக்கிறது. ஸர்
வேசன் இந்த மஹா யுத்தத்தை சீக்ரம் முடித்து ஜனங்களுக்கு
ஸுக ஸௌக்யத்தைக் கொடுப்பாரென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

**Mortality in Child birth.**

ப்ரஸவ காலத்தில் தாய் சிசுக்களின் மரணம்:—இந்தியாவில்
சில வர்ஷங்களாக ப்ரஸவ காலத்தில் தாய் சிசுக்களின் மரணம் அதி

உணர்ச்சியின் பலனாக படித்த புருஷர்களில் அநேகர் இதர தேசங்களைப்போல் நமது தேசமும் முன்னடைய வேண்டுமென்று கருதி முயற்சிகள் செய்து வருகிறார்கள். இவர்களில் சிலர் வ்யாபாரம் செய்து ஸ்வதேசத் தொழிலை அபிவ்ருத்தி செய்கிறார்கள். சிலர் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்து படிப்பை வ்ருத்தி செய்து வருகிறார்கள். மற்றும் சிலர் முன்னேற்றத்துக்கு மதம் அவச்யமென்று சங்கங்கள் ஏற்படுத்தி ஜனங்களுக்கு உபதேசம் செய்து வருகிறார்கள். சிலர் பத்ரிகைகளை வெளிப்படுத்தி ஒவ்வொரு தேசத்து ஸமாசாரங்களையும் தெரிவித்து, நாம் அறிந்து கொள்ளவேண்டிய பல அருமை பொருந்திய விஷயங்களை எழுதி உபகாரம் செய்துவருகிறார்கள். இன்னும் சிலர் ஊர் ஊராய்ப் போய் ப்ரசங்க மூலமாக ஸத்விஷயங்களைப் போதித்து வருகிறார்கள். ஆக எல்லோருக்கும் நோக்கம் ஒன்றுதான். சிலகாலமாக நமது ஸஹோதரிகளும் தங்கள் நிலையை அறிந்து ஸஹோதரர்களைப்போல் கல்வியின்மை என்கிற இருளிலிருந்து நீங்க மேற்போன்ற அநேக துறைகளில் வேலை செய்யத் தலைப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் மற்றெத் துறைகளைக் காட்டிலும் ப்ரசங்கங்கள் தங்கள் நோக்கத்திற்கு முக்கிய ஸாதனமென்றும் சீக்ரத்தில் கைகண்ட ப்ரயோஜனத்தைத் தருமென்றும் கருதி மத விஷயமாகவும் ஆசார சீர்திருத்த விஷயமாகவும், கல்வி விஷயமாகவும் ப்ரசங்கங்கள் செய்து வருகிறார்கள். இப்படி இவர்கள் செய்து வருகிறது நமக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறது. தற்காலம் நடக்கும் ஆசார சீர்திருத்தக் கான்பரன்ஸ்களிலும் மற்ற ஸ்த்ரீகள் மீட்டிங்குகளிலும் ஸத்ரீப்ரஸங்கிகள் வேண்டுமென்று சொல்லப்படுகின்றன. ஆக ப்ரஸங்கிகளாகப் போகும் ஸ்த்ரீகளுக்காகவே பின்வரும் முக்யக் குறிப்புகள் எழுதப்பட்டன. இவைகள் இவர்களுக்கு மிக உதவியாயிருக்குமென்பதில் ஸந்தேஹமில்லை.

1. ப்ரஸங்கத்துக்குத் தயாராயிரு. 2. அக்ராஸனாதிபதி பேசக் கூப்பிட்டவுடன் சடுதியில் எழுந்து நில். 3. மெதுவாக ஆரம்பம் செய். 4. கேட்போர்க்கு மனதில் நன்றாகப் புரியும்படி பேசு. 5. சபையோர்களெல்லோருக்கும் கேட்கும்படி உரக்கப் பேசு. 6. மர்யாதையாய்ப் பேசு. 7. வாக்யங்கள் சிறியதாயும் அழகாயுமிருக்கட்டும். 8. உதாரணங்களை எடுத்துக் கையாள். 9. ப்ரசங்கம் செய்யும்



உன் வழியைப் பிறருக்கு தெரிவிக்காதே. 10. உன்னைப்பற்றி நீ நிச்சயமாயிரு. 11. மனங் கலங்கும்படி வைத்துக் கொள்ளாதே. 12. ஸபையோரைப் பார். 13. அங்குமிங்கும் சாயாமலும் கைவிஷமம் செய்யாமலும் நிமிர்ந்து நில் 14. தொண்டையைச் சுத்தப்படுத்திக் கொள். 15. கம்பீரமாகப் பேசு. 16. ஜனங்களைப் பார்த்துப் பயந்து விடாதே. 17. ஜனங்கள் மனதை உன் விஷயத்துக்குக் காந்தம்போல் இழு. 18. நிறுத்த வேண்டிய இடத்தில் நிறுத்திப் பேசு. 19. வணக்கமும் ஒடுக்கமும் தேவை. 20. ஜன அபிப்ராயத்துக்கு விரோதமாகப் பேசாதே. 21. ஜனங்களை விட்டுப் பிடித்து உன்வசமாக்கிக் கொள். 22. ப்ரஸங்கம் ஜனங்கள் வழங்கும் நடையில் இருக்கட்டும். 23. உன் விரோதிகளை ஸமாதானம் செய்துகொள். 24. ப்ரஸங்கம் தொடர்ச்சியாக இருக்கட்டும். 25. வாயைத்திறந்து பேசு. 26 படபடப்பு இல்லாமல் கம்பீரத் தொனியுடன் பேசு. 27. ஊக்கம், ஏகாக்ர சித்தம், மனநேர்மை, சாதுர்யம் இவைகளை வ்ருத்தி செய். 28. ஜனங்களுடன் ஸந்தோஷமாய்க் கூடியிரு. 29. கர்வம் கொள்ளாதே. 30. ப்ரஸங்கத்தைச் சீக்ரம் முடி.

ப்ரஸங்கம் செய்யப் பழகும் ஸ்த்ரீகள் இந்தப் புத்தி மதிகளை ஜாக்ரதையாய்ப் படித்து அவைகளின்படி நடக்க முயலவேண்டும். தற்காலம் சுருக்கமாகக் குறிப்பிட்ட நேரத்தில் எடுத்துக் கொண்ட விஷயத்தைப் பேசுவதுதான் அழகு. சிலரைப்போல் அரைமணி பேசக் கேட்டுக்கொண்டு $1\frac{1}{2}$மணி வழ வழ என்று பேசுவது கூடாது. மேற்கண்ட புத்திமதிகளின்படி ஒருத்தி ப்ரஸங்கம் செய்யப் பழகினால் குறைந்தது மூன்று மாதத்திற்குள் அவளிடம் நல்ல அபிவ்ருத்தி காணலாம். இவைகளை விருப்பமுள்ள ஸ்த்ரீகள் ஒரு அட்டையில் ஒட்டி தனக்கெதிரில் வைத்துக்கொண்டு ப்ரஸங்கம் செய்யப் பழகுவது அவச்யமாகும்.

---

எவனொருவன் என்னைத்தவிர வேறு ஒருவருமில்லை யென்று ஸதா என்னையே த்யானம் செய்கிறானோ அவனுடைய யோகக்ஷேமத்தை நான் நிர்வஹித்துக்கொள்கிறேன். அவன் அதற்குப் பயப்படவேண்டாம்:—ஸ்ரீக்ருஷ்ணன்.

# SOCIAL REFORMERS PAST & PRESENT.

**By**

**Sri Nagarathna Ammal.**

## முதற்கால ஆசார சீர்திருத்தக்காரர்களும் தற்கால ஆசார சீர்திருத்தக்காரர்களும்.

ஆசார சீர்திருத்தக்காரர்கள் யார் என்று ஒருவள் ஸஹஜமாக கேள்விக் கேட்கக்கூடும்? ஜன ஸமூகங்களிலுள்ள ஊழல்களைச் சீர்ப்படுத்தி அதன் ஐக்யத்துக்கும், உயர்வுக்கும் உண்மையாக உழைப்பவர்களை ஆசார சீர்திருத்தக் காரர்களென்று சொல்லலாம். ஜன ஸமூக ஐக்யத்துக்கு முற்காலத்தில் இப்படி உண்மையாக உழைத்தவர்களையே நாம் நாளது வரையிலும் வணங்கி வருகிறோம். அவர்களின் சரித்ரங்களைப் படித்து நம் ஸந்ததியார்களுக்கு அவைகளைப் புகட்டி வருகிறோம். இது சரித்ர உண்மை. இதை யாவராலும் மறுக்கமுடியாது. முற்காலத்திய ஆசார சீர்திருத்தக்காரர்களுக்கும் தற்காலத்திய ஆசார சீர்திருத்தக் காரர்களுக்கும் எவ்வளவோ வித்யாஸங்களிருக்கின்றன. முற்கால ஆசார சீர்திருத்தக்காரர்கள் ஜனங்களின் நன்கு மதிப்பைப் பெற்றிருந்தார்கள். ஆசார சீர்திருத்தம் தெய்வீகமானதென்று கருதி நடந்து வந்தார்கள். அவர்கள் என்ன பேசினார்களோ என்ன செய்தார்களோ அவைகளெல்லாம் அன்போடு கூடியவைகளாயிருந்தன. முற்காலத்திய ஆசார சீர்திருத்தக்காரர்களாகிய மஹான்கள் ஸ்வயநலம் பாராட்டுதல், பொறாமை, கோபம் முதலிய துர்க்குணங்களை அடியோடு விட்டவர்களாய் உயர்ந்த நோக்கத்தோடு வாழ்க்கையைக் கழித்து வந்தார்கள். ஜனங்களும் இந்த மஹான்கள் சொன்னவைகளை உள்ளன்போடு ஏற்று அவைகளை வாழ்க்கையில் அனுஷ்டித்து வந்தார்கள். ஆகவேதான், முற்காலத்தில் ஆசார சீர்திருத்தம் முன்னடைந்தது.

தற்காலம் ஆசார சீர்திருத்தக்காரர்களென்று பெயர் வைத்துக்கொண்டு திரிபவர்களின் கொள்கைகளையும் செய்கைகளையும் விசாரிப்போம். முதன் முதலாக, இவர்கள் ஆசார சீர்திருத்தக் கொள்கைகளுக்கு விரோத மாகவே பேசுவதும் எழுதுவதுமாக இருக்கிறார்கள். ஆசார சீர்திருத்த சங்கத்தின் கொள்கைகளை இவர்கள் முற்



றிலும் அறிந்துஉணரவில்லை. இவர்கள் ஸ்வப்ரயோஜனத்தைக் கருதி கோபத்தோடு பேசுவதும் எழுதுவதுமாக இருக்கிறார்கள். இவர்களிடத்தில் அன்பு என்கிற ஒரு தெய்வீக சக்தி கிடையாது. முரட்டுப் பேச்சுக்களினாலும் ஆர்ப்பாட்டத்தினாலும், ஆசார சீர்திருத்தம் நிறைவேறி விடுமென்று நினைக்கிறார்கள். இவர்களே தங்கள் தங்கள் வீடுகளிலுள்ள அற்ப ஊழல்களைச் சீர் படுத்த முடியாமல் விழிக்கிறதை நாம் அறிந்திருக்கிறோம்.

நாலைந்து பேர்களடங்கிய ஒரு குடும்பத்தைச் சீர்படுத்த முடியாதவர்களா ஒரு ஸமூகத்தைச் சீர் படுத்தப் போகிறார்கள்! ஆஹா! என்ன பைத்யக்கார எண்ணத்தை வைத்துக்கொண்டு இவர்கள் மேடையில் முன்வந்து ஆசார சீர்திருத்த விஷயமாகப் பேசப் புகுகிறார்கள். உலகத்திலுள்ள எந்த ஸமூகங்களுக்கும் எந்தத் திருத்தம் வேண்டியிருந்தாலும் அது தெய்வாம்சம் பொருந்தியதாயிருக்கவேண்டும். உலகம் தொடங்கிய நாள் முதற்கொண்டு ஜன ஸமூகத்திருத்தங்களுக்காக ஏற்பட்ட சங்கங்களெல்லாம் தெய்வாம்சத்தையுடையவைகளாயிருந்திருக்கின்றன. ஆனால், இப்போது ஆங்காங்கு ஸ்தாபிக்கப்பட்டுப் பல வர்ஷங்களாக விருக்கின்ற ஆசார சீர்திருத்தச் சங்கங்களெல்லாம் தெய்வாம்சத்தை வெகு தூரம் விலக்கி நடைபெற்று வருகின்றன. ஆகவே தான், தற்கால ஆசார சீர்திருத்தம் ஜனங்கள் மத்தியில் பரவாமலிருக்கிறது. இவர்கள் ஜனங்களின் நன்குமதிப்பைப் பெறமுடியாமலிருக்கிறார்கள். இப்போது ஒவ்வொரு வகுப்பிலும் எவ்வளவு ஜாதிப்பிரிவுகளும் வித்யாஸங்களும் இருக்கின்றன வென்று போலியாகத் துக்கிக்கிற இவர்கள் போன்றவர்களாலேயே முன் ஒரு காலத்தில் மேற்சொன்ன பிரிவுகளும் வித்யாஸங்களும் ஏற்பட்டு விட்டன. இக்காலத்திய ஆசார சீர்திருத்தக்காரர்களின் செய்கைகளினால் இன்னும் எவ்வளவு ஜாதி உட்பிரிவுகள் ஏற்பட்டு விடுமோ வென்று நமக்கு ஒரு பயம் ஜனிக்கிறது. இப்போது, ஆசார சீர்திருத்தக்காரர்களென்று படித்த வகுப்பாருக்குள் ஒரு தனி ஜாதி ஏற்பட்டிருக்கிறதை இவர்கள் மறுக்கமுடியுமா? ப்ராமண, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ர என்று வகுப்புப் பிரிவுகள் ஏற்பட்டதைக் கண்டிக்கும் இவர்கள் பொதுவாக படித்தவகுப்பாரென்றும் படிக்காத வகுப்பாரென்

றும் பிரிவுகள் ஏற்பட்டிருக்கிறதை மறுக்க முடியுமா? மேலும், அரை குறையாய்ப் படித்தவர்கள், இங்க்லீஷ் படித்தவர்கள் தமிழ் படித்தவர்கள், இங்க்லீஷ்க்காரர்களின் நடை உடை பாவனைகளை அனுஷ்டிப்பவர்கள், நம் ஸ்வதேசீய நடை உடை பாவனையை அனுஷ்டிப்பவர்கள், க்ராமத்திலிருப்பவர்கள், பட்டணத்திலிருப்பவர்களென்று பல பிரிவுகள் ஏற்பட்டிருக்கிறதை இவர்கள் மறுக்கமுடியுமா? ஆசார சீர்திருத்தச் சங்கத்தைச் சேர்ந்தவன் தான் உன்னத பதவியிலிருக்கிறதாக நினைத்துக்கொள்கிறான். அச்சங்கத்தில் சேராமலும் அவனுடைய கொள்கைகளை அனுஸரிக்காமலுமிருந்தால் பிறரை மூடர்களென்று மதித்து அலக்ஷியம் செய்கிறான். கொஞ்சம் இங்க்லீஷ் படித்தவன் அதே பாஷையைப் படிக்காத தன் தகப்பனாயிருந்தாலும் தம்பி தமயனாயிருந்தாலும் அவர்களை மதிக்கிறதில்லை. தகப்பன் தம்பி தமயன்மார்கள் வேறு பாஷைகளில் பயின்றவர்களாயிருந்தாலும் அவர்களைப் படிக்காத மூடர்களென்று மதித்து உடன் அலக்ஷியம் செய்துவிடுகிறான். பட்டணத்தான் க்ராமத்தானைக் கண்டு பேசினால் தனது கௌரவம் போய் விடுமோவென்று பயப்படுகிறான். இப்படியாக ஒருவர்க்கொருவர் நடந்துகொண்டு வரும் ஸமூகத்தில் எப்படி ஸமூகத் திருத்தங்கள் ஏற்படும்? இந்த விஷயங்களை ஆசார சீர்திருத்தக்காரர்கள் ஏன் கவனிக்கிறதில்லை? ஸமூகத் திருத்தங்களுக்கு உழைக்க முன்வரும் இவர்களிடத்தில் அன்பு என்கிற தெய்வீக சக்தி இல்லாமற் போனால், எப்படி ஆசார சீர்திருத்த நோக்கங்கள் நிறைவேறும்? அன்பு அல்லது ஸஹோதரத்வம் என்கிற ஒரு சக்தியை வைத்துக்கொண்டு ஜனங்களின் உணர்ச்சிக்கு விண்ணப்பம்செய்து உபந்யாஸம் செய்யவேண்டும். கோபத்தைவிட்டும் காட்டு முராண்டித்தனமானப் பேச்சுகளையும் உபந்யாஸங்களையும் ஒழிக்கவேண்டும். அப்போதுதான் நமது ஆசார சீர்திருத்த சங்கத்தின் உத்தம நோக்கங்கள் நிறைவேறும்.

நாகரத்னம்மாள்.

---

உலகம் ஒரு நாடகசாலை, அதிலிருப்பவர்கள் நடிநடர்களாகும்.

ஒருவன் இடது தாடையில் அடித்தானேயானால் அவனுக்கு வலது தாடையும் காண்பித்துவிட்டுப் பொறுமையாயிரு:—க்றிஸ்து.

# WOMEN'S FUTURE

By

**Sri Mangalam.**

## ஸ்த்ரீகளின் வருங்கால நிலைமை.

அன்பு, சாந்தம், பொறுமை, இன்சொல், பரிசுத்தம், பேதைமை (கபடற்ற தன்மை) ஆகிய குணங்கள் பெண்ணுக்கென்றே விசேஷமாக மானிட உற்பத்தி காலந் தொடங்கி அமைந்துள்ளன. இவ்வுன்னத லக்ஷணங்கள் யாரிடத்தில் அமைந்திருக்கின்றனவோ அன்னாரிடத்தில் அழகும் ஓர் அற்புதமான வசீகர சக்தியும் அமைந்திருக்கிறதை நாம் அறிகிறோம். அது இயற்கையின் நியதி. ஆகையால், பெண்பாலார்க்கென்றே விசேஷமாக அமைந்த முற்கூறிய அன்பு, சாந்தம் முதலிய தன்மைகளின் பயனாக அழகும் வசீகர சக்தியும் அவர்களுக்கு இயற்கையான விசேஷ லக்ஷணங்களாயமைந்தன. அன்பு, அழகு முதலிய நலங்கள் பெண்பாலார்க்கென்றே சிறப்பாகச் சார்ந்தனவாகையால், அவர்களுக்குத் தோகை (மயில் போன்ற அழகுடையவள்), மெல்லியல் (மென்மையான தன்மையுடையவள்). பேதை(கபடற்ற தன்மையுடையவள்), பைங்கிளி, தேன்மொழி என்ற தமிழ்ப் பெயர்களும், ஆங்கிலத்தில், அழகிய பகுதியார் (The fair sex), ஸாத்விக பகுதியார் (The gentle sex) என்ற பெயர்களும் மிகமிகப் பழைய காலத்திலிருந்தே வழங்கப்பட்டு வந்திருக்கின்றன.

அறிவு விசாலமற்ற ஸமூகத்தில் அஃதாவது சாந்தம் அன்பு முதலிய குணங்களின் சிறப்பையும் உயர்வையும் அறியாத ஸமூகத்தில், தேகபலமும், முரட்டுத்தன்மையும் உடையவர்களும் உண்ணல் உடுத்தல் முதலிய மானிட லௌகீக நலத்திற்குரிய கார்யங்களைப் புரிகின்றவர்களுமே முதன்மை யடைவது இயல்பாயிருக்கின்றது. ஆகையால், இவ்விதத் தன்மைகள் பெண்பாலாரைவிட மிக அதிகமாகவுள்ளவர்களும், சாந்தம், பொறுமை முதலிய தன்மைகளில் அப்பெண்பாலரைவிட மிகக்குறைந்தவர்களுமாகிய ஆண் பாலார்கள் உயர்ந்த பகுதியாராகக் கருதப்பட்டு பெண்கள் தாழ்த்தப்பெற்று ஆயிரக்கணக்கான வர்ஷங்களாக மானிட ஸமூகம் நிகழ்ந்து வந்தி

ருக்கின்றது; என்றாலும், தனக்கியற்கையாயுள்ள அழகு, அன்பு, வசீகர சக்தி முதலிய தன்மைகளினால், உண்மையில் பெண்பாலார் ஸமூகத்தை நிகழ்த்தும் முக்ய பகுதியாராகவே யிருந்திருக்கின்றார்கள். துரைத்தனம், க்ருஷி, வர்த்தகம், முதலிய பல முக்ய லௌகிக கார்யங்களெல்லாம் விசேஷமாகப் புருஷர்களால் நிகழ்கின்றது என்பது உண்மையேயாயினும் அப்புருஷர்களது தன்மைகளெல்லாம் பெண்களால் அமைக்கப்படுகின்றன. முதன் முதல் ஒரு புருஷன் தாயின் காவலுக்குட்பட்டிருக்கின்றான். பிறகு, தந்தையின் ஆளுகையிலும் சற்று இருந்தபோதிலும் அவன் தாயின் நேரான ஆளுகைக்குட்பட்டிருப்பதற்குத்தான் மிகவும் விசேஷமாக ஸந்தர்ப்பங்களிருக்கின்றன. அன்றியும், புருஷன் தாய்க்குப்பின் தாரத்தின் அன்பிற்கும் பராமரிப்புக்கும் உட்பட்டிருக்கின்றான். ஆகையால், உலகம் நிகழ்கின்ற தன்மைக்கே பெண்கள்தான் காரணமாயிருக்கிறார்கள். என்றும் அவ்வாறே இருப்பார்கள்.

அன்பு இல்லையேல் ஸ்த்ரீகளில்லை; ஸ்த்ரீகளில்லையேல் உலகம் இல்லை. உலகமில்லையேல் எங்கும் சூன்யமாகவேயிருக்கும். இதையறிந்து தான் நம் பெரியோர்கள் ஸ்த்ரீகளைக் கௌரவித்து வந்தார்கள். ஸமூகத்தின் தன்மையை அமைக்கும் இயல்புடைய பெண்பாலர்களை நாமும் கௌரவிக்க வேண்டியதவச்யம். ஸுமார் நூறு வர்ஷங்களுக்கு முன் ஸ்த்ரீகள் அறிவிலும், விடா முயற்சியிலும் ஆராய்ச்சியிலும் புருஷர்களுக்கு ஸமானமானவர்களென்று யாராவது ஒருவர் சொன்னால் அவரை பைத்யக்காரரென்று ஜனங்கள் அழைக்கத் தொடங்குவார்கள். நம் இந்தியாவிலும் மற்றுமுள்ள தேசங்களிலும் ஸ்த்ரீகள் புருஷர்களுக்கு எந்த வழிகளிலேயும் பின்னடைந்தவர்களாகக் காணப்படவில்லை. அறிவிலும் நல்லொழுக்கத்திலும் மேற்பட்டவர்களே உயர்ந்தவர்கள். இவைகளில் குறைந்தவர்கள் ஆண்பாலார்களாயிருந்தாலும் பெண்பாலார்களாயிருந்தாலும் தாழ்ந்தவர்களே. புருஷர்கள் அறிவிலும் ஒழுக்கத்திலும் ஸ்த்ரீகளை விட உயர்ந்தவர்களென்று கருதி நடப்பது அறிவீனத்திலும் அறிவீனமாகும்.

தற்காலத்தில் நல்லொழுக்கத்தினால் குன்றியிருக்கும் தாழ்ந்த வகுப்பு ஸ்த்ரீகளில் சிலர்கூட அதிசயக்கத் தக்கவாறு மிகத்



திறமை வாய்ந்த பெண்மணிகளாய் விளங்குகிறார்கள். இயற்கையறிவு இருபாலார்க்கும் ஒன்று போலவேயிருக்கிறது. புருஷர்கள் தங்கள் வழக்கப் பழக்கங்களுக்கு ஏற்பட்ட கார்யங்களை வ்ருத்தி செய்து அதில் பலனடைகிறார்கள். அது போலவே, ஸ்த்ரீகள் தங்கள் பழக்க வழக்கங்களுக்குத் தகுந்தபடி கார்யங்களைச் செய்வது வழக்கமாகயிருக்கிறதே யொழிய வேறல்ல. ஸ்த்ரீகள் புருஷர்களுக்கு ஸமானமுள்ளவர்கள் என்பது ந்யாயத்திற்கும் ஸத்யத்திற்கும் பொருத்தமுள்ளது. ஆகையால், அது தெய்வீகமானதென்று சொல்லலாம். தற்போது அந்தத் தெய்வீக உணர்ச்சி நம் நாடெங்கும் பரவிவருகிறது. காலக்ரமத்தில் அந்த உணர்ச்சியால் ஸ்த்ரீ புருஷ ஸமத்வம் ஏற்படுமென்பது நிச்சயம். அதற்கு அன்னை ஸரஸ்வதி அருள்செய்வாளாக. நாம் அவளுடைய பொன்னடிகளைப் போற்றுவோமாக.

மங்களம்.

## THE ORIGIN OF THE EARTH

By

**Swami Vallinayakam.**

## பூகோளத்தின் உற்பத்தி.

பூகோளம், அதாவது நாம் வஸிக்கும் பூமி கோழிமுட்டை வடிவமாக உள்ளதென்பது அநேகமாக எல்லோர்க்கும் தெரிந்த விஷயமாகும். பூமியின் மேற்பாகமாகிய கடின பாகம் ஒரு முட்டையின் மேற்பாகத்திற் காணப்படும் தோடு அல்லது ஓடு எவ்வளவு லேசாக இருக்கின்றதோ, அவ்வளவு (பூமியின் பருமனைக் குறித்து) லேசாகத்தான் உள்ளதென்பது பலர்க்குத் தெரியாதவையாகும். மேலும், முட்டைக்குள் வெண் கருவும் மஞ்சட் கருவும் கலந்து ஜலபாகம் அதிகரித்திருப்பதுபோல், பூமிக்குள்ளும் உலோக முதலிய ஜட பதார்த்தங்கள் அங்கிருக்கும் அதி யுஷ்ணத்தினால் இளகி ஜலம்போல்தான் நிற்கிறதென்பதும் பலர்க்கும் தெரியாதவையாகும். பூமியின் மேற்புறமிருக்கும் கடினபாகம் அல்லது ஓட்டில் ஒரு பகுதி உஷ்ணத்தினால் ஆக்கப்பெற்றதும் மற்றொரு பகுதி ஜலத்தினால் ஒதுக்கப்பெற்றதும் ஆகும். பூகோளமானது ஆதியில்

ஸூர்யனைப்போல் ஜோதிமயமான ஓர் கோளமாக இருந்ததென்பது வான சாஸ்த்ரிகளுக்கு ப்ரத்யக்ஷமான விஷயம். ஓர் பகுதி ஜோதியணைக்கப் பெற்றதும், ஓட்டினால் மூடப்பெற்றதுமான ஒரு ஸூர்யனேயாகும் பூமி. அதன் ஆறின பகுதியாகிய தோல் மத்தியிலிருக்கும் சூளையை மறைத்துக் கொண்டிருக்கின்றதென்று ப்ரஞ்சுதேசத்துத் தத்வ ஞானியார் ஒருவர், சாஸ்த்ரிகள் இம்மாதிரி கண்டு பிடிப்பதற்கு வெகு காலத்திற்கு முன்னரே கூறியுள்ளார். அக்நி மயமாக வெளியினூடே தள்ளப்பெற்ற கோளத்தின் உஷ்ணம் நாளடைவில் ஆறிப்போகவே அதன் மேற்பாகம் இறுக்கிக்கட்டியாகித் தோடுபோலாயிற்று. அங்ஙனம் ஆறித் தோடான பாகத்தில் நாளுக்கு நாள் குளிர்ச்சி அதிகப்பட்டுவர, போதுமான குளிர்ச்சியானதும் அதிலிருந்து கங்குகரையற்ற நீராவிகள் கிளம்பி, பூமியின் நான்கு புறமும் சூழ்ந்து கொண்டு பொழிந்த மழை வெள்ளப்பெருக்காய், பள்ளமெல்லாம் வ்யாபித்தது. நமது பூகோளம் பிறந்த அக்காலத்து மின்னின மின்னலையும் இடித்த இடியையும், பொழிந்த மழையையும் யாரே வார்த்தைகளாற் சொல்ல வல்லார்! நாம இக்காலத்து அவற்றைப்பற்றி மனதினால் நினைக்கக்கூடியதும்கூட அவற்றினொரு லேசாலேசமேயாகும். பூமியின் மேல் முதல் முதல் உண்டான கடல்கள் மேலே கூறிய ப்ரகாரமாகும்.

இங்ஙனம் நெடுங்காலம் செல்ல, பூமியின் மேற்புறம் அதிகக் குளிர்ச்சியை நாளுக்கு நாள் அடைந்து வந்ததால் மேற்புறத்தின் கனம் அதிகப்படவும், குளிர்ச்சியின் ஆதிக்கத்தால் மேற்பாகம் இறுகுங்காலங்களில் அதனிடத்து வெடிப்புகள் உண்டாகவும் செய்தன. மலைகள் உண்டானது இங்ஙனமாகும். பூமியின் மேல் தோடு இலேசாக இருந்தால் பூமிக்குள் இருக்கும் உஷ்ணம் அதை லேசாக உடைத்துவிடும். பூமிமேற் காணும் ஸாதாரண மேடு பள்ளங்கள் அங்ஙனம் உண்டானவை யென்னலாம்; ஆனால், மேல் தோடு அதிகக் கனமுள்ள பொழுது உள்ளிருக்கும் உஷ்ணம் அதிக சக்தியோடு தாக்குவதால் பயங்கரமான அதிர்ச்சிகள் உண்டாகி க்ஷணப் பொழுதில் பூமியின் மேற்புறம், மலையாக மேகத்தையளாவி நிற்கும். இங்ஙனம் மலைகள் உற்பத்தியாகுங்கால், பூமி முழுவதுமே பயங்கரமான நடுக்கங்களும், அதிர்ச்சிகளும் உண்டாவதாலும், ஸமுத்ரம் இருக்குமிடங்களிலும் பூமி மட்டம் உயர்தலும் தாழ்தலும் கூடுமாதலாலும் ஜல ப்ரளயங்கள் ஸம்பவித்திருக்கின்றன. இங்ஙனம் பூமி மட்டம் பதினைந்து அல்லது பதினாறு முறை மேலே கிளம்பினதின் பயனாக ஆண்டிஸ் (Andes) மலைத்தொடர் உண்டாயிற்று. அம்மலைத்தொடர் மிக நீளமுடையதாகும். அது உத்தர த்ருவ முதல் தக்ஷிண த்ருவம் வரை நீண்டதென்னலாம். ஆண்டிஸ் மலைத்தொடரும் அத்துடன் உத்தர தக்ஷிண அமெரிக்காக் கண்டங்களும் ஸமுத்ரத்தின் அடியிலிருந்து மேலே கிளம்பிய காலத்து அங்கிருந்த ஜலம் பூர்வீக கண்டத்தை முழுகுவித்தது.



இங்ஙனம் அக்நியும் ஜலமும் ஒன்றுமாறி ஒன்று பூமியின் மேற்புறத்தை உருப்படுத்தின. பூமியின் மேற்புறத்து ஓர் காலத்திலிருந்த செடி வகைகளும் ப்ராணிவகைகளும் மற்றோர் காலத்தில் இல்லாதனவாகும். ஆயினும், ஒரு காலத்திலுள்ளவை அதற்கு முன்னிருந்தவைகளுக்கு ஸம்பந்தமுள்ளவைகளாகவும் பின் வருபவற்றிற்கு ஆரம்பமானவைகளாகவுமே காணப் பெறும். மேற்கூறிய ப்ரகாரம் பூமியின் மேற்புறம் உடைந்து நொறுங்கலும் மலைகள், கண்டங்கள் உற்பத்தியாதலும் ப்ரளயங்கள் உண்டாதலும் நியமன்றித் தாறுமாறாக நடப்பதாகக் கருதலாகாது.

நமது பூகோளம் உண்டாகி, இரண்டு கோடி வர்ஷத்திற்குக் குறையாமலிருக்குமென்பது பூகோள உறுப்பிலக்கண சாஸ்த்ரத்தில் வல்லுனர்களது அபிப்ராயம்.

ஸ்வாமி வள்ளிநாயகம்.

---

மனச்சுத்தமுடையவனே ஈச்வரனுக்கு பக்தன். தேகசுத்தியிருந்தால்தான் மனச்சுத்தியுண்டாகும். அப்போதுதான் ஈச்வரன் அவனை ஏற்றுக் கொள்வார்.—ஸ்ரீக்ருஷ்ணன்.

* * *

ஒரு மனிதனுக்கு கஷ்ட நஷ்டங்கள் ஆற்றில் வெள்ளப் பெருக்கெடுப்போல் வரும் அவைகளை ஸஹித்து ஸமாளிப்பவனே மனிதன்.—ஸோராஸ்டர்.

* * *

ஜனங்களின் நன்மை தீமைகளை அறியாது ஜனப்ரதிநிதியாயிருப்பவர்கள் உண்மையாக ஜன ப்ரதிநிதியாயிருக்க மாட்டார்கள்.—ஒரு தேசாபிமானி.

## TIRUVARUL

**By**

**Sankirithi.**

### திருவருள்.

1. பெண்களே! ஜகத் கர்த்தாவாகிய ஸர்வேச்வரன் எங்கும் வ்யாபித்திருக்கிறார். ஸகல ஜீவ ப்ராணிகளிலும் அவர் அமைதியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார் உலகத்தில் நடக்கிற ஸம்பவங்களைக் கவனித்து வருகிறார். அவரன்றி ஒரு அணுவும் அசையாது. இவ்வுண்மையை ஞாபகத்தில் வையுங்கள்.

2. நீங்கள் உங்கள் பெற்றோர்களை நேசியுங்கள். ஏனென்றால் அவர்களை நேசிப்பதனால் கடவுளை நேசிப்பதாகும். உங்கள் பெற்றோர்களுக்குச் செய்கிற உபகாரம் ஈச்வரனுக்குச் செய்கிறதாகும்.

3. வரப்போகும் ஸந்ததியார்களின் தாய்மார்களே! உங்கள் பொறுப்பை நினைத்து ஊஹியுங்கள். நீங்கள் படித்த படிப்பை உங்கள் ஸஹோதரிகளுக்குப் போதியுங்கள், போதனை செய்யும்போது அவைகள் அன்போடு கூடினவைகளாகவிருக்கட்டும்.

4. பெண்களுக்கு அன்பே ப்ரதானம். அன்பே ஞானம்; அன்பு இல்லாமற்போனால் ஞானம் இல்லை. இவ்வுலகம் அன்பு என்னும் கெட்டிச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறது. அன்பு இல்லாமற் போனால் உலகம் இல்லை. உலகமில்லாமற் போனால் கடவுளில்லை. ஆக, அன்பு இல்லையாயின் கடவுளில்லை. கடைசியாக அன்பே கடவுள்.

5. அன்பு வேறு, கடவுள் வேறு என்பார் அறிவில்லார். அன்பே கடவுள் என்று யாரும் அறியமாட்டார்கள். அன்பு தான் கடவுள் என்று சொல்வதற்குக் கொஞ்சம் நல்லபடிப்பும் ஆராய்ச்சியும் அவச்யம்.

கடவுளிடத்தில் நீங்கள் அன்புடையவர்களாயிருந்தால் உங்களுக்கு அவரின் அருள் மிக எளிதாகக்கிடைக்கும். பரம க்ருபாநிதியான பரமேச்வரனின் அருள் கிடைக்காமல் இப்பூவுலகில் முக்தி பெற்றவர்கள் இல்லை. தேவாதி தேவர்களும், மன்னாதி மன்னர்களும், ப்ரபுக்களும், பணக்காரர்களும் மற்றும் யாவர்களும் அவர் அருளைப் பெற்று முக்தியடைந்த சரித்ரங்களைப் படித்து இருக்கிறோம். நாம் தினஸரி வாழ்க்கையைக் கழிப்பதே அவரின் அருளினாலென்று உறுதியாகத் தெரிந்து கொள்ளுங்கள்.

**ஸங்க்ருதி.**

## MARRIAGE CUSTOMS IN FOREIGN COUNTRIES

**By**

**Pandit V. Subramania Aiyar.**

### அந்ய தேச விவாக முறைகள்.

ருஷ்யாவில் ஒரு அதிசயமான வழக்கம் விவாககாலத்தில் அநுஷ்டானத்திலிருந்து வருகிறது. க்ராமாந்தரக் கல்யாணங்களில் மணப் பெண்கள் கல்யாணத்தின் உறுதிப்பாட்டிற்குக்கோயிலுக்குப் போய்வந்ததும் அவர்கள் தங்களுடைய அழகிய சுருட்டைமயிரின் பாகங்களிற் சிறிது துண்டித்து வைக்கிறார்கள். அத்தேயத்தினர், பொன்மயமான வளைவான மயிரின்பாகம் துண்டிக்கப்பட்டதற்காக ஒரு துக்கப் பாட்டைப்பாடுகிறார்கள். கல்யாண காலத்தில் ஆசார்யர் கோயிலில் ஒரு ரொட்டியை ஓதிக் கொடுக்கிறார். அவர்கள் இரு கைகளையும் சேர்த்து, ஒருமித்து, எப்போதும் ஸுகமாய் ஜீவிக்கவும், வீட்டைச்சேர்ந்த கார்யங்களை ஒழுங்காய் கவனிக்கவும் உபதேசிக்கிறார். கல்யாணம் பண்ணிக்கொண்ட ஸுகமான காலங்களிலும் துக்கம் ஸம்பவிப்பது ஸஹஜம். துக்கம் கலவாத ஸந்தோஷமில்லையென்றதை ஸூசிப்பிக்கும்படியான மாலையொன்றினையும், அவர் அத்தம்பதிகளுக்கு அணிவிக்கிறார். கடைசியாக ஒரு நல்ல ஆசீர்வாதம் செய்கிறார். பிறகு, அத்தம்பதிகளின் க்ஷேமத்தின்பொருட்டு, ஒரு அழகிய மரப்பாத்ரத்திலிருந்து, ஆசார்யர், சாராயம் அருந்துகிறார். இம்மாதிரியே தம்பதிகளும் அருந்தியபின் கணவன், தன் பாத்ரத்தைத் தன் காலின்கீழ்ப் போட்டு மிதித்து, "எங்களிருவருள்ளும் துன்பத்தையும், மனஸ்தாபத்தையும் வருவிப்பவன் இக்கதியாகுக" என்று சொல்லி உடைக்கிறான். இப்படிக் கல்யாணம் முடிந்து, தம்பதிகள் வீட்டுக்குப் போனதும், கணவன், தன் மனைவியைத் தன்காற் (Boots) செருப்பைக் கையில் எடுக்கச் சொல்லி, "ஒரு கையிற் சாட்டையும், மற்றொரு கையிற் பணமும் இருக்கின்றது" என்று சொல்லுகிறான். இதிலிருந்து அவன் மனைவி "அணைக்க ஒருகை, அடிக்க ஒருகையுள்ளது;" ஆதலின், ஜாக்ரதையாயிருந்து குடித்தனம் செய்யவேண்டியது என்று அறிந்துகொள்ளவேண்டும்போலும். இம்மாதிரியாய் ருஷ்யா தேசத்தின் வழக்கம் இருக்கின்றது.

ஸ்வீடன் :—இத்தேசத்துக் கல்யாணவழக்கம் ஒருவிதமானது மணமகள், மணமகனின் முன்னால், தன் வலது காலைக் கோயிலின் பலிபீடத்தின்மீது வைத்தால், சீக்ரத்தில் அவள் உன்னத ஸ்திதிக்கு வருவாள் என்பது அர்த்தமாகும். கல்யாண தினத்தன்று, கணவன் பார்க்குமுன்னரே அவனை மணமகள் முதலிற் பார்த்துவிட்டால், கணவனின் அத்யந்த ப்ரியத்திற்குப் பாத்ரமாவாள் என்பதும், இந்நாட்டாரின் கொள்கை.

யூததேசத்து (Jewish Custom) வழக்கம், தம்பதிகள் இருவரும் கல்யாண தினத்தன்று ஒரே பாத்ரத்திற் பானமருந்துவதும், அதனை உடனே, உடைப்பதுமாம். அப்படி உடைப்பதுவே இந்த உலகின் ஸுக ஸௌக்யங்களெல்லாம், நிலையற்றன, அழிந்துவிடத் தக்கன என்பதைக் காட்டுமாம்.

கோரியா, ஜப்பான் இத்தேசங்களிற் பெண்கள், கல்யாணமானவர்கள், ஆகாதவர்கள், என்று அவர்கள் தலைப்பின்னலினின்று அறியலாம். இந்தியாபோன்ற கீழ் நாடுகளிற் பெண்கள் உடையினின்றே இதனை அறியலாம். இளம் வயதுள்ள கல்யாணமாகாத வாலிபன் கோரியாவில் வெறுந் தலையுடன் முதுகின் பின்னால் ஒரு சுருட்டை மயிர் தொங்கு மாறுபோவான். அவன் கல்யாணம் பண்ணிக்கொண்டதும், தலைமயிர் நன்றாகக் கட்டப்பெற்றுத் தலையின் மீதேறும். தங்கள் கறுப்பு மயிரின் அழகும் பருமனும் குறைந்து போகாவண்ணம் பார்த்துக்கொள்வதிற் கோரியா தேசத்தவர், இந்து தேசத்தவர் முதலியோர் ஜாக்ரதையுள்ளவர்கள். இந்துதேசப் பெண்கள் மயிர் நிறைய இருக்கிறது என்று காட்டுவதற்காகப் பொய் மயிர்களை போன்ற சவரியை உபயோகப் படுத்துவதுண்டு. அதுபோலவே கோரியப் பெண்கள் பொய் மயிர்களை உபயோகப்படுத்திக் கட்டுகள் கட்டித் தலைமேல் ஊசி சொருகி ஜாக்ரதையாய் வைத்துக்கொள்வதுண்டு. கோரியாவில் ஏழைகள், தங்கள் தலைமயிர்களைத் தலைமுண்டாசு கட்டிக்கொள்வதுபோல், தலைமீதுசுருட்டி வைத்துக்கொள்வதுமுண்டு.

வீ. சுப்பிரமணிய ஐயர்.

---

தன் ஸ்வப்ரயோஜனத்தைக் கருதி பொது ஜனங்களுக்காக உழைக்கிறேன் என்று முன் வருகிறவன் பொது ஜனங்களால் மதிக்கப்பட மாட்டான். இது உலக அனுபவம்.

# ONESIDED HEADACHE

By

**A Medical Student.**

## ஒருபக்கத் தலைவலி.

மானிட சரீரமானது பலவகை நுட்பமான வேலைகளை இயற்றும் பல கருவிகளினால் அமைக்கப்பெற்றுள்ள ஓர் யந்த்ரம். மணியைக் காட்டும் கடிகார யந்த்ரத்தில் அது வேலை செய்ய எவ்வளவு சிறிய கருவிகளும் சக்கரங்களுமிருக்கின்றன பாருங்கள்! ஏதாவதொன்றுக்குப் பிசகு நேரிட்டு விட்டால் கடிகாரம் வேலை செய்யாமலிருக்கிறது. அல்லது மணியை ஸரியாய்க் காட்டுவதில்லை. இதற்குக் காரணத்தை ஆராய்ந்தறிந்து அக்கருவியைச் செம்மைப் படுத்துவோமானால், அது தன் தொழிலை ஸரிவரச் செய்கிறது. கடிகாரம் கேவலம் மனிதனால் செய்யப் பெற்றது. மனிதனுடைய புத்தி கோசரம் ஸாதாரணமானது. ஸர்வஞ்ஞரால் நிர்மாணிக்கப்பட்ட மானிட சரீர அமைப்பில் உபயோகமாயிருக்கும் புத்தி கோசரம் அபாரமானது. புத்தி சாதுர்யத்துக்கேற்ற வேலைத்திறனு மிருக்குமன்றோ ?

மானிட சரீரம் எவ்வளவு காலம் ஜாக்ரதையுடன் போற்றப்பட்டுக் காப்பாற்றப்படுகிறதோ, அவ்வளவு காலம் வாழ்ந்திருக்கும். கடிகாரம் சிலர் கவன மிகுதியாலும் ச்ரத்தையாலும் அநேக வருஷங்கள் பழுது ஒன்றுமேயில்லாமலிருப்பதுபோலாம். கடிகாரத்திலுண்டாகும் கோளாறுகளுக்குக் கடிகாரச் சொந்தக்காரர் உத்தரவாதி. அதுபோலவே, மானிடசரீரத்துக் கேற்படும் கோளாறுகளுக்கு அவரவர்கள் உத்தரவாதி. கடிகார அமைப்பும் வேலையும் தெரிந்திருந்தால், பிசகுகள் நேரிடாதபடி அதை பார்த்துக்கொள்ள ஸாத்யமாதல்போல, சரீர அமைப்பைப்பற்றிய ஞானமுள்ள ஒருவன் அதிக காலம் ஸுக வாழ்வு வாழக்கூடும். மானிடராயுள்ளோர் அனைவருக்கும் தேகதத்வ சாஸ்த்ர ஞானம் அத்யாவச்யமானது. இந்த ஞானக் குறைவாலேயே மானிடர் பலவித நோய்க்குள்ளாய் வாழ்க்கையை மிக வருத்தத்துடன் கழிக்கிறார்கள்.

தலைவலி, தலைஇடி, தலைக்குத்தல் முதலியன மானிடருக்குண்டாவது ஸஹஜம். மழைக்கு இடி உற்பாதமாயிருப்பது போல நோய்

க்கு உற்பாதமாயுமிருக்கும். தலைவலிகள் பலவிதம். அவற்றுள் அஜீர்ணத் தலைவலிதான் மிகவும் ஸஹஜம். சிலருக்கு நரம்புத் தலைவலி உபத்ரவமுண்டு. வாழ்க்கைக்கு வருங் கேடெல்லாம் வாயாலேதான். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாகும். இதையறிந்தும் பலர் வயிறு புடைக்கத் தின்றுவிட்டுப் பிறகு கஷ்டப்படுகிறார்கள். சரீரத்திலுள்ள கருவிகளுக்கெல்லாம் க்ரமமான வேலை நியமமாய்க் கொடுத்தால் மட்டுமே, அவைகள் ஸரிவரச் செய்து முடிக்கும். செய்ய இயலாதவளவு கொடுத்தால் அக்கருவியின் வேலை கெடுவதுடன் அதைச் சார்ந்திருக்கும் மற்றக் கருவிகளுடைய வேலைகளும் கெட்டுப் போகும். உணவு ஜீரணிக்கும் விஷயத்தில் இரப்பையும் குடலும் மிகுதியும் வேலை செய்கின்றன. இவைகள் தங்களால் கூடியளவு செய்துவிடுகின்றன. அதிக உணவு உட்கொள்வதால் ஜீர்ணமானது போக மிகுதியுள்ளது அழுகிக் கெட்டுப்போய் பலவித கோளாறுகளும் உண்டாகின்றன. கோளாறுகளுள் தலைவலியொன்று. தலையில் எரிச்சலையும் ஸஹிக்கமுடியாத முட்டாள் வலியையும் உண்டுபண்ணும். வாந்தி, மயக்கம் ஜாஸ்தியாயிருக்கும். இதற்குத்தக்க சிகித்ஸை ஒரு முறைபேதிக்கு வாங்கிக்கொள்வதே மேலானது. பேதிக்குக் கண்ட மாத்ரைகளைச் சாப்பிடுவதைக்காட்டிலும் விளக்கெண்ணெய் சாப்பிடுவது உத்தமம்.

நரம்புத் தலைவலி அல்லது ஒருபக்கத்தலைவலி ஸர்வஸாதாரணமாய் இளைத்து வீட்டோடு உட்கார்ந்து ஒரு வேலையும் செய்யாமல் பொழுதுபோக்குகிறவர்களுக்கும், பலஹீனமான ஸ்த்ரீகளுக்கு பகிஷ்டைகாலத்திலும் வருவதுண்டு. இதனால் அடிக்கடி பீடிக்கப்பட்டிருக்கிறவர்கள் வெளுத்தும், தேகம் குன்றியும், பலஹீனமாயும், மூளை கலங்கியுமிருப்பார்கள். இது தலையின் ஒரு பக்கத்தில் தான் வாஸம் செய்யும். சில ஸமயத்தில் பரவியுமிருக்கும். வலிவருவதற்கு, முன்னாடியாவது வலியோடாவது பார்வை கொஞ்சம் மங்கலாகவும் கண்முன் பூச்சி பறக்கிறது போலும் தோன்றும். ஸ்த்ரீகளுக்குப் பஹிஷ்டை காலத்தில் வரும் ஒருபக்கத்தலைவலிக்கு 'மெகிரிமஸ்' என்று சொல்லுவார்கள். கர்ப்பவாயுவுள்ள பெண்களுக்கு அடிக்கடி இவ்வலி வரும். வந்தால் ஒரு பக்கமாக இடிக்கிற இடி ஸஹிக்க வொண்ணாது. ஊசிபோட்டுக் குத்துகிறதுபோல வலிக்கும். இது சொத்தைப்பல்லி



னாலும் உண்டாகும். காலையில் படுக்கையைவிட்டு எழுந்திருந்த பிறகு அரைமணி வரையில் வலி இருக்கும். ஸூர்ய உஷ்ணம் அதிகமாக அதிகமாக வலி நின்றுவிடும். சாதம் வேண்டியிராது. தலைவலியினால் முகம் வெளுத்து கண்ணிலிருக்கும் பாபா பாதாளம் போயிருக்கும். எப்போதும் தேக சுடும்.

இதனால் வருந்தும் ஜனங்களுக்குத் தனியாயிருக்க மனம்தோன்றும். இரப்பை குடல் இவைகளில் மாறுதல் இல்லாமலிருந்தாலும் கூட ஒற்றைத் தலைவலி உண்டாகும். அது அகாலத்தில் போஜனம் செய்வதாலும் வீட்டோடு சோம்பி வேலையில்லாமல் உட்கார்ந்திருப்பதாலும் தேகப்பயிற்சி இல்லாதிருப்பதாலும் உண்டாகிறது. ஒருத் தலைவலியிலிருந்து தப்பிக்கொள்கிறதற்கு ஒரு வழி இருக்கிறது. அதாவது அவரவர்கள் செய்து வரும் பழக்கத்தை மாற்றவேண்டுமேயல்லாது, வேறு எவ்விதத்தினாலுமாகாது. ஸதா காலம் காபி, டீ முதலிய பானங்களில் மூழ்கியிருப்பவர்கள் பாலையாவது அல்லது சோடாவையாவது சாப்பிடுதல் நலம்.

மனக் கவலை பிடித்துத் திரிகிறவர்கள் அநாவச்யமான கவலையை ஒழிக்க வேண்டும். இன்பத்தில் குடிகொண்டிருப்பவர்கள் அதை விட்டு விலகியிருக்கவேண்டும். சோம்பித் திரிகிறவர்களும் உட்கார்ந்தே இருக்கிறவர்களும் வேலையில் கவனம் செலுத்தி வர வேண்டும். சுருட்டுப் பிடிக்கிறவர்கள் சுருட்டுப் பழக்கத்தைவிட்டுத் தொலைக்கவேண்டும்; அல்லது ஜாஸ்தி உபயோகிப்பதை மட்டுப்படுத்தவேண்டும். புலால் உண்ணுதலை மறுத்துக் காய்கறி சாப்பாடு செய்யவேண்டும். வெற்றிலையையே போடுகிறவர்கள் அதை நிறுத்த வேண்டும். இப்படிச் செய்து வந்தால் சீக்ரத்தில் ஒற்றைத்தலைவலியின்று ஸுகமாயிருக்கக் காணலாம்.

ஒரு வைத்ய ஸ்த்ரீ வித்யார்த்தி.

---

ஒரு ஸ்த்ரீ ஸமாஜத்தை நிர்வஹித்து வருகிற ஒரு மாது சிரோன்மணி தன் ஸமாஜத்தில் சேரும் மெம்பர்களின் கருத்துக்களை முதன் முதலாய் உணர்ந்து கொள்ளவேண்டும்.

# AN ODE ON PEACE

**By**

**Mr. Sivasubramania Ayyar.**

## ஸமாதானப்பத்து.

நிகழும் ஆகஸ்டு மீ 4உ நீலகிரி ஜில்லா குன்னூரிலுள்ள எல்லா தேவாலயங்களிலும் அபிஷேகமும் அர்ச்சனையும் நடந்தேறின. பொது ஜனங்களெல்லோரும் கூடி இவ்விஷயத்தில் அதிக ச்ரத்தையெடுத்துக் கொண்டார்கள். அவ்வூர் ஸேனாபதி தேவாலயத்தில் ஸமாதானப்பத்து என்னும் பத்துப் பாக்கள் சிவத்தியநாகந்தனால் படிக்கப் பெற்றது. அச்சமயம் அவ்வூர் ஸ்டேஷனரி ஸப்மாஜிஸ்ட்ரேட்டான ம-ா-ா-ஸ்ரீ S. R. க்ருஷ்ணய்யங்கார் அவர்கள் B. A. அக்ராஸனம் வகித்தார். அப்பத்துப் பாக்கள்பின்வருமாறு :—

பாரதத்தைச் சிறிதாக்கிப் பன்மடங்கு பெரிதோங்கிப் பரிந்து வீறிப்
பாரதத்துத் தலைகொடுத்துப் பார்பரந்த யுத்தமதாம் பண்பில் கோரம்
கேரிதத்துச் சீரடைந்து செம்மையுற நேர்ந்துவது மோரா தொன்றோ ?
எரித்தி னெவ்வுலகு மியைத்தளிக்கு மெம்பெருமா னென்னுமொன்றே! (1)

அவனிபடு துயர்மொழிகோ ; வரசர்படு துயர்மொழிகோ ; வன்றி ஞாலத்
துவமையிலாத் துயர்க்கடலி லாழுமனை மகக்கலக்க முரைக்கோ ; சாலத்
தவமுஞற்றார் கைத்தெனப்போம் பணச்சேதத் தொழிலினையுஞ் சாற்ற வோநீ
சுவைபெறவிக் கொடும்போரை மாற்றுவதே யருளாகுந் தூய தேவே. (2)

ஊழிக்கா லத்தருகும் பிரளயத்தி லுயிர்களெலா மொன்றிப் பொன்றிப்
பாழவதிக் குள்ளடைந்து பரந்தபெரு வெளியாகும் பண்பு சான்ற
தாழிக்கு ளமைவதெனச் சீவரெலா முடலழிந்து சார்கின் றாரிவ்
வேழைக்கே பொறுக்கவிலை ; யுனதுமனங் கல்லோவின் றியம்பு வாயே. (3)

வனம்புகுந்த தீயக்காடழித்தபினர்த் தானழிதல் மான, மான
வினம்புகுந்து மாந்தர்மலர் கோடியள வழிகின்றா ; ரினியிவ் வீதம்
முனம்புகுந்த வீராவே சத்தினாற் பலர்மடிந்து மாண்டா லன்னோ
ரினம்படப்போர் துயரதனை யார்பொறுப்பா ரிவ்வுலகி லேத்துவாயே. (4)



அழிகாலத் தெறும்பினைத்துக் கிறகுமுளைத் திட்டதென, வறிஞர் சாற்றும்
வழிஞானக் கலைமலிந்து பெரும்பூத மூன்றினிலும் வன்மைகாட்டி
யிழிவேறும் பலகருவிக் கொலைப்படைகள் மாந்தருயிர்க் கிறுதி கூட்டுந்
தொழிலேறி மலிந்தனவா ; லாவரண நின்மாயை தோற்றிடாதோ ? (5)

* வலியெய்திப் பொருளிடங்காலம் வேண்டிப் பொருகின்றார் மலிந்தோர் [பக்கல் ;
நலிவெய்தித் தீமைபல வும்பொறுத்த நாசமுற்று நண்ணி யெண்ணுக்
கலியெய்தி நிற்கின்றார் சிற்றரசோர் பக்கல் ; கண்ணி யத்தோ
டலைபூசிர் செங்கோன்மை யாதியபல் குணங்கேட்டை யடையா வண்ணம்(6)

* உயிரிழந்தும் மானமதை யோம்புவதே யொருதலையென் றுருப்பட் [டோர்சார்
மயிரிழந்த பினருயிரை மதிக்காத கவரிமா மான நின்று
செயிர்தருபோர் வீரவலி யடக்கவெனச் சேர்ந்துயிரைத் தேய்க்கின் றாரை
யுயிர்நிலைகட் குயிரான வொருபொருளே துயர்நீக்கி யுயர்த்து வாயே. (7)

தாங்காத பேரிடரீண் டொருவனுக்கு வந்ததெனிற் சழக்கென் றோடி
நீங்காத பேரன்போ டதைமாற்ற விரைகுவா யுனக்கிவ் வேளைத்
தூங்காத தூக்கமெலா முற்றதோ தொழின்மறந்து சோர்ந்திட்டாயோ
வாங்காவி லாவடிமை மாற்றமுன தொண்செவிக்கண் மருவிடாதே. (8)

கடல்சூழ்ந்த புவனமதிற் கண்ணியரும் புண்ணியருங் கலந்து நின்சீ
ரடல்சூழ்ந்த பாதமதை யடிக்கடியர்ச் சனைபூசை யாற்றிக் கூறு
மிடல்சூழ்ந்த தோத்திரமுங் குறைநீக்கென் றுரைகூற்றும் விழைந்துகேட்டுப்
படிசூழ்ந்த சாந்தமது படிதருகென் றுருகுவதும் பார்த்திடாயே. (9)

இப்பொழுதே போர்முடிக்க ; விவ்வுலகிற் சுகந்தருக ; வின்றே யாரு
மொப்புரவோ டொருமித்து வாழும்வகை யுஞற்றுக ; விவ்வழக்கம் யாவு
மப்புறத்தே யேகுக ; பல் லுயிர்நிலையு மமைதிபெற வமைந்துநிற்க ;
செப்பருநின் றிருவடியுஞ் சயம்பெறுக ; சேமமெய்திச் சிறக்க தேவே ! (10)

ஆனந்தாச்ரமம்,
குன்னூர். } சிவஸுப்ரமணிய அய்யர்.

---

இந்த மஹா யுத்தம் இந்திய ஸ்த்ரீ புருஷர்களுக்கு அநேக பாடங்களைக் கற்பித்துக் கொடுத்திருக்கிறது. அவைகளை நம் வாழ்க்கையில் அனுஷ்டிப்பது நமது கடமை :—அறிந்தவன்.

# JATAYU & RAVANA

**By**

**S. Kalyani Ammal**

## ஜடாயுவும் ராவணனும்.

பக்ஷிகளில் கழுகை நம்மவர் நிக்ருஷ்டமாய்க் கூறுவர். கருடன், கழுகு, ஆந்தை முதலிய பக்ஷிகள் நமது வீட்டில் உட்கார்ந்தாலேயே, அதற்காகச் சாந்திகள் செய்யச்சொல்லி ஹிந்து சாஸ்த்ரம் விதித்திருக்கிறது. கருடன் கத்துவதைச் சகுனமாக எடுத்திருக்கிறார்கள். மற்றவைகளின் தரிசனமே உதவாது. உயிருடன் கழுகு கொத்துவதையும், ஆந்தை மேல்பறப்பதையும் நம்மவர் அசுப சகுனமாகச் சொல்லி அவமதிப்பர்.

ஆனால், கருடன், கழுகு, ஆந்தை முதலிய பக்ஷிகள் நம் வ்யவஸாய உலகத்திற்கு எவ்வளவோ நன்மை செய்கின்றன. இவற்றின் எச்சங்கள் நிலத்திற்கு எவ்வளவோ உரத்தை யளிக்கின்றன. இவை பயிர்களுக்குக் கெடுதலான அநேக பூச்சி புழுக்களைத் தின்று நன்மை யளிக்கின்றன. கழுகை வாயுமண்டலத்தோட்டி என்று, அஃது ஆஹாயத்தைச் சுத்தமாக்குவதை யுத்தேசித்துக் கூறுவதுண்டு. ஈச்வரனால் ச்ருஷ்டி செய்யப்பெற்ற ஒவ்வொரு பக்ஷியோ புழுவோ, உலகத்துயிர் அறியமுடியாத நன்மையைச் செய்வதற்கென்றே ச்ருஷ்டிக்கப் பெற்றிருக்கிறது. இதை நம்மவர் யாவரும் உணர்ந்தால் அவற்றிற்கு எவரும் தீங்கு உண்டாக்கி, ஈச்வரனின் ச்ருஷ்டிக்குப் பழுது உண்டாக்கி அவனது அப்பிரியத்தை யடையார்கள்.

ஜடாயு என்றால் தீர்க்கமான ஆயுளை யுடையதென்று பொருள்படுகிறது. நீண்டகாலம் வசித்ததனால் க்ருத்ர ராஜாவாகிய ஜடாயு அப்பெயர்பெற்றதென்பர். இப்பக்ஷி ராமாயண கதாநாயகனாகிய ஸ்ரீராமனின் தந்தையான தசரதமன்னன் வஸித்த காலவளவுக்கு மேல் வஸித்ததென்பர். இப்பக்ஷி சூர்யபகவானின் சாரதியான அருணனின் ஸஹோதரனெனக் கூறுவர். இப்பட்சிக்கும் தசரதனுக்கும் இணைபிரியாச் சிநேகமுண்டு. இது மனிதனைப்போல் பேசி இன்ப துன்பங்களை யனுபவித்துப் பிறருக்கு அநுகூலம் பண்ணும் உயர்ந்த ஸ்வபாவமுடையதென்று, ராமாயணத்தில் உயர்த்திக் கூறியதிலிருந்தே, ராமாயண காலத்தார் கழுகுபோன்ற பக்ஷி



களை எவ்வளவு அன்புடன் போற்றிவந்தார்களென்பது நன்கு விளங்கும்.

இக்கழுகு மலைபோன்ற ஆக்ருதியுடையது. இதன் தண்டங்கள் என்ற குறடுபோன்ற மூக்கு எப்படிப்பட்ட மலைச்சிகரங்களையும் சில்லுச் சில்லாய்ப் பேர்த்துத் தூளாக்கும் வன்மையுடையது. கருடன் போன்று தனது கூரிய அலகுகளினால் எப்படிப்பட்ட மலைகளையும் அசைத்துக் குலைக்கவல்லது. இப்படிப்பட்ட வல்லமையுள்ள கழுகரசனான ஜடாயுவும் ஸ்ரீராமனுடன் ஸ்நேகமாகி அவருக்குத் துணையாய்ப் பஞ்சவடியில் நிக்ரோதம் என்னும் ஆலமரத்து நுனியில் ஸ்ரீராமனின் பர்ணசாலைக்கருகில் வஸித்து வந்தது.

மாயமானாகிய மாரீசன் பின்னே ஸ்ரீராமர் போனபின்னர், ஹா! ஸீதே! ஹா! லக்ஷ்மணா! வென்று போட்ட குரலால், லக்ஷ்மணனும் ஸீதையால் ஸ்ரீராமனைத் தேட அனுப்பப்பெற்ற ஸமயத்தில், காஷாய கமண்டலத்துடன் ஸந்யாசி வேடம்பூண்ட ராவணன், பர்ணசாலையில் நுழைந்து ஸீதையை மயிர்பிடித்துத் தூக்கித் தேர்த்தட்டில் வைத்து ஆஹாயமார்க்கம் சென்றனன். அப்போது அரை நித்ரையாய் கண் மூடினதும் மூடாததுமாய்த் தலையை கீழே நட்டுக்கொண்டிருந்த க்ருத்ர ராஜனாகிய ஜடாயுவுக்கு ஸீதையின் அழுகைக்குரல் காதில் பட்டது. இது கேட்ட கழுகரசன் ஓடோடியும் வந்து பல வார்த்தைகள் ஹிதமாயும் கொடூரமாயும் சொல்லி அஃது ராவணனின் ஓட்டத்தைத் தடுத்தது. ஸ்ரீராம கைங்கர்யத்தில் தன் ப்ராணனையும் கொடுக்க அக்கழுகு யத்தனித்தது. தன்னுடன் யுத்தஞ்செய்து ஜயித்தபிறகே ஸீதையை எடுத்துப்போமாறு ராவணனைப் பார்த்து திக்காரமான வார்த்தைகள் சொல்லி மறித்தது. இதை நோக்கி ராவணனும் எதிர்த்தான். உடனே கழுகரசனும் ராவணன் கன்னத்தில் தன் இறகுகளால் பளீர், பளீர், என்று அறைந்தது; அவனுடம்பெல்லாம் தன் கூரிய மூக்கால் குத்தி ரணமாக்கி ரத்தப்ராவாகமாக்கி அவனுடைய தேகத்தில் அதிகமான வேதனையை உண்டுபண்ணிற்று. அவனுடைய தேர்க்குதிரைகளத்தனையும் கொத்திக் கொன்று வீழ்த்திற்று. அவனுடைய ஸாரதியையும் கொன்றது. ராவணன் பக்கலில் நின்று வெண்சாமரை

வீசின அரக்கர் அனைவரையும் சாகவடித்தது. அவன் ஏறின தேரையும் மூக்கினாலேயும் தன்னிறகுகளாலேயும் அடித்துக் கண்ட துண்டங்களாக்கி, அவனை ரதஹீனனாய்ப் பூமியில் நிற்கச்செய்தது.

அவனது இடது பக்கத்துக் கரங்கள் பத்தினையும், தலைகள் பத்தினையும் தன் மூக்கினாலேயே கொத்திக் கொத்திக் கிளைகள் கழிப்பதுபோல் கழித்தெறிந்தது. திக்கஜங்கள், தேவர்கள் முதலிய ஸகலருடன் யுத்தஞ்செய்து ப்ரக்யாதிபெற்ற ராவணன், இப்பக்ஷியுடன் நேர்ந்த யுத்தத்தில் அடைந்த ச்ரமும் நடுக்கமும் மீறி எந்த யுத்தத்திலும் மடைந்ததில்லை யென்றால், இப்பக்ஷி செய்த யுத்தாதிசயத்தைப்பற்றி வேறு வர்ணிக்க வேண்டுவதில்லை. ஆயிரம் வர்ஷத்துக்கோர் சிரம்வீதம் பதினாயிரம் வர்ஷத் தவத்தில் பத்துத் தலையையும் அறுத்து அக்னியில் ஹோமம்செய்த மஹிமையினால், அறுத்த தேஹத்தின் அங்கங்கள் தக்ஷணமே முளைக்கப்பெறும் வரத்தை ப்ரம்மதேவனிடம் பெற்றதனால், கழுகுக்குத் தப்பி ராவணன் பிழைத்து, மீண்டும் தன்னுறையிலிருந்த வாளால் ஜடாயுவின் இறகுகளையும் கால்களையும் வெட்டிவிட்டுச் சீதையுடன் லங்காநகரம் சென்றான்.

ஸ்ரீராமர் தம் கண்மணியைப் பிரிந்து பரிதபித்தார். ராவணேச்வரன் செய்த கார்யம் அதர்மம். அவன் வல்லமையையும் பராக்ரமத்தையும் க்ரமமான மார்க்கத்தில் செலவு செய்து முக்தி பெறாமல் அக்ரமும் அதர்மமுமான வழியில் ப்ரயோகித்தான். கேவலம் பெண்ணாசையால் ந்யாயம், க்ரமம், ஒழுங்கு மீறி நடந்தான். அவன் செயல் ஸ்ரீராமனுக்கு மட்டும்செய்த அபகாரமன்று. பொதுவானது. அதர்மவழியென்று அவன் வற்புறுத்தப்பட்டும் தண்டிக்கப்பட்டும் புத்திக்குக் கொண்டுவரப் படாவிட்டால் அதேமாதிரியான பலபல அபகாரங்களை மேன்மேலும் செய்துகொண்டு போவான். ஸ்ரீராமனுக்குச் செய்யப்பட்ட அபஹாரம் நாளை யாருக்குமே செய்யப் படலாமல்லவா? ஆகையால், சீதையை மீட்பது ப்ரத்யேக கைங்கரியமல்ல; பொதுக்கைங்கரியம். இதைத்தான் தர்மகைங்கரிய மென்றும் சொல்வார்கள். அதர்மம், அநீதி, அக்ரமம் இவைகள் ஒழியவும் தர்மம், நீதி, க்ரமம் ஸ்தாபிதமாகவும் உலகுள்ளவரை பாடுபட ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.



கழுகுராஜன் தீர்க்கபுத்திமானாகையால் ராவணன் செய்த அதர்மத்தைப் பொறுக்க மாட்டாமல் அவனோடு சண்டை யிட்டு இறந்தான். ஜடாயுவும் ஸ்வயநலமே பெரிதாகக் கொண்டிருந்தானேயானால் ராவணன் செய்த அதர்மத்துக்கு உடந்தையாகவு மிருந்திருப்பான். பொதுக்கார்யம் பெரிது; அதைச் செய்வதே எந்தப் பிறப்பாயிருந்தாலும் அப்பிறப்பின் கடமையென்றுணர்ந்தே அகார்யம் செய்ததை வெறுத்தான். பொதுக்கார்யம் செய்வதே ஈச்வரனுக்கு த்ருப்தி. அவருடைய அன்பிக்கு பொதுக்கார்யம் செய்கிறவர்கள் பாத்ரமாவார்கள் என்பதைத் தெளிந்தான். இதனால், செத்த பிராணிகளின் மாம்ஸத்தைக் கொத்தித்தின்பதில் ப்ரியமிக்க ஜடாயுபோன்ற பக்ஷிகள் மானிடர்களாகிய நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கிற கடமையை நாம் மறந்துவிடலாமா? ஸேதுபந்தனத்துக்கு சேதனங்களாகிய மானிடர் மட்டுமே யல்லாமல், வானரர்கள், பட்சிகள், ம்ருகங்கள், அனைத்தும் கைங்கர்யம் மனமுவந்து செய்தன. முடிவு தர்மம் ஜயம் பெற்று விளங்கிற்று. அதர்மம் தோற்று ஒடுங்கித் தொலைந்தது. இதுவே ஆன்மகோடிகளில் சேதனங்களாகிய மானிடரின் வாழ்க்கை லக்ஷ்யம்.

இம்மாதிரி ஒவ்வொரு பக்ஷிஜாதியும் ஒவ்வோர் விதத்தில் ப்ரயோஜனமுள்ளதாகவே இருக்கிறதேயன்றி, மற்றபடி வேறில்லை. ஆகவே எதனையும் நிகிர்ஷ்டமென்று தள்ளுதலாகாது. அவைகளை ஹிம்ஸை செய்தலும் கூடாது. ஜீவஹிம்ஸை செய்கிறவர்கள் ஈச்வரனுடைய கோபத்திற்குப் பாத்ரமாவார்கள். இப்பக்ஷி தர்மகைங்கர்யம் செய்ததாலன்றோ ஸ்ரீராமன் அதனைத் தன் பிதாவாகவே, பாவித்து அதனுக்கு ப்ரேத கார்யமனைத்தும் செய்து, நல்ல லோகத்திற்கு "நீ எமது ஆக்ஞையால் செல்வாயாக" வென்று சொல்லி, அப்பக்ஷிக்கு நல்ல பதவியைத் தந்தருளினார் என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் "ஜடாயுவின் உபாக்யானம்" நன்கு கூறும்.

கல்யாணி அம்மாள்.

## Interesting Items.

I

# CONCERNING CHILDREN.

## குழந்தைகள் விஷயம்.

**Infant's Diet.**

குழந்தைகளின் ஆகாரம்:—ஒரு குழந்தை ஸரியாய் வளரவேண்டுமென்றால் அதற்கு ஸரியான ஆகாரம் கொடுத்தால் மட்டும் போதாது. வேண்டிய அளவு ஜலமும் குடிக்கக் கொடுக்கவேண்டும். வயது வந்தவர்களுக்கு அவர்களின் ஆகாரத்துக்குத் தகுந்தபடி எவ்வளவு ஜலம் குடிக்கக் கொடுக்கிறோமோ அதைவிட அதிகமாக குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும்.

பெரியவர்கள் தங்கள் நிறையில் நூற்றுக்கு 3½ பாகம் நிறையுள்ள ஜலம் குடித்தால் போதுமானது. ஆனால் வளரும் குழந்தையோ அதன் நிறையில் நூற்றுக்கு 15 பாகம் ஜலம் உட்கொள்ளவேண்டியது அவச்யமாகும்.

ஆகாரத்தின் தன்மையில் யாதொரு குறையுமில்லாமலிருந்து, அதில் சேர்ந்துள்ள ஜலம் மாத்ரம் குறைவாயிருந்தால் குழந்தை நோயில்லாமலிருந்தாலும், அது நன்றாய் வளராது. அதன் நிறை அப்படியேயிருப்பதோடு சில ஸமயம் குறைந்தும் வரும். ஆகாராதிகள் ஸரியாயிருந்தும் குழந்தை தக்கபடி வளராமல் இருந்தால், அதன் உணவில் வேண்டிய அளவு ஜலம் கலக்கவேண்டியது அவச்யமாகும்.

குழந்தைகள் வேண்டிய அளவு ஜலம் தனியாகவோ, ஆகாரத்தில் கலந்தோ குடிக்காவிட்டால் அவைகளின் வளர்ச்சி தடைபட்டுப் போவதோடு, காய்ச்சல் முதலிய வ்யாதிகளும் நேரிடும்.

**Children's Sleep.**

குழந்தைகளின் தூக்கம்:—குழந்தைகளுக்கு சாப்பிடுவதும் தூங்குவதும் தவிர ஒரு வேலையும் கிடையாது. வயிற்றைப் பசிக்கும்பொழுது கத்த ஆரம்பிக்கும். இதை அறிந்து தாய்மார்கள் பால்கொடுக்கவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு குழந்தைகள் பகலிலும் இரவிலும் தூங்குகிறதோ அவ்வளவுக் கவ்வளவு தேகத்துக்கு நலம். குழந்தை படுத்து உறங்கும் அறைக்குள் ஒருவரும் திடீரென்று நுழையக்கூடாது. பிசாசுமாதிரி கத்தவும் கூடாது. குழந்தை பயந்துவிட்டால் தேகத்துக்கு அபாயம் உண்டாகும். நாயாவது பூனையாவது குழந்தை தூங்கும் அறையில் தனியாக இருக்கக்கூடாது. பூனையானது மிகவும் கபடமான ஜந்துவாதலால் தனியாக விட்டுவைத்தால் குழந்தைக்குக் காலனாக வந்து முடியும்.

**Bad Habits.**

கெட்ட வழக்கங்கள்:—கை நகங்களைக் கடிப்பது, விரலை வாயில் வைத்துக்கொள்வது, எழுதுகையில் பேனாக்கட்டையைப் பல்லில் இடுக்கிக்கொள்வது, கற்பலகையில் எழுதியதை அழிப்பதற்காக நக்குவது, கருமையாய் எழுதும் பொருட்டு பென்ஸிலின் நுனியை நாவினால் நனைப்பது, தபால் தலைகளையும் உறைகளின் மூடி விளிம்புகளையும் ஒட்டுவதற்காக அவைகளை நாவினால் தடவி ஈரமாக்குவது முதலிய வழக்கங்கள் குழந்தைத்தனமான வழக்கங்களென்றும், தீமை பயக்கத்தக்கவையென்றும், ஆதலால் வெறுக்கத்தக்கவையென்றும் நாம் சொல்லாமலே ஏற்படும்.



II

# DOMESTIC HINTS AND SUGGESTIONS.

## க்ருஹத்தியக் குறிப்புகள்.

**Hints on Nursing.**

நோயாளிகளைப் பராமரிக்கையில் கவனிக்கவேண்டியவை:—

(1) நோயாளி படுத்துக்கொள்ளும் படுக்கை சுருங்கி யிருத்தல்கூடாது.

(2) அந்தப் படுக்கையில் வேறொருவர் சாய்ந்துகொள்ளவும், உட்காரவும் கூடாது.

(3) உபயோகப்பட்டு கெட்டுப் போன புஷ்பங்களை அந்த அறையில் வைக்கக்கூடாது.

(4) கவலை கொண்டவர்கள்போல் இருக்கக் கூடாது. அப்படியிருந்தால், வ்யாதியஸ்தர்களுக்கு மனோதைர்யம் குறையும்.

(5) காகிதங்களைக் கிழித்தாலும் அல்லது அவைகளினாலுண்டாகும் சலசலப்பு சத்தம் ஏற்பட்டாலும் நோயாளிகளுக்கு அதிக ஹிம்ஸையுண்டாகும்.

(6) வ்யாதியஸ்தர்களிருக்கும் அறையின் கீழே ரத்னகம்பளம் விரித்திருக்காமல் அதற்குப் பதிலாக நல்ல பாய் போட்டிருப்பது உசிதம். தவிர, அங்கே ஓரிடத்தில் ஈரமான தேயிலைகளைத் தூவி வைத்திருந்தால் அந்த அறை சுத்தமாயிருக்கும். அவ்விலைகளைப் பிறகு துடைப்பத்தால் கூட்டி எறிந்துவிடலாம்.

(7) அந்த அறையில் போதுமான வெளிச்சமும் நல்ல சுத்தமான காற்றோட்டமுமிருக்கவேண்டும். அந்த அறையைப் பார்த்தாலே ஒருவித உத்ஸாகமுண்டாகும்படி வைத்திருக்கவேண்டும்.

(8) அவ்விடத்தில் சமையலறைக் காற்றும், புகையும் எட்டக்கூடாது. வெளிக்காற்று வீசுவதுதான் முக்யம். ஆனால், ஒருவேளை அது ரொம்பவும் ஜில்லென்றிருந்தால், அந்தஅறையில் ஒரு கணப்பு வைத்துக்கொள்ளவேண்டியது.

(9) வ்யாதியஸ்தர்கள் அதிக ப்ரகாசத்தினால் கண்கூசாமலிருப்பதற்கு வேண்டியபடி திரைகள் போட்டிருக்கவேண்டும்.

(10) நோயாளிகளுக்கு ஆகாரத்தில் ப்ரியமேற்படும்படி செய்யவேண்டும். நல்ல சுத்தமாயும் நேர்த்தியாயுமுள்ள பாத்ரங்களில் ஆகாரம் கொடுப்பது நல்லது.

(11) அவருடைய தேக ஸ்திதியை அனுஸரித்து பத்யத்தை வெவ்வேறு தினுஸாய் பக்வம் செய்து கொடுக்கவேண்டியது. நோயாளிக்கு பசியை உண்டாக்கவும், வ்ருத்தி செய்யவும் வேண்டிய வழிகளை அனுஸரித்து நடத்தல் வேண்டும்.

(12) ரொட்டியை முதலில் அடுப்பின்மேலிட்டு வாட்டி பிறகு நெய் அல்லது வெண்ணெய் தடவி கொடுப்பதுதான் நல்லது. அது ருசியாயிருப்பதோடு எளிதில் ஜீர்ணமும் ஆகிவிடும்.

(13) அதிக தாகத்திற்கு பின்சொல்லியபடி செய்யலாம். சுத்தமான தண்ணீரில் கொஞ்சம் தவிடுகலந்து ஒருமணி நேரம் அடுப்பிலிட்டு கொதித்தபிறகு ஆறவைத்து, நன்றாக வடிகட்டி ஸ்வல்ப சர்க்கரையும், எலுமிச்சம்பழத்தின் ரஸத்தையும் சேர்த்துக் கொடுத்தால், நல்ல வாஸனையாயிருப்பதோடுகூட, உடனே தாகத்தையும் தணித்துவிடும். ஆனால், இப்படி பானம் தயார்செய்து கொடுக்கலாமா என்பதை வைத்யர்களை கேட்டுத் தெரிந்துகொள்ளவும்,

# KITCHEN AND COOKERY.

## சமையலறையும் சமையலும்.

**Chakkaraipongal.**

சக்கரைப் பொங்கல்:—அரைச்சேர் நல்ல பச்சரிசியும் சிவக்கவறுத்த பாசிப்பயிறு அரைக்கால் சேரும் எடுத்துக்கொள். இரண்டையும் கலந்து நன்றாய்த் தண்ணீரில் களைந்து நீரை வடித்துவிடு. ஒரு அணா எடையுள்ள குங்குமப் பூவை இரண்டு தோலா அளவுள்ள தண்ணீரில் அரைத்துப் போட்டு அரிசியோடு கொட்டிவிடு. பிறகு இரண்டரைச் சேர்கொள்ளும்படியான வெங்கலப் பானையில் கொட்டி ஒருசேர் சுத்தமான தண்ணீரை வார். நிதானமாக நார்புறமும் எரிகிற அடுப்பில் வைத்து நன்றாகக் கொதிவருகிறபோது கிளறு. முக்கால் பதத்தில் 4 தோலா வெண்ணெய், 30 தோலா வெள்ளைச் சர்க்கரை, 24 தோலா நெய் முதலியவைகளைப்போட்டு கிளறி 5 நிமிஷம் அடுப்பின்மேல் வைத்திருந்து கீழே இறக்கு. மறுபடியும் 3 தோலா பாதம் பருப்பு, 21 தோலா முந்திரிப்பருப்பு இரண்டையும் 4 தோலா நெய்யில் வறுத்து, ½ தோலா ஏலம், 2 தோலா ஜாதிப்பத்ரி இவைகளையும் சேர்த்து, தயாராக வைத்துக்கொண்டு வடித்து கீழ் இறக்கினதுடன் கலந்து கிளறிவிடு. இரண்டு அணா எடையுள்ள பச்சைக் கற்பூரத்தைப் பொடி செய்து போட்டுக் கலந்துவிடு. இதை சாப்பிட்டுப் பார்த்தால் அப்போது கை அளவின்பேரில் சர்க்கரைப்பொங்கல் செய்கிறதற்கும் அளவின்பேரில் செய்கிறதற்கும் வித்யாஸம் தெரியும், இதன் ருசி இப்படிப் பண்ணிச் சாப்பிட்டவர்களுக்கு தெரியுமேயன்றி எல்லோருக்கும் தெரியாது.

**Pumpkin Karuvadam.**

பூசணிக்காய் கருவடாம்.—கால்படி வெண்மையான உளுத்தம் பருப்பை ஒருநாளிரவு ஜலத்தில் ஊறவைக்கவேண்டியது. அப்பொழுதே, பெரும் பூசணிக்காய் துருவலில் 10-பலம் எடுத்து ஓர் துணியில் முடிப்புக்கட்டி ஒரு பலகையின் மேல் வைத்து மேலே ஒரு பலகையை வைத்து அதன் மேல் பளுபோட்டு வைக்கவேண்டியது. மறுநாள் விடியற்காலையில் ஷை பருப்பை வெண்ணெய்போல் அரைத்து, அதனோடு பூசணிக்காய் துருவலைச் சேர்த்து கலந்துகொள்ளவேண்டும். ஒரு பலம் மிளகாய், அரையேயறைக்கால் பலம் காயம், ஒன்றரைப் பலம் உப்பு, இம்மூன்று வஸ்துக்களையும் இடித்து, அரைக்கால்பலம் ஜீரகத்தையும், பொடியாய் நறுக்கிய அரை பலம் பச்சை மிளகாயையும் சேர்த்து எல்லாவற்றையும் மேற்படி பூசணிக்காய் துருவல் கலந்த மாவில் போட்டு செம்மையாய் அரைத்து வடாமிட்டு உபயோகிக்கவேண்டியது. இந்த வடகத்தைப் பொரித்து கூட்டு குழம்புகளில் உபயோகிப்பதுண்டு.

**A few Hints.**

சில குறிப்புகள்:-சமையல் அறை சுத்தமாயிருக்கவேண்டும். புகைபோக்கி இருக்க வேண்டும். சுத்தமான காற்று உள்ளேவரவும் கெட்டகாற்று வெளியேபோகவும் சாளரங்கள் ஜன்னல்கள் அமைக்கவேண்டும். நல்ல வெளிச்சமிருக்கும்படி கூரைகளில் கண்ணாடிவைத்தல் நலம்.

* * *

சமையல் பாத்ரங்களை அன்றாடம் சுத்தி செய்யவேண்டும். இல்லாவிட்டால் பாத்ரங்களிலுள்ள பத்துகள் அழுகிக்கெட்டு விஷமுள்ளவைகளாய் அதில் சமைக்கப்படும் அல்லது வைக்கப்படும் பதார்த்தங்களை விஷமாக்கிவிடும். சாப்பிடுகிறவர்களுக்கு வ்யாதியை உண்டாக்கும்.





# WOMAN'S WORLD.

## ஸ்த்ரீ ப்ரபஞ்சம்.

**A Woman Municipal Councillor.**

ஒரு ஸ்த்ரீ முனிஸிபல் கௌன்ஸிலர்:—வட இந்தியாவில் டேராடூன் ஜில்லாவிலுள்ள மஸ்ஸூரி முனிஸிபாலிடியில் ஒரு ஸ்த்ரீ கௌன்ஸிலர் இருக்கின்றனராம். அவர் அப்பாகங்களில் ஸ்த்ரீகளுக்கென்று ஸ்கூல்கள் பல ஏற்படுத்தினவராம். இந்தியாவிலே முனிஸிபாலிடிகளில் ஸ்த்ரீகள் முனிஸிபல் கௌன்ஸிலராக நியமிக்கப்பட்டது இதுதான் இரண்டாவதாகும். வடமேற்கு மாகாணங்களின் லெப்டினண்டு கவர்னர் மஸ்ஸூரியில் விஜயம் செய்தபோது, இந்த ஸ்த்ரீ முனிஸிபல் கௌன்ஸிலரே அவருக்கு உபசாரப் பத்ரம் வாசித்துக் கொடுத்தனராம்.

**Woman Medical aid in India.**

இந்தியாவில் ஸ்த்ரீ வைத்ய உதவி:—இந்தியா ஸ்த்ரீகளுக்கு வைத்ய ஒத்தாசை செய்வதற்கு நேஷனல் அசோஸியேஷன் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. அந்த அசோஸியேஷன் கீழ் பல இடங்களில் கமிட்டிகள் ஏற்பட்டு ஸ்த்ரீ வைத்யர்களை இந்தியாவில் தயாரிக்க ஏற்பாடு செய்துவருகிறது. நேஷனல் அசோஸியேஷனின் ஸமீப ரிபோர்ட்டு வெளிவந்திருக்கிறது. இதன் ஸெண்டரல் கமிட்டியின் கீழ் 14 மாகாண கமிட்டிகள் வேலை செய்து வருகின்றன. 140 ஜில்லாச் சபைகள் இந்தக் கமிட்டிகளுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. சுதேச ராஜாங்கங்கள் உள்பட 11 ஆஸ்பத்ரிகளில் ஸ்த்ரீ வைத்யர்கள் மருத்துவச்சிகள் இருந்து வேலை செய்துவருகிறார்கள். முதல் க்ரேட் வைத்ய ஸ்த்ரீகள் 97 பேர், இரண்டாவது க்ரேட் வைத்ய ஸ்த்ரீகள் 70 பேர், 689 ஆஸ்பத்ரி அஸிஸ்டெண்டுகள் ஸ்த்ரீகளாக நியமிக்கப்பட்டு வேலை நடந்துவருகிறது. அசோஸியேஷன் சார்பாக இப்போது வைத்ய யூனிவர்ஸிடிப் பரீக்ஷையில்தேற 83 ஸ்த்ரீகளும், அஸிஸ்டெண்டு சர்ஜன் பரீக்ஷையில் தேற 33 பேரும், ஸப் அஸிஸ்டெண்டு பரீக்ஷையில் தேற 87 பேரும் கல்வி கற்றுவருகிறார்கள். இன்னும் மருத்துவச்சிகள் சிகித்ஸை செய்யும் தொழிலாளிகளாக இருக்க அநேக வைத்யகலாசாலைகளில் 413 ஸ்த்ரீகள் கல்வி கற்றும் பழக்கம் பெற்றும் வருகிறார்கள்.

**An L. L. B. Woman student.**

எல். எல். பி. வகுப்பில் படிக்கிற ஸ்த்ரீ.—வங்காளத்தில் பாரிஸ்டர் மிஸ்டர் டி. ரோத்பானர்ஜி என்பவருடைய குமார்த்தி இங்க்லீஷ் கவிகள் எழுதுவதில் பெயர் போனவர். இங்க்லாந்தில் அநேக சங்கங்களில் கவிகள் எழுதி உயர்ந்த வெகுமதிகள் அடைந்தனர். இவர் லண்டனில் இப்போது வசிக்கிறார். லண்டன் யூனிவர்ஸிடிப் பரீக்ஷையிலும் தேறினார். எல். எல். பி பரீட்சையிலும் தேர்ச்சியடைய வேண்டி அப்பரீட்சைக்கும் வாசித்து வருகிறார்.

**Miss Regina guha**

மிஸ் ரெஜின குஹா:—மிஸ் ரெஜினா குஹா வக்கீல் பரீக்ஷைக்குப் படித்துப் பாஸ் செய்திருக்கிறார். இவர் தன்னை வக்கீல் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அலஹபாத் ஐகோர்ட்டுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறார். இன்னும் தீர்ப்புசொல்லவில்லை. லண்டனில் புருஷ உடை தரித்த ஸ்த்ரீ தன்னை வக்கீலென்று சொல்லி கோர்ட்டுக்குள் நுழைய அங்கிருந்தவர்கள் அவளை ஸ்த்ரீயென்று அடையாளம் கண்டு பிடித்து அவளை போலிஸாரிடம் ஒப்பித்துவிட்டார்கள்.

# VIEWS AND REVIEWS.

## அபிப்ராயங்களும் ஆராய்ச்சிகளும்.

**Pratapa Mudaliar Charitram.**

ப்ரதாப முதலியார் சரித்ரம்.—ப்ரதாப முதலியார் சரித்ரத்தின் ஆறுவது பதிப்பின் ப்ரதியை வந்தனத்துடன் வரப்பெற்றோம். இனிய தமிழ்நடையை ஸுமார் 40 வர்ஷத்திற்கு முன் எழுதிக்காட்டி தமிழ் உலகத்திற்கு வழி காட்டிய வேத நாயகம் பிள்ளையைத் தமிழுலகம் நன்கு அறியும். இப்படிப்பட்ட புத்தகம் பண்டித பாமர ரஞ்சிதமாய் இயற்றப்பட்டு தமிழ்உலகத்திலுள்ள எல்லா ஜனங்கள் வீட்டிலும்போற்றிக்கொண்டாடப்படுகிறது. இதன் அருமை பெருமைகளைத் தெரிந்த கவர்ன்மெண்டார் இதை ஸிவிலியன்களின் டெக்ஸ்டாக வர்ஷா வர்ஷம் வைத்து வருகிறார்கள். இதன் சிற்சில பாகங்களை எடுத்து தமிழ் மெட்றிக் டெக்ஸ்டுகளில் பாடமாகவும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். 13, 14, 15 வர்ஷங்களில் இப்புத்தகத்தைக் காலேஜ் இண்டர் மீடியட் வகுப்புப் பாட புத்தகமாகவும் ஏற்படுத்தியிருந்தார்கள். இவ்வருமையான புஸ்தகத்தை ஒவ்வொரு தமிழரும் படித்துப் பலனடைய வேண்டு மென்பது நமது கோரிக்கை. இதன் விலை ரூபா 1-0 0 தபாற் கூலி வேறு.

**Suguna Sundari.**

ஸுகுண ஸுந்தரி :— ஸுகுண ஸுந்தரி என்னும் தமிழ் நாவலும் வேத நாயகம் பிள்ளை இயற்றியது. இது கதைப்போக்கில் தற்போதைய பள்ளிக்கூட வகுப்புகளுக்கு உபயோகமான வ்யாஸங்கள் பலவற்றை உள்ளே அடக்கிக்கொண்டிருக்கிறது. பால்ய விவாகம் இப்படிக்கேட்டை விளைப்பது என்னும் பாகம் இந்த நாவலில் செம்மையாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. கன்னிகாச்ரமத்தில் பெண்கள் ரக்ஷிக்கப்படும் தன்மையைப்பெரிதும் எடுத்துரைக்கும் இந்நூல் பள்ளிக்கூடங்களில் வசன பாட புத்தகமாக ஏற்படுத்தினால் நன்மைதரும். 150 பக்கங்கள் கொண்டது. விலை அணா 8. தபாற் கூலி வேறு:

**Penmathi malai,**

பெண்மதி மாலை.—பெண்களுக்குப் போதிக்கும் கருத்துடன் வேத நாயகம்பிள்ளையால் இப்புத்தகம் இயற்றப்பட்டாலும், மனுஷ ஸமூகம் எல்லாவற்றிற்குமே இப்புத்தகம் பயன்தரக்கூடியதென்பது இதன் சில பாகங்களை மெட்றிக் டெக்ஸ்டில் எடுத்துபயோகித்ததிலிருந்தே அறியக்கூடியதாயிருக்கிறது. சிறு கண்ணிகள் மூலமாய் புத்தி மதிகளை இப்புத்தகத்தில் புகட்டும் மாதிரி வாசிக்க இன்பந்தரும். ஜீவ ஹிம்ஸை தமிழின் அருமை, ஸ்த்ரீகளுக்குக் குணமே பூஷணம், ஸ்த்ரீகள் கல்வி கற்றிருப்பதால் அவர்கள் குழந்தைகள் அடையும் நன்மை, அவர்களின் கல்லாமையினால் நேரும் கஷ்டம், கடவுளின் மகிமை ப்ரதாபம் முதலிய அம்சங்களை எடுத்துக்கொண்டு க்ரந்தகர்த்தா எழுதும் மாதிரி வியக்கத்தக்கது. இப்படிபட்ட புத்தகம் இந்தியாவின் எந்த ஸ்த்ரீகளின் கையிலுமிருக்கத்தக்கதென்றே சொல்வோம். மேற்கண்ட அருமையான புஸ்தகங்களைச் சுத்தமாகப் பதிப்பித்து உலகத்திற்கு உதவி வரும் பதிப்பாசிரியரான மெஸர்ஸ் வி. ஜி. ஆரோக்யஸாமி அண்டு ப்ரதர்ஸ் கம்பெனியார்களுக்கும் வேத நாயகம் பிள்ளைகளின் புஸ்தகங்களைப் பிழை திருத்தி அச்சியற்றுவதில் உடனின்று உதவிவரும் சுதேசமித்ரன்





உபபத்ராதிபரான தமிழ்ப் பண்டிதர் வி. சுப்பிரமணிய ஐயருக்கும் தமிழுலகம் கடமைப் பட்டிருக்கிறது. புஸ்தகம் வேண்டுவோர்கள் மாயவரம் வி. ஜி. ஆரோக்யஸாமி ப்ரதர்ஸ் அவர்களிடத்தில் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**Swmi Vivekananda Hindu girls'School.**

ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்த ஸபா பெண் பாடசாலை :—மேற் கண்ட பெண் பாடசாலை கோயமுத்தூர் ஜில்லாவைச் சேர்ந்த தாராபுரத்தில் பெண்களின் கல்வி விஷயத்தில் அக்கரை கொண்ட சில உழைப்பாளிகளாலும் ப்ரமுகர்களாலும் ஸ்தாபிக்கப்பட்டு கடந்த பத்து வர்ஷங்களாக நடத்தப்பட்டு வருகிறது. இதை நடத்துவோரின் முக்ய நோக்கம் நம் ஹிந்துப் பெண்களுக்கு ஜாதியக் கல்வியும் மதக்கல்வியும் கொடுத்து அவர்களை இல்லறத்துக்கு ஏற்றவர்களாகச் செய்வதென்று தீர்மானித்து நடத்தி வருகிறார்கள். அதிர்ஷ்டவசமாக இப்பாடசாலைக்கு ஒரு கட்டடம் சொந்தமாக கிடைத்திருக்கிறது.

ஆனால், இது முக்யமாக தனவான்களின் ஆதரவு இல்லாமல் வருந்துகிறது. அநேக இடங்களில் ஹிந்துப் பெண் பாடசாலைகள் இல்லாமல் பெற்றோர்கள் கஷ்டப்படுகிறார்கள். தாராபுரம் டவுன் மத்தியில் ஒரு ஹிந்து பெண்பாடசாலை ஜாதியப்படிப்புக்கும் மதப்படிப்புக்கும் சில உழைப்பாளிகளால் நடத்தப்பட்டு வருகிறதானது தாராபுர வாசிகளின் அதிர்ஷ்டமென்று நினைக்கவேண்டும். ஆகவே, இந்தப் பெண்பாடசாலையை நல்ல நிலைமையில் வைப்பது அந்த டவுன் தனிகர்களின் கடமையாக இருக்கிறது. படித்தவர்களும் இந்தப் பெண்பாடசாலைக்கு உதவி செய்வார்களென்று நம்புகிறோம்.

**The war in Europe**

ஐரோப்பா யுத்தம் :—இப்புஸ்தகத்தை நம் பார்வைக் கனுப்பிய ஸ்ரீமானுக்கு வந்தனம். சென்னையில் வெளியாகும் "ஜனாபிமானி"ப் பத்ரிகையின் பத்ராதிபர் ம-ா-ா-ஸ்ரீ ஜி. எ. வைத்யராமன், பி. எ. அவர்களால் இயற்றப்பட்டது.

இந்தப் புஸ்தகத்தின் நோக்கம், யுத்தத்தில் அன்றன்றைக்கு நேரிடும் சண்டை முதலிய ஸம்பவங்களையாவது அல்லது யுத்தம் முடிந்ததும் கொஞ்ச காலத்துக்குமட்டுமோ அல்லது சாச்வதமாகவோ உண்டாகும் நன்மை தீமைகளையாவது, எடுத்துக்காட்டுவதல்ல. இதில் யுத்தத்தின் அந்தரங்க காரணங்களும், அந்தந்த தேசத்து ராஜதந்த்ரக் கொள்கைகள் எவ்வளவு தூரம் யுத்தத்துக்குக் காரணமாயிருந்தன வென்பதும், முன்காலத்தில் போலல்லாமல் தற்போது தழுவிவரும் நூதன யுத்த முறைகளும், விரிவாக எழுதப் பட்டிருக்கின்றன. பொதுவாய் தற்கால யுத்தத்தைப்பற்றிய விஷயங்களை அறியாதவர்கள் அறியும் பொருட்டும், அதில் சாஸ்த்ர ஞானம் எவ்வளவு தூரம் உபயோகிக்கப்பட்டு வருகிறதென்பதை விளக்கும்பொருட்டும், இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

இதைத்தவிர, இந்தப் புஸ்தகத்தில் யுத்தத்தின் காரணங்கள், யுத்தத்தில் சேர்ந்துள்ள தேசங்களின் முக்யஸ்தர்கள், ராணுவ அமைப்பு, சண்டை செய்யும் தேசங்களின் சேனபலம்,

பீரங்கிகள் கப்பல்படை பலம் கப்பல்படையின் விவரம், ஆகாய விமானங்கள், கொட்டைகள் தற்காலத்தியவும், முற்காலத்தியவும்), இடங்குகள், அரண்கள் இவைகளிலிருந்து கொண்டு யுத்தம் செய்வது முதலிய 40 அத்யாயங்கள் இருக்கின்றன. விஷயங்களை நன்கு விளக்கும் 100 உயர்ந்த படங்களும் நேர்த்தியான தேசபடங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. புஸ்தகம் 400 பக்கங்கள் கொண்டதாய் உயர்ந்த கடிதத்தில் நேர்த்தியாய் அச்சிடப்பட்டிருக்கிறதோடு மற்ற தமிழ் புஸ்தகங்களைப் போலல்லாமல் ஒரு பருத்த விஷய அகராதியொன்றும சேர்க்கைப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூ. 1—8—0, 'ஜனோபிமானி' பத்ரிகையின் சந்தாதாரர்களுக்கு மாத்ரம் 1 ரூபாய்க்கு கொடுக்கப் படுகிறது. மேஸர்ஸ் ஜி. எ வைத்யராமன் அண்டு கம்பனி, 3: 4, கொண்டித்தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ், என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**The Swadesamitran New year book 1916—17.**

நள வர்ஷத்திய சுதேச மித்திரன் போது விஷய விளக்கம்:—இப்புஸ்தகத்தை நம் பார்வைக்கு அனுப்பிய ஸ்ரீ மானுக்கு வந்தனம். இதை இயற்றியவர் "சுதேச மித்திரன்" பத்ராதிபர் ஸ்ரீமான். அ. ரெங்கஸாமி அய்யங்கார் அவர்கள். B.A., B.L., இதன் விலை ரூ 1-8-0. வேண்டுவோர்கள் சென்னை சுதேசமித்ரன் ஆபிஸுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

முதன் முதலாக இப்புஸ்தகம் ஒரு அருமையும் பெருமையும் வாய்ந்தது இது நம் தமிழுலகத்துக்குப் புதிதாகும். இதுவரையில் பொது விஷயங்களை முக்யமாக ராஜாங்க விஷயங்களை ஆங்கில மறியாத நம் தமிழ் ஸ்ஹோதரர்களுக்கு உண்மையாகவும் தெளிவாகவும் எடுத்துச் சொல்லும் புஸ்தகங்கள் நமக்குத் தெரிந்தவரையில் ஒன்றுமில்லை.

சுதேசமித்ரன் பொது விஷய விளக்க மென்னும் இப்புஸ்தகம் ஆங்கிலமறியாத நம் தமிழர்களுக்கு ப்ரிட்டிஷ் ஜாதி பத்யத்தில் அவர்களுக்குற்ற உரிமைகளையும் கடமைகளையும் புகட்டமிகவும் உபயோகப்படுமென்பதில் ஸந்தேகமில்லை. இதை ஒவ்வொரு தமிழரும் வாங்கிப் படிக்க வேண்டிய அவசியமும் அவர்களி கடமையாகவுமிருக்கிறது.

டாக்டர் ஸர் ஸுப்ரமண்ய அய்யர் இதற்கு முகவுரை எழுதியிருக்கிறார். அதில் இப்புஸ்தகம் வெளி வந்திருக்கும் ஸமயம் ஒரு நிமிஷம் முந்தியது மல்ல, பிந்தியது மல்லவென்று சொன்னது பொறுத்தமாகும்,

**Educated & Books.**

படித்தவர்களும் புத்தகங்களும்.—பி. எ படித்துத் தேறினவர்களும் மற்றும் ஆங்கிலத்தில் பயிற்சியுள்ளவர்களும் ஆங்கிலபாஷையிலுள்ள முட்டாள் நாவல்களைத் தழுவி அஸம்பாவிதமாகத் தமிழ் பாஷையில்எழுதுவதும், மொழி பெயர்ப்பதும வேலையாகவேயிருக்கிறார்கள். இவர்கள் இப்படிச் செய்வதனால் ஸமூகத்துக்குப் பெருத்ததீங்குகள் உண்டாகின்றவைகளை அறிகிறார்களில்லை. நாவல் எழுதும் இந்த பைத்யக்காரப் பழக்கத்தைத் தொலைத்து விட்டு ஆங்கில பாஷையில் ராஜாங்கம், வ்யாபாரம், தொழில் பொருளாதாரம், வ்யவஸாயம் முதலிய அரிய புஸ்தகங்களைத் தழுவியோ மொழி பெயர்த்தோ நம் தேசத்துக்குத் தகுந்தபடி புஸ்தகங்களை ப்ரசுரித்து வந்தால் தேச ஸேவைசெய்ததாகுமல்லவா? இதை ஸஹோதரர்கள் கவனிக்க வேண்டியது அவசயம்.—ஒரு நிருபர்.



561

THE
# FEMALE EDUCATION
AN ILLUSTRATED TAMIL MONTHLY MAGAZINE
# பெண் கல்வி
சித்ர ஸஹிதமான ஒரு தமிழ் மாதாந்தப் பத்ரிகை.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.—திருக்குறள்.

Vol. 5. தொகுதி 5 } நளஹு புரட்டாசியீ Sept. 1916. { No. 12. பகுதி. 12.

## PROGRESS OF THE WORLD.
## ப்ரபஞ்சப்போக்கு.

**Madras Govt. Women's Cellege.**

சென்னை கவர்ன்மெண்ட் ஸ்த்ரீகள் காலேஜ்:—இந்த ஸ்த்ரீகள் காலேஜை இன்னும் ஒரு வர்ஷம் நடத்தும்படி கவர்ன்மெண்டார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். இது சாச்வதமாக நடத்தப்படுமென்றே நம்புகிறோம்.

**Two hard Truths.**

இரண்டு முக்ய உண்மைகள் :—இம்மாதம் 11-ந் தேதி ஆண்டர்ஸன் ஹாலில் ஆசார சீர்திருத்தச் சங்கத்தின் கீழ் ஒரு ப்ரசங்கம் நடந்தது. அப்போது "இந்தியன் ஸோஷல் ரிபார்மர்" என்ற வாரப் பத்ரிகையை பம்பாயில் நடத்தி வருகிற மிஸ்டர் கே. நடராஜன் அக்ராஸனம் வகித்தார். ஆசார சீர் திருத்த விஷயமாக இவர் தமது ப்ரசங்கத்தில் இருபது வர்ஷ அனுபவத்தில் கண்டு அறிந்து உணர்ந்த இரண்டு அரிய உண்மைகளை அறிவித்தார். முதலாவது, ஸ்த்ரீகளின் உதவியும் உழைப்புமில்லாமல் ஆசார சீர்திருத்தம் முற்றிலும் நிறை வேறாதென்று ஆசாரசீர்திருத்தக் காரர்களுக்கு எச்சரிக்கை செய்தார். ஸ்த்ரீகளை தூர விலக்கி விட்டு ஆசார சீர்திருத்த விஷயமாக படாடோபமாகப் பேசித்திரியும் ஸ்வகார்யப்புலிகள்

இந்தப்புத்தியை ஏற்றுக்கொண்டு நடப்பார்களென்று நம்புகிறோம். இரண்டாவது, நமது மதம் ஆசார சீர்திருத்தத்துக்கு அஸ்திவாரமாயிருக்கவேண்டுமென்று வற்புறுத்தினார். மதத்தை விலக்கிவிட்டு ஆசார சீர்திருத்தத்துக்கு உழைப்பது வீணென்று தெளிவாகப் பேசினார். மேலும், பம்பாயில் ஆசாரசீர்திருத்தம் ஜாஸ்தியாக வ்ருத்தியடைந்திருக்கிறதற்கெல்லாம் காரணம் ஹிந்து மதத்தை அஸ்திவாரமாக வைத்துப் பாடுபட்டிருக்கிறார்களென்று தெரிவித்தார். மிஸ்டர் கே. நடராஜன் தெரிவித்த இரண்டு உண்மைகளும் மதிக்கக்கூடியவைகளே; மேலும், அனுஷ்டிக்கக் கூடியவைகளாகும்.

**Miss Kamakoti Natarajan, B. A.**

மிஸ் காமகோடி நடராஜன் பி. ஏ.—இச்சென்னையில் நடந்த இரண்டு வர்ஷகாலமாய் நடந்துவரும் கவர்ன்மெண்ட் ஸ்த்ரீகள் காலேஜுக்கு மிஸ் காமகோடி நடராஜன் பி. ஏ. சரித்ரபோதகராக நியமிக்கப்பட்டிருப்பதாய் அறிந்து ஸந்தோஷிக்கிறோம். அந்த கவர்ன்மெண்ட் ஸ்த்ரீகள் காலேஜில் மிஸ் டிலாஹேயையும் அவருக்கு அடுத்த பதவியிலிருக்கும் ஸ்த்ரீ ப்ரொபஸரையும் தவிர வேறு ஸ்த்ரீ போதகர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை. ஆனால், ம·ா·ா-ஸ்ரீ ராவ்பஹதூர் மங்கேசராவ் அவர்களைப்போன்ற வயதான உயர்ந்த குண புருஷர்கள் அக்காலேஜில் போதித்து வருகிறார்கள். ஆயினும், கவர்ன்மெண்டார் அந்தக் காலேஜ் போதகர்கள் அனைவரையும் ஸ்த்ரீ போதகர்களாக்கி விடவேண்டுமென்பதற்கு மிஸ் நடராஜனின் நியமனமே சாக்ஷியாகும். மிஸ் கே. நடராஜன் இப்போது பம்பாய் வாஸியாயிருந்து வந்தாலும், சென்னை மாகாணத்தவரேயாவர். இவரின் தந்தை மிஸ்டர் கே. நடராஜனை இச்சென்னையிலும் பம்பாயிலும் அறியாதாரில்லை. அவர் “இந்தியன் ஸோஷல் ரிபார்மர்” என்ற ஆங்கில வாரப் பத்ரிகையை பம்பாயில் செவ்வனே நடத்திவருகிறவர். பெற்றோர்களின் உயர்ந்த குணங்களாகிய தேசாபிமானம் பரோபகாரம் முதலியவைகளை மிஸ் நடராஜன் அடைந்திருக்கிறாரென்று நாம் கேள்விப்படுகிறோம்.

மிஸ் நடராஜன் வஹிக்கப்போகும் உத்யோகம் மிகப் பொறுப்புள்ளது. ஒரு தேசம் முன்னடைந்து ப்ரகாசிக்கவேண்டுமானால் அத்தேசத்தின் முற்கால சரித்ரத்தை இருபாலார்களில் ஸ்த்ரீகள் முக்யமாக உள்ளது உள்ளபடியே தெரிந்துகொண்டிருக்கவேண்டும்.



பொதுவாக தேச சரித்ரத்தை உண்மையாகப் படித்தால் தான் கடவுள் பக்தி, ராஜ பக்தி, தேச பக்தி முதலியவைகள் ஏற்படும். நம் இந்திய தேசம் ஸ்த்ரீகளாலேயே முன்னடைய வேண்டுமென்பதை நாம் பலமுறையும் வற்புறுத்தியிருக்கிறோம். அந்யதேசத்து சரித்ரக்காரர்கள் கண்டு ப்ரமிக்கும்படியான நம் தேசமாதாவின் பரிசுத்தமான பழைய சரித்ரத்தை உள்ளது உள்ளபடியே நம் ஸ்த்ரீகளுக்குக் கற்பிக்கவேண்டும். நம் இந்தியாவின் உண்மையான சரித்ரத்தைச் சில புண்யசீலர்கள் ஆராய்ச்சி செய்து எழுதியிருக்கிறார்கள்; எழுதியும் வருகிறார்கள். ஆகவே, கடவுள் பக்தி, ராஜ பக்தி, தேச பக்தி முதலிய வாழ்க்கை லக்ஷ்யங்களைக் கொண்ட நமது தேச சரித்ரத்தை மிஸ் நடராஜன் பி. ஏ. ஸ்த்ரீகளுக்கு ஊட்டுவாரென்று நம்பி ஸர்வதயாநிதியாகிய பரந்தாமனை முன்னிட்டு அவருக்கு நாம் நல்வரவு கூறுகிறோம்.

**The Women's Education Conference.**

ஸ்த்ரீகளின் கல்விக் கான்பரன்ஸ்:—இந்திய ஸ்த்ரீகளின் படிப்பு விஷயமாக இந்தியா கவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டார்களுக்கு ஒரு சுற்றுக்கடிதம் அனுப்பி அவர்களின் அபிப்ராயங்களைக் கேட்டுவிட்டிருந்தார்களென்று ஏற்கனவே சொல்லியிருந்தோம். சென்னை கவர்ன்மெண்டின் உத்தரவின்பேரில் கல்வியிலாகாத் தலைவர் ஒரு ஸ்த்ரீ கான்பரன்ஸை கூட்டினார். அக்கான்பரன்ஸ் இம்மாதக்கடைசி வாரத்தில் நடைபெற்றது. அக்கான்பரன்ஸுக்கு அழைக்கப்பட்ட 23 நபர்களுள் 10 நபர்கள் ஸ்த்ரீகளாவார்கள். அவர்களெல்லோரும் ஸ்த்ரீகளின் கல்வி அபிவ்ருத்தியில் மனப்பூர்த்தியாக அக்கரை கொண்டவர்கள். அந்தக் கான்பரன்ஸின் ரிபோர்ட் ஸமீபத்தில் வெளிவருமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

---

ஒருவருடன் ஸ்னேகம் செய்வது ஸுகத்துக்காகவல்ல; வாழ்க்கை க்ரமத்துக்காகவே ஸ்னேகம் செய்வதின் லக்ஷணமாயிருக்க வேண்டும்:—ஹோமர்.

* * *

ஒருவனது வாழ்க்கைஸுகம் அவனது எண்ணங்களைப் பொறுத்திருக்கிறது:—மார்கஸ் அரீலியஸ்.

# INDIAN WOMEN AND NATIONAL WELLBEING.

By

**Sri R. Jayalakshmi Ammal.**

## இந்திய ஸ்த்ரீகளும் ஜனங்களின் க்ஷேமமும்.

உலகம் தொடங்கிய நாள் முதற்கொண்டு ஸ்த்ரீகளின் உயர்ந்த நிலைமை ஜனங்களின் க்ஷேமத்திற்குக் காரணமென்று ஹிந்து மதம் ஒன்றே வற்புறுத்துகிறது. ஹிந்து மதத்தை அனுஷ்டிக்கும் ஹிந்துக்கள் ஒரு வகுப்பார்களே தங்கள் மதத்தில் சொல்லியபடி ஸ்த்ரீகளை உயர்வாக நடத்தி வந்தார்கள். அப்போது இந்தியாவில் ஸமாதானமும் க்ஷேமமும் குடிகொண்டிருந்தது. எங்கு ஸ்த்ரீகள் கௌரவப்படுத்தப்படுகிறார்களோ அங்கு தேவர்கள் ப்ரியப்படுகிறார்களென்று அவர்கள் நம்பி வந்தார்கள். ஸ்த்ரீகளிருந்த வீடுகளை தேவாலயங்களாகக் கருதி வந்தார்கள். ஸத்ரீகளை உயர்வாக நடத்துதல் ஹிந்துக்களின் வாழ்க்கை லக்ஷ்யமென்று ஒவ்வொரு ஹிந்து புருஷரும் எண்ணிவந்தார்கள். இப்படி ஸ்த்ரீபுருஷ ஸமத்வம் ஏற்பட்டு வெகு நூற்றாண்டுகளாய் வந்த காலமானது திடீரென்று மாற ஆரம்பித்தது. மத்ய காலத்தில் சில அநாகரிக அம்சங்களில் புருஷர்கள் எப்படித் தாழ்வு அடைந்தார்களோ அப்படியே ஸ்த்ரீகளின் நிலைமை விஷயமாயும் தாழ்வடைந்து அவர்களின் நிலைமை ஜனங்களின் க்ஷேமத்திற்குக் காரணமென்பதை மறந்து விட்டார்கள்.

பிறகு, காலக்ரமேண அதாவது மஹம்மதிய அரசாக்ஷிக்குப் பின்னர் ஸ்த்ரீகளுக்குப் படிப்பு அவச்யமில்லையென்றும் அவர்களில்லாமலே தேசம் ஸுபிக்ஷமும், ஸமாதானமும் அடையுமென்றும் எண்ணிவிட்டார்கள். ஆனால், இப்போது காலம் துரிதமாய் மாறி வருகின்றது. ஹிந்து ஸ்த்ரீகள் தங்கள் கார்யங்களையும் பொறுப்புக்களையும் அறிய ஆரம்பித்துவிட்டார்கள். இந்தியாவில் ஸ்த்ரீகள் ஆங்காங்கு சங்கங்கள் ஸ்தாபிப்பதும் தங்கள் நிலைமைகளைப் பற்றி தேசபாஷைகளில் ப்ரசங்கங்கள் செய்வதுமாகயிருக்கிறார்கள். மேலும், ஸ்த்ரீகள் தங்கள் முன்னேற்றமே தேச க்ஷேமத்திற்கும் புருஷர்களின் ஸௌக்யத்திற்கும் அவச்யமென்று எண்ணி பத்ரிகைகள் ப்ரசுரிப்பதும் அநாதை சாலைகள் ஸ்தாபிப்பதுமாகயிருக்கிறார்கள். இவைகளெல்லாம் நல்ல காலத்தின் அறிகுறிகளல்லவா? தற்காலம் இந்திய ஸ்த்ரீகளின் நிலைமையை அறிந்து அந்ய தேச ஸ்த்ரீகளுக்கும் ஜீவ



காருண்யம் ஏற்பட்டு அவர்கள் தங்களாலானவரை நம்படிப்பு விஷயமாகவும் தேகஸௌக்ய விஷயமாகவும் கவனித்து வருகிறார்கள். மேலும், ஸ்த்ரீகளின் கல்வி விஷயமாய் நடக்கும் நற்கார்யங்களில் இந்திய ஸ்த்ரீகளும் முயற்சி எடுத்து வருகிறார்கள். இப்போது புருஷர்களும் ஆங்காங்கு ஸ்த்ரீகளின் நிலைமையை உயர்த்தவேண்டுமென்று பாடுபட்டு வருகிறார்கள்.

நிற்க, ஸ்த்ரீகள் தேக புஷ்டியுடையவர்களாயிருந்தால் அவர்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகளாகட்டும் பெண் குழந்தைகளாகட்டும் திடமாயிருக்கும். அப்படியில்லாமல் ஸ்த்ரீகள் ஸதாகாலம் பட்டினியினாலும், வ்யாதியினாலும் பீடிக்கப்பட்டுக் கொண்டிருந்தார்களேயானால் அவர்களின் குழந்தை எப்படி தேச முன்னேற்றத்துக்கு உபயோகப்படும்? இந்தியாவில் குழந்தை மரணம் ஜாஸ்தியாயிருப்பதற்கு ஸ்த்ரீகள் நல்ல நிலைமையில் இல்லையென்று விஸ்தாரமாய்த் தெரியும். மாஜி வைஸராயாகிய லார்ட் ஹார்டிஞ்சு இந்தியாவில் வர்ஷாவர்ஷம் அதிகரித்து வருகிற குழந்தை மரணத்தைப்பற்றித் துக்கித்து ஒரு ஸமயம் பேசினார். லண்டனில் "இந்திய ஸ்த்ரீகளின் நிலைமை"யைப்பற்றி லேடி ம்யூர் மெகன்ஸி என்பவர் ஸமீபத்தில் ஒரு உபந்யாஸம் செய்தார். அப்பொது அவர் சில உண்மைகளை வெளியிட்டார். லேடி ம்யூர் மெகன்ஸி பம்பாய் கவர்ன்மெண்டின் நிர்வாக ஸபையில் ஒரு மெம்பராயிருந்த ஸர். ம்யூர் மெகன்ஸியின் மனைவி. இந்தியாவின் உப்பை தாம் பல வர்ஷகாலம் தின்றோமென்று அதற்குச் சில ப்ரதி உபகாரம் செய்யவிரும்பி அடிக்கடி ஸ்த்ரீகளின் தேகஸௌக்ய விஷயமாக லண்டனில் ப்ரசங்கங்கள் செய்து வருகிறார். அவர் ப்ரஸ்தாப ப்ரசங்கத்தில் இந்தியாவுக்கு இப்போதவச்யமானது ஜனங்கள் வ்யாதியில்லாமலும் ஸந்தோஷமாயும் இருக்க வேண்டியதென்றார். எப்படியிருப்பார்கள்? சில ஜாதியாருக்குள் 1,000-க்கு 80 கைக் குழந்தைகள் இறந்து போகின்றன. ஸிந்து (Sind) மாகாணத்தில் சில பாகங்களில் ப்ரஸவத்தினால் ஸ்த்ரீகள் 1,000-க்கு 95 பேர் மாண்டு போகிறார்கள். இந்தியாவில் ஸ்த்ரீகளுக்கு யோக்யதைபெற்ற வைத்ய ஸ்த்ரீகளின் சிகித்ஸையில்லையென்பதை எவரும் அறிவார்கள். புருஷர்களுக்கேத் தகுந்த ஆஸ்பிடல்களும் வைத்யர்களும் இல்லை. க்ராமாந்தரங்களில் ஸுகாதாரவிதிகளையும் ஸாமான்ய வைத்ய சிகித்ஸை முறைகளையும்

ஜனங்களுக்குப் போதிக்கும்படி சிலரை நியமித்துவிட வேண்டுமென்று லேடி ம்யூர் மெகன்ஸி சொன்னார். இவ்வாறு புதிய வைத்ய சிகித்ஸைகளையும், ஸுகாதாரவிதிகளையும் ஜனங்கள் அறியாதவர்களாயிருந்தால் எப்படி ஏற்பார்கள். சிறிது கல்வி யிருந்தாலல்லவோ அவர்களுக்குப் புதுமாதிரிகளும் புதுக்கருத்துகளும் பிடித்தவைகளாகும். வைத்யத்திலும் ஸுகாதாரத்திலும் எப்படியோ அப்படியே ஸமூக வாழ்க்கையின் பல கிளைகளிலும் ஸ்த்ரீகளின் அறியாமை நின்று முன் செல்வதைத் தடுக்கின்றன. 1,000 க்கு 80 கைக் குழந்தைகளும் 1,000 க்கு 95 தாய்மார்களும் இறந்துபோவார்களானால், அந்த ஸமூகம் எப்படி ஸந்தோஷமாயிருக்கக்கூடும்? தேசத்துக்குத்தான் அந்த ஸமூகம் எப்படி க்ஷேமத்தை யுண்டுபண்ணக்கூடும். தாய்மார்களும் குழந்தைகளும் இறந்துபோனால் ஸமூகத்தின் ஜனத்தொகை எப்படி அபிவ்ருத்தியாகும். இப்படி அபாரமான தீங்கை ஸமூகத்திற்கு உண்டாக்கும் ஸ்த்ரீகளின் அறியாமையை தாமஸமில்லாமல் நீக்குவதற்கு கவர்ன்மெண்டாரும் ப்ரபுக்களும் முன்வரவேண்டும். ஸ்த்ரீகளின் கல்வி ஸம்பந்தமாய் கவர்ன்மெண்டார் எடுத்திருக்கும் முயற்சிகள் பலிதப்படவேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

ஆர். ஜயலக்ஷ்மி அம்மாள்.

## MAKING DULL CHILDREN.

**By**

**Sri Nagarathna Ammal.**

### மந்தமான குழந்தைகளை வ்ருத்தியாக்குவது.

நமது பாலிகா பாடசாலைகளில் ப்ரதிவகுப்பிலும் மந்தபுத்தியுள்ள குழந்தைகள் ஏறக்குறைய ஸரிபாதியிருக்கிறார்கள். மீதி ஸரிபாதியில் ஸாதாரண தீவ்ரபுத்தியுள்ள குழந்தைகள் கால்பங்கும் நல்ல புத்திசாலியான குழந்தைகள் கால் பங்கும் இருக்கிறார்கள். உபாத்தினி பாடங்களைச் சொல்லிக்கொடுக்கும்பொழுது இந்த மந்த புத்தியுள்ள குழந்தைகள் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருக்குமேயன்றி அவர்களுடைய ஞாபகம் வெளியே உலாவிக்கொண்டு தானிருக்கும். ஒரு பாடத்தைப் பல முறைச் சொல்லிக்கொடுத்துக் கேட்டாலும் இந்த மந்தபுத்தியுள்ள குழந்தைகள் விழிப்பார்கள். அப்போது உபாத்தினிக்குக் கோபம் வரும். சில ஸமயம் குழந்தைகளை அடிக்கநேரிடும். பாடம் தெரியவில்லையே யென்று அடித்தால் குழந்தைகள் மிகவும் மந்தமாகிவிடும். குழந்தைகளை அடிக்கக்கூடாது. பெற்றோர்கள் குழந்தைகளை உபாத்தினியின் அடைக்கலம் விட்டிருப்பது, அவர்களை நல்ல வழியில் திருப்பி மேலான நெறியை போதிக்கிறதற்காகவேயன்றி வேறல்ல. ‘குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்’ என்பதுபோல் குழந்தைகளுக்குப் பாடங்களை அன்புடன் கற்றுக்கொடுக்கவேண்டும். இன்று மந்தமான குழந்தைகள் நாளை புத்திசாலியாகிவிடும். பள்ளிக்கூடத்தில் மிகவும் மந்தமாயிருந்த குழந்தைகள் பிற்கால வாழ்க்கையில் நல்ல பதவியைப்பெற்று வந்திருக்கிறார்களென்பது தெரிந்த விஷயம். ஒரு குழந்தையை மந்தமாகச்செய்வதும், புத்திசாலியாகச் செய்வதும் உபாத்யாயரிடம் இருக்கிறது. சில உபாத்யாயர்கள் தங்கள் கஷ்டத்தை கவனித்து இந்த மந்தபுத்தியுள்ள குழந்தைகளை கேள்விகள் கேட்காமலும் அதிகமாக கவனிக்காமலுமிருக்க நேரிடும். மேலும், ஒரு வகுப்பில் புத்திசாலிக் குழந்தைகளை மாத்ரம் கவனித்து விட்டு தாங்கள் அதிக ச்ரமத்துக்கு ஆளாகாமலிருக்க எண்ணமுமுண்டாகும்.



கீழ்க்கண்டவைகள் மந்தபுத்தியுள்ள குழந்தைகளை சுறுசுறுப்புண்டாக்குவதற்கு அனுகூலமாயிருக்குமென்று நம்பி என் அனுபோகத்தை பெண்கல்விப் பத்ரிகை மூலமாகத் தெரியப்படுத்தலானேன். உபாத்யாயர்களுக்கு இவைகள் உபயோகமாயிருக்குமென்று நம்புகிறேன.

உபாத்யாயர் ஒரு வகுப்பில் தாம் சொல்லிக்கொடுத்து வரும் போதனை முறையை இந்த மந்தபுத்தியுள்ள குழந்தைகளின் மூளையின் வலுவுக்குத் தகுந்தபடி அமைத்துக் கொள்ளவேண்டும். மந்த புத்தியுள்ளவர்கள் வகுப்பில் தூங்காதபடியும் அவர்களின் மனம் வேறு இடம் நாடாமலிருக்கும்படியும் அவர்களை அடிக்கடித் தூண்டவேண்டும். போர்டு பலகையில் அவர்களை எழுதச்சொல்லலாம். புத்திசாலியாயுள்ள குழந்தைகளின் பக்கத்தில் மந்தமான குழந்தைகளை உட்காரவைக்கலாம். ஒரு வகுப்பு மிகவும் சோம்பலாயிருந்தால் அதை உடன் தேகப்பயிற்சிசெய்ய அழைத்துப்போகவேண்டும். அல்லது கெட்டிக்காரக் குழந்தைகளை பாடத்தைப் பார்த்துப் படிக்கச்

சொல்லவேண்டும். மந்தமான குழந்தைகளையும் அது மாதிரியாகவே உறத்திப்படிக்கச் சொல்லவேண்டும். மந்தமான குழந்தைகளை கேள்விகள் கேட்கும்போது உட்காரவைத்துக் கேட்பது நலம். அவர்களுக்கு மனக்கணக்குப் போடவேண்டும். அதன் ஸரியான விடையை விரைவாய் ஓடி போர்டு பலகையில் முதல் எழுதுகிற குழந்தைக்கு ப்ரைஸ் கொடுத்து உற்சாகப் படுத்தவேண்டும். இப்படியாக பலமுறைகளினால் மந்தமான குழந்தைகள் சுறு சுறுப்பாகி வந்திருக்கிறார்கள். இது என் அனுபவம். குழந்தைகளை அன்பு என்கிற கயற்றினால் கட்டி அவர்களுக்குப் போதித்து வந்தால் உபாத்யாயர்களின் ச்ரமம் வெகு தூரம் நீங்கும். குழந்தைகளும் சுறு சுறுப்புடன் படித்து வருவார்கள். பள்ளிக்கூடத்துக்கு வரும்போது குழந்தைகள் ஸந்தோஷமாக வந்து உபாத்யாயரைக் காண்பார்கள். பள்ளிக்கூடம் விட்டுப்போகும் போதும் குதூஹலமாக வீட்டுக்குப்போக இடமுண்டாகும்.

மந்தபுத்தியுள்ள குழந்தைகள் மேற்கண்ட அனுபவ முறைகளினால் சுறுசுறுப்பை அடையாமலிருந்தாலாவது அல்லது மந்தத்தனத்தை அதிகமாக யடைந்தாலாவது உபாத்யாயர்கள் மௌனமாக இருக்கக்கூடாது. உடன் இவ்விஷயத்தைப் பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்தி டாக்டரைக்கொண்டு குழந்தையின் மூளையை பரிக்ஷைசெய்யவேண்டும். தெரியாத பெற்றோர்களுக்கு ஸ்கூல் தலைமை அதிகாரி எடுத்துச் சொல்லவேண்டும். குழந்தையின் மூளைக் கோளாறுகளை நிபுண டாக்டர்களால் அறியமுடியுமேயன்றி ஸாமான்யர்களால் அறிய முடியாத கார்யம். மேனாடுகளில் மிகவும் மந்தமான குழந்தைகள் டாக்டர்களால் பரிசுதிக்கப்பட்டதற்குப் பிறகு சுறுசுறுப்புள்ளவர்களாயும் நல்ல புத்திசாலிகளாயும் ஆகியிருக்கிறார்கள். ப்ரதிபாடசாலையை யொட்டி டாக்டர்கள் இருப்பது அவச்யம். ஸாதாரணமாக ஏழைப்பெற்றோர்கள் டாக்டர்களுக்கு பணம் கொடுத்து குழந்தையை பரிக்ஷிக்க முடியாதாகையால் ஸ்கூல் அதிகாரிகள் நிபுண டாக்டர்களை வைத்துக்கொள்வது நலமாகும்.

சூளை, சென்னை.<br>20-9-16. } அ. நாகரத்ன அம்மாள்,

# LADY CHELMSFORD AT THE PURDAH CLUB, SIMLA.

## ஸிம்லா படுதா கிளப்பில் லேடி செம்ஸ்போர்டு

வட இந்தியாவிலுள்ள ஸிம்லாவில் படுதா கிளப் அல்லது கோஷா ஸ்த்ரீகளின் சங்கம் ஒன்று சில வர்ஷங்களாக ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிறது. அந்த கிளப்புக்கு பஞ்சாப் லெப்டினண்ட் கவர்னரின் மனைவியாகிய லேடி ட்வியர் ப்ரிஸிடெண்டாக இருக்கிறார். அந்தச் சங்கத்துக்கு மேது ராஜ ப்ரதிநிதி யாகிய லார்ட் செம்ஸ்போர்டின் மனைவியாகிய லேடி செம்ஸ்போர்டு அவர்கள் மேற்படி சங்கத்துக்கு போஷகராக இருக்க இசைந்திருக்கிறார். இம்மாதம் 12-ந் தேதி லேடி செம்ஸ்போர்டு அவர்கள் அக்கிளப்புக்கு விஜயம் செய்தார். அப்போது உருது பாஷையில் பேசினதாக ஸமாசாரம் எட்டியிருக்கிறது. உருது பாஷையைப் பேசும் ஸ்த்ரீகள் சங்கத்தில் அவர் உருது பாஷையில் பேசினது மிகவும் மெச்சத் தகுந்ததாகும். அவர் இந்தியாவுக்கு வந்து சில மாதங்கள் தான் ஆயின. ஆனாலும் அவர் உருது பாஷையைக் கற்றுக்கொள்ள மிகவும் ச்ரமம் எடுத்துக்கொண்டிருக்கவேண்டும். இல்லையேல் உருது பாஷையில் ஒரு சங்கத்தில் பேசுவது கொஞ்சம் ச்ரமமாகும். அச்சமயம் அந்த அம்மாள் பேசின விஷயம் பின் வருமாறு :—

“ஹிந்துஸ்தான் ஸ்த்ரீகளுக்கு அவர்களுடைய பாஷையிலேயே பேசவேண்டுமென்பது என்னுடைய விருப்பம். இச்சமயம் அப்பாஷையில் அதிகமாய் பேசும்படியாய் நான் அதனைக் கற்றுக்கொண்டிருக்கவில்லை. உங்கள் படுதா கிளப்பின் போஷகர் ஸ்தானத்தை நான் ஒப்புக்கொண்டிருக்கிறேன். அதனுடைய க்ஷேமத்தை கூடுமான வழிகளிலெல்லாம் முற்படுத்துவதை நான் என்னுடைய நோக்கமாகக் கொள்வேன். நீங்கள் ஒருவரோடொருவர் நெருங்கப்பழக இந்த கிளப் ஸாதகமாயிருக்குமென்று நம்புகிறேன். இந்த ஸமயம் எல்லாருடைய சித்தமும் இப்போதைய யுத்தத்தில் திரும்பியிருக்கிறதென்று நீங்கள் அறிவீர்கள். எல்லா தேசங்களிலும் ஸ்த்ரீகள் யுத்த வேலைக்குத் தங்களாலான ஸகாயம் செய்துவருவதையும் யாரும் அறிவார்கள். இந்த கிளப் ஸ்த்ரீகளும் மற்ற மாகாணத்து ஸ்த்ரீகளோடு கலந்து ஹிந்துஸ்தானத்து ஸோல்ஜர்களின் கஷ்டங்களை நிவர்த்தி செய்ய வேலை செய்யவேண்டும். யுத்தம் முடிந்

பிறகு இந்த கிளப் லேடிகள் வேறு நல்ல கார்யங்களுக்கு உதவி செய்யலாம். இந்த கிளப் உங்களுக்கு ஸந்தோஷத்தைக் கொடுத்து நன்மை செய்யும் கிளப்பாய் விளங்கவேண்டுமென்று நான் மனப்பூர்வமாய் விரும்புகிறேன்."

இப்படி ஒற்றுமை யுணர்ச்சியும் அனுதாபமுங்காட்டி லேடி செம்ஸ் போர்ட் படிதா கிளப் மெம்பர்களைப் பார்த்துப் பேசினது அவர் பதவிக்குப் பொறுத்தமானது. அந்த கிளப் மெம்பர்கள் அவரின் புத்திமதியைத் விசேஷமாய்ப் பாராட்டினார்கள். இந்திய ஸ்த்ரீகளிடம் லேடி செம்ஸ்போர்ட் வைத்திருக்கும் ஒற்றுமை யுணர்ச்சியையும் அனுதாபத்தையும் நாமும் பாராட்டுகிறோம். இந்தியாவிலே லேடி செம்ஸ் போர்டின் பதவியி லிருப்பவர்கள் தேச பாஷையைக் கற்பதில் அக்கரை கொள்வது கிடையாது. அப்படியிருக்க லேடி செம்ஸ்போர்ட் உருது பாஷையை அதனில் பேசும் திறமையடையும் படியாய் சென்ற 6-மாதகாலத்தில் கற்றிருப்பதை நாம் கொண்டாடுகிறோம். உருது பாஷையை நன்றாய்ப் படித்துக்கொண்டால்தான் அச்சீமாட்டி இந்திய ஸ்த்ரீகளுடன் நெருங்கப்பழகி அவர்களுக்குள்ள குறைகளை நிவர்த்தி செய்தல் வெகு எளிதாகும். லேடி செம்ஸ்போர்ட் இந்தியாவில் 5 வர்ஷ காலத்தைக் கழித்து விட்டுப்போக வந்தவரில்லையென்று இதனால் நன்றாய் விளங்குகிறது. அச்சீமாட்டி தம் காலத்தில் இந்திய ஸ்த்ரீகளின் அபிவ்ருத்திக்கு பின்பலமாயிருப் பாரென்று நாம் உறுதியாய் நம்பியிருக்கலாம்.

## REARING UP OF CHILDREN.

By

Dr. Rajan.

## குழந்தைகளை வளர்த்தல்.

சிசுக்களைப் போஷிக்க இரண்டு வழிகளுண்டு. ஒன்று முலைப் பால் கொடுத்தல், இரண்டாவது புட்டிப்பால் கொடுத்தல். குழந்தைகளுக்கு இவைகளுள் மிகச் சிறந்தது முலைப்பால் தான். ஏனெனில், புதிதாய்ப் பிறந்த குழந்தையின் குடல் தாயின் பாலைத்தான் ஜீரணிக்கச் சக்தியுள்ளது. முலைப்பால் குடித்து வளரும் குழந்தைகள் புட்டியினின்று பால் குடித்து வளரும் குழந்தைகளைப்போல் நோய் நொடியால் பிடிக்கப்படாது. ஆகவே



ஒவ்வொரு தாய்மாரும் கூடுமானவரையில் தம் குழந்தைக்குத் தாமே பால் கொடுக்க முயற்சிக்க வேண்டும்.

தாயின் அகால மரணத்தாலோ அல்லது தேக அஸௌக் யத்தாலோ தம் குழந்தைக்குப் பால் கொடுக்க முடியாமற்போன ஞல் குழந்தைக்குப் பால் கொடுக்கக்கூடிய செவிலித் தாயைக்கொண்டாவது பால் கொடுக்கச் செய்யவேண்டும். அந்தச் செவிலித் தாய் சரீர ஸௌக்யமுள்ளவளாய், திடகாத்ர சரீரியாய், ஜாஸ்தியான வாதசரீர மில்லாதவளாய் இருக்கவேண்டும். க்ஷயரோகம், குஷ்டம் முதலிய தொத்து வ்யாதிகள் எதுவும் அத்தாய்மாரிடம் காணக்கூடாது. அத் தாய்மார்கள் 20 வயதிற்கு மேல் 30 வயதிற்குள்ளும் பால் கொடுக்கப்போகிற குழந்தைக்கு ஸரிஸமான வயதுடைய குழந்தையைத் தாங்களும் உடைத்தானவர்களாயுமிருக்கவேண்டும். நிச்சயமான மனத்தையும் அவர்கள் பெற்றிருக்க வேண்டும். துராக்ருதமான மனோ விகாரங்களுக்கு இடங்கொடாதவர்களாயிருக்கவேண்டும். இடங்கொடுத்தால் அவர்கள் கொடுக்கும் பால் ப்ரயோஜனப்படாமல் வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு, இழுப்பு, முதலிய கொடிய நோய்களை குழந்தைக் குண்டாக்கி விடும்.

குழந்தை பிறந்த பிறகு இரண்டு மணிக்கொருமுறை அல்லது 4 மணிக் கொருமுறை தாய் முலைப்பால் பருகும்படி விடவேண்டும். முதலில் முலைக்காம்பை சர்க்கரை கலந்த தண்ணீரால் சுத்தப்படுத்துவது நலம். குழந்தை பிறந்த இரண்டு நாளைக்குள் அரிசிக் கஞ்சியாவது இதர ஜீரண மாகாத ஆஹாரத்தையாவது கொடுத்தல் மிகவும் கெடுதல். அந்த இரண்டு நாட்களிலும் தின மொன்றுக்கு நான்கு தடவைகளுக்குமேல் குழந்தையை 6 தடவைகள் வரையில் முலைப்பால் குடிக்க விடலாம். முதல் ஐந்து வாரங்களிலும் பகற் காலத்தில் இரண்டுமணிக் கொருமுறை தவறாமலும், ஆறுவது வாரத்திலிருந்து 12-வது வாரம் முடிய $2\frac{1}{2}$-மணிக்கொரு முறையும், மூன்றாவது மாதத்திலிருந்து 9-வது மாதம் முடிய 3-மணிக் கொருமுறையும், 9-வது மாதத்திலிருந்து 12-வது மாதம் முடிய $3\frac{1}{2}$-மணிக் கொருமுறையும் ஸரியாய் முலைப்பால் கொடுத்து வரவேண்டும். இரவில், முதல் வாரத்தில் ஒருமுறை அல்லது இரண்டு முறையும், பிறகு 5-வது மாதம் வரையில் இரவு

10 மணிக்கு ஒரே தடவையும், ஐந்தாவது மாதத்திற்குப் பிறகு, இரவு 10 மணிக்குமேல் காலை 6 மணி வரையில் ஒன்றும் கொடுக்காமலு மிருக்கவேண்டும்.

குழந்தைக்குச் சரியான காலங்களில் முலைப்பால் கொடுப்பதில் வெகு கருத்தா யிருக்கவேண்டும். குழந்தை அழுத பொழுதெல்லாம் பால் கொடுப்பதென்பது, குழந்தையின் ஜீரண சக்திக்கு கெடுதலை யுண்டாக்குவதோடு கூட, வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு, அஜீர்ணம் முதலியனவும் உண்டாக்கும். குழந்தைக்குச் சரியான காலங்களில் ஆஹாரங் கிடைத்திருந்தால் அது அழுததின் காரணம் தாகத்தா லிருக்கும். அப்போது கொஞ்சம் சூடான தண்ணீர் கொடுத்தால் மறுமுறை பால் கொடுக்கும் வரையில் தாங்கும். 15 நிமிஷங்களுக்குமேல் ஒரு குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடாது.

அந்ய ஸ்த்ரீகளது பாலும் குழந்தைக்குக் கிட்டாதபோனால் கைம்முறையில் குழந்தைக்கு ஆஹாரம் கொடுத்து வரவேண்டும். ஸ்த்ரீகள் முலைப்பாலுக்கு இணையாக எந்த ஜெந்துவின் பாலு மாகாது. ஆனால், இலகுவில் நமக்குக் கிடைக்கக்கூடிய ஜெந்துவின் பால் பசுவின் பால் தான். பசுவின் பச்சைப்பால் குழந்தையின் ஜீரணத்திற்குத் தகுந்தல்ல. ஸ்த்ரீகளது முலைப்பாலிலும் பசுவின் பாலிலும் கொழுப்பு ஸரிசமமாக இருந்த போதிலும் மிச்ர வகையில் பேதமுண்டு. பசுவின் பாலில் புஷ்டி கொடுக்கும் ஸத்து (நூற்றுக்கு $3\frac{1}{2}$ பங்கு) சர்க்கரை (நூற்றுக்கு $4\frac{1}{2}$ பங்கு) மேலும் அது புளிப்பாய் எதிர்க்களிக்கக் கூடியது. ஸ்த்ரீகள் முலைப்பாலோ க்ஷாரமாய் எதிர்க்களிப்பது. பசுவின் பாலில் ஸ்த்ரீகள் முலைப்பாலிலிருப்பதைவிட பாலடைக்கட்டி அதிக விசேஷம். அது சீக்ரத்தில் ஜீரணிக்க முடியாத கெட்டித் தயிராய் விடும். ஸ்த்ரீகளின் பால் நேர்த்தியாயும் அதிசீக்ரத்தில் ஜீரணிக்கக் கூடியதாயு முள்ளது. பசுவின் பாலை ஸ்த்ரீகள் பாலுக்குச் சமதையாய் வெறும் தண்ணீர் விட்டாவது, ஜவ்வரசி தண்ணீருடன் கலந்தாவது நூற்றுக்கு $3\frac{1}{2}$ பங்கு வீதமிருந்து புஷ்டி கொடுக்கும் பதார்த்தத்தை $1\frac{1}{2}$ வீதம் குறைத்து விடலாம். இவ்விதம் நீர்கொண்டு பாலை ஸமப்படுத்தலால் அப்பால் ஜீரணிக்கத் தகுந்ததாய் விடுகிறதுமல்லாமல் அப்பாலின் இதர உபவஸ்துக்களும் சாந்தப்படு



கின்றன. கொழுப்புக் குறைந்துள்ளதாயிருந்தால் நூற்றுக்கு 16 அல்லது 20 மடங்குள்ளதான ஆடையின் சேர்க்கையால் அது ஸரிப்பட்டுவிடும். குழந்தையின் ஜீரணத்திற்கு ஸாதாரண சர்க்கரை அல்லது வெள்ளைச் சர்க்கரையைக் காட்டிலும் பாலிலுள்ள சர்க்கரையே மிக்க ஏற்றது.

முதலில் ஒரு பக்ஷத்திற்குக் கொடுக்கப்படும் பால், பாலும் தண்ணீரும் ஒன்றுக்கு மூன்றாயி ருக்கலாம். பிறகு, மூன்று மாதம் வரையில் ஒன்றுக்கு இரண்டாயும், பிறகு ஆறுமாதம் வரையில் ஒன்றுக்கு ஒன்றாயும் பிறகு 9-வது மாதம் வரையில் இரண்டுக்கு ஒன்றாயும் கலந்து கொடுக்கவேண்டும். முதல் சாதத்தில் குழந்தைக்கு வேளை ஒன்றுக்கு 1 அல்லது $1\frac{1}{2}$ அவுன்ஸ் பாலும் இரண்டாவது மாதத்தில் 2 அல்லது 3 அவுன்ஸும், மூன்றாவது மாதத்தில் 3 அல்லது 4 அவுன்ஸும், 4, 5-வது மாதங்களில் 4 அல்லது 5 அவுன்ஸ் பாலும், 6-வது மாதத்தில் 5 அல்லது 6 அவுன்ஸும் 7 முதல் 9-வது மாதம் முடிய 6 அல்லது 7 அவுன்ஸுகளும், 9-வது மாதம் முதல் 12-வது மாதம் முடிய 8, 9 அவுன்ஸுகளும், கொடுத்துவரவேண்டும். பச்சைப் பாலை தேகத்திற்கு புஷ்டியைத் தரத் தக்கதெனினும் சென்னைப்பட்டணத்தின் பாலை குழந்தைக்குக் காய்ச்சாமல் கொடுக்கக்கூடாது. ஏனெனில், இப்பாலில் ஜீரண கருவியைக் கெடுக்கக்கூடிய அநேக க்ருமிகளிருக்கின்றன.

அசுத்தமான புட்டியும் அழுக்கடைந்த ரப்பர் முலைக்காம்பும் சரியாய்த் தயாரிக்கப்படாத ஆகாரம் எவ்வளவு கெடுதல் செய்யுமோ அவ்வளவு கெடுதலை யுண்டுபண்ணும். ஆகவே, பால் குடிக்கும் புட்டியை எவ்விதம் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் எப்படி அதைக் காப்பாற்ற வேண்டுமென்றும் இங்கே குறிப்பிடுவது அநாவச்யமானது. புட்டியானது படகுபோலும், மூலை முடுக்குகளில்லாமலும் இலகுவில் கழுவக்கூடியதாய் பள்ளங்களு மில்லாமலு மிருக்கவேண்டும். குழந்தை பால் குடித்தவுடனே புட்டியிலுள்ள மிகுதிப் பாலைக் கீழே சுத்தமாய் வடித்து விட்டு நன்றாய் ஸோடா பவுடர் கலந்த நீரைக்கொண்டு கழுவி விடவேண்டும்.

டாக்டர் ராஜன்.

## SARASWATHI STOTRAM.

By

**Sri T. Akilandanayaki Ammal.**

### சரஸ்வதி ஸ்தோத்ரம்.

கல்வி தருவாய் கருது முயர்ஞானச்
செல்வியென வாழுஞ் சிறப்பருள்வாய்—மெல்லிதழ்கள்
நன்று கவே விளங்கு நான் மறையில் வீற்றிருக்கும்
என்றுய் கலைவாணி யே!

ஆடவரைப் போல வருங்கல்வி யிற்பழகிப்
பாடப் படிக்கப் பயன்றருவாய்—நாடி
விழைபு நரம்பொலிசேர் வீணையினை யேந்தும்
எழில் சேர் கலைவாணி யே!

கற்றகல்விக் கேற்பக் கவிஞரெலா மேவியக்க
நற்றமிழிற் புத்தகங்க ணயங்கெழுதும்—பெற்றியருய்யு
வண்ண நிறத்தால் வயங்கும்வெண் மேனிவாயர்
எண்ணுறுங் கலைவாணியே!

உத்தியோ கந்தந்தா லுஞ்செய்து பார்த்திடற்குச்
சத்தியினை யீவாய் சதுராக—நித்தம்
செருக்ககன்ற விற்பனர்கள் சேர்சபையி னுளும்
இருக்குங் கலைவாணி யே!

பெண்மணிக ளெழுதும் பெண்கல்விப் பத்திரிகை
ஒண்மகிமை மேலுலவி யோங்கிடவே—கண்பாராய்
மாற்றரிய முத்தமிழும் வாக்கதனி னீந்திருதற்
கேற்ற கலைவாணி யே!

தி. அகிலாண்ட நாயகி அம்மாள்.

கடவுளது இயற்கைச் சட்டங்களை எதிர்த்து நடக்காதே. பதில் பேசாமல் அவைகளுக்கு வணங்கி நட. அப்படிச் செய்வதுதான் படித்தவர்களின் லக்ஷணம்:—கார்லயல்.

* * *

ஹிந்துக்கள் தெய்வீகக்காற்றை ச்வாஸித்துக்கொண்டும் தெய்வீக உணவை சாப்பிட்டுக்கொண்டும், தெய்வீகத்திலேயே வஸித்துக்கொண்டும் அதிலேயே இறந்தும் போகிறார்கள். ஆகவே, அவர்கள் தான் ஈச்வரத்தன்மையை அறிந்தவர்கள்:—ஒரு ப்ரஞ்சு தேசத்து தத்வ சாஸ்திரி.



## VINAYAKA CHATHURTHI

By

**Sri T. Pankajam.**

### விநாயக சதுர்த்தி.

விநாயகருக்குக் கணபதி, யானை முகத்தோன், விக்னேசன், முதலிய பல நாமங்கள் உள. அந்த நாமங்களெல்லாம் காரணப் பெயர்களே யன்றி இடுகுறியன்று. இந்தியாவிலுள்ள, ப்ராம, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ரர்கள் எக்கார்யம் செய்யத் துவங்கினும், அக்கார்யம் நிர்விக்னமாய் முடியவேண்டி விக்னேச்வரனைப் பூஜித்தும், ஸ்தோத்ரஞ் செய்தும் வந்திருக்கிறதைப் பல நூல்கள் வழியாலும், அநுபவத்தாலும் காணலாம். புராணங்களில் வாசித்துப் பார்த்தால், க்ருத, த்ரேத, த்வாபர, கலி, ஆகிய இவ்யுகங்களில், தேவரிஷி முதலியவர்களும், அவதார புருஷர்களும், த்ரிமூர்த்திகளும் கணேசனைப் பூஜித்து தங்கள் மனோபீஷ்டங்களைப் பூர்த்தி செய்து கொண்டிருக்கின்றனர் என்பதாக அறிகிறோம். இவ்வளவு சக்தியைப் பெற்ற விநாயகர் இன்னவர் என்பதையும், எக்காலத்தில் ஜனித்தார் என்பதையும் விசாரிப்போம்.

ஒரு காலத்தில் பார்வதியானவள், தான் நீராடவேண்டிய காலத்தில் தன் தேகத்திலுள்ள அழுக்கால் ஓர் உருவத்தை யுண்டாக்கி, அதற்கு ஜீவனைக் கொடுத்து அந்தப்புரத்தின் வாசலில் இருத்தி யாரையும் உள்ளே விடவேண்டாமென்று உத்தரவு அளித்தார். அப்பொழுது ஸ்ரீ பரமசிவன் வர, அவரையும் விடேன் என்று மறுக்கவே, அவர் கோபங்கொண்டு தம்மை உள்ளே விடேன் என்றவனை சிரச்சேதஞ்செய்துவிட்டு, உள்ளே போனதாகவும், தம் பத்னியான பார்வதியால் உற்பத்தி யாக்கிவைத்த குமாரனுடைய சிரசைத் தாம் சினத்தால் தரித்து விட்டதைக் கண்டு பச்சாதாபப்பட்டு தூரத்தில் கிடந்ததோர் கஜத்தின் சிரசைக்கொணர்ந்து முண்டத்துடன் சேர்த்து உயிர்பிச்சையும் கொடுத்ததாகவும், அப்பொழுது தான் கஜானனன் என்ற நாமத்துடன் விளங்கிவந்தனரென்று புராணங்களிற் கூறப்பட்டிருக்கின்றன. இன்னும் சில புராணங்களில் கஜானன் உற்பத்தி வேறுவிதமாகவும் கூறியுள. இவர் பிறந்த காலம் இந்த யுகம் என்றும், இத்தனை வர்ஷங்கள் ஆயின என்றும் கூறுவதற்கு யாதொரு ஆதாரமும் காணோம். இவர் பார்

வதி பரமேச்வரனுக்குப் புத்ரரென்றும், அனேக வேதாந்த சாஸ்த்ரங்களைக் கற்ற நிபுணரென்றும், ஸகல விக்னத்தையும் போக்கடிக்கும் சக்தியை யுடையவரென்றும், ஸகல ஜீவகோடிகளாலும், த்ரிமூர்த்திகளாலும் பூஜிக்கப்பட்டு வருபவரென்றும், மாதா பிதாக்களிடம் ஸம்பூர்ண பக்தியை வைத்தவரென்றும், புராணங்கள் கூறுகின்றன. மேலும், ஸ்ரீபகவான் வ்யாசர் ஸ்ரீமகாபாரதத்தை ச்லோக ரூபமாகச் சொல்ல அவைகளின் கருத்தை யறிந்து, மகாபாரதம் முழுவதையும், தம் முகத்திலுள்ள கொம்பாகிய தந்தத்தை எழுத்தாணியாக்கிக்கொண்டு வெகு விரைவாகத் தானே எழுதி முடித்தார் என்றும், அனேக கல்யாண குணங்களையுடையவரென்றும் பல ஸந்தர்ப்பங்களில் வீரசூர பராக்ரமம் காட்டி தேவகார்யங்களை நிர்விக்னமாய் முடியும்படிச் செய்திருக்கின்றார் என்றும் கூறுகின்றன. இவ்விதமான ஸ்தூலார்த்தங்களை எடுத்துக்கொள்ளாமல் சூக்ஷ்மார்த்தமாகிய வேதாந்த தத்வார்த்தத்தை நோக்கின், இவர் ஸாக்ஷாத் பரப்பிரம்மமேயென வெளியாகும். அது எப்படியெனில், தர்மத்தை ஸ்தாபனஞ் செய்யும்பொருட்டு, பரப்பிரம்மமே ஸ்ரீ கிருஷ்ணனாக வந்து, லோகோத்தமனாகப் பார்த்தனுக்கு உபதேசஞ் செய்த ஸ்ரீ பகவத் கீதையில் "வ்ருக்ஷங்களில்" தாம் "அச்வத்த" வ்ருக்ஷமென்றும், மந்த்ரங்களில் தாம் "ஓம்" என்றும், மாதங்களில் தாம் "மார்கசீரஷ" மாதமென்றும், சேனாவீரர்களில் தாம் "ஸ்கந்தன்" என்றும் இன்னும் பலவிதமாய் உலகத்திலுள்ள சராசரங்களிலும் தாம் உள்ளும் புறமும் "நிறைந்து தாமாகவே இருக்கிறதாகவும்" கூறியிருக்கிறபடியால், உலகத்திலுள்ள ஸகல விக்னங்களையும் போக்கடிப்பதில் அந்த பரப்பிரம்மமே விக்னேச்வரனாக வந்திருக்கிறார் என்பது சொல்லாமலே விளங்கும். அந்த பரப்பிரம்மஸ்வரூபியாகிய ஸ்ரீ கணநாதனை இக்கலியுகத்தில் எப்பொழுது பிறந்தார் என்று காலநிர்ணயஞ் செய்ய ஸாத்யப்படும்? அனாதியாயிருக்கும் பரப்பிரம்மத்திற்கு எப்படி காலம் இல்லையோ, அப்படியே இந்த விநாயக மூர்த்திக்கும் ஜனன காலத்தை நிர்ணயஞ் செய்ய முடியாது.

ஆனால், ஜனங்கள் ஸகுணோபாஸனஞ் செய்து க்ருதார்த்தராகும்படியாய், பரமகருணாநிதியான ஸ்ரீ வ்யாஸபகவான் தாம் இயற்றிய புராணங்களில் ப்ரதிவர்ஷமும், பாத்ரபத சுத்த சதுர்த்தி



தினம் பரதகண்டத்திலுள்ள ஸகலரும் மங்கள ஸ்நானஞ்செய்து
அவரவர்களுடைய யோக்யதைக்குத் தகுந்தபடி ச்வர்ணத்திலோ.
வெள்ளியிலோ, பஞ்சலோகங்களிலோ, அல்லது மண்ணினாலோ ஓர்
விநாயகரூபம் இயற்றி ப்ராண ப்ரதிஷ்டை செய்து பக்தி ச்ரத்
தையுடன் குடும்பத்திலுள்ள ஸகலரும் சேர்ந்து, பில்வம், பல
ஜாதிப் புஷ்பங்கள், அருகம்புல் முதலியவைகளைக்கொண்டு அர்ச்சி
த்து தூப தீப நைவேத்யங்களுடன் பூஜைகளை முடித்து பந்து
மித்ரர்களுடன் போஜனஞ் செய்து, அன்று முதல் மூன்று
நாளோ, ஐந்து நாளோ, ஏழு நாளோ, ஒரு பக்ஷமோ, அல்லது
கனுகூலியாக ஒரு மண்டலம் வரையிலுமோ அவரவர்களுக்கு அநு
கூலத்தின்படி தினமும் கணேசனைப் பூஜை செய்து பஜனை செய்து
வரவேண்டும் என்ற விதியும் ஏற்படுத்தியிருக்கிறார். இதை இந்தி
யாவிலுள்ள ஸகலரும் நெடுநாளாக அநுஷ்டித்துக் கொண்டாடி
யும் வருகின்றனர். காருண்யமுள்ள கவர்ன்மெண்டாரும் இந்த
விசேஷநாளில் ஹிந்துக்கள் தங்கள் கடவுளை வணங்கி ஸுகமடை
யும் படியாகவே ப்ரிட்டிஷ் இந்தியா முழுவதிலும் உள்ள ஆபீஸ்க
ளுக்கு விடுமுறை கொடுத்திருக்கிறார்கள். இந்த நாள் இவ்வளவு
விசேஷமானதால் ஜனங்கள் இந்த விஷயத்தை வாசித்து ஆனந்த
மடையும்படியாக எழுதினேன். மைசூர் பல்லாரி முதலிய விடங்களி
லுள்ளவர்களும் திருச்சியிலுள்ளவர்களும், அன்று முதல் ஒரு
மண்டலம் வரையிலும் இந்த வைபவத்தைக் கொண்டாடுகிறார்கள்.
திருச்சியிலுள்ள உச்சிப்பிள்ளையார் கோவிலை அன்று மாலை 2-மணி
முதல் இரவு 10-மணி வரையிலும் ஆயிரக் கணக்கான ஜனங்கள்
பக்தியுடன் சென்று தரிசனஞ் செய்துவருகிறதைக் காணலாம்.

பங்கஜம்.

---

ஏ அர்ஜுனா! எங்கு அழகு, பெருமை, இரக்கம், தைர்யம், ஞாபக சக்தி
உறுதி முதலிய உத்தம குணங்கள் ப்ரகாசிக்கின்றனவோ அவைகளெல்லாம்
என்னிடமிருந்து வந்ததென்று அறிந்துகொள் :—ஸ்ரீ கிருஷ்ணபகவான்.

*　*　*

நம் ஸ்த்ரீகள் அவரவர்களின் இஷ்ட தேவதைகளை வணங்கி அவர
களின் குலாசாரத்துக்குத் தகுந்தபடி ஆசாரங்களை அநுஷ்டிக்க வேண்டும்.
அப்போது அவரவர்களின் குலத்தின் பெரியோர்களை மர்யாதை செய்ததா
கும் :—ஒரு அறிஞன்.

# THIRUVARUL.

## திருவருள்.

ச்ருஷ்டி கர்த்தாவாய், லோகநாயகராய், நித்யராய், ஒருவராலும் அறிய முடியாதவராய், எல்லாம் வல்லவராய் ஒரே கடவுளிருக்கிறார். ஸர்வக்ஞராயும், ஸர்வ ஸுஹ்ருத்தாயுமுள்ள அந்தப் பரமேஷ்டிக்கே வந்தனை வழிபாடுகளும், உபசாரமும், ஸ்தோத்ரமுமுரியன. அவரே விசாலமான ஆகாயத்தைப் படைத்து ஒவ்வொரு நட்சத்ரத்துக்கும் வழிகாட்டுகிறார். அவரே மகா ஸமுத்ரங்களைக் கரைகடந்து செல்லாதபடி ச்ருஷ்டித்து, ப்ரசண்டமாருதங்களை யமைதியோடிருக்க ஆக்ஞாபிக்கிறார்.

அவரே பூகம்பத்தை யுண்டுபண்ணி மனிதகோடிகளை நடுங்கச் செய்கிறார்; மின்னலை வீழ்த்தித் துஷ்டர்களை ஸம்ஹரிக்கிறார். வாக்கைக் கொடுத்துத் தமது பலத்தால் அவ்வாக்விக்களையும் மவுனமாக்குகிறார். அதனால் ஸர்வசக்தியுமுள்ள கடவுளுக்கு மர்யாதை செய்யுங்கள். அவர் கோபத்துக்குப் பாத்ரமாகாதீர்கள். அப்படியானால் நீங்கள் நாசமுறுவது நிச்சயம்.

கடவுள் தம் ச்ருஷ்டி முழுவதையும் பராமரிக்கிறார். அநந்த ஞானத்தோடும் அவற்றை யாண்டு நடத்துகிறார். உலக நடைக்கென்று விதிகளை யேற்படுத்தியிருக்கிறார். அற்புதப் படும்படியாக எல்லாவஸ்துக்களுக்கும் ப்ரத்யேக விதியேற்படுத்தியிருக்கிறார். ஒவ்வொன்றும் தன் ஸ்வபாவப்படி அவரிச்சைக் குள்ளடங்கியிருக்கிறது. நிராசையால் எல்லா அறிவையுஞ் சுழற்றுகிறார். பல விஷய ரகஸ்யங்கள் அவருக்குத் தெளிவாய்த் தெரிகின்றன.

உனது மனப்போக்கு அவருக்கு வெள்ளிடை மலையெனத் தெரிகிறது. நீ நிச்சயிப்பதற்கு முன்பு உன் நிச்சயங்களை யவர் உணர்கிறார். அவருடைய முன்னறி ஞானத்தை ஸந்தேஹிப்பதற்கில்லை. அவருடைய பராமரிப்பில் ஆகஸ்மிகம் அல்லது அத்ருஷ்டமென்பதில்லை. தமது வழிகளில் அற்புதமாக் காணப்படுகிறார். அவருடைய யோசனைகளை ஒருவராலும் உணர்ந்தறிய முடியாது. அவர் அறியும் விதத்தைச் சிந்திக்கும் தந்தரம் நமக்கு வாய்ந்ததல்ல. அதனால் அவரது ஞானத்துக்கு ஸர்வமர்யாதையும் பக்தியுங் காட்டு, அவருடைய ஆக்ஞைகளுக்குத் தாழ்ந்து வணங்கி நட.

ப்ரபு அன்பும் நன்மையுமுள்ளவர். அன்பு, தயை இக்குணங்களாலேயே உலகத்தைப் படைத்தார். அவரது நன்மை எல்லாப் படைப்பிலும் தொனிக்கிறது. அவர் செம்மைக்கோர் ஊற்று, பூரணத்துக்கு நிலயம். அவரது ச்ருஷ்டிகள் அவரது நன்மையை பரப்படுத்துகின்றது. அவற்றின் இன்பமெல்லாம் அவரது ஸ்துதியே. அவர் அவற்றை யழகாய்ப் போர்த்து, ஆகாரத்தாற் [illegible]த்து, தலைமுறைத் தவமாக இன்பத்தோடு வளர்க்கிறார்.

ஆகாயத்தை யண்ணாந்து பார்த்தால் அவரது கீர்த்தியே ப்ரகாசிக்கிறது. பூமியைக் குனிந்து நோக்கினால் அவரது நன்மையே நிறைந்திருக்கிறது. குன்றுகளும், பள்ளத்தாக்குகளும் அவர் சீரையே பாடி ஸந்தோஷிக்கின்றன; வயல்களும், ஆறுகளும், காடுகளும் அவரது ஸ்துதியையே எதிரொலிக்கின்றன. மனிதனே! உன்னிடத்துச் சிறப்பான கருணையைக் காட்டி எல்லா ஜந்துக்களுக்கும் மேலாக உன்னை வைத்திருக்கிறார். உன் அதிகாரத்தைப் பாதுகாக்கப் பகுத்தறிவை யுனக்களித்திருக்கிறார்.

ஜன ஸமூகத்தில் உன்னை யபிவிருத்தி செய்துகொள்ள உனக்கு வாக்கை யளித்திருக்கிறார். ஒருவராலும் பார்த்து அடையமுடியாத அவருடைய குணஸம்பத்துக்களை நினைத்துத் துதிக்கத் தபலையும் உனக்களித்திருக்கிறார். அதனால் வந்த ஞேபசாரப் பாட்டுக்களால் அவரது நன்மையைத் துதி. அவரது அன்பின் அற்புதங்களை மவுனமாகக் கண்டு சிந்திப்பாயாக. உன் மனம் நன்றியோடும் விச்வாஸத்தோடும் பொங்கி வழியட்டும். உன் நாக்கு ஸதா அவரைத் துதித்தவண்ணமாயிருக்கட்டும். உன் செய்கை அவரது ஆக்ஞையிடத்துள்ள அன்பை வெளிப்படுத்தட்டும். ப்ரபு நியாயவாதி; ஸத்கார்ய துரந்தரர்; பூலோகத்தாரை ந்யாயத்தோடும், உண்மையோடும் தீர்மானிப்பார்.

அவரது விதிகளை நன்மையினாலும் தயையினாலும் நிலை நிறுத்தியிருக்க, அவ்விதிகளை மீறி நடப்பவர்களைத் தண்டிக்க மாட்டாரா? துணிகரமான மனிதனே! உனக்கு தண்டனை கிடைக்கக் காலதாமதமாயிற்றென்று கடவுளது கரம் பலவீனப்பட்டதாக வெண்ணாதே. உன் செய்கைகளைக் கண்டு இடங்கொடுத்துக் கொண்டிருக்கிறாரென்றும் பெருமை பேசிக்கொள்ளாதே. அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்று கேட்டதில்லையா?

ஒவ்வொரு அந்தரங்க ரஹஸ்யங்களையும் அவரது கண் பார்க்கிறது; அவர் ஒன்றையும் மறப்பதுமில்லை. மனிதர்களை யாவது அவர்களது உலகப்பெருமைகளையாவது அவர் கவனிப்பதில்லை. உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களும், தாழ்ந்தவரும்; பணக்காரரும் ஏழைகளும், ஞானிகளும், மூடர்களும் ஆகிய எல்லாருடைய ஆத்மாக்களும் இந்த சரீர மூட்டையைக் கழற்றி யெறிந்துவிட்டுப் போனதும் அவருடைய ந்யாயத் தீர்ப்பைப் பெற்றுப் புண்யபாபச் செய்கைகளுக்குத் தக்கபடி பலனை யனுபவிப்பார்கள்.

அப்பொழுது துஷ்டர்கள் பயந்து நடுங்குவார்கள்; ஆனால் ஸத்துக்களது மனம் அவரது தீர்ப்பைக் கேட்டுக் குதூஹலிக்கும். அதனால், நீ வாழ்நாள் முழுவதும் கடவுளுக்குப் பயந்து நட. அவர் ஏற்படுத்தின வழிகளிலேயே நட. விவேகம் உன்னை எச்சரிக்கட்டும். மிதம் உன்னை அடக்கியாளட்டும் நீதி உன்னை எச்சரிக்கட்டும். மிதம் உன்னை நடத்தட்டும். நன்மை உன் மனத்தில் ச்ரத்தையை உட்டட்டும் கடவுளிடத்து நன்றி உனக்குப் பக்தியையுண்டுபண்ணட்டும். இவை உனக்கு இகத்தில் ஸுகத்தையளித்துப் பரத்தில் மோட்சத்தையளிக்கும். இவ்வழிகளை யநுஸரிப்பவன் மனிதனது ஜீவ்யசக்திகளை நிதானமாய்ச் செலவிட்டவனாவான்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

ஞானதீபிகை.

---

ஸஹோதரிகளே! காலம் துரிதமாக மாறி வருகிறது. காலத்தோடொத்து ஒழுகி நீங்கள் செய்ய வேண்டியதில்லாதாம .கார்யங்களை ஸரிவரச்செய்யுங்கள். வீண் வம்பு பேசுதலும் பிறரின் மேல் அவதூறுகளைச் சுமத்துதலும் உங்களுடைய கார்யமல்ல.

* * *

உங்களிடத்தில் ஜீவகாருண்யம், இரக்கம், தைர்யம் முதலிய குணங்களிருந்தாலல்லவோ உங்கள் குழந்தைகளிடத்தில் அவைகளிருக்கும். குழந்தைகளிடத்தில் நல்ல குணங்கள் இல்லையென்று துக்கித்து என்ன ப்ரயோஜனம்.

* * *

குழந்தைகளுக்குச் செய்யவேண்டிய கடமையை ஸரிவரச் செய்யுங்கள். நீங்கள் ஸரிவர செய்யாமலிருந்தீர்களேயானால் அக்குழந்தைகள் உங்களை ஸரிவர மதிக்கமாட்டார்கள்.

# ARUNDATHI
## அருந்ததி

சூரர் பிறப்பும் ஸாதுக்கள் பிறப்பும், அறிவோர் பிறப்பும் அறியலாகுமா? என்று ஸ்ரீ மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது போல, முன் இந்தியாவை அலங்கரித்து, புராண இதிஹாஸங்களிலெல்லாம் புகழ்ச்சியாக பேசப் பெற்று, ஹிந்து ஸ்த்ரீமணிகளுக்கெல்லாம் கற்புநிலையில் தாய் ஸ்தானமாகிய ஸ்ரீமதி அருந்ததி தேவியாரின் பெற்றோர்களைப் பற்றி நமக்குத் தெரியாது. ஆனால், புராண இதிஹாஸங்களிலிருந்து படித்து அறிந்தமட்டில் நமது கதாநாயகியாகிய ஸ்ரீமதி அருந்ததி தேவியின் பிறப்பு, வளர்ப்பு, அவரின் வாழ்க்கை லக்ஷ்யம் ஆகிய இவைகளைச் சுருக்கமாக எழுதுகிறோம்.

ப்ரம்மதேஜஸ் பொருந்திய கர்த்த முனீச்வரரென்ற ஒரு ஞானவான் வட இந்தியாவிலுள்ள ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் போய்க்கொண்டிருந்தார். அவர் போகும்போது ஒரு சக்கிலி பாளையத்திற்கு ஸமீபத்தில் அழகிய வடிவம் அமைந்த ஒரு பெண் குழந்தை அங்கு ஒரு மரத்தினடியில் ஒருவருமில்லாமல் கிடக்கக் கண்டார். காருண்யக்களஞ்சியமாகிய அந்த முனிபுங்கவர் உடன் அக்குழந்தையின் பக்கத்திற்சென்று அதை வாரி கையில் எடுத்துக்கொண்டு தமது ஆச்ரமம் நோக்கிச் சென்றார். தெய்வீக மணம் வீசுகின்றவும், திவ்ய அழகு பொருந்தியவும் அந்த முனி புங்கவரின் ஆச்ரமத்தில் அக்குழந்தை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவந்தது. அக்ஷமாலை என்ற பெயரிடப்பட்டு வளர்ந்து வந்த குழந்தைப் பெண் ஸ்ரீமதி அருந்ததி தேவியானவர் தமது தகப்பனாரிய கர்த்த முனீச்வரரின் அன்புக்கும் ஞானத்துக்கும் தகுந்தபடி நடந்துகொண்டு வந்தார். இப்படிச் சில வர்ஷங்கள் கழிந்தன. காலக்ரமத்தில் நமது கதாநாயகி ஒரு தெய்வீக உணர்ச்சியைப் பெற்று, ஸதாகாலம் ஈச்வரனையே துதி செய்து கொண்டுவந்தார். பெண்களுக்குரிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலிய உயர்ந்த குணங்கள் இவரிடத்திலேயே ப்ரகாசித்து விளங்கி நின்றன.

இவர் ஸாத்வீக குணமுடையவர். இவர் ஒருநாழிகைகூட வீணாக் கழிக்காமல் ஸதா பரந்தாமனை பஜிப்பதும் அவரின் கல்யாண குணங்களை வாயார எடுத்து உரைப்பதுமாக விருந்தனர். உலகத்தில் மானிடர்களாய்ப் பிறந்தோர்கள் அடையவேண்டிய முக்ய லக்ஷ்யம்

தைத் தமது மன உறுதியினாலும் ஒரு பேரன்பினாலும் அடைந்தார். உலகத்தில் ஞானவான்களாலும் மற்றும் பெரியோர்களாலும் மதிக்கக்கூடிய தபோமஹிமையை அடைந்தார். இவர் மிக உறுதியாக உயர்ந்த தபஸ் செய்வதைக் கண்டு ப்ரம்மா அவருக்கு ப்ரத்யக்ஷமாகி "உனக்கு என்ன வரன் வேண்டுமென்று" கேட்க "என்னை மணந்து கொள்ளுகிற புருஷன் ஆணுமில்லாமலும் பெண்ணுமில்லாமலும் ஆக வேண்டும்" என்று சொல்ல ப்ரம்ம தேவர் உடன் திடுக்கிட்டவராய் ஆச்சர்யப்பட்டு நின்றார். பிறகு, "அப்படியே ஆகுக" என்று சொல்லி மறைந்துவிட்டார். அநேக ராஜாக்களும் ஞானவான்களும் இவரை மணந்து கொள்ள இச்சைப்பட்டாலும், ஆண்மைத்தனம் இழந்து அலியாகப்போய் விடுவோமென்று பயந்து தூர விலகிவிட்டார்கள். ஸ்ரீமதி அருந்ததி தேவியாரை ஒருவரும் மணந்துகொள்ள முன் வரவில்லை.

இவைகளெல்லாவற்றையும் ப்ரம்ம தேவர் பார்த்தார். அவருக்கு இவரைப் பற்றி ஒரு விசாரம் உண்டாகியது. ஸ்ரீமதி அருந்ததி தேவியைப்போல் அழகிலும் குணத்திலும், தபஸிலும் வேறொரு பெண் உலகில் இல்லையென்றதை நன்றாக அறிந்தார். கடைசியாக, இவருக்கு எப்படியாவது விவாகத்தைச் செய்து வைக்க வேண்டுமென்று நிர்மானப் படுத்திக்கொண்டார். உடன் தமது புத்ரராகிய வஸிஷ்டரை பக்கத்தில் அழைத்து "அப்பா! நீ பெருத்த தபோபலத்தில் சிறந்தவன். உனக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. பரம ஸுசீலியாகியவும், உன்னத அழகு பொருந்தியவுமாகிய ஸ்ரீமதி அருந்ததி தேவியை விவாஹம் செய்து கொள். உன் க்ஷேமாபி வ்ருத்தியில் அக்கரை கொண்ட என்னுடைய வார்த்தையைக்கேள். ஸ்ரீஅருந்ததியை விவாஹம் செய்து கொள்வாயானால், நீங்களிருவரும் உலகமுள்ளவரையில் கொண்டாடப்படுவீர்கள். என் வார்த்தைகளைத் தட்டாமல் அவரை விவாஹம் செய்து கொள்வாய்" என்று சொன்னார். தமது பிதா வாக்கின் பரிபாலனத்துக்காகவே வஸிஷ்டர் அவரின் புத்திமதிகளைக் கேட்டுக்கொண்டு ஸ்ரீமதி அருந்ததி தேவியாரை விவாஹம் செய்துகொண்டார். எல்லோராலும் பூஜிக்கக்கூடியவும், உத்தம தபோ பலன்களை அடைந்தவ்ரான தம்பதிகளிருவரும் இல்லறத்தினின்று குடும்ப தர்மங்களை செவ்வனாக அனுஷ்டித்து வந்தார்கள். ஸ்ரீமதி அருந்ததிதேவியும்



மாவிடம் பெற்ற வரன் வஸிஷ்டருக்கு ஒரு கெடுதியும் செய்யவில்லை. ஆகவே, தம்பதிகளிருவரும் ஸுக ஸௌக்யமாக புத்ர ஸந்தானங்களுடன் வாழ்க்கையைக் கழித்து வந்தார்கள்.

ஸ்த்ரீகளாகட்டும் புருஷர்களாகட்டும் கல்யாணம் செய்து கொள்கிறது காமத்தைத் தீர்த்துக்கொள்வதற்காக ஏற்படவில்லை. அவரவர்கள் தங்கள் குடும்ப தர்மங்களை அநுஷ்டித்து வாழ்க்கை லக்ஷ்யத்தை யடையவே விவாஹம் ஏற்பட்டதென்று அறியவேண்டும். இன்றைக்கும் நாளைக்கும் விவாஹ காலத்தில் வதுவரர்களை ஸ்ரீ அருந்ததிநக்ஷத்ரத்தைப் பார்க்கச் சொல்லுகிறார்கள்.

ஸ்ரீமதி அருந்ததி தேவியின் பாதிவ்ரத்யத்தைக் குறித்து பல புண்ய கதைகளிருக்கின்றன. பூர்வம் ஒரு ஸமயம் பரமசிவன் ஸுந்தரரூபத்தோடு தாருகா வனத்திலுள்ள ரிஷிகளின் மனைவிகளைப் பரிசோதிக்கச் சென்றார். ஆயினும், பரம பதிவ்ரதையாகிய ஸ்ரீமதி அருந்ததிதேவி இல்லறம் நடத்திவரும் அந்த ஆச்ரமத்திற்குக் கூட பரமசிவனால் போக முடியவில்லை என்று சொல்லப்படுகிறது. நமது கதாநாயகி தமது புருஷர் வஸிஷ்டர் எங்கு சென்றாலும் பின்னோடுசென்று அவரின் கஷ்டஸுகங்களைத் தமதாகப் பாவித்து நடந்துவருவார். இவர்களுடைய புத்ரர்கள் எல்லோரும் தபஸ்விகளானார்கள். இவர்களுடைய புத்ரர்களில் ஒருவராகிய ஸுயக்ஞர் மஹா ஞானவான். இவர் ஸ்ரீராம பிரானின் ஆப்த நண்பர். ஸ்ரீராமர் வனவாஸத்துக்குப் புறப்படுமுன் அநேக தான தர்மங்கள் செய்தார். அப்பொழுது ஸ்ரீராமர் தமது ஸத்ருஞ்சயம் என்னும் யானையையும் தந்தக்கட்டில் முதலியவற்றையும் அவைகளின் உபகரணங்களுடன் மஹாத்மா ஸுயக்ஞருக்குத் தானம் செய்தார். பெற்றோர்களைப் போலவே புத்ரர்களும் மஹா பாக்யசாலிகளாகவும் ஞானவான்களாகவும் குணவான்களாகவும் பெயரெடுத்து வாழ்ந்தார்கள்.

ஸ்ரீமதி அருந்ததிதேவியின் கற்பின் சிறப்பையும், உத்தமகுணங்களையும் நம் பாலிகைகளுக்கு வீடுகளில் முற்காலத்தில் சொல்லிக்கொடுப்பது வழக்கம். இவ்வுத்தம ஸ்த்ரீ மணிகள் போன்றவர்களாலேயே நம் இந்தியாவுக்கு புண்யபூமியென்றுபெயர் இப்பவும் வழங்கிவருகிறது. ஸஹோதரிகளே! ஒரு ஸமூகத்தை அழிப்பதும் ஸ்த்ரீகளே. அதை உண்டாக்கி வ்ருத்தி செய்து உலகம் ப்ரமிக்கும்படி பண்ணுவதும் ஸ்த்ரீகளே. ரத்த வெள்ளம் திரண்டு பெருக்கெடுப்

தன் ஸம்பந்தி வீட்டில் சில நாளிருந்து தன் மருமகனுக்கு அநேக யானை, குதிரை, ரதம் முதலிய பரிசுகள் ஒன்றின் மேலொன்றாய் உதவி, தசார்ணவ மன்னன், த்ருபதனிடம் விடை பெற்று, தன திருப்பிடம் சென்றனன்.

இஃது இங்ஙனம் நிகழுங் காலத்து, யக்ஷ கணங்களுக்கெல்லாம் தலைவனான குபேரன், தனது ஸகல பரிவார ஆடம்பரங்களுடன் புறப்பட்டு தன்னால் ஆங்காங்கு பூமியில் ஸ்தாபிக்கப்பட்ட யக்ஷர்களையெல்லாம் பார்த்துக்கொண்டு அவன் ஸ்தூணாகரனிருக்குமிடம்சேர்ந்தான். ஸ்தூணாகரனின் அரண்யம் வருகையில், ஸ்தூணாகரன் இருந்தும், இல்லாது போலிருப்பதைக் குபேரன் கண்டான். குபேரன் வெகுதூரத்தில் வரும்போதே, ஸ்தூணாகரன் அஞ்சலியஸ்தனாய் எதிர்கொண்டு வருவதையும், தன்னைப் பூஜ்யதா பாவனையுடன் வழக்கம் போல் ஆராதிப்பதையும், குபேரன் காணவில்லை. ஸ்தூணாகரனுக்குத் தான் என்கிற மமதை தலைக்கேறியதோ எனக் குபேரன் எண்ணும்படியாயிற்று. அவனுக்குப் புத்தி இப்படித் தடுமாறிப் போனதற்குக் காரணம் தெரியவில்லையே யென்று யோசிக்கலானான். ஸ்தூணாகரன் அரண்மனை வாசலில்கூட இல்லாதது பற்றி தன் சேவகர்களைக் கூப்பிட்டு, ஸ்தூணாகரனை இவ்வரண்மனையிலும், மற்றெவ்விடத்திலும் ஆராய்ந்து பார்த்து அகங்காரம் பிடித்த அந்தப் பயலைக் கொண்டுவந்து என்னிடம் விடுங்கள் என்று கடுமையாய் ஆஞ்ஞாபித்தான். குபேரன் ஆக்ஞையைச் சிரமேற்கொண்ட வேலைக்காரர் பலர் அரண்மனை முழுவதும் தேடிக் கடைசியாக, அவ்வரண்மனையின் அந்தப்புறத்தில் ப்ரவேசித்துத் தேடினார்கள். அங்கு ஸ்த்ரீகள் மத்தியில் ஸ்த்ரீகளுடன் ஸ்த்ரீயாய் மிகுந்த லஜ்ஜையுடன் உட்கார்ந்திருக்கும் ஸ்தூணாகரனை அந்த ரூபத்துடனேயே குபேரனின் ஸந்நிதானத்தில் அவன் நிறுத்தப் பெற்றான்.

ஸ்தூணாகரனும், தனது தலைவனாகிய குபேரன் முன் தாழ்ந்து, த்ருபத புத்ரி தன்னிடம் வந்ததும், அவள் கேட்டுக் கொண்டபடி தன் புருஷ ரூபத்தை அவளுக்குக் கொடுத்து மாற்றாகத் தான் ஸ்த்ரீ ரூபத்தை வாங்கிக்கொண்டதும், முதலான விஷயத்தை ஆதியோடந்தமாய்க் கூறி, அந்த ஸ்த்ரீ ரூபத்தின் லஜ்ஜையினால் தான் எதிரில் வந்து நிற்கவில்லையென்று சொல்லித் தன்னை மிகுதியும் மன்னிக்க வேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.